55/3

பிஸ்மில்லாஹி.

சீறாப்புராணம்

முதற்பாகம்,

மூலமும் பொழிப்புரையும்.

இவ்வுரையை

ம-ா-ா-ஸ்ரீ,

கோட்டாறு பகீர்மீறானவர்களின்

குமாரர்

மகாவித்துவான்

செய்குத்தம்பிப் பாவலரவர்களால்

இயற்றப்பட்டு

சென்னை ம-ா-ா-ஸ்ரீ,

இட்டா பார்த்தசாரதிநாயுடு அவர்களால்

டைமண்டு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜிரி-1330.

1912.

REGISTERED COPYRIGHT.

இரண்டாம் பதிப்பு.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 16830
55-3

ரிஜிஸ்தாறிக்கை.

இந்தச் சீருப்புராணம் முதற்பாகம் மூலமும் பொழிப்புரையும் எம்மால் அச்சிட்டு ரிஜிஸ்தர் செய்திருக்கின்றமையால் இஃதை எம் மனுமதி யின்றி யாவரேனும் அச்சிடுவாராயின் அவ்விதம் அச்சிடு வோரும் அச்சிட்டுக்கொடுக்கும்அச்சாப்பீசின் தலைவரும் 1887ஞு பிரசித்தப் படுத்திய மாட்சிமை தங்கிய கவர்ண்மெண்டு கெஜற்றென்னும் பத்திரிகையிற் கூறிய 25-வது ஆக்டின் 20-வது பிரிவு 6-வது தியின்படி எம்மால் கோரப்படும் நஷ்டத்திற்குத்தரவாதி யாவர்க ர்பதை இதனாற் றெரியப் படுத்துகின்றேம்.

இங்ஙனம்.

இட்டா - பார்த்தசாரதி நாயுடு,

நெ. 84, ஆசாரப்பன் தெருவு,

மதரூஸ்,

1. 14 16 199 210 217 2 2 2 2 26 28 30 3 3

விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டுவோர் சென்னை ஆசாரப்பன் தெருவு 84-வது நெ. கிருகத்தில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக் கூடத்தலைவர்-ம-௱-௱-ஸ்ரீ, இட்டா - பார்த்தசாரதிநாயுடவர்க ளிடத்தி லும் எம்மிடத்திலும் முகதாவிலோ? தபால்மார்க்க மாகவோ? தபாற் செலவு மாத்திரமனுப்பி வி. பி. யாகவோ? பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகக்கிரயம்.

உயர்ந்த கிளேஸ்கடிதம் காலிக்கோ பயிண்டு புத்தகம் 1-க்கு		3	0	0
௸ தோல் பயிண்டு 1-க்கு ...	...	3	8	0

முகியித்தீன் புராணம்.

முதற்பாகம் காலிக்கோ பயிண்டு புத்தகம் 1 க்கு ...	...	2	0	0
௸ தோல் பயிண்டு புத்தகம் 1-க்கு	...	2	4	0
இரண்டாம் பாகம் காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு	...	2	0	0
௸ தோல்பயிண்டு புத்தகம் 1-க்கு	...	2	4	0

வி. பி, சார்ஜ் பிரத்தியேகம்,

இங்ஙனம்,

☞ கா. ப. செய்குத்தம்பிப் பாவலர்,

முகம்மதிய புத்தகஷாப்

நெ, 84, ஆசாரப்பன் தெருவு,

மதராஸ்

SS-3

படலசூசிகை.

முதலாவது

விலாதத்துக் காண்டம்.

இரண்டாவது

நுபுவ்வத்துக் காண்டம்.

ஆகூ காண்டம் 2-க்குப் படலம் சடு-க்குத்

திருவிருத்தம் உஉகச.

பிஸ்மில்லாஹி.

சீறாப்புராணம்.

விலாதத்துக் காண்டம்.

முதற்பாகம்

மூலமும்-பொழிப்புரையும்.

காப்பு

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருவுருவா யுணருருவா யறிவினொடு
தெளிவிடத்துஞ் சிந்தியாத
வருவுருவா யுருவுருவா யகம்புறமுந்
தன்னியலா வடங்கா வின்பத்
தொருவுருவா யின்மையினி லுண்மையினைத்
தோற்றுவிக்கு மொளியா யாவு
மருவுருவாய் வளர்காவன் முதலவனைப்
பணிந்துள்ளி வாழ்த்து வாமே.

பதவுரை:—

திரு உரு ஆய்=சிறப்பினை யுடைய பொருளாய், உணர் உரு ஆய்=கருத்தா னுணரு முருவாய், அறிவின் ஒடு தெளிவு இடத்தும் சிந்தி யாத அரு உரு ஆய்=யாவ னொருவன் அறி வானே தெளிவு பெற்ற விடத்தும் இத் தன்மைத்தா மென நினைக்கப்படாத அருவமே

யுருவமாய், உருஉரு ஆய்=வெளியுரு வல்லாத உள்ளுருவாய். அகம் புறமும் தன் இயல் ஆ=அகத்தின் கண்ணும் புறத்தின் கண்ணுந் தன்னியலே யன்றிப் பிற விய வில்லதாக, அடங்கா இன்பத்து ஒரு உரு ஆய்=அளவையு ளடங்காத பேரின்பத் தானுய ஒப் பற்றவுருவ மாய், இன்மையினில் உண்மையினை தோற்றுவிக்கும் ஒளிஆய்=இல்லாமையி லிருந்து உள்ளதாந் தன்மையைத் தோன்றச் செய்த பேரொளியாய், யாவும் மருவு உரு ஆய்=சிருட்டிகள்யாவுமருவாநிற்கு முருவமாய், வளர்=உயர்ந்த, காவல் முதலவனை=காவற் பாட்டினை யுடைய ஆதி நாயகனை, (அல்லாகுத்த ஆலாவை என்றபடி)பணிந்து உள்ளி வாழ்த்துவாம்=யாம் வணங்கிக் கருதித் துதிப்பாம், எ-று.

பொழிப்புரை:—

சிறப்பினை யுடைய பொருளாய்க், கருத்தா னுணரு முருவமாய் யாவ னொருவன் அறி வானே தெளிவு பெற்றவிடத்தும்இத்தன்மைத்தா மென நினைக்கப் படாத அருவமே யுருவமாய், வெளி யுரு வல்லாத உள் ளுருவாய், அகத்தின் கண்ணும்புறத்தின் கண்ணுந்தன்னியலே யன்றிப் பிற விய வில்ல தாக; அளவையு ளடங்காதபேரின்பத் தானுய ஒப் பற்ற வுருவமாய், இல்லாமையி லிருந்து உள்ளதாந் தன்மையைத் தோன்றச் செய்த பேரொளியாய், உயர்ந்த காவற் பாட்டினை யுடைய ஆதி நாயகனை, (அல்லாகுத்த ஆலாவை என்றபடி) யாம் வணங்கிக் கருதித் துதிப்பாம், எ-று.

உரு வாத லென்பது பொருளாத லாக லானும் அப் பொருட் கோ ரொப்பது மிக்கது மின் றென்னுஞ்சிறப்புத்தோன்றத்திருவென்னு மடை கொடுத்தமை யானும், திரு வுருவாயென்பதற்குச்சிறப் பினை யுடைய பொருளா யென யாமுரை கூறினும் ஆசிரியர் தாமே "சிறந்த மெய்ப் பொருளை" எனப் பின்னுங் கூறு மாற்றுனு மறிக. அப் பொருடான் இணைத் தென் றுரைக்கப் படாது கருத்து வகை யா னறிதன் மாலைத் தாகலின், உண ருருவா யென்றார். எத் துணை முற்றக் கற்றாரும் வரை யறுத்தற் கமையாவொன் றாகலின். அறிவி னெடு தெளி விடத்துஞ் சிந்தி யாத வென்றார். ஈண்டு ஒரு வுருட

கருவிப் பொருளில் வந்தது. "ஊசி யொடு குயின்ற தூசு" என்றாற் போல. சிந்திக்கப் படாத வென்பது சிந்தி யாத வெனப் படு சொல் லற்றுப் படு பொரு ளேற்று நின்றது. உரு வின்மை தானே யதனுரு வமா மென்பார் அரு வுருவா யென்றார். இவற்றுப் பின்னர்க் கூறு முரு மூன்றும் இதன் அநுவாதம். அகமு மென்னு மும்மை தொக்கு நின்றது. அகம் புற மென்றது பாத்தின் லாகிறுகனே. இன்மை யெ ன்றது அதம் உண்மை யென்றது உஜ்ஜூது. இதனை விரிப்பிற் பல்கு மாகலின், உய்த்துணர்க. யாவும்அப்பொரு ளிடத்தேசேர்தன்மாலைய வாகலின், ஈண்டு மருவுத லென்றதுசேர்தற்பொருட்டு. வளர். இறந்த கால வினைத் தொகை. முதலவன் ஆக்க லழித்தல் காத்த லென்னு முத் தொழிலின ரூயினும், ஈண்டுக் காவன் முதலவ னெனக் காத் தற் ரெழிலைக் கூறினர், இந் நூலினது முடிவான் காத்தல் கருதி யென்க. மனம் வாக்குக் காய மென்னு முப் பொறிகளு மொப்பமுடி தற் பொருட்டுப் பணிந்து, உள்ளி, வாழ்த்துவா மென்றார்; பணிதல் காயத்தானும், உள்ளுதல் மனத்தானும், வாழ்த்துதல் வாயானு மாக லின். யாமென்பது அவாய் நிலையான் வந்தது. வாழ்த்துவாம் தன் மைப் பன்மை முற்று. ஏகாரம் ஈற்றசை.

இச் செய்யுட்கு உரை பின்னும் விரிப்பின் மிகப் பல்குமாகலின் ஒரு வாறு சுருக்கி முடித்தாம். பிறவு முய்த் துணர்ந்து கொள்க.

காப்பு

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

கடவுள் வாழ்த்துப் படலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல் லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

பதவுரை:—

திருவினும் திரு ஆய்=மேன்மையிலும் மேன்மையாய், பொருளினும் பொருள் ஆய்=உண்மையிலு முண்மையாய், தெளிவினும் தெளிவு அது ஆய்=அறிவிலும் அறிவாய், சிறந்த=சிறப்பினையுடைய, மருவினும் மரு ஆய்=பரிமளத்திலும் பரிமளமாய், அணுவுக்கு அணு ஆய்=பரமாணுவுக்கும் பரமாணுவாய், மதித்திடா=கணிக்கக் கூடாத, பேர் ஒளி அனைத்தும்=பெரிய பிரகாச முழுவதும், பொருவினும் பொரு ஆ=ஒப்பிலும் ஒப்பாய், வடிவினும் வடிவு ஆய்=உருவிலும் உருவாய், பூதலத்து உறைந்த=பூமியினிடத்துத் தங்கிய, உயிரின்=பல ஜீவராசிகளின், கருவினும் கரு ஆய்=கருவிலுங் கருவாய், பெரும் தலம் புரந்த=பெரிய உலகத்தை ஆட்சி செய்கின்ற, கருத்தனை=கர்த்தா வாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவை, பொருத்துதல்=இருதயத்தின்கண் பொருந்தச்செய்வது, கருத்து=கருத் தாகும், எ-று.

பொழிப்புரை:—

மேன்மையிலும் மேன்மையாய், உண்மையிலு முண்மையாய், அறிவிலும் அறிவாய்ச், சிறப்பினை யுடைய பரிமளத்திலும் பரிமளமாய்ப், பரமாணுவுக்கும் பரமாணுவாய்க், கணிக்கக் கூடாத பெரிய பிரகாச முழுவதும் ஒப்பிலும் ஒப்பாய் உருவிலும் உருவாய்ப், பூமியி

னிடத்துத் தங்கியபல ஜீவ ராசிகளின் கருவிலுங் கருவாய்ப், பெரிய உலகத்தை ஆட்சி செய்கின்ற கர்த்தா வாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவை இருதயத்தின்கண் பொருந்தச் செய்வது கருத்தா கும், எ-று. (௧)

சிறந்தமெய்ப் பொருளையழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத்
துடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினின் மதிமறந் தவரே.

பதவுரை ;—

சிறந்த மெய் பொருளை=சிறப்பினையுடைய சத்திய வத்துவை, அழிவு இலாமணியை=கெடுதலற்றஇரத்தினத்தை, தெரிந்து=யாவற்றையும் பார்த்து, முக்காலமும் உணர்ந்து=வருங்காலம் நிகழ்காலம் செல்காலமென்னும் மூன்று காலங்களையு மறிந்து, துறந்தவர்=இவ் வுலகாசையை நீத்தோர்களின், இதயம் ஆசனம் அத்து=மனமாகிய தவிசினிடத்து, இருந்தவனை=தங்கினவனை, துடர் இன்பம் துன்பம்=பின் பற்றுநிற்கும் சுகமும் துக்கமும், அற்றவனை = இல்லாதவனை, பிறந்த பல் உயிரின்=அவதரித்த பல ஜீவராசிகளின், மனம் அத்து அளவு உறைந்து=அகத்தி னளவு தங்கி, என்று= எக் காலமும், பிறப்பு இறப்பு=தோற்றமும் நாசமும், இல்லாதவனை=அற்றவனை, மறந்தவர்=மறந்தவர்கள், சுவர்க்கம் பதியையும் மறந்து=சுவர்க்க லோகத்தையு மறந்து, மண்ணினில்=பூமியின்கண், மதிமறந்தவர்=அறிவையு மறந்தவர்களாவர், எ-று.

பொழிப்புரை:—

சிறப்பினையுடைய சத்தியவத்துவைக் கெடுதலற்ற இரத்தினத்தை, யாவற்றையும் பார்த்து வருங்காலம் நிகழ்காலம் செல்காலமென்னும் மூன்றுகாலங்களையுமறிந்து, இவ் வுலகாசையை நீத்தோர்களின் மன மாகிய தவிசினிடத்துத்தங்கினவனைப், பின்பற்றுநிற்கும் சுகமும் துக்கமும் இல்லாதவனை, அவதரித்த பலஜீவ ராசிகளின் அக

த்தி னளவு தங்கி எக்காலமும்தோற்றமும் நாசமும் அற்றவனை, மறந் தவர்கள் சுவர்க்க லோகத்தையு மறந்து பூமியின்கண் அறிவையு மறந்தவர்களாவர்.

(உ)

இருவிழி சிவந்து கனற்பொறி தெறிப்ப
வெடுத்தகைக் கதையினு லுறுக்கி
வருமவ ரெதிர்நின் றொருமொழி கேட்ப
மறுமொழி கொடுத்திட வறியேன்
றருமமும் பொறையு மறிவுமற் றறிந்துன்
றன்னையு மென்னையு மறியப்
பெருவரந் தருவா யாதிநா யகனே
பேதியாச் சோதிமா முதலே.

பதவுரை;—

ஆதி நாயகனே=பிரதான மானநாயகனே, சோதி மாமுதலே= பிரகாசத்தை யுடைய மகத் தாகிய யாவற்றிற்கும் முதன்மையனுன ஹக்கு சுபுகானகு வத்தஆலாவே, இருவிழிசெவந்து=இரண்டு கண் களும் செந்நிற மடைந்து, கனல்பொறிதெறிப்ப=நெருப்புப் பொ றிகள் தெறிக்கும் வண்ணம், எடுத்த கை கதையினல்=கைகளிற்ருங் கிய தண்டாயுதத்தினல், உறுக்கி வரும்=அதட்டிக்கொண்டு வராநிற் கும், அவர்எதிர் நின்று=முன்கர்நக்கீராகியஅவர்கள் முன்னல்நின் று, ஒருமொழிகேட்ப=ஒரு வார்த்தையை வினவ, மறுமொழி=அத ற்கு மறுவார்த்தை, கொடுத்திட அறியேன்=கொடுக்க வுணர்ந்திலன், தருமமும் பொறையும்=புண்ணியத்தையும் பொறுமையையும், அறி வும் மற்று அறிந்து=ஞானத்தையும்தெரிந்து, உன் தன்னையும் என் னையும் அறிட=உன்னையும் என்னையும் அறிவதற்கு, பெருவரம் தரு வாய்=பெரிய வரத்தை யருளுவாய், எ-று.

பொழிப்புரை;—

பிரதானமான நாயகனே! பிரகாசத்தையுடைய மகத் தாகியயா வற்றிற்கும் முதன்மையனுன ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவே! இ ரண்டு கண்களும் செந்நிற மடைந்துநெருப்புப்பொறிகள்தெறிக்கும் வண்ணம் கைகளிற் ருங்கிய தண்டாயுதத்தினல்அதட்டிக் கொண்டு வராநிற்கும்முன்கர் நக்கீ ராகிய அவர்கள் முன்னல்நின்றுஒரு வார்த் தையை வினவ, அதற்கு மறுவார்த்தை கொடுக்கவுணர்ந்திலன், புண்

ணியத்தையும் பொறுமையையும் ஞானத்தையும் தெரிந்து உன்னை யும் என்னையும் அறிவதற்குப் பெரிய வரத்தை யருளுவாய், எ-று.

கடலினை மலையைக் கதிர்மதி யுடுவை
  ககனமற் றறுஷொடு குறுசைப்
புடவியைச் சுவனப் பதியினை யமரர்
  பொருந்திட மடுக்கடுக் கவையை
வடிவுறத் தனது பேரொளி யதனல்
  வகுத்துவெவ் வேறென வமைத்தே
யுடலினுக் குயிரா யுயிரினுக் குடலா
  யுறைந்தமெய்ப் பொருளினைப் புகல்வாம்.

பதவுரை:—

கடலினை=சமுத்திரத்தையும், மலையை=பருவதத்தையும்கதிர் மதி உடுவை=சூரிய சந்திர நட்சத்திரங்களையும், ககனம் மற்று= ஆகாயத்தையும், அறுஷு ஒடு குறுசையும்=அறு சுடன் குறுசை யும், புடவியை=பூமியையும், சுவனம்பதியினை=சுவர்க்கலோகத்தை யும், அமரர் பொருந்து இடம்=தேவர்க ளானமலாயிக்கத்துமார்கள் தங்கிய தானங்க ளாகிய, அடுக்கு அடுக்கு அவையை=ஒழுங்கொழுங் கா யுள்ள அவைகளையும், வடிவு உற=அழகு பொருந்தும்வண்ணம் தனது பேர் ஒளி அதனல் வகுத்து=தனது பெரிய பிரகாசத்தினல் வகைப் படுத்தி, வேறு வேறு என அமைத்தே=வேறுவேறுஎன்று சொல்லும் படி செய்து, உடலினுக்கு உயிர் ஆய்=சரீரத்திற்குஜீவ னுகவும், உயிருக்கு உடல் ஆய் ஜீவனுக்குச் சரீர மாகவும்,உறைந்த மெய் பொருளை=வைகிய சத்திய வத்து வான அல்லாகுவத்தஆலா வை, புகல்வாம்=யாம் துதிப்பாம், எ-று,

பொழிப்புரை:—

சமுத்திரத்தையும், பருவதத்தையும், சூரியசந்திரநட்சத்திரங் களையும், ஆகாயத்தையும், அறு சுடன் குறுசையும், பூமியையும், சுவர்க்கலோகத்தையும், தேவர்க ளான மலாயிக்கத்துமார்கள் தங்கிய தானங்க ளாகிய ஒழுங் கொழுங்கா யுள்ள அவைகளையும், அழகு பொருந்தும் வண்ணம் தனது பெரிய பிரகாசத்தினல்வகைப்படுத்தி வேறு வேறு என்று சொல்லும்படி செய்து சரீரத்திற்குஜீவனுகவும் ஜீவனுக்குச் சரீர மாகவும், வைகிய சத்திய வத்துவான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவை யாம் துதிப்பாம், எ-று (சு

வேறு.

அருமறை தெரிந்துநீதி நெறிமுறை நடந்துதீனில்
　　வகிலதல மெங்கு மீறவே
யொருகவிகை கொண்டுமாறு படுமவரை வென்றுநாளு
　　முறுபுகழ் சிறந்த வாழ்வுளோர்
திருவொளி யெனும்ஹபீபு நபி முகம்மத ன்றுவானர்
　　சிரமிசை நடந்து சோர்வுறு
விருசரண நம்பினோர்கள் வரிசைக ணிறைந்தபேர்க
　　ளெவரினு முயர்ந்த பேர்களே.

பதவுரை:—

அருமறை தெரிந்து=அருமை யான புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தை யுணர்ந்து, நெறி முறை நடந்து=சன்மார்க்கத்தினது ஒழுங்கில் நடந்து, தீன்இ அகிலம்=தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க மானது இந்தப் பூலோகத்தினது, தலம் எங்கும் மீறவே=தானங்களெவ் விடத்தும் அதிகரிக்கும் படி, ஒருகவிகைகொண்டு=ஒப் பற்ற சந்திர வட்டக் குடையைக் கொண்டு, மாறுபடும்அவரை வென்று=விரோதித்தவர்களை ஜெயித்து, நாளும் உறு புகழ் சிறந்த=பிரதி தினமும் பொருந்தாநிற்கும் கீர்த்தி யானது சிறக்கப்பெற்ற வாழ்வு உளோர்=வாழ்வை யுள்ளவர்க ளான, திரு ஒளிவு எனும்=தெய்வீகந்தங்கிய பிரகாச மென்னும் ஹபீபு நபி முகம்மது=ஹபீபென்று கூறும் காரணப் பெயரை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள், அன்று=அந்த மிகுறுஜினிரவில், வானர் சிர மிசை—தேவர்க ளாகிய மலாயிக் கத்துமார்களின் சிர மீது, நடந்து சோர்வுஉறு=நடந்து தளர்வடையாத, இரு சரணம் நம்பினோர்கள்=இரண்டு பாதங்களையும் விசுவசித்தவர்கள், வரிசைகள் நிறைந்த பேர்கள்=சங்கைகள் நிறைந்தவர்கள், எவரினும் உயர்ந்த பேர்கள்=யாவரிலு மேலானவர்கள், எ-று

பொழிப்புரை.—

அருமை யான புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தை யுணர்ந்து சன்மார்க்கத்தினது ஒழுங்கில் நடந்து தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க மானது இந்தப்பூலோகத்தினது தானங்க ளெவ் விடத்தும் அதிகரிக்கும் படி ஒப்பற்ற சந்திரவட்டக் குடையைக் கொண்டு விரோதித்தவர்களை ஜெயித்துப் பிரதிதினமும் பொருந்தாநிற்கும்கீர்

த்தியானது சிறக்கப் பெற்ற வாழ்வை யுள்ளவர்க ளான தெய்வீகந் தங்கிய பிரகாச மென்னும் ஹபீ பென்று கூறும் காரணப் பெயரை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அந்த மிகுறாஜி னிரவில் தேவர்களாகிய மலாயிக்க த்துமார்களின் சிர மீது நடந்து தளராத இரண்டுபாதங்களையும்விசு வசித்தவர்கள் சங்கைகள் நிறைந்தவர்கள். யாவரிலு மேலானவர்கள் எ-று, (ரு)

வேறு.

கவியா லுரைத்தபுகழ் பெறுவார் மிகுத்தகவி
யடைவார் கலக்க மறவே
செவியார மெய்ப்பொருளை யறிவார் மனத்தினுறு
செயல்கே டகற்றி விடுவார்
புவியார மொய்த்தநெறி மறைநாலி னுக்குமொரு
பொறியா யுதித்த வடிவார்
நவியார் சுவர்க்கபதி நயினர் பதத்துணையை
நடுநாவில் வைத்த வர்களே.

பதவுரை:—

புவி ஆர=உலகத்தின்கண் நிரம்பும் வண்ணம், மொய்த்தநெறி =மொய்க்கப் பெற்ற சன்மார்க்கத்தினது' மறை நாலினுக்கும்—நா ன்கு வேதங்களுக்கும், ஒரு பொறி ஆய்=ஒப்பற்ற அடையாளமாய் உதித்த வடிவார்=தோன்றிய அழகை யுடையவர்களும். நவிஆர்= சிறப்புப் பொருந்திய, சுவர்க்கம் பதி நயினர்—சுவர்க்க லோகத்தி னது நயி னரு மான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல் லாகு அலைகி வசல்ல மவர்களின், பதம் துணையை=இரு பாதங்களை யும், நடு நாவில்=நீதியை யுடைய நாக்கி னிடத்து, வைத்தவர்கள் எ=வைத்துத் துதித்தோர்கள். கவியால்=பாக்களினுல், உரைத்த புகழ் பெறுவார்=கூறிய கீர்த்தியை யடைவார்கள், மிகுத்த கவிஅ டைவார்=அதிகக் கவிகளைப் பெறுவார்கள் கலக்கம் அறவ=அச்ச மற, செவி ஆர=காதுகளினுல் பொருந்தும்படி மெய் பொருளை= அறிவார்=சத்திய வத்துவை யுணருவார்கள், மனத்தின் உறு=இரு தயத்தின்கண் தங்கிய செயல் கேடு=கேடான செயல்களை, அகற்றி விடுவார்—நீக்கி விடுவார்கள், எ-று.

பொழிப்புரை:—

உலகத்தின் கண் நிரம்பும் வண்ணம் மொய்க்கப் பெற்ற சன்மார்க்கத்தினது நான்கு வேதங்களுக்கும் ஒப்பற்ற அடையாளமாய்த்தோன்றிய அழகை யுடையவர்களும் சிறப்புப் பொருந்தியசுவர்க்க லோகத்தினது நயினருமான நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் இரு பாதங்களையும் நீதியை யுடைய நாக்கி னிடத்து வைத்துத்துதித்தோர்கள்பாக்களினால் கூறி யகீர்த்தியை யடைவார்கள். அதிகக் கவிகளைப் பெறுவார்கள். அச்சமறக் காதுகளினால் பொருந்தும் படி சத்திய வத்து வையுணருவார்கள் இருதயத்தின்கண் தங்கிய கேடான செயல்களை நீக்கி விடுவார்கள், எ-று (சு)

வேறு.

ஆதிதன் கிருபை தாங்கி யகிலமீ தரசு வைகித்
தீதிலாச் சோதி போலத் தீன்பயிர் விளக்கஞ் செய்தே
மூதறி வுடைய ரான முறுசலீன் களைபெந் நாளும்
போதர வுடனே போற்றிப் புந்தியின் மகிழ்ச்சி செய்வாம்

பதவுரை:—

ஆதிதன்=யாவற்றிற்கும் முதன்மைய னாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின், கிருபை தாங்கி=காருண்ணியத்தைத்தாங்கப் பெற்று, அகிலம் மீது=பூமியின் மிசை. அரசு வைகி=அரசாகத் தங்கியிருந்து. தீது இலா=களங்க மற்ற, சோதி போல=சூரியனைப் போல, தீன்பயிர்=தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கப் பயிரை விளக்கஞ் செய்து ஏ=விளக்கி, மூது அறிவு உடையர் ஆன=முதிர்ந்தஞானத்தை யுடையவர்களான, முறுசலீன்களை=முறுசலீன்களாகிய முன்னூற்றி முப்பத்தி மூன்று நபி மார்களை, எ நாளும்=யாம் எந்தக்காலமும், போதரவு உடன் ஏபோற்றி=பேணுதலோடு துதித்து, புந்தியின் மகிழ்ச்சி செய்வாம்=மனசினிடத்து மகிழ்ச்சி செய்வாம். எ-று.

பொழிப்புரை:—

யாவற்றிற்கும் முதன்மைய னாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் காருண்ணியத்தைத் தாங்கப் பெற்றுப் பூமியின்மிசை அரசாகத் தங்கி யிருந்து களங்க மற்ற சூரியனைப்போலத்தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கப் பயிரை விளக்கி முதிர்ந்த ஞானத்தையுடையவர்களான முறுசலீன்களாகிய முன்னூற்றி முப்பத்திமூன்று நபி

மார்களை யாம் எந்தக்காலமும் பேணுதலோடு துதித்துமனசினிட த்து மகிழ்ச்சிசெய்வாம், எ-று. (எ)

வேறு.

தாரா தரத்தையே மேலே கவிக்கவே
தாடாண்மை பெற்ற நயினர்
பேரா யுதிக்கவே வானோ ருரைக்கவே
பேருய் விளக்கு முரவோ
ராராய்வின் மிக்கபேர் நூருயி ரத்துநா
லாருயி ரத்து நபிமார்
மாராய மிக்கபேர் வாயார வைத்தபேர்
வாழ்வார் சுவர்க்க பதியே.

பதவுரை :—

தாராதரத்தையே மேலேகவிக்கவே=மேகக்குடையை மேலே கவிக்கும் வண்ணம், தாடாண்மைபெற்றநயினர்=பிரயத்தனத்தைப் பெற்ற நயினரான நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள், பேர் ஆய் உதிக்கவே=கீர்த்தி யாய்த் தோற்ற மாவதை, வானோர் உரைக்கவே=தேவர்களாகிய மலாயிக்கத்து மார்கள்கூற, பேறுஆய் விளங்கும் உரவோர்=அதை ப்பேருக விளக்கஞ்செய்யும் அறிஞர்களும், ஆராய்வில்மிக்க=ஆரா ய்வில்மிகுந்தபேர் நூறுஆயிரத்து நாலு ஆறு ஆயிரத்து நபிமார்= கீர்த்தியையுடைய இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களு மான, மாராயம் மிக்கபேர்=விசேட மதிகரித்தவர்களை, வாய் ஆர வைத்தபேர்=வாயிற் பொருந்தும்படி வைத்துத் துதித்தோர்கள், வாழ்வார் சுவர்க்கம்பதியே=சுவர்க்கலோகத்தில்வாழ்வார்கள். எ-று

பொழிப்புரை :—

மேகக்குடையை மேலே கவிக்கும் வண்ணம் பிரயத்தனத்தைப் பெற்ற நயினரான நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல் லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் கீர்த்தியாய்த் தோற்ற மாவதைத் தேவர்களாகிய மலாயிக்கத்து மார்கள் கூற அதைப்பேருக விளக் கஞ் செய்யும் அறிஞர்களும் ஆராய்வில் மிகுந்த கீர்த்தியையுடைய இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களுமான விசேட மதி கரித் தவர்களை, வாயிற் பொருந்தும்படி வைத்துத் துதித்தோர்கள் சுவர்க்கலோகத்தில் வாழ்வார்கள், எ று. (அ)

வேறு.

புரசைக் கடக்கரிக ணிரைதட் டறக்குபிரர்
புவியைப் படக்க டவியே
சரகுற்ற நற்பதவி வழியிற் புகுத்தியுயர்
தலைமைக்கு வைத்த பெரியோர்
பிரசத் துளித்திவலை சிதறிக் கிடக்குமிரு
பிணையற் புயத்து நயினா
ரரசுக்கு வைத்தநெறி வரிசைக்கு மிக்கதுரை
யபுபக் கரைப்புக லுவாம்,

பதவுரை :—

புரசை கடம் கரிகள்=கழுத்தணியின் கயிற்றையும்மதங்களையு முடைய யானைகளினது, நிரை தட்டு அற=படை வகுப்புகளின் நிலைமையான தறும்படி,குபிரர் புடவியை=காபிர்களின் பூமிகளைபட கடவியே=முட்டும் வண்ணம்பிரயோகித்து, சரகு உற்றநல்பதவி=ஷறகில் பொருந்திய நல்ல கதியினது, வழியில் புகுத்தி=சன்மார்க்கத்தில் அவர்களை நுழைவித்து, உயர் தலைமைக்கு=மேலான தலைமைத் தனத்திற்கு, வைத்த பெரியோர்=வைத்த பெருமையையுடையவரும், பிரசம் துளி திவலை=தேன் மாரியினது துளிகள், சிதறிகிடக்கும்=சிதறுத லுற்றுக் கிடக்கும், இரு பிணைபல்=இருமாலைகளைக் கொண்ட, புயத்து நயினார்=தோள்களை யுடையவர்களான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அரசுக்கு வைத்த=அரசுக்கு வைக்கப்பெற்ற நெரி வரிசைக்கு= ஒழுங்கினது சங்கைக்கு, மிக்க துரை=மிகுந்த துரையு மான, அபூ பக்கரை புகல்வாம்=அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களை யாம் துதிப்பாம். எ-று.

பொழிப்புரை:—

கழுத்தணியின் கயிற்றையும் மதங்களையு முடைய யானைகளினது படை வகுப்புகளின் நிலைமையான தறும்படி காபிர்களின் பூமிகளைமுட்டும் வண்ணம்பிரயோகித்துஷறகில்பொருந்திய நல்ல கதியினது சன் மார்க்கத்தில் அவர்களை நுழைவித்து மேலான தலைமைத் தனத்திற்கு வைத்த பெருமையை யுடையவரும் தேன் மாரியினது துளிகள் சிதறுத லுற்றுக் கிடக்கும் இரு மாலைகளைக் கொண்ட தோள்களை யுடையவர்களான நாயகம் நபி முகம்மது முஸ்தபா

றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அரசுக்கு வைக்கப்பெற்ற ஒழுங்கினது சங்கைக்கு மிகுந்த துரையு மான அபூபக்கர் சித்தீகு றலி யல்லாகு அன்கு அவர்களை யாம் துதிப்பாம், எ-று. (௬)

வேறு.

அமரிலெதிர்த் தோர்களாவி யெமதிசையைத் தேடியோட
வடருமடற் சூர வீரவேள்
மமதைகெடச் சாதிநீதி முறைமைதனக் காகவோது
மகனைவதைத் தோரொ ருமலே
திமிரபகைப் பானுமேனி கருகிவிடப் பார்வையேவு
தெரிமறையிற் கார ணீகனு
ருமறுதிருத் தாளைநாளு மனதினினைத் தோதுவோர்தம்
முரியதவப் பேறு மீறுமே.

பதவுரை:—

அமரில்எதிர்த்தோர்கள்ஆவி—யுத்தத்திலெதிர்த்த சத்துராதிகளின் ஜீவனானது எமன் திசையைதேடி ஓட=அந்தகனின் திக்கை நாடி ஓடும் வண்ணம் அடரும் அடல் சூரம்வீரம் வேள் =பொருதாநிற்கும் வெற்றியினது வீரியத்தையும் பலத்தையு முடைய வேளும் சாதி நீதிமுறைமைதனக்கு ஆக=தமது சமயத்தின் நியாயத்தினது ஒழுங்கிற்காய் மமதைகெட=அகந்தையழியும்படி ஒருமலே ஓதும் மகனை வதைத்தோர்=குறையாமல்கூறுகின்றதங் குமாரனை வதைத்தவர்களும் திமிரபகைபானு=அந்தகாரத்தினது விரோதியானசூரியனின் மேனி கருகிவிட=மேனி யானதுதீயபார்வை ஏவு=நோக்கத்தை ஏவினதெரிமறையின்காரணீகனூர்=தெரிகின்றவேதத்தினது காரணீகரு மாகிய உமறு திருதாளை =உமறு கத்தாபு றலி யல்லாகு அன்கு அவர்களின் தெய்வீகந் தங்கிய பாதங்களைமனதில் நினைத்து ஓதுவோர்தம்=சிந்தையின்கண் சிந்தித்துத் துதிப்பவர்களின் உரிய தவம் பேறு மீறும் ஏ=உரிமை யானதவத்தினதுவாய்ப்பானது அதிகரியாநிற்கும்.எ-று.

பொழிப்புரை:—

யுத்தத்திலெதிர்த்த சத்துராதிகளின் ஜீவனானது அந்தகனின் திக்கை நாடி ஓடும் வண்ணம் பொருதாநிற்கும் வெற்றியினது வீரியத்தையும் பலத்தையுமுடையவேளும் தமதுசமயத்தின் நியாயத்தினது ஒழுங்கிற்காய் அகந்தை யழியும்படி. குறையாமல் கூறுகின்ற

தங் குமாரனை வகைத்தவர்களும் அந்தகாரத்தினது விரோதியான சூரியனின் மேனியானது தீய நோக்கத்தை ஏவினதெரிகின்றவே தத்தினது காரணீகரு மாகிய உமறு கத்தாபு றலியல்லாகு அன்கு அவர்களின் தெய்வீகந் தங்கியபாதங்களைச்சிந்தையின் கண் சிந்தித் துத் துதிப்பவர்களின்உரிமையான தவத்தினதுவாய்ப்பானது அதி கரியாநிற்கும், எ-று. (௧௦)

வேறு

விதுமாற வொளிவான வதனாதி நபிநாவில்
விளைவான திரு வேதமே
பதிவாக வொருசேக ரமதாக நிலமீது
பயிராக வுரை தாவினோர்
சதுமாம றைபினோர்கள் பெரியோர்கள் சிறியோர்க
டமதாவி யென வாழுவோ
ருதுமானை யொருகாலு மறவாம லிருகாலு
முளமீது நினை வாமரோ,

பதவுரை:—

விது மாற=சந்திர னனது மாறும் படி ஒளிவு ஆன வதனம்= பிரகாச மான முகத்தை யுடைய ஆதி=யாவற்றிற்கும் முதன்மைய னாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின், நபி=நபி யாகிய நமது நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர் களின், நாவில் விளைவு ஆன=நாக்கி லுற்பத்தி யாகிய, திரு வேத மே=தெய்வீகம் தங்கிய ஆரணத்தை,பதிவு ஆக=பதிவாகவும்,ஒரு சேகரம் அது ஆக=ஒரு கூட்ட மாகவும், நிலம் மீது=இவ் வுலகத் தின் மீது, பயிர் ஆக=பயி ராகும் படி, உரை தாவினோர்=வசனமா யெழுதின வரும், சதுமா மறைபினோர்=மகத்தான நான்கு வேதத் தை யுடையவர்களும்' பெரியோர்=பெரியோர்களும், சிறியோர்= சிறியோர்களும், தமது ஆவி எனவாழ்வோர்=தமது ஜீவ னென்று சொல்லும் வண்ணம்வாழ்ந்தவருமாகிய,உதுமானை=உதுமா னிபுனு அப்பான் றலியல்லாகு அன்கு அவர்களை, ஒரு காலும் மறவாமல்= ஒரு போதும் மறக்காமல், இருகாலும்=அவர்களின் இரண்டு பாதங் களையும், மனமீது நினைவாம்=யாம் மனசின்கண் சிந்திப்பாம். எ-று.

பொழிப்புரை:—

சந்திர னனது மாறும் படி பிரகாசமான முகத்தை யுடையபா வற்றிற்கும் முதன்மைய ளுகிய அல்லாகு சுபுகானகு வத்தஆலாவின் நபி யான நமது நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் நாக்கி லுற்பத்தி யாகிய தெய்வீகங் தங்கிய ஆரணத்தை பதிவாகவும் ஒரு கூட்ட மாகவும் இவ்வுலகத்தின்மீது பயி ராகும்படி வசனமா யெழுதினவரும் மகத்தான நான்கு வேதத்தையுடையவர்களும் பெரியோர்களும் சிறியோர்களும் தமது ஜீவ னென்று சொல்லும் வண்ணம் வாழ்ந்தவரு மாகிய, உதுமா னிபுனு அப்பான் றலி யல்லாகு அன்கு அவர்களை ஒரு போதும் மறக்காமல் அவர்களின் இரண்டு பாதங்களையும் யாம் மனசின்கண் சிந்திப்பாம். எ-று. (கக)

வேறு.

படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவாரி
படுதிரை யளற தாகவே
வடவரை யசையவான முகடுடை படவருத
மழைமுகில் சிதறி யோடவே
யடையலர் கெடிகள்கோடி யிடிபடு படலதூளி
யலரியி னுடலின் மூழ்கவே
நடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர
நரர்புலி யலியை யோதுவாம்.

பதவுரை:—

படி கிடுகிடு என=பூமி யானது கிடுகி டெனவும், நாகம்முடிநெறு நெறு என=ஆதி சேடனது மகுடங்கள் நெறு நெ றெனவும், வாரி படுதிரை அளறு அது ஆகவே சலத்தைக் கொண்ட சமுத்திர மானதுசேருகவும். வடவரை அசைய=மகாமேரு பருப்பத மசையவும், வானம் முகடு உடைபட=வானத்தினது சிகர முடையவும், அருத மழை முகில் சிதறி ஓட=ஒழியாத நீரையுடைய மேகங்கள் சிதறுண்டோடவும் அடையலர் கெடிகள் கோடி=சத்து ராதிகளின் ஊர்கள் கோடி யளவாக, இடிபடு படலம் தூளி=இடி பட்ட கூட்ட மாகிய தூசிகள், அலரியின் உடலில் மூழ்கவே=சூரியனது மேனி யில் முங்கவும், நடன மிடு கடினம் வாசி மிசை வரும்=நடன மிடு கின்ற வன்மையை யுடையதுல்து லென்னுங் குதிரை மீது வராநிற்

கும், சமர சூர நரர் புலி=யுத்த வீரியத்தினது மாந்தர்களின் புலியான=அலியிபுனு அபீத்தாலிபு றலி யல்லாகு அன்கு அவர்களை யாம் துதிப்பாம் எ-று.

பொழிப்புரை:—

பூமியானது கிடுகிடெனவும் ஆதி சேடனது மகுடங்கள் நெறுநெறெனவும் சலத்தைக் கொண்ட சமுத்திரமானது சேறுகவும் மகாமேருப் பருவத மசையவும் வானத்தினது சிகரமுடையவும் ஒழியாத நீரை யுடைய மேகங்கள் சிதறுண்டு ஓடவும் சத்துராதிகளின் ஊர்கள் கோடி யளவாக இடி பட்ட கூட்ட மாகிய தூசிகள் சூரியனது மேனியில் மூடவும் நடன மிடுகின்ற வன்மை யுடையதுல்துலென்னுங் குதிரை மீது வராநிற்கும் யுத்த வீரியத்தினது மாந்தர்களின் புலியான அலியிபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்கு அவர்களை யாம் துதிப்பாம், எ-று. (கஉ)

வேறு.

நலிவற வுலகநீதி நெறிமுறை பெருகநாளு
  நமருயி ரரிய காவலா
யொலிகட லுலகமீது தெரிதர வரியதீனு
  முறுகதி ருதைய மாகவே
மலிபுக ழரசர்சீய மிர்கமத நறைகுலாவு
  மறைநபி மருக ராகிவா
மூலிதிரு மதலையான வசனுசை னுபயபாத
  மனுதின மனதிலோது வாம்.

பதவுரை:—

நலிவு அற உலகம்=துன்ப மான தற்றுப் போகும்படி யுலகத்தின்கண், நீதி நெறி முறை பெருக=நியாயத்தினது சன்மார்க்க ஒழுங்குகள் அதிகரிக்க. நாளும் நமர் உயிர் அரிய காவல் ஆய்=பிரதிதினமும் நம்மவர்களினுயிர்க்கு அருமை யான காவ லாகவும், ஒலி கடல் உலகம் மீது=சத்தியாநிற்கும் சமுத்திரத்தையுடையபூமியின் மீது தெரி தர அரியதீன்=விளங்கும்வண்ணம் அரிதர்கியதீனுல்இஸ்லாமென்னும் மார்க்கத்தினது, உறு கதிரும் உதயம் ஆகவே=பொருந்திய கிரணங்களும் தோற்ற மாகவும், மலி புகழ் அரசர் சீயம்=மிகுத்த கீர்த்தியை யுடைய அரசர்க ளாகிய யானைகளுக்குச் சிங்கத்

தை நிகர்த்த, மிர்க மதம் நறை குலாவும்=கத்தூரி வாசனை யானது குலவுகின்ற, மறை நபி மருகர் ஆகி வாழ்=புறுக்கானுல்அலீமென்னும் வேதத்தினது நபி நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் மருகராய் வாழ்ந்த,அலி திருமதலை ஆன=அலி றலி யல்லாகு அன்கு அவர்களின் அழகிய புதல்வர்களான, அசன் உசைன் உபயம் பாதம்=இமாம் ஹசன் ஹுசைன் றலி யல்லாகு அன்கு அவர்களி னிரு சரணங்களையும், அனுதினம் மனதினில் ஓதுவாம்=எப்பொழுதும்யாம் இருதயத்தின்கண் துதிப்பாம், எ-று.

பொழிப்புரை:—

துன்ப மான தற்றுப் போகும்படி யுலகத்தின்கண்நியாயத்தினது சன்மார்க்க ஒழுங்குகள் அதிகரிக்கப் பிரதி தினமும் நம்மவர்களினுயிக்கு அருமையான காவ லாகவும் சத்தியாநிற்கும் சமுத்திரத்தையுடைய பூமியின் மீது விளங்கும் வண்ணம் அரி தாகிய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தினது பொருந்திய கிரணங்களும் தோற்றமாகவும் மிகுத்த கீர்த்தியை யுடைய அரசர்களான யானைகளுக்குச் சிங்கத்தை நிகர்த்த கஸ்தூரிவாசனையானது குலாவுகின்றபுறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது நபி யாகியநாயகம்முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் மருகராய் வாழ்ந்த அலி றலி யல்லாகு அன்கு அவர்களின் அழகிய புதல்வர்களான இமாம் ஹசன் ஹுசைன் றலி யல்லாகு அன்குஅவர்களினிரு சரணங்களையும் எப்பொழுதும் யாம் இருதயத்தின்கண் துதிப்பாம் எ-று. (கரு)

வேறு

ஆலகால வாரிபோலு மாகொரே மாகிய
காலகேள்வி தானடாத காரணீக ராளவே
தாலமீதி லாதிதூதர் சாரமேவு வாழ்வினோர்
நாலொடாறு பேர்கள்பாத நாவினாலு மோதுவாம்.

பதவுரை:—

ஆலகால வாரி போலும்=விடச் சமுத்திரத்தைப் போலும்,மாகொரோம் ஆகிய=பெரிய கடுமை யாகிய, காலம் கேள்விகள் தான் அடாத=கியாம நாளையினது கேள்விகள் அடாத, காரணீகர்=கார

ணீகத்தை யுடையவர்களும், தாலம் மீதில்=பூமியி னிடத்து, ஆதி தூதர்=யாவற்றிற்கும் முதன்மைய னன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதர்களும், சார=பொருந்தும் வண்ணம், மேவு வாழ்வோர்=மேவப் பெற்ற வாழ்வை யுடையவர்களு மான உலுல் அஜுமிக ளாகிய, நால் ஒடு ஆறு பேர்கள்=நான்குடன் ஆறுன பத்துப் பேர்களுங்' ஆளவே=ஆட் கொள்ளும் படி, பாதம்நாளும்=அவர்களின் திரு வடிகளைப் பிரதிதினமும், நாவில் ஓதுவாம்=யாம் நாக்கினுற் றுதிப்பாம். எ-று.

பொழிப்புரை:—

விடச் சமுத்திரத்தைப் போலும் பெரிய கடுமை யாகிய கியாம நாளையினது கேள்விகள் அடாத காரணீகத்தை யுடையவர்களும், பூமியி னிடத்து யாவற்றிற்கும் முதன்மைய னன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதர்களும், மேவப் பெற்ற வாழ்வையுடையவர்களு மான உலுல் அஜுமிக ளாகிப நான்குடன் ஆறுன பத்துப் பேர்களும் பொருந்தும் வண்ணம் ஆட்கொள்ளும் படி அவர்களின் திரு வடிகளைப் பிரதிதினமும் யாம் நாக்கினுற் றுதிப்பாம், எ-று ()

வேறு.

ஆதமீன் றமனு நீதியாண்ட முறை
யாலு மோங்குபுக ழாகினேர்
தூதராங் கடவு ளவிலாய்ந்த மறை
தூவினான்கு மத்ஹ பாகினேர்
நீதவான் களுறு போதவான்கள் குரு
நேர்மை யாந்தகைமை யாகினேர்
வேதவான் களெனு நாவிமாம் கள்பத
மேலுமி யாம்புகல வேணுமே,

பதவுரை:—

ஆதம் ஈனற் மனு=நபி ஆத மலைகிஸ்ஸலா மவர்கள் பெற்ற மானுஷீர்களின், நீதி ஆண்ட முறையாலும்=நியாயத்தை ஆட்சி செய்த முறைமையி னுலும், ஓங்கு புகழ் ஆகினேர்=அதிகரியாநிற்கும் கீர்த்தி யானவர்களும், தூதர் ஆம் கடவுள்=நமது லாகிய குரு நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின், நாவில் ஆய்ந்த மறை=நாக்கினுற் றெரிந்த வே

த்தை, தூவி நான்கு மத்ஹபு அகினோர்=பெய்து நான்கு மதுஹ பாக்கினவர்களும், நீத வான்கள்=நீதத்தை யுடையவர்களும், உறு போதவான்கள்=பொருந்திய அறிவை யுடையவர்களும், குரு நேர்மை ஆம்=குருவினது ஒழுங் கான. தகைமை ஆகினோர்=தகைமை யனவர்களு மாகிய, வேதவான்கள் எனும்=வேதவான்களென்று கூறும், நாலிமாம்கள் பதம்=நான்கி மாம்களின் திரு வடிகளை, மேலும் யாம் புகல வேணுமே=மேலும் நாம் துதிக்க வேண்டும். எ-று

பொழிப்புரை:—

நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்கள் பெற்ற மானுஷீர்களின் நியாயத்தை ஆட்சி செய்த முறைமையினாலும் அதிகரியா நிற்கும் கீர்த்தியானவர்களும், றசூலாகிய குருநமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் நாக்கினாற்றெரிந்த வேதத்தைப் பெய்து நான்கு மதுஹ பாக்கினவர்களும், நீதத்தை யுடையவர்களும், பொருந்திய அறிவை யுடையவர்களும், குருவினது ஒழுங்கான தகைமை யானவர்களு மாகிய வேதவான்க ளென்று கூறும் நான்கிமாம்களின் திருவடிகளை மேலும் நாம் துதிக்கவேண்டும் எ-று.

வேறு.

உரமுறு தீன்பா ரெல்லா மொளிரவே விளக்கஞ் செய்யுந்
துரமுறு மவுலி யாவாய்த் தோன்றின பேர்க்கு மேலாம்
வரமுறு முகியித் தீன்செம் மலரடி யிரண்டு மென்றன்
சிரமிசை யிருத்தி வாழ்த்திச் செந்தமிழ்ப் பனுவல்செய்வேன்.

பதவுரை:—

உரம் உறும் தீன்=வலிமை பொருந்திய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை, பார் எல்லாம்=பூமி முழுவதும் ஒளிரவே விளக்கம் செய்யும்=பிரகாசிக்கும் படி விளக்கஞ் செய்த, துரம்உறும்அவுலியா ஆய்=பொறுப்பைச் சார்ந்த அவுலியா வாக, தோன்றின பேர்க்கு மேல் ஆம்=உதய மானவர்களுக்கு மேலாகிய. வரம்உறும்முகியித்தீன்=வரத்தை யுற்ற முகியித்தீ னென்னும் காரணப் பெயரை யுடைய செய்யிதுனா அப்துல் காதிறுல் ஜெயிலானி கத்த சல்லாகு சிர்றகு அவர்களின், செம் மலர் அடி இரண்டும்=செவந்த தாமரை மலரை நிகர்த்த இரு பாதங்களையும், என்தன் சிரம் மிசை=எனது

தலையின் மீது, இருத்தி வாழ்த்தி—இருக்கச் செய்து துதித்து. செம் தமிழ் பனுவல் செய்வேன்—அழகிய தமிழினது இந் நூலைச்செய்ய ஆரம்பிக்கின்றேன். எ-று

பொழிப்புரை:—

வலிமை பொருந்திய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தைப் பூமி முழுவதும் பிரகாசிக்கும் படி விளக்கஞ் செய்த பொறுப்பைச் சார்ந்த அவுலியாவாக உதய மானவர்களுக்கு மேலாகிய வரத்தை யுற்ற முகியித்தீ னென்னும் காரணப் பெயரை யுடையசெய்யிது அப்துல் காதிறுல் ஜெயிலானி கத்த சல்லாகு சிர்றகு அவர்களின்செவந்த தாமரை மலரை நிகர்த்த இரு பாதங்களையும், எனது தலையின் மீது இருக்கச் செய்து துதித்து அழகிய தமிழினது இந்நூலைச்செய்ய ஆரம்பிக்கின்றேன். (கரு)

நம்மையா ளுடையான் வேத நபிதிரு வசனந் தீனோர்
சம்மதித் திடப்பா ரெல்லாந் தழைக்கவே விளக்கஞ் செய்தோ
ரிம்மையு மறுமை யும்பே றிலங்கிய ஸதக்கத் துல்லா
செம்மல ரடியி ரண்டுஞ் சிந்தையி லிருத்தி னேனே.

பதவுரை:—

நம்மை ஆள் உடையான்—நம்மை ஆளுகின்ற யாவற்றையும் சொந்தமா யுடையவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின், வேத நபி—புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது நபி யாகிய நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களினது, திருவசனம்—தெய்வீகந் தங்கிய வசனத்தை, தீனோர் சம்மதித்திட—தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை யுடையவர்கள் சம்மதிக்கும் வண்ணம், பார் எல்லாம்—பூமி முழுவதும், தழைக்கவே விளக்கம் செய்தோர்—ஓங்கும் படி விளங்கச் செய்தவ ரான இம்மையும் மறுமையும்—இம்மையிலும் மறுமையிலும் பேறு இலங்கிய சதக்கத்துல்லா—கதியான திலங்கப் பெற்ற செய்கு சதக்கத் துல்லா வொலி அவர்களின், செம் மலர் அடி இரண்டும்—செவந்த கமலமலரை பொத்த இருசரணங்களையும், சிந்தையில்இருத்தினேன்—யான் மனதின்கண் இருக்கச் செய்தேன். எ-று.

பொழிப்புரை:—

நம்மை ஆளுகின்ற யாவற்றையும் சொந்தமா யுடையவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் புறுக்கானுல் அலீமென்னும்

வேதத்தினது நபி யாகிய நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல் லாகு அலைகி வசல்ல மவர்களினது தெய்வீகந் தங்கிய வசனாத்தைத் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை யுடையவர்கள் சம்மதிக்கும் வண்ணம் பூமி முழுவதும் ஓங்கும்படி விளங்கச் செய்தவ ரான இம் மையிலும் மறுமையிலும் கதி யான திலங்கப்பெற்ற செய்கு சதகத் துல்லா வொலி அவர்களின் செவந்த கமலமலரை யொத்த இரு சர ணங்களையும் யான் மனதின்கண் இருக்கச் செய்தேன். எ-று. (கஎ)

வேறு.

திக்க னைத்தினும் பாரினுந் தீவினுஞ் செங்கோற்
புக்க நன்னெறித் திகிரிமன் னவர்கண்முன் பொருந்தத்
தக்க கூலியுஞ் செய்துண வறிகிலான் சரிபோன்
மிக்க செந்தமிழ்ப் புலவர்மு னியான்விளம் புவதே.

பதவுரை:—

மிக்க செந்தமிழ் புலவர் முன்=மிகுந்த அழகையுடைய தமிழி னது புலவர்களின்முன்னர், யான் விளம்புவது=நான் (இந் நூலைக்) கூறுவது, திக்கு அனைத்தினும்=எல்லாத்திசைகளிலும், பாரினும் =பூமியிலும், தீவினும்=தீவுகளிலும், செங்கோல் புக்க=தனது நீதி யானது செல்லும் வண்ணம், நல் நெறி=நல்ல சன்மார்க்கத்தின், திகிரி மன்னவர் முன்=ஏகச் சக்கரத்தை யுடைய அரசர் களினது முன்னர், பொருந்த=பொருந்தும் படி, தக்க கூலியும்=தகுதியான கூலி வேலையும், செய்து உண அறிகிலான்=செய்து சாப்பிடத் தெ ரியாதவன், சரி போல்=சரி யாவதைப் போலும்.

பொழிப்புரை:—

மிகுந்த அழகை யுடைய தமிழினது புலவர்களின் முன்னர் நான் (இந்நூலைக்) கூறுவது. எல்லாத் திசைகளிலும் பூமியிலும் தீவு களிலும் தனது நீதி யானது செல்லும் வண்ணம் நல்ல சன்மார்க்கத் தின் ஏகச் சக்கரத்தை யுடைய அரசர்களினது முன்னர் பொருந் தும் படி தகுதி யான் கூலி வேலையும் செய்து சாப்பிடத் தெரியாத வன் சரியாவதைப் போலும், எ-று. (கஅ)

படித்த லத்தெழு கடல்குல கிரிநிலை பதற
வெடுத்து வீசிய சண்டமா ருதத்தினுக் கெதிரே
மிடித்து கொந்தசிற் றெறும்பொரு மூச்சுவிட் டதுபோல்
வடித்த செந்தமிழ்ப் புலவர்மு னியான்சொலு மாறே.

பதவுரை:—

யான் வடித்த செம் தமிழ் புலவர் முன்—நான் தெளித்த அழகிய தமிழ்ப் பாடையினது வித்துவான்களின் முன்னர். சொலும் ஆறு—(இந் நூலைக்) கூறு மார்க்க மானது படி தலத்து—பூமியின் கண் எழுகடல்—எழுசமுத்திரங்களும் குலகிரி—அட்ட குலபருவதங்களும், நிலை பதற—தன் நிலைமை யானது பதறும் வண்ணம், எடுத்து வீசிய—எடுத்து வீசப் பெற்ற, சண்ட மாருதத்தினுக்கு எதிரே—பெருங் காற்றிற்குமுன்னர்; மிடித்து நொந்த—வறுமை யுற்று வருந்திய, சிறு எறும்பு—சிறிய எறும் பானது ஒருமூச்சு விட்டது போல்—ஒரு மூச்சு விட்டதைப் போலும் எ று.

பொழிப்புரை:—

நான் தெளித்த அழகிய தமிழ்ப் பாடையினது வித்துவான்களின் முன்னர் (இந் நூலைக்) கூறுமார்க்கமானது பூமியின்கண் எழுசமுத்திரங்களும் அட்ட குல பருவதங்களும் தன் நிலைமையானது பதறும் வண்ணம் எடுத்து வீசப் பெற்ற பெருங் காற்றிற்குமுன்னர் வறுமை யுற்று வருந்திய சிறிய எறும் பானது ஒரு மூச்சு விட்டதைப் போலும், எ-று. (கசூ)

அடிய டித்தொறும் வழுவலால் விதிவிலக் கறியேன்
படிப டித்தசெஞ் சொற்புல வோர்முனம் பகர்த
லிடியி டித்திடு மாரவா ரத்தினுக் கெதிரோர்
நொடிநொ டிப்பது போலுமொத் திருந்த தென் னூலே.

பதவுரை:—

அடி அடிதொறும்—வரிகளெல்லாவற்றிலும்' வழுவு அலால்—குற்ற மல்லாது, விதி விலக்கு அறியேன்—இலக்கண விதியையும் விலக்கையுந் தெரியாதவ னான யான் படிபடித்த—பூமியில் அவ்விலக்கண நூல்களின் விதிகளையும் விலக்குகளையும் கற்ற செம் சொல் புலவோர் முனம்—அழகிய வார்த்தையையுடைய கவிவாணர்களின் முன்வர் பகர்தல் என் நூல்—பகர்தலாகிய எனது நூலானது, இடி இடித்திடும் ஆரவாரத்தினுக்கு எதிர்—இடிஇடிக்கும்பெரிய ஓசைக்கு முன்னர் ஓர் நொடி நொடிப்பதுபோலும்—கையினால் ஒருநொடி நொடிப்பதைப் போலும் ஒத்து இருந்தது—பொருந்தி இருந்தது. எ-று.

பொழிப்புரை:—

வரிக ளெல்லாவற்றிலும் குற்ற மல்லாது இலக்கண விதியையும் விலக்கையுந் தெரியாதவனுன யான் பூமியில் அவ் விலக்கண நூல்களின்விதிகளேயும் விலக்குகளேயும் கற்ற அழகிய வார்த்தையை யுடைய கவி வாணர்களின் முன்னர் பகர்த லாகிய எனது நூலானது இடி இடிக்கும் பெரிய ஓசைக்கு முன்னர் கையினுல் ஒரு நொடி நொடிப்பதைப் போலும் பொருந்தி யிருந்தது, எ-று. (உ0)

கடவுள் வாழ்த்துப் படலம்.

முற்றிற்று.

நாட்டுப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தருங்கொண்டை நயினர் கீர்த்தி சகமெலாம் பரந்து மிஞ்சி
நெருங்கியே விசும்பி லண்ட முகடுற நிறைந்த வேபோ
லிருங்கண வெள்ளே மேகமிரைப்பசுங் கடல்வீழ்ந் துண்டோர்
கருங்கட லெழுந்த தென்னக் ககனிடை செறிந்து மீண்ட.

(இ-ள்.) ஈகையைத் தரா நிற்கும் நயினு ரான நமது நாயகம் எம்மறைக்குந் தாயகம் நபிகட் பெருமான் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் புகழானது இவ் வுலக முழுவதும் பரவி அதிகப்பட்டு நெருக்க முற்று ஆகாயத்தின்கண் வானத்தினது உச்சியைப் பொருந்தும் வண்ணம் நிறைந்ததைப் போலப் பெரிய கூட்டமாகிய வெண்ணிறத்தை யுடைய மேகங்க ளானவை சத்திக்கின்ற பசிய சமுத்திரத்தி னிடத்து விழுந்து அச்சமுத்திரத்தின்ஜலத்தை அருந்தி ஒரு கரிய கடலானது எழுந்ததை யொத்து நெருங்கிஆகாயத்தினிடத்துத் திரும்பின. (க)

கலிநிலைத்துறை.

அகில மெங்கணுந் திடுக்கிட வாய்திறந் ததிர்ந்து
மிகும ழைக்குல மடிக்கடி விழிப்பபோன் மின்னிக்

ககன மெண்டிசை யடங்கலும் பரந்துகா லூன்றிச்
சிகர பூதர மறைதரச் சொரிந்தன செருமி.

(இ-ள்.) அவ்வாறு திரும்பிப மிருத்த கூட்டமாகியமேகங்களா னவை இந்தப் பூலோக மெவ் விடத்தும் திடுக்கிடும் படி வாயைத் திறந்து இடித்து அடிக்கடி கண்களை விழிப்பன போன்று மின்னி ஆகாயத்தினது எண்டிசைக ளெல்லாவற்றிலும் நெருங்கி பரவிக் காலூன்றி கொடு முடியை யுடைய மக்கமா நகரத்தினது மலை யானது மறையும் வண்ணம் ஜலத்தைப் பெய்தன. (உ)

அதிரு மா மழைத் துளியிடை யிடையணி யணியாய்
முதிரு மிந்திர கோபமு மாலியு முதிர்ந்த
கதிர்செய் முத்தமு மாணிக்க ராசியுங் கலந்தே
யுதிரும் வண்ணமொத் திருந்தன கிரியொரும் கொருங்கே.

(இ-ள்.) அன்றியும், ஒலியாநிற்கும் பெருமை தங்கிய அந்த மழைத் துளியி னிடை யிடை வரிசை வரிசை யாக முற்றியஇந்திர கோபமும் ஆலாங் கட்டியும் உதிர்ந்தவை, பிரகாசத்தைச்செய்கின்ற முத்தமும் மாணிக்கத்தினதுகூட்டமும் ஒன்றாய்க்கலப் புற்று அந்த மலை முழுவதிலும் ஒருங்குடன் சிந்தும்தன்மையைநிகர்த்திருந்தன

பம்மி யெங்கணும் பொழிதரு சாரல்வாய்ப் பட்டுக்
கம்மி னத்தக டறக்கொடு கியகுளிர் கலக்க
மும்ம தக்கரி களுமரி களுமுர ணறவே
சம்ம தித்தொரு புடைகிடப் பனவெனச் சாரும்.

(இ-ள்.) அன்றியும், எவ் விடத்தும் பம்முதலுற்றுப்பெய்கின்ற அந்தச் சாரலினது இடத்தி லகப் பட்டுத் தலை யானது தனது இனத்தின் வயற்றில் பொருந்தும் வண்ணம் கொடுகிய கூதலினது சஞ்சலத்தால், கன்னமதம், கைமதம், கோசமத மென்னும் மூன்று மதங்களையு முடைய யானைகளும்சிங்கங்களும்தங்களில்விரோதமறு ம்படி இணங்கி ஓரிடத்திற் கிடப்பவைகளைப் போலச் சாராநிற்கும்.

தந்தி மான்மரை யணில்கொடு வரிதக ருடும்பு
மந்தி சிங்களங் கவரிமா வழுங்குதே வாங்கு
முந்து மான்மத மெண்குசெந் நாய்பணி மூண்மா
நந்தி மிஞ்சிய விலங்கினங் கொடுகிமெய் நடுங்கும்.

(இ-ள்.) அன்றியும், யானை, மான், மரை, அணில், புலி, ஆடு, உடும்பு, மந்தி, சிங்களம், கவரிமா, அழுங்கு, தேவாங்கு, மூங்துகின்ற குதிரை, மதத்தைக் கொண்ட கரடி, செந்நாய், எருமை, முள்ளம் பன்றி, எரு தாகிய அதிகரித்த மிருகக் கூட்டங்கள் அம் மழை யினால் கொடுகுத லுற்றுத் தங்களின் சரீர மானது நடுக்க மடையா நிற்கும். (ரு)

வேங்கை சந்தனஞ் சண்பகம் நெல்லிவெய் தான்றி
கோங்க சோகுதேக் காசினி பாடலங் குறிஞ்சி
நான்கு காரகில் குங்கும மிலவுநா ரத்தை
தாங்கும் வேரற வரையொடு வரையிடை சாய்க்கும்.

(இ-ள்.) அன்றியும், அந்த மழையானது வேங்கை, சந்தனம் சண்பகம், நெல்லி, மூங்கில், தான்றி, கோங்கு, அசோகு, தேக்கு, ஆசினி, பாடலம், ஈந்து, நாங்குங் கரிய அகில், குங்குமம், இலவம், நாரத்தை யாகிய இவைகளைத் தாங்காநிற்கும் வேர்க ளானவை அற்றுப் போகும் வண்ணம் கற்களுடன் அந்த மலையி னிடத்துச் சாயும்படி செய்யாநிற்கும். (சு)

விலங்கி னங்கடங் குலத்தொடுங் குழுவொடும் வெருட்டிக்
கலங்கு மஞ்சிறைப் பறவைக ளனைத்தையுங் கலைத்தே
யிலங்கு பைங்கனி சிதறிடத் தருக்களை யிடறி
நலங்கொள் பைங்கதிர்க் கிரியிடை சரிந்தன நாரம்.

(இ-ள்.) அன்றியும், அம் மழை பெய்ததினா லுண்டாகிய நீரா னவை மிருகக் கூட்டங்களைத் தனது குலத்துடனும் கூட்டத்துட னுந் துரத்திக் கலங்கா நிற்கும் அழகிய சிறகுகளை யுடைய பட்சி சாதிக ளெல்லாவற்றையுங் கலையும்படி செய்து ஒளிர்கின்ற பசிய பழங்க ளானவை சிதறும் வண்ணம் மரங்களைத் தடுக்கி நலத்தைக் கொண்ட பசுமை தங்கிய பிரகாசத்தை யுடைய அந்த மலையி னிடத் துச் சாய்ந்தன. (எ)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வரிவிழிச் செவ்வாய்க் குறத்திய ரிதணு
மனையையுந் தினையையும் வாரிப்
புரிநரம் பிசையாழ் தொண்டகப் பறையும்
பொடிபடத் துறுகலின் மோதி

விரிதலைக் குறவர் குழாத்தொடும் வெருட்டி
விளைந்தமுக் கனிசதகோடி
சரிதர வீழ்த்தி மரகதக் கிரணத்
தடவரை யருவிகொண் டிறங்கும்.

(இ-ள்.) அவ்வாறு சாய்ந்த மரகதத்தினது பிரகாசத்தைக்கொண்ட அந்தப் பெரிய மலையின் அருவி யானது இரேகைகள் படரப் பெற்ற கண்களையும் செவந்த வாயையு முடைய குறத்தியர்களின் பானையும் வீட்டையும் தினையையும் வாரி முறுக் கமைந்த நரம்பினைக் கொண்ட யாழையும் குறிஞ்சிப் பறையையும் தூளாகும் வண்ணம் நெருங்கிய கற்களில் அடித்து விரிந்த சிரத்தை யுடைய குறவர்களைக் கூட்டத் தோடுந் துரத்தி விளைந்த வாழை, பலா, மா வென்னு மூன்று விதப் பழங்களையும் நூறு கோடி யளவாய்ச் சரியும்படி விழுத்திக்கொண்டு தாழே இறங்கின. (அ)

மலையெனு மரசன் புயங்களைத் தழுவி
மகிழ்ச்சிசெய் தவனுழைச் சிறந்த
நிலைகெழு பொன்னு முரகசெம் மணியு
நித்தில ராசியுங் கவர்ந்து
தொலைவிலாப் பண்ட மனைத்தையும் வாரிச்
சுருட்டியே யெல்லைவிட் டகலும்
விலைமகள் போன்றும் பலபலமுகமாய்
வெள்ளரு வித்திரள் சாயும்.

(இ-ள்.) அன்றியும், வெண் ணிறத்தை யுடைய அந்த அருவியின் கூட்டங்கள் மலை யென்று கூறும் மன்னவனது தோள்களைக் கட்டியணைத்து அவனைக் களிப்படையச் செய்து அவனிடத்திற் சிறக்கப்பெற்ற நிலைமையை யுடைய செழிய பொன்னையும், சருப்பத்தினது செவந்த மணிகளையும், முத்துக் கூட்டங்களையும் கைவசப் படுத்தித் தொலையாத அங்குள்ள பொருள்க ளெல்லாவற்றையும் அள்ளிச் சுருட்டிக் கொண்டு தானத்தை விட்டு நீங்காநிற்கும் விலை மகளை நிகர்த்தும்பற்பல முக மாகச் சாய்ந்தன. (௯)

கலிநிலைத்துறை.

தாது குத்துவண் டார்த்தெழத் தருத்தலை தடவி
வீதி வாய்நுரை தாவரு பாகெழ வீசிக்

காது மாகளி றெனநதி கழைக்கடங் காது
மோதிக் காலினு லெற்றியே யணையிட முறிக்கும்.

(இ-ள்.) அவ்விதஞ் சாயும் நதிக ளானவை மகரந்தங்களைச் சிந்தி வண்டுகள் ஒலித்துக்கொண்டு எழும் வண்ணம் சோலைகளைக் கெடுத்து வழியின்கண் நுரை தரும் படிக் கரைகளினால் எழும்ப எறிந்து கொலைத் தொழிலை யுடைய பெரிய யானையைப் போலும் கழைக் கமையாது அணை யிடங்களைக் காலினல் எற்றி இடித்து முறியப் பண்ணுநிற்கும். (௧௦)

பரந்த வெண்ணுரைத் துகிலுடுத் தறற்குழற் பரப்பி
விரைந்து பாய்கயல் விழியெனத் திரைக்கரம் வீசிச்
சுரந்த புற்புதத் தனத்துடன் சுழியுந்தி தோற்றப்
பொருந்து மானதி விளங்கிழை மகளிரைப் போலும்.

(இ-ள்.) அன்றியும், பரவிய வெண் ணிறத்தை யுடைய நுரை யாகிய வஸ்திரத்தை யுடுத்துக் கரு மணல்க ளாகிய கூந்தலை விரித்து விரை வுற்றுச் சாடுங் கெண்டை மீன்கள் கண்க ளென்று சொல்ல அலைகளாகிய கைகளை வீசி நிறைந்த நீர்க் குமிழி யாகிய முலைகளுடன் சுழி யாகிய தொப்பு ளானது விளங்கும் வண்ணம் பொருந்தாநிற்கும் பெருமை தங்கிய அந்த நதி யானது பிரகாசிக் கின்ற ஆபரணங்களை யுடைய மாதர்களை நிகர்த்தது. (௧௧)

கிடந்த சந்தனங் காரகில் கிளைமணி கரிக்கோ
டுடைந்த முத்தம்வெண் டந்தமுச் சுடரொளி யொதுங்கக்
கடந்த செம்மணிப் பையுடன் கொடுகட லேற
நடந்த வாணிக னொத்தது செழுங்கழை நதியே.

(இ-ள்.) அன்றியும், செழிப கழைகளுக்கமையாத அந்த ஆறு னது அங்கு கிடக்கப் பெற்ற சந்தனம், கரிய அகில், பிரகாசத்தை யுடைய இரத்தினம், யானையினது கொம்புகள் தகர்ந்ததி லிருந் துண்டாகிய முத்துக்கள், வெள்ளிய தந்தம், அக்கினி, ஆதித்தன், சந்திரனென்னும் மூன்றினது பிரகாசங்களும் ஒதுங்கும் வண்ணங் தாண்டிய ஒளியவை யுடைய மாணிக்கம் ஆகிய இவைகளைப் பையோ டுகொண்டு சமுத்திரத்தில் ஏறும்படி நடந்து சென்ற வர்த்தகனை நிகர்த்தது.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இத்தகைக் குறிஞ்சி நிலத்தினைக் கடந்தே
யெரிதழற் பாலையிற் புகுந்து
மைத்தடங் கூந்தற் கருவிழிச் செவ்வா
யெயிற்றியர் வயிறலைத் தேங்கக்
கைத்தலத் தேந்து குழந்தையுஞ் சிறுரும்
வேடர்தங் கணத்தொடும் வெருட்டி
முத்தணி சிறப்ப விருகரை கொழித்து
முல்லையிற் புகுந்தது சலிலம்.

(இ-ள்.) ஜலத்தைக் கொண்ட இந்தத் தன்மையை யுடைய அந்த ஆருவது குறிஞ்சி நிலத்தைத் தாண்டி எரியாநிற்கும் அக்கினியைக் கொண்ட பாலை நிலத்தில் நுழைந்து மேகத்தை யொத்த பெரிய கூந்தலையும் கரிய கண்களையும் செவந்த வாயையு முடைய அந்தப் பாலை நிலத்தியர்கள் தங்களின் வயிற்றில் அறைந்துகொண்டு அழும் வண்ணம் கையினிடத் தேந்தாநிற்கும் மதலைகளையும் பாலியர்களையும் மறவர்களின் கூட்டத்தோடும் துரத்தி முத்துக்களை அழகாய்ச் சிறக்கும்படி இரண்டு பக்கத்தினது கரைகளிலும் ஒதுக்கி முல்லை நிலத்தில் நுழைந்தது. (கரு)

பாறயிர் நறுநெய்க் கலத்தொடுங் கலக்கிப்
பட்டியுங் குட்டியுஞ் சிதறிச்
சூறையிட் டுதறி நெய்முடை கமழுஞ்
சுரிகுழற் றெருறுவிய ருடுத்த
கூறையுங் குழலுங் குடுக்கையுந் தடுக்குங்
கொண்டெடுத் தவர்நிரை சாய்த்து
வேறரை யரைப்போற் பெருவளங் கவர்ந்து
மருதத்திற் பரந்தது வெள்ளம்.

(இ-ள்.) அவ்வாறு நுழைந்த ஜலத்தைக் கொண்ட அந்த ஆருனது நறிய பால், தயிர், நெய்யாகிய இவைகளைப் பாத்திரத் தோடும் கலக்கி ஆட்டு மந்தைகளையும் அவ் வாட்டின் குட்டிகளையும் சிதறச் செய்து கொள்ளையிட்டு இடங்கொடாமல்தள்ளி நெய்யினது முடையானது பரிமளியாநிற்குங் கூந்தலையுடைய அந்தமுல்லை நிலத்தினது இடைச்சியர்கள்தரிக்கும்வஸ்திரங்களையும், குழலையும், குடுக்கையை

யும், சிறு பாயையும் எடுத்துக்கொண்டு அவர்களினது வரிசையை ச்சாயச் செய்து அன்னிய மன்னவர்களைப்போலும் பெரிய செல்வத்தைக் கொள்ளையிட்டு மருத நிலத்திற் பாவியது, (கச)

கலிநிலைத்துறை.

கன்னன் மாநதி வெண்டிரை நுரைகரை புரளத்
தென்னி லைப்பகுப் பாகிய காலெலாஞ் செருமி
யன்ன மென்சிறைப் பெடையொடுங் குடம்பைவிட் டகலத்
துன்னு மேரியுந் தடங்களு நிறைந்தன தோயம்.

(இ-ள்.) அவ்விதப் பரவிய கரும்பினது பெருமையை யுடைய அந்த ஆற்றினது வெள்ளிய அலைகளின் நுரை இரு கரைகளிலும் புரளும்வண்ணம் அழகிய நிலைமையின் பாகுபா டாகிய காலுகளெல்லாவற்றிலும் நெருங்கி அன்னப்பட்சிகளானவை தங்களின் மெல்லிய சிறகுகளையுடைய பெட்டை யன்னங்களோடுங் கூட்டைவிட்டும் நீக்கும்படி. செறிந்த குளங்களும் தடங்களும் ஜலங்கள் பூரணப்பட்டன. (கரு)

அலையெ றிந்திரை கடலென வருநதி யதனைத்
தொலைவின் மள்ளர்கள் குளந்தொறும் புகுத்திய தோற்றங்
கொலைம தக்கரிக் குழுவினை வயவராய்க் கொடுபோய்
நிலைத ரித்திடும் படுகுழி படுத்தவை நிகர்க்கும்.

(இ-ள்.) அன்றியும், அலைகளை வீசிக்கொண்டு ஒலியாநிற்கும் சமுத்திரத்தைப்போலும் வருகின்ற அந்த ஆற்றைத் தொலை வற்ற உழவர்கள் ஒன்று சேர்ந்து குளங்கள் தோறும் புகுத்திய தோற்றமானது, கொலைத்தொழிலையும் மதத்தையு முடைய யானைக் கூட்டத்தைப் படைவீரர்களாகக் கொண்டுபோய் நிலையணியும் படுகிடங்கில் படுத்தியவற்றை நிகர்க்கும். (கசா)

தடமு மேரியும் வாவியுங் கழனியுஞ் சலசக்
கிடங்கு மெங்கணு நிறைதரப் பெருகுகி லாமங்
குடம்பை யின்பல பேதமாகியசத கோடி
யுடம்பு தோறினு முயிர்நின்ற நிலையினை யொக்கும்.

(இ-ள்.) அன்றியும், தடங்களும், ஏரிகளும் வாவிகளும், வயல்களும், தாமரைக் கிடங்குகளு மாகிய எவ் விடத்தும் பூரணமாகப்

பெருகிய நீரானது, பல பேதமான உடலினது நூறு கோடி யௗவாகிய தேகங்கள் தோறும் ஜீவ னானது நின்ற நிலைமையை பொருந்தாநிற்கும். (௧௭)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏரியை யுடைத்துக் குளங்கரை தகர்த்தே
யிடிபட வணையினை முறித்துச்
சேறியுட் பரந்து கொல்லையுட் புகுந்து
செழுங்கருப் பாலையைச் சாய்த்து
வேரியஞ் சலசக் கழனியை யுழக்கி
விரிதலை யரம்பையைத் தள்ளி
வாரியிற் செறிந்து பணையெலா நிரப்பி
மட்டிலா மலிந்தன வனமே

(இ-ள்.) அன்றியும், அந்தநீரானவை ஏரியையுடையச்செய்து குளங்களினது கரைகளைப் பொடித்து இடிபடும் படி அணையைமுறியப்பண்ணிச் சேரியி னகம் பரவித் தோட்டங்களில் நுழைந்து செழிய கரும்பினது ஆலையைச் சரித்து வாசனையையுடைய அழகிய தாமரைமலரினது வயல்களையுழக்கி விரிந்தசிரத்தையுடைய வாழைமரங்களைத் தள்ளி மடைகளில் நெருங்கிக் கழனிக ளெல்லாவற்றையும் நிரப்பி அளவில்லாது பெருகின. (௧௮)

கலிநிலைத்துறை.

அலையெ றிந்திரு கரைவழி யொழுகுகம் பலையுங்
கலையும் வெள்ளனஞ் சிறைவிரித் தசைத்த கம்பலையு
மலைதி றந்தன மதகின்வாய் வழிந்தகம் பலையுஞ்
சிலை தரித்தபே ரொலிபெரும் படையொலி சிறக்கும்.

(இ-ள்.) அன்றியும், திரைகளை வீசி இரு கரையினது மார்க்கமாய் ஒழுகுகின்ற ஓசையும், கலையாநிற்கும் வெண்ணிறத்தையுடைய அன்னப் பட்சிகள் தங்களின் சிறகுகளை விரித் தாட்டிய ஓசையும், மலைகளைத் திறந்தவற்றைப் போன்று மதகினிடத்து வழிந்த ஓசையும், கோதண்டத்தை யணிந்த பெரிய சத்தத்தை யுடைய பெருஞ் சேனையினது ஓசையைப் பார்க்கிலும் சிறப்புறும். (௧௯)

முறைமு றைக்கிணைப் பறையொலி கடலென முழங்க
நிறைநிஞ் சேரிவிட் டெழுந்தன ருழவர்க ணெருங்கிச்

செறிக டக்களி றினமென வயின்வயின் றிரண்டு
மறிபு னற்கரை யிடங்தொறுஞ் செறிந்தனர் மலிந்தே.

(இ-ள்.) அன்றியும், உழவர்கள் செறித லுற்று வரிசை வரிசையாக அந்த மருத நிலத்தினது பறையின் ஓசை யானது சமுத்திரத்தைப் போலச் சத்திக்க நிறைந்த தங்களின் சேரியை விட்டும் எழுந்து பொருந்திய மதத்தைக்கொண்ட யானைகளின் கூட்டத்தைப் போலும் இடங்கள் தோறுங் கூடி மறியாநிற்கும் நீரையுடையகரைகளினிடங்களெல்லாவற்றிலும் பெருக்க முற்று நெருங்கினார்கள். ()

மட்டு வாய்வயி றுரவுண் டெண்ணிலா மள்ளர்
கொட்டு வாங்கியே யிருபுயங் குலுங்கிடக் கரண்கள்
வெட்டு வார்சிலர் மென்கரத் தேந்தியே வரம்பு
கட்டு வாரடைப் பார்திசை தொறுங்கணக் கிலையே.

(இ-ள்.) அவ்வாறு நெருங்கிய கணக் கற்ற உழவர்கள் மதுவை வாயும் வயிறும் நிறையும்வண்ணம் அருந்திக்கொட்டுவாங்கி இரண்டு தோள்களும் குலுங்கும் படிக் கரண்களை வெட்டுவார்கள். அதைச் சிலர்கள் தங்களின் மெல்லிய கைகளிலேந்தி வரம்புகளைக்கட்டுவார்கள். அடைப்பார்கள். திசைகள் தோறும் இப்படிச் செய்யப்பட்டவர்களுக்குக் கணக்கில்லை. (௨௧)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெரிபொறி முகட்டுக் கவட்டடி யலவன்
சிதைந்திடக் கமடமுள் ளழுந்த
வரிவளை நெரிய வலம்புரிக் குலத்தின்
வயிற்றிடை கொழுமுகந் தாக்கி
விரிகதிர்த் தரள மணிபல வுகுப்ப
வெருண்மதக் கவையடிப் பேழ்வாய்
நிரைநெறி மருப்புக் கரும்பக டிணக்கி
நீள்வய லெங்கணு முழுதார்.

(இ-ள்.) அன்றியும், தெரியாநிற்கும் பொறிகளைக் கொண்ட உச்சியையும் பிளந்த பாதங்களையு முடைய நண்டுக ளானவை சிதையவும், ஆமைகள்உள்ளே அழுந்தவும், இரேகைகளையுடைய சங்குகள் நெரியவும், வலம்புரிக் கூட்டத்தினது வயிற்றின்கண் கொழுவின் முகமானது தாக்கப்பட்டு விரிந்த பிரகாசத்தையுடைய பல முத்து

மணிகளைச் சிந்தவும், வெறியினது மதத்தைப் பெற்ற பிள வுற்ற பாதங்களையும் பிளந்த வாயையும் வரிசையாக நெறித்தலைக்கொண்ட கொம்புகளையுமுடைய கரிய எருதுகளைச் சேர்த்து நீண்ட வயல்களெவ் விடத்துமுழுதார்கள். (௨௨)

முள்ளரைப் பசுந்தாள் வட்டிலைக் கமல
  முகையுடைந் தொழுகுதேன் றெறிப்பக்
கள்ளவிழ் குவளை யொருபுறஞ் சரியக்
  கடிமலர்க் குமுதமு மடிய
மள்ளர்காற் சேற்றி லிடறிய பதும
  மணியின மலரளி யெழுப்ப
வெள்ளநீர் பரப்பு கழனிக டோறு
  மென்கருஞ் சேறுசெய் தனரே.

(இ-ள்) அவ்வாறு உழுது முட்களினது அரையைக்கொண்ட பசிய நாளத்தையும் வட்டமாகிய இலைகளையுமுடைய தாமரைகளின் மொட்டுக ளானவை யுடையப் பெற்றுச் சிந்துகின்ற மது வானது தெறிக்கவும், நறவ மானது நெகிழப் பெற்ற குவளைகள் ஒருபக்கத்தில் சாயவும், வாசனை தங்கிய புஷ்பங்களை யுடைய அல்லிகள் இறக்கவும், சேற்றின்கண் உழவர்களின் கால்களில் இடறப் பெற்ற தாமரையினது முத்துக் கூட்டங்களைப் புஷ்பங்களின் தேனுனது எழுப்பவும் வெள்ளமாகிய நீரைப்பரப்பிய வயல்கள்தோறும் மெல்லிய கருநிறத்தை யுடைய சேற்றைச் செய்தார்கள். (௨௩)

சுந்தரப் பொறியஞ் சிறையறு காலே
  ழிசையளி தொகுதியிற் கூடி
மந்தர மனைய தருவின்மேல் வீழ்ந்து
  வாய்விட முழங்கிய வோதை
சொந்தெறி கமலங் குமுதஞ்செங் கழுநீர்
  குடியொடு மடிந்தன வினிமே
லந்தர மலது வேறிட மிலையென்
  றழுகுரன் மயங்குவ போலும்.

(இ-ள்.) அன்றியும், அழகிய புள்ளிகளையும், செவ்விய சிறகுகளையும், ஆறு பாதங்களையும், ஏழிசைகளையுமுடைய வண்டுகளானவை கூட்டமாய் ஒன்றுசேர்ந்து மலைகளையொத்த சோலைகளின் மீது விழுந்து தங்களின் வாய் விடும் வண்ணம் சத்தித்த ஓசை யானது,

பூங் கொத்துகளை வீசுகின்ற தாமரை, அல்லி, குவளை யாகிய இவைகள் குடியோடும் மாண்டன. இனி மேல் நமக்கு ஆகாய மல்லாது வேறே தங்குதற்கு இடமில்லை யென்று சொல்லி அழாநிற்கும் ஓசையினால் மயக்க மடைவனவற்றை நிகர்க்கும். (உச)

சுரும்பின மிருந்து தேனுண்டு தெவுட்டிச்
சுருதிசெய் பன்மலர் சிறந்த
விரும்படிக் கிடங்கிற் கிடந்துமூச் செறிந்த
வெருமையின் கவையடிப் பருஉத்தா
ணிரம்பிடப் பதிந்த சலஞ்சலத் தாள
நீணிலா வெறிப்பது நிறைந்த
கரும்பொறிக் கவைநாத் துளையெயிற் றரவு
கவ்விய கதிர்மதி போலும்.

(இ-ள்.) அன்றியும், வண்டின் கூட்டங்கள் தங்கி மதுவையருந்திக் கொப்பளித்துக் கீதத்தைச் செய்யுகின்ற பல புஷ்பங்கள் சிறக்கப்பெற்ற பெரிய பூமியையுடைய தடாகங்களில் கிடந்து சுவாசத்தைவீசிய எருமைகளின் பிளந்த பாதத்தினது பருத்த கால்களில் நிரம்பும் வண்ணம் அழுந்திய சங்குகளின் முத்த மானது நீண்ட நிலவை வீசுவது, கரிய புள்ளிகளையும் பிளவுற்ற நாக்கையும் துவாரத்தைக்கொண்ட பற்களையு முடைய சர்ப்ப மானது கடித்துப் பிடித்த கிரணங்களினது சந்திரனை நிகராநிற்கும். (உரு)

கலன்பல வணிந்து தொண்டியுண் டெழுந்து
கதிரவன் றனைக்கையாற் றொழுது
குலந்தரு தெய்வ வணக்கமுஞ் செய்து
குழுவுட னுழுநர்கள் கூண்டு
நிலந்தனை வாழ்த்தி வலக்கரங் குலுக்கி
நென்முளை சிதறிய தோற்றம்
பொலன்மல சிறப்ப விடறன நெருங்கிப்
பொன்மழை பொழிவது போலும்.

(இ-ள்.) அன்றியும், உழவர்கள் தங்களின் கூட்டத் தோடுந் திரண்டு பல ஆபரணங்களைத் தரித்து மதுவைக் குடித்து எழும்பிக் கைகளினால் சூரியனை வணங்கித் தங்கள் குலத்திற் கொடுத்த தெய்வத்தினது பணிதலையு மியற்றிப் பூமியைத் துதித்து வலதுகையைக்

குலுங்கச் செய்து நெல்லினது முளைகளைச்சிந்திய தோற்றமானது பலவித அழகுகள் சிறக்கும் படி இட மில்லாது செறிந்து பொன்னி னலான மழையைப் பொழிவதைப் போலாநிற்கும். (உசு)

படர்மருப் பெருமைக் குடம்புரை செருத்தற்
பருமுலைக் கண்டிறந் தொழுகி
நடைவழி சொரியு மமுதமும் வாழை
நறுங்கனி யுகுத்தசெந் தேனு
முடைபடு பனசப் பசுங்கனிச் சுளையி
லூற்றிருந் தோடியதேனுங்
கடிமலர் போர்த்த வரம்பினைத் தகர்த்துக்
கழனியிற் பரந்து பாய்ந் துடைக்கும்.

(இ-ள்.) அன்றியும், படர்ந்த கொம்புகளையுடைய எருமைக ளின் கும்பத்தை நிகர்த்த மடியின் பருத்த முலைகளினது சிலீமுக ங்களானவை திறக்கப் பெற்று வழிந்து நடையினது பாதைகளில் சிந்திய அமுதமும், வாழை மரத்தினது நறிய செந் நிறத்தை யுடைய பழங்கள் சிந்திய நறவமும், பலா மரத்தினது தகர்ந்த பசிய பழங்களினது சுளைகளில் ஊற்றாகத் தங்கி யோடிய நறவமும், வாச னை யமைந்த புஷ்பங்களினால் மூடப் பெற்ற வரப்புகளைப் பொடித்து வயல்களிற் பாவிச் சாடி யுடையாநிற்கும். (உஎ)

அருமறை நெறியும் வணக்கமுங் கொடையு
மன்புமா தரவுநல் லறிவுந்
தருமமும் பொறையு மிரக்கமுங் குணமுந்
தயவுஞ்சீ ரொழுக்கமு முடையோர்
பெருகிய செல்வக் குடியொடு கிளையும்
பெருத்தினி திருந்துவாழ் வனபோன்
மருமலர்ப் பழனக் காடெலா நெருங்கி
வளர்ந்தது நெட்டிலை நாற்றே.

(இ-ள்.) அன்றியும், அருமையான வேதத்தினது சன்மார்க்க த்தையும், தொழுகையையும், ஈகையையும், அன்பையும், ஆதரவை யும், நல்ல ஞானத்தையும், தருமத்தையும், பொறுமையையும், இரக் கத்தையும், குணத்தையும், தயவையும் சிறப்பினைக் கொண்ட ஒழுக் கத்தையுமுடையவர்கள் அதிகரித்த தங்களின் செல்வத்தைப்பெற்ற குடியுடன் குடும்பமும் பெருக்கமுற்று இனிமையோடும் தங்கி வாழ்

ன்னவற்றைப் போலும் வாசனையைக் கொண்ட புஷ்பங்களை யுடைய அந்த வயற் காடுகளெல்லாவற்றிலும் நெடிய இலைகளின் நாற்றானது செறிந்து வளர்ந்தது.

கோதற வெழுந்த நாற்றினைப் பறித்துக்
குவித்திடு முடியிட மடுத்துத்
தீதுறுங் கருங்கட் செய்யவாய் வெண்பற்
சிற்றிடைக் கடைசியர் வாரிப்
பூதர மனைய சுணங்கணி முலையிற்
புள்ளியிற் சேதகம் போர்ப்ப
வாதரம் பெருகி நிரைநிரை வடிவா
யணியணி நாற்றினை நடுவார்.

(இ-ள்.) அவ்வாறு களங்க மற வளர்ந்த நாற்றைப் பறித்துக் குவிக்கும் முடியினது தானத்தைத் தீமையைப் பொருந்திய கண்களையும், செவந்த வாயையும், வெள்ளிய பற்களையும், சிறிய மருங்குலையு முடைய உழத்தியர்கள் நெருங்கி ஆசை யான ததிகரிக்கப் பெற்று அந் நாற்றைக் கைகளினால் அள்ளி மலைகளை யொத்த தேமலை யுடைய அழகிய முலைகளில் புள்ளிகளை நிகர்த்துச் சேறானது மூடிக் கொள்ளச் செம்மையாய் வரிசை வரிசை யாகவும் ஒழுங் கொழுங் காகவும் நட்டுவார்கள். (உகூ)

கையினிற் செறிந்த முடியினைச் சிதறிக்
கடைசியர் கரங்கடொட் டொழுங்காய்ச்
செய்யினிற் பதிப்பத் துளிகருஞ் சேறு
தெரித்திடுஞ் செழுமுகச் செவ்வி
துய்யவெண் டிரைப்பாய் சுருட்டிமே லெறியுந்
தொடுகடன் முகட்டிடை யெழுந்து
வையகஞ் சிறப்ப வருமுழு மதியு
மறுவுமொத் திருந்தன மாதோ.

(இ-ள்.) அன்றியும், கையிற் பொருந்திய அந் நாற்றினது முடியைச் சிதறச் செய்து அவ் வுழத்தியர்கள் தங்களின் கரங்களினால் தொட்டு வரிசையாய் வயல்களில் பதிக்கக்கரியசேற்றினது துளியானது தெறிக்கும் அவர்களின் செழிய முகத்தினது அழகானதுபரிசுத்தத்தைக் கொண்ட வெள்ளிய அலைக ளான பாயைச் சுருட்டிமேலே வீசாநிற்கும் சகரர்களால்தோண்டப் பெற்ற சமுத்திரத்தினது

உச்சியின்கண் எழும்பி இந்தப் பூலோக மானது சிறக்கும் வண்ணம் வருகின்ற பூரணச்சந்திரனையும் அச்சந்திரனின் களங்கத்தையுநிகர்த்திருந்தன. (௩௰)

பனைமதுத் தேக்கி யிருவிழி சேப்பப்
 பைங்கழை நிகர்த்ததோ ளசைய
வனநடை சிதையச் சேவடி பெயர்த்திட்
 டள்ளலஞ் சேற்றிடை நடுவோர்
சினமத கரிக்கோ டெனுமுலைத் தடத்திற்
 சேதகந் தெறிப்பது திரண்ட
வனசமென் முகையிற் பொறிவரி யறுகால்
 வண்டுமொய்த் திருப்பது போலும்.

(இ-ள்.) அன்றியும், பனங் கள்ளை வயிறுநிறையும் படி தேக்கு இரண்டு கண்களும்செவக்கவும், பசிய மூங்கிலை யொத்த தோள்கள் அசையவும், அன்னப் பட்சியினது நடையானது சிதையும்வண்ணம் செவந்த பாதங்களைப் பெயர்த்து அள்ளுதற்குரிய அழகியசேற்றின் கண் நாற்றைநட்டுவோர்க ளாகிய அவ்வுழத்தியர்களின் கோபத்தையும் மதங்களையுங் கொண்ட யானையினது கொம்பென்று சொல்லாநிற்கும் பெருமை பொருந்திய முலைகளில் சேறுனது தெறிப்பது, திரட்சி யுற்றதாமரையினது!மெல்லியமுகையின்கண் புள்ளிகளையும் இரேகைகளையும் ஆறு காற்களையு முடை வண்டுகளானவை மொய்த்து இருப்பதை நிகராநிற்கும். (௩௧)

முற்றிழை கிடந்த முலைக்குவ டசைய
 முகிறவழ் கருங்குழை னெகிழச்
சிற்றிடை யொசிய மதிமுகம் வெயர்ப்பச்
 சேற்றிடை நாற்றினை நடுவோர்
பற்றுமென் கரத்திற் கரும்பொனின் கடகம்
 பசியநெற் பயிரொளி பாய
மற்றெனை யுரைப்ப விரிகதர் பரப்பு
 மரகதக் கடகமொத் திருந்த.

(இ-ள்.) அன்றியும், முற்றிய ஆபரணங்கள் கிடக்கப் பெற்ற முலையாகிய மலைகள் அசையவும், மேகங்கள்தவழாநிற்கும் கரியகூந்தலானது நெகிழவும், சிறிய மருங்கு லானது ஆடவும் சந்திரனைப் போன்ற முகமானது வெயர்க்கவும், சேற்றின்கண் அந்நாற்றை நட்

டுவோர்களாகிய அவ் வுழத்தியர்களின் மெல்லிய கைகளிற் பொருந்திய இரும்புவளைகளானவை பசுமை தங்கிய நெற் பயிரினது பிரகாசமானது பாய வேறே யாதை யுவமை கூறுவது? விரிந்த கிரணங்களைப் பரவச் செய்யும் மரகதத்தினாலான வளைபைநிகர்த்திருந்தன.()

வெறிமது வருந்தி மரகதக் கோவை
மென்பிடர் கிடந்துருண் டசையக்
கறுவிய மனத்தோ டினத்தொடு மிகலிக்
கடைசியர் களிப்பொடு தவளச்
சிறுநகைத் தரளப் பவளமெல் லிதழிற்
செழுமலர்க் கைவிரற் குவித்துக்
குறிகுரற் குரவை கூன்பிடர்ப் பேழ்வாய்க்
குடவளைக் குரவையோ டிகலும்.

(இ-ள்.) அன்றியும், அவ் வுழத்தியர்கள் சந்தோஷத் தோடு முன் மதத்தைக் கொண்ட கள்ளைக்குடித்து மரகதமாலையானது மெல்லிய பிடரி னிடத்து கிடந்து உருண்டு அசையும் வண்ணம் கோபித்த மனத்துடன் தமது கூட்டத தோடும் பகைத்து வெண்ணிறத்தை யுடைய சிறிய பற்களாகிய முத்துக்களைக் கொண்ட மெல்லிய அதரத்தில் செழிய தாமரை மலர்போலும் கைகளின் விரற்களைக் குவியச் செய்து குறிக்கும் குரவையினது ஓசையானது, கூனைக் கொண்ட பிடரையும் பிளந்த வாயையு முடைய குடத்தை யொத்த சங்குகளின் குரவையினது ஓசை யோடு பகையாநிற்கும்.

கூந்தலம் பிடிமா மென்னடை பயிலுங்
குடமுலைக் கடைசியர் செழுங்கைக்
காந்தண்மெல் விரற்குங் கடுவரி விழிக்குங்
கடைந்திணைக் கியகணைக் காற்குஞ்
சேந்திணை பொருவா தினமென வெருவிச்
செங்கயல் வரிவரரற் கெளிறு
பாய்ந்தயல் போய வனத்திடை யொளித்துப்
பங்கமெய் படப்பயப் படுமே.

(இ-ள்.) அன்றியும், அழகிய கூந்தலைக் கொண்ட பெண்ணியானைகள் மெல்லிய நடையைப் பயிலும் குடம் போலும் முலைகளையுடைய அவ் வுழத்தியர்களின் செழிய கைகளினது காந்தட் புஷ்பத்தைநிகர்த்த மென்மை தங்கிய விரற்களுக்கும், விஷத்தை யொத்த

இரேகைகளையுடைய கண்களுக்கும், கடைதல் செய்து இணக்கப் பெற்ற கணைக் கால்களுக்கும் இன்னம் செந்நிற மடைந்து ஒப்பா கோமென்று பயந்து கெளிறும், செவந்த கெண்டை மீனும், இரே கைகளையுடைய வராலும் சாடிப் பக்கத்திற் சென்ற நீரின்கண்மறை ந்து தங்களின் உடல்களானவை குற்றப்படும் வண்ணம் பயப்படா நிற்கும். (௬௪)

குருகின மிரியப் புள்ளினம் பதறக்
கொக்கினம் வெருவிட வெகினம்
விரிமலர்க் கமலப் பாயல்விட் டகல
மென்சிறைப் பெடையனந் துடிப்பச்
சொரிமதுத் துளித்துக் குவளைவாய் சிதறச்
சுருட்டிவால் விசைத்திடத் துள்ளி
வரிவராற் பகடு வளைநில வெறிக்கு
மடைத்தலை கிடந்துழச் செறியும்

(இ-ள்) அன்றியும், இரேகைகளை யுடைய ஆண் வரால் மீனா னது நாரைக் கூட்டங்கள் ஓடவும், பட்சிக் கூட்டங்கள் பதறவும், கொக்கின் கூட்டங்கள் பயப்படவும், அன்னங்கள் விரிந்த தாமரைப் புஷ்பங்க ளாகிய பாயல்களை விட்டு நீங்கவும், மெல்லிய சிறகுகளை யுடைய பெட்டை யன்ன மானது துடிக்கவும், சொரியுகின்றநறவத் தைச் சிந்திக் குவளை மலர்கள் வாய் சிதறவும், தனது வாலைச் சுருட் டிக்கொண்டு வேக முறத் துள்ளிச் சங்குகளின் முத்துக்களினது பிரகாசத்தை வீசும் மடையின்கண் கிடந்து மூச் செறியாநிற்கும்,

வரிசையிற் செறிந்த நிரைபசுஞ் சாலி
வளர்கிளைக் கிளையெனக் கிளைத்துப்
பெருகுசூன் முகிர்ந்தீன் றாமு துறைந்து
பிடர்குனி தரக்குலை சேந்து
சொரிகதிர்ப் பவள நிறம்பல படைத்துச்
சுடர்மணி முத்தினந் தெறிப்பத்
தரையினிற் படிந்தே யருட்கடை சுரந்த
தருவினம் வெருவிடக் கிடக்கும்.

(இ-ள்.) அன்றியும், ஒழுங்காய் நெருங்கிய வரிசையையுடைய பசிய நெற்பயி ரானது வளர்கின்ற குடும்பத்தினது கிளையைப்போல ப் பெருகி அதிகரித்த சூலானது முற்றப் பெற்று ஈன்று நிறைந்த அமுதம் தங்கிப் பிட ரானது குனியும் வண்ணம் குலை செவப் புற்

முக்கிரணங்களைச் சிந்துகின்ற பல பவளங்களினது நிறத்தைச் சம்பாதித்து ஒளியைக் கொண்ட முத்து மணியினது குவைகள்தெறிக்கும்படி பூமியினிடத்து அமைந்த காருண்ணியக் கடையானது ஒங்கிய தருவினது கூட்டங்கள் பயப்படக் கிடவாநிற்கும். ()

கொத்தலர் சூடி யரைத்துகி லிறுக்கிக்
குடமதுக் கைமடுத் தருந்தி
மைத்தவழ் கனகக் கிரிப்புயந் திரண்ட
மள்ளர்கள் வனுப்பினுக் குடைந்த
சித்தசன் கரவாட் பறித்ததை வளைத்த
செயலெனப் பிள்ளைவெண் பிறைவாட்
கைத்தலத் தேந்திக் கழனியிற் புகுந்து
கதிரரிந் தரிநிரை யிடுவார்.

(இ-ள்.) பூங்கொத்துகளைத் தரித்து அரையின் கண்ணுள்ள வஸ்திரத்தை இறுகச் செய்து குடத்தினது கள்ளைக்கையில் நிறைத்துக் குடித்து மேகங்களானவை தவழாநிற்கும் மகாமேரு பருவதத்தை யொத்த தோள்கள் திரளப் பெற்ற உழவர்கள்தங்களின் அழகுக் குடைந்த மன்மதனது கையின் கண்ணுள்ள வாளைப் பறித்து அதை வளையச் செய்த தொழிலைப் போலும் வெள்ளிய இளஞ் சந்திரனை நிகர்த்த அரிவாளைக் கையினிடத்துத் தாங்கி வயலின்கண் நுழைந்து கதிர்களை யறுத்து அரிகளை வரிசையாக இட்டார்கள்.

திருந்திய வரியைக் கொடுங்கையிற் கிடத்தித்
திரைசெய்து சுமைமையிற் சேர்த்துக்
கருந்தடங் கூந்தற் செவ்வரி வேற்கட்
கடைசியர் குழாத்தொடுந் திரண்டு
விரிந்தசெங் கமலக் கரம்பல வருந்த
விசித்திறுக் கியசுமை யேந்திப்
பொருந்திய வரப்பி னெறிக்கடைக் கதலி
புலியடி குலைதலை சாய்க்கும்

(இ-ள்.) கரு நிறத்தைக் கொண்ட பெருமை பொருந்திய கூந்தலையும் செவந்த இரேகைகள் படர்ந்த வேலாயுதம் போலுங் கண்களையு முடைய உழத்தியர்கள் அவ்வாறு செவ்வைப்பட்ட அரிகளைக் கொடுங் கையிற் கிடத்தித் திரை செய்துசுமையிற்சேரப்பண்ணித் தங்களின் கூட்டத் தோடும் ஒன்று கூடி விரிந்த செவந்ததாம

ரை மலரை நிகர்த்த கைக ளானவை வருத்த முறும்படி கட்டி இறுக்கிய பல சுமைகளைத் தாங்கிப் பொருந்திய வரம்பினது பாதையின் கண்ணுள்ள வாழை மாத்தினது புலியி னடியை யொத்த குலையின் தலையைச் சாய்க்கச் செய்வார்கள். (கூஅ)

அசைந்தசிற் றிடைமென் கொடிவருந் திடநீ
ளணிவட மார்பிடை புரளப்
பசுங்கிளிப் பரிவேள் படையெனத் திரண்ட
கடைசியர் சுமையெலாம் பரப்பி
யிசைந்திட நிறைத்துக் குவித்தநெற் போர்க
ளெங்கணு மிலங்கிய தோற்றம்
விசும்பினைத் தடவ வரைசத கோடி
வீற்றிருந் தனவெனச் சிறக்கும்.

(இ-ள்.) பசிய தத்தை வாகனத்தையுடைய மன்மதனதுசேனையைப் போலுங் கூடிய அவ்வுழத்தியர்கள் அசையுகின்ற சிறியமருங்குலாகிய மெல்லிய கொடி யானது வருத்த முறவும் நீண்ட அழகிய மணி வடங்கள் மார்பின்கண் புரளவும், அவ்வாறு சுமைக ளெல்லாவற்றையும் பரவச் செய்து பொருந்தும்படி நிறைத்துக் குவியல் படுத்திய நெற் போர்கள் எவ் விடத்தும் பிரகாசித்த தோற்றமானது, ஆகாயத்தைத் தடவும் வண்ணம் நூறுகோடி மலைகள் வீறுடன் இருந்தன வென்று சொல்லும் வண்ணம் சிறக்காநிற்கும்

கார்த்தடக் களிற்றின் வனப்பினை யழித்த
கருங்கடா வினம்பல விணைத்துப்
போர்த்தலை திறந்து திரித்துவை நீத்துப்
பொன்னிறச் செந்நெலைக் குவித்துச்
சேர்த்திடுஞ் சகடந் தொறுந்தொறு மியற்றித்
திரண்மனை வயின்வயின் செறிப்பா
ரார்த்தபே ரோதை யினமணி கொழிக்கு
மறைதிரைக் கடலினைப் பொருவும்.

(இ ள்.) கரு நிறத்தைக் கொண்ட பெரியயானையினது அழகைக்கெடுத்த பல கரிய எருதுகளி னினத்தை ஒன்று சேர்த்துப் போர்களினிடத்தைத் திறந்து திரித்துவைக்கோலை நீக்கிப் பொன்னினது நிறத்தையுடைய செவந்த நெல்லைக் குவித்துச் சேர்த்த வண்டிகள் எல்லாவற்றிலும் இயற்றிக் கூட்டமாகிய வீட்டுகளினிடத்திற் செ

றிக்கப் பட்டவர்கள் ஒலித்த பெரிய ஒலி யானது கூட்ட மாகிய இரத்தினங்களைக் கொழிக்கும் ஒலிக்கின்ற அலைகளையுடைய சமுத்திரத்தை நிகராநிற்கும். (சுO)

செந்நெலிற் பெருக்கின் கனைகுரற் சகடந்
திசைதொறு மலிந்தன செருக்குங்
கன்னலங் கழனி புகுந்தறுத் தடைந்த
களமர்க ளொலிகுரற் செருக்குந்
துன்னுபூங் கமுகு சிதறுசெம் பழுக்காய்ச்
சுமப்பவர் கம்பலைச் செருக்கு
மன்னவன் வகுதைத் துரையபுல் காசீம்
வளமனைச் செருக்குமொத் திருக்கும்.

(இ-ள்.) செந்நிறத்தை யுடைய நெல்லினது அதிகரிப்பைக் கொண்ட ஒலிக்கின்ற சத்தத்தை யுடைய வண்டிகள் அவ்வாறு திசைகள் தோறும் மலிந்தன வாகியசெருக்கும், கரும்புகளையுடைய அழகிய வயல்களிற் புகுந்து கதிர்களை அறுத்துவந்து சேர்ந்த உழவர்களின் ஒலிக்கின்ற சத்தத்தினது செருக்கும் பூக்கள் நெருங்கப்பெற்ற கமுகமரங்கள் சிதறிய செவந்த பாக்குகளைச்சுமப்பவர்களின் சத்தத்தினது செருக்கும், வகுதை நகரத்தினது அரசனுன துரையாகிய் இந்நூலின் கொடை நாயகன் அபுல் காசீ மென்பவனது செல்வங் தங்கிய வீட்டினது செருக்கும் ஒத்திராநிற்கும். (சுக)

கலிநிலைத்துறை.

சால வட்டவாய் முளரியி லூறுகள் ளருந்திக்
கோல வட்டவஞ் சிறையளி குழுவுடன் பாடுஞ்
சோலை வட்டவாய் மயிலினஞ் சூழ்ந்துகார் நீல
வால வட்டமொத் திருந்தமென் சிறைவிரித் தாடும்,

(இ-ள்.) அன்றியும், வட்டவடிவை யுடைய வாயைக் கொண்ட தாமரை மலரில் சுரக்குகின்ற மதுவைக் குடித்தி அலங்காரந் தங்கிய அழகிய வட்ட சிறகுகளை யுடைய வண்டுகள் தங் கூட்டத் தோடும் இராகங்களைப் பாடுகின்ற சோலைகளினது வட்டத்தைப் பெற்ற இடத்தின்கண் மயிலின் கூட்டங்கள் வளைந்து கருமையும் நீல நிறத்தையுமுடைய ஆல வட்டத்தை நிகர்த் திருந்த மெல்லிய தங்களின் சிறகுகளை விரித்து ஆடாநிற்கும்.

அரக்கெ றிந்தசெவ் வாம்பல்வா யணியிழை மடவார்
நெருங்கி யிட்டகாற் சிலம்பொலி விசும்புற நிமிர
விருக்கும் வாவியுட் பெடையன மிடர்கொலென் றிரங்கித்
தருக்கி முந்துதன் சேவல்வாய்த் தொனியெனத் தயங்கும்.

(இ-ள்.) அன்றியும், மதுவை வீசிய செந்நிறத்தைக் கொண்ட ஆம்பன் மலர்போலும்வாயையும், அழகிய ஆபரணங்களையுமுடைய பெண்கள் தங்களின் காலி னிடத்து நெருக்கி யிட்ட சிலம்பினது ஓசை யானது ஆகாயத்தின்கண் பொருந்தும் படி யோங்கதடாகத்தி னிடத்துத் தங்கி யிருக்கும் பெட்டை யன்னங்கள் துன்ப மென்று சொல்லி ஒலித்துச் சௌரியத்தை இழக்கப்பெற்றுத் தனது சேவலாகிய ஆண் அன்னத்தின் வாயினது ஓசையென்று திகையாநிற்கும்.

நலங்கொ டாமரை முகமலர் தரநறுங் குவளை
விலங்கி வள்ளையில் விழியெனக் கிடப்பமெல் லரும்பு
துலங்கு மென்முலை தோன்றிடப் பச்சிலைத் துகில்போர்த்
திலங்கு வாவிக ளணியிழை மகளிரொத் திருந்த,

(இ-ள்.) அன்றியும், பிரகாசிக்கின்ற தடாகங்கள் நலத்தைக் கொண்ட தாமரை மலராகிய முகமானது மலரவும், நறிய குவளைப் புஷ்ப மானது விலகி வள்ளையின்கண் கண்களைப் போல கிடக்கவும், மெல்லிய கமலத்தினது முகையாகிய விளங்குகின்ற மேன்மைய வா னமுலைகள் பிரகாசிக்கவும், பச்சை நிறத்தைப் பெற்ற இலை யாகிய வஸ்திரத்தினால் மூடி அழகிய ஆபரணங்களை யுடைய மாதர்களை நிகர்த்திருந்தன. (சச)

நிறைந்த சண்பகம் பாடலந் தடக்கரை நிரம்பச்
சொரிந்த பன்மலர் மீதினில் வரியளித் தோற்ற
மெரிந்தி லங்குபொற் கரையினை யிரும்பினா லிறுகப்
பரிந்த றைந்தசுள் ளாணியின் புறமெனப் பரந்த.

(இ-ள்.) அன்றியும், அத் தடாகங்களின் பெரிய கரைகளில் வரிசை யாகிய பாடலம் சண்பக மிவைகள் நிரம்பும்வண்ணம் சிந்திய பல புஷ்பங்களின் மேல்இருக்கும் இரேகைகளைக் கொண்ட வண்டு களின் தோற்ற மானது எரிந்து பிரகாசியாநிற்கும் பொன்னினா லான கரையை இரும்பினால் இறுகும்படி பரிவுற்று அறைந்த சுள் ளாணியின் புறத்தைப் போலப் பரந்தது. (சரு)

தோடவிழ்ந்துபூந் தாதுகக் குடைந்தினச் சுரும்பு
பாட வாவியு ளிளநிலாத் தோற்றிய பான்மை
சாடும் வார்புன லலைதரத் திரைகளிற் றத்தி
யோட மோடுவ தொத்திருந் தனவென வொளிரும்.

(இ-ள்.) அன்றியும், கூட்ட மாகிய வண்டுக ளானவைமலர்களி னிதழ்கள் அவிழ்ந்து மகரந்தங்கள் சிந்தும் வண்ணம் தங்களின்கால் களினுற் கிண்டி இராகங்களைப் பாடத் தடாகத்தி னகம் இளம்பிர காசம் தோற்றிய தன்மை யானது, சாடுகின்ற நீண்ட நீர் அசையும் படி அலைகளில் பாய்ந்து ஓட மானது ஓடுவதை நிசர்த்திருந்தனவெ ன்றுஒளிரா நிற்கும் (௪௬)

வாய்ந்த மெல்லிழை மடந்தையர் தடத்தின்மெய் வருந்தத்
தோய்ந்து நீர்குடைந் தாடுவோர் மதிமுகத் தோற்றஞ்
சேந்த கஞ்சமுங் குவளையு மெனவெழில் சிறந்த
கூந்தல் வெண்டிரைக் கடலிடை முகிலெனக் குலவும்.

(இ-ள்.) அன்றியும், சிறந்த மெல்லிய ஆபரணங்களை யுடைய மாதர்கள் தங்களின் சரீர மானது வருந்தும் வண்ணம் வாவிகளில் தோயப்பெற்று நீர் குடைந்து விளையாடுவோர்களின் சந்திரனைப் போன்ற முகத்தினது தோற்ற மானது, செவந்த தாமரை மலரும் குவளைப் புஷ்பமு மென்று சொல்லும்படி அழகான துசிறக்கப்பெற் றது, கூந்தல் வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்தி னிடத்து மேகத்தை நிகர்த்துப் பிரகாசித்தது. (௪௭)

திருந்து மெல்லிழை மடந்தையர் புனலிடை திளைப்பச்
சரிந்த கூந்தலி லிருந்தவண் டெழுந்துபூந் தடத்தில்
விரிந்த காவியில் வீழ்வது மின்னனார் விழிக்குப்
பொருந்து மோவெனச் சினத்துட னுதைப்பது போலும்

(இ-ள்.) அன்றியும், செவ்வைப் பட்ட மெல்லிய ஆபரணங்களை யுடைய மாதர்கள் நீரின்கண் ஸ்நானஞ் செய்ய அவர்களின் கருமை பெற்ற கூந்தலி னிடத் திருந்த வண்டுகள் எழும்பிப் புஷ்பங்களை யு டைய அத் தடாகத்தில் மலர்ந்த குவளை மலர்களில் விழுவது, மின் னலை யொத்தவர்க ளான இந்தப் பெண்களின் கண்களுக்கு நீங்கள் நிகராகுவீரோ வென்று சொல்லிக் கோபத்துடன் தங்களின்கால்க ளினுல் உதைப்பதைப் பொருவா நிற்கும். (௪௮)

மறிந்து தூங்கிய நாவலின் கனியையோர் மங்கை
யெறிந்து பார்மது கரத்தினைக் கரத்தினு லெடுப்பப்
பறிந்து போதலிற் றணிக்கின்கை யுதறிமெய் பதறிச்
செறிந்து சூழ்தரச் சொரிந்தமைக் கனியையுந் தீண்டாள்

(இ-ள்.) அன்றியும், ஒரு மாதானவள் மறிந்து தூங்கப்பெற்றநாக மரத்தினது பழத்தை வீசி விட்டுப் பூமியின்கண் கிடந்த வண்டை அந் நாகப்பழ மென்று கையினு லெடுக்க அஃது கையை விட்டும் பறிந்து போனதினுல் அச்சத் தோடும் கையை யுதறித் திடுக்கிட்டு சூழும்படி நெருக்க முற்றுச் சிந்தியகரியநிறத்தையுடைய மற்ற அந்தப் பழங்களையுந் தொடாள். (சகூ)

கரிய மைவிழி மங்கையர் பூங்குழற் காட்டிற்
சொரியு மென்மலர்த் தாதுக ளுதிர்ந்தன சுடர்மின்
விரியு மெல்லிழைப் பூணொடு பூண்பல மிடைந்து
பொருது ரிஞ்சதிற் பொற்பொடி யுதிர்வன போலும்.

(இ-ள்.) அன்றியும், கரு நிறத்தைக் கொண்ட அஞ்சன மெழுதப்பெற்ற கணகளை யுடைய மாதர்களின் அழகிய கூந்த லாகிய வனத்தில் மதுவைப் பொழிகின்ற மெல்லிய புஷ்பங்கள் மகரந்தங்களைச் சிந்தியவை, பிரகாசந் தங்கிய மின்ன லானது விரித லுற்ற மெல்லிய நூலிற் கோத்த ஆபரணங்களோடு பல ஆபரணங்கள்நெருங்கிப் பொருந்தித் தேய்வதிற் பொற் றூள்கள் சொரிவனவற்றை நிகர்த்தது. (௫0)

பிடித்த கொம்பிருந் தோடிமுட் குடக்கனி பிடித்துக்
கடித்த போதினிற் காம்பறக் கனியுடன் கவியும்
படித்த லத்தினில் வீழ்ந்திடப் பதறிமெய் பதைத்துத்
துடித்துத் தன்னுயிர்க்கடுவனை யணைத்துட றுனுக்கும்

(இ-ள்.) அன்றியும், தான் பிடித்த கொப்பி லிருந்து ஓடி முட்களைக் கொண்ட குடத்தை நிகர்த்த பலாப் பழத்தைக் கைகளிற்பிடித்துப் பற்களினுற் கடித்த சமயத்தில் அதன் காம்பானது அற்றுப் போக அப் பழத்துடன் பெண் குரங்கும் பூமியின்கண்விழுந்து திடுக்கிட்டுச் சரீர மானது நடுங்கித் துடித்துத் தனது ஜீவனை நிகர்த்த ஆண் குரங்கைத் தழுவித் தேகமானது பய மடையாநிற்கும். (௫க)

தாறு கொண்டபைங் கதலிதே மாப்பலாத் தருத்தே
னூறு கொண்டசெங் கனிசிறு கிடங்கிடை யுகுப்பச்

சேறு கொண்டதிற் கிடந்தருள் செறிகரு மேதி
வேறு கொண்டுபொன் மேதியின் குலமென விளங்கும்.

(இ-ள்.) அன்றியும், சிறிய வாவிகளில் னிடத்து குலையைக்கொண்ட பசிய வாழை, தித்திப்பையுடைய மா, பலவாகியமரங்கள் தேனினது சுரப்பைப் பெற்றச் செவந்த பழங்களைச் சொரிய அதனாற் சேற்றைக் கொண்ட அதிற் கிடந்து அந்தகாரம் நெருங்கிய கருநிறத்தையுடைய எருமை மாடானது வேற்றுமையையடைந்து பொன்னெருமையின் குலத்தைப்போல விளங்காநிற்கும். (௫௨)

கள்ள விழ்ந்தபூம் பொய்கையிற் புள்ளினங் கலைபத்
துள்ளு மேல்வரிக் கயலுண்டு நாரைகண் டுங்கு
முள்ள மன்புறச் சேவலின் சிறைநிழ லொதுங்கி
வெள்ள னப்பெடை தாமரைத் தவிசில்வீற் றிருக்கும்.

(இ-ள்) அன்றியும், நாரைக ளானவை மதுவானது அவிழப் பெற்றமலர்களையுடைய வாவிகளில் பட்சியினது கூட்டங்கள் கலையும் வண்ணம்மேலே துள்ளுகின்ற இரேகைகளையுடைய கெண்டைமீன் களைப் புசித்து நித்திரைசெய்யும். வெண்ணிறத்தைக் கொண்ட பெட்டையன்னங்கள் தங்களின் மனமான தன்புறும்படிதஞ்சேவல் களின் சிறகுகளினது நிழலில் ஒதுங்கித் தாமரைமலராகிய ஆசனத் தில் வீறுடன் இராநிற்கும். (௫௩)

ஏல வார்குழற் கிடுபுகை மஞ்சினோ டிகலுஞ்
சோலை வாய்தொறு முக்கனி தேன்மழை சொரியு
மாலை வாய்தொறுங் கரும்புடைத் தாறெடுத் தோடு
நீல வாய்மலர் வாவிகள் பெருங்கட னிகர்க்கும்.

(இ-ள்.) அன்றியும், மாதர்கள் வாசனையைக் கொண்ட நெடிய கூந்தலுக்கு இடுகின்ற அகிற் புகையானது மேகங்களோடுவிரோதியாநிற்கும். சோலைகளினிடந்தோறும் வாழை. பலா, மாவென்னும் முப் பழங்கள் தேனினது மழையைப் பொழியாநிற்கும். ஆலைகளினிடந்தோறும் கரும்பை யுடைத்து அதன் சாறாகிய ஆறானது எடுத்தோடாநிற்கும் நீல நிறத்தைப் பெற்ற வாயையுடைய குவளைப்புஷ்பத்தினது தடாகங்கள் பெரிய சமுத்திரத்தைப் பொருவாநிற்கும். (௫௪)

தெருளு றும்படி தேன்றுளி தெரித்திடச் சிதறிப்
பொருத லைத்திடு மாங்கனி தேங்கனிப் பொழிலே

மரும ணம்பெருஞ் சந்தகில் சண்பக வனத்திற்
றருவெ னும்பெயர் பெறச்சிற திந்திருந் தனவே.

(இ-ள்.) அன்றியும், தெளிவுபொருந்தும் வண்ணம் தேனினது திவலை யானது தெறிக்கச் சிதறுத லூற்றுப் பொருது அலையாநிற்கும் மாம் பழத்தினது நறவமானது கனியப்பெற்ற சோலைகளானவை மிகுத்த வாசனையைப் பெறும் சந்தனம், அகில், சண்பகம் ஈத்தமாகிய மரங்களையுடைய வனத்தில் தருவென்னும் அபிதானத்தையடையும்படி சிறப்புற் றிருந்தன. (ருரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நினைக்கும்பொற் பொருளே நிந்தனை மற்றோர்
நிந்தனை சிந்தனை யிலையே
யினக்கருஞ் சுரும்பு மதுக்கள்ளி யருந்து
மிவையலான் மதுப்பிறி திலையே
சினக்கரி முனைக்கோட் டிளமுலைப் புலவி
திருத்தும்பொய் யலதுபொய் யிலையே
வனக்கனி கருத்த குலைக்கள வலது
மறுத்தொரு கொலைக்கள விலையே.

(இ-ள்.) அன்றியும், கருதாநிற்கும் பொன்னாகிய பொருளே நிந்தனை யானது வேறே நிந்தனையாகிய எண்ணமொன்றுமில்லை. கருநிறத்தையுடைய கூட்டமாகிய வண்டுகள் கள்ளினது திவலைகளையருந்தும். இவை யல்லாமல் வேறே கட் குடித்த லில்லை கோபத்தைச் செய்கின்ற யானைகளின் முனையைக் கொண்ட கொம்பைப் போலும் இளம் முலைகளையுடைய மாதர்கள் தங்களின் நாயகன் மாரினது புலவியில் திருத்தாநிற்கும் பொய்யே யல்லாமல் வேறே பொய் யில்லை, அகிழுப பழுங்களை யுடைய கரிய குலைக் களவே யல்லாமல் வேறே யொரு கொலைக் களவு மில்லை. (ருசு)

நாட்டுப்படலம்

முற்றிற்று.

ஆகப் படலம் உ-க்குத்-திருவிருத்தம்-எசு.

நகரப்படலம்.

கலிநிலைத்துறை.

நிலங்க ளேழுக்கு நாவலந் தீவுகண் ணிகர்க்கு
நலங்கொ டவுக்குக் கண்மணி யறபுநன் னாடே
புலன்கொள் கண்மணிக் குள்ளுறை யுயிரெனப் பொருந்தி
யிலங்கு மக்கமா நகர்வளஞ் சிறிதெடுத் திசைப்பாம்

(இ-ள்.) நிலங்களாகிய நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகென்னும் ஏழு தீவுகளுக்கும் அழகியநாவற்றீவானது கண்களை யொக்கும். நலத்தைக் கொண்ட அந்நாவற்றீவுக்குக் கண்மணியானது நன்மைபொருந்திய அறபுநாடு. உணர்ச்சியைப் பெற்ற அவ் வறபு நாடாகிய கண்மணியினகம் தங்கிய ஜீவனைப்போலப் பொருந்திப் பிரகாசியாநிற்கும் மகத்தான மக்கமா நகரத்தினது வளத்திற் கொஞ்சமெடுத்து யாம் சொல்லுவாம். (எ)

எழுசீர்க்கழிநெடிலடியாசியவிருத்தம்.

விரிகதி ரெறித்த மணிவளை யுகுப்ப
விரிதிரை யகழெனுந் தடத்தி
லெரிசிகைக் கிரணப் பதுமமா மணியி
னினம்பல சூழ்ந்திருந் திலங்கப்
புரிமுறுக் கவிழ்ந்த பொன்னிதழ்க் கவலம்
பூத்திருந் ததுவெனப் புரிசை
தெரிதரச் சிறந்து செல்வமுஞ் செருக்குந்
திகழ்தர வீற்றிருந் ததுவே.

(இ-ள்.) அந்த மக்கமா நகரத்தினது கோட்டையானது சங்குகளானவை விரிவைக்கொண்ட பிரகாசத்தை வீசிய முத்துக்களை ஈனும்படி விரிந்த அலைகளையுடைய அகழென்று கூறுந்தடாகத்தின் கண் மின்னுகின்ற ஒளிவினது கிரணங்களை யுடைய மகத்தாகிய பதுமமணியின் பல கூட்டங்கள் வளைந்திருந்து விளங்கப் புரியினது முறுக்கானது அவிழப் பெற்ற பொன்போலும் இதழ்களையுடைய தாமரை மலரானது மலர்ந்திருந்ததை நிகர்த்ததென்று சொல்லும் வண்ணம் விளங்கும்படி சிறப்புற்று செல்வமும் செருக்கும் இலங்க வீறுட னிருந்தது. (உ)

வடவரைப் புடைசூழ் நிலத்தெழு தீவும்
 வரவழைத் தொருதலத் திருத்தித்
தடமுடிக் கிரணத் திரிகிமால் வரையைச்
 சதுர்தரப் புரிசையாய் நிறுத்தி
யிடனற நெருங்கும் பெரும்புறக் கடலை
 யிதற்கக ழெனப்பெய ரிட்டுப்
படவர வரசன் றிருமுடி மணியைப்
 பதித்தது மக்கமா நகரம்.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரமானது மகாமேருப் பருவதத்தைப் பக்கங்களில்வளையப்பெற்ற இந்தப் பூமியின்கண்ணுள்ளநாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகென்னும் ஏழு தீவுகளையும் வரும்படி செய்து ஒரு தானத்தில் இருக்கப் பண்ணிப் பெரிய சிகரத்தின் பிரகாசத்தையும் பெருமையையுமுடைய சக்கிரவாளகிரியை நான்காகக் கோட்டை மதிலாய் நிற்கச் செய்து இட மறச் செறியாநிற்கும் பெரிய புறத்தைக்கொண்டசமுத்திரத்தை இக்கோட்டைக்கு அழுகென்று அபிதானஞ்சூட்டிப்படமிதையுடைய ஆதிசேடனென்னும் சர்ப்பராசனது அழகிய உச்சிதனிடத்துள்ள இரத்தினத்தைப் பதிக்கப்பெற்றதை நிகர்த்தது.(ரு)

கானகத் துறையும் வயிரவொண் கதிரோ
 கடலபடு நித்திலக் கதிரோ
தேனவிழ் பதும மணிக்கதி ரதுவோ
 சிறந்திடு மக்கமா நகரில்
வானவர்க் கிறைவன் ஜபுறயீல் பலகால்
 வந்தவர் மெய்யொளி பாய்ந்தே
யீனமி னகரஞ் செழுங்கதிர் பரப்பி
 யிருப்பது பிறிதுவே றிலையே.

(இ-ள்.) அன்றியும், சிறப்புற்றிடும் அந்த மக்கமா நகரத்தில், தேவர்களாகிய மலாயிக்கத்துமார்களுக் கரசரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் பல தடவை வந்து அவர்களின் சரீரத்தினது பிரகாசமானது சாடிக் களங்கமற்ற அந் நகரமானது செழிய கிரணங்களை விரித்து இருப்பது. வேறே காட்டின்கண் தங்கும் ஒள்ளிய வயிரத்தினது பிரகாசமோ? சமுத்திரத்திலுண்டான முத்துக்களின் பிரகாசமோ? மதுவை யவிழப்பெற்ற பதும மணியினது பிரகாசமோ? இல்லை. (சு)

சரிகதி வேக மாருதஞ் சிதையத்
 தாவிய புரவியி ளொலியு
நிரைமணி யுருட்டுப் பசுங்கதி ரிரத
 நெருக்கிட நடித்துபே ரொலியு
முரலடிச் சிறுகட் பெருமதப் பிறைகோட்
 டொருத்தலி னிடிமுழக் கொலியும்
விரிதிரைக் கரங்கொண் டறையுவாப் பெருக்கும்
 வெருக்கொளத் தெருக்கிடந் தொலிக்கும்.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமாநகரத்தினது வீதியிற் சரியான மல்லம், மயூரம், வியாக்கிரம், வானரம் இடபமென்னும் பஞ்சகதிகளையு முடைய வேகத்தைக் கொண்ட காற்றையும் சிதையும் வண்ணம் தாவுகின்ற குதிரைகளின் ஓசையும், வரிசையுற்ற இரத்தினங்களின் பசிய பிரகாசத்தைப் பெற்ற வுருட்டுகின்ற தேர்களானவை நெருங்கிடும்படி நடத்துகிற பெரிய ஓசையும், உரலைப்போன்ற பாதங்களையும் சிறிய கண்களையும் பெரிய மதங்களையும் வளைந்த கொம்புகளையு முடைய யானைகளின் இடி முழக்கத்தையொத்த ஓசையும், விரிந்த அலைகளாகிய கைகளைக் கொண்டு அறைகின்ற சமுத்திரத்தினது ஓசையினது பெருக்கும் பயப்படும் வண்ணம் கிடந்து ஒலியாநிற்கும். (௫)

மின்னிடை நுடங்கச் சிலம்பொலி சிலம்ப
 மேகலைத் திரண்மணிக் கதிர்செம்
பொன்னொடு மிலங்க மறுகிடை புகுந்த
 புனையிழைப் பிடிநடை மடவார்
மன்னிய பதத்தி னலத்தக நிலத்தில்
 வரிபடக் கிடப்பன சிறந்த
துன்னிதழ்க் கமலம் பதத்தினை நிகர்ப்பச்
 சுவட்டடி தோடர்வன போலும்

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது வீதியின்கண் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களையும், பெட்டை யானைபோன்ற நடையையுமுடைய மாதர்கள் நுழைந்து மின்னலை யொத்த மருங்குலானது அசையவும், சிலம்பினது ஓசையானது ஒலிக்கவும், மேகலாபரணத்தினது திரட்சியுற்ற இரத்தினங்கள் செவந்த பொன்னு

டன் பிரகாசிக்கவும், நடந்து பொருந்திய அவர்களின் பாதத்தினது செம்பஞ்சுக் குழம்பு பூமியின்கண் வரிசைபட திக்கப் பட்டவை, சிறப்பைக்கொண்ட நெருங்கிய இதழ்களையுடைய தாமரை மலர்கள் அவர்களின் பாதத்தை யொக்கச் சுவட்டடியை பின் பற்றுவனவற் றைப் பொருவாநிற்கும். (௬)

கண்ணகன் ஞாலம் விலைசொலற் கரிய
கலைபல நிரைத்தலாற் பணியாற்
றண்ணெனக் குளிர்ந்து பிறவுரு வமைத்துத்
தரும்படி மக்கலப் பெருக்கான்
மண்ணினிற் சிறந்த நகர்த்திர வியத்தான்
மரக்கலத் திறக்கிய சரக்கா
லெண்ணிறந் தெழுநல் வளம்பல படைத்தங்
கிருந்தது கடைத்தெருத் தலையே.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது கடை வீதியின் தான மானது இடமகன்ற இவ் வுலகம் விலை சொல்லுதற் கருமையான பல வஸ்திரங்களை வரிசையாய் அடுக்கி வைத்திருப்பதாலும், ஆபரணங்களாலும், தண்ணெனக் குளிர்ந்து தன்னைப்போலும் வேறோர் வடிவத்தை யமைப்பச்செய்து தராநிற்கும் கண்ணாடிகளின் அதிகரிப்பாலும், இப் பூமியினிடத்துச் சிறப்புத்தங்கிய நாடுகளிலுள்ள திரவியங்களாலும், கப்பல்களிலிருந்து இறக்கப்பெற்ற சரக்குகளாலும், கணக்கற்று ஓங்காநிற்கும் நன்மைபொருந்திய பல செல்வத்தை யுடையதாய் அங்கு தங்கி யிருந்தது. (௭)

மான்மதக் குவையுஞ் சந்தனத் தொகையு
மணிக்கருங் காழகிற் றுணியும்
பான்மதிக் குழவிக் குருத்தெனக் கதிர்கள்
பரப்பிய மதகரி மருப்புந்
தேனமர்ந் தொழுகுங் குங்குமத் தொகையுஞ்
செறிதலா லுயர்ச்சியால் வளத்தா
லீனமி லிமைய பொருப்பெனப் பணைத்தங்
கிருந்தது கடைத்தெருத் தலையே.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது கடைவீதியின் தானமானது, கஸ்தூரிக் குவியலும் சந்தனக்கட்டைகளின்கூட்டமும் அழகிய கரிய நிறத்தைக்கொண்ட வயிரமோடிய அகிற் கட்,

டைகளின் துண்டங்களுங் வெள்ளிய இளஞ் சந்திரனது கருத்தை ப்போலும் பிரகாசத்தை விரித்த மதங்கொண்ட யானைகளின் கொம் புகளும் நறவமானது தங்கப்பெற்றுச்சிந்தாநிற்கும் குங்குமத்திண்டு தொகையும் நெருங்குவதாலும் உயர்ச்சியாலும், செல்வத்தாலும் குற்றமற்ற இமையமலையைப்போலப் பணைத்து அவ் விடத்தி லிருந் தது, (அ)

தந்தியின் குழுவுங் குரகதத் திரளுந்
தடவரை பொருவுதேர்க் கணமுஞ்
சிந்துரப் பிறைநன் னுதற்கருங் கூந்தற்
செவ்வரித் தடங்கணார் நெருக்கும்
வந்தவர் நினைத்த பொருளுமா ரமிர்தும்
வகைவகை தருதலான் மணியு
மிந்திர தருவும் வறிதென மதர்த்தங்
கிருந்தது கடைத்தெருத் தலையே.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது கடை வீதி யின் தானமானது யானைக் கூட்டத்தையும், குதிரைக் கூட்டத்தை யும், பெரிய மலைகளை நிகர்க்க இரதக்கூட்டத்தையும், சிந்துரமெழு தப்பெற்ற இளஞ் சந்திரன்போலும் நல்ல நெற்றியையும் கரிய கூந் தலையும் செந்நிறத்தைக்கொண்ட இரேகைகள் படர்ந்த பெரிய கண் களையுமுடைய மாதர்களின் நெருக்கத்தையும், அங்கு வந்தவர்கள் சிந்தித்த வஸ்துக்களையும், பொருந்திய அமிர்தத்தையும் வகைவகை யாய்த் தருவதினால் சங்கநிதி, பதுமநிதி யென்னு மிருநிதிகளையும், அரிசந்தனம் கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரமென்னும் இந்திர தருக்களையும் வறியதென்று சொல்லும்படி செழிப்புற்று அவ் விடத்தில் தங்கி யிருந்தது. (கூ)

நிரைத்தபைங் கதிரார் மரகத மணியா
னீணிலாக் கருப்புரத் தகட்டாற்
பருத்தசங் கினத்தால் வலம்புரிக் குலத்தாற்
படர்கொடித் திரட்பவ ளத்தால்
விரித்தவெண் ணுரைபோல் வெண்டுகி லடுக்கால்
விரைசெறி யம்பரின் றிடரா
லிரைத்தபே ரொலியாற் பெருங்கட னிகரா
யிருந்தது கடைத்தெருத் தலையே.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது கடை வீதியின் தானமானது வரிசையாகப்பட்ட பசிய பிரகாசம் நிறைந்த மரகதமணியாலும், நீண்ட ஒளிவைக்கொண்ட கருப்புரத்தகட்டாலும், பருப்பமுற்ற சங்குகளின் கூட்டத்தாலும், வலம்புரியினது இனத்தாலும் படராநிற்கும். கொடிகளையுடைய திரண்ட பவளத்தாலும், வெள்ளிய நுரையைப்போலும் விரியச்செய்த வெண்ணிறத்தையுடைய வஸ்திரங்களின் அடுக்காலும், பரிமள மிகுத்த அம்பரின் திடராலும், ஒலிக்கின்ற பெரும்ஓசையாலும், பெரியசமுத்திரத்தை நிகர்த்திருந்தது. (க0)

பைங்கடற் பிறந்து வணிகர்கை புகுந்த
பருமணி நித்திலக் குவையுந்
தங்கிய கிரண வனசமா மணியுந்
தயங்கொளி வயிரா சிகளுஞ்
செங்கதி ரெறிக்கு மிரவிய மமுதச்
செழுங்கிர் மதியமு முடுவு
மிங்கிவண் குடிபுக் கிருந்தது போன்று
மிருந்தது கடைத்தெருத் தலையே.

(இ-ள்) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது கடை வீதியின் தானமானது பசிய சமுத்திரத்தில் தோற்றமாய் வர்த்தகர்களின் கைகளிற் புகுந்த பருப்பத்தைக்கொண்ட மணியாகிய முத்துக்களின் கூட்டமும், பிரகாசமானது தங்கப்பெற்ற மகத்தான பதும மணிகளின் கூட்டமும் இலங்குகின்ற ஒளிவையுடைய வயிரமணிகளின் கூட்டமும், செவந்த கிரணங்களை வீசாநிற்கும் சூரியனும், அமுதத்தைப்பெற்ற செழிய கலைகளையுடைய சந்திரனும், நட்சத்திரங்களும், குடியாகப் புகுந்து இருந்ததை நிகர்த்தும் இருந்தது.

அணிபெற வொழுங்காய் வயின்வயின் றிரண்டி
வகிற்புகை முகிலின மெனவுங்
குணில்பொரு முரசப் பெருங்குரல் கிடந்து
குழுமிவின் னேறெனு லியெனவு
மணிவளைத் தடக்கைத் துவரிதழ் கனத்த
வவமுலை மின்களின் னெனவுந்
தணிவில நிவந்த செழுங்கதிர் மாடந்
தமனியக் கிரியினே டிகலும்.

(இ-ள்,) அன்றியும் அந்த மக்கமாநகரத்தினது இடங்கள் தோறும் குறையாது கூடிய அழகு பெறும் வண்ணம் வரிசையாய் ஓங்கிய செழிய பிரகாசத்தை யுடைய மாளிகைகளானவை அகிற் கட்டைகளின் தூபமானது மேகக்கூட்டங்களெனவும். கூட்ட முற்றுக் கிடந்து குறுங் தடியால் அறைகின்ற முரசத்தினது பெரிய சத்தமானது இடியி னோசை யெனவும், இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற வளையல்களினது பெரிய கைகளையும் புவளத்தை யொத்த அதரங்களையும் கனத்தஇள முலைகளையுமுடையமாதர்கள்மின்ன லெனவும் மகா மேருப் பருவதத்தி னோடு பகையாகிற்கும். (கஉ)

வெண்ணில வெறிக்கு மிரசதத் தகடு
வேய்ந்தமே னிலவயின் செறிந்து
பண்ணிருந் தொழுகு மென்மொழிக் குதலைப்
பாவையர் செழுங்குழல் விரித்து
நண்ணிய துகிலுங் கமழ்தர வூட்டு
நறும்புகை சுருண்டெழுந் தொழுங்காய்
விண்ணினிற் படர்வ தேணியொன் றமைத்து
விசும்பினுக் கிடுவது போலும்.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தின் கீதமானது மாறாது குடியாக விருந் தொழுகாநிற்கும் மெல்லிய குதலை வார்த்தைகளையுடையமாதர்கள் வெண்மைபொருந்திய பிரகாசத்தை வீசும் பொற்றகட்டினால் அலங்கரித்த மேல்வீட்டின்கண் நெருங்கித் தங்களின் செழிய கூந்தல்களை விரித்துச் சேர்ந்த வஸ்திரங்களும் பரிமளிக்கும்படி ஊட்டிய அகிற் கட்டைகளின் நறிய தூபமானது சுருண்டெழும்பி ஆகாயத்திற் செல்லுவது, அவ் வாகாயத்திற்கு ஓர் ஏணியைச் செய்து இடுவதைப்போலாகிற்கும். (கரு)

அடுசெழும் பாகுந் தேனுமாரமிர்து
மனத்தொடு மனத்தொடுந் திருந்தி
யிடனற விருந்து விருந்தொடு நுகர்வோர்
மனையிட மெண்ணினை மறைக்குங்
கடுவினை யடர்ந்த கொடுவினை விழியார்
கறைதவிர் மதிமுகங் கண்டோ
படர்தரு மாடக் குடுமியின் வசித்த
பசுங்கொடி மதிமறுத் துடைக்கும்.

(இ-ள்.) அன்றியும், மனத்தோடு செவ்வையாய் இடமற விருந் தினருடன் இருந்து காச்சிய செழிய பாலையும், தேனையும், அமிர்த த்தையும், அன்னத்துடன் புசிப்பவர்களின் வீட்டினிடங்களானவை கணக்கை மறையச்செய்யும் விரிந்த மாளிகைகளின் உச்சியிற் கட் டிய பசிய துகிற்கொடிகளானவை விஷத்தைத் தமக்கு நிக ரில்லை யென்று பொருதிய கொடிய பாதகத் தொழிலைக்கொண்ட கண்களை யுடைய மாதர்களின் குற்றமற்ற சந்திரனை யொத்த வதனத்தைப் பார்த்து ஆகாயத்தினிடத்துள்ள சந்திரனின் களங்கத்தைத் துடை யாநிற்கு. (கசு)

தேங்கமழ் சுருதி வரிமுறை படர்ந்து
  திகழ்தரு நித்திலக் கொடிக
ளோங்கிய மாடக் குடுமியி னடுநின்
  றுலவிய திரவினும் பகலும்
வீங்குசெங் கதிரி னிரவியுந் தவள
  வெண்கதிர் மதியமும் விலகிப்
பாங்கினிற் புகுமி னெனக்கர மசைத்த
  பான்மையொத் திருந்தன மாதோ.

(இ-ள்.) அன்றியும், தேனைப் பரிமளியாநிற்கும் வேத வாசகத் தினது வரிகளானவை முறையாகப் பரவிப் பிரகாசிக்கும் முத்துக்க ளைத் தொங்கவிட்ட துகிற் கொடிகள் ஓங்குதலுற்ற மாளிகைகளின் உச்சியினது மத்தியில் நின்று உலவியவை, இரவிலும், பகலிலும், பெருத்த செவந்த கிரணங்களையுடையசூரியனையும்முத்துப்போலும் வெள்ளிய கலைகளையுடைய சந்திரனையும், விலகிப் பக்கத்தில்புகுங்க ளென்று தங்களின் கைகளை யசைத்த விதத்தை நிகர்த்திருந்தன. ()

கலிநிலைத்துறை.

மானை யன்னகண் மடந்தையர் வதுவையின் முழக்குஞ்
சேனை மன்னவர் படைமுர சதிர்தெரு முழக்குந்
தான மிந்நகர் முதலெலாச் சாற்றிய முழக்குஞ்
சோனை மாமழை முழக்கென வைகலுந் தொனிக்கும்.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது மானின் மரு ண்ட பார்வையை நிகர்த்த பார்வையைக்கொண்ட கண்களையுடைய மாதர்களினது விவாகத்தினது, ஓசையும் தெருக்களில் சேனைத்

தலைவர்களின் படைமுரசமானது ஒலிக்கின்ற ஓசையும், இந்த மக்கமாநகரமானது கொடைக்கு முதன்மையானதென்று கூறுகின்ற ஓசையும், பெரிய விடா மழையினது ஓசையைப்போன்று பிரதிதிமும் முழங்காநிற்கும். (கசா)

வீதி வாய்தொறு மிடனற நெருங்கிய மேடைச்
சோதி வெண்கதி ரந்தரத் துலவிய தோற்ற
நீத மானபி பிறந்தநாள் விண்ணவர் நெருங்கிக்
கோதில் பொன்னகர் திறந்தவாய்க் கதிரெனக் குலவும்.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமா நகரத்தினது தெருக்களினிடங்கள்தோறும் இடமில்லாது செறிந்த உப்பரிகைகளின் பிரகாசத்தைகொண்ட வெள்ளிய கிரணங்கள் ஆகாயத்தின்கண் உலவுகின்ற தோற்றமானது, நீதியைக்கொண்ட பெருமையையுடைய நமது நாயகம் எம்மறைக்குந் தாயகம், நபிகட் பெருமான் நபி காத்திமுல் அம்பியா ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இவ் வுலகத்தினிடத்து அவதரித்த நாளில் தேவர்களாகிய மலாயிக்கத்துமார்கள் நெருக்க முற்றுத் திறந்த களங்க மற்ற சொர்க்க லோகத் திடத்தினது ஒளியைப் போன்று ஒளிராநிற்கும் (கஎ

மன்ற லங்கம ழகம்புனை சுதைதிகழ் மதிளா
னின்றி லங்கிய கணமணிக் கொடுமுடி நிறையான்
முன்றி லெங்கணு மசைதரு கொடிநிறை முறையா
லென்று மிந்நகர் பொன்னக ரென்பதொத் திடுமே.

(இ-ள்.) அன்றியும், அழகிய வாசனையானது பரிமளிக்கின்ற அகிலினது பொலிவைக் கொண்ட சுண்ணச் சாந்து பிரகாசிக்கும் மதிலாலும் நிற்கப் பெற்று ஒளிர்கின்ற கூட்ட மாகிய இரத்தினங்களையுடைய செய்குன்றத்தினது வரிசையாலும், முற்றங்களில்எவ்விடத்தும் நின்று அசையும் படி நிறைந்தகொடிகளின்ஒழுங்காலும், எக்காலமும் இந்த மக்கமா நகர மானது சொர்க்க லோக மென்பதைப் பொருவாநிற்கும். (கஅ

பட்ட முற்றிடு நபிகளால் விண்ணவர் பரிவாற்
கட்டு பேரொளிக் கருபத்துல் லாவிருக் கையினான்
மட்டு வார்குளிர் சோலையான் மலிந்தபொன் னுலக
மெட்டு மொன்றெனத் திரண்டுவந் திருந்ததொத் திருக்கும்

(இ-ள்.) அன்றியும், பட்டங்களைப் பெற்றிடும் நபிகளாலும், தேவர்களாகிய மலாயிக்கத்து மார்கள் அன்போடும் கட்டிய பெரிய பிரகாசத்தைக் கொண்ட கஃபத் துல்லா வென்னும் பரிசுத்த பள்ளி இருக்கையாலும், அதிகரித்த தேனானது வடியுகின்ற குளிர்ச்சி தங்கிய சோலைகளினாலும் எட்டுச் சுவர்க்க லோகங்களும் ஒன்றென்று கூறும்படி கூடி வந்து தங்கியதை இந்த மக்கமா நகரமானது நிகர்த்து இராநிற்கும். (௧௯)

தெரிந்த செவ்வியர் குறைவழி தெளிந்தவர் செந்நாற்
சொரிந்த நாவினர் மூதியவர் திரண்டசொல் லோதை
யெரிந்த செங்கதி ரிலங்கிய பள்ளிகளெவையும்
விரிந்த வாய்திறந் தோதுவ போன்றன வேதம்,

(இ-ள்,) அன்றியும், யாவற்றையும் அறிந்த அழகை யுடையோர்களும், மார்க்க நெறிகளைத் தேர்ந்தவர்களும், செம்மை யாகிய வேதநூலைப் பொழிந்த நாவை யுடையவர்களும், வயதால் முதிர்ந்தவர்களும், ஓதுகின்ற திரண்ட ஓசை யானவை, ஒளிர்கின்ற செந்நிறத்தைக் கொண்ட ஒளி வானது பிரகாசிக்கின்ற பள்ளிகள் யாவும் தங்களின் விரிந்த வாய்களைத் திறந்து வேதங்களை ஓதுவன வற்றை நிகர்த்தன, (௨0)

சந்திர காந்திசெய் பலகையை மடிமிசை தரித்தே
யிந்திர நீலமொத் திருந்தமை தோய்த்ததி லெழுதி
மந்திர மாமொழி மறைபயி லிளையவர் நெருங்கி
யெந்த வீதியு முழங்குவ திவையலா விலையே.

(இ-ள்.) அன்றியும், மந்திர மாகிய மகத்தான வசனங்களை யுடைய வேதத்தைப் படிக்கின்ற சிறுவர்கள் எழுதி எந்தத் தெருக்களிலும் செறித லுற்றுச் சந்திரப் பிரகாசத்தைச் செய்யாநிற்கும்பலகைகளை மடியின் மீது தாங்கி இந்திர நீலத்தை நிகர்த்து இருக்கப்பெற்ற மையைத் துகிலிகையில் தோயச் செய்து அந்தப் பலகைகளில்ஒலிக்கும் ஓசைக ளாகிய இவைகளே யல்லாமற் பிறி தொன்றுமில்லை ()

மறையின் மிக்கவ ரோதிய வோசையும் வரிசைத்
துறவின் மிக்கவர் திக்கிறி னோசையுஞ் சூழ்ந்தே
யிறைவ னைத்தொழு திருகையு மேந்திய வாமீன்
முறை முறைப்படி கூறிய வோசையு முழங்கும்,

(இ-ள்.) அன்றியும், வேதங்களில் மிக்கோர்கள் ஓதுகின்ற ஓசையும், சிறப்பாகிய துறவினது பெருமையிற் சிறந்தோர்களினது திக்கிறின் ஓசையும், சூழ்தலுற்று எப்பொருட்கு மிறைவனாகிய அல்லாகு சுபுகா னகுவத்த ஆலாவை வணங்கி இரண்டு கைகளையும் மார்புக்கு நேராக ஏந்தி வரிசை வரிசையாக ஆமீனென்று சொல்லிய ஓசையும் எவ்விடத்தும் முழங்காநிற்கும்.

நகரப்படல-முற்றிற்று.

ஆக படலம்-௩க்குத்-திருவிருத்தம்-௬அ.

தலைமுறைப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மருவிரி வாவி செந்தா மரைமலர்க் கைக ளேந்தச்
சொரிமதுச் சிந்துஞ் சந்தத் துடவைசூழ் மதினத் தன்னிற்
றெரிதர வரசு செய்து தீனிலை நிறுத்திச் செல்வந்
தருநபி யிறசூ லல்லா தலைமுறைத் தோற்றஞ் சொல்வாம்.

(இ-ள்.) பரிமளமானது விரியப்பெற்ற தடாகங்கள் செவந்த தாமரைப்புஷ்பங்களாகிய கரங்களை ஏந்தும் வண்ணம் பொழிகின்ற நறவத்தைச் சொரியா நிற்கும் சந்தனச் சோலைகள் சூழ்ந்த திரு மதீனமா நகரத்தில் விளங்கும்படி அரசு செய்து தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை நிலையாக நிற்கப்பண்ணிச் செல்வத்தைத் தந்த அல்லாகு சுபுகா னகுவத்த ஆலாவின் றசூலான நாயகம் நபிகட் பெருமானார் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தலைமுறையினது தோற்றத்தை யாம் கூறுவாம். (க)

தெரிபொரு ளரிய வேதத் துட்பொருட் டெளிவ தாக
வருபொரு ளாதி பாரின் முகம்மதை விளக்கஞ் செய்யப்
பரிவுறு மனுவா தத்தைப் படைக்கமண் ணெடுத்து வாவென்
றுரைதர விசுறு யீலு முவந்துமண் ணெடுத்துப் போந்தார்.

(இ-ள்.) யாவற்றையும் விளங்கும் பொருளும் அருமையான வேதங்களின் அகப்பொருளும் தெளிவாய் எவ்விடத்தும் தோற்ற

மாகாசிற்கும் பொருளுமான அனைத்திற்கும் முதன்மையாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் இப் பூலோகத்தின் கண் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை விளக்கஞ் செய்வதற்காக வேண்டி அன்புற்ற மனுமாகிய மூல பிதாவான நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்களைச் சிருட்டிக்க மண்ணெடுத்துக்கொண்டு வாருமென்று உத்திரவு செய்ய, இசுறயீல் அலை கிஸ்ஸலா மவர்களும் உவப்புற்று மண்ணை யெடுத்துக்கொண்டு போனார்கள். (உ)

கதிர்வடி வொழுகி நின்ற ஹபீபுமெய் வகுக்க வேண்டி
விதியவன் ஜபுற யீலை விரைந்துமண் கொடுவா வென்றான்
றதிபெறு மதீனத் தன்னிற் றாயவோ ரிடத்திற் றோன்றி
யிதமுற வெடுத்துப் போந்தா ரிமையவர் தலைவரன்றே.

(இ-ள்.) அன்றியும், விதியவனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவானவன் பிரகாசத்தினாது சொரூபமே சிந்த நின்ற ஹபீபாகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் திருமேனியை வகுக்கவேண்டி விரைவாய் ஜிபுறீல் அலை கிஸ்ஸலாமவர்களை மண்ணெடுத்துக்கொண்டு வாருமென்று கற்பித்தான். தேவர்களான மலாயிக்கத்து மார்களின் அதிபாகிய அந்த ஜிபுறீல் அலைகிஸ்ஸலா மவர்களும் புகழ்பெற்ற திரு மதீனமா நகரத்தில் பரிசுத்ததத்தைக் கொண்ட ஒப்பற்ற ஒரு தானத்தில் பிரசன்னமாய் இனிமை பொருந்தும் வண்ணம் மண்ணை எடுத்துக்கொண்டு போனார்கள். (ங)

திறலுறு ஜபுற யீல்தந் திருக்கையி லேந்திப் போந்த
பிறுதிவி தனையே மிக்கோர் பெறும்பதி சுவனந் தன்னி
னறைவிரி யமுத மெந்த நாளினு மதுர மாறுத்
துறைவிரி நதிக டோறுங் கழுவினர் துலங்க வன்றே.

(இ-ள்.) வல்லமையைக் கொண்ட ஜிபுறீல் அலைகிஸ்ஸலா மவர்கள் தங்களின் தெய்வீகந் தங்கிய கரத்தில் அவ்வாறு தாங்கிக் கொண்டுபோன அம் மண்ணைப் பெருமையிற் சிறந்தோர்கள் பெறு நிற்கும் பதியாகிய சுவர்க்கலோகத்தில் வாசனை மலர்ந்த நீரினது இனிமையானது எந்நாளும் நீங்காத துறைகளானவை விரியப்பெற்ற ஆறுகளெல்லாவற்றிலும் பிரகாசிக்கும்படி கழுவினார்கள். (சு)

வரிசையும் பேறும் வாய்ந்த முகம்மது நயினர் தோற்றந்
தெரிதர வானோர்க் கெல்லாஞ் சோபனஞ் சிறக்கச் சொல்லி
யரியமெய் பூரித் தோங்கி யகத்தினின் மகிழ்ச்சி பொங்கிப்
பெரியவன் றிருமுன் வைத்தார் பேரொளி யிலங்கிற் றன்றே.

(இ-ள்.) அன்றியும், அஜ்ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் தேவர்களான மலாயிக்கத்துமார்கள் அனைவருக்கும் வரிசையும் பேறும் சிறக்கப்பெற்ற நயினராகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தோற்றமானது விளங்கும்படி சிறப்பாகச் சோபனங்கூறி அருமையான தங்களின் சரீரமானது பூரிப்புற்று வளர்ந்து மனசின்கண் சந்தோஷம் அதிகரித்துப் பெரியவனாகிய ஜல்ல ஜலாலகு வத்த ஆலாவின் அழகிய சந்நிதானத்தில் வைத்தார்கள். பெரிய பிரகாசமானது பிரகாசித்தது. (ரு)

மன்னிய கதிர்கள் வீசு மண்ணினை மனுவா தத்தின்
வெந்நிடத் திருத்தி யங்கம் வியனுறும் வடிவ தாகத்
தென்னுறு ஜலால்ஜ மாலென் றேத்திய திருக்கை யாரத்
தன்னிக ரில்லாத் தூய்யோன் வகுத்தனன் றழைக்க வன்றே.

(இ-ள்.) தனக்கு ஒப்பில்லாத பரிசுத்தனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் அவ்வாறு பொருந்திய கிரணங்களை வீசாநிற்கும் மண்ணை யாவற்கும் மூலபிதாவான மனுவாகிய நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்களின் முதுகின்கண் ணிருக்கச்செய்து சரீரமானது ஆச்சரியத்தையுற்ற வடிவமாகத் தனது அழகுபொருந்திய ஜலால் ஜமாலென்று துதிக்கப்பட்ட தெய்வீகந் தங்கிய கைகளினால் பொருந்தும்படி சிருட்டித்தான். (சா)

மெய்யெழில் வாய்ப்பச் சீவன் விடுத்தனன் விடுத்த போதி
லையமற் றெழுந்து சென்னி மூளையி னவத ரித்து
வையகஞ் சிறப்ப வானோர் மனங்களிப் பேறி விம்மத்
துய்யநற் கலிமாத் தன்னைச் சொல்லியங் கிருந்த தன்றே.

(இ-ள்) அவ்வாறு சிருட்டித்துச் சரீரத்தினது அழகானது சிறக்கும்படி உயிரை விட்டனன். விட்ட சமயத்தில் சந்தேகமின்றி யெழும்பித் தலையினது மூளையில் தோற்றமாய் இந்தப் பூமியானது சிறக்கவும் தேவர்களான மலாயித்துமார்கள் உள்ளத்தின்கண் சந்தோஷமதிகரித்து விம்முதலுறவும், பரிசுத்தமாகிய நன்மை பொருந்திய கலிமாவை ஓதி அவ்விடத்தி லிருந்தது. (எ)

உரைதெரி கலிமா வோதி யோதியங் கிருந்து சிவ
னிருவழி தனி லிறங்கி யிருந்தகண் விழித்துச் சொர்க்கச்
சொரிகதிர் வாயின் மேலாய் நோக்கின சுடர்கடுங்கும்
வரியுறு கலிமாத் தன்னை வளப்பெறக் கண்ட தன்றே.

(இ-ள்) அவ்விதம் அர்த்தமானது விளங்கப்பெற்ற கலிமாவைக் கூறிக் கூறி அவ்விடத்திலிருந்து உயிரானது இரண்டு கண்களிலு மிறங்கி இருந்த கண்களைத் திறந்து சிந்துகின்ற பிரகாசத்தையுடைய சொர்க்க லோகத்தினது வாயிலின் மேலாகப் பார்த்து கிரணங்களைச் சொரியாநிற்கும் வரியாய்ப் பொருந்திய கலிமாவை வளம் பெற நோக்கிற்று. (அ)

துண்டத்தி னுவி தோன்றத் தும்மலுந் தோன்றிப் பின்பு
விண்டுரை பகரு நாவின் மேவியல் ஹம்தை யோதிக்
கொண்டபின் பிரத்தி சொன்ன குதாதிரு வசன நோக்கி
யண்டர்·· யகனைப் போற்றி யாதமொன் றுரைப்ப தானார்.

(இ-ள்.) அன்றியும், உயிரானது முகத்தில் தோற்றமாகத் தும்மலுமுண்டாய்ப் பின்னர் வாயைத் திறந்து வார்த்தைகளைப் பேசும் நாவினால் அல்ஹம்தைச் சொல்லிக் கொண்ட பிற்றை அதற்குப் பிரத்தி கூறிய குதாவாகிய ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவினது தெய்வீகந்தங்கிய வார்த்தையைப் பார்த்துத் தேவர்களான மலாயிக்கத்துமார்களின் நாயனாகிய அவ் வாண்டவனைத் துதித்து நபி ஆதமலை கிஸ்லா மவர்கள் ஒன்றுகூறத் தொடங்கினார்கள். (கூ)

கணித்தள வறுக்க வொண்ணுக் கடவுளே குதாயே நீங்கா
மணிக்கதி ரெறிக்குஞ் சொர்க்க வாயிலி னிலைக்கு மேல்பாற்
பணித்தநின் றிருநா மத்தி னுடனொரு பெயரைப் பண்பா
யணித்துவைத் திருப்பக் கண்டே னவரெவ ரறியே னென்றார்.

(இ-ள்.) இத்தன்மை யென்று கணித்து அளவுபடுத்த முடியாத நாயனே! குதாயே! இரத்தினங்களின் மாறாத பிரகாசத்தை வீசும் சொர்க்க லோகத்தின் வாயிலினது நிலைக்கும் மேல் பாலாய்ப் பணித்த உனது தேய்வீகந் தங்கிய அபிதானத்தோடு வேறேயொரு அபிதானத்தைத் தகுதியாகச் சமீபித்து வைத்திருக்கும்படி பார்த்தேன். அவர் யாவரென யான் அறியேனென்று கூறினார்கள். (௰)

மாதர்கு லகடுட் டோன்று மனுநெறி யாத மேநின்
காதலி லுதவுகின்ற கான்மூளை யதிலோர் பிள்ளை

வேதநா யகமா யெங்கும் விளங்கு தீன் விளக் காய்ப் பின்னுட்
பூதல நபியாக் காணப் படைத்தனன் புகலக் கேண்மோ.

(இ-ள்.) அவ்வாறு கூறவே, பெண்களின் கெற்பத்தைக் கொண்ட வயிற்றில் நின்றும் தோற்ற மாகாத மனுவினது நெறியையுடைய ஆதமே! சொல்லக் கேட்பீராக! உமது ஆசையினுல் தருகின்ற புத்திரர்களில் ஓர் குழந்தை வேதங்களுக்கெல்லாம் நாயகமாகவும் எவ்விடத்தும் பிரகாசிக்கும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்திற்குத் தீபமாகவும், பிற்காலத்தில் பூலோகத்தினது நபியாய்த் தோற்றும் வண்ணம் சிருட்டித்தேன். (கக)

கலைமறை முகம்ம தென்னுங் காரண மில்லை யாகி
லுலகுவிண் ணிரவி திங்க ளொளிருடுக் கணஞ்சு வர்க்க
மலைகட னதிபா தாளம் வானவர் முதலா யும்மை
நிலையுறப் படைப்ப தில்லை யெனவிறை நிகழ்த்தி ஞனே.

(இ-ள்.) அன்றியும், வேத சாஸ்திரங்களை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் காரணமில்லையானுல் பூலோகம், வானலோகம், சூரியன், சந்திரன், பிரகாசிக்கின்ற நட்சத்திரக் கூட்டங்கள், சுவர்க்கலோகம், மலை, சமுத்திரம், ஆறு, பாதாளம், தேவர்கள் முதலாக உம்மையும் நிலையுறும்படி சிருட்டிப்பதில்லை யென்று யாவருக்கும் இறைவனுன ஜல்ல ஷகுனகு வத்த ஆலாவானவன் கூறினுன். (கஉ)

பரத்தினை யிறைஞ்சி வாழ்த்திப் பரிவுபெற் றிருந்த வாதஞ்
சிரத்தினி லிருந்த வாவி தேகத்தி னிறைந்த பின்னர்
வரத்தினி லுயர்ந்த வண்மை முகம்மது புவியிற் றேன்றத்
தரித்தபே ரொளிவுக் கந்தச் சதிகதிர் மழுங்கு மன்றே.

(இ-ள்.) கடவுளாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவை வணங்கித் துதித்து அன்புபெற்றிருந்த மூலபிதாவான நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்களின் தலையின்கண்ணிருந்த ஜீவனுனது சரீரத்தினிடத்துப் பூரணப்பட்ட பின்னர் வரத்தினுல் உயர்ச்சியுற்ற அழகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இப் பூலோகத்தில் அவதரிக்கும் வண்ணம் தங்கிய பெரிய ஒளிவுக்கு அந்தச் சந்திரனது கலைகளும் மழுங்கா நிற்கும். (கங)

உடலுறைந் துயிருண் டென்னு மொருவடி வில்லான் செவ்வி
மடலவிழ் வனச பாத முகம்மதி னொளிவுக்காக

வடலுறு மக்கட் கெல்லா மதிபதி யாதத் துக்கே
யிடமுறு மமரர் யாரும் சுஜூதுசெய் திடுக வென்றான்.

(இ-ள்.) தேகமானது தங்கப்பெற்று ஜீவனுண்டென்று கூறும் ஒப்பற்ற சொரூபமில்லாதவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவானவன் அழகிய இதழ்கள் அவிழ்ந்த தாமரை மலர்போலுந் திருவடிகளையுடைய நாயகம் நபிகட் பெருமானார் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது ஒளிவுக்காக வல்லமையைக்கொண்ட மானுஷீகர் அனைவர்க்கும் அதிபதியாகிய நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்களுக்கு ஆகாய லோகத்தின் கண் பொருந்திய தேவர்களான மலாயிக்கத்துமார்க ளனைவர்களையும் சுஜூது செய்வீர்களாக வென்று கற்பித்தான். (கச)

தூயவ னுரைப்பக் கேட்ட சொன்மரு தெழுந்து தங்கள்
காயமு மனமும் வாக்குங் கலந்தொன்றாய் மகிழ்வு பொங்கி
நேயமுற் றிடப்ப ணிந்து நிரைநிரை கைக ளேந்தி
வாயினிற் புகழ்ந்து போற்றி மலக்குகள் வணக்கஞ் செய்தார்.

(இ-ள்.) பரிசுத்தனாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவானவன் அவ்வாறு கற்பிக்க மலக்குகளான தேவர்கள் அந்தக் கற்பனையை மறுக்காது எழும்பித் தங்களின் சரீரமும் நெஞ்சமும் வார்த்தைகளும் ஒன்றாய்க் கலப்புற்றுச் சந்தோஷமதிகரித்து நேசமானது பொருந்தும் வண்ணம் அவ் வாத மலைகிஸ்ஸலா மவர்களை வரிசை வரிசையாய்த் தாழ்ந்து கரங்களை ஏந்தி வாயினாற் றுதித்துப் புகழ்ந்து வணங்கினார்கள். (ருக)

வானவர் செய்புமந்த வணக்கத்தின் முறை செய்யாமற்
போனதனால ஜாசில் பொறைநிறை யறிவு போக்கி
யீனவன் குணத்த னாயி லகுனத்து முனிவும் பெற்றே
யானவம் பிபுலீ சென்னும் பெயரும்பெற் றலைந்து போனான்.

(இ-ள்.) அஜாசி லென்பவன் தேவர்களாகிய மலாயிக்கத்துமார்கள் அவ்வாறு செய்கின்ற அந்த வணக்கத்தினது முறைமையாகச் செய்யாமற் போனதினால் தனது பொறையையும் நிறையையும் அறிவையும் போக்கடித்துப் புன்மையான கொடிய குணத்தையுடையவனாகி லகுனத்தும் முனிவும் பெற்று வீணான இபுலீசென்று கூறும் நாமத்தையுமடைந்து அலைதலுற்றுப் போனான். (கசு)

பொருப்புருக் கொண்ட தன்ன புயத்தெழி லாதந் தன்னுள்
விருப்பெனும் போக முற்றி விழைவுபெற் றிடுத லாலே
கருப்பமுற் பவிக்க வேண்டுங் காரண காட்சி யாக
மருப்புகுங் குழல்ஹவ் வாவை வல்லவன் பிறப்பித் தானே.

(இ-ள்.) அன்றியும், வல்லவனான ஹக்குசுபுகானகுவத்த ஆலாவானவன் மலைகளானவை ஓர்வடிவத்தைஎடுத்தாற்போன்ற தோள்களை யுடைய அழகிய நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்களினிருதயத்தின் கண் ஆசை யென்னும் விருப்பமானது அதிகரித்துவிழைவைப் பெறுவதினால் கெற்பம் உண்டாக வேண்டுங் காரணத்தினது தோற்ற மாக வாசனை புகப் பெற்ற கூந்தலை யுடைய ஹவ்வா அலைகிஸ்ஸலா மவர்களைப் பிறக்கச் செய்தான். (௧௭)

தேங்கமழ் குழலுஞ் சோதிச் சிறுபிறை நுதலும் வாய்ப்பப்
பாங்கிருந் தஞ் சிந்தும் பனிமொழி மாதை நோக்கி
யோங்குநின் பெயரைக் கூறென் றுரைத்திட ஹவ்வா வென்று
ரீங்கிவ ணுறைந்த வண்ண மேதென வாதங் கேட்டார்.

(இ-ள்.) மூல பிதா வாகியநபி ஆதமலைகிஸ் ஸலாமவர்கள்வாசனை யானது பரிமளிக்கப் பெற்ற கூந்தலும் பிரகாசத்தைக் கொண்ட மூன்றும் நாளினது சந்திரனை நிகர்த்தநெற்றியும்சிறக்கும் வண்ணம் பக்கத்தி லிருந்து அமுத மானதுசிந்தாநிற்கும்குளிர்ச்சி தங்கியவார்த்தைகளை யுடைய மங்கை யான ஹவ்வா அலைகிஸ்ஸலாமவர்களைப் பார்த்து உனது நாமத்தைச் சொல்லென்று சொல்ல ஹவ்வா வென்று கூறினார்கள். நீ இவ்விடத்தில் வந்து தங்கிய விதம் யாதென்று கேட்டார்கள், (௧௮)

செவ்விமன் னெறியா தத்தின் றிருமதி முகத்தை நோக்கி
மவ்வலங் குழலா ரிந்த வானகம் புவிமற் றுள்ள
வெவ்வையும்படைத்தோனென்னைவகுத்துநும்வயின்செல்கென்று
னவ்வழி யடைந்தே னென்று ரழகொளிர் பவள வாயால்.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறு கேட்கஅழகிய வாசனையைக்கொண்ட கூந்தலை யுடைவர்களான ஹவ்வா அலைகிஸ்ஸலாமவர்கள்பொருந்திய சிறந்த சன்மார்க்கத்தை யுடைய நபி ஆதமலை கிஸ்ஸலா, மவர்களின், தெய்வீகம் தங்கிய சந்திரனை நிகர்த்த வதனத்தைப்பார்த்து வான லோகம் பூலோகம் மற்றுள்ள யாவற்றையும் சிருட்டித்தவனை அல்லாகு சுபுகானகு வத்த ஆலா வானவன் என்னைப் படைத்

து உங்களிடத்தில் வரும்படி கற்பித்தான் அம்மார்க்கத்தினுல் வந்து சேர்ந்தே னென்றுதங்களின் அழ கான துபிரகாசிக்கின்ற பவளத்தை யொத்த வாயினுற் கூறினுர்கள். (கசு)

செப்பிய மாற்றங் கேட்டு ரோமங்கள் சிலிர்த்துப் பூரித்
தப்பொழு திறையைப் போற்றி யாதம்ஹவ் வாவை நோக்கி
மைப்படுங் கரிய கூந்தன் மடமயில் வடிவுட் கொண்டு
துப்புறை யமுதந் துய்ப்பத் தொடுவதற் கொருமித் தாரே.

(இ-ள்.) அவ்வாறு கூறிய வார்த்தைகளைநபி ஆதமலைகிஸ்ஸலா மவர்கள் தங்களின் காதுகளினுற் கேள்வி யுற்றுஉரோமங்கள்சிலிர்க் கப் பெற்று உடலான துபூரித்து அக்கச்சமயத்தில் இறைவனுனஹ க்கு சுபுகானகு வத்த ஆலாவைத் துதித்துபீவி ஹவ்வா அலைகிஸ்ஸ லா மவர்களைப் பார்த்து மேகங்க ளானவை படுந் தன்மையைக்கொ ண்ட கரியகூந்தலையும் இளமயில் போலும்சாயலையுமுடைய அவர்க ளினது வடிவத்தை மனசின்கண்கொண்டு செங்கிறந் தங்கிய அதரத் தினது அமுதத்தை அனுபவிக்கும் வண்ணம் தீண்டுவதற்கு மன மொன்று பட்டார்கள். (உ௦)

பகாருங் குணமுந் திவ்ய பரிமள மணமு மாருச்
சிகாமு மயங்க வெற்றி திகழ்தரு புயமு நோக்கி
நிகாறங் குரிசி லேகன் னிலைபெறு வாழ்வே யென்றன்
மகரினைத் தருக பின்னர் வருகவென் றுரைத்திட் டாரே.

(இ-ள்.) அவ்வாறு ஒன்று பட ஹவ்வா அலைகிஸ்ஸமா மவர்கள் நபி ஆதமலைகிஸ்ஸலாமவர்களின் சொல்லுதற்கருமை யான குணத் தையும் மேலான பரிமளத்தினது வாசனையையும்நீங்காத மலைகளும் மயங்கும் வண்ணம் விஜபமானதுபிரகாசிக்கப்பட்ட தோள்களையும் பார்த்து ஒப்புச் சொலலுதற் கரிய பெருமையிற் சிறந்தவரே! நல்ல நிலைமையைப் பெற்ற வாழ் வானவரே! எனது மகரைத் தருவீராக பின்னர் என் னிடம் வருவீராக என்று கூறினுர்கள். (உக)

கேட்டனர் மகரென் றுதங் கிலேசமுற் றிறைபாற் கெஞ்சி
வாட்டமில் லவனே யெந்த வகைமகர் கொடுப்ப தென்றுர்
நாட்டிய புகழ்சேர் மக்க முஃம்மது நபிதம் பேரிற்
சூட்டிய சலவாத் திரைந் துரைமெனவிறைவன்சொன்னுன்.

(இ-ள்.) யாவர்க்கும் மூல பிதா வான நபி ஆத மலி கிஸ்ஸலா மவர்கள் பீவி ஹவ்வா அலைகிஸ்ஸலா மவர்கள் அவ்வாறு மகர் கேட்

டார்களென்று அச்சமடைந்து இறைவனை அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் சந்நிதானத்திற்கெஞ்சியாதொருவாட்டமுமில்லாத கடவுளே! மகரானது எந்த விதத்திற் கொடுப்பது என்றுகேட்டார்கள், அதற்கு இறைவனை அவ் வாண்டவன்நிலை நிறுத்தப் பெற்ற கீர்த்தி யானது பொருந்திய திரு மக்கமா நகரத்தினது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் பேரில் சூட்டுகின்ற பத்துச்சலவாத்தைக் கூறுமென்று கூறினன்.()

மதிக்கதிர் விலக்குஞ் சோதி முகம்மதின் சலவாத் தோத
விதித்தன னிறையென் றுதம்விளங்கொளிச் சலவாத்தோதித்
துதித்தனர் ஹவ்வா கேட்டுச் சோபன மகர்பெற் றேனென்
றிதத்திதமித்து நெஞ்ச மிருங்களிப் பேறி னரே.

(இ-ள்.) நபி ஆதமலைகிஸ்ஸலாமவர்கள் இறைவனுகிய ஜல்லஜலாலகு வத்த ஆலா வானவன்சந்திர கலைகளை அகற்றுநிற்கும் பிரகாசத்தைக் கொண்ட நாயகம் நபிகட் பெருமானுர் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் சலவாத்தைக் கூற, அவ்வாறு கற்பித்தானென்று இலங்குகின்ற ஒளிவையுடைய சலவாத்தைக் கூறிப் புகழ்ந்தார்கள். அதை ஹவ்வர அலைசிஸ்ஸலா மவர்கள் காதுகளினுற் கேள்வி யுற்றுசோபனத்தைக் கொண்ட மகரைப் பெற்றேனென்று சொல்லி இனிமை யுடன்ஒன்றுபட்டு மனத்தின்கண் பெரிய சந்தோஷ மானது அதிகரிக்கப் பெற்றுர்கள். (௨௩)

கடிமலர்க் கொடியுஞ் செவ்விக் கற்பகத் தருவும்போலப்
பிடிநடை மயிலும் வெற்றி பெறுந்திற லரசுங் காம
மிடையறு தமிர்த போக மினிதுண்டு களித்துப் பொங்கி
வடிவுறு மின்ப வெள்ள வாரிக்கு ளழுந்தி னரே.

(இ-ள்.) அன்றியும், பெட்டை யானை போலும் நடையையும் மயிலினது சாயலை யொத்த சாயலையு முடையபீவி ஹவ்வா அலைகிஸ்ஸலாமவர்களும் விஜயத்தைப்பெற்ற வல்லமையையுடைய அரசராகிய நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்களும் பரிமளத்தைக் கொண்ட புஷ்பங்களை யுடைய கொடியையும் அழகிய கற்பகச் சோலையையும் போல ஆசை யினது அமிர்த போகத்தை இனிமையுட னுண்டு சந்தோஷித்து ஓங்கி அழகுபொருந்திய இன்பநீரை யுடைய சமுத்திரத்திற்ககம் அழுந்தினர்கள். (௨௪)

துறக்கநன் னகரிற் சேர்ந்து சுகமனு பவிக்கு மாத
மறக்கரும் பொருளே வேதம் வருமுறைக் குரிய கோவே
பெறற்கருஞ் சுவன வானோ ரனைவரும்பெரிது கூண்டென்
புறக்கணி னிருப்ப தென்னோ புகலென புகல லுற்றான்.

(இ-ள்.) நன்மை பொருந்திய சொர்க்க லோகத்திற் போய்ச் சேர்ந்து அவ்வாறு சுகத்தை அனுபவிக்கும் நபி ஆதமலை கிஸ்ஸலாமவர்கள் மறத்தற் கருமை யான வஸ்துவே! வேதங்கள் வரா நிற்கும் மார்க்கத்திற்குச் சொந்தமான அரசாகிய ஆண்டவனே! அடையுதற் கரிய இந்தச் சுவர்க்க லோகத்தினது தேவர்களான மலாயிக்கத்து மார்கள் யாவரும்பெரிதாகக்கூடி எனதுபுறத்தினிடத்து இருக்கும் காரணம் யாது? கூறுவாயாக வென்று கேட்க; அதற்கு ஹக்கு சுபு கானகு வத்த ஆலாவும் கூறத் தொடங்கினான். (௨௫)

நிதமழ கொழுகி வாச நிறைந்தமெய் முகம்ம தென்னு
முதிர்கதிர் விளங்கி நுந்த முதுகிடத் திருக்கை யாலே
பதவியி னரிய விண்ணோ ரெண்ணிலாப் பகுப்புக் கூடி
யிதமுறத் தெரிசிக் கின்றா ரென்றன னென்று முள்ளோன்.

(இ-ள்.) எக் காலமு முள்ளவ னான ஜல்ல ஷகுனகுவத்த ஆலாவானவன் பிரதி தினமும் அழகானது சிந்திப் பரிமளம் நிறையப் பெற்ற திருமேனியை யுடையநாயகம் நபிமுகம்மதுமுஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மென்னும் முதிர்ந்தஒளி வானது உமது முதுகின்கண் பிரகாசித்துக் கொண்டு யிருப்பதினால் முத்தியினது அருமையான கணக்கற்ற தேவர்க ளாகிய மலாயிக்கத்து மார்களின் பகுதிகள் ஒன்று சேர்ந்து இனிமை பொருந்தும் படி தெரிசிக்கின் றார்களென்று கூறினான். (௨௬)

மருள்கடிந் தறிவு பொங்கு முகம்மதி னொளியையென்மு
னருள்கவென் றிருகை யேந்தி யாதநன் னபியுங் கேட்கப்
பெரியவன் கருணை கூர்ந்து பெறுமுறை யிதுகொ லென்ன
நெரிநடுப் புருவக் கான்மே னெற்றியி லொளிரச் செய்தான்.

(இ-ள்.) அவ்வாறு கூறவே நல்லநபி யாகிய ஆதமலை கிஸ்ஸலாமவர்களும் மயக்கத்தை நீக்கி அறி வானது ஓங்காநிற்கும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா ஹபீபு றப்பில் ஆலமீன் றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் ஒளிவை எனது முன்னால் தருவாயாக வென்று இரண்டு கைகளையுமுயர்த்திக் கேட்கப்பெரியவ னான அல்

லாகு சுபுகானகு வத்தஆலா வானவன் கிருபைகூர்ந்து அவ்வொளி வைப் பெறுமுறைமை யானது இது வென்று நெரிக்கின்ற நடுப்புரு வக் காலின்மேல் நெற்றியி னிடத்துப் பிரகாசிக்கும் வண்ணஞ் செய்தான். (உஎ)

எழுசீர்க்கழிநெடிலடிமாசிரியவிருத்தம்.

தாதவிழ் மலர்த்தா ராதநபி னுதலிற்
றண்ணெனுங் கதிர்கள்விட் டொழுகுஞ்
சோதியைத் தெரிசித் தமரர்க ளணுவுந்
தோன்றுதற் கிடமற நெருங்கிக்
கோதறப் பெருகி முன்னிலை திரண்ட
குழுவினைக் கண்டுகண் குளிர்ந்து
மாதவம் பெற்றே னெனமன மகிழ்ச்சி
வாரியிற் குளிந்தன ரன்றே.

(இ-ள்.) மகரந்தங்களைக் கொண்ட மலர்ந்த புஷ்ப மாலைகளை யுடைய நபி ஆதமலை கிஸ்ஸலாமவர்களினது நல்லநெற்றியி னிடத்துக் குளிர்ச்சி தங்கிய கிரணங்களைவிட்டு ஒழுகாநிற்கும் ஒளிவைத் தேவர்களாகிய மலாயிக்கத்துமார்கள் அணுப் போலும் தோன்று தற்கு இட மில்லாது செறிந்து களங்க மற அதிகரித்து முகதாவித் தெரிசித்து கூடிய கூட்டத்தை அந்நபி யவர்கள் பார்த்துக்கணகளா னவைக் குளிர்த லுற்று யான் மகா தவத்தைப் பெற்றே னென்று சொல்லிஇருதயத்தினது சந்தோஷசாகரத்தில் மூழ்கினார்கள் (உஅ)

அறவரி தான காட்சியும் பேறு
மமரர்க ளியாவரும் பெற்று
றிறைவனே யானும் பெறுவதற் கென்க
ணிடத்தினிற் றெரிகிலே னென்றார்
நிறைநடு வாகி யுலகெலா நிறைந்த
நெடியவ னினிதருள் புரிந்து
விறல்புரி யாதம் வலதுகைக் கலிமா
விரலகத் திடத்தில்வைத் தனனே.

(இ-ள்.) அன்றியும், இறைவ னாகிய ஆண்டவனே! அண்டர்க ளான மலாயிக்கத்துமார்கள் அனைவரும் மிகவும் அரிய காட்சியை யும் பேற்றையும்பெற்றார்கள். நானும் அவ்விதம் பெறுவதற்கு அவ் வொளிவை எனது கண்களி னிடத்திற்காண்கிலே னென்று சொன்

னூர்கள். துலாக்கோலினது மத்தியத்தை நிகர்த்து எல்லாவுலகங்களி லும் பூரணப் பட்ட செடிபவ னைஹக்கு சுபுகானகுவத்த ஆலாவா னவன் இனிமையோடுங்கிருபை செய்துவல்லமையைச் செய்யாநிற் கும் நபி ஆத மலை ஹிஸ்ஸலாமவர்களின்வலதுகாத்தினது கலிமாவிர லின் நகத்தின் கண் வைத்தான். (உகூ)

வரிக்சுரும் பலர்த்தி நறைவிரி துருக்க
மருவுபொற் புயத்தெழி லாதம்
விரித்தக மகிழ்ச்சி பெருக்கியென் முதுகில்
விளங்கொளி யின்னமு முளவோ
தெரித்தருள் புரியென் றிறையுடன் மொழியச்
செவ்விய முகம்மது நபித
முரித்துணை தோழர் நால்வருண் டவர்த
மொளியுள வெனவுரைத் தனனே.

(இ-ள்.) அவ்வாறு வைக்கவே இரேகைகளைக்கொண்ட வண்டு களானவை மலரும்படி செய்து பரிமளத்தை விரித்த குங்குமப் புஷ்பத்தினாலான மாலைகள் பொருந்திய சிறந்த தோள்களை யுடைய அழகிய நபி ஆதமலை கிஸ்ஸலாமவர்கள் உள்ளக் களிப்பை விரியச் செய்து அதிகப் படுத்தி இறைவனை அல்லாகு சுபுகானகு வத்த ஆலா வுடன்எனது முதுகின்கண்பிரகாசிக்கின்ற ஒளிவானது இன் னமும் முளதா? அதை எனக்குத் தெரிய லாக்கிக் கிருபை புரிவா யென்று கூற அழகிய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்களின் சொந்தமாகிய துணைவரான நேசர்கள் நால்வர்க ளுள்ளர் அவர்களின் ஒளி வுண்டுமென்று கூறினான். (௩௰)

அப்பெரும் பெயர்க ளுன்குபே ரொளியு
மகுமதி னொளியடுத் திருப்ப
வைப்பையென் விரல்க ளுன்கினு மென்ன
வல்லவ னவ்வழி யமைத்தான்
மெய்ப்பெருங் கலிமா விரனடு விரன்மென்
விரற்சிறு விரற்பெரு விரல்க
ளிப்படி விரல்க ளோக்கினு மைவர்
விளங்கொளி புகிரிலங் கினவே.

(இ-ள்.) அவ்விதங்கூற நபிஆதமலைகிஸ்ஸலாமவர்கள் அந்தப் பெருமையை யுடைய நான்குபேர்களினதுபெரியஒளியையும் அஹ

மதென்னுந் திருநாமத்தையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் ஒளிவைச் சமீபித்தி ருக்கும்படி எனது விரல்கள் நான்கிலும் வைப்பாயாகவென்று சொல்ல, வல்லவனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவும் அவ்வாறு செய் தான். மென்மையாகிய செம்மையையுடைய கலிமா விரல் நடுவிரல், மென்விரல், சிறுவிரல், பெரு விரல்களாகிய இந்தப்படி ஐந்து விரல் களிலும் அந்நால்வர்களினது பிரகாசிக்கின்ற ஒளிகளானவை இரு ந்து பிரகாசித்தன. (கூசு)

பகுத்தொளி விரிக்கு நகத்தொளி யிருக்கும்
  பண்புகண் டதிசயித் தாதந
மகத்தினின் மகிழ்ந்து கண்ணிணை மலரி
  னடிக்கடி வைத்துவாய் முத்தி
மிகுத்திடும் வரிசை நபிசல வாத்தை
  விளக்கிவாய் மருதெடுத் தோதி
வகுத்தவல் லவனைப் பணிந்துவா னகத்தில்
  வாழ்ந்தினி திருக்குமந் நாளில்.

(இ-ள்.) நபிஆதம் அலைகிஸ்ஸலாமவர்கள் பிரித்துப்பிரகாசத்தைப் பரப்பாநிற்கும் நகத்தினது ஒளிவுகள் இருக்கின்ற தகுதியைப் பார் த்து ஆச்சரியப்பட்டு மனசின்கண் சந்தோஷித்து இணையாகிய இர ண்டு கண்களென்னும் புஷ்பங்களில் அடிக்கடிவைத்து வாயினால் முத்தி அதிக வரிசையையுடைய நாயகம் நபிகட் பெருமான் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் சலவாத்தை விளங்கச்செய்து வாயினால் மாருது எடுத்துச்சொல்லி யாவற்றையும் சிருட்டித்த வல்லவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவைத்தொழுது வானலோகத்தின்கண் வாழ்ந்திருக்கின்ற அந் தக் காலத்தில். (கூஉ)

மிக்கெழி லாத மேலவன் விதித்த
  விலகலைப் பொருந்தின் படியா
லக்கையின் விரல்க ளொளிவுமுன் னிருந்த
  வணியணி முதுகிடத் தாகித்
துக்கமு மிகுந்து சுவர்க்கமு மிழந்து
  தொல்லுல கடைந்துவெவ் வேறு
திக்கினின் மயங்கி யிருவரு மலைத்துத்
  தீவினைக் குரியவ ரானார்.

(இ-ள்.) மிகுந்த அழகை யுடைய நபி ஆதமலை கிஸ்ஸலாமவர்கள் மேலவ ஞகிய ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவானவன் கற்பித்த சிரல்களைப்பொருந்தின படியால் அந்தக் கையினதுவிரற்களின்நகத்திலுள்ள ஒளிவுகள் முன்னர் இருந்த பெருமையைப் பூண்ட முதுகின் கண்ணுகித் துன்பமும் அதிகரித்து இருவர்களும்சுவர்க்கலோகத்தையும் இழக்கப் பெற்றுப் பழய இந்தப் பூலோகத்தின்கண் வந்து சேர்ந்து வேறு வேருன திசைகளில் மயக்க முற்றுத் தடுமாறிக் கொடிய செய்கைகளுக் குரியவர்க ளானுர்கள் (௩௩)

ஆதியே ஹக்கா றப்பனு விறையே
யழிவிலாப் பேரின்ப வாழ்வே
நீதியே யெனவும் பலதாந் தவுபா
நிகழ்த்தியுந் துன்பம்விட் டொழியாப்
போதிலே யெனது முதுகிடத் துயர்ந்த
பொருளொளிச் சிறப்பினும் பொருட்டாற்
சோதியே தவுபாத் தனைக்கபூ லாக்கென்
றுரைத்தனர் சுடர்முடி யாதாம்.

(இ-ள்.) அவ்விதம், ஆகிய பிரகாசத்தைக்கொண்டகிரீடத்தைத் தரித்த நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்கள் யாவற்றிற்கு முதன்மையனுன நாயகனே ! ஹக்கனே ! றப்பனே ! இறைவனே ! ஒரு காலத்தும் அழியாத பெரிய இன்பத்தை யுடைய வாழ்வே ; நீதியே ! எனவும் பல தடவை தௌபாச் செய்து கூறியும் வருத்த மானது விட்டு நீங்காத சமயத்தில் எனது முதுகின்கண் தங்கிய பொரு ளான நாயகம் நபி மூகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் ஒளிவின் சிறப்பினது காரணத்தினுல் சோதி யாகிய ஆண்டவனே ! எனது தௌபாவைக் கபூல் செய்யென்று கூறினுர்கள்.

நறைதரு மறுவி கமழ்முகம் மதுநந்
நபிதிருப் பெயர்சொலும் பொருட்டா
லிறைவனு மாதஞ் செயுந்தவு பாவுக்
கிசைந்தினி துறக்கபூ லாக்க
வுறைதரு துன்ப மனைத்தையும் போக்கி
யூழ்வினை பின்புமொன் ருக்க
மறுமதி யகடு தொடுமுடி யறபா
மலையினி லிருவருஞ் சேர்ந்தார்.

(இ-ள்.) வாசனையைத் தராநிற்கும் கஸ்தூரியானது பரிமளிக்கப் பெற்ற காத்திரத்தை யுடைய நமது நாயகம் நபிகட் பெருமானார் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் தெய்வீகந் தங்கிய அபிதானத்தை அவ்வாறு கூறிய காரணத்தினால் இறைவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவும் நபி ஆதிமலைகிஸ் ஸலாமவர்கள் செய்கின்ற தௌபாவுக்குப் பொருந்தி இனிமையுறும் படி கபூல் செய்யத் தங்களில் உறைப் பெற்ற வருத்தங்களெல்லாவற் றையும் ஒழித்துப் பின்னரும் ஊழ் வினையானது ஒன்றாக்கக் களங்க த்தைக் கொண்ட சந்திரனது அகட்டைத் தீஸ்டுஞ்சிகரத்தையுடை ய அறபா மலையி னிடத்து இருவருங் கூடினார்கள். (ருடு)

கூடிய விருவர் தாமுஞ்சுத் தாவிற்
குடியிருந் திருபது சூலி
னூடிய பொருட்போ னாற்பது பெயரை
நன்குறப் பெற்றதின் பின்னர்
சூடிய கிரீட பதிநபி யமரர்
துரைகளு யகமெனு மிறசூல்
நீடிய வொளிவு சிறந்தொரு சூலி
னிலமிசைச் சீதுதித் தனரே.

(இ-ள்.) அவ்வாறு கூடிய நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்களும் பீவி ஹவ்வா அலைகிஸ்ஸலா மவர்களும் சுத்தா வென்னும் நகரத்தில் குடியாகத் தங்கியிருந்து விரும்பிய திரவியத்தைப்போலும் இருபது சூலில் நாற்பதுபேர்களை நன்மை பொருந்தும் படி பெற்றதின் பின் னர் மகுடத்தைத் தரித்த மன்னவ ராகிய நபிமார்களுக்கும் தேவர்க ளுக்குந் துரைக ளான நாயகமென்று கூறும்நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் நீட்சியைக் கொண்ட ஒளி வானது சிறப் புற்று ஒரு சூலில் சீது உலைகிஸ்ஸலா மவர்கள் இந்தப் பூலோகத்தின்கண் அவதரித்தார்கள். (ருசு)

மருமலர்த் திணிதோ ணிறைமதி வதன
முகம்மதின் பேரொளி யிலங்கித்
தெரிமறை யாத மக்களிற் சிறந்த
சீதுவி னிடத்திருந் ததனாற்
பரிவுறு நபிப்பட்டமும்வரப் பெற்றுப்
பல்கலைக் குரிசிலென் றேத்த
வரியவன் கொடுத்த வரிசைக ணிறைந்த
வைம்பது சுகுபிறங் கியதே.

(இ-ள்.) வாசனையைக் கொண்ட புஷ்ப மாலைகளைத் தரித்த திண்ணிய தோள்களையும் பூரணச்சந்திரன்போலும் முகத்தையுமுடையநாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் பெரிய ஒளிவானது பிரகாசித்து வேதங்களை யுணர்ந்த நபி ஆதமலை கிஸ்ஸலா மவர்களின் புத்திரர்களில் சிறப்புத் தங்கிய சீது அலைகிஸ்ஸலா மவர்க ளிடத்தில் இருந்ததனால் அவர்களுக்கு அன்பு பொருந்திய நபிப்பட்டமும் ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் சந்நிதானத் திருந்து வரப் பெற்றுப் பல வேத நூற்களினது குரிசி லென்று துதிக்கும் வண்ணம் அரியவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலா வானவன் கொடுத்த நிறைந்த வரிசைகளில் ஐம்பதுசுக புகளும் இறங்கின. (கஎ)

சீதுவி னிடத்தி னிருந்தவர் மதலை
சிறந்தமா மணிமுடிக் குரிசின்
மாதவர் கமல வதனயா னுசுதம்
வயினுறைந் திருந்தணி சிறந்து
தாதவிழ் மலர்த்தார்க் குங்குமக் கலவைத்
தடப்புயர் யானுசு தருகார்
நீதிசேர் ஹயினு னிடத்தினி லிருந்து
நிலைபெற விளங்கிய தன்றே.

(இ-ள்,) சீது அலைகிஸ்ஸலா மவர்களினிடத்து அவ்வாறுதங்கியிருந்து அவர்களின் மகனான சிறப்புத்தங்கிய மகத் தாகிய இரத்தினங்கள பதிக்கப் பெற்ற கிரீடத்தை யுடைய குரிசி லென்னும் மகா தவத்தினது தாமரை மலர் போலும்முகத்தை யுடைய யானூசென்பவரின் பக்கத்தில் தங்கி யிருந்து அழ கானது சிறக்கப் பெற்றுமகரந்தங்களைக்கொண்ட மலர்ந்த புஷ்பமாலைகளையும் குங்குமத்தினது கலவைச் சாந்தையும் பொருந்தியபெரிய தோள்களையுடையவரான அந்த யானூசென்பவர்இவ் வுலகத்தின்கண்தந்த மேகத்தை நிகர்த்த நிதியை யுடைய ஹயினு னென்பவ ரிடத்திலிருந்து அவ்வொளிவான நிலைமை பெறும் வண்ணம் பிரகாசித்தது. (கஅ)

தண்மணிக் கதிர்விட் டெறிக்கும்வெண் கவிகைத்
தடவரை மணிப்புய ஹயினன்
கண்மணி மகுலீ லிடத்தினி லிருந்து
கவின்குடி கொண்டெழுந் தோங்கி

வெண்மணித் தரளத் தொடைப்புய மகுலீல்
வேந்தருக் குற்றசே யெனவா
மூண்மைநன் னெறிசே ரெறுதுவி னிடத்தி
னுறைந்தினி திலங்கிய தன்றே.

(இ-ள்.) குளிர்ச்சி தங்கிய இரத்தினங்களின் பிரகாசத்தைவிட்டு வீசாநிற்கும் வெள்ளிய கொடையையும், பெரிய மலைகளை நிகர்த்த அழகிய தோள்களையுமுடைய ஹயினுன் என்பவரின் கண்களினது மணியை யொத்த மகுலீ லென்பவரி னிடத்தில் அவ்வொளி வான திருந்து அழகானது குடிகொண்டு எழும்பி அதிகரித்து வெள்ளிய மணி யாகிய முத்து மாலைகளைத் தரித்த தோள்களை யுடைய அந்த மகுலீ லென்னும் மன்னவருக்குப்பொருந்திய புத்திரரென்றுசொல் லும்படி வாழ்ந்து நல்லசத்தியத்தினது சன்மார்க்கஞ் சேர்ந்த எறு தென்பவரி னிடத்தில் தங்கி இனிமையுடன் பிரகாசித்தது. (௬௯)

வடவரை குலுங்க நடமிடு துரங்க
மன்னவ ரெறுதுதம் மதலை
கடகரிக் குவட்டி னிணையெனப் பணைத்த
கதிர்முலைத் துடியிடை மடவார்
விடமெனக்கரிய கொலைவிழிக் கணங்கள்
வீற்றிருந் திடுமலர்ப் புயத்தா
ரிடிமுர சதிரு முன்றிலா ருகுநா
கிடத்தினி திருந்திலங் கியதே.

(இ-ள்.) மகா மேருப் பருவதமானது குலுங்கும்வண்ணம்நடன மிடுகின்ற குதிரைகளையுடைய அரசரான அந்த எறுதென்பவரின் புத்திரரும் மதத்தைப்பொழிகின்ற யானைகளின் கொம்பினது இணை யென்று கூறும்படி பருத்த ஒள்ளிய முலைகளையும் உடுக்கைபோலும் இடையையுமுடைய மாதர்களின் விஷத்தைநிகர்த்த கரிய நிறத்தை யுடைய கொலைத் தொழிலிற் பழகிய கண்களினது கூட்டங்கள் வீறுடன் தங்கி யிருக்கும் புஷ்பமாலைகளை யணிந்த தோள்களையுடை யவரும் இடியைப் போன்ற முரச மானது ஒலிக்கின்றமுற்றத்தை யுடையவரு மான உகுநா கென்பவ ரிடத்தில் அவ் வொளிவானது இருந்து பிரகாசித்தது. (௭0)

கடலெனத் தானை யரசர்வந் தீண்டிக்
 கைகுவித் திருபுற நெருங்கச்
சுடர்மணித் தவிசி னுயர்ந்தர சியற்றிச்
 சுருதிநே ருறையுகு றாகு
புடையிருந் தவர்செய் யறமெலாந் திரண்டோர்
 புத்திர வடிவெடுத் தென்ன
விடுகொடை கவிப்பப் புரந்தசே யிதுரீ
 சிடத்தினி னிறைந்திருந் ததுவே.

(இ-ள்.) சமுத்திரத்தைப் போலும் சேனைகளை யுடைய மன்னவர்கள் வந்து கூடித்தங்களின் கரங்களைக் குவியச் செய்து இரண்டு பக்கங்களிலும் செறியும் வண்ணம் பிரகாசத்தைக் கொண்ட இரத்தினங்களைப் பதிக்கப் பெற்ற சிங்காசனத்தின் மீதுஓங்கி அரசுசெய்து வேதங்களினது ஒழுங்கில் தங்கி யிருந்த அந்த உகுறு கென்பவரிடத்தி லிருந்து அவர்செய்த புண்ணியங்கள் அனைத்துங் கூடி ஓர் புத்திரரின் சொருபத்தை எடுத்தாற்போன்று இடுகின்ற சந்திரவட்டக் குடையானது கவிக்கும் வண்ணம் அரசாட்சி செய்த மைந்தர் நபி இதுரீசு அலைகிஸ்ஸலா மவர்களிடத்தில் பூரணப் பட்டிருந்தது.

நன்னெறி நபினு ரொளியிருந் ததனு
 னபியெனும் பட்டமும் பெறலா
யுன்னுதற் கரிய முப்பது சுகுபு
 முடையவ னருளினு லிறங்கிப்
பன்னிய வுலகத் தொழிலெவை யவைக்கும்
 பரிவுறு முதன்மையே யிவரென்
றெந்நிலங் களுக்கும் பெயர்பெற வரசா
 யிருந்திட வியற்றிய தன்றே.

(இ-ள்.) நல்ல சன்மார்க்கத்தை யுடைய நபினு ரான நாயகம் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் ஒளி வானது அவ்வாறு தங்கியிருந்ததினுல் நபி யென்று கூறும் பட்டமும் பெற்றுயாவற்றையும் சொந்தமா யுடையவனுகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவினது கிருபையால் முப்பது சுகுபு மிறங்கிச் சொல்லுகின்ற இவ் வுலகத்தினது தொழில்கள் யாவற்றிற்கும் அன்பு பொருந்திய முதன்மை யானவர்

இந்த இதுரீசு அலைகிஸ்ஸலா மவர்களென்று கீர்த்திபெறும் வண்ணம் எங்நிலங்களுக்கும் அரசாக இருப்பதற்குச் செய்தது. (சஉ)

மெய்த்தவக் குருசி னபியிது ரீசு
விருப்புற வுற்றநன் மதலை
யுத்தமர் மத்தூ சல்குதம் மிடத்தவ்
வொளியுறைந் துலகெலா மிறைஞ்ச
வைத்தபின் மத்தூ சல்குதம் மைந்தர்
மடந்தையர் மடலெடுத் தேந்தச்
சித்திரக் கவின்பெற் றிருந்தலா மக்கு
வயின்சிறந் திலங்குமவ் வொளியே.

(இ-ள்.) சத்திய தவத்தைக் கொண்ட குரிசிலான அந்த நபி இதுரீசு அலைகிஸ்ஸலா மவர்கள் விருப்ப மடையும்வண்ணம் இவ்வுலகத்தின்கண் தோற்றமாகிய நல்ல புதல்வரான மேன்மையர் மத்தூசல்கு என்பவரிடத்தில் அந்நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் ஒளிவானது தங்கி எல்லா உலகங்களும் வணங்கும்படி வைத்த பின்னர் அந்த மத்தூசல் கென்பவரின் புத்திரராகிய பெண்களானவர் மடலெடுத்துத் தாங்கும் வண்ணம் ஆச்சரியமான அழகை யடைந் துறைந்தா லமக்கென்பவரிடத்தில் அவ்வொளி வானது சிறப்புற்றுப் பிரகாசித்தது.

தருமநன் னெறியா லுலகெலாம் புரக்கத்
தகும்புக ழானலா மக்குத்
திருமக நூகு வயினுறைந் திருந்து
சிறந்தபே ரொளியினு லவர்க்குப்
பெருகிய நபிப்பட் டமுமிகப் பெறலாய்ப்
பிரளயப் பெருக்கெடுத் தெறியுங்
கருநிறக் கடல்வங் கமுங்கவி ழாது
காட்சியாய்க் கலாசுபெற் றதுவே.

(இ-ள்.) நல்ல புண்ணியத்தினது சன்மார்க்கத்தினுல் இவ்வுலகமுழுவதையும் அரசாட்சி செய்யத்தகுந்த கீர்த்தியான அந்தலாமக்கு என்பவரின் தெய்வீகந்தங்கிய புத்திரர் நபிநூகு அலைகிஸ்ஸலா மவர்களி னிடத்துத் தங்கி யிருந்து சிறப்புற்ற பெரிய அநதவொளியினுல் அவர்களுக்கு மிக ஓங்கிய நபிப் பட்டமும் அடைதலாகிப்

பிரளயத்தினது நீர்ப் பெருக்கை எடுத்து வீசாநிற்கும் கரிய நிறத்தை யுடைய சமுத்திரத்தில் மரக்கலமும் கவிழாது ஆச்சரியமாக அதை விட்டும் சலாசுபெற்றது. (சுசு)

வரிசையு மிமையோர் துதிசெயும் பரிசும்
வரப்பெறு நூகுதம் மதலை
தரைபுகழ்ந் தேத்தச் சாமிடத் திருந்து
தனபதி கனபதி யாக்கிக்
கருவிளை விழியார் கவரிகா லசைப்பக்
கனகசிங் காதனத் திருத்தி
விரிகட லுலகம் பொதுவறப் புரக்கும்
வேந்திவ ரெனவியற் றியதே.

(இ-ள்.) வரிசையும் தேவர்களாகிய மலாயிக்கத்து மார்கள்போற்றுதல் செய்யும் பரிசும் வரப் பெற்ற நபிநூகு அலைகிஸ்ஸலாமவர்களின் புதல்வர் சாமென்பவரிடத்து இந்தப்பூலோகமானது துதித்தேத்தும்படி அவ்வொளி வானது இருந்து குபேர ராகவும் பெருமையையுடைய அரசராகவுஞ் செய்து குவளைப் புட்பத்தைப்போலும் கண்களையுடைய பெண்கள் சாமரத்தினல் காற்றை அசையும் வண்ணம் செய்யப் பொற் சிங்காதனத்தின்கண் இருக்கப்படுத்தி விரிந்த சமுத்திரத்தை யுடைய இப் பூமியைப் பொதுமையானதற அரசாட்சி செய்யும் அரசர் இவரென்று சொல்லச்செய்தது. (சரு)

ஷாமுதம் மதலை யறுபகு சதுமன்
றம்மிடத் தவதரித் திருந்து
தூமமும் புகழுந் தகரமுஞ் சாந்துந்
தோய்ந்திருண் டடர்ந்தபூங் குழலார்
காமுக ரெனச்செய் தணிமணிப் புயங்கள்
கண்கொளா தழகிருந் தொழுகு
மாமதக் களிற்ற ரறுபகு சதுமா
மதலைசா லகுவயி னடைந்த

(இ-ள்.) அந்த ஷாமு என்பவரின் புதல்வர் அறுபகுசதுமனென்பவரிடத்தில் அவ்வொளியானது தங்கியிருந்து அகிற்கட்டையினது புகையும் புழுகும் தகரமும் கலவைச்சாந்தும் தோயப்பெற்று இருண்டு நெருங்கிய அழகிய கூந்தலை யுடைய மாதர்களின் காமுக

றென்று கூறும்படி செய்து அழகிய மணித்தோள்கள் கண் கொள்ளாத அழகானது இருந்து பிரகாசிக்கும் பெரிய மதத்தைக்கொண்டயானைபோல்பவரான அந்த அறுபகு சதுமாவென்பவரின் புதல்வர் சாலகு என்பவரின் இடத்துச் சேர்ந்தது. (௬௬)

சாலகு தம்பா லடைந்துவாய் மைக்குந்
 தவத்திற்கும் பவுத்துக்கு மிவரே
மேலவ ரெனச்செய் திருந்தவர் மதலை
 வேந்தரை பறுவயின் புரந்து
காலடி மறைக்கக் கவிழ்மத மிறைக்குங்
 கடகரி யரசரை பறுசேய்
பாலகு வயின்வீற் றிருந்துல கெல்லாம்
 பரித்திடப் பண்புபெற் றதுவே.

(இ-ள்.) அந்தச் சாலகு என்பவரிடத்து அவ்வாறு சேர்ந்து சத்தியத்திற்கும் தவத்திற்கும் பவுத்திற்கும் இவரே மேலானவரென்று சொல்லும் படி செய்து இருந்து அவரின் புதல்வரான மன்னவர் ஐபறு என்பவரி னிடத்துப் புரந்து கால்களினது சுவடுகளை மறைக்கும் வண்ணம் கவிழ்கின்ற மதத்தை சொரியுங்கவுளைக்கொண்ட யானைகளை யுடைய மன்னவர் அந்த ஐபறு என்பவரின் புத்திரர் பாலகு என்பவ ரிடத்தில் அந்த வொளி வானது வீறுடன் தங்கிஉலக முழுவதையும் தாங்கும் படி தகுதி பெற்றிருந்தது. (௬௭)

தேன்கிடந் தொழுகுங் குங்குமத் தொடையற்
 செழும்புயர் பாலகு மதலை
வான்கிடந் தனைய மின்னொளிர் வடிவாண்
 மன்னர்முரு குவாவிடத் திருந்து
கூன்கிடந் தனைய பிறைகறைக் கோட்டுக்
 குஞ்சரத் தரசர்கை கூப்ப
மீன்கிடந் தலர்வான் மதியெனுங் கவிகை
 வேந்தர்வேந் தெனவிளைத் ததுவே.

(இ-ள்.) தேனானது கிடந்து ஒழுகப்பெற்ற குங்குமப் புஷ்பத்தினா லான மாலைகளை யணிந்த செழிய தோள்களை யுடையவ ராகிய அந்தப் பாலகு என்பவரின் மைந்தர் வானத்தின்கண் கிடப்பதை

யொத்த மின்ன லானது பிரகாசியாநிற்குங் கூர்மை தங்கிய வாளாயு தத்தையுடைய அரசரான ரூகுவா வென்பவ ரிடத்தில் அவ்வொளி வானது இருந்து கூனனது கிடந்ததைப் போன்ற இளஞ் சந்திரன் போலும் இரத்தக் கறையையுடைய கொம்புகளின் யானைக ளினது மன்னவர்கள் தங்களின் கைகளைக் குவித்துவணங்கும்படி நட்சத்திர ங்கள் கிடக்கப் பெற்று விரிந்த வான லோகத்தினது சந்திரனென்று கூறும் குடையையுடைய இராஜ ராஜ ரென்று சொல்லச் செய்தது.

வாரணி முரச மிடியெனக் கறங்கும்
 வாயிலார் ரூகுவா மதலை
தாரணி தருவா யுதித்தசா றூகு
 தம்மிடத் திருந்தெழில் சிறந்து
காரணக் குரிசி லானசா றூகு
 கண்ணிணை மணியென விளங்கு
மோரணிப் புயனா கூறிடத் துறைந்தங்
 கிலங்கிய தருமறை யொளியே.

(இ-ள்.) அருமை யாகிய வேதத்தை யுடைய அவ் வொளி யானது தோலினது வாரை அணியப் பெற்ற முரச மானது இடியைப் போலும் முழங்காநிற்கும் வாயிலை யுடையவ ரான அந்த ரூகுவா வென்பவரின் புத்திரர் புஷ்பங்களைத் தரித்த சோலையாய் இது வுல கத்தின்கண் தோற்ற மாகிய சாறூ கென்பவ ரிடத்தில் இருந்துஅழ கானது சிறக்கப் பெற்றுக் காரணத்தினது அரச ரானஅந்தச்சாறூ கென்பவரின் இரு கண்களினது மணியைப் போலப் பிரகாசிக்கும் அழகிய புஷ்பமாலையைத் தரித்த தோள்களை யடையவ ராகிய நாகூ றென்பவ ரிடத்தில் தங்கி யிருந்து விளங்கிற்று. (சகூ)

வெண்டிரை புரட்டுங் கருங்கட லுடுத்த
 மேதினிக் கரசென விளங்குந்
திண்டிற னாகூ றுதவிய மதலை
 செழும்புக ழாசறு வயின்வந்
தெண்டிசை முழுது மொருதனிச் செங்கோ
 லியற்றுவ திவரென வியற்றி
வண்டணி மலர்த்தா ராசறு தவத்தால்
 வருமொரு வடிவுறு மதலை,

(இ-ள்.) வெள்ளிய அலைகளைப் புரட்டாநிற்கும் கரிய சமுத்திரத்தைத் தனக்கு ஆடையாக உடுக்கப்பெற்ற இப் பூலோகத்திற்கு இராஜ ரென்று பிரகாசித்த திண்ணிய வலிமையைக் கொண்ட அந்தநாகூறென்பவர் தந்தமைந்தர் செழிய கீர்த்தியையுடைய ஆச றென்பவ ரிடத்தில் அவ்வொளியானது வந்து எட்டுத் திக்குகள் அடங்கலிலும் ஒப்பற்ற ஏகச்செங்கோல் செய்பவர் இவரென்று இயற்றி வண்டுகள் தங்கிய அழகிய புஷ்ப மாலையைப் பொருந்தியதோள்களை யுடையவராகிய அந்த ஆச றென்பவரின் தவத்தினால் வந்த ஒப்பற்ற வடிவத்தைப் பொருந்திய புதல்வர் (ரு0)

முருகவிழ் புயத்தார் நபியிபு ருகீ
  முன்னுறைந் திருந்தபே ரொளியாற்
கரிசமுங் கபடு மிடையறுக் கொடிய
  களைநமு றூதுசெய் வினையி
னெரியெழு நாவா லெண்டிசை தடவ
  வெழுந்திடப் பெருகிய நெருப்பு
மருவிரி கழுநீர் நறைசொரி வனச
  வாவியிற் குளிர்ந்தன வன்றே.

(இ-ள்.) தேனானது அவிழப் பெற்ற தோள்களை யுடையவரான நபி இபுறுகீம் அலைகிஸ்ஸலா மவர்க ளிடத்துத் தங்கி யிருந்த அந்தப் பெரிய ஒளியினால் கரிசமும்வஞ்சகமும் நீங்காத கொடுமையான குற்றத்தினது நமுறூ தென்னும்பெயரை யுடையவன் செய்த தீவினையினது எரியா நிற்கும் எழுகின்றநாவினால் எட்டுத்திக்குகளையும் தடவும் படி எழுந்திடப் பெருக்க முற்ற அக்கினி யானது வாசனை விரியப் பெற்ற ஆம்பலையும்பரிமளததைப் பொழிகின்ற தாமரையை யுமுடைய தடாகத்தைப் பார்க்கிலும் மிகக் குளிர்ந்தது (ருக)

தீனிலைக் குரிய நபியிபு றுகீம்
  செய்தவப் பலனொரு வடிவா
யினமி லிசுமா யீல்நபி யிடத்தி
  னிருந்திலங் கியவொளிப் பொருட்டால்
வானகத் தமரர் சுடர்விரி சுவன
  மடந்தைய ரினிதுவாழ்த் தெடுப்பக்
கானகு மலர்த்தார் செழுமணிக் கழுத்திற்
  கருவிவாய் தடவில வன்றே.

(இ-ள்.) தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமைக்குச்சொந்தமாகிய நபி இபுருகீம் அலைகிஸ்ஸலா மவர்கள் செய்த தவத்தின் பிரயோசனமானது ஓர் சொரூபமாய்வந்த குற்ற மில்லாத நபி இசுமாயீல் அலைகிஸ்ஸலாமவர்க ளிடத்தில் அவ்வொளி யானது தங்கி யிருந்து பிரகாசித்த காரணத்தினுல் வான லோகத்தின்கண் ணுள்ள தேவர்களின் கிரணத்தைப் பரப்புகின்ற சுவர்க்க லோகத்தினது அரம்பையர்களாகிய கூறுலீன்கள்வாழ்த்தெடுக்கும்படி வாசனையானது இலங்கப் பெற்ற புஷ்புமாலையைத் தரித்த செழிய ஆபரணங்களைக் கொண்ட கழுத்தில் கத்தியின் நுதியானது தடவப் பெற்றிலது. ()

மன்னவ ரிசுமா யில்தரு மதலை
  மணிவிளக் கனையதா பித்து
தங்கிடத் திருந்து தரணியேழ் புரக்குந்
  தலைபதி நிலைபெற வியற்றி
மின்னவிர் மௌலி விளங்குதா பித்து
  வேந்தர்பெற் றெடுத்தமா மதலை
யிங்கிலம் புகழு மெசுஹூபு வெனும்பே
  ரெடுத்தவ ரிடத்திலங் கியதே.

(இ-ள்) அரச ராகிய நபி இசுமாயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் இவ்வுலகத்தின்கண் தந்த புதல்வ ரான அழகிய தீபத்தை நிகர்த்த தாபித்தென்பவரிடத்தில் அவ்வொளிவானது தங்கி யிருந்து ஏழு பூமிகளையும் அரசாட்சி செய்யும் தலைமைத் தனத்தை யுடையஇராஜாய் நிலை பெறும் படி யாக்கி மின் னுனது பிரகாசிக்கின்ற கிரீடம் விளங்கிய அந்தத் தாபித் தென்னும் மன்னவர் பெற் றெடுத்த பெருமை பொருந்திய மைந்தர் இப் பூமியானது துதியாநிற்கும் எசுஹூபென்னும் அபிதானத்தை எடுத்தவரிடத்தி லிருந்து திகழ்ந்தது ()

உடல்பிளந் துயிருண் டுதிரங்கொப் பளித்து
  ணுணங்குவேற் கரரெசு ஹூபுதம்
பிடிநடை மடவாள் பெற்றெடுத் துவந்த
  பிள்ளையஃ றுபுவயி னிருந்து
கடல்கிளர்ந் தனைய தானையஃ றுபுதங்
  கண்மணி தயிறகு என்போ
ரிடமுற விருந்து நெடும்புகழ் விளக்கி
  யெழில்கனிந் திலங்கிய தன்றே.

(இ-ள்.) சரீரத்தைப் பிளக்கச் செய்து ஆவியை யருந்தி இரத்தத்தைக் கொப்பளித்து மாமிச மானது உணங்கப் பெற்ற வேலாயுதத்தைத் தாங்கிய கைகளை யுடையவ ரான அந்த எசுஹ பென்பவரின் பெட்டை யானை போலும் நடையைக் கொண்ட இளம்பருவத்தையுடைய நாயகி யானவர் ஈன்றெடுத்த விருப்ப முற்ற புத்திரர் எஃறு பென்பவரி னிடத்தில் அவ்வொளியானது தங்கியிருந்துசமுத்திரமானது கிளர்ந்ததை யொத்த படைகளையுடைய அந்த எஃறு பென்பவரின் கண்களினது மணியைப் போன்றமைந்தர் தயிறகென்பவரி னிடத்தில் பொருந்தும் படி யிருந்து நெடிய கீர்த்தியைச் செய்து அழகானது கனி வுற்றுப் பிரகாசித்தது. (ருச)

சந்தனந் திமிர்ந்து திரண்டமற் புயத்தார்
தயிறகு தருதிரு மதலை
கந்தெறி தறுகட் கரடமா வியானைக்
காவலர்க் கசனிநா கூறு
சுந்தர வதனத் திலங்கிட விருந்து
சொரிமழைச் செழுங்கைநா கூறு
மைந்தர்மிக் குவந்தம் மிடத்துறைந் திருந்து
மாட்சிபெற் றிலங்கிய தன்றே.

(இ-ள்.) சந்தனக் குழம்பைப் பூசப் பெற்றுத் திரட்சி யுற்ற வலிமையைக் கொண்ட தோள்களை யுடையவரான அந்த தயிறகென்பவர் இவ்வுலகத்தின்கண் தந்த தெய்வீகந் தங்கிய புதல்வர் கட்டுத்தறியை வீசாநிற்கும் அஞ்சாமையினது மதங்களை யுடைய பெரிய யானைகளின் அரசர்களுக்கு இடி யேற்றைப் போலும் நாகூ றென்பவரின் அழகிய முகத்தினிடத்து அவ்வொளி வானது தங்கியிருந்து பொழிகின்ற மேகத்தை நிகர்த்த செழிய கைகளை யுடைய அந்த நாகூ றென்பவரின் புத்திரர் மிக்குவ மென்பவ ரிடத்தில் தங்கி யிருந்து பெருமை பெற்றுப் பிரகாசித்தது. (ருரு)

மிக்குவ மெனும்பே ரரசுதம் மதலை
வெயில்விடு மணிமுடி யுதது
பக்கலி விருந்து செல்வமுஞ் செருக்கும்
பண்புறப் பெருக்கிட நிறைத்துத்

திக்கனைத் திறும்பேர் விளங்கிட விளங்கித்
திறற்பெறு முததுநன் மதலை
தக்கமெய்ப் புகழ்சே ரிருதிதி யதுஞன்
றம்மிடத் திருந்தெழி றழைத்த.

(இ-ள்.) மிக்குவ மென்று கூறும் அபிதானத்தை யுடைய மன்னவரின் மைந்தர் பிரகாசத்தை விடாநிற்கும் இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கிரீடத்தை யுடைய உததென்பவரி னிடத்தில் அவ்வொளி வானது தங்கி யிருந்து செல்வத்தையும் செருக்கையும் தகுதி யுறும் படி அதிகப் படப் பூரண மாக்கித் திசைக ளெல்லாவற்றிலும் கீர்த்தியானது விளங்கும் வண்ணம் விளக்க முற்று வலிமைபெற்ற அந்த உத தென்பவரின் நல்ல புத்திரர் தகுதி யாகிய நன்மையைக் கொண்ட கீர்த்தி பொருந்திய பெரிய திரவியத்தை யுடைய அதுனனென்பவ ரிடத்தி லிருந்து அழ கோங்கப் பெற்றது. (ருசு)

வெண்ணிலாவிரிக்கு மொருதனிக் குடைக்கீழ்
வேந்துசெய் தருள்புரி யதுனன்
கண்ணின்மா மணியா யுதித்திடு முஅத்து
கவின்பெற விருந்தவ ரிடத்தி
லெண்ணிலா வரச ரடிபணிந் திறைஞ்ச
வியற்றிய பேரொளி முஅத்து
புண்ணியப் பொருளா யுருவெடுத் துலகம்
புரந்தநி சாறிடத் துறைந்த.

(இ-ள்.) வெள்ளிய பிரகாசத்தைப் பரப்பாநிற்கும் ஒப்பற்ற ஒற்றைச் சந்திர வட்டக் குடையினது கீழிலுறைந்து அரசுசெய்து கிருபை புரிந்த அந்த அதுன னென்பவரின் கண்களினது மகத்தான மணியாக இவ் வுலகத்தின்கண் தோற்றமாகிய முஅத்தென்பவ ரிடத்தில் அழகு பெறும்படி தங்கி யிருந்து அவர்பால் கணக்கற்ற காவலர்கள் பாதங்களில் தாழ்ந்து வணங்கச் செய்த அந்தப் பெரிய ஒளிவானது அந்த முஅத் தென்பவரின் புண்ணியத்தினது பொருளாகச் சொருபத்தை யெடுக்கப் பெற்ற இப் பூமியை ஆண்ட நிசாறென்பவ ரிடத்தில் தங்கியது. (ருஎ)

ஒருகுடை நிழற்கீ ழிருநிலம் புரந்திட்
டுருமென மும்முர சதிரத்
திருநிறை நான்கு திக்கினுஞ் செங்கோற்
செலுத்திய நிசாறெனு மரசர்
பெருகிய நிலைமைக் குலக்கட லுப்பண்
பிறங்தெழுங் கதிரவ னெப்ப
வருமுகின் முலறு நபியிடத் துறைந்து
மகிதலம் புகழ்ந்திட விருந்த,

(இ-ள்.) ஒப்பற்ற சந்திர வட்டக் குடையின் கீழ் பெரிய இந்தப் பூமியை அரசாட்சி செய்து இடியைப்போலும் வீர முரசம், கொடை முரசம், மண முரசமென்னும் மூன்றும் முழங்கும் வண்ணம் செல்வமானது நிறையப் பெற்ற நான்கு திக்கிலும் செங்கோல் செலுத்திய அந்த நிசா றென்று கூறும் மன்னவரின் அதிகரித்த நிலைமையை யுடைய குல மாகிய சமுத்திரத்தினது மத்தியில் தோற்றமாய் எழாநிற்கும் சூரியனை நிகர்க்க வந்த மேகமாகிய நபி முலறு அலைகிஸ்ஸலா மவர்க ளிடத்தில் அவ்வொளி வானது தங்கி இப் பூலோகம் துதிக்கும் படி இருந்தது. (ருஅ)

அறிவெனுங் கடலாய் வரம்புபெற் றிருந்த
வருமறை முலறுநன் னபிக்குப்
பெறுபல னெனவந் துதித்தஇல் யாசு
நபியெனப் பேரொளி தங்கித்
துறவலர்க் கரசா யிருந்தஇல் யாசு
புத்திரர் பவுத்தெலா நிறைந்த
மறுமனர் குலக்கோ ளரியெனப் பிறந்த
மாமணி முதுறக்கத் தெனுமால்.

(இ-ள்.) அறி வென்னுஞ் சமுத்திரமாய் ஒழுங்கு பெற்றுறைந்த அருமையான வேதத்தை யுடைய நன்மை பொருந்திய அந்நபி முலறு அலைகிஸ்ஸலா மவர்களுக்குப் பெருநிற்கும் பிரயோ சனத்தைப் போலும் வந்து இவ்வுலகத்தின்கண் தோற்ற மாகிய புதல்வர் நபி இல்யாசு அலைகிஸ்ஸலா மவர்களென்று சொல்லப் பெரிய ஒளி வானது தங்கித் துறவலர்களுக் கதிபராக இருந்த அந்நபி இல்யாசு அலைகிஸ்ஸலா மவர்களின் புதல்வர் எல்லாப் பவுத்துகளும் பூரணப்

பட்ட அன்னிய அரசர்களான யானைக் கூட்டத்திற்கு ஆண் சிங்கத்தைப் போன்று அவதரித்த பெருமை பொருந்திய இரத்தினமாகிய முதுறக்கத் தென்று கூறும் மேக மானவர். (ருகூ)

முகம்மது நயினு ரொளியிருந் திலங்கு
மன்னவர் முதுறக்கா மதலை
செகமகிழ் குசைமா வயினுறைந் தரசர்
செழுமுடி நடுமணி யெனலாய்
நகுகதிர் விரிவெண் குடைநிழ லிருந்த
நரபதி யெனுங்குசை மாமன்
புகழெனத் தோன்றி வருதுரை கனுனைப்
பூபதி யிடத்தின்வந் திருந்த.

(இ-ள்.) நயினு ராகிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் பெரிய ஒளி வானது அவ்வாறு இருந்து பிரகாசியாநிற்கும் இராஜராசகிய அந்த முதுறக் சகன்பவருக்கான புலல்வர் இவ்வுலக மானது களிப்படைகின்ற குசைமா வென்பவரி னிடத்தில் தங்கி இராஜர்களின் செழிய மகுடத்தினது மத்தியிற் பதித்த இரத்தினத்திற் கொம்பாகி விளங்குகின்ற கிரணங்களைப் பரப்பிய வெள்ளிய சந்திர வட்டக் குடையினது நிழலில் வைகிய மனுடாதிபதி யென்னும் அந்தக் குசைமா வென்பவரின் பெருமைதங்கிய கிர்த்தியென்ன இப்பூமியில் உதயமாய் வந்த துரையான கனுனு வென்னும் அரசரி னிடத்தில் வந்து தங்கியது.

மடங்கலே றனைய தனபதி கனுனு
மகிபதி தவத்துறு மதலை
நுடங்கிடை மடவார் கருத்தினைக் கவரு
நுலறெனு மழகுறு மரசர்
தடப்புயங் களின்மா நிலங்குடி யிருப்பத்
தயங்கியங் கவர்பெறு மரசர்
முடங்குளைப் பகுவாய் மடங்கலங் கொடியார்
மோலிமா லிக்குசார் பிருந்த.

(இ-ள்.) ஆண் சிங்கத்தை நிகர்த்த குபேராகிய அந்தக்கனை பென்னு மரசரின் தவத்திற் பொருந்திய புத்திரர் ஒசியா நீற்கும் இடையையுடைய மாதர்களின் எண்ணத்தைக் கவருகின்ற நுல றென்று கூறும் அழகுற்ற இராஜரின் பெரிய தோள்களில் மகத்தா கிய இப்பூமியானது குடியாக இருக்கும் வண்ணம் விளங்கி அந்த முல றென்பவர் பெற்ற மன்னவர் நெருங்கிய புற மயிரின் அழகிய சிங்கக் கொடியை யுடையவரான கிரீடத்தைத் தரிக்கப் பெற்ற மாலீக் கென்பவரி னிடத்தி லிருந்தது. (சூ௧)

திண்டிற லரசர் சிரம்பொடி படுத்திச்
  செவந்தவாட் கரத்தர்மா லீக்கு
மண்டலம் விளக்கு முழுமணி விளக்காய்
  வந்தமன் பிஃறிடத் திலங்கி
யெண்டிசை யிடத்து மெழுகடற் புறத்து
  மறுவகைத் தானைகொண் டெதிர்ந்து
கொண்டமர் கடந்த வரசெனப் பெயருங்
  கொடுத்தது திருநபி யொளியே.

(இ-ள்.) தெய்வீகந் தங்கிய நமது நாயகம் நபி முகம்மது முஸ் தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் வொளி வானது திண்ணிய வல்லமையை யுடைய அரசர்களின் தலையைப் பொடியா கச்செய்து செவப்புற்ற வாளாயுதத்தைத் தாங்கிய கையை யுடைய வரான அந்த மாலிக் கென்பவருக்கு இப் பூலோகத்தை விளங்கச் செய்யும் முழுமையாகிய இரத்தின தீபமாய் வந்த மன்னவர் பிஃ றென்பவரிடத்திற் பிரகாசித்து எட்டுத் திக்கின் கண்ணும் எழு சமுத்திரங்களின் பக்கத்திலும் ஆறு வகையான சேனைகளைக் கொ ண்டு எதிர்த்துக்கொண்டு யுத்தத்தை ஜெயித்த இராஜரென்று அபி தானத்தையும் கொடுத்தது. (சூஉ)

குரிசிலென் றுயர்ந்த பிஃறெனு மரசர்
  குறைஷியங் குலத்துறு மதலை
விரிதிரை யுவரி நடுநிலம் புரந்த
  வேந்தர்கா லிபுவயி னிலங்கிக்

கரிபரி பதாதி ரதம்புடை நெருங்குங்
கடைத்தலை காலிபு தருசேய்
முருகவிழ் மரவத் தொடைப்புயர் லுவையு
முகமலர் தரவிருந் தொளிரும்.

(இ-ள்.) பெருமையிற் சிறந்தோ ரென் றோங்கிய அந்தப் பிஃ றென்று கூறும் மன்னவருக்கு அழகிய குறைஷிக் குலத்திற் பொருந்திய புதல்வர் விரிந்த அலைகளையுடைய இப்பூமியை ஆண்ட அரசரான காலி பென்பவரிடத்திற் பிரகாசித்து யானை, குதிரை, இரதம், காலா ளாகிய நான்கு வகை சேனைகளும் செறியும் முதல் வாயிலையுடைய காலி பென்பவர் இவ்வுலகத்தில் தந்த மைந்தரான மதுவைக் கொண்ட மலர்ந்த குங்குமப் புஷ்பத்தினது மாலையைத் தாங்கிய தோள்களை யுடையவராகிய லுவையு வென்பவரின் முகமானது விரியும்படி இருந்து அவ்வொளியானது பிரகாசித்தது, (௬௫)

வான்மதி பகுந்த முகம்மது நயினார்
வடிவுறும் பேரொளி லுவையாங்
கோன்மகன் கஃபு தம்மிடத் திலங்கிக்
குன்றினி லிடும்விளக் காக்கிச்
சூன்முதிர் மழைக்கை கருபுகண் மணியாய்த்
தோன்றிய முறத்திடத் துறைந்த
சேனமுங் கொடியுந் தொடர்சுடர் வடிவேற்
செம்மலென் றுயர்ச்சிபெற் றிருந்தார்.

(இ-ள்.) வானத்தின் கண்ணுள்ள சந்திரனை இரு பிளவாகப் பகுத்த நயினு ரான நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அழகைப் பொருந்திய பெரிய அவ் வொளிவானது லுவையாகிய அரசரின் புதல்வர் கஃபென்பவரிடத்திற் பிரகாசித்து அவரை மலையின் மீதிட்ட தீபமாகச் செய்து சூலானது முதிரப் பெற்ற மேகத்தைப் போலும் கைகளை யுடைய

அந்தக் கஃபென்பவரின் கண்களினது மணியாக இவ் வுலகத்தி னிடத்து உதய மான முறத்தென்பவ ரிடத்தில் தங்கிற்று. அவர் பருந்துகளும் காகங்களும் பின் பற்றுகின்ற கிரணங்களை யுடைய கூர்மை யுற்ற வேலாயுதத்தினது வேந்த ரென்று மேன்மை பெற் றிருந்தார். (கூச)

கொந்தலர்ந் திருண்ட கருங்குழன் மடவார்
கொங்கையிற் றடம்புய மழுந்துஞ்
சுந்தரர் முறத்து மதலையாய் நிலத்திற்
றோன்றிய மதிமுகக் கிலாபு
மந்தர மனைய தடம்புய ரிடத்தில்
வந்திருந் தவர்தரு மதலை
கந்தடர் தறுகட் கரடமா வியானைக்
காவலர் குசையிடத் துறைந்த.

(இ-ள்.) பெரிய தோள்க ளானவை பூங் கொத்துகளைக் கொ ண்ட விரிவுற்றிருண்ட கரியகூந்தலையுடைய மாதர்களின் முலைகளில் அழுந்தா நிற்கும் அழகை யுடையவரான அந்த முறத்தென்பவரின் புத்திராய் இப்பூமியின்கண் உதயமாகிய சந்திரன்போலும் வதனத் தை யுடைய கிலா பென்பவ ரான மலைகளை நிகர்த்த விசால மாகிய புஜங்களை யுடையவ ரிடத்தில் அவ்வொளியானது வந்து இருந்து அந்தக் கிலா பென்பவர் உலகத்தில் தந்த மைந்தர் கட்டுத் தறியை அடருகின்ற அஞ்சாமையினது மதங்களைச் சிந்தும் பெரிய யானைக ளையுடைய மன்னவரான குசை யென்பவரிடத்தில் தங்கியது. (கூரு)

வில்லுமிழ் வயிரத் தொடைபுரண் டசைந்த
விறற்புயர் குசைதரு மதலை
செல்லென விரங்குஞ் சினந்துவே லேந்துஞ்
செழுங்கரர் அப்துல்மு னபு
மல்லலை திணிதோ ளரசர்நா யகர்தம்
வயினுறைந் தவர்பெறு மதலை
யெல்லவ னெனவே கவியிரு டொத்தி
யிருந்தஹா ஷிமிடத் துறைந்த.

(இ-ள்.) பிரகாசத்தைக் கொப்பளியா நிற்கும் வயிர மணியினு லான மாலைகள் புரண்டு அசையப் பெற்ற வலிமையைக் கொண்ட

தோள்களை யுடைய அந்தக் குசை யென்பவர் இவ்வுலகத்தின் கண் தந்த புதல்வர் மேகத்தைப் போல இரங்குவதும், கோபித்து வேலாயுதத்தைத் தாங்கக் கூடியதுமான செழிய கையையுடைய அப்துல் முனு பென்பவ ராகிய சத்துராதிகளின் வல்லமையை அலையச் செய்யுகின்ற திண்ணிய புயங்களை யுடைய மன்னராதிபரிடத்தில் அவ்வொளி வானது தங்கி அந்த அப்துல் முனு பென்பவர் பெற்ற மைந்தர் சூரியனைப் போலுந் தாரித்திர மாகிய அந்த காரத்தை யோடச் செய்து இருந்த ஹாஷி மென்பவ ரிடத்தில் தங்கியது. (சுசு)

கிம்புரிக் கோட்டுக் கடமலை துளைத்துக்
 கிளைத்திடும் வேற்கரர் ஹாஷி
மம்புவிக் கரசாய்ப் பெற்றெடுத் துவந்த
 வருமணி யப்துல்முத் தலிபு
நம்பிய தவப்பே றெனவிருந் திலங்கி
 நறைகம ழுப்துல்முத் தலிபு
தம்பெயர் விளக்கக் குவலயத் துதித்த
 சந்ததி யப்துல்லா வென்போர்.

(இ-ள்.) பூண் கட்டிய கொம்புகளையுடைய யானைகளாகிய மலைகளைத் துளைத்து ஓங்காநிற்கும் வேலாயுதத்தைத் தாங்கிய கையையுடையவ ரான அந்த ஹாஷி மென்பவர் அழகிய இந்தப் பூலோகத்திற்கு மன்னவராய்ப் பெற்றெடுத்து விரும்பிய அருமையான இரத்தினமாகிய அப்துல் முத்தலிபென்பவர் நம்பிடும் தவத்தினது பேற்றைப்போல இருந்து பிரகாசித்து வாசனை பரிமளிக்கப் பெற்ற அவ்வப்துல் முத்தலிபின் கீர்த்தியை விளக்கும்படி இப் பூலோகத்தின் கண் தோற்றிய புதல்வரான அப்துல்லா வென்பவர். (சுஎ)

தலைமுறைப்படலம்

முற்றுப் பெற்றது.

ஆ படலம் ச-க்குத் திருவிருத்தம்-கசுரு.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றஹீம்.

—*—

இஃது,

விலாதத்துக்காண்டம்.

நபியவதாரப்படலம்.

கலிவிருத்தம்.

பெருகிய கோடிசந் திரப்பிர காசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணைவீற் றிருந்தசெங் கமலக் கண்ணிணைத்
திருநபி வருமவ தாரஞ் செப்புவாம்.

(இதன்பொருள்.) கிருபையானது மாறாது குடியிருக்கும்படியான செவந்த தாமரை மலர்போலும் உபயநோக்கங்களையும் தெய்வீகத்தையு முடைய நபிகள்பிரான்நமதுநாயகம் முகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இத்தனைகோடியென அளவிடற் கரிதாய்ப் பெருகிய பலகோடி சந்திரன்களது பிரகாச முழுவது மொன்ருய்வரும் பெரிய கிரணங்களையுடைய வொப்பில்லாத சந்திரனைப்போல இவ்வுலகின்கண் வராநிற்கும் ஜனனமகோதயாகமத்தினையாஞ் சொல்லுவாம். (க)

வேறு.

கடியி ருந்தெழு கற்பக முஞ்சுடர்
வடிவி ருந்தம ணியும்வ னசமும்
படியுங் கார்முகி லேழும்ப ழித்துவிண்
குடியி ருத்துங்கொ ழுந்தடக் கையினர்.

(இ-ள்.) நறு நாற்றமென்று மாறாது குடியிருந்தோங் காநிற்குங் கற்பக விருக்கத்தையும் பிரகாசமேதமக்கு வடிவாய் விளங்கும் தேவமணிகளையும் பதும நிதியையுங் கூன் முதிர்ந்திருக்கும் எழு மேகங்களையும் ஈகையாற்றமக்கு நிகராகமாட்டீர்களென்று பழித்து ஆகாயத்தின்கண் குடியாயிருக்கச் செய்யும் செழுமையான பெருமைபொருந்திய கையினையுடையவர். (உ)

வேறு.

விண்டொடு கொடுமுடி மேரு வீறழித்
தெண்டிசைக் கிரியொடு மிகலுங் கொங்கையர்
கொண்டமா மயலொடு மனமுங் கூர்விழி
வண்டொடு வண்டுறை மாலை மார்பினர்.

(இ-ள்) தேவலோகத்தைத் தீண்டும்படியான கொடுமுடியினையுடைய மகாமேருவினது வீற்றையழியச்செய்து அஷ்டதிசை நிலைகொண்ட மலைகளோடு விம்மலாற் பகைக்கா நிற்கும் தனபாரங்களையுடைய பெண்கள் காட்சியினாலுற்ற பெரிய மயக்கத்தினாலே அவர்களது சிந்தையும் கூர்மைதங்கிய விழிகளாகியவண்டுகளோடு தேனுகர் வண்டுகளும் உறையும்பூமாலையணிந்த மார்பினையுடையவர். (௩)

கொன்னுனை வெண்ணிறக் கோட்டு வாரணச்
செந்நிறக் குருதியிற் றமிர்ந்து வாய்கழீஇ
மின்னவிர் கணமணி விளங்கு மாமுடி
யென்னல ருயிரைமேய்ந் துறங்கும் வேலினர்.

(இ-ள்) கொலைத் தொழிலிற் பழகுங் கூரியநுனியையும்வெள்ளிய பிரகாசத்தையு முடைய தந்தங்களையுற்ற யானைகளினது செவ்ந்த நிறந்தங்கிய இரத்தத்தினால் வாயைச் சுத்திசெய்து ஒளிவீசும் இரத்தின வருக்கங்கள் விளங்காநின்ற மகத்துவம் பொருந்திய மகுடம்புனைந்த சத்துருக்களின் ஆத்துமங்களை மேய்ந்து திமிர்கொண்டு துயிலாநிற்கும் வேலினையுடையவர். (௪)

முடங்கலங் கைதைமுள் ளெயிற்று வெண்பணிப்
படங்களா யிரத்தினும் பரித்த பாரெலா
மிடங்கொள்பூ தரப்புயத் திருத்தி யேதிலார்
மடங்கலே றெனுமன வலியின் மாட்சியார்.

(இ-ள்) தாழையினது மடங்குதலாகிய வழகிய முட்போலும் வெண்மைபொருந்திய விடப்பற்களையுடைய ஆதிசேடன் தனது படாமுடிகளாயிரத்தானும் சுமந்திராநின்ற பூலோக முழுவதையும் விசாலமுற்ற மலைபோலும் தமது புயத்தின் கண்ணிருத்தியவர் அன்றியும் மதங்கொண்ட யானைகளையொத்த சத்துராதிகளுக்கு ஆண்சிங்கமென்று சொல்லும்படியான மனவன்மையின் பெருமையையுடையவர். (௫)

மாக்கட னெடும்புவி வளைந்த வன்கலி
நீக்கிய வெண்குடை நீழ லோம்புவோர்

வீக்கிய கழலடி வேந்தர் பொன்முடி
தாக்கிய மருச்செழுங் கமலத் தாளினர்.

(இ-ள்) பெரிய கடலாற் சூழப்பட்ட நெடியபூமியை எவ்விடத்தும் வளைந்த தரித்திரியத்தை நீக்கின வெள்ளைக் குடையினது நிழலாற் காப்பவர், அன்றியும் வீரகண்டாமணியைக்கட்டின அடிகளையுடைய வரசர்களது பொன்னலாய மகுடங்களை யுதைத்த தழும்பினையுடைய செழியதாமரைமலர்போலும் பாதங்களையுடையவர். (௬)

வரபதி யுலகெலாம் வாழ்த்து மக்கமா
புரபதிக் கதிபதி யென்னும் பூபதி
பரபதி யரசர்கள் பணிந்தி றைஞ்சிய
நரபதி யப்துல்லா வென்னு நாமத்தார்.

(இ-ள்) ஆசீர்வாதங்களையுடைய தலங்களமைந் திராநின்ற எல்லாவுலகங்களும் புகழும்மக்காவென்ற மாட்சிமைதங்கிய இராஜதானிப் பட்டணத்திற்கு அதிபரென்னும் பூமிபதியும் பரமண்டலத்துத் தலைவர்களும் தாழ்ந்து வணங்காநிற்கும்மனுபதியும் அப்துல்லா வென்று சொல்லும் நாமத்தினையு முடையவர். (எ)

செழுமழை முகிலென வமுதஞ் சிந்திட
வழிகதிர் நபியென வகுத்த பேரொளி
பொழிகரத் தப்துல்லா விடத்திற் பொங்கியே
யெழிறரு திருநுத லிடத்தி லங்குமே.

(இ-ள்) நபியென்று சொல்லும்படி பிரிக்கப்பட்ட வழிகின்ற கிரணங்களையுடைய நபிபெருமானரது பெரிய பிரபையானது நிதியைச் சொரியுங் கைகளையுடைய அப்துல்லாவிடத்திற்செழியமழை மேகம்போல வமுதத்தைச் சிந்தாநிற்பப் பொலிந்து அழகைத் தருமவர்களது தெய்வீகத்துவ நெற்றியின்கண் பிரகாசியாநிற்கும். (அ)

அயிலுறை செழுங்கரத் தப்துல் லாவெனும்
பெயரிய களிறுக்கோர் பிடியும் போலவ
ருயிரென விருந்தசைந் தொசிந்த பூங்கொடி
மயிலெனு மாமினு வென்னு மங்கையே.

(இ-ள்) வேலாயுத மொழியாதிருக்கும் செழிய கையினையும் அப்துல்லாவென்று சொல்லும் பெயரினையு முடைய ஆண் யானைக்கு ஒப்பில்லாத பெண்யானைபோலவும் அவரது உயிர்போலவும் இருந்து அசைந்து துவண்ட பூவானியன்ற கொடிபோலும் மனைவி

யானவர் சாயலினால் மயில்போலும் ஆமினா வென்று சொல்லும் மூன்றும் பருவதத்தையுடையவர். (௯)

இற்புகுந் தெழுமதி யிலங்கு மாமணி
விற்புரு வக்கடை மின்க ளுயகம்
பொற்பெலாம் பொதிந்தபொற் கொடிநற் பூவையர்
கற்பெலாந் திரண்டுருக் கொண்ட கன்னியே.

(இ-ள்) அவ்வாமினாவெனும் மங்கையானவர்மனைக்கண்புகுந்து உதயமாகாநிற்குஞ்ச ந்திரனானவர், பிரகாசிக்கும் மாணிக்கமானவர், வில்லைப்போலும் புருவக்கடைகளை யுடையபெண்களுக்குத் தலைமை யானவர், அழகு முழுவதும் பொதியப்பட்ட பொன்னானியன்ற கொடியானவர்; நன்மைபொருந்திய பெண்களது கற்பு முழுவதும் ஒன்றுசேர்ந்து வடிவெடுத்த கன்னியானவர். (௰)

அறத்தினுக் கில்லிட மருட்கோர் தாயகம்
பொருத்திடும் பொருமையிற் பூமிக் கெண்மடங்
குறைப்பெருங் குலத்தினுக் கொப்பி லாமணி
சிறப்பினுக் குவமையில் லாத செல்வியே.

(இ-ள்) அன்றியும் தருமத்திற் கிருப்பிடமானவர், கிருபைகளுக்குத் தனித்ததாய்வீடானவர், பொறுக்கத்தக்க பொருமையிற் பூமிக்கெட்டுப் பங்கதிகமானவர், தாம்தங்கியிருக்கும் பெருமை பொருந்திய குடும்பத்திற்கு ஒப்பற்ற கண்மணியானவர், உவமை சொலற்கரிய சிறப்பினுக்கு இலக்குமியானவர். (௰௧)

குணிப்பருங் குறைசியங் குலமென் றோங்கிய
மணிப்பெருங் கடலிடை வளருஞ்செல்வமே
தணிப்பிலா தெடுத்தெறி தரங்க மேனடுப்
பணிப்படா தெழுந்தசெம் பவளக் கொம்பனார்.

(இ-ள்) மதித்தற்கரிதாய்க் குறைஷிக்குல மென்றோங்கா நிற்கும் முத்துக்களையுடைய பெரிய சமுத்திரத்தின்கண் வளர்கின்ற செல்வத்தைத் தணிவின்றி யெடுத்துவீசும் அலைகளின்நடுவே தாழ்வடையாது முளைத்தெழுந்த செம்பவளக்கொம்புபோன்றவர். (௰௨)

இத்தகைக் குலமயி லாமி னாவெனு
முத்தவெண் ணகைக்கனி மொழியு மோகனச்
சித்திர அப்துல்லா வென்னுஞ் செம்மலு
மொத்தினி தமுதமுண் டுறையு நாளினில்.

(இ-ள்) மேலே கூறப்பட்டுள்ள இவ்விதத் தகுதிகளையும் மயக்கத்தைத்தரும் பேரழகையுமுடைய அப்துல்லாவென்று சொல்லும் பெருமையிற் சிறந்தவரும் முத்தைப்போலும் வெள்ளிய பற்களையும் கனியைப்போலும் இனியசொற்களையுமுடைய ஆமீனுவென்று சொல்லும் வடிவிற்குலமயில் போன்றவரும் ஒரே மனத்தினராய்க் கலந்து இனிமையான காமானுகூலத்தை யனுபவித்து வாழ்ந்திருக்கும் நாளினில். (கங)

கலிநிலைத்துறை.

வீசு தெண்டிரைக் கடன்மலை யடங்கவெண்குடைக்கீ
ழாசி லாதசிங் காசனத் திருந்தசிக் கந்தர்
காசி னிக்கர சியற்றுதுல் கறுனையின் கால
மாசி லாக்கணக் கெட்டுநூற் றெண்பத்தோர் வருடம்.

(இ-ள்) தமது வெள்ளிய குடையின்கீழ் தெள்ளிய அலைகளையெறியாநிற்கும் சமுத்திரங்களும் மலைகளும் அடங்கும்படிக்குற்றமேது மில்லாத சிங்காசனத்தின்கண் வீற்றிருந்த சிக்கந்தரென்னுமியற்பெயரையும் துல்கறுனையினென்கிற காரணப் பெயரையுமுடைய சக்கிரவர்த்தியானவர் பூமிக்கு அரசுசெய்யுங் காலத்தின் மறுவற்ற கணக்கிலே எண்ணூற்றெண்பத் தோருவருடம். (கச)

கரைத்த மின்றெளித் தெழுத்தெனச் சிறக்குமக் காவி
னிறைத்த கார்க்குலந் திரண்டெனக் களிறுக ணெருங்கி
யிரைத்த டர்ந்துமும் மதங்களை வாரிநின் றிறைத்து
வரைக்கு லங்கள்போல் வந்ததற் கொருமுதல் வருடம்.

(இ-ள்) கரைக்கப்பட்ட மின்னைத் தெளியச்செய்து எழுதிய சித்திரம்போலும் சிறக்காநிற்கும் மக்காவென்கிற பட்டணத்தின்கண் நிரைபடுத்திய கருமேகசாலங்கள் திரண்டாற்போல யானைகள் ஒன்றோடொன்று நெருங்கி ஆரவாரித்து பின்னுமுந்து முன்னேயேறிநின்று கன்னம்கபோலம் கோசமென்கிற மூன்றுமதங்களையும் அள்ளிச் சொரிந்து மலைக்கூட்டங்களைப் போன்று வந்ததாகிய யானைக் கலகத்திற்கு ஒன்றென்றுசொல்லும் முதலாம்வருடமான அவ்வருடத்தில். (கரு)

திங்க ளாமிற ஜபுமுதற் றேதிவெள் ளியிராத்
துங்க வார்கழன் முகம்மது பேரொளி துலங்கி
யெங்க ளுயக ரப்துல்லா நுதலிடத் திருந்து
மங்கை யாமினு வயிற்றினிற் றரித்தது வன்றே.

(இ-ள்) பன்னிரண்டுமாதங்களி லொருமாதமாகும் றஜபுமாதத்தின் முதலாந் தேதியான வெள்ளிக்கிழமையிரவிலே பரிசுத்தமும் நேர்மையுமான பாதங்களையுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களது பெரியவெளியானது தமது மாட்சிமை யோடும் பிரகாசித்து எங்கட்குத் தலைவரான அப்துல்லாவினது நெற்றியின்கண்ணிருந்து மூன்றும் பருவப்பெண்ணாகிய ஆமினா அவர்களினது வயிற்றின்கண் தரிபட்டது. (கசு)

திருத்தும் பொன்னக ரமரரே திரண்டவா னவரே
கருத்தி னுண்மகிழ்ந் தெவ்வையு மலங்கருத் திடுமின்
வருத்த மென்றிலா முஹம்மதை யாமினா வயிற்றி
லிருத்தி னேனென வுரைத்தன னியாவர்க்கு மிறையோன்.

(இ-ள்) திருத்தமாகச் செய்யப்பட்டிருக்கிற சுவர்கத்தினது மலக்குகளே! மற்றிடங்களிலுங் கூடியிராநின்ற மலக்குகளே! வருத்தமென்பதென்றுமில்லாத எனது தூதரான முகம்மது நபியை ஆமினாவினது வயிற்றின்கண் யானின்று கருவாகவிருக்கச்செய்தேன், அதற்காக நீங்கள் உங்கள் மனங்களுள் மகிழ்ச்சிகொண்டு அலங்கரிக்கத்தக்கதாய யாவையும் அலங்கரித் திடுங்களென்று சகல ஜீவாத்துமாக்களுக்குங் கடவுளான அல்லாகுசுபுகானகுவத்தஆலா கட்டளையிட்டான். (கஎ)

பரந்த வாய்க்கொடும் பாந்தளும் விடங்கொள்பஞ் சரமுங்
கரிந்து பொங்கிய குழிகளுங் கனற்பொறி கதுவ
வெரிந்து செந்நெருப் பொழுகிய நரகங்க ளேழும்
விரைந்த வித்தடைத் திடுகவென் றன்னமுதல் வேந்தன்.

(இ-ள்) ஆதியரசனான மேலேகூறிய அல்லாகுத்த ஆலாவானவன் விரிந்த வாயினையுடைய கொடிய சர்ப்பங்களையும் விடத்தைக்கொண்ட விடங்களையும் மிகச் சினந்து பொங்கிய தீப்பள்ளங்களையுமுடைய கனற்பொறி நீங்காது பற்றும்படி எரிந்து செந்நெருப் பொழுகா நிற்கும் நரகங்க ளேழனையும் விரைவாய்த் தணித்தடைத்திடுங்க ளென்று சொன்னான். (கஅ)

விற்கெ ழும்மறு சொடுகுறு சந்தரம் விளங்கச்
சொர்க்க வாயுலுந் திறந்தலங் கரித்தனர் துன்ப
வர்க்க வாரிபாழ் நரகங்க ளடைத்தனர் வானோர்
கற்கு மாமறை முதலவன் விதித்தகட் டளைக்கே.

(இ-ள்.) மலக்குகளானவர் கற்கத்தகும் மாட்சிமைதங்கிய வேத த்தினையுடைய முதற்பொருளான ஆண்டவன் ஆக்கியாபித்த உத் தரவின்படி ஆகாயமுழுவதும் விளங்கப் பிரகாசியாநிற்கும் அறு சுடன் குறுசையும் சொர்க்கத்தினது கபாடங்களேயும் திறந்து அல ங்கரித்தார்கள், துன்பவகுப்பினவாகிய கடல்போலும் பாழான நர கங்களின் கபாடங்களே யடைத்தார்கள். (கசு)

அந்தண் பொன்னக ரடங்கலு மலங்கரித் ததுவும்
வெந்த பாழ்நர கங்களை யடைத்தபல் விதமுஞ்
சந்த திண்புய முகம்மது நபிதரித் ததுவு
மிந்த வாறுக ளனைத்தையு மறிந்திபு லீசு.

(இ-ள்.) இபுலீசெனும் தெய்வத்துரோகியானவன் சந்தனக் குழம்பினைக்கொண்ட திண்ணிய புயங்களேயுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆமினு அவர்களது வயிற்றில் கருவாய்த் தரிபட்டதும் அழகுபொருந்திய குளிர்ச்சியான சுவர்க் கங்க ளடங்கலேயும் அலங்கரித்ததும் வெந்த பாழான நரகங்களே அடைத்த பலவிதங்களுமாகிய இந்தவரலாறுக ளெல்லாவற்றையுந் தெரிந்து. (உ0)

நடுங்கி வாயினீர் வறந்திட நாவுலர்ந் துடல
மொடுங்கி யைம்பொறி மயக்குற நெஞ்செலா முடைந்து
புடங்கொள் வங்கம தாய்நினை வுருகினன் புலம்பத்
துடங்கி னனடிக் கடிபெரு மூச்சொடு சுழன்றே.

(இ-ள்.) வாயினது நீர்காய்ந்திட நாக்குலர்ந்து உடலானது நடு க்குற்றொடுங்கி பஞ்சபொறிகளும் மயக்கமுறும்படி நெஞ்சமுழுவ தும் தளர்ந்து எண்ணம் புடம்பற்றிய வீயமாயுருகி எறிந்த பெரு மூச்சுகளோடு அடுத்தடுத்துச் சுற்றிப் பிதற்ற ஆரம்பித்தான். (உக)

கரைவ னேங்குவன் மலங்குவன் கலங்குவன் கதறி
யிரைவன் கன்னத்திற் கையைவைத் திருந்தெழுந் திருப்பன்
றரையின் மேல்விழுந் தெனக்கிலை யினிச்சிங்கா சனமென்
றுரைம றந்திடக் கிடந்தன னிருகணீ ரொழுக.

(இ-ள்.) இரண்டுகண்களிலுமிருந்து நீர் சிந்தும்படி யுருவழி வான். அழுவான். மிகக் கலங்குவான். தன் மக்களேக் கூப் பிட்டு சத்திப்பான். தன்னிரண்டு கதுப்பினிடத்தும் கரங்களேச் சேர்த்து உட்கார்ந்திருந்து தரிப்பில்லாமல் எழுந்திருப்பான். சொ ன்மறக்க நிலத்தின்மீதுவிழுந்து இனிமேல் எனக்குச் சிங்காசன மில்லையென்று சொல்லிக் கிடந்தான். (உஉ)

அறிவ ழிந்தமன் னவன்றனை மக்கள்வந் தடைந்து
குறியுந் துன்பமும் வந்தவா றேதெனக் கூறி
நிறையு மக்களோ டுறும்வர லாறெலா நிகழ்த்தி
யுறையு மில்லிட மிவணிலை நமக்கென வுரைத்தான்.

(இ-ள்.) அறிவுகளை யிழக்கப்பெற்ற மன்னனெனு மவவிபு லீசை அவன் கூப்பிட்ட சத்தத்தால் அவனது மக்களெல்லோரும் வந்துசேர்ந்து உமக்கு இவ் வேற்றுமையான அடையாளங்களும் இக்கிலேசமும் வந்தவழி யாதென்று கேட்க, இவ்வாறுசொல்லி நிறைந்த தன்மக்களோடு தனக்குற்ற வரலாறுகள் முழுவதையும் சொல்லிக் காண்பித்து நம்மவர்கட்குத் தங்குதற் கேதுவாகும் இருப்பிடமானது இவ்விடத்திலில்லையென்றுஞ் சொன்னான். (உரு)

இந்த வாசகங் கேட்டலு மக்களெல் லோருந்
தந்தை யேபிதற் கென்செய்வோ மெனத்தடு மாறிப்
புந்தி நொந் தவரவர் திசைதிசை புகுந்தார்
சிந்தை நொந்திபு லீசுவுந் திகைத்திருந் திடைந்தான்.

(இ-ள்.) இபுலீசுல்லஊன்சொல்லிய இவ்விதமான வசனத்தை அவன் புத்திரர்களெல்லோரும் கேட்டமாத்திரத்தில், தந்தாய்! இவ்வாறுற்ற ஆபத்திற்கு நாம் யாதுசெய்வோம் செய்யுமுபாய மொன்று மில்லையே யென்று சொல்லித் தடுமாற்றமடைந்து ஒவ்வொருவனும் தனதன்மனத்துள் மிகவாகநொந்து அவரவர்வசிக்கும் தத்தம்திக்குகளிற்போய்ப் புகுந்தார்கள். இபுலீசென்பவனும் மனம்நொந்து திகைத்துத் தன்னிடத்தின்கண்மேவி இருந்தான்.

தரித்தி டும்முதற் றிங்களிற் றரைபுக ழாத
முரைப்ப ராமினுக் கனவினி லுன்றிரு வுதரத்
திருக்குஞ் சந்ததி வலிமையை யுடையதிவ் வுலகத்
தருக்க னெப்பல னுமமு ஹம்மதென் றகன்றார்.

(இ-ள்.) நபிக ணாயக மவர்களின் பேரொளியானது அப்துல்லாவினது திருநுதலிடத்திருந்து மாதுசிரோமணி ஆமினாவினது மேலான கருப்பாசனத்தின்கண் மனிதாவதாரமாய் வருவான் வேண்டிக் கருவாகத்தரித்த முதலாமாதத்திலே ஆமினாவினது சொப்பனத்தில் பூமிமுழுவதும் புகழாநிற்கும் மூலபிதாவான நபி ஆதமலைகிஸ்ஸலாமவர்கள் வந்து ஆமினா! உனது மேன்மைதங்கிய வயிற்றின்கண் அமைவுற்றிருக்கும் பிள்ளையானது வலிமையை யுரிமையாயுடையது. அதன் பிரகாசத்திற்குச் சூரியனு நிகரல்லன். அப்

பிள்ளையின் பேரானது இவ்வுலகத்தில் முஹம்மதாகும் என்று சொல்லிப்போயினர். (உரு)

கருப்பங் திங்களி ரண்டினி லாமினக் கனவின்
மருப்பு குங்குழல் வல்லிநின் வயிற்றிநின் மதலை
யருப்பும் வீறுடை யவர்பெயர் முஹம்மதென் றதிக
விருப்ப மாயிது றீசுநன் னபிவிளம் பினரே.

(இ-ள்.) பிரானவர்களைக் கருப்பமான இரண்டா மாதத்திலே ஆமினுவினது சொப்பனத்தில் நல்ல நபிப்பட்டம்பெற்ற இதுறீசு அலைகிஸ்ஸலாமவர்கள்வந்து நறுநாற்றம் புகாநிற்கும் கூந்தலையுடைய வல்லிக்கொடியாகிய ஆமினுவே! உன் வயிற்றின்கண் ணிருக்கின்ற பிள்ளையானவர் எவ்விடத்தும் தோன்றும்படியான பெருமையையுடையவர். அவரின் பெயராகிறது முஹம்மதா யிருக்குமென்று அதிக விருப்பமாகத் திருவாய்மலர்ந்தருளினர்கள். (உசு)

இக்கெ னும்மொழி யாமினுக் கினிதுறத் திங்கள்
புக்கு மூன்றினி னூகுநன் னபிமனப் பொலிவாய்
மிக்க வுண்மையும் விளங்கிய வெற்றியு முடையோர்
தக்க பேர்முகம் மதுவெனச் சாற்றிவிட் டகன்றார்.

(இ-ள்.) கரும்பென்று சொல்லாநின்ற வினிய சொல்லினையுடைய ஆமினு அவர்களுக்கு இன்பம்பொருந்த வரும் மூன்றுமாதத்திலே நல்ல நபிப்பட்டம்பெற்ற நூகுஅலைகிஸ்ஸலாமவர்கள் சொப்பனத்தின்கண்வந்து ஆமினுவே! உனது பிள்ளையானவர் மிகுந்தசத்தியத்தையும் விளங்கிய விஜயத்தையு முடையவர், அவரின் தகுதியாகியபெயர் முஹம்மதாயிருக்குமென்று மனத்தாராளமாய்த் திருவாய் மலர்ந்தருளிப்போயினர்கள். (உஎ)

திங்க ணான்கினி லாமினுக் கனவினிற் றெளிவா
யிங்கி தத்திபு றுகிநன் னபியியம் பினராற்
சங்கை யாய்மிகு வரிசையும் பெருங்கொலுத் தனையும்
பொங்கும் வாழ்வினர் பெயர்முஹம் மதுவெனப் போந்தே.

(இ-ள்.) கருப்பமாகிய நான்காமாதத்திலே ஆமினுவினதுசொப்பனத்தின்கண் இனிமையையுடைய நல்ல நபிப்பட்டம்பெற்ற இபுறுகீமலைகிஸ்ஸலாமவர்கள் வந்து ஆமினுவே! உனது பிள்ளையானவர்

மதிப்பாய் மிகுத்த வரிசையும் பெரிய உல்லாச வீற்றிருப்பினளவும் பொங்காநின்ற வாழ்க்கையுமுடையவர், அவரின் பெயர் முஹம்மதாகுமென்று வெள்ளிதாய்த் திருவாய்மலர்ந்தருளினர்கள். (உஅ)

அம்பொற் கும்பத்தி னருவிநீர் மஞ்சன மாடிச்
செம்பொற் பட்டுடுத் தெறிகதி ரணியிழை திருத்திப்
பம்பு மேகலே தரித்துமென் கரவளே பரித்துக்
கம்ப லேச்சிலம் பணிந்தனர் பதங்கவின் பெறவே.

(இ-ள்.) ஆமினுஅவர்கள் அழகியபொன்னுலியன்ற குடத்தின் கண்ணுள்ள அருவிநீரினல் ஸ்நானஞ்செய்து செவந்த பொன்னுவிலேயுடைய பட்டாடையை யுடுத்திப் பிரகாசம் வீசுகின்ற அழகிய ஆபரணங்களே யணிந்து செவ்வைப்படுத்தி நெருங்கிய மெகலாபரணத்தைப் பூண்டு மெல்லிய விரண்டு கைகளிலும் வளேயற்களேத் தரித்து சிற்றடிக ளழகுபெறும்படிக் கலீரென்னு மொலியினேயுடைய சிலம்புகளேப் புனேந்து. (உகூ)

நெறித்த வார்குழ லிறுக்கிமென் மலர்பல நிறைத்துக்
குறித்த வேலிணேக் கண்களி லஞ்சனங் கோட்டிச்
செறித்த மான்மதஞ் சந்தனக் கலவையுந் திமிர்ந்தே
யெறித்த நன்கதிர் விளக்கென வாமினு வெழுந்தார்.

(இ-ள்.) மடிப்புக்கொண்ட நெடிய கூந்தலேக் கொண்டையாக விருகச்செய்து மெல்லிய பலவிதமான மலர்களே யதன்மீது நிறைத்துக்குறிக்கப்பட்ட வேற்படைபோலு மிரண்டு கண்களிலு மையினே யெழுதிக் கஸ்தூரியையும் சேர்க்கப்பட்ட சந்தனக்கலவையும் பூசி நல்ல கிரணத்தைவீசிய தீபம்போல வெழும்பினர்கள். (௩0)

இனத்து ளாரெனுஞ் செனுமலர்க் கொடிநடு விடையே
கனத்த மாமணிக் கொம்பென நடந்துகஃ பாவின்
மனத்தி ருக்கற வலஞ்செய்து வாயிலில்வந்து
நினேத்தி டும்பொரு டருகெனப் போற்றினர் நிறைந்தே.

(இ-ள்.) அவ்வாறெழுந்த ஆமினு அவர்கள் தமது குடும்பத்தாரென்று சொல்லும் செழிய பூங்கொடிபோலும் பெண்களினது நடுவணுகத்தகுதிபூண்ட மாணிக்கத்தாலான கொப்பைப்போல நடந்து கஃபத்துல்லாவை யடைந்து அதனே மனக்குற்ற மறும்படி தவ்வாபென்கிற பிரதக்கணஞ்செய்து அதன் வாசலின்கண் வந்து நின்று

கொண்டு நானெண்ணிய பொருளைப் பூரணமாய்த் தருவாயாகவென்று தெய்வத்தைத் துதித்தார்கள். (௩௧)

வண்டு வாழ்குழன் மடந்தையர் திரண்டுவாழ்த் தெடுப்பக்
கண்டு மென்கொடி யாமினுத் தாமரைக் காலின்
முண்ட கச்செழு மலர்சொரி தலைமுகங் கவிழத்
தெண்ட னிட்டது புத்தென வுறைந்ததே வதையே.

(இ-ள்.) தேனீக்களானது நீங்காது குடியிருந் தோங்காநிற்கும் அளகபாரத்தையுடைய ஆமினு முதலிய பெண்கள் ஒன்று சேர்ந்து முன்னின்று வணங்க, அதனை விக்கிரகமென்றுசொல்லும்படி அக்க குபாவினுள் தரிக்கப்பட்டுள்ள பிசாசமானது பார்த்துத் தாமரையாகிய செழுமையுற்ற மலர்களைச் சொரியும் தனது தலையும் முகமும் கவிழும்படி மெல்லிய கொடிபோலும் ஆமினு அவர்களின் செந்தாமரைப் பூப்போன்ற பாதத்தின்கண் விழுந்து வணங்கிற்று (௩௨)

அஞ்ச வித்தது புத்தென மனத்ததி சயித்து
மஞ்சு வார்குழ லாமினு பயந்துமெய் வருந்திக்
கஞ்ச மின்னனார் கணத்துடன் வாயிலைக் கடந்தே
யின்சொ னன்குலக் கிளியென மனையில்வந் திருந்தார்.

(இ-ள்.) விக்கிரகமானது தமது பாதங்களில் வணங்கிற்றென்று மேகம்போலும் நீண்ட கூந்தலையுடைய ஆமினு அவர்கள் தங்களது மனசின்கண் அதிசயமுற்றுப் பயங்கொண்டு அதனாலுடல் வருந்தித் தாமரைமலரின்கண் வீற்றிருக்கும் சீதேவியை யொத்த பெண்களினது கூட்டத்துடனே அக் கருபாவினது வாசலைக்கடந்து மீண்டு இனியசொற்களையுடைய நல்ல குலத்திற்சிறந்த கிளியைப்போன்று வீட்டில் வந்திருந்தார்கள். (௩௩)

தெரியுந் திங்களைந் தினிலிசு மாயில்செப் பினரா
லுரிய மென்மயி லேநின துதரத்தி லுறைந்தோர்
தரிய லர்க்கிடி யாயடுத் தவர்க்கொரு தருவாய்
வரிசை யுற்றவர் பெயர்முகம் மதுவென வகுத்தே.

(இ-ள்.) கருப்பமாகிய வைந்தாமாதத்திலே நபிப்பட்டம்பெற்ற இஸ்மாயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஆமினு அவர்களின் சொப்பனத்தில் வந்து மெல்லிய திருமேனியையுடைய மயிலாகிய ஆமினுவே! தகுதியான உனது வயிற்றின்கண் தரிக்கப்பட்ட பிள்ளையானவர் பகைவர்கட்கு வானேறாகியும், சார்ந்தோர்கட்கு ஒப்பற்ற கற்பகத்

தருவாயுங்தோற்றுநிற்கும் வரிசையினைப் பொருந்தியவர், அவர்பெய் ராகிறது முஹம்மதாயிருக்குமென்று வகைபடுத்திச் சொன்னார்கள்.

ஆறு திங்களில் வந்துமூ சாநபி யழகாக்
கூறு மென்கரும் பேநின்றன் வயிற்றுறு குழந்தை
வீறு பெற்றிடுந் தலைமையும் பெரும்பத வியையு
மாறி லாதவர் பெயரிடு முஹம்மதென் றுரைத்தார்.

(இ-ள்.) கருப்பமாகிய வாறுமாதத்திலே நபிப்பட்டம் பெற்ற மூசாஅலைகிஸ்ஸலாமவர்கள் அழகாக ஆமினா அவர்களின்சொப்பன த்தில் வந்து வியந்தோதாநிற்கும் மெல்லிய கரும்பாகிய ஆமினாவே! உனது வயிற்றின்கண் பொருந்திய பிள்ளையானவர் பெருமை பெற்ற நாயகத்தனத்திலும் பெரிய பதவியிலும் மாறுதலில்லாதவர். அவர் பெயர் முஹம்மதா யிருக்கும். அப்பெயரையே நீயுமிடுவாயாக என்று சொன்னார்கள். (கூரு)

சினவு வேற்கரத் தப்துல்லா வெனுமொரு சிங்க
மனைவி யாகிய ஆமினா வெனுங்குல மடமா
ளினமு மாயமும் வாழ்த்திடக் கருப்பமு மிலங்கக்
கனவு கண்டக மகிழ்ந்தினி திருக்குமக் காலம்.

(இ-ள்.) பகைவர்மேற்கோபிக்கின்ற வேற்படையானதுதங்கிய கையினையுடைய அப்துல்லாவென்று சொல்லும் ஒப்பற்றசிங்கத்தின துமனைக்குரியரான ஆமினாவென்று சொல்லுங்குலத்திற்சிறந்த இள மானானவர் தமதுபந்துக்களும் பாங்கிகளும் வாழ்த்தும்படிக்குஞ்சூல் விளங்கும்படிக்கும்மேற்கூறியபடிச் சொப்பனங்களைக்கண்டு மனமகி ழ்ச்சிகொண்டு இனிமைபொருந்த விருக்குமந்தக் காலத்தில். (கூசு)

மக்க நன்னக ரப்துல்முத் தலிபெனு மன்ன
ரக்க மன்னமன் னப்துல்லா தனையழைத் திருத்தித்
தக்க புத்தியு முறைமையுந் தொழிலையுஞ் சாற்றி
யொக்கல் கூட்டுறப் புறநகர்க் கெழுகவென் றுரைத்தார்.

(இ-ள்.) மக்கமாகிய நன்மைபொருந்திய நகரத்திற்கு மன்னவ ரென்று சொல்லாநிற்கும் அப்துல்முத்தலிபானவர் தமதுகண்களைப் போன்ற அரசரானகுமாரர் அப்துல்லாவையழைத்து அருகிலுட்கா ரச்செய்து வர்த்தகத்தையும் அதுசெய்யத்தக்க வொழுங்குகளையும் அதற்காக நடக்கவேண்டும் புத்திமதிகளையும் அவருக்குச்சொல்லிக் காட்டி உறவினர்கள் சேர்மானமாகப் பிரதேசங்கட்கு வர்த்தகநிமித் தம் புறப்படுவாயாக என்று சொன்னார்கள். (கூஎ)

தந்தை கூறிட அப்துல்லா மனந்தறு காமன்
மந்திர வாளெடுத் தினிதுற விசித்தனர் மருங்கி
லிந்திர வில்லென வில்லெடுத் தொருகையி லேந்திக்
கந்து கங்கொணர் கென்றுகட் டுரைத்தனர் கடிதின்.

(இ-ள்.) தமது தந்தையாகிய அப்துல்முத்தலிபானவர் அவ்வாறுசொல்லக் குமாரராகிய அப்துல்லா அவர்கள் தந்தையின் மனவெண்ணம் தவறாதபடி இனிமைபொருந்த அந்தரங்க வாளையெடுத்துத் தமதிடுப்பின்கண் கட்டிப் பின்னர் வானவிற்போன்ற வில்லை யெடுத்து ஒரு கையில் தாங்கிக்கொண்டு குதிரையை விரைவில் கொண்டு வருவாயாக வென்று உறுதியாகத் தமது பாகனுக்கு ஆக்கியாபித்தார்கள். (கூஅ)

பாட லத்தின்மேற் கொண்டுறு தமிற்பரி வாரங்
கூடு கோளரித் திரளென வரநெறி குறுகிக்
காடுங் கானமுங் கடந்துசெந் தேம்பொழிற் கனிசூழ்
நாட டைந்துபோய்ப் புகுந்தனர் மதீனமா நகரில்.

(இ-ள்) அவ்வாறு ஆக்கியாபித்தபோது பாகனாற் கொண்டுவரப்பட்ட குதிரையின்மேலேறித் தமதிடத்திற் பொருந்திய சூழ்வோர் பலரும் திரண்ட ஆண்சிங்கத்தினது கூட்டத்தைப் போல நெருங்கிவர மதீனத்தினது பாதையை அடுத்து அடர்ந்த கானகங்களையும், கானங்களையும் தொலைத்துச் செழிய தேனையுற்ற கனிகளையுடைய நாட்டினைச் சேர்ந்து மதீனாவென்னும் பெரிய பட்டணத்தின்கண் போய்ப் புகுந்தார்கள். (கூகூ)

மதினத் தின்னுறை ரசவருக் கங்களு மதினப்
பதிய டுத்தவூர்ச் சரக்கையுங் கொண்டுபங் தனமாக்
கதிர்கொண் மாடத்திற் கட்டிவெத் தவரவர் கரத்திற்
புதிய வாணிபத் தலைவிலைக் கீந்தனர் பொருளை.

(இ-ள்.) அப்துல்லா அவர்கள் அம்மதினமா நகரத்தைச் சார்ந்து மதீனத்தின்கண் தங்கிய ரசவருக்கங்களையும் மதீனா நகரத்தையடுத்திராநின்ற பல வூர்களிலுமுள்ள சரக்குகளையும் விலைக்கு வாங்கிப் பிரகாசத்தைக்கொண்ட ஒரு மாளிகையின்கண் காவலாகக்கட்டி வைத்துவிட்டுச் சிலநாள் கழிந்தபிறகு கொள்வோராகிய அவரவர் கைகளில் புதுச்செட்டையுடைய முதல்விலைக்குச் சரக்குகளை விற்றார்கள். (௱)

வாணி பத்தொழி லனைத்தையு முடித்துமன் னவருங்
காணு நாட்சில விருந்துதம் பதிவரக் கருதிப்
பூண ணிந்தழ குறுமிளை யவர்புடை சூழச்
சேண டைந்தபு வாவெனுந் தலத்தினைச் சேர்ந்தார்.

(இ-ள்.) அரசரென்னும் அப்துல்லாவும்மேலே கூறப்பட்டுள்ள செட்டுத்தொழி லெல்லாவற்றையு முடிவுசெய்து காணப்படுஞ் சில தினங்களாக அம்மதினமாநகரத்திலேயே தங்கியிருந்து பின்னர் தம துபதியாகிய மக்காவுக்குவர நினைத்து ஆபரணங்களைப்பூண் டழகு பொருந்தாநிற்கும் பாலியர்கள் பலர் பக்கத்திற் சூழும்படி அங்கிரு ந்து வெகுதூரத்தை யடைந்து அபுவாவென்று சொல்லும் தலத்தி னில் வந்து சேர்ந்தார்கள். (சுக)

ஆதி கற்பனை யூழ்விதிப் பயனும்வந் தடைந்து
போது நாட்களு நாழிகைக் கணக்கையும் போக்கி
நீதி மன்னவ ரப்துல்லா தமையறி நினைவாய்ச்
சோதிமென்முகமிலங்கிடத் துயில்வபோன் றிறந்தார்.

(இ-ள்.) நீதியையுடைய அரசரென்னும் அப்துல்லாவானவர் ஆதியான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் கட்டளையென்று சொல்லும் பழவினையான நியமிப்பின்பலன் தமக்குவந்து சேர்ந்து போகாநிற்கும் நாட்களையும் நாழிகையி ணெண்ணையும் போக்கித் தந் தன்மையை யின்னதென் றறியும் நினைவினராய்ப் பிரகாசத்தை யுடைய முகமானது விளங்கும்படி நித்திரைசெய்வதைப் போன்று நிரியாணமானார்கள். (சுஉ)

கூடிச் சூழ்ந்தவர் விதிப்பய னெனக்குலை குலைந்து
வாடி மன்னரை யெழில்பெற மணத்துட னடக்கிப்
பாடி யூரபு வாவைவிட் டகன்றுபோய்ப் பதியை
நாடி வந்தவ ராமினுக் கிவையெலா நவின்றார்.

(இ-ள்) அப்துல்லா நிரியாணமானபோது அவ்விடம் திரண்டு சூழ்ந்தவர்களாகிய பந்துக்க ளனைவரும் இவர் இவ்வா றிடைவழி யில் நிரியாணமானது விதியின்பயனென்று மிகப்பதறிவாடி அரச ரென்னும் அப்துல்லாவை மார்க்கவிதிப்பிரகாரம் அழகு பெரும்ப டிப் பரிமளத்தோ டடக்கஞ்செய்து சிற்றூராகிய அவ் வபுவாவைவி ட்டும் நீங்கிச் சென்று மக்காவாகிய நகரத்தை நாடிவந்து சேர்ந்து அவரெல்லாவரும் இவையெல்லாவற்றையும் ஆமினு அவர்களுக்குச் சொன்னார்கள். (சுங)

மாற்றங் கேட்டலு மடமயின் மனமுடைந் தலறித்
தோற்று மாமழை சொரிந்தெனக் கண்ணினீர் சொரியப்
போற்றுங் காழகிற் புகைக்குழ னிலம்புரண் டசையக்
கோற்றொ டிக்கரக் காந்தடா மரைமுகங் குழைக்க.

(இ-ள்.) இளமயிலாகிய ஆமினு அவர்கள் தமது நாயகராகிய அப்துல்லா நிரியாணமாயினரென்ற சமாசாரத்தைக் காதிற் கேட்டமாத்திரத்தில், உள்ளந் தளர்ந்து வாய்விட்டொலித்து தோற்றப் படும் பெரிய மேகமானது நீரைச்சொரிந்தாற்போல கண்களிலிருந்து சலமானதுசிந்தவும், வளர்க்கப்படும் வயிரமுள்ள வகிலினது புகையையுடைய கூந்தலானது நிலத்தின்கண் புரண்டசையவும், வளைந்த வளையல்களையுடைய கைகளாகிய காந்தட்பூக்கள் முகமாகிய தாமரைப்பூவைக் குழைக்கவும். (சச)

வருந்தி நொந்தழு தாமினு விடைதலும் வளைந்து
திருந்தி ழைக்கொடி மடவிய ரிரங்குத ரிரண்முத்
திருந்த சூல்வலம் புரியினைச் சூழ்ந்தசங் கினங்க
ளிரைந்தி றங்குவ போன்றது வெங்கணு நிறைந்தே.

(இ-ள்.) வருத்தமுற்று நொந்தழுது வசக்கேடானமாத்திரத்தில் செவ்வையாகிய ஆபரணாதிகளையுடைய கொடிபோலும் பெண்களெல்லாரும் ஆமினு அவர்களைச் சூழ்ந்திருந் தழுதலானது திரட்சிபொருந்திய ஆணிமுத்தின் வயிற்றின்கண் அமைவுற்றிருக்கும் தெய்வீகத்துவம் பொருந்திய வலம்புரிச்சங்கினைச்சூழ்ந்துள்ள மற்றச் சங்குக் கூட்டங்களெங்கும் பெருகி நிரையா யொலிப்பதை யொத்திருந்தது. (சரு)

சலித்து விம்மிய மயிலினைக் கண்டுமெய் தளர
வலித்த தோபகை விதிகொலோ மகப்பெறும் பலனோ
பலித்த தேதென வறிகிலோ மெனப்பதை பதைத்தே
யொலித்தை யோவென விரங்கின ரூரினி லுளரே.

(இ-ள்.) மக்காவென்று சொல்லும் அவ்வூரிலுள்ளார் பலர் அவ்வாறு சஞ்சலமுற்று அழுத மயிலாகிய ஆமினு அவர்களை வந்து பார்த்து இவ்வாமினுவுக்கு இங்ஙன மிலபித்ததற்குக் காரணம் இவர்க்கு நேர்ந்திராநிற்கும் விரோதமானது வன்மையுற்றதோ! அல்லது ஹக்குசுபுகானகுவத்த ஆலாவானவன் ஆதிகாலத்திற் கற்பித்த கற்பனையோ! மகவையீனப்புகும் பிரயோசனமோ! சம்பவித்

தது என்னவென்று யாங்களறிந்தே மிலேயேயென மிகப்பதைத்து அந்தோவென்று அலறி உடல்கள் தளரும்படி யழுதார்கள். (சசு)

உடுத்த பூழியிற் புதைமணி யெனவுட லொடுங்கி
வடித்த கண்ணினீ ரொழுகிட விருந்தபொன் மயிலே
யடுத்து வந்திருந் தன்புட னப்துல்முத் தலிபு
தொடுத்த துன்பங்க ளாற்றிநல் வழிபல சொன்னார்.

(இ-ள்.) இவ்வாறாகவிருக்கு மந்நேரத்திலே ஆமினு அவர்களின் மாமனாராகிய அப்துல் முத்தலிபானவர்கள் தரித்த பூழ்தியின் கண் புதைந்த விரத்தினத்தைப்போன்று கூர்மைபொருந்திய கண்களினின்றும் ஜலமானது சிந்தும்படி உடலமொடுங்கி யிருந்த அழகிய மயிலாகிய ஆமினு அவர்களை நெருங்கிவந் துட்கார்ந்து கிருபையோடும் அந்நாயகியைப்பற்றிய துன்பங்க ளெல்லாவற்றையும் ஒருவாறமர்த்திச் சன்மார்க்கமான பலவற்றையுமெடுத்துச் சொன்னார்கள். (சஎ)

இனத்து ளார்சொலு நல்வழிக் குருகிநெஞ் சிடைந்து
நினைத்த பற்பல துன்பமு மகற்றிநீ ணிலத்தி
லனைத்தை யும்விதித் தவன்செய வினையுமுற் றறிந்து
மனத்தி னிற்றெளி வாகினர் குலக்கொடி மயிலே.

(இ-ள்.) குலத்திற் கோர் கொடிபோலு மயிலாகிய ஆமினு அவர்கள் அப்துல் முத்தலிபு முதலிய அங்குற்றிருந்த பந்துக்களால் சொல்லும் சன்மார்க்கத்திற்காகக் கரைந்து மனமானது வசக்கேடுற்று எண்ணிய நானுவிதத் துன்பங்க ளெல்லாவற்றையும் நீக்கி நீட்சிபொருந்திய இப்பூமண்டலத்தின்கண் நடைபெறும் எல்லாக் காரியங்களையும் உண்டாக்கின கடவுளினது செயலையு முடிவற வறிந்து மனதின்கண் ஒருவாறு தெளிவாயினார்கள். (சஅ)

தவிசி ருந்துநன் னெறிமுறை நடத்துதா வூது
நபியுந் திங்களோ ரேழினிற் கனவினி னவின்றார்
அவியுங் காலமன் றுட்டத்துக் குரியவரானோர்
புவியி னிற்பெயர் முஹம்மதென் றிடுகெனப் போந்தே.

(இ-ள்.) கருப்பமாகிய வொப்பற்ற ஏழாமாதத்திலே ஆமினு அவர்களின் சொப்பனத்தில் ஆசனத்தின்கண் அரசாய் வீற்றிருந்து சன்மார்க்கத்தையும், அதனொழுங்குகளையும் நடத்திய நபிப்பட்டம்பெற்ற தாவூது அலைகிஸ்ஸலாமவர்கள்வந்து ஆமினுவே!

உன் வயிற்றின்கண் தங்கியிருக்கும் பிள்ளையானவர் இப்பிரபஞ்சம் அழியுங்காலத்தில் தமது கூட்டத்தாரின் பாவ மன்னிப்புக்காகக் கடவுளினிடத்தில் மன்றுடு மன்றுட்டத்திற்குரிய தன்மையை யுடையவர். அவருக்கு இப்பூமியில் முஹம்மதென்று பெயரிடுவா யாகவென்று சொன்னார்கள். (சகூ)

நலங்கொ டிங்களோ ரெட்டினிற் சுலையுமா னபிவந்
திலங்கு பூணணி மயிலனைய் நின்வயிற் றிருந்தோர்
பெலன்கொ ழும்மது னன்கிளைப் பேரொளி நபியாய்த்
துலங்க வந்தவர் பெயர்முகம் மதுவெனச் சொன்னார்.

(இ-ள்.) நன்மையைக்கொண்ட வொப்பற்றஎட்டாமாதத்திலே நபிப்பட்டம்பெற்ற சுலையுமான் அலைகிஸ்ஸலா மவர்கள் ஆமினு அவர்களின் சொப்பனத்தில்வந்து பிரகாசியாநிற்கும் ஆபரணங்களை யணிந்த மயில்போலும் சாயலையுடைய ஆமினுவே! உனது வயிற் றின்கண் இருக்கும் பிள்ளையானவர் வலிமைபெறும் அதுனனென் கிற வம்மிசத்தின் பெரிய பிரகாசத்தையுடைய நபியாகி எவ்விடத் தும் எக்காலத்தும் விளங்கவந்தவர். அவர்பெயர் முஹம்மதாக இரு க்குமென்று சொன்னார்கள். (ருய)

மாத மொன்பதி லாமினுக் கனவினின் மதித்தே
வேத நான்மறை நேர்வழிக் குரியவர் விளங்கக்
கோதை யேபெறின் முஹம்மது வெனப்பெயர் கூறென்
றுதி நாயகன் வரிசையீ சாநபி யறைந்தார்.

(இ-ள்.) கருப்பமாகிய ஒன்பதாமாதத்திலே முதன்மையான எப்பொருள்கட்கு மிறையவனாகிய அல்லாகுசுபுகானகுவத்த ஆலா வின் சங்கைபொருந்திய நபிப்பட்டம்பெற்ற ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் ஆமினு அவர்களின் சொப்பனத்தில் மதிப்பிட்டு வந்து கோதாய்! உனதுவயிற்றின்கண் ணிருக்கின்ற சந்ததியானவர் அறி வினையுடைய தௌறுத்து சபூறு இஞ்சீல் புறுகான் என்னும் நான் குவேதங்களினது நேரானமார்க்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்ட வர். அவரை எவ்விடத்தும் எக்காலத்தும் விளங்கும்படி நீபெறு வையாயின் முஹம்மதுவென அவருக்குப் பெயர் கூறுவாயாக வென்று சொன்னார்கள். (ருக)

ஈத லாவிமை யவர்தின மிடைவிடுத் திலராய்ப்
போது சேர்குழ லாமினுக் கனவினிற் போந்தே

யாதி தூதுவர் முஹம்மது பெயரென வதிக
நீதி யானமா ராயமே பெறநிகழ்த் தினரால்.

(இ-ள்.) இதுவேயுமன்றி வானவர்கள் தினமு மிடை விடாத வர்களாய் பூக்கள்பொருந்திய கூந்தலையுடைய ஆமினு அவர்களின் சொப்பனத்தில்வந்து ஆமினுவே! உனது வயிற்றின்கண் ணிருக் கும் பிள்ளை யானவர் முதன்மையான ஜல்லஷானகுவத்த ஆலாவி னது றசூலாகவிருப்பார், அவர் பெயராகிறது முஹம்மதா யிருக்கு மென்று மிக்க நீதியான சோபனத்தை அவ்வாமினு அவர்கள் பெறும்படி சொன்னார்கள். (ருஉ)

என்றும் வானவ ரிசைத்திடும் கனவெலா மெடுத்தும்
வென்றி நன்னபி மார்சொலுங் கனவெலாம் விரித்து
மன்ற லங்குழ லாமினு படிப்படி வகையா
நன்றி தேர்ந்தசொற் றுயர்க்குத் தினந்தொறு நவின்றார்.

(இ-ள்) வாசனைபொருந்திய அழகிய கூந்தலையுடைய ஆமினு அவர்கள் வானவரான மலக்குக ளெப்போது மிடைவிடாது வந்து சொல்லாநிற்கும் சொப்பனங்களெல்லாவற்றையுமெடுத்தும், வெற்றி யையுடைய நன்மையுள்ள நபிமார்கள் மாதந்தோறும் வந்து சொல் லாநிற்கும் சொப்பனங்க ளெல்லாவற்றையும் விளக்கியும், தரந்தர மாய் வகுப்பாக நன்மையைக் கசடறக் கற்றுணர்ந்த தாயாராகிய பர்றா அவர்களுக்கு அப்போதைக் கப்போது சொல்லிவந்தார்கள்.

பெற்ற தாயருங் கனவினின் பெற்றியைப் பிரித்தே
யுற்ற பேரொடு மனத்தொடுந் தெளிந்தறிந் தோர்ந்து
சொற்ற தம்மகட் குறிப்பெலாங் காண்குறத் துணிந்து
குற்ற மின்றிய முஹம்மதே பெயரெனக் குறித்தார்.

(இ-ள்) அவற்றைக் கேட்டமாத்திரத்தில் ஆமினு அவர்களை யீன்ற தாயாராகிய பர்றாவும் தம்மனத்துடனேயும் சேர்ந்த பேர்க ளுடனேயும் தம்முடைய மகளார்கண்ட சொப்பனத்தி னினிய தன்மையைப் பிரித்துத் தெளிவாய் ஆராய்ந்தறிந்து சொப்பனங் கண்டு சொன்ன தமது மகளாராகிய ஆமினு அவர்களின் அடை யாளங்க ளெல்லாவற்றையும் நாட்குநாட்கான யாதொரு குற்றமு மில்லாத முஹம்மதென்பதே அப்பிள்ளைக்குப் பெயராகுமென்று துணிவாய்க் குறிப்பிட்டார்கள். (ருச)

செறிந்த வார்குழ லாமினு வுரைத்தசெய் தியைக்கேட்
டறிந்து தாயதற் கெதிர்மொழி கொடுத்தலு மாராய்ந்

துறைந்த வல்லிருட் சீத்தெறி மதியென வோங்கி
நிறைந்த பேரொளி முகமலர் தரசயா நிகழ்த்தும்.

(இ-ள்.) நெருக்கமுற்ற நீண்ட கூந்தலையுடைய ஆமினா அவர்கள் சொன்ன சொப்பனத்தின் சமாசாரத்தை அவர் தாயாராகிய பர்ருவானவர் கேட்டு இன்னபடியென் றறிந்துகொண்டு அச்சமாசாரத்திற்கு மறுமொழிகொடுத்தமாத்திரத்தில், தங்கிய வலியவிருளைச் சீத்தெறியாநிற்கும் சந்திரனைப்போல வுயர்ந்து பெரிய பிரகாசம்நிறைந்த தமதுமுகமானது மலரும்படி சபாவெனும் பெண்ணனவர் சீர்தூக்கிச் சொல்லுவார். (௫௫)

திரிந்த பாலெனச் செறுத்துப்பண் ணேழையுஞ் சினந்து
விரிந்த தெண்டிரைக் கடலிடை யமுதென விளங்கிச்
சொரிந்த தேன்மொழி யாமினா வயிற்றினிற் சூலா
யிருந்த நாளெலாங் கனவலா லொழிந்தநாளிலையே.

(இ-ள்.) இயற்கைமாறிய பாலைப்போலவும் விரிவாகியதெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் உண்டாகும் அமுதத்தைப் போலவும் இசைகளேழையும் கோபித்து வெறுத்து விளக்கமாய்த் தேனைச்சொரிந்த சொற்களையுடைய ஆமினா அவர்களினது வயிற்றின்கண் கருப்பமுண்டாயிருந்த நாட்களிலெல்லாம் சொப்பனங் காண்டலேயல்லாமல் இல்லாதிருந்த நாளொன்றுமில்லை. (௫௬)

உள்ள கங்குளிர்ந் தருமறை மூன்றையு முணர்ந்தோர்
வள்ள லாகிய அப்துல்லா வயிற்றினில் வடிவாய்ப்
பிள்ளை யொன்றுதோன் றிடுமுகம் மதுவெனும் பெயரின்
எள்ள லின்றிய வுண்மைநன் னபியென விசைத்தார்.

(இ-ள்.) அரிய தௌறாத்து சபூறு இஞ்சீல் என்னும் மூன்று வேதங்களையும் தெளிந்த பண்டிதர்கள் அவ்வேதங்கள் கூறியவாற்றானே மனத்தின்கண் சந்தோஷப்பெருக்கால் மிக்கக் குளிர்ச்சியுற்று ஒருபிள்ளையானது அழகாய் வரையாது கொடுக்குந் தகைமையினரான அப்துல்லாவினது வயிற்றின்கண் உற்பத்தியாகி இவ்வுலகத்தில்வெளிப்படும். அப்பிள்ளை முஹம்மதுவென்னும் பெயரினதாகிய இகழ்வில்லாத உண்மையான நல்ல நபியாகுமென்று சொன்னார்கள்.

சொரியும் பூந்துகட் டடவைசூழ் சாமினிற் றேன்ற
லரிவை தன்னகத் தறிவினுந் தேர்ந்துணர்ந் தறிந்து

தெரியக் கூறிய பெரியவர் சொல்லினுந் தெளிந்து
வரிசை நேருமக் காவினில் விரைவினில் வந்தாள்.

(இ-ள்.) சொரியாநிற்கும் பூக்களது மகரந்தத்தையுடைய சோலைசூழும் ஷாமிராஜியத்து இராஜனதுமகளாகிய வொருபெண் மேற்படி பண்டிதர்கள் சொன்ன சொல்லைக் கேட்டு அதனுண்மையைத் தனது மனத்தறிவாலும் தெரியும்படி சொன்ன முதியோர்களது சொல்லாலும் ஐயந்திரிபற ஆராய்ந்தறிந்து தெளிந்து அதற்காக வேண்டிவரிசை பொருந்து மிந்த மக்கமாநகரத்திற்கு அதிசீக்கிரத்தில்வந்தாள். (ருஅ)

வந்து நல்வழிக் குரியவ ரிருக்குமக் காவிற்
சந்தனப்புயத் தப்துல்லாத் தமைமணம் புரியச்
சிந்தை நேர்த்தன ளவ்வுரை கேட்டுளந் திடுக்கிட்
டிந்த வூருளர் மிகுதிபேர் மணத்தினுக் கிசைந்தார்.

(இ-ள்.) அப்பெண் சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் வசிக்கும்படியான மக்கமாநகரத்தின்கன் வந்து சந்தனக் குழம்புபூசிய புஜங்களையுடைய அப்துல்லா அவர்களை விவாகஞ்செய்துக்கொள்ள வாக்குநேர்தலன்றி மனத்தோடு முடன்பட்டிருந்தனள். அவ்வாறுற்றுளென்னும் சமாசாரத்தை இந்தவூரிலுள்ளவர்க ளெல்லாவரும் கேள்வியுற்று மிகுந்தபேர்கள் ஆ! ஈதென்ன விபரீதமென்றேங்கித்தாங்களும் அப்துல்லா அவர்களை விவாகஞ் செய்துக்கொள்வதற்குச் சம்மதித்தார்கள். (ருகூ)

எனக்கு னக்கென மடந்தையர் மணத்தினுக் கிகலத்
தனக்கு நேரிலா னெழுதிய படிதனி முடிந்து
வனக்க ருங்குழ லாமினு வெனுமட மானைச்
சினக்கும் வேற்கரத் தப்துல்லா மணத்தொடுஞ் சேர்ந்தார்.

(இ-ள்.) அவ்வாருகப் பிரியப்பட்டுள்ள பெண்களெல்லாவரும் விவாகத்திற்குஅப்துல்லா எனக்காயிருப்பர்; உனக்காயிருப்பரென்று சொல்லி ஒருவர்க்கொருவர் பகைக்கத் தனக்கு நிகரில்லாதவனுகிய அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவானவன் ஆதிகாலத்தி லெழுதியபடி அவ்விவாகத்தினியதி ஒப்பற்றதாய் முடிந்து பகைவற்மேற் கோபியாநிற்கும் வேலாயுதந்தங்கிய கையினையுடைய அப்துல்லாவானவர் அழகிய கரிய கூந்தலையுடைய ஆமினுவென்னு மிளமானை விவாகத்தோடுஞ் சேர்ந்தார்கள். (௬௦)

அந்த வாறறிந் தரிவைய ரிங்கக ரனைத்து
மிந்து வாணுத லாமினு மனைவெறுத் திருந்தார்
கந்த மென்குழல் கருப்பமு முதிர்ந்தது காலம்
வெந்து வானவர் பிறரிலை யென்கொலோ விளைவே.

(இ-ள்.) அப்துல்லா ஆமினு அவர்களை விவாகஞ்செய்துக்கொண்ட அவ்வரலாற்றை யறிந்து விவாகத்திற்கு மனமிசைந்திருந்த மற்றப்பெண்களும் இம்மக்கமாநகர் முழுவதும் இளஞ்சந்திரனைப் போலுமொளி தங்கிய நெற்றியையுடைய ஆமினு அவர்களின் வீட்டை வெறுத்திருந்தார்கள் வாசனைபொருந்திய மென்மையான கூந்தலை யுடையாராகிய ஆமினுவினது கருப்பத்தின்காலமு முற்றியது. சுற்றத்தாரானவர்கள் தாய் முதலிய இரண்டொருவ ரன்றிப் பிறர் யாருமில்லை. அதனுல் விளைவதினி யென்னையோ ஒன்றுமில்லை. ()

மண்ணை ருந்திலள் புளிப்பையும் விரும்பிலள் வயிறோ
யுண்ணி ரந்தில மெய்பல வருந்தில வுதரக்
கண்ணி ருந்தபூப் பொன்றுமே கண்டில கனிமென்
பண்ணி ருந்தவாய் வெளுத்தில பலன்பெறும் படியே.

(இ-ள்.) மகவையீன்று பலனைப்பெறும்படி ஆமினுமற்றக் கருப்பஸ்திரீகளைப்போல மண்ணைத் தின்றிலள், புளிப்புக்களை விரும்பி அருந்திலள், வயிற்றி னுட்புறத்தும் கருப்பத்தினுலுண்டாகும் வருத்தமானது கலந்திலது, சரீரம் பலவகையாய் வருத்தமுற்றிலது, வயிற்றின்கண்ணிருத்தற் பாலதான சூதகக்குறியொன்றும் வெளிப்படக் கண்டிலது, தொண்டைக் கனிபோலு மெல்லிய இசைகள்குடியிருக்கும், வாயானது வெளுத்திலது. (௬௨)

சிறுத்த மெல்லிடை பருத்திருந் திலதிரு வுதரம்
பொறுத்து வீங்கில வுந்திமேற் புடைத்தில பொருப்புங்
கறுத்தி ருந்தில பசுநரம் பெழுந்தில கவின்கள்
வெறுத்தி ருந்தில கருப்பமென் றழகுறும் விதமே.

(இ-ள்.) அன்றியும் சிறிதாகிய மெல்லிய விடையானது பருமையாயிருந்திலது, தெய்வீகத்துவ வயிறுானதும் பாலனைச் சுமந்து வேண்டியவளவும் பருத்திலது, நாபியும் மேலே எழும்பித் தோன்றிலது, தனபாரங்களும் முகத்திற் கறுப்புற்றிருந்தில்லன, பசிய நரம்புகளும் ஆங்காங்கு எழும்பி யில்லன, அவயவத்தி னழகுகளும் வெறுப்புற்றிருந்தில்லன, சூலென அழகுபொருந்தும் வகையிவை.

என்றும் பற்பல மொழிந்துச பாசலித் திருப்ப
மன்ற லங்குழ லாமினு கருப்பமும் வலியு
மின்று தோன்றுவ தெனவெடுத் தியம்பின ரிலங்கும்
வென்றி வேல்விழி மடந்தையர்க் கிவைசொலி விடுத்தார்.

(இ-ள்.) மேலேகூறியனவேயுமன்றி இன்னும் அனேக விதங்களாகவும் சபா அவர்கள் சொல்லிச் சலிப்புற்றிருக்க, வாசனைபொருந்திய அழகிய கூந்தலையுடைய ஆமினுவானவர்கள் கருப்பமுமதன் நோவும் இப்போது வெளிப்படுகின்றதென்று தமது தாய்முதலாயினூர்க்கு எடுத்துச்சொன்னூர்கள். அப்படி அவர்கள் சொன்னமாத்திரத்தில் அவர்களின் தாய்முதலாயினுர் பிரகாசியாநிற்கும் வெற்றியையுடையவேல்போலுங் கண்களையுற்ற அந்நியபெண்களுக்குப் பிள்ளைப்பேற்றின் விஷயமான இவற்றைச்சொல்லியாள்விட்டார்கள்.

உரைத்த வாசகங் கேட்டலு மங்கருறைவோ
ரிசைத்த டங்கலு மொருமொழிப் படவெடுத் திசையா
வரைத்த னிக்கொடி யாமினு மனையினின் மறந்துங்
கரத்தலாயினும் வருவதில் லெனக்கழ றினரே.

(இ-ள்.) தாய் முதலாயினுர் விடுத்த ஆள் சென்று சொன்ன சொல்லைக் கேட்டமாத்திரத்தில்; அந்த மக்கமாநகரத்தில் வசிப்போராகிய பெண்க ளனைவரும் ஆமினு அவர்களின் மகப்பேற்றிற்கு வரச்சம்மதியாமல் ஆரவாரித்து மலைமேலுள்ள ஒப்பற்றகொடிபோலும் ஆமினு அவர்களது வீட்டில் மறந்தேனும் அல்லது ஒளித்தேனும் யாங்கள்வருவதில்லையென்று ஒரே சொல்லாகச்சொன்னூர்கள்.

உற்ற வாய்மையைக் கேட்டலு மாமினு வுலைந்து
குற்ற மேதுநம் மிடத்தென மனத்தினிற் குறித்துப்
பெற்ற சூல்வலி யடிக்கடிப் பெரிதெனப் பதறி
வெற்றி வாட்கரத் தப்துல்முத் தலிபுக்காள் விடுத்தார்.

(இ-ள்.) அப்பெண்களைக்கூப்பிட்டுப்போன ஆள் திரும்பிவந்து சொன்ன சொல்லை ஆமினு அவர்கள் காதாற் கேட்டமாத்திரத்தில் உலைந்து வருந்தி அவர்கள் நம்மனைக்குவர மறுப்பதற்கு நம்மிடத்திலுள்ள குற்றம் என்னவென்று மனத்தினுற் குறிப்பிட்டு, பெற்றிருக்கின்ற கருப்பத்தின் வருத்தமானது அப்போதைக்கப்போது பெரிதாகின்றதேயென்று நடுங்கி வெற்றிதங்கிய வாளாயுதத்தைக் கொண்ட கையையுடைய அப்துல் முத்தலிபுக்குத் தமது நோவைச் சொல்லி ஆள்விட்டார்கள். (௲௬)

சருவு வேல்விழி மடந்தையர் விடுத்தவர் சாற்றக்
குரிசில் கேட்டவ ரவர்க்கெலாம் வகைவகை கூறி
வருக வென்றலுங் கொடியிடைப் பிடிநடை மடவா
ரொருவ ரும்மவண் புகுவதில் லெனமறுத் துரைத்தார்.

(இ-ள்.) கொளுவிப்போதலான வேல்போலுங்கண்களையுடைய பெண்ணாகிய ஆமினா அவர்களா லனுப்பப்பட்டவர் ஆங்கு போய் சொல்லப் பெருமையிற் சிறந்தோராகிய அப்துல் முத்தலிபானவர் கேள்வியுற்று அவ்வவர்கட்குத் தரந்தரமாக மகப்பேற்றின் விடயத்தைக் குறித்துச் சொல்லவேண்டுவன வெல்லாம் சொல்லி நீவிர் எம் மனையகத்து வரல்வேண்டுமென்று சொன்னமாத்திரத்தில்; கொடி போலும் இடையினையும் பெண்யானைபோலும் நடையினையுமுடைய அந்தப் பெண்கள் எங்களு ளொருவராகிலும் அவ்வாமினாவின் வீட்டில் புகுவது ஒருகாலத்திலு மில்லையென்று மறுத்துரைத்தார்கள்.

மஞ்சு வாழ்குழ லாமினா வுரைத்தது மறுத்தா
ரின்சொற் கூறினு மழைக்கவு மனமிரங் கிலரென்
றஞ்சி யுள்ளகம் புழுங்கினின் றப்துல்முத் தலிபு
தஞ்ச மீதெனக் கஃபத்துல் லாதனைச் சார்ந்தார்.

(இ-ள்.) அப்பெண்கள் வருதற்கு மறுத்தமாத்திரத்தில், அப்துல் முத்தலிபானவர்கள் இவ்வூர்ப்பெண்கள் அழகு குடியிருக்குங் கூந்தலையுடைய ஆமினா அவர்கள் சொன்ன சொல்லையும் மறுத்தார்கள், அன்றியும் இனிமையான சொற்களைக்கூறி நாம் அழைக்க அதற்கும் மனமிரங்கினாரில்லரென்று அச்சமுற்று மனத்தினுட் புழுக்கமாகி நின்று இனி நமக்குத்துணை யிதுதானென்று கஃபத்துல்லாவுக்கு வந்தார்கள். (சூஅ)

வடிவி ருந்தொளிர் கஃபத்துல் லாதனை வலமாய்க்
கடிதிற் றுன்புற வருங்கரு மாரியின் களையாற்
கொடியி டைப்பர தாபமும் வருத்தமுங் கூறி
நெடிது யிர்த்தயர்ந் திரந்து கொண் டிருக்குமந் நேரம்.

(இ-ள்) அங்ஙனம்வந்த அப்துல்முத்தலிபானவர்கள் அழகானது மாறாதுகுடியிருந்துபிரகாசியாநிற்கும் கஃபத்துல்லாவைப்பிரதக்கணமாய்வந்து துன்பத்தைப்பொருந்த விரைவினில்வரும் பிரசவவேதனையால்கொடிபோலும் இடையினையுடைய ஆமினா அவர்களுக்கு உண்டாகும் பரிதாபத்தையும் வருத்தத்தையுஞ்சொல்லி நெடுமூச்சுவிட்டுக்களைத்துப்பிரார்த்தித்துக்கொண்டிருக்கின்றஅந்தநேரத்தில்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அரிய மெய்ப்பொருளா யளவிடற் கரியோ
 னருளின னமரர்கள் சொர்க்கத்
தெரிவையர் பறவைக் குலங்கண்மற் றெவையுஞ்
 செழும்பொழிற் செகதலத் திறங்கி
வரிஞிமி றுதறிக் கருங்குழன் முடித்த
 மடக்கொடி ஆமினு மனையி
னிரைநிரை செறிந்தங் கவருரை மறுது
 நின்றிடும் பணிவிடைக் கெனவே.

(இ-ள்.) கிடைத்தற் கரிதான சத்தியவத்துவாய் இன்னபடி யென்றளவிடற் கருமையானோனாகிய ஹக்குசுபுகானகுவத்த ஆலா வானவன் வானவர்களையும், சுவர்க்கத்துப் பெண்களாகிய அரம்பையர்களையும், சுவர்க்கத்தின்கண்ணுள்ள பட்சிசாதிகளெல்லாவற்றையும், செழுமை தங்கிய சோலையையுடைய பெரிய பூமண்டலத்தின் கண்ணிறங்கி வரிபடர்ந்த வண்டினங்களைச் சிதறவீசிக் கரிய கூந்தலைமுடித்த இளங்கொடிபோலும் ஆமினு அவர்களினது மனையின் கண் அணி யணியாய் நெருங்கி அவர்களது சொல்லை மறுக்காமல் ஏவல்கேட்டு நில்லுங்களென்று ஆக்கியாபித்தான். (எம)

கருவினிற் றோன்று தொளிவினி லுருவாய்க்
 கண்ணிமைத் துண்டுறங் காத
பெருவடி வழகாய்க் குழுவுடன் றிரண்டு
 பெரியவ னுரைமறு தெழுந்து
விரிகதிர்க் ககனம் புடவிமட் டொழுங்காய்
 விண்ணவ ரெண்ணிறந் தனையோ
ரருவரை யனையா ருருவமுஞ் சிறிதா
 யாமினுத் திருமனை சூழ்ந்தார்.

(இ-ள்.) கருப்பத்தின்கண் உற்பத்தியாகாமல் பிரகாசத்தினுற் காண்டற்கரிய சுரூபமாகிக் கண்களை மூடித்திறக்காதவும், உணுமுதலியன உண்ணுதவும், நித்திரைசெய்யாதவுமான இயற்கையினையுடைய வானவர்கள் கணக்கற்றுற்போன்றவர்கள் பெரியவடிவங்கள் அழகினவாகிக் கூட்டத்தோடு திரளாய்ப் பெரியோனாகிய ஜல்லஷானகுவத்த ஆலாவினது ஏவலாகிய சொல்லை மறுக்காமலெழுந்து விரியாநிற்கும் பிரகாசத்தையுடைய வானந்தொடங்கிப் பூமண்டலம்

வரையும் அணியணியாய் அரியமலைகளையொத்தவர்களாகிய அவ்வானவர்கள் தமதுருவங்கள் சிறிதாகி ஆமினு அவர்களினது தெய்வீகத்துவம் பொருந்திய வீட்டினைச் சூழவிறங்கினார்கள். (எக)

தேன்பெருக் கொழுகி வழிதருங் கனிகள்
சிதறிடுஞ் சோலைவாய்த் தெளிந்த
வானதி மூழ்கித் துகிலெடுத் துடுத்து
வளைபணித் தொகையெலா மணிந்து
கான்மலர் முடித்துக் கடுவரி வடிவேற்
கண்களி லஞ்சனங் குலவச்
சூன்முதி ராமி னுமனை யிடத்திற்
சூழ்ந்தனர் விண்ணவர் மகளிர்.

(இ-ள்.) தேவமகளிரான வரம்பையர்கள் பலர் தேனினதுபெருக்கானதுவார்ந்து வழிதலைத்தராநின்ற பலவகைக்கனிகளைச் சிதறிடும் சோலையின்கணுள்ள தெளிவுற்ற பரிசுத்தமான சுவர்க்கத்துஆற்றின்கண் ஸ்நானஞ்செய்து சித்திரப்பூம் பட்டாடைகளையெடுத்து அணிந்துகைவளையோடு பலவகை யாபரணத் தொகுதிகளெல்லாவற்றையுந் தரித்து வாசனைபொருந்திய பூக்களை கூந்தலிற்சூடி விடந்தங்கிய வரிகள்படர்ந்த கூர்மையான வேல்போலுங் கண்களில் எழுதப்பட்டமையானது பிரகாசிக்கும்படி பிரசவகாலத்தை யடைந்திராநிற்கும் ஆமினு அவர்களினது தெய்வீகமுற்ற வீட்டின்கண் சூழவிறங்கினார்கள். (எஉ)

மறுவறுத் திருந்த நிறைந்தபூ ரணமா
மதிக்குலந் திரண்டுவந் ததுவோ
வுறைதரு மமுதத் திரளைக ளுருவா
யொழுங்குடனெழுந்திடுந் திரளோ
கறைபடாச் சுவனக் காட்சிவாழ் வனைத்துங்
கலந்துட னிலங்கிவந் ததுவோ
குறைபடாச் சுவனத் தருவினி லுதித்த
கொழுங்கதிர்ச் செழுங்கனிக் குலமோ.

(இ-ள்.) அவ்வரம்பைகளினது தோற்றம் களங்கத்தை யறச்செய்து இருக்கப்பெற்ற நிறையின் வரைகண்டபெருமை பொருந்திய சந்திரன் களினதுகூட்டம் ஒன்றாய்க்கூடி இப்புவனத்தின்கண் வந்துவிட்டதோ! அல்லது சுவர்க்கத்தி லிராநிற்கும் அமுதக்கட்டிகள்

பெண்ணுருவங் கொண்டு நிரை நிரையாய்த் தோன்றிடுங் கூட்டமோ! மாசென்பதே யணுகாத சுவர்க்கத்தினது அற்புதமாகிய வாழ்க்கைகளெல்லா மொன்ருய்ச்சேர்ந்து பிரகாசித்து வந்துவிட்டதோ! குற்றப்படாத அந்தச் சுவர்க்கத்தினது விருட்சங்களி லுற்பவித்த கொழுவிய பிரகாசத்தையுடைய செழியகனிவர்க்கங்களோ.

அணித்துலைக் கனலி லுருக்கிடா தொளிரு
  மாயிரங் கோடிமாற் றெனவுங்
கணித்திடாப் பசும்பொ னெடுத்தெடுத் தமைத்த
  கவின்குலங் கூண்டெழுங் கணமோ
மணிக்கதி ரிழைத்துத் திரட்டிவைத் துருவ
  வடிவமைத் தெழுந்திடுங் குழுவோ
துணித்துமின் குலங்கண் மறைபடா தெழுந்த
  தொகுதியோ வெனவறி கிலமால்.

(இ-ள்.) கொல்லனுலைத் தீயிற்சமீபம்வைத்து உருகச்செய்யாதுதானேபிரகாசிக்கின்ற ஆயிரமாகப் பெருகியகோடியளவான உயர்த்தியாகிய பசியநிறத்தினையுடைய பொன்னை வாரிவாரிச் செய்யப்பெற்ற வழகினங்கூடி யெழுந்தகூட்டமோ! நவரத்தினங்களதுபிரகாசங்களைக்கலப்பித்துத்திரளச்செய்து வைத்துசுரூபவழகாகச்செய்யப்பட்டெழுந்தகூட்டமோ! அல்லது மின்னற்குலங்களானவை துணிக்கப்பட்டு மறைவுபடாதெழுந்த கூட்டமோ! என்னவோ யாமறியேம்.

இருட்டடைகிடக்குங் கருங்குழற் பின்ன
  லெழுபதி னுயிர மிலங்க
விரித்தபொன் னிழைப்பூந் துகிலுமே கலையும்
  விட்டொளிர் வீசிடத் துலங்கத்
தரித்தமுத் தார முடுக்குல மணைத்துந்
  தான்குடி யிருந்தெனத் தயங்கக்
கரித்தகண் ணிமையா முலைக்குவ டசையாக்
  கன்னியர் திரண்டிருந் தனரால்.

(இ-ள்.) கருமையாகிய கண்க ளிமையாதவும் முலைகளினுச்சியசையாதவுமான பெண்களாகிய வரம்பையர்கள் இருளானதுநீங்காதுவீற்றிருக்கும் கருமையான கூந்தல்களில்ஒவ்வொருவருக்கும்எழுபதினுயிரம் எழுபதினுயிரம் சடைகளானவை பிரகாசிக்கவும் பொன்னினலாய நூற்களை விரிவாக்கிநெய்யப்பட்டசித்திரப்பூம்பட்டாடைகளும்

மேகலாபரணங்களும் ஒளிவிட்டெறிந்திடும்படி துலங்கவும் தரிக்கப்பட்ட முத்துமாலைகள் நட்சத்திரக் கூட்டமெல்லாம் வந்து குடியிருந்தாற்போல விளங்கவும், ஆமினு அவர்களின் பாகங்களின் கூடியேவல் பார்த்திருந்தார்கள். (எரு)

பண்ணமைத் தீஞ்சொ லரம்பையர் மேனிப்
பரிமளந் தெருவெலாங் கமழ
விண்ணகத் திரவிக் கதிரொளி மணிகள்
விடுவெயில் விழுதுவிட் டொழுகத்
தண்ணகைத் தாளக் கதிரு டுணிப்பத்
தரையெலாம் பொன்மைபோர்த் திருப்ப
மண்ணகத் திருந்த ஆமினு மனையை
வானவர் பதியென லாமால்.

(இ-ள்.) இசைகளேழு மமைந்திராநிற்கு மினிய சொற்களையுடைய அரம்பையர்களது சரீரப் பரிமளமானது அம்மக்கமா நகரத்து வீதிகளெல்லாம் பரிமளிக்கவும், ஆகாயத்தின்கண்ணுள்ள சூரியனது கிரணங்களைப்போலுமொளியினையுடைய அவர்களது ஆபரணங்களில் தங்கும் இரத்தினங்கள் விடப்பட்ட பிரகாசமானதுவிழுது விட்டுவாரவும். அவர்களின் குளிர்ச்சிபொருந்திய தந்தங்களாகிய முத்துக்களினதுபிரகாசமானது அந்தகாரத்தை யறுக்கவும், அந்த மக்கமாநகரம் முழுவதும் பொன்மயமே போர்த்திருக்கவுமான காரணம்பற்றி இப்பூமண்டலத்தின்கண் ணிருந்த ஆமினு அவர்களின் வீட்டைச் சுவர்க்கலோகமென்று சொல்லலாம். (எசு)

பறவைக ளளைத்து மேவலின் படியே
படியினு மந்தர மனைத்து
நிறைதரப் பெருக வதிலொரு வெண்பு
ணித்திலக் கதிர்கள்கான் றொழுக
வுறைதரு மாமி னுதிரு மனையி
னுட்புகுந் தெதிர்வரு வதுகண்
டுரைதர மனமும் பயந்திட வொதுங்கி
யஞ்சிநின் லதிசயத் தனரே.

(இ-ள்.) அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவி னுத்தரவின்பிரகாரம் வந்த சுவர்கத்துப் பட்சிசாலங்களெல்லாம் பூமியின் கண்ணும் ஆகாச முழுவதிலும் நிறைவினைத்தரும்படி பெருகியவுடன் அப்ப

றவைகளுள் ஒருவெள்ளைப்பறவையானது முத்தின் பிரபைகள்வீசி யொழுகும்படி ஆமினு அவர்கள் இருக்கப்பட்ட தெய்வீகத்துவம் தங்கிய வீட்டினுள்ளேபுகுந்து தமக்குஎதிராய்வருவதை ஆமினுஅவர்கள் கண்டுமனம் பறையடிப்பப் பயங்கொண்டு விலகி அச்சமுற்று நின்று ஆச்சரியப்பட்டார்கள். (எஎ)

வருந்திநொந் திருந்த வாமினு திருமுன்
  வந்துநின் றழகுறும் வெண்பு
ளிருந்தவெண்சிறையை விரித்தொளி சிறந்தே
  யிலங்கிட வீசிய காற்றாற்
பொருந்திய சரீர வேர்வையுந் தீர்ந்து
  புளகெழச் சிலிர்த்தன ரோமந்
திருந்திழை மனத்துட் பயங்கர மகன்று
  தேகமுங் குளிர்ந்தது வன்றே.

(இ-ள்.) அங்ஙனம்வந்த அழகுபொருந்திய அந்தவெள்ளைப்பட்சியானது பிரசவவேதனையால் வருத்தமுற்றுப் பலவீனமாயிருந்தஆமினுஅவர்களின் மேலான சமுகத்தில்வந்துநின்று தனக்கிருக்கும் வெள்ளிய இருசிறகுகளையும் பரப்பிப் பிரகாசமானது சிறந்து ஜொலிக்கும்படி வீசின அக்காற்றினுல் சரீரத்திற் பொருந்திய வெயர்வையுமொழிந்து உரோமங்களும் புளகமெழும்படிச் சிலிர்த்தன. அதனுல் திருந்திய ஆபரணங்களையுடைய ஆமினு அவர்களினது மனத்துள்ளேயிருந்த அச்சமும் நீங்கித்தேகமுங் குளிர்ச்சியடைந்தது. (எஅ)

அண்டரி லொருவர் மரகதக்கிண்ணத்
  தமுதினை யேந்திவந் தடுத்துக்
கொண்டவர் கொடுப்பக் கூறுலீன் வாங்கிக்
  கொடியிடை மடமயிற் கிய
முண்டகக் கரத்தாற் றங்கியே பருக
  முதிர்பர தாபமும் நீங்கிக்
கண்டெனு மொழியார் கருப்பநோ யகன்று
  கலக்கமுந் தெளிந்தன ரன்றே.

(இ-ள்.) அப்போது வானவர்களி லொருவர் சுவர்க்கத்துப் பச்சை இரத்தினத்தினுலாய ஒருகிண்ணியில் தேவாமிர்தத்தைக் கையினுற்றங்கிவந்து ஆமினுஅவர்களைநெருங்கியிருக்கப்பட்டவர்களாகியஅரம்பையர்கள்வசம்கொடுக்க; அதைக்கூறுலீனென்று சொல்லப்பட்ட

வொரு அரம்பைப்பெண் வாங்கிக் கொடிபோலும் இடையினையு டைய இளமயிலாகிய ஆமினு அவர்களுக்குக் கொடுக்க, அவர்கள் அதைத்தமது தாமரைமலர்போலுங் கைகளால் வாங்கி யேந்திக் குடிக்கக் கற்கண்டென்று சொல்லும் சொல்லினையுடைய அவ்வா மினு அவர்களின் பிரசவவேதனைநீங்கி முற்றிய பரிதாபமு மொழி ந்து மனக்கலக்கமுந் தெளிந்தார்கள். (எசு)

பொன்னொளிர் கவினு முறக்குழைத்தெழுது
பூந்துகில் வெண்ணிறங் கவின
மின்னொளி கரப்பக் கதிர்விடுங் கலையை
விரைந்தொரு தட்டினி லேந்திப்
பன்னிய வமரர் தொகையினி லொருவர்
பரிவுடன் கொணர்ந்ததை வாங்கி
யன்னமோ மயிலோ வெனுமொரு மடமா
னுமினுத் திருக்கையி லீந்தார்.

(இ-ள்.) நெருங்கியவானவர் கூட்டத்திலுள்ள வொருவர்பொன் னையும் பிரகாசிக்கின்ற வழகையும் ஒன்றுய்ப் பொருந்தக் குழை த்து எழுதிய சித்திரப்பூம் பட்டாடைகளுள் மின்னலினது பிரபை யானதுமறையும்படியாக வெள்ளிய நிறத்தினையுடைய கிரணங்களை யெறியாநிற்கும் ஒரு ஆடையை அழகுபொருந்த வொரு பொற்றட் டத்திலேந்தித் துரிதமாய் அன்போடு கொண்டுவந்ததை நடையா லன்னப்பட்சியோ! சாயலான் மயிலோ! என்று சொல்லும் அரம் பையர்களுள் ஒரு இளமானுகிய பெண் வாங்கி ஆமினு அவர்களி னது சிறந்த கையிற் கொடுத்தார். (அ0)

செவ்விவீற் றிருந்து முகமதி யிலங்குந்
திருந்திழை யாசியா தமையு
மவ்வலங் குழலார் மறியமென் றுரைக்கு
மயிலையு மரம்பையர் தமையுங்
கவ்வையங் கடல்சூழ் புடவியிற் சிறந்த
காட்சிசேர் மக்கமா நகரி
னவ்விவேல் விழியா ராமினு விருக்கு
நறைமனை புகவிறை யுரைத்தான்.

(இ-ள்.) அல்லாஜல்லாஷானஹூவத்த ஆலாவானவன் அழகா னது குடியிருந்த முகமாகிய சந்திரன்என்றும் பிரகாசிக்கின்ற திருந் திய ஆபரணங்களையுடைய ஆசியாவையும் வனமல்லிகைப்பூ மலிந்த

அழகிய கூந்தலையுடையோரான மறியமென்று சொல்லும்மயில்போர் ல்வாரையும், வேறு சில தெய்வப்பெண்களையும், ஒலியையுடைய அழகிய கடலானது சூழ்ந்த பூலோகத்திலே சிறப்பான அற்புதம் பொருந்திய மக்காவென்னும் மகாநகரத்திலிருக்கும் மானையும் வேலை யும்போன்ற கண்களை யுடையாராகிய ஆமினு அவர்கள் வசிக்கின்ற வாசனைபொருந்திய வீட்டின்கண் புகுதும்படி கட்டளையிட்டான்.

இறையவ னுரைப்பச் சுவனமா மடவா
 ரெங்கணும் பரந்தெழு மொழுங்கு
மறியமு மழகு பழுத்தொளி ததும்பு
 மானனு ராசியா தாமு
நிறைமதி யிரண்டு வானகத் திழிந்து
 நிலத்திடை யுடுவொடுந் திரண்டே
யறைகழல் சிலம்ப வருவபோல் வந்தங்
 காமினுத் திருமனை புகுந்தார்.

(இ-ள்.) அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் அவ்வாறு சொன்னவுடனே அழகு முதிர்ந்து பிரகாசம் வழியாநிற்கும் மான் போல்வாராகிய ஆசியாநாயகியும், மறியம் அலைகிஸ்ஸலா மவர்களும், சுவர்க்கத்து மகிமையையுடைய அரம்பையர்க ளெவ்விடத்தும் பர வி எழும்பிய முறைமையானது பூரணப்பட்ட விரண்டு சந்திரன்கள் நட்சத்திரக் கூட்டத்தோடுகூடி ஆகாயத்தின்கண் ணின்றிறங்கிப் புகழும்படியான பாதசரங்கள் சப்திக்கப் பூலோகத்தின்கண் வருவது போல அம்மக்கமா நகரத்தில்வந்து ஆமினு அவர்களின் தெய்வீ கத்துவம்பொருந்திய வீட்டின்கண் பிரவேசித்தார்கள். (அஉ)

படித்தலம் புகலு மாமினு வலது
 பாரிசத் தாசியா தாமும்
வடித்ததெள் ளமிர்த மெனுமொழிக் குதலை
 மறியமு மிடதுபா ரிசத்தி
லடுத்தவப் பொழுதி லரம்பையர் சிலர்வந்
 தணிமுழந் தாடுடை கணைக்கால்
பிடித்தடி வருடி நின்றனர் மனையும்
 பேரொளி பிறங்கின தன்றே.

(இ-ள்.) பூமிமுழுவதும் புகழ்ந்து பேசப்படும் ஆமினு அவர்க ளின்வலது பக்கத்தில் ஆசியா நாயகியும், இடது பக்கத்தில் வடிக்கப்

பட்டதெள்ளியவமிர்தமென்று சொல்லாநிற்கும் குதலைச்சொல்லினை யுடையமறிய மலேகிஸ்ஸலாமவர்களும், நெருங்கியவந்நேரத்தில்; தெய்வப்பெண்களிற் சிலர்வந்து ஆமினு அவர்களினழகிய முழங்காற்களையும் துடைகளையும் கணைக்காற்களையும் பிடித்துப் பாதங்களைத் தடவி நின்றார்கள். (வீடானது பெரியபிரகாசத்தாற் சொலித்தது.)

மடந்தையு மகப்பே றடுத்திடுஞ் சமயம்
  வானவர் குழுவினை நீந்திக்
கடந்துவந் தொருவர் நின்றன ரவர் செங்
  கரத்தினிற் கிண்ணமொன் றேந்தி
யிடங்கொளா துறைந்த கூறுலீன் களிலோ
  ரேந்திழை கடிதினில் வாங்கி
யடர்ந்திலம் புகுந்து கொடுப்பதைப் பருகி
  யாமினு மகிழ்ந்தன ரகமே.

(இ-ள்.) அங்ஙனமாக ஆமினு அவர்கட்குப் பிள்ளையைப் பெறுங்காலம் சமீபித்திடுந் தருணத்தில் மலக்குகளின் கூட்டத்தை நீங்கி ஒருமலக்கானவர் அவ்விடத்தைக் கடந்துவந்து அவர் தமது செவ்வியகையிலே யொருகிண்ணியை ஏந்திக்கொண்டு நின்றனர். இடங்கொள்ளாமல் விற்றிருந்த அரம்பையர்களி லொரு அரம்பைப்பெண் அக்கிண்ணியை விரைவாகவாங்கி அங்கு நெருங்கியவர்களை நெருக்கி மனையினுட் புகுந்து கொடுக்க அக்கிண்ணத்திலுள்ள பானத்தைக் குடித்து ஆமினு அவர்கள் மனமகிழ்ச்சி யடைந்தார்கள். (அச)

பானகம் பருக வொளிவும்வந் திறங்கிப்
  பகலவன் கதிரெனப் பரப்ப
வானவர் மகளிர் மருத்துவம் புகுத
  மறியமு மாசிய தாமுந்
தேனவிழ் பதுமச் செழுங்கரங் கொடுத்துச்
  சேர்ந்தணைந் தருகுறச் சிறந்த
கானமர் குழலா யஞ்சலென் றுரைப்பக்
  கனிந்திள கினகருப் பமுமே.

(இ-ள்.) ஆமினு அவர்கள் அந்தத் தேவபானகத்தைக் குடித்த மாத்திரத்தில் ஒரு பேரொளியானது வானத்திலிருந் திறங்கிவந்து சூரியனது கிரணங்களைப்போலத் தனது கிரணங்களைப் பரவச்செய்யவும், அங்குற்ற தெய்வப்பெண்களிற் சிலர் பிரசவ வைத்தியத்திற்

பிரவேசிக்கவும், மறிய மலேகிஸ்ஸலாமவர்களும், ஆசியா நாயகியும், வாசனைவிரியும் தாமரைப்பூப்போன்ற செழிய கைகளை ஆமினு அவர்களுக்குச் சார்பாகக் கொடுத்து அவரருகிற் பொருந்தும்படிச் சேர்த்தணைத்து சிறப்பான வாசனைபொருந்துங் கூந்தலேயுடைய ஆமினுவே! "நீ அஞ்சாதே" என்று சொல்லவும், கருப்பமானது கனிவாய்நெகிழ்ந்தது (அ௫)

கோதறப் பழுத்து மதுரமே கனிந்த
   கொவ்வையரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி யேவல்செய் திருப்பச்
   செழுங்கம லாசனத் திருந்த
மடதருக் கரசி யாமினு வுதர
   மனேயிடத் திருந்துமா நிலத்தி
லாதரம் பெருக நல்வழிப் பொருளா
   யகுமது தோன்றின ரன்றே.

(இ-ள்.) சக்கையறப் பழுத்து இன்பங்கனிவான கொவ்வைக் கனிபோலும் வாயையுடைய தெய்வப்பெண்கள் பலர் வாழ்த்துதலேச்செய்துக் குற்ற மொழியும்படி ஆமினு அவர்களை நெருங்கித் தொண்டுசெய்திருக்கும்படியாக அஹ்மதுஎன்னுந் திருநாமத்தையுடைய நபிமுகம் மது சல்லல்லாகு அலேகிவசல்ல மவர்கள் செழுமை தங்கிய தாமரைமலராசனத்தின்கண் வீற்றிருக்கும் இலக்குமிகட்கு அரசாகிய ஆமினு அவர்களினது வயிறென்னு மனேயிடமிருந்து ஆதரவுபெருகும் சன்மார்க்கவஸ்துவாய் இப்பெரிய பூலோகத்தின் கண் ணுதித்தார்கள். (அசு)

கிடந்தொளி பரப்பி வாசங்கொப் பளித்துக்
   கிளர்கிபு லாவைமுன் னேக்கி
யிடங்கொளந் தரநேர் சிரசினே யுயர்த்தி
   யெழில்பெறச் சுஜூதுசெய் திணைத்தாட்
டிடம்பெற மடித்துக் குறியிடக் கையாற்
   சேர்த்தொளிர் வலக்கைகான் மேல்வைத்
திடனணிக் கலிமா விரலினே யுயர்த்தி
   யுதித்தனர் முகம்மது நபியே.

(இ-ள்.) கிடந்த பிரகாசத்தைப் பரவச்செய்து நறுநாற்றத்தைக்கக்கி விளங்காநிற்கும் கிபுலாவென்னுந் தானத்தை யெதிர் நோக்கிக் கொண்டும் விசாலமாகிய விடத்தைக்கொண்ட ஆகாசத்திற்கு நேராகச்சிரசை யுயர்த்தி அழகுபொருந்தும்படி சுஜூது சொய்துக்

கொண்டும் இரண்டு காற்களையும் திடம்பெறும்படி மடித்துக்கொண் டும், ஆண்குறியை இடதுகையால் மறையும்படி சேர்த்துக்கொண் டும், பிரகாசிக்கின்ற வலது கையை வலது காலின்மேல் வைத்துக் கொண்டும், அங்ஙனம் வைத்ததோடு வைத்தகையினது கலிமாவிர லினை யுயர்த்திக்கொண்டும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இப்பூலோகத்தின்கண் ணுதயமாயினார்கள். (அஎ)

சிரசினி னெய்தோய்த் திருவிழிக் கருமை
  சிறந்திடக் கொப்பூழுங் கொயலாய்
மருவுசுன் னத்துஞ் செயலாய்த் துடக்கின்
  வருங்குறி யொன்றுமி லாதாய்ப்
பரவுகஸ் தூரி மனையெலா நிறைந்த
  பரிமளங் கமகம கமென
பெருகிய வொளிவு வானமட் டுலவப்
  பிறந்தனர் முகம்மது நபியே.

(இ-ள்.) அன்றியும் சிரசின்கண் நறுநெய்யினால் நனைக்கப்பெற் றும், இருகண்களிலும் கரிய சுறுமாவானது சிறந்திட நாபியு மறுக் கப்பட்டும், பொருந்திய விருத்தசேதனமும் செய்யப்பட்டும் பிள்ளை ப்பேற்றுனிகழுந் துடக்கின் அடையாளங்கள் யாதொன்று மில்லாத தாய் திருமேனியிலிருந்து பரவாநிற்குங் கஸ்தூரி வாசனையானது மனை முழுவதுங் கமகமவென்று பரிமளிக்கவும் பெரிய பிரகாசமா னது வானமட்டுலவவும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம வர்கள் இப்பூலோகத்தின்கண் பிறந்தார்கள், (அஅ)

செம்மையங் கோட்டுக் கடகரிக் கலகந்
  தீர்ந்தபி னைம்பதா நாளி
லம்மதி மாசத் தொகையினில் றபீயு
  லவ்வலிற் பனிரண்டாந் தேதி
யெம்மனைக் கும்பே றெனவரும் பொருளா
  யிசைத்திடுந் திங்களி ராவின்
மும்மையென் றுரைக்கும் புவனமும் புரக்க
  முகம்மது நபிபிறந் தனரே.

(இ-ள்.) செவ்வையான அழகியகொம்புகளையும் மதங்களையுமு டைய யானைக்கலகந் தீர்ந்தபின் ஐம்பதாந்தினத்தில் அழகிய சந்திர

னது மாதத்தொகை பன்னிரண்டனுள் ஒன்றாகியறபீயுல் அவ்வல் மாதத்தில் பன்னிரண்டாந் தெய்திபாகிய எல்லா மனைக்கு மூதியம் போல அடுத்தடுத்து வராநிற்கும் வஸ்துவாய்ப் பொருந்துகின்ற திங்கட்கிழமையிரவில் மூன்றென்று சொல்லப்படும் உலகங்கள் முழுவதையும் காக்கும்படி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இப்பூலோகத்தின்கண் பிறந்தார்கள். (அ௯)

பூதலத் தரசு பதியென வுதித்த
புகழ்பெறு மக்கமா நகரிற்
சீதவொண் கதிர்சேர் கஃபத் துல்லாவின்
றிசையினில் வடகிழக் காக
வேதமொன் றணுகாச் செமுறத்து லுஸ்தா
வெனுமொரு தலத்தினி னடுவே
மாதவ ரபித்தா லிபு திரு மனையின்
முஹம்மது நபிபிறந் தனரே.

(இ-ள்.) பூலோகத்திற்குத் தலைநகரமென்று சொல்லும்படி யுற்பவித்த கீர்த்திபெறுநிற்கும் மக்காவென்னும் பெரியபட்டணத்தில் குளிர்ச்சிபொருந்திய ஒள்ளிய கிரணங்கள் சேர்ந்த கஃபத்துல்லாவென்று சொல்லும் தேவாலயத்தின் திக்குகளுள் வடகிழக்காகவிருக்கும் குற்றமொன்றுஞ் சாராத ஜெமுறத்து லுஸ்தாவென்னும் ஒப்பற்றதலத்தின் நடுவிலுள்ள மகாதவத்தினையுடைய அபீத்தாலி பவர்களினது தெய்வீகத்துவம்பொருந்திய வீட்டின்கண் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிறந்தார்கள். (௯0)

நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து
துறவறந் தவறி யில்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் கால மிருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

(இ-ள்.) நெடிய பூமியானது சன்மார்க்கநிலை மாறுபட்டு மருளும் சமயங்கள் பலவாய் அதிகரித்து எங்கணும் பரந்து துறவறமென்பது தவறிப்போய் இல்லறமென்ப தழிந்து விளக்கில்லாத வீட்டைப்போ

லக் குற்றப்படுங்காலத்தில் இருளென்று சொல்லா நிற்கும் குபிரினது கூட்டத்தை யழித்து மடிந்து தவறிய இருவகை அறத்தினது நெறியை விளங்கச்செய்யும்படிக் களங்கமில்லாது உதயமான பூரணச் சந்திரனைப்போல நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இவ்வுலகத்தின்கண் பிறந்தார்கள். (௯௧)

பானுவின் கதிரா லிடருறுங் காலம்
படர்தரு தருநிழ லெனலா
யீனமுங் கொலையும் விளைத்திடும் பவநோ
யிடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க்
குறைஷியின் றிலதமே யெனலாய்
மானிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே.

(இ-ள்.) சீவசாதிகள் சூரியனது கிரணமாகியவெப்பத்தினால் இடர்ப்படுங்காலத்தில் படர்தராநின்ற விருக்ஷத்தின் நிழலென்று சொல்லுதற்காகியும், இழிவையுங் கொலைத்தொழிலையும் விளைக்கா நின்ற பாவமென்னும்நோயினது இடரைத்தவிரச்செய்யு மரியமருந்தாகியும், தீனென்றுசொல்லும் பயிர்க்குச் செழுமையான ஒப்பற்ற மழையென்று சொல்லுதற்காகியும், குறைஷியென்று சொல்லும் வம்சத்தினது திலதமென்று சொல்லுதற்காகியும் அழகியபூமிக்கு ஒரு மாணிக்கத்தீபமென்று சொல்லுதற்காகியும், நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள் இவ்வுலகின்கண்பிறந்தார்கள்

செங்கதிர் பரப்பி யுலகெலாம் விளக்கித்
திரிதின கரனும்வெண் ணமுதந்
தங்கிய கிரணச் சசியுமந் தரத்திற்
றவழ்தரு முடுக்குல மனைத்தும்
பொங்கொளி யெவையுஞ் சுவனநா டனைத்தும்
பூதலம் விசும்புமற் றனவு
மிங்கெழின் முகம்ம தொளிவினி லென்று
மிவர்க்கெவை யுவமைசொல் லுவதே.

(இ-ள்.) சிவந்த கிரணங்களைப் பரப்பி யுலக முழுவதையும் தனது பிரகாசத்தால் விளக்குவித்துத் திரியாநின்றசூரியனும், வெள்ளிய அமுதந்தங்கிய கிரணங்களையுடைய சந்திரனும், ஆகாசத்தின்

கண் தவழாநிற்கும் நட்சத்திரக்கூட்டமுழுவதும், இன்னும் பொங்காநின்ற பிரபைகளியாவும், சுவர்க்கலோக மனைத்தும், பூலோகமும், வானலோகமும், இங்கு குறிப்பிடப்படாத மற்றப் பொருள்களும், இங்கே நாம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் ஒளியின்கண்ணுள்ளதாமென்று சொன்னால் இவர்கட்கு உவமையாகச்சொல்லும் பொருள் வேறே யாது! ஒன்றுமில்லை. ௬௩

மகிதலம் புகழீ சாநபி பாரில்
  வந்தநாட் டொடுத்திடை விடாது
பகுமத மிலையென் ருறுநா ருண்டு
  பாரிசுக் காரர்கள் வணங்கும்
புகையுடன் கெழுமிப் பொறிபல தெறிப்பப்
  புரிந்தெழு மக்கினிக்கொழுந்து
திசைதொறுந் தெரிய வெரிந்தசெந் நெருப்புத்
  தேய்ந்துநூந் தழிந்தது வன்றே.

(இ-ள்.) மஜூசிக்காபிர்கள் பூமிமுழுவதும் புகழாநிற்கும் நபி ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் உலகத்தில் பிறந்துவந்த தினந்தொடங்கி அறு நூறுவருஷகாலம்வரையும் பகுக்கப்படும் பிறசமயங்கள் வேறில்லையென்று சொல்லி இடைவிடாது வணங்கின புகைபோடு கூடிப் பலகங்கிகளையும் தெறிக்கச்செய்து எழாநின்ற தீச்சுவாலைகள். திசைதோறுந் தெரியும்படி எரிந்த சிவப்புநிறமுள்ள அக்கினியானது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிறந்தமாத்திரத்தில் குறைந்து அவிந்தழிந்தது. (௬௪)

படியிடை புடைப்பப் பெருக்கெடுத் ததிரப்
  பாயலைச் சுருட்டிவிட் டெறிய
விடுகடல் சாவா வெனும்பதி யிடத்தில்
  வெறுந்தரை யாயின வறந்து
குடிலமட் டோங்கி மஞ்சடை கிடக்குங்
  கொத்தள மொருபதி னைன்கு
மிடிபட வீழ்ந்து சேருவா னகர
  மெங்கணுங் கலங்கிய தன்றே.

(இ-ள்.) சாவாவென்று சொல்லு மூரின்கண் பூமியினிடத்தில் மோதும்படிப்பெருகிப் பாய்கின்ற திரைகளொலிக்கும்படிக்குச்சுருட்டிவிட்டு வீசாநின்ற கடலானது வற்றிப்போய்ப் பாழ்ந்தரையான

து. அன்றியும் கௌசேருவானிராஜனது நகரத்தின்கண் ஆகாயமவரையும் உயர்ந்துமேகங்களடையாய்க்கிடந்த கொத்தளங்கள் ஒப்பற்ற பதினன்குந்தம்மிற்ருமே இடிபடவிழுந்து எவ்விடமுங்கலங்கினது.

சிலையெடுத் துருவாய் வைத்தபுத் தனைத்துஞ்
சிரசுகீழ்ப் படமுகங் கவிழ்த்த
சலமதி லிபுலீ சியற்றிய சிங்கா
சனமுமன் றிடிந்தது வைத்தான்
குலமுமன் ருெதுங்கி வானகம் புகாமற்
கூண்டுநக் கேத்திர மெரிந்து
நிலமிசை வீழ்ந்த வினுஞ்சில புதுமை
நிகழ்ந்தன வரியவன் றிரவே.

(இ-ள்.) நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிறந்த அருமையான அவ்விரவில் கற்களையெடுத்துருவமாகச் செய்துவைத்த விக்கிரகங்களியாவும் தலைகீழாக முகங்களை கவிழ்த்தின. சமுத்திரத்தின்கண் இபுலீசென்பவ னியற்றிய சிங்காசனமும் இடிந்தது ஷைத்தான் கூட்டங்களுமொதுங்கி வானகத்தின்கண் பிரவேசிக்காதபடி நக்ஷத்திரங்கள்கூடி யெரிந்து நிலத்தின்கண்விழுந்தன. இவைகளுமன்றி இன்னுஞ் சிலவற்புதங்களும் நடைபெற்றன.

சிறந்தநன் மதலை தனைவிரைந் தெடுப்பத்
தெரிவையர் மனத்தினி னினைப்ப
மறந்திகழ் விழியார் தொடத்தகா தென்றன்
முஹம்மதை விரைவினி லேந்தி
நிறந்திகழ் சுவனப் பதியினிற் கொடுவம்
மென்றன னெடியவ னதனு
லறந்திக ழாமி னுத்திரு மனைபுக்
கடுத்தவர் பிள்ளையை யெடுத்தார்.

(இ-ள்.) சிறப்பான நன்மையையுடைய பிள்ளையாகிய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் துரிதமாயணைத்தெடுப்பான் வேண்டி அங்குற்றபெண்கள் சிந்தையின்கண் எண்ணியமாத்திரத்தில் நெடியவனுன அல்லாகுவத்த ஆலாவானவன் ஜிப்றியீல்அலைகிஸ்ஸலாமவர்களை விளித்து எனதுமுகம்மதைக் கொலைவிளங்காநிற்குங் கண்களையுடையாராகிய பெண்கள் முதன்மையாகத் தீண்டுதற்குத் தகுதியல்லர், ஆதலினுலே நீவிர் அதிசீக்கிரத்திற்சென்று அவ

ரைக் கைகளினூற்றூங்கிப் பிரபையானது விளங்காநிற்கும் சுவர்க் கத்தின்கண்கொண்டு வாருமென்று கட்டளேயிட்டனன். அச்சொல் லினுல் ஜிபுறியீல் அலைகிஸ்ஸலாமவர்கள் தருமம்விளங்கின்ற ஆமினு அவர்களின் தெய்வீகத்துவம்பொருந்திய வீட்டின்கண் பிரவேசித் துப் பிள்ளேயைச்சார்ந்து தூக்கியெடுத்தார்கள். (கூஎ)

அமாருக் கிறைவர் ஜிபுறயீல் வரிசை
யகுமதை யெடுத்தினி தேந்தித்
தமருடன் சுவனப் பதியினிற் கொடுபோய்ச்
சலநதி தொறுமுழுக் காட்டி
இமைதிறந் திருகண் மையினே யெழுதி
யெண்ணேயிட் டமிர்தமு மூட்டிச்
சுமைதர வாசந் திகழ்த்தியெண் டிசையுஞ்
சுற்றியே சிலமொழி பகர்வார்.

(இ-ள்.) வானவர்கட்கரசாகியஜிபுறியீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வரிசைபொருந்திய அஹமதென்னும் நபிமுகம்மது சல்லல்லாகுஅலை கிவசல்லமவர்களே யணேத்தெடுத்தினிதாகத் தாங்கிக்கொண்டு தம் மவரான சில வானவர்களோடு சுவர்க்க நகரத்தின்கண் சென்று நீரையுடைய ஆறுகடோறும் ஸ்நானஞ்செய்வித்து இரண்டு கண் களினது இமைகளேத்திறந்து கருமையான சுறுமாவைத்தீட்டிச் சிர சின்கண் ணெண்ணெய் தோய்த்து தேவாமிர்தத்தையு முண்பித்து வாசனேயானது பாரந்தர விளங்கும்படி கமழ்த்தி எட்டுத்திசைகளி லும் சுற்றிக்கொண்டுபோய்ப் பல சொற்களேச் சொல்லுவார்கள்.

ஆதிநா யகன்றன் திருநபி யிறசூ
லாமிவர் தங்கலி மாவைப்
பூதலத் துறைந்த படைப்பெவை யவையும்
போற்றுதல் செய்யவும் வேண்டு
மீதலாலமர ரிவர்கலி மாவுக்
கிசைந்தன ரென்பது மிசைத்துச்
சூதர மொழியா ராமினு விடத்திற்
றூன்றலேக் கொடுத்தகன் றனரே.

(இ-ள்.) இபிள்ளேயானவர் எவற்றினும் முதன்மையான நாய கத்துவமுடைய ஹக்குசுபுகானகுவத்த ஆலாவினது மேன்மை தங் கியநபியும் றசூலுமாக இருப்பார். ஆதலினுல் இவரது கலிமாவாகிய

உபதேசத்தைப்பூமியின்கண்ணடங்கின சிருட்டிகளென்பவை எவைகளோ ! அவைகளனைத்தும் மனவாக்கொத்துச்சொல்லிப் பேணவேண்டுமென்பதையும், இதுவல்லாமலும்வானவர்களும் இவரதுகலிமாவுக்குப் பொருந்தினர்களென்பதையும், தாம் சென்றவிடந்தோறுஞ் சொல்லி மீண்டுரூதுக்கு அரம்போலுஞ் சொல்லினையுடைய ஆமினு அவர்களினிடத்தில் அப்பிள்ளையைக்கொடுத்துவிட்டுச்சென்றார்கள்.

அந்தர மவனி கடன்மலை யெழுதீ
வகத்தினு மெண்டிசை முழுதுஞ்
சுந்தர வதன முகம்மதைக் கொடுபோய்ச்
சுற்றியெங் கணும்பெயர் விளக்கிச்
சந்தமென் முகத்தா மரைமலர் குளிரத்
தடஞ்சிறை வானவர் திரண்டு
வந்தது மாமி னுத்திரு மனையில்
வைத்தது மொருநொடிப் போழுதே.

(இ-ள்.) ஜிபுரியீல் அலைகிஸ்ஸலா மவர்களோடு பெருமை பொருந்திய சிறகுகளையுடைய மலக்குகள் பலர்கூடி அழகிய முகத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கொண்டு சென்று ஆகாயத்திலும், பூமியிற்கடல்களிலும், மலைகளிலும், சத்தத்தீவுகளிலும், இன்னும் எண்டிசைகள்முழுவதிலும், சுற்றி அவ்வெல்லாவிடங்களிலும் முஹம்மதென்னுந் திருநாமத்தை விளங்கச்செய்து அழகிய மென்மையவான முகமாகிய தாமரைமலர் குளிரும்படி திரும்பிவந்ததும் ஆமினு அவர்களினது தெய்வீகத்துவம்பொருந்திய வீட்டின்கண் வைத்ததும் ஒருக்ஷணநேரத்திற்றான். (௧௦௦)

வள்ளலென் றுதவிப் பெயர்நிலை நிறுத்தி
வளந்தரும் புகழுபுல் காசீ
முள்ளக நிறைந்த செம்மலர்ப் பதந்தொட்
டொளிர்பெறு மிணைவிழிக் கேற்றி
விள்ளரும் பவளம் விரிந்தன கனிவாய்
விளங்கிட வாழ்த்தெடுத் துவந்து
தெள்ளமு தனைய முகம்மது நபியைச்
சபா திரு மடிமிசைக் கொண்டார்.

(இ-ள்.) தெள்ளிய தேவாமிர்தத்தைப்போன்ற நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்மனை வரையாது கொடுப்போரென்று

சொல்லும்படித் தானஞ்செய்துப் பெயரானதை நிலைநிறுத்திச் செல்வத்தைத்தராநின்ற கீர்த்தியையுடைய இந்நூலின் கொடைநாயகரான அபுல்காசீம் மரைக்காயரது மனசின்கண் ணிறைந்த சிவந்த தாமரைமலர்போலும் பாதங்களைத் தீண்டிப் பிரகாசத்தைப் பெற்ற இரண்டு கண்களிலும் பொருத்திச் சொல்லுதற்கரிய பவளம் விரிந்தாற்போலுங்கனிந்த வாயானது விளங்கும்படி யுவப்பாய் வாழ்த்திச் சபாவென்னும் நாயகியவர்கள் தங்களின் தெய்வீகத்துவம் பொருந்திய மடியின்மீது எடுத்து வைத்தார்கள். (கoக)

மலர்தரு கரத்தா லேந்தியே மடியில்
வைத்தினி திருக்குமந் நேர
மலர்தரும் பவள வாயிதழ் திறந்தே
யழுதனர் முகம்மது நபியு
முலகமும் விசும்பு நிறைதரப் பொருந்து
முடையவன் சத்தமுண் டான
திலகிய கமல முகமலர் சபாவுக்
கிறஹமத்துண் டாகவென் றிசைந்தே.

(இ-ள்) சபாநாயகியவர்கள் மலர்தலைத் தராநின்ற தமது கைகளால் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை மெல்லத் தாங்கி மடியின்மீது வைத்துக்கொண்டு இனிதாக இருக்கும் அந்த நேரத்தில், அந்நபிகணாயகமவர்கள் அலர்தலைத்தராநின்ற பவளம் போன்ற தங்களது வாயினுதடுகளைத் திறந்து அழுதார்கள். அப்போது பூலோகத்திலும் வானலோகத்திலும் தனது தத்துவத்திற் குறைவில்லாது சமமாய்ப் பொருந்தாநிற்கு முடையவனான ஜல்லஷானகுவத்த ஆலாவினது சத்தமொன்று பிரகாசித்த தாமரைமலர் போலு முகமானது மலர்ந்த சபாவென்னும் நாயகி அவர்களுக்கு றகுமத்துண்டாவ தாகவென்று பொருந்துதலோடு முண்டானது.()

சத்தமுண் டாகிக் கேட்டவப்பொழுதே
சபாவெனு மடமயி றனக்குப்
பத்திவிட் டொளிரு றாமிராச் சியத்துப்
பதியின்மா ளிகையெலாந் தெரிந்து
மித்திர னெழுந்த குணதிசை தொடுத்து
வீழ்தரு குடதிசை வரைக்குஞ்
சித்திரம் பெறவே யிருவிழிக் கெதிரே
தெரிதரச் சிறந்தன வன்றே.

(இ-ள்.) மேற்கூறிய அசரீரியான சத்தமானதுண்டாகிச் சபாநாயகி அவர்களது செவிகளுக்குக்கேட்ட அந்நேரத்தில், சபாவென்று சொல்லும் இளமயிலாகிய அந்நாயகி அவர்களுக்கு நிரையாகக் கதிர்களைவிடுத்து ஒளிராநிற்கும் பிரகாசத்தையுடைய றூமிராச்சியத்து நகரங்களின் மாளிகைகளனைத்துந் தெரியப்பட்டுச் சூரியனுதயமாகும் கீழ்த்திசையான மஷ்றிகுதொடங்கி அச்சூரியன் அஸ்தமனமாகும் மேற்றிசையான மகுறிபுவரையிலும் அழகுபெறும்படி இரண்டு கண்களுக்குமெதிராகச் சிறந்து தோன்றின. (௧0௱)

வரியளி குடைந்து தண்ணறு வருந்து
மலர்ப்புயத் தப்துல்முத் தலிபு
கருதிய வரங்கேட் டிருந்துநெஞ் சுருகுங்
காலையிற் கஃபத்துல் லாவி
னிரைநிரை செறிந்த புத்துக ளனைத்து
நெட்டுயிர்ப் பொடுகலைங் தலைந்து
விரைவினி லோடிக் காவத வழிக்கு
வேறுவே றுய்க்கிடங் தனவே.

(இ-ள்.) இரேகைகளையுடைய வண்டினங்கள் துளைத்துக் குளிர்ந்த தேனைப்பருகாநிற்கும் புஷ்பமாலையை யணிந்த புயங்களையுடைய அப்துல் முத்தலிபானவர்கள் தாங்கள்நாடிய விடயம் நிறைவேறும்படி வரங்கேட்டுக்கொண்டிருந்து மனமுருகும் வேளையில் அவர்கள் வரங்கேட்குந் தேவாலயமாகிய அக் கஃபத்துல்லாவின் கண் பத்திபத்தியாய் நிறைந்துள்ள விக்கிரகங்கள் முழுவதும் பெருமூச்சோடு கலைந்து வருந்தியிருந்த தானத்திலிருந்து சீக்கிரமாயோடிப்போய்க் காதவழிக்கப்பால் வெவ்வேறாகிப் பிரிந்து கிடந்தன. ()

பானலங் கடந்து சேலெனப் பிறழ்ந்து
பரந்துசெவ் வரிக்கொடி யோடி
மான்மருள் விழியா ராமினு விருந்த
வளமனைத் திசையினை நோக்கி
நானிலம் புகலுங் கஃபத்துல் லாவி
னுலுமூ லையுமொரு நெறியாய்த்
தூநறை கமழ வொளிதிகழ் தரவே
சுஜூதுசெய் தெழுந்தன வன்றே,

(இ-ள்.) அழகிய கருங்குவளை மலரினிதழைக் கடந்து மேற்கொண்டு கெண்டை மீனைப்போலத் துடித்துச் செவ்விய இரேகைக் கொடிகள் ஓடிப்பரந்து மான்விழிபோலு மருளாநின்ற விழிகளை யுடையாராகிய ஆமினு அவர்கள் அப்போது இருந்த செல்வத்தை யுடைய வீட்டினது திசையை நான்கு வகைப்பட்ட நிலங்களும் புகழ்ந்துபேசும் கஃபத்துல்லாவினது சதுர்கோணங்களு மொருவழியாய்ப் பார்த்துப் பரிசுத்தமான வாசனையானது பரிமளிக்கவும், பிரகாசம்ஜொலிக்கவும், நிலத்திற்படிந்து சுஜூதுசெய்து முன்போல எழுந்து நின்றன. (கoரு)

இறையவ னேவ விண்ணவர் கரத்தா
　லியற்றிய மணிமதிட் கஃபா
மறைபடா தெவர்க்குங் கேட்பன வாக
　வாய்திறந் தோதுவ போன்று
குறைபடா வடிவும் பெருமையும் பெற்ற
　கொற்றவ னென்றனை யின்றே
நிறைதரப் புனித மாக்கினு னென்ன
　நிகழ்த்திய தொருமொழி யன்றே.

(இ-ள்.) அன்றியும், ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவானவன் உத்தரவுசெய்ய வானவர்கள் கூடிநின்றுத் தங்களது கைகளினுற் கட்டப்பட்ட மணிகளிழைத்த மதில்களையுடைய கஃபத்துல்லாவானது இரகசியமாகாமல் யாவர் செவிகளுக்குங்கேட்குந் தொனியை யுடையதாக வாயைத்திறந்து பேசுவதுபோலாய்க் குறைபடாத வழகையும் பெருந் தன்மையையும் பெற்ற அரசனுன கடவுள் என்னை இன்றையதினம் பூரணப்படப் பரிசுத்தமாக்கினுனென்று ஒருசொற் சொல்லிற்று. (கoசு)

இரவினிற் றனித்தங் கிருந்தகா லையினி
　லியற்றிய புத்தக ளனைத்தும்
பரவியே சிதறக் கண்டதுங் கஃபாப்
　பண்புறச் சுஜூதுசெய் தியல்பா
விரைவினின் மொழிந்த வார்த்தையுங் கேட்டு
　வெருவியே அப்துல்முத் தலிபு
முருகுகொப் பளிக்கு மாமினு மனையின்
　முழுமணி வாயில்வந் தடுத்தார்.

(இ-ள்.) அப்துல்முத்தலிபானவர்கள் இராக்காலத்தில் தனித்தவர்களாக அக்கஃபத்துல்லாவில் வரந்தாங்கி யிருந்தவேளையில் அங்

னஞ்செய்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த விக்கிரகங்கள்முழுவதும் பரவுதலாய்ச் சிதறிப்போகக் கண்டதுமன்றிக், கஃபத்துல்லாவானது தகுதிபொருந்தும்படி சுசூது செய்து ஒழுங்காக அதிசிக்கிரத்தில் சொன்ன சொல்லேயுங் கேட்டஞ்சி வாசனையைக் கக்காநின்ற ஆமினு அவர்களின் வீட்டினது முழுமை பொருந்திய இரத்தினங்களையுடைய வாசலின்கண் வந்து சேர்ந்தார்கள். (கOஎ)

தரையினிற் பரந்த குபிரிருட் குலமுஞ்
சாற்றிய கலியிருட் குலமும்
வரைவிலா தொடுங்க முஹம்மது நபியின்
மானிலத் துதித்தன ரென்றே
கரையிலா வுவகை யானந்த வெள்ளக்
கடலிடை குளித்துறக் களித்து
விரைவினிற் றிமிரக் கடற்பகை துறந்து
வெய்யவன் கதிர்கள்விட் டெழுந்தான்.

(இ-ள்.) பூமியின்கண் பரவிய குபிரென்னு மிருட்கூட்டமும் சொல்லிய தாரித்திரியமென்னு மிருட்கூட்டமும் அளவில்லாமலடங்குப்படி நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இப்பெரிய பூமியின்கண் அவதரித்தார்களென்று சூரியனானவன் கரையில்லாத மகிழ்வையுடைய ஆநந்தப் பிரவாகமாகிய சமுத்திரத்தின்கண் முழுகிப்பொருந்தும்படிச் செருக்கடைந்து தானுந் தன்னிருட்கடலாகிய பகையை நீக்கி சீக்கிரத்தில் தனது ஆயிரங் கிரணங்களையும் வீசி ஆகாயத்தி லெழும்பினன். (கOஅ)

விடிந்தவப் பொழுதி லப்துல்முத் தலிபு
விரைவினி லாமினு வென்னு
மடந்தையைக் கூவி வருகவென் றுரைப்ப
மடமயிற் பெடையென வெழுந்து
நடந்தெதிர் வரக்கண் டம்மநின் னுதலி
னலங்கிளர் பேரொளி யொன்றுண்
டிடந்திகழ்ந் திலங்கக் காண்கிலே னென்ன
வீன்றனன் மகவென விசைத்தாள்.

(இ-ள்.) சூரியனுதயமாகி நன்முய்விடிந்த வந்நேரத்தில், முன்மனை வாயலில்வந்த அப்துல்முத்தலிபானவர்கள் சீக்கிரத்தில் ஆமினு வென்னும் பெண்ணினை எனதுசமீபம் வருவாயாக வென்று சொல்ல;

இளமயிலாகிய அவ்வாமினு அவர்கள் அன்னப்பெடைபோல எழு ந்து நடந்து தமக்கு எதிராகவர, அப்துல் முத்தலிபவர்கள் பார்த்து அம்மா! உனது நெற்றியின்கண் நன்மை நிறையும் பெரிய பிரகாசமா னது ஒன்றுண்டு. அப்பிரகாசம் எப்போதையும்போல இன்று அவ் விடத்தில் விளங்கிப்பிரகாசிக்கக்காணேனென்றுசொல்ல; அதற்குவி டையாக ஆமினு அவர்கள் நான் மகவைப்பெற்றேனென்று சொன் னார்கள். (௧0௯)

வஞ்சிமென் கொடியின் முகமலர்க் கவினு
மருங்கினில் விசித்தபட் டுடையும்
கஞ்சமென் மலர்த்தா ணிலம்புடை பெயர்வுங்
கமழ்தரு மெய்யினிற் குறியும்
பிஞ்சுநன் னுதலுங் கண்டுளத் தடக்கிப்
பெற்றவா றென்கொலென் றெண்ணிக்
கொஞ்சுமென் மொழியாய் மதலையைக் கொணர்கென்
றுரைத்தனர் குளிர்மழைக் கொடையார்.

(இ-ள்.) மெல்லிய வஞ்சிக் கொடிபோலு மிடையினை யுடைய ஆமினு அவர்களினதுமுகமாகிய தாமரைப் பூவினழகையும், இடை யின்கண் கட்டிய சித்திரப்பூம் பட்டாடையையும், தாமரையினது மென்மையவான பூப்போலும் பாதங்கள் பூமியிற் புடைபெயர்தலை யும், பரிமளித்தலைத்தராநிற்குஞ் சரீரத்தின்கண்ணுள்ள இலட்சண ங்களையும், இளஞ் சந்திரனைப்போன்ற நல்ல நெற்றியையும், குளிர் ச்சிபொருந்திய மழையைப்போலும் கொடையை யுடையாராகிய அப்துல்முத்தலிபு அவர்கள் பார்த்துப் பிள்ளையைப் பெற்ற வழியெ வ்வித மென்று யோசித்து அவற்றின் சாராம்சங்களை வெளியிடாது நெஞ்சத்துள்ளேயே அமைத்து வைத்துக் கொண்டு கொஞ்சாநிற்கு மெல்லிய சொற்களையுடைய ஆமினுவே! நீபெற்ற பிள்ளையை என் னிடத்திற் கொண்டு வருவாயாக வென்று சொன்னார்கள். (௧௧0)

கூறிய மொழிகேட் டாமினு வெனது
குமரனை மூன்றுநாள் வரைக்கும்
வேறொரு வருக்குங் காட்டொணு தெனவே
விண்ணவ ருரைத்தன ரென்றே
யூறிய மதுர வாயிதழ் திறந்தே
யோதின ரப்துல்முத் தலிபு
சீறினர் புருவ முரிதர விருகண்
டீப்பொறி தெறித்திடச் செவந்தே.

(இ-ள்.) அவ்வாறு அப்துல் முத்தலிபு அவர்கள் சொல்லிய சொற்களை ஆமினுவானவர்கள் கேள்வியுற்று எனது மைந்தனை மூன்றுநாள் வரைக்கும் வேறேயந்நிய ரொருவருக்குங் காட்டக் கூடாதென்று வானவர்கட் கிறையாகிய ஜிபுறியில் அலைகிஸ்ஸலாமவர்கள் சொன்னார்களென்று இனிமை சுரந்திராநின்ற தங்களது வாயினுதடுகளைத் திறந்து சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்ட மாத்திரத்தில், அப்துல் முத்தலிபானவர்கள் இரண்டு கண்களினு மக்கினிப் பொறிகள் சிதறும்படியாகச் செவப்பேறி இருபுருவங்களுமுடையும்படிச் சுழித்துக்கோபித்தார்கள்.　　(கககக)

சினந்த மாதுலனைக் கண்டுளம் பதறிச்
　சேயிழை யாமினு திகைத்து
கனந்தருங் கொடையி ரரசர்நா யகமே
　கருதலர்க் கசனியே நுந்த
மனந்தனிற் சினமென் மனையுநும் மனையே
　மகவுநும் மகவினன் மகவே
வினந்தரும் பலன்போ லெழுந்தசந் ததியை
　யெடுமிலம் புகுமென விசைத்தார்.

(இ-ள்.) செவ்விய ஆபரணங்களையுடைய ஆமினுவானவர்கள் கோபித்த தமது மாமனாராகிய அப்துல்முத்தலிபவர்களைப்பார்த்து மனம் நடுக்குற்றுப் பிரமித்து மேகம்போல வருளாநின்ற கொடையையுடையவர்களே! இராஜர்களுக்கு நாயகமானவர்களே! சத்துராதிகளுக்கு இடியானவர்களே! தங்களுடைய உள்ளத்தின்கண் கோபமேன்! வேண்டாம், இந்த வீடுமோ வுங்களுடைய வீடு, பிள்ளையோ நன்மையுற்றவுங்கள் பிள்ளையினதுபிள்ளை, ஆதலால் நமது இனத்தார் செய்துதந்த தபோபலன்போன் றுதித்தெழுந்த அப்பிள்ளையை நீங்களே சென்றெடுப்பீர்களாக; அதற்காக வீட்டினுள் பிரவேசியுங்களென்று சொன்னார்கள்.　　(ககஉ)

மருமலர் செறிந்து வண்டுகண் படுக்கு
　மஞ்செனுங் கருங்குழன் மடந்தை
தருமுரை கேட்டு வெகுளியைப் போக்கிச்
　சசிமுக மலர்ந்தகங் குளிர்ந்து
பருதியொத் திலங்கு மாளிகைப் புகப்போய்ப்
　பார்த்தனர் வாயிலு ளொருவ
ருருவின கருவி கரத்தினி லேந்தி
　யுறுக்கிட வெருக்கொடு மீண்டார்.

(இ-ள்) வாசனையையுடைய புஷ்பங்க ணிறைந்து வண்டுகளூற ங்காநிற்கும் சூன்முதிர்ந்த மேகமென்று சொல்லும்படியான கரிய கூந்தலையுடைய பெண்ணாகிய ஆமினா அவர்கள் அருளிய அச்சொல்லை அப்துல் முத்தலிபவர்கள் கேட்டுத் தங்களது கோபத்தைநீக் கிப் பூரணச்சந்திரன்போலு முகமானது மலர்ச்சியுற்று மனங்குளிர் தலை யடைந்து சூரியனை நிகர்த்துப் பிரகாசிக்கும் மனைக்குட் பிர வேசிக்கும்படிப்போய்ப் பார்த்தார்கள். அப்போது அம்மனை வாசலு க்குள் ளொருமனிதர் நின்றுகொண்டு உறையின்கண்ணின் றுருவின ஆயுதத்தைக் கையிற்றுங்கினவராய் அச்சுறுத்த; அதனாலிவர்கள் அச்சங்கொண்டு உள்ளே பிரவேசிக்காது திரும்பினார்கள். (கக௩)

மீண்டனர் பதறிக் காறடு மாறி
விளைந்திடும் பயனையோ ராம
லாண்டகை யிவனார் நம்மனை தனைவந்
தடுப்பனோ தகாதென வெண்ணிப்
பூண்டநம் மினத்தா ரனைவர்க்கு முரைத்துப்
போக்குவ மிவனைநா மென்னத்
தூண்டியே நடந்து வாயிலைக் கடந்தார்
துன்பமுற் றப்துல்முத் தலிபு.

(இ-ள்.) அங்ஙனம் பயந்து உள்ளே புகாது திரும்பிய அப்துல் முத்தலிபானவர்கள் திகைத்துக் கால்களிரண்டுந் தடுமாற்றமுற்றுத் திரும்பி இனி விளையும் பலனைச் சிந்தியாமல் ஆண்டன்மையை யுடையவனாகிய இவன் யாவன்! நமது மனையைவந்து சேர்வானு! தகுதியாகாதே என்று எண்ணிப் பொருந்திய நமது பந்துக்களனை வர்கட்குஞ் சொல்லி நாமிவனையிங்கிருந்து போகச்செய்வோமென்று மனதை யெழுப்பித் துன்பம்பொருந்தி நடந்து அந்த மனைவாச லைக் கடந்தார்கள். (கக௪)

காரண மனைத்தும் வெளிப்படா தமைக்குங்
காலமென் றறிந்துணா ராம
லூர்வ ரெவர்க்கு முரைத்திவண் புகவென்
றுளத்தினி லெண்ணிய காலைப்
பாரிடத் தெறும்பி றுயிப முதலாப்
பகுத்தமைத் தவன்விதிப் படியா
லீரமற் றுணங்கி நாவழுங் காம
லெழுதின மில்லம்புக் கிருந்தார்.

(இ-ள்.) அறிவிக்கப்படும் காரணங்க ளெல்லாவற்றையும் வெளிப்படாவண்ணம் உள்ளத்தி லமைத்துக்கொள்ளுங் கால மிதுவென்று அப்துல்முத்தலிபவர்கள் அறிந்து தெளியாமல் ஊரிலுள்ளவர்களாகிய பந்துக்கள் யாவர்கட்குஞ் சொல்லி இங்குப் பிரவேசிக்கச் செய்வோமென்று மனத்தின்கண் நினைத்தமாத்திரத்தில், பூமியினுள் எறும்பீறுக யானை முதலாகப் பகுத்தமைத்தவனாகிய கடவுளான அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவினது கட்டளையின்பிரகாரம் அறிவற்று வாடிப் பேசுவதற்கு நாவானது வழங்காதபடி ஏழுநாள் வரைக்கும் வீட்டின்கண் புகுந்திருந்தார்கள். (ககரு)

சிலைநுதற் கயற்க ணாமினா வென்னுஞ்
　செவ்விபூத் திருந்தபொன் மடந்தை
மலர்தலை யுலகிற் சுருதியை விளக்கு
　முஹம்மது நபிநயி னாரை
யிலகிய கமலக் கரத்தினி லேந்தி
　யிருவிழி குளிர்தர நோக்கிப்
பலகலை யறிவுங் கொடுப்பபோ லெழுநாட்
　பான்முலை கொடுத்தன ரன்றே.

(இ-ள்.) விற்போலும் புருவங்களையும் கெண்டைமீன்போலுங் கண்களையுமுடைய ஆமினாவென்று சொல்லும் அழகுபூத்திருந்த பொன்போன்ற பெண்ணானவர்கள் விரிந்த விடத்தையுடைய உலகத்தின்கண் தங்களது மகாவேதமாகிய குறுஆனை விளங்கச்செய்யும் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்னுந் திருநாமத்தையுடைய நபிநாயகமவர்களைப் பிரகாசியாநிற்குந் தாமரை மலர்போலுந் தங்களது கைகளினாற் றூங்கி இரண்டு கண்களும் குளிரும்படியாகப் பார்த்துப் பல கல்விகளையு மறிவையு மூட்டுவதுபோல ஏழுதினம்வரையுந் தங்களது முலைப்பாலை யூட்டினார்கள். (ககசு)

மின்னவிர் சுவன வானவர் கூண்டு
　விளங்கொளி யினமணித் தசும்பி
னன்னிலைச் சலிலங் கொணர்ந்துகோ தறவே
　நறைகமழ் முகம்மது நபியை
இந்நிலம் விளங்க விளக்குவ தெனவே
　யெழிற்கரத் தேந்திநீ ராட்டிப்
பன்னிய சலவாத் தோதியே வாழ்த்திப்
　பரிவுடன் புகழ்ந்துபோந் திடுவார்.

(இ-ள்.) பிரகாசமானது விரியாநிற்கும் சுவர்க்கத்து மலக்குகள் பலர் பிரதிதினமுங் கூடிச் சொலிக்குகின்ற பிரபையினையுடைய இரத்தினவர்க்கத்தாலான குடங்களில் நல்ல நிலமையினையுடைய சுவர்க்கத்து நதியின் தெண்ணீரைமொண்டு கொண்டுவந்து கஸ்தூரியினது வாசனைபரிமளிக்காநின்ற சரீரத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை இந்தப் பூலோகமானது விளங்கும்படிக் குற்றமற விளக்குவதுபோல் அழகிய கைகளிற்ருங்கி ஸ்நானஞ்செய்வித்து சொல்லத்தக்க சலவாத்தையோதி அன்போடு மாசீர்வதித்துத் துதித்துப்போவார்கள். (௧௧௭)

இலங்கிலை வேற்கை யப்துல்முத் தலிபு
மெழுதின மனையகத் திருந்து
நலங்கிளர் நாவும் வளங்கிட மனத்தி
னுல்வகைப் பயனையு முணர்ந்து
கலங்கியே தெளிந்து மதலைமேல் விருப்பாய்க்
கடுவிழிக் கனிமொழித் துவர்வாய்ப்
பொலங்கொடி யாமி னுமணி மனையில்
புக்கினர் புயங்கள்விம் முறவே.

(இ-ள்.) பிரகாசிக்கின்ற இலைபோலும் வேலாயுதம்தங்கிய கையினையுடைய அப்துல்முத்தலிபானவர்கள் ஏழுநாள் வரையும் வீட்டினகமாக விருந்து பின்னர் நன்மைமிகுகின்ற நாவானது பேசுதற்கு வழங்கமனத்தினுல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்குவகைப்பயனையு மறிந்து கலக்கமுற்றுத் தெளிந்து பிள்ளைமீது விருப்பமாகியெழுந்து விடம்போலுங்கண்களையும், கனிபோலும் சொற்களையும், பவளம்போலும் வாயினையுமுடையபொன்னுலாகிய கொடிபோலும் ஆமினு அவர்களினது அழகிய வீட்டின்கண் சந்தோஷத்தால் இரண்டுபுயங்களும் விம்முதற் பொருந்தவந்து பிரவேசித்தார்கள்.

திண்டிறற் பொருப்பும் பொருவரா தெழுந்து
செம்மைவீற் றிருந்தபொற் புயத்தார்
வண்டணி குழலா ராமினு வெனும்பேர்
மடந்தைதன் திருமுக நோக்கி
கண்டெனு மொழியா யிவ்வயி னிகழ்ந்த
காரணக் காட்சிக ளெல்லாம்
விண்டெமக் குரையா யென்றனர் முறுவல்
விளங்கிய குமுதவாய் திறந்தே.

(இ-ள்.) திண்ணிய வலிமை தங்கிய மலைகளும் நிகர் சொல்லுதற் கமையாது மீறியெழுந்து செவ்வையானது வீறுடன் குடியிராநின்ற அழகிய புயங்களையுடையாரான அப்துல்முத்தலிபானவர்கள், வண்டுகள் பொருந்துங் கூந்தலையுடையாராகிய ஆமினுவென்று சொல்லும் பெயரினையுடைய பெண்ணினது தெய்வத்தன்மை பொருந்திய முகாரவிந்தத்தைப்பார்த்து கற்கண்டென்று சொல்லும்படியுள்ள சொற்களையுடையாய்! இவ்விடத்தில் நடைபெற்ற நூதனமாகியகாட்சிகளெல்லாவற்றையும் நகைகள்விளங்காநின்றசெவ்வல்லிமலர்போலும் உனது வாயினைத்திறந்து எமக்குச்சொல்லுவாயாக என்றுகேட்டார்கள்.

பறவைக ளனைத்தும் வந்ததுஞ் சுவனப்
பதியைவிட் டமரர்வந் ததுவு
மறியமு மாசி யாவும்வந் ததுவும்
வானவர் மகளிர்வந் ததுவும்
வெறிகமழ் பறவை வீசிநின் றதுவும்
விண்ணகத் தமுதுதந் ததுவுங்
குறைவிலாப் புதுமை பலவுங்கண் டதுவுங்
குறிப்புடன் படிப்படி யுரைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு அப்துல் முத்தலிபவர்கள்கேட்ட மாத்திரத்தில் ஆமினுவானவர்கள் சுவர்க்கலோகத்திலிருந்து எல்லாவிதப்பட்சி சாதிகளும் தங்களது வீட்டிற்கு வந்ததையும், சுவர்க்கலோகத்தை விட்டு நீங்கி வானவர்கள் வந்ததையும், மறியமலைகிஸ்ஸலாமர்களும் ஆசியா நாயகியவர்களும் வந்ததையும், தெய்வப்பெண்களாகிய கூறுல்ஈன்கள் வந்ததையும், வாசனையானது பரிமளியாநிற்கும் பட்சியொன்று வந்து தங்களுக்குவீசி நின்றதையும், வானத்தின் கண்ணுள்ள தேவாமிர்தத்தைத் தங்களுக்குக் குடிக்கும்படியாகக் கொண்டுவந்து கொடுத்ததையும், குறைவில்லாத வற்புதங்கள் பலவற்றையுங் கண்டதையும், குறிப்போடு வகைவகையாக எடுத்துச் சொன்னார்கள். (௧௨௦)

புகன்றநன் மொழிகேட் டறப்பெரும் புதுமைப்
புதுமையீ தெனச்சிர மசைத்துன்
மகன்றனைத் தருக வென்றலு மடமான்
மகிழ்வொடுந் திருமனை புகுந்து

மிருந்தபே ரொளிவு சொரிந்துகால் வீச
விளங்கிய முகம்மதை யெடுத்துச்
செகந்தனி புரக்கு மப்துல்முத் தலிபு
செழுமணித் தடக்கையி லீந்தார்

(இ-ள்.) அவ்வாறு ஆமினு அவர்கள் சொன்ன நல்லவார்த்தை களை அப்துல்முத்தலிபானவர்கள் காதாரக்கேள்வியுற்று ஆமினுவே! இது அறவும் பெரிய அற்புதம் அற்புதமென்று சிரக்கம்பஞ் செய்து க்கொண்டு உனது குமாரனை என்னிடத்தில் தருவாயாக வென்று சொன்னமாத்திரத்தில், இளமானுகிய ஆமினு அவர்கள் மகிழ்ச்சி யோடும் தங்களது தெய்வீகம்பொருந்திய வீட்டினகம் பிரவேசித்து மிகுதியானபெரிய பிரபையைச் சொரிந்து கால்வீசும்படி விளங்கிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கைகளில் மெல் லத் தூக்கி யெடுத்துப் பூலோகத்தை யொப்பறக் காக்கும் அப்துல் முத்தலிபு அவர்களினது செழுமையான அழகிய பெருமைதங்கிய கைகளிற்கொடுத்தார்கள். (கஉக)

கறைநிணஞ் சுமந்த செங்கதிர் வடிவேற்
கரதலத் தப்துல்முத் தலிபு
முறைமுறை மோந்து முத்தமிட்டுவந்த
முழுமலர்ச் செழுமுக நோக்கி
நிறைமதி நிகரா முஹம்மது நயினர்
நிலவுகொப் பளித்திடச் சிரிப்பக்
குறைபடா வுவகைப் பெருக்கெடுத் தெறியக்
குளித்தக மிகமகிழ்ந் தெழுந்தார்.

(இ-ள்.) சத்துராதிகளின் இரத்தக் கறையையும் கொழுப்பை யும் சுமந்துகொண்ட சிவந்த கிரணந்தங்கிய கூர்மையான வேலாயு தம் பொருந்திய கைத்தலத்தையுடைய அப்துல்முத்தலிபவர்களி னது வரிசைவரிசையாகத் தங்களைமுகந்து முத்தமிட்டுவப்பானமுக த்தை பூரணப்பட்ட சந்திரனு மொப்பாகாதமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்னும் நபிகணுயகமவர்கள் பார்த்து நிலவைக் கக் கும்படி சிரித்தவுடன் குறைவுபடாத உவகையானது பிரவாகமாய் அலைவீச அப்துல்முத்தலிபவர்கள் அதில் முழுகி மனமானது மிகம கிழ்வாய்அம்முகம்மது நபியவர்களைத்தூக்கிக்கொண்டு எழுந்தார்கள்,

கதம்பமான் மதம்பே ரொளிவுடன் றிகழ்ந்த
காலையைக் கரத்தெடுத் தணைத்து
மதஞ்சொரிந் தசைந்த களிறெனநடந்து
வந்துகஃ பாவினை வலஞ்செய்
திதம்பெறப் போற்றி யுள்ளுறப் புகுந்தங்
கிருந்திறை தனைப்புகழ்ந் தேத்தி
விதம்பெற முகம்ம தெனப்பெயர் தரித்து
வீறுடன் றிரும்பின ரன்றே.

(இ-ள்) பலவிதவாசனைப் பொடியும் கஸ்தூரியும் பெரிய பிரகாசத்தோடு கலந்து விளங்கிய காளையாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அப்துல்முத்தலிபு அவர்கள் தங்களது கைகளினலெடுத் தணைத்துக்கொண்டு மதத்தைச் சிந்தி யாடாநிற்கும் ஆண்யானைபோல நடந்து கஃபத்துல்லாவுக்கு வந்து அதனைத்தவ் வாபென்கிற பிரதட்சணஞ் செய்து நன்மையைப் பெறும்படியாகப் போற்றுதல்செய்து அதனுள்ளே பொருந்தும்படிப் பிரவேசித்து அங்குட்கார்ந்திருந்து கடவுளாகிய அல்லாகு சுபுகானகுவதத்த ஆலாவைப் புகழ்ந்து துதித்து மிகுத்துரை பெறும்படி முகம்மது என்று திருநாமமுந் தரித்துப் பெருமையோடங்கிருந்து மீண்டார்கள். ()

தேமலர்ப் பொழில்சூழ் சுவனநாட் டரசைத்
திசைதொறும் விளக்குநா யகத்தை
மாமறைக் கொழுந்தை முகம்மது நபியை
மறுப்படாதெழுந்தசெம் மணியைப்
பூமலர்க் குழலி யாமினு வென்னும்
பூங்கொடிக் கரத்தினி லருளி
நாமவை வேற்கை யப்துல்முத் தலிபு
நடந்துதந் திருமனை சார்ந்தார்.

(இ-ள்.) கஃபத்துல்லாவிலிருந்து மீண்ட அச்சத்தையுங்கூர்மையுங்கொண்ட வேலாயுதத்தினைத்தாங்கிய கையினையுடைய அப்துல் முத்தலி பானவர்கள், தேனைப் பொருந்திய புஷ்பங்களையுடைய சோலைசூழ்ந்த சுவர்க்கலோகத்தின் அரசரானவர்களை, திசைகடோறுந் தங்களதுமார்க்கத்தை விளங்கச்- செய்யும் நாயகமானவர்களை, மகத்தாகியவேதங்களின் இளந்துளிரரனவர்களை, குற்றப்படாதுற்ப

வித்த சிவந்த மாணிக்கமானவர்களே, நபிமுகம்மது சல்லல்லாகு அலை கிவசல்லமவர்களே! அழகிய புஷ்பங்கள் நிறைந்த கூந்தலையுடையா ராகிய ஆமினுவென்றுசொல்லும் பூவாளை கொடிபோல்வார்களது கையினிற் கொடுத்துவிட்டு அங்கிருந்து நடந்துவந்து தங்களது சிறந்த மனையைச் சார்ந்தார்கள். (௧௨௪)

அன்புட னெழுநா ளணியிழை சுமந்த
வாமினு முலையருந் தியபின்
னின்புற அபூல கபு திரு மனையி
னிருந்த வோர் மடக்கொடி துவைபா
மன்பெரும் புகழார் முகம்மது நபிக்கு
மனமகிழ் வொடுமுலை கொடுத்துத்
தன்பெரும் புகழும் வரிசையும் பெருகத்
தழைத்தினி திருக்குமந் நாளில்.

(இ-ள்.) நிலைபெற்ற பெரியகீர்த்தியினை யுடையவர்களாகிய நபி முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு அழகிய ஆபரண ங்களைத்தாங்கிய ஆமினுவானவர்கள் அன்போடு மேழுநாள்வரையு முலையருந்தச் செய்த பின்னர்; இன்பம் பொருந்தும்படி அப்துல் முத்தலிபு அவர்களினது சேஷ்டபுத்திரராகிய அபூலகபுவினது சிறந்த வீட்டின்கண்ணிருந்த வொப்பில்லாத இளங்கொடிபோலும் துவைபா வென்றுசொல்லும் பெண்ணுனவள் மனமகிழ்ச்சியோடு முலைகொடுத்துத் தமது பெரிய கீர்த்தியும் வரிசையும் பெருகும்ப டித் தழைப்புற்று இனிமையாயிருக்கும் அந்தநாளில். (௧௨௫)

நபியவதாரப்படலம்

முற்றிற்று.

ஆ படலம் - ௫ - க்கு திருவிருத்தம் - ௨௧௰.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது,

விலாதத்துக்காண்டம்.

அலிமா முஹஸயூட்டுப்படலம்.

கலிவிருத்தம்.

அறிவத பறமுறை பயிற்றி யன்புட
னெறிவளர் தரவளர்த் திடுவ நீயெமக்
குறுதியாய் முஹம்மதை யருளென் றுன்னியே
யிறையுடன் மொழிந்தன ரமர ரியாருமே.

(இ-ள்.) நபிகணாயகம் முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குத் துவைபாவென்னும் பெண்ணானவர் பாலூட்டிவளர்த்து வருங்காலத்தில், ஒருதினம் வானவர்களாகியமலக்குகள் அனைவரும் ஒருங்குகூடி இறைவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவோடும் உன்னுடைய ஹபீபாகிய முஹம்மதுநபியை நீ எங்கள்பால் ஒப்புவிப்பாயானால் நாங்கள் அவர்களுக்குப்பலவிதமான கல்விகளையும், ஒழுக்கங்களையும், தருமத்தினது ஒழுங்குகளையும், கற்பித்து சன்மார்க்கமானது வளரும்படிக்குக் கிருபையுடன்வளர்த்திடுவோம், ஆகையால் உறுதியாக அவர்களை எங்களுக்குத் தருவாயாகவென்று விரைவோடுமெழுந்து கேட்டார்கள், (க)

நம்பெறும் பேறெனு நபியைப் பொன்னுல
கம்பொனி ராட்டிநல் லமுத மூட்டியே
யெம்பதிக் கரசென வியற்று வோமென
வும்பர்தம் மகளிர்க ளுவந்து கேட்டனர்.

(இ-ள்.) அன்றியும், தேவமகளிர்களான கூறுலீன்களனைவரும் அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவோடும் நாங்கள்பெறுகிற்கும் பேறென்று சொல்லும் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களைநீஎங்கள்பால் ஒப்புவிப்பயானல் அவர்களை சுவர்க்கலோகத்தின் கண்ணுள்ள அழகிய பிரகாசம்பொருந்திய நீரினல் ஸ்நானஞ் செய்

வித்து நல்லதேவாமிர்தத்தை யுண்பித்து எங்களுடையநகரமாகிய சுவனபதிக்கு அதிபராகச்செய்திடுவோம்ஆகையால் அவர்களைஎங்கள்பால் தருவாயாகவென்றுப் பிரியப்பட்டுக் கேட்டார்கள். (௨)

நான்மறை நபியையெம் மிடத்தி னல்கினுற்
பான்முலை கொடுத்தியாம் பரிப்பந் தம்மென
மான்மரை விலங்கின மனைத்தும் வாய்திறந்
தீனமில் லவன்றனை யிரந்து கேட்டவே.

(இ-ள்.) வனத்தின்கண் சஞ்சரியாநிற்கும் மான்முதலிய மிருகஜாதிகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து எக்காலத்தும் அழிவில்லாதவனுகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவோடும் உனதுஹபீபான நான்குவேதங்களின் நபியாகிய றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை எங்கள்பால் நீதருவாயேயானுல் நாங்கள் அவர்களுக்குப் பாலையுடைய முலைகளையுண்ணும்படி கொடுத்து எங்களுக்குச் சொந்தமானவர்களைப் போலக் காப்பாற்றிவருவோம். ஆகையால் அவர்களைத்தருவாயாக வென்று தங்களது வாய்களைத்திறந்து கேட்டன.

இரைத்தெழும் புள்ளெலா மேகன் றன்னிடத்
துரைத்திடு மெங்கள்பா லுதவி னந்நபி
வருத்தமொன் றின்மையா மதுரத் தேன்கனி
யருத்தியாம் வளர்ப்பதற் கைய மில்லையே.

(இ-ள்.) அன்றியும், சத்தித்து எழும்பாநிற்கும் பக்ஷிசாதிகளைத்தும் ஒன்றுகூடி ஒப்பில்லாதவனுன அல்லாகுசுபுகானகு வத்தஆலாவிடத்தில் நமது நபிறசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நீ எங்கள் பால் தருவாயேயானுல் அவர்களுக்கு யாதொருதுன்பமுமில்லை. நாங்கள் இனிமையான தேனையுடைய பழவருக்கங்களை உண்பித்து வளர்த்துவருவதற்குச் சந்தேகமுமில்லை. ஆகையால் எங்கள்வசம் தருவாய்கவென்று சொல்லிக்கேட்டன (௩)

கலிநிலைத்துறை.

என்று கூறிய பலமொழி கேட்டபி னிறையோன்
மன்ற லங்குழ லாளலி மாவெனு மடந்தை
வென்றி யாமுலை கொடுப்பதும் வளர்ப்பதும் விருப்ப
மன்றி யேதகு யோபிநர் தமக்கென வறைந்தான்.

(இ-ள்.) இவ்விதமாக மலக்குகளும் கூறுமீன்களும் மிருகங்களும் பக்ஷிசாதிகளும் சொல்லிய பலசொற்களையும் ஹக்கு சுபுகானகு

வத்த ஆலாவானன் கேள்வியுற்ற பின்னர், எனது ஹபீபாகிய நபிமுக ம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களுக்கு வாசனைபொருந்திய அழகிய கூந்தலேயுடையவளான அலிமாவென்னும் பெண்ணனவள் வெற்றியாகமுலேப்பால் கொடுப்பதும், அவர்களே வளர்ப்பதும். என க்குப் பிரியமேயல்லாது மற்றவர்களுக்கு அவ்விதம் கொடுத்து வள ர்க்கத்தகுமா! தகுமில்லேயென்று சோன்னன். (ரு)

இறைவ னிம்மொழி கூறலு மமரர்க ளியாரும்
பிறமொ ழிந்திலர் மனத்திடை பயம்பெரி தானர்
சிறைவி ரித்திடும் பறவையும் விலங்கினத் திரளு
மறுமொ ழிக்கிட மில்லெனப் போற்றின மகிழ்ந்தே.

(இ-ள்.) யாவற்றிற்கு மிறைவனான ஹக்குசுபுகானகுவத்தஆலா வானவன் இச்சொல்லேச் சொல்லியமாத்திரத்தில், தேவர்கள் அரம் பையர்களெல்லாவரும் வேறே யாதுங்கூறிலர்கள். மனசின்கண்பெரி ய பயமுற்ருர்கள் சிறகுகளே விரியாநிற்கும் பட்சிசாதிகளும் மிருக க்கூட்டங்களனைத்தும் மறுவார்த்தை சொல்லுதற் கிடமில்லே யென் று மகிழ்ச்சிகொண்டு வணங்கின, (சு)

கனைக டற்றிரை யாடைசூழ் பாரினிற் கவின்கொண்
டனைய நாட்டினி லறபெனும் வளமைநா டதனுள்
குனையி னென்றொரு பதியலி மாகுடி யிருந்தா
ரினைய வூரினி னடந்தவா றெடுத்திசைத் திடுவாம்.

(இ-ள்.) சத்திக்காநின்ற அலேகளேயுடைய சமுத்திரத்தைத் தன க்கு வஸ்திரமாகச் சூழப்பெற்ற இப்பூமியின்கண் அழகானது என் றும் மாருது குடியிருக்கப்பெற்ற எல்லாநாடுகளிலும் மிக்கசெல்வத் தையுடைய அறபெனும் நாட்டினுள் குனையினென்றுசொல்லும் ஒப் பற்ற நகரத்தில் ஹலிமாவானவர் வாசஞ்செய்துக்கொண் டிருந்தார் இப்படிப்பட்ட நகரத்தின்கண் நடந்தசெய்திகளனைத்தையும் யாமினி எடுத்துச் சொல்லுவாம். (எ)

கலிவிருத்தம்.

கருங்கட னீரையுண் டெழுந்து கார்க்குலம்
பெருந்தரை யெங்கணும் பெய்த வில்லேயா
விருந்தபைங் கூழெலாங் கருகி யெங்கணும்
பரந்தது சிறுவிலேப் பஞ்சமானதே.

(இ-ள்.) மேகக்கூட்டங்களானவை கரியசமுத்திரத்தின் கண்ணுள்ள சலத்தை யருந்தி ஆகாயத்திலெழுந்து அந்தக்குணையின் நகரத்திலுள்ள பெரிய நிலமுழுவதும் பெய்யாத்ததினால் முளைத்திருந்த பசியநிறத்தையுடைய பயிர்களெல்லாம் சூரியவெப்பத்தினால் கரிந்து குறுவில்லையையுடைய பஞ்சமானது எவ்விடத்திலும் பாவினது. (௮)

மலிபசி பானையா வறுமை சேனையாப்
பலபரி பவங்களாப் பழிர தங்களாக்
கலியமைச் சாத்துறைக் கணக்கர் கோபமாக்
கொலையா சன்கொடுங் கோன டாத்தினான்.

(இ-ள்.) அதனால், கொலையென்று சொல்லாநிற்கும் வேந்தனானவன் பெருகியபசியே யானைப்படையாகவும், தாரித்திரியங்காலாட்படையாகவும், பாவம் பலவிதக்குதிரைப்படையாகவும், பொய்தேர்ப்படையாகவும், சிறுமை மந்திரியாகவும், கோபம் எல்லைக் கணக்கராகவும், வைத்துக்கொடுமைதங்கிய செங்கோல் செலுத்தினான், ()

குலமுறை மன்னர்போய்க் கொடிய பாதகர்
தலைநிலம் புரந்திடுந் தகமை போலவே
நலனுறு கொடையெனு நாம வேந்துகெட்
டிலனெனு மரசுவீற் றிருந்த காலமே.

(இ-ள்.) ஆனதினால் அந்தக்காலமானது, பாரம்பரையாகவே செங்கோல் செலுத்திவரும் அரசர்கள் மாறிக்கொடுமையையுடையபாபிகள் முதன்மையான இந்தப்பூமியைக் காத்திடும் தன்மையைப்போல நன்மைபொருந்திய ஈகையென்னும் கீர்த்தியையுடைய மன்னவன் மடிந்து உலோபனென்று சொல்லும் அரசனானவன் வீறுடனிருந்த காலமாயிருந்தது, (௰)

உருத்திரண் டெழுந்தபொய் யுடம்பை மெய்யெனத்
திருத்துபுண் ணியம்புகழ் தேடி நாடொறும்
வருத்தமின் றிப்பொருள் வழங்குமேலவர்
தரித்திரம் படைத்திடுஞ் சாம காலமே.

(இ-ள்.) அன்றியும், அக்காலமானது அற்பஜலமாகியவிந்துவினால் வடிவமாகத்திரட்சியுற் றெழும்பிய பொய்மையான இச் சரீரத்தை மெய்மையென்று சொல்லிச் செவ்வைப்படுத்தாநிற்கும் தருமத்தையும் கீர்த்தியையும் தேடி ஏழைகளுக்கு வருத்தமில்லாது பொருள்களைப் பிரதிதினமுங் கொடுக்கும் பெரியோர்களும் வறுமையைப் படைத்திடும் பஞ்சகாலமா யிருந்தது. (௧௧)

நெடுநிலம் பாறத் தொட்டு நீரிறைத்
திடுபயிர் செய்துகாத் திருந்து கள்வராற்
படுமுறைப் பாடெலாம் படப்ப வித்திடாக்
கொடுமையா லகவிலே குறைந்த காலமே.

(இ-ள்.) அன்றியும் நெடியபூமியை நிலமானது அறும்படி யூற்ருகத்தோண்டி அதனுல்வரும் சலத்தை யிறைத்து இடாநின்றபல விதப்பயிர்களைச் செய்துப் பிரதிதினமுங் காத்திருந்து திருடர்களால் படாநின்ற முறைமையான துன்பங்க ளனைத்தையும் பட்டும், சூரியவெப்பத்தினுல் தங்களுக்கு வாய்த்திடாத கொடுமையினுல் தானிய விலையானது குறைவுற்றகாலமா யிருந்தது. (க௨)

காயிலை கிழங்கெலாங் கருவ றுத்துக்கான்
மேய்விலங் கினம்பல கொன்று மென்றுமே
தீயவப் பசிப்பிணி தீண்ட லாற்சன
மாய்வுறு கடம்பல மலிந்த காலமே.

(இ-ள்.) அன்றியும், ஆங்காங்குள்ள காய் இலை கிழங்கு முதலிய தாவர வருக்கங்களை நாளுக்குநாட் பறித்துத்தின்றும் கானகத்தில் மேயாநின்ற மிருகச்சாதிகளில் பலவற்றை வதைசெய் தருந்தியும், தீமைபொருந்திய அந்தப் பசியென்னும் நோயானது நீங்காது தொடுவதினுல் சகிக்கமுடியாமல் மானிடரானவர்கள் இறக்காநிற்கும் சரீரங்கள் அனேகமாய்ப் பார்க்கும் இடங்களிலெல்லாம் பெருகிய காலமாயிருந்தது. (கரு)

நலந்தரு கற்பெனு நாமங் கெட்டட
லுலர்ந்தறப் பசியினு லொடுங்கி யினர்த
மிலந்தொறும் புகுந்திரந் திடைந்து வாடிநற
குலந்தலை மயக்கிடுங் கொடிய காலமே.

(இ-ள்.) அன்றியும், நன்மையைத்தருகின்ற கற்பென்றுசொல்லாநிற்கும் பெயரானது அழிந்து சரீரமெலிந்து சகிக்கமுடியாத பெரியபசியினுல் ஒடுக்கமுற்று ஈனசாதியார்களின் வீடுகள் தோறும்போய் நுழைந்து தங்களது குறைகளைக்கூறி யாசித்தும், யாதுங்கிடையாது வாட்டமடைந்து வசக்கேடாகி நல்ல மேற்குலமென்றும் கீழ்குலமென்றும் அறிதற்கரிதாய்க் கலப்புறச்செய்யுங் கொடுமையான காலமாயிருந்தது. (கசு)

மதலைகள் பிறர்மனை வாயி றூங்கிநின்
றிதயநொந் திருகையேத் திரப்பக் கண்டுதாய்

விதிகொலென் றேங்கிட வேறு வேறதாய்ப்
பதிகுலைத் தெறிந்திடும் பஞ்ச காலமே.

(இ-ள்.) அன்றியும், சிறிய பாலியர்கள் தங்களுக் குண்டாகும் பசிகளைப்பொறுக்க முடியாமல் தூக்கமுற்று அன்னியர்களின் வீட்டுவாசல் களிற்போய் நின்றுகொண்டு மனம்நொந்து இரண்டு கைகளையு மேந்தியாசிக்க; அதை அக்குழந்தைகளைப்பெற்ற தாய்மார்கள் பார்த்து இது நமக்கு ஆதிகாலத்தில் ஆண்டவன்கற்பித்த ஊழ் விதிப்பயனு! வென்று அழுதிடும்படி வெவ்வேறுகத் தமது நாட்டைவிட்டும் பிரித்துப் பற்பலதேசங்களில் எறியாநிற்கும் பஞ்சத்தையுடைய காலமாயிருந்தது. (கரு)

பஞ்சமென் ருெருகொடும் பாவி தோன்றிடத்
துஞ்சினர் சிலர்தனி துறந்த பேர்சிலர்
தஞ்சமற் றடிமையாய்ச் சார்ந்த பேர்சிலர்
அஞ்சியே பறநக ரடைந்தபேர்சிலர்.

(இ-ள்.) இவ்விதம், பஞ்சமென்று சொல்லும்படி ஒரு கொடிய பாதகனுனவன் வெளிவரவே, அவனுக்கு ஆற்றமுடியாமல் சிலபேர்கள்மடிந்தார்கள். சிலபேர்கள் பந்துக்கள்முதலிய சகலபேர்களையும் விட்டுநீங்கித் தனித்தவரானுர்கள். சிலபேர்கள் புகலிடமற்று அன்னியர்களுக்கு அடிமையாகப்போய்ச் சேர்ந்தார்கள். சிலபேர்கள் பயமுற்று மற்றதேசங்களிற்போய் ஒதுங்கினுர்கள். (கசு)

கருப்பினிற் சனமெலாங் கலைந்து போதலா
லுரைப்பருங் குனெனு மூருள் ளோரெலா
நிரைப்பெறக் கூடியே நினைத்து சாவினின்
ருெருப்பட வுய்யுமா ருெத்துப் பேசினுர்.

(இ-ள்.) அவ்வாருகப் பஞ்சத்தினுல் சகிக்கமுடியாமல் ஆங்காங்குவசித்த ஜனங்களெல்லோரும் பற்பல திசைகளாகப்பிரிவுற்றுப் போவதினுல், சொல்லுதற்கரிய அந்தக்குனேயினெனும் நகரத்தின் கண்ணுள்ளவரனைவரும் வரிசையாக ஓரிடத்திற்கூடி நின்று கொண்டு ஒருமனப்படப்பொருந்தித் தாங்கள் பிழைக்கும் வழியை ஆலோசித்து ஒருவரோடொருவர் உசாவிப் பேசினுர்கள் (கஎ)

மகிதலத் துயர்பதி மக்க மென்னுமூர்
புகுதலே கருமநம் பூவை மாரணி
நகிலமு தூட்டிட மதலை நல்குவா
ரிகல்புரி தெரித்திர மிலையென் ருேதினுர்.

(இ-ள்.) அவ்விதம் பேசியவர்கள், நாமனைவரும் பெருமைதங்கிய இப்பூலோகத்தின்கண் மேன்மையுடைய பட்டணமாகிய மக்கா வென்றுசொல்லும் நகரத்திற்போய்ச் சேர்வதேகாரியம் அங்குநாம் போய்ச்சேர்ந்தால் அத்தேசத்தார்கள் கூலிக்காய்நமது பெண்கள் அழகியமுலைப் பாலருத்துதற்குக் குழந்தைகளைத் தருவார்கள் அதனால் இப்போது நம்முடன் பகைமை செய்யாநிற்கும் வறுமையானது நமக்கில்லை யென்றுசொன்னார்கள். (௰அ)

மக்கமா நகரெனும் வரிசை யூரதிற்
புக்கியே பிழைப்பது பொருட்டென் றெண்ணியே
மிக்கபே ரனைவரும் விளம்பிக் காலமே
தக்கநற் பயணமென் றெடுத்துச் சாற்றினர்.

(இ-ள்.) அவ்வாறு பேசிய மிகுதியான ஜனங்களெல்லோரும்மக்கமாநகரமென்று சொல்லாநிற்கும் சங்கைபொருந்திய வூரின்கண் சென்றுஜீவிப்பதே மேம்பாடு என்றுலோசித்து அதையாவர்களும் அறியும்படி சொல்லிக்காட்டி நாளையத்தினம் அருணோதய சமயத்தில் அவ்வூருக்குத் தகுதியாகியநல்ல பிரயாணமென்று எடுத்துச் சொன்னார்கள். (௧௯)

ஆரிது மனையலி மாகண் டுஞ்சிட
வேரிய மடிமிசை விருக்க மொன்றதிற்
றாரிலை பணரெலாங் கனிக டேங்கிடச்
சீர்பெறு நறைக்கனி யமுதஞ் சிந்தவே.

(இ-ள்.) அன்றிரவு, அந்தக்குனையின்நகரத்திலுள்ளஆரிதென்பவர்களின் மனைவியாகிய அலிமாவானவர் படுத்து நித்திரை செய்ய அவரின் வாசனைபொருந்திய அழகிய மடியின்மீது ஒருவிருட்சமானது நிற்கவும், அதின்மூடு இலை கிளை முதலிய எல்லாவற்றிலும் பழங்கள் தொங்கவும், சிறப்புத்தங்கிய பரிமளத்தையுடைய அப்பழங்கள் அமுதத்தைச்சிந்தவும். (௨௦)

மரகத நிறமர மடியிற் றோன்றியே
சொரிகதிர்க் கனியெலாந் துய்ப்பச் செங்கயல்
வரிவிழி மயிலலிமாக னவினைத்
தெரிதரக் கண்டெழூந் தெவர்க்குஞ் செப்பினர்.

(இ-ள்.) மரகத நிறமமைந்த அந்தமரமானது மடியின்கண் விளங்கிச்சொரியாநிற்கும் பிரகாசத்தை யுடைய பழங்களெல்லா வற்றையும்

புசிக்கவுமான வொருசொப்பனத்தைச் சிவந்த கெண்டைமீன்போ லும் இரேகைகள் படர்ந்த கண்களையுடைய மயிலாகிய அவ்வலிமா வானவர் தோற்றும்படி பார்த்து எழும்பியாவர்களுக்குஞ்சொன்னார்.

அறிவுறு துவைபெனுந் தந்தை யாகிய
மறையவன் கேட்டுத்தன் மகவை நோக்கிநன்
னெறிதிகழ் மக்கமா நகரி னீர்செலின்
பெறுபல னுறுதியுண் டென்னப் பேசினன்.

(இ-ள்.) அறிவால் மிகுத்த துவைபென்று சொல்லும் அலிமா வின துபிதாவாகிய வேதியன் அச்சமாசாரத்தைக் காதினாற் கேள்வி யுற்றுத் தனது புதல்வியாகிய அலிமாவைப்பார்த்துநல்லசன்மார்க்க மானதுவிளங்காநிற்கும் மக்கமாநகரில் நீர்போனால்அங்கே உறுதியா க உமக்குப் பெறும்படியான இலாபமுண்டுமென்று சொன்னான். ()

அம்மொழி கேட்டலி மாவு மாரிது
நம்மையாள் பவனரு ணமக்குண் டென்னவே
தம்மினத் தாருடன் கூண்டு தாழ்விலாச்.
செம்மைசேர் மக்கமா நகரிற் செல்கின்றார்.

(இ-ள்.) துவைபென்னும் அவ்வேதியன் சொல்லிய அந்த வா ர்த்தைகளை ஆரிதும் அலிமாவும் தங்களது காதுகளினாற்கேட்டு நம் மை ஆள்பவனான கடவுளினதுகிருபை நமக்குண்டுமென்று தங்க ளது கூட்டத்தாருடன் கூடிக் குறைவில்லாத அழகானது பொருந் திய மக்கமாநகரத்திற்குப் பிரயாணமானார்கள். (உங)

இடுக்கிய குழந்தையு மேந்து பிள்ளையும்
வடுப்பிள வனையகண் மான னார்களும்
கடுப்பினிற் கணவமா ருடனுங் கற்குவைத்
திடர்ப்படு சிறுநெறி செல்கின் றாரரோ.

(இ-ள்.) ஒக்கலிலிடுக்கிய பிள்ளைகளையும் கைகளிலேந்திய பிள் ளைகளையுமுடைய மாம்பிஞ்சின் பிளவையொத்த கண்களைக்கொண்ட மான் போல்வாரான அந்தக் குனையின் நகரத்திலுள்ள மற்றும் பெ ண்களும் தங்களது நாயகன்மாரோடும் விரைவாகக் கல்லினது கூட் டத்தைப் பொருந்திய மேடுகளையுற்ற சிறியபாதைகளில் நடந்து சென்றார்கள். (உச)

வரும்பரி வாகனத் துடனுந்தம்மனம்
விரும்பிய மக்கமா நகரை யேவியே

கரும்பெனு மொழியினர் காளை மாருடன்
பெருந்தெரு விடந்தொறும் பிரியத் தெய்தினர்.

(இ-ள்.) அவ்வாறுநடந்துவந்த கரும்பென்றுசொல்லாநிற்கும் சொற்களையுடையோராகிய அந்தக்குலையின்பதியிலுள்ளபெண்கள் தங்களது கணவன் மாரோடுந் தம்முடன் கூடிவந்த குதிரைமுதலிய ஏறுவாகனங்களோடும் தங்கள் மனசின்கண் பிரியப்பட்ட மக்கமாநகரத்தையடைந்து அங்குள்ள பெரிதான வீதிகளினிடங்கள் தோறும் உவகையுடன் போய்ச்சேர்ந்தார்கள். (உரு)

பிறைநுதற் கருங்குழற் பெண்களியாவருங்
குறையற மென்முலை கொடுத்துக் கூலிக்கா
மறுவறப் போற்றியே வளர்ப்ப மியாமெனச்
சிறுவர்க ளுளமனை யனைத்துந் தேடினர்.

(இ-ள்.) அவ்வாறு ஆங்குபோய்ச்சேர்ந்த இளஞ்சந்திரனைப் போன்றநெற்றியையும் கரியகூந்தலையுமுடைய அந்தப்பெண்களனைவரும் நாங்கள் கூலிக்காகக் குறைவில்லாது மென்மை பொருந்திய முலைப்பால் கொடுத்துக் குற்றமறும்படிப் பேணிவளர்த்திடுவோம். ஆகையால் சிறுவர்களுண்டுமா! வென்று சிறுவர்களுள்ள வீடுகள் முழுவதிலும் போய்விசாரித்தார்கள். (உசு)

கூலியின் முலையமு தூட்டுங் கோதையர்
நாலொரு பதின்மர்வந் தவரு நன்குறப்
பாலகர் பெற்றுறு பலனும் பெற்றனர்
சாலவெம் பசிப்பிணி தவிர்ந்திட் டாரரோ.

(இ-ள்.) அவ்விதம்விசாரிக்கவே, கூலிக்காக முலைப்பால் கொடுக்கும்பெண்கள் ஹலிமாவோடு நாற்பதுபேர்கள் ஆங்குவந்ததில் ஹலிமாநீங்கலாக மற்றமுப்பத்தொன்பது பேர்களும் நன்மையுறும்படி சிறுவர்கள் கிடைக்கப்பெற்று பொருந்திய இலாபத்தையும் அடைந்தார்கள். மிகுதியான கொடியபசியென்னும் நோயுநீங்கினார்கள்.

ஆயிழை யெனுமலி மாவு மாரிதுந்
தூயநற் றெருவெலாந் திரிந்து சோர்ந்தொரு
சேய்கிடைத் திலையெனத் திகைத்து வாடியே
வாயுரை மறந்தற மதிம யங்கினர்.

(இ-ள்.) ஆராய்ந் தெடுத்த ஆபரணங்களை யுடையாளென்னும் ஹலிமாவும் ஹாரிதென்பவரும் அந்தமக்கமா நகரத்திலுள்ள பரிசுத்

தமானநன்மைபொருந்திய வீதிகள்முழுவதும் அலைந்து தளர்ச்சி கொண்டு மற்றவர்களைப்போலக் கூலிப்பால் கொடுக்கும்படி நமக்கொருபிள்ளைகிடைக்கவில்லையே இதன்காரணமென்னவென்று பிரமித்து வாட்டமுற்றுவாயினது வார்த்தைகளையும் மறந்து தங்களது முழுமையான அறிவுமயங்கினார்கள். (உஅ)

உடற்பருத் திலவொரு முலையுஞ் சூகையிம்
மடக்கொடிக் கெனமறுத் தாரென் றெண்ணியே
தடப்புயத் தப்துல்முத் தலிபு தம்மனை
யிடத்தினில் வந்துநின் றிசைத்திட் டார்களே.

(இ-ள்.) அவ்விதமபங்கிய இருவர்களும் இந்த இளங்கொடிபோல்வாராகிய ஹலிமாவுக்குச் சரீரமானது பருத்திலது ஒரு தனமும் சூகையென்றுசொல்லி நம்மிடத்தில் பாலருந்தும்படி பிள்ளைகளைத் தராமல் இவ்வூரார் மறுத்தார்களென்று நினைத்துப் பெருமைபொருந்திய புயங்களையுடையஅப்துல் முத்தலிபென்பவரது வீட்டின்பக்கத்தில் வந்து நின்றுகொண்டு ஒருவரோடொருவர் பேசினார்கள். (உக)

தரைப்பெரும் புகழெலாந் தரித்துமாமணி
நிரைத்தணி குங்கும மாலை நீங்கிலா
வரைப்புய அப்துல்முத் தலிபு வந்துநின்
றுரைத்தவ ரிருவரை யுற்று நோக்கினார்.

(இ-ள்.) அப்போது பூமியின்கண்ணுள்ள பெரியகீர்த்தி முழுவதையும் தரிக்கப்பெற்று பெருமைதங்கிய நவரத்தினங்களை வரிசையாகநிரைக்கப்பட்ட மாலையும் குங்குமப் புஷ்பத்தினாற் செய்யப்பட்ட மாலையும் மாறுது குடியிருக்கும்படியான மலைபோலும் புயங்களையுடைய அப்துல்முத்தலிபவர்கள்வந்து வீட்டின்பக்கத்தில்நின்றுகொண்டு பேசிய ஆரிதையும் ஹலிமாவையும் உற்றுப்பார்த்தார்கள், (௩௦)

உடலுலர்ந் தொடுங்கியோர் முலையுஞ் சூகைகொண்
மடமயில் கூலிப்பால் வழங்கு வோமெனத்
திடமுற விசைத்தன டெரியுங் காரணம்
கடவுளின் பயனெனக் கருத்தி லெண்ணினார்.

(இ-ள்.) அவ்விதம் பார்த்த அப்துல் முத்தலிபவர்கள் சரீரமானது மெலிந்து ஒடுக்கமுற்று ஒருஸ்தனமும் சூகைகொண்ட இளமயிலாகிய இந்தப்பெண் கூலிப்பால் கொடுப்போமென்று உறுதியாக

சொல்லினள். அதனால் வெளியாகும் காரணம் கடவுளினது பயனு யிருக்குமென்று மனசின்கண் நினைத்தார்கள். (௩௧)

கோதைநின் குலம்பெய ரேதுகூறென
மாதவ ருரைத்தலு மடைந்தை பண்புறச்
சாதெனுங் குலத்தினென் றாயுந் தந்தையு
மோதுமென் பெயரலி மாவென் றோதினள்.

(இ-ள்.) அவ்வாறு நினைத்த மகாதவத்தையுடைய அப்துல்முத் தலிபானவர்கள் ஹலிமாவைநோக்கி பெண்ணே! உன்னுடையகுலம் யாது! உனது பெயரென்ன! சொல்லுவாயாகவென்று கூறியவுடன் ஹலிமா சாதென்று சொல்லும் குலத்திலுள்ள என்னுடைய தாயுந் தகப்பனும் எனக்கு இட்ட எனது பெயர் ஹலிமாவென்று தகுதியு றும்படி சொன்னார்கள். (௩௨)

குலத்துடன் பெயரையுங் கூறக் கொற்றவர்
நலத்துடன் செல்வமும் பொறையு நன்கெனப்
பெலத்தது பொருளென வெண்ணிப் பேதியாச்
சிலைத்தடம் புயர்பல தெரிந்து கூறுவார்.

(இ-ள்.) ஹலிமா அவர்கள் அவ்வாறு தங்களது குடும்பத்து டன் தங்கள் நாமத்தையும் சொல்ல, மாறுதலில்லாத மலைபோலுந் தோள்களை யுடையவரான கொற்றவரென்னும் அப்துல்முத்தலிபவ ர்கள் கேட்டு மேன்மையோடு இப்பெண்ணின் குடும்பத்தினதுசெல் வமும் கனதியும் நன்றாயிருக்கின்றதென்றும் நமக் கவசியமாயுள்ள பொருளானது பெலமுற்றதென்றும் தங்களது மனதின்கண் நினைத் துப் பல சங்கதிகளையு முணர்ந்து சொல்ல ஆரம்பித்தார்கள். (௩௩)

பெறுமொரு தந்தையு மில்லைப் பின்னிய
வறுமையெத தீம்தரு மதலை யுண்டுகொ
லறிவுற முலைகொடுத் தாக்கஞ் செய்வதற்
குறுவதோ நும்மன மென்ன வோதினர்.

(இ-ள்) எங்களிடத்தில் பின்னிய தாரித்திரியத்தை யுடைய ஏழையான ஆமினாவென்னும் ஒரு பெண்ணானவளீன்ற பிள்ளையொ ன்றுண்டு. ஒப்பில்லாத அப்பிள்ளையைப் பெற்ற தகப்பனுமில்லை - இறந்துபோனார். ஆனதினால் அறிவுபொருந்தும்படி நீங்கள் அந்தப் பிள்ளைக்கு முலைப்பால்கொடுத்து அதைப் பராபரிப்பதற்கு உங்களு

டைய மனமானதுபொருந்துகின்றதா! இல்லையா! சொல்லுங்களென்று கேட்டார்கள். (௩௪)

மன்றலங் குழலியு மன்ன ராமது
மொன்றிய மனத்தொடு முசாவிச் செல்குவ
நன்றுபார்த் தறிகுவ நாமென் றுன்னியே
வென்றிவேற் செழுங்கர வேந்துக் கோதினர்,

(இ-ள்.) அச்சமாசாரத்தைக்கேட்ட வாசனைதங்கிய கூந்தலையுடைய ஹலிமாவும் மன்னவரான ஆரிதும் ஒன்றுபட்ட மனதோடும் ஒருவருக்கொருவர்தங்களது நிலைமைமுதலியவைகளைப்பற்றி ஆலோசித்து நல்லது நாம் போகுவோம் அந்தக் குழந்தையைப் பார்த்தறிகுவோமென்று நினைத்து, வெற்றிதங்கிய வேலாயுதம் பொருந்திய செழுமையான கையையுடைய அப்துல் முத்தலிபுக்குச் சொன்னார்கள். (௩௫)

அவ்வயி னப்துல்முத் தலிபு மாங்கொரு
செவ்விய வறிவனைக் கூட்டிச் செல்கென
நவ்விநோக் குறும்விழி யாமி னாவெனு
மவ்வலன் குழலிமா மனைக்க னுப்பினர்.

(இ-ள்.) அவ்விதம் அவர்கள் சொல்லவே, அப்துல் முத்தலிபென்பவர்களும் அவ்விடத்தில் நின்ற செம்மையான அறிவினையுடைய ஒரு சிறுவனைப் பார்த்து அவனோடும் இவ்விருவரையும்மானினது பார்வை போன்ற பார்வை பொருந்தும் விழிகளையுடைய ஆமினாவென்று சொல்லும் வாசனைபொருந்திய அழகிய கூந்தலையுடையாளது பெருமைதங்கிய வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போவாயாகவென்று சொல்லியனுப்பினார்கள். (௩௬)

கலிநிலைத்துறை.

அறிவை யாமினா வகத்தினி லடைந்தலி மாவுன்
னுரிய மைந்தனுக் கென்முலைப் பாலமு தூட்டத்
தெரிய வந்தன னருளுக வென்றலுஞ் சிறந்த
மருமலர்க்குழ லிவர்க்கெதிர் மொழிவழங் குவரால்.

(இ-ள்.) அங்ஙனம்வந்த ஹலிமாதெய்வப்பெண்போல்வாளாகிய ஆமினா அவர்களின் வீட்டிற் சேர்ந்து ஆமினாவைப் பார்த்து உனது சொந்தமான புதல்வனுக்கு எனதுமுலையின்பாலாகிய அமுதத்தையூட்டுதற்காய் அக்குழந்தையைப் பார்க்கும்படிவந்தேன் ஆதலால்அக்

குழந்தையை என்னிடம்தருவாயாக வென்று கேட்ட மாத்திரத்தில் இவர்களுக்குச் சிறப்பானவாசனை பொருந்தியபுஷ்பங்கள்தங்கும்கூந் தலையுடைய ஆமினு அவர்கள்பதில்வார்த்தைசொல்லுவார்கள். (நஎ)

உற்ற தந்தையு மிலையுறு பொருளிலை யெத்தீம்
பெற்ற பிள்ளையோ ருதவிசெய் குவர்பிற ரிலைநீர்
பற்று நற்பொருள் குறித்துவந் தவர்பசி யுடையீ
ரிற்றைக் குண்பதற் கிடமிலை யென்னிடத் தென்ருர்

(இ-ள்.) ஏழையாகிய நான்பெற்ற குழந்தைக்குச் சரியானதகப் பனுமில்லை பொருந்திய யாதொரு சம்பத்துமில்லை வேறே ஒருதவி யாவது செய்யப்பட்டவர்கள் யாருமில்லை நீங்கள் தங்களுரைவிட்டும் விரும்புகின்ற நல்லபொருள் சம்பாதிக்க வேண்டுமென்று நியமித்து அதன் மேல் ஆசைகொண்டு வந்திருக்கின்றீர்கள் மேலும் பசியுடை யவர்களாகவுமிருக்கிறீர்கள் என்னிடத்தில் இன்றைக்கு ஒருவேளை க்குக்கூட உண்பதற்கு இடமில்லையென்று சொன்னுர்கள். (நஅ)

அந்த வாறலி மாதுணை யாரிதை நோக்கி
யிந்த நன்மனைக் குறுபொரு ளேதுமொன் றிலையாந்
தந்தை யும்மிலை யாம்வறு மைக்குடி தானு
மெந்த வாறியா முய்வதிக் குழந்தையா லென்ருர்

(இ-ள்.) அச்சொற்களைக் கேட்ட அலிமா தமது நாயகரான ஆ ரிதென்பவரைப் பார்த்து நன்மைதங்கிய இந்த வீட்டிற்கு பொருந் திய சம்பத்து யாதொன்று மில்லையாம் இங்குள்ள குழந்தைக்குத்த கப்பனும் இல்லையாம் இறந்து போனுராம்-தரித்திரத்தையுடைய கு டிதானும், ஆதலால் இக் குழந்தையைக் கொண்டும் நாம் எவ்வாறு பிழைப்பது என்று சொன்னுர்கள். (நகூ)

பலன்ப டைப்பதும் வறுமையைப் படைப்பதும் பாரி
னலம்ப டைப்பது முடையவன் விதிப்படி நடுக்குற்
றுலைந்து நின்மன முடைவதென் வெண்டிரை யுடுத்த
தலம்பு ரப்பதின் ஞரெனச் சாற்றவு மரிதே.

(இ-ள்.) அதைக் கேட்ட ஆரிதென்பவர் அலிமாவை நோக்கி இப் பூலோகத்தின்கண் ஒவ்வொருவரும் பிரயோசனத்தை அடை வதும், தரித்திரத்தை யடைவதும், நன்மையை யடைவதும், அகில சராசரங்களையும் சொந்தமா யுடையவனுன கடவுள் ஆதிகாலத்தில் கற்பித்த ஆழ்விதிப்படியேயாகும், ஆதலால் நீநடுக்கமுற்று உலைந்து

உனது மனமானது தளர்ச்சிகொள்வதேன்! வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்தை ஆடையாகச் சூழப்பெற்ற இந்த நிலத்தை அரசாட்சிசெய்வது இன்னார் செய்தார் இன்னாரென்று நிச்சயமாக சொல்லவு மரிதாகும்.

படியி னிற்பெறும் பலனமக் குளவெனிற் பாதிக்
கொடிம ருங்குலிக் குழந்தையா லாங்கொடி யவரேல்
வடிவு றும்பொரு ளடுக்கினு நம்வயின் வாராக்
கடிதி னிற்புகுந் தறிவமென் றுரிது கரைந்தார்.

(இ-ள்.) அன்றியும், பாதிக்கொடிபோலும் இடையினையுடைய அலிமாவே! நமக்குஇப்பூமியின்கண் பெறக்கூடிய பிரயோசனமுண்டுமென்றால், அந்தப் பிரயோசனமானது இந்தப் பிள்ளையினாலேயே கிடைத்தலாகும். அல்லாது நாம் கொடியவர்களாக இருப்போமே யானால் அழகுபொருந்தாநிற்கும் சம்பத்தானது நம்மிடத்தில்வந்து சமீபமாகநெருங்கினாலும் அச்சம்பத்து நம்மில்வந்துசாராது. ஆகையால் நாம் சீக்கிரத்தில் இவ்வீட்டிலேயேபோய்ப் பார்த்தறிகுவோமென்று சொன்னார்கள். (சசு)

இருவ ரும்மெழுந் தாமினா மனையிடத் தெய்தித்
தெரிவை நின்மகக் கொணர்கெனக் கேட்டலுஞ் சிறந்த
பரிம ளந்திகழ் மதலையைக் கொணர்ந்தனர் பார்த்தார்
வரிப ரந்தசெவ் விழிதிறந் தனர்முகம் மதுவே.

(இ-ள்.) ஆரிதும், அலிமாவும், அந்தப்பிரகாரமே யெழுந்து ஆமினா அவர்களினது வீட்டின்கண் சேர்ந்து தெய்வப்பெண்ணாகிய ஆமினாவே! உனது குழந்தையை எங்கள்பால் கொண்டுவருவாயாக; வென்று கேட்டவளவில் அவர்கள் உடனே கஸ்தூரி வாசனை கமழாநிற்கும் தங்களது சிறப்புத்தங்கிய குழந்தையைக் கொண்டுவந்தார்கள். இவ்விருவர்களும் பார்த்தார்கள். அப்போது நபிமுஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சிவந்த இரேகைகள் படர்ந்த தங்களின் கண்களை விழித்தார்கள். (சஉ)

கண்டி றந்தவப் போதினிற் கவினொளி கதிர்விட்
டெண்டி சையினும் பரந்திரு சுடரினு மிலங்கப்
பண்டுகண்டிலாப் புதுமைகொ லெனவுளம் பயந்து
விண்டு ரைத்திடா திருவரு மயங்கிமெய் மறந்தார்.

(இ-ள்.) அவ்விதம் நபிமுகம்மதுமுஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின்கண்களைவிழித்தஅந்தச்சமயத்தில் அ

முகியபிரகாசமானது கிரணங்களைவிட்டு எட்டுத்திக்கிலும்பரவிச் சந்திர சூரியரைப் பார்க்கிலும் அதிகமாகப் பிரகாசிக்க; அப்பிரகாசத்தை ஆரிதும் அலிமாவும்பார்த்து இது இதற்குமுன் நாம் ஒருகாலத்திலும்பார்த்திராத அற்புதமென்று சொல்லி மனசின்கண் அச்சமுற்று வாய்களைத்திறந்து பேசிடாது புத்தி தடுமாறித் தங்களது உடலையு மறந்தார்கள். (௪௩)

பார்த்த கட்கதிர் பரத்தலிற் பயந்தவர் தெளிந்து
கூர்த்த தம்மனத் ததிசயித் தகமகிழ் கொண்டு
கார்த்த டங்கடற் கீண்டெழு முழுமதிக் கதிரைச்
சேர்த்த நேமியம் புள்ளென வுவகையிற் றிளைத்தார்.

(இ-ள்.) அப்பிரகாரம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நோக்கிய கண்களினது பிரகாசமானது எவ்விடமும் பரப்புற்றதனுல் அச்சமுற்ற ஆரிதும் அலிமாவும் தேறுதலடைந்துகூர்மைபொருந்திய தங்களது மனசின்கண் வியப்புத்தங்கி யுள்ளக் களிப்புக்கொண்டு கரிய நிறத்தையுடைய பெரிய சமுத்திரத்தினது அகட்டைக்கிழித்து ஆகாயத்தின்கண் எழும்பாநிற்கும் பூரணைச்சந்திரனது கிரணங்களையடுத்த சக்கரவாகப் பட்சியைப்போலும் சந்தோஷத்திலழுந்தினுர்கள். (௪௪)

வேந்த ராரிது தம்மனை யாடமை விழித்துக்
காந்தண் மெல்லிதழ்ப் பசுந்தொடிக் கரத்தினுல் விரைவி
னேந்து மென்றன ரிலங்கிழை மடமயி லலிமா
வாய்ந்த பேரொளி முகம்மதை யினிதெடுத் தணைத்தார்.

(இ-ள்.) அப்போது அரசரான ஆரிதவர்கள் தமது மனைவியாகிய ஹலிமாவைக் கூப்பிட்டு பெரிய பிரபையானது சிறக்கப்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களைக் காந்தப் புஷ்பத்தினது மெல்லிய இதழ்களைப் போன்ற பசுமை பொருந்திய கடகங்க ளணிந்த கைகளினுல் சீக்கிரத்தில் தாங்குமென்று சொன்னுர்கள். உடனே விளங்காநிற்கும் ஆபரணங்களைத் தரித்த இளமயிலாகிய ஹலிமாவும் அவர்களை இனிமையுடனெடுத்துத் தமதுமார்போடும் அணைத்தார்கள். (௪௫)

மலிந்த பேரொளி முகம்மதை யெடுத்தலும் வருந்தி
மெலிந்த மெல்லிழை சடம்பருத் தோங்கின வீங்கிக்
கலந்த மான்மத வாசமுங் கமழ்ந்தது கருகி
யுலர்ந்த சூகைமென் முலைதிரண் டழுகொழு கினவே.

(இ-ள்.) அவ்வாறு மென்மையவான ஆபரணங்களைத் தரித்திராநின்ற ஹலிமாவானவர் பெரிய பிரகாசமானது அதிகரித்த நபி முஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தமது கைகளினால் தொட்டு எடுத்த மாத்திரத்தில், வருத்தமுற்று மெலிவடைந்திருந்த தமது சரீரமானது மிகவாகப் பருத்துவளர்ந்தது. அதனோடு கலந்த கஸ்தூரி வாசனையும் பரிமளித்தது. தேய்ந்து வற்றிய சூகைகொண்ட மெல்லிய ஸ்தனமும் திரட்சிபொருந்தி அழகானது ஒழுகிற்று. (சகூ)

வடந்த யங்குபூண் செப்பெனப் பணைத்திறு மாந்து
கடந்த மும்மதக் கரியிணைக் கோட்டினுங் கதித்துக்
குடந்த யங்குற விம்மிதங் கொண்டபொற் குவட்டை
யடர்ந்த மென்முலைக் கண்டிறந் தொழுகின வமுதம்.

(இ-ள்.) அன்றியும், மணிவடங்கள் பிரகாசிக்கின்ற பூணணிந்த செப்பைப் போலப் பருத்து அகங்கரித்துத் தாண்டிய கன்னம்கபோலம் கோசமென்ற மும்மதங்களை வாரிச் சொரியாநிற்கும் யானைகளின் கொம்பைப் பார்க்கிலும் சிறந்து திரட்சியானது விளங்காநின்ற விம்மிதங்கொண்ட பொன்னாலாய மகாமேருபருவதத்தைத் தனக்கிணையில்லையென்று அடர்ந்தமென்மை பொருந்திய முலைக் கண்ணானது திறந்து அமுத மொழுகிற்று. (சஎ)

பாகி ருந்தமென் மொழியலி மாவலப்பாகச்
சூகை மென்முலை திரண்டதும் பாறுளும் பியதும்
தேக மெங்கணும் பருத்ததுங் கண்டெழில் சிறந்து
வாகு றும்வடி வாயின ராரிது மகிழ்ந்தே.

(இ-ள்.) அப்போது, ஆரிதென்பவரும் தமது மனைவியாகிய கற்கண்டினது மதுரமானது மாறுது குடியிருக்கப் பெற்றமென்மை பொருந்திய சொற்களை யுடைய அலிமாவின் வலப்பாரிச முள்ள சூகைகொண்ட மெல்லிய ஸ்தனமானது திரட்சி யுற்றதையும், அதிலிருந்து பால்துளும்பியதையும், சரீர முழுவதும் பருத்ததையும், பார்த்து மகிழ்ச்சியடைந்து அழகானது சிறந்து இளம் பருவத்தை யுடைய வடிவமாயினர். (சஅ)

புதிய நல்வடி வாகிய பூங்கொடி யலிமா
கதிர்வி ரித்திட மடிமிசை வைத்துக்கால் வருடிக்
குதிகொள் பான்முலைக் குடித்திடக் கொடுத்திடக் குறையா
மதுர வாய்திறந் தமுதமுண் டனர்முகம் மதுவே.

(இ-ள்.) பின்னர் நூதனமான நல்ல வடிவமாகிய பூங்கொடி போலும் ஹலிமாவானவர் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பிரகாசத்தைப் பரப்பும்படித் தங்கள்மடியின்மீது வைத்துக் கைகளால் அவர்களின் கால்களைத் தடவிப் பாலானது குதிக்கா நிற்கும் வலது முலையைக்குடிக்கும்படி கொடுக்க; அவர்கள் தங்களது வாயினைத்திறந்து இனிமை குறையாத அம்முலைப் பாலினை யருந்தினார்கள், (சகூ)

நறைக மழ்ந்தொளி ததும்பிய முஹம்மது நபியு
முறைமை யாகவுண் டனர்வலப் பாரிச முலைப்பான்
மறுவி லாததம் மதலையு மிடதுபான் மருங்கிற்
குறைவி லாதுவந் தடிக்கடி குடித்துக்கொப் பளிக்கும்.

(இ-ள்.) அவ்வாறு வாசனையானது பரிமளிக்கப் பெற்றுப் பிரகாசம் அதிகரித்து வழிந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் வலது பக்கத்திலுள்ள முலையினது பாலை ஒழுங்குடன் அருந்திவந்தார்கள். குற்றமற்ற அலிமா அவர்களின் குழந்தையாகிய லமுறத்துவும் இடது பக்கத்திலுள்ள முலையினது பாலைக் குறைவில்லாது இச்சித்து உடனுடன் அருந்திக் கொப்பளிப்பார். ()

வற்றித் தூங்கிய லமுறத்து வெனுமந்த மதலை
நற்ற வம்பெறு முகம்மது நபிபறக் கத்தா
லூற்ற பால்குடித் துடறழைத் துறுபிடி யாகி
வெற்றி வெங்கயக் கன்றெனக் கவின்விளங் கியதே.

(இ-ள்.) அன்றியும், முன்னர் உண்ணுதற்குப் பால்கிடையாது உலர்ந்து வாடிய லமுறத்தென்றுசொல்லும் அந்தக்குழந்தையானது நல்ல தவத்தைப்பெற்ற நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பறக்கத்தினால் அதிகரித்த அமுதத்தையுண்டு சரீரமானது வளர்ச்சியுற்று உறுபிடியாகி வெற்றியையுடைய கொடிய யானைக் கன்றைப்போலும் அழகினால் பிரகாசித்தது. (ருக)

மாத வம்பெறு முகம்மது நபிக்குந்தம் மகற்கு
மேத மின்றிய பால்கொடுத் திருந்துசின் னாட்பின்
கோதி லாக்குனை யினிற்செலக் கருத்தினிற் குறித்துக்
காத லித்துரைத் தார்துணைத் தார்கண வருக்கே.

(இ-ள்.) அவ்வாறு ஹலிமாஅவர்கள் மகாதவத்தைப்பெற்ற நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்

கும்தமது புதல்வரான லமுறத்துக்கும் குற்றமற்ற பாலானது கொடுத்துக் கொண்டு அந்த மக்கமா நகரத்திற்றனே இருந்து சிலநாள் கழிந்தபின்னர், தீதில்லாத தம் நகரமாகிய சூனையின் பதிக்குப் போகும்படி மனசின்கண் ஆலோசித்து விருப்பங்கொண்டு தமது நாயகரான இரட்டைமாலை எணிந்த தோள்களையுடைய ஆரிதென்பவருக்குச் சொன்னூர்கள். (ருஉ)

இருவ ரும்மனச் சம்மதக் களிப்புட னேகி
யரசர் நாயக ரப்துல்முத் தலிபைச்சென் றடுத்து
வரிசை பெற்றனம் புகழ்பல பெற்றன மகிழ்ந்தெம்
புரிசை சூழ்பதி புகுவமென் றுரைத்தனர் புகழ்ந்தே.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிய சொல்லுக்கு ஹலிமாவோடுஹாரிதென்பவரும் உடன் பட்ட மனச் சந்தோஷத்துடன் நடந்து இராஜநாயகரான அப்துல்முத்தலி பவர்களிடத்திற் போய் நெருங்கி அவர்களைத்துதித்து நாங்கள் தங்களால் கிடைக்கப் பெற்ற மகவினுல் சங்கையை அடைந்தோம். அன்றியும், பலவிதக்கீர்த்திகளைப்பெற்ரேும். ஆதலினுல் மதிளானது சூழப்பெற்ற எங்களது நகரமாகிய சூனையினூருக்கு மகிழ்ச்சியுடன் போய் வருகிரேமென்று சொன்னூர்கள். (ருரு)

கேட்ட போதினி லப்துல்முத் தலிபெனுங் கிழவோர்
வேட்ட லாயிரு வருக்குநன் மொழிபல விளம்பிக்
கோட்டு மாங்குயி லாமினுக் கிவையெலாங் கூறி
வாட்ட மில்லதோர் நும்பதிச் செல்கென வகுத்தார்.

(இ-ள்.) அவ்வாறு ஆரிதும் ஹலிமாவும் சொல்லிய அச்சமாசாரத்தை அப்துல் முத்தலி பென்னுந் தலைவர் தமதுகாதுகளினூற் கேள்வியுற்றசமயத்தில் அவர்கள் மீது விருப்பமாகி அவ்விருவர்கட்கும் நன்மையான பலவித வார்த்தைகளைக்கூறி மாமரத்தினது கொம்புகளி லிராநிற்கும் குயில்போலும் ஆமினு அவர்களுக்கு இச்செய்திகளனைத்தையுஞ் சொல்லிவாட்டமில்லாத ஒப்பற்ற உங்களது ஊருக்குப்போய் வாருங்களென்று விடையளித்தார்கள். (ருச)

இந்த வாறுதேர்ந் தாரிது மெழிலலி மாவுங்
கொந்து லாங்குழ லாமினு மனையினைக் குறுகிச்
சுந்த ரந்தவழ்ந் திலங்கிய கொடியினைத்துதித்துச்
சிந்தை யின்னூறுஞ் செய்திக ளனைத்துஞ்செப்பினரே.

(இ-ள்;) அப்போது அழகுபொருந்திய ஆரிதும் ஹலிமாவும் இந்த வரலாறுகள் அனைத்தையும் அறிந்து பூங்கொத்து உலாவாநிற்குங் கூந்தலையையுடைய ஆமினு அவர்களின் வீட்டையடைந்து அழகானது தவழப்பெற்றுப் பிரகாசித்த கொடிபோல்வாளாகிய ஆமினுவைப் புகழ்ந்து தங்களது மனசின்கண்தங்கிய சமாசாரங்கள் முழுவதையும் சொன்னுர்கள். (ருரு)

தம்ப திச்செல விருவருஞ் சாற்றிய மாற்றஞ்
செம்பொற் பூங்கொடி யாமினு கேட்டுளங் திடுக்கிட்
டம்ப ரத்தெழு முழுமதி நிகரகு மதுவைக்
கம்ப னிங்தசெங் கரத்தெடுத் துவகையிற் கலுழ்ந்தார்.

(இ-ள்) அவ்வாறு ஆரிதும் ஹலிமாவும்தங்களது ஊருக்குப்போகும் படியாகச்சொல்லிய சமாசாரத்தைச் செம்மையான அழகிய பூவாலியன்ற கொடிபோலும் ஆமினுஅவர்கள் தங்களின்காதுகளினுற்கேள்வியுற்று மனமானது துணுக்குதலடைந்து ஆகாயத்தின்கண் எழாநிற்கும் பூரணச் சந்திரனைப் போன்ற அஹ்மதுவென்னுந் திருநாமத்தையுடைய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கடகங்கள் தரித்த சிவந்த கைகளாலெடுத்து மகிழ்ச்சியினுற் பிரிவாற்ருது அழுதார்கள். (ருசு)

தேன்கி டந்தசெங் கனியிதழ்ப் பவளவாய் திறந்து
வான்கி டந்தொளிர் மதியினு மொளிர்முகம் மதுவைக்
கான்கி டந்தமெய் யுறமுத்த மிட்டுடல் களிப்ப
வூன்கி டந்தவேல் விழிமல ரிணையிலொத் தினரே.

(இ-ள்.) அவ்விதம் அழுத ஆமினுஅவர்கள் தேனுனது பொருந்திய சிவந்த கொவ்வைக் கனிபோலும் அதரங்களையுடைய பவளம் போன்ற தங்களது வாயினைத் திறந்து ஆகாயத்தின்கண் சார்ந்தொளிராநிற்கும் சந்திரனைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பிரகாசிக்கும் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வாசனைமாருதுகுடியிருக்கப்பெற்ற சரீரமானது பொருந்தும்படி முத்தமிட்டு உடலம் மகிழ்ச்சியடைய நிணமானது கிடக்கப்பெற்ற வேலைப்போன்ற கண்களாகிய இரண்டு புஷ்பங்களிலு மொத்தினுர்கள். (ருஎ)

அமரர் நாயக மேபுவி யரசருக் கரசே
தமரி னுக்கொரு திலதமே யார்க்குந்தா யகமே

நமது யிர்க்குயி ராகிய முகம்மது நபியே
கமைத ருங்கட லேயெனப் போற்றினர் கனிந்தே.

(இ-ள்.) அன்றியும், தேவர்கட்கெல்லாம் நாயகமானவரே! பூலோகத்தின்கண்ணுள்ள வேந்தர்கட்கெல்லாம் வேந்தரானவரே! உறவோர்களான குறைஷியர்கட்கு ஒப்பற்றதிலகமானவரே! மற்ற யாவர்கட்கும் தாய்வீடானவரே! எங்களது சிவனுக்குச் சிவனாகிய முகம்மதென்னுந் திருநாமத்தையுடையநபியானவரே! பொறுமையைத் தாங்கிற்குஞ் சமுத்திரமானவரே! என்று சொல்லி உருக்கமுடன் துதித்தார்கள். (ருஅ)

போற்றி முத்தமிட் டணியணிந் தருந்துகில் புனைந்து
மாற்ற லர்க்கரி யேயென முகம்மதை வாழ்த்தித்
தேற்று மென்மொழி பலவெடுத் தாமினா செப்பிக்
கூற்ற டர்ந்தவேல் விழியலி மாகையிற் கொடுத்தார்.

(இ-ள்.) ஆமினா அவர்கள் அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் போற்றுதல்செய்து முத்தமிட்டுக் கிடைத்தற்கரிதான ஆபரணங்களைப் புனைந்து வஸ்திரந் தரித்து சத்துராதிகளாகிய யானைகட்குச் சிங்கமானவரே! யென்று சொல்லி ஆசீர்வதித்துப் பின்னர், அவர்களை எமனையும் தமக்கிணையில்லையென்றடர்ந்த வேலாயுதம்போலும் கண்களையுடைய அலிமா அவர்களுக்குத் தேற்றத்தைச்செய்யும் மென்மைபொருந்திய பலவித வார்த்தைகளையெடுத்துக்கூறி அவர்களின் கையில் கொடுத்தார்கள். (ருகூ)

தன்னு டன்பிறந் தவளென விருகையாற் றழுவி
யென்ம கன்னல னின்மக னிவனென வியம்பி
மின்னு ணங்குவே லாரிதை வெற்றியால் வியத்திப்
பொன்ன னாருட னூரினிற் புகுமெனப் புகன்றார்.

(இ-ள்.) அன்றியும் ஆமினா அவர்கள் அலிமா அவர்களைத் தம்மோடுங்கூடிப் பிறந்த சகோதரியைப்போல இரண்டு கைகளினாலுங் கட்டி யணைத்து அலிமாவே! இப்பிள்ளையானது என்னுடைய பிள்ளையல்ல, உன்னுடையபிள்ளைதானென்றுசொல்லிப் பிரபையானது துவளாநிற்கும் வேலாயுதம் தாங்கிய கையினையுடைய ஆரிதென்பவரை வெற்றியினாற்றுதித்து இலக்குமி போன்றவளான உமதுமனைவி அலிமாவோடும் உங்களது நகரத்திற்குப் போய்ச் சேருங்களென்று சொன்னார்கள். (கூ0)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருந்தவம் புரியும் பெருந்தலம் வணங்கி
யடைகுவம் பதிக்கென ஹலிமா
வருந்திடா தெழுந்து முகம்மதைக் கதிரின்
மணிவளைக் கரத்தினி லேந்தித்
திருந்திட நடப்பக் கஃபத்துல் லாவிற்
சிறந்திடுந் தென்கிழ மூலை
யிருந்திடும் ஹஜறுல் லசுவது வெனுங்க
லெதிர்கொடு நடந்தது வன்றே.

(இ-ள்.) உடனே அலிமா அவர்கள் அருமையான தவங்களைப் புரியாநிற்கும் பெருமைபொருந்திய தலமாகிய கஃபத்துல்லாவைத் தொழுது பின்னர் நம தூருக்குப் போகுவோமென்று சொல்லி யாதொரு துன்பமும் இல்லாது எழும்பி நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பிரகாசத்தையுடைய இரத்தினவருக்கங்கள் பதித்த வளையல்களணிந்த தங்களது கைகளினு லெடுத்தேந்திக்கொண்டு செவ்மையாகக் கஃபத்துல்லாவை நோக்கி நடந்துபோகவே, அப்போது மேன்மைபொருந்திய அந்தக் கஃபத்துல்லாவின் தென்கிழக்குமூலையில் இருக்கும் ஹஜறுல் அசுவது என்று சொல்லும் கல்லானது இவர்களுக்கு எதிர்கொண்டு நடந்துவந்தது. (சுக)

காரியுங் கருங்கற் றொட்டுமுத் தமிட்டு
நடந்துகஃ பாவலஞ் செய்து
சீரிதி னியன்ற வாயிலி னெதிரே
சென்றுநின் றிறைஞ்சுமந் நேரம்
தாரணி திகழ்ந்த குபலெனும் புத்துத்
தலைகவிழ்ந் ததுவத னடுப்ப
நேர்பெற நிரையா யிருந்தபுத் தனைத்து
நிலமிசை சாய்ந்துருண் டனவே.

(இ-ள்,) அவ்விதம், எதிர்கொண்டு நடந்துவந்த கரியநிறத்தையுடைய அந்தஹஜறுல் அசுவதென்னும்கல்லை ஹலிமா அவர்களும் தங்களது கைகளினுல் தொட்டுமுத்தமிட்டுக் கஃபத்துல்லாவிற்சென்று அதனைத் தவ்வாபென்னும் பிரதக்கணஞ்செய்து சிறப்பினுற் பொருந்திய அதன் வாசலினது முன்பாகப்போய்நின்று வணங்குகின்ற அந்தச் சமயத்தில், அக்கஃபாவினுள்ளிருந்த புஷ்பமாலை விளங்கப்பெற்ற குபலென்று சொல்லும் பெயரையுடைய பெரிய விக்கிர

கமானது நாணமுற்றுத் தனது தலையைக் கவிழ்ந்தது. அதன் சமீபத்தில் ஒழுங்குபெறும்படி வரிசையாக வைத்திருந்த சிறியபுத்துகளனைத்தும் பூமியின்மேல் சரிந்து உருண்டு விழுந்தன. (சுஉ)

புதுமைக ளனைத்துங் கண்டுகண் குளிர்ந்து
 பொற்கொடி கஃபத்துல் லாவிட்
டிகமுற நடந்து கணவரைக் குறுகி
 யெடுத்திவை யனைத்தையு மியம்ப
மதியினிற் றெளிவுற் றாரிது மலிமா
 மலர்முக நோக்கியிம் மகவாற்
கதியுறும் நமக்குச் செல்வமும் பெருகுங்
 கவலையுந் தீர்ந்தன மென்றார்.

(இ-ள்.) உடனே பொன்னானியன்ற கொடியாகிய அலிமாஅவர்கள் அங்குநடந்த அதிசயங்கள் முழுவதையும் பார்த்து இரண்டு கண்களுங் குளிர்ச்சியடைந்து அந்தக்கஃபத்துல்லாவை விட்டும் நீங்கி இனிமைபொருந்தும்படி நடந்துவந்து தங்களது நாயகரான ஆரிதவர்களை யடைந்து இச்சமாசாரங்க ளெல்லாவற்றையுஞ் சொல்ல அவ்வாரிதவர்கள் கேள்விப்பட்டுத் தங்களது அறிவினால் மனசின்கண் தேற்றமடைந்து ஹலிமாஅவர்களின் தாமரை மலர்போன்ற முகத்தைப்பார்த்து நமக்கு இம்முஹம்மதென்னுங் குழந்தையினால் மோட்சமானது கிடைக்கும். அன்றியும் சம்பத்தும் அதிகரிக்கும் நமக்குண்டாகிய துன்பங்களும் நீங்கப்பெற்றோமென்று சொன்னார்கள். (சுங)

நன்றெனப் புகழ்ந்து மனங்களி கூர்ந்து
 நாரியு மாரிது தாமும்
வென்றிகொண் டனமென் றொட்டைமேற் கொண்டார்
 மேனியிற் சொறியுடன் வாடு
மொன்றிய கிழடுந் தூங்கியகுணமு
 மொழிந்தது இடபிடி யாகிக்
குன்றென வுயர்ந்து பருத்துறக் கொழுத்துக்
 குதிப்பொடு நடந்தது வன்றே.

(இ-ள்.) அவ்வாறுபேசிக்கொண்ட ஹலிமாவும் ஹாரிதவர்களும் நன்மைதானென்று அம்நபிகணாயகம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் துதித்து அவர்களோடும்நாம் வெற்றி யடைந்

தோமென்று சொல்லி மனசின்கண் சந்தோஷம்பெருகித் தங்களது நகரமாகிய குனையினூருக்குப் போகும்படித் தங்களுடைய ஒட்டகத்தின்மீது ஏறியிருந்தார்கள். உடனே அவ்வொட்டகத்தினுடலிற் றங்கியிருந்த தினவுடன்வரும் தூக்கம்பிடித்த குணமும் நீங்கினது அன்றியும் பொருந்தும்படி பெலபிடியாகி மலையைப்போலவளர்ந்து தடித்து மதர்த்துக் குதித்தலோடும் நடந்தது. (௬௪)

குனையின்விட் டெழுந்த கொடியிடை மடவார்
 கூடின ரொருமுக மாக
வனைவருந் திரண்டு மக்கமா நகர்விட்
 டருவரைச் சிறுநெறி யணுகித்
தனையரும் புதிய தனையரு முயிர்போற்
 றலைவரு மடைந்தையர் தாமுங்
கனைகுறற் களிறும் பிடிகளுங் கன்றுங்
 கலந்துட னடப்பதொத் தனரே.

(இ-ள்.) அப்போது குனையின்நகரத்தைவிட்டு முன்னெழுந்துவந்திருந்த கொடிபோலு மிடையினைக் கொண்ட இளம்பருவத்தையுடைய பெண்களும் ஒருபுரமாக ஆங்குவந்துகூடினார்கள். கூடவே ஹலிமாமுதலிய அனைவரும் ஒன்றுசேர்ந்து அந்தமக்கமா நகரத்தைவிட்டும் நீங்கி அரிதானமலைகளையுடைய சிறியபாதைகளை நெருங்கி உயிர்போன்ற கணவன்மார்களும் அப் பெண்களும் பிள்ளைகளும் அந்த மக்காப்பட்டணத்தில் பாலருத்தும்படிப் புதிதாய்க்கிடைத்த பிள்ளைகளும் ஒலியாநிற்குங் குரலினையுடைய ஆண் யானைகளும் பெண்யானைகளும் அவற்றின் குட்டிகளும் ஒன்றோடொன்று கலப்புற்று நடந்ததையொத்து நடந்துசென்றார்கள். (௬௫)

மல்லுயர் திணிதோ ளாடவர் பலரும்
 வனமுலை மடக்கொடி யவருஞ்
செல்லுநன் னெறிபால் வயின்வயின் செறிந்த
 செடிகளு மரந்தலை பெவையுங்
கல்லுங்கற் குவையும் யாவருங் கேட்பக்
 கடிதினிற் றெளியவாய் விண்டு
செல்லுயர் கவிகை முகம்மது நபிக்குத்
 தெரிசரச் சலாமுரைத் தனவே.

(இ-ள்.) அப்பொழுது வலிமையானது வளராநிற்கும் திண்ணியபுஜங்களையுடைய புருஷர்கள் பலரும் அழகிய ஸ்தனபாரணங்களையுடைய இளங்கொடிபோலும் பெண்களானவரும் போகாநின்ற நன்மைபொருந்திய அப்பாதையின்கண் இடங்கள்தோறும் நெருங்கிய செடிகளும் விருக்கமுதலிய மற்றவைகளும் மலைகளும் கற்கள்நிறைந்த திடர்களும் விரைவினிற்றெளிவாக அறியும்வண்ணம்தங்கதுவாய்களைத்திறந்து யாவர்களும் காதுகளினாற் கேட்கும்படி மேலான மேகச்குடையையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு சலாஞ்சொல்லின. (௬௬)

நடந்தவர் வெயிலா லுடறடு மாறி
 நலிதரத் தாகமும் பெரிதாய்
விடந்தயங் கியகண் ணிணைமட வாரு
 மெலிதரச் செல்லுமக் காலைக்
கிடந்ததோர் கான மிலையில வாகிக்
 கிளைத்திடும் பணரெலாங் கருகி
யிடந்தொறு நிழலற்றிருந்ததவ் விடத்தி
 லிறங்கின ரனைவருஞ் செறிந்தே.

(இ-ள்.) அப்பாதையின்கண் அவ்வாறு நடந்து சென்றவர்கள் சூரியகிரணத்தினால் உடலானதுதடுமாற்றமடைந்து தண்ணீர்விடாயும் அதிகரித்து வருத்தமுறவும், விடமானது மாறாது குடியிருந்து விளங்காநிற்கும் இருகண்களையுடைய பெண்களும் மெலிவுறவும், போகாநின்ற அந்தச் சமயத்தில் ஒருவனம் எதிர்ப்பட்டது. அவ்வனமானது யாதொரு இலையுமில்லாததாய் நிறைந்திடுங் கிளைகள் முழுவதும் வெயிலினால் தீய்ந்து இடமுழுவதும் நிழலின்றியிருந்தது அத்தலத்தினில் எல்லாவரும் நெருக்கமாயிறங்கினார்கள். (௬௭)

மான்மதஞ் செறிந்து கமழ்தர ஹலிமா
 மடிமிசைமுகம்மது விளங்கக்
கானகந் தழைத்துப் பணர்கள்விட் டெழுந்து
 கதிரவன் கனற்கர மறைத்து
நீனிறப் பசந்த விலைமிக நெருங்கி
 நிரைமலர் சொரிதரக் காய்த்துத்
தேனிருந் தொழுகுங் கனிபல சிதறித்
 திசையெலா நிறைந்தன வன்றே.

(இ-ள்.) அப்போது ஹலிமாஅவர்களின் மடியின்மீது கஸ்தூரிவாசனையானது நெருக்குற்றுப்பரிமளிக்கும்படி நபிமுகம்மது சல்லல்

லாகு அலைகிவசல்லமவர்கள் இருந்துபிரகாசிக்க; அவர்களின்பொருட்டால் யாதொன்று மில்லாது பாழ்நிலமாயிருந்த அந்தக்கானகமானது தளிர்த்துக் கிளைகள் விட்டு ஓங்கிச் சூரியனதுவெப்பந்தங்கிய கிரணங்களை மறையும்படிசெய்து நீலநிறத்தையுடைய பசுமைபொருந்திய இலைகள் அதிகமாகச் செறிந்து வரிசையாகிய புஷ்பங்களைச் சொரியக் காய்த்து மதுவானது நீங்காது குடியிருந் தொழுகாநிற்கும் பலவிதப் பழவருக்கங்களை யெண்டிசைகளிலும் சிந்திப்பெருகினது. (சுஅ)

கண்டவர் மனமுங் கண்களுங் குளிர்ந்து
 கனிபல பறித்தெடுத் தருந்தி
வண்டணி குழலார் வருத்தமுந் தீர்ந்து
 வழியினிற் பெரும்பலன் கிடைத்துக்
கொண்டதுந் தாகந் தீர்ந்தது மலிமா
 குழந்தையா லாமெனச் சூழ்ந்து
முண்டக மலர்த்தா ளினில்விழி சேர்த்தி
 முகம்மதைப் போற்றிவாழ்த் தினரே.

(இ ள்.) அவ்வாறு பெருகிய அக்கானகத்தை பார்த்தவர்கள் தங்களதுசிந்தையும் நயனங்களும் குளிர்ச்சியடைந்து தங்களின்கைகளினால் பழங்களை அநேகமாய்ப் பறித்து எடுத்துப்புசித்து வண்டுகளானது குடியிருக்கப் பெற்ற அழகிய கூந்தலையுடைய பெண்கள் தங்களது துன்பங்களும் நீங்கி இப்பாதையின்கண் பெரிய பலனானது கிடைக்கப்பெற்று அதைநாம் அனுபவித்ததும் தண்ணீர்விடாய் மாறியதும் ஹலிமா அவர்களின் குழந்தையினது பொருட்டாலான தென்று செல்லிவளைந்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தாமரைப்பூப்போலும் பாதங்களில்தங்களது கண்களைப்பொருத்தி அவர்களைப்புகழ்ந்து ஆசீர்வதித்தார்கள், (சுகூ)

இலைபல தளிர்த்துக் குளிர்வனச் சோலை
 யிருந்தவ ரனைவரு மெழுந்து
குலவுவா கனத்திற் கொண்டுகுன் றுகளுங்
 குழிதருங் கானியா றுகளு
நிலைபெறுஞ் சுரமுங் கடந்தவர் நடந்து
 நீள்வரை யணையமா மதிள்சூழ்
பலபல மனையுந் தெரிதர நோக்கிப்
 பதியெனுங் குனையினை யடைந்தார்.

(இ-ள்.) அவ்வாறு இலைகள் அனேகமாய்த் தழைத்துக் குளிர்ச்சிபொருந்தாநிற்கும் அந்தக்காடாகிய அடவியின்கண் தங்கியிருந்த எல்லோரும் எழும்பிப்பிரகாசிக்கின்ற தங்களது வாகனங்களின் முதுகின்மேல் ஏறியிருந்துகொண்டு மலைகளையும் பள்ளங்களைத்தரா நின்ற காட்டாறுகளையும்மாருத பாலைநிலங்களையுந்தாண்டி அவர்கள் சென்றுநீண்ட மலைகளைப்போன்ற பெரிய சுவர்கள் வளையப்பெற்ற பற்பலவிதமான வீடுகளையும் விளங்கும்படி பார்த்துத் தங்களது ஊரென்றுசொல்லும் குனையின்நகரத்தைப் போய்ச்சேர்ந்தார்கள்.

பதியினை யடுத்தா ரவர்மனை புகுந்தார்
பாவையர் பலருமங் கடைந்து
மதியினுந் தெளிந்த வடிவெடுத் தனைய
முகம்மதங் கிருப்பதைக் கண்டா
ரதிசய மிஃதென் றணிமலர்த் தாளி
லியில்விழி வைத்துமுத் தமிட்டு
நிதியமும் பேறும் படைத்தன ரலிமா
நிகரிலை யிவர்க்கினி யென்பார்.

(இ-ள்.) அவ்விதம் தங்கள்ஊராகிய குனையென்னும்பட்டணத்தைச்சேர்ந்தவர் எல்லாவரும் அவரவர்கள் வீடுகளிற்போய் நுழைந்தார்கள். அப்போது அப்பட்டணத்திலுள்ள பெண்கள்யாவர்களும் ஹலிமாஅவர்களின் வீட்டில்வந்துசேர்ந்து சந்திரனிலும் தெளிவானவடிவம் எடுத்ததைப் போன்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வீட்டிலிருப்பதைப்பார்த்து இஃது ஆச்சரியமென்று சொல்லி நபிகணாயகமவர்களின் அழகிய தாமரைப்பூப்போலும் பாதங்களில் தங்களது கண்களைச் சேர்த்தி முத்தமிட்டு ஹலிமாவானவர் சேல்வத்தையும் பேற்றையும் சம்பாதித்தார் இனி இவருக்கு இப்பூலோகத்தின்கண் ஒப்பானவர் ஒருவருமில்லரென்று சொல்லுவார்கள். (எக)

கூண்டுவங் தெடுப்பார் புகழ்ந்து போற்றிடுவார்
கொழுங்கனி முகம்மதை யிவருக்
காண்டவன் கொடுத்தா னிந்தநற் பெரும்பே
றணியிழை படைத்தன ரென்பார்
தூண்டிடா விளக்கோ முழுமணி தானோ
சுவர்க்கத்தி லிருந்துவந் ததுவோ
வேண்டிய பொருளு முறுமொரு நாளோர்
வீட்டினிற் புகிலெனப் புகல்வார்.

(இ-ள்.) அன்றியும், அவ்வூரிலுள்ள பெண்கள் பிரதிதினமும் இடைவிடாது கூட்டங் கூட்டமாக அலிமா அவர்களின் வீட்டில் வந்து நபிகணுயகத்தைத் தங்களது கைகளினாற்றொட்டு எடுப்பார்கள். துதித்து வணங்குவார்கள். செழுமையான கனிபோலும் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்னு மிக்குழந்தையை இவ்வலிமாவுக்கு அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவானவன் அருளினன். அதனால் இந்த நன்மைபொருந்திய பெரியசெல்வத்தை அழகிய ஆபரணங்களையுடைய ஹலிமாசம்பாதித்தாரென்று சொல்லுவார்கள். மேலும் இக்குழந்தையானது தூண்டப்பெருத தீபமோ! அல்லது பூரணப்பட்ட மாணிக்கமோ! பொன்னுலகத்தின் கண்ணிருந்து இங்குவந்ததுவோ! நாம்அறியோம். இக்குழந்தை ஒருதினம் ஒருவீட்டினுள் நுழையுமேயானல் அவ்வீட்டிற்குவேண்டியசம்பத்தெல்லாம் அப்பொழுதே உண்டாகு மென்று சொல்லுவார்கள்.

வறுமையுந் தீரு நோயும்விட் டகலு
  மனத்தினிற் கவலையு நீங்குஞ்
சிறுமையு மகலும் புத்தியும் பெருகுந்
  தீவினை வந்தடாது
தெறுபகை சிதையுஞ் செல்வமும் வளருந்
  தேகமுஞ் சிறந்துபூரிக்கு
முறுபவந் தொலையு முஹம்மதை யெவர்க்கு
  மொருபகற் காண்கிலென் றுரைப்பார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை யாவர்களாயினும் ஒருபகற்பொழுது பார்ப்பார்களே யானல் அவர்களுக்கு தரித்திரமும்நீங்கும். பிணிகளும் சரீரத்தைவிட்டோடும். மனசின்கண்ணுள்ள சஞ்லசமும் தீரும். சிறுமையும்போகும் அறிவும்அதிகரிக்கும். கொடியசெயலானதுவந்துநெருங்காது தங்கியபகைமை கெடும். சம்பத்தும் ஓங்கும் சரீரமும் சிறப்புற்றுப் பூரிக்கும் பொருந்திய பாவமும் ஒழியும் என்றுசொல்லுவார்கள்.

தன்கிளை யவரை விழித்தரு கிருத்திச்
  சாற்றினர் செழும்புக ழலிமா
வென்குலத் தவமோ யான்செய்த பலனே
  விவர்தமைக் கிடைக்கவும் பெற்றேன்
முன்பெறுஞ் சூகை வடுவையுந் தவிர்த்தேன்
  முகமலர் தரவடி வானேன்

பின்புறு கலியுங் காண்கிலேன் பலனும்
பெற்றன னெனவுரைத் தனரே,

(இ-ள்.) அப்போது செழுமையான கீர்த்தியையுடைய ஹலிமாஅவர்கள்தமது குடும்பத்திலுள்ள ஜனங்களையும் அவ்வாறுபுகழ்ந்து சொல்லிய பேர்களையும் கூப்பிட்டுப் பக்கத்தி லிருக்கச்செய்து எனதுகுலத்திலுள்ளவர்கள் செய்த தவப்பேறோ! அல்லதுயான் செய்தபுண்ணியமோ! யான்இந்தமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக்கிடைக்கவும் பெற்றென். அதனால் ஆதியிற் பொருந்தியிருந்த சூகையாகிய முலையினது குற்றத்தையும் நீங்கினேன். முகமானது மலரும்படி அழகையடைந்தேன். பிற்காலத்தில் எனக்குற்ற வறுமையையும் மண்ணிற் காணுமலாகினேன் பலனையும் அடைந்தேன் என்றுசொன்னார்கள்.

பாரினிற் சிறந்த மக்கமா நகர்க்குப்
பயணமென் றிருக்குமன் றிரவி
னேருமென் மடியில் விருக்கமொன் றெழுந்து
நிலமிசை கனிகளைச் சிந்த
வாரியே யருந்தி வறுமையும் பசியு
மறந்துடல் களிப்பொடு மகிழக்
கூருமோர் கன்வு கண்டன னெனவே
கோதையர்க் கெடுத்துரைத் தனரே.

(இ-ள்.) அன்றியும், இப்பூலோகத்தின்கண் மேன்மை தங்கிய மக்கமாநகரத்திற்கு நாங்கள்பிரயாண மென்றிருக்கும் அவ்விராவில் பொருந்திய என்மடியின்மீது ஒருமரமானதுவளர்ந்து பூமியின்கண் கனிகளைச் சிதறவும் அவற்றையான் எனது கைகளினால் அள்ளியுண்டு எனது தரித்திரமும் பசியும்விட்டுத்தேகக்களிப்புடன் மகிழ்ச்சியடையவுமான ஆராய்ந்தறியகூடிய ஒருசொப்பனத்தைக் கண்டேனென்று அப்பெண்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். (எரு)

அரந்துடைத் தொளிருங் கதிரிலை வேற்கண்
ணுமினு திருமக னலிமா
வரந்தரு குழந்தைக் கொருமுலைப் பாலே
வழங்கின படியறி வதற்கே
சுரநதிடுஞ் சூகை முலையமு தருந்தித்
துயிறருங் காலையி லெடுத்துங்
கரந்துதம் மிடது பான்முலை கொடுக்கிற்
கனியிதழ் வாய்திறந் தருந்தார்.

(இ ள்.) ஹலிமா அவர்கள் அரத்தினல் தேய்க்கப்பட்டு விளங்காநிற்கும் கிரணங்கள்தங்கிய இலைகளைக் கொண்ட வேல்போலுங் கண்களையுடைய ஆமிஞ அவர்களின் தெய்வீகம்பொருந்திய மகனுரான ஆசிர்வாதத்தையுடைய மதலைநபிமுஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு ஒருதனத்தினது அமுதத்தையே கொடுத்துவந்த விதத்தை யறிவதற்காக, அவர்கள் மாருமல் ஊறிக்கொண்டேயிருக்கும் தமது சூகை முலையின்கண்ணுள்ள பாலைக்குடித்து நித்திரைசெய்கின்ற சமயத்தில் அவர்களைத்தமது கைகளினல் எடுத்தும் மறைத்து தமது இடதுபக்கத்திலுள்ள பாலினது முலையைக் குடிக்கும்படி கொடுத்தால் கொவ்வைக்கனிபோலும் தங்களது வாயினைவிண்டு குடிக்கமாட்டார்கள். (எசு)

ஆரிது மனையிற் சிலதுருச் சொம்முண்
டறக்கிழ டொடுசொறி மலடுஞ்
சோரியில் வரடும் வங்குமா யிருந்த
துருவைகண் முதுகினிற் றிரமா
வாரணிந் திலங்கு மணிமுலை யலிமா
முகம்மது திருமலர்க் கரத்தாற்
சீருறத் தடவ விக்கினஞ் சிதைந்து
செவ்விபெற் றிலங்கின வன்றே.

(இ-ள்.) ஆரிதென்பவர்களின் வீட்டில் சில செம்மறியாட்டுகளின் ஆஸ்திகளுள்ளன. முழுக்கிழடுடன் தினவும் மலடும் சோரியில் வரடும் வங்குமாயிருந்த அச்செம்மறியாடுகளின் முதுகினில் கச்சணிந்துப் பிரகாசியாநிற்கும் அழகிய கொங்கைகளையுடைய ஹலிமா அவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தெய்வீகம்பொருந்திய தாமரைமலர்போலுங்கைகளினல் சிறப்புபொருந்தும்படி உறுதியாகத் தடவ அவைகளுக் கிருந்த இடையூறுனவை ஒழிந்து அழகுபெற்று விளங்கின. (எஎ)

வாலசைத் திடாத கிழடிள வுருவாய்
வரடுவங் கறமல டும்போய்ச்
சாலவும் பருத்திட் டெறிரண் டழகாய்த்
தளதளத் தணிமயி ரொழுக்காய்ச்
சூலுமாய்ச் சிறிது பாலுமாய் முலைக்கண்
கரப்பெடுத் தறச்சொரிந் திடலா
யேலவார் குழலார் மனையிடங் கொள்ளா
திருந்தன பறழ்களு நிறைந்தே.

(இ-ள்.) அன்றியும், வாலையசைப்பதற் கேலாத அக்கிழட்டுச் செம்மறிகள் இளம்பருவத்தை யுடையவடிவமாகி வரடும் வங்குமொ ழியும்படி மலடானதும் நீங்கி மிகவும் பருத்துச்சரீரந்திரட்சியுற்று அழகாய்ப் பிரகாசித்து சிறந்த உரோமங்கள் ஒழுங்காய் முளைக்கப் பெற்றுச் சிலவைகள் சினையுள்ளனவாகியும் சிலவைகள் கன்றுகளை யீன்று பாலுள்ளனவாகியும் பாலானது முலைக்கண்வழியாய் ஊற்றெ டுத்து மிகவுஞ் சிந்தும்படியாகியும் வாசனைபொருந்திய நெடிய கூந் தலையுடைய ஹலிமா அவர்களின் வீட்டினது இடங்கொள்ளாமற் குட்டிகளும் பெருகியிருந்தன. (எஅ)

ஓங்கிய குனையி னெனும்பதி தன்னி
 லுறைபவ ரெவர்மனைக் கேனு
நீங்கரும் பிணிவந் தடுத்திடி லவர்க
 ணிறைதரு முஹம்மதைக் காண்கிற்
றீங்ககன் றிடுமச் செய்திகண் டறிந்து
 செறிதரு பிறநக ருளரும்
பாங்கினிற் புகுந்து முகம்மது மலர்த்தாள்
 பணிந்துமெய் மகிழ்ச்சிபெற் றிருப்பார்.

(இ-ள்.) உயர்ச்சி பொருந்திய அந்தக் குனையினென்று சொல் லும் ஊரின்கண் வாசஞ்செய்பவர்களில் எவர்கள்வீட்டிலேனும் நீங் குதற் கரியநோயானது வந்துற்றால், அவ்வீட்டார்கள்வந்து மாட்சி மைதங்கிய நபிமுகம்மது முஸ்தபா ஹபீபு றப்பில் ஆலமீன் றசூல்ச ல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தெரிசிப்பார்களேயாயின், உட னே அந்நோயானது அவர்களைவிட்டும் நீங்கிவிடும். அச் சமாசாரத் தைப் பார்த்துணர்ந்து நெருங்கிய அன்னியதேசங்களி லுள்ளவர்க ளும் ஒழுங்காக அக்குனையின்நகரத்தையடைந்து சல்லல்லாகு அலை கிவசல்லவர்களின் தாமரைமலர்போலும் திருவடிகளிற் றாழ்ந்துதே கக்களிப்படைந் திருப்பார்கள். (எகூ)

மறைதராச் சோதி முகம்மது நயினார்
 வடிவுறு மெய்யினிற் றுகளு
முறைதரா நீரிற் கழுவிலா திருந்து
 முலவுறு சிக்குமொன் றணுகாக்
குறைதரா வாசங் கமழ்வது மாறாக்
 குமிருநீர் சிறுதுமே யணுகாக்
கறைதரா வரிச்செங் கண்டுயின் றெழினுங்
 கலந்துறு மாசுமொன் றணுகா.

(இ-ள்.) மறைவுபடாத பிரகாசத்தையுடைய நயினாரானநபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது அழகுபொருந்திய சரீரத்தின் கண்துகளானதுதங்காது. தண்ணீரினால் முழுக்காட்டிச் சுத்திபண்ணுதிருந்தாலும் உலவாநிற்கும் மாசுமுதலிய யாதொன்று மணுகாது. குறைவில்லாத கஸ்தூரியின் பரிமளமானது கமழ்வதும் நீங்காது. நாசியின் கண்ணுள்ள சளிநீர் கொஞ்சமேனும் பொருந்தாது. குற்றமற்ற சிவந்த இரேகைகள்படர்ந்த கண்கள் துயின்று எழும்பினாலும் அக்கண்களில் கலந்துறும் பீளைமுதலான யாதொன்றுங் கிடையாது. (அ௰)

சலம்லா திகளி னாற்றமுந் தோற்றாத்
　தரையருந் திடுவதே யல்லா
னிலமிசை யெவர்க்குங் கண்ணினிற் றோன்றா
　நீடறு நீழலுந் தோன்றா
வுலவிய வெறும்பு மொண்சிறை யீயு
　மொருபொழு தாகிலுந் தீண்டாக்
கலையினின் மயிலைப் படர்தராப் பிள்ளைக்
　கனியெனு முஹம்மது நபிக்கே.

(இ-ள்.) அன்றியும், பிள்ளைக்கனியென்று சொல்லாநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குமலம்சலம் முதலியவைகளின் நாற்றமுந் தோற்றாது. அவைகளைப் பிரதிதினமும் பூமியுண்டு விடுவதேயல்லாமல் பூமியின்கண்ணுள்ள யாவர் கண்களுக்கும் புலப்படாது. நீட்சிபொருந்திய சரீரத்தின் நிழலுங்காணப்படமாட்டாது. உலாவித்திரிகின்ற எறும்புகளும் ஒள்ளிய சிறகுகளையுடைய ஈகளும் ஒருநேரமாயினும் அவர்களின்திருமேனியைத் தீண்டாது. தரித்திருக்கும் வஸ்திரங்களிலும் அழுக்கானது பரவாது.

மாமயி லலிமா கண்டுயில் காலை
　முகம்மது துயிலிட நோக்கித்
தாமதி யாது சந்திர னிறங்கித்
　தன்னுருமாரிவேற் றுருவாய்க்
காமரு மலர்த்தாள் மெல்லென வருடிக்
　கதிர்மணித் தொட்டிலை யாட்டிப்
பூமண மனைக்கு ளிருந்தடி பணிந்து
　போவது தினந்தொறுந் தொழிலே.

(இ-ள்.) அன்றியும், பெருமைபொருந்திய மயிலாகிய ஹலிமா அவர்கள் நித்திரைசெய்கின்ற இராக்காலங்களில் சந்திரனானது நபி

முஹம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நித்திரைசெய்யும் இடத்தைப்பார்த்து விரைவினில் ஆகாயத்தை விட்டும் இறங்கிவந்து தனதுவடிவமாறி வேறுவடிவமாகிப் புஷ்பத்தினதுவாசனைமாறாத ஹலிமா அவர்களின் வீட்டினகமிருந்து நபிநாயகமவர்களின் அழகியதாமரை மலர்போலும் திருவடிகளை மெதுவாகத்தடவிப் பிரகாசந்தங்கிய இரத்தின வருக்கங்களையுடைய தொட்டிலையசைத்து பாதங்களில் வணங்கிச்செல்லுவது பிரதிதினமும் தொழிலாக இருந்தது. (அஉ)

இங்குவந் துறைந்து மலரடி வருடி
 யிரவெலாங் காத்தினி திருந்து
கொந்தலர் குழலார் மனையெலா நிறைந்த
 கொழுங்கதிர் பரப்பிடக் கூடி
வந்து வானவர்க ளிடமற நெருங்கி
 மனைப்புறங் காப்பென விருப்பச்
சுந்தர வதன முஹம்மது நபியைத்
 துய்யவ னினிதுற வளர்த்தான்.

(இ-ள்.) அவ்வாறுகச்சந்திரனனது ஆகாயத்தின்கண்ணிருந்து இறங்கிவந்து பூங்கொத்தாலான மாலைசூடிய கூந்தலையுடையஅலிமா அவர்களின் வீட்டில்தங்கி நபிகள்பிரானவர்களின் தாமரைமலர்போலும் பாதங்களைத் தடவி இராமுழுவதுங்காத்து இனிதாகவிருந்து அவ்வீடுமுழுவதும் பெருகிய செழுமையான கிரணங்களைப் பரப்பவும், அதோடுகூடி தேவர்களான மலக்குகள்வந்து எள்ளிடுதற் கிடமின்றி நெருங்கி வீட்டினது பக்கத்தில்காவல் செய்திருக்கவும், பரிசுத்தமான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் அழகிய முகத்தையுடைய நபிமுஹம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை இனிமைபொருந்தும்படி வளர்த்தான். (அங)

வரையெனத் திரண்ட புயநபி நயினர்
 முகம்மதை வளர்த்திடு மனைக்குட்
கரையிலாச் செல்வந் தனித்தனி பெருகிக்
 காட்சிகள் பலவுமுண் டாகி
நிரைநிரை மாடா டொட்டகம் பலவு
 நிறைந்துபா றயிர்குறை விலதாய்த்
தரையினிற் குடிக்குட் பெருங்குடி யான
 தலைவரா ரீதென விருந்தார்.

(இ-ள்.) மலைபோலும் திரட்சியுற்ற புயங்களையுடைய நபிகள் பெருமான்முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களை வளர்த்து வராநிற்கும் அந்தஹலிமா அவர்களின் வீட்டினுள் எல்லையில்லாத சம்பத்துத் தனித்தனியாக நிறைந்து அதிசயங்களும் அனேக முண்டாகி வரிசைவரிசையாக மாடுகளும் ஆடுகளும் ஒட்டகங்களும் மற்றும்பலவைகளும்பெருகிப் பால்தயிர் முதலியன குன்றுபாடில்லாததாய் இப்பூமியின் கண் சகலகுடிகளுக்குள்ளும் பெரியகுடியானது. அதனுல் ஆரிதவர்கள் யாவர்கட்கும் தலைவரென்று சொல்லும்படி பெயர் பெற்று இருந்தார்கள். (அச)

குனையினி லலிமா மக்களுந் தாமுங்
 குடிக்குயர் குடியென வாழ
மனையினி லொருநாட் டீபமிட் டதுமில்
 முஹம்மது பேரொளி யல்லாற்
றனியவ னருளாற் றுன்பநோய் வறுமை
 தமையடுத் தவர்க்குமில் லாமற்
சினவுவேற் கரத்த ராரிது மகிழ்ந்து
 செல்வமுஞ் செருக்கும்பெற் றிருந்தார்.

(இ-ள்.) அன்றியும், ஹலிமா அவர்கள் தங்களதுமக்களும் தாங்களும் பகைவர்மேற் கோபிக்காநின்ற வேற்படை தாங்கிய கையினையுடைய ஹாரிதவர்களும் குனையின் நகரத்திலுள்ள குடிகளுக்கெல்லாம் மேலானகுடியென்று சொல்லும்படி வாழாநிற்கும் அவ்வீட்டின்கண் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பெரியபிரகாசமே யல்லாமல் ஒருதினமேனும் விளக்கேற்றி வைத்ததுமில்லை ஒப்பற்ற ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் கிருபையினுல் துன்பத்தைத் தராநின்ற பிணிகளும் தாரித்திரியமும் தங்களுக்கன்றித் தங்களை நெருங்கியவர்களுக்கும் இல்லாமல் மகிழ்ச்சி யடைந்து செல்வமும் பெருமையும் பெற்று இருந்தார்கள். (அரு)

எங்கில மனைத்துந் தீநெறி நடப்ப
 வியல்பெறு மனுநெறி நடப்பத்
துன்னிய வறத்தின் றுறைவழி நடப்பத்
 துன்பமற் றின்பமே நடப்பப்
பன்னருஞ் செங்கோ லுலகெலா நடப்பப்
 பாரினிற் குலமுறை நடப்ப
மன்னியரெவருஞ் சொற்படி நடப்ப
 முஹம்மது நபிநடந் தனரே-

(இ-ள்.) எல்லாவுலகங்கள் முழுவதிலும் தீனுல் இஸ்லாமென்னுமார்க்கமானது நடக்கவும், ஒழுங்குபெறும் மானுஷகரின் சன்மார்க்க மானதுநடக்கவும், நெருங்கிய தருமத்தினது துறைநெறி நடக்கவும், துன்பமானதுநீங்கி இன்பமேநடக்கவும், சொல்லுதற்கரிய செவ்விய இராஜகோன்மை உலகமெல்லாம் நடக்கவும், பூமியின்கண் குலஆசாரமுறைமை மாறுமல் நடக்கவும், பொருந்தியயாவர்களும் ஒருவர்சொல்லை யொருவர் தட்டாமல் நடக்கவும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நடந்தார்கள். (அசா)

நிலமிசை யாசிங் குலம்பெயர் விளங்க
நிகரிலா நேர்வழி விளங்கக்
குலவிய நிறையும் பொறுமையும் விளங்கக்
கோதிலாப் பெரும்புகழ் விளங்க
வுலகுயர் புதுமைக் காரணம் விளங்க
வுயர்தரு வேதமும் விளங்க
மலர்தரு சோதி முகமதி விளங்க
முகம்மது சொல்விளங் கினவே.

(இ-ள்.) பூமியின்மீது ஹாஷமென்று சொல்லுங் குலமும் பெயரும் விளங்கவும், ஒப்பற்றநேர்மையான பாதைவிளங்கவும், பிரகாசித்த மாட்சிமையும் பொறுமையும் விளங்கவும்; குற்றமில்லாத பெரிய கீர்த்தி விளங்கவும், உலகத்தின்கண் உயர்வான அதிசயங்களினது காரணங்கள் விளங்கவும், முன்னுள்ள மூன்றுவேதங்களிலும் மேன்மைதாநிற்கும் பொறுகானுல் அலீமென்னும் வேதம்விளங்கவும், விரிந்த பிரகாசத்தையுடைய முகமாகிய சந்திரன் விளங்கவும், நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சொல்லானது விளக்கினது. (அஎ)

விண்ணகத் தமரர் மனமகிழ் வளர
வியனுறும் வரிசைகள் வளரக்
கண்ணகத் துறைந்து கருணையும் வளரக்
கவினிறை பிறையென வளர
வெண்ணரும் புதுமைக் காரணம் வளர
விறையவன் றிருவருள் வளர
மண்ணகத் திருந்து கிளையெலாம் வளர
முகம்மது நபிவளர்ந் தனரே.

(இ-ள்.) அன்றியும், ஆகாயத்தின்கண் வாசஞ்செய்யாநிற்கும் தேவர்களான மலக்குமளின் மனமகிழ்ச்சி வளரவும், அற்புதம் பொ

ருந்திய வரிசைகள் வளரவும், கண்ணினுள்தங்கி கிருபையும் வளரவும், அழகானதுபூரணசந்திரனைப்போல்நாளுக்குநாள்வளரவும், நினைத்தற்கரிய அதிசயத்தினது காரணங்கள்வளரவும், இறைவனான அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் அழகியகருணை வளரவும், பூமியின்கண்ணிருந்து குடும்பங்களனைத்தும் வளரவும், நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் வளர்ந்தார்கள். ()

பாரினிற் பரந்த குபிர்க்குல மறுத்துப்
  படர்தரு தீன்பயிர் விளக்கச்
சீருறுங் கனக மாமழை பொழியத்
  திரண்டெழுஞ் செழுமுகிற் குலம்போற்
பேர்தருங் குறைஷிக் குலத்தினி லுதித்துப்
  பிறங்கொளி முகம்மது நபிக்கு
வார்பொரு முலையார் மனங்களித் துவப்ப
  வருடமு மிரண்டு சென்றனவே.

(இ-ள்.) அப்போது இவ்வுலகத்தின்கண் பரவிய காபிரீன்களது கூட்டத்தைக் கருவறுத்து விரியாநிற்கும் தீனுல் இஸ்லாமென்னும் பயிரைவிளக்குவதற்கு சிறப்புப் பொருந்திய பொன்னுலான பெருமைதங்கிய மழையைப் பெய்யத் திரண்டெழும்பும் செழுமையான மேகக்கூட்டங்களைப்போலக் கீர்த்தியைத்தராநின்றகுரைஷியென்று சொல்லுங்கூட்டத்திலுற்பவித்துப் பிரகாசமானது விளங்குகின்ற நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குத்தரித்திருக்கும் கச்சிலடங்காது பொருதாநிற்கும் ஸ்தனபாரங்களை யுடைய ஹலிமா அவர்தள் மனமகிழ்ந்து உவப்படையும்படி வயசும் இரண்டாயின.

கதிருடன் கதியு மொருவடி வெடுத்த
  காட்சிபெற் றிருந்தணி சிறந்து
மதியினு மொளிரு முகம்மது நபிக்கு
  வயதிரண் டானதன் பின்னர்
குதிகொளு மமுத மடிக்கடி சுரந்து
  கொடுத்திடு முலைமறப் பித்துப்
பதியினி லிருந்து பொற்பதி புரக்கும்
  பலன்படைத் துவந்தன ளன்றே.

(இ-ள்.) அவ்வாறு கதிருடன்கதியும் சேர்ந்து ஒப்பில்லாத மனுவடிவமெடுத்த தோற்றத்தைப் பெற்றிருந்து அழகானது சிறந்து சங்

திரனைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பிரகாசிக்கும் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு இரண்டு வயசான பின்னர், அலிமா அவர்கள் உடனேக்குடன் ஊறிவெளியிற் பாயாநிற்கும் அமுதத்தைக் கொடுக்கின்ற முலையைமறப்பித்து இவ்வுலகத்தின் கண்ணிருந்து பொன்னுலகத்தையாளும் பிரயோசனத்தையும்பெற்று மகிழ்ச்சியடைந்தார்கள். (கூ௰)

நெறித்திருண் டடர்ந்த செழுமழைக் கூந்த
  னேரிழை வனமுலை யலிமாக்
குறித்தசெம் பவளம் விரிந்தெனத் தேன்பாய்
  கொழுமடக் குமுதவாய் திறந்து
செறித்ததிண் மாட மக்கமா நகரிற்
  செல்குவங் தருணமீ தென்னப்
பொறித்தபொற் குவட்டைப் பணைத்தெழும் புயத்துப்
  புரவல ராரிதுக் குரைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் மகிழ்ச்சி யடைந்த மடிப்புக்கொண்டு கறுத்து நெருங்கிய செழிமையுற்ற மேகம்போலும் கூந்தலையும் நேர்மையான ஆபரணங்களைத் தாங்கிய இளமுலைகளையு முடைய அலிமா அவர்கள் சித்திரங்கள் எழுதப்பெற்ற பொன்மலையைப்போலப்பருத்துஎழாநிற்குந் தோள்களையுடைய அரசரான ஆரிதவர்களுக்கு செவ்வியபவளமானது விரிந்தாற்போலத் தேனொழுகும் செழிய இதழ்களையுடைய செவ்வாம்பற் பூப்போலுந் தங்களது வாயினைத்திறந்து நெருங்கிய வலிமைபொருந்திய மாடங்களை யுடைய மக்கமா நகரத்திற்குப் போகுவோம். அதற்குச் சரியான சமயம் இதுதானென்று சொன்னார்கள். (கூக)

ஆரிது மதனைக் கேட்டுறத் தெளிந்தங்
  கழகுறு கருமமீ தென்னச்
சீர்பெறு மனையா டன்னையும் பயந்த
  செல்வரி லொருசிறு வனையும்
பாரினில் விளங்கும் முஹம்மது தமையும்
  பண்புடன் வாகனத் தேற்றி
யேர்பெறும் வரிசை மக்கமா நகருக்
  கெழுந்தனர் செழும்புய மிலங்க.

(இ-ள்.) ஆரிதவர்களும் அச்சமாசாரத்தை அங்கு கேள்வியுற்றுப் பொருந்தும்படி யுணர்ந்து இதுவே அழகான கருமமென்று சொல்லிச் சிறப்புத்தங்கிய தங்களது மனைவியான ஹலிமா அவர்

களையும்தாங்கள்பெற்ற செல்வத்தையுடைய பிள்ளைகளில் ஒருபிள்ளை யையும்இவ்வுலகின்கண் விளங்காநிற்கும் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களையும் தகுதியாக ஒரு வாகனத்தின் மீதேற்றித் தாங்களும் தங்களது செழியபுஜங்களிரண்டும்பிரகாசிக்கும்படி அழகுபொருந்திய சங்கையை யுடைய மக்கமா நகரத்திற்குப் பிரயாண மானார்கள். (கூஉ)

வானவர் சுவனப் பதிநிக ரனைய
மக்கமா நகரினிற் புகுந்து
கானமர் குழலா ராமினு வென்னுங்
கனிமொழி பொற்றொடிக் கரத்தி
னுனமுங் கவினும் வளர்ந்துமே னிவர்ந்த
நபிமுஹம்மது நயினாரைத்
தேனவிழ் பதும மென்மலர்ச் செழுந்தாட்
டிருந்திழை களிப்பொடுங் கொடுத்தார்.

(இ-ள்) அவ்வாறுபிரயாணமானவர்கள்தேவர்களின்பொன்னுலகத்தைப் போலும் திருமக்கமா நகரத்தினுட் புகுந்து வாசனையானது நீங்காது குடியிருக்கப்பெற்ற கூந்தலைப் பொருந்திய ஆமினுவென்று சொல்லும் கனிபோன்ற சொற்களை யுடையவர்களது சொர்ணத்தாலாய வளையல்களையணிந்த கைகளில் தேனுனது நெகிழப்பெற்ற தாமரையினது மெல்லிய மலர்போலும் செழிய பாதங்களையும் செவ்வையான ஆபரணங்களையுமுடைய ஹலிமா அவர்கள் கஸ்தூரி வாசனையும் அழகும்வளர்ந்துமேலாகவுயர்ந்த நபிகள்பெருமான் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை மகிழ்ச்சியோடும் கொடுத்தார்கள். (கூங)

மடந்தையிற் சிறந்த வாமினு வெளினு
மலர்க்கொடி முகம்மதை வாங்கி
யிடம்பெறப் பிறழ்ந்து சிவந்தவே லென்னு
மிணைவிழி முகத்தொடுஞ் சேர்த்திக்
குடங்கையி லேந்தி மார்புறத் தழுவிக்
குமுதவாய் முத்தமிட் டுவந்து
கிடந்தன மனத்திற் றுயரெலா மகற்றிக்
கிளர்தரு முவகையிற் குளிர்ந்தார்.

(இ-ள்) ஹலிமா அவர்கள் அவ்வாறுகொடுக்க, பெண்களில்மேன்மைபெற்ற ஆமினுவென்று சொல்லும் பூங்கொடி யானவர்கள் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத், தங்களின் இருகை

களாலும்வாங்கி விசாலமாகப் பிரகாசித்துச் சிவந்த வேலாயுதமென்றுசொல்லாநிற்கும் உபய நோக்கங்களையுடைய முகத்தோடுஞ் சேர்த்துப்பின்னர் உள்ளங்கைகளிலேந்தி நெஞ்சானது பொருந்தும்படியணைத்துச் செவ்விய ஆம்பன் மலர்போலும் வாயினில் முத்தமிட்டு மகிழ்ச்சியடைந்து மனசின்கண் கிடந்தனவாகிய வருத்தங்களெல்லாவற்றையும் நீக்கிஉங்காநிற்கும் சந்தோஷத்தினல் சரீரமுழுவதும் குளிர்ச்சியுற்ருர்கள். (கூச)

முலைச்சுமை கிடந்த சிற்றிடை திரண்ட
முகிலெனுங் குழலலி மாவை
யிலைத்தளிர் விரல்கண் முதுகுறப் பொருந்த
வின்னுயிர் பொருந்தல்போற் றழுவி
நிலைத்தபொற் பாவை யெனவரு கிருத்தி
நெறியுடன் பலமொழி புகழ்ந்து
மலைத்தடம் புயத்தா ரீதையும் போற்றி
மகிழ்ந்தன ராமினு வன்றே.

(இ-ள்.) அன்றியும், ஆமினு அவர்கள் முலைகளின் பாரமானது கிடக்கப்பெற்ற சிறிய மருங்குலையும் கூட்டமுற்ற மேகங்களென்று சொல்லாநிற்கும் கூந்தலையுமுடைய ஹலிமா அவர்களைத் தங்களின் இலைத்தளிர்போன்ற விரல்களானவை முதுகிற்படும்படி பொருந்தத் தங்களது இனிமையான ஜீவனுனது உடலிற்பொருந்தும் விதமாகக் கட்டியணைத்து செல்வமானதுமாருது நிலைக்கப்பெற்ற இலக்குமியைப்போல அருகிலுட்காரச் செய்து ஒழுங்கோடும் பலவிதமான வார்த்தைகளைச் சொல்லித்துதித்து மலையைப்போலும் பெரிய தோள்களையுடைய ஆரிதவர்களையும் வாழ்த்தி மகிழ்ச்சி யடைந்தார்கள். ()

செய்ந்நிணங் கமழ்ந்த செங்கதிர் வடிவே
னிருபர்கோ னப்துல் முத் தலிபு
மைந்நிறப் பாவைக் கயல்விழி யலிமா
வந்தது கேட்டுவந் தடுத்து
மெய்ந்நிறக் கதிர்முச் சுடரையு மழுக்கும்
விறன்முகம் மதுதமை யெடுத்துக்
கைந்நிறை பொருட்போ லிருவிழி குளிரக்
கண்டக மகிழ்ந்துடல் களித்தார்.

(இ-ள்.) நெய்யினது நிணமானது பரிமளிக்கப்பெற்ற சிவந்தபி ரகாசத்தையுடைய கூரியவேற்படை தாங்கிய அரசாதிபரானஅப் துல்முத்தலிபவர்கள் கறுத்த நிறத்தையுடைய பாவையாகிய கெண் டைமீன்போலும் விழிகளையுடைய ஆலிமா அவர்கள் ஆமினாஅவர்க ளின் வீட்டில்வந்து சேர்ந்ததைக்கேள்வியுற்று ஆங்குவந்தடைந்து சரீரத்தின்கண் பொருந்திய பிரகாசமாகிய கிரணங்கள் சூரியன் சந் திரன் அக்கினிஎன்றுசொல்லும் முச்சுடர்களையும் மழுக்காநிற்கும் வெற்றியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்க ளைக்கையின்கண் நிறைந்த பொருளைப்போல எடுத்து இரண்டுகண் களும் குளிர்ச்சியடையும்படி பார்த்து மனங்களித்துத் தேக மகிழ்ச் சியடைந்தார்கள். (௬௬)

வடிவுறுஞ் சுடர்வே லப்துல்முத் தலிபு
மரைமலர் மாமுக நோக்கிக்
கொடியென வயங்கு நுண்ணிடை யலிமா
கொவ்வயங் கனியிதழ் திறந்து
படியினி லெவர்க்கிங் காணுறாப் புதுமைப்
பாலகர் முகம்மது தம்மான்
மிடிமையுந் தவிர்ந்தோம் பாக்கியம் பெற்றோம்
வேண்டுவ பிறிதிலை யென்றார்.

(இ-ள்.) அப்போது கொடியைப்போலும் பிரகாசியாநிற்கும் நுண்ணிய இடையினையுடைய ஹாலிமா அவர்கள் அழகியவொளிவு தங்கிய வேலாயுதத்தையுடைய அப்துல்முத் தலிபவர்களின் தாம ரைமலர்போலும் பெருமைபொருந்திய முகத்தைப்பார்த்துத் தங்க ளது அழகிய கொவ்வைக்கனியை நிகர்த்த அதரங்களைத்திறந்து இவ்வுலகத்தின்கண் யாவர்கட்கும் பார்க்கமுடியாத அதிசயங்களை யுடைய பாலகரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்க ளால் நாங்கள் எங்களுக்குள்ள வறுமையும் நீங்கினோம் செல்வத்தை யுமடைந்தோம். இனி நாங்கள் விரும்பக்கூடியவை வேறேயாதொன் றுமில்லையென்றுசொன்னார்கள். (௬௭)

ஆடவர் திலக ரப்துல்முத் தலிபு
மாமினா வெனுங்குலக் கொடியும்
பீடுறு மலிமா தம்மையுந் தலைமைப்
பெருமையா ரீதையும் போற்றி
நாடுறு மனத்தா லினத்தவர் மனைக்கு
ணன்குற விருந்துக ளளித்துத்

தேடிய பொருளைக்கிடைத்தவர் போலச்
செல்வமுற் றிருந்தனர் சிலநாள்.

(இ-ள்.) அதுகேட்ட புருஷதிலகரான அப்துல்முத்தலி பவர்களும் ஆமினுவென்று சொல்லும் குலத்திற்கோர் கொடியானவர்களும்பெருமைபொருந்திய அலிமா அவர்களையும் தலைமைத்தனத்தினது மாட்சிமைதங்கிய ஆரிதவர்களையும் புகழ்ந்து விருப்பமுற்ற மனசோடும் தங்களின் பந்துக்களுடைய வீடுகளினகத்தில் நன்மையுறும்படி விருந்துகள் கொடுத்து நாடியவஸ்துவைக் கிடைக்கப் பெற்றவர்கள் போலச்செல்வத்தை யடைந்து சிலதினம் இருந்தார்கள். (௬அ)

செவ்விய வரிசை மக்கமா நகரிற்
றிங்கணு லிரண்டுசென் றதற்பின்
எவ்வரம் பினுக்கு மிகுவரம் பெனவா
ழிலங்கிழை யாமினு தமையு
மல்மலர் தொடையா ரப்துல்முத் தலிபு
மன்னையும் பொருத்துறப் போற்றிக்
கவ்வையங் கழனி குனையினிற் புகுந்துங்
கருத்தினைக் கருதியே யுரைப்பார்.

(இ-ள்.) ஹாரிதும் ஹாலிமா அவர்களும் அவ்வாறு செவ்வையான சங்கை பொருந்திய திருமக்கமா நகரத்தின்கண் விருந்துண்டுகொண்டிருந்து எட்டுமாதங் கழிந்தபின்னர், எவ்வொழுங்கினுக்கும் மிகுந்தவொழுங்கென்று சொல்லும்படி வாழாநிற்கும் பிரகாசிக்கின்ற ஆபரணங்களையுடைய ஆமினு அவர்களையும் அழகிய பரிமளத்தையுடைய மாலையை யணிந்த அப்துல்முத்தலிபாகிய வேந்தரவர்களையும் பொருந்தும்படி புகழ்ந்து ஒலியானது மாறாத அழகிய வயல்களையுடைய தங்களது நகரமான குனையின் பட்டணத்திற்குச் செல்லும் அபிப்பிராயத்தை மனசின்கண் நினைத்து அவர்களுக்குச் சொல்லிக் காட்டினார்கள். (௬௬)

எண்ணரும் பெருமைப் புகழுசை னயினு
ரெடுத்தியற் றியபல வரிசைப்
புண்ணியப் பொருளாய் வருமபுல் காசிம்
புந்தியி னடிவுறப் பொருந்திக்
கண்ணினு மிருக்கு முகம்மது நபியைக்
கடிதினில் வாகனத தேற்றி
நண்ணிய குனையின் வழியினைக் கடந்து
நடந்தும் மனையினைச் சார்ந்தார்.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிக் காட்டிய இருவர்களும்நினைத்தற் கரியமாட்சிமை தங்கிய கீர்த்தியை யுடைய ஹுசைன் நயினாரவர்கள் எடுத்து இயற்றிய வரிசையான பலவித தருமத்தினது பொருளாய் வரும் இந்நூலுக்குக் கொடை நாயகராகிய அபுல்காசீ மரைக்காயர வர்களது புத்தியின்மத்திமத்தி லுறும்படி பொருந்திக் கண்களிலு மிராநிற்கும் நபி முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்ல மவர்களைவிரைவாகவாகனத்தின்மீதேற்றி நெருங்கியகுனையின் பட்டணத்தினது நெறிகளைத் தாண்டிநடந்து ஊரையடைந்துத்தங் களது வீட்டின்கண்போய்ச் சேர்ந்தார்கள். (க00)

அலிமா முலையூட்டுப்படலம்

முற்றிற்று

ஆகு படலம் - சுஎ-க்கு கூடிய திருவிருத்தம் - நூாகூ0.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்

இஃது.

இலாஞ்சனை தரித்தபடலம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புரிசைசூழ் மக்கந் தன்னிற் போந்தவ ணிருந்தும் பின்னர்த்
திருவுறை குனையி னென்னும் பதியினிற் சேர்ந்தும் பாரிற்
குரிசின்மா முகம்ம தென்னுங் குலமணி தமக்கு நாளின்
வருடமூன் றென்னத் தேகம் வளர்ந்தது மிரட்டி தானே.

(இ ள்.) மதிளானது வளையப்பெற்ற மக்கமா நகரத்திற்குச் செ ன்று அவ்விடத்தில் எட்டுமாதகாலம் தாமதித்திருந்தும், பின்னர் செல்வந்தங்கியகுனையினென்றுசொல்லும்பதியினையடைந்திருந்தும் இவ்வுலகத்தின்கண் பெருமையிற்சிறந்தோர்களான மகத்தாகிய நபி

முஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்னும் குலவிரத்தினமான வர்களுக்கு நாள்களையுடைய வயசானவை மூன்றென்று சொல்லும் படித் தேகமும் அதற்கு இரண்டுபங்காய் வளர்ந்தது (க)

ஆண்டுமூன் றுறைந்து நாலா மாண்டுசென் றதற்பின் செல்வம்
பூண்டமா மயிலே யன்ன பொலன்கொடி யலிமா வென்னுந்
தூண்டிடா விளக்கின் செவ்விச் சுடர்மதி முகத்தை நோக்கிக்
காண்டகாப் புதுமை வண்மை முகம்மது கவல லுற்றார்.

(இ-ள்.) அவ்வண்ணம் மூன்றுவயசு தங்கி நான்காவதுவயசுகழிந்ததன்பின்னர்க் காணுதற்கரிய அதிசயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் செல்வத்தை யணிந்த மயில் போலும் பொன்னுலியன்ற கொடியாகிய ஹலிமாவென்றுசொல்லும் தூண்டப்படாததீபமானவர்களின் அழகியபிரகாசம் பொருந்திய சந்திரன்போன்ற முகத்தைப்பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார்கள். (உ)

சேட்டிளஞ் சிங்க மென்னுந் திருவுறை யப்துல்லாவும்
பூட்டிய தனுவால் வெற்றிப் பொருத்துகை லமுறத் தென்னுந்
தோட்டுணைத் தனைய ரெங்கே சொல்லுக வனையே யென்னக்
கேட்டபின் னலிமா வென்னுங் கேகய மறுத்துக் கூறும்.

(இ-ள்.) அன்னையே! அழகிய இளம் பருவத்தையுடைய சிங்க மென்றுசொல்லும்படி வலிமைதங்கிய அப்துல்லாவும் பூட்டியவில்லி னுல் வெற்றியைப் பொருத்தாநிற்கும் கையினையுடையலமுறத்தென்று சொல்லும் எனது தோளினது துணையைக்கொண்ட தனையரையும் எங்கே? சொல்லுங்களென்று கேட்டபின்னர் ஹலிமாவென்னும் மயிலானவர்கள் மறுத்துச்சொல்லுவார்கள். (ந)

பிள்ளைமென் கனியே செல்வம் பெறுந்தவப் பலனே யெந்த
முள்ளகத் துயிரே மாமை யோங்கிய முஹம்ம தேயிந்
நள்ளிருட் பொழுது நீங்கி விடிந்தபின் னம்பிமார்க
டுள்ளுமென் மறிகண் மேய்ப்பத் துடர்ந்தனர் காட்டிலென்றார்.

(இ-ள்.) மதலையாகிய மென்மைபொருந்திய கனியான வரே! செல்வத்தையடையாநிற்கும் தவப்பலனானவரே! எங்களது இருதய வீட்டி லுறைந்திருக்கும் உயிரானவரே! அழகானது ஓங்கப்பெற்றமுகம்மதானவரே! இந்தநெருங்கிய அருளையுடைய இராக்காலம் போய்நேரம்விடிந்தபிறகு புருடரிற் சிறந்தோரான அவ்விருவர்களும்

துள்ளுகின்றபசிய ஆடுகளை மேய்க்கும்படி அவற்றின்பின் தொடர்ந்து காட்டிற்குச் சென்றிருக்கின்றார்களென்று சொன்னார்கள். (௪)

சானகத் தொருவின் பின்னே கலந்தனர் தனையர் தாமென்
றானவ ருரைப்ப நல்வி யகுமதுங் கருத்தி லுற்றுத்
தூநகைத் தரளச் செவ்வாய் துடியிடைக் கொடியை நோக்கி
யானுமவ் வழிசெல் வேனென் றடுத்தடுத் துரைப்பதானார்.

(இ-ள்.) அந்த ஹலிமா அவர்கள் அவ்விதம் தமையன்மாரான அவ்விருவர்களும் காட்டினிடமாகஆடுகளின்பின்கலந்து சென்றார்களென்றுசொல்ல அழகிய அஹமதென்னும் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் அச்சமாசாரத்தைக் கருத்திற்பொருந்திப் பரிசுத்தமான பற்களாகிய முத்துக்களையுடைய சிவந்தவாயையும் உடுக்கைபோன்ற இடையினையுமுடைய கொடியாகிய ஹலிமா அவர்களைப்பார்த்து யானும் ஆடுகளைமேய்த்தலின்பொருட்டு அப்பாதையின்கண் போகுவேனென்று அடுத்தடுத்துச் சொல்ல ஆரம்பித்தார்கள் (௫)

வரமுறு முகம்ம தித்த வாசக முரைப்பத் தேன்பாய்
விரைமலர் செருகுங் கூந்தன் மென்கொடி யலிமா கேட்டுக்
கரையிலா வுவகை பொங்கிக் காளைதன் வதன நோக்கி
நிறைதரு தகர்ப்பின் னுளைச் செல்கென நிகழ்த்தி னாரே.

(இ-ள்.) ஆசீர்வாதத்தை யுடைய நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இந்த வாசகத்தைச் சொல்லத் தேனானது ஒழுகுகின்ற வாசனைபொருந்திய புஷ்பங்களைச் சொருகுங் கூந்தலை யுடைய மெல்லிய கொடிபோல்வார்களாகிய ஹலிமா அவர்கள் தங்களதுகாதுகளினாற்கேள்வியுற்று எல்லையில்லாத மகிழ்ச்சியானது அதிகரித்து இளம்பருவத்தை யுடையவர்களான அந்நபிநாயக மவர்களின்முகத்தைப்பார்த்து நீவிர் ஒழுங்கைக்கொண்ட ஆடுகளின்பின்னர் நாளையத்தினம் அவ்விடம் போகுமென்று சொன்னார்கள். (௬)

விரிகதிர்ப் பருதி வெய்யோ னுதித்தபின் விளங்குஞ்செவ்வித்
துரைமுகம் மதுக்கு வெள்ளைத் துகிலெடுத் தரையிற் சாத்திச்
சிரசினி னெய்யுந் தேய்த்துச் செறிமணிக் கோல்கைக் கீந்துக்
குரிசிலைக் குறித்துச் சூழ்ந்த குமரரை விளித்துச் சொல்வார்.

(இ-ள்.) அவ்வாறு விடைசொன்ன ஹலிமா அவர்கள் விரிந்தகிரணங்கள்தாங்கிய வட்டவடிவையுடைய சூரியன் உதயமானபின்னர் அழகிய அதிகாரத்துவத்தினது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு வெள்ளை நிறத்தையுடைய வஸ்திரத்தை எடுத்து அரையின் கண்ணுடுத்தி சிரசில் நெய்யுந்தேய்த்து இரத்தினவர்க்கங்கள் செறிந்த ஒருகோலையெடுத்து கையில்கொடுத்துப் பெருமையிற்சிறந்தவர்களான அந்நபிநாயகமவர்களைக் குறித்து அங்குசூழ்ந்த புதல்வர்களைக் கூப்பிட்டுச் சொல்லுவார்கள் (எ)

கற்செறி பொதும்பிற் கூர்ந்த கண்டக வனத்திற் சேர்ந்த
புற்செறி வில்லாப் பாறிர் பொறியரா வுறையுங் கானில்
விற்செறி வேனற் காட்டில் விரிநிழ லில்லாச் சார்பின்
மற்செறி புயத்தீர் சேறன் மறுமென மறுத்துஞ் சொல்வார்.

(இ-ள்) வலிமையானது நெருங்கிய புயங்களையுடைய சிறுவர்களே! நீங்கள் கற்கள்மிகுத்த மரச்செறிவுகளிலும், கூர்மை தங்கிய முட்களையுடைய வனங்களிலும், பொருந்தியபுற்களினது நெருக்கமில்லாத பாறைகளிலும், புள்ளிகள்படர்ந்த சர்ப்பங்கள் வாசஞ்செய்யும் கானகங்களிலும், பிரகாசம்பொருந்திய வேனலையுடையகாடுகளிலும், விரிந்தமரங்களினது நிழல்களில்லாத சார்புகளிலும், செல்லுவதை நிறுத்திவிடுங்களென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுவார்கள்.

பணர்விரி நிழலுந் துய்ய பசும்புலி னிடமும் வாய்ந்த
மணம்விரி வனசம் பூத்த மடுவுறை யிடமு மார்க்கு
முணவுறை கனியுஞ் சேர்ந்த வொருங்கினி லாடு மேய்ப்பக்
குணவரை யனைய செவ்விக் குருசிலைக் கொடுபோ மென்றார்.

(இ-ள்) குணமலைபோன்ற அழகினையுடைய பெருமையிற்சிறந்தவர்களான நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைஆடுமேய்ப்பதற்காய்க் கிளைகள் விரிந்த நிழல்களிலும், பரிசுத்தமான பசியபுற்களையுடைய பக்கங்களிலும், பொருந்திய பரிமளமானது கமழப்பெற்ற தாமரைமலர்கள் மலர்ந்த குளங்கள் தங்கிய இடங்களிலும், யாவர்கட்கும் உணவானது உறைந்தபழங்களுற்ற ஒருங்குகளிலும், கூட்டிக்கொண்டு போகுங்களென்று சொன்னார்கள். (கூ)

இலங்கிழை யலிமா கூறும் வார்த்தைகேட் டினையோ ரெல்லா
நலங்கிளர் மனம்பூ ரித்து நன்மொழி யிதென் றெண்ணித்

துலங்குசெம் மணியைச் சூழ்ந்த பலமணி போலச் சூழ்ந்து
குலங்கெழுங்கொறியின்பின்னேமுகம்மதைக்கூட்டிச்சென்றார்

(இ-ள்.) பிரகாசிக்கின்ற ஆபரணங்களையுடைய அலிமா அவர்கள் சொல்லும் அவ்விதவார்த்தைகளைக்காதுகளினாற்கேட்டு அங்கு கூடிநின்ற இளம்பருவத்தை யுடைய பிள்ளைகளனைவரும் நன்மையானது ஓங்கும் தங்களது மனதின்கண் மகிழ்ச்சிகொண்டு இதுவே நல்லசமாச்சாரமென்று உள்ளத்தில் நினைத்து ஒளிராநிற்கும் சிவந்த மாணிக்கத்தை வளைந்தபலவிதவிரத்தின வர்க்கங்களைப்போல நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வளைந்து மேன்மையானது நிறைந்த ஆட்டுக் கூட்டங்களின் பின்னால் கூட்டிக்கொண்டு போனார்கள்.

பருதியின் கரங்கள் காணாப் பாசடை செறிந்த நீழற்
றருவிடை முகம்ம தென்னுஞ் சலதரக் கவிகைவேந்தை
யிருமென விருத்திச் சூழ்ந்த விளையரிற் சிலர்புற் கானிற்
றுருவைமேய்த் தருநீ ரூட்டித் தொன்றுவ ரலது நீங்கார்.

(இ-ள்.) அவ்வாறு சென்ற சிறுவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் என்னும் மேகக் குடையையுடைய அரசரானவர்களைச் சூரியனது கிரணங்கள் தோற்றப்படாத பசிய இலைகள்நெருங்கிய நிழல்களையுடைய ஒரு மரத்தடியின்கண் இருங்களென்றிருக்கச்செய்து சூழ்ந்துநிற்கும் சிறுவர்களில் சிலர்கள் புற்களையுடைய காடுகளிற்போய் ஆடுகளைமேய்த்து அரிதானநீரை அருத்தித்திரும்புவார்களே யல்லாமல் ஒருபோதாயினும் நபிகணாயக மவர்களை விட்டும் நீங்கினவர்க ளல்லர். (முக)

சுற்றிய துணைவ ரோடுஞ் சொரிகதிர் முகம்ம தென்னு
நற்றவ முடைய நம்பி வருவதை நோக்கி நாடிச்
சிற்றிடை யலிமா வென்னுஞ் சேயிழை யெதிரிற் சென்று
பொற்றொடிக் காத்திலேந்திக் கொறியுடன் மனையிற்புக்கார்.

(இ-ள்.) சிறிய இடையினையுடைய அலிமாவென்றுசொல்லும் பெண்ணானவர்கள் சொரியாநிற்கும் பிரகாசத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் என்னும் நல்ல தவத்தையுடைய ஆண்டகையவர்கள் ஆடுகள் மேய்த்துவிட்டு திரும்பிவருவதைப் பார்த்து நாட்டமுற்று முன்னிற்போய் தங்களது பொன்னாலான

வளையல்களையுடைய கைகளினல் எடுத்தேந்திக்கொண்டு ஆடுகளு டன் வீட்டின்கண் வந்து புகுந்தார்கள். (யஉ)

மற்றுமிவ் வண்ணஞ் சின்னுண் முகம்மது மப்துல் லாவும்
பற்றுவிட் டகலா ராடும் பலுகின தொன்று பத்தாய்க்
குற்றமி லலிமா வென்னுங் கொடிமனை தயிர்பா னன்னெய்
வற்றுருப் பெருகிச் செல்வம் வளர்ந்தினி தோங்கிற் றன்றே.

(இ-ள்.) இந்தவிதமாகப் பின்னுஞ் சிலநாள் நபிமுகம்மது சல்ல ல்லாகு அலைகிவசல்ல மவர்களும் அப்துல்லாவும் ஒருவர்க்கொருவர் அன்புவிட்டு அகலாதவர்களாய் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தா ர்கள். ஆடுகளும் ஒன்று பத்தாக அதிகரித்தன. குற்றமில்லாத அலி மாவென்று சொல்லும் கொடியானவர்களின் வீட்டில் நல்லதயிர்பால் நெய்யாகிய இவைகள் குறையாதுஒங்கிச் செல்வமும்வளர்ச்சியுற்று இனிதாய்ப் பெருகிற்று. (யங)

குறுமறி யாய ராருங் குரிசிலைச் சூழ்வ ரல்லாற்
பிறிதொரு நெறியுஞ் செல்லார் பெய்பாற் கானிலாங்கோர்
செறிபுனற் றடத்தி னீழற் சேர்ந்தொரு முகமாய்க் கூடி
யிறையவன் றூதர் முன்சென் றேவல்செய் திருப்பரன்றே.

(இ-ள்.) குறிய ஆடுகளையுடைய இடைப்பிள்ளைகள் யாவர்க ளும் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பிரதிதி னமும் வளைந்துகொள்வார்களே யல்லாமல் வேறேயொரு பாதைக ளிலும் போகமாட்டார்கள். அன்றியும், பரற்கற்கள் செறிந்த அக் கானகத்தில் நீர்நிறைந்த வொருகுளத்தினதுக் கரையின்கண்ணுள்ள நிழலில் யாவர்களும் சேர்ந்து ஒன்ருகத்திரண்டு அல்லாகு சுபுகா னகுவத்த ஆலாவின் றசூலான நபிகளுயக மவர்களின் முன்னற் போய் அவர்கள் ஏவும் பணிவிடைகளைக் கேட்டு மனம் வாக்குக்கா யமாகிய இம் மூன்றும் ஒன்றுபட அவைகளைச் செய்து முடித்து அவ்விடத்தில் தானே தங்கியிருப்பார்கள். (யச)

நன்றிகொ ளிளையோ ரெல்லா நறைமுகம் மதுவை யார்க்கும்
வென்றிகொ ளரசா வைத்து வேறுவே றதிகா ரத்தா
ரென்றவ ரவர்க்கே பேரிட் டிருந்தடி பணிந்து சார்ந்த
மன்றல்சே ருகாவி னீழன் மகிழ்ந்தினி திருக்கும் போதில்.

(இ-ள்.) அவ்வாறாகவிருக்கும் நாட்களிலொருநாள், உபகார குணம் படைத்த ஆடுமேய்க்கும் அச் சிறுவர்கள் யாவர்களும் கஸ் தூரிவாசனை மாறாத காத்திரத்தையுடைய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தங்களில் யாவர்கட்கும் வெற்றிகொள்ளும் அரசராக நேமித்துவைத்து மற்றப்பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ் வொரு அதிகாரத்தை யுடையவரென்று அவரவர்கட்கே ஒவ்வொ ருபெயரு மிட்டு இருந்து அந் நபிகணாயக மவர்களின் பாதங்களை வணங்கிப் பொருந்திய பரிமளந்தங்கிய உகாஎன்னும் ஒரு மரத்தின் நிழலில் மகிழ்ச்சியுற்று இனிதாக விளையாடிக்கொண்டிருக்கும் அந் தச் சமயத்தில். (யரு)

பட்டுடை யினராய்ச் சாந்தம் பழகுதோ ளினராய் வாய்ந்த
கட்டழ கினராய் வீசுங் கதிர்மதி வதனாய்மெய்க்
கிட்டகஞ் சுகரா யாண்மை யிலங்கும்வா லிபராய்ச் சோதி
விட்டொளிர் மின்னி னொப்ப விரைவினி லிருவர் வந்தார்

(இ-ள்.) அவ்விடத்தில் இருவர்கள் பட்டு வஸ்திரங்களை யுடுத் தினவர்களாகவும், கலவையானது பழகிய தோள்களை யுடையவர்க ளாகவும், பொருந்திய பெரிய அழகினை யுடையவர்களாகவும், பரவா நிற்கும் கிரணங்களையுடைய சந்திரன்போன்ற முகத்தை யுடையவ ர்களாகவும், சரீரத்தின்கண் கஞ்சுகமிட்டவர்களாகவும், வலிமையா னது விளங்குகின்ற வாலிபர்களாகவும், பிரபைவிட்டுப் பிரகாசியா நிற்கும் மின்னைப்போல அதிசீக்கிரத்தில்வந்து சேர்ந்தார்கள். (யசு)

படியகங் கெண்டி செம்பொற் பதுமமென் கரத்தி லேந்தி
வடிவுட னொருவர் நிற்ப மற்றொரு காளை கையிற்
றொடிபகுப் பென்னக் கூன்வா டோன்றிட வெதிர தாகத்
திடமுட நிற்பக் கண்டு சிறுவர்கள் கலக்கமுற்றார்.

(இ-ள்.) அவ்வாறு வந்த இருவர்களிலொருவர் தமது சிவந்த பொற்றாமரை மலர்போலுங் கைகளில் அழகுடன் ஒரு படிக்கமும் கெண்டிகையு மேந்திக்கொண்டு நிற்கவும், இளம்பருவத்தையுடைய மற்றொருவர் தமது கையில் வளையலினது பாதிபோலும் வளையினை யுடைய ஒரு வாளைப் பிரகாசிக்கும்படி முன்னதாக வலிமையுடன் பிடித்துக்கொண்டு நிற்கவும், அங்கு விளையாடிக்கொண்டுகின்ற சிறு வர்க ளெல்லாவரும் பார்த்து மனசின்கண் பயமடைந்தார்கள். (யஎ)

சிறுவர்க ளுள்ளந் தேம்பித் திடுக்கிட நிற்குங்காலை
மறுவகன் மதியம்போன்ற முகம்மதை யடுத்துப் பாரி

விறையவன் றூதே யெங்கட் கின்னுயிர்க் குயிரே யென்ன
நறைமலர்க் கரத்தைப் பற்றி நடந்துகா நிழலி லானார்.

(இ-ள்.) அக்கானகத்தில் கூடிநின்றசிறுவர்கள் அவ்விதம் மனமானது வாட்டமுற்றுத் திடுக்கிடும்படி நிற்கும்போது, குற்றமற்ற சந்திரன்போன்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வந்த விருவர்களும் நெருங்கி இப்பூமியின்கண் யாவற்றிற்கு மிறைவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாக வந்தவரே எங்களது இனிமை பொருந்திய உயிருக் குயிரானவரே! என்று சொல்லிப் புகழ்ந்து அவர்களின் வாசனைபுற்ற தாமரைமலர் போலுங் கையினைப் பிடித்துக்கொண்டு நடந்து அந்த உகாமரத்தினது நிழலின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (யஅ)

தருநிழ லிடத்தில் வள்ள றம்முனும் பின்னு மாக
விருவரு மிருப்பக் கண்ட விளையவ ரனைத்து மேங்கி
வெருவ ருள்ளந் தேறு மெலிகுவ ரிவரி யாரென்ன
வுருகுவர் கரைவர் கண்ணீ ரொழுகிட வொருங்குநிற்பார்.

(இ-ள்.) அந்த உகாமரத்தினது நிழலின்கண் போய்ச் சேர்ந்த இரண்டுபேர்களும் வரையாது கொடுக்குந் தகமைத் தினராகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் முன்னும் பின்னுமாக இருக்கப்பார்த்த சிறுவர்க ளெல்லாரும் ஏக்கமுற்றுப் பயப்படுவார்கள். மனமானது தேறுதலடையாது வாடுவார்கள். இவ்விதம் வந்து நமது நாயகத்தைப்பிடித்து வைத்துக்கொண்டிருக்கிற இவர்கள்யாவர்களென்று சொல்லிக் கரைவார்கள். அழுவார்கள். இரண்டு கண்களிலு மிருந்து ஜலமானது ஒழுகும்படி யாவர்களும் ஒன்றுகூடி ஓரிடத்தில் நிற்பார்கள். (யகூ)

பதறுவர் கலங்கி யேங்கிப் பதைபதைத் தறிவிம்மிக்
கதறுவ ரந்தோ வென்னக் கலங்குவர் கலங்களியாவுஞ்
சிதறிட வோடியோடித் திரும்பினெட் டுயிர்ப்பு வீங்கி
யிதயநொந் தாவி சோர விடைந்துவா டுவர்க ளன்றே.

(இ-ள்.) அன்றியும், கலக்கமுற்று அழுதுபதறுவார்கள். மிகப்பதைத்து அலறி ஒலித்துக் கத்துவார்கள். அந்தோவென்று சொல்லித் துன்புறுவார்கள். தாங்கள் தரித்திருந்த ஆபரணங்க ளனைத்தும் சிந்தும்படி யோடோடியுந் திரும்பிப் பெருமூச்சு அதிகரித்து மனம் வருந்தி யுயிரானது சோரும்வண்ணம் வசக்கேடடைந்து வாட்டங் கொள்ளுவார்கள். (உய)

மல்விதம் பயிலுந் திண்டோண் மன்னவரிவர்க ளியாரோ
தொல்விதிப் பயனுல் வந்து சூழ்ந்துகைக் கருவிதன்னுற்
கொல்வதுக் கிசைந்த பேரோ குரிசிலைக் கொண்டு தமமூர்
செல்வதுக் கிருக்கின் ருரோ தெரிகிலோ மென்ன நைவார்.

(இ-ள்.) அன்றியும், மற்ருெழுலிற் பழகாநிற்கும் திண்ணிய புஜங்களையுடைய அரசர்களான இவர்கள்யாவர்களோ! ஆதிகாலத்தில் அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் கற்பித்த ஊழினது விதிப்பயனுல் இப்போதுவந்து தங்களதுகையில் இருக்கப்பட்ட ஆயுதத்தினுல் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வதைசெய்வதற்கு உடன்பட்டவர்களோ! அல்லதுஅவர்களைத் தங்களது நகரத்திற்குக் கொண்டு போவதற்கு இருக்கின்ருர்களோ! நாம்தெரிந்தோ மிலையேயென்று சொல்லித் தளர்ச்சியடைவார்கள். (உக)

கடலிடைப் புவியி லெங்கண் முகம்மது பேரிற் கையாற்
ருெடநினைத் தவரு மில்லைத் தொடர்ந்து கைப்பற்றி நுங்க
ளிடமுக விருத்தல் செய்தீ ரேதுகா ரணமோ வெங்க
ளுடனுரைத் திடுவீ ரென்ன வுரைத்துவாய் புலர்ந்து நிற்பார்.

(இ-ள்.) அவ்விதம், தளர்ச்சியடைந்த சிறுவர்கள் கடல்சூழ்ந்த இப்பூலோகத்தின்கண் எங்களது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின்மீது துற்சிந்தனையுடன் கையினுல் தீண்டும்படிமன்சின்கண் நினைத்தவர்களு மில்லை. அவ்வாறுசெய்தவர்களுமில்லை. ஆனுல் நீங்கள் அவர்களைப்பின்பற்றி அவர்களின் கையினைப்பிடித்து உங்களது இடத்திற் பொருந்தும்படி இருக்கச் செய்தீர்கள். அங்ஙனஞ்செய்தது யாதுகாரணத்தினுல்? அதை எங்களுடன் சொல்லுங்களென்று சொல்லி வாயானது உலரப்பெற்று நின்ருர்கள். (உஉ)

மறைபடாச் செவ்வி வாய்ந்த முகம்மது பேரிற் சற்றே
குறைபட நினைக்கின் றீராற் குடிகுடி வடுவு நுங்கட்
கிறையவன் முனிவும் பாரிலெண்ணிலாப் பழியுஞ் சூழு
முறையல விடுமி னென்ன மொழிந்து நெஞ் சழிந்து நிற்பார்.

(இ-ள்.) அன்றியும், அச்சிறுவர்கள் எக்காலும் பிரகாசியா நிற்கும் அழகானது வாய்க்கப்பெற்ற நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்மீது யாதாயினுஞ் சற்றே குறையுண்டாகும் படி நீங்கள் கருதுவீர்களே யானுல் உங்கள் குடியென்ற குடிக்கெல்லாம்

வடும் உங்களுக்கு ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் கோபமும் இவ்வுலகத்தின்கண் கணக்கில்லாத பழியும் வந்துவிளையும் ஆனதால் நீங்கள் அவர்களைப் பிடித்துவைத்திருப்பது ஒழுங்கல்ல விட்டுவிடுங் களென்றுசொல்லித் தைரியமற்று நின்றார்கள். (உ௩)

முகம்மது பேரினும்மால் வடுவறு மாகிலிந்தச்
செகமகி ழலிமாவென்னுந் திருந்திழை பழியு மீன்ற
நகைமணி முறுவலாமி னுவுயிர்ப் பழியு மல்லாற்
பகைபெரி துடைய ராகிப் பழியெலாஞ் சுமப்பி ரென்றார்.

(இ-ள்.) அன்றியும்; நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின்மீது உங்களால் யாதேனுமொரு குற்றம் வருமேயானால் இந்த வுலகமானது மகிழாநின்ற ஹலிமாவென்று சொல்லும் திருந் திய ஆபரணங்களை யுடையவர்களது பழியும் அந்நபிகனாயக மவர்க ளைப்பெற்ற ஒள்ளிய முத்துப்போலும் பற்களையுடைய ஆமினாஅவ ர்களின் ஜீவப்பழியும் தாங்குவதுமன்றிப் பெரியவிரோதத்தையுடை யவர்களாய் அதனால்வரும் எல்லாப்பழியையும் நீங்களே தாங்குவீர் களென்றுஞ் சொன்னார்கள். (உச)

இத்திறஞ் சிறுவர் கூற வியலபு துல்லா வென்னுஞ்
சித்திர வடிவன் செவ்வாய் திறந்திரு வரையு நோக்கி
வித்தகர் முகம்ம தின்னை விடுமெனை நுங்கட் கேற்ற
குத்திரங் கொலையா தேனுங் குறித்ததை முடித்தி ரென்றான்.

(இ-ள்.) இந்தவகையாக அங்கு கூடிநின்ற பாலியர்கள் சொல் ல, ஹலிமா அவர்கள் புதல்வரான தகுதிபெற்ற அப்துல்லா வென் னும் அழகிய சொரூபத்தையுடைய பிள்ளையானவர் தமதுசிவந்தவா யினைத்திறந்து அவ்விருவர்களையும் பார்த்துநீங்கள் அற்புதத்தையு டையவர்களாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிசல்லவ மவர்களை விட்டுவிடுங்கள். அதற்குவதிலாகஎன்னை உங்களுக்குத்தகுதியான குத்திரம்பழிமுதலிய யாதேனும்செய்து நீங்கள் எண்ணிய காரியத் தைநிறைவேற்றிக் கொள்ளுங்க ளென்று சொன்னார். உரு)

சிறுவர்க ளுரைக்கு மாற்றங்கேட்டபின் ஜிபுற யீலு
மறநெறி மீக்காயீலு மதிசயத் தகத்தி னுள்ளே
முறுவல்செய் துரையா தொன்று மொழிந்தில ராகிச் செவ்வி
நிறைமுகம் மதுவைச் சேர்ந்த நிழலிடை படுத்தல் செய்தார்.

(இ-ள்.) இந்தப்படியாக அப்பாவியர்களனைவரும் சொல்லும்வார்த்தைகளைத் தருமநெறியினையுடைய ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களும் மீக்காயீல் அலைகிஸ்ஸலாமவர்களும் கேள்வியுற்ற பின்னர் மனசினுள் வியப்படைந்து யாதொரு வார்த்தைகளும் பதல் சொல்லாதவர்களாய்க் குறுநகைசெய்து அழகானது நிறையப்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பொருந்திய அந்த உகாமரத்தினது நிழலின்கண் படுக்கும்படி செய்தார்கள். (உசு)

படுத்தொளி பரப்புஞ்செவ்வி முகம்மதைப் பார்த்துக் கூன்வா
ளெடுத்துநாற் றிசையும் நோக்கி யியல்பெற வுரத்தினேரே
வடுப்பட வூன்றி நொய்தாய் வகிர்ந்திடும் போதி னெஞ்சந்
திடுக்கொடு பதறிநின்ற சிறுவர்கள் சிதறினரே·

(இ-ள்.) பூமியின்மீது அவ்விதம் மல்லாந்து கிடந்து பிரகாசமானதை எவ்விடமும் பரவும்படி செய்யும் அழகிய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்கள் நோக்கித் தாங்கள் கொண்டுவந்திருந்த வளைவுதங்கிய வாளினைக்கையிலெடுத்து நான்குதிசைகளையும் திரும்பிப்பார்த்துத் தகுதிபொருந்த அவர்களின் மார்பின் நேராய்க் காயப்படும்படி யூன்றிமிக மிருதுவாகக் கீறிடும் அந்தச்சமயத்தில், அதைப்பார்த்துநின்ற மற்றும்பாலியர்கள் மனமானது திடுக்கமுடன் நடுக்கமுற்று நான்குதிசைகளிலும் ஒருவரையொருவரறியாது சிதறி யோடிப்போனார்கள். (உஎ)

நேயமுற்றுரத்தைக் கீண்டு நிறையொளி பொங்குங் கஞ்சக்
காய்முகை கிழித்துள் ளுற்ற கருப்பொடு கசடுமான
மாயவன் கூற்றை மாற்றி வழுவறக்கழுவிமாறு
தாயுநன் னினைவீ மானல் லறிவுடனிரப்பல் செய்தார்.

(இ-ள்·) தேவர்களான அவ்விருவர்களும் அவ்வாறு அன்புற்றுநபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மார்பைக்கீறிபூரணப்பட்ட பிரபையானது ஓங்காநிற்கும் இருதயக்கமலக்காயாகியமுகையைப்பிழந்து அதனகம்பொருந்திய கறையுடன்கசடுமுதலாகியதீமையையுடையகடுமையான பாகங்களையொழித்து மீக்காயீல்அலைகிஸ்ஸலாமவர்களது கையின்கண்ணிருந்தகெண்டியிலுள்ள ஜலத்தினல்குற்றமறப்பரிசுத்தஞ்செய்து நீங்காது ஆராயாநின்ற நற்கருத்துநல்லீமான்நல்லறிவுமுதலிய வைகளை அதனுள் நிறையும்படி செய்தார்கள்.

உண்மையு நினைவுஞ் சேர்த்தி யூறிலா துறப்பொருத்தி
வண்மைசேர் முகம்ம தின்றன் மணிப்பிடர்த் தணிவதாகத்
திண்மைகொள் புயமிரண்டிற் றெரிதர நடுவிற்றூய
வொண்ணிறப் புறவி னண்டத் தோதிய வளவ தாக.

(இ-ள்.) அந்தப்படி யுண்மையையும் நினைவையும் அதிற்சேர்மானமாக்கிப் பொருந்தும்படி தழும்பில்லாது பொருத்தி அழகுதங்கிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் குளிர்ச்சியுற்ற நன்மையை யுடைய பிடரின்கீழாகவும் வலிமைகொண்ட இரண்டு தோள்களுக்கும் நடுவாகவும் யாவர்கட்குந் தொற்றும்படி பரிசுத்தமான ஒள்ளிய நிறத்தையுடைய புறாவின் முட்டையினது பிரமாணமென்று சொல்லிய அளவாகவும். (உக)

முத்திரை யென்னு மவ்விலாஞ்சனை தரித்து மூவா
வுத்தமர் தெரிந்துநோக்கி யொருவருக் கொருவர் சொல்வா
ரித்தகைக் குரிசினின்ற நிறையிடை கண்டோ ரெல்லாம்
பத்திவிட் டொளிருஞ் சொற்கப் பலன்பதம் பெறுவரென்றே.

(இ-ள்) முத்திரை யென்றுசொல்லும் அவ்விலாஞ்சனையைத்தரித்துக்கெடாத மேன்மையை யுடையவர்களான ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களும், மீக்காயீல் அலைகிஸ்ஸலாமவர்களும், இவ்விலாஞ்சனையினது தகைமையுடைய பெருமைவுயிற் சிறந்த நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நின்ற நிறையினது பாரத்தைப்பார்த்தவர்களெல்லாவரும் வரிசைவிட்டு ஒளிராநிற்கும் பொன்னுலகத்தினது பிரயோசனத்தையும் பதவியையும் அடைவார்களென்று அந்நபிநாயக மவர்களைப்பார்த்து உணர்ந்து ஒருவருக்கொருவர் தம்மிற்பேசிக் கொள்ளுவார்கள். (ஙய)

தரம்பெறு மாயிரம்பேர் நிறையெனச் சாற்றிப்பத்தா
யிரம்பெயர் நிறையுண் டென்ன வியம்பிநூ றாயிரம்பேர்க்
குரம்பெறக் கனமுண்டென்ன வோதியோர் கோடி கோடி
நிரம்புமா னிடருக்குற்ற நிறையென்று நிகழ்த்தினரே.

(இ-ள்.) அன்றியும், அவ்விலாஞ்சனையினது காரணத்தால்நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் நிறையானதுதகுதிபொருந்திய ஆயிரம்மனிதர்களின் நிறையாகுமென்று சொல்லி மாறிப்பதினாயிரம் மனிதர்களின் நிறையுண்டுமென்றுசொல்லிப்பின்னுமாறி

வலிமைபெற இலட்சம்மனிதர்களின் நிறையுண்டுமென்று சொல்லி ஒப்பற்ற கோடாகோடியாகப் பரவிய மனிதர்களுக்குற்ற நிறையாகுமென்றும் சொன்னார்கள். (௬க)

வகுத்தநாட் டொடுத்துப் பின்னாள் வருவதோர் நாளீ றுகத்
தொகுத்தவச் சனங்களெல்லா மிவரெடை தோன்றாரென்னப்
பகுத்தவர் பார்த்துப் பாரிற் படைப்புள ஜனங்க ளெல்லா
மிகத்திவர் ஷபாஅத் தாலீ டேறுவ ரென்றுஞ் சொன்னார்.

(இ-ள்.) மேலும் ஆதியில் அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் வகுத்தநாள் தொடங்கிப் பிற்காலம் வராநின்ற வொப்பற்ற கியாமநாள் கடைசியாக அளவுபடுத்தப்பட்ட அம்மனிதர்கள் யாவர்களும் இந்த நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் நிறைக்கு ஒப்பாகத் தோன்றமாட்டார்களென்று பிரித்து அவ்விருவர்களும் தம்மிற்பார்த்துக்கொண்டு இந்நபிகள் பெருமானவர்களின் ஷபாஅத்தினால் பூமியின்கண் படைப்புள்ள ஜனங்கள் யாவர்களும் ஈடேற்றம் பெறுவார்களென்றுஞ் சொன்னார்கள். (௬உ)

அதிசயித் துரைத்து நின்றங் ககுமது சிரசைத் தொட்டுத்
துதிசெய்து முத்த மிட்டுத் தூயவன் றேழ ரான
புதியவோர் ஹபீபுல் லாவென் றோதிய பேரும் போர்த்து
மதிமகிழ்ந் துவகை பொங்கி வானவர் வாழ்த்திச் சொல்வார்.

(இ-ள்.) அவ்வாறாக அவ்விருவர்களும் அவ்விடத்தில் நின்று அதிசயமுற்றுக்கூறி அஹ்மது என்று சொல்லாநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தலையைத்தொட்டுப் புகழ்ந்து முத்தமிட்டுப்பரிசுத்தமாகிய அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் நேசரான அர்த்தத்தை விளக்கும் நூதனமாகிய ஹபீபுல்லா என்று சொல்லும் ஒரு திருநாமத்தையும் அவர்களுக்குப் போர்த்துப்புத்தியில் மகிழ்ச்சியடைந்து உவகையானது அதிகரித்து ஆசீர்வதித்துச் சொல்லுவார்கள். (௬௩)

அருமறை முகம்ம தேநும் மகத்தினி லஞ்சல் வேண்டாம்
வரமுறு புதுமை நும்பால் வருவதுண் டனேக மந்தத்
தரமறிந் துவகை யெய்து முமக்கெனச் சாற்றிப்போற்றிப்
பெரியவ ளருளால் வானோர் பேருல கடைந்தா ரன்றே.

(இ-ள்.) தேவர்களான அவ்விருவர்களும்நபிநாயகமவர்களைப்பார்த்து அரிதான பொறுக்காறுல் அலீமென்னும்வேதத்தையுடைய முகம்மதுவே! நீர் உமது மனசின்கண் பயப்படவேண்டாம். மேன்மைதங்கிய அனேகவிதமான அற்புதங்கள் உம்மிடத்தில் வந்து சேர்வதுண்டு. ஆதலால் அத்தகுதிகளையறிந்து உமக்கு மகிழ்ச்சியுண்டாகுமென்று சொல்லித் துதித்து அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் கிருபையினுல் தங்களது நகரமாகிய பெரிய சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தார்கள். (ஙச)

ஓடிய சிறுவர் காறுெந் துலேந்திளைத் துடலம் வேர்த்து
வாடிய முகத்திற் கண்ணீர் மார்பக நனைப்பச் சோர்ந்து
பாடியிற் புகுந்து தங்கண் மனப்பயங் கரத்தை வந்து
கூடிய பெயருக் கெல்லாம் வகைவகை கூறு கின்ருர்.

(இ-ள்.) முன்னர் காட்டினிடமிருந்து ஓட்டம்பிடித்த பாலியர்களெல்லாவரும் கால்கள்வருந்தி உலேந்து தளர்தலுற்றுச் சரீரமானது வியர்க்கப்பெற்று வாட்டம்பொருந்திய முகத்தின் வழியோடும் கண்ணீரானது மார்பிடத்தை நனையும்படி செய்யச் சோர்ந்து தங்கள் ஊராகிய குனேயின் நகரத்தின்கண் நுழைந்து மனசில்தங்கியிராநின்ற பயங்கரத்தை அவ்விடத்தில் வந்துகூடிய ஜனங்களெல்லாவருக்குந் தரந்தரமாக எடுத்துச் சொன்னுர்கள். (ஙரு)

அப்பொழு தப்துல் லாவும் லமுறத்து மழுது விம்மி
யெய்ப்பொடு மேங்கி யேங்கி யீன்றவர் முகத்தை நோக்கி
மைப்படுங் கவிகையவள்ளன் முஹம்மதைக் கொன்ரு ரென்று
செப்பிய மாற்றக் கூற்றஞ் செவிபுக மயங்கி வீழ்ந்தார்.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் அப்துல்லாவும் லமுறத்துவும் விம்முதலுற்று இளேப்புடன் ஏங்கியேங்கித்தங்களையீன்றதாயாகிய ஹலிமா அவர்களினது முகத்தைப்பார்த்து மேகமானது பொருந்தாநிற்கும் குடையையுடைய வள்ளலான நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களைக் காட்டினிடமாக இருவர்கள் வந்து கொலேசெய்தார்களென்று சொல்லிய சொல்லாகிய கூற்றம் அவ்வலிமா அவர்களின் காதுகளில் நுழையவே, மூர்ச்சையாகிப் பூமியின்கண் விழுந்தார்கள். (ஙசூ)

ஆரிது தெருமந் துள்ளத் தரிவழிந் தாவி சோரக்
காரிகை யலிமா பூண்ட கலன்பல திசையுஞ் சிந்த

வேரியங் குழன்மா மேக மின்னென மேனி தேம்பிப்
பாரினிற் புரண்டே றுண்ட மயிலெனப் பதைக்க லுற்றார்.

(இ-ள்.) ஆரிதவர்கள் சுழற்சியுற்று மயங்கி உயிரானது சோரும்படிக் காரிகையான ஹலிமா அவர்கள் தரித்திருந்த ஆபரணங்கள் பல திக்குகளிலுஞ் சிதற வாசனைபொருந்திய அழகிய அளகபாரமும் மேகத்தின்கண் தோற்றுநிற்கும் மின்னைப்போன்ற சரீரமும் வாட்டமுற்றுப் பூமியின்கண் ஹுருண்டு இடியினது ஒலியை யுட்கொண்ட மயிலைப்போலத் துடிக்க ஆரம்பித்தார்கள். (௩௭)

பதைத்தெழுந் தையோ வென்னப் பாலக னப்துல் லாவை
மதித்துமுன் னடத்திக் காந்தண் மலக்கரஞ் சிரசி லேற்றி
யுதித்தெழுங் கமல பாத முதிரங்கொப் பளிப்பக் கானின்
மிதித்தலைந் திடுங்கொம்பொப்ப விரைவினி னடந்துசென்றார்.

(இ-ள்.) அவ்வாறு துடித்த ஹலிமா அவர்கள் பதைப்புற்று எழும்பி ஐயோவென்று சொல்லித் தங்களது பாலகரான அப்துல்லாவைக் கணித்து வழிகாட்டும்படி முன்னுக நடத்திக்கொண்டு காந்தட் புஷ்பம்போலும் தங்களது கைகளைத் தலையின்மேல் வைத்துத் தடாக முதலியவைகளில் தோன்றி எழும்பாநிற்கும் தாமரை மலர் போன்ற இரண்டு பாதங்களிலு மிருந்து இரத்தமானது கொப்பளிக்கும்படித் தரையின்கண் மிதித்து அலைந்திடுங் கொம்பைப்போல விரைவுடன் அக்காட்டை நோக்கி நடந்து சென்றார்கள். (௩௮)

அயிரொழித் தரம்போற் றேய்க்கு மலக்கொடும் பரற்கானேகிக்
குயில்புரை சொல்லார் செல்லக் கோட்டுவாய் நிழலின்கண்ணே
யுயிருந்தம் மனமுங் கண்ணு மோருருக் கண்ட தன்ன
செயிரற மகன்வா னேக்கி நின்றிடுஞ் செய்திகண்டார்.

(இ-ள்.) குயில் போன்ற சொற்களையுடைய ஹலிமா அவர்கள் நுண்ணிய மணல்களை நீக்கி அரத்தைப்போலுந் தேய்க்காநிற்கும் முழுக்கொடுமைதங்கிய பரற்கற்களையுடைய அந்த வனத்தின்கண் சென்று நாலுபக்கமும் தேடிக்கொண்டுநடக்கவே? கொம்புகளையுடைய அவ் வுகாமரத்தினது நிழலின்கண் தங்களது ஆவியும் உள்ளமும் விழிகளும் ஒரு வடிவமெடுத்து நிற்கக்கண்டதைப்போலத் தங்களது புதல்வரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் துன்பமற ஆகாயத்தைப் பார்த்தவர்களாக நின்றிடுஞ் செய்கையைக் கண்டார்கள். (௩௯)

கண்ணினின் மணியே யெத்தங் கருத்துறு மறிவே காமர்
விண்ணினிற் குறை படாமல் விளங்கிய மதிய மேயிம்
மண்ணினுக் கரசே நந்த மனைக்குறுஞ் செல்வ மேயெம்
புண்ணியப் பலனே யென்னப் பூங்கொடி யெடுத்தணைத்தார்.

(இ-ள்.) பூவாலானகொடிபோல்வாராகிய ஹலிமா அவர்கள் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அவ்வாறு கண்டவுடன் கிட்டநெருங்கி எமது கண்களிலிருக்கின்ற மணியானவரே! சிந்தையின்கண்பொருந்திய அறிவானவரே! ஆகாயத்தின்கண் குறைபடாமல் பிரகாசிக்கும் அழகிய சந்திரனனவரே! இப் பூலோகத்திற் கெல்லாம் அரசரானவரே! எங்களுடைய வீட்டிற்கு பொருந்திய சம்பத்தானவரே ! எமது தருமத்தினது பலனனவரே ! யென்று சொல்லிப் புகழ்ந்து கைகளினல் எடுத்துத் தங்கள் மார்போடு மணைத்தார்கள். (சஎ)

வடிவுறு மேனி நோக்கி மாமதி வதன நோக்கி
யுடலுறும் வடுக்கா ணேனிங் குற்றவை யுரைப்பா யென்று
கொடியிடை யலிமா கூறக் கொடுவரை முழையிற்றோன்று
மடலுறு சிய மன்ன அஹ்மது புகலலுற்ருர்.

(இ-ள்.) கொடிபோலு மிடையினையுடைய ஹலிமா அவர்கள் நபிநாயகமவர்களின் அழகுபொருந்திய சரீரத்தைப்பார்த்தும் பெருமைதங்கிய சந்திரன்போன்ற முகத்தைப்பார்த்தும், தேகத்தின்கண் சார்ந்த யாதொரு தழும்புங்கண்டிலேன் ஆதலால் இவ்விடத்தில் சம்பவித்தவை யாவை? அவையை எமக்குச் சொல்லுமென்று கூற, உடனே கொடியமலையினது குகையில் தோன்ருநிற்கும் வலிமையுற்ற சிங்கத்திற் கொப்பான அஹ்மதென்னுந் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். (சஅ)

இத்தரு நிழலி லியாங்க ளிருக்கையி லிருவர் வந்தென்
கைத்தலம் பற்ற நின்ற காளையர் வெருவி யேகப்
பத்திரமாயென் றன்னைப் படிமிசை கிடத்திக் கூன்வாள் [னே
வைத்தரங் கிண்டல் கண்டேன் மறுத்தொன்றுந் தெரிகி லே

(இ-ள்.) இந்தஉகாமரத்தினதுநிழலில் நாங்கள்விளையாடிக்கொண்டிருக்கும்போது இரண்டுவாலிபர்கள்வந்துஎனதுகைத்தலத்தைப் பிடிக்கவும், என்னேடுகூடிநின்ற சிறுவர்கள்பயந்துநான்குதிசைகளி

லும் ஓடிப்போகவும், பின்னர் அவர்கள் என்னைப்பத்திரமாகப்பூமியி ன்மீதுமல்லாந்துகிடக்கும்படிசெய்து அவர்களில் ஒருவர்தம்கையிலி ருந்தவளைவுபொருந்திய ஒருவாளை எனது மார்பில்வைத்துக் கீறவுங் கண்டேன். மாறி யாதொன்றும் யான் அறியமாட்டேனென்று சொன்னார்கள். (சஉ)

நினைவொடு மெழுந்தேன் பின்னென் னெஞ்சினில் வடுவுங்கா
மனமகிழ்ந்திருவரும்மெய்மகிழ்ச்சியாலெனதுசென்னி[ணேன்
தனையுறத் தடவிமுத்திச் சஞ்சலம் வேண்டா நும்பாற்
கனபுது மைகளுண் டென்றோர் காரணப் பெயருமிட்டார்.

(இ-ள்.) அதன்பின்னர்ஓர்மையுடனெழும்பினேன். எழும்பவே எனதுமார்பினில் யாதொரு வடுவையுங்காணேன். அவ்விருவர்களும் மனமகிழ்ச்சியடைந்து தேகக்களிப்பினால் எனதுதலையைப் பொருந் தும்படி தடவிமுத்தமிட்டு உமக்குயாதொரு மனக்கவலையும் வேண் டாம்? உம்மிடத்தில்மிகுந்த அதிசயங்களுண்டுமென்று சொல்லி ஹபீபுல்லாவென்னும் ஓர்காரணப்பெயரு மிட்டார்கள். (சஙு)

ஈதலா லனேக மாற்ற மெடுத்தெடுத் தியம்பியென்னை
மாதவ முஹம்ம தேநல் வரிசையின் மணியே யென்ன
வோதின ரோதி வானத் துறைந்திடல் பார்த்து நின்றேன்
தாதையும் நீரு மென்னைத் தழுவவுங் கண்டே னென்றார்.

(இ-ள்.) இதல்லாமலும் அவர்கள் அனேகமான வார்த்தைகளைஎடு த்தெடுத்துச் சொல்லிஎன்னை மகாதவத்தையுடைய முஹம்மதானவ ரே! நல்லசங்கை பொருந்திய இரத்தினமானவரே! என்று சொல்லி த்துதித்தார்கள். அவ்விதம் துதித்துவிட்டு அவர்களிருவரும் வான லோகத்தின்கண் போய்த்தங்கும்படி யான்பார்த்துக்கொண்டு நின் றேன். அப்படிநிற்கின்றசமயத்தில் தந்தையாகிய ஆரிதவர்களும் தா யாகிய நீங்களும் என்னைக்கைகளால் கட்டியணைத்திடவுங் கண்டே னென்றுசொன்னார்கள். (சச)

உரைத்தவிச் செய்தி யெல்லா மூரவ ருடனு முற்ற
வரைச்சிலை சுமந்த திண்டோண் மன்னரா ரிதுமோசைத்
திரைக்கொடிப் பவள மன்ன சேயிழை யலிமா வுங்கேட்
டிரைத்தக மகிழ்ச்சி பொங்கி யெழுந்துதம் பதியிற் புக்கார்.

(இ-ள்.) நபிநாயக முஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர் கள்சொல்லிய இந்தச்சமாச்சார மனைத்தையும் ஊரிலுள்ளவர்களோ

டும் ஆங்கு பொருந்திய மலைபோலும் கோதண்டம் தாங்கிய திண்ணிய புஜங்களையுடைய அரசரான ஆரிதவர்களும் ஒலியாநிற்கும் ஒலியைக்கொண்ட சமுத்திரத்தின்கண்ணுற்பவித்த பவளக்கொடி போன்ற சேயிழையாகிய ஹலிமா அவர்களும் கேள்வியுற்று மனக்களிப்பானது அதிகரித்தொலித்து அவ்விடத்தைவிட்டும் எழும்பி நடந்துவந்து தங்களதுநகரமாகிய குனையினூரிற்போய்ப் புகுந்தார்கள்.

கலிநிலைத்துறை.

வாடு மெல்லிழைப் பாதிநுண் ணிடைமயி லலிமா
கூடி வந்தவ ரனைவர்க்கு நன்மொழி கொடுத்து
நாடி நும்மனை புகுமெனத் தமர்களை நடத்தித்
தேடி டாப்பொருண் முகம்மதை மனைவயிற் செறித்தார்

(இ-ள்.) வாடாநிற்கும் மெல்லிய இழையிற்பாதிபோலும் நுண்ணிய இடையினையுடைய மயிலாகிய ஹலிமாஅவர்கள் தங்களோடு சேர்ந்துவந்த யாவர்களுக்கும் நல்ல வார்த்தைகளைப்பேசி விருப்பமுடன் உங்களது வீடுகளிற்போய்ச் சேருங்களென்றுப் பந்துக்களாகிய அவர்களை அனுப்பிவிட்டுத் தாங்கள் சம்பாதித்த செல்வமான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தங்களது வீட்டின்கண் கொண்டுவந்து சேர்த்தார்கள். (சசு)

வனந்த னிற்செலுஞ் சிறுவரோ டிணக்கிலர் மறியி
னினந்த னிற்றொடர்ந் தேகவு மனத்தினி லியையார்
சினந்த சின்மொழி மறந்தொரு நாளினுஞ் செப்பா
ரனந்த ரத்தவர் மனையினிற் புகுத்தியு மறியார்.

(இ-ள்.) அன்றுமுதல் ஹலிமாஅவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் காட்டினிடமாக ஆடுமேய்க்கும்படி செல்லும்பாலியர்களோடு செல்லும்படி யுடன் படித்திலர்கள். தங்களது பந்துக்க ளுடன் சேர்ந்து செல்லவும் மனசின்கண் பொருந்தார்கள். கோபித்த அற்ப வார்த்தைகளை மறதியாக ஒரு நாளாயினும் பேசமாட்டார்கள். தங்களுக்குச் சொந்தமான இனத்தவர்களின் வீடுகளிற் போகும்படி செய்து மறியார்கள். (சஎ)

சேம மாகிய பொருளினைக் காத்திடுந் திறம்போல்
வாம மாமணி முகம்மதை வளர்க்குமந் நாளிற்
றூம வொண்புயத் தினர்நசு றுனிக டடஞ்சூழ்
பூமலர்ப் பொழில் குனையின்வந் திடைந்தனர் புதிதாய்.

(இ-ள்.) இந்தப்படி ஹலிமா அவர்கள் அழகிய மாணிக்கமான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை இன்பமாகியபொருளைக் காவல்செய் திருந்திடுந் தன்மைபோலக் காவல் செய்து வளர்த்து வராநிற்கும் அந்நாளின் நூதனமாய் மாலையணிந்த ஒள்ளிய தோள்களை யுடையவரான நசுருனிகள் தடாகங்கள்வளைந்த புஷ்பங்கள் விரிந்திருக்கும் சோலைகளையுடைய அந்தக்குனையின் நகரத்தில்வந்து சேர்ந்தார்கள். (சஅ)

ஹபசி நாட்டினி லுறைநசு ருனிக ளானோர்
குவித ருந்தனக் கொடியலி மாவையுங் கூண்டு
கவின்ப ழுத்தொழு கியமுகம் மதுவையுங் கண்டு
செவியிராசிய மொருவருக் கொருவர்செட்பினராம்.

(இ-ள்.) ஹபசி நாட்டில் வாசஞ்செய்யும் அந்த நசுருனியானவர்கள் திரண்ட ஸ்தனபாரங்களை யுடைய கொடிபோலும் ஹலிமா அவர்களையும் அழகானது கூடிக்கனிந்து வழிந்த நபி முஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களையும் பார்த்து ஒருவர்க்கொருவர் தங்களது காதுகளில் இரகசியமான வார்த்தைகளைப் பேசினார்கள். (சகூ)

நபியெனும்பெரும் முத்திரைக் குறியும்பொன் னகர்க்கும்
புவியி னுக்குமோ றரசெனப் பொருந்திலக் கணமு
மவிரொ ளித்திரு மேனியு மவயவத் தழகு
மிவையெ லாமறிந் திவர்நபி யெனவுளத் திசைந்தார்.

(இ-ள்.) அவ்விதம்பேசிய நசுருனிகள், நபியென்னும் பெரிய இலாஞ்சனையினது அடையாளமும், சுவர்க்க லோகத்திற்கும் பூலோகத்திற்கும் ஒப்பற்ற இராஜரென்று சொல்லும்படி பொருந்திய இலட்சணங்களும், தெய்வீகமுற்ற சரீரத்தின்கண் பிரகாசிக்கின்ற பிரபையும், அவயவங்களின் அழகும், ஆகிய இவைகளனைத்தையும் உணர்ந்து இவர் நபிதானென்று மனசின்கண் பொருந்தினார்கள். ()

புனைமணிப்புயத் தாரிதுக் குயிரெனப் பொருந்து
மனைவியாகிய மயிலலி மாமுனம் வந்து
கனைதருங்கட லமுதென வாழ்த்தியுட் களித்து
வினைய மாய்நசு ருனிகள் சிலமொழி விரித்தார்.

(இ-ள்.) ஹபசி நாட்டாரான அந்த நசுருனிகள் அலங்கரிக்கப்பட்ட அழகியதோள்களையுடைய ஆரிது அவர்களுக்கு ஜீவனைப்

போலப் பொருந்தாநிற்கும் நாயகியாகிய மயில்போலும் ஹலிமா அவ ர்களின்முன்னர் வந்து ஒலியாநிற்கும் சமுத்திரத்தின்கண் ணுற்ப வித்த தேவாமிர்தத்தைப்போல இனிமைபொருந்திய பலவித வார்த் தைகளைச் சொல்லிப் புகழ்ந்து மனமகிழ்ச்சியடைந்து வணக்கத் தோடும் சில வார்த்தைகளை விரித்துச்சொல்வார்கள். (ருக)

உங்கடம்மனைக்குளதொரு குழந்தைநும்முயிர்போ
லெங்கடம்மனத் துவகையால் வளர்ப்பதற் கிசைந்தோந்
திங்கள் வாணுத லளித்தியேற் செல்வமுஞ் செருக்கும்
பொங்கு மாநிதி தருகுவ மியாமெனப்புகன்றார்.

(இ-ள்.) இளஞ்சந்திரன்போலும் பிரகாசம்பொருந்திய நெற்றி யையுடைய ஹலிமா வானவர்களே! உங்களது உயிரைப்போன்ற ஒருபிள்ளையானது உங்களின் வீட்டின்கண்ணுள்ளது. அப்பிள்ளை யை நாங்கள் எங்கள்மன விருப்பத்தோடும் வளர்ப்பதற்குப் பொரு ந்தி யிருக்கின்றோம் ஆதலால் அப்பிள்ளையை எங்கள்பால் நீங்கள் தருவீர்களேயானால் நாங்கள் உங்களுக்குச் செல்வமும்பெருமையும் அதிகரிக்கின்ற மிகுதியான திரவியங்களைத் தருகிறோமென்று சொன்னார்கள். (ருஉ)

நன்று நும்மனத் தெண்ணிய வுவகையா னடுக்க
மின்றிக் கேட்பதெக் குழந்தைநீ ரியம்புமென் றிசைத்தார்
வென்றிமற்புயன் முஹம்மது வெனப்பெயர் விரித்தார்
குன்று போன்முலை செவிசுட மனங்கொதித்திடவே.

(இ-ள்.) அதைக்கேட்ட ஹலிமாஅவர்கள் அந்த நசுறானிகளி டத்தில்நல்லது? உங்கள்மனசின்கண் நினைத்த விருப்பத்தினால் பய மில்லாது நீங்கள்என்னிடத்தில்கேட்பது எந்தப்பிள்ளை? அதைநீங் கள் எனக்குச்சொல்லுங்களென்று கேட்டார்கள். அப்போது அவ ர்கள் மலைபோலு முலைகளையுடைய ஹலிமா அவர்களின் காதுகளா னவை சுடும்படியாகவும், மனங்கொதித்திடும்படியாகவும், வெற்றி தங்கிய வலிமைகொண்ட புயங்களையுடைய முகம்மதுவென்று பெய ர்விரித்துச்சொன்னார்கள். (ருங)

புகன்ற புன்மொழி போதநும் பதிபுகப் போது
மிகழ்ந்தி ருந்திராற் பழிவரு மூரிலெம் மினத்தார்
திகழ்ந்திருப்பவ ரறிகிலர் கேட்கிலோ செகுப்ப
ரகந்த ளைப்புற மிடுஞ்செலும் பேர்மென வறைந்தார்.

(இ-ள்.) ஹலிமா அவர்கள் அவ்விதம்சொல்லிய அந்த நசுருனி களைப்பார்த்து, நீங்கள்சொல்லிய இழிவான வார்த்தைகள் சொன்ன மட்டும் போதும் உங்களது ஊராகியஹபசிநகரத்தை யடையும்படி போய்விடுங்கள். அப்படிப்போகாது இவ் வார்த்தையை நிந்தனைசெய்துவிட்டு நீங்கள் இவ்வூரில் இருப்பீர்களேயானால் கொலை பாதகம் வந்து சம்பவிக்கும். அன்றியும் விளக்கமுற்று இவ்வூரில் இருப்பவர்களான எனதுபந்துஜனங்கள் இச் சமாசாரத்தையறியார்கள். ஒரு வேளை அவர்கள் காதுகளினால் கேள்விப்பட்டு அறிவார்களேயானால் உங்களைக்கொலைசெய்வார்கள். ஆதலால் உங்களதுமனசின்கண் எண்ணிய எண்ணத்தைப் பின்னிடுங்கள். இப்பொழுதே இவ்விடத்தை விட்டும் எழும்பிப் போகுங்கள் போகுங்களென்று கோபமாகச்சொன்னார்கள். (ருச)

காட்டி. னிற்புக விளைந்தகா ரணத்தையும் ஹபஷா
நாட்டி லுற்றவர் கேட்டகா ரியங்களு நறவு,
ரேட்டி லங்கிதழ்ப் பதத்தலி மாமனத் தெண்ணிக்
கூட்டித் தாயிடஞ் சேர்ப்பதே கருத்தெனக்குறித்தார்.

(இ-ள்.) அன்றியும், கள்ளானது பரவாநிற்கும் பூவினிதள்போலும் பிரகாசிக்கின்றவிரல்களைக்கொண்டபாதங்களையுடையஅலிமாவவர்கள் நபிமுகம்மதுசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்கள் ஆடுகளைமேய்க்கும்படியாகப் பிள்ளைகளோடும் காட்டின்கண்போக அங்குநடைபெற்றகாரணங்களையும், ஹபஷாநாட்டின்கண்ணிருந்துவந்துற்ற நசுருனிகள் தங்களிடம் வந்துகேட்ட காரியங்களையும், மனத்தினுள் நினைத்து இனிநபிகணாயகமவர்களை அவர்களின்தாயார் ஆமினாஅவர்களிடத்தில் கூட்டிக்கொண்டுபோய்ச்சேர்ப்பதே புத்தியென்றுமனசில்குறிப்பிட்டார்கள். (ருரு)

வருட மைந்துமோர் திங்களுஞ் சென்றது மக்கா
புரம டைந்திபா முகம்மதைப் புகழொடும் பொருவி
லரிவை யாமினா வகத்திடை புகுத்தலே யறிவென்
றுரைத ரத்திற லாரிது மனங்களித் துவந்தார்.

(இ-ள்.) அவ்விதம் குறிப்பிட்ட ஹலிமா அவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு ஐந்துவயதும் ஒருமாதமும் கழிந்தன இனி நாம் திருமக்கமாநகரத்தையடைந்து ஒப்பில்லாத அரிவையாகிய ஆமினா அவர்களின் வீட்டினுள் சேர்த்தியுடன்

அங்கபிகள்பெருமானைச்சேர்ப்பதே புத்தியென்றுசொல்ல, அதற்கு வலிமையுடைய ஆரிதவர்களும் மனச்சந்தோஷங்கொண்டுப் பிரியப் பட்டார்கள். (ருசு)

மாதவமுகம் மதும்வரி விழியலிமாவுங்
கோதறுந்துணை வரும்வழித் துணையுடன் கூடித்
தீதுறுங்கொடும் பாலையுங் குறிஞ்சியுஞ் சேர்ந்த
பாதை யின்றரு நிழலினைப் பாறினர் பரிவாய்.

(இ-ள்.) அப்போது மகாதவத்தை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் இரேகைகள் படர்ந்த கண்களையுடைய ஹலிமா அவர்களும் அவர்களின் குற்றமற்ற நாயகரான ஆரிதவர்களும் மற்றும் ஆங்குண்டாகிய வழித்துணைவர்களோடும் சேர்ந்து புறப்பட்டு தீமைபொருந்தியகொடியபாலைநிலமும் குறிஞ்சி நிலமும் கூடிய அந்தமக்கமாநகரத்திற்குச் செல்லும்வழியில் ஒருதரு நிழலின்கண் ணிறங்கிச்சுகமாய்இளைப்பாறினார்கள். (ருஎ)

இறங்கி யங்கிருந் தெழுந்திட நினைக்குமந் நேரம்
பிறங்கு மோர்கர நீடரக் கண்டனர் பெரிதா
யறங்கி டந்தொளிர் முஹம்மதைக் காண்கில ரலிமா
மறங்கி டந்தவேற் கட்கடன் மடைதிறந் தனவே.

(இ-ள்.) அவ்வாறவர்கள் அத்தரு நிழலின்கண் இறங்கித் தாமதித்திருந்து விட்டு எழும்பிப் போகும்படி எண்ணிடும்அந்தச்சமயத்தில், பிரகாசியா நிற்கும் ஒருகையானது பெரிதாக அவ்விடத்தில் நீளும்படி ஹலிமா அவர்கள் தங்களது கண்களினுற் கண்டார்கள். காணவே அங்குதருமமானது கிடந்து ஒளிரப்பெற்ற நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கண்டிலர்கள். அங்ஙனம் அவர்களைக் காணுமலாகவும் அவ்வியசனத்தால் கொலையானது கிடக்கப்பெற்ற வேற்படைபோன்ற கண்களாகிய கடல்களினது மடைகள் திறந்தன. (ருஅ)

என்ன மாயமிங் கென்னென நெட்டுயிர்ப் பெறிந்து
வன்ன மென்மலர்க் கரநெரித் துதரத்தில் வைத்துத்
துன்னு பூங்குழல்விரிதரச் செவ்விதழ் துடிப்பக்
கன்னி மாமயில் கலங்கினர் புலம்பினர் கதறி.

(இ-ள்.) இளம் பருவத்தையுடைய பெருமைதங்கிய மயிலான ஹலிமா அவர்கள் என்னமாயம்? இப்போது இவ்விடத்தில் நடந்தது என்னென்று சொல்லிப் பெருமூச்செறிந்து அழகிய மிருதுவான

தாமரைப் புஷ்பம்போன்ற இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று நெரித்து வயிற்றின்கண்வைத்து நெருங்கிய மலர்களையுடைய கூந்தலானது அவிழ்ந்து விரிந்திடும்படியாகவும் சிவந்த அதரங்கள் துடிக்கும்படியாகவும் துன்பமுற்றூர்கள். அழுது புலம்பினர்கள். (ருகூ)

படியின் மீதினி லோடுவர் தேடுவர் பதறிக்
கடிதிற் கன்முழை முட்செடி பொதும்பினுங் கவிழ்ந்து
நெடிது நோக்குவர் செடியறக் கிளறுவர் நிகரில்
வடிவு றும்மக வேயெனக் கூவுவர் வருந்தி.

(இ-ள்.) அன்றியும் பூமியின்மே லோடுவார்கள். நடுக்கமுற்று எவ்விடத்துந் தேடுவார்கள் ஆங்குள்ள மலைக்குகைகளிலும் முட்கள் நெருங்கிய மரச்செறிவுகளிலும் விரைவாகச்சென்று குனிந்து அதிகமாய்ப் பார்ப்பார்கள். செடிகள் முழுவதும் அறும்படிக்கிளப்புவார்கள். வருத்தமுற்று ஒப்பில்லாத அழகுபொருந்திய எனது மகனே! என்று சொல்லிச் சத்தமிடுவார்கள். (சூ0)

வெய்ய கானிடை நீங்கவுங் காண்கிலன் வேறோர்
கைய லாற்பினைப் பிறரெடுத் தேகவுங் காணே
னுய்யு மாறினி யேதென வுலைந்துட லொடுங்கி
அய்ய கோமக னேவிதி யோவென வழுதார்.

(இ-ள்.) அன்றியும் கொடிய இக்காட்டினிடத்தில் எனது புத்திரரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் என்னைவிட்டும் நீங்கவும் காண்கிலேன். ஒருகையே யல்லாமல் பின்புவேறே அன்னியர்கள் இங்குவந்து எடுத்துக்கொண்டு செல்லவுங் கண்டிலேன். ஆனல் இனி முகம்மதைக்காணது யான் பிழைக்கும் வழியாதென்றுசொல்லி மனங்கலங்கிச் சரீரமானது ஒடுக்கமுற்று ஐயோ? வெனவும், கோ ? வெனவும், மகனே ? வெனவும், விதியோ? வெனவும், பலவாருகச் சொல்லிச் சத்தமிட்டு அழுதார்கள். (சூக)

கவச வல்லுரங் கிண்டவர் வஞ்சனைக் கருத்தோ
ஹபஷி மாநகசு ருனிகள் மாயமோ வலது
புவியிற் பூதங்க ளலகைகள் செய்தொழிற் பொருளோ
வெவர்க ளிவ்விடர் செய்தவ ரெனமன் மிடைந்தார்.

(இ-ள்.) அன்றியும் அங்கிகளை அணியாநிற்கும் வலிமைதங்கிய அங்கபிகணுயகமவர்களின்மார்பை முன்னர்க் காட்டில்வைத்து கிறிய

வர்களின் எண்ணத்தினலாகிய வஞ்சனையோ ? அல்லது ஹபஷிநகர த்திலிருந்து வந்திருந்த பெருமைதங்கிய ககுனிகளின் மாயமோ? இந்தப்பூமியின்கண்ணுள்ள பூதங்கள் பிசாசுகளின் செய்தொழிற் குணமோ? எவர்கள் இத்தீங்கு செய்தார்கள். யாம் அறிந்தோ மில்லையே யென்று சொல்லி மனமானது வசக்கேடுற்றுர்கள். (சுஉ)

வஞ்சி மெல்லிடை வாட்டமு நடுக்கமும் வாசக்
கஞ்ச மென்முகக் கோட்டமுங் கண்ணினீர்க் கவிழ்ப்புங்
கொஞ்சு மென்மொழி குழறிடப் புலம்பிய குறிப்பு
மஞ்சி நின்றதும் பயந்தொடுங் கியவர லாறும்.

(இ-ள்.) அவ்விதம் வசக்கேடுற்ற வஞ்சிக்கொடிபோன்ற மெல்லிய இடையினையுடையாளாகிய ஹலிமா அவர்களின் மெலிவையும் நடுக்கத்தையும், வாசனை பொருந்திய தாமரை மலர்போன்ற மென்மைபவான முகத்தினது வளைவையும், கண்களிலிருந்து ஒழுகும் நீரினது கவிழ்ப்பையும், கொஞ்சாநின்ற மிருதுவாகிய வார்த்தையானது குழறிடும்படி புலம்பிய குறிப்பையும், அச்சமுற்று நின்றதையும், பயந்து ஒடுக்கமடைந்த வரலாற்றையும் கண்டு. (சுஙு)

கரிய பூங்குழல் சென்னிறப் பூழ்தியிற் கரந்து
விரித ரக்கிடந் தொளிருமெய் பதைத்துவாய் வெளிறி
யெரியு நெய்யிடை யிட்டபைந் தளிரென விருந்த
வரிவை தம்வயி னெறிசெலும் பேர்கள்வந் தடைந்தார்.

(இ-ள்.) கருமைபொருந்திய அழகிய கூந்தலானது சிவந்தநிறத்தையுடைய தூசியில்மறைந்து விரியும்படி கிடந்து பிரகாசிக்கும் உடல் பதைப்புற்று வாய்வெளுத்து எரிகின்ற நெய்யின்கண்வைதத மாந்தளிரைப்போல இருந்த அரிவையாகிய அவ்வலிமா அவர்களினிடம் அந்தப் பாதையிற் போகாநின்ற மற்றும் ஜனங்கள் வந்து சேர்ந்தார்கள். (சுச)

ஏது வந்தவை யென்றடைந் தவர்சில ரியம்பக்
கோதை யீரென துறுகுலக் களிறெருரு குழந்தை
நீதி லாப்பெயர் முஹம்மது வெனுஞ்சிறு வரையிப்
பாதை யின்னிழந் தேன்கொடி யேனெனப் பகர்ந்தார்.

(இ-ள்.) அவ்வாறு அங்கு வந்து சேர்ந்த வழிப்போக்கர்களிற் சிலர் ஹலிமா அவர்களைநோக்கி இங்குவந்து சம்பவித்தது யாதென்றுகேட்க அதற்கு ஹலிமாஅவர்கள் மாலைசூடிய கூந்தலையுடைய பெண்களே ! எனது பொருந்திய குலக்களிறுன ஒப்பற்ற மதலையா

கியமுகம்மதென்றுசொல்லும் குற்றமில்லாத திருநாமத்தையுடைய சிறுவரைக் கொடுமைதங்கிய யான் இவ்வழியின்கண் இழக்கப்பெற்றேனென்று சொன்னார்கள். (சரு)

கேட்ட பேர்கடம் மனம்பயந் தறக்கெடி கலங்கிக்
காட்டி னிப்பெரும் புதுமையைக் கருத்தினிற் றெளிந்து
மூட்டும்வல்வினை பிரித்திட முடித்தவன் முறையாய்க்
கூட்டி விப்பதும் வலியதோ கூட்டுவன் கோதாய்.

(இ-ள்.) ஹலிமா அவர்கள்சொன்ன அந்தவார்த்தைகளைக் காதுகளினாற் கேள்வியுற்ற அவ்வழிப்போக்கர்கள் தங்களது மனமானது அச்சமுற்று மிகக் கெடிகலங்கிக் காட்டின்கண் வைத்து நடந்த இப்பெரிய அதிசயத்தை சிந்தையினால் யோசித்துத் தெளிவடைந்து அலிமா அவர்களை நோக்கிப் பெண்ணே! மூட்டுகின்ற வல்வினையினால் உன்னை விட்டும் உனதுமகன் முகம்மதைப் பிரித்திடும்படி முடித்தவனான ஹக்குசு புகானகுவத்த ஆலாவானவன் இனி அம்மகனை உன்னோடு ஒழுங்காய்ச் சேர்ந்து வைப்பதும் பெரியகாரியமா? இல்லை. ஆனதினால் சேர்த்துவைப்பான். (சசா)

எனவெ டுத்தநன் மொழிகளா லிவர்கருத் தியைய
நனைத ருங்குழன் மடந்தையர் தேற்றியு நடுக்கந்
தினையி னவ்வள வஃயினுந் தேறிலர் தியங்கு
மனைய காலையில் விருத்தனென் றொருத்தன்வந் தடைந்தான்.

(இ-ள்.) என்றுதொடங்கிய நல்லவார்த்தைகளினால் தேனனது மாறாதுகுடியிருக்கப்பெற்றகூந்தலையுடைய அந்த வழிப்போக்கர்களிலுள்ள பெண்கள் இந்த ஹலிமா அவர்களின்சிந்தையானது இசையும்படி அவர்களினது நடுக்கத்தைத்தேற்றியும், அவர்கள் ஒரு தினையினது பிரமாணமாயினுந் தேற்றம்பெற்றிலர்கள். அப்படித்தேற்றம் பெறாது சோர்வையடைந்துகொண்டிருக்கின்ற அந்தச் சமயத்தில் கிழவனென்று சொல்லும்படி ஒரு மனிதன் அவ்விடத்தில் வந்து சேர்ந்தான். (சுஎ)

கையி லூன்றிய தடியுமோர் கயிற்கவி கையுமாய்
மெய்யெ லாநரம் பெழுந்துல ரியவிரி திரையாய்த்
துய்ய நால்விரித் தனநரை துலங்கிடக் கூனி
வையு மென்றலை நடுக்கொடு மெலமெல நடந்தே,

(இ-ள்.) ஒருகையில் ஊன்றிய கோலும் மற்ரொரு கையில் குடையுமாய் மேனிமுழுவதும் நரம்பானது எழும்பி வற்றியவிரிந்த உடற்றிரையாய் உரோமங்களில பரிசுத்தமான வெள்ளிய நூலைவிரித்தாற்போல நரைகள் பிரகாசிக்கும்படி கூனிக்கொண்டு வதங்காநின்ற மெல்லிய தலைநடுக்கத்தோடும் பையப்பையநடந்து. (சுஅ)

வந்து தோன்றிய முதியவ னரிவைநின் மனத்தி
ஞெந்தி ருந்தவா றேதெனப் பூங்கொடி நுவன்ருர்
கந்த டர்க்கயக் களிறெனு முகம்மதைக் கானிற்
சிந்தி னேனுயிர் சிந்தவு நினைத்தன னெனவே.

(இ-ள்.) அவ்விடத்தில்வந்துதோற்றமாகிய அக்கிழவனுனவன் ஹலிமா அவர்களைப்பார்த்து பெண்ணே! உன்னுடைய மனத்தின்கண் வருத்தமடைந்திருக்கும் வாறேதென்று கேட்கப், பூவா வியன்ற கொடியாகிய ஹலிமாஅவர்கள் இந்தக் காட்டினிடத்துக் கட்டுத்தறியை அடராநிற்கும் இளமைபொருந்திய யானை என்று சொல்லும்படியான எனது புதல்வர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைச் சிதறினேன். அதனுல் எனது ஜீவனையும் சிதறும்படி கருதினேனென்று சொன்ஞர்கள். (சுசு)

திருந்து மென்மலர்க் கொடியிடை கேட்டிநின் சிந்தை
வருந்தநின்றிரு மகன்முகம் மதுவையிவ் வழியிற்
பொருந்தக் கூட்டுறுந் தெய்வமொன் றுளதியாம் புகுந்தங்
கிருந்து கேட்குவம் வம்மென நன்மொழி யிசைத்தான்.

(இ-ள்.) அதுகேட்ட அச்கிழவனுனவன் திருந்தாநிற்கும் மெல்லிய பூவாலான கொடிபோலு மிடையினையுடைய ஹலிமாவே! நீ கேட்பாயாக: உனது மனமானது வருந்தல்வேண்டாம். உன்னுடைய தெய்விகமுற்ற மகனுகிய முகம்மதுவை இந்தப் பாதையின்கண் சேரும்படி கூட்டுதற்குப் பொருந்திய தெய்வமானது ஒன்றுளது. அவ்விடத்தில் நாம் போயிருந்து முறையிட்டுக் கேட்போம் வாவென்று நல்ல வார்த்தைகளைச் சொல்லினுன். (எ௦)

விருத்த னம்மொழி யியம்பிட விளங்கிழை யலிமா
கருத்தி லுற்றிவை யறிகுவ மெனநடக் கானிற்
குருத்த செங்கதி ருதித்தெனக் கொடுமுடி யியற்றி
யிருத்து மாலயத் தேகின ரவன்மொழிக் கிசைந்தே.

(இ-ள்.) அக்கிழவனானவன் அவ்வார்த்தைகளைச் சொல்லவே பிரகாசிக்கின்ற ஆபரணங்களையுடைய ஹலிமா அவர்கள் அவற்றைச் சிந்தையின்கண் பொருந்தி யிச்செய்தியைக் கண்டறிவோமென்று அவன்சொல்லுக்குச் சம்மதப்பட்டு உதயமாகாநிற்கும் சூரியனானவன்பிரசன்னமானாற்போலப் பிரகாசிக்கும்படி கொடுமுடிசெய்து நடுக்காட்டில் இருத்திய அக்கோவிலின்கண் போய்ச்சேர்ந்தார்கள். ()

முருகு லாங்குழன் மடந்தையர்க் காய்நரை முதியோன்
செருகு பொன்மலர்க் கோயிலிற் காவணத் தினினின்
றுருகு தன்மனப் பயத்தொடும் வாய்புதைத் தொதுங்கிப்
பொருவி லாமணி யேமுத லேயெனப் புகழ்ந்தான்.

(இ-ள்.) அவ்விதம்போய்ச்சேர்ந்து, வாசனையுலாவாநின்ற கூந்தலையுடைய பெண்ணாகிய ஹலிமா அவர்களுக்காக நரையையுடைய அந்தக்கிழவனானவன் அழகியபுஷ்பங்களைச் சொருகாநிற்கும் அக்கோயிலினது முன்வசமிருக்கின்ற பந்தரில்நின்றுக்கொண்டு கரைகின்ற தனதுமனப்பயங்கரத்தோடும் கைகளால் தாயைமறைத்து ஒதுங்கி ஒப்பிலாத மணியே! ஆதியே! யென்றுசொல்லித் துதித்தான்.

போற்றித் தொண்டனிட் டெழுந்தொரு வரமெனப் புகன்று
கூற்ற டர்ந்தவேல் விழியெளி யவளிவள் குழந்தை
மாற்ற லர்க்கரி வடிவுறும் பெயர்முகம் மதுவை
யாற்றி னில்விழந் தாளருள் வாயென வறைந்தான்.

(இ-ள்.) அவ்வாறு துதித்துத் தெண்டனிட்டு எழும்பி ஒருவரம்வேண்டுமென்றுகூறி எமனையும்தமக்கு இணையில்லை யென்று சொல்லி அடர்ந்த வேல்போலுங் கண்களையுடைய எளியவளாகிய இவ்வலிமாவினது குழந்தையானது சத்துராதிகளென்னும் யானைகட்குச் சிங்கமானது. அன்றியும், முஹம்மதென்னும் அழகுபொருந்திய திருநாமத்தையுடையது. அப்பிள்ளையை அவள்வருகின்ற வழியின்கண் வைத்துஇழந்துவிட்டாள், ஆதலால் அதை எங்களுக்குத் திருப்பித் தருவாயாகவென்று சொன்னான். (எகூ)

மாது தன்மகன் முகம்மது வெனும்பெயர் சிலையின்
காதி னுட்புகக் கருத்துறக் கலங்கிமெய் நடுங்கிப்
பாதை யிற்புகு முதியவன் பதமலர் கெதியா
மோதி வீழ்ந்தது முகந்தரை படமுனங் கியதே.

(இ-ள்.) அக்கிழவன் அவ்வாறு மாதாகிய இவ்வலிமாவினது புதல்வன் முகம்மது என்று சொல்லும் திருநாமமானது அந்தப் புத்துக்கானின் காதுகளினகம் நுழையவே, சிந்தையானது முழுதுங்கலக்கமுற்று உடல்நடுங்கிப் பாதையின்கண் போகாநிற்கும் அக்கிழவனின் சரணாரவிந்தமே மோட்சமாக அச்சரணங்களில் முகமானது பூமியிற்படும்படி அடித்துப்புரண்டு வீழ்ந்தது. அன்றியும் முணுமுணுத்தது. (எச)

சிலைம ருண்டது கண்டலி மாமனந் திடுக்கிட்
டலைவி னேடற நரைமுதி யவன்முக நோக்கிக்
கொலைகொ னீசெலு நெறிகுறு கெனக்கொழுங் கமலத்
திலையின் மேனடுத் துளியென வழியினின் றிடைந்தார்.

(இ-ள்.) அவ்வாறு அந்தப்புத்துக்கான் மயங்கிவிழுந்ததை ஹலிமா அவர்கள் தங்களது கண்களாற் பார்த்து நெஞ்சமானது திடுக்கமுற்று வருத்தத்துடன் முழுநரையையுடைய அக்கிழவனின் முகத்தைப்பார்த்து உனக்கென்ன பழியா? ஆகையால் நீபோகின்ற பாதையின்கண் போய்ச்சேரென்று சொல்லிவிட்டு செழியதாமரையிலையின் மீது நடுவில் தங்கியிருக்கும் ஒருநீர்த் திவலையைப்போலப் பாதையின்கண்ணின்று வசக்கேடடைந்தார்கள். (எரு)

இந்த நாளையிற் றேவத மவர்பெய ரியம்ப
வந்த போதினிற் றலைமுகங் கவிழ்ந்தது மடவா
யுநதன் மைந்தனுக் குடையவன் வேறுள னொருவ
னந்த நாயக னிடத்தினி லறைகென வகன்றான்.

(இ-ள்.) அக்கிழவனனவன் ஹலிமா அவர்களைநோக்கி இளம்பருவத்தையுடைய பெண்ணே! இந்தத்தினத்தில் நாம் அந்த முகம்மதென்பவரின் திருநாமத்தைச்சொல்லும்படி இங்குவந்தசமயத்தில், இங்குள்ளதேவதமானது தனதுதலையையும் முகத்தையுங் கவிழ்ந்தது. ஆதலால் உன்னுடைய மகனுக்குச் சொந்தமான கடவுள்வேறே யொருவனுள்ளன். நீ அந்தக் கடவுளிடத்திற் போய் முறையிடுவாயாக வென்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டும் நீங்கிப் போயினன். (எசு)

ஆற்றி ருந்தெழுந் திருகையுஞ் சிரசினி லாக்கித்
தூற்றும் வேல்விழி நீரிடுஞ் சுவடுகண் மறைப்ப
நாற்றி சையினுங் கண்மலர் பரப்பிட நடந்து
தேற்று நன்மறை மக்கமா நகரினைச் சேர்ந்தார்.

(இ-ள்.) அப்போது ஹலிமா அவர்கள் அந்தப்பாதையின் கண்ணிருந்து எழும்பி இருகைகளையும் தலையின்மேல் உயர்த்தி வைத்துக்கொண்டு வேலாயுதம்போன்ற இரண்டுகண்களிலுமிருந்து சிதறும் நீரானது பூமியின்மீது வைக்கின்ற பாதத்தினது சுவடுகளை மறைக்க, விழியாகிய தாமரைமலர்களை நான்கு திசைகளிலும் பறப்பிடும்படி நடந்து தேறுதலைத் தராநிற்கும் நன்மைதங்கிய வேதங்களையுடைய திருமக்கமா நகரத்தை வந்துசேர்ந்தார்கள். (எஎ)

அபுதுல் முத்தலி பெனுமர சணிமனை யடுத்துச்
சுவன நாயகக் குரிசிலை வழியிடைத் தோற்றிப்
புவியிற் றோன்றிய துன்பமு முதியவன் புகலச்
சவிகெ டப்பெருந் தேவதந் தரைபடிந் ததுவும்.

(இ-ள்.) அவ்வாறு திருமக்கமாநகரத்தைச்சார்ந்து அப்துல்முத்தலிபென்று சொல்லாநிற்கும் வேந்தரவர்களினது அழகியவீட்டின்கண் நெருங்கிச் சுவர்க்கலோகத்திற்கு நாயகரான பெருமையிற் சிறந்த நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பாதையினிடத்தில் வைத்துத்தோற்று, அதனால் இவ்வுலகத்தில் உண்டாகிய துன்பங்களையும், காட்டின்கண்வந்த அக்கிழவனுனவன் முறையிட்டுச் சொல்லவே! அச்சொற்களைக்கேட்ட பெரியதேவதமானது தன்து பிரபை கெடும்படிப் பூமியின்கண் விழுந்து கிடந்ததையும்.

மரும லர்த்தொடைத் தடம்புயர் செவிமடற் றுளையிற்
றிருக வெந்துதீ யுமிழ்ந்தவே றிணித்தது சிவணக்
கருகி யீரலுஞ் சிந்திடத் தெளிமனங் கலங்கி
யுருகக் கூறின ரூற்றெடுத் தொழுகுநீர் விழியார்.

(இ-ள்.) வாசனைதங்கிய புஷ்பமாலையணிந்த பெருமை பொருந்திய புயங்களையுடைய அப்துல்முத் தலிபவர்களின் செவிமடல்களினது துவாரங்களில் முறுகும்படி எரிந்து அக்கினியைக் கொப்பளித்த வேலாயுதத்தைத் திணித்தாற்போல எவ்விடமும் கரிந்து ஈரற்குலையுஞ் சிதறிடத் தெளிந்த சிந்தையும் கலக்கமடைந்து கரையும்படி ஊற்றெடுத்துப் பாயாநிற்கும் நீரினைக்கொண்டகண்களையுடைய ஹலிமா அவர்கள் சொன்னார்கள். (எகூ)

பழுதி ருந்தசொற் கேட்டலும் படர்ந்தசெந் நெருப்பி
லொழுகு மென்மெழு காயுறு கறுத்தழிந் துடைந்து

கொழும டற்செழுங் கமலமென் மலர்முகங் கூம்பி
யழுது சஞ்சலத் துறைந்தன ரப்துல்முத் தலிபு.

(இ-ள்.) அப்துல் முத்தலிபவர்கள் ஹலிமா அவர்கள் சொன்ன குற்றமானது குடியிருக்கப்பெற்ற அவ்வார்த்தைகளைக் காதுகளினுற் கேட்டமாத்திரத்தில், விரிந்துகிடக்கப்பெற்ற சிவந்த நிறத்தையுடைய அக்கினியின்கண் ஒழுகாநிற்கும் மெல்லிய மெழுகைப்போலப்]பொருந்திய நினைவானது அழியப்பெற்றுத் தளர்வுற்றுக் கொழுமையான இதள்களையுடைய செழிய தாமரையினது மென்மைதங்கிய புஷ்பத்தைப்போன்ற முகமானது ஒடுங்கி அழுது மனக்கவலையிலுறைந்தார்கள். (அய)

கலவை மான்மத மார்பகஞ் சிவந்தகட் டரளங்
குலவ வந்தவை யெவைகொலென் றினத்தவர் கூற
மலையெ னுங்கிடக் கடகரி யுதிரம்வாய் மடுத்துண்
டுலவு வேற்கா ருற்றவை யனைத்தையு முரைத்தார்.

(இ-ள்.) அப்போது அங்குள்ள பந்துஜனங்களானவர்கள் பரிமளச் சேற்றையும் கஸ்தூரியையுமுடைய மார்பினிடத்தில் சிவந்த கண்களிலிருந்து ஒழுகாநிற்கும் நீர்த்துளியாகிய முத்துக்களானவை பிரகாசிக்கும்வண்ணம் இங்குவந்து பொருந்தியவையாவை? யென்று கேட்க, அதற்கு மலையென்று சொல்லும்படி வலிமைதங்கிய மதங்களையுடைய யானைகளினது இரத்தத்தை வாய்நிறைத்து அருந்தி விளங்குகின்ற வேற்படைதங்கிய கையினையுடைய அப்துல்முத்தலிபவர்கள் அங்கு பொருந்திய வாலாறெல்லா வற்றையும் எடுத்துச் சொன்னார்கள். (அக)

மலைய டங்கலுந் தடவியும் வனத்தினை வகிர்ந்தும்
தொலைவி றீவினுஞ் சுற்றியு முகம்மதைத் தொடர்ந்து
நிலைத ருங்கதிர் படுமுனந் தருகுவ நுமது
கலித லைத்தவிர் மெனத்திசை திசைதொறு நடந்தார்.

(இ-ள்.) அதுகேட்ட அப்பந்துஜனங்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை மலைகளெல்லா வற்றையும் தடவிப்பார்த்தும், காடுகளைவகிர்ந்துபார்த்தும், தொலையாத இடங்களையுடைய தீவுகள் முழுவதிலும் சுற்றிப்பார்த்தும், பின்பற்றிக் கண்டுபிடித்து நிலைபெற்ற இந்தச் சூரியனானவன் அஸ்தமிக்கு முன்னர் கொண்டு வந்து உங்கள் பால்தருகின்றோம். ஆகையால் நீங்கள் உங்களது மெலிவைத்த விருங்களென்று சொல்லித் திசைகள்தோறும் அந்நபிகளுயக மவர்களைத் தேடும்பொருட்டாக நடந்து சென்றார்கள். ()

பரற்செ றிந்தகா னிடத்தினும் பருப்பத நெறியும்
விரற்பு குந்திடா வனத்தினும் வேறுசிற் றூரு
மிரைத்த பீடிகை மாடமா நகரிக ளெவையு
நிறைத்துத் தேடியுங் காண்கில மெனநிகழ்த் தினரே.

(இ-ள்.) அவ்வாறு நடந்துசென்ற அந்தப்பந்து ஜனங்களானவர்கள் பரற்கற்கள்நிறைந்த காடுகளிடத்திலும் மலைப்பாதைகளிலும் விரல்கள்நுழையாத வனங்களிலும் மற்றுமவ் விடத்திலுள்ள சிறிய நகரங்களிலும் சத்தித்தகடைவீதிகளையும் உப்பரிகைகளையுமுடைய பெருமைபொருந்திய பட்டணங்களெல்லாவற்றிலும் ஒழுங்காகத் தேடிப்பார்த்தும் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் காண்கிலோமென்று திரும்பிவந்து அப்துல்முத்தலி பவர்களுக்குச் சொன்னார்கள். (அ௩)

அகந்த யங்கிமெய் மறந்தெழி லப்துல்முத் தலிபு
வகிர்ந்து பேரொளி திருந்திட விரிந்தகஃ பாவிற்
புகுந்து சுற்றிவந் தடிபணிந் திறைஞ்சிவாய் புதைத்து
நெகிழ்ந்த நெஞ்சினோ டாகுலத் தயருமந் நேரம்.

(இ-ள்.) அச்சொற்களைக் காதுகளினாற் கேள்விபுற்ற அழகிய அப்துல்முத்தலிபவர்கள் மனமானது தயக்கமுற்று உடல்மறந்து பெரிய பிரகாசமானது போழ்ந்து செவ்வையாகும்படி எவ்விடமும் விரிவுற்ற கஃபத்துல்லாவில் நுழைந்து பிரதக்கணஞ்செய்து அங்கிருந்த சுவாமிகளின்முன்னர் வந்து பாதங்களிற் றாழ்ந்து வணங்கி வாயினைக் கைகளால் மறைத்துக்கொண்டு நெகிழ்வுற்ற மனத்துடன் வருத்தத்தினால் தளர்வுறு மந்தச்சமயத்தில். (அச)

தரையில் வானகத் திருந்திறங் கியவொரு சத்தம்
விரைக மழ்ந்திடுங் கஃபத்துல் லாவிற்றென் மேல்பா
னிரைம லர்த்தடத் தோடையின் வாழையி னிழற்கீ
ளரிய மாமறை முகம்மதங் கிருப்பரென் றதிர்ந்தே.

(இ-ள்.) அரிதான பெருமைதங்கிய தவத்தினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வாசனையானது பரிமளியாநிற்கும் கஃபத்துல்லாவின் தென்மேற்குபக்கத்தில் வரிசையாகிய புஷ்பங்கள் நிறைந்த ஒரு தடாகத்தின் ஓடைக்கரையில் நிற்கும் வாழைமரத்தினது நிழலின்தாழே தங்கியிருக்கின்றாரென்று அதிர்ச்சியோடும் ஒருசத்தமானது வானலோகத்திலிருந்து பூமியின்கண் ணிறங்கினது. (அரு)

அந்த ரத்தினின் முழங்கிய மொழிவழி யறிந்து
சிந்தை கூரவத் திசையினிற் சிலருடன் செலும்போழ்
திந்து தன்கலை யெண்ணிரண் டுடனிறைந் திறங்கி
வந்தி ருந்ததொத் திருந்தன ரெழின்முகம் மதுவே.

(இ-ள்.) ஆகாயத்தின்கண்ணிருந்து அவ்வாறு ஒலித்த அந்த அசரீரியான வார்த்தையினது வழியை அப்துல் முத்தலிபவர்கள் உணர்ந்து மனமானது கூரும்படி சிலபேர்களுடன் அந்தத்திசையை நோக்கிச் செல்லுகின்ற சமயத்தில், அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சந்திரனுனது குளிர்ச்சி பொருந்திய தனது பதினறுகலைகளோடும் நிறையப்பெற்று வானலோகத்தி லிருந்து மிறங்கி அவ்விடத்தின்கண் வந்திருந்ததை நிகர்த்திருந்தார்கள்,

கதலி நீழலி லிருந்தொளிர் குரிசிலைக் கண்டென்
மதலை தம்மிரு கண்மணி யேமுகம் மதுவே
யதிரு மைக்கடற் றரளமே யெனவட லரச
ரிதய மீதுறக் களித்துத்தம் மிருகரத்தெடுத்தார்.

(இ ள்.) வெற்றியையுடைய வேந்தரான அப்துல் முத்தலி பவர்கள் அவ்வாறு அந்தவாழைமரத்தினது நிழலின்கண்ணிருந்து பிரகாசியாநிற்கும் பெருமையிற் சிறந்தோரான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்துச் சிந்தையின்மீது பொருந்தும்படிச் சந்தோஷித்து எனதுபுதல்வரான அப்துல்லாவென்பவரின் இரண்டுகண்களிலுமிருக்கும் மணியானவரோ! ஒலிக்கின்ற கரிய நிறத்தையுடைய சமுத்திரத்தின்கண் உற்பத்தியாகும் முத்தானவரே! முகம்மதானவரே! என்று சொல்லிப் புகழ்ந்து தங்களது இரண்டு கைகளினுலும் தூக்கி யெடுத்தார்கள். (அஎ)

அடைய லர்க்கரி யேறெனு மப்துல்மூத் தலிபு
கொடிமி டைந்தசை புரிசைசூழ் நகரினைக் குறுகிக்
கடிம லர்க்குழ லாமினு செழுமலர்க் கரத்தில்
வடிவின் மிக்குயர் முகம்மதைக் கொடுத்தனர் மகிழ்ந்தே.

(இ-ள்.) அவ்வாறு தூக்கியெடுத்த சத்துராதிகளாகிய யானைகளுக்கு ஆண்சிங்கமென்றுசொல்லாநிற்கும் அப்துல்முத்தலிபவர்கள் கொடிகளானவைநெருங்கி அசையாநின்ற மதில்கள் சூழ்ந்த தங்க

எது நகரமாகிய மக்காவையணுகி அழகினால்மிகமேன்மைபெற்ற நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை மகிழ்ச்சியுற்று வாசனைதங்கிய புஷ்பங்களணிந்த கூந்தலையுடைய ஆமினா அவர்களின் செழுமையான தாமரைமலர்போலுங் கைகளிற் கொடுத்தார்கள்.

கண்ணி ருந்தொளிர் மணியெனக் கண்டுகண் களித்துட்
புண்ணிருந்தென விருந்திடுந் துன்பமும் போக்கி
வண்ண வார்குழ லாமினா முகம்மதை வாழ்த்தி
யெண்ண மொன்றுநம் மிடத்திலை யெனச்சிறந் திருந்தார்.

(இ-ள்.) அப்போது அழகுபொருந்திய நெடிய கூந்தலையுடையஆமினா அவர்கள் தங்களின் கண்களிலிருந்து பிரகாசியாநிற்கும் மணியைப்போன்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப்பார்த்து கண்கள் களிப்படைந்து மனசின்கண் புண்ணானது இருந்தார்போல இருந்திடும் வருத்தங்களெல்லாவற்றையு மொழித்து அந்நபிகனாயகத்தை ஆசீர்வதித்து இனி நம்மிடத்தில் யாதொருவிசாரமும் இல்லையென்று சொல்லிச் சங்கையுடனிருந்தார்கள்.

அடர்ந்த செவ்வரிக் கொடிபட ரரிவிழி யலிமா
தொடர்ந்த தம்மனத் திருட்களி வாளினாற் றுணித்து
மடந்தை யாமினா மனையினில் வரமலர்க் கரத்தா
லிடம்பெறத்தழீஇ யிருவரு மொருவரா யிருந்தார்.

(இ-ள்.) அந்தச்சமயத்தில் நெருங்கிய சிவந்த இரேகைக்கொடிகள்படர்ந்த கூர்மையான கண்களையுடைய ஹலிமா அவர்கள் தங்களதுமன சின்கண் பற்றியவியசனமாகிய இருளைச்சந்தோஷமென்னும்வாளினால் அறுத்து மடந்தைப்பருவத்தையுடைய ஆமினா அவர்களினது வீட்டின்கண்வரவே; அவ்வாமினா அவர்களை ஹலிமா அவர்கள் தங்களது தாமரை மலர்போலும் கைகளினால் பெருமை பொருந்தும்படி கட்டியணைத்து இருவர்களும் ஒருவராக ஒன்றுபட்ட வார்த்தைகளுடன் கலந்திருந்தார்கள். (கூ0)

போது லாங்குழ லாமினா வெனுமணிப் பூவைச்
சாதெனுங்குலத் தாரலி மாவுறத் தழுவி
பாதரத்தொடு முகம்மதை யெடுத்துமுத்தாடிச்
சீதவொண்பொழிற் குனைனெனும் பதியினைச் சேர்ந்தார்,

(இ-ள்.) சீரென்றுசொல்லும் குலத்திலுள்ளவர்களான அவ்வலிமா அவர்கள் புஷ்பங்கள் உலாவப்பெற்ற கூந்தலையுடைய ஆமினாவென்று சொல்லும் அழகியகுயிலாகியவர்களை அன்போடுங்கட்டியணைத்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கைகளினால் எடுத்து முத்தமிட்டுக் குளிர்ச்சிபொருந்திய ஒள்ளியசோலைகளையுடைய தங்களது குனையினென்னும் நகரத்தின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (௬௧)

இலாஞ்சனைதரித்தபடலம்

முற்றிற்று.

ஆ படலம் - எ-க்கு கூடிய திருவிருத்தம் - ௬௮௧.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

புனல்விளையாட்டுப்படலம்.

கலிவிருத்தம்.

அலத்தக மலர்ப்பதத் தாமினாவெழிற்
சிலைத்தடப் புயமுகம் மதுமெய்ச் சீர்பெறக்
கலைத்தட மதியென வளர்க் கண்டுறு
நலத்தகு கண்களித் திருக்கு நாளினில்.

(இ-ள்.) செம்பஞ்சூட்டிய தாமரைமலர்போலும் பாதங்களையுடைய ஆமினா அவர்கள் அழகிய மலைபோலும் விசாலமானபுயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் சரீரமானது சிறப்புப்பொருந்தும்படி கிரணங்களையுடையபெருமை தங்கிய சந்திரனைப்போல நாளுக்கு நாள் வளருவதைப்பார்த்து நன்மையான கண்களானவை பொருந்தும்படி களிப்புற் றிருக்கும் நாளினில். (க)

பொறிநிக ராமினு வென்னும் பூங்கொடி
யறிவக முகம்மதைக் கூட்டி யாதிநூ
னெறிதரு மக்கமா நகரை நீங்கியே
செறிவள மதினமா நகரிற் சென்றனர்.

(இ-ள்.) முண்டகாசனையைப்போன்ற ஆமினுவென்று சொல்லும் பூவானியன்ற கொடியானவர்கள் அறிவுதங்கிய அகத்தினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கூட்டிக்கொண்டு யாவற்றிற்கு முதன்மையான அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் வேதசாஸ்திரங்களினது சன்மார்க்கத்தைத் தராநிற்கும் திருமக்கமாநகரத்தைவிட்டும் பிரயாணமாகிச் செல்வமானது நிறையப்பெற்றத் திருமதீனமாநகரத்திற்போய்ச் சேர்ந்தார்கள். (உ)

தன்னுயி ரனையமுன் னவரிற் சார்ந்தவர்
பொன்னடி வணங்கிய பொருவி றங்கையை
யென்னுயி ரென்னுயி ரெனத்தழீ இக்குல
மன்னுயிர் முகம்மதை யெடுத்து வாழ்த்தினர்.

(இ-ள்.) அவ்வாறு போய்ச்சேர்ந்து தங்கள் ஜீவனைப்போன்ற தமையன்மார்களின் வீட்டையடைந்து அவர்களது அழகியபாதங்களிற்றொழுத ஒப்பில்லாததங்கையாகிய ஆமினு அவர்களை அவர்களொவ்வொருவரும் எனதுஜீவன், எனதுஜீவனென்றுசொல்லிக் கட்டியணைத்து தங்களதுகுலத்திற்கெல்லாம் பொருந்திய உயிரானநபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தங்களின்கைகளினால் எடுத்து ஆசீர்வதித்தார்கள். (ங)

பிடிநடை யாமினு பெரிய தந்தைதம்
வடிவுறு மைந்தரு மன்னு சின்னையர்
குடிவளர்த் திடுங்குலக் கொற்ற வேந்தரு
மடிகளென் றஹ்மதி னடியைப் போற்றினர்.

(இ-ள்.) அன்றியும் பெண்யானைபோலும் நடையினையுடைய ஆமினு அவர்களின் அழகுபொருந்திய பெரியதகப்பனு ரவர்களின் புத்திரர்களும் சிறியதகப்பனுரவர்களின் மேன்மைதங்கிய கோத்திரத்தை வளர்க்காநிற்கும் வெற்றியையுடைய அரசர்களான புத்திரர்களும்தங்களது குருவென்றுசொல்லி அஹ்மதென்னுந் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பாதங்களைத்துதித்தார்கள், (ச)

அனநடைச் சின்மொழி யாமினு கிருத்
தனையருந் தம்பிய ரியாருந் தங்குல
மனைமயி லனைவரு மனமகிழ்ச்சியாற்
கனைகட லமுதென நபியைக் காமுற்றார்.

(இ-ள்.) மேலும் அன்னப்பட்சிபோன்ற நடையையும் சிறிய வொலியினது வார்த்தைகளையுமுடைய ஆமினு அவர்களின் அழகிய தமையன்மாரும் தம்பிமாரும் மற்றும்பேர்களும் தங்களது குடும்பத்தாரின் வீட்டின்கண்ணுள்ள மயில்போல்வாராகிய பெண்களனைவரும் உள்ளக்களிப்பினால் சத்திக்காநிற்கும் சமுத்திரத்தின்கண் பிறந்த தேவாமிர்தத்தைப்போலும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை விருப்பமுற்றார்கள். (ரு)

இப்பெரு முவகையுற் றிருப்ப மன்னெறிக்
கொப்பரு மதீனமென் றோது மூரிடைத்
துப்புறழ் மதுரவாய்ச் சிறுவர் சூழ்தர
மைப்புயன் முகம்மதோர் வாவி நண்ணினார்

(இ-ள்.) அப்பந்துக்கள் யாவர்களும் இந்த விதமாகப் பெரிய விருப்பமுற்று இருக்கப் பொருந்திய சன்மார்க்கத்திற்குவேறே ஒப்புச்சொல்லுதற்கரிதான மதீனமென்று சொல்லும் நகரத்தின்கண் பவளம்போலும் இனிமைதங்கிய வாயினையுடைய சிறியபாலியர்கள் தங்களைச் சூழ்ந்து வரும்படி கரியமேகத்தைப்போன்ற குடையினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருதடாகத்தின்கண் போய்ச்சேர்ந்தார்கள். (சா)

பண்ணரு மறைநபி பாரிற் றோன்றியே
நண்ணிய புனல்விளை யாடநாடுநா
ளெண்ணுற வகுத்ததென் றிறங்கி வானதி
மண்ணினிற் குடியிருந் தனைய வாவியே.

(இ-ள்.) அத்தடாகமானது இசைபொருந்திய அரிதான பொறுகானுல் அலீமென்னும் வேதத்தினை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இந்தப்பூலோகத்தின்கண் பிரசன்னமாகிபொருந்தியநீரில் விளையாடும்படி விரும்பும் நாளானது கணக்காக நெருங்கியதென்று சுவர்க்கலோகத்தின்கண்ணுள்ள ஹௌலுல்கௌதரென்னும் ஆறு அங்கிருந்திறங்கி வந்து இப் பூமியின்கண் குடியாக இருந்ததைப்போன்றிருந்தது. (எ)

வடிவிழித் தடமுலே யார்கண் மாமத
னடறரு முசைனயி னுர்தம் மாருயிர்
கடகரி யெனுமபுல் காசிஞ் செல்வம்போ
லிடனறப் பெருகியங் கிருந்த வாவியே.

(இ-ள்.) அன்றியும், அத்தடாகமானது வாளாயுதம் போன்ற கண்களேயும் விசாலமுற்ற ஸ்தனபாரங்களேயுமுடைய பெண்களுக்குப் பெருமைதங்கிய மன்மதனுன வெற்றியைத்தராநிற்கும் உசைன் நயினுரவர்களின்பொருந்திய உயிராகிய மதங்களேயுடை யானேயென்றுசொல்லும் இந்நூற்குக்கொடை நாயகரான அபுல்காசிமரைக்காயரவர்களது செல்வத்தைப்போல அங்கு இடமில்லாது எவ்விடமும் பெருகியிருந்தது. (அ)

சேடுறு முகம்மது செவ்வி வாய்ப்பரீ
ராடுவ திஃதென வாவி யம்புயம்
பாடுறு மாசணு காது பைந்துண
ரேடலர் போர்வைபோர்த் திருந்த தொத்தவே.

(இ-ள்.) அன்றியும், அத்தடாகத்தின்கண்ணுள்ள தாமரைகளானவை பெருமையமைந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் அழகுபொருந்த ஸ்நானஞ்செய்யுங் குளமானது இஃதென்று சொல்லும்படிக் கேடுகளுற்ற யாதொரு குற்றமும் அணுகாது தங்களதுபசுமைதங்கிய மகரந்தங்களேயும் இதழ்களேயுமுடைய புஷ்பங்களென்னும் போர்வையினுல் மூடிக்கொண்டிருந்ததை யொத்திருந்தன. (கூ)

கரைதவழ் தென்றலங் காலி னுல்விரை
சொரிமலர் வாவிநீ ரசைந்து தோன்றுவ
தரிதிரைக் கரங்களிற் சங்க மார்த்திட
விருகரை முத்தெடுத் தெரிதல் போலுமே.

(இ-ள்.) அன்றியும், கரைகளில் தவழாநிற்கும் அழகிய இளம் காற்றினுல் தேனேச்சொரியாநின்ற புஷ்பங்களேயுடைய அத்தடாகத்தின்கண்ணுள்ள ஜலமானது அசைவுற்றுப் பிரகாசிப்பது ஒள்ளிய அலேகளென்னும் கைகளிற் சங்கினங்கள் ஒலிக்கும்படி முத்துக்களே யெடுத்து இருகரைகளிலும் வீசுவதைப்பொன்றிருந்தது. (ய)

தேன்மலர்ச் சண்பகஞ் செறிந்த நீழலும்
பானிறக் கதிர்மணற் பரப்பு மன்னமுஞ்

சூன்முதிர் குடவளைத் தொனியும் வைகிய
கான்மலர் வாவிகண் களிப்ப நோக்கினர்.

(இ-ள்.) அப்போது மதுவானது நிறையப்பெற்ற புஷ்பங்களையுடைய நெருங்கிய சண்பகமரத்தினது நிழல்களும், பாலினதுநிறத்தையொத்தப் பிரகாசம்பொருந்திய மணற்களினது பரப்பும், அன்னப்பக்ஷிகளும், கர்ப்பமானது முற்றிய குடம்போன்ற சங்கினங்களினது ஓசையும்மாறாது குடியிருக்கப்பெற்ற வாசனைசெறிந்த பூக்களையுடைய அந்தத்தடாகத்தை நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இரண்டு கண்களும் மகிழ்ச்சியடையும்படி பார்த்தார்கள்.

மணிமுர சதிரரு மதீன மாநகர்த்
திணிபுய வாசர்கள் செல்வ ரியாவரும்
பணிமணி முகம்மது நிறைந்த பங்கயத்
தணிதிகழ் வாவிநீ ராட லுற்றனர்.

(இ-ள்.) அவ்விதம்பார்த்த இரத்தினபரணங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் நவமணிகளழுத்திய முரசுகளின் ஓசையானது நீங்காத மதீனமா நகரத்தின்கண்ணுள்ள வலிமைதங்கிய புயங்களையுடைய வேந்தர்களின் செல்வர்களான அப்பாலியர்களனைவரும், பெருகிய தாமரைகளின் அழகானது பிரகாசியாநிற்கும் அத்தடாகத்தினது தீர்த்தத்தின்கண் ஸ்நானஞ்செய்ய ஆரம்பித்தார்கள். (கஉ)

நிறைதட மசைதலா னிகரி லாமுத
லிறையவன் றூதர்நம் மிடத்தின் முழ்குறக்
குறைபடா வரியமெய் குளிரு மோவென
நறைபுனல் கலங்கியுண் ணடுங்கல் போன்றதே.

(இ-ள்.) அவ்வாறு ஆரம்பிக்கவே பூரணப்பட்ட அந்தத்தடாகமானது அசைவதினல்யாவற்றிற்கும் ஆதிமன்னவனுன ஒப்பில்லாத அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின் றசூல் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நம்மிடத்தில்குளிக்க அவர்களின் குறைவுபடாத அரியதிருமேனியானது குளிர்ச்சி யடையுமோ? அடையாதோ வென்று அத்தடாகத்தின்கண்ணுள்ள வாசனை பொருந்திய நீரானது மனக்கலக்கமுற்று நடுக்கமடைவதைப்போன்றிருந்தது.

பம்புநீர் வாவிகண் குளிர்ந்திப் பாரிடை
யெம்பெரு மானம திடத்தின் மூழ்கலாற்

செம்பொனு டவர்க்குருச் சீர்பெற் ரேமெனக்
கம்பிற மம்புயக் கரங்கள் காட்டுமே.

(இ-ள்.) நெருங்கிய ஜலத்தினையுடைய அந்தத் தடாகமானது இப்பூலோகத்தினிடத்தில் எங்களது பெருமானான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்மைவர்கள் கண்களானவை குளிர்ச்சி யடையப் பெற்று நமது பால்குளிப்பதினால் நாம் சிவந்த பொன்னுலகத்தையுடையவர்களும் அடையாத சிறப்பையடைந்தோ மென்றுசொல்லித் தனது தாமரைகளாகிய கைகளின் அசைவுகளைக் காட்டினது.

தங்கிய புனலிடை குளிப்பத் தத்துநீ
ரெங்கணுங் கரைதவழ்ந் திழிந்து தோன்றுவ
கங்கைதன் னுள்ளகங் களிப்புற் றுனந்தம்
பொங்கியே யுடற்புறம் பொசிவ போன்றதே.

(இ-ள்.) அன்றியும் அத்தடாகத்தினுள் தங்கிய நீரின்கண் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மூழ்கவே அதனால் எவ்விடத்துங் குதிக்காநிற்கும் அந்நீர் கரைகளில் தவழ்ந்து இழிதலுற்றுப் பிரகாசிப்பது? அத்தடாகமானது தனது மனசின்கண் மகிழ்ச்சியடைந்து சந்தோஷம் பெருகிச்சரீரத்தின்பக்கம் பொசிவதைப் போன்றிருந்தது. (கரு)

வடிவுறு முகம்மது வாவித் தன்புன
லிடைகுளித் துயர்தர விலங்கும் வான்முகம்
படிமிசை யாயிரங் கலைகொள் பான்மதி
கடலிடை முளைத்தெழுங் காட்சி போன்றதே.

(இ-ள்.) அன்றியும் அத்தடாகத்தினது குளிர்ச்சிபொருந்திய நீரின்கண் அழகுதங்கிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மூழ்கி எழும்பவே, பிரகாசிக்கும் அவர்களின் முகமானது ஆயிரங்கிரணங்களைக் கொண்ட வெள்ளிய சந்திரனென்று சமுத்திரத்தின்கண்ணிருந்து வெளிப்பட்டு இப்பூமியின்மீது எழாநிற்குந் தோற்றத்தையொத்திருந்தது. (கசு)

வருந்திமெய் நடுக்கொடு மரைகண் மூழ்குவ
தருந்தவப் பேறெனு மஹ்ம தின்றிருக்
கருந்தடங் கண்முகந் தாள்கைக் கொப்பெனப்
பொருந்துரே மெனவனம் புகுதல் போன்றதே.

(இ-ள்.) அன்றியும் அத் தடாகத்தின் கண்ணுள்ள தாமரைகள் துன்புற்று சரீரநடுக்கத்துடன் அங்குமுழுகுவனவை அரிதானதவத்தினது செல்வமென்று சொல்லாநிற்கும் அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தெய்வீகத்துவம் பொருந்திய கரியநிறத்தை யுடைய விசாலமான கண்களுக்கும் முகத்திற்கும் பாதங்களுக்கும் கைகளுக்கும் நாம்நிகரென்று சொல்லும்படிப் பொருந்த மாட்டோமென்று ஜலத்தின் கண்நுழைந்து கொள்வனவையை யொத்திருந்தன. (கஎ)

அகுமது வாவிநீ ராடல் காண்டலுஞ்
சகமகிழ் தடக்கரைத் தருக்க டேமலர்
வகைவகை சொரிந்தன வெற்றி வானர்
புகழொடும் பொன்மலர் பொழிய போன்றவே.

(இ-ள்.) அன்றியும், இவ்வுலகமானது மகிழாநிற்கும் அஹ்மதென்னும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அத்தடாகத்தினது ஜலத்தின்கண் ஸ்நானஞ்செய்வதை அதின்விசாலம் பொருந்திய கரைகளில் நிற்கும்விருக்ஷங்களானவை பார்த்தமாத்திரத்தில்தங்களது விதவிதமானவாசனை தங்கிய புஷ்பங்களைச் சொரிந்தவைகள் விஜயத்தையுடைய தேவர்கள் கீர்த்தியோடும்சொர்னத்தாலான புஷ்பங்களைச் சொரிந்தவைகளை யொத்திருந்தன. (கஅ)

மதுமலர்த் தேனையுண் டிருந்த வண்டினம்
புதுமணச் சுரும்பொடு மிசைத்த பொங்கிசை
சதுமறை முகம்மது தழைத்து வாழ்கவென்
றதிவிதப் புகழெடுத் தறைத லன்னதே.

(இ-ள்.) அன்றியும், அவ்விடத்திலுள்ள மகரந்தங்களையுடைய புஷ்பங்களினது மதுவையருந்தி யங்கிருந்த வண்டுக்கூட்டங்களானவைதங்களது நூதனமாகிய விவாகத்தையுடைய ஆண்வண்டுகளோடும் பாடியமிகுத்தபாடலானது நான்குவேதங்களையுமுடைய் நபிகள்பெருமான் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தழைப்புற்று வாழ்கவென்று பற்பல விதமான கீர்த்திகளை யெடுத்துப் பாடுவதை யொத்திருந்தது. (கசூ)

பின்னிய தடத்தரு சினையிற் பேட்டொடு
மன்னிய குயிலினம் வாய்விட்டார்ப்பது

கன்னலஞ் சுவைக்கலி மாவை நந்நபிக்
கின்னண மியம்புமென் றிசைத்தல் போலுமே.

(இ-ள்.) அன்றியும், விசாலமான அங்குள்ள சோலையின்கண் ஒன்றோடொன்று பின்னப்பட்ட கிளைகளிலிருந்து பெட்டைக் குயில்களுடன் பொருந்திய ஆண்குயிலினது கூட்டங்கள் தங்களது வாயைத்திறந்து ஒலிப்பது நமதுநாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அழகியகரும்பினது இனிமையையொத்தகலிமாவை உங்களது இனிய வாயினால் ஓதுங்களென்று சொல்வதை யொத்திருந்தது. (உய)

பொன்முடி வேந்தர்கள் புதல்வர் தம்மொடு
மன்னவர் முகம்மதும் வாவி நீர்குளித்
தன்னமென் றூவியி னரிய வெண் டுகின்
மின்னினைப் பொதிந்தென வரையில் வீக்கினர்.

(இ-ள்.) அப்பொழுது சொர்னத்தாலான கிரீடங்களைத்தரித்த அம்மதீனமா நகரத்தின்கண்ணுள்ள அரசர்களது குமாரர்களோடு வேந்தராகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் அத்தடாகத்தினது ஜலத்தில் ஸ்நானஞ்செய்து அன்னப் பட்சியின் மென்மைபொருந்திய சிறகைப் பார்க்கிலும் அரிதான வெள்ளிய வஸ்திரத்தை யெடுத்து வானலோகத்தின்கண் விளங்காநிற்கும் மின்னைமறைத்தாற்போல அரையின்கண் மறைத்துக்கட்டினார்கள்.

கணமணிக் கலன்பல வணிந்து கள்ளறு
மணமலர் மாலிகை சூடி வான்றொடு
பணர்தரு பாசடைத் தருவின் பாலுயிர்த்
துணைவரோ டரியெனத் தோன்றல் வைகினர்.

(இ-ள்.) அவ்விதம்கட்டிய பெருமையிற் சிறந்தோரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் கூட்டமான இரத்தினவருக்கங்களழுத்தப்பட்ட பலவித ஆபரணங்களைத் தரித்து தேனனது நீங்காதவாசனை பொருந்திய புஷ்பங்களை[illegible]டைய மாலைகளைச் சூடி ஆகாயத்தைத் தீண்டாநிற்கும் கிளைகளை[illegible]ாநின்ற பசிய இலைகளையுடைய ஒரு விருக்கத்தினது நிழலின்[illegible] தங்களது ஜீவனைப்போன்ற தோழர்களோடும்ஆண்சிங்கத்[illegible]பகம் பாலத் தங்கியிருந்தார்கள்.

வரிவளைத் தடம்புனை மதின மாநகர்க்
குரியவர் குபிரினி லுறையெ சுன்திக

ளரிதினிற் றடக்கரை யடுத்துப் பூமழை
சொரிதல்கண் டகுமதைச் சூழ்ந்து நோக்கினர்.

(இ-ள்.) அப்போது வரிகள்படர்ந்த சங்கினங்களையுடைய குளங்களைச் சூழ வணியப்பெற்ற அந்த மதீனமாநகரத்திற்குச் சொந்தக்காரரான குபிரில் தங்கியிருக்கும் எகூதிகள் நபிகணாயகமவர்கள் ஸ்நானஞ்செய்த அத்தடாகத்தினதுகரையை மேன்மையோடும்நெருங்கி ஆங்குப்புஷ்பமாரி பொழிவதைப்பார்த்து அஃமதென்னும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை வளைந்து உற்று நோக்கினர்கள். (உ௩)

பாலுறச் செழுங்கதிர் பரப்பி மென்கணைக்
காலுற வளர்ந்தசெங் கரமும் பொன்மலை
போலென வீங்கிய புயமு மாமுகக்
கோலமுங் காட்சியென் றுணர்ந்து கூறினர்.

(இ-ள்.) அவ்வாறுநோக்கிய எகூதிகள் வெண்மைநிறம் பொருந்தச் செழுமையான கிரணங்களை நானுபக்கமும் விரித்து மெல்லிய கணைக்காலில்வந்து பொருந்தும்படி வளர்ச்சியுற்ற சிவந்தகைகளையும், மகாமேருபருவதத்தைப் போன்ற பணைத்த தோள்களையும்; பெருமைதங்கிய முகத்தினது அழகையும் அற்புதமென்று தெரிந்து ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். (உ௪)

மண்ணகத் துதித்தமா னிடன்கொ லோவலால்
விண்ணகத் தமரர்கள் வேந்த னேவென
வெண்ணிப வெண்ணகத் தடங்கி லாவெழி
லண்ணலைப் பார்த்தடுத் தையமுற்றனர்.

(இ-ள்.) அவ்விதம் பேசிக்கொண்ட அந்த எகூதிகள் இப்புருடனானவன் இந்தப் பூமியின்கண் தோன்றிய மானிடர்களி லொருவனோ? அல்லது தேவலோகத்தின் கண்ணுள்ள வானவர்களின் அரசனோ? என்றுசொல்லி அவர்கள் மதித்த மதிப்பானது அவர்களின் சிந்தையினுள் அட[illegible]காது அழகிய பெருமையிற் சிறந்தோரான நபிமுகம்மது சல்லல்[illegible] அலைகிவசல்ல மவர்களை நெருங்கிப் பார்த்து சமுசயமடைந்தா[illegible]. (உ௫)

முத்திரை யொன்[illegible] மூழுது மெய்யினிற்
பத்திவிட் டொளிர்[illegible] பாதம் பாருறச்
சித்திர நிழலுந் தெரி[illegible] காண்குறு
வித்திர நபியெனத் து[illegible]ரிந்தி யற்றினர்.

(இ-ள்.) அங்ஙனம் சமுசயமடைந்த அவர்கள் இவருக்குப் பி டரியின்கண் இலாஞ்சனை யொன்றுள்ளது அஃது சரீர முழுவதி லும் வரிசைவிட்டுப் பிரகாசிக்கின்றது. அன்றியும் பாதங்கள் நிலத் தின்மீது பொருந்தவில்லை அழகிய உடலினது சாயையும் உணரும் படி பார்ப்பதற்குப் பூமியிற் சாரவில்லை. இக் காரணங்களினால் இவர் நபிதானென்று தெளிவடைந்து விதித்தார்கள். (உகூ)

பூரண மதியமே போலப் பின்னைநாட்
டாரணி தனினபி வருவர் சான்றென
வாரணத் துணர்ந்தறிந் தரிஞர் கூறிய
காரணக் குறிப்பிவர் காணுங் காணென்றார்.

(இ-ள்.) அன்றியும், அவர்கள் இவ்வுலகத்தின்கண்பிற்காலத்தில் பூரணச்சந்திரனைப் போல நபியென்று ஒருவர் பிரசன்னமாவார் அவ ருக்கு இக்குறிக ளெல்லாம் சாட்சியென்று முன் வேதங்களில் கற் றுத் தெளிர்ந் துணர்ந்து பண்டிதர்கள் சொல்லிய காரணத்தையுடை ய அடையாளங்கள் முழுவதையும் இங்கு இருக்கப்பட்ட இந்தமனி தனிடத்தில் பாருங்களென்று சொன்னார்கள். (உஎ)

கண்டவர் கேட்டவர்க் குரைப்பக் காதினிற்
கொண்டவர் கருத்தினிற் குறித்து சாவுவ
ரண்டர்நா யகநபி யுண்டென் றுதிநூல்
விண்டது தவறுறு மெய்யென் றோதுவார்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்த எகூதிகள் வினவிய எகூதிகளுக் குக் கூற, அவ் வார்த்தைகளைச் செவிகளில்பெற்றவர்கள்சிந்தையின் கண் குறிப்பிட்டு யோசிப்பார்கள் தேவர்களுக் கெல்லாம்நாயகமான நபியொருவர் உண்டென்று வேதங்கள் சொல்லியவைகள் குற்றப்ப டாது சத்தியந்தா னென்று சொல்லுவார்கள். (உஅ)

தேங்கரு தடத்தரு விடுத்துச் செம்மலு
மாந்தர்கண் களிப்புற மனையிற் புக்கபி
னேங்கெழி லாமினு வினமு மாயமுந்
தாந்தம துளங்களி லெண்ணஞ் சாற்றுவார்.

(இ-ள்.) அப்பொழுது நபிகணாயகம் முகம்மது சல்லல்லாகு அலை சிவசல்ல மவர்களும் மற்றும்சிறுவர்களும் வாசனையைத் தராநின்ற அந்தத் தடாகத்தினது கரையின்கண் ணிருக்கும் விருக்க நிழலை

விட்டும் நீங்கிப்பார்க்கும் மனிதர்களின் கண்களானவை மகிழ்ச்சி ய டையும்படி தங்களது வீட்டின்கண் போய்ப்புகுந்த பின்னர் அழகா னதை சுமக்கப்பெற்ற ஆமினு அவர்களின் பந்துஜனங்களும்மற்றும் தோழிமார்களும் தங்கள் தங்களின் மனசின்கண்ணுள்ளசிந்தனையை ச்சொல்ல ஆரம்பித்தார்கள் (உகூ)

நபியெனு மொருவர்பின் னுளிற் றேன்றியிப்
புவியிடை வருவரென் றேதிப் போந்தவ
ரிவரெனக் குறித்தன ரினியிவ் வூரிடைக்
கவர்மனக் காபிர்கள் கொடியர் காணென்றார்.

(இ-ள்.) முன்னுள்ள பண்டிதர்கள் நபியென்று சொல்லும் ஒரு வர் இப்பூமியின்கண் பிற்காலத்தில் பிரசன்னமாகி வருவாரென்று கூறிப்போன அந்நபி இந்த முகம்மதுதானென்று யாவர்களும் மன சின்கண் குறிப்பிட்டார்கள். ஆதலால் இனிமேல் இந் நகரத்தின்கண் ணுள்ள திருட்டு மனசையுடைய காபிர்கள் கொடுமைதங்கியவர்க ளென்று சொன்னார்கள். (௩ய)

குருத்திறன் முகம்மதைக் குடியிவ் வூரிடை
யிருத்துதல் பழுதுநம் மினத்த ரியாவர்க்கும்
பொருத்தமில் லெனமனம் புழுங்கித் தங்குலத்
திருந்திழை யாமினு வறியச் செப்பினர்.

(இ-ள்.) அன்றியும், இந்தத் திருமதீனமா நகரத்தின்கண் குரு த்துவத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்க ளைக் குடியாக விருத்திவைத்தல் குற்றம் அப்படி இருத்திவைப்பது நமது குடும்ப ஜனங்க ளனைவருக்கும் சம்மதமு :மில்லையென்று மன மானது புழுக்கமுற்று தங்களது கூட்டத்திலுள்ள செவ்வையான ஆபரணங்களையுடைய ஆமினுஅவர்கள் உணரும்படி சொன்னார்கள்.

தம்பியர் தமையர்சொற் கேட்டுத் தம்முளம்
வெம்பியே யாமினு மிகவி சாரமிட்
டம்பினை யடர்ந்தகண் ணுலி சிந்திட
நம்பியை நோக்கித்தம் நகரை நாடினர்.

(இ-ள்.) ஆமினுஅவர்கள் அவ்வாறு தம்பிமாரும் தமையன்மா ரும்சொல்லிய வார்த்தைகளைக்காதுகளினுற் கேள்வியுற்றுத் தங்கள் மனமானதுவாடி அதிகக்கவலைவைத்து அம்பையுந்தமக்கிணையில்லை

யென்றுசொல்லி யடர்ந்த கண்களிலிருந்து மழைபோலும் நீரானது சொரியும்படி புருடரிற் சிறந்தோரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப்பார்த்துத் தங்களது நகரமாகிய மக்காப்பதியை மனசின்கண் விரும்பினார்கள். (கூஉ)

இனத்துளார் தங்கட் மிதயத் துள்ளுயிர்ப்
புனக்கொடி துன்பறப் புந்தி கூர்தர
நினைத்தநன் மொழிபல நிகழ்த்திப் பங்கய
நனைத்தட மக்கமா நகர்க்க னுப்பினர்.

(இ-ள்.) அப்போது பந்துக்க ளனைவரும் தங்களது மனசினுட் பொருந்திய உயிராகிய கொல்லைகளினிற்கும் கொடியான ஆமினு அவர்களுக்கு வருத்தமொழியும்படியாகவும், அறிவானதுமிகுக்கும் படியாகவும், தங்கள் சிந்தையின்கண் எண்ணிய நன்மையானபலவித வார்த்தைகளைச்சொல்லித் தாமரைமலர்களின் தேனையுடைய தடங்கள் சூழ்ந்த திருமக்கமாநகரத்திற்குப் போகும்படி அனுப்பிவைத்தார்கள். (கூகூ)

விட்டொளிர் விளங்குமி னாமி னூநறுங்
கட்டழ ககுமதை நடத்திக்.கள்ளறு
வட்டிலை முள்ளரை வனச வாவியு
நெட்டிலை முளிக்கழைக் காடு நீங்கினர்.

(இ-ள்.) அவ்வாறு அனுப்பவே, பிரகாசத்தைவிட்டு ஒளிராநிற்கும் மின்னைப்போன்ற ஆமினு அவர்கள் வாசனைதங்கிய பெரிய அழகையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நடத்திக்கொண்டுத் தேனானது ஒழியாத வட்டவடிவுபெற்ற இலைகளையும் முள்ளினது அரையையுமுடைய தாமரைத்தடாகங்களையும் நெடிய இலைகளையும்குளசுகளையுமுடையக் கருப்பங்கொல்லைகளையும் கடந்து சென்றார்கள். (கூச)

கொடியிடை யாமினு வென்னுங் கோதையோர்
பிடியென வனமெலாம் பெருக மான்மதக்
கடிகமழ் முகம்மதோர் கன்றம் போலவே
அடவிவிட் டகன்றபு வாவி லாயினர்.

(இ-ள்.) அங்ஙனம்சென்ற கொடியினை நிகர்த்த இடையினையுடைய ஆமினுவென்றுசொல்லும் பூமாலையணிந்தகூந்தலையுடையவர்

ஒப்பற்ற பெண்யானைபோலவும், அவ்விடம் முழுவதும் பெருகும்படி கஸ்தூரிவாசனையானது பரிமளியாநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இணையில்லாத அவ்யானையின் குட்டியைப்போலவும், அக்காட்டைவிட்டும் நீங்கி அபுவாவென்னும் சிற்றூரில்போய்ச் சேர்ந்தார்கள். (ருடு)

கருவிளை வரிவிழிக் கன்னியாமினு
வரியமெய் நடுக்கமுற் றவலித் தேங்கவே
சுரமென வொருபகைதோன்றித் துக்கமுற்
றிரவலர் போற்றனி யிறந்திட்டாரரோ.

(இ-ள்.) ஆங்குபோய்ச்சேறவே, கருவிளைப் புஷ்பம்போலும் இரேகைகள் படர்ந்த கண்களையுடைய ஆமினுஅவர்கள் தங்களின் அரிய சரீரமானது நடுக்கமுற்று வருந்தியழுதிடும்படி சுரமென்ற ஒருசத்துருத் தோன்றித் துன்பமடைந்து ஏகமாய் அகதிகளைப் போல நிரியாணமாயினர்கள். (ருசு)

அரசர்நா யகநபிக்காண்டோ ராறுட
னொருதிருத் திங்களு நிறைந்த தோதிய
வரிதினிற் கணக்கிலக் காக வாண்டுமோ
ரிருபஃ தாமினு விறந்த காலமே.

(இ-ள்.) அவ்வாறு ஆமினுஅவர்கள் நிரியாணமான காலத்தில் அவர்களுக்கு அரிதாகச் சொல்லிய ஒப்பற்ற எண்ணினது மொத்தக் குறிப்பின்வயது இருபது-அப்போது மன்னுதிபரான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அழகிய வயசானவை ஆறுடன் ஒருமாதமும் பூரணப்பட்டன. (ருஎ)

தாயிறத் தலுமனஞ் சலித்துச் சஞ்சலத்
தீயினிற் கிரிமியிற் றிடுக்கிட் டேங்கியே
மாயிரும் புவியிடை தனித்து மன்னுயிர்
போயின தெனநினை வறப்பு லம்பினர்.

(இ-ள்.) நபிமுஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்விதம் தங்களது மாதாவாகிய ஆமினுஅவர்கள் இறந்தமாத்திரத்தில் மனமானது சலனமுற்றுக்கவலையினால் அக்கினியின்கண் ணிட்டபுழுவைப்போலத் திடுக்கமடைந்து அழுது மகத்தான பெரிய இந்தப்பூமியின்கண் ஏகமாய்த் தங்கள் சரீரத்திற் பொருந்திய சீவனனது நீங்கிப்போய்விட்டதென்று சொல்லுமபடி மயக்கத்துடன்கதறினர்கள்.

சிறுகுடி யெனுமபு வாவிற் சேர்ந்தவர்
மறைநபி முகம்மதின் வாட்டந் தேற்றியே
குறைவருக் கற்பெனுங் கோதை மாதினை
யறைமறை முழக்கொடு மெடுத்த டக்கினார்.

(இ-ள்.) அங்ஙனம் கதறவே, சிற்றூரென்று சொல்லும் அந்த அபுவாவின்கண் பொருந்திய மனிதர்கள் வேதத்தினையுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை அவர்களின் மெலிவைவிட்டும் தேறும்படி செய்து குற்றமற்ற கற்பே யுருக்கொண்டதென்னும் பூமாலை யணிந்த கூந்தலை யுடைய பெண்ணாகிய ஆமினா அவர்களை ஓதாநிற்கும் வேதவாசகத்தி னோசையுடன் எடுத்து அடக்கம் பண்ணினார்கள். (௩௯)

ஒலிபுனற் றடத்தபு வாவி லுள்ளவர்
கலியிரு டொந்தசெங் கவிகை வள்ளற
நவிதலைப் போக்கிமக் காவை நாடியே
வலிதினிற் பாசுரம் வரைந்திட் டாரரோ.

(இ-ள்.) அவ்விதம் அடக்கம்பண்ணிய பின்னர் சத்திக்காநிற்கும் ஜலத்தினது குளங்களையுடைய அந்த அபுவாவென்னுஞ் சிற்றூரிலுள்ளவர்கள் வறுமையாகிய அந்தகாரத்தை போட்டிய செவ்விய குடையினையுடைய வள்ளலான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வாட்டத்தையொழித்துத் திருமக்கமா நகரத்தின் கண்ணுள்ள அந்நபிகணயக மவர்களின் பந்துக்களை எண்ணி வலிதினிற் கடிதமொன்று எழுதினார்கள். (௪0)

சிலைநுத லாமினா விறந்த செய்தியின்
மலைவுறு வாசகங் கண்டு வாய்புலர்ந்
தலைகுலைந் தப்துல்முத் தலிபு மன்றுதந்
நிலைதடு மாறியுள் ளறிவு நீங்கினார்.

(இ-ள்.) அங்ஙனம் அனுப்பவே; அப்துல் முத்தலிபவர்கள் விற்போலும் நெற்றியையுடைய ஆமினா அவர்கள் நிரியாணமான சரித்திரத்தை யுடைய அக்கடிதத்தினது மயக்கம் பொருந்திய வாசகத்தை அன்றுவாசித்துப்பார்த்து தங்களது வாயானது உலரப்பெற்று அலைகுலைந்து நிலைமைகுழம்பிச் சிந்தையின்கண்தங்கிய அறிவானதும் அகலப்பெற்றார்கள். (௪௧)

மனத்துலே கவலையை மாற்றித் தம்முயி
ரினத்தவர் சிலர்தமக் கிசைந்த வாசக
மனைத்தையு முரைத்தபு வாவிற் போய்நபி
தனைச்சிறு பொழுதினிற் றருதி ரென்றனர்.

(இ-ள்.) அவ்வாறு அறிவானது அகலப்பெற்ற அப்துல்முத்த லிபவர்கள் பின்னர்த் தெளிவடைந்துத் தங்களது மனசின்கண் வருத்திய சஞ்சலங்க ளெல்லாவற்றையு மொழித்துத் தங்களின் ஜீவனுக்குச் சரியான பந்துக்களிற் சிலபேர்களுக்கு அங்குபொருந்திய வார்த்தைகள் முழுவதையுங் கூறி நீங்கள் அபுவாவென்று சொல்லும் அச்சிற்றூரின்கண் சென்று நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைச் சொற்ப தினத்தினகம் எனதுபால் கொண்டுவந்து தருவீர்களாக வென்று சொன்னார்கள். (சஉ)

வில்லுற விசைத்தெறி சரத்தின் வேகமா
யொல்லையிற் சிலரபு வாவி லோடியே
மல்லுறு புயமுகம் மதுவைக் கண்டுநற்
சொல்லொடுந் தேற்றியுட் டுயர மாற்றினர்.

(இ-ள்.) அவ்விதம் அப்துல்முத் தலிபவர்கள் சொல்லிய அச்சொற்களைக் கேட்ட சிலபேர்கள் கோதண்டத்தில் பொருந்தும்படி வைத்து வேகமுற்று வீசாநின்ற அம்பினது தீவிரத்தைப்போல அதிசீக்கிரத்தில் அந்த அபுவாவென்னும் சிற்றூரின்கண் ஓடிப்போய் வலிமை தங்கிய புயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்து நல்ல மொழிகளுடன் அவர்களைத்தேறும்படி செய்து அவர்களது மனத்தின்கண்ணுள்ள துன்பத்தையும் தணித்தார்கள். (சங)

மதிமுக முகம்மதை மக்க மாநகர்ப்
பதியினிற் கொடுவரப் பார்த்துச் சிந்தைகூர்ந்
ததிசயித் தப்துல்முத் தலிபு மாமலர்
பொதிதரு தடம்புயம் பொருந்தப் புல்லினர்.

(இ-ள்.) அங்ஙனம் தணித்த அம்மனிதர்கள் சந்திரனையொத்த முகத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை மக்கமாநகரமென்றுசொல்லும் பட்டணத்தின்கண் கொண்டுவரப்பார்த்து அப்துல் முத்தலிபவர்கள் தங்கள் மனமானது கூரப்பெற்று

அதிசயித்துப் பெருமைதங்கிய புஷ்பங்களினால் மறைபடும் விசால முற்ற அங்கபிகணாயக மவர்களின் தோள்களைப் பொருந்தும்படி கட்டிஆலிங்சனஞ்செய்தார்கள். (௬௪)

மண்ணினிற் பதமுறு வள்ள றம்மைத்தங்
கண்ணெதிர் விட்டக லாத காட்சியா
யெண்ணியுள் ளகத்தினி லிருத்தி யெங்குலப்
புண்ணிய மிதுகொளென் றுவந்து பூரித்தார்.

(இ-ள்.) அன்றியும் அப்துல் முத்தலிபவர்கள் பூமியின் கண் பொருந்தாத பாதங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தங்களது கண்களின்முன்னர் விட்டுநீங்காத தோற்றமாய் நினைத்து மனசினுள் ளிருக்கச்செய்து இப் பிள்ளையானது எங்கள் கோத்திரத்தினது புண்ணியமென்று சொல்லி விரும்பி மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள் (௬௫)

இலைமலர் கிழிந்துதே னிழிய வாய்மடுத்
தலைகில்வண் டுண்டுபண் ணார்க்குந் தார்புயர்
கலைதெரி ஹபிபுல்லா வென்னுங் காளைதங்
நிலைபெற வாண்டொரே ழாநி றைந்ததே.

(இ-ள்.) அவ்விதம் அவர்கள் மகிழ்ச்சியடையவே இதழ்களையுடைய புஷ்பங்களைப் பிளந்து மதுவானது ஒழுக, அதைக் கணக்கற்ற வண்டுக்கூட்டங்கள் வாய்நிறைத்து அருந்தி இசைபாடாநிற்கும் மலர்மாலையணிந்த புயங்களை யுடையாரான சசலகலைகளு முணர்ந்த ஹபீபுல்லாவென்னும் காரணப் பெயரையுடைய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குநிலைமைபெற ஒப்பில்லாத வயசானது ஏழாகப் பூரணப்பட்டது. (௬௬)

கனைகுரன் மும்மதக் களிற்றின் மத்தகத்
தினையுறக் கீண்டுயிர் குடிக்குஞ் சீயமே
யனையவ ரப்துல்முத் தலிபு தந்திரு
மனையர செனநபி வளரு நாளினில்.

(இ-ள்.) அப்போது ஒலிக்காநின்ற முழக்கத்தினையும் கன்னம் கபோலம் கோசம் என்னுமூன்று மதத்தினையு முடைய யானைகளினது சென்னியைப் பொருந்தும்படி கிழித்து அவற்றின் ஆவியை

அருத்தாநிற்கும் சிங்கத்தைப்போன்றவரான அப்துல் முத்தலிபவர்களின் தெயவீகமுற்ற வீட்டிற்கு வேந்தரென்று சொல்லும்படி நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வளர்ந்து வரும் தினத்தில். (௪௭)

தழையறக் கருகிநீர்த் தடங்கள் வற்றிமெய்க்
குழைவொடு கானலைக் குறித்து நீரென
வுழையின மோடியுள் ளொடுங்கப்பாரிடை
மழையறச் சனமெலா மறுக்க முற்றதே.

(இ-ள்.) இப் பூலோகத்தின்கண் மரமுதலியவைகளின் தளிர்களானவை சூரிய வெப்பத்தினால் முழுதுந்தீய்ந்து சலத்தையுடைய குளங்களெல்லாம் காய்ந்து சரீரவாட்டத்துடன் மான் கூட்டங்கள் சூரிய கிரணத்தை நீரென்று மதிப்பிட்டு ஓடி மனமானது சோரும்படி மழையென்பதறவே இல்லாமற்போக மனிஷியர்க ளனைவரும் மனக்குழப்பமடைந்தார்கள். (௪௮)

புவியிடை மழைபொழி யாத நோவினு
லபுதுல்முத் தலிபெனு மரசர் நாயகர்
நபிதமைக் கூட்டிமுன் னடத்தி யாங்கொரு
தவிசெனு முரம்புறு தலத்தி ருத்தினர்.

(இ-ள்.) அவ்வாறு பூமியின்கண் மழையானது பெய்யாத வருத்தத்தினால் அப்துல் முத்தலிபென்று சொல்லும் வேந்தர்களுக்கெல்லாம் நாயகமானவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கூட்டி முன்னால் நடத்திக்கொண்டுபோய் அவ்விடத்திலிருக்கும் ஒருகற்பாறையானது ஆசனமென்று சொல்லும்படி பொருந்திய தலத்தின்கண் இருக்கும்படி செய்தார்கள். (௪௯)

இருகையு நபிதமை யேந்தச் சொல்லித்தம்
மிருகர நபிதிருக் கரத்தை யேந்தியே
யிருவரு மிரங்கிநின் றிரந்து நோக்கவே
யிருவிசும் பிடைமழை யிறைத்த தேங்குமே.

(இ-ள்.) அங்ஙனம் இருக்கும்படிசெய்து நபிறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தங்களின் இரண்டுகைகளையும் ஏந்தும்படி அப்துல் முத்தலிபவர்கள் கூறித் தங்களது இரண்டு கைகளினாலுமந் நபிநாயகமவர்களின் தெய்வீகம் பொருந்திய கைகளைத் தாங்

கிக்கொண்டு இரண்டுபேர்களும் அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவை நினைத்து உருகி மன்றுடிநின்று மேலேபார்க்கப் பெரியஆகாயத்தின் கண்ணிருந்து மழையானது எவ்விடமும் சொரிந்தது. (ருய)

பாரினிற் பெரும்புனல் பரந்த செல்வமித்
தாருடை முகம்மதின் பறக்கத் தாலென
வூரினிற் றலைவருக் கியம்பி யுண்மகிழ்ந்
தேர்பெறு மப்துல்முத் தலிபிருந்தனர்.

(இ-ள்.) அவ்வாறு எவ்விடமும்சொரியவே அழகுபொருந்திய அப்துல் முத்தலிபவர்கள் இப்பூமியின்கண் பெரிய ஜலமானது பரப்புற்ற இந்தச்செல்வமானது யாருடையது? நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பறக்கத்தா லுடையதென்று அந்தமக்கமா நகரத்திலுள்ள முதன்மையான யாவர்களுக்குங்கூறி அதனல் மனமகிழ்ச்சி யடைந்திருந்தார்கள். (ருக)

நறைபொழி லபசுநன் னாட்டின் சேனையை
அறபிகள் பொருதுவென் றாரென் றோதிய
திறனுறு செய்திகேட் டிதுவுஞ் செவ்விநா
விறைநபி பொருட்டலா திலையென் றோதினர்.

(இ-ள்.) அன்றியும், அறபிகளானவர்கள் வாசனைபொருந்திய சோலைகளையுடைய நன்மைதங்கிய ஹபஷிநாட்டினது படையை அடர்ந்து வெற்றி யடைந்தார்களென்று சொல்லிய வலிமைமிகுந்த சமாசாரத்தை அவ்வப்துல்முத்தலிபவர்கள் காதுகளினற்கேள்வியுற்று இதுவும் அழகிய சாஸ்திரங்களுக்கெல்லாம் தலைவரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காரணத்தினலல்லாமல் வேறேயொன்றினலு மில்லையென்று சொன்னர்கள் (ருஉ)

நபிதிரு வயதிரு நான்குந் திங்களுங்
கவினுற விரண்டுசென் றகற்பின்காணுநாட்
புவியினிற் பத்துறப் பொருந்தும் போதினி
லபுதல்முத் தலிபுமே லுலகடைந்தனர்.

(இ-ள்.) அப்போது நபிமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களுக்கு அழகிய வயசானதுஎட்டும்செம்மைபொருந்தும்படிஇரண்டு மாதங்களும் கழிந்து அதன்பின்னர்பூமியின்கண்பார்க்கக்கூடியதினங்கள் பத்துஉறப் பொருந்துங்காலத்தில் அப்துல் முத்தலிபவர்கள்

நிரியாணமாய் இவ்வுலகைவிட்டும் விண்ணுலகம் போய்ச் சேர்ந்தார் கள். (ருஙு)

விற்கரத் தபுதுல்மூத் தலிபு மேலுல
கிற்புகுந் தாரென வினமு மக்களுங்
கற்புடை மகளிருங் கமல வாண்முகம்
பொற்பறப் புடைத்தழு தேங்கிப் புலம்பினர்.

(இ-ள்.) அவ்வாறு கோதண்டந்தாங்கியகையினையுடைய அப்துல் முத்தலிபவர்கள் தேகவியோகமாய் விண்ணுலகம்போய்ச்சேர்ந்தார்க ளென்று அவர்களின் பந்துஜனங்களும் புத்திரர்களும்கற்புநிலைமை யினையுடைய பெண்களும் தங்களது தாமரைமலர்போலுமொள்ளிய முகங்களின் அழகானது கெடும்படிகைகளினலடித்து இரங்கிஅழுது சத்தித்தார்கள். (ருச)

விதிமறை நூலவர் விருத்த மன்னவ
ரிதமுற வந்தடுத் திரங்கும் பேர்க்கெலா
மதிபல சொல்லியுட் புழுக்க மாற்றியே
யதிவிதத் துடனெடுத் தடக்கி னாரரோ.

(இ-ள்.) அவ்விதம் சத்திக்கவே உண்மைபொருந்தியவேதநூற் களையுடைய பண்டிதர்களும் வயதால்முதிர்ந்த பருவத்தையுடைய அரசர்களும் இனிமை பொருந்தும்படி அவ்விடத்தில்வந்துசேர்ந்து அங்கு அழுகின்ற யாவர்களுக்கும் அனேகமான அறிவுகளைச்சொல் லிஅவர்களின் மனவெப்பத்தைத் தணித்து அப்துல் முத்தலிபவர் களை அதி விதத்தோடு மெடுத் தடக்கஞ்செய்தார்கள். (ருரு)

சடங்குள தெவ்வையுந் துடைத்துத் தங்குல
மடங்கலே றனையவர் கூண்டு மாசிலாத்
தடம்புய முகம்மதை வளர்க்கத் தக்கதோ
ரிடம்பெறு மனத்தவ ரெவரென் றோதினர்.

(இ-ள்.) அன்றியும் தங்களது கோத்திரத்தி லுள்ள சிங்கேற் றைப்போன்ற யாவர்களும் ஒன்று சேர்ந்து அப்துல் முத்தலிபவர் களுக்குச் செய்ய வேண்டும்படி யுள்ளதான கிரியைகள் அனைத்தை யுஞ் செய்து முடித்துக் குற்றமில்லாத பெருமைதங்கிய தோள்களை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை இனி மேல் வளர்ப்பதற்குத் தகுதியான ஒப்பற்ற விசாலம் பொருந்திய மனசை யுடையவர்கள் நம்மில் யாவர்களென்றுகேட்டார்கள் (ருசு)

அம்மொழி கேட்டபீத் தாலி பாகிய
மும்மதக் கரியுயிர் முகம்ம துக்கினி
யெம்மனை யலதுவே றிடமுண் டோவென
செம்மலர்க் கரத்தெடுத் தணைத்துச் சென்றனர்.

(இ-ள்.) அவ்விதம் குடும்பத்தார்கள் கேட்ட அந்தவார்த்தைக ளைக் காதுகளினூற் கேள்வியுற்று அபீத்தாலிபாகிய மும்மதங்களையு டைய யானை யானவர்கள் எமது ஜீவனான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு இனிமேல்எமது வீடல்லாமல் வேறேயி டங்களுண்டுமா? இல்லை என்றுசொல்லி அவர்களைத் தங்களது சிவ ந்த தாமரைப் புஷ்பம்போலும் கைகளினூ லெடுத்து மார்போடு மணைத்துக்கொண்டு தங்கள் வீட்டைநோக்கி நடந்து சென்றூர்கள்.

புனல்விளையாட்டுப் படலம்
முற்றிற்று.

ஆ படலம் - அ - க்கு - திருவிருத்தம்-ருகஅ.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

புகைரூகண்டபடலம்.

கலிநிலைத்துறை.

மலையெ னத்திரட் புயத்தபி தாலிபு மனையி
லலைக டற்புடை வருமுழு மணியகு மதுவு
நிலைநரித்தவெண் கதிர்மதி நிகரென வளர
வுலைவில் செல்வமும் வளர்ந்தன வொன்றுபத் தெனவே.

(இ-ள்.) மலைபோலும் திரட்சியுற்ற தோள்களையுடைய அபீத் தாலிபவர்களது வீட்டின்கண் அலைகளைப்பெற்ற சமுத்திரத்தினூற் பத்தியாகிவராநிற்கும் முழுமையான முத்துப்போன்ற அஹ்மதென்

னுங்திருநாமத்தை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவச ல்ல மவர்களும் மாருத நிலைமை தாங்கிய வெள்ளிய பிரகாசத்தை யுடைய சந்திரனுனது ஒப்பென்று சொல்லும்படி நாளுக்குநாள் வளர்ந்துவரக் கேடில்லாத சம்பத்துகளும் ஒன்றுபத்தாக வளர்ந்து வந்தன. (க)

சலத ரத்தைநேர் கரத்தபித் தாலிபு தம்பாற்
குலவு வீரமுங் கல்வியும் வெற்றியுங் குடியாய்
நலமு றப்புகுந் திருந்தன நாடொறும் வனசத்
திலகு செல்வியு மிவர்மனை முன்றில்வீற் றிருந்தாள்.

(இ-ள்.) அன்றியும், மேகத்தைப் போலும் ஏழைகளுக் கருளா நிற்கும் கையினையுடைய அபீத்தாலி பவர்களிடம் விளங்காநின்ற வலிமையும் அறிவும் விஜயமும் நீங்காது நன்மையானது அதிகரிக் கும்படியாய்ப் பொருந்தி யிருந்தன. மேலும் தாமரை மலரின்கண் பிரகாசியாநின்ற இலக்குமியும் இவர்களது வீட்டின் முற்றத்தில் வீறுடன் பிரதிதினமும் அமர்ந்திருந்தாள் (உ)

சுரபி யின்றிரள் கூன்றொறுத் திரளொடுஞ் சுரந்த
கரிய மேதியின் குலமொரு பெருங்கடல் கடுப்பப்
பெருகி யோங்கின கொறிகளும் பல்கின பிறரும்
பருகப் பாறயிர் குறைவறப் பெரும்பலன் படைத்தார்.

(இ-ள்.) அன்றியும், பசுவினது கூட்டங்கள் கூனையுடைய தொறுவினது கூட்டங்களோடும் நிறைந்தன. கரியநிறத்தையுடைய எருமையினது கூட்டங்கள் ஒப்பற்றபெரிய சமுத்திரத்தைப்போல அதிகரித்து வளர்ந்தன. ஆட்டுக் கூட்டங்களும் பெருகின. பால் தயிர் முதலியவைகள் குறைவில்லாது அன்னியஜனங்களும் வாங்கி க்குடிக்கும்படிப் பெரிதான செல்வத்தைச் சம்பாதித்தார்கள். (ங)

நான மெய்கமழ் வேதநா யகர்நம திடத்தி
லான தாலிவை பெற்றன மெனவக மகிழ்ந்து
வானு லாவுவெண் புகழபித் தாலிபு மன்னர்
தேனுலாம் பொழிற் சாமினிற் செலக்கரு தினரே.

(இ-ள்.) அப்போது ஆகாயத்தின்கண் உலாவாநிற்கும் வெள் ளியகீர்த்தியையுடைய அபீத்தாலிபாகிய அரசரவர்கள்காத்திரத்தி ன்கண் கஸ்தூரி வாசனைகமழாநின்ற வேதநாயகரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நமது பக்கத்திலானதினுல் நாம்

இவ்விதமான செல்வங்க ளனைத்தையும் அடைந்தோமென்று மனம கிழ்ச்சியுற்றுத் தேனுனது உலவப்பெற்ற சோலைகளையுடைய ஷாம் இராச்சியத்திற்குப் போகும்படி சிந்தையின்கண் எண்ணினூர்கள். ()

வெள்ளி வெண்டகட் டொளிர்நிலா வெறித்தமே னிலைக
ணள்ளி ருட்களி சீத்தெறி மக்கமா நகரிற்
கொள்ளும் பற்பல சரக்கெவை யவையெலாங் கொண்டு
தெள்ளி தாகித்தம் புறச்சரக் கறையையுந் திறந்தார்.

(இ-ள்.) அவ்வாறுஎண்ணிய அப்துல் முத்தலிபவர்கள் வெண் ணிறத்தையுடைய வெள்ளியினூற்செய்த தகடுகளினூற் பிரகாசியா நிற்கும் நிலாவைவீசிய மேனிலையையுடைய மாடங்களானவை நெரு ங்கிய அந்தகாரத்தினது செருக்கைச்சீவி யெறியாநின்ற மக்கமாநக ரத்தில் வாங்கவேண்டிய பலபலவிதமான சரக்குகள் எவைகளோ ? அவைக ளெல்லாவற்றையும் தெளிவாய் வாங்கியவையல்லாத மற்றச் சரக்குகளையுடைய தங்களது அரங்குகளையும் திறந்தார்கள். (ரு)

ஏறு வாம்பரி யொட்டையி லெடுத்தெடுத் தேற்றிக்
கூற வல்லவ ரெவரவ ரவர்க்கெலாங்கூறி
யாற டுத்தொரு பொழில்புற விடுதிய தாகி
யூறு தேன்குழன் மனைவியர்க் கிவையெலா முரைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் திறந்து சரக்குக ளெல்லாவற்றையும் எரு துகளிலும் தாவிச் சாடாநிற்கும் குதிரைகளிலும் ஒட்டகங்களிலும் எடுத்தெடுத்துச் சுமத்திப் பின்னர் தங்களின் பிரயாணச் செய்தி யைச் சொல்லுவதற்குத் தகுதியுற்றவர்கள் யாவர்களோ ? அவரவர் களுக்கெல்லாஞ் சொல்லி ஷாமிராச்சியத்திற்குச் சொல்லாநின்ற பாதையை நெருங்கி ஒரு சோலையின்கண் வெளிவிடுதியாயிருந்துத் தேனுனது சுரக்குகின்ற கூந்தலையுடைய தங்கள் நாயகியார்க்கு இச் சமாசாரங்க ளனைத்தையும் சொன்னூர்கள். (சு)

சொன்ன வாசகங் கேட்டலு முகம்மது துணுக்குற்
றென்னை யுங்கொடு ஷாமினுக் கேகுமென் றிசைப்பப்
பொன்னு நன்கதிர் மணியையும் போர்த்தெடுப் பவர்போல்
வன்ன வார்கழற் குரிசிலுக் குறுமொழி வகுத்தார்.

(இ-ள்.) அபீத்தாலிபவர்கள் அவ்வாறு தங்கள் நாயகியார்க்குச் சொல்லிய வார்த்தைகளை அவ்விடத்திலிருந்த நபிமுகம்மது சல்லல்

லாகு அலைகிவசல்லமவர்கள் கேட்டமாத்திரத்தில், அச்சமுற்றுத் தங்களது பெரிய தந்தையாகிய அவர்களைப்பார்த்து என்னையுங்கூட கூட்டிக்கொண்டு ஷாமிராச்சியத்திற்குப் போகுங்களென்றுசொல்ல; அதற்கவர்கள் அழகிய நேர்மையான பாதத்தினையுடைய குரிசிலாகிய அந்நபிகணாயகமவர்களைச் சொர்னத்தையும்நல்ல பிரகாசத்தையுடைய இரத்தினவர்க்கங்களையும்மூடி எடுப்பவர்களைப்போலஎடுத்து அவர்களுக்குப் பொருந்திய சிலவார்த்தைகளைச் சொல்லுவார்கள்.

பாதை போவதும் வருவது மெளிதல பரற்கா
டேத முற்றது சுரத்திடை படுமிடர் கொடிது
காத நான்கினுக் கொருகர நீருறுக் கடுங்கான்
வாதை மிக்குள வருமொழி மறுமென மறுத்தார்.

(இ-ள்.) தூரதேசங்களுக்குள்ள பாதையினது பிரயாணம்செல்லுவதும் சென்றுமீண்டு வருவதும் இலேசான காரியமல்ல. அதிலுமோ நாம்போகிறவழியானது முழுவதும் பரற்கற்கள்நிறைந்த காடு. அன்றியும் துன்பமானது மிகுத்துள்ளது. அங்குசம்பவிக்கும் வனத்தின் கண்படும் துயரமோ கொடியது. நான்குகாதவழி தூரத்திற்காயினும் ஒருசிரங்கைத்தண்ணீர்கிடையாத கொடுமைதங்கிய பாலைநிலத்தினது உபத்திரவம் அதிகமாயுள்ளது. ஆதலால் முகம்மதே நீர் எம்முடன் வருகிறேன் என்றுசொல்லும் வார்த்தையை மறுத்துவிடுமென்று சொல்லி மறுதலித்தார்கள். (அ)

தந்தை சொல்லிய சொல்லினுக் கரிபகட் டரளஞ்
சிந்த நோக்கிய முகம்மது திருமுக நோக்கிப்
புந்தி நேர்ந்தனை தேற்றவுந் தெளிந்திலை புகழோ
யெந்த வாற்றினு நிற்பிரிந் தேகல னென்றார்.

(இ-ள்.) தங்களது பெரியதகப்பனாராகிய அபீத்தாலிபவர்கள் அவ்வாறுவரவேண்டாமென்றுகூறிய வார்த்தைகளுக்காக தங்களின் அரிதானகண்களி லிருந்து முத்தைப்போலும் ஜலமானதுஒலிக்கும்படி ஏறிட்டுப்பார்த்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தெய்வீகம் பொருந்திய முகத்தை அவ்வபீத்தாலிபவர்கள்பார்த்து கீர்த்தியையுடைய எனது புதல்வரே! நீர் என்னுடன் சாமிராச்சியத்திற்குவருவதற்கு உமது அறிவினுலுடன்பட்டீர் நாங்கள் அதற்கு வேண்டாமென்று பலவிதவார்த்தைகளைச்சொல்லித்தேற்றியும்

நீர் உமது சிந்தையானது தெளிந்திரில்லை ஆதலால் எந்த வழியிலா யினும் நான் உம்மை விட்டும் பிரிந்து அவ்வூருக்குப் போகமாட்டே னென்று சொன்னார்கள்: (கூ)

குலத்த டக்கிளைத் தாமரைக் குழுவினி னுப்ப
னலத்து தித்தெழுஞ் செழுமணி நபிகணு யகத்தைச்
சிலைத்த டப்புயர் வருகெனப் பணிபல திருத்தி
யிலைத்த டக்கதிர் வேலெடுத் தினத்துட னெழுந்தார்.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிய மலைபோலும் விசாலமுற்றதோள் களையுடைய அபீத்தாலிபவர்கள் மேன்மை பொருந்திய குளங்க ளில் கூட்டமாகிய தளிர்களை யுடைய தாமரையினது மத்தியில் நன் மை யோடும் பிரசன்னமாகி எழும்பாநிற்கும் செழிய இரத்தினத் தைப் போன்ற நபிகட்கெல்லாம் தலைவரான நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லமவர்களை வருவீராகவென்று சொல்லிப் பலவித ஆபரணக்களைத் தரிக்கும்படி செய்து இலைபோலும்பெருமைதங்கிய பிரகாசத்தை யுடைய வேலாயுதத்தைக் கையினி லெடுத்துக்கொண் டுத் தங்களது பந்துக்களோடும் எழும்பினார்கள். (ய)

பார்த்தி வன்னபூ பக்கரும் பாதையர்பலரு
மேத்து மெய்ப்புகழ் முகம்மதைச் சூழ்தர வியைந்து
மாத்த டக்கரி கூன்றெருச் சுமைதிசை மலியப்
பூத்த தாமரைக் கழனிவிட் டருநெறி புகுந்தார்.

(இ-ள்.) அப்போது அரசராகிய அபூபக்க ரவர்களும் வழியின் கண்சாமி ராச்சியத்திற்குப் போகும்படி ஆங்குவந்த மற்றுய்பேர்க ளும் புகழாநிற்கும் உண்மையான கீர்த்தியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை இசைந்து சூழ்ந்து வரவும், பாரங்களை யுடைய குதிரைகளும் பெருமை பொருந்திய கரிய எரு துகளும் கூனையுடைய தொறுவுகளும் நான்கு பக்கங்களிலும் மிகு தியாக மலிவுற்று வரவும் நடந்து தாமரை மலர்கள் மலர்ந்தவயலி னது நிலங்களைவிட்டும் சாமிராச்கி யத்திற்குச் செல்லும் அரிதான பாதையின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (கக)

காறு நீங்கியே முகம்மது வருவது கண்டு
மாறி லாதசந் தோடமு மொன்பதாம் வயதின்
தேறி லாமனச் சிறுவரென் றெண்ணிய திடுக்கும்
மூறு துன்பமு மின்பமு முடன்வர நடந்தார்.

(இ-ள்.) அப்பொழுது அளவற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வருகின்றதை அபீத்தாலி பவர்கள் பார்த்து மனசின்கண் மாறாதமகிழ்ச்சியும் அதனாற் பெருகும் இன்பமும் தேறாத அகத்தையுடைய ஒன்பதாம் வயசின்பாலியரென்று நினைத்த அச்சமும் அதனாற்பெருகும் துன்பமும் தங்களது கூடவேவரும்படி பாதையின்கண் நடந்துசென்றார்கள். (கஉ)

மடங்க லேறபீத் தாலிபன் றோதிய மன்னர்
கடங்கொண் மும்மதக் கரிதிரி வனத்தையுங் கடந்து
சடங்க முங்கிய சடிலமு மிடபமுஞ் சாய்த்தே
யடங்க லுங்கொடு நடந்தொரு தலத்தினி லானார்

(இ-ள்.) அவ்வாறு சென்ற ஆண்சிங்கம் போலும் அபீத்தாலி பென்றுகூறிய அரசரவர்கள் சுமைகளினால் முங்கப்பெற்ற குதிரைகளையும் எருதுகளையும் சாய்த்து எல்லாவற்றையுங் கொண்டு கூட்டத்தைப்பெற்ற மூன்றுமதங்களையுடைய யானைகள்சஞ்சரிக்காநின்ற காடுமுதலிய பலவிடங்களையுந் தாண்டிநடந்து ஒரு தலத்தின்கண் போய்ச்சேர்ந்தார்கள். (கங)

தக்க தோர்புக ழுவெனுந் தலத்தினைச் சார
மிக்கபேரொளி வெய்யவன் மேற்றிசை சார்ந்தான்
றிக்கெ லாந்துதி செயுமபித் தாலிபுஞ் செறிந்த
வொக்கல் சூழ்தா வின்னுயிர்ப் புதல்வரோ டுறைந்தார்.

(இ-ள்.) அவ்வாறுயாவர்களும் தகுதிபொருந்திய ஒப்பற்ற புகழுவென்றுசொல்லும் இடத்தினிற்போய்ச்சாரவும், மிகுந்த பெரிய பிரகாசத்தையுடைய சூரியனானவன் மேல்திசையிலுள்ள சமுத்திரத்தின்கண் போய்ச்சார்ந்தான். அப்போது எண்டிசைகளும் புகழாநிற்கும் அபீத்தாலிபவர்களும் நெருங்கிய பந்துஜனங்கள் சூழும்படித் தங்களது இனிமையான உயிர்போன்ற புதல்வராகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களோடும் மவ்விடத்தில் தங்கியிருந்தார்கள். (கச)

ஆங்கி ருந்தனர் விடிந்தபி னத்தலத் தொருவ
னோங்கு மும்முறை நூன்பொரு ளனைத்தையு முணர்ந்து
தீங்கி லாதமுக் காலமுந் தெளிந்தறி திறலோன்
றூங்கு மில்லறந் துறவறந் தெரிந்தமா தவத்தோன்,

(இ-ள்.) அவ்விதம் யாவர்களும் அந்தப்புகரூவென்னுந் தலத்தின்கண் அவ்விராமுழுவதுந் தங்கியிருந்தார்கள். சூரியனுதயமான பின்னர் அவ்விடத்தில் ஒருமனிதன் ஓங்காநிற்கும்முன்னுள்ள தௌருத்து சபூர் இஞ்சீலாகிய மூன்றுவேதங்களினதுநுட்பமான அர்த்தங்களெல்லாவற்றையுந்தெரிந்து குற்றமற்றகடந்தன நடப்பன வருவன என்னும் முக்காலங்களையுமுணர்ந்தறிந்த வலிமையையுடையவனும், மானிடர்கள் தங்காநிற்கும் இல்லறம் துறவறமென்னு மிரண்டினது இயல்புகளை அறிந்த மகாதவத்தையுடையவனும். (யரு)

நகையு ராவுறா மெனும்பகுத் தறிவினை நாளும்
வகையு றுநசு றுனிகள் குருக்களின் மதியோன்
புகையு றுவெனும் பெயரின னெத்திசைப் புறத்தும்
பகையு றுதசெம் மலர்முக முகம்மதைப் பார்த்தான்.

(இ-ள்.) நகையுறுத உறாமென்று சொல்லும் பகுதியிலுள்ள அறிவுகளைப் பிரதிதினமும் வகையுற்ற நசுறுனிகளது குருக்களின் மதியையுடைய யவனும், புகைரூவென்னும் பெயரை யுடையவனுமான அவ்வொருவன் எத்திசைப்புறங்களிலும் பகைமை பொருந்தாத சிவந்த தாமரைமலர்போலும் முகத்தையுடைய நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தனது கண்களினாற் பார்த்தான். (கசு)

கண்டு நந்நபி மெய்யெழி லிருமலர்க் கண்ணா
லுண்டு தன்னகங் குளிர்தர வுடலெலாங் களிப்புக்
கொண்டு வீங்கினன் மறையினிற் கண்டதுங் குலத்தோர்
பண்டு சொற்றதுங் கேட்டதுங் கனவினிற் பயனும்.

(இ-ள்.) அவ்வாறு புகைரூவென்னும் அவ்வொருவன்பார்த்து நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் உடலினது அழகைத் தாமரைமலர்போன்ற இரண்டு கண்களினாலுமருந்தித் தனது மனமானது குளிர்ச்சிபெறும்படி சரீரமெல்லாஞ் சந்தோஷங்கொண்டு பருத்தான் அவ்விதம்பருத்தபின்னர் அவன் வேதங்களிற் பார்த்ததையும், அவன் கோத்திரத்தவர்கள் ஆதியில் சொல்லியதையும், அவன் காதுகளினாற் கேள்வியுற்றதையும், அடிக்கடி பார்த்த சொப்பனத்தின் பயனையும். (யஎ)

வாய்ந்த முத்திரைக் குறியுஞ்செங் கரங்களின் வனப்புந்
தோய்ந்து சீறடி படியுறுப் புதுமையுஞ் சுடரால்

வேய்ந்த மெய்யினின் மாசணு காததும் விறலோ
ஞய்ந்து நந்நபி யிவரெனத் திடமுற வறிந்தான்.

(இ-ள்.) நபிறசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சரீரத்தில் பொருந்திய இலாஞ்சனையினது அடையாளத்தையும், சிவந்த கைகளினது அழகையும், சிறிய பாதங்கள் பூமியின்கண் தோயாத புதுமையையும், பிரகாசத்தினல் மூடப்பட்ட திருமேனியின்கண் யாதொரு குற்றமணுகாததையும், வெற்றியையுடைய அவன் ஆராய்ந்து நமது நபி இவர்தானென்று திடமுறும்படி யுணர்ந்தான். ()

அறிந்து ணர்ந்தபண் டிதனபித் தாலிபை யழைத்துச்
சிறந்த வாதனத் திருத்தித்தன் செவ்விதழ் திறந்து
பிறந்த வூர்குல நின்பெய ரிப்பெரும் பெயரோ
டுறைந்த பிள்ளையின் பெயர்தெரி தரவுரையென்ருன்.

(இ-ள்.) அவ்விதந் தெரிந்துணர்ந்த புகைரு வென்னும் அந்தப் பண்டிதன் அபீத்தாலிபவர்களைக் கூப்பிட்டு அலங்காசம்பொருந்திய ஒருதவிசின் மேலிருக்கச்செய்து தனதுசிவந்த அதரங்களை விண்டு நீர்பிறந்த வூரினது பெயரையும் உமதுகுலத்தின் பெயரையும் உம்முடைய பெயரையும் இந்தப்பெரிய கூட்டமாகிய ஜனங்களோடு தங்கியிருக்கின்ற பிள்ளையினது பெயரையும் எனக்குத் தெரியும்படி சொல்லுமென்று கேட்டான். (ககூ)

ஆதி மக்கமூர் கிளையது ஞன்குலத் தாசீ
மோது மியானபித் தாலிபென் பின்னவ னுயிரின்
போதாத்தின னப்துல்லா தருதிருப் புதல்வன்
மாதவன்னிவன் பெயர்முகம் மதுவென வகுத்தார்.

(இ-ள்.) அவ்வாறு அப்பண்டிதன்கேட்ட அபீத்தாலிபவர்கள் எனது ஊர் யாவற்றிற்கும் முதன்மையான மக்கமாநகரம். கிளையில் அதுஞன்கிளை. குலத்தில் ஹாஷிம்குலம். யாவர்களும் கூறுநிற்கும் நான் அபீத்தாலிபு. எனது உயிர்போன்ற தம்பியும் கல்வியில் இரத்தினமுமான அப்துல்லவென்பவர்தந்த தெய்வீகத்துவமுடைய குமாரராகிய மகாதவத்தைக்கொண்டவரான இவரதுபெயர் முகம்மதென்று சொன்ஞர்கள். (உ௰)

பைத்த டப்பணி நெளிதர விண்டுகள் பரப்ப
மொய்த்த வொட்டையு மிடபமு முழக்கொடு நடத்தி

யெத்த லத்தினுக் கேகுவீர் நீவிரென் றியம்ப
வித்த கர்பொழிற் சாமினுக் கெனவிளம் பினரே.

(இ-ள்.) அப்பெழுது படாமகுடத்தினை யுடைய பெருமை பொருந்திய ஆதிசேடன் நெளியவும் தூசிகளானவை ஆகாயத்தில் பரக்கவும், நெருங்கிய ஒட்டகங்களையும் எருதுகளையும் ஓசையுடன் நடாத்திக்கொண்டு நீங்கள் எவ்விடத்திற்குப் போகப்பட்டவர்கள் சொல்லுங்களென்று புகைருவென்னும் அந்தப்பண்டிதன் கேட்க; அறிஞராகிய அபீத்தாலிபவர்கள் சோலைகளையுடைய சாமிராச்சிய த்திற்குப்போகப் பட்டவர்களென்று சொன்னார்கள். (உக)

அரும்பு மென்மலர்த் தொடைதிரட் புயவபீத் தாலிப்
விரும்பிச் சாமினுக் கெழுந்தன யெனவுரை விளம்பத்
தரும்பெருபயன் முகம்மதைச் சடுதியிற் கூட்டித்
திரும்பு நும்மனைச் சென்மென வுரைத்தனன் றிறலோன்.

(இ-ள்.) தேனானது அரும்பாநிற்கும் மெல்லிய புஷ்பமாலையை யணிந்த திரண்டதோள்களையுடைய அபீத்தாலி பவர்கள் அவ்வாறு நாங்கள் சாமிராச்சியத்திற்கு விருப்பமுற்று எழும்பினேமென்ற வார்த்தையைச் சொல்ல, உடனே வலிமையையுடைய அந்தப் பண்டிதனானவன் பெரியபலனைத் தராநின்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கூட்டிக்கொண்டு சீக்கிரத்தில் நீவிரெண்ணிய சாமினுக்குப்போகாது திரும்பும். உமதுவீட்டிற்குப் போகுமென்று சொன்னான். (உஉ)

வெடித்த மென்மலர்த் தேனையுண் டினவெறிச் சுரும்பு
படித்த பாட்டயர் பொழிறிகழ் சாமெனும் பதிக்குப்
பிடித்து நோக்கிய சரக்குட னெமையொரு பேச்சி
லடித்த லம்புக வுரைத்தசொல் லென்னென வறைந்தார்.

(இ-ள்.) அவ்வார்த்தைகளைக் கேட்ட அபீத்தாலி பவர்கள் மலர்ச்சியுற்ற மெல்லிய புஷ்பங்களினது தேனையருந்திமயக்க மடைந்த வண்டுக் கூட்டங்கள் தாங்கள் பழகிய பாட்டுகளைப் பாடாநிற்கும் சோலைகளானவை விளங்காநின்ற சாமென்னும் நகரத்திற்கு ஆகுமான பலவித சரக்குகளையும் பிடித்து அச்சரக்குகளுடன் அந்நகரை நோக்கிவந்த எங்களை ஒருவார்த்தையில் மூலஸ்தான மாகிய

எங்கள் நகரத்திற்குத் திரும்பிப் போகும்படி சொல்லிய காரணம் யாதென்று அப்பண்டிதனிடத்தில் கேட்டார்கள். (உ௩)

வாட்டி றத்தபீத் தாலிபு நடுங்கியுள் வருந்திக்
கேட்ட போதினிற் புகையுறா வெனுமறைக் கிழவோன்
பூட்டும் விற்றடக் கரமுகம் மதுதமைப் புகழ்ந்திந்
நாட்டின் மேல்வருங் காரண மனைத்தையு நவில்வான்.

(இ-ள்.) அவ்வாறு வாளாயுதத்தில் வல்லமைபெற்ற அபீத்தாலிபவர்கள் அச்சமுற்றுமனமானது நொந்துகேட்ட சமயத்தில், புகைறாவென்றுசொல்லும் வேதங்களின் தலைமையான அப்பண்டிதன் சரமுதலிய வற்றைபூட்டாநிற்கும் வில்லினைக்கொண்ட பெருமைபொருந்திய கையினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் துதித்து அவர்களால் இப்பூலோகத்தின் மேல் வருங் காரணங்க ளெல்லாவற்றையுஞ் சொல்லுவான். (உ௪)

ஆதமக்கடந் தலைமுறை யைம்பதின் பின்னர்
சோதி மாநபி வருவரிந் நாளெனத் துணிந்து
பேத மற்றவ ருரைத்ததுங் கண்டதும் பெரியோன்
வேதஞ் சொற்றது மிவராலாற் பிறிதுவே றிலையே.

(இ-ள்.) யாவர்களுக்கும் மூலபிதாவாகிய ஆதமலைகிஸ்ஸலா மவர்களது புதல்வர்களின் ஐம்பதாம் தலைமுறையின் பின்னிக் காலத்தில் பிரகாசத்தையுடைய பெருமை பொருந்திய நபியொருவர் இப்பூலோகத்தின்கண் வருவாரென்று பேதமில்லாது அவர்கள் நிச்சயமாகச் சொன்னதும், அகத்தினது அளவிற் கெட்டாத பெரியவனுன அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் வேதங்கள் சொல்லியதும், நாம் பார்த்ததுமான அந்தநபி இவரேயல்லாமல் வேறே அன்னிய ரொருவருமில்லை. (உ௫)

கொலையெ கூதிகள் வன்னசி ருனியின் குலத்தோ
ரலகில் கூட்டமுன் டப்பெருஞ் சாமினி லடைந்தா
ருலைவி றன்புற வறக்கொடும் வினையொடுந் தொடர்வர்
கலைவ தன்றிரும் மிடர்தவிர்த் திடுவதுங் கடிதே,

(இ-ள்.) ஆதலினல் நீங்கள் அந்தப்பெருமைபொருந்திய ஷாமிராஜியத்தின்கண் போய்ச் சேர்ந்தால் அங்கே கொலைத் தொழிற் புரியாநிற்கும் எகூதிகளும் கொடுமை தங்கிய நசுருனிகளி னினத்

தீவர்களும் கணக்கில்லாத கூட்டமாயுண்டு. அவர்கள் இந்த முகம்மது விஞல் உங்களுக்கு ஒழியாத துன்பமானது பொருந்தும்படி முழுமையான கொடிய செயல்களோடும் உங்களைப் பின்பற்றுவார்கள் அப்படிப் பின்பற்றின போதிலும் அவர்கள்கலேந்து போவார்களே யொழிய உங்களுடைய இடரைத் தவிர்ப்பதும் அவர்களுக்குக் கடினமாகும். (உசு)

நபியு மிங்கிவ ரலதுவே றிலேயிவ ணபிக்குத்
தவிறெ டுத்தெவர் முடித்திட நினைக்கினுஞ் சாரா
நபியு மோமுதி யவரலர் சிறுவரா கையினல்
தவிரும் நும்பதி புகுமென வுரைத்தனன் றவத்தோன்.

(இ-ள்.) மேலும் இப்பூலோகத்தின்கண் நபியும் இவரே யல்லாமல் வேறே யொருவருமில்லே. இவ்விடத்தில் இந்த நபிக்குப்பழுதுகள் எடுத்து முடித்திடும்படி எவர்கள் நினைத்தபோதிலும் அப்பழுதுகள் இவரைப் பொருந்தாது ஆனல் இந்த நபியுமோ முதிர்ந்த பிராயத்தை யுடையவரல்லர். சிறுபிராயத்தை யுடையவர். ஆகையினல் நீர் ஷாம்நகாத்திற்குச் செல்லவேண்டுமென்று நினைத்த எண்ணத்தை மனசை விட்டும் நீக்கிவிடும். உமது ஊரிற்போய்ச் சேருமென்று தவத்தினையுடைய அப்பண்டிதன் சொன்ஞன். (உஎ)

உரைத்த வாசகங் கேட்டபீத் தாலிப்தம் முளத்திற்
பொருத்த மீதெனச் சம்மதித் திருக்குமப் போதிற்
றிருத்து நந்நபிக் குறுபகை விளைத்திடச் சினர்ந்து
நிரைத் தெகூதிகள் வந்தடைந் தனர்சிலர் நெருங்கி.

(இ-ள்.) அவ்வாறு அந்தப் புகையுருவென்னும் பண்டிதன் சொல்லிய வார்த்தைகளெல்லா வற்றையும் அபீத்தாலி பவர்கள் தங்களது காதுகளினுற் கேள்வியுற்று மனசின்கண் இஃதுவே பொருத்தமென்று சொல்லி உடன்பட்டிருக்கும் அந்தக்சமயத்தில், எகூதிகளான சிலபேர்கள் யாவர்களையும் நல்ல சன்மார்க்கத்தில் திருத்தாநிற்கும் நமது பிரான் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களுக்குப் பொருந்திய விரோதத்தை விளைத்திடும்படிக் கோபித்து நெருங்கி வரிசையாக ஆங்குவந்து சேர்ந்தார்கள். (உஅ)

அடர்ந்து வந்துநின் றவர்முகத் குறிப்பையு மவரைத்
தொடர்ந்த மாயவன் சூழ்ச்சியுங் கொடுமனத் துணிவுங்

கடந்த வார்த்தையுங் கண்டுபண் டிதனகங் கறுத்து
ளிடைந்து நோக்கினன் றழற்கதி ரெழுவிரு விழியால்.

(இ-ள்.) பண்டிதனாகிய அந்தப்புகைறா வென்பவன் அவ்வாறு நெருங்கி அங்குவந்து நின்றவர்களாகிய எகூதிகளின் முகத்தினது அடையாளங்களையும், அவர்களைப் பின்பற்றிய வஞ்சகமான கொடிய ஆலோசனையையும், கொடுமைதங்கிய அவர்களின் மனசினது தெளிவையும், எல்லைதாண்டிய வார்த்தைகளையும், பார்த்து வசக்கேடாகிச் சிந்தையினுட்கோபங்கொண்டு இரண்டு கண்களிலு மிருந்து அக்கினியினது சுவாலையானது எழும்பும்படி அவ்வெகூதிகளைப் பார்த்தான் (உகூ)

கடுத்து நோக்கியங் கவருளங் கலங்கக்கட்டுரைக
ளெடுத்து ரைத்துநன் னபிதமை வாழ்த்துமென் றிசைத்து
விடுத்திர் நும்மன நினைவெனக் காபிர்கள் விரைவி
னடுத்த வல்வினைத் துணிவைவிட் டப்புற மகன்றார்.

(இ-ள்.) அவ்வாறு அப்பண்டிதனானவன் அவ்விடத்தில் வந்த அந்த எகூதிகளைக்கோபித்துப்பார்த்து அவர்களின்மனமானது கலங்கும்படி பலவித உறுதியானவார்த்தைகளை எடுத்துக்கூறி உங்களது மனத்தின் கண்ணுள்ள துற்சிந்தனைக ளெல்லாவற்றையும் இப்பொழுதே விட்டுவிடுங்களென்று சொல்லி நன்மை பொருந்திய நபிறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை வாழ்த்துங்களென்று நிகழ்த்த அவ்வெகூதிகள் விரைவினில் தங்களை வந்துநெருங்கிய கொடிய செயலினது திடத்தைவிட்டு மொழிந்து அவ்விடத்தில் நில்லாது மற்ற இடங்களுக்கு நீங்கிச்சென்றார்கள். (௩௰)

ஈதலால்நசு றானிக ளெண்ணிலொன் பதுபேர்
சீதமென்றடம் புனைபுசு றாவினைச் சேர்ந்து
மாதவத்தின் னறப்புறச் சாலையில் வந்து
கோத றப்பணிந் திருகரஞ் சிரத்தினிற் குவித்தார்,

(இ-ள்.) இதல்லாமலும் கணக்கினில் ஒன்பதுபேர் நசுறானிகள் குளிர்ச்சிபொருந்திய மெல்லிய குளங்கள் மிகுத்த புசுறாவென்னும் அத்தலத்தினையடைந்து பெரிய தவத்தினையுடைய புகைறாவென்னும் பண்டிதனது வெளிப்புறத்தி னறச்சாலையினுட் பிரவேசித்து அவனைக் குற்றமறும்படி வணங்கி இரண்டுகைகளையுந் தலையின்மேல் குவித்துக் கும்பிட்டார்கள். (௩க)

வந்து கண்டவர்க் கின்புறு மொழிபல வழங்கி
யெந்த வூருளீ ரெவ்விடத் தேகுவீர் நீரென்
றந்த மிக்குறு பண்டிதன் கேட்டபி னடைந்தோர்
சிந்தை கூர்ந்துதம் வரவினை யெடுத்துரை செய்தார்.

(இ-ள்.) அழகானது மிகப்பொருந்திய பண்டிதனான அந்தப் புகைருவென்பவன் அவ்வாறு அங்குவந்து தன்னைத் தெரிசித்த அவ்வெகூதிகளுக்கு இனிமைபொருந்திய பலவிதமான வார்த்தைகளைக் கூறி நீங்கள் எந்த வூரிலுள்ளவர்கள்? இங்குளவ்விடத்திற்குப் போகப்பட்டவர்கள்? சொல்லுங்களென்று கேட்டதின்பின், அங்கு கடைந்த அவர்கள் தங்களது வருகையினை மனங்கூர்ந்து எடுத்துச் சொன்னார்கள். (௬௨)

அந்த மில்லவன் மும்முறை யுணர்த்திய தழகாய்
நந்த மார்க்கமுஞ் சமயமுங் கெடநமர் நலிய
வந்து தோன்றுவர் நபியென முகம்மதிவ் வருட
மிந்த மாத்தையிற் சாமினுக் கேகுவ ரெனவே.

(இ-ள்.) நம்முடைய மார்க்கமும் வேதங்களும் அழிந்துபோகும்படியாகவும், நமது ஜனங்களெல்லாவரும் மெலிவை யடையும்படியாகவும், அழகாக முகம்மதென்னு மொருவர் நபியென்று சொல்லும்படி இவ்வுலகத்தின்கண் வந்து உதயமாகுவார். அவர் இந்தவருஷம் இந்தமாதத்தில் ஷாமிராச்சியத்திற்குப் போகுவாரென்று முடிவில்லாதவனான அல்லாகு சுகானகுவத்த ஆலாவானவன் பூமியின்கண் இறக்கிவைத்த மூன்று வேதங்களும் அறிவித்தன. (௬௩)

கோதி லாமறை யுரைத்தசொல் லுளத்தினிற் குறித்துச்
சூத மென்பொழில் வளைதரு சாமினைச் சூழ்ந்த
பாதை நான்கினு மொற்றரை யனுப்பியிப் பாதைக்
கேத மின்றிநும் பாலடைந் தோமென விசைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு குற்றமற்ற வேதங்கள் கூறியவார்த்தைகளை மனசின்கண் மதிப்பிட்டு வண்டுகள்பொருந்திய மெல்லியசோலைகள் சூழப்பெற்ற சாம்நகரத்தை வளைந்த நான்கு திக்குகளிலுமுள்ள பாதைகளிலும் சிலதூதர்களை அனுப்பிவிட்டு இந்தப்பாதைக்குநாங்கள் குற்றமில்லாது உங்களிடம்வந்து சேர்ந்தோமென்று சொன்னார்கள்.

வடிவு றும்மறை யுரைத்தகு முளதுமும் மரைக்கு
நெடிய வன்னபி யுதித்திவண் வருவது நிசமே

படிய திர்ந்திட நடந்தலைந் துலைந்துமெய் பதறக்
கடிதிற் றேடியே திரிவதெக் காரணமென்ருன்.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறுசொல்ல, அதைக்கேட்ட புகைரு வென்னும் பண்டிதனனவன் அழகுபொருந்திய வேதங்கள் சொல்லியது முண்மை. மூன்றுவேதங்களுக்கு மெட்டாத நெடியவனன ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இப்பூமியின்கண் உதயமாகி இவ்வழியாக வருவது முண்மை. ஆனல் அவர்களை நீங்கள் பூமியானது அதிரும்படிநடந்து எவ்விடமுஞ் சுற்றி வருந்திச் சரீரமெல்லாம் நடுங்க விரைவாகத் தேடித்திரிவது யாதுகாரணத்தினுல்? அதைச் சொல்லுங்களென்று கேட்டான். (௩௫)

முதிய வேதிய னுரைத்தலும் பகையென முளைத்துப்
புதிய தாய்நபி யெனவரி னவனைவிண் புகுதச்
சதிசெய் வோமென வந்தனஞ் சரதமென் றுரைத்தார்
மதியி லாதறை யிருளினு மிருண்டபுன் மனத்தார்.

(இ-ள்.) முதிர்ந்த வயதையுடைய வேதியனன அந்தப்புகைரு வென்பவன் அவ்வாறு கேட்டமாத்திரத்தில். இந்த அவனியின்கண் ணுள்ளவர்கள் அறையாநிற்கும் அந்தகாரத்தைப் பார்க்கிலும் கறுத்தகிழ்மையானமனத்தையுடைய அந்தஎகூதிகள் நூதனமாய்ப் பகைமையென்றுசொல்லும்படி ஒருவன் இப் பூலோகத்தின்கண் ணுதயமாகி நபியென்று வருவானேயானுல் அவனைநாங்கள் விண்ணுலகடையும்படி சதிசெய்குவோமென்று வந்தோம். இதுசத்தியமென்று புத்தியில்லாது சொன்னுர்கள். (௩௬)

நிறைம திக்கதி ரெனவொரு நபியையிந் நிலத்திற்
குறைவி லாதவன் விதித்தனே நீவிர்நுங் குலத்துக்
கிறைவர் கூடியு மிடர்செயுங் கொடுங்கொலை யிருளான்
மறையு மோமறை யாதென வுரைத்தனன் மறையோன்.

(இ-ள்.) அதைக்கேட்ட வேதியனன அந்தப் புகைரு வென்பவன் அவ் வெகூதிகளைப் பார்த்து பூரணச் சந்திரனது பிரகாசத்தைப்போல ஒரு நபியைக் குற்றமற்றவனன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் இந்தப்பூமியின்கண் சிருஷ்டிப்பானேயானுல் அந்நபியினது பிரகாசமானது நீங்களும் உங்களது கூட்டத்தின் தலைவர்

களும் ஒருங்குசேர்ந்தும் செய்யாநின்ற துன்பத்தை யுடைய கொடுமைதங்கிய கொலையென்னு மந்தகாரத்தினல் மறைபடுமோ? மறைபடாதென்று சொன்னான். (௬எ)

சுடிகை மன்னவர் குலத்துறு தொன்மறை நபிக்குப்
படியி டத்திடர் நினைத்திடி லிம்மையிற் பழியுங்
குடிகு டித்தொறும் வழுவுமலாற்கொடு நரக
முடிவி லெய்துவ ரென்றனன் நீதிநூன் முறையால்.

(இ-ள்.) அன்றியும், மகுடமுடி தாங்கிய அரசர்களினது கோத்திரத்தில் பொருந்தாநிற்கும் பழயவேதங்களையுடைய நபிமார்களுக்கு இந்தப் பூமியின்கண் எவர்களாயினுந் துன்பஞ்செய்ய நினைப்பார்களேயானல் அவர்கள் இவ்வுலகத்தில்பழியும் குடிகுடிதோறும்இழிவும்அடைவதல்லாமல் கடைசியில் கொடிதான நரகத்திற்கும் ஆளாய்ப்போய்ச்சேருவார்களென்று நீதியையுடைய சாஸ்திரங்களினது முறைமையினலெடுத்துச் சொன்னான். (௬அ)

வானர் முன்னினும் பின்னினுஞ் சுற்றியெவ் வழிக்கு
மீன மின்றியே திரிகுவ ரெண்ணிறந் தோர்க
ளான தாலொரு தீங்கிலை நபிக்கென வறைந்தான்
ஞான மூற்றிருந் தொழிகிட மொழிந்தசெங் நாவால்.

(இ-ள்.) அன்றியும், அறிவானது ஊற்ருக இருந்து பாய்ந்திடும்படி சொல்லிய சிவந்த நாவினல் அந்தப் புகைருவென்னும் பண்டிதனனவன் நபிமார்களுக்கு முன்னிலும் பின்னிலும் தேவர்களான மலாயிக்கத்துமார்கள் கணக்கற்றபேர்கள் எப்பாதைகளுக்கும் குற்றமில்லாது வளைந்து திரிவார்கள். ஆதலினல் அவர்களுக்கு யாதொருதீமையு மில்லையென்று சொன்னான். (௬௯)

வச்சி ரத்தினி லெழுதிய வெழுத்தினை மாற்றல்
பச்சை மென்மல ரிதழ்கொடு துடைத்திடும் படிபோல்
செச்சை முங்கிய புயநபிக் குறிகொலை செயவே
யச்ச மின்றிநீர் துணிந்ததென் றறைந்தன னறிவால்.

(இ-ள்.) அன்றியும், வச்சிரத்தினல் தீட்டிய அட்சரத்தைப் போக்குதற்கு பச்சைநிறத்தையுடையமெல்லிய புஷ்பத்தினது இதழைக்கொண்டு துடைத்திடுந் தன்மையைப்போலச் செஞ்சாந்துக்

குழம்பானது மூங்கப்பெற்ற தோள்களையுடைய இந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப்பொருந்திய கொலைசெய்யும்படி நீங்கள் அச்சமில்லாது துணிந்த துணிவென்றுத் தனது புத்தியினாற்கூறினான். (சய)

வேதவேதிய னுரைத்தநன் மொழியெலாம் விரைவிற்
காதினுட்புகுந் தெண்ணிய கருத்தினைக் கலக்கப்
பாத கப்பய னியாம்நினைத் தவையெனப்பயந்து
கோத றத்தெளிந் தார்நசா ருக்கடங் குலத்தோர்.

(இ-ள்.) அறிவினையுடைய, வேதவேதியனான அந்தப் புகைறு வென்பவன் அவ்வாறு சொல்லிய நன்மைபொருந்திய வார்த்தைகளனைத்தும் அந்த நசாருக்களின் கூட்டத்திலுள்ளோர்களான அவ்வெகூதிகளின் செவிகளினகம் நுழைந்து அவர்கள் எண்ணிய எண்ணத்தைக் கலக்க, உடனே அவர்கள் ஒன்பதுபேரும் நாம் கருதியவை பாவத்தைத் தராநின்ற பயனென்று அஞ்சித்தங்கள் உள்ளத்தின்கண்ணுள்ள குற்றமானது அற்றுப்போகும்படி தெளிவையடைந்தார்கள். (சக)

பொருந்து மாதவன் செம்மலர் பொருவுசேவடியில்
விரிந்த செங்கரங் கூட்பியுண் மனவினை வெறுத்துத்
தருந்த வப்பய னும்மொழி யெனவெதிர் சாற்றித்
திருந்து நல்வழி கொண்டன ரவரவர் திசைக்கே.

(இ-ள்.) அவ்வாறு தெளிவடைந்த அந்தஎகூதிகள் பொருந்திய மகாதவத்தினையுடையவனான அந்தப் புகைறுவென்பவனின் செந்தாமரைமலர்போன்ற செவ்விய பாதங்களில் விரிவுற்ற தங்களது செம்மையான கைகளைக் குவித்து மனசினுள் இருந்த துற்செயல்களனைத்தையுந் தள்ளித்தராநிற்கும் தவத்தினது பலனானது உங்களது வார்த்தையென்று பதிலுரைத்து அவரவர் திசைகளுக்குள்ள நல்ல திருந்திய பாதையின்கண்போய்ச் சேர்ந்தார்கள். (சஉ)

முன்னர்மாமறை மூதியவன் சொற்றபின் முறையா
யிந்நி லத்தெகூ திகள்சில ரடைந்தது மிடரா
வன்னி தாநசா ருக்கள்வந் ததுவுமுள் ளகத்தி
லுன்னி னாரபித் தாலிபென் றெழுங்குறு முறவோர்.

(இ-ள்) அப்போது அபித்தாலிபென்னும்சன்மார்க்கம்பொருந்திய அறிவினையுடையவர்கள் ஆதியில்பெருமைதங்கியவேதங்களைக்கற்

றுங்தேர்ந்த முதியவனுன அந்தப்புகைருவென்பவன் அவ்வாறுசொல்லிய பின்னர் இந்தப் பூமியின்கண் தங்கள் பால் இடாராக ஒழுங்காய் எகூதிகளில் சிலபேர்வந்து சேர்ந்ததையும் வன்னிதாக நசுருனிகள் வந்து சேர்ந்ததையும் மனசின்கண் நினைத்தார்கள் (சங)

நன்ன யம்பெறு முகம்மதை மக்கமா நகரிற்
கின்ன ணம்விடுத் துமென்றெழி லபித் தாலிப்
சொன்ன போழ்தினிற் பண்டிதன் முகமதி துலங்கி
யன்ன தேகருத் தாமெனக் களித்தக மகிழ்ந்தான்.

(இ-ள்.) அவ்வாறு நினைத்த அழகிய அபீத்தாலிபவர்கள் நல்ல மேன்மை பொருந்திய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நான் இந்தப்படிபேபெருமைதங்கிய மக்கமாநகரத்திற்கு அனுப்பிவைக்கிறேனென்று சொல்லிய சமயத்தில், பண்டிதனுன அப்புகைருவென்பவன் கேட்டு அதுவே புத்தியாகுமென்று சொல்லித் தனது முகமாகிய சந்திரனுனதுப் பிரகாச முற்றுக்களித்து மனச்சந்தோஷமடைந்தான். (சச)

வருதி ரென்றெழின் முகம்மதைத் தவிசில்வைத்துயர்த்தித்
திரிகை யின்கனி மோதகத் தொடுசில வெடுத்துப்
பரிவி னிற்கொடுத் தணிமல ரடியிடை பணிந்து
பொருவின் மக்கமா நகரினிற் புகுமெனப் புகன்முன்.

(இ-ள்.) அவ்விதம் சந்தோஷமடைந்த அப்புகைருவென்னும் பண்டிதன் அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வருவீராக வென்றுசொல்லி யழைத்து ஒருஆசனத்தின்மேல் இருக்கச்செய்து உயர்த்தியான சில அப்பவர்க்கங்களுடன் முந்திரிகை மாத்தினது கனிகளையும் எடுத்து அன்போடும் அவர்களுக்கு உண்ணும்படிகொடுத்து அவர்களின் அழகிய தாமரைப் புஷ்பம் போலும் பாதங்களிற்ருழ்ந்து நீர் ஒப்பில்லாத மக்கமாநகரத்திற்குத் திரும்பிப் போகுமென்று சொன்னுன். (சரு)

சிலைசு மந்தொளிர் புயத்தபித் தாலிபு செழுங்க
மலைகு டிக்குறு மனையபூ பக்கரை வாழ்த்தி
நலனு றும்படி முகம்மதை மக்கமா நகரிற்
கலைவி னல்வழிக் கொடுசெலு மெனவனுப் பினரே.

(இ-ள்.) அப்பொழுது வில்லைத்தாங்கி யொளிராநிற்குந்தோள்களையுடைய அபீத்தாலிபவர்கள் இலக்குமியானவள் வாசஞ்செய்யாநின்ற செழுமைதங்கிய வீட்டினையுடைய அபூபக்க ரவர்களை ஆசீர்வதித்து மக்கமாநகரத்திற்கு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நன்மை பொருந்தும்படி வருத்தமில்லாத நல்ல பாதைகளோடுங் கூட்டிக்கொண்டு போகுமென்றுசொல்லி அனுப்பிவைத்தார்கள். (சகு)

அன்ன லைச்செழு மக்கமா நகரினுக் கனுப்பி
வன்ன வார்கழ லடலபித் தாலிபு மறையின்
பன்னமைந்தவாய் முதியவற் கிவையெலாம் பகர்ந்து
கன்ன கன்பொழிற் சாமினுக் கெழுந்தனர் கடிதின்.

(இ-ள்.) அழகிய நேர்மையான பாதங்களையுடைய வலிமைதங்கிய அபீத்தாலிபவர்கள் பெருமையிற் சிறந்தோரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை அவ்வாறு செழுமை பொருந்திய திருமக்கமா நகரத்திற்கு அனுப்பிவிட்டு வேதங்களினது இசைகளானவை அமையப்பெற்ற வாயினையுடைய முதியவனான அந்தப் புகைறுவென்பவனுக்கு இச்சமாசாரங்க ளனைத்தையுஞ் சொல்லி விசாலமுற்ற சோலைகளையுடைய சாம்நகரத்திற்குப் பிரயாணமாய் விரைவாக எழும்பினார்கள். (சஎ)

குன்றுங் கானமு மடவியுஞ் சுரங்களுங் குறுகிப்
பொன்றி லாப்புகழ்ச் சாமெனும் பதியிடை புகுந்தே
யொன்று நாலென வாணிபத் தொழின்முடித் தொடுக்கி
வென்றி கொண்டெழுந் தனரது னன்கிளை வேந்தர்.

(இ-ள்.) அவ்வாறுஎழும்பிய அது னன்கிளையினது அரசரான அபீத்தாலிபவர்கள் மலைகளையும் காடுகளையும் சோலைகளையும் பாலைநிலங்களையும் நெருங்கி நடந்துசென்று அழியாத கீர்த்தியையுடைய சாமென்றுசொல்லும் நகரத்தின்கண் நுழைந்து ஒன்றுக்கு நாலென்று சொல்லும்படி வியாபாரத் தொழில்களனைத்தையும் முடிவுசெய்து ஒடுக்கிக்கொண்டு தங்களது நகரமாகிய மக்காப்பதிக்கு வெற்றியுடன் பிரயாணமானார்கள். (சஅ)

எழுந்து சாமெனும் பதியைவிட் டிருஞ்சுரங் கடந்து
பொழிந்த சாரலிற் பொருப்பிட மனைத்தினும் பொங்கி
வழிந்து பாய்தரு மருவியுங் கண்டுள மகிழ்ந்து
செழுந்தடம்பொழின் மக்கமா நகரினைச் சேர்ந்தார்,

(இ-ள்.) அபீத்தாலிபவர்கள் அவ்வாறு அந்தச்சாமென்று சொல்லும் நகரத்தைவிட்டும் பிரயாணமாகிப் பெரிதான பாலைநில ங்களையுடைய காடுகளெல்லா வற்றையுந் தாண்டிப்பெய்தசாரலினல் மலைகளினிட முழுவதும் பொலிவுற்று வழிந்து பாயாநிற்கும் ஆறு களையும்பார்த்து மனக்களிப்படைந்து நடந்துசென்று செழிய தடா கங்களையும் சோலைகளையுமுடைய தங்களது நகரமாகிய பெருமைத ங்கிய மக்காப்பதியைப் போய்ச்சேர்ந்தார்கள். (சுகூ)

அறநெ றிக்குயி ராயபிந் தாலிபு மடுத்தோர்க்
குறுபொ ருட்கொடுத் திரவலர்க் கின்னமு தூட்டி
யிறைய வனன்மறை முதியவர் வேட்டவை யீந்து
மறுவில் வண்புகழ் முகம்மதை யினிதொடும் வளர்த்தார்.

(இ-ள்.) அவ்விதம் போய்ச்சேர்ந்த அபீத்தாலிபவர்கள் தரும த்தினது பாதைகளுக்கு ஜீவனுகத் தங்களை நெருங்கியவர்களுக்கு மிகுத்த திரவியங்களையீந்தும் யாசகர்கட்கு இனிமைபொருந்திய அன்னமுதலியவைகளையுண்பித்தும், இறையவனுன அல்லாகு சுபு கானகுவத்த ஆலாவினது நன்மைபொருந்திய வேதபாராயண முதி யவர்கட்கு அவர்கள் விரும்பியவைகளைக் கொடுத்தும், குற்றமற்ற வளமையான கீர்த்தியையுடைய நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்ல ல்லாகு அலைகிவசல்லமவர்களை இன்பமுடன்வளர்த்து வந்தார்கள்.

கானறைப்பொழில் சூழ்தர சிறந்தமக் காவிற்
றுன வன்னரு டழைத்தெழு முகம்மது தமக்கு
வானர் வந்திரு செம்மல ரடியிணை வருட
வான நல்வய தொருபதி ஞன்குசென் றனவே.

(இ-ள்.) அப்போதுவாசனை பொருந்திய தேனையுடைய சோலை கள்வளைந்த சிறப்புத்தங்கிய மக்கமா நகரத்தில் தானவனுன ஹக்கு சுபுகானகுவத்தஆலாவினது கிருபையானது தழைப்புற்று ஓங்கா நிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு தேவ ர்களாகிய மலாயிக்கத்து மார்கள் ஆகாயத்தின்கண்ணிருந்து இறங் கிவந்து சிவந்ததாமரைப் புஷ்பம்போலு மிரண்டு பாதங்களையுந் தட வக் கூடிய நன்மையுற்ற ஒப்பில்லாத வயசுகளானவை பதினன்கு கழிந்தன. (ருக)

அந்த நாளினின் மக்கமா நகரினை யடுத்து
வந்த தோர்படை கயிசென வரும்பெருங் கூட்டம்

தந்த மில்விடுத் தனைவரு மோரிடஞ் சார்ந்து
சிந்தை நொந்துவன் மறமற வொடுங்கினர் திகைத்தே.

(இ-ள்.) நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கட்கு வயசு பதினான்கு கழிந்த அந்தக் காலத்தில் கயிசெய்து சொல்லும்படிவரும் பெரிய திரளாகிய ஒருசேனையானது மக்கமா நகரத்தைச் சமீபித்து வந்து நெருங்கியது. அதைக்கண்ட அம்மக்கமா நகரத்திலுள்ள அனைவர்களும் பிரமித்து தங்கள் தங்கள் வீட்டை விட்டும் வெளிப்பட்டு ஓரிடத்தில்கூடி மனம்வருந்தி தங்களின் வீரமுழுவது மற்றுப்போகும்படிச் சோர்வடைந்தார்கள். (ருஉ)

கலக்க முற்றவ ரெவரெவ ரெனச்சிலர் கடுத்து
நலக்க முற்றிடப் பொருகுவ மியாமென நவில்வார்
நிலைக்கு மோநிலை யாதுநம் படையென நிகழ்வா
ரலக்க ழிந்தொரு மொழியுரைத் தனரனை வருமே.

(இ-ள்.) அவ்வாறு கூடியவர்களில் சிலபேர்கள் இச்சேனைக்குப் பிரமித்துச் சஞ்சலப் பட்டவர்கள் நம்மில் யாவர்களென்று சொல்லிக்கோபித்து நாமனைவோரும் நல்லபுத்தி யுறும்படி அவர்களோடு எதிர்த்துநின்று யுத்தஞ் செய்குவோமென்று சொல்லுவார்கள். சிலபேர்கள் அச்சேனைக்கு நமது சேனை எதித்துநின்று யுத்தஞ் செய்வதற்கு நிலைபெறுமா? நிலைபெற மாட்டாதே யென்று நிகழ்வார்கள். இவ்வாறாக ஒருவருக்கொருவர் பேசித் துன்பப்பட்டுப் பின்னர் யாவர்களு மொருங்குசேர்ந்து ஒருவார்த்தை சொன்னார்கள். (எவ்விதமெனில்) (ருங)

சந்த மான்மதங் கமழ்புய அப்துல்லா தவத்தால்
வந்த பேரொளி வெற்றிவெம் புலிமுகம் மதுவை
நந்த மூரவ ரினப்படை யுடன்கொடு நடந்தா
லிந்த வல்வினைப் பகையிடர் தவிர்ந்திடு மெனவே.

(இ-ள்.) சந்தனமும் கஸ்தூரியும் பரிமளியாநிற்கும் தோள்களையுடைய அப்துல்லா அவர்களின் தவத்தினால் இவ்வுலகத்தின்கண் தோற்றமாகிவந்த பெரிய பிரகாசத்தையும் விஜயத்தையுமுடைய வெவ்விய புலியான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நமது ஊரவர்களான கூட்டமாகிய சேனையோடும் நாம்கொண்டு யுத்தத்திற்குச் செல்குவோமேயானால் இந்தக்கொடிய செயலையுடைய பகைமையான துன்பம்நீங்கிச் சுகம்பெறுவோமென்று சொன்னார்கள். (ருச)

நன்று நன்றென இபுனுசுத் ஆனுநங் நபிரிந்
துன்று வெம்படைத் தலைவரும் படியுடன் சூழக்
குன்று லாவுகோ ளரிகுலக் குறைஷிக ணடந்து
சென்று தாக்கினர் கைசெனும் படைதெறித் ததுவே.

(இ-ள்.) அவ்வாறு சொன்னவார்த்தைக்கு யாவர்களும் நல்லது நல்லதென்றுசொல்ல இபுனுசுத் ஆனென்பவரும் நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் நெருங்கியகொடிய படைத்தலைவர்களும் தங்களை குதிரைகளுடன் மலைகளில் உலாவித் திரியாநிற்கும் வலிமைதங்கிய சிங்கக்கூட்டத்தைப் போன்ற குறைவிகள் சூழ்ந்துவரும்படி நடந்துசென்று அங்கு எதிர்த்து வந்திருந்த கைசென்று சொல்லும் அந்தச் சேனையை முன்னின்று தாக்கினுர்கள். உடனே அவர்கள் யாவர்களும் இவர்களுக்கு முன் எதிர்த்து யுத்தஞ்செய்யச் சக்தியற்றவர்களாய்த் தெறித்துப் பின் வாங்கினுர்கள். (௫௫)

தருவெ னத்தரு முசைநபி னுர்தரு மதலை
திருவு லாவிய புயத்தபுல் காசிஞ்செங் கரத்தாற்
பொருள்வ ரப்பெறு மவர்கவி யுடைந்தது போல
வெருவி யோடின கைசெனும் படைமிடை மிடைந்தே.

(இ-ள்.) கற்பகத் தருவைப்போலும் அருளாநிற்கும் உசன்நபினுரென்பவர் தந்த புதல்வராகிய திருவானது உலாவாநின்ற தோள்களையுடைய இந்நூற்குக் கொடைநாயகரான அபுல்காசீமரைக்காயரவர்களின் சிவந்தகைகளினுல் திரவியம் வரப்பெறுமவர்களின் வலுமையானது தகர்ந்து ஓடுவதைப்போல அந்தக் கைசெனும் சேனையானது குறைஷிகளுக்கு ஆற்ருது மிகமிடைந்து அஞ்சித்தகர்ந்து ஓடிபது. (௫சு)

மாறு கொண்டகை செனும்படைத் தெறித்திட வயவர்
பேறு கொண்டனம் வெற்றியுங் கொண்டனம் பெரியோன்
வீறு கொண்டநன் முகம்மதின் பொருட்டென வியத்தி
யாறு கொண்டன ரூரடைந் தனரனை வருமே.

(இ-ள்.) விரோதத்தைக்கொண்ட அந்தக் கைசெனுஞ் சேனையானது அவ்வாறு தெறித்து ஓடவே, அம்மக்கமா நகரத்திலுள்ள வீரர்களியாவர்களும் நாம்இன்று பேற்றைப்பெற்ருேம். அன்றியும், ஜெயத்தையும்பெற்ருேம். இதெல்லாம் நாம்பெற்றதற்குக் காரணம்

பெரியவனான அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின்பெருமையடைந்த நன்மைபொருந்திய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பொருட்டினு லென்றுசொல்லி அவர்களைப் புகழ்ந்துப் பாதையையடைந்து மக்கமா நகரத்தைச் சேர்ந்துத் தங்கள்தங்கள் வீடுகளிற் போய்ப்புகுந்தார்கள். (ருஎ)

பண்டு நாட்டொடுத் திற்றைநாள் வரைக்குமப் படையைக்
கண்டு நாமுறிந் தனமலால் வெற்றிகண் டறியோம்
வண்டு வாழ்மலர்த் தொடைப்புய முகம்மது வரலாற்
கொண்ட வெற்றிபோல் வெற்றிவே றிலையெனக் குறித்தார்.

(இ-ள்.) அன்றியும், அந்நாள் தொடுத்து இந்நாள் வரைக்கும் அந்தக்கைசென்னுஞ் சேனையை நாம்பார்த்துத் தோற்றுப்போனேமேயொழிய ஒருதடவையாவது செயத்தைக் கண்டறியமாட்டோம். ஆனால் இப்போது தேனீக்கள் வாசஞ்செய்யாநிற்கும்புஷ்பமாலையையணிந்த புயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வந்ததினால் நாம் அடைந்த ஜெயத்தைப்போல வேறேயொருஜெயமு மில்லையென்று மனசின்கண் குறிப்பிட்டார்கள். (ருஅ)

புகைருகண்ட படலம்

முற்றிற்று.

ஆ படலம் - கூ - க்கு - திருவிருத்தம்—ருங்கூ.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இ ஃ து

பாதைபோந்தபடலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குரைகட லனைய செல்வக் குறைசியின் குலத்து நாப்ப
ணரசிளங் குமர ரான அப்துல்லா வரத்தில் வந்த
முருகவி ழலங்கற் றிண்டோண் முகம்மது தமக்குச் சார்ந்த
திருவய திருபத் தைந்து நிறைந்தன சிறக்க வன்றே.

(இ-ள்.) ஒலியாநிற்கும் சமுத்திரத்தைப்போன்றசம்பத்துகளை யுடைய குறைஷிகளினது கூட்டத்தின்நடுவில் இளவரசுப் பட்டம் பெற்றிருந்த குமாரரான அப்துல்லாஅவர்களின் வரத்தினால் இப்பூலோகத்தின்கண் உதயமாகிவந்தவாசனையானதுகமழப்பெற்ற புஷ்ப மாலையணிந்த திண்ணிய புயங்களையுடைய நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குத் தெய்வீகம்பொருந்திய வயசுகளானவை சிறப்பாக இருபத்தைந்து பூரணப்பட்டன.

பேரறி வெவையுஞ்செம்மை பெருத்தொளிர் வனப்பும்வெற்றி
வீரமுந்திறலு முண்மை விளங்கும்வா சகமுங் கல்விச்
சாரமும் பொறையு மிக்க தருமநற் குணமு மியார்க்கும்
வாரமு முகம்ம தின்பால் வந்தடைந் திருந்த தன்றே.

(இ-ள்.) அப்போது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம வர்களிடத்தில் பெருமைதங்கிய எல்லா அறிவுகளும், செவ்வையானது மிகுத்துப்பிரகாசியாநிற்கும் அழகும், வெற்றியைத் தராநின்ற வீரமும், ஜெயமும், சத்தியம் வியங்குகின்றவாசகமும், கல்வியினது சாரமும், அதிக பொறுமையும், தருமத்தினது நல்ல குணமும், எல்லா மனிதர்களிடத்திலும் கிருபையுமாகிய சகலநற்கருமங்களும் வந்து குடியாகப் பொருந்தியிருந்தன. (உ)

பாரினி லடங்கா விண்ணோர் பன்முறை பெரிதிற் கூண்டு
சீருறை பாத காப்புற் றிருப்பது தெரியக் காணு

ரூாவர் போலுந் தங்கைக் குறுபொரு ளின்மை பெண்ணங்
காருறு கவியை வள்ளற் கருத்தினிற் குருத்த தன்றே.

(இ-ள்.) இப் பூலோகத்தின்கண் அமைந்து நிற்பதற் கிடமற்றுப்போகும்படிப்பெருகிய அளவில்லாதவானவர்கள் பலதடவையும் பெரிதாகக்கூடி மேகக்குடை பொருந்திய வள்ளலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வரிசைதங்கிய சரண காவலடைந்திருப்பதை அவர்கள் அறியமாட்டார்கள். அவ் வித மிருக்குங் காலத்தில் அந்நபிகள் பெருமானவர்களின் கைக்கு மற்றும் அவ்வூரிலுள்ள ஜனங்களின் கைவசம் இருக்கின்ற திரவியத்தைப் போல பொருந்திய திரவியம் இல்லாததினால் அவ்வெண்ணமானது சிந்தையின்கண் தோற்றமாயிற்று. (௩)

அகலிடத் தடங்கா வெற்றி யப்துல்முத் தலிபு பெற்ற
புகழபித் தாலி பென்னும் புரவலர் தம்மை நோக்கித்
துகளணு வணு கா மேனி சொரிகதி ரெறிப்பத் திண்மை
முகமதி னழகு பூத்த வாய்திறந் துரைக்க லுற்றார்.

(இ-ள்.) அவ்விதம் தோற்றமாகவே தூசியானது அணுப்போலும் அணுகாத திருமேனியிலிருந்து சிந்துகின்ற கிரணமானது நான்குபக்கங்களிலும் பிரகாசத்தைச்செய்ய வலிமைதங்கிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இந்தப்பூமியின்கண் அமையாத ஜெகத்தினைக்கொண்ட அப்துல்முத்தலிபவர்கள்பெற்ற கீர்த்தியையுடைய அபீத்தாலிபென்றுசொல்லும் அரசரவர்களின்முகத்தைப்பார்த்துத் தங்களினது அழகுபூத்த வாயினைத்திறந்துசொல்ல ஆரம்பித்தார்கள். (௪)

குடித்தனப் பெருமை சேர்ந்த குலத்தினுக் குயர்ந்த மேன்மை
படித்தலம் புகழுஞ் செங்கோற் பார்த்திவ ராத றேய்ந்து
மிடித்தவர் பெரிய ராதன் மிகுபுகழ் கிடைத்தல் கையிற்
பிடித்திடும் பொருள தன்றிப் பிறிதிலை யுலகத்தன்றே.

(இ-ள்.) இந்தப் பூமியின்கண் இல்வாழ்க்கைக்குப் பெருமையும் தம்மைப் பொருந்திய கோத்திரத்திற்கு உயர்வான மேன்மையும், இப்பூலோக முழுவதும் துதிக்காநிற்கும் செங்கோலையுடைய மன்னராதலும், மெலிவையடைந்து தரித்திரத்தை யனுபவித்தவர்கள் பெரியவர்களாதலும், மிகுதியான கீர்த்திஉண்டாதலும், கையிற்பற்றிடும் பொருளினாலன்றி வேறில்லை. (௫)

ஒருதனி பிறந்து கையி னுறுபொரு ளின்றி யிந்தப்
பெருநிலத் திருந்து வாழ்தல் பேதமை யதனல் வண்மைத்
திருநகர் சாமிற் சென்று செய்தொழின் முடித்து வல்லே
வருகுவன் சிறியே னுந்த மனத்தரு ளறியே னென்ருர்.

(இ-ள்.) அன்றியும் சிறியேனுகிய யான் இந்தப்பெரிய பூமியி ன்மீது ஏகமாய்த் தனியே பிறந்து கையில் பொருந்திய யாதொரு திரவியமுமில்லாமல் இருந்துவாழுவது அறிவீனமாகும். அதனுல் செல்வத்தையுடைய அழகிய சாமிராச்சியத்தில் போய் அங்குசெய் யக்கூடிய யாதாவது ஒருவர்த்தகத் தொழிலைச்செய்து முடித்துக் கொண்டு விரைவினில் மீண்டுவருவேன். அதற்குத் தங்கள் மனத்தி னது கிருபைஎவ்வாறிருக்கின்றதோ? அதையானறிய மாட்டேனெ ன்று சொன்னுர்கள். (௬)

மகனுரைத் தவையுந் தங்கண் மனைவறு மையையு மெண்ணி
யகநினை யறிவு நீங்கி யாகுலக் கடலின் மூழ்கி
வகையுறத் தேறிச் செவ்வி முகம்மதின் வதன நோக்கி
நகுகதிர் முறுவற் செவ்வால் திறந்துபின் னவில லுற்ருர்.

(இ-ள்.) அபீத்தாலிபவர்கள் அவ்வாறு தங்கள் புதல்வர் கூறிய வாசகத்தையுந் தங்களின் வீட்டினது தரித்திரியத்தையும் நினைத்து மனசின்கண் யோசியாநிற்கும் அறிவு மொழிந்துத் துன்பமாகிய சமுத்திரத்தி லாழ்ந்துப் பின்னர் முறைமைபொருந்தும்படி தேறுத லடைந்து அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்க ளின் முகத்தைப்பார்த்து ஒளிர்கின்ற பிரகாசந்தங்கிய பற்களையு டைய சிவந்த வாயினைத் திறந்து சொல்ல ஆரம்பித்தார்கள். (எ)

என்னுயிர்த் துணைவ னீன்ற விளங்கதிர்ப் பருதி யேயிந்
நன்னிலத் தரிய பேறே நங்குடி குலத்துக் கெல்லாம்
பொன்னுநன் மணியு மென்னப் பொருந்துநா யகமே தேறு
வொன்னலர்க் கரியேகேளென் னுளத்தினி லுற்ற தன்றே.

(இ-ள்.) எனது உயிர்போன்ற சகோதரரான அப்துல்லாவென் பவர் பெற்ற இளங்கிரணங்களையுடைய சந்திரனுனவரே! இந்த நன் மைதங்கிய பூமிக்கு அரியபேறுனவரே! நமதுகோத்திரம் கூட்டம் முதலிய யாவற்றிற்கும் நல்லதிரவியமும் இரத்தினமுமென்று சொ

ல்லும்படி பொருந்தாநிற்கும் நாயகமானவரே! தேருத சத்துராதிக ளென்னும் யானைகட்குச் சிங்கமானவரே! நீவிர் என்னுடைய மனசின்கண் பொருந்திய சமாசாரத்தைக் கேட்பீராக. (அ)

மன்றலங் துடைவை சூழ்ந்த மக்கமா நகரில் வாழ்வோன்
றென்றிசை வடக்கு மேற்குக் கிழக்கெனுந் திக்கு நான்கும்
வென்றிகொள் விறலோன்செம்பொன்விழை தொழிலவருக்கெ
குன்றினி லிட்டதீபங்குவைலிது வென்னும்வேந்தன். [ல்லாங்

(இ-ள்.) வாசனைபொருந்திய வழகிய சோலைகள் சூழப்பெற்ற மக்கமாநகரத்தின்கண் வாசஞ்செய்யப்பட்டவன். அன்றியும், தென்றிசை வடதிசை மேற்றிசை கீழ்த்திசை என்றுசொல்லும் நான்கு திசைகளையும் வெற்றிகொள்ளாநிற்கும் வீரத்தையுடையவன். சிவந்ததிரவியத்தை விரும்பிய தொழில்களை யுடையவர்கட்கெல்லாம் மலையின்மேல் வைத்த தீபமானவன். குவைலிது என்று சொல்லும் பெயரினையுடைய மன்னவன். (௬)

இருகரஞ் சேப்பச் செம்பொ னிரவலர்க் கீந்த தாலு
மரியமெய் வருந்த நாளு மருந்தவம் புரிந்த தாலுங்
கருதிய வரத்தி னாலுங் கதிருமிழ்ந் தொழுகும் பைம்பொன்
வரையினின் மணிக்கொம்பென்ன வருமொருமகவையீன்ருன்.

(இ-ள்.) அப்படிப்பட்ட மன்னவனனைவன் யாசகர்கட்கு இரண்டு கைகளும்சிவப்பையடையும்படி சிவந்த திரவியங்களைக் கொடுத்ததினாலும், தனது அரிதான சரீரமானது நோவும்படி என்னாளும் பெரிய தவத்தைச் செய்ததினாலும், தான் கருதிய வரப்பிரசாதத்தினாலும், கிரணங்களை யுமிழ்ந்து ஒழுகாநிற்கும் பசிய பொன்மலையின்கண் இரத்தினக்கொம்பைப்போல வராநின்ற ஒரு புதல்வியைப் பெற்ருன். (௧௦)

தேன்கட லமிர்துந் திக்கிற் றிகழ்வரை யமிர்துஞ் சூழ்ந்த
மீன்கட னடுவிற் றேன்றும் வெண்மதி யமிர்துந் துய்ய
கூன்கட வளையார் வெண்பாற் குரைகட லமிர்துஞ் சோதி
வான்கட லமிர்து மொன்ருய் வடிவெடுத் தனைய பாவை.

(இ-ள்.) அப்புதல்வி சத்தசாகரத்தி லொன்ருகிய தேன்கடலினது அமுதமும், நான்கு திக்குகளிலும் பிரகாசியாநிற்கும் மலைக

ளினது அமுதமும், பூமியைச்சூழ்ந் திருக்காநின்ற மல்சியங்களை யுடைய சாகத்ரதின் நடுவில் உதயமாகாநிற்கும் வெள்ளிய சந்திர னது அமுதமும், பரிசுத்தமான வளைந்த உடலைக்கொண்ட சங்கின ங்களைப்பெற்ற ஒலிதங்கிய வெண்மைநிறத்தையுடைய பாற்கடலி னது அமுதமும், பிரகாசத்தையுடைய ஆகாயக்கங்கையினது அமு தமும், ஒன்றுசேர்ந்து ஒரு வடிவம் எடுத்ததைப்போன்ற பாவை யானவள். (கக)

பைங்கட லுடுத்த பாரிற் பன்மணி வரையிற் றீவிற்
செங்கதிர்க் கனக நாட்டிற் செழுமணி மனைக்கு நாளுந்
தங்கிய சுடரு மொவ்வாத் தனித்தனி யழகுவாய்ந்த
மங்கையர் தமையொப் பென்ன வகுக்கநா வகுத்தி டாதே.

(இ-ள்.) அன்றியும், அப்பெண்ணிற்குப் பசிய சமுத்திரத்தை யாடையாக உடுத்தப்பெற்ற இப்பூமியினிடத்திலும் பல விரத்தின வர்க்கங்களையுடைய மலைகளிடத்திலும் தீவிகளிடத்திலும் சிவந்த பிரகாசத்தைக்கொண்ட பொன்னுலகத்தினிடத்திலும்உள்ளசெழிய இரத்தினங்களை யழுத்திய மனைகளுக்கு எக்காலமும்தங்கியிருக்கும் சுடர்களும் ஒப்பாகமாட்டாத ஒவ்வொரு அவயவங்களுக்கும் பிரத் தியேகம் பிரத்தியேகம் அழகானது பொருந்திய பதிமூன்று வயசு பிராயமுற்ற பெண்களை ஒப்பென்று வகைப்படுத்திச்சொல்ல நினைத் தாலும் நாவானது அவ்விதம் வகுத்துச்சொல்லாது. (கஉ)

குலமெனும்விருக்கந் தோன்றிக்குழூஉக்கிளைப்பணர் விட்டோங்கி
நலனுறு செல்வ மென்னு நறுந்தழை யீன்றுவண்ணச்
சிலைநுதற் பவளச் செவ்வா யனையெனுஞ் செம்பொற்பூவிற்
கலனனி நறவஞ் சிந்துங் கனியினுங் கனிந்த பாவை.

(இ-ள்.) அன்றியும், அப்பெண் கோத்திரமென்னு மரமானது உதையமாகிக் கிளைகளென்னுங் கூட்டமாகிய பணர்களை விட்டுவள ர்ந்து நன்மைபொருந்திய செல்வமென்னும் நறிய தழைகளைப்பெ ற்று அழகிய விற்போன்ற நெற்றியையும் பவளம்போன்ற சிவந்த வாயினையுமுடைய யன்னையென்னும் செம்மையாகிய அழகிய பூவி னது கலனுன மிகுந்த நறவத்தைச் சிந்தாநிற்கும் கனிகளைப் பார்க் கிலும் கனிவுற்ற பாவையானவர். (கங)

இனமெனுஞ் சோலை சூழ்ந்த விகுளைய ரெனும்வா விக்குட்
புனையிழை யணைய ரான பொன்னிதழ்க் கமல நாப்பண்

வனைதரும் பதும ராக மணிமடி யிருந்த செவ்வி
யனமென விளங்கித் தோன்று மணியணிப் பாவை யன்னார்.

(இ-ள்.) அன்றியும், அப்பெண் இனமென்னுஞ் சோலையானது சூழப்பெற்ற தோழிகளென்னுந் தடாகத்தினகம் ஆபரங்களைத் தரித்த அன்னையரான அழகிய இதழ்களையுடைய தாமரைமலரின் மத்தியில் அலங்கரித்த பதுமராக மணியினது மடிமீது தங்கியிருந்த அழகிய அன்னப்பட்சிபோலும் பிரகாசித்துத் தோற்றுநிற்கும் இரத்தினுபரணங்களைத் தரித்த பாவைபோன்றவர். (௧௪)

குரிசிலென் றுயர்ந்த வெற்றிக் குவைலிதன் பரிதிற் பெற்ற
வரிவைதன் னழகு வெள்ளத் தமுதினை யிருகண்ணாரப்
பருகுதற் கிமையாநாட்டம் படைத்திலோ மெனநா டோறுந்
தெரிவைய ருள்ளத் தெண்ணந் தேற்றினுந் தேறு தன்றே.

(இ-ள்.) அன்றியும், பெண்களானவர் பெருமையாற் சிறப்புத்தங்கிய நாயகனென்றுயர்ந்த வெற்றியையுடைய குவைலிதென்பவன் அன்போடும் அரிதாகவீன்ற மகவினது அழகென்னுஞ் சமுத்திராமுதத்தை நமது இரண்டு கண்களாலும் நிறையும்படி குடிப்பதற்கு இமையாத கண்களை சம்பாதித்தோ மில்லையேயென்று தங்களது மனசின்கண்ணுள்ள விசாரத்தை நாள்தோறுந் தேற்றியும் தேறுதலடையாது. (௧௫)

வானகத் தமரராலு மானில மக்க ளாலுங்
கானவ யவத்தின் செவ்வி தனையெடுத் தின்ன தின்ன
தானநன் குவமையென்ன வளவறுத் துரைக்க வொண்ணுத்
தேன்மொழி கதிஜாவென்னுந் திருப்பெயர் தரித்த பாவை.

(இ-ள்.) அன்றியும், அப்பெண் ஆகாயலோகத்தின்கண்ணுள்ள தேவர்களினுலும் பெருமைதங்கி இந்தப்பூமியின் கண்ணுள்ள மானிடர்களாலும் தேகவுறுப்புகளின் அழகையெடுத்து இன்னது அதற்கு நல்லதான உவமை யின்னதென்று வரையறுத்துச் சொல்லமுடியாத தேன்போலும் வார்த்தைகளையுடைய கதீஜாவென்று சொல்லும் அழகிய நாமத்தைப் பூண்ட பாவையானவர். (௧௬)

வருங்கலி வெயிலால் வாடு மானிடப் பயிர்கட்கெல்லாம்
பொருளெனு மாரி சிந்திப் பூவிடத் தினது நோக்கி

யருமறை மலருட் காய்த்த வறிவெனுங் கனியை யுண்ட
திருநமர் குலச்சஞ் சீவி செழுங் கொழுந் தனைய பூவை

(இ-ள்.) அன்றியும், அப்பெண் இப்பூமியின்கண்வராநின்ற தாரி த்திரியமென்னும் வெயிலினால் வாடாநிற்கும் மானுஷிகராகிய பயிர் களெல்லா வற்றிற்கும் பொன்னென்னும் மழையைப் பொழிந்து ஆரியவேதங்க ளென்னும் புஷ்பத்தை இனிதோடும் ஆராய்ச்சி செய்து அதினகம் காய்க்கப்பெற்ற அறிவென்னும் பழத்தை யருந் திய இலக்குமி யானவர். நம்மவர்களின் கூட்டத்திற்குச் சஞ்சீவி யானவர். செழுமைதங்கிய மருக்கொழுந்தைப்போன்றகிளியானவர்.

வணக்கமு மறிவுஞ் சேர்ந்த மனத்துறும் பொறையு நல்லோ
ரிணக்கமும் வறியோர்க் கீயு மிரக்கமு நிறைந்த கற்புங்
குணக்கலை வல்லோ ராலுங் குறித்தெடுத் தவட்கொப் பாகப்
பணக்கடுப் பாந்தட் பாரிற் பகருதற் கரிய வன்றே.

(இ-ள்.) அன்றியும், தெய்வ வழிபாட்டிலும் பொருந்திய அறி விலும் மனசின்கண் தங்கிப் பொறுமையிலும் நல்ல மனிதர்களின் சினேகத்திலும் யாதுமற்ற எளிவர்கட்குக் கொடுக்கும் தயவிலும் பூரணமான கற்பிலும் அந்தக் கதீஜாவென்னும் திருநாமத்தையு டைய பெண்ணுக் குவமையாகப் படாமுடிகளையும் விஷத்தினையுமு டைய ஆதிசேடனாற்றாங் கப்பட்ட இந்தப்பூலோகத்தின்கண் குண முற்ற சாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்தவல்லவர்களாலும் மதிப்பிட்டு எடுத்துச் சொல்லுதற்கு அரிதாகும். (கஅ)

மின்னென வொளிமருத விளங்கிழை கதீஜா வென்ன
மன்னிய பொருளின் செல்வி மனையகத் தினிது டோறு
மின்னணி நகர மாக்க ளியாவரு மினிது கூறப்
பொன்னணி வாங்கித்தேச வாணிபம் பொருந்தச் சொய்வார்.

(இ-ள்.) யாவர்களும் இன்பமாகச் சொல்லும் வண்ணம் இந்த அழகிய மக்கமா நகரத்திலுள்ள மனுஷியர்கள் மின்னைப்போலும் பிரகாசமானதுநீங்காத ஒளிர்கின்ற ஆபரணங்களையுடைய அக்கதீ ஜாவென்று சொல்லும் பொருந்திய சம்பத்துக்களைப் பெற்ற செல் வத்தையுடைய வரது வீட்டின்கண் பிரதிதினமும் சென்று திரவி யங்களை மிகவாகவாங்கி மற்றும் தேசங்களுக் கிசைந்த கச்சவடத் தொழில்களைப் பொருந்தும்படி செய்வார்கள். (கக)

கலைத்தடக் கடலே யெந்தங் கண்ணிரு மணியே யாமு
மலைத்தடக் கடற்கட் பாவை யணிமனை யடுத்துச் செம்பொ
னிலைத்திட நினைத்து வாங்கி நெறிநெடுந் தூரமெல்லாந்
தொலைத்திவண் புகுவம்வல்ல தொழின்முடித் திடுவமென்றே.

(இ-ள்.) ஆகலினால் பெருமை பொருந்திய சாஸ்திரங்களின் சமுத்திரமானவரே! எமது இரண்டு கண்களிலு மிருக்கின்ற மணியானவரே! நாமும் நிலைபெறும்படி யோசித்து அலைகளைப்பெற்ற பெரிய கடற்போலுங் கண்களையுடைய பாவையான அந்தக் கதீஜா வென்பவரின் அழகிய வீட்டில் நெருங்கிச் சிவந்த திரவியத்தைவாங்கி நீண்டபாதைகளையுடைய தூரதேசங்களை யெல்லாந் தொலைத்துத் திரும்பி இங்குவந்து சேருவோம் வலிமையான தொழில்களை முடித்திடுவோமென்ன. (௨௦)

தீனகக் குளந்த டாகந் திசைதொறு நிறைந்து தேக்க
வானதிப் பெருக்கை யொப்ப வருமுகம் மதுவை நோக்கித்
தூநகை முறுவல் வாயின் டுரைத்தனர் சொன்ன மாரி
யானென வுதவுஞ் செங்கை யருளெனுங் கடலினாரே.

(இ-ள்.) தீனாகிய அகக்குளங்களும் தடாகங்களும் திசைகளெல்லாவற்றிலும் நிறைவுற்றுத் தியங்கும்படி வராநிற்கும் பரிசுத்தமான ஆற்றினது பெருக்கைப் போன்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப்பார்த்துத் துய்தான பிரகாசந்தங்கிய பற்களையுடைய வாயினைத்திறந்து சொர்ன மாரியானது நானென்று கொடுக்காநிற்கும் சிவந்தகையினையுடைய கிருபை யென்னும் சமுத்திரமாகிய அபித்தாலி பவர்கள் சொன்னார்கள். (௨௧)

தரைத்தலம் புகழும் வெற்றித் தடப்புயத் தபித்தா லிபு
முரைத்தவை யனைத்துந் தேர்ந்து முகம்மது முளத்தி னூடு
வருத்தமுஞ் சிறிது நேர மகிழ்ச்சியுந் தொடர்ந்து தோன்றக்
கருத்தினி லிருத்தித் தாதை கழறல்சம் மதித்திருந்தார்.

(இ-ள்) நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் இப்பூமியெங்கும் புகழாநின்ற வெற்றிதங்கிய பெரிய தோள்களையுடைய அபித்தாலிபவர்கள் அவ்விதம் சொல்லியவை முழுவதையுந் தெளிந்து மனசினகம் கொஞ்சநேரம் துன்பமும் கொஞ்சநேரம் சந்தோஷமும் தொடர்ச்சியா யுண்டாகத் தங்களது பெரிய தந்தையாரான அவர்களின் வாசகத்தைச் சிந்தையின்கண் இருக்கும்படிசெய்து சம்மதித் திருந்தார்கள். (௨௨)

குங்குமத் தடந்தோள் வள்ளல் குறித்திடுங் கருத்தி னூடு
செங்கயல் வரிக்கட் செவ்வாய்த் திருந்திழை கதிஜா வென்னு
மங்கைதம் பெயருஞ் சித்ர வடிவுநின் றுலவ மாறாப்
பொங்கறி வதனுன் மூடிப் புந்தியின் மறைப்ப தானூர்.

(இ-ள்.) அவ்வாறு சம்மதித்திருந்தகுங்குமமாலையணிந்த மலை போலும் புயங்களையுடைய வரையாது கொடுக்கும் வள்ளலான நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் குறித்திடுங் கருத்தினது மத்தியில் சிவந்த கெண்டை மீன்போலும் இரேகைகள் படர்ந்த கண்களையும் செய்மைதங்கிய வாயினையும் திருந்திய ஆபரணங்களையுமுடைய கதிஜாவென்று சொல்லும் மங்கையானவரின் நாமமும் அழகிய சொருபமும் நின்று உலாவ, அவையை மாறாத தங்களது மிகுத்த அறிவினுல் மூடிப் புத்தியின்கண் மறைவு செய்ய ஆரம்பித்தார்கள். (உரு)

மம்மறை மனத்துள் ளாக்கி முகம்மது கதிஜாவென்னும்
பெய்ம்மலர்க்கொம்பே யன்ன பெண்மனைக்கடையிற் சாரு
மம்மறு கிடத்திற் போக்கும் வரத்தும தாகிவாசச்
செம்மலர்ச் சுவடு தோன்றாத் திருவடி நடத்தல் செய்தார்.

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தாங்கள் கொண்ட மயக்கத்தை மனசின்கண் ஆக்கிக் கதீஜாவென்றுசொல்லும் புஷ்பங்களைச் சொரியாநின்ற கொம்பைப்போலும் பெண்ணானவரின் புறவாயலிற் பொருந்தும் அழகிய வீதியினிடத்துப் போக்கும் வரத்துமாய் வாசனைதங்கிய சிவந்த தாமரை மலர்போலும் அழகிய பாதங்களின் சுவடானது பூமியின்கண் தோன்றாது நடத்தலைச் செல்தார்கள். (உசு)

இப்படி நிகழ்கா லத்தோ ரிளவன்மா மறைக்கு வல்லான்
மைப்படி கவிகை வள்ளல் வனப்பிலக் கணமுநீண்ட
கைப்படு குறியுஞ் சேர்ந்த கதிர்மதி முகமு நோக்கிச்
செப்பிடற் கரிய வோகைத் திருக்கட லாடினூனே.

(இ ள்.) இந்தவிதமாக நடக்கின்ற காலத்தில் ஒரு இளம்பிராயத்தையிடையவனான பெருமையுதங்கிய மூன்றுவேதங்களிலும் வல்லமையுள்ள ஒருபண்டிதன் மேகங்களானவை அமையப்பெற்ற குடையினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின்

அழகினது இலக்கணத்தையும், நீட்சியுற்றகைகளிற் பொருந்தும் அடையாளங்களையும் பிரகாசமிசைந்த சந்திரன்போன்ற முகத்தையும் பார்த்துச் சொல்லுதற்கரிதான சந்தோஷமென்னும் அழகிய சமுத்திரத்தின்கண் மூழ்கினன். (உரு)

பெரியவன் றூதராகப் பிறந்தொரு நபியிற் காலம்
வருகுவர் சரதமென்ன மறையுண ரறிவர் கூடித்
தெரிதர வுரைத்த தெல்லா மிவரெனத் தேறும்வாளா
லிருளறுத் துண்மை யாயுள் ளிருத்தினன் பெருத்த நீரான்.

(இ-ள்.) அவ்வாறு மூழ்கிய மிகுத்த குணத்தையுடைய அப் பண்டிதனானவன் வேதங்களைக் கற்றறிந்த அறிவினையுடைய யாவர்களும் ஒருங்குசேர்ந்து பிற்காலத்தில் பெரியவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாக ஒரு நபியானவர் இந்தப் பூமியின்கண் உதயமாகி வருகுவார். இதுசத்தியமென்று அனைவர்களும் அறியும்படி சொல்லியதெல்லாம் இவர்தாமென்று தேறுநின்ற ஓர் வாளினால் மனசின் கண்ணுள்ள அந்தகாரத்தை அறச்செய்து மெய்மையாயிருக்கும்படி செய்தான். (உசு)

கண்டவனுளத்தி னூடு கண்கொளா வுவகை பொங்கிக்
கொண்டு கொண்டெழுந்து சென்று குவைலிது மனையுளாகி
வண்டுகண் படுக்குங் கூந்தன் மடமயில் கதிஜாவென்னு
மொண்டொடி திருமுன்முந்தி யொதுக்கிவாய் புதைத்துச்
[சொல்வான்

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் ரூபலாவர்ணிய முதலியவைகளைப் பார்த்தவனான அப்பண்டிதன் தனது மனசினகம் இடங்கொள்ளாத சந்தோஷத்தைப் பெற்று அச்சந்தோஷமானது உள்ளேயடங்காது அதிகரித்துக் கொண்டு எழும்பிநடந்துபோய் குவைலிதென்பவன் வீட்டினகமாகி தேனீக்கள் நித்திரைசெய்யாநிற்கும் அளகபாரத்தையுடைய இளமயில்போன்ற கதீஜாவென்று சொல்லும் ஒள்ளிய வளையல்களைத் தரித்தவரின் திருச் சந்நிதானத்தில் தனது முன்றானையை ஒதுக்கி வாயினைக் கைகளால் பொத்திக்கொண்டு சொல்வான். (உஎ)

குவைலிது தவத்தின் பேறே குரைகடன் மணியே நீண்ட
புவியிடை யமுதே பொன்னே பூவையர்க் கரசே யென்றன்

செவியினிற் பெரியோர் கூறுஞ் செய்தியாற் றேர்ந்து தேர்ந்த
கவினுறும் புதுமை யிந்நாட் கண்டுகண் களித்தேனென்ருன்.

(இ-ள்.) குவைவலீ தென்பவரின் தவத்தினது செல்வமானவரே! ஒலியாநின்ற சமுத்திரத்தின்கண் தோன்றிய மணியானவரே! நீட்சியுற்ற இந்தப்பூமியின்கண் அமுதமானவரே! இலக்குமியானவரே! குயில்போலும் பெண்களானவர்க்கு வேந்தரானவரே! எனது காதுகளில் பெரியோர்கள் சொல்லும் வார்த்தைகளாற் றெளிந்து அறிந்த அழகுபொருந்திய ஓரதிசயத்தை இன்றையத்தினம் யான்பார்த்துக்கண்களானவை சந்தோஷமடையப்பெற்றேனென்று சொன்னான்.

வன்மன நஸ்ரு வென்ன வரும்பெருங் குலத்திற் றேன்றிப்
பன்முறைமறைகடேர்ந்த பண்டிதன் முகத்தை நோக்கி
நினமனந் தேறக் கண்டபுதுமையை நினைவுருமற்
சொன்மெனமயிலேயன்னுர் சொற்றபின் னவனுஞ்சொல்வான்.

(இ-ள்.) அவன் அவ்வண்ணம்சொல்லவே, மயில்போலுஞ் சாயலையுடையவரான கதீஜா வென்பவர் வன்மையாகிய மனத்தினையுடைய நஸ்ருவென்று சொல்லும்படி வராநிற்கும் பெரிய கூட்டத்திலுதயமாகி வேதங்களைப் பலதடவையுங் கற்றுத்தேர்ந்த அப்பண்டிதனின் முகத்தைப்பார்த்து உனது மனமானது தேறும்படி நீபார்த்த அற்புதத்தை ஓர்மை மாருது சொல்லுவாயாகவென்று சொன்னபின்னர் அப்பண்டிதனும் சொல்ல ஆரம்பித்தான்　　(உகூ)

முல்லைவெண் ணகையாய் தொன்னுண் முறைமுறை மறைக
வல்லவர் தெளிந்த மாற்ற மக்கமா நகரிற் பின்னு　[ளெல்லாம்
ளெல்லையில் புதுமை யாயோ ரிளவல்வந் துதித்திப் பாரிற்
பல்லருந் தீனி லாகப் பலன்பெற நடக்கு மென்றும்.

(இ-ள்.) முல்லை மலர்போலும் வெள்ளிய பற்களையுடைய கதீஜாவே பழையகாலத்தில் வரிசைவரிசை யாகிய வேதங்க ளெல்லாவற்றையுங் கற்றுத் தெளிந்த வல்லமையுள்ள பண்டிதர்களின் வார்த்தைகளாவன பிற்காலத்தில் மக்கமாநகரத்தின்கண் அளவில்லாத அற்புதமாய் ஓரிளவலானவர் வந்துதோன்றி இப்பூமியினுள் பலமனிதர்களும் அவரது மார்க்கமாகிய தீனுல் லிஸ்லாத்தி லாகும்படி பயன்பெற நடக்குமெனவும்.　　(ஙம)

ஈறிலா னபியாய்த் தோன்று மொழின்முகம் மதுதம்மெய்யின்
மாறிலாக் கதிருண் டாகி மான்மதங் கமழு மென்றுஞ்
சேறிலாங் ககில மீதிற் றிருவடி தோயா தென்றுங்
கூறிலாப் பிடரின் கீழ்பாற் குறித்தலாஞ் சனையுண்டென்றும்.

(இ-ள்.) அளத்தலினுற் கடைகண் டறிதற்கரிதான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் நபியாக உதயமாகும் அழகிய அந்நபி முகம்மது என்பவரின் சரீரத்தில் மாறுதபிரகாசமுண்டாகிக் கஸ்தூரிவாசனையானது பரிமளிக்குமெனவும், சேற்றிலும் பூமியின்மீதிலும் நடப்பதினுல் அவரது அழகிய பாதங்கள் தோயாதெனவும், பிரிவற்ற பிடரியின் கீழ்ப்பக்கத்தில் குறிக்கப்பட்ட முத்திரையானது ஒன்றுண் டெனவும். (௩௧)

வியனுறு புறுக்கா னென்னும் வேதமொன் றிறங்கு மென்றுங்
குயின்மொழி பவளச்செவ்வாய் கொடியிடை கருங்கட்பேடை
மயிலினை யிந்த வூரின் மணமுடித் திடுவரென்றும்
நயனுறக் கேட்டேனின்றென் னயனங்கள் குளிரக்கண்டேன்.

(இ-ள்.) அற்புதமிகுந்த புறுக்கானுல் அலீமென்னும் ஒரு வேதமானது அவருக்குக் கடவுளிடத்திலிருந்து இறங்குமெனவும், குயில்போன்ற வார்த்தைகளையும் பவளம்போன்ற சிவந்தவாயினையும் கொடிபோன்றஇடையினையுமுடைய க்ரியநிறந்தங்கிய கண்களைப்பெற்ற ஒருபெண்ணுகிய மயிலினை இந்தத் திருமக்கமா நகரத்தின்கண் விவாகமுடித்திடுவாரெனவும், நன்மை பொருந்திய காதுகளினுற் கேள்வியுற்றேன். அவ்விதமே இன்றையத்தினம் எனதுகண்கள் குளிர்ச்சியடையும்படி பார்க்கவுஞ்செய்தேன். (௩௨)

முன்னுணர்ந் தவரைக்கேட்டு முதலவன் மறைகடேர்ந்தும்
நின்னையொப் பவருமில்லை யாகையானினது பாலம்
மன்னவின் ணப்பஞ் சேய்தேன் முகம்மதைவிளித்து நொக்கும்
பொன்னனிரென்னப்போற்றிப்புகழ்ந்தனன்னெகிழ்ந்தநெஞ்சான்

(இ-ள்.) ஆனுல் எல்லாவற்றையுங் கற்றுத்தேர்ந்த முன்னோர்களைக்கேட்டும் முதன்மையான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் வேதங்களை யுணர்ந்தும் இப்பூமியின்கண் உம்மை நிகர்த்தவர்களும் இல்லை ஆகையினுல் அவ்வரசரான முகம்மதை உம்மிடத்தில் விண்ணப்பஞ்செய்தேன். இலக்குமிக் கொப்பான கதீஜாவானவரே!

நீவிர் அவரைக் கூப்பிட்டுப் பாருமென்று சொல்லி நெகிழ்ந்த நெஞ்சினையுடைய அப்பண்டிதன் அக்கதீஜா வென்பவரைப் போற்றிப் புகழ்ந்தான். (ருகூ)

கலைவலா னுரைத்த மாற்றங் கேட்டபின் கதிஜா வென்னுஞ்
சிலைநுத றெளியத் தேர்ந்தோர் செவ்வியோன் றன்னைக்கூவி
யலகில்வன் புகழ்சேர்வள்ள லகுமதை யினிதிற் கூட்டித்
தலைவரீ வருக வென்னத் தாழ்ச்சிசெய் தெழுந்து போந்தான்,

(இள்.) அவ்வாறு சாஸ்திர வல்லவனான அப்பண்டிதன் சொல்லிய வார்த்தைகளைக் கதீஜாவென்னும் விற்போன்ற நெற்றியையுடையவர் தமது இருகாதுகளினாலும் கேள்வியுற்ற பின்னர், அவைகளை நன்றாய்த் தெளியும்படி யறிந்து ஏவல் செய்வோனாகிய ஒரு அழகிய புருஷனைக் கூப்பிட்டு ஏவற்றொழிலிற் றலைமையானவனே! நீபோய்க் கணக்கற்ற வளமான கீர்த்திபொருந்திய வள்ளலாகிய அஹ்மதென்னுந் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை இனிமையோடுமிங்கு கூட்டிக்கொண்டுவருவாயாக வென்று கட்டளையிட, உடனே அவன்பணிந்துவணங்கி எழும்பி நபிநாயகமவர்கள் இருக்குந் திசையைநோக்கிப்போயினான்.

ஏவலென் றுறைத்த மாற்ற மிடையறு தொழுகிச் செய்யுங்
காவல னபித்தா லிபு கடைத்தலை கடந்து சென்று
பாவலம் பியசெங் நாவார் பன்முறை வழுத்தப் போதா
மேவலர்க் கரியே றென்னு முகம்மதை யினிதிற் கண்டான்.

(இ-ள்.) ஏவுதலென்று சொல்லிய வார்த்தைகளை இடைவிடாது ஒழுங்காய்ச் செய்யாநிற்கு மரசனான அவன், அபீத்தாலிபவர்களின் வீட்டினது முதல் வாசலைத் தாண்டி அகம் பிரவேசித்துப் பாக்களானவை யிருந்தலம்பா நிற்கும் சிவந்த நாவினையுடைய ஆன்றோர்களால் அனேகதடவை கூறினாலுங் கூறமுடியாத சத்துராதிகளாகிய யானைகட்கு ஆண்சிங்கமென்று சொல்லும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை யினிமையுடன் பார்த்தான்

கண்டுகண் களித்துள் ளஞ்சிக் கரகம லங்கள் கூப்பி
யொண்டொடி கதீஜா வென்னு மோவிய முரைத்த மாற்றம்
விண்டுவிண் ணப்பஞ்செய்தான் விரைகமழலங்கற்றிண்டோட்
கொண்டறஞ் செவியு நெஞ்சுங் குறைவறக் குளிரவன்றே,

(இ-ள்.) அவ்வாறு பார்த்து இரண்டுகண்களும் களித்துமனமர்னது பிரமிக்கப்பெற்றுத் தனது கைகளாகிய இரண்டு தாமரைமலர்களையுங் குவித்துவணங்கி ஒள்ளிய வளையல்களை யணிந்த கதீஜாவென்று சொல்லுஞ் சித்திரப்பாவை யானவர் சொல்லியவார்த்தைகளை வாசனையானது பரிமளிக்காநின்ற மலர்மாலையணிந்த திண்ணிய புயங்களையுடைய மேகமாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காதுகளும் மனமும் குறைவில்லாது குளிர்ச்சி யடையும்படி தனது வாயினைத்திறந்து விண்ணப்பஞ் செய்தான். (கசு)

கூறிய கூற்றைக் கேட்டுக் குறித்துள கரும மின்று
மாறிலா தடைந்த தென்ன முகம்மது மனத்தி லுன்னித்
தேறியங் கெழுந்து போந்தார் தேனினு மதுரமாரு
தூறிய தொண்டைச் செவ்வா யொண்ணுதன் மனையிலன்றே.

(இ-ள்.) அவ்வாறு அவ்வேவற்காரன் சொல்லியசமாசாரத்தை நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்கள் காதுகளினாற் கேள்வியுற்று நாம்முன்னர் கருதிட்டுள்ள காரியம் இன்றையத்தினம் தவிர்தலில்லாது நமதுபால் சேர்ந்ததென்று மனசின்கண் நினைத்துத் தெளிதலடைந்து அவ்விடத்திலிருந்துமெழும்பித்தேனைப்பார்க்கிலும் இனிமையானது மிகநீங்காது சுரந்த தொண்டைக் கனிபோலுஞ் சிவந்த வாயினையும் ஒள்ளிய நெற்றியையு முடைய கதிஜா வென்பவரின் வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (கள)

சித்திர வனப்பு வாய்ந்த செம்மறன் வரவு நோக்கிப்
பத்திரக் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி பதுமராக
முத்தணி நிரைத்த பீட முன்றிலிற் காந்தட் கையால்
வைத்திவ ணிருமென் றோத முகம்மது மகிழ்ந்திருந்தார்.

(இ-ள்.) அவ்விதம் போய்ச் சேரவே, அம்பைப் போன்ற கண்களையும் சிவந்தவாயினையும் பசியதொடிகளையுமுடைய கதீஜாவானவர் சிறந்த அழகானதுவாய்க்கப்பெற்ற செம்மலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வரவைப்பார்த்துத் தமது காந்தட் புஷ்பம்போலுங் கைகளினல் பதுமராகங்களையும் முத்துக்களையும் அலங்காரமாகவரிசைபடுத்தப்பட்ட ஓராசனத்தை யெடுத்துமுற்றத்தில்வைத்து இவ்விடத்திலிருங்களென்றுகூற, நபிகணயகமவர்களும் சந்தோஷமுற்று அவ்வாசத்தின் மீதிருந்தார்கள். ()

எரிமணித் தவிசின் மேல்வந் திருந்தலக் கணமும் பொற்புந்
திருவுறை முகமு மன்பு திகழ்தரு மகமுங் கண்ணும்
விரிகதிர் பரந்தமெய்யும் விறல்குடி யிருந்த கையு
மருமலர் வேய்ந்த தோளு மணிதிரண் டனைய தாளும்.

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பிரகாசியாநிற்கும் இரத்தினவர்க்கங்களை நிரைத்த அவ் வாசனத்தின்மீது வந்திருந்த இலக்கணமும் அவர்களின அழகும் தெய்வீகந்தங்கிய முகமும் கிருபையானது விளங்கிய மனமும் கண் களும் விரிவான கிரணங்கள் பரப்புற்றசரீரமும் வெற்றியானதுகுடி யாயிருக்கப்பெற்ற கைகளும் வாசனைபொருந்திய புஷ்பமாலை யணி ந்த தோள்களும் இரத்தினங்க ளொன்றோடொன்று திரண்டாற் போன்ற பாதங்களும். (௩௯)

பேரொளி பரப்பிப் பொங்கிப் பெருகிய வழகு வெள்ளச்
சார்பினிற் கதீஜா வென்னுந் தையறன் கரிய வாட்கட்
கூருடைக் கயல்க ளோடிக் குதித்தன குளித்துத் தேக்கி
வாரிச வதனஞ் சேர்ந்து மறுக்கமுற் றிருந்த வன்றே

(இ-ள்.) பெரிய பிரகாசத்தை நானுபக்கமும்பரவச்செய்து அதி கரித்துப் பெருகிய அழகென்னும் பிரவாகத்தின்கண் கதீஜா வென் றுசொல்லும் பெண்ணானவரின் கரிய நிறத்தைக்கொண்ட வாட்ப டைபோலுங் கூரிய கண்களென்னும் கெண்டைமீன்கள் ஓடிப்போ ய்ச் சாடின. அவ்விதம் சாடி அப்பிரவாகத்தின்கண் மூழ்கித்தெவி ட்டுதலடைந்து தாமரைமலர்போலும் முகத்திற் சேர்ந்து மறுக்கம டைத்திருந்தன. (௪0)

பார்த்தகண் பறித்து வாங்கப் படாமையா னறவஞ் சிந்தப்
பூத்தகொம் பனைய மெய்யி னுணைனும் போர்வை போர்த்துக்
கூர்த்தவா வெளிப்ப டாமற் கற்பெனும் வேலி கோலிச்
சேர்த்ததம் முளங்கா ணாது திருந்திழை வருந்தி நின்றார்.

(இ-ள்.) திருந்திய ஆபரணங்களையுடைய கதீஜாவானவர் அவ் வாறுநோக்கிய கண்களைத்திரும்பப்பறித்து வாங்கமுடியாமையினால் தேனைச்சொரியும்படி பூத்த கொம்பைப்போலும் சரீரத்தின்கண் வெட்கமென்னும் போர்வையைப் போர்த்து மிகுந்த காதலானது வெளிவராமல் கற்பென்னு மதிலை வளைத்துப் பொருந்திய தங்கள் மனமானது போதாது துன்பமுற்று நின்றார்கள். (௪க)

மெய்மொழி மறைக டேர்ந்த பண்டிதன் விரைவில் வந்து
மொய்மலர்க் கதீஜா செவ்வி முழுமதி முகத்தை நோக்கிச்
செய்தவப் பலனே யன்ன வள்ளலைத் திருமனைக்கே [வான்.
யெய்துதற் கருள்செய் வீரென் றெடுத்துரை விரித்துச் சொல்

(இ-ள்.) அப்போது சத்திய வசனங்களையுடைய வேதங்களைக் கற்றுத் தெளிந்த அப் பண்டிதன் சீக்கிரத்தில் அங்குவந்து வண்டுகளால் மொய்க்கப்பெற்ற மலர்போலும் கதீஜா அவர்களின் அழகிய பூரணச் சந்திரனையொத்த முகத்தைப்பார்த்துச் செய்யாநின்ற தவத்தினது பிரயோசனத்தை நிகர்த்த வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அவர்களின் தெய்வீகம் பொருந்திய வீட்டின்கண்போய்ச் சேருவதற்குக் கிருபை செய்வீர்களாகவென்று விரிவாக வார்த்தைகளை எடுத்துக் கூறினான். (௪௨)

விரும்பிய காம நோயை வெளிவிடா தகத்துள் ளாக்கி
யருப்பிள முறுவற் செவ்வா யணிமல ரிதழை விண்டே
யிரும்புகழ் தரித்த வெற்றி முகம்மதை யினிதி னோக்கி
வரும்பெருந் தவமே நுந்த மனையிடத் தெழுதி ரென்றார்.

(இ-ள்.) கதீஜா அவர்கள் தாங்கள்கருதிய காமமாகியபிணியை வெளியின்கண்விடாது மனசினுள்ளாக்கிப் பெரிய கீர்த்தியைத்தரித்தவெற்றியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை இனிமையோடும் பார்த்துத் தங்கள் முல்லை யரும்புபோன்ற சிறிய பற்களையுடைய சிவந்த வாயினது அழகிய பூப்போலும் அதரங்களைத் திறந்து இவ் வுலகத்தின்கண் வாராநிற்குக் பெரிய தவமானவர்களே? உங்களது வீட்டின்கண் எழுந்தருளுங்களென்று சொன்னார்கள். (௪௩)

காக்குதற் குதித்த வள்ளல் காரிகை வடிவைக் கண்ணா
னோக்கியும் நோக்கா தும்போ னொடியினி லெழுந்தம் மாதின்
மாக்கட லனைய கண்ணு மனமும்பின் றொடர்ந்து செல்லக்
கோக்குல வீதி நீந்துக் கொழுமனை யிடத்திற் சார்ந்தார்.

(இ-ள்) அப்பொழுது அகிலசராசரங்களையும் இரட்சித்தற்குதையமாகியவள்ளலான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் காரிகையாகிய கதீஜா நாயகமவர்களின் அழகைத் தங்கள் கண்களினாற் பார்த்தும் பார்க்காததைப்போல் ஒருகை நொடிப் பொழு

தினில் தாங்களிருந்த ஆசனத்தை விட்டும் எழும்பி அந்தக் கதீஜா அவர்களின்பெரிய சமுத்திரம்போன்ற கண்களும் மனசும் தங்களின் பின்னே தொடர்ந்துவரும்படி நடந்து அரசர் குழாத்தையுடைய தெருக்களைக் கடந்து தங்களது செழிய வீட்டின்கண்போய்ச்சேர்ந்தார்கள். (சச)

மடங்கலே றனைய செம்மன் மனையில்வந் திருந்த போழ்தே
படங்கொள்பூ தலத்தி ராச பதவியும் பெரிய வாழ்வு
மிடங்கொள்வா னகத்தின் பேறு மெளிதினி னும்பாற் செல்வ
மடங்கலு மடைந்த தின்றென் றறைந்துபண் டிதன கன்றான்.

(இ-ள்.) பின்னர் அப்பண்டிதனானவன் ஆண்சிங்கம் போன்ற செம்மலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இன்றையத்தினம் உமது வீட்டின்கண் எழுந்தருளி வந்திருந்தபோதே ஆதிசேடனது படாமகுடங்களிற் கொண்ட இந்தப் பூலோகத்தின் கண்ணுள்ள இராசபதவியும் பெரிதான வாழ்க்கையும் விசாலங்கொண்ட இடத்தினையுடைய வானலோகத்தின்பேறும் மற்றுஞ் செல்வமுதலிய யாவும் உமதுபால் இலேசாகவந்து சேர்ந்தனவென்று கதீஜா அவர்களோடுஞ் சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டும் நீங்கிப் போய்விட்டான். (சரு)

தெரிந்தறிந் துணர்ந்தோர் மாற்றஞ் சிறிதெனும் பழுது வாரா
விரிந்தநூ லுரையும் பொய்யா விளங்கொளிர் வடிவ தாக
விருந்தவர் நபியே யாமு மிவர்மனை வியரே யென்னக்
கருந்தடங் கண்ணா ருள்ளக் கருத்தினி லிருத்தல் செய்தார்.

(இ-ள்.) அவன் அவ்வாறுபோகவே, கரியநிறங்கொண்டவிசாலம்பொருந்திய கண்களையுடையவர்களான கதீஜா அவர்கள் யாவையுந் தெரிந்தறிந்து உணர்ந்தவர்களாகிய மேலோர்களின் வார்த்தைகள் கொஞ்சமேனும் குற்றப்படவராது. அன்றியும், விரிவுற்ற வேதசாஸ்திரங்களும் பொய்யாகாது. ஆதலால் ஒளிராநின்ற பிரகாசத்தினது சொருபமாக இங்கு எழுந்தருளி வந்திருந்தவர்கள் நபிதான். நாமும் இந் நபியவர்களின் நாயகியர்தானென்று மனசினது கருத்தில் இருபகும்படி செய்தார்கள். (சசு)

படியினிற் சசியுஞ் செங்கேழ்ப் பருதியு நிகரொவ் வாத
வடிவெடுத் தனைய வள்ளன் முகம்மதி னெஞ்சமென்னுங்
கடிகமழ் வாவி யூடு கருத்தெனுங் கமல நாப்பண்
பிடிநடை கதிஜா வென்னும் பெடையன முறைந்த தன்றே.

(இ-ள்.) மேலும் இப் பூலோகத்தின்கண் சந்திரனும் சிவந்த பிரகாசத்தையுடைய சூரியனும் உவமையிற் பொருந்தாத சொரூப மெடுத்தாற்போன்ற வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் மனமென்னும் வாசனை பரிமளியாநின்ற தடாகத் தினது மத்தியில் கருத்தென்னுந் தாமரைமலரின் நடுவில் பெண் யானைபோலும் நடையினையுடைய கதீஜாவென்னும்பெட்டையன்ன மானது வீறுடனிருந்தது. (சஎ)

தம்மனத் துறைந்த காத றனைவெளிப் படுத்தி டாமற்
செம்மலு மிருந்தார் மற்றைச் சிலபகல் கழிந்த பின்னர்
முகம்மதம் பொழியும் நால்வாய் முராட்கரி யபித்தா லீபு
விம்மித புயம்பூ ரிப்ப மைந்தனை விளித்துச் சொல்வார்.

(இ-ள்.) செம்மலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் அவ்வாறு தங்களது மனசின்கண் தங்கிய மோகத்தை வெளிப்படுத்தாதிருந்தார்கள். அவ்விதமாகச் சிலநாள் சென்றபின்ன ர்க் கன்னம் கபோலம் கோசமென்னும்மூன்று மதங்களையும் பொழி யாநிற்கும் நாலப்பெற்றவாயினையும்வலிமையையுமுடைய யானைபோ ன்ற அபித்தாலிபவர்கள் தங்களது விம்மிதங்கொண்ட இரண்டுதோ ள்களும் பூரிக்கும்படி மகனரான நபிகணுயக மவர்களைக் கூப்பிட் டுச் சொல்லுவார்கள். (சஅ)

தெரிதரத் தெளிந்த சிந்தைத் தேமொழி கதிஜா பாவில்
விரைவினிற் சென்று செம்பொன் விளைவுறச் சிறிதுகேட்போ
மருளொடு மீந்தா ரென்னி லகற்குறு தொழிலைக் காண்போம்
வரையற விலையென் றுரேதில் வருகுவம் வருக வென்றார்.

(இ-ள்.) யாவையும் அறியும்படி தெரிந்த மனசினைப் பொருந் திய தேன்போலும் வார்த்தைகளையுடைய கதீஜா வென்பவரிடம் நாம் சிக்கிரத்தில் பயனுறும்படி போய் கொஞ்சம் செந்நிறத்தையு டைய திரவியங் கேட்போம். கிருபையோடும் கொடுப்பாரேயானல் அதற்குப் பொருந்திய கச்சவடத் தொழிலைச்செய்குவோம் தீரவே யில்லையென்று சொன்னல் திரும்பிவந்திவிடுவோம். வாருமென்று சொன்னர்கள். (சகூ)

உரைத்திடுந் தந்தை மாற்றஞ் செவியுற வுவகை பொங்கி
விரைத்தகாக் குழற் கதிஜா மெல்லிழை நினைவு நெஞ்சம்.

பொருத்திய வகத்தி ளூடு புக்கிடத் திருவாய் விண்டு
கரைத்தனர் நாளைக் காண்போங் கருதிய கரும மென்றே.

(இ-ள்.) அவ்வாறு சொல்லிடும் பெரியதந்தையாகிய அபீத்தாலிபவர்களின் வார்த்தையானது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காதுகளிற்போய்ப் பொருந்த சந்தோஷமானது பெருகி வாசனைதங்கிய சோலைபோலுங் கூந்தலையுடைய கதீஜாவென்னும் மெல்லிய ஆபரணங்களைத் தாங்கியவரின் எண்ணத்தையும் நெஞ்சத்தையும் பொருத்திய மனத்திநகம் புகுந்திடும்படித் தங்களது தெய்வீகம்பொருந்திய வாயினைத்திறந்து நாம் நினைத்த காரியத்தைநாளையதினம்போய்ப் பார்ப்போமென்று சொன்ஞர்கள். (௫௦)

வேறு.

மருக்கொள் பூதர புயநபி முகமது மினையிடை மகிழ்கூர
விருக்கு மெல்லையி லெல்லவன் புகுந்திர விருள்பரந் திடுகாலக்
கருக்கு மைவிழி துயறரு பொழுதொரு கனவுகண் டனர்நூலிற்
சுருக்கு நுண்ணிடைப் பொலன்ருடித் திருந்திழைச் சுடர்மணி
[கதிஜாவே.

(இ-ள்.) அவ்விதஞ் சொல்லி வாசனைகொண்ட மலைபோலுந் தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மகிழ்ச்சிபெருகும்படி தங்களது வீட்டினகண் ணிருக்கின்ற காலத்தில், சூரியனுனவன் மேல்பாற்கடலிற் போய்ப்புகுந்து இரவினது அந்தகாரமானது எவ்விடமும் பரவிய சமயம் நூலைப்பார்க்கிலும் சுருங்கிய நுட்பமான இடையினையும் பொன்னுலான வளையல்களையும் திருந்திய ஆபரணங்களையுமுடைய பிரகாசம்பொருந்திய இரத்தினமாகிய கதீஜா அவர்கள் கருக்காநிற்கும் அஞ்சனந்தீட்டிய கண்களானவை நித்திரைசெய்கின்றபோது ஒரு சொப்பனத்தைக் கண்டார்கள். (௫௧)

நிறையும் வானக மலர்தரு முடுவின நிரைவிடுத் தெளிதாகக்
கறையி லாக்கலை முழுமதி மடிமிசை கவினெடுவிளையாட
மறைவிலாதுகண்டணிதுகில்கொடுதனி மகிழ்வொடுபொதிவாகக்
குறைவி லாதுரத் துடனணைக் கவுமகங் குளிரவு மிகத்தானே.

(இ-ள்.) ஆகாயத்தின்கண் பெருகாநிற்கும் விரிந்த நட்சத்திரக் கூட்டங்களினது வரிசையை விட்டும் நீங்கிக் குற்றமற்ற கலைகளையுடைய பூரணச் சந்திரன் இலேசாகவிறங்கி தங்கள் மடியின்மீது அழ

குடன் விளையாடும்படித் தெள்ளிதாய்ப் பாத்து அதைக் குறைவில்லாது ஒப்பற்ற மகிழ்ச்சியோடும் தாங்கள் தரித்திருந்த வஸ்திரத்தைக்கொண்டு வலிமையுடன் பொதிவா யணைக்கவும், மனமானதுமிகக் குளிர்ச்சியடைபவும். (ருஉ)

கண்ட காரண மாதுல னெனவரு கலைவல னுடுகூற
விண்டுகூர்த்திடப்பார்த்தனன் றெளிக்திவர்விரைமலர்முகநோக்கி
வண்டு லாம்புய நபியுமை யிதமுற மணமுடித் திடநாடிக்
கொண்ட தாமிதென் றோதிட வுடலகங் குளிர்ந்திருந் திடுநோம்.

(இ ள்.) அவ்வாறு கதீஜா அவர்கள் சொப்பனத்தில் கண்டிடுங் காரணங்களைத் தங்களுக்கு மாமனென்றுசொல்லும்படி வாநிற்கும் சாஸ்திரவல்லமையுள்ள அப்பண்டிதனுக்குத் தங்களின் வாயினைத் திறந்து சொல்லவே; அவன் தனது மனசின்கண் கூர்க்க யோசித்துப்பார்த்துத் தெளிவடைந்து இவர்களின் வாசனைபொருந்தியதாமரைமலர்போலும் முகத்தைநோக்கி இக்காரணம் இனிமைபொருந்தத் தேனீக்கள் உலாவப்பெற்ற தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உம்மை விவாக முடித்திடும்படி விரும்பிக்கொண்டதாகுமென்று கூற, அதைக்கேட்டு அக்கதீஜா அவர்கள்சரீரமும்மனமுங் குளிர்ச்சியடைந்திருந்திடும் சமயத்தில்.

மதும மார்த்தெழு புயவபித் தாலிபு முகமது நயினரும் [டே
விதுவுஞ் சேட்டிளம் பருதியுங் கலந்துடன் விரைவொடு தெருவூ
புதுமை யாநடந் தணிநிற வெறித்திடப் புனையிழைக் கதிஜாதம்
சுதைகொண் மண்டபமணிக்கடை புகுந்தனர்துணைவிழிகளிகூர.

(இ-ள்.) தேனீக்களானவையொலித்து எழாநிற்கும்தோள்களையுடைய அபித்தாலிபவர்களும் நயினரான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும்சந்திரனும் இளம்பருவத்தையுடைய சூரியனும் சேர்ந்து ஒன்றோடொன்றுகலந்து நடந்தாற்போல வீதியினிடமாய் விரைவோடும் அதிசயத்துடன் இரண்டுகண்களும் சந்தோஷம்பெருகும்படி நடந்துசென்று அழகிய பிரகாசத்தை வீசிட அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களைத் தரித்த கதிஜா அவர்களின் வெண்சாந்தினைக்கொண்ட மண்டபத்தினது இரத்தினங்கள் அழுத்திய வாசலிற் போய்ப் புகுந்தார்கள். (ருச)

இருவ ரும்வரக் கண்டன ரெழுந்திருந் திணைமல ரடிபோற்றிச்
சொரியு மென்கதி ராதனத் திருத்திநந் தூய்மலர்ப்பதநோவ

வரிதில் வந்ததென் புன்மொழிச் சிறியவ ரறிவிலர் மனைதேடித்
தெறியக்கூறுமென்றஞ்சிநின் றுரைத்தனர்தேமொழிக்கதிஜாவே

(இ-ள்.) மதுரந்தங்கிய வார்த்தைகளை யுடைய கதிஜா அவர்கள் அவ்வாறு அபித்தாலிபவர்களும் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் தங்கள்மனையைத்தேடிவருவதைப் பார்த்து எழுந்திருந்து அவர்களின் தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளையுந் துதித்துமெல்லிய கிரணங்களைச் சிந்தாநிற்கும் ஆசனத்தின்கண்ணிருக்கச்செய்து நமது பரிசுத்தமான கமலமலர்போலும் பாதங்கள் நோவும்படி புன்மையான வார்த்தைகளை யுடைய சிறியவரான அறிவில்லாத எமதுவீட்டைத்தேடி அரிதாகவந்தகாரணம்யாது? அதையெமக்குத் தெரியும்வண்ணம் சொல்லுங்களென்று பயத்தோடும் நின்று கேட்டார்கள். (ருரு)

இந்த மாநிலத் தொருநிதி யேயென திருவிழி மணியேகேள்
சுந்த ரப்புயத் தப்துல்லா வெனதுறு துணையுயிர்க் குயிரான
மைந்த ரிங்கிவர் மனத்திருள் கெடவொரு மணமுடித் திடநாடிச்
சிந்தைநேர்ந்திவ ணடைந்தனனுமதுரைத் திருவுளமறியேனே

(இ-ள்.) அக்கதிஜாவானவர் அவ்விதம்கேட்க, இந்தப்பெருமை தங்கிய பூலோகத்திற்கு ஒப்பற்ற பொக்கிஷமானவரே! எனது இரு கண்களிலு மிருக்குமணியானவரே! கேட்பீராக: இவ் விடத்திலிருக்கப்பட்ட அழகியதோள்களையுடைய அப்துல்லாவாகிய எனதுபொருந்திய சகோதரரின் உயிருக்குயிரான புதவ்வர். இவரின் அகத்தினது அந்தகாரங் கெடும்படி ஒருவிவாக முடித்திட விரும்பி மனமுடன்பட்டு இங்குவந்து சேர்ந்தேன். உம்முடைய அழகிய சிந்தையின் வார்த்தை எவ்விதமிருக்கின்றதோ? யானறியேன். (ருசு)

சிறிது பொன்னென திடத்தினி லளித்திடிற்றேசிக ருடன்கூடி
யுறுதி சாமினுக் கேகியின் கடைகுவறுமதரு ளுளதாகில்
வறிய வர்க்கொரு மணநிறை வேறிடு மடமயி லனையீர்
தறுதி யில்லெனி லதுவுநன் றெனவபித் தாலிபு முரைத்தாரே.

(இ-ள்,) இளமைபொருந்திய மயில்போன்ற கதீஜாவானவரே! கொஞ்சதிரவியம் எனதிடத்தில் தந்தால்மற்றும் வியாபாரிகளோடு சேர்ந்து உறுதியையுடைய சாம்நகரத்திற்குப் போய் இங்குவந்து சேருவோம். அதற்கு உமதுகிருபை யுண்டுமோனல் எளியவராகிய இவருக்கு ஒருவிவாகமும் நிறைவேறிடும். இதுவேமுடிவு. இல்லையென்று சொன்னல் அதுவும் நல்லது தானென்று அபித்தாலிபவர்களுஞ் சொன்னர்கள். (ருஎ)

நிரைத்த செவ்வரி பரந்தகட் கடைமயி னிசமென அபித்தாலி
புரைத்தவார்த்தையுந்தம்மனக் கருத்தையு முடன்படுத்திடநோக்
கிரைந்தடத்தலர்மரையெனமுகமலர் செறிதரத்துயர்கூரும் [கித்
வருத்த மின்னினைவின்படி முடிந்தன மனத்திடைகளித்தாரே.

(இ-ள்.) வரிசையையுடைய சிவந்த இரேகைகள் பரந்த கண்களின் கடையினைப் பொருந்தியமயிலாகிய கதிஜா அவர்கள் அவ்வாறு அபீத்தாலிபவர்கள் உண்மையென்று சொல்லிய வார்த்தைகளையுந் தங்களது மனவெண்ணத்தையும் ஒன்றுபடப்பார்த்து அலைகளையுடைய தடாகங்களின்விரியாநிற்கும் தாமரைமலர்போன்ற தங்களின் முகமானது மலர்ச்சியுறும்படிக் கிலேசமிகுகின்ற வருத்தம் யாதொன்றுமில்லை. நமதுஎண்ணத்தின்வண்ணம் நிறைவேறியதென்று மனத்தின்கண் சந்தோஷமடைந்தார்கள். (௫௮)

பூதரம்பொருபுயத்தபித் தாலிபு புளகெழ முகநோக்கி
மாதவத்தினென் பொருளுளதெவையுநும்மனைப்பொருளெளியே
மாதரத்துறு மொழிவழிநடப்பதற் கையுறலெனப்போற்றிக் [னு
காத லித்துரைத் தார்விரைத்தார்குழற் கனிமொழிக்கதிஜாவே.

(இ-ள்.) அவ்வாறு சந்தோஷமடைந்த வாசனைபொருந்திய புஷ்பங்களைச்சூடிய கூந்தலையுங்கனிபோன்ற மொழியினையுமுடைய கதிஜா அவர்கள் மலைபோலுந் தோள்களையுடைய அபீத்தாலிபவர்களது சரீரமுழுமையும் புளகமெழும்படி அவர்களின் முகத்தைப்பார்த்து பெரிய தவத்தினையுடைய எனது திரவியமனைத்தும் உங்கள் வீட்டினது திரவியம். எளியவளாகிய யானும் உங்களது அன்பினாற்பொருந்திய வார்த்தைகளின் நெறிப்படி நடப்பதற்குத் தாங்கள் சந்தேகப்பட வேண்டாமென்று துதித்து அன்புகூர்ந்து சொன்னார்கள். (௫௯)

இனிய வாசக மிருதுளைச் செவிபுக விதயமென் மலர்போர்த்த
துனிப றந்தன வுவகையும் பிறந்தன துணைவரைப் புயமீறத்
தனிய னம்வபி னினஞ்சிலபெறுபொரு டருகுவனெனப்போற்றி
வனச மென்மலர் முகமலர்ந் திருந்தனர் வருவல ரறியேறே.

(இ-ள்.) கதிஜா அவர்கள் அவ்விதங் கூறிய இனிமைதங்கிய வார்த்தைகளானவை பகைவரென்னும்யானைகட்கு ஆண்சிங்கம்போன்ற அபித்தாலிபவர்களது இரண்டு காதுகளின் துவாரங்களிலும்

நுழைய மலைபோலு மிருதோள்களும் பூரிக்கும்படித் தங்களதுமன மென்னும் மெல்லிய புஷ்பத்தை மூடியிருந்த துன்பங்களனைத்தும் பறந்துவிட்டன சந்தோஷமும் பிறந்தது. ஏகனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் நம்மிடத்தில் இன்னம்பெறக் கூடிய சில திரவியங்களைத் தருகுவானென்று அவனைத் துதித்துத் தங்களின் மெல்லிய தாமரைமலர்போலும் முகமானது மலர்ச்சியுற் றிருந் தார்கள். (௬0)

கொடுவரிப்பதத் துகிர்முனை யரிந்தன கோதில்வெண்ணுறுவாசத்
தடிசிலும்மறு சுவைப்பொரிக் கறிகளுமமுதொடுசெழுந்தேனும்
வடிநறுவுடைந் தொழுகுமுக் கனியுடன் மதுரமென்மொழிகூறி
யிடுவிருந்தளித் தாரிரு வருக்குமோ ரிளங்கொடி மடமானே.

(இ-ள்.) அப்போது ஒப்பற்ற முற்றாத கொடிபோலும் இளம் பருவத்தை யுடைய மானுகிய கதீஜா அவர்கள் அபீத்தாலி பவர்களுக்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கும் மிருதுவாகிய வார்த்தைகளைப் பேசிக்கொடியவரிகள் படர்ந்த புலியின்பாதத்தினது நகநுனியை அறுத்தாற்போன்ற குற்றமற்ற வாசனைபொருந்திய வெள்ளியசோறும் அறுசுவைகளையுடைய பொரிக்கறிகளும் அமிழ்தத்துடன் செழியதேனும் வடிகின்ற மதுவானது உடைந்து ஒருகாநிற்கும். மா-பலா-வாழை-யென்னு மூன்றுகனி வருக்கங்களோடும் வைப, யற் விருந்து கொடுத்தார்கள். (௬௧)

அனமருந்திய வரசர்கடமைமணி யாசனத் தினிதேற்றி
நனைதருந்துவர்க் காயிலை பாளித நறும்புகை மலர்சாந்தம்
புனையு மென்றுகில் கஞ்சுகி சிரத்தணி போல்வன பலவீந்து [ல்.
சினவுவேல்விழி பொருள்கொடு வருகெனவுரைத்தனர்திருவாயா

(இ-ள்.) அன்றியும், கோபிக்கின்ற வேற்படைபோலும் கண்களையுடைய கதீஜா அவர்கள் அன்னமருந்திய வரசர்களான அவ்விருவர்களையும் இரத்தின வர்க்கங்கள் பதித்த ஆசனத்தின்மீது இனிமையுடன் ஏறி இருக்கும்படிசெய்து ஈரத்தையுடைய துவர்க்காய் வெற்றிலைநறிய புகையினையுடைய பாளிதம் புஷ்பம் சந்தனம் சரீரத்தின்கண் தரிக்காநிற்கும் மெல்லிய வஸ்திரம் சட்டைதலைப்பாகை இன்னும் இவைபோன்ற பலசாமான்களு மெடுத்துக் கொடுத்து ஏவலாட்களை யழைத்துத் திரவிய மெடுத்துக்கொண்டு வாருங்களென்று தங்களது அழகிய வாயினுல் கட்டளை செய்தார்கள். (௬௨)

ஆடகங்கொணர் கென்றலும் வான்ருெடு மறையினிற் சிலரோடி
மூடுபெட்டகந் திறந்தனர் கொணர்ந்தனர் குவித்தனர்முறையாக
நீடி லக்கரு ருயிரத் தொன்பதி ஞயிர நிறைதேர்ந்த
மாடைதானெடுத் தீந்திடக் கொண்டனர் முகம்மது நயினுரே.

(இ-ள்.) அவ்வாறு திரவியம் கொண்டு வாருங்களென்று கதீஜா அவர்கள் கட்டளேயிட்ட மாத்திரமே, சில ஏவலாட்கள் திரவியமிருக்கப்பட்ட ஆகாயத்தைத் தீண்டும்படியான அரங்கிலோடிப் போய் மூடிய பெட்டகத்தைத் திறந்து அதிலிருந்த திரவியங்களே எடுத்துக்கொண்டுவந்து கதீஜா அவர்களின் முன்னர் ஒழுங்காகக் குவித்தார்கள். உடனே அவர்கள் நீண்டகணக்கில் இலட்சத்தியொன்பதிஞயிரம் தங்கக்காசினது நிறையில் தெளிந்த திரவியங்களேத் தங்கள் கையிஞலெடுத்து நயினுரான நபிமுகம்மதுசல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் பால்கொடுக்க அவர்கள் தங்கள் கைகளிஞல் வாங்கிஞர்கள். (சஉங)

கொடுத்ததங்கமலாற்பெருஞ் சாமெனக் குறித்திடுந்திசைக்கேற்க
வெடுத்த நற்சரக் கொட்டையின் பொதியிரு நூறுெடு திரளாக
விடுத்த கப்பரி வாரத்தி லுரியவர் விறல்கெழு வயவீரந்
தொடுத்தநெஞ்சினரிருபது பெயரையுந்தொகுத்தனர்மடமானே.

(இ-ள்.) இளமாஞன கதீஜாஅவர்கள் அவ்விதங்கொடுத்த திரவியமல்லாமல் பெரியசாமென்று சொல்லும்படி மதிப்பிட்டிடும் திக்கிற்குப்பொருந்தும் வண்ணம் எடுக்கப்பட்ட நல்ல சரக்குகளேயுடைய ஒட்டகப்பொதியில் இருநூறுெடு ஒட்டகங்களேயும் கூட்டமாக அனுப்பித்தங்களது வீட்டின்கண்ணுள்ள பரிவாரத்திற் சொந்தக்காரரான வலிமைநிறைந்த வெற்றியின் வீரத்தைப்புனேந்த மனசையுடையவர்களாகிய இருபது பெயரையுங் கூடச்சேர்த்தார்கள்.

வடிவு றுந்திரட் டாள்களு மிருபுறம் வகிர்தரு மயிர்வாலு
நெடுகிக்கட்டுரத் திறுகிய கண்டமு நிமிர்ந்தமெய் யுறுகூனு
நடையி லோர்பகற் கொருபதின் காவத நடந்திடுந் திடத்தாலுங்
கடியவொட்டையொன் றெழினபிக்களித்தனர்கரியமைவிழி.டாஞர்

(இ-ள்.) அன்றியும் கரியநிறம் மொருந்திய அஞ்சனந் தீட்டப்பட்ட கண்களேயுடைய மாஞரான அக்கதீஜா அவர்கள் அழகுதங்கிய திரண்டபாதங்களேயும் இரண்டு பக்கங்களிலும் வகிர்ந்த உரோ

மங்களையுடைய வாலினையும் நீட்சிகொண்டு உறுதியாகிய வலிமை யினால் இறுக்கமுற்ற கழுத்தினையும் உயர்ந்த சரீரத்தின்கண்ணமை ந்த கூனையும் நடையினால் ஒருபகற் பொழுதில் பதின்காத நடந்தி டுந் திடத்தினையுடைய கடிதான ஒட்டகமொன்றைச் சிறப்புப்பெ ற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குக் கொடு த்தார்கள். (௬௫)

மல்ல லம்பிய புயமுகம் மதுநபி மனைத்தினின் மகிழ்கூரச்
செல்ல லைந்திடப் பொழிதரு காமிசைச் செழுங்கதிர் வடிவேலு
மெல்ல வன்கதிர் மறைதரு குற்றுடை வாளொடு மினிதீந்தார்
வில்லின் மேற்பிறை தோற்றிய தெனநுதல் விளங்கிய மடமானே.

(இ-ள்.) அன்றியும், வில்லின்மேல்சந்திரனைதிருந்துபிரகாசித் ததைப்போலும் நெற்றியானது விளங்கப்பெற்ற இளமானான கதீஜா அவர்கள் வலிமைததும்பிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லமவர்கள் மனசின்கண் சந்தோஷமிகுக்கும்வண் ணம் மேகமானது வருந்திடும்படி பொழியாநின்ற அவர்களது கையி ன்மீது இனிமையுடன் சூரியனது கிரணங்கள் மறையாநிற்குங் குற் றுடைவாளோடு செழிய பிரகாசத்தையுடைய கூர்மையான வேலா யுதத்தையும் அளித்தார்கள். (௬௬)

இவையெ லாநபிக் களித்தபி னேவலி னியலுறு மைசறுவை
நவையறத்தம் தருகினி விருத்துவெண் ணகைமலர் முகநோக்கிப்
புவியினின்னிலு மெனக்குரி யவரிலைப்பொருளுநின்பொருளேயா
மவய வங்களைக்காப்பவர் போனபிக் கடுத்தினி துறைவாயே.

(இ-ள்.) கதீஜா அவர்கள் இந்தப் பொருள்களனைத்தையும் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குக் கொடுத்த பின் னர், ஏவலினது இயல்பு பொருந்திய மைசறு வென்பவனைக் குற்ற மற்றத் தங்களது பக்கத்திலழைத்திருத்தி வெள்ளிய பிரகாசத்தை யுடைய அவனது தாமரைப்பூப்போன்ற முகத்தைப்பார்த்து இந் தப் பூலோகத்தின்கண் உன்னைப் பார்க்கிலும் எனக்குச் சொந்தமா னவர்கள் வேறே யொருவருமில்லர். என்னுடைய பொருள்கள் யாவும் உன்னுடைய பொருளேயாகும். ஆதலால் நீ இந்த நபிகளுடைய கமவர்கள் சாமிராச்சியத்திற்குப்போய் மீண்டுவருமளவும் சரீரத்தி ன்கண்ணுள்ள அவயவங்களைக் காக்கின்றவர்களைப்போல எப்போ தும் அவர்களின் சமீபத்திலேயே வீற்றிருப்பாயாக. (௬௭)

ஏகும்பாதையிற்பண்டித னொருவனுண்டியன்மறைவழிதேர்ந்த
வாகனெம்மினத் தவரிலு முரியவன் மகிழ்ந்தவ னிடத்தேகி
நீகருத்துட னெமதுச லாமையு நிகழ்த்திநள் ளிருட்போது
மோகமுற்றியாங் கண்டிடுங் கனவினைமொழியெனமொழிவாயே.

(இ-ள்.) மேலும் நீங்கள் பிரயாணமாய்ப் போகின்ற வழியில் ஒருபண்டிதனுண்டு. அவன் இயல்புதங்கிய முன்வேதங்களி னொழுங்குகளைக்கற்றுத்தெளிந்த அழகையுடையவன். அன்றியும் எமது பந்துக்களிலுமெமக்குச் சொந்தமானவன். நீ கருத்தோடு மகிழ்ச்சியடைந்தவனிடத்திற்போய் அவனுக்கு எமதுவந்தனத்தையுங்கூறி யாம் நடு இராத்திரியில் காதலித்து பார்த்திடுஞ் சொப்பனத்தை அவன் சொல்லென் றதின்பின்னர் சொல்லுவாயாக (கூஅ)

பாதையுற்றிடுஞ் செய்தியு மிவர்க்கிடர் பணித்தவர் தமக்கான
வாதையுற்றிடும் வருத்தமுங் காரணத் தொகுதியும்வனஞ்சார்ந்த
போதி நிற்பெறும் புதுமையு மிங்கிவர் பொருமையுநகர்சேர்ந்து
சூதர்தம்மொடு மிருப்பது மினமெனச் சூழ்ந்தவர் வரலாறும்.

(இ-ள்.) மேலும் நீங்கள் போகின்ற வழியின்கண் பொருந்திடுஞ் சமாசாரங்களையும், இந்நபிகள் பெருமானவர்களுக்குத் துன்பத்தைச் செய்தவர்களுக்காகும் வேதனைதங்கிய வருத்தங்களையும், அதனால் உண்டாகுங் காரணத்தினது சேர்மானங்களையும், காடு போய்ச்சேர்ந்தபின்னர் அவ்விடத்திலடைகின்ற அற்புதங்களையும், இங்கிருக்கப்பட்ட இந்நபியவர்களின் பொறுமையையும், ஷாம்நகரத்தையடைந்து அவ்வூரிலுள்ள சூதர்களுடனிருப்பதையும், பந்துக்களைப் போலப் பக்கத்தில் வளைந்தவர்களின் வரலாற்றையும். (கூக)

இற்றை நாட்டொடுத் தந்நகர்க் கேகியிங் கிவண்புக வருநாளை
யற்றை நாளைக்குங் கண்டிடுங் காரண மனைத்தையுந் தடராக
ஒற்றர் தம்வயி னெழுதியிங் கனுப்பியென் னுறுவிழிமணிபோலும்
குற்ற மில்லதோர் நபியுடன் வருகென வுரைத்தனர் குலமாதே.

(இ-ள்.) இன்றையத் தினமுதல் அந்தச்சாமி ராச்சியத்திற்குப் போய் அங்கு முடிக்கவேண்டிய காரியங்களெல்லாவற்றையு முடித்துக்கொண்டு இவ்விடத்தைப் பொருந்தும்படித் திரும்பி வருகின்ற தினமாகிய அத்தினம்வரைக்கும்இடையிலுள்ள எல்லாநாள்களிலும்

தோற்றிடுங் காரணங்கள் முழுவதையுந் துடராக எழுதித் தூதுவர் களின் கையில் கொடுத்து இவ்விடத்திற் கனுப்பிவிட்டுப் பொருந் திய எமது கண்மணிபோன்ற ஒப்பில்லாத நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடன்குற்றமில்லாது நீவருவாயாகவென்று மே ன்மைதங்கிய மாதான அக்கதீஜா அவர்கள்சொன்னார்கள். (எ0)

இத்தி றத்துரை பகர்ந்தன ரழகொளி ரிளமயின் முகநோக்கி
மத்த கக்கட கரிமுகம் மதினெழின் மலரடி யிணைபோற்றி
யுத்த ரப்படி பணிகுவ னவரையென் னுயிரினு மிகக்காத்து
முத்தி ரைப்படி வருகுவன் காணென மொழிந்தடி பணிந்தானே

(இ-ள்.) இத்தன்மையான வார்த்தைகளைச் சொல்லிய அழகா னது பிரகாசியாநின்ற இளமயிலான கதீஜா அவர்களின் முகத்தை மைசறுவென்பவன் பார்த்து மத்தகத்தையுடைய மதத்தினைப்பொ ழியாநிற்கும் ஆண் யானைபோன்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலை கிவசல்ல மவர்களின் அழகிய தாமரைமலர்போன்ற இரண்டு பாதங் களையுந்துதித்து உத்திப்பிரகாரம் பணிந்து நடப்பேன். அன்றியும், முத்திரைப்படி அவர்களை எனது ஜீவனைப்பார்க்கிலும் அதிகமாகக் காப்பாற்றி கூடவேவந்துசேருவேன். நீங்கள் பாருங்களென்றுசொ ல்லி அக்கதீஜா அவர்களின் திருவடிகளை வணங்கினான். (எக)

முருகு லாங்குழன் மயிலபித் தாலிபு முழுமதி முகநோக்கி
யரசர் நாயக நும்மனைக் கெழுமென வுரைத்தலு மவர்போந்தார்
பரிச னங்களும் வணிகருஞ் சூழ்தரப் பாதமென் மலர்பாரிற்
றெரித ராமுகம் மதுநபி யாத்திரைத் திரளொடு மெழுந்தாரே.

(இ-ள்.) அப்போதுதேனனது உலாவப்பெற்ற கூந்தலையுடைய மயிலாகிய கதீஜா அவர்கள் அபீத்தாலிபவர்களின் பூரணச்சந்திரன் போன்ற முகத்தைப்பார்த்து அரசர்களுக் கெல்லாம் நாயகமானவர் களே ! தங்களது வீட்டிற்கு எழுந்தருளுங்களென்று கூறிய மாத்தி ரத்தில், அவர்கள் எழும்பிப்போய்விட்டார்கள். பின்னர் பாதங்க ளாகிய மெல்லிய தாமரைமலர்கள் பூமியின்கண்தோற்றாத நபிமுகம் மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது பரிவாரங்களும் மற்றும் கச்சவடக்காரர்களும் தங்களைச் சூழும்படி யாத்திரைத்திர ளோடும் பிரயாணப்பட்டார்கள். (எஉ)

கூன்ஞெ றுத்தொரும் பொதியெடுத் தேற்றிய குழுவிடைநபிஞுறு
மேன்ற தம்மிரு கரத்தினும் பொதியிரண் டெடுத்தெடுத்தினிதேற்
சான்ற பேர்கடம் மனத்ததி சயமுறத் தையறன் மனைநீங்கித் [றிச்
தோன்ற ரேன்றின் ரணிமணி மறுகிடை சுடர்விடு மதியேபோல்.

(இ-ள்.) அப்பொழுது எவற்காரர்கள் கூனையுடைய ஒட்டகங்கள்தோறும் சுமைகளை எடுத்தேற்றிய கூட்டத்தினிடையில் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் இரண்டு சுமைகளைப் பொருந்திய தங்கள் இருகைகளினுல் இனிதோடு மெடுத்தெடுத் தேற்றி மேன்மையையுடைய ஜனங்களியாவர்களும் தங்கள் மனசின் கண் அதிசயம்பெருக அக்கதீஜா அவர்களின் வீட்டைவிட்டும் நீங்கி அழகிய இரத்தின வர்க்கங்களையுடைய வீதியின்கண் அரசராகிய அங்கபிகளுயகமவர்கள் பிரகாசத்தைவிடாநின்ற சந்திரனைப் போலப்பிரசன்னமானுர்கள். (எங)

அருந்த வத்தபூ பக்கருஞ் சுபைருட ஞரிது மப்பாசுங்
திருந்தி லாமனத் தபுசகலொடுங்கலை தெரிதரு மைசருவும்
பொருந்தக் கூடிய மாக்களு மிடபமும் புரவியுந் துகளார்ப்ப
வருந்திலாப்பெருவாழ்வுகொண் டுறைதரும்வளநகர்ப்புறத்தானுர்

(இ-ள்.) அந்தச்சமையம் அரிதான தவத்தையுடைய அபூபக்கரவர்களும்சுபைருடு ஆரிதும் அப்பாசும் சன்மார்க்கத்தில் திருந்தாத மனத்தினையுடைய அபூஜகிலொடு சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த மைசருவும் அவ்விடத்தில் கச்சவடத்திற்காக பொருந்தும்படி கூடிய மற்றும் ஜனங்களும் எருதுகளையும் குதிரைகளையும் நடத்துதலினுலுண்டாகும் துகளானதுஎவ்விடங்களையும்நிறைக்க வருத்தமில்லாத பெரியவாழ்வு பெற்றுறையாநிற்கும் செல்வத்தையுடைய மக்கமாநகரைவிட்டும் வெளியி லாயினுர்கள். (எச)

ஊறு நீர்த்தடக் கரைகளுங் குட்டமு மோடையு மலர்க்காடுந்
தேற லூற்றிய சோலையு மரம்பையின் றிரளிடை பழக்காடுங்
கூறுகொண்டிடுகிடங்கிடை சிறுகொடியிலைக்கொடிக்காலுஞ்
சாறு கொண்டெழு மாலையுங் கன்னலஞ் சாலையுங் கடந்தாரே

(இ-ள்.) அவ்விதம் பிரயாணமான யர்வர்களும் சுரக்காநின்ற சலத்தினையுடைய குளக்கரைகளையும் குளங்களையும் ஓடைகளையும் மலர்க்காடுகளையும் தேனைச்சொரிகின்ற சோலைகளையும்கூட்டமாகிய

வாழைகளினிடையிலுள்ள பழக்காடுகளையும் பகுதி பகுதியாகக் கொள்ளாநின்ற கிடங்குகளி னிடத்துற்ற சிறியகொடியினையு மிலைகளையுமுடைய கொடிக்கால்களையும் சாற்றினைப்பெற் றோங்காநிற்கும் ஆலைகளையும் அழகிய கன்னற்சாலைகளையுந் தாண்டினார்கள்.

கடந்துகாவத நடந்தொரு பொழிலிடை காளைகளனைவோரு[க்கி
மிடம்பெறத்திரண்டிறங்கியங் குறைந்தனரிருட்பொழுதினைப்போ
விடிந்த காலையின் முன்னிலை யெவரென விளம்பின ரவரோடு
மடைந்த பேர்களின் முகம்மது முதலென அபூபக்கர றைந்தாரே.

(இ-ள்.) ஷாம் நகரத்திற்குப் பிரயாணப்பட்ட காளைப் பருவத்தையுடைய யாவர்களும் மேற்கூறியவைகளனைத்தையுந் தாண்டிக் காதவழி தூரம் நடந்து சென்று, தங்கியிருத்தற்குரித்தான ஒரு சோலையின்கண்ணிறங்கி விசாலமாகவொன்றுகூடி அவ்விடத்தில் வாசஞ்செய்து இராக்காலமுழுவதையும் கழித்துச் சூரியன் உதையமானபோது சிலபேர்கள் நம்மனைவோர்களுக்கும் வழிகாட்டியாக முன்னிலையில் நடப்பவர்கள் யாவரென்று கேட்டார்கள். அவ்வாறு கேட்கவே அவர்களோடும் ஆபூபக்கரவர்கள் இங்குவந்து சேர்ந்த ஜனங்களில் முன்னிலைக்குத் தகுதியானவர் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களென்று சொன்னார்கள். (எசு)

முகம்மதென்றுமை கேட்டலு மபுசகல் மனத்திடை தடுமாறி
மிகமுனிந்தன னிவர்தமை முன்னிலை விலக்குவ துனக்காகா
திகழெனப்பலர் கூறவுங் கேட்டில னிதற்குமுன் னிலையானென்
றகம கிழ்ந்திட நடந்தனன் கெடுமதி யடைவது மறியானே.

(இ-ள்) கேட்டைத் தராநின்ற புத்தியானது தன்னைவந்து சார்வதையு முணராதவனான அபூஜகில் அவ்வண்ணம் முகம்மது முன்னிலையென்று அபூபக்கரவர்கள் கூறிய வார்த்தைகளைக் காதுகளினாற் கேட்டமாத்திரத்தில், மனசின்கண் தடுமாற்றமுற்று மிகவாகக்கோபித்தனன். இந்தமுகம்மதை முன்னிலையைவிட்டும் விலக்குவது உனக்காகாது. ஆதலால் நீஅதைவிட்டு விடென்று அக்கூட்டத்திலுள்ள பலபேர்கள் தடுத்துச் சொல்லியும் அதைச்சம்மதித்திலன். அன்றியும்; மனமானது மகிழ்ச்சி யடையும்படி இக்கூட்டத்திற்கு முன்னிலை யானென்று யாவர்களுக்கும் முன்னால் நடந்துசென்றான். (எஎ)

ஒட்டை மீதினில் வரும்பொழுதவ்வழி யோரிடத் திடையூருய்க்
கட்டைதட்டிடவொட்டையுஞ் சாய்ந்தொருகவிழொடுதலைகீழாய்
முட்டிவீழ்ந்தனன்குமிழிநும் வாயினுமுழுப்பெருக்கெனச்சோரி
கொட்டினனெழுந்தானபுஜகிலெனுங்கொலைமனக்கொடியோனே.

(இ-ள்.) அவ்வாறு அபூஜகிலென்று சொல்லுங் கொலைபொருந்திய மனத்தினையுடைய அக்கொடியவன் முன்னிலையாகக் தனதுஒட்டகையின்மீதுவருஞ் சமயம். அப்பாதையின்கண்ணுள்ள ஒருஸ்தலத்தில் இடையூருக ஒருகட்டையானது அவ்வொட்டகையின் காற்களில் இடறவே, அந்த ஒட்டகமும் சாய்ந்து தானும்ஒருபுறத்துக் கன்னத்துடன் தலைகீழாய்ப் பூமியின்கண் மோதிவீழ்ந்தான். நாசியிலும் வாயிலுமிருந்து பூரணப்பட்ட பிரவாகத்தைப்போல இரத்தத்தைச் சிந்தினன். பின்னர் தரையைவிட்டு மெழும்பினன்:

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உதிரங் கொப்பளித்து முகமழிந் துடைந்தான்
முகம்மதை யுறுதிகேடாக
நிதமுரைத் ததனு லபூஜகி லினமு
நிலைகுலைந் திடுவது நிசமென்
றதிர்தர வுரைத்துப் பல்லருங் கூண்டிவ்
வாற்றிடை முன்னிலை யானேன்
மதுரமென் மொழியா னுத்துபா வலது
மறுத்தெவ ருளரெனத் தேர்ந்தார்.

(இ-ள்.) அக்கூட்டத்திலுள்ள பலபேர்களும் ஒன்றுகக்கூடி அபூஜகில் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை யுறுதிகேடாகப் பிரதிதினமும் பேசினதினல் இரத்தங்கக்கி முகமானது அழியப்பெற்றுத் தகர்ந்தான். இன்னமும் அவன் தனது நிலைமையைவிட்டுங் குலைவதுசத்தியமென்று யாவர்களுங்கேட்கும்படி முழக்கமாகக்கூறி இப்பாதையின்கண் இனிமேல் முன்னிலையானவன் மதுரமமைந்த மெல்லிய வார்த்தைகளை யுடையவனன உத்துபாவென்பவனல்லாமல் வேறே யாவருளர்? ஒருவரு மில்லரென்று தெளிந்தார்கள். (எகூ)

கூறுமென் மொழியா னுத்துபா வென்னுங்
குரிசில்பின் னியாவரு நடந்து
தூறடை நெறியுஞ் சிறுபாற் றிடருந்
தொலைத்திடுங் காலையி லாங்கோர்

மாறுகொண் டெழுந்து குயவரி சினந்து
வருவது கண்டுடல் கலங்கி
யாறிடை வீழ்ந்தான் முன்னிலை யிளவ
லனைவரும் பயந்திட வன்றே.

(இ-ள்.)புகழாநிற்கு மெல்லிய வார்த்தைகளை யுடையவனை உத்துபாவென்னு மவ்விறைவனது பின்னர் அக்கூடத்திலுள்ள யாவர்களும் சிறுசெடிகள்பொருந்திய பாதைகளையும் சிறிய பறற்கற்களையுடையதிடருகளையும் தொலைத்து நடந்து சென்றிடுஞ் சமயத்தில், அவ்விடத்தில் ஒரு வேங்கையானது பகைமைகொண் டெழும்பிக் கோபித்து எதிரில் வருவதை முன்னிலையாக நடக்கும் இளம்பருவத்தை யுடைய அவன் பார்த்து தன்னோடுள்ள யாவர்களும் பயங்கரங் கொள்ளும்படி சரீரமானது கலக்கமுற்றுப் பாதையின்கண் விழுந்தான்.

நிலமிசை கலங்கி யுத்துபா வீழ
நெடுங்கழுத் தனைவரி வேங்கை
யளைபடப் பிடித்தங் கடவியி னிடைய
வருக்கனுங் குடபுலத் தடைந்தான்
செலநெறி தெரியுந் தெரிகிலா தென்னத்
திசைதிசை நிறைந்தது திமிரம்
பலபல வருக்கச் சரக்கெலா மிறக்கிப்
படுபரற் பாதையி லுறைந்தார்.

(இ-ள்.)அவ்வாறு கலக்கமடைந்து உத்துபாவென்பவன் பூமியின் மீதுவிழவே வரிகள்படர்ந்த அவ்வேங்கை யானது அவனேறியிருந்த ஒட்டகத்தை வருத்தமுறும் வண்ணம் பிடித்துக்கொண்டு அவ்விடத்திலுள்ள ஒருவனத்திற்போய்சாரச் சூரியனும் மேற்றிசையில் போய்ச்சார்ந்தான். போவதற்குப் பாதையானது தெரியுந் தெரியா தென்று சொல்லும்படி இருளானது திக்குகளெல்லாவற்றிலும் நிறைந்தது. அப்போது யாவர்களும் பற்பலவகுப்பாகிய சரக்குகளெல்லாவற்றையும் இறக்கிக்கொண்டு கூர்மை பொருந்திய பரற்கற்களுடைய அப்பாதையின்கண் தங்கினார்கள். (அக)

ஆய்ந்தபே றறிவர் பசிக்கிடர் தவிர்த்தங்
கவரவர் சார்பினிற் சார்ந்தார்
வாய்ந்தபே ரேழிலார் முகம்மதுந் துயின்றார்
மாகமட் டெண்டிசை கவியு

வேய்ந்தவல் லிருளி லடிக்கடி வெருவி
விடுதியி னடுவுறைந் தவனிற்
சாய்ந்திடா திருகண் டூங்கிடா திருந்தான்
றருக்கினல் வெருக்கொளு மனத்தான்.

(இ-ள்.) அவ்விதமிறங்கி ஆராயப்பெற்ற பெரிய அறிவினை யுடையயாவர்களும் பசியினது துன்பத்தைநீக்கி அவ்விடத்திலுள்ள அவரவர்களின் பக்கங்களிற்போய்ச் சேர்ந்தார்கள் பொருந்திய பேரழகினையுடைய வர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் நித்திரை செய்தார்கள் அப்போது வேங்கை யினால் அச்சத்தைக் கொண்ட மனசை யுடையவனான அவ்வுத் துபா வென்பவன் ஆகாயந் தொடுத்தெண்டிசை மட்டும் கவியும் படி மூடிய வலிய அந்தகாரத்தில் அவ்விடத்திலுள்ளவிடுதிகளின் மத்தியில் தங்கி அடிக்கடி பயமுற்று சரிந்து படுத்திடாமலுங் கண் கள் தூங்கிடாமலும் விழித்துக் கொண்டிருந்தான்.

அலரிவெண் டிரைமே லெழுந்தனன் கீழ்பா
லனைவரு மெழுகவென் றெழுந்தார்
நிலைதளர்ந் திருந்த வுத்துபா வென்போன்
னெறியின்முன் னிலைநடப் பதற்கோர்
தலைவரை வேறு நிறுத்துமென் றுரைத்த
தன்மை கேட் டனைவரும் பொருந்தி
யிலைமலி வேலா ணுசெனுங் குரிசின்
முன்னிலை யெனவெடுத் திசைத்தார்.

(இ-ள்.) அப்பொழுது சூரியனானவன் யாவர்களு மெழும்புங்க ளென்று கிழ்பக்கத்திலுள்ள வெள்ளிய அலைகளை யுடைய சமுத்தி ரத்தின் மேல் எழும்பினான். உடனே நித்திரை செய்த அனைவர்க ளும் விழித்தெழும்பினார்கள் அப்போது தனது நிலைமையானது தளர்ச்சி யுற்றிருந்த அவ்வுத்துபா வென்பவன் பாதையின் கண் முன்னிலையாக நடப்பதற்கு வேறே யொரு தலைவரை நிறுத்துங்க ளென்று சொல்லிய தன்மையினை அனைவர்களும் கேட்டு அதற்குச் சம்மதித்து இனி இலைகள் மிகுந்தவேற்படையை யுடையவனாகிய ஆசென்னு மிறைவன் முன்னிலையென்று எடுத்துச்சொன்னார்கள்.

பாதைபோந்தபடலம்

முற்றிற்று

ஆ படலம்-ம-க்கு கூடிய திருவிருத்தம்-கூஎக.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

சூரத்திற்புனலழைத்தபடலம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

முன்னிலே யாசு நடந்திட நடந்து
முதிரட விகள்கடந் ததற்பின்
றன்னிக ரில்லான் றிருவுளப் படியாற்
றரையினில் ஜபுறயி லிறங்கி
யிங்கிலத் தெவர்க்குந் தெரிகிலா வண்ண
மிளம்பிடி யொட்டையொன் றெளிதாய்ப்
பன்னரும் பாதை தலேதடு மாறப்
பண்பொடு கொடுநடத் தினரே.

(இ-ள்.) பாதையின்கண் முன்னிலேயாக ஆசு என்பவன் நடந்திட யாவர்களும் பின்னால் நடந்துசென்று முதிர்ந்த வனங்களைத் தாண்டி அதன்பிறகுத், தனக்கு யாதொரு உவமையுமில்லாதவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருச்சித்தத்தின்படி ஜிபுறீல் அலேகிஸ்ஸலாமவர்கள் ஆகாயத்தைவிட்டும் பூமியின்கண்ணிறங்கிச் சொல்லுதற்கரிய இவர்களின் பாதையானது இலேசாகத் தடுமாற்றமுற இவ்வுலகத்தின்கண்ணுள்ள யாவர்கட்குந் தோற்றாத வண்ணம் இளம்பருவத்தை யுடைய ஒரு பெண்ணொட்டகத்தை ஆசென்பவனின் ஒட்டகத்தின் முன்னால் பண்புடன்கொண்டு நடத்தினார்கள்.

மட்டவிழ் புயத்தா னசுமுன் னடத்தி
வந்தவொட் டகம்புது மையதாம்
பெட்டையொட் டகத்தைக் கண்டுபின் றொடரப்
பிசகின தருநெறி கானிற்
செட்டரு மெருதும் புரவியு மிடைந்து
சிறுநெறி வயின்வெகு தூர
மெட்டிமுன் னடப்பச் சிறுநெறி குறுகி
யிருந்ததுந் தேய்ந்துபோ யதுவே.

(இ-ள்.) தேனனது அவிழாநிற்கும் மலர்மாலை யணிந்த தோள்களையுடையவனான ஆசென்பவன் முன்னிலையாக நடந்திவந்த ஆண்ணொட்டகமானது ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அதன் முன்னால் நடத்திடும் நூதனமாகிய பெண்ணொட்டகத்தைப்பார்த்து அதைப் பின்பற்றவே, அவர்கள்சென்ற அந்தக்காட்டில் அரிதான பதையானது பிசகினது. வியாபாரப் பொருள்களையடைய அரிய எருதுகளும் குதிரைகளும் வசக்கேடுற்றுச் சிறிய ஒருபாதையினிடமாகத் தாவி அதிக தூரமுன்னால் நடக்க அந்தச் சிறிய பாதையுங் குறுகி இருந்ததும் இல்லாமல் தேய்ந்து போய்விட்டது.

ஆசெனு மரச னொட்டகக் கயிற்றை
  யசைத்திடுந் திசையிலா நடப்ப
வாசியு மெருதுங் கூன்றொருத் தொகையும்
  வழிகெடத் தனித்தனி மறுகத்
தேசிகர் கலங்கி யாமிதற் கென்கொல்
  செய்குவ தெனமன மிடைந்து
வீசிய கானற் சுடச்சுடக் கருகி
  விடர்விடும் பாலையி லடைந்தார்.

(இ-ள்.) அப்போது ஆசென்று சொல்லாநிற்கும் அரசனானவன் தனது ஒட்டகத்தினது நாணயக்கயிற்றை ஆட்டிடுந் திக்குகளெல்லாவற்றிலும் அவ்வொட்டகம்நடக்கவும், குதிரைகளும் இடபங்களும் கூனலையுடைய ஒட்டகக்கூட்டங்களும் பாதையானது கெட்டுப்போகவே, தனித்தனியாக நின்று மறுக்க மடையவும் தேசாந்தரிகளாகிய அவர்கள் யாவர்களும் கலக்கமடைந்து நாம் இவ்விபத்திற்கி யாதுசெய்குவதென்று மனமானது வசக்கேடுற்று எவ்விடமும் எறித்த வெயிலின் வெப்பமானது தங்களது தேகத்தை அதிகமாகச் சுடும்படி தீய்ந்து பிளவுகளை விடா நின்ற ஒரு பாலை நிலத்தின்கண் போய்ச்சார்ந்தார்கள்.

பின்னிய திரைவா ருதியினைச் சுவற்றிப்
  பெரும்புறக் கடலினைத் தேக்கித்
தன்னகங் களித்து வடவையின் கொழுந்து
  தனிவிளை யாடிய தலமோ
பன்னருந் தென் கீழ்த் திசையினன் றிரண்ட
  படையொடு மிருந்தபா சறையோ
உன்னதக் ககன முகடற வுருக்கு
  முலைகொலோ வெனவறி கிலமால்.

(இ-ள்.) அப்பாலேநிலமானது பின்னுதலேக்கொண்ட அலேகளே யுடைய கடலினேவற்றச்செய்துப் பெரிதான புறச்சமுத்திரத்தைக் குடித்துத் தனது மனஞ் சந்தோஷமடைந்து வடவாமுகாக்கினியின் சுவாலேயானது ஏகமாயிருந்து விளேயாடிக்கொண்டிருந்த தலமோ? அல்லது சொல்லுதற் கரியதென்கிழ்த் திசையையுடையவன்ன அக் கினிதேவன் தனதுகூட்டமாகிய சேனேகளோடும் தங்கியிருந்தபாச றையோ? மேலான ஆகாயத்தின் உச்சியானது அற்றுப்போகும்படி யுருக்காநின்ற வுலேக்கூடமோ? இவற்றில் இன்னதென்று யாம்அறி ந்திலோம். (ச)

பருந்திருந் தெழுந்து பறந்தசின் னிழலும்
பற்றறுக் கானதிற் றேய்ந்த
கரிந்திலே தோன்று தொவ்வொரு விருக்கங்
கணங்களின் குலமெனத் தோன்று
மெரிந்தெரி மேய்ந்து கரிந்துவிண் ணிடங்காந்
திடுந்தரை யொருதுளி நீரு
மருந்திடக் கிடையா தலகைக டிரிந்தங்
காள்வழக் கற்றவெங் கானம்.

(இ-ள்.) அன்றியும், பருந்துகளானவை இருந்து எழும்பிப் பற ந்த சிறிய நிழல்களும் பற்றுதலற்றுத் தேய்ந்த அவ்வெய்யலினுல் இலேகளானவை யனேத்துந் தீய்ந்து வெளியினிற்றெரியாது ஓவ்வொ ருவிருட்சங்களும் பிசாசங்களின் கூட்டத்தைப்போல விளங்காநிற் கும். மேலும் அக்கினியானது எவ்விடமும் எரிந்து அங்குள்ளபுற் பூடாதிக ளெல்லாவற்றையுஞ் சாப்பிட்டு ஆகாயமுங்கரிந்து சுடாநி ற்கும் அந்தப்பூமியின்கண் குடிப்பதற்கு ஒருதுள்ளி ஜலமாவது அக ப்படாது. இன்னம் அங்குபிசாசங்கள் திரிந்து மனுஷியர்களின்நட படியற்ற வெவ்வியகானகம். (ரு)

பாலேயென் றுலர்ந்த செந்நிலக் கானற்
பரப்பினேப் புனலென வோடிச்
சாலவு மிளேத்துத் தவித்துழை யினங்க
டனித்தனி மறுகிய மறுக்க
மாலுளர்க் கிருண்ட புன்மனச் சிறியோர்
மருங்கினி லிரந்திரந் திடைந்து
காலறத் தேய்ந்த பலகலே மேலோர்
கருத்தினில் வருத்தமொத்தனவே.

(இ-ள்.) அன்றியும், மானினதுகூட்டங்கள் பாலையென்று சொல்லும்படி காய்ந்த செந்நிறத்தின் நிலமாகிய வெயிலினையுடையபரப்பை நீரென்று நினைத்துஓடிமிகவுமிளைப்புற்றுத் தாகத்தையடைந்து ஒவ்வொன்றாக மறுகிய மறுக்கமானது மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை யென்னு மூவ்வாசையினது மயக்கத்தினாற் சுழற்சிதங்கிக் கறுத்த கீழ்மையான மனத்தையுடைய சிறியோர்களின்பக்கத்தில் யாசித்து யாசித்து வசக்கேடுற்றுக் கால்முழுவதுந்தேய்ந்த பல சாஸ்திரங்களையுங் கற்றுத்தெளிந்த மேலோர்களது சிந்தையின்கண்ணுள்ள வருத்தத்தை நிகர்த்திருந்தது. (சு)

கள்ளியின் குலங்கள் வெந்தொடுங் கினவேர்க்
 கட்டை யினுட்டுளைகிடந்து
புள்ளிபூத் திருந்த பைத்தலைப் பாந்தள்
 புறந்திரிந் துறைந்திடா திறந்து
முள்ளெயி றொதுங்கிச் செம்மணி பிதுங்கி
 முளைதொறுங் கிடப்பதைச் செறிந்த
கொள்ளியிந் தனங்க ளென்றுழைக் குலங்கள்
 குறுகிடப் பயந்துகான் மருகும்.

(இ-ள்.) அன்றியும், அப்பாலைநிலத்திலுள்ளகள்ளியினது கூட்டங்கள் சூரியவெப்பத்தினால் அவிந்து ஒடுக்கமுற்றவேர்க்கட்டைகளின் அகத்துவாரங்களில் புள்ளிகள் பூத்திராநிற்கும் படா மகுடத்தினையுடைய சர்ப்பங்கள் அவ்வெப்பத்தினால் வெளியில் உலாவி மீளவும் அங்கு சென்று தங்கிடாது கிடந்து இறந்து அவற்றின்தாழைமுட்களபோன்ற மடங்குதலாகிய பற்கள் ஒதுங்கிச் செந்நிறத்தையுடைய மணிகள் பிதுங்கி முளைகள்தோறுங் கிடப்பதைமான்கூட்டங்கள்கண்டு இவைகள் நெருங்கிய சுவாலைகளையுடைய நெருப்பெரியுங் கொள்ளிகளென்று அவ்விடத்தில் செல்ல அச்சங்கொண்டு நின்று காற்கள் மறுக்கமடையும். (எ)

மூவிலை நடுவேற் காளிவீற் றிருப்ப
 முறைமுறை நெட்டுடற் கரும்பே
யேவல்செய் துறைவ தலதுமா னிடர்கா
  விடுவதற் கரிதுசெந் நெருப்புத்
தாவியெப் பொருப்புங் கரிந்தன சிவந்து
 தரையிளந் தனவதிற் பிறந்த

வாவியோ வெழுந்த புகைபரந் ததுவோ
வறக்கொடுங் கானலென் பதுவே.

(இ-ள்.) அன்றியும், அப்பாலைநிலத்தில் முக்கவராகப் பொருந்திய இலைகளையுற்ற வேலாயுதத்தையுடைய காளியென்னும் பிசாசமானது வீறுடனிருக்க, நெடிய உடல்களையுடைய கரிய பேய்கள் வரிசைவரிசையாய் ஏவல்புரிந்துதங்குவதல்லாது மானிடர்கள் கால் வைப்பதற்கும் அரிதாகும் மேலும் சிவந்த நிறத்தையுடைய நெருப்புத் தாவலுற்று எல்லாமலைகளும் கரிந்தன. தரைகள் சிவப்படைந்து பிளந்தன. ஆனல் முழுக்கொடுமையையுடைய கானலென்று சொல்லுவது அவ்விதங் கரிந்த பிளப்புற்றவைகளி லிருந்துண்டாகும் ஆவியோ? அல்லது ஓங்கிய புகையானது பரந்ததுவோ? இன்னதென்று யாமறியோம். (அ)

சேந்தெரி பரந்த பாலையிற் புகுந்து
சென்னெறி சிறிதுந்தோன் ரூமற்
காந்தெரி கதிரோ னெழுதிசை தெற்கு
வடக்குமேற் கெல்லைகா ணுமன்
மாந்தரு மாவுந் திசைதடு மாறி
வாயினீ ரறவுலர்ந் தொடுங்கி
யேந்தெழில் கருகி மனமுடைந் துருகி
யெரிபடு தளிரையொத் திடுவார்.

(இ-ள்.) அவ்விதம்சிவந்து அக்கினிப்பரப்புற்ற அந்தப்பாலைநிலத்தின்கண் வியாபாரிகளான அம்மனுஷியர்களும் குதிரை ஒட்டகம் இடபமுதலிய மிருகங்களும் நுழைந்துசெல்லும்பாதையானதுகொஞ்சமேனுந் தெரியாதுசுடாநின்ற தீயினதுகிரணங்களையுடைய சூரியனுதயமாகும் திசையாகியகிழக்குதெற்குவடக்குமேற்கு என்னும் நான்கெல்லைகளுந்தோற்ருமல் தடுமாற்றமுற்றுவாயிலுள்ள உமிழ்நீர் முழுவதுங் காய்ந்து சோர்வடைந்து சரீரத்தின்கண் தாங்குகின்ற அழகானதும் தீய்ந்து மனமுடைந்து கரைதலுற்று நெருப்பிற்பட்ட தளிரை நிகர்த்தார்கள். (கூ)

மன்னவ ஞசு முன்னடந் ததற்கோர்.
வல்வினை பின்ருெடர்ந் ததுவோ
வின்னைா ளகில மடங்கலுந் தழலா
லெரிபடுங் காரணந் தானே

முன்னைநாள் விதியோ நகரைவிட் டெழுந்த
 முகூர்த்தமோ பவங்கண்முற் றியதோ
பன்னுதற் கெவையென் றறிகுவோங் கொடியேம்
 பாதையிற் படும்வர லாறே.

(இ-ள்.) அன்றியும், இப்பாதையின்கண் படாநிற்கும் வரலாறானது அரசனாகிய ஆசென்பவன் முன்னிலையாகச் சென்றதற்கு ஒரு வலிய வினையானது வந்து பின்பற்றியதோ? அல்லது உலகமெல்லாம் இந்நாளில் அக்கினியால் எரிபட்டிடுங்காரணமோ? ஆதிகாலத்தின் விதிப்பயனோ? நாம் அனைவரும் நமதூராகிய திருமக்கமாநகரத்தை விட்டும் எழும்பிய சுபவேளையோ? நமதுபாவங்களனைத்து மொன்று கூடி முதிர்ந்ததுவோ? கொடுமையையுடையோமாகிய யாம் இவற்றில் சொல்லுதற்கு எவையென்று தெரிகுவோ மென்ன. (ய)

பாடுறு புனலற் றெவ்வொரு காதம்
 படுபரற் பரப்புநாற் றிசைக்கு
மோடுவர் திரும்பி மீள்குவ ரடிச்சுட்
 டுச்சியும் வெதும்புற வுலர்ந்து
வாடுவர் துகில்கீழ்ப் படுத்தியொட் டகத்தின்
 வயிற்றிடை தலைநுழைத் திடுவார்
தேடிடும் பொருட்கோ வுயிரிழப் பதற்கோ
 செறிந்திவ ணடைந்தன மென்பார்.

(இ-ள்.) நீரானது இல்லாமல் துன்பத்தைப்பொருந்திய ஒவ்வொருகாவதமும் கூர்மையுற்றபரற்கற்களின் பரப்பைக்கொண்டநான்கு திக்குகளிலும் ஓடுவார்கள், திரும்பி மீண்டு வருவார்கள், பாதங்கள் வெந்து சிரசும் சூட்டைப் பொருந்தும்படி காய்ந்து வாடுவார்கள் வஸ்திரங்களைக் கீழேவைத்து அதன்மீதுஏறி நின்றுக்கொண்டு தலைகளை ஒட்டகத்தின் வயிற்றினது பக்கத்தில் புகுத்திவிடுவார்கள் நாம் சம்பாதித்திடுந் திரவியத்திற்காகவோ? அல்லது ஜீவனை இழந்துவிடுவதற்காகவோ கூட்டமுற்று இவ்விடத்தில்வந்து சேர்ந்தோமென்று. சொல்லுவார்கள். (கக)

ஓங்கிய வுதய கிரிமிசை யெழுந்த
 மதியென வொட்டகை யதன்மேல்
வீங்கிய புயமுங் காத்தினி லயிலும்
 வென்முறு வலுமலர் முகமும்

பாங்கினிற் குளிர்ந்த வெண்கதிர் பரப்பப்
 பரிமள மான்மதங் கமழத்
தூங்கிசை மறைதேர் முகம்மதும் பாலைத்
 துன்புறு தின்பமுற் றனரே.

(இ-ள்.) அப்போது தூங்கிய இசைகளையுடைய வேதங்களனைத்தையுந் தெளிந்த நபிமுஹம்மது முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் வளர்ச்சிதங்கிய உதய பருவதத்தின்மேல் யெழும்பிய சந்திரனைப்போல ஒட்டகத்தின்மீது பருத்த தோள்களும் வேலாயுதமும் வெண்ணிறத்தையுடைய பற்களும் தாமரைமலர்போன்ற முகமும் பக்கங்களிற் குளிர்ச்சிபொருந்திய வெள்ளிய கிரணங்களைப்பரப்பவும், தேகத்தின் கண்ணுள்ள கஸ்தூரிவாசனைகமழவும் இருந்து அந்தப்பாலைநிலத்தைத் துன்பமுறாது இன்பமுற்றார்கள். ()

பாலையி லடைந்து பசியினு லிடைந்து
 பலபல வருத்தமுற் றதுவும்
வேலைவா ருதிபோல் வழிபிழைத்ததுவும்
 விழுந்தியான் முகமுடைந் ததுவுங்
கோலமார் புலிவந் ததுமுகம் மதையாங்
 கூட்டிவந் துறுபவ மென்னச்
சாலவு முரைத்தா னீதியை வெறுத்த
 தறுகணு னெனுமபூ ஜகிலே.

(இ-ள்.) அப்பொழுது நியாயத்தை வெறுத்த தறுகண்ணனென்னுமபூஜகிலானவன் நாமனைவோர்களும் இந்தப் பாலைநிலத்தின்கண் வந்து சேர்ந்துப் பசியினல்வசக்கேடுற்றுப் பற்பலதுன்பங்களடைந்ததும், நீர்த்திரைகளையுடைய சமுத்திரத்தைப் போன்ற பாதையானது தவறினதும், யான்பூமியின்கண் விழுந்து முகந்தகர்ந்ததும், அலங்காரமாகிய வேங்கையானது வந்து சேர்ந்ததும், இந்தமுகம்மதென்பவனை நம்மொடுகூட்டிக்கொண்டுவந்ததினல் பொருந்திய பாவமென்று மிகவாக எடுத்துச் சொன்னன். (கரு)

மூரிவெற் பனைய புயமுகம் மதுவை
 முன்னிலைத் தலைவரா நிறுத்தித்
தாரையிற் செலுதும் மிடர்களுந் தவிருந்
 தழலெழும் பாலையுங் குளிர்ந்து

வேரியங் கமல வாவியங் கரையாம்
 விரைவினிற் சாமடை குவமென்
ருரிதுக் குரைத்தார் தாதவிழ் மலர்த்தா
 ரணிதிகழ் புயத்தபூ பக்கர்.

(இ-ள்.) பின்னர் இதழ்கள்விரிந்த புஷ்பமாலையினது அழகு பிரகாசியாநின்ற தோள்களையுடைய அபூபக்கரவர்கள் பெருமைதங்கிய மலைபோலும் புஜங்களையுடைய நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை முன்னிலையின் நாயகராகநிற்கச் செய்து நீங்கள் பாதையின்கண் செல்லுங்கள். உங்களுடையதுன்பங்களும் நீங்கும். அக்கினியானது எழும்பாநின்ற இந்தப் பாலைநிலமுங் குளிர்ச்சியடைந்து வாசனைபொருந்திய அழகிய தாமரைத் தடாகங்களின் கரைகளைப்போலாகும். நாமும் சீக்கிரத்தில் சாம்நகரத்தைப்போய்ச் சேருவோமென்று ஆரிதென்பவருக்குச் சொன்னார்கள். (கச)

ஈதுநன் றெனவொத் தனைவரு மிசைத்தா
 ரெழின்முகம் மதுவுமுன் னிலையாய்ப்
பாதையினடப்பப் பெரியவ னருளின்
 பணிகொடு ஜபுறயீ லிறங்கிப்
பேதமற் றணுகி யொட்டகக் கயிற்றைப்
 பிடித்தன ரரைநொடிப் பொழுதிற்
றீதற நெறியுந் தெரிந்தது நான்கு
 திசைகளுந் தெளிதரத் தெரிந்த.

(இ-ள்.) அவ்வண்ணம் அபூபக்கரவாகள் கூறியவார்த்தைகளை யாவர்களுங்கேட்டு இதுவேநல்ல சமாசாரமென்று அனைவர்களும் சம்மதித்துச் சொன்னார்கள். பின்னர் அழகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் யாவர்கட்கும் முன்னிலையாய் அப்பாதையின்கண் நடக்கப் பெரியவனான ஜல்லஜலால்ஹூவத்த ஆலாவின் கிருபையினது கட்டளைகொண்டு ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வானலோகத்தைவிட்டும் பூமியின்கண்ணிறங்கிப் பேதமில்லாது நபிகணாயகமவர்களின் ஒட்டகத்தை நெருங்கி. அதன்நாணயக் கயிற்றைப் பிடித்தார்கள்' அவ்விதம் பிடிக்கவே ஒரு அறைநொடிப் பொழுதிற் குற்றமறப் பாதையுந் தோன்றினது. தேர்ச்சியுறும்படி நான்கு திக்குகளுந் தெரிந்தன. (கரு)

தலைமைமுன் னிலையாய் முகம்மது நடப்பச்
 சாருநன் னெறியினைச் சார்ந்தோம்.

நிலமிசை கரிய மேகமொன் றெழுந்து
நிளலிவர்க் கிடுவதுங் கண்டோ
மலேகடற் றிரைபோற் கானலில் வெதும்பி
யலேந்திடு வருத்தமுந் தவிரப்
புலனுறப் புனலும் பருகுவஞ் சிறிது
போழ்திலென் றனைவரும் புகன்றார்.

(இ-ள்.) அப்போது அப்பாதையின்கண்ணுற்ற யாவர்களும் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்ல மவர்கள் முன்னிலேயினது நாயகராய்நடக்கவே, நாம்அடையக்கூடிய நல்லபாதையினேயடைந் தோம். கருநிறத்தையுடைய மேகமொன்றெழும்பி இப்பூமியின்மீது அவர்களுக்கு நிழலிடுவதையும் பார்த்தோம் அலேகளேயுடைய சமுத்திரத்தினது திரையைப்போல வெயிலினுல் வாட்டமுற்று அங்கு மிங்கும் அலேந்துதிரியும் துன்பமும் தீரும்படியாகவும், இந்திரியங்களுணர்ச்சியுறும்படியாகவும், இன்னங் கொஞ்சநேரத்தில் தண்ணீருங்குடிப்போமென் ருெருவர்க் கொருவர் பேசிக்கொண்டார்கள்.

மந்தரம் பொருவா தெழுந்தபொற் புயத்து
முகம்மது மேறுவா கனத்தின்
கந்தரக் கயிற்றை யசைத்திட வுளத்தின்
கருத்தறிந் தொட்டகங் களித்துச்
சுந்தரப் புவியில் வலதுகா லோங்கித்
தொட்டிடத் தொட்டவப் போதிற்
சிந்துநேர் கடுப்ப நுரைதிரை பிறங்கச்
செழித்தெழுந் தனநதிப் பெருக்கே.

(இ-ள்.) அவ்வாறு அவர்கள் பேசிக் கொள்ளவே மலேகளுந் தமக்கொப்பாகாதபடி யோங்காநிற்கும் அழகிய புயங்களேயுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்ல மவர்களுந் தாங்கள் ஏறியிருக்கப்பட்ட வாகனமாகிய ஒட்டைகையின் கழுத்தினது நாணயக் கயிற்றை அசைக்கவும், அவ்வொட்டக மானது அவர்களது மனத்தின் கண்ணுள்ள எண்ணத்தைத் தெரிந்து சந்தோஷமடைந்து அழகிய பூமியின்மீது தனது வலதுகாலே யோங்கித் தோண்டவும், தோண்டிய அந்தச்சமயமே சமுத்திரத்தைப்போல விரைவினில் நுரைகளும் திரைகளும் பிரகாசிக்கும்படி ஆற்றினது பிரவாகஞ் செழிப்புற் றெழும்பினது. (கஎ)

ஆறெழுந் தோடிப் பாலையைப் புரட்டி
யழகுறு மருதம தாக்கத்
தேறல்கொப்பளித்து வனசமுங் குவளைத்
திரள்களுங் குமுதமும் விரிய
வேறுபட் டுலர்ந்த மரமெலாந் தழைத்து
மென்றழை குளிர்தரப் பூத்துத்
தூறுதேன் றுளித்துக் கனிகளுங் காயுஞ்
சொரிதரச் சோலைசூழ்ந் தனவே.

(இ-ள்.) அவ்வாறு ஆறானது எழும்பி எவ்விடமும் ஓட்டமுற்றுப்பாவி அந்தப்பாலை நிலத்தைத் திருப்பி அழகுபொருந்திய மருதநிலமாக்கவே, தாமரைகளும் குவளைக் கூட்டங்களும் ஆம்பல்களும் மதுவைக்கக்கி மலர! வேற்றுமைப்பட்டுக் காய்ந்த விருட்சங்களனைத்தும் குளிர்ச்சியுறும்வண்ணம் மிருதுவாகிய தளிர்களைத் தளிர்த்துப்பூத்துப் பொழியாநிற்கும் தேனைச்சிந்திப் பழங்களும் காய்களும் சொரியும்படியாக நாலுபக்கங்களுஞ் சோலைகள் சூழ்ந்தன.

வற்றுறுச் செல்வப் பெருக்கினி தோங்கும்
வகுதையும் பதியுசை னயினர்
பேற்றபே றிருகொ லெனமுழு மணியாய்ப்
பிறந்தமெய்த் துரையபுல் காசீஞ்
சுற்றமுங் கிளையுஞ் சிறப்பொடு தழைத்துக்
சூழ்ந்திருந் தணி திகழ் வதுபோற்
குற்றமி னதியி னிருகரை மருங்குங்
குறைவறத் தளிர்த்தனத் தருக்கள்.

(இ-ள்.) அன்றியும் வற்றாதசம்பத்தின் மிகுதியானது இனிமையுடனோங்காநிற்கும் அழகிய வகுதைநகரத்திலுள்ள ஹுசையின் நயினரவர்கள் பெற்றபேறானது இதுவென்றுசொல்லும்படி பூரணவிரத்தின மாயுதயமான சத்தியவதிகாரியாகிய இந்நூலின் கொடைநாயகம் அபுல் காசிமரைக்காயரவர்களை அவர்களின் உற்றார்களும் பந்துக்களும் தளிர்த்து சிறப்புடன் வளைந்திருந்து அழகு பிரகாசிப்பதுபோலக் குற்றமற்ற அவ்வாற்றினது இருகரைகளின் பக்கங்களிலும் விருட்சங்கள் குறைவில்லாது வளைந்துநின்று தளிர்த்துப் பிரகாசித்தன. (கக)

நானமும் புழுகும் பாளிதக் குலமு
  நறைகெட மிகுந்தவா சமயமாய்த்
தேனினுங் கருப்பஞ் சாற்றினுந் திரண்ட
  தெங்கிள நீரினு மினிதா
யூனமி னதியி னொருகைநீ ரருந்தி
  யுடல்குளிர்ந் தரும்பசி யொடுங்கி
யானன மலர்ந்து முகம்மதைப் புகழ்ந்தங்
  கனைவரு மதகளி றுனர்.

(இ-ள்.) அப்போது அவ்விடத்திலுள்ள யாவர்களும் கஸ்தூரி புழுகு பாளிதக்கூட்ட முதலியவைகளின் வாசனைகளும் கெட்டுப் போகும்படிப் பெருகிய வாசனையுடையதாய்த் தேன் கருப்பஞ்சாறு திரட்சியுற்ற தெங்கினிளநீர் இவைகளின் இனிமையைப்பார்க்கிலு மினிமையுடையதாய்க்குறைபாடற்ற அவ்வாற்றினதுஜலத்தில் ஒரு சிறங்கை நீரைக்குடித்துச் சரீரங் குளிர்ச்சியடைந்து அரிய பசியானது ஒடுங்கி முகமலர்ச்சிபெற்று நபிமுகம்மது சல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களைத் துதித்து மதங்களைப் பொழியாநின்ற யானைகளை நிகர்த்தார்கள்.

சுரத்திற்புனலழைத்தபடலம்.

முற்றிற்று.

ஆ படலம்-கக-க்கு-திருவிருத்தம்-சுகூகூ.



பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

பாந்தள்வதைப்படலம்.

கலிவிருத்தம்.

கனலுண்ட கடுஞ்சுர மீதுநறும்
புனலுண்டு பொருந்தின ரவ்வுழையின்
சினமுண்டெழு செங்கதிர் பொங்குமிரு
ளினமுண்டு குணக்கி லெழுந்ததுவே.

(இ-ள்.) நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பறக்கத்தால் கனலினுல் உண்ணப்பட்ட கொடிதான அந்தப்பாலைநிலத்தின் மீதுண்டாகிய வாசனைதங்கிய நீரை யாவர்களுங் குடித்து அவ்விடத்திற்றானே அவ்விராப்பொழுது தங்கியிருந்தார்கள். பின்னர் கோபத்தை யுட்கொண் டெழும்பாநிற்கும் சிவந்தகிரணங்களையுடைய சூரியனானவன் பொங்குகின்ற அந்தகாரத்தினது கூட்டத்தை விழுங்கிக் கீழ்பாற்கடலின்கண் உதயமாயினான். (க)

மருதங்கள் கலந்த வனத்திலிருந்
தெருதும்பரி யும்மெழி லொட்டகமும்
பெருகுந்திர ளும்படி பின்செலவே
வரதுங்க முகம்ம தெழுந்தனரே.

(இ-ள்.) அப்பொழுது மேலான வரப்பிரசாதத்தையுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அழகிய இடபங்களும் குதிரைகளும் ஒட்டகங்களும் அங்குள்ள ஜனக்கூட்டங்களும்பெருகிடும்படித் தங்களது பின்னால்வர, மருதநிலங்கள் கலப்புற்ற அந்தவனத்தின்கண்ணிருந் தெழுந்தருளினார்கள். (உ)

வடிவாலொளி வீசிய வானவர்கோன்
படிமீதுறு பாதையின் முன்செலவே
நெடியோனபி பின்செல நீணெறியிற்
கடிமார்பர் கலந்து நடந்தனரே.

(இ-ள்.) அவ்வித மெழுந்தருளவே தங்களது சொரூபத்தினு லெவ்விடத்தும் பிரகாசத்தை வீசாநிற்கும் அண்டர்பிரானுகிய ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் பூமியின்மேற் பொருந்தியபாதையினது முன்னுல் நடக்கவும், நெடியோனுன ஜல்லஷகுனைகுவத்த ஆலாவின் நபியாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நீட்சிதங்கிய அப்பாதையின் பின்னுல் நடக்கவும், வாசனையுற்ற மார்பினையுடைய மற்றும்யாவர்களு மொருவரோ டொருவர் கலந்து அதன்பின் நடந்தார்கள். (ங)

கானகந்தனி லேகிய காலையினிற்
ருனைந்தரு தாரை தனைத்தெரியா
தீனந்தரு வல்லிரு ளெய்திநெடு
வானுந்தெரி யாது மறைத்ததுவே.

(இ-ள்.) அவ்வாறு யாவர்களுங் காட்டினிடமாகப்போய்ச் சேர்ந்தசமயத்தில் கண்ணுற்காணக்கூடிய தரிசனத்தை தராநின்றபாதையானது தோற்ருது குறைபாட்டை யுண்டாக்காநிற்கும் வலிய அந்தகாரமானது எவ்விடத்திலும் பொருந்தி நீட்சியுற்ற ஆகாயந் தெரியாது மறையும்படிசெய்தது. (ச)

இருள்கொண்டு பரந்திட யாவருமோர்
மருள்கொண்டவர் போல மயங்கினரா
லருள்கொண்ட முகம்மது மன்புறவே
தெருள்கொண்டு நடந்தனர் செல்வழியே.

(இ-ள்.) அவ்விதம் அந்தகாரமானது எவ்விடமும் பற்றிப் பரவிட அங்குற்ற யாவர்களும் ஒப்பற்றஉன்மதங் கொண்டவர்களைப் போல மயக்கமுற்ருர்கள். அந்தச்சமயத்தில் அன்புபொருந்தும்படி அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருவருள்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் செல்லாநின்ற பாதையின்கண் தெளிவுற்று நடந்தார்கள். (ரு)

கொடுவல்லிரு ளுண்டு கொழுங்கதிர்பைங்
கடலந்தரை மீதெழு காரணமுற்
றிடருந்தவி ரும்மிவ ராலெனவே
மடனெஞ்ச மிலாது மகிழ்ந்தனரே.

(இ-ள்.) அப்போது அங்குற்ற யாவர்களும் இந்தநபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களால் செழிய சூரியனுனவன் கொ

டமைதங்கிய இந்தவலிய அந்தகாரத்தை விழுங்கிப் பசுமைபொருந்திய கடலினையுடைய அழகிய இப் பூமியின்மீது எழாநின்ற காரணமுண்டாகி நமது துன்பங்களும்நீங்கிவிடுமென்றுசொல்லி உன்மதங்கொண்ட அகமானது ஒழிந்து சந்தோஷமடைந்தார்கள். (௬)

மருமிக்க புயத்தெழில் வள்ளலுடன்
கருமத்தொழில் காரரு மற்றவரு
மொருமித்து நடந்துறு வாவெனுமோ
ரருவிக்கரை மேவி யடுத்தனரே.

(இ-ள்.) அவ்விதம் சந்தோஷமடைந்து வாசனைமிகுந்த தோள்களையுடைய அழகியவள்ளலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடன் கடமைத்தொழில் செய்யப்பட்டவர்களும் மற்றும் வியாபாரிகளும் ஒன்றுபட்டு நடந்துசென்று உறுவாவென்று சொல்லும் ஓராற்றங்கரையை நெருங்கி யடுத்தார்கள். (எ)

வண்டார்பொழி லார்வரை யூடருவி
யுண்டார்சில ருண்கிலர் காணெனவே
கண்டார்நபி வல்லவனைக்கருதிக்
கொண்டார்புன லுங்குதி கொண்டதுவே.

(இ-ள்.) அப்பொழுது வண்டுகள் நிறைந்த சோலைகள்பொருந்திய மலையினிடமாக இருந்து ஒழுகாநிற்கும் அந்தஆற்றிற் சொற்பமாக இருந்த நீரைச் சிலபேர்கள் குடித்தார்கள். மீதியில்லாது சிலபேர் குடித்திலர் பாருங்களென்று சொல்ல, நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பார்த்து வல்லவனான ஹக்குசுபுகானகுவத்த ஆலாவைச் சிந்தையின்கண் எண்ணிப் பிரார்த்தித்துக்கொண்டார்கள். உடனே அவ்வாற்றில் இருகரைகளும் நிரம்ப நீரும் பெருகிவந்தது. (அ)

அளித்தானுண நீர்கிடை யாதகரை
யுளித்தானிலை யாதிட வோடுபுனற்
குளித்தார்குடித் தார்மகிழ் கொண்டுடலங்
களித்தாடி நடந்தனர் காளையரே.

(இ-ள்.) ஆனால் முன்னர்க் கைகளினால் அள்ளியுண்ணும்வண்ணம் நீரானது கிடையாத கரைகளையுடைய அவ்வாற்றினிடத்தில் ஆளிறங்குதற்கு நிலையாதவிதமாய் இருமருங்குகளிலும் அலைகளை வீசும்படி யோடாநின்ற அந்த ஜலத்தின்கண் காளைப் பருவத்தை

யுடைய யாவர்களும் முன்தங்களிற் சிலபேர்களுக் குண்டாயிருந்த குறையானது யாதொன்று மில்லாமற்குளித்துக் குடித்து மனமகிழ்ச்சி கொண்டு சரீரமானது களிப்படைந்து ஆநந்தக்கூத்தாடி நடந்து சென்றார்கள். (கூ)

மகிழ்கொண்டு நடந்த வனந்தனிலே
துகடுன்றி விசும்பு துடைத்திடவே
நிகழ்கின்ற நெடுந்தொலை சென்றதின்மே
லுகள்கின்றொரு வன்வர வுற்றனனே.

(இ-ள்.) அவ்விதம் யாவர்களுங் களிப்படைந்து சென்ற அக் கானகத்தில் தூசிகளானவை நெருக்கமுற்று ஆகாயத்தைச் சீத்திடும்படி நிகழ்கின்ற நெடுந்தூரம் போனதின் பின்னர்க் குதிக்கா நிற்கும் ஒருமனிதனானவன் ஆங்குவந்து சேர்ந்தான். (கய)

கையோடிரு காலு நடுங்கிடவே
மெய்யோடிய வேர்வைகள் சிந்திவிழ
வையோவிதி யோவென வாயலறி
யுய்வாறினி யேதென வோதினனே.

(இ-ள்.) அவ்வாறுவந்து சேர்ந்த அம்மனிதனானவன் இரண்டு கைகளுடன் இரண்டுகால்களும் நடுக்கமடையவும், சரீரத்தின்கண் ஓட்டமுற்றசுவேத நீர்த்துளிகள் சிதறிப்பூமியின்மீது விழவும், வாயினால் ஐயோ? விதியோ? வென்றுகூறி யொலித்து இனிமேல் பிழைக்கும்வழி யாதென்று சொல்லினன்.

மயமாறிட வாய்குழ றிக்குழறித்
துயரோடுற வந்து சுழன்றவனை
வயவீரர்கள் கண்டுன் மனத்திலுறும்
பயமேதுகொ லென்று பகர்ந்தனரே.

(இ-ள்.) அவ்விதம் தனதுசரீரத்தின்கண்தங்கிய அழகானதும் நீங்கிடும்படி வாயானது பேசுதற்கேலாது குழறிக்குழறித் துன்பத்துடன் பொருந்தும்வண்ணம் வந்து சுழற்சியுற்ற அம்மனிதனை அங்குள்ள வெற்றியையுடைய வீரர்களான யாத்திரைக்காரர்களனைவரும்பார்த்து உனது மனத்தின்கண் தங்கியபயங்கரம் யாது? அதைச் சொல்லுவாயாகவென்று கேட்டார்கள். (கஉ)

சினமுண்ட செழுங்கதிர் வேலுடையீர்
வனமுண்டரை நாழிகை யுள்வழியிற்

கனமுண்டொரு காரண மாமலையி
னினமுண்டு பருத்தெழு கின்றதுபோல்.

(இ-ள்.) அவ்வாறுகேட்க, அம்மனிதனானவன் சினத்தையுண்ட செழிய பிரகாசந் தங்கிய வேற்படையையுடைய வியாபாரிகளே! இன்னம் அரைநாழிகை வழியினகம் ஒரு காடுண்டு. அக்காட்டில் பாரமான ஒருகாரணமுண்டு. அதென்னவென்றால் பெரிய பருவதங்களின் கூட்டங்களைச் சாப்பிட்டுப் பருப்பமுற்று எழும்புகின்றதைப்போல. (௧௩)

அரவொன்றுள தத்திரி யும்பரியுங்
கரமொன்று கரித்திர ளும்மெதிரே
வரவுண்டிடும் வாறலை நீளமதை
யுரமொன்றி யுரைத்திட நாவரிதே.

(இ-ள்.) ஒரு சர்ப்பமானதுண்டு. அது ஒட்டகங்களும் குதிரைகளும் துதிக்கையினைப் பொருந்திய யானைக்கூட்டங்களும் தனதுமுன்னால்வர அவைகளை அருந்திடும். அன்றியும், அச்சர்ப்பத்தின் வால்தொடுத்துத் தலைவரையுமுள்ள நீளத்தை வலிமைபொருந்தி நாவினால் எடுத்துச் சொல்லுவதும் அரிதாகும். (௧௪)

கண்ணின்கன லுங்கடை வாய்புரளப்
பண்ணுங்கவை நாவொடு பற்களுறும்
வண்ணந்தனை யோதிட வானவருந்
துண்ணென்றுட லங்க டுணுக்குறுவார்.

(இ-ள்.) மேலும் அச்சர்ப்பத்தின் கண்களி லிருந்துண்டாகும் அக்கினியையும் கடைவாயிற் புரளும்படி செய்யும் பிளவு தங்கிய நாவினையும் பற்களிற் பொருந்தியிருக்கும் வண்ணத்தையும் எடுத்துச் சொல்லத் தேவர்களுந் தங்களது சரீரங்கள் துண்ணென்று பயங்கர மடைவார்கள். (௧௫)

திருகுஞ்சின மாயது சீறிவெகுண்
டிருகுன்று கடந்தென தின்னுயிரைப்
பருகும்படி வந்தது பாருமதோ
வருகின்றது காணென மாழ்கினனால்.

(இ-ள்) அன்றியும், அந்தச் சர்ப்பமானது முறுகிய கோபத்தையுடையதாய்ச் சீற்றமுற்றுச் சினந்து இனிமைதங்கிய எனது உயிரைச் சாப்பிடும்படியாக பெரிய மலைகளைத் தாண்டி வந்தது. அதோ! வருகின்றது பாருங்களென்று சொல்லிமயக்கமடைந்தான்.

அலேவுற்றவ னம்மொழி கூறலு
நிலேயற்றவர் நின்று நினேந்துநினேந்
துலேவுற்றுட லங்க ளொடுங்கிமன
மலேவுற்று மயங்கி வருந்தினரே.

(இ-ள்.) வருத்தமுற்றவனுன அம்மனிதன் அவ்வாறு அந்த வார்த்தைகளேச் சொன்னமாத்திரத்தில், அதை அவ்வியாபாரிகள னைவரும் காதுகளினுற் கேள்வியுற்றுத் தங்களது நிலேபரத்தையொழிந்து அவ்விடத்தில்தானே போகாமல் நின்று அச்சர்ப்பத்தை யெண்ணியெண்ணிச் சரீரங்கள் நடுங்கி யொடுங்கி மனமானது மாறுபாடாய் மயங்கித்துன்ப மடைந்தார்கள். (கஎ)

வந்தானுரை செய்தது மற்றவர்க
ளுந்தாவி பதைத்திட நோக்கினரா
லுந்தாதுறு பாதையி லொட்டகம்விட்
டிந்தாரெழில் வள்ள லிறங்கினரே.

(இ-ள்.) அவ்வாறு தங்களுக்கு எதிராக ஓடிவந்த அம்தனிதன் சொல்லிய வார்த்தைகளேயும் அதைக்கேட்டு மற்றவாகள் வருத்தமுற்றுத் தங்களது ஜீவனுனது துடித்திடும்படி நிற்பதையும் சந்திரனேப் பார்க்கிலும் மிகுந்த அழகினேயுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்ல மவர்கள் பார்த்துத் தாங்கள் ஏறியிருந்த ஒட்டகத்தை முன்னே செலுத்தாது அதைவிட்டும் பூமியின்கண்ணிறங்கினுர்கள். (கஅ)

அதிர்கொண்டது நாசியி லங்கியெழக்
கொதிகொண்டுறு கோபம தாயரவஞ்
சதிகொண்டு நடந்தது தாரையிலென்
றெதிர்கொண்டன ரெங்கண் முகம்மதுவே.

(இ-ள்.) அவ்விதமிறங்கி அந்தச் சர்ப்பமானது குமுறுெலி பெற்று நாசியினது இருதுவாரங்களிலுமிருந்து அக்கினியானது எழும்பும்படி வெப்பத்தையடைந்து பொருந்திய சினத்துடன் சதிவுகொண்டு பாதையின்கண் நடந்துவருவதென்று எங்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவ சல்லமவர்கள் முன்கொண்டு நடந்து போனுர்கள். (கக)

அரிகண்டு வெகுண்டடல் வாயினேவிண்
டெரிகொண்ட விழிக்கன லிற்றுவிழ

விரிகின்ற படத்தை விரித்துவிடஞ்
சொரிகின்ற தெனத்திசை தூவியதே.

(இ-ள்.) அவ்வண்ணம் நபிகள்பெருமானவர்கள் எதிர்த்துவருவதை அந்தச் சர்ப்பமானதுபார்த்துக் கோபித்து வலிமைதங்கிய வாயைத்திறந்து பிரகாசத்தைக்கொண்ட இரண்டுகண்களிலுமுள்ள அக்கினியானது முரிந்து விழும்படி விரியாநிற்குந் தனது படத்தை விரியும்படிசெய்து மழைபொழிகின்றதுபோல எண்டிசைகளிலும் விடத்தைப் பொழிந்தது. (உ௰)

கழிகின்ற துரும்பொரு கைமுழமுண்
டெழில்கொண்ட முகம்மதெடுத்தெதிரே
வழிகொண்டதை வீசிட வல்லுடல
மிழிகொண்டுதி ரங்க ளெழுந்தனவே.

(இ-ள்.) அப்போது ஒருகைமுழத்தின் நீளமுள்ள கழிந்து போகின்ற ஒருதுரும்பானது அவ்விடத்திலுள்ளது. அத்துரும்பை அழகுபெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் கையினால் எடுத்துப் பாதையின்கண் எதிராகநடந்துசென்று அச்சர்ப்பத்தைவீசிட, அச்சர்ப்பத்தின்சரீரமானது ஈனமாகியஊறடைந்து அவ்வூறுகளிலிருந்து மிரத்தங்களெழும்பிப் பிரவாகித்தன.

அடிபட்டட வித்திர ளத்தனையும்
பொடிபட்டதுருண்டு புரண்டுவயின்
மடிபட்டொரு கற்குவை வாயினிடைக்
கடிபட்டது பட்டது கட்செவியே.

(இ-ள்.) அன்றியும், அச்சர்ப்பமானது அந்தத் துரும்பினால் அடிபட்டு அதைச்சகிக்க முடியாமல் பூமியின்கண் உருண்டு புரண்டதினால் அங்குள்ள வனத்திரள்கள் முழுவதும் தூளாயின. மேலுமதனது வயிறானது மடிப்பைப் பொருந்தி ஒருகற்றிடர் வாயின்கண் கடிப்பட்டது. உடனே அதுவும் மாண்டுபோய்விட்டது. ()

வரைபோலுர கத்தை வதைத்ததுகண்
டிரைவோடுபு கழ்ந்திவர் செங்கனிவா
யுரையூடொழு கிச்செலு மென்றுவகைத்
திரையூடு குளிர்த்தனர் தேசிகரே.

(இ-ள்) தேசாந்தரியாகிய அவ்வியாபாரிக ளனைவரும் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் மலைபோன்ற அச்சர்ப்பத்தை அவ்வாறு கொன்றதைப் பார்த்து ஓசையுடனவர்களைப் புகழ்ந்து யாவர்களும் இவர்களது கனிபோன்ற வாயின்கண் ணிருந்து தயமாகாநிற்கும் வார்த்தைகளுக் கொழுகி நடவுங்களென்று சொல்லிச் சந்தோஷமாகிய சமுத்திரத்தின்கண் முழுகினார்கள்.

பாந்தள்வதைப்படலம்.

முற்றிற்று

ஆ படலம்-௧௨-க்கு திருவிருத்தம்-௭௨௨.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

திகநடந்தபடலம்.

கலிவிருத்தம்.

கட்செவி பகையறுத் தரிய கானகத்
துட்படு மிடர்தவிர்த் தொளிரும் வள்ளலை
வட்படும் வேலுடைமாக்க ளியாவரு
நட்பொடு கலந்துட னடந்து போந்தனர்

(இ-ள்) சர்ப்பத்தினது விரோதத்தை அறும்படி செய்து அரிதான அக்காட்டினகமுண்டாகும் துன்பங்களை யொழித்துப்பிரகாசியாநிற்கும் வள்ளலாகிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களைக் கூர்மை பொருந்திய வேற்படை தாங்கிய கைகளை யுடைய அவ்வியாபாரிகளனைவரும் சினேகத்துடன் கலந்து கூடவே நடந்துபோயினர்கள். (௧)

குறுபொறை கடந்துபோய்க் குவடுசுற்றிய
சிறுநதி யாறுகள் கடந்துசென்றபின்

மருவுறு மதிதொடு மலையு மம்மலைப்
பெறுமுறை யருவியும் பிறங்கத் தோன்றின.

(இ-ள்) அவ்வாறுபோன அவர்க ளியாவரும் சிறிய குன்றுகளைத் தாண்டிச்சென்று மலைகளை வளைந்திராநின்ற சின்னச் சின்ன நதிகளையும் ஆறுகளையுங் கடந்துபோனதின் பின்னர்க் களங்கத்தைப் பொருந்திய ஆகாயத்தின்கண் ணிருக்கின்ற சந்திரனைத் தீண்டாநிற்கும் ஒருமலையும் அம்மலையைப் பொருந்திய ஒழுங்கினையுடைய ஒரு நதியும் பிரகாசிக்கும்படி தெரிந்தன. (உ)

அம்மலை நதிக்கரை யடுத்துச்சிரிய
செம்மலுஞ் சூழ்ந்ததே சிகரு நீங்கிலாச்
சும்மைகொண் டிறங்கிநீ ராடித் தூநறைப்
பொம்மலுண் டரும்பகற் பொழுதுபோக்கினர்.

(இ-ள்) அப்போது அந்தப் பருவதத்தினது ஆற்றங்கரையை சிறப்பை யுடைய செம்மலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் அவர்களை வளைந்த தேசாந்தரிகளாகிய வியாபாரிகளும் நெருங்கி மாறாத சுமைகளைக்கொண்டு கீழே இறங்கி அவ்வாற்றின் கண் ஸ்நாநஞ்செய்து பரிசுத்தம் பொருந்திய வாசனையுடைய பொலிவான அன்னத்தை யருந்தி அரிய அந்தப் பகற்பொழுதைக் கழித்தார்கள். (ங)

மதுப்பிலிற் றியமரை மலரின் கொள்ளையும்
விதுக்கதிர் படத்த னிவிரியுங் காவியு
மெதிர்ப்பொடு களிப்புமா குலமுமெய்திடக்
கதிர்க்கதி ரவன்குட கடற்கு ளாயினன்.

(இ-ள்), அந்தச்சமயம் தேனைச் சொரியா நிற்கும் மிகுதியான தாமரைப் புஷ்பங்களும் சந்திரனது பிரகாசமானது தம்மீது பட ஒப்பில்லாது மலராநின்ற நீலோற்பலப் புஷ்பங்களும் எதிர்த்தலுடன் துன்பமும் இன்பமும் பொருந்திடும்படிக் கிரணங்களை யுடைய சூரியனானவன் மேல்பாற் சமுத்திரத்தினகம் போய்ச் சேர்ந்தான்.

நீருறை பறவையின் குலமு நீடரு
பாரினில் விலங்கின மியாவும் பண்ணுறுக்
காருறு சோலைவாய்ச் சுரும்புங் கண்ணடைத்
தூர்வன வெவையுநல் லுறக்கமுற்றவே.

(இ-ள்) சூரியனானவன் அவ்வாறு போய்ச்சேர ஜலத்தின்கண் வாசஞ்செய்யா நிற்கும் பட்சிகளினது கூட்டங்களும் நீட்சிபொருந்திய இப்பூமியின் கண்ணுள்ள சகல மிருகக் கூட்டங்களும் இசைமாருத மேகமானது தங்கிய சோலையின் கண்ணுள்ள வண்டுக் கூட்டங்களும் எல்லாவிதமான ஊர்வனங்களும் தங்களது கண்களை மூடி நல்ல உறக்கத்தைப் பொருந்தின. (௫)

போதடைந் திருளெனும் படலம் போர்த்திட
மாதவ ரெனு முகம் மதுவு மன்னருந்
தாதவிழ் நதிக்கரைத் தருவி னீழலிற்
சோதியா முகமலர் விழிக டேங்கினர்.

(இ-ள்) அன்றியும், சூரியனானவன் அஸ்தமித்து அந்தகாரமென்னும் போர்வையானது எவ்விடத்தையும் மூடிட மகாதவத்தையுடையவரென்று சொல்லாநிற்கும்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் வியாபாரிகளான மற்றுமரசர்களும் தழைகள் அவிழாநின்ற அவ்வாற்றின் கரையின் கண்ணுள்ள விருட்ச நிழலில் பிரகாசத்தை யுடைய பெருமையுற்ற தங்களது முகத்திற் பொருந்திய தாமரை மலர் போலும் கண்களானவை தூங்கினர்கள்.

வனநதிப் பெருக்கெடுத் தெறிந்து மால்வரை
தனையமிழ்த் திடவரு வதுகொல் சார்ந்தநும்
மினமுடனெழுதிரென் றிலங்கும் வள்ளறங்
கனவினிற் ஜபுறயீல் கழறிப் போயினர்.

(இ-ள்.) அப்போது பிரகாசியா நின்ற வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களது சொப்பனத்தின்கண் ஜிபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள்வந்து இக்கானகத்திலுள்ள ஆறானது பிரவாகித்து அலைகளை இரு கரைகளிலும் வீசிக்கொண்டு பெரியமலைகளைத் தாழ்த்திடும்படி வருகின்றது. ஆதலால் நீர் உம்மைப் பொருந்திய உமது கூட்டத்துடன் எழும்புமென்று சொல்லிவிட்டுப் போயினர்கள். (எ)

மருப்பொலி புயமுகம் மதுதங் கண்விழித்
தொருப்பட வெழுதுந்துழை யுற்ற பேர்க்கெலாம்
விருப்பொடு மொழிந்தனர் வெள்ளம் வந்துநம்
மிருப்பிடம் புரட்டு மிங் கெழுக வென்னவே.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிவிட்டுப் போகவே பரிமளம் பெரு கிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது கண்களைத்திறந்து எழும்பி ஒருமனப்படும்படி அங்குபொருந்திய ஜனங்களெல்லாவருக்கும் இவ்வாற்றின் வழியாக ஜலமானது வந்து இவ்விடத்தில் நம்முடைய இருப்பிட முழுவதையும் பாழச்செய்யும். ஆதலால் நீங்கள் யாவரு மெழும்புங்களென்று பிரியத்துடன் சொல்லினார்கள். (அ)

தெரிதர வுரைத்தசொற் றேர்ந்தி யாவரும்
விரைவினிற் சோலைவாய் விடுதி நீங்கியே
புரவியொட் டகம்பொதி பொருளுங் கொண்டணி
வரையினுச் சியினிடை மலிய வைகினார்.

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் தெரியும்படியாகச் சொல்லிய அச்சொற்களை அனைவர்களுந் தங்களது மனசில் தெளிந்து சீக்கிரத்தில் தாங்கள் தங்கியிருந்த அச்சோலையின்கண் ணுள்ள விடுதியை விட்டு மொழிந்துக் குதிரை ஒட்டகம் சுமை பொருள் முதலிய யாவையும் கொண்டுப் பெருகும்படி அவ்விடத்திலுள்ள அழகிய மலையினது சிகரத்தின்மேல் ஏறித்தங்கி யிருந்தார்கள். (௯)

படர்தரு திரைவயி றலைத்த பைம்புனற்
கடலிடை குளித்துச்செங் கதிர்க்க ரங்களா
லடைபடு மிருட்குல மறுத்துப் போக்கியே
சுடரவ னுதயமா கிரியிற் றோன்றினான்.

(இ.ள்) அப்பொழுது சூரியனானவன் படர்ந்த அலைகளென்னும் வயிறானதை அலைக்கப்பெற்ற பசிய ஜலத்தையுடைய சமுத்திரத்தின் கண் மூழ்கித்தனது செந்நிறத்தையுடைய கிரணங்களென்னுங் கைகளினால் சேர்ந்த இருளினது கூட்டத்தை அறச்செய்து அழித்துப் பெருமைதங்கிய உதயபருவத்தின்கண்விளக்கமாயினான்.

அரிசினக் கொடுவரி யமிழ்ந்து போதரப்
பொரியரைத் தருக்களைப் புரட்டிப் பொங்கிய
நுரையிரு கரைகளு நுங்கமானதிப்
பிரளய மிடனறப் பெருகி வந்ததே.

(இ-ள்.)அவ்வாறு விளக்கமாகவே கோபத்தையுடைய சிங்கங்களும் வேங்கைகளும் சலத்தினகத் தாழ்ந்துபோகப் பொரி தங்கிய

அரையினை யுடைய விருட்சங்களைப் புரளசெய்து டொலிந்த வரைகள் இரு கரைகளையும் விழுங்கும்படி விசாலமாகப் பெருமையையுடைய அவ்வாற்றினதுபெருக்கானது எவ்விடமும் பெருகி வந்தது.

குறவரைக் குறிஞ்சிவிட் டீழ்த்துப் பாலையின்
மறவரை முல்லையி லாக்கி மாசுடைத்
தொறுவரை நிரையொடுஞ் சுருட்டி வாரியே
யறைபுனற் பெருக்கெடுத் தடர்ந்த தெங்குமே.

(இ-ள்.) அன்றியும், குறிஞ்சி நிலத்தின்கண்ணுள்ள வேடரை அந்நிலத்தைவிட்டு மிழுத்துப்பாலை நிலத்திலாக்கிவிட்டு அந்நிலத்திலுள்ள மறவரை இழுத்து முல்லைநிலத்திலாக்கி அங்குள்ள கரியநிறத்தையுடைய இடையரை வரிசையுடன் சுருட்டி வாரிக்கொண்டு ஒலிக்காநின்ற ஜலமானது எவ்விடமும்பெருக்கெடுத்து அடர்ந்தது.

கரைசுழித் தெறிந்துநீள் கயங்க ளாக்கின
திரையெறி கடத்தினைத் திரட தாக்கின
விரைகமழ் சோலைவே ரறுத்து வீழ்ந்தின
வரைகளைப் பிடுங்கின மலிந்த நீத்தமே.

(இ-ள்.) அன்றியும், அவ்வாறு பெருகிய ஜலமானது இரண்டு கரைகளையுஞ் சுழியச்செய்து நீண்ட குளங்களாக்கினது. அலைகளை எறியாநிற்குங் குளத்தினை மேடுகளாக்கினது. வாசனை பரிமளிக்கின்ற சோலைகளை வேர்களுடன் அறும்படிசெய்து பூமியின்கண் வீழ்த்தினது. அங்கு சூழ்ந்திருந்த மலைகளெல்லாவற்றையும் அடியோடும் பிடுங்கினது.

கரைபுரண் டுள்ளகங் களித்துக் கானிடைத்
திரவியந் திரைக்கரத் தெடுத்துச் சிந்தியே
குரைகட லெனுநதி குரிசி னந்நபி
மரைமல ரடிதொழ வந்த போலுமே.

(இ-ள்.) அன்றியும், ஒலிக்காநின்ற சமுத்திரமென்னும் அவ்வாறானது இருகரைகளிலும் புரண்டு தனது மனசினகம் சந்தோஷித்து காட்டினிடத்துள்ள திரவியங்களை அலைகளென்னுங் கைகளினால் எடுத்துச் சிதறிக்கொண்டு குரிசிலாகிய நமதுநாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தாமரைமலர்போலுந்திருவடிகளை வணங்கும்படி வந்ததை நிகர்த்தது. (கச)

மாநதி பெருகியெவ் வரையுஞ் சுற்றிய
நானிலத் திசைநெறி நடப்ப தின்மையாற்

ஞனவன் றாதொடு சார்ந்த மன்னரு
மீனமின் மூன்றுநா ளிருந்து நோக்கினர்.

(இ-ள்) அவ்வாறு அந்தப் பெருமைதங்கிய ஆறுனது பெருக்கமுற்று எல்லா மலைகளையும் நான்குவகைப்பட்ட இப்பூமியின்கண்ணுள்ள திசைகளினது பாதைகளையும் சுற்றிக்கொண்டது. அதனால் நடந்துசெல்லுவதற்கு இடமில்லாது தானவனுன ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் றசூலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடன் மற்றும் வியாபாரிகளான அரசர்களும் மூன்று நாள்மட்டும் குற்றமில்லாது அம்மலையின்மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். (கரு)

மலைமிசை மூன்றுநா ளிருந்து மானதி
மலையெடுத் தெரிந்துயர்ந் தடர்ந்த தல்லது
நிலைதரக் காண்கிலோ மென்ன நீண்டசஞ்
சலமெனுங் கடற்குளாய்த் தவித்து வாடினர்.

(இ-ள்.) அவ்வாறு அவர்களியாவரும் அந்தமலையின்மீது மூன்றுநாள்பரியந்தம் தங்கியிருந்தும் பெருமைபொருந்திய அவ்வாறுனது திரைகளையெடுத்து இருகரைகளிலும் வீசி யுயர்ச்சியுற்று அடர்ந்ததேயல்லாமல் நிலைதரும்படி கண்டிலோமேயென்று சொல்லி நீட்சியுற்ற சஞ்சலமென்னும் சமூத்திரத்தினுள்ளாய்த் தவித்து வாட்டமடைந்தார்கள். (கசூ)

மனத்தினிற் றுன்புற வருந்தி மாழ்கிய
வினத்தவ ரியாரையு மினிதி னேக்கியே
கனத்தமைக் குடைநிழல் கவின்பெற் றேங்கியே
நனைத்துணர் புயத்தவர் நவில லுற்றனர்.

(இ-ள்.) அப்போது பாரமானமேகக்குடையினது நிழலின்கண் அழகுபெற்றோங்காநிற்கும் தேனைப்பொருந்திய புஷ்பமாலையணிந்த புயங்களை யுடையோரான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறுமனசின்கண் துன்பமானது பொருந்தும்படி வருத்தமுற்றுமயங்கிய தங்களது கூட்டக்காரர்களான அனைவர்களையும் இனிமையுடன் பார்த்துச்சொல்ல ஆரம்பித்தார்கள். (கஎ)

இற்றைநா ளிரவிவ ணிருந்து கண்டுநா
மற்றைநாட் போகுவோம் வருந்த லென்றனர்

வெற்றியும் வீரமுந் தவத்தின் மேன்மையு
முற்றிய மாட்சியா ரலங்கன் மொய்ம்பினர்.

(இ-ள்.) அப்பொழுது விஜயமும் வலிமையும் தவத்தினதுமே ன்மையும் முதிர்ந்த மாட்சிமையு முடையவர்களான புஷ்பமாலையணிந்த புயங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நாம் அனைவர்களும் இன்றையத்தினம் இராமுழுவதும் இம்மலையின்மீது தங்கியிருந்து பார்த்துக்கொண்டு நாளையத்தினம் இங்கிருந்தும் எழும்பிப் பிரயாணமாகி நாம் குறித்துவந்த இடத்திற்கு போகுவோம் ஆனதினல் நீங்களொருவரும் மனசின்கண்வருத்தப்படவேண்டாமென்று சொன்னார்கள். (கஅ)

இருகரை களுந்தெரிந் திலவிம் மாநதி
பெருகுவ தடிக்கடி பேது றுதபி
ளெருமொழி யுரைத்தவ ருளத்தின் பெற்றியைத்
தெரிகிலோ மெனமனந் தேம்பி னாரரோ.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம்சொல்ல இப்பெரிய ஆருனது அடிக்கடிப் பெருகுகின்றது. பார்ப்பவர்களின் கண்களுக்கு இருகரைகளும் தோற்றவில்லை. பின்னர் மயக்கமடையாது நாளையத்தினம் செல்லுவோமென்று ஒப்பற்ற வார்த்தை சொன்னவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மனசின்கண்ணுள்ள தன்மையை இன்னதென்றும் யாமறிந்திலோ மென்றுகூறி அனைவர்களும் மனவாட்டமுற்றார்கள். (கக)

அவ்வுழி ஜபுறயீ லடைந்து கண்டுயில்
செவ்வினோர் முகம்மது கனவிற் செப்பின
ரிவ்விருள் விடிந்தபி னெழுந்து முன்னரோர்
நவ்விதோன் றிடும்வழி நடத்திரென்னவே.

(இ-ள்.) அவ்விதம் வாட்டமுறவே அழகையும் சத்தியத்தையுமுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நித்திரை செய்கின்ற அவ்விடத்தில் அவர்களின்சொப்பனத்தில் ஜிபுறீல்அலைகிஸ்ஸலாமவர்கள் வானலோகத்தைவிட்டும் இறங்கிவந்து சேர்ந்து இந்த அந்தகாரமொழியும்படி சூரியனுதையமானபின்னர் நீங்கள் எழும்பி உங்களின் முன்னால் ஒருமானனது தோன்றிடும். அப்பாதையின்வழியாக யாவர்களையும் நடத்துங்களென்று சொன்னார்கள்.

மனமுறை ஜபுறயில் வந்து சொல்லிய
கனவினைக் கண்டகங் களித்துக் கண்ணிணை
யிணைவிழித் தெழுந்தன றெழுந்த காலையிற்
றினகான னெழுந்தனன் பாந்த செங்கதிர்.

(இ-ள்.) அவ்வாறு ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் வந்துசொன்னமனசின்கண் தங்காநிற்கும் சொப்பனத்தைப்பார்த்து மனமகிழ்ச்சிகொண்டு இரண்டுகண்களையுந்திறந்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எழும்பினார்கள். அங்ஙன மெழும்பிய சமயத்தில் சூரியனும் கிழ்பாற்கடலின்கண் உதயமாயினன். சிவந்த கிரணங்கள் எவ்விடமும் பரவின. (உக)

வரைபுரை புயமுகம் மதுமன் மாவொடு
நிரைநிரைத் தொறுவையும் நடத்திர் நீவிரென்
றுரைசெய்து பெருக்கெடுத் தோங்குமானதிக்
கரையினின் மரைமலர் காலினேகினர்.

(இ-ள்.) அப்பொழுது மலைகளுக்கொப்பாகிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நீங்களனைவர்களும் பொருந்திய குதிரைகளுடன் வரிசைவரிசையாகிய ஒட்டகங்களையும் நடத்திக்கொண்டு வாருங்களென்று சொல்லிவிட்டுப் பிரவாகமெடுத்தோங்காநிற்கும் அப்பெரிய ஆற்றினது கரையின்கண் தங்களது தாமரைமலர்போன்ற பாதங்களினல் நடந்துபோயினர்கள்

ஒட்டகம் புரவிமற் றுள்ள பேர்களு
மட்டறு சரக்கொடு மலிந்து தோன்றிடத்
தொட்டவெண் டிரைக்கட லகடு தூர்த்திட
முட்டிய புனனதிக் கரையின் முன்னினர்.

(இ-ள்.) அவ்வாறு அவர்கள்போக ஒட்டகம் குதிரை முதலிய மற்றும் மிருகங்களையுள்ள யாவர்களும் தங்களது அளவில்லாத சரக்குகளோடும் பொலிவுற்று விளங்கும்படித் தோண்டிய வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்தினது வயிற்றை நிரப்பும் வண்ணம் மோதிய ஜலத்திணைக்கொண்ட அவ்வாற்றின் கரையின்கண் போய் முன்னினர்கள். (உங)

அள்ளிய பொன்னெடுத் தமைத்து வெள்ளியாற்
புள்ளிக ளணியணி பொறித்து வைத்தன

வொள்ளிய மெய்யழ கொழுக வொல்லையிற்
றுள்ளிய வுழையுழை யிடத்திற் றோன்றிற்றே.

(இ-ள்) அப்பொழுது அள்ளிய சொர்னத்தை எடுத்துண்டாக்கி அதன்மேல் வரிசைவரிசையாக வெள்ளியினால் புள்ளிகள் எழுதியதை யொப்ப அவர்களின் மருங்கினிடத்தில் பிரகாசத்தையுடைய சரீரத்தின் கண்ணுள்ள அழகானது ஒழுகிடும்படி துள்ளாநிற்கும் ஒருமானானது சீக்கிரத்தில் வந்து தோற்றினது.

நதியிடை வந்துமா னடப்பக் கண்டுமா
மதிநிகர் முகம்மது மனத்தி லின்பமுற்
றிதமுற நடந்துபி னேக யாவரும்
புதுமைகொ லிதுவெனத் தொடர்ந்து போயினர்.

(இ-ள்.) அவ்வாறு அம்மானானதுவந்து ஆற்றின்கண் முன்னால் நடந்து போகவும், அதை மேன்மை பொருந்திய சந்திரனுக் கொப்பான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது கண்களாற் பார்த்து மனத்தின்கண் மகிழ்ச்சிகொண்டு இனிமை பொருந்தும்படி அம்மானின் பின்னால் நடந்துபோகவும், அங்குற்ற அனைவர்களும் இஃது அதிசயமென்று சொல்லி அந்நபிகணாயகமவர்களைப் பின்பற்றிப்போயினார்கள். (உரு)

உடற்பொறிப் புள்ளிய வொளிர முன்செலு
மடப்பிணைப் பின்செலு மக்க ளியாவர்க்குங்
கடற்பெருக் கெனக்கரை கடந்து வீங்கிய
தடப்பெரு நதிமுழந் தாட்கு ளானதே.

(இ-ள்.) அவ்வாறு சரீரத்தின்கண் பொறிக்கப்பட்ட புள்ளிகளானவைப் பிரகாசிக்கும்படி முன்னால் நடந்துசெல்லும் இளம்பருவத்தையுடைய அம்மானினது பின்னால் நடந்து போகும் அவ்வியாபாரிக ளியாவர்களுக்கும் சமுத்திரத்தினது பெருக்கையொப்ப இருகரைகளையுந்தாண்டி மிகுந்த விசாலமாகிய அந்தப்பெரிய ஆறானது முழங்கால்களுக்கு அகமாயிருந்தது. (உசு)

பெருகிய பிரளயப் பெருக்கைப் போக்குதற்
கொருவனே யலதுவே றிலையென் றுன்னியே

தெருளுறச் செல்குநர் செல்க வென்றனர்
வரையிரண் டெனுமணிப் புயமு கம்மதுவே.

(இ-ள்.) அப்போது இரண்டு மலைகளென்று சொல்லும் படியான அழகிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அதிகரித்த ஜலத்தினது பிரவாகத்தைப் போக்குவதற்கு ஏகனாகிய ஜல்லஜலாலகுவத்த ஆலாவானவனேயல்லாமல் வேறேயொருவனு மில்லையென்று உங்களது மனசின்கண் நினைத்து அறிவுபொருந்தும்படி நடக்கப்பட்ட நீங்கள் நடந்துசெல்லுங்களென்று சொன்னார்கள். (உஎ)

இம்மொழி நன்கென விசைந்தி யாவருஞ்
செம்மலோ டினிதுறச் செல்லுங் காலையில்
விம்மிதப் புயநபி விரித்த வாசகஞ்
சம்மதித் திலனொரு தறுகணாளனே.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறு சொல்லவே அங்குற்ற அனைவர்களும் இந்தவார்த்தைகள் யாவும் நல்லவையென்று பொருந்திச் செம்மலாகிய அந்நபிகள் பெருமா னவர்களோடும் இனிமையுறும்படி நடக்கின்ற சமயத்தில் விம்மிதத்தைக் கொண்ட தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் விரிவாக எடுத்துச்சொல்லிய அந்த வார்த்தைகளை ஒரு தறுகண்ணனானவன் தனது மனசின்கண் பொருந்தினா னில்லன். (உஅ)

புந்தியிற் புத்தினைப் புகழ்ந்து போற்றித்தன்
சிந்தைவைத் தவ்வுழைச் செல்லும் போழ்தினி
லுந்தியின் றிரைசுழித் துருட்டி யிழ்த்திட
நந்தினா னபியுரை மறுத்த நாவினன்.

(இ-ள்.) அவ்விதம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சொன்ன வார்த்தைகளுக் கிணங்காது மறுத்த நாவினையுடைய அம்மனிதன் தனதுபுத்தியினால் விக்கிரத்தைத்துதித்து வணங்கி அவ்விக்கிரத்தின்மீது தனது மனசைநாட்டி அவ்வாற்றினிடத்தில் நடந்து போகின்ற சமயத்தில் ஆற்றினது சுழிகளையுடைய அலையானது அவனைச்சுழித்துப் புரட்டியிழுத்திடத் தனது சரீரங்கெட்டுப் போகும்படி மாண்டனன். (உகூ)

விதியவன் றூதர்சொல் மேவி லாதவ
னதியினி லிறந்தன னடுக்க மின்றியே
யிதமுற வுண்மைகொண் டிசைந்த பேர்முழுக்
கதிபெறு பவரெனக் கரையி லேறினர்.

(இ-ள்.) அப்போது யாவர்களும் அகிலசராசரங்களையும் இன்னபடியென்று கட்டளைசெய்து நடத்தக் கூடியவனான ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் றசூல் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வார்த்தைகளைப் பொருந்தாத அம்மனிதன் ஆற்றின்கண் மாண்டான். இனிமையுறும்படி அச்சமில்லாது மனத்திலுண்மைகொண்டு பொருந்தியவர்கள் பூரணமாகிய கதியினை யடைவார்களென்று சொல்லும்படியாக அவ்வாற்றினது கரையின்கண்போயேறினர்கள். (௬௰)

சிந்துவின் றிரைப்பெருக் கெறியத் தீதிலா
நந்தியத் திரிபரி யாவு நன்குற
வந்தவை முகம்மதின் பறக்கத் தாலெனத்
தந்தம ரொடுபுகழ்ந் தெடுத்துச் சாற்றினர்.

(இ-ள்.) அவ்விதம் ஏறிய யாவர்களும் சமுத்திரத்தினலைகளின் பெருக்கைப்போல அலைகளைவீச அவ்வாற்றின்கண் குற்றமற்ற இடபம் ஒட்டகம் குதிரைமுதலிய அனைத்தும் நன்மையுறும்படி நடந்து வந்தவை நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பறக்கத்தாலென்று அவர்களைப் புகழ்ந்து தங்களது உறவினர்களோடும் எடுத்துக் கூறினர்கள். (௬௧)

நதிகடந்தபடலம்.

முற்றிற்று.

ஆக படலம்-கரு-க்கு-திருவிருத்தம்-எ௱௬.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

புலிவசனித்தபடலம்.

கலிநிலைத்துறை.

படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்
கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலைக்
கொடுந்த டக்கரித் திரளெனுங் குழுவினு ளொருவ
னடைந்து சீரகு மதிளடி தொழுதறை குவனல்.

(இ-ள்.) பரவிய தெள்ளிய அலைகளினது பெருக்கை எடுத்து இருகரைகளிலும் வீசாநிற்கும் அவ்வாற்றினது பரப்பைத்தாண்டிப் பலகாடுகளையுங் கடந்து அரிதானபாதையுடன் நடந்து போகின்ற சமயத்தில், கொடுமைதங்கிய பெரியயானைக் கூட்டமென்று சொல்லாநின்ற அக்கூட்டத்தினகம் ஒருமனிதன்வந்து சிறப்பினையுடைய அகமதென்னுந் திருநாமம்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திருவடிகளை வணங்கிச் சொல்லுவான். (க)

நிகழுந் தாரையிற் காவதத் துள்ளுறை நெடுநீ
ரகழி போன்றவோ ரோடையுண் டதனிலுக் கணித்தாய்ப்
புகலு தற்கரி தடவியுண் டவ்வழிப் பொருந்தி
யுகளு மாங்கொரு பாதகக் கொடுவரி யுழுவை.

(இ-ள்.) நாம் நடக்குகின்ற இப்பாதையின்கண் ஒருகாதவழித் தூரத்தினகம் சலத்தினையுடைய நெடிய அகழிபோன்ற ஓரோடையானதுண்டு. அதற்குச்சமீபமாய்ச் சொல்லுதற்கரிய ஒருகாடுண்டு. அவ்விடத்தில் பொருத்தமுற்றுப் பாயாநிற்கும் துரோகத்தையுடைய கொடிய இரேகைகள்படர்ந்த ஒருபுலியானது. (உ)

நீண்ட வானிலம் புடைத்திடக் கிடந்துட னிமிர்ந்து
கூண்ட கான்மடித் திருவிழி கனல்கள்கொப் பளிப்பப்
பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ
வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடு மிருக்கும்.

(இ-ள்.) தனதுநீட்சியுற்றவாலினல் பூமியின்மீது அடித்திடவும், சரீரமானது நிமிர்தலுற்றுச்சேர்ந்த நான்குகால்களையும் மடித்

துத் தரையின்மேல்படுத்து இரண்டுகண்களும் அக்கினிப்பொறிக ளைக்கக்கவும், வெண்மைநிறத்தைத் தரித்தபற்கள் பிரகாசித்திடவும், வாயில் புலால்நாற்றம் கமழவுமாகிய இவ்விதம் முட்கள் நெருங்கிய அந்தவனத்தின்கண் கோபத்தோடும் இருக்கும். (ங)

நிரம்பும் வள்ளுகிர் மடங்கலி னினங்களி னிணமுண்
டிரும்ப னைக்கைமும் மதக்கரிக் கோட்டினை யீழ்த்திட்
டுரம்பி ளந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா
தரும் பெருங்கிரி பிதிர்ந்திட வுருமினு மலறும்.

(இ-ள்.) அன்றியும், அப்புலியானது கூர்மை நிறையப்பெற்ற நகங்களையுடைய சிங்கக்கூட்டங்களின்றி மற்றமிருகங்களின் நிணங் களையருந்திப் பெரிய பனைபோலும் தும்பிக்கையினையும் மூன்றுமத ங்களையுமுடைய யானைகளின்கொம்புகளைப்பிடித்து இழுத்து அவை களின் மார்பினைக் கீறி இரத்தங்களைக்குடித்து நித்திரைசெய்யாது நின்று பெரிதான அரிய மலைகளும் சிதறிடும்படி இடியைப் பார்க்கி லும் அதிகமாக முழங்காநிற்கும். (ச)

அதிர்ந்தி டுங்தொனி செவியுற வடவியி லடைந்த
முதிர்ந்த மேதியுங் கவையடிக் கேழலு முழுதும்
பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்
பதிந்த காறடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்.

(இ-ள்.) அன்றியும், அவ்வாறு முழங்கிடும் ஓசையானது காது களிற் பொருந்தவே அக்காட்டின்கண் போய்ச்சேர்ந்த முற்றிய எரு மைகளும் பிளந்தபாதங்களையுடைய பன்றிகளும் உரோமங்களினல் அடங்கலுமூடப்பட்டசரீரத்தையுடையகரடிகளும் கலைமான்களும் பூமியின்கண் பதியப்பெற்ற தங்களது கால்கள் தடுமாற்றமுற்று விழுந்து தேகநடுக்கமடையும். (ரு)

புறந்த யங்குமஞ் சிறையறு பதப்பொறிச் சுரும்பு
திறந்து தேனையுண் டணிதிகழ் தொடையணி திறலீர்
மறந்த யங்குவேன் மாந்தரவ் வேங்கையின் வாய்ப்பட்
டிறந்த தன்றியொட் டகம்பரி யெண்ணிலக் கிலையே.

(இ-ள்.) வெளியிற்பிரகாசியாநிற்கும் அழகிய சிறகுகளையும் ஆ றுகாற்களையும் புள்ளிகளையுமுடைய வண்டினங்கள் மலர்களைத்திறந் து அதனுள்ளிருக்கும் தேனையருந்தி அழகுவிளங்குகின்றமாலையணி ந்த வெற்றியையுடைய நபிகள்பெருமானே! அந்தப்புலியினதுவாயி

ற்பட்டுக்கொலைகள்தயங்காநின்ற வேற்படைதாங்கிய வேந்தர்கள்மர ண்டது மாத்திரமல்லாமல் மாண்டுபோன ஒட்டகம்குதிரைமுதலிய வைகளின் கணக்கிற்குக் குறிப்பில்லை. (சு)

என்ற வாசகஞ் செவிபுக வெழிலுரு புயமுங்
குன்று போலுற வீங்கின முறுவல்கொண் டிடராய்
நின்ற வேங்கையெவ் வுழியென நிகழ்த்தின ரவனும்
வென்றி வாளர சேயணித் தெனவிளம் பினனே.

(இ-ள்.) என்றுசொல்லிய வார்த்தைகளனைத்தும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காதுகளில் நுழையவே, அழகிய இருதோள்களும் மலைகளைப்போலப் பொருந்தும்படிப்பருத்தன. அன்றியும்புன்சிரிப்புக்கொண்டு அவ்வாறுகூறியஅம்மனிதனைப்பார்த்து இடைஞ்சலாகநின்ற அப்புலியானது இருக்குமிடம் எவ்விடமென்று கேட்டார்கள். அதற்குஅம்மனிதனும் வெற்றியையுடைய வாட்படை தாங்கிய வேந்தரே! சமீபத்தில்தா னிருக்கின்றதென்று சொன்னான். (எ)

இலங்குஞ் செங்கதிர் வேலொரு கரத்தினி லேந்தி
நிலங்கொ ளப்பரந் தரியமெய் யொளிபுடை நிலவ
நலங்கொள் குங்குமத் தொடைபுரண் டசைந்திட நடந்தா
ருலங்கொடோண்முகம் மதுபுலி வுறைநெறி யுழையில்.

(இ-ள்.) அப்போதுதிரளைக்கற்கள்போலுந் தோட்களைப்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருகையில்பிரகாசியாநிற்கும் சிவந்த கிரணங்களையுடைய வேற்படையைத் தாங்கிக்கொண்டு அரிதான தங்களது சரீரத்தின்கண் ணிருந்துண்டாகும் பிரபையானது பூமியிற் பொருந்தும்படிப் பரவிப்பக்கங்களில் நிலவைச்செய்யவும், அழகியகுங்குமப்புஷ்பத்தினாலாகிய மாலையானது தோள்களிற் கிடந்து புரண்டு அசைந்திடவும், நடந்து அப்புலியானது தங்கும் பாதையின் மருங்கினில் போயினார்கள். (அ)

மாதி ரத்துறை கேசரி நிகர்முகம் மதுதம்
பூத ரப்புய மசைதரப் புளகிதத் தோடுங்
காது செங்கதிர் வேல்வலக் கரத்திடை கவின
வீதி வாய்வரக் கண்டது பெருவரி வேங்கை:

(இ-ள்.) அவ்விதம் அவர்கள்போகவே பெரிய இரேகைகள்படர்ந்த அப்புலியானது மலைகளில் வாசஞ்செய்யாநிற்கும் சிங்கத்திற் கொப்பாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்க

ளது மலைபோன்ற தோள்கள் அசையும்படி மகிழ்ச்சியுடன் கொலை செய்யாநின்ற சிவந்தபிரகாசத்தையுடைய வேற்படையானது வலது கையின்கண்ணிருந்து அழகைச் செய்யும்வண்ணம் பாதையினிடமாய் நடந்து தனது முன்னால்வருவதைப்பார்த்தது. (௯)

கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக்
கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரங் குனிந்துத்
தண்ட ளிர்ப்பதத் தெரிசனைக் கெனச்சலா முரைத்துத்
தெண்ட னிட்டது வள்ளுகிர்த் திண்டிறற் புலியே.

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வருவதைப்பார்த்த சமயத்தில் கூர்மைபொருந்திய நகத்தினையும் திண்ணிய வலிமையினையு முடைய அப் புலியானது தனது வாலைவளைத்துப் பெரிய தலையைத் தாழ்த்தி அரியசரீரமானது நடுக்கமுற்றுக் கொண்டு பையப்பைய நடந்து எதிராகவந்து குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் உங்களது பாதத் தெரிசனைக்கென்று சலாஞ் சொல்லி வணங்கிற்று. (௰)

நலன்பெ றுங்குறை ஷிகளினில் வந்தநா யகமே
நிலம்ப ரந்துதீன் பெருகிட வெழுந்தநீ ணிலவே
புலன்க ணின்புறக் கண்டனன் களித்தனன் பொருவில்
பலன்பெ றும்படி யாயின னெனப்பகர்ந் ததுவே.

(இ-ள்.) அன்றியும், நன்மைபெறாநிற்கும் குறைஷிகளினது வீட்டின்கண் ணுதித்துவந்த நாயகமானவர்களே! தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கமானது இப்பூலோகமுழுவதும் பரவிப் பெருகிடும்படியாக எழும்பிய நீண்ட நிலாவானவர்களே! யானின்று தங்களை எனது கருத்தும் கண்களும் இனிமையுறும் வண்ணம் பார்த்தேன். அதனால் சந்தோஷத்தையடைந்தேன். ஒப்பில்லாத புண்ணியத்தையும் பெறும்படியாகி விட்டேனென்றுக் தனது வாயைத்திறந்து சொல்லிற்று. (௧௧)

வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை
மந்த ராசல முகம்மதுநனிமன மகிழ்ந்து
சந்த மென்மணிக் கரத்தினாற் சிரமுகந் தடவி

(இ-ள்) அவ்வாறு தங்களது முன்னால்வந்து தெண்டனிட்டு வாய்பொத்தி மிகத்தாழ்ந்து புத்தியானது அதிகரிக்கும்படி துதி

த்த கூர்மைதங்கிய நகத்தினையுடைய அப்புலியை மக்தாகிரிக்கொப் பாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிகுந்தமன க்களிப்படைந்து தங்களின் அழகிய நன்மையையுடைய மெல்லிய கைகளினால் தலையையும் முகத்தையும் தடவி. (கஉ)

இன்று தொட்டிவ ணெறியினி லுயிர்செகுத் திடுவ
தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் றறைந்த
மன்ற றுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி
நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை.

(இ-ள்.) நீ இந்தநாள் தொடுத்து இவ்விடத்திலுள்ள இந்தப் பாதையின்கண் இருந்து உயிர்வதைசெய்வது உனக்கு நல்லதல்ல. ஆதலால் இதைவிட்டும் வேறேயொரு காட்குற்போய்ச்சேருவாயாக வென்று சொல்லிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல் லமவர்க ளின் வாசனைநெருங்கிய தாமரைப்பூப்போலும் பாதங்களை அப்புலி யானது வணங்கி நல்லதுநல்லது என்றுசொல்லிப் புகழ்ந்துகொண்டு நடந்து அவ்விடத்தைவிட்டும் நீக்கிப்போயினது. (க௩)

படுகொ லைப்புலி மெய்யுறப் பணிந்திவர் பாதத்
தடிவ ணங்கிய காரணத் ததிசய மதனு
லுடைய வன்றிருத் தூதரே யுண்மையென் றுன்னித்
திடமுடைத்தநெஞ் சாயின ரறிவினிற் றெளிந்தோர்.

(இ-ள்.) அப்போதுமிகுந்தகொலைத்தொழிலையுடைய அப்புலி யானது சரீரம் பொருந்தும்படி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களின் பாதத்தின்கீழ் வணங்கிய காரணத்தின் அற்புதத் தினால் அறிவினாற் றேர்ச்சியுற்ற சிலபேர்கள் இவர் உண்மையாக யாவற்றிற்குஞ் சொந்தக்காரனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலா வின் அழகிய றசூல்தானென்று நினைத்து வலிமைதங்கிய மனசை யுடையவர்களாயினார்கள். (கச)

புலிவசனித்தபடலம்

முற்றிற்று.

ஆ படலம்-கச-க்கு-திருவிருத்தம்-எ௬ஏ.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

பாந்தள்வசனித்தபடலம்.

கலிநிலைத்துறை.

வேங்கை போயபின் வள்ளலு மனைவரும் விறைவிற்
றுங்க ருஞ்சுமை யொட்டகம் புரவியுஞ் சாய்த்து
நீங்க ரும்பரற் கானையா றுகளையு நீந்தி
யோங்க லுஞ்சிறு திடர்களுங் கடந்துட னடந்தார்.

(இ-ள்.) அப்புலியானது போனதன்பின்னர் வள்ளலாகிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் அங்குள்ளமற்றும் யாவர்களும் ஒன்றுசேர்ந்து சீக்கிரத்தில் தாங்குதற்கறிய சுமைகளை யுடைய ஒட்டகங்களையும் குதிரைகளையுஞ் சாய்த்துக்கொண்டு நீங்கமுடியாத பரற்கற்களையுடைய காட்டாறுகளையும்தாண்டி மலைகளையும் சிறிய மேடுகளையுங் கடந்து நடந்துபோயினார்கள் (க)

துன்று மென்மதி முகந்துலங் கிடவெகு தூரஞ்
சென்ற பிற்றையிங் கிவர்களி லொருவர் செப் பினராற்
குன்று தோன்றுவ ததன்கிழக் கொருகுவ டடுப்ப
வன்றி றற்கொடும் பாந்தளுண் டவண்வழிக் கெனவே.

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் வர்த்தகரான மற்றும்பேர்களும் தங்களது மெல்லிய சந்திரன்போலும் முகமானது பிரகாசிக்கும்படி நடந்து அதிகதூரஞ் சென்றதன்பின்னர்நெருக்கமமைந்த இவர்களதுகூட்டத்திற்பொருந்திய ஒருவர் இவ்விடத்தில் மலையொன்று தெரிகின்றது. அம் மலையின் கீழ்ப்பக்கத்தில் ஒருகுன்றின் சமீபமாய் அங்குற்ற பாதையின்கண் கடினமான வலிமையையுடைய ஒரு கொடிய சர்ப்ப முண்டென்று சொன்னார். (உ)

பாந்த ளொன்றுள தெனுமொழி செவிபுகப் பசுந்தேன்
மாந்தி வண்டிசை பயிலுமொண் டார்ப்புய வள்ளல்
கூந்தன் மாவுடன் பின்னிட வருகெனக் குழுவை
நீந்தி முன்னிட நடந்தனர் கானிடை நெறியின்.

(இ-ள்.) வண்டுகளானவை பசிய தேனையுண்டு கீதம் பாடாநிற்கும் ஒள்ளிய புஷ்பமாலையணிந்த புயங்களையுடைய வள்ளலான நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்விதம் சர்ப்பமானது ஒன்றுண்டென்றுசொல்லும் வார்த்தையானது தங்களின்காதுகளில் நுழையவே; தங்களது கூட்டத்தார்களைநோக்கி நீங்களனைவரும் புறமயிரையுடைய குதிரை முதலிய மிருகங்களுடன் பின்னால் வாருங்களென்றுசொல்லி அக் கூட்டத்தைவிட்டுந் தாண்டி காட்டின்கண்ணுள்ள அப் பாதையின்முன்னால் நடந்துபோனார்கள்.

சீத வொண்புனற் குட்டமுந் துடவையுஞ் செறிந்த
பாதை நீந்தியங் கொருகுவ டடியினிற் படாக்
கோது கோடைமா ருதமுயிர்த் துணங்குகுன் றனைய
தீது றுங்கொலைப் பாந்தளைக் கண்டனர் திறலோர்.

(இ-ள்.) அவ்வாறுபோன வெற்றியை யுடையவர்களான நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் குளிர்ச்சி தங்கிய ஒள்ளிய நீரையுடைய குளங்களுஞ் சோலைகளும் நெருங்கிய அப்பாதையைக் கடந்து அவ்விடத்திலுள்ள ஒப்பற்ற மலையினது அடிவாரத்திற்சென்று கோடைகாலத்தி லுண்டாகும் பெரிய காற்றைப்போலக் குற்றத்தையுடைய மூச்சுகளை எவ்விடங்களிலும் எறிந்து ஓசியாநிற்கும் மலைக்கொப்பானதீமைபொருந்திய கொலைத்தொழிலமைந்த அந்தச்சர்ப்பத்தைத் தங்களதுகண்களினாற் பார்த்தார்கள்.

கண்க ளக்கினிக் குவையென பொருதிசை கதுவ
மண்க ளெங்கணு மிருளுற நச்சுமா சுமிழ்ந்து
விண்கொ ளும்பிறைக் கீற்றென வெள்ளெயி றிலங்கப்
புண்கொ ளுங்கடை வாய்கவை நாவிடை புரள.

(இ-ள்.) கண்களானவை நெருப்புக்கூட்டத்தைப்போலப் பொருந்திய வெண்டிசைகளிலும் நீங்காதுபற்றவும், பூமிமுழுவதும் அந்தகாரமுறும்படி நஞ்சாகிய மாசைக்கொப்பளித்து ஆகாயத்தின்கண் சார்ந்த சந்திரனது கீற்றைப்போல வெள்ளியபற்கள் பிரகாசிக்கவும் புண்களைப்பெற்றக் கடைவாயின்கண் பிளவையுடைய நாவானதுபுரளவும். (௫)

புள்ளி வட்டவெண் பரிசைக ளெனவுடல் போர்ப்பத்
தள்ளி வாலசைத் திடுதலிற் றரையிடம் பிதிர்த்திட்
டள்ளி விட்டெறிந் தெனத்திசை திசைதுக ளடைய
விள்ள ருஞ்சிரச் சூட்டொரு கதிரினு மிலங்க,

(இ-ள்.) வெண்ணிறத்தையுடைய புள்ளிகள் வட்ட வடிவைக் கொண்ட பரிசைகளைப்போல சரீரத்தை மூடவும், வாலைத்தள்ளி யசைப்பதினால் பூமியினிடத்தைப் பிதிர்த்துக் கைகளினால்வாரிவிட்டெறிந்ததைப்போலத் தூசிகள் திசைகடோறும் நெருங்கவும், சொல்லுதற்கரிய தலையின்கண்ணுள்ள பூவானது ஒப்பற்ற சூரியனைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பிரகாசிக்கவும். (சு)

கண்டு தம்மனத் திடையினி லொருபயங் கரஞ்சற்
றுண்ட தில்லைகொ லென்னவந் துதித்தவந் நொடிக்கு
ளண்டர் போற்றிய முதலிறை யவன்றிரு வருளாற்
கொண்டு சத்தமொன் றெழுந்தது குவலயங் குலுங்க.

(இ-ள்.) அவ்விதமான சர்ப்பத்தை நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பார்த்துத் தங்களதுமனசின்கண் ஒரு பயங்கரமானது கொஞ்சம் உண்டோ? அதுஇல்லையோ? வென்று சொல்லும்படியாக வந்துதோன்றிய அந்த க்ஷணநேரத்தினகம் தேவர்கள் போற்றுநிற்கும் ஆதியிறைவனுன அல்லாகு சுபுகானகுவத்தஆலாவின் திருவருளைக்கொண்டு ஒருசத்தமானது பூமிமுழுவதும் குலுங்கும் வண்ணம் ஆகாயத்தின்கண்ணிருந்தெழும்பினது. (எ)

முகம்ம தேயும தடியிணை காணவிவ் வழியி
னிகரில் லொளிர வடைந்தது பயங்கர நினையா
தகம கிழ்ந்திடச் செலுமென வரசர்கோன் களித்துப்
புகர றத்தனி நடந்தடுத் தனர்புயங் கனையே.

(இ-ள்.) முகம்மதுவே! உம்முடைய இரண்டுபாதங்களையுந் தெரிசிக்கும்படியாக ஒப்பில்லாத பிரகாசத்தையுடைய அந்தச்சர்ப்பமானது இப்பாதையின்கண் வந்துசேர்ந்தது. ஆதலால் நீவிர் உமது மனகினகம் பயங்கரத்தை நினையாமல் களிப்புறும்படி அதன் முன்னால் நடந்துபோகுமென்று அவ்வசரீரியானவார்த்தையானது ஆகாயத்தின்கண்ணிருந்து முண்டாகவே மன்னுதிபரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சந்தோஷமடைந்து குற்றமான தொழியும்வண்ணம் ஏகமாய் நடந்துபோய் அச்சர்ப்பத்தை நெருங்கினுர்கள். (அ)

இரைந்து மூச்சொடுங் கிடந்தகட் செவிதலை யெடுத்து
விரிந்தெ ரிந்தகட் கடையினுன் முகம்மதை விழித்துத்
தெரிந்து நோக்கிநம் மிறையவன் றூதெனத் தெளிந்து
வருந்துந் துன்பமின் றெழிந்தன மெனமகிழ்ந் ததுவே.

(இ-ள்.) அவ்வாறுநெருங்கவே இரைதலுற்று மூச்சோடுங்கிடக்கப்பெற்ற அந்தச்சர்ப்பமானது தனதுதலையைத்தூக்கிஅக்கினியானது பாவிச்சுவாலித்தகடைக்கண்களினால் அங்கபிகளுயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைச் சமீபத்தில்விழித்துத் தெரிந்துபார்த்து இவர்நமது இறைவனான அல்லாகுசுபுகானகுவத்தஆலாவின் றசூல்தானென்று மனசின்கண் சந்தேகமில்லாது தேறுதலடைந்து இன்றோடுநாம் வருந்தாநின்ற வருத்தங்களெல்லாவற்றையும் ஒழிந்தோமென்று சொல்லிச் சந்தோஷமடைந்தது. (௯)

மலைகி டந்துயர்ந் தனதயென விரிந்தவாய் பிளந்து
தலையெ டுத்துநா விரண்டினு லொருசலாஞ் சாற்றி
நிலைய சைந்தொளி நெட்டுடல் குழைந்திட நெளிந்து
பலபொ றிப்படந் தரைபடப் பணிந்துபின் பகரும்.

(இ-ள்.) அவ்விதம் சந்தோஷமடைந்த அந்தச்சர்ப்பம் மலையானதுகிடந்துயரப் பெற்றதைப்போலத் தனது தலையைத்தூக்கி விரிந்தவாயினைத் திறந்து இரண்டு நாவினாலும் ஒப்பற்ற சலாஞ் சொல்லித் தன்நிலைபாதத்தை அசைந்து பிரகாசத்தையுடைய நெடிய சரீரமானது வளைந்திடும்படியாக நெளிந்து பலவிதப்புள்ளிகள் படர்ந்த படமானது பூமியின்மேற்படும்படித் தாழ்ந்துப் பின்னர்சொல்லும். (ய)

கோல வார்கழற் குரிசினும் மடிக்கொழுங் கமலத்
தால னேகமென் போலஃறி ணைக்கொடுஞ் சாதி
சீல மேவிய பதமுறு மென்பதைத் தெளிந்தெக்
காலங் காண்குவ னெனக்கிடந் தனனெடுங் காலம்.

(இ-ள்.) அழகிய நேர்மையான சரணங்களையுடைய குரிசிலாகியநபிகள் பெருமானே! தங்களின் செழுமைதங்கிய பாதார விந்தத்தினால் மனுஷியர் மாத்திரமல்லாமல் என்னையொத்த அனேகமான கொடிய அஃறிணைக் கூட்டங்களும் தருமத்தைப்பொருந்திய பதவியினை அடையுமென்று சொல்லுவதை மனசின்கண் சந்தேகமில்லாது தெளிந்துத் தங்களை எந்தக்காலம் பார்ப்பேனென்று நீண்ட காலபரியந்தம் இவ்விடத்திலேயே கிடக்கின்றனன். (கக)

பிறந்த நாட்டொடுத் திற்றைநாள் வரைக்குநும் பெயரை
மறந்தி ருந்தநா ளறிகில னினைக்கிலென் மனத்தி
லிறந்தி டாமுன மின்றுகண் டிடும்பல னெனைப்போ
லறந்த வம்புரிந் தவர்களும் பெறுவதற் கரிதால்.

(இ-ள்.) அன்றியும், நான் இந்தப்பூமியின்கண் பிறந்த அன்று முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் உங்களுடைய நாமத்தை எனதிருதயத்தில் மறந்துவிட்டு இருந்த ஒருதினத்தையாவது அறியமாட்டேன் ஆலோசித்துப் பார்க்குங்காலத்தில் இறந்துபோகுவதற்குமுன் இன்றையத்தினம் தங்களைத் தெரிசித்திடும் எனதுபிரயோசனத்தைப்போல புண்ணியத்தையும் தவத்தினையும் செய்தவர்களும் அடைவதற் கரிதாகும். (கஉ)

ஆதி நாயகன் திருவொளி வினிலவதரித்த
வேத நாயக மேயுமைக் கண்டதால் விளைத்த
பாத கம்பல தவிர்த்துமுற் பவங்களை யறுத்துத்
தீதி லாதநற் பதவியும் படைத்தனன் சிறியேன்.

(இ-ள்.) அன்றியும், யாவற்றிற்கும்முதலிறைவனான ஜல்லஜலாலஹுவத்த ஆலாவின் அழகிய பிரகாசத்தில் நின்று முதயமாகிய சகலவேதங்களுக்கும் நாயகமான நபிகள்பெருமானே! சிறியவனாகியயான் இன்றுஎன்து கண்களால் தங்களைத்தரிசித்ததினால் யான்செய்த பலவிதத் துரோகங்களை யொழித்து முன்னுள்ள பாவங்களையுமறுத்துக் குற்றமில்லாத நல்லமுத்தியையும் சம்பாதித்தேன். (கங)

என்று கூறியிம் மலரடி யிணையினை யெளியே
மென்று காண்குவ மோவென வயர்ந்துடைந் தெண்ணி
யென்று மின்றுபோற் காண்குவ மெனமனத் திருத்தி
யென்றுந் தின்பயிர் விளங்குற வாழியென் றிசைத்தே.

(இ ள்.) என்றுசொல்லி இந்தத்தாமரைப் புஷ்பம்போலும்இரு பாதங்களையும் எளியேமாகிய யாம் இனிஎக்காலம் தெரிசிப்போமென்று மிகத்தளர்வடைந்து பின்னர் எப்பொழுதும் இன்றையதினம்போலத் தெரிசிப்போமென்றுநினைத்து அவ்வெண்ணத்தை மனசின்கண் இருத்திஎந்நாளும் உங்களுடையதீனுல் லிஸ்லாமென்னும் பயிரானது எவ்விடத்தும் பிரகாசிக்கும்படி வாழ்கவென்று கூறி. ()

பணிப ணிந்தெனக் கெவைபணி விடை யெனப் பகர
வணிய ணிந்தெனச் செவியுறக் கேட்டதி சயித்து
மணிகி டந்தொளிர் புயவரை விம்முற மகிழ்ந்தார்
திணிசு டர்க்கதிர் வேல்வல னேந்திய திறலோர்.

(இ-ள்.) அந்தச்சர்ப்பமானது வணங்கி இனிமேல் எனக்குப்பணிவிடை யாதென்றுகேட்க; அவ்வார்த்தையை ஆபரணம் பூண்

டதுபோலும் திண்ணிய பிரகாசம்பொருந்திய கிரணங்களைப்பெற்ற வேலாயுதத்தை வலதுகையிற்றாங்கிய வீரமுடையவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களதுகாதுகளிற்பொருந்தும்படி கேட்டு ஆச்சரியமுற்று இரத்தினபாரணங் கிடந்தொளிராநிற்கும் தோள்களாகிய இருமலைகளும் விம்மிதமுறும்படிமகிழ்ச்சியடைந்தார்கள். (கரு)

பொருப்பி டத்தினு மடவிக ளிடத்தினு புகுந்து
விரும்பு றும்படி வாழ்வதல் லதுநெறி மேவி
யிருப்பி னின்வயி னிடர்வரு மெனவெடுத் திசைத்தார்
சுருபி ருந்துதே னிடைதவழ் தொடையணி தோன்றல்.

(இ-ள்.) அவ்விதம் மகிழ்ச்சியடைந்த வண்டுகள்இருந்துதேனூறுபக்கங்களில் தவழாநிற்கும் புஷ்பமாலையணிந்த புயங்களையுடைய மன்னவரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அச்சர்ப்பத்தைநோக்கி நீ மலைகளினிடத்திலும் காடுகளினிடத்திலும் நுழைந்து பிரியத்துடன் வாசஞ்செய்வதேயல்லாமல் இம்மாதிரிப்பாதைகளிற் பொருந்தியிருப்பாயானல் உனதுபால் ஆபத்துகள் வந்து சம்பவிக்குமென்று எடுத்துச் சொன்னார்கள். (கசா)

ஒடுங்கித் தெண்டனிட் டுறைந்திட நிகழ்ந்தொரு மருங்கி
னெடுங்கி ரிப்புறந் தவழ்ந்தென வுடறனை நெளித்து
மடங்கல் வெங்கரி கொடுவரி யடவியின் மறைந்து
நடுங்கி டத்தனி போயது பெருந்தலை நாகம்.

(இ-ள்) அவ்வாறு அவர்கள்சொல்லப் பெரிய தலையையுடைய அந்தச் சர்ப்பமானது ஒடுக்கமுற்று நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வணங்கித் தான் வாசஞ்செய்த அவ்விடத்தை விட்டும் நடந்து வேறே ஒருபக்கத்தில் நெடிய மலை யானது வெளியிலே தவழ்ந்ததைப்போலப் பார்த்தவர்கள் நடுக்கமுறும்படித் தனது சரீரத்தை நெளித்துக் கொடியசிங்கம் யானை வேங்கை முதலிய மிருகங்கள் வாசஞ்செய்யாநின்ற காட்டின்கண் ஏகமாய்த் தவழ்ந்துபோயிற்று. (யஎ)

நாக முற்றதுங் கிடந்ததும் பாதையி னயினர்
பாக முற்றுமெய் வணங்கிநன் மொழிசில பகர்ந்து
போகை யென்றதிற் போயதும் புதுமைகொ லெனவே
யாக முற்றதி சயித்தன ரனைவரு மன்றே.

(இ-ள்.) அப்போது அங்குற்ற வியாபாரிகளனைவரும் சர்ப்பமானது பாதையிற்பொருந்தியதும் கிடந்ததும் நமது நயினாரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பக்கத்திலடைந்து தனது சிரத்தினாற்பணிந்து நன்மைதங்கிய சிலவார்த்தைகளைச்சொல்லிப் போவாயாகவென்று சொன்னதினால் அவ்விடத்தைவிட்டும் போயதும் அற்புதந்தானென்று மனசிற்கொண்டு ஆச்சரியப்பட்டார்கள். (அ௰)

பாந்தள்வசனித்தபடலம்.

முற்றிற்று.

ஆக படலம்-௰௫-க்கு திருவிருத்தம்-எ௮௫.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

இசுறுகாண்படலம்.

கலிநிலைத்துறை.

எரிந்த கட்பொறி யரவுவந் துறையிட மிவனே
யருந்த வப்பொருண் முகம்மது மடையிட மிவனே
தெரிந்து காண்பதற் கிவையிவை குறியெனச் சேர்த்தி
விரிந்த தம்பெருங் குழுவுட னடந்தனர் விறலோர்.

(இ-ள்.) தீயானது சுவாலித்த கட்பொறியினையுடைய சர்ப்பமானது வந்துதங்கிய இடமும் இவ்விடந்தான். அறிய தவத்தினது பொருளாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்வந்து சேர்ந்த இடமும் இவ்விடந்தான். அறிந்து பார்ப்பதற்கு இன்னின்னவை அடையாளங்களென்று யாவர்களும்சொல்ல வெற்றியையுடையவர்களான நபிபெருமானாரவர்கள் தங்களதுசேர்மானமாகியவிரிந்த பெரிய கூட்டத்தோடும் நடந்துபோனார்கள். (க)

பரல்ப ரங்கிடங் குகளெழப் படுமுனைத் திரிகோட்
டிரலை மென்பிணை கன்றுடன் றிரிந்தகா னேகி

விரிதலைச்சிறு முள்ளிலைச் செங்குலை விளைந்த
கரிய மென்கனி சொரிதரு பொழிலையுங் கடந்தார்.

(இ-ள்.) அவ்வாறு நடந்துபோனவர்கள் பருக்கைக்கற்கள்பரவி இடமுழுவதிலும் தூசிக ளெழும்பும்படி மிகுந்த கூர்மைதங்கிய திரிந்த கொம்புகளையுடைய கலைமான்கள் தங்களது மெல்லியசரீரத்தையுடைய பெண்மான்களோடுங் குட்டிகளோடும் உலாவித்திரியாநின்ற காடுகளிற்சென்று விரிந்த தலையையும் சிறிய முட்கள்பொருந்திய இலைகளையும் சிவந்த குலைகளையு முடைய விளைவுற்ற கரிய மேன்மையவான பழங்களைச் சிதறுநிற்கும் பேரீத்தங் காவுகளையுந் தாண்டினார்கள். (உ)

ஈத்தப் போட விகள்பல கடந்தய லேகப்
பூத்த மென்மலர் செறிதரு பொழில்புடை சூழ
வாய்த்த நற்குடிப் பெயருடன் வழியிடை நெடுநாட்
காத்தி ருந்தபண் டிதன்மனை தெரிதரக் கண்டார்.

(இ-ள்.) அவ்விதம் ஈத்தமரங்கள் தங்கிய பெரிதான பலகாடுகளைத் தாண்டி அப்புறஞ்செல்லவே புஷ்பித்த மெல்லிய மலர்கள் நெருங்கிய சோலைகள் பக்கத்திற் சூழும்படி சிறப்புப்பொருந்திய நல்ல குடும்பத்தினது கீர்த்தியுடன் அப்பாதையின்கண் நீண்டகாலமாய் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வருவார்களென்று காத்துக்கொண்டிருந்த இசுறுவென்னும் நாமத்தையுடைய பண்டிதனின் மாளிகையானது தெரியும்படி பார்த்தார்கள். (௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரைதரு வாரி யேழு மெடுத்துவாய் மடுத்துண் டோடிச்
சொரிதரு மேகம் போலச் சொல்லுமெய் மறைக ளென்னுங்
கரையில் வாருதியை யுண்டு கருத்தினி லிருத்தி யார்க்குந்
தெரிதர வறிவு மாரி பொழிந்திடத் திறக்கும் வாயான்.

(இ-ள்) ஒலிக்கின்ற சமுத்திரங்க ளேழையு மெடுத்து வாயினைத்திறந்தருந்தி ஆகாயத்தின்கண் சென்று பொழியாநிற்கும் மேகத்தைப்போல அகிலமுழுவதுந்துதிக்கின்ற சத்திய வசனத்தையுடையவேதங்களென்னுங் கரையில்லாத சமுத்திரத்தையருந்திச் சிந்தையின்கண்ணிருக்கச்செய்து யாவர்களுக்குந் தெரியும் அறிவாகியமழையைப் பொழிந்திடும்படி திறக்குகின்ற வாயினையுடையவன். ()

ஆதமே முதலீறுக வருநபி யவர்கட் கெல்லாம்
பேதமொன் றின்றி வந்த பெருவர மறையின் றீஞ்சொ
லோதிய முறைமை யந்நா ளொழுகிய வொழுக்க மிந்நாண்
மாதவர் குறிப்புந் தேர்ந்து வகுத்தெடுத் துரைக்கும் வாயான்.

(இ-ள்.) அன்றியும், மூலபுருஷரான நபிஆதமலைகிஸ்ஸலா மவர்கள் முதலாய்க் கடைசியாக வராநின்ற நபிமார்களுக் கெல்லாம் யாதொரு வேற்றுமையு மில்லாது ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் பக்கத்திலிருந்துவந்த பெரிய வரத்தினையுடைய வேதங்களின் இனிமைதங்கிய வசனங்களையும் அவைகள் சொல்லிய முறைமைகளையும் அக்காலத்தில் நடைபெற்ற ஒழுங்குகளையும் இக்காலத்தில் மகா தவத்தை யுடையவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அடையாளங்களையும் தெளிந்து அவைகளைப் பிரித்து எடுத்துக் கூறுநிற்கும் வாயினை யுடையவன். (ரு)

பல்வித நூலிற் றேர்ந்து பலசம யங்களாகச்
செல்வழி யனைத்து நோக்கிச் சென்றுமட் டறுத்துத் தேறிக்
கல்பினி லிருத்தி மாறுக் கதிப்பதி சேர்க்குந் தூய
நல்வழி தெரிந்து காண நடுவெடுத் துரைக்கு நாவான்.

(இ-ள்.) அன்றியும், அனேகவிதமான சாஸ்திரங்களிற்றேர்ச்சி யடைந்து பற்பலமதங்களாகச் சொல்லாநின்ற மார்க்கங்களெல்லா வற்றிலுஞ்சென்று அவைகளை நன்றாய்ப்பார்த்து அளவறுத்துத் தெளிந்து மனசின்கண் ணிருக்கச்செய்து நீங்காத மோட்சத்தை யுடைய சுவர்க்கலோகத்தில் சேர்க்காநிற்கும் பரிசுத்தமான நல்ல மார்க்கத்தை உணர்ந்து அதன்நீதியை யாவர்களும் அறியும்படி எடுத்துச் சொல்லுகின்ற நாவினை யுடையவன். (சு)

அறிவுநல் லொழுக்கம் வாய்மை யன்புறு மிரக்க மிக்கப்
பொறைதவங் குணம்வ ணக்கம் பொருவிலா சார மேன்மைத்
திறநிறை யருணன் மானந் தேர்ச்சியிற் றெளிந்த கல்வி
குறைவறப் பெருகி நாளுங் குடிபுகுந் திருந்த நெஞ்சான்.

(இ-ள்.) அன்றியும், நன்மைதங்கிய அறிவும் ஒழுக்கமும் உண்மையும் அன்புபொருந்திய கருணையும் அதிகப் பொறுமையும் தவமும் குணமும் தெய்வவணக்கமும் ஒப்பில்லாத ஆசாரமும் மேன்

மையான வலிமையும்நிறைந்த அருளும் நல்ல அபிமானமும் தேர்ச்சியினல் தெளிவுபெற்ற கல்வியும் குறைவில்லாது அதிகரித்து எந்நாளும்வாசமாக நுழைந்து இருக்கப்பெற்ற நெஞ்சினை யுடையவன்.

தருந்தரு வனைய செங்கைத் தனபதி யிசுரு வென்னும்
பெருந்தவ முடைய வள்ளல் பிறங்கொளி தவழு மாடத்
திருந்தன னிருந்த போதி லெழுகதித் துகளான் மூடிப்
பரந்திடும் வரவு நோக்கிப் பார்த்ததி சயித்து நின்றான்.

(இ-ள்.) எண்ணியன வெல்லாந்தருகின்ற கற்பக விருக்கத்தைப் போன்ற சிவந்த கையினைப்பொருந்திய குபேரனுன இசுருவென்னும் பெரியதவத்தையுடைய வள்ளலாகிய அவன்பிரகாசியாநின்ற ஒளியானது தவழாநிற்குந் தனது மாளிகையின் மேன்மாடத்தில் இருந்தான். அவ்விதமிருக்கின்ற சமயத்தில் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் மற்றும் வியாபாரிகளும் தங்களது குதிரைமுதலிய மிருகங்களை நடத்துதலினல் அந்நடையின்கண்ணிருந்தெழும்பா நிற்கும் தூசியானது எவ்விடத்தையும் மூடிப்பரவிடும் வரவைக்கண்டு அதிசயித்து அவ்வழியைப் பார்த்தவனாகவே நின்றான். (அ)

மெய்த்தவம் பொருந்து மக்கா புரத்துறு வேந்தர்கொல்லோ
பத்திவிட் டொளிர்சாமென்னும் பதியுடைத்தலைவர்கொல்லோ
முத்தவெண்மணியிற்றோன்று முகம்மதின்வரவுகொல்லோ
வெத்தலத் தவரோ விங்ங னெதிர்ந்தவரென்றுநின்றான்.

(இ-ள்) அவ்வாறுநின்ற அவ்விசுருவானவன் இவ்விடத்தில் எதிர்த்து வரப்பட்டவர்கள் உண்மையான தவத்தைப் பொருந்திய மக்கமா நகரத்தின்கண் வாசஞ்செய்யும் அரசர்களோ வரிசைவிட்டுப் பிரகாசியாநிற்கும் சாமென்னும் நகரத்தையுடைய தலைவர்களோ முத்தமாகிய வெள்ளிய மணியின்கண் உதயமாகும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வரவினது மனிதர்களோ? அல்லது வேறெந்த நகரத்தை யுடையவர்களோ என்று ஆலோசித்துக் கொண்டு நின்றான். (கூ)

ஒட்டகம் புரவி தூர்த்திட்டுறுதுக ளுதயன் மாய
மட்டறப் பொலிந்துதோன்றி வருமவர் தமக்கு மேலா
யிட்டதோர் கவிகை மேக மெழிலுறத் துலங்கக் கண்டு
கட்டிய மாலைத் திண்டோன் களித்தெழப் புளகம் பூத்தான்,

(இ-ள்,) அவ்விதம் நிற்கவே ஒட்டகம் குதிரைமுதலிய மிருக ங்கள்தூர்த்து அதிலுண்டாகுந் தூசியினல் சூரியனது பிரகாசமா னது மறையும்வண்ணம் அளவில்லாது பெருகித் தோற்றமுற்று வரு கின்ற அக்கூட்டத்தார்களுக்கு மேலாக இட்ட ஒப்பற்ற மேகக்கு டையானது அழகுபொருந்தும்படி ஒளிரப்பார்த்து புஷ்பங்களினுற் கட்டியமாலையை யணிந்த திண்ணிய புயங்க ளானவை பூரித்தெழும் பும்படி மகிழ்ச்சியடைந்தான். (க0)

வேதவா சகத்தி லீசா விளம்பிய வசனந் தேர்வான்
கோதறு கரிய மேகக் குடைநிழ ஞெடர்ந்து வந்த
பாதையோர் தம்மை நீங்காப் பரிவினே நோக்கி நோக்கித்
தீதறு முகம்மதென்னத் தெளிந்தனன் செவ்வியோனே.

(இ-ள்.) அன்றியும், முன்னர் நபிஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் வேதவசனத்திற்கூறிய வார்த்தைகளைத் தெளிந்தவனான அழகிய அவ்விசுருவென்பவன் குற்றமற்ற கரியநிறத்தையுடைய மேகக்கு டையினது நிழலானது பின்பற்றிவந்த அந்தப்பாதையிலுள்ள அக் கூட்டத்தார்களை மாருத அன்பினல் பார்த்துப் பார்த்து தீமையா னது ஒழியப் பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர் கள்தானென்று மனசின்கண் தேறினுன். (கக)

கருந்தடங் கவிகை வள்ளல் வரவுகண் களித்து நோக்கி
யருந்தவம் பெற்றே னின்றென் றருகிருந் தவனைக் கூவி
விருந்திவ ணருந்தி நந்தந் துடவையில் விடுதியாக
விருந்தவ தரித்துப் போமி னெனவெடுத் தியம்பு கென்ருன்.

(இள்.) அன்றியும், விசாலித்த கரியநிறத்தைக் கொண்டமேகக் குடையையுடைய வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்ல மவர்களின் வருகையைக் கண்களினுற்பார்த்து மகிழ்ச்சியடை ந்துயான் இன்றையதினம் அரிதான தவத்தைப் பெற்றேனென்று சொல்லித்தனது பக்கத்திலிருந்த ஒரு வேலையாளனைக் கூப்பிட்டு நம்முடைய சோலையின்கண் விடுதியாகத் தங்கியிருந்து இவ்விடத் தில் விருந்துண்டுபோகுங்க ளென்று அப்பாதை யோர்களுக்கு எடு துச் சொல்லுவாயாகவென்று கட்டளைசெய்தான். (கஉ)

என்றவ னுரைப்பக் கேட்டங் கெழுந்தனன்பாதையோர்முன்
சென்றனன் விரைவின்வந்த தேசிகர் தம்மை நோக்கி

மின்றவ மூலங்கல் வேலிர் சோலைவாய் விடுதி யாகிச்
சொன்றியுண்டெழு திரென்னச்சொல்லினன்முதியோனென்றான்.

(இ-ள்) என்று அவ்விசுருவென்பவன்கூற அவ்விடத்தி லிரு ந்த வேலையாளன் தனது காதுகளினாற் கேள்வியுற்று எழும்பி அங் குவராநின்ற பாதையோர்களின் முன்னர் விரைவாகப்போய் தன க்கு எதிரில் வந்த அத்தேசாந்தரிகளாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் முதலிய வியாபாரிகளைப் பார்த்து பிரபையா னது தவழாநிற்கும் மாலைசூடிய வேலாயுதந்தாங்கிய கையையுடைய வர்களே! நீங்கள் எங்களது சோலையினிடத்தில் விடுதியாக இறங்கி யிருந்து விருந்தாக அன்னமருந்திப் பின்னர் எழும்பிப் போகுங்க ளென்று முதியவனான இசுருவென்னும் பண்டிதன் சொன்னானெ ன்று சொன்னான்.

விருந்தெனு மாற்றங் மேட்டு மெய்மகிழ்ந் தாகம் பூரித்
திருந்தனர் விரிந்த காவி விடபமத் திரிமா வெல்லா
மருந்தின குளகு நீருண் டவ்வயி னுறைந்த பின்னர்
திருந்திய பண்டமி யவுஞ் செறிந்தொரு புறத்திற் சேர்த்தார்.

(இ-ள்.) அவன் அவ்வாறு விருந்தென்று சொல்லும் வார்த் டதயைத் தேசாந்திரிகளாகிய அவ்வியாபாரிகளனைவரும் தங்களது காதுகளினாற் கேள்வியுற்று மனமகிழ்ச்சி யடைந்து சரீரம்பூரிக்கப் பெற்று விசாலமாகிய அச்சோலையின்கண் இறங்கி யிருந்தார்கள் எருதுகள் ஒட்டகங்கள்குதிரைகளியாவும் ஜலமருந்தி இலைமுதலிய உணவுகளை யுண்டு அவ்விடத்திற்றானே தங்கிய பின்னர் அவர்கள் செவ்வையான பொருள்க ளெல்லாவற்றையும் நெருக்கமாக ஓரிடத் திற்கூட்டி வைத்தார்கள். (கச)

மறந்தலை மயங்குஞ் செவ்வேற் காமுகம் மதுதாம் வந்தங்
குறைந்திடத் தருக்க ளியாவுந் தளிர்த்தனவொண்பூக்கோட்டி
னிறைந்தன வின்ற பைங்காய் நெருங்கின கனிக ளெங்குஞ்
சிறந்தன தேம்பெய் மாரி சிந்தின திசைக ளெங்கும்.

(இ-ள்.) அப்போது கொலையானது பெருகியசிவந்த வேற்ப டைதாங்கிய கையினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் வந்து அந்தச் சோலையின்கண் தங்கிடவே; அங்குள்ள மரங்கள் முழுவதுந்துளிர்த்தன. அவற்றின்கொம்புகளில் தெள்ளி யபுஷ்பங்கள் பெருகின. காய்க்கப்பெற்ற பசியகாய்கள் செறிந்தன. எவ்விடத்தும் பழங்கள் மிகுத்தன. எண்டிசைகளிலும் சொரியா நின்ற தேன்மழைபொழிந்தன. (கரு)

மறைதெரி யிசுரு வென்போன் முகம்மது தமக்கன்பாக
முறைவிருந் தளிக்கு முன்ன முகிழ்நனி தருக்க ளெல்லா
நிறைமலர்த் தலைகள் சாய்த்து நீண்டமென் றளிர்க்கை தன்னால்
வெறிநறுக் கனிகள் சிந்தி விருந்தளித் திட்ட வன்றே.

(இ-ள்.) அன்றியும், வேதங்களைக் கற்றுணர்ந்த இசுரு வென்னும் பண்டிதனானவன் நேசத்தோடும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு வரிசையானவிருந்து கொடுப்பதற்குமுன்னர் மிகுந்த மலரரும்புகளையுடைய அச்சோலையின் கண்ணுள்ள விருக்கங்களனைத்தும் பெருகிய புஷ்பங்களாகிய சிரங்களைச்சரித்து நீட்சியுற்ற மெல்லியதுளிர்களாகிய கைகளால் வாசனைபொருந்திய தேனையுடைய பழங்களைச்சிதறி விருந்துகொடுத்தன.

விரிபசுந் தோடு விண்டு மென்முகை யவிழ்க்கும் பூவி
னரியளி குடைந்து தேனுண் டஹ்மதின் புகழைப்பாட
மரகதக் கதிர்விட் டோங்கு மணிச்சிறை விரித்து நீண்ட
கரைகளிற் றருவி னீழற் களிமயி லாடு மன்றே.

(இ-ள்.) அன்றியும், விரிந்த பசிய இதழ்களைத் துறந்து மிருதுவான மொட்டுகளை மலரும்படி செய்யும் தேனீக்கள் புஷ்பங்களைத் துளைத்து மதுவை யருந்தி அஹ்மதென்னுந் திருநாமத்தை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் கீர்த்தியைப் பாட அப்பாட்டுக் கிசைந்து மகிழ்ச்சி கொண்ட மயிலினங்கள் தங்களது பச்சைநிறத்தையுடைய கிரணங்களை விட்டு ஓங்காநின்ற அழகிய சிறகுகளை விரித்து நீட்சி பெற்ற கரைகளில் நிற்கும் விருட்சங்களின் நிழல்களில் ஆடாநிற்கும். (கஎ)

மடலவிழ் வனச வாவி வைகையம் பதிக்கு வேந்த
னடலுறை யபுல்கா சீந்தம் மருங்குடிச் செல்வம் போலப்
புடைபரந் தலர்கள் சிந்திப் பொங்குதேன் கனிக டேவிச்
சுடரவன் கதிர்க டோன்றுச் சோலைவாய் விளங்கிற் றன்றே.

(இ-ள்) அன்றியும், மடல்க ளவிழாநிற்கும் தாமரைத்தடாகங்களையுடைய அழகிய வகுதை நகருக்கு அரசரான வலிமை தங்கிய அபுல்காசீ மரைக்காயரென்னும் இந்நூலிற்கு உதாரநாயகரவர்களின் அரிதான வீட்டினது செல்வத்தைப் போலப் பக்கங்களிற்

பாவிப் புஷ்பங்களைச் சிதறி மதுவானது பெருகுகின்ற பழங்களை நாலுபக்கமும் பொழிந்து சூரியனது கிரணங்களுந்தெரியாது கிளைக ளினால்நெருக்கமுற்று அச்சோலையின் இடமுழுவதும் பிரகாசித்தது

மருப்புகுஞ் சோலை வேலி நீழலில் வரவு மொட்டார்
நெருப்புநீருப்பென் றூலு நினைத்தெடுத் தளிக்கி லாதார்
பொருப்பென வுயர்ந்த செந்தேம் பொழிலிடை புகுந்துநந்தம்
விருப்பொடுமிருப்பச்செய்தார் முகம்மதின் வியப்பி தென்பார்.

(இ-ள்.) அப்போது அங்குற்றவியாபாரிகள் மரக்கொம்புகளை நாலுபக்கமும் விட்ட இந்தச் சோலையினது வேலியின் நிழலில் இத ற்குச் சொந்தக் காரரான பண்டிதன்முதல்பேர் அன்னியர்களை வர வாலும் சம்மதிக்க மாட்டார்கள். தீ ஜலம் உப்பு இவற்றில் எதை யாவது கேட்டாலும் எடுத்துக் கொடுக்க எண்ணவு மாட்டார்கள். அவ்விதமிருக்க நாமனைவோரும் மலையைப்போல வளர்ந்தசிவந்த மது வைப்பொழியாநிற்கும் இந்தச் சோலையின்கண் நுழைந்து நம்மு டைய பிரியத்துடன் இருக்கும்படி செய்தார். ஆனதினால் இஃது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் அதிசயமெ ன்று அவ்வர்த்தகர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ளுவார்கள்.

சீதநீர் குடைவா ராடிச் செழும்பொழின் மலர்கள்கொய்வார்
கோதறுகனிகடிப்பார் கொழுந்தழை விலங்குக் கீவார்
போதினி லமளி செய்வார் பூத்தொடுத் தணிந்து கொள்வார்
மாதவர் முகம்மதிங்ஙன் வரப்பெறும் பலனீ தென்பார்.

(இ-ள்.) அன்றியும், அவர்கள் அங்குற்ற குளிர்ச்சி தங்கிய ஜல த்தின்கண் ஸ்நானஞ்செய்வார்கள். அவ்விதம் ஸ்நானஞ் செய்து செழுமையான அச்சோலையின்கண்ணுள்ள புஷ்பங்களைப் பறிப்பா ர்கள். குற்றமற்றபழங்களைப் புசிப்பார்கள். வளமை பொருந்திய தளிர்களைப் பறித்துமிருகங்களுக்குக் கொடுப்பார்கள். பூக்களினால் படுக்கைக் குரியமெத்தை முதலியவைகளைச் செய்வார்கள். மலர்களை க்கோத்து சரீரத்தின்கண் தரித்துக்கொள்ளுவார்கள். இஃதெல்லாம் பெரியதவத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம வர்கள் இவ்விடத்தில் வரப்பெற்ற பிரயோசனமென்று வாயைத்திற ந்து பேசிக்கொள்ளுவார்கள். (உ௰)

கனிபல வருந்தித் துண்டக் கரும்படு சாறு தேக்கிக்
குனிதலை யிளநீ ருண்டு கொழுமடற் றேனை மாந்தி

கனிவயிறார்ந்தோம் பொய்யா நாவினன் மனையிற் புக்கி
யினியெவர் விருந்துண்பாரென் றெழின்முகமலர்ந்துசொல்வார்.

(இ-ள்.) அன்றியும், அவர்கள் பலவிதமான பழவர்க்கங்களைப் புசித்துக் கரும்பினது துண்டங்களைக் காச்சிய சாற்றினைத் தேக்கிக் குனிந்த சிரத்தினையுடைய தென்னமரங்களின் இளநீர்களைக் குடித்துச் செழிய மடலினது தேனையருந்தி மிகவயிறு நிறைந்தோம் ஆகையால் இனிமேல் பொய்யாத நாவினையுடையவனான அவ்விசுரு வென்னும் பண்டிதனது வீட்டின்கண் புகுந்து யாவர் விருந்தருந்துவார்களென்று தங்களது அழகிய முகமானது மலரப்பெற்றுப் பேசிக்கொள்வார்கள். (உக)

இன்னன மியம்பிக் காவி லினிதுறைந் திருக்குங் காலைச்
சென்னெறி வேதநன்னூ றெளிந்தறி யிசுரு வென்போன்
றன்மனை விருந்துண்டேக வருதிரென் றிருவர் சார்ந்திம்
மன்னவர் தம்மைப் போற்றி மனங்களி குளிர்ப்பச் சொன்னார்.

(இ-ள்.) இந்தப்படியாக ஒருவர்க் கொருவர் பேசிக்கொண்டு அந்தச் சோலையின்கண் இனிமையோடுந் தங்கி யிருக்கும் சமயத்தில் அவ்விடத்திலிருவர்கள் வந்து எவ்விடத்தும் செல்லாநிற்கும் சன்மார்க்கத்தினை யுடைய வேதங்களையும் நன்மை பொருந்திய சாஸ்திரங்களையுந் தேர்ச்சியுற்றறிந்த இசுருவென்று சொல்லும் பண்டிதனது வீட்டில் விருந்தருந்திப்போக வாருங்களென்று இவ்வரசர்களான வியாபாரிகளைத் துதித்து இவர்களின் உள்ளமானது சந்தோஷத்தினாற் குளிர்ச்சி யடையும்படி சொன்னார்கள். (உஉ)

மடிவுறு மனத்தனாகி வருமபூ ஜகிலென் றோதுங்
கொடியவன் கவட மாயோர் சூழ்ச்சியைக் குறித்து நீண்ட
கடிகமழ் சோலை வாயின் முகம்மதைச் சரக்குக் காக்கும்
படியிருத்திடுதி ரியாரும் பரிவுட னெழுதி ரென்றான்.

(இ-ள்.) அப்போது கேடுதங்கிய இருதயத்தையுடையோனாகி வராநிற்கும் அபூஜகிலென்று சொல்லும் கொடுமைதங்கிய பாதகன் தனது மனசின்கண் வஞ்சகமாக ஒரு பாயத்தை ஆலோசித்து ஆங்குற்றவர்களை நோக்கி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களை நீட்சியுற்ற வாசனையானது பரிமளியா நிற்கும் இந்தச் சோலையினிடத்தில் சரக்குகளைக் காத்துக்கொள்ளும்படியாக இருத்தி

வையுங்கள் மற்றரிாவர்களும் விருந்துண்ணும்படி ஆசையோடும் எழும்புங்க ளென்றுசொன்னான். (உங)

வஞ்சக னுரைத்த மாற்றங் கேட்டபூ பக்கர் மாழ்கி
நெஞ்சகம் புழுங்கிச் சென்றார் நிறைமலர்த் தேனை மாந்திச்
சஞ்சரி கங்கள் பாடுந் தண்டலை நீங்கி யாரும்
விஞ்ஞையு மறையுந் தேர்ந்த வேதியன் மனையிற் புக்கார்.

(இ-ள்) வஞ்சகனாகிய அவ்வபூஜகி லென்பவன் அவ்வாறு சொல்லியவார்த்தைகளை அபூபக்கரவர்கள் தங்களது காதுகளினாற் கேள்வியுற்றுமயங்கி மனசினுள் புழுக்கமடைந்து பெருகிய புஷ்பங்களினது மதுவைக்குடித்துத் தேனீக்கள் பாடாநிற்கும் அந்தச் சோலையை விட்டும் மாறி முன்னரெழுந்து பலவிதக் கல்விகளையும் வேதங்களையும் நன்றாய்க் கற்றுத்தேர்ந்த வேதியனான இசுறுவென்னும் பண்டிதனது வீட்டின்கண் போய்ச்சேர்ந்தார்கள். பின்னர் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நீங்கலாக மற்றும் வியாபாரிகளான அனைவர்களும் போய்ச்சேர்ந்தார்கள். (உச)

மூதுரை வழிவழாதோன் முன்றில்வந் தவர்க ளோடுஞ்
சீதவொண் கவிகை நீழற் காண்கிலன் றெருமந் தேங்கிப்
பாதக ரிவரியா ரென்றன் பவக்கட லொழியவந்த
மாதவ ரிலையென் றெண்ணி வாடிய மனத்த னானான்.

(இ-ள்.) அப்போது நபிமார்கள் முதலிய முன்னோர்களின் பழமொழிகளினது ஒழுங்குகளைத் தவறாதவனான இசுறுவென்னும் அப்பண்டிதன் தனது வீட்டின் முற்றத்தில் வந்தவர்களோடும் ஒள்ளிய மேகக் குடையினது நிழலைக்காணாதவனாகிச் சுழன்று எக்க முற்றுப் பாதகர்களாகிய இவர்கள் யாவர்கள்? எனது பாவச்சமுத்திரந் தொலையும்படி வந்த மகாதவத்தை யுடையவர்களான நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க ளில்லையேயென்று நினைத்து வாட்டத்தைக் கொண்ட மனசையுடையவனாயினான். (உரு)

மறந்திகழ் வேலீ ரிங்கு வந்தவ ரன்றிக் காவி
லுறைந்தவ ருளரோ வென்ன வுறுவினைத் துடரை நீக்கித்
துறந்தவ னுரைப்பப் பாவம் பகையொருதொகையாய்க்கூடிப்
பிறந்தபூஜகிலென்றோதும் பெயரினன்பெயர்ந்துஞ்சொல்வான்

(இ ள்·) பொருந்திய பாவத்தினது தொடர்பை யொழித்து யாவுந்துறந்தவனாகிய இசுரு வென்னும் அப்பண்டிதன் வலிமை யானதுபிரகாசிக்கின்ற வேற்படைதாங்கியகையினையுடையவியாபாரி களே! இப்போது இவ்விடத்தில் வந்தவர்களாகிய நீங்க ளல்லாமல் அந்தச்சோலையின்கண் தங்கியவர்களும் வேறே உள்ளரோ? என்று கேட்கப்பாதகமும் பகைமையும் ஒரு கூட்டமாய்க் கூடி இப்பூமியி ன்கண் உற்பவித்த அபூ ஜகிலென்று சொல்லும் பெயரினை யுடைய வன் திரும்பவுஞ் சொல்ல ஆரம்பித்தான். (உசு)

வடுக்கதிர் வேற்க ணங்கை மனைப்பொருட் பண்ட மற்று
மடுக்கிய துணர்ப்பைங் காவி லஹ்மதென் றொருவ னல்லா
லெடுக்கருந் தவத்தின் மேலோ யாவரு மடுத்தோ மென்ன
நடுக்கமொன் றின்றிச் சொன்னா னஞ்சுறும் வெஞ்சொ லானே

(இ-ள்) தீமை பொருந்திய கொடிய வார்த்தைகளை யுடைய வனான அவ்வபூ ஜகிலென்பவன் தாங்குதற் கரிய தவத்தை யுடைய மேன்மைபெற்ற பண்டிதரே! குற்றமமைந்த பிரகாசத்தையுற்ற வேலாயுதம்போன்றகண்களைக்கொண்ட பெண்களை யுடைய எங்கள் வீட்டின் பொருளாகிய வஸ்துவு முதலியவைகளை அடுக்கிய பசிய பூக்களையுடைய அந்தச் சோலையின்கண் அவைகளைக் காக்கும் பொ ருட்டு அஹ்மதென்று சொல்லும் ஒருவனல்லாமல் மற்ற யாவர்களு ம் இங்குவந்துசேர்ந்தோமென்று யாதொரு அச்சமு மில்லாமலெடு த்துச் சொன்னான். (உஎ)

தீயினுங் கொடிய மாற்றஞ் செவிமடற் றுளையி லோடிப்
போயது சிந்தை யூடு புகைந்திடப் புழுங்கிப் பொங்கி
வாயினீர் வறந்து கண்ணில் வளர்தழற் கொழுந்து காட்டிக்
காய்சின வேறு போன்றான் கவலுநூற் புலமையோனே.

(இ-ள்.) அவன் அவ்வாறு எடுத்துச் சொல்லிய அக்கினியைப் பார்க்கிலும் அதிகக் கொடுமை தங்கிய அவ் வார்த்தைகள் யாவர்க ளும் போற்றா நிற்கும் சாஸ்திரத்தின் வித்தாண்மையுள்ள பண்டித னான அவ்விசுரு வென்பவனின் செவியினது மடற்றுவாரத்தில் ஓடிச்சென்று மனசின்கண் எரிந்திடவே, அவன் புழுக்கமுற்றுக் கொதித்து வாயிலுள்ள உமிழ்நீரானதும் உலரப்பெற்றுக் கண்களில்

வளராநின்ற அக்கினியின் சுவாலையைக காட்டிக்காய்ந்த கோபத்தை யுடைய ஆண்சிங்கத்தை நிகர்த்தவனுயினன். (உஅ)

சினத்தினை யடக்கித் தேருச் சிந்தையைத் தேற்றி நந்தம்
வனத்தினி லிருந்த செவ்வி முகம்மதைக் கொணர்க வென்ன
நினைத்தவ னுரைப்பக் கேட்டங் காரிது நெடிதிற்புக்கிக்
கனைத்துவண்டிருந்த தண்டார் ஹபீபுதம் மிடத்திற்சார்ந்தான்.

(இ-ள்.) அவ்விசுரு வென்னும் பண்டிதன் அவ்வாறு உண்டாகிய கோபத்தை ஒடுக்கித்தெளியாத மனதைத் தெளியும்படிசெய்து ஆலோசித்து நமது சோலையின்கண் ணிருக்கப் பெற்ற அழகிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கூட்டிக்கொண்டு வாருங்களென்று சொல்ல, அதை ஆரிதென்பவன் கேள்வியுற்று நெடிதாக அச்சோலையின்கண் புகுந்து வண்டுகளானவை ஒலித்துத் தங்காநிற்கும் குளிர்ச்சி பொருந்திய மலர்மாலை யணிந்த புயங்களை யுடைய ஹபீபென்னுங் காரணப் பெயர்பெற்ற நபிகனுயக மவர்களிடத்திற் போய்ச் சேர்ந்தான். (உகூ)

மங்குலங் கவிகை யீர்நம் வரவினைக் காணுன் சீற்றச்
செங்கதிர் தெறிக்கக் கண்கள் சிவந்தனன் சினந்த வேகம்
பொங்குமா தவத்தோன் கோபப் புரையற வேண்டு மல்லா
லெங்களைக் காக்க வேண்டும் படியெழுந் தருள்திரென்றுன்.

(இ-ள்.) அவ்விதம் போய்ச்சேர்ந்த ஆரிதென்பவன் அழகிய மேகக்குடையை யுடைய நபிகள் பெருமானே! நமது வருகையைக் கண்களினுற் காணுது சீற்றமுற்றவனுய் சிவந்த கிரணங்கள் தெறிக்கும்படி இரண்டுகண்களும் சிவப்பை யடைந்து சினந்தவேகமானது அதிகரிக்கும் மகாதவத்தைப் பெற்ற அவ்விசுரு வென்னும் பண்டிதனது கோபமாகிய குற்றமற வேண்டியது மல்லாமல் எங்களனைவரையும் இரட்சிக்கும்படி அப்பண்டிதனது வீட்டின்கண் எழுந்தருளுங்க ளென்று சொன்னுன். (௩0)

சினைவய வரியா ரீது செப்பிய மாற்றங் கேட்டு
மலையெனும் புயங்க ளோங்க மகிழ்ந்துபுன் முறுவல் கொண்டு
கலைவல விசுரு வென்னுங் காவலன் களிப்பச் சேந்த
விலைமலி கதிர்வே லேந்தி முகம்மது மெழுந்தா ரன்றே.

(இ-ள்.) அப்போது மலையின்கண் வாசஞ்செய்யாநிற்கும்வேங் கைக்கொப்பாகியஆரிதென்பவன் அவ்வாறுசொல்லியவார்த்தைகளை நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது காதுக ளினாற்கேள்வியுற்று மலையென்று சொல்லும் இரு தோள்களும் வள ர்ச்சியுறும்படி சந்தோஷமடைந்துப் புன்சிரிப்புக்கொண்டு சாஸ்தி ரங்களில் வல்லமையுள்ளவனாகியஇசுருவென்னும்மன்னவன் மகிழ்ச் சிபெறும் வண்ணம் இலைகள் மிகுத்த சிவந்த பிரகாசத்தையுடைய வேற்படையை வலது கையிற்றூங்கிக்கொண்டு எழும்பினார்கள். ()

சவரங் திரண்டு நீங்காத் தனிக்குடை நிழற்றச் சோதிக்
கலைமதி பொருவா மெய்யிற் கதிர்புடை விலகி மின்ன
நிலமிசை வழிக்குக் காத மான்மத நிறைந்து வீச
மலரடி படிதீண் டாது மாதவன் மனையிற்புக்கார்.

(இ-ள்.) அவ்வாறு எழும்பிய நபிமுகம்மது சல்லல்லாகு அலை கிவசல்லமவர்கள் மேகங்களனைத்து மொன்றாய்க்கூடி மாறாத ஒப்ப ற்ற குடையினது நிழலைச்செய்யவும், பிரகாசத்தையுடைய சோடச கலைகள் நிறைந்த சந்திரனு மொப்பாகாத தங்களது சரீரத்தின்கண் ணுள்ள பிரகாசமானது பக்கங்களில்விலகி ஒளியைச் செய்யவும், பூமியின்மீது காதவழி தூரத்திற்குக் கஸ்தூரி வாசனைபெருகி பரி மளிக்கவும் தாமரைப் புஷ்பம்போலும் இருபாதங்களும் தரையைத் தொடாது நடந்து மகா தவத்தை யுடையவனான அவ்விசுருவென் னும் பண்டிதனது வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (௩௨)

தொட்டபாழ்ங் கிணறுண்டாங்கு துவலைநீ ரசும்புந்தோன்றா
திட்டமுள் ளிலைமீங் தங்ங ளிருந்திறந் தனேககாலக்
கட்டையொன் றுளது தன்பால் ஹபீபுமெய் கவின்க ணிந்து
விட்டொளி பரப்பத் தோன்றி விரைவின்வீற் றிருந்தாரன்றே.

(இ-ள்.) அவ்விதம்சேரவே அவ்விடத்தில் தோண்டிய பாழான ஒரு கிணறுண்டு. அதில் ஒருதுளி ஜலமாவது அல்லது வழுக்குநில மாவது பார்வைக்குத் தெரியாது. அதன்பக்கத்தில்வைத்த முட்க ளைக்கொண்ட இலைகளை யுடைய வித்த மரமொன்றிருந்து கரிந்து போன அனேககாலத்தையுடைய ஒருகட்டையுண்டு. அதன் பக்கத் தில் ஹபீபென்னுங் காரணப்பெயர்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சிக்கிரத்தில் தங்களது சரீரத்தின்கண்ணு

ள்ள அழகானது பழுந்துப்பிரபைவிட்டு நாலுபக்கங்களிலும் பரப்பும்படி உதயமாகி விறட னிருந்தார்கள். (௩௩)

குறைபடுங் கூவல்கீழ்பாற் குமிழிவிட் டெழுந்து மேல்பா
னிறைபடப் பொங்கி யோங்கி நிலம்வலஞ் சுழித்திட்டேறி
யிறையவன் றூதர் செவ்வி யிணைமலர்ப் பதத்திற் றாழ்ந்து
துறைதொறும்பெருகும்வெள்ள நதியெனத்தோற்றிற்றன்றே.

(இ-ள்.) அப்போது ஜலமில்லாது குறைவைப்பொருந்திய அந்தக்கிணறானது அடிப்பக்கத்திலிருந்து நீர்க் குமிழிகளைவிட்டு எழும்பி மேற்பக்கத்தில் நிறையும்படி பொலிந்து வளர்ந்து பூமியின்கண் வலப்பக்கத்தில் வட்டமிட்டுயர்ந்து இறையவனை அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அழகிய தாமரைப் பூப்போலும் இரு பாதங்களிலும் வணங்கித் துறைகள் தோறும் பெருகாநிற்கும் தீர்த்தத்தையுடைய ஆற்றைப்போல விளங்கினது. (௩௪)

இருந்தது தொல்லை நாளி லிறந்தபே ரீந்தின் குற்றி
கரிந்திடம் பசந்து செவ்வே கதித்தெழக் குருத்துவிட்டுச்
சொரிந்தநெட்டிலைவிட் டோங்கித் துடர்துணர் தோறும்பாளை
விரிந்துபூச் சிந்திக் காய்த்து மென்கனி சிதறிற் றன்றே.

(இ-ள்.) அன்றியும், பழுப காலத்திற் பட்டுப்போன அந்தப்பெரிய வீத்தமரத்தின் குற்றியானது தீய்ந்து இருந்த இடமுழுவதும் பச்சைநிறமாய்ச் செவ்வையாக அதிகரித்து எழும்பும்படி குருத்துகளை விட்டுச் சொரியப்பெற்ற நெடிய இலைகளைவிண்டு வளர்ந்துத் தொடர்பையுடைய துணர்கள் தோறும் பாளைகள் மலர்ந்து புஷ்பங்களைச் சிதறிக் காய்த்து மெல்லிய பழங்களைப் பொழிந்தது. ()

கோதறப் புனலுண் டாகிக் குற்றியுந் தளிர்ப்பக் கண்ட
மாதவன் மனமுங் கண்ணு மகிழ்வொடு களிப்புப்பொங்கிச்
சீதரக் கவிகை வள்ளன் முகம்மதின் சேந்த செவ்வி
பாததா மரையிற் றாழ்ந்து பைந்துணர் மௌலி சேர்த்தான்,

(இ-ள்.) அப்போது அப்பாழ்ங்கிணற்றின்கண் குற்றமற ஜலமுண்டாகி கரிந்துகிடந்த அந்தவீந்தின் குற்றியுந்துளிர்க்கும்படிபார்த்த

மகாதவத்தையுடையவனான அவ்விசுருவென்னும் பண்டிதன் தனது கண்களும் இருதயமும் இனிமையுடன் சந்தோஷம் மிகுக்கப்பெற்று மேகக்குடையையுடைய வள்ளலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அழகிய சிவந்த சரணம்புயத்திற்பணிந்து பசுமைதங்கிய புஷ்பங்களைச் சூடிய கிரீடத்தைப் பொருந்தினன். ()

மறைதெரி யறிவ னீதி முகம்மதி னடியைப்போற்றி
யிறையவன் றூத ரேயிவ் விருநிலத் தரசர் கோவே
குறைபடா திருந்த வெற்றிக் கொழுமணிக் குன்ற மேயா
னறைவகேட் டருள்திரென்ன வடுத்துவிண்ணப்பஞ்செய்தான்

(இ ள்.) அவ்விதம் பொருந்திய வேதங்க ளனைத்தையுங் கற்றுணர்ந்த அறிவையுடையவனான அவ்விசுருவென்னும் பண்டிதன் நீதியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சரணங்களைத்துதித்து இறையவனான ஜல்லஜலாலுஹுவத்த ஆலாவின் றசூலானவர்களே! இப்பெரிய பூலோகத்தின்கண் ணுள்ள அரசர்கட்கெல்லாம் அரசரானவர்களே! குற்றமுறு திருந்த வெற்றியையுடைய செழிய இரத்தினசல மானவர்களே! யான் சொல்லப்பட்டவைகளைத் தாங்கள் காதுகளினாற்கேட்டருளுங்களென்று சமீபமாய் நெருங்கி மன்றாட்டஞ் செய்தான், (௩௭)

இந்நிலத் திருந்தேன் பன்னா ளிறையவன் றூத ரான
மன்னவ ரீசா விங்ஙன் வந்தன ரவரைப் போற்றிப்
பொன்னடி விளக்கி யின்னம் புவியிடை நபிமா ருண்டோ
வென்னலு மென்னை நோக்கி யெடுத்தினி துரைக்க லுற்றார்.

(இ-ள்.) யான் அனேக காலமாக இந்தப் பூமியின்கண்ணிருந்தேன். அப்போது இவ்விடத்தில் இறையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாகிய வேந்தர் நபி ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் வந்தார்கள், அவ்விதம்வரவே நான் அவர்களைத்துதித்து அவர்களின் அழகியஇருபாதங்களையும் விளக்கஞ்செய்து உங்களைத்தவிர இனிமேலும் இப்பூலோகத்தின்கண் நபிமார்கள் உண்டாய்வருவார்களோ? என்று கேட்டமாத்திரத்தில் அவர்கள் என்னைப் பார்த்து இனிமையோடும் எடுத்துச்சொல்ல ஆரம்பித்தார்கள். (௩அ)

அருந்தவத் தவனே யாதி யருளொளி யவனி நீங்கா
திருந்துள தாதமெய்யி னிடத்தவ தரித்துத் தொல்லை

வருக்தலை முறைக ளெல்லாம் வந்தினி மேலும் பின்னுட்
பெருந்தலம் புரக்க வல்லே நபியெனப் பிறக்கு மன்றே.

(இ-ள்.) அரிதானதவத்தையுடைய இஸ்ருவென்னும்பண்டிதனே யாவற்றிற்கு முதன்மையனுன ஜல்லஷாயிஹூவத்த ஆலாவானவன் அருளிய பழய திருவொளியானது பூமியின்கண் மாருது அனைவர்க்கும் முதற்பிதாவாகிய நபிஆதமலைகிஸ்ஸலாமவர்களது சரீரத்தின்கண்தரிபட்டுஇருந்துள்ளது அவர்களி னிடத்திலிருந்துற்பத்தியாகி வந்த தலைமுறைக ளெல்லாவற்றிலும் வரிசையாக இறங்கிவந்துஇனி மேலும்பிற்காலத்தில் விரைவாக இந்தப்பெரிய பூலோகம்முழுவதையும் காக்கும்படி நபியென்று சொல்லும்வண்ணம் அவதரிக்கும். ()

மக்கமா நகரில் வாழு மப்துல்லா மதலை யாகித்
திக்கெலாம் விளங்குஞ் செங்கோல் தீனிலை நிறுத்தி வேறு
பக்கமுன் மதங்களென்னும் பகையறுத் தரிய காட்சி
மிக்கவ:ராகு மற்ற நபிகளின் மேன்மை யாரால்.

(இ ள்.) மக்கமாநகரத்தில் வாசஞ்செய்யும் அப்துல்லா வென்பவரின் மகனுகி எண்டிசைகளிலும் விளங்காநிற்கும் செங்கோலையும் தீனுல்விஸ்லாமென்னும் மார்க்கத்தையும் இவ்வுலகத்தின்கண் நிலைபரமாக நிற்கச்செய்து மற்ற வகுப்பினையுடைய முன்னுள்ள மார்க்கங்களென்னும் விரோதங்க ளனைத்தையு மரியும் அரிதான அற்புதங்களினுல் மிகுதியானவர். அன்றியும், பொருந்திய மற்றநபிமார்களைப் பார்க்கிலும் அதிக மேன்மையானவர். (ச 0)

புவியினின் முகம்ம தென்னப் பொருந்திய பெயருண் டாகு
மவரலா னபிபின் னில்லை யவரும்மத் தானேர்க் கெல்லாம்
பவமறுங் கதியுண் டாகும் படைப்புனும் வானே ரெல்லாம்
சவைபெறுங் கலிமாச் சொல்வ ரென்னவே சொல்லி னூரால்.

(இ-ள்.) அன்றியும், அவருக்குப் பொருந்திய இந்தப்பூமியின்கண் முகம்மதென்று நாமமுண்டாகும் அவரல்லாமல் பின்னே நபியுமில்லை. அவரது உம்மத்தான அனைவர்களுடையபாவமு மற்றுப்போகும் மோட்ச முண்டாகும். சிருஷ்டிப்பைப் பொருந்திய வானவர்களான மலக்குகளனைவரும் இனிமைபெற்ற அவரது கலிமாவைச் சொல்லுவார்க ளென்று சொன்னூர்கள். (சக)

ஆரணக் குரிசி லீசா வுரைத்தபின் னவரைபோற்றிப்
பூரண மதியம் போலும் புகழ்முகம் மதுவென் றோதும்
பேரறி வாள ரென்னுட் பிறப்பரென் றிசைப்பக் கேட்டுச்
சீர்பெற வறுநூ றுண்டு செல்லுமென் றிசைத்தா ரன்றே.

(இ-ள்.) வேதத்தை யுடைய குரிசிலான நபி ஈசா அலைகிஸ்ஸலாமவர்கள் அவ்வாறு சொல்லியபின்னர் யான் அவர்களைதுதித்துப்பூரணச் சந்திரனைப்போலும் கீர்த்தியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமென்று சொல்லும் பெரியஅறிவாளர் எக்காலம் சிறப்புப் பொருந்தும்படி இப் பூமியின்கண் அவதரிப்பார்களென்று கேட்க; அதைகேட்டு அறுநூறுவருஷஞ் செல்லுமென்று சொன்னார்கள். (௬௨)

அம்மொழி கேட்டுக் காண்ப தரிதென வெளியேன் சிந்தைச்
செம்மலர் கருகத் துன்பத் தீயினிற் குளித்தோ னென்னை
வம்மெனத் திருத்திச் செவ்வி முகம்மதைக் காணு மாட்டு
மிம்மரச் சோலை வாயி னிருமிறை யருளான் மாதோ.

(இ-ள்) நபி ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் சொல்லிய அந்த வார்த்தைகளை யெளியேனாகிய யான்காதுகளினாற் கேள்வியுற்று அந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நமது கண்களாற் பார்ப்பது அரிதாகுமென்று நினைத்து சிவந்த இருதயக்கமல மலர் தீயும்படித் துன்பமாகிய நெருப்பினில் மூழ்கிய என்னை வருவீராகவென்று அருகிலழைத்து எனதுமனசைத்திருந்தும்படி செய்து இறைவனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் கிருபையினால் நீர் அழகிய முகம்மதென்பவரைப்பார்க்குமளவும்விருட்சங்களையுடைய இச்சோலையினிடத்தில் இரும். (௬௩)

பலன்பெறு முகம்ம தெங்ஙன் சாமெனும் பதியை நாடி
நலம்பெற வருவர் நீறு நன்குறக் காண்பீ ரென்னத்
தலம்புக ழீசா கூறத் தாழ்ச்சிசெய் தடியே னெந்த
நிலந்தனிற்காண்பேனென்னநிகழ்த்தினன்நிகழ்த்தும்போதில்.

(இ-ள்.) மோட்சபலாபலனைப் பெறு நிற்கும் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இவ்விடத்தில் ஷாமென்னும் நகரத்தை விரும்பி நன்மையுறும்படி வருவார், அப்போது நீரும் அவரை

நன்குறப்பார்ப்பிரென்று இப்பூமிமுழுவதுந் துதிக்காநின்ற நபிஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் சொல்ல; உடனே அவர்களை பணிந்து அடியேனாகிய யான் அவர்களை எந்தத்தானத்தில் வைத்துப்பார்ப்பே னென்றுகேட்டேன். அப்படிக்கேட்ட சமயத்தில் (சச)

இந்நெறி வந்து முன்னை ளிறந்தவீங் தடியிற் றோன்றப்
பன்மலர் சொரிந்து காய்த்துப் பழமுதிர்த் திடும்பா ழூற்று
முன்னிடப் பெருகியோடு முறைமைகண் டறிந்து நீரந்
நன்னெறிக் குரிசிற் கென்றன் சலாமையு நவிலு மென்றார்.

(இ-ள்.) அவர்கள் இந்தப் பாதைவழியாகவந்து பழைய காலத்த்திற்பட்டுப்போன இவ்வித்தமரக் கட்டையினது அடியிலுதைய மாக, அக்கட்டையானது பலபுஷ்பங்களைச் சிதறிக் காய்க்கப்பெற்றுக் கனிகளைச் சொரிந்திடும். அன்றியும், ஜலமில்லாது பாழாகிய அக்கிணற்றினது ஊற்று முன்னிடும்படி அதிகரித்து ஓடாநிற்கும். அம்முறைமைகளை நீர்பார்த்து அவர்கள் தாம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மென்று மனசின்கண் ணுணர்ந்து அந்தநன்மை பொருந்திய சன்மார்க்கத்தையுடைய குரிசிலானநபிகள் பெருமானாரவர்கட்கு எனதுவந்தனத்தையுஞ் சொல்லுமென்றுசொன்னார்கள்.

இன்னண மியம்பி யாதி யிடத்திரந் தரிதா யென்றன்
றன்னுயிர் நிற்கச் செய்து சார்ந்தன ரவணி லீசா
மன்னவ கேட்டேன் கண்டேன் மணத்தெனை யெடுத்தடக்கிப்
பின்னெழுந் தருள்க வென்ன வுரைத்தனன் பிறங்கு தாரான்.

(இ-ள்.) நபிஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் இந்தப்படியாகக் கூறி ஆதியான ஜல்லஜலாலஹூவத்த ஆலாவின் திருச்சந்நிதானத்தில் அரிதாய் மன்றாடி என்னுடைய ஜீவனனது தங்களைகாணும் பரியந்தம் நிலைபரமாக நிற்கச்செய்து அவர்களிருக்கும் அவ்விடத்திற்குப் போய்ச்சேர்ந்தார்கள். மன்னவராகிய நபிகள்பெருமானே! அவர்கள் சொல்லியவை அனைத்தையும் எனதுகாதுகளினாற் கேள்வியுற்றேன் கேள்வியுற்றபடியே தங்களையுமின்றுகண்டேன். இனி எனது ஜீவன் நிலைத்திருக்க மாட்டாது. ஆகலால் என்னைப் பரிமளித்தோடும் எடுத்து அடக்கஞ்செய்து விட்டுப்பின்னர் தாங்கள் நாடிவந்த ஷாமெனு நகரத்திற்கு எழுந்து செல்லுங்களென்று பிரகாசியாநின்ற மாலைகளை யணிந்த தோள்களையுடைய அவ்பிசுறு வென்னும் பண்டிதன் சொன்னான். (சரு)

கலிநிலைத்துறை.

மாலை தாழ்புய முகம்மது கேட்டுள மகிழ்ந்த
காலை யவ்வயி னுறைந்தவேற் காளையர்க் கெல்லாம்
வேலை வாருதி யமுதென விருந்தெடுத் தளித்தான்
சோலை முக்கனி தேனொடு பாகையுஞ் சொரிந்தே.

(இ-ள்.) மாலைகள் தாழப்பெற்ற தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இசுறுவென்னும் அப்பண்டிதன் கூறிய வார்த்தைகளைக் காதுகளினுற் கேள்வியுற்று மனமகிழ்ச்சியடைந்த சமயத்தில் அவ்விடத்தில் தங்கிய வேற்படைதாங்கிய கையினையுடைய புருடர்களான அவ்வியாபாரிக ளனைவர்களுக்கும் சோலையின்கண் உண்டாகாநிற்கும் முக்கனிகளாகிய வாழை பலாமாவுடன் தேனையும் சர்க்கரையும்பொழிந்து அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் பிறந்த தேவாமிர்தத்தைப் போலும் விருந்தையெடுத்து கொடுத்தான். (௪எ)

ஆகங் கூர்தர விருந்தளித் தவரவர் காத்திற்
பாகு பாளிதம் வெள்ளிலைச் சுருளொடும் பகர்ந்து
தேக மெங்கணுஞ் சந்தனக் குழம்பினுற் றீற்றி
யோகை கூர்தர நன்மொழி யெடுத்தெடுத் துரைத்தான்.

(இ-ள்.) அவ்வாறு சரீரமானது கூரும்படி யாவர்களுக்கும் விருந்து கொடுத்து அவரவர்களுடைய கைகளில் துவர்க்காயும் பாளிதமும் வெற்றிலைச் சுருள்களுடன் பகர்ந்து அவர்களின் தேக முழுவதையும் சந்தனக்குழம்பினுல் மெழுகிச் சந்தோஷ மிகுக்கும்படியாக நன்மை சொருந்திய பலவித வார்த்தைகளை யெடுத்தெடுத்துச் சொல்லினன். (௪அ)

தெரியு மெய்மறைக் குரியவ விச்செக தலத்தில்
வரிசை நந்நபி முகம்மதை யொருநொடிப் பொழுதும்
பிரியல் வாய்மொழி மறுத்திட விப்பெரும் பேறுக்
குரியர் நீரல ரெவரென வபூபக்கர்க் குரைத்தான்.

(இ-ள்.) அன்றியும், அறியாநிற்கும் சத்தியவசனங்களையுடைய வேதங்களுக்குறித்தானவரே! நீவிர் இந்தப்பூலோகத்தின்கண் சங்கைபொருந்திய நமதுநாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை விட்டும் ஒருக்ஷணநேரமாயினும் அகலாதீர். அவர்க

ளின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை மறுக்காதீர். இந்த நபிபெருமானவர்களின் பெரிய ஆதியமனைத்திற்கும் சொந்தமானவர் நீரேயல்லாமல் வேறே யாவர்? ஒருவருமில்லையென்று அபூபக்க ரவர்களுக்குச் சொன்னான். (சகூ)

சுரிக ருங்குழல் வெண்ணகைப் பசியமென்றேகை
வரிவி ழிக்கதி ஜாமனை மைசருத் தன்னை
யருகி ருத்திநன் மொழிபல வெடுத்தெடுத் தறைந்தான்
விரியு நூற்கடற் செவிமடுத் துண்டமெய்த் தவத்தோன்.

(இ-ள்) பின்னர்விரிந்த சாஸ்திரங்களென்னுஞ் சமுத்திரத்தைக் காதுகளினால் நிறைத்தருந்திய உண்மையாகிய தவத்தினையுடையவனான அவ்விசுறுவென்னும் பண்டிதன் முறுக்கைப்பெற்ற கரியகூந்தலையும் வெள்ளியபற்களையும் இரேகைகள படர்ந்த கண்களையுமுடைய பசியமென்மையவான மயில்போலும் சாயலைக்கொண்டகதீஜா அவர்களின் வீட்டின்கண்ணுள்ள மைசருவென்பவனை அழைத்துப் பக்கத்திலிருக்கச்செய்து நன்மைபொருந்திய பலவித வார்த்தைகளை எடுத்தெடுத்துச் சொல்லினான். (ருo)

வரிசை வள்ளற மினையடிச் செழுமல ரதனைச்
சிரசு ரப்பணிங் திருவிழி மணிகளாற் றேய்த்து
மருமலர்க்குழன் மனையவர்க் குறுமொழி வகுத்துத்
தரையி னிற்புகழ் பெறும்படி யணைமிசை சாய்ந்தான்.

(இ-ள்) அன்றியும், சங்கைபொருந்திய வள்ளலான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் இருபாதங்களாகிய செழியதாமரைப்புஷ்பங்களைத் தனது தலையானது பொருந்தும்படித்தாழ்ந்து இரண்டு கண்களின் மணிகளாலும் துலக்கி வாசனைபொருந்திய பூக்களைச்சூடிய கூந்தலைப்பெற்றபெண்களையுடைய தன்வீட்டிலுள்ள அனைவர்களுக்கும் பொருந்திய வார்த்தைகளை வகைப்படுத்திச்சொல்லி இப்பூமியின்கண் கீர்த்தியை யடையும்படி மெத்தையின்மேற்சரிந்தான். (ருக)

துணைவ ரும்முயிர்த் துணைவியும் புதல்வருஞ் சூழப்
பணர்வி ரிந்தன கேளிரும் பாங்கினி லிருப்ப
மணமெ ழும்புய வள்ளலை யடிக்கடி வாழ்த்தி
யணையின் மீதினிற் சாய்தலும் விண்ணுல கடைந்தான்.

(இ-ள்.) அவ்வாறுசரிந்த இசுறுவென்னும் அப்பண்டிதன் தனது சகோதரர்களும் சகோதரிகளும் உயிர்போன்ற நாயகியும் புத்திரர்க

ளும் சூழும்படியாகவும், கிளைகள் விரிந்தாற்போல சினேகிதர்களும் பக்கங்களி லிருக்கும்படியாகவும், வாசனையானது எவ்விடமும் ஓங்காநிற்கும் புயங்களையுடைய அண்ணலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அடிக்கடி ஆசீர்வதித்து மெத்தையின் மேற் சாய்ந்தமாத்திரத்தில் தேகவியோகமாகி விண்ணுலகம் போய்ச்சேர்ந்தான். (ருஉ)

பொருத்து மெய்ம்மொழி மாதவ னிறந்தவப்போதிற்
கருத்த ழிந்திரு கண்கள்முத் துகுத்திடக் கலங்கி
வருத்த முற்றவர் சிலரணி வயிறலைத் தலறிச்
சிரத்தி னிற்கதுப் பறப்பறித தெறிந்தனர் சிலரே.

(இ-ள்.) சத்திய வார்த்தைகளையே பொருந்தாநிற்கும் மகா தவத்தையுடையவனுன அவ்விசுருவென்னும் பண்டிதன் அவ்வாறு தேகவியோகமான அந்தச்சமயத்தில் சிந்தனையற்று இரண்டுகண்களும் முத்தைப்போலு நீரைச்சொரிந்திடும்படி கலக்கமடைந்துத் துன்பத்தை பொருந்தியபேர்கள்சிலர். அழகியவயிற்றினி லறைந்து சத்தமிட்டுத் தலையின்கண்ணுள்ள உரோமமுழுவதும் அறும்படிபிடுங்கி வீசினபேர்கள் சிலர். (ருங)

சிந்தை தேங்கிட வழுதவர் தங்களைத் தேற்றி
மைந்தரியாவருந் திரண்டெழு மனத்துட னெடுத்துக்
கந்த மென்மலர் கமழ்ந்திட வடக்கினர் ஹபீபு
மந்த மில்லவன் றனைப்புகழ்ந் தேத்தின ரன்றே.

(இ-ள்) அவ்வாறு மனமானது அஞ்சிடும்படி அழுதயாவர்களையுந்தேரும்படிசெய்து அங்குற்ற புருடர்களனைவருமொன்றுசேர்ந்து இசுருவென்னும் அப்பண்டிதனை எழாநிற்கும் பரிமளத்துட னெடுத்து மணத்தையுடைய மெல்லியபுஷ்பங்கள் வாசனைவீசிடும்படியாக அடக்கஞ் செய்தார்கள். பின்னர் ஹபீபென்னுங் காரணப்பெயர்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனத்திஞற் கடைகண்டறிதற் கரியவனுன ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவைத் துதித்து வணங்கினார்கள். (ருச)

முதிய கேள்வியன் சடங்குள தெவ்வையு முடிப்பக்
கதிர வன்கதி ரொடுக்கிமேற் கடலினிற் சார்ந்தான்
மதிவிண் ணெய்திட வசிகரு முகம்மது மகிழ்வா
யுதிரு மென்மலர்ச் சோலைபுக் குறங்கின ரன்றே.

(இ-ள்.) அப்போது முதுமையான கல்விகளையுடைய அவ்விசுருவென்னும் பண்டிதனுக்குள்ளனவாகிய கிரியைகளனைத்தையும் முடிக்கும்படி சூரியன்தனது கிரணங்களெல்லாவற்றையு மொடுக்கிக்கொண்டு மேற்பாற் சமுத்திரத்தின்கண் போய்ச்சேர்ந்தான். பின்னர் சந்திரன் ஆகாயத்திற்பொருந்திடவே வசிகராகிய அவ்வியாபாரிகளும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் மனச்சந்தோஷமாய் மெல்லிய புஷ்பங்களை யுதிராநிற்கும் அச்சோலையின்கண்போய் அன்றிரவு நித்திரை செய்தார்கள். (ருரு)

இசுருகாண்படலம்.

முற்றிற்று.

ஆ படலம்-௰௬-க்கு திருவிருத்தம்-அ௬௦.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

கள்வரை நதிமறித்தபடலம்.

கலி நிலைத் துறை.

பருதி வானவன் செங்கதிர் பாவிடத் துயின்றோ
ரெருது வாம்பரி யொட்டகம் பரந்திட வெழுந்து
முருகு லாவிய பொழிற்கடந் தருநெறி முன்னித்
திருகு வெஞ்சினக் களிறெனை நடந்தனர் செறிந்தே.

(இ-ள்.) வட்ட வடிவையுடைய சூரியனுதையமாய்ச் சிவந்தபிரபையானது எவ்விடமும் விசாலித்திட நித்திரைசெய்தவர்களாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் முதலிய மற்றவியாபாரிகளனைவரும் எழும்பி இடபங்களும் தாவாநிற்குங்குதிரைகளும் ஒட்டகங்களும் பரவிடும்படி வாசனையானதுஉலாவப்பெற்ற அந்தச்சோலையைவிட்டுந் தாண்டி அரிதாகிய பாதையை அடுத்து மாறுபட்ட வெவ்விய கோபத்தையுடைய யானையைப்போல ஒருவர்க்கொருவர் நெருங்கி நடந்து சென்றார்கள். (க

சிறுபொ ருப்படர்ங் தடவிக ளுரைநெறி சேர்ந்து
வறுப ரற்படர் பாலைக ணீந்திமுள் வகிர்ந்திட்
டறல்கொ ழித்திடுங் கானையா றுகள்கடந் தகன்று
குறைவில் சந்தகில் செறிநெடு வரைகுறு கினரே.

(இ-ள்.) அவ்விதம் நடந்துசென்ற அவ்வியாபாரிக ளனைவரும் சிறியமலைகள் நெருங்கிக் காடுகள்தங்கிய பாதைகளைப் பொருந்தியுலர்ந்த பருக்கைக்கற்கள் பரவிய பாலைநிலங்களைக்கடந்து முட்களையறுத்துக்கரிய மணல்களைக் கொழிக்காநின்ற காட்டாறுகளைத் தாண்டியகன்றுசென்றுக்குறைவில்லாத சந்தனமரங்களும் அகில்மரங்களும் நெருங்கிய நெடிய ஒரு மலையைப்போய் அடுத்தார்கள். (உ)

பள்ள மும்பசுஞ் சோலையும் வெண்மணற் பரப்பு
முள்ள தோரிட மவ்வயி னுறைந்தன ருரவோர்
வள்ள றம்மிடத் தொருவன்வந் திவ்வரை வனத்திற்
கள்ள ருண்டெனு மசுகையுங் கண்டன னென்றான்.

(இ ள்.) அவ்வாறு அடுத்துத், தாழ்ந்தநிலமும் பசியசோலையும் வெள்ளிய மணலினது பரப்புமுள்ள ஒருஸ்தலம் அந்த ஸ்தலத்தின் கண் உரவோர்களான அவ்வியாபாரிக ளனைவரும் தங்கியிருந்தார்கள். அப்போது ஒருவன் வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சந்நிதானத்தில் வந்து மலைகளையுடைய இந்தக்காட்டில் திருடர்க ளுண்டென்று சொல்லுஞ் சந்தேகம் முதலியவைகளை யான் கண்களினாற் கண்டேனென்று சொன்னான். (௩)

இருந்த வவ்வையிற் கள்ளருண் டெனுமொழி யிசைப்பத்
தெரிந்து கண்டன மென்றனர் சிலர்சிலர் திகைத்தார்
விரிந்த செங்கதி ரோனுமேற் றிசையினிற் புகுந்தான்
வருந்த லென்றவர்க் குரைத்தனர் புகழ்முகம் மதுவே.

(இ-ள்.) அவ்வண்ணம் அனைவர்களுந் தங்கியிருந்த அந்தஸ்தலத்தின்கண் திருடர்களுண்டென்னும் வார்த்தையை அவன் கூறச் சிலபேர்கள் அதையறிந்து நாங்களும்கண்களினாற்பார்த்தோமென்று சொன்னார்கள். அவ்வார்த்தையைக் காதுகளினாற் கேள்வியுற்று சில பேர்கள் மனசின்கண் பயமடைந்தார்கள். அப்போது விசாலித்த சிவந்த கிரணங்களையுடைய சூரியனும் மேற்குத் திக்கினில் போய்ச்

சேர்ந்தான். கீர்த்தியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் அங்குற்ற யாவர்களுக்கும் நீங்கள் திருடர்களை மனசின்கண் நினைத்து வருத்தப்படாதீர்களென்று சொன்னார்கள். (௪)

சோர ருண்டென மனந்துணுக் குறல்சுடர் வரையி
னோர தாயொரு நதியுள நிலஞ்சுழித் தெழுந்து
கோர மாய்வருங் கள்ளருங் குறுகிடா ரெனவே
காரெ ழுங்குடை முகம்மது கனவுகண் டனரே.

(இ ள்.) அப்போது மேகமானது எழும்பாநிற்கும் குடையினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களது நித்திரையில் திருடர்களுண்டென்று சொல்லிநீங்கள் மனமச்சப்பட வேண்டாம்? பிரகாசம் பொருந்திய இந்தமலையின்நேராக ஓராறுண்டு அவ்வாறானது பூமியைச் சுழித்தெழும்பி விரைவாய்வரும் அதனால் உங்களைத் திருடர்கள் நெருங்கமாட்டார்களென்று சொப்பனத்தைக் கண்டார்கள். (௫)

கனவின் செய்தியை யவரவர்க் குரைத்திடுங் காலைத்
தினக ரன்குணக் கெழுந்தன னதிசுழி கிளறி
வனம டங்கலும் மகிர்ந்தெடுத் திருகரை வழிந்திட்
டினம ணிக்கருங் கடல்வயி றிடைமடுத் ததுவே.

(இ ள்.) அவ்வாறு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கண்ட சொப்பனத்தின் சமாசாரத்தை அங்குற்ற ஒவ்வொருவருக்குஞ் சொல்லிக் காட்டிடுந்தருணத்தில் சூரியன் கீழ்த்திசையின்கண் உதயமாயினான் ஆறானது சுழிகளைக்கிளப்பி அந்தக்காடு முழுவதையும் பிளந்தெடுத்து இருகரைகளிலும் மிகுதியாகவடிந்து கூட்டமாகிய முத்துக்களையுடைய சமுத்திரத்தினது வயிற்றினிடத்தை நிறைத்தது. (௬)

இருந்த பேரனை வருமெழுந் திருந்திக் கரையிற்
பொருந்தி நன்னெறி யிதென நடக்குமப் போதில்
வருந்திக் கள்வரு மறுகரை யிடத்தினின் மறுகித்
திருந்த நோக்கினுங் காண்கிலா தெழுந்தன திரைகள்.

(இ-ள்.) அப்போது அங்கு தங்கியிருந்த ஜனங்களியாவர்களும் எழும்பி அந்தப் பெரிய ஆற்றினது கரையின்கண் போய்ச்சேர்ந்து இஃது நல்ல பாதையென்று சொல்லி நடக்குகின்ற அத்தருணத்தில்

திருடர்களும் வருத்தமுற்று மனங்குழம்பி மற்றக்கரையின்கண் வந்துநின்றுச் செவ்வையாக இவர்களைப் பார்த்தாலும் அவர்களாற் பார்க்கமுடியாமல் அலைகளெழும்பின. (எ)

ஆறு வந்தது புதுமை கொலெனவதி சயித்து
மாறு கொண்டவர் திரண்டொரு பெருவரை முகட்டி
லேறி நின்றுதே சிகர்தமை நோக்கலு மெழுந்த
மீறி வெண்டிரை புரட்டிமீக் கொண்டது வெள்ளம்.

(இ-ள்.) அவ்வாறு எழும்பவே விரோதத்தைக் கொண்டவர்களான அத்திருடர்களனைவரும் ஒன்றுசேர்ந்து நூதனமாய் இடையில் இந்த ஆறானது வந்து குறுக்கிட்டது அற்புதந்தானென்றுசொல்லிமனத்தின்கண் ஆச்சரியப்பட்டுப் பெரிதான ஒருமலையினது உச்சியில் ஏறிநின்று கொண்டு தேசாந்தரியாகிய இவ்வியாபாரிகளைப்பார்த்தமாத்திரத்தில் அவ்வாற்றினது வெள்ளமானது எழும்பி அதிகரித்து வெள்ளிய அலைகளைப் புரளச்செய்து மேலாயுயர்ந்தது (அ)

கள்ளர் வந்தவணிருந்தன ரெனக்கெடி கலங்கி
யுள்ள நொந்தன முகம்மதிங் குறுபொருட் டதனல்
வெள்ளம் வந்தது மறித்தது காண்மென வியந்து
வள்ள லைப்புகழ்ந் தார்வழி நடந்தனர் வசிகர்

(இ-ள்.) அப்போது வசிகராகிய அவ்வியாபாரிகளனைவரும் நாம் அவ்விடத்தில் திருடர்கள் வந்திருந்தார்களென்று சொல்லிமிகப் பயந்து மனம் வருந்தினேம் ஆனல் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இவ்விடத்திலுற்ற நிமித்தத்தினுல் நீர்ப்பெருக்கானது வந்து அத்திருடர்களை இங்குவரவொட்டாது தடுத்தது பாருங்களென்று ஒருவர்க்கொருவர்கூறி ஆச்சரியப்பட்டுவள்ளலாகியநபிகள் பெருமானவர்களைத்துதித்து அப்பாதையின்கண் நடந்துசென்றார்கள். (௯)

தஞ்ச மீங்கிவ ரெனப்புகழ்ந் தவர்தமை நோக்கி
யஞ்ச லாதுநின் றபூஜகில் மனத்தினி லழன்று
விஞ்சையான்முகம் மதுபடித் திவணிடை விளைத்த
வஞ்சனைத்தொழி லலதுவே றிலையென மறுத்தான்.

(இ-ள்.) அவ்வாறு இப்பாதையின்கண் நமதியாவர்களுக்குமடைக் கலமானவர்கள் இந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்

லமவர்கள் தானென்றுத் துதித்த அந்தவியாபாரிகளை அபூஜகிலென் பவன் மனசின்கண் பயமின்றிநின்று பார்த்துக் கோபங்கொண்டு முகம்ம தென்பவன் விஞ்சையினற் கற்று இவ்விடத்தின்கண் செய்த யாவும் மாயாசாலச்செய்கையே யல்லாமல் வேறேதெய்வாநுக்கிரக ன தியாதொன்று மில்லையென்று சொல்லி மறுதலித்தான். (௧௦)

படிறு ளக்கசட் டபூஜகில் பகர்ந்திடு மொழிகேட்
டடல பூபக்கர் மனத்தடக் கினுமடங் காதாற்
கொடிய தீவினைக் குரியவர் சொல்லினைக் குறித்தோர்
கெடுவ ரென்பதற் கையமில் லெனக்கிளத் தினரே.

(இ-ள்) வஞ்சகத்தினது மனசையுடைய கீழ்மையான அவ்வபூ ஜகிலென்பவன் அவ்வாறுசொல்லியவார்த்தைகளை வீரத்தையுடைய அபூபக்கரவர்கள் காதுகளினுற் கேள்வியுற்று அவற்றைமனசின்கண் அமையச்செய்தும் அமையாததினுல் கொடுமைதங்கிய தீய செயல் களுக்குச் சொந்தமானவர் சொல்லிய வார்த்தைகளை மனசின்கண் மதித்தவர்கள் கெட்டுப் போவார்களென்பதற்குச் சந்தேக மில்லை யென்று சொன்னுர்கள் (௧௧)

கரிந்த புன்மனச் சிறியவர் கழறிய கொடுஞ்சொற்
றெரிந்த மேலவர் செவிக்கிடா ரென்னுமத் திறம்போல்
விரிந்த கார்க்குடை நிழலிடை வரைப்புயம் விளங்க
வருந்த வப்பொருண் முகம்மது நடந்தன ரன்றே.

(இ-ள்.) அப்போது தீய்ந்த கீழ்மையான மனசையுடைய சிறி யோர்கள் சொல்லிய கொடியவார்த்தைகளை எல்லாமறிந்த மேலோர் கள் காது களினுல் கொள்ள மாட்டார்களென்று சொல்லுமந்தத் த ன்மையைப்போல அரியதவத்தினது சம்பத்தாகிய நபிமுகம்மதுசல் லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பாதகனுன அவ்வபூஜகிலினது வா ர்த்தைகளைக் காதுகளிற் கொள்ளாது விசாலித்த மேகக்குடையின து நிழலின்கண் மலைபோலும் இருபுயங்களும் பிரகாசிக்கும்படி நட ந்து போயினுர்கள்.

சிந்து நன்மணிக் கதிரெழத் திரைக்கரத் தெறிந்து
வந்த மாநதிக் கணியெனு மொருகரை மருங்கிற்
கந்த மென்மலர் செறிதருங் காவகங் கடந்து
புத்தி கூர்தர மக்கிக ளனைவரும் போனுர்.

(இ-ள்.) மக்கமாநகரத்தை யுடையவர்களாகிய அவ்வியாபாரிக ளெல்லாவரும் அறிவானது மிகுக்கும்வண்ணம் சொரியாநிற்கும் நல்ல இரத்தின வருக்கக்களினது பிரகாசமானது ஓங்கும்படி அலைகளென்னுங் கைகளினல் எடுத்து வீசிக்கொண்டு வந்தபெரிய அந்த ஆற்றிற்கு ஆபரணமென்று சொல்லும் ஒருகரையினது பக்கத்தில் வாசனை பொருந்திய மெல்லிய புஷ்பங்கள் நெருங்காநின்ற சோலைகளினது இடங்களைத்தாண்டிப் போயினார்கள். (கங)

சீத வொண்புனற் செழுமல ரோடையிற் செறிந்த
கோதில் வெண்சிறைப் பெடையொடுங் குருகின மிரியப்
பாதை போந்தனர் சாமெனுந் திருப்பெயர் பதிக்கோர்
காத மாமென விறங்கினர் கடிமலர்க் காவில்.

(இ-ள்). அவ்வாறு போயின யாவர்களும் குளிர்ச்சி பொருந்திய ஒள்ளிய சலத்தினையும் செழுமையான புஷ்பங்களையு முடைய அங்குள்ள தடாகத்திற் பொருந்திய குற்றமற்ற வெண்மையான சிறகுகளைக்கொண்ட பெட்டையன்னக் கூட்டங்களோடும் ஆணன்னக் கூட்டங்கள் ஓடும்படிவழிநடந்து சாமென்னு மபிதானத்தை யுடைய அழகிய நகரத்திற்கு ஒருகாதவழி தூரமென்று சொல்லும்படி யாயுள்ளவாசனை பொருந்திய புஷ்பங்களையுடைய ஒரு சோலையின்கண் போயிறங்கினர்கள். (கச)

ஒட்ட கத்திர ளனைத்தையு மொழுங்குற நிரைத்துக்
கட்டி வாம்பரித் திரளையுஞ் சேர்த்தனர் கடிதின்
விட்ட பாசறை யிடங்களி னிதுவியப் பெனவே
செட்டர் சூழ்தர விருந்தனர் செழுமலர்க் காவில்.

(இ-ள்.) அவ்வாறு இறங்கிய அவ்வியாபாரிக ளியாவரும் விரைவாய் ஒட்டகக் கூட்டங்க ளனைத்தையும் ஒழுங்காகக்கட்டித் தாவாநிற்கும் குதிரைக் கூட்டங்களையும் வரிசையாக்கி அதனோடுசேர்த்து நாம் இதுவரையும் கூடாரங்களிட்டு நீக்கிய இடங்களெல்லா வற்றிலும் இவ்விடம் ஆச்சரியமானதென்று சொல்லிச் செழுமையான புஷ்பங்களையுடைய அச்சோலையின்கண் சூழும்படி இருந்தார்கள்.

சோலை வாயொரு வானக மெனச்சுடர் திகழக்
கோல வார்கழற் குறைஷிகள் குழுக்கண நாப்பண்

வேலை வெண்டிரை முகட்டெழு மதியினும் வியப்ப
மாலை தாழ்புய முகம்மது வந்துவீற் றிருந்தார்.

(இ-ள்.). அந்தச் சோலையினிடமானது ஒப்பற்ற விண்ணுலகத்தினது இடத்தைப்போல ஒளிபிரகாசிக்கும்படி அழகிய நேர்மையான பாதங்களைப் பெற்ற குறைஷிகளின் கூட்டமாகிய நட்சத்திரங்களின் நடுவில் சமுத்திரத்தின் வெள்ளிய அலைகளினது உச்சியில் எழும்பாநிற்கும் சந்திரனைப்பார்க்கிலும்அதிக அற்புதமாய் மாலைகள் தாழப்பெற்ற தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உதயமாகி வீறுடனிருந்தார்கள். (கசு)

கள்வரைநதிமறித்தபடலம்

முற்றிற்று.

ஆ படலம்-கஎ-க்கு-திருவிருத்தம்-அருசு.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

ஷாம்நகர்புக்கபடலம்.

கலிநிலைத்துறை.

காவ கத்திலன் றிருந்திருள் கடிந்துவெங் கதிரோன்
மேவு வேண்டிரைக் கடன்முகட் டெழுதலு மேலோர்
தாவு வெம்பரி யொட்டகைத் திரளொடுஞ் சாய்த்தே
யேவி லங்கைபி லேக்திய வேந்தலோ டெழுந்தார்

(இ-ள்.) மேன்மை யுடையவர்களான அவ்வியாபாரிகளனைவர்களும் அன்று முழுவதும் அந்தச் சோலையின்கண் தங்கியிருந்து அந்தகாரத்தையழித்து வெவ்விய கிரணங்களையுடைய சூரியனானவன் பொருந்திய வெள்ளிய அலைகளையுற்ற சமுத்திரத்தினது உச்சியில் எழுந்தமாத்திரத்தில் தாவிச்சாடாநிற்கும் கொடிய குதி

ரைகளையொட்டக்க் கூட்டங்களுடன் சாய்த்துக்கொண்டு உள்ளங் கையின்கண் அம்பையும் வில்லையும்தாங்கிய அரசரான நபிமுகம் மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களோடு மெழுந்தார்கள். (க)

கடிகொண் மென்மலர்த் துடவையுங் கருஞ்சுரும் புதைப்ப
வடியுந் தேன்மலர் வாவியும் வளர்கழைக் குலம்போ
னெடிய பச்சிலைக் கரும்புடைக் கழனியு நிறைந்த
கொடியிலைச்சிறு கேணியுங் குறுகிட நடந்தார்.

(இ-ள்.) அவ்விதமெழும்பி யாவர்களும் வாசனைகொண்ட மெல்லிய புஷ்பங்களையுடைய சோலைகளையும், கரிய நிறத்தைப்பெற்ற வண்டுகள் தங்களது காற்களினுலுதைக்க, அதனுல் வழியாநிற்குந் தேனைப்பொருந்திய மலர்களையுடைய தடாகங்களையும் ஓங்குகின்ற மூங்கிற் கூட்டம் போலும் நீண்டபசிய இலைகளையுற்ற கரும்புகளையுடைய வயல்களையும் பெருகிய வெற்றிலைக் கொடியையுடைய சிறிய அகழிகளையும் அடுத்து நடந்து போயினுர்கள். (உ)

கூய்த்தி ரண்டளி யினங்குடைந் துழிநறுக் குளித்துத்
தோய்த்த பொற்குவ டெனவிரு வரைப்புயந் துலங்க
வாய்த்த பேரொளி முகம்மது வருவது நோக்கிக்
காய்த்தி ரட்குலை சாய்த்துநின் றிறைஞ்சின கதலி.

(இ-ள்.) அவ்விதம் போகவே அங்குற்ற வாழைமரங்களான வை வண்டுக் கூட்டங்கள் ஒன்றுகூடிக் கூவிப் புஷ்பங்களைத் துளைத்து அதன்கண்ணுள்ள மதுவில்மூழ்கித் தோயப்பெற்ற மகாமேருவைப் போன்ற இருவரைப் புயங்களும் பிரகாசிக்கும்படி பொருந்தியபெரிய பிரபையையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அங்குவருவதைப் பார்த்துக் காய்களையுடைய திரண்ட குலைகளைச் சரித்து நின்று வணங்கின. (௩)

வேந்தர் வேந்தவ ணருகுற வடைதலும் விரிந்த
மாந்த ருச்சினை யிடைபழத் தொடுந்துயல் வருதற்
றேந்த ருங்கனி யுண்டெழுந் தருண்மெனச் செறிந்து
சாய்ந்த மென்றளிர்க் கரத்தினு லழைப்பதொத் தனவால்.

(இ-ள்.) அன்றியும், அரசர்கட்கெல்லா மரசராகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்விடத்தில்தங்களது பக்கத்

திலே பொருந்தும்படி அடைந்தமாத்திரத்தில், மாமரங்களினது விசாலித்த கிளைகளானவை தமதிடையின்கண்ணுள்ள பழங்களோடு மசையுதல், இவ்விடத்தில் தங்கித் தேனைத்தராநிற்கும் எங்களது பழங்களை யருந்திப் பின்னரெழுந்து செல்லுங்களென்று நெருங்கிச் சரிந்த மெல்லிய தழைகளென்னுங்கைகளினால் அந்நபிகணுயகமவர்களைக் கூப்பிடுவதை நிகர்த்திருந்தன. (ச)

தேக்கும் வெண்டிரைப் புவிக்கொரு தனிச்செங்கோல்செலுத்
காக்கு நாயக முஹம்மது வரும்வழி கவின [திக்
வாக்கும் பொற்குட னனிநிரை நிரையணி யணியாய்த்
தூக்கி வைத்தபோன் முட்புற நறைக்கனி தூங்கும்.

(இ-ள்) அன்றியும், பெருகிய வெள்ளிய அலைகளைக்கொண்ட சமுத்திரத்தையுடைய இப்பூலோகமுழுவதையும் ஏகமாய் ஒப்பற்ற செங்கோல் செலுத்திக் காக்குகின்ற நாயகமான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வருகின்ற பாதையானது அழகாயிருக்கும்படி சொர்னத்தினாற் செய்யுங்குடங்களை வரிசைவரிசையாக அடுக்கடுக்காய்த்தூக்கி வைத்ததைப்போலப் பலாமரங்களினது வாசனைபொருந்திய பழங்கள் எவ்விடங்களிலும் தூங்காநிற்கும். (ரு)

வெள்ளி வெண்மலர் சொரிந்தன பாளைவாய் விரித்துத்
தெள்ளு செம்பொனாற் சமைத்தபோற் செழுங்குலை தாங்கி
வள்ள லார்வரு நெறியலங் கரிப்பென வயங்கும்
புள்ளி வண்டொடு பசுமடல் விரிதலைப் பூகம்.

(இ-ள்.) அன்றியும், வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் வருகின்றபாதையின் சிங்காரிப்பை யொப்பப் புள்ளிகள்படர்ந்த வண்டுகளுடன் பசியமடல்களையும் விரிந்த சிரத்தினையுமுடைய கமுகமரங்கள் வெண்ணிறத்தைக் கொண்ட வெள்ளியினாற் செய்த புஷ்பங்களைப்போலத் தமது பாளைகளின் வாய்களைவிண்டு தெள்ளியசிவந்த பொன்னினாற் செய்தவைபோன்ற செழிய குலைகளைத் தாங்கி நாலுபக்கங்களிலும் நின்று பிரகாசியாநிற்கும். (சூ)

விரிந்த மென்மலர்க் கொம்பினி லளியினம் வீழச்
சரிந்து மென்றுக ளுதிர்வது வானவர் தலத்தி
லிருந்த பொன்னெடுத் தருநபி யிணைமல ரடியிற்
சொரிந்து விட்டது போல்வயின் வயின்றொறுந் தோன்றும்.

(இ-ள்.) அன்றியும், வண்டுக்கூட்டங்கள் மலரப்பெற்ற மெல்லிய புஷ்பங்களையுடைய கொம்புகளில் விழ, அதனுல் அக்கொப்புகள் சாய்ந்து மிருதுவான மகரந்தங்களுதிர்வது, தேவர்களானமலாயிக்கத்துமார்கள் தங்களின் ஸ்தலமாகிய சொர்க்கலோகத்தின்கண்ணிருந்து சொர்னங்களைத் தங்களது கைகளினுல் எடுத்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அரியதாமரை மலர்போன்ற இருபாதங்களிலும் சொரிவதைப்போல இடங்கள் தோறும் பிரகாசியாநிற்கும். (எ)

தெறித்த முத்தொளிர் கழனிவா னகமெனச் சிறப்பத்
தறித்த பூங்கரும் பாட்டுசா றடுபுகை தயங்கிக்
குறித்த சோலைமேற் றவழ்வது குரைகட லேழும்
பறித்த ருந்திய கருமுகிற் படலமொத் துளதால்.

(இ-ள்.) அன்றியும் சிந்திய தரளங்கள் பிரகாசியாநிற்கும் வயல்களானவை ஆகாயத்தினிடத்தைப்போலச் சிறக்கும்படி வெட்டிய அழகான கரும்புகளை ஆட்டுகின்ற சாற்றைக்காச்சும் புகையானது மின்னிக் குறிக்கப்பட்ட சோலையின்மீது தவழ்கின்றது, ஒலிக்குகின்ற ஏழு சமுத்திரங்களையும் பிடுங்கிச்சாப்பிட்ட கரிய நிறத்தையுடைய மேகத்தினது படலத்தை நிகர்த்திருந்தது. (அ)

பாட லத்தரு நிழன்மர கதக்கதிர் படர
வாடி நிற்பன முகம்மதைக் கண்டகங் களித்து
வீடின் மென்சிறைப் பட்டகண் ணனைத்தையும் விழித்துக்
கூடி நோக்குவ தொத்தன களிமயிற் கூட்டம்.

(இ-ள்.) அன்றியும், சந்தோஷத்தையுடைய மயிற்கூட்டங்கள் பாதிரிமரத்தினது நிழலின்கண் பசிய கிரணங்களானவை பரவும்படி ஆடிநிற்பவைகள், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்து மனக்களிப்படைந்து திரண்டு விடுதலையுடைய மெல்லிய சிறகுகளிற் பொருந்திய விழிக ளெல்லாவற்றையுந் திறந்துபார்ப்பவைகளை நிகர்த்திருந்தன. (கூ)

கோட்டு மென்மலர் வாசமுங் கொடிமலர் விரையுஞ்
சூட்டு நீர்மலர் நிலமலர் வாசமுந் தூர்த்துப்
பூட்டும் விற்கர முகம்மது மெய்யினிற் பொங்கிக்
காட்டு மான்மதங் காவகங் காவதங் கமழும்.

(இ-ள்) அன்றியும், பூட்டிய கோதண்டத்தைத் தாங்கியஸ்க்யி னேயுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களது காத் திரத்தின்கண் பொலிந்து காட்டுகின்ற கஸ்தூரிவாசனையானது ஜன ங்கள் தங்களது மேனியின்கண் சூட்டாநின்ற அந்தச் சோலையின் கண் தங்கிய மெல்லியகோட்டுப்பூவின் வாசத்தையுங்கொடிப்பூவின் வாசத்தையும் நீர்ப்பூவின்வாசத்தையும் நிலப்பூவின் வாசத்தையும் தூரும்படிசெய்து ஒவ்வொரு திக்கிலும் காதவழிதூரம் கமழாநி ற்கும். (௧௦)

ஒருமனைப்பிறந் தொருமனை யிடத்தினி லுறைந்து
கருவ ரத்தரித் தின்றுதன் கணவனை யிகழாப்
பெருவ ரம்புறும் பெண்கொடி யெனத்தலை சாய்த்துத்
திருவுஞ் செல்வமுந் திகழ்தரக் காண்பன செந்நெல்.

(இ-ள்.) அன்றியும், ஒரு வீட்டின்கண் அவதரித்து மற்றொரு வீட்டின்கண் வாசஞ்செய்து கருப்பமானது வரத்தாங்கிப் பெற்றுத் தனது நாயகனை யிகழாத பெரிய வரம்பினைப் பொருந்திய பெண் கொடியைப்போலப் பார்ப்பவர் கண்களுக்கு தங்களது சிரங்களைச் சரித்து அழகும் செல்வமும் பிரகாசிக்கும்படித் தோற்றுவன அங் குற்ற சிவந்த நெற்பயிர்கள். (௧௧)

துன்னு மெல்லிதழ் வனசமும் பானலுஞ் சுரும்புண்
டின்னி சைப்பட வூட்டுதேங் குவளையு மிடையிற்
செங்கெ ருப்புநா விரித்தசே தாம்பலுஞ் செறிந்து
வன்ன மென்படம் போர்த்தபோன் றிருந்தது வாவி.

(இ-ள்,) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வருகின்ற அப்பாதையின்கண்ணுள்ள தடாகமானது, வண் டுகள் மதுவையருந்தி இனிய கீதங்கள் பொருந்தும்படி யூட்டாநிற் கும் நெருக்கமுற்ற மெல்லிய இதழ்களையுடைய தாமரையையும் நீலோற்பலத்தையும் அரத்தோற்பலத்தையும் இவைகளி னிடை யில் சிவந்த அக்கினியின் சுவாலையை விரிக்கப்பெற்ற செங்குமுதத் தையும் மிகுக்கப்பெற்று சித்திரிப்பையுடைய மென்மையவானபோ ர்வை போர்த்ததை நிகர்த்திருந்தது. (௧௨)

துய்ய சைவலச் சுரிகுழ றயல்வரச் சுனைமென்
றைய லுள்ளகங் குளித்துடற் களிம்பொடுந் தனது

கையின் மென்மலர்ப் பந்தெடுத் தெறிவது கடுப்பச்
செய்ய தாமரை மீதனஞ் சிறந்தெழுந் ததுவே.

(இ-ள்.) அன்றியும், அங்குற்ற தடாகமான மெல்லியபெண்ணு னவள் பரிசுத்தமுற்ற பாசியாகிய முறுக்கையுடைய கூந்தலானது அசையும்படி அகத்தின்கண் குளித்துச் சரீரச் சந்தோஷத்துடன் தனது கையினால்வெண்ணிறத்தையுடைய புஷ்பத்தினாலியன்றபந்தை எடுத்து வீசுவதைப்போலச் சிவந்த கமலமலரின்மேல் அன்னப்பட் சியான திருந்து சிறப்புட னெழும்பினது. (கரு)

பண்ணை வாய்ச்செழுங் கமலங்கள் செவ்விதழ் பரப்பி
யுண்ணி றைந்தமா மணியொடு மொளிர்வன வவைகள்
வண்ண வார்கழன் முகம்மது வருநெறிக் கெதிரா
யெண்ணி றந்தகை விளக்கெடுத் தேந்தின ரியையும்.

(இ-ள்.) அன்றியும், வயல்களி னிடத்துள்ள செழிய தாமரை மலர்கள் தங்களது சிவந்த விதழ்களைவிரித்து உள்ளே நிறையப்பெற் றபெருமைபொருந்திய பதுமராகத்துடன் பிரகாசிக்கப்பட்ட அவை கள் அழகிய நேர்மையானபாதங்களையுடைய நபிமுகம்மதுசல்லல்லா கு அலைகிவசல்லமவர்கள் வருகின்றபாதையின் முன்பாய்க்கணக்கற்ற கைவிளக்குகளை எடுத்துத்தாங்கி நின்றவர்களைப்பொருந்தாநிற்கும்.

வண்டி னத்தொனி மறுத்தில மலர்சொரி வனங்கண்
முண்ட கத்தட மலர்ந்தில புள்ளொலி முழக்கந்
தொண்டை வாய்ச்சியர் குரவையே கழனிக டோறும்
பண்டி யின்றொகைக் கம்பலை மறுத்தில பாதை.

(இ-ள்.) அன்றியும், புஷ்பங்களைச் சொரியாநிற்கும் அங்குற்ற சோலைகள் வண்டுக்கூட்டங்களினது ஓசைகளை மறுத்தில்லன. தாம ரைமலர்களையுற்ற தடாகங்கள் பட்சிசாலங்களின் தொனியையுடை யமுளக்கத்தை விரிந்திருப்பதே யல்லாமல் மறுத்தில்லன. வயல்கள் தோறும் அழகிய கொவ்வைக்கனிபோலும் வாயினையுடைய கடை சியர்களின் குரவையினது ஓசைகளே யல்லாமல் மறுத்தில்லன. பாதைகள் கூட்டமாகிய பண்டிகளின் ஓசைகளை மறுத்தில்லன. ()

வடந்த யங்கிவிம் மிதத்தெழுங் குவிமுலை மடவார்
குடைந்து நீர்விளை யாடிய வாவியுங் குறுகிப்

படர்ந்த மல்லிகை மாதுளைப் பந்தரு நோக்கிக்
கடந்தி லங்கிய ஷாமெனுந் திருநகர் கண்டார்

(இ-ள்.) அப்போது, நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல முதலிய வியாபாரிக ளனைவர்களும் ஆபரணங்க ளானவை கிடந்து பிரகாசிக்கப்பெற்றுப் பூரிப்போடு மெழாநிற்கும் குவிந்த முலைகளை யுடைய மாதர்கள் குடைந்து நீரின்கண் விளையாடாநிற்கும் தடாகங் களையும் நெருங்கிய மல்லிகையும் மாதுளையுமுடைய பந்தர்களையும் தங்களது கண்களினாற் பார்த்துக்கொண்டுத் தாண்டிச்சென்று விளங் கிய ஷாமென்று சொல்லும் அழகிய பட்டணத்தைக்கண்டார்கள்.()

முதிர்ந்த பேரொளி முகம்மது வருநெறி முன்னி
யெதிர்ந்தி றைஞ்சுதற் கிந்நக ருறைந்திடு மரசீர்
பொதிந்த பூணொடு மேகுமி னெனக்களி பொங்கி
யதிர்ந்தி டக்கா மசைத்தல்போ லசைந்தன கொடிகள்.

(இ-ள்.) அங்நேரத்தில் அந்த ஷாம்நகரத்தின் கோட்டை கொத்தளம் வீடு முதலியவைகளில் கட்டியிருக்கும் கொடிகளானவை இந்தப் பட்டணத்தின்கண் தங்காநிற்கும் அரசரானவர்களே! முற்றிய பெரிய பிரகாசத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் வருகின்ற பாதையை முன்னி அவர்களைச் சந்தித்து வணங்குதற்கு நீங்கள் உங்களது தேகத்தின்கண் பொதியப்பெற்ற ஆபரணங்களோடும் செல்லுங்களென்றுசொல்லிச்சந்தோஷமானது அதிகரித்து ஒலித்திடும்படித் தங்களது கைகளை அசைப்பதைப் போல அசைந்தன. (கஎ)

மதுக்கொண் மாலிகை நாற்றிசன் மணிபல குயிற்றிச்
செதுக்கி மின்னுமிழ் தமனியத் தசும்புகள் செறித்து
விதுக்கொண் மேனிலை மென்றுகண் மாசறத்துடைத்துப்
புதுக்கு வான்றொழில் புரிந்தபோ லசைந்தபொற் கொடிகள்.

(இ-ள்.) அன்றியும், அழகிய அக்கொடிகள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வருகைக்காசுத்தேனைக்கொண்ட புஷ்பமாலைகளை நாலுபக்கங்களிலும் தூக்கிப் பலவிதமான நல்லஇரத் தினவர்க்கங்களைச் சொரியாநிற்கும் பொற்குடங்களைச் சேர்த்துச்சந் திரனும் பற்றுநின்ற மேன்மாடங்களிலுள்ள மெல்லிய தூசிகளைக் குற்றமானதொழியும்படி வீழ்க்திந்திருத்துப் பொருட்டுவேலைசெய் வதைப்போல அசைந்தன. (கஅ)

செவந்த பாதபங் கயகமி திருநகர்ப் புறத்துக்
கவிந்த கார்குடை நிழலிட வருவது கண்டு
நிவந்த வெண்சுதைப் பளிக்குமே னிலைவயி னின்று
குவிந்த கைவிரித் தழைத்தபோ லசைந்தன கொடிகள்.

(இ-ள்) அன்றியும், அக்கொடிகள் சிவப்புத் தங்கிய பாதமல ங்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கவி யப்பெற்ற மேகங்களானவை குடையினது நிழலிடும்படி அழகிய அந்தஷாமென்னும் பட்டணத்தின் பக்கத்தில் வருவதைப் பார்த்து வெள்ளிய சாந்தினையுடைய படிகத்தினுற் செய்யப்பட்ட உயர்ந்த மேன்மாடங்களில் நின்றுக் குவிதலைக்கொண்ட தங்களது கைகளை விரித்து அவர்களைக் கூப்பிடுவதைப்போல அசைந்தன. (கக)

கலிவிருத்தம்.

இச்செக மதிற்றபதி யற்றொழிலி யற்றி
விச்சையி னமைத்ததுகொ லோவமரர் விண்ணி
லச்சொடுபி றந்திவண டைந்ததுகொ ளுனோ
வச்சிரம ணிக்கதிர்ப ரப்புமணி மாடம்.

(இ-ள்.) அன்றியும், அந்த ஷாம்தேசத்தில் தங்கிய மாடங்க ளானவை இப் பூமியின்கண் கம்மாளன் தான்கற்றகல்வித்தொழில்க ளனைத்தையுஞ் செய்து மாயாசாலத்தினுல் சமைத்துவைத்தனவோ? அல்லது தேவர்களான மலாயிக்கத்து மார்களினது ஆகாய லோத்தி லிருந்து குறிப்போடும் உதயமாகி இவ்விடத்தில் வந்து சேர்ந்தன வோ? என்று சொல்லும்படியான வயிரமணிகளினது பிரகாசத்தை எவ்விடங்களிலும் விரியும்வண்ணம் செய்யாநிற்கும் அழகுபொருந் திய மாடங்கள். (உ0)

சுந்தரந பிக்குரிசின் மெய்ப்புகழ் துலங்கி
யந்தரமு மண்டபகி ரண்டமுநி றைந்து
மந்தரமி தென்றுறவ ளைந்தறவ ழிந்து
சிந்துவதெ னச்சுதைதெ ளித்தமணி மாடம்.

(இ-ள்.) அன்றியும், அம்மாடங்கள் அழகிய பெருமையிற் சிற ந்தோரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மெ ய்மையாகிய கீர்த்தியானது எவ்விடங்களிலும் பிரகாசித்து ஆகாய

லோகத்திலும் அதன்மேற்புற மிருக்கும் அண்டபகி ரண்டத்திலும் பெருகி மங்நாகிரியானது இஃதென்று பொருந்தும்படி மிகவாய்வ டிந்து சொரிவதைப்போல சுண்ணச் சாந்துகள் தெளித்த இரத்தி னவர்க்கங்கள் அழுத்தப்பெற்ற மாடங்கள். (உக)

எங்கணபி யிங்ஙனமெ திர்ந்தனர்கொ லென்னத்
திங்கடவழ் சாளரவி ழிக்கடைதி றந்து
பொங்கழகு நோக்குவன போலுறநி வந்த
பைங்கதிர்வி ரித்தொளிப ரப்புமணி மாடம்.

(இ-ள்.) அன்றியும், அம்மாடங்கள் எங்களது நபிறசூல் சல்ல ல்லாகு அலைகிவசல்லமவர்கள் இவ்விடத்திற்கு எதிர்ந்து வர்தார்க ளென்று சொல்லி அவர்களின் நிறைந்த அழகைச் சந்திரனுனது தவழாநின்ற தங்களது சன்னல்களாகிய கட்கடைகளைத் திறந்து பார்ப்பனவைகளைப்போல உயர்ந்த பசிய கிரணங்களைப் பரப்பி எவ்வி டங்களிலும் பிரகாசத்தை விரிக்காநிற்கும் இரத்தினவர்க்கங்க ளழு த்திய மாடங்கள். (உஉ)

கந்தநறும் வெண்சுதை கலந்தணியி லங்கி
வந்துநக ரந்தனைவ ளைந்தமதி லாடை
யிந்தநில மெங்குமெதி ரின்றெனவி யந்தே
யந்தரம டங்கலும ளந்ததுவ ளர்ந்தே.

(இ-ள்.) அன்றியும், வாசனைபொருந்திய நறிய வெண்ணிறத் தையுடை சுண்ணச்சாந்து கலப்புற்று அழகானது பிரகாசிக்கப்பெ ற்று அந்த ஷாமென்னும் நகரத்தைவந்து சூழ்ந்த கோட்டைமதி ளாகிய ஆடையானது, தனக்கு இப் பூலோகத்தின்கண்ணுள்ள எவ் விடமும் ஒப்பில்லையென்று சொல்லி வியப்புற்று ஓங்கி ஆகாயமுழு வதையும் அளந்தது. (உங)

சீதவக ழாடையையு டுத்தணிசி றந்து
மோதியிட றுங்கருமு கிற்குழன் முடித்தே
யாதிமணி வாயின்முக மாகவழி யாத
மாதர்தமை யொத்ததுவ ளைந்தமதி ளம்மா.

(இ-ள்.) அன்றியும், அந்தஷாம் தேசத்தைச்சூழ்ந்த அம் மதி லானது குளிர்ச்சிபொருந்திய அழகாகிய வஸ்திரத்தைத் தனது அரையின்கண் தரித்து அழகுசிறக்கப்பெற்று மோதி இடறுநிற்

கும் கரியநிறத்தையுடைய மேகமாகிய கூந்தலைச் சிரசின்கண் கொண்டையாக முடித்துமுதன்மையான இரத்தினவர்க்கங்களையுடைய வாயிலானது முகமாகக் கற்பின் நிலைமைகெடாத பெண்களை நிகர்த்தது. (உச)

பந்திபெற நின்றபட லந்தனியெ ழுந்தே
யந்தரந டந்துதிர ளாரமணி வாரிச்
சிந்துதிரை வாரியற வுண்டதுதி ரண்டு
வந்துநனி மஞ்சடைகி டைக்குமதி லன்றே.

(இ-ள்.) அன்றியும், அம்மதிலானது வரிசையுறும்படி நிற்கப்பெற்ற மிகுத்தமேகக் கூட்டங்கள் ஒப்பறவெழும்பி ஆகாயத்தின்கண் நடந்துசென்றுத் தொகுதியாகிய முத்துமணிகளை அள்ளிச் சொரியாநிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தினது நீரை அதிகமாகக் குடித்துத் திரட்சியுற்று மீளவும் ஆகாயத்தினது வழியாகவந்து நீங்காது குடியாயிருக்கப்பெற்ற மதில். (உரு)

கந்துகமொ டுந்துமிர தங்களுமி டைந்து
தந்தியின முப்பிடிக ளுந்தலைம யங்கிச்
சுந்தரம டைந்தையரு மைந்தரொடு துன்றி
வந்தவரெ திர்ந்தவர்செ ருங்குமணி வாயில்.

(இ-ள்.) அன்றியும், அம்மதிளின் புறத்துள்ள வாயில்கள் குதிரைகளுடன் செலுத்துகின்ற தேர்களும் ஆண்யானைக் கூட்டங்களும் பெண்யானைக்கூட்டங்களும் அடர்ந்துதலைமயக்குற்று அழகிய மாதர்களும் மாக்களுடன் நெருங்கி வருகிறவர்களும் அவர்களை யெதிர்ந்து செல்லுகிறவர்களும் ஒருவரோடொருவர் செறிகின்ற அழகிய வாயில்கள். (உசா)

ஈறுதெரி யாதெனவு யர்ந்தெழிற வழ்ந்து
மாறுபகர் கின்றரிய மாமதிண்ம திக்கோர்
வீறுபெற நின்றபரி வேடமென லாகி
யூறுபுனல் கொண்டுகட லொத்தவக ழம்மா.

(இ-ள்) அன்றியும் அம் மதிள்களைச்சூழ்ந்த அகழியானது முடிவென்பது கட்புலனுக்குத்தோற்றாதென்று சொல்லும்வண்ணம் ஆகாயத்தின்கண் ஓங்கி அழகானது தவழப்பெற்றுத் தனக் கெவ்விடங்களிலும் நிகரில்லையென்று மாறுகூறாநின்ற அரிய மகிமை

தங்கிய மதிளாகிய சந்திரனுக்கு ஒப்பற்ற பெருமைபெற நிற்கப்பெற்ற சந்திரவட்டமென்று சொல்லும்படியாய் மாறாது சுரக்காநிற்கும் ஜலத்தினைக்கொண்டு சமுத்திரத்தை நிகர்த்தது. (உஎ)

தும்பிகள்கு டைந்துபுன றுய்ப்பமக ரங்க
ளும்பரினெ ழுந்துமுத லைக்குலமொ துங்க
வெம்பியுக ளுந்தொறு மிடைக்கயல்வெ ருண்ட
கம்பலைய றுதலைக ளிக்குமக ழன்றே.

(இ-ள்.) அன்றியும், அவ் வகழியானது யானைகள் வந்து தங்களது தும்பிக்கைகளினால் நீரைக்குடைந்து அருந்த, அதனால் சுறுமீன்கள் ஆகாயத்தின்கண் ணெழும்பி முதலைக்கூட்டங்கள் பதுங்கும்படி பாயுந்தோறும் இடையின்கண்ணுள்ள கெண்டைமீன்கள்வாட்டமுற்று மருட்சியடைந்த ஓசையானது நீங்காது அலைகள் பெருகாநிற்கும். (உஅ)

இந்துதவழ் கின்றமதி ளும்மகழி ருந்த
கொந்தலரு றைந்துவரி வண்டுகள்கு டைந்து
சிந்தமுத ருந்துகய லங்கரைதி யங்க
வந்துநனி கண்டகம கிழ்ந்தனர்க ளன்றே.

(இ-ள்.) அவ்வாறு சந்திரனது தவழ்ந்து திரிகின்ற கோட்டைமதிலையும், அக் கோட்டைமதிலைச்சூழ்ந்த அகழியின்கண் தங்கிய புஷ்பித்த பூங்கொத்துகளில் இரேகைகள் படர்ந்த தேனீக்களமர்ந்து அவைகளைத் தங்களது கால்களால் குடைந்து அவற்றிலிருந்து சொரிகின்ற அமுதத்தை அருந்தாநிற்கும் கெண்டைமீன்களையுடைய அழகிய கரைகளையும் பிரகாசிக்கும்படி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்முதலிய வியாபாரிகளனைவர்களும் வந்து தங்களது கண்களினாற் பார்த்து மிகுந்த மனக்களிப்படைந்தார்கள்.

கண்டுநக ரத்தை மனத்திடைக ளித்து
வண்டுதுதை கின்றபுய மைந்தர்களி யாருங்
கொண்டல்கவி யுந்திறலு டைக்குரிசி லானு
மெண்டலம திக்குமதி னின்புறமி றுத்தார்.

(இ-ள்.) அன்றியும், அந்த ஷாம்நகரத்தைமேகமானது குடையாகக் கவியப்பெற்ற வலிமையையுடைய குரிசிலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் தேனீக்கள் நெருங்குகின்ற

மலர்மாலையணிந்த தோள்களையுடைய வியாபாரிகளான அவ்வாடவர்களனைவர்களும் தங்களது கண்களினாற் பார்த்து மனசின்கண் மகிழ்ச்சியுற்று எட்டுத்திக்குகளிலும் மதிக்காநிற்கும் அந்நகரத்தினது கோட்டைமதிலின்பக்கத்தில் இனிமையுறும்படி தங்கியிருந்தார்கள்.

பந்தியினி ரைத்தனர்ப ரித்திரள னைத்து
முந்துமிட பத்திரளொ டொட்டகநி ரைத்தா
ரிந்துகதிர் கொண்டென விலங்கறை யிடத்தில்
வந்தபல பண்டமும ணித்தொகையும் வைத்தார்.

(இ ள்.) அவ்வண்ணம் தங்கிய அவர்களியாவர்களும் குதிரைக்கூட்டங்களனைத்தையும் வரிசையாக நிறுத்திக்கட்டி உந்தாநிற்கும் யானைக்கூட்டங்களுடன் ஒட்டகக் கூட்டங்களையும் நிரைத்துச் சந்திரனது கிரணங்களைக் கொண்டாற்போலும் பிரகாசியாநின்ற தங்களது விடுதியின்கண் தாங்கள் கொண்டுவந்த பலவிதப் பொருள்களையும் இரத்தினத் தொகைகளையும் சேர்த்து வைத்தார்கள்.

வித்தகர னைத்தும்விடு தித்தலைகள் புக்கார்
மைத்தவழ்மு கிற்குடைம றைக்குரிசி லோடு
மத்தலமி லங்கவபூ பக்கருமி ருந்தா
ருத்தமகுணத்தினொடு மக்கிகளுறைந்தார்

(இ-ள்.) அப்போது அறிஞர்களாகிய அனைவர்களும் அவரவர்களின் விடுதியின்கண் போய்ப் புகுந்தார்கள். அன்றியும், கருமையானது தவழாநின்ற மேகக்குடையையும் பொறுக்கானுல் அஸீமென்னும் வேதத்தினையுமுடைய குரிசிலாகிய நமதுநாயகம் முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடன் அவர்களிருக்கப்பட்ட அவ்விடத்திலேயே அபூபக்கரவர்களும் பிரகாசிக்கும்படி இருந்தார்கள். மக்கமாநகரத்தின்கண்ணுள்ள மற்றும் வியாபாரிகளும் மேலான குணத்துடன் தங்கள் தங்களிடத்தில் தங்கியிருந்தார்கள். ()

புவிவளர நன்கனிபோ ழிந்ததரு வூடோர்
சுவையுமற நஞ்சுகள்சொ ரிந்தசெடி யென்னப்
பவமிடறு வஞ்சனைபடுங்கொலை படைத்த
வபுஜகிலெ னுங்கொடிய பாவியும டைந்தான்.

(இ-ள்.) அந்நேரத்தில் நல்லகனிவர்க்கங்களைப் பூமியின்கண் ஓங்கும்படி பொழியாநிற்கும் மரக்கூட்டங்களினிடையில் யாதொரு

இனிமையுமற்ற விடங்களைப் பொழியாநின்ற ஒருநஞ்சுச் செடியைப் போலப பாவத்தையும் ஆபத்தையும் மாயத்தையும் மிகுத்த கொலையையு முடைத்தாகிய அபூஜகிலென்று சொல்லும் கொடிய பாதகனும் அவ்விடத்தி லடைந்திருந்தான். (௩௩)

எவ்வுழியி ருந்திவண டைந்தவர்க ணீவிர்
செவ்வியதி றற்குரிசி லியார்தொழிலி யாதென்
றவ்வுலகி லங்கர டைந்தவர்கள் வந்தே
யொவ்வொருவ ரைத்தனியு சாவினர்க ளன்றே.

(இ ள்.) அப்போது வியாபாரிகளாகிய அவர்கள்தங்கி இருந்த அவ்விடத்தின்கண் அந்தஷாம் தேசத்தைப் பெற்றவர்கள் வந்து நீங்கள் எவ்விடத்தின்கண் ணிருந்து இங்குவந்து சேர்ந்தவர்கள்? அழகியவலிமையுடைய குரிசிலாகிய அவர்யாவர்? உங்களுடையதொழில்யாது? என்று அவர்களி லொவ்வொருவரையும் தனித்தனியாக உசாவிக் கேட்டார்கள். (௩௪)

மக்கநக ரத்தபுதுல் முத்தலிபு மன்ன
ருக்குரிய பேருயிர் போன்முகம்ம தென்போர்
தக்கபுக ழுக்குமதி மிக்கவர் சரக்கோ
டொக்கலொடு வந்தனமெ னத்தனியு ரைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் கேட்கவே, அவ்வியாபாரிகள் அவர்களை ஒப்பற நோக்கி அவர் மக்கமாநகரத்தை யுடைய அப்துல் முத்தலிபாகிய மன்னவரினது சொந்தமானபேரர் அன்றியும், எங்களது உயிர்போலும் முகம்மதென்னு மபிதானத்தை யுடையவர். தகுதியுற்ற கீர்த்தியிலும் புத்தியிலும் மிகுதியானவர். அவரும் நாங்களும் எங்களது சரக்குகளோடும் உரவினர்களோடும் இந்த ஷாம்நகரத்திற்கு கச்சவடத்திற்காக வந்தோமென்று சொன்னர்கள். (௩௫)

ஷாமுநக ரத்துநசு றானிகட மக்குண்
மாமறையின் மிக்கனவன் வந்துமைச ருவைத்
தேமலர்பு யத்திலணி செம்மலொடி ருப்பக்
காமருவு சார்பினிடை கண்டனன்ம கிழ்ந்தான்.

(இ ள்.) அப்போது அந்த ஷாம் நகரத்தின்கண்ணுள்ள நசாருக்களுக்குள் பெருமைதங்கிய வேதத்தில் மிக்கவனுன ஒரு மனி

தன்சோலைகளையுற்ற அவ்விடத்தில்வந்துத் தேனைப்பொருந்தியபுஷ்பமாலைகளைப் புயத்தின்கண் பூணுகிற்கும் செம்மலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களோடும் மைசறுவென்பவனை இருக்கும்படி பார்த்து மனமகிழ்ச்சி யடைந்தான், (௩சு)

அன்னியரொ ருதுமைச றுதனையடுத்து
வன்னமலர் மாலைதிகழ் மார்புறவணைத்து
முன்னைநெடு நாளுறவ தானமுதி யோனு
மென்னகம டைந்தினிதெ ழுந்தருளு மென்றான்.

(இ-ள்) அவ்விதம் மகிழ்ச்சியடைந்து முன்னர் நெடுநாளாக சினேகமாயிருந்த அம்முதியவன் அன்னியரென்று சொல்லாது மைசறுவென்பவனை நெருங்கி அழகியபுஷ்பமாலை பிரகாசியாநிற்கும் தனது மார்பானது பொருந்தும்படி கட்டித்தழுவி எனது வீட்டின்கண் வந்து இருந்துவிட்டுப் பின்னர் இனிமை யோடும் இவ்விடத்திற்கு எழுந்தருளுமென்று சொன்னான். (௩எ)

கோதைகதி ஜாவுரைம னத்திடைகுறித்து
மாதிரமெ திர்ந்துபொரு வாதபுய வள்ளல்
காதகம லத்துறுப ணித்தொழிலி கழ்ந்தோர்
போதினும கன்றதிலை யென்றுரைபு கன்றான்.

(இ-ள்.) அப்போது மைசறுவென்பவன் மலர்மாலைசூடிய கூந்தலையுடைய யதீஜாநாயகமவர்கள் கூறியவார்த்தைகளைத் தனதுமனசின்கண் குறிப்பிட்டு மலைகளும் எதிர்ந்து ஒப்பாகாத தோள்களையுடைய வள்ளலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது பாதமாகிய தாமரைப் புஷ்பங்களிற் பொருந்திய தொண்டு வேலைகளை நிந்தித்து யான் ஒரு சமயத்திலும் நீங்கினதேயில்லையென்று பதில்வார்த்தை சொன்னான். (௩அ)

கோலமொடு கூறுமொழி கொண்டுடல்க ளித்துச்
சீலநபி பாதமிசை செங்கணிணை வைத்துப்
பாலரிசி காய்கறிப ழத்தொடுசு மந்தே
சாலவும ளித்தவனு மேதரக னானன்.

(இ-ள்.) அவ்வாறு மைசறுவென்பவன் அழகாகச்சொல்லிய அந்த வார்த்தைகளை அம்முதியவன் தனது காதுகளிற் கொண்டு

தேகமகிழ்ச்சி யடைந்து நல்ல குணத்தினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் திருவடிகளின்மீது தனது சிவந்த இரண்டு கண்களையும் வைத்து முத்தமிட்டு மிகுந்த கனிவர்க் கங்களுடன்-பால்-அரிசி-காய்-கறியாகிய இவைகளைச் சுமந்து கொண்டு வந்து கொடுத்து அவ்வியாபாரிகளின் சரக்கு முதலியவைகளுக்கு அவன் தரகனு மாயினன். (௩௯)

வந்தவர்கொ ணர்ந்தபணி மாமணிச ரக்கோ
டிந்துகலை யென்றகலை யாவையுமெடுத்துச்
சிந்தைகளி கொண்டவர்செ மூங்கரம றைந்தே
யந்தநக ரத்துவணி கர்க்கினித ளித்தார்.

(இ-ள்.) அவ்விதம் தரகனாகிய அம்முதியவன் திருமக்கமாநகரத்தின் கண்ணிருந்து அந்தஷாம் நகரத்திற்கு வந்தவர்களாகிய அவ்வியாபாரி களனைவர்களும் கொண்டுவந்த மேன்மை பொருந்திய ஆபரணங்கள் இரத்தின வர்க்கங்கள் முதலிய சரக்குகளுடன் சந்திரனது கிரணங்களைப்போன்ற வெள்ளிய வஸ்திரங்களனைத்தையும் அவன்மனமகிழ்ச்சி கொண்டெடுத்து அந்த ஷாம் நகரத்தின் கண்ணுள்ள வியாபாரிகளுக்கு இனிமையுடன் விலைதீர்த்துச் செழிய கையடித்துக்கொடுத்தான். (௪0)

கலிவிருத்தம்

மிக்கசெம் மணிபணி விற்று மாற்றிய
மக்கிகண் மறுசரக் கெவையும் வாங்கித்தம்
மொக்கலோ டின்புற வுவக்கும் போதினி
லக்கண மொருவன்ற னமைதி கூறுவான்.

(இ-ள்.) அவ்வாறு மிகுதியாகிய சிவந்த இரத்தின வர்க்கங்களையும் ஆபரணத் தொகுதிகளையும் விலைக்கிரயஞ்செய்து மாற்றிய மக்கமாநகரத்தை யுடையவர்கள் மற்றசரக்குகளனைத்தையும் வாங்கிக்கொண்டுத் தங்களது உறவினர்களோடும் இனிமை பொருந்தும்படி மனமுவந்து இருக்கும் அந்தச்சமயத்தில் அக்கூட்டத்திலுள்ள ஒரு மனிதன் வந்துத்தனது மனதின் கண்ணுள்ள பொருத்தத்தைச் சொல்ல ஆரம்பித்தான். (௪௧)

உற்றவென் வயினுவஃற சரக்கொன் றுயினும்
விற்றில மூகம்மதென் விடிதில்புக்கிடி

லற்றையின் மாறியூ திபமுண் டாக்குவேன்
மற்றடப் புயத்திர்க ளென்று வாழ்த்தினன்.

(இ-ள்.) வலிமையைக்கொண்ட விசாலமான புயங்களையுடைய வியாபாரிகளே! பொருந்திய எனது இடத்தில் தங்கியசரக்குகளில் ஒன்றாயினும் இன்னம் விற்கவில்லை. ஆதலால்நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எனது விடுதியின்கண் வந்து புகுதுவார்களே யானால்அன்றையத்தினமே அச்சரக்குகளனைத்தையும் விற்று இலாபத்தை யுண்டாக்குவேனென்று அவர்களை வாழ்த்திச் சொல்லினன். (௬௨)

என்றவ னுரைத்தலு மெழுந்து வள்ளலுஞ்
சென்றவ னுரைந்திடும் விடுதி சேர்ந்தபின்
மின்றவழ் மணிகலை விலையென் றோதிய
தொன்றிரண் டெனத்தொழி லுறுதி யானதே.

(இ-ள்.) என்று அவன் சொல்லிய மாத்திரத்தில் வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் எழும்பி நடந்து போய் அவன்தங்கிய விடுதியின்கண் அடைந்தபின்னர்ப், பிரபையானது தவழாநிற்கும் இரத்தினவர்க்கம் வஸ்திரம் முதலியவைகள் முன்னர் விலையென்று கூறியது ஒன்றுக்கு இரண்டென்று சொல்லும்படிவிற்று அவ்வியாபாரத்தொழில் உறுதியாய்முடிந்தது. (௬௩)

தன்னிடத் துறைந்தபொற் சரக்குங் கோவையு
முன்னிய விலைக்குவிற் றுடுக்கி யங்நகர்
மன்னிய பண்டமும் வாங்கி வள்ளறம்
பொன்னடி தன்முடி பொலியச் சூட்டினன்.

(இ-ள்) அவன் அவ்வாறு தன்னிடத்தில் தங்கிய அழகிய சரக்குகளையும் ஆபரணக் கோவைகளையும் தான்நினைத்த விலைக்குவிற்று முடித்து அந்த ஷாம்நகரத்தின்கண் பொருந்திய பொருள்களையும் வாங்கி வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பொற்பாதங்களில் தனதுதலையைப் பொலியும்படி. பொருத்தித் தெண்டனிட்டான். (௬௪)

ஷாம்நகர்புக்கபடலம்

முற்றிற்று

ஆ படலம்-௧௮-க்கு-திருவிருத்தம்-௬௱

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

கரம்பொருத்துபடலம்.

கலிவிருத்தம்.

மறங்கிளர் வேற்கர வள்ளன் மக்கிக
ளிறங்கிய விடுதிபுக் கிருக்குங் காலையிற்
கறங்கிய ஷாமினிற் காபி ரிற்சில
ரறங்கிளர் நபியைவந் தடுத்து நோக்கினார்.

(இ-ள்.) கொலைக ளானவை யோங்காநிற்கும் வேலாயுதம் தாங்கிய கையினையுடைய வள்ளலானநமது நாயகம் நபிமுகம்மதுமுஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் மக்கமாநகரத்தை யுடையவர்களான மற்றும்வியாபாரிகளும் தாங்களிறங்கிய தத்தம் விடுதியின்கண் புகுந்து இருக்கின்றசமயத்தில்,முரசினங்களானவை ஒலிக்கப்பெற்ற அந்தஷாம்தேசத்திலுள்ள காபிர்களாகிய சூதர்களில் சில பேர்கள் தருமமானது அதிகரித்த அந்நபிகள் பெருமானாரவர்கள் இராநின்ற இடத்தை வந்துச் சமீபித்து அவர்களைத்தங்களது கண்களினாற் பார்த்தார்கள்.

மேனியிற் கதிர்விரி வியப்பு மெய்யினின்
மான்மதங் கமழ்தலும் வடிந்த கைகளுந்
தூநிறை மதியென முகமுந் தோள்களுங்
கானிலந் தோய்தராக் கார ணீகமும்.

(இ-ள்.) அவ்விதம் பார்க்கவே அந்நபிகணாயக மவர்களினது திருமேனியின்கண் பிரகாசக் கிரணங்கள் பரவப்பெற்ற அதிசயமும், காத்திரத்தின்கண் கஸ்தூரிவாசனை கமழ்வதும், நீட்சியுற்றகைகளும், பரிசுத்தமான பூரணச் சந்திரனைப்போன்ற முகமும், புயங்களும் கால்களானவைப் பூமியின்கண் படியாத காரணீகமும். (உ)

பன்னருஞ் சிறப்புடையருட்கட் பார்வையு
மன்னிய வவயவத் தழகுமாசிலா

நன்னிலை மொழிபல நவிற்றுஞ் செய்கையு
மின்னன பலவுங்கண் டேகி னாரரோ.

(இ-ள்.) சொல்லுதற்கரிய வரிசைதங்கியகாருண்யவிழிகளினது பார்வையும், உறுப்புகளிற்பொருந்திய அழகும், குற்றமற்ற நல்லநிலைமையினையுடைய பலவித வார்த்தைகளைப்பேசும் ஒழுக்கமுமாகிய இப்படிப்பட்ட பலவகைகளையும் அக்காபிர்களாகிய சூதர்கள் பார்த்துக் கொண்டுத்தங்களிருப்பிடத்திற்குத் திரும்பிப் போயினார்கள்.

கண்டவர் காண்கிலாக் கார ணீகமொன்
றுண்டென நகரவர்க் குரைப்பக் கேட்டவர்
விண்டவர் விளங்கிட வேதம் பேசிய
கொண்டலங் கவிகையா ரென்னக் கூறினார்.

(இ-ள்.) அவ்வாறுபோய் நபிநாயகத்தைப் பார்த்த சூதர்களாகிய அக்காபிர்கள் நாம் ஒருகாலத்திலும் காணாத காரணீகமானது ஒன்றுள்ளதென்று அந்தஷாம்தேசத்திலுள்ள மற்றும்பேர்களுக்குக் கூற அதைக் காதுகளினாற் கெள்வியுற்றவர்கள் தங்களோடுவந்துகூறிய அவர்கள் விளங்கிடும்படி ஆங்குவந்து விடுதியிட்டுறைந் திருக்கும் அவர்கள் முன்னுள்ள வேதங்கள் சொல்லிய அழகிய மேகக்குடையையுடைய நபிமுகம்மதா யிருக்குமென்று பதல்சொன்னார்கள்.

மறைதெரி சமயமு நமரு மாய்ந்திட
வுறைகுவ னொருவனுண் டணித்தென் றோதுநூற்
றுறைவலர் நாடொறுஞ் சொற்ற சொற்படி
பிறவிய னிவனெனப் பின்னும் பேசினார்.

(இ-ள்.) அன்றியும், வேதங்களானவை தெரிக்காநிற்கும் நமது மார்க்கமும் நமது பந்துக்களும் மாண்டு போகும்படி சமீபமாய் இப்பூமியின்கண்வந்து தங்கக்கூடியவ னொருவனுண்டென்றுகூறுநின்ற வேதநூற்களின் துறைகண்ட வல்லவர்களான பண்டிதர்கள் பிரதிதினமும் சொல்லிய சொல்லின்வண்ணம்பிறந்து வந்தபிறவியை யுடையவன் இந்தமுகம்மதுதானென்று மறுத்துஞ் சொன்னார்கள். (ரு)

தருபெரும் பதவியிச் சமயம் பாழ்பட
வருபவன் றன்னுயிர் வானி லேறிடக்

குருதிநீர் சிந்திடக் குவல யத்திடை
செருவிளைத் திடுதலே திறமென் றோதினர்.

(இ-ள்) அன்றியும், பெரிய மோட்சபதவியைத் தராநிற்கும் இந்த நமது மார்க்கமானது பாழாகும் வண்ணம்வந்த அந்தமுகம்மதென்பவனின் ஆவியானது ஆகாயத்தி னுட்போய்புகுதும்படியாகவும், இப்பூமியின்கண் இரத்தநீர் சிந்தி யோடும்படியாகவும், நாமனைவரும் ஒன்றுகூடி அவனோடு யுத்தம்செய்வதே சாமர்த்தியமென்று சொன்னார்கள். (௬)

அறைதிரைக் கடலென வதிர்தன் மாறியிங்
குறையுமின் வேறொரு பாய சூழ்ச்சியான்
மறைபட வரவழைத் தவன்றன் வல்லுயிர்
குறைபட ரகசியக் கொலைசெய் வோமென்றார்.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் சொல்லவே அவர்களில் சிலபேர் மற்றவர்களைப் பார்த்து நீங்கள் ஓசைபொருந்திய அலைகளையுடைய சமுத்திரத்தைப்போல முழங்குவதை விட்டுநீங்கி இவ்விடத்தில் தங்கியிருங்கள், அந்த முகம்மதென்பவனை வேறேயொரு தந்திர ஆலோசனையினால் மறைவாக நம்மிடத்திற்கு வரவழைத்து வலிமையுற்ற அவனது ஆவியானது குற்றமுறும் வண்ணம் அந்தரங்கமாகிய கொலைசெய்வோ மென்று சொன்னார்கள். (எ)

சூதர் கூண்டினி துரைத்த சொல்லையோர்
பாதகன் கருத்தினுட் படுத்தி மாமறை
வாதியென் றவனுயிர் மாய்க்க வேண்டுதற்
கிதலா லுறுமொழி யொன்று மில்லென்றான்.

(இ-ள்.) அவ்வாறு காபிர்களாகிய அந்தச் சூதச்சாதியார்ஒன்றுகூடி இனிமையுடன் பேசிக்கொண்ட வார்த்தைகளை அக்கூட்டத்திலுள்ள ஒரு துரோகியானவன் தனது காதுகளினாற் கேள்வியுற்று மனசினுள் ளிருக்கும்படி செய்துப் பெருமைபொருந்திய நமது வேதத்தின் வாதியென்று சொல்லிய அந்தமுகம்மதென்பவனின் ஆவியை மாய்ப்பதற்குப் பொருந்திய வார்த்தை இஃதல்லாமல் வேறேயொன்றுமில்லையென்று ஓ ருபாயத்தைச்சொல்லினான். (அ)

உரைவழி யவைசெய்து பாய மாகிய
கரைமதிக் காபிரி னுல்வர் கள்ளமாய்

நிரைமணிப் புரிசையின் வாயி னீங்கியே
விரைசெறி முகம்மதின் விடுதி நண்ணினூர்.

(இ-ள்). அவ்விதம் அவன் சொல்லிய தந்திரமாகிய அவ்வார்த்தைகளுக்கு அவர்கள் யாவர்களும் சம்மதித்து அவ்வார்த்தையினொழுங்குப் பிரகாரம் செய்யவேண்டியவைகளைச் செய்துத் திருட்டுத்தனமாய் கரைந்துபோகும் புத்தியையுடையக்காபிர்களாகிய அந்தச்சூதர்களில் நான்கு பேர்கள் இரத்தினங்களை வரிசையாக நிரைக்கப்பட்ட அந்த ஷாம்தேசத்தின் கோட்டை மதிலினது வாயிலைத்தாண்டி கஸ்தூரி வாசனையானது நாலுபக்கங்களிலும் மிகுத்துக் கமழாநிற்கும் காத்திரத்தை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் விடுதியைவந்து நெருங்கினூர்கள். (கூ)

வஞ்சனை கொலைகப டனைத்து மாட்டிய
நஞ்சினர் மக்கிகனிறைந்த நாப்பணிற்
கஞ்சமென் மலர்ப்பதக் கார ணீகரை
யஞ்சலித் தன்புட னடுத்து நின்றனர்.

(இ-ள்.) அவ்வாறு வந்து நெருங்கிய வஞ்சம் கொலை கபடமுதலிய தீயசெயல்களெல்லாவற்றையும் பூண்ட மனசை யுடையவர்களான அந்தச்சூதச் சாதியிலுள்ள நான்குபேர்களும் திருமக்கமாநகரத்தையுடைய அவ்வியாபாரிகள் பெருகியிருக்கப்பட்ட நடுவில் தாமரைமலர்போலும் மெல்லிய பாதங்களையுடைய காரணீகரான நாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைச்சமீபித்துவணங்கி அன்புடனின்றூர்கள். (கய)

ஆங்கவர் தமையழைத் தருகி ருத்திநீ
ரீங்குறை கருமமே தெடுத்தி யம்புமென்
றோங்கிய முகம்மது முரைப்பச் சாமிக
டீங்குறு மனத்தினை யடக்கிச் செப்புவார்.

(இ-ள்) அப்போது சகல படைப்புகளிலும் உயர்ச்சியுற்ற நபிகள் பெருமான், நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆங்குவந்த அந்தச் சூதர்களை யழைத்துத்தங்களது பக்கத்திலிருக்கும்படி செய்துநீங்கள் இவ்விடத்தில்வந்து தங்கிய காரியம்யாது! அதை எடுத்துச் சொல்லுங்க ளென்றுகேட்க, அந்த

ஷாம்தேசத்திலுள்ள அவர்கள் தங்களதுதிமைபொருந்திய மனதை யடக்கிக்கொண்டு சொல்லுவார்கள். (சக)

மருகமழ் சோலைசூழ் மக்கமா நகர்ச்
சரக்குள தெனிலது தருக சேரலார்
செருக்கருத் தவருடற் சிதைத்துத் திக்கெலாம்
பெருக்கிய கீர்த்தியீ ரென்னப் பேசினர்.

(இ-ள்) சத்துராதிகளின் அகங்காரங்களெல்லாவற்றையும் அற்றுப்போகும்படி செய்து அவர்களினது சரீரத்தைச் சிதைவுபடுத்தி எண்டிசைகளிலும் பெருகச்செய்த கீர்த்தியையுடைய முகம்மதானவர்களே! உங்களிடத்தில் வாசனையானது பரிமளிக்கப்பெற்ற பூங்காவுகள் வளைந்த திருமக்கமா நகரத்தின்கண்ணுள்ள சரக்குகள் உண்டுமேயானல் அவற்றை எங்களுங்கு விலைக் கிரையத்திற்குத் தாருங்களென்று சொன்னர்கள்.

உறுதிகொள் சரக்குவிற் றுடுக்கி யிப்பதி
மறுசரக் கெவையையும் வாங்கினே மினிச்
சிறிதுள சரக்கெனச் செப்பச் சாமிக
ளறுதியின் விலைக்கெடுத் தருள்க வென்றனர்.

(இ-ள்.) அவ்விதம் அவர்கள் சொல்லவே அதைக்கேட்ட நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவர்களைப்பார்த்து நாங்கள் வலிமையைக்கொண்ட சரக்குகளனைத்தும் விலைக்கிரயஞ் செய்து முடிவுசெய்துவிட்டு இந்தஷாம் தேசத்திலுள்ள மற்றச்சரக்குகளெல்லாவற்றையும் வாங்கினேம். ஆனல் இன்னம் கொஞ்சச்சரக்குகளுண்டென்றுசொல்ல, அதை அந்த ஷாம்தேசத்தை யுடையவர்களான சூதர்கள் கேட்டு அவற்றை எங்களுக்கு முடிவான விலைகூறி எடுத்துத்தாருங்களென்றுசொன்னர்கள். (கரு)

அனையவர் கூறக்கேட் டடுத்த மக்கிகள்
மனையினிற் புகுந்தெடுத் தியாவும் வைத்தனர்
வினையமற் றுறுவிலை விள்ளச் சம்மதித்
தினையன சரக்கெலா மிசைந்து வாங்கினர்.

(இ-ள்.) அவ்விதமாக அந்தச் சூதர்கள் சொல்ல, பக்கத்தில்சமீபத்திருந்த மக்கமாநகரத்தையுடையவர்களான அவ்வியாபாரிகள்தங்

களது காதுகளினற் கேள்வியுற்றுத் தங்களின் விடுதிகளில் போய் நுழைந்துவிற்று மிஞ்சியிருந்த சரக்குகளெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டுவந்துவைத்து அவைகளுக்கு வஞ்சகமில்லாது பொருந்திய விலைகளைக்கூற, அவ்விலைக்கு அந்தச்சூதர்கள்மனச்சம்மதங்கொண்டு இசைந்து அந்தச் சரக்குகளெல்லாவற்றையும் வாங்கினார்கள்.

சொல்லிய விலைப்பொருட் டொகையை நும்வயி
னெல்லையி னுதவுதற் குறுதி யாகவே
மல்லுடைப் புயத்திறன் முகம்மதே யெம
தில்லிடை வருகவென் றிசைத்திட் டாரரோ.

(இ-ள்.) அவ்வாறு வாங்கிய அந்தச்சூதர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பார்த்து வலிமைகொண்ட புய சாமர்த்தியத்தையுடைய முகம்மதானவர்களே! தாங்கள்கூறிய விலையினது பொருள் தொகை வலிமையுடன் நாங்கள் தங்கள்பால் விரைவில் தருவதற்கு எங்கள்வீட்டின்கண் எழுந்தருளுங்களென்று சொன்னார்கள். (கரு)

ஷாமுநாட் டவருரை யனைத்துஞ் சம்மதித்
தாமினு திருமக னகம கிழ்ச்சியாய்
நேமி வானவர்திரை நிறைந்து சுற்றிய
பூமிநா யகர்தொழப் புறப்பட் டாரரோ.

(இ-ள்.) அப்போது அந்த ஷாம்நகரத்தை யுடையவர்களான அச்சூதச்சாதியாரின்வார்த்தைகளெல்லாவற்றையும் தெய்வீகமுற்ற ஆமினு அவர்களின் புதல்வராகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சம்மதித்து மனக்களிப்புக்கொண்டு வட்டமாகிய வானலோகத்தின்கண்ணுள்ள தேவர்களான மலாயிக்கத்துமார்களும் சமுத்திரமானது பெருகிச்சூழ்ந்த இப்பூமியின் கண்ணுள்ள அரசர்களும் வணங்கும்படித் தங்களிருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டார்கள். (கசு)

மக்கிகள் சிலருடன் மைசருவுந்தம்
பக்கலில் வரக்கதிர் பரப்பி மெய்யொளி
திக்கினில் விரித்திடச் செறிந்த செங்கதிர்
மிக்கபொற் புரிசையின் வாயின் மேயினார்.

(இ-ள்.) அவ்விதம் புறப்பட்ட நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மக்கமாநகரத்தையுடைய வியாபாரிகளிற் சிலபேர்

களுடன் கதிஜா நாயகமவர்களால் அனுப்பப்பட்ட மைசறுவென்ப னும் தங்களது பக்கத்தில்சூழ்ந்து வரும்படியாகவும், தங்களின்சரீர மானது கிரணங்களை எட்டுத்திக்குகளிலும் பரவச்செய்து பிரகாச த்தை விரித்திடும்படியாகவும், நடந்து நெருங்கிய செவந்த பிரபை யானது மிகுந்த அழகிய அந்த ஷாம்தேசத்தின் கோட்டைமதிலி னது வாயிலைப்போய்ப் பொருந்தினார்கள். (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்:

விரைநறை கமலச் செல்வி மேவுசை னயினார் பாலன்
றரைபுக ழபுல்கா சிஞ்சிர் தருங்கொடைப் புகழே போலே
நிரைசுதை வெள்ளை நீற்றி நிலாமணி குயிற்றி வெள்ளி
வரையென நிமிர்ந்து தோற்றி மறுவிலா தொளிரும் வாயில்.

(இ-ள்.) அவ்வாறு நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்தக் கோட்டை மதிலின் வாயிலைப்போய் பொருந்தவே, அவ்வாயிலானது தேனையுடைய வாசனை தங்கியதாம ரைமலரின்கண்வீற்றிராநின்ற இலக்குமியானவள்விரும்பும் ஹூசை ன்நயினாரவர்களின் புதல்வரான இப்பூலோகமுழுவதும்புகழுகின்ற இந்நூலின் உதாரநாயகர் அபுல்காசிம் மறைக்காயரவர்கள் தயாநிற் கும் சிறப்பினையுடைய கொடையினது கீர்த்தியைப்போல, வரிசை யாகிய சுண்ணச்சாந்தினால் மெழுகிப் பிரகாசத்தையுடைய இரத்தி னவர்க்கங்களைப்பதித்து வெள்ளியினாலான மலைகளை யொப்ப ஓங்கி யாதொரு குற்றமுமில்லாது விளக்கமுற்றுப் பிரகாசியா நிற்கும். ()

இரசித நிலையிற் செம்பொ னிணைமணிக் கபாடஞ் சேர்த்தி
விரிகதிர் மணிக டூக்கி விரிந்தவா யிலினிற் புக்குக்
கரிமத மாரி சிந்திக் களிவழி வழுக்கல் பாயுந்
துரகதக் குரத்துான் மாய்க்குந் தோரண மறுகுசார்ந்தார்.

(இ-ள்.) அவ்விதம் பிரகாசியாநின்ற வெள்ளி நிலையின்கண் சிவந்த பொன்னினாற் செய்த இரத்தினவர்க்கங்கள் அழுத்தப்பெற்ற இரட் டைக் கதவுகளைச்சேர்த்துப்பாவிய கிரணங்களையுடைய மணிகளைத் தூக்கி விரியப்பெற்ற அந்த வாயிலின்கண் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நுழைந்து யானைகள் கன்னம்-கபோலம்-கோச மென்கிறமும்மதங்களாகியமழையைப்பொழிந்துஅதனாலுண்டாகும்

வழுக்களையுடைய களிநிலத்தை அங்குதாவாநின்ற குதிரைகளினது குளம்பின்கண்ணிருந்துண்டாகும் தூசிகளானவை மறைக்காநிற்கும் தோரணங்களை யுடைய தெருவீதின்கண் போய்ச் சேர்ந்தார்கள்.

அகிற்புகை வயங்கு மாட மணியணி யிமயம் போன்றுந்
துகிற்கொடிநுடங்கும் வெள்ளிவரையெனச் சுதைகொண்மாட
மிகச்செறி சாந்த மாட மேருவைப் போன்றும் வீதி
தொகுத்தவத் திசைகடோறு மெண்ணில தோன்றக்கண்டார்.

(இ-ள்.) அவ்வண்ணம் போய்ச்சேர்ந்த நாயகம்நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்வீதியினிடத்து அகிற்கட்டைகளை அக்கினியின்கணிட்டுப் புகைக்குகின்ற புகையானது பிரகாசியாநிற்கும் அலங்காரம் செய்யப்பட்டமாடங்கள் இமயபருவதத்தைப்போன்றும். வஸ்திரங்களினாற் செய்த கொடிகள் அசையாநிற்கும் சுண்ணச்சாந்தினைக்கொண்டமாடங்கள் வெள்ளியமலையைப்போன்றும், மிகவாய் நெருங்கிய சந்தனத்தையுடையமாடங்கள் மகாமேரு பருவதத்தைப்போன்றும், அளவு படுத்தப்பட்ட திசைகளெல்லாவற்றிலும் கணக்கற்றுப் பிரகாசிக்கும்படி பார்த்தார்கள். (உஎ)

துகிர்சிறு வேர்விட்டோடிச் சுடரொடுந் திகழ்வதேபொற்
பகிர்விரற் சிறுகான் மென்மை படர்சிறைப் புறவின்கூட்டந்
திகழ்தரக் கூவு மோதை தெரிவையர் கூந்தற்கூட்டும்
புகையினைப் பொறுது மாடம் புலம்புவ போன்ற தன்றே.

(இ-ள்.) அப்போது பவளக்கொடிகள் தங்களது சிறியவேர்களைவிட்டு நானுபக்கங்களிலும் ஓடிப்பிரகாசத்துடன் ஒளிர்வதைப் போலப் பகுப்பாயிருக்கும் விரல்களைக்கொண்ட சிறியகாலுகளையும் மென்மையானது விரியப்பெற்ற சிறகுகளையுமுடைய புறுவின் கூட்டங்கள் பிரகாசிக்கும்படிக் கூவுகின்ற சத்தமானது, மாதர்கள் தங்களது கூந்தலுக்குஊட்டாநிற்கும் அகிற்கட்டையினது புகையைத்தாங்காது அங்குற்ற மாடங்களானவை தங்களது வாய்களைத் திறந்து புலம்புவதை நிகர்த்திருந்தது.

நித்தில நிரைத்த மாட நிரைதிரை போன்ற நாவா
யொத்தன கூடக் கைமா வொண் கொடி பவளம் போன்ற

கைத்தொடி மகளிர் செல்வக் கடிமுர சறைத லோதை
நித்தமு மருத வாரி நிகர்த்தது நகரமன்றே.

(இ-ள்.) அன்றியும், முத்துக்களை நிறைக்கப்பெற்றஅம்மாடங்களானவைவரிசையாகியசமுத்திரத்தினது அலைகளைநிகர்த்தன. மதங்களைப்பொழியாநிற்கும் யானைகள் அச்சமுத்திரத்தின்கண்ணுள்ள மரக்கலங்களைக் நிகர்த்தன ஒள்ளியபிரகாசத்தையுடைய துகிற்கொடிகள் அச்சமுத்திரத்தின்கண்ணுள்ள பவளக்கொடிகளை நிகர்த்தன. வளைபல்களையணிந்த கைகளையுடைய பெண்களின் செல்வத்தைப் பொருந்திய மணமுரசினது ஓசை பிரதிதினம் நீங்காத அந்த ஷாம் நகரானது அவைகளையெல்லா முடையசமுத்திரத்தை நிகர்த்தது.

தாறுபாய் தந்தி மாதேர் தானைமும் முரசு வேத
மீறு பண்ணினைய வெல்லா மெங்கணும் விளங்கு மோதை
மாறிலாதெழில் கொண் டேங்கும் வளமைமா நகரம் வாய்விண்
டீறிலான் றூதர் வந்தா ரெனவெடுத் தியம்பல்போலும்.

(இ-ள்.) அன்றியும் அங்குசத்திலடங்காது பாயாநிற்கும் யானை குதிரை-இரதம்-பதாதி-படை-கொடை-மணமென்னும் மூன்றுவித முரசுகள் வேதத்தினுல் எவ்விடங்களிலும் அதிகரிக்கும் இசைகளாகிய இவைகளெல்லாம் எங்கும்விளங்குகின்ற ஓசையானது, நீங்காத அழகைப் பெற்றோங்காநின்ற செல்வத்தையுடைய பெருமைதங்கிய அந்த ஷாமென்னும் பட்டணம் தனது வாயைத்திறந்து முடிவில்லா தவனுன ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் றசூலாகியநாயகம்நபிமுகம் மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இவ்விடத்திற்கு வந்தார்களென்று எடுத்துச் சொல்லுவதை நிகர்த்திருந்தது. (உரு)

மாலைவாய்ப் பலபூண் டாங்கி மான்மதங் கமழ்ந்து வீங்குங்
கோலமார் பொருப்புத்திண் டோட் குரிசிறன் கதிர்கடாக்கி
நீலமா மணியிற் செய்து நிரைகதி ரெறித்த வீதி
வேலைவாய்த் தரளச் சோதி விளங்குவ போன்ற தன்றே.

(இ-ள்.) அன்றியும், புஷ்பங்களினுல் செய்யப்பட்ட மாலையின்கண்பலவித ஆபரணங்களைச்சுமந்து கஸ்தூரிவாசனை கமழப்பெற்றுப் பூரிபாநிற்கும் அழகுபொருந்திய மலைகளுக் கொப்பாகிய வலிமையுற்ற தோள்களையுடைய குரிசிலான நமதுநாயகம் நபிமுகம்மதுசல்

லல்லாகு அலேகிவசல்ல மவர்களினது சரீரத்தின்கண்ணுள்ள கிரணங்களானவை தாக்கப்பெற்றுப் பெருமைபொருந்திய நீலநிறத்தையுடைய விரத்தினங்களினூற்செய்து வரிசையாகிய கதிர்களை வீசிய அந்தெருவானது, சமுத்திரத்தின்கண்ணுள்ள வெள்ளிய ஒளியையுடைய முத்துக்கள் பிரகாசிப்பதை யொத்திருந்தது. (உச)

பந்தரிட் டலர்கள் சிந்திப் பரிமள மரவ மாற்றிச்
சந்தகில் கலவைச் சேறு தடவிய மகுட வீதி
யிந்தெழின் மழுங்குஞ் சோதி யிறையவன் றூதர் மெய்யின்
கந்தமூ டலவி யெங்கு மறுவியே கமழ்ந்த தன்றே.

(இ-ள்.) அன்றியும், பந்தர்கள் போட்டுப் புஷ்பங்களைப் பொழிந்து வாசனையை யுடைய குங்குமமாலைகளை நானுபக்கங்களிலும் தூக்கிச் சந்தனக்குளம்பு அகிற்பொடி கலவைச்சேறு முதலியவைகளைப் பூசிய சிகரத்தினையுடைய அத் தெருக்களில் அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களின் சந்திரனது அழகும் மழுங்கிப்போகும் பிரகாசத்தையுடைய சரீரத்தின்கண்ணுள்ள பரிமளமானது ஊடுலவப்பெற்று எவ்விடங்களிலும் கஸ்தூரிவாசனையேகமழ்ந்தது. (உரு)

முத்தணி பவளத் திண்கான் முறைமுறை நிறுவித் தேர்ந்த
சித்திர மெழுதி வாய்த்த செறிமயிர்க் கற்றை தூக்கிப்
பத்திவிட் டெறிக்குங்காந்திப் பன்மணி பரப்பி யோதை
நித்தமு மறுது செல்வ நிகழ்ந்தவா வணமுங் கண்டார்

(இ-ள்) அப்போது, நபிமுகம்மதுசல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் முத்துக்களினாலும் பவளங்களினாலும் அலங்காரஞ்செய்யப்பட்டவலிமை பொருந்திய தூண்களை வரிசைவரிசையாகநிறுத்தித் தேர்ச்சியான சித்திரங்களை தீட்டிச் சிறப்புத்தங்கிய நெருக்கத்தையுடையமயிர்க்கற்றைகளை யெவ்விடங்களிலுல் தூக்கி வரிசைவிட்டு வீசாநிற்கும் பிரகாசத்தையுடைய பல இரத்தினவர்க்கங்களைப்பரவும்படி செய்துப் பிரதிதினமும் ஒலியானது மாறுது நிகழப்பெற்ற செல்வத்தை யுடைய கடைவீதிகளையும் பார்த்தார்கள். (உசு)

அடையல ரொடுங்க மோதும் படைமுர சதிரு மோதை
யிடைபடு வறுமை யோட விடுகொடை முரசி னோதை

கடைபடு வடிவேற் கண்ணார் கடிமண முரசி னோசை
முடியுடை யரசர் வீதி யெங்கணு முழங்கக் கண்டார்.

(இ-ள்) அன்றியும்; நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சத்துராதிகள் ஒடுக்கமுறும்படி அடியாநிற்கும் படைமுரசங்கள் முழங்காநின்ற ஓசையும், இடையிற் பொருந்துகின்ற தாரித்திரியமானது ஓடும்படி கொடாநின்ற கொடை முரசங்களினோசையும் கூர்மைதங்கிய வேலாயுதமும் கடைபடாநிற்கும் கண்களையுடைய பெண்களினது மிகுந்த மணமுரசங்களினோசையும், மகுடமுடியினையுடைய அரசர்களினது வீதிக ளெவ்விடத்திலும் முழங்கும்படி பார்த்தார்கள். (உஎ)

வாரியின் மதங்கள் சிந்தி வாரண மிடைந்து செல்லத்
தேரினந் திரண்டு கூடிச் செழுங்கொடி நுடங்கி நிற்பப்
பாரிடை துகள்விண் டூர்க்கும் பரித்திரண் மலிந்து தோன்ற
வாரவார் முரச முத வரசர்வீ திகளுங் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிகமும்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் யானைகளானவைச் சமுத்திரத்தைப்போல மதங்களைப்பொழிந்து நெருக்கமுற்று நடந்துபோகவும், தேர்க்கூட்டங்கள் தொகையாகச் சேர்ந்து அவற்றின்கண்ணுள்ள செழிய துகிற்கொடிகள் அசைந்து நிற்கவும்; இப்பூமியின்கண்ணுள்ள தூசிகளானவை ஆகாயத்தை மூடிக்கொள்ளும்படி செய்யும் குதிரைக்கூட்டங்கள் அதிகரித்துப் பிரகாசிக்கவும், தோலினது வார்களையுடைய முரசங்களினோசையானது பொருந்தும்வண்ணம் நீங்காத இராஜவீதிகளையும் பார்த்தார்கள். (உஅ)

புகர்முகச் சிறுகண் வேழப் பொருப்பொடு பொருப்புத் தாக்கி
யிகல்பொர மூட்டுஞ் செவ்வி யிளையவர் குழாத்தி னோசை
முகிலொடு மசனி பொங்கி முழங்குவ போன்றும் விண்ணு
மகிலமு மதிரத் தோன்று மணிமறு கிடமுங் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் புள்ளிகள்படர்ந்த முகத்தையும் சிறிய கண்களையுமுடைய யானைகளாகிய மலைகளுடன் மற்றும் யானைகளாகிய மலைகளைத்தாக்கச்செய்து போர்புரியும்படி ஏவிவிடாநின்ற அழகியஇளம்பருவத்தையுடைய வாலிபர்களினது கூட்டத்தினோசையானது, மேகங்களோடும் இடியானது அதிகரித்து முழங்குவதைப்போலும் ஆகாயலோ

க்மும் பூலோகமும் அதிரும்வண்ணம் தோன்றுநின்ற அழகிய வீதிகளினது இடங்களையும் பார்த்தார்கள். (உகூ)

வன்னியின் கொழுந்து போற்செம் மணிக்கதி ரூசலேறி
மின்னனார் பாடி யாடும் வீதிவாய் மலிந்த தோற்றந்
துன்னிதழ்க் கமலப் போது துயல்வர நாப்பண் வைகு
மன்னமொத் திருப்ப நோக்கு மகமகிழ்ந் தினிது கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மின்னையொத்த பிரபையை யுடைய மாதர்கள் வீதியின்கண் அக்கினிக் கொழுந்தைப்போலச் சென்னிறத்தைக்கொண்ட இரத்தின வர்க்கங்களின் பிரகாசத்தைப் பெற்ற ஊஞ்சலின்மேல் ஏறி இருந்துக்கொண்டு பாடியாடாநிற்கும் பெருகிய தோற்றமானது, நெருங்கிய இதழ்களையுடைய தாமரை மலரானது அசைய அதன் நடுவில் தங்கியிருக்கும் அன்னப்பட்சியை நிகர்த்திருக்கத் தங்களது கண்களும் மனமும் களிப்புற்று இனிமையுடன் பார்த்தார்கள். (௩0)

கந்துக மெடுத்துக் காந்தட் கரத்தினி லேந்தி யாடு
மந்தர மனைய கொங்கை மயிலனார் முகத்தின் வேர்வை
சிந்தக டளைந்து தத்துந் திரைமுகட் டெழுந்து தோன்று
மிந்துமுத் துகுப்ப தென்ன விடந்தொறு மலியக் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், காந்தட் புஷ்பத்திற் கொப்பாகிய கைகளினால் பந்துகளை எடுத்துத் தாங்கி விளையாடாநின்ற மலைகளை நிகர்த்த முலைகளைக் கொண்ட மயில்போலும் சாயலையுடைய பெண்களினது முகத்தின் கண்ணுண்டாகும் வேர்வையானது, சமுத்திரத்தினது வயிற்றை யுளைந்துத் தாவிச்சாடுகின்றஅலைகளினதுஉச்சியிலெழும்பி விளங்காநிற்கும் சந்திரனுனது முத்துக்களைச் சொரிவதைப்போல இடங்களெல்லா வற்றிலும் பெருகும்படி பார்த்தார்கள்.

கருமணிக் கழங்கு கஞ்சக் கரத்தினி லெற்றி யாடச்
சுரிகுழன் மலர்வண் டென்னச் சுரும்பினந் தாவ நோக்கி
யரிவையுன் முறுவ லொன்ற வணிநகைக் கதிரின் முத்தாய்த்
தெரிதரப் புதுமை காட்டுந் தெருத்தலைச் சிறப்புங் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், பெண்களானவர்கள் கரிய இரத்தினங்களைப் பதித்த கழற்சிக்காய் போலும்செய்யப்பட்ட கழங்குகளைத் தங்களது தாமரை மலர்போன்ற கைகளினால் வீசி விளையாடவும், அவைகளைப் பார்த்து ஆண்வண்டுக் கூட்டங்கள் முறுக்கையுடைய கூந்தலின்கண் சூடாநிற்கும் புஷ்பங்களில் தங்கிய தங்களது பெண்வண்டுகளென்று அவற்றின்மீதுசாடவும், அவற்றை அப்பெண்கள் பார்த்து புன்சிரிப்புண்டாகவும், அதனால் அவர்களின் அழகியபற்கள் பிரகாசத்தையுடை முத்துகளாகத்தோற்றவுமான அதிசயங்களைக் காட்டுகின்ற வீதிகளினிடத்துள்ள சிறப்புகளையும் பார்த்தார்கள். (௩௨)

மாசறு வாயி றோறும் வயங்கிய கதலி நெற்றிப்
பாசடை துயல்வ திந்தப் பாரினிற் குபிரென் றோங்கு
மாசற வுதித்த வள்ள லஃமதி னழகு மெய்யின்
வீசுவ போன்று தோன்றி விளங்குதல் பலவுங் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அங்குள்ள குற்றமற்ற வீடுகளினது வாசல்கள் தோறும் பிரகாசித்த வாழை மரங்களின் உச்சியின்கண் தங்கிய இலைகளானவை அசைவது, இப்பூமியின்கண் குபிரென்று சொல்லும்படி போங்காநிற்கும் குற்றமான தொழியும் வண்ணம் பிரசன்னமான வள்ளலாகிய அஃமதென்னும் திருநாமத்தையுடைய நபிகள் பெருமானவர்களின் அழகுபொருந்திய சரீரத்தின்கண் வீசுவதை நிகர்த்தும் விளங்குதலாகிய பல அற்புதங்களையும் பார்த்தார்கள். (௩௩)

முருக்கிதழ் கரிய கூந்தன் முத்தவெண் ணகையி னார்தம்
பெருக்கொடு திரண்டு நன்னீர் குடைதலிற் பிறங்கு மெய்யின்
றிருக்கிளர் கலவைச் சேறு நானமும் புழுகுஞ் சேர்ந்து
மருப்பொலி வாயி யாவு மணங்கமழ்ந் திருப்பக் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் முருக்கமரத்தினது பூவையொத்த அதரத்தையும் கரிய கூந்தலையும் முத்தைப்போன்ற வெள்ளிய பற்களையுடைய பெண்கள் தங்களது பெருக்கத்துடன் கூட்டமுற்று நல்ல ஜலத்தின்கண் ஸ்நானஞ் செய்வதினால் அவர்களினது சரீரத்தில் பிரகாசியா நிற்கும் அழகானது ஓங்கப்பெற்ற கலவைச்சேறும் கஸ்தூரியும் புழு

கும் அச்சலத்தின்கண் சேர்ந்து வாசனைபெருகிய அங்குள்ள தடாகங்களனைத்திலும் பரிமளமானது கமழ்ந்துக்கொண்டு இருக்கும்படிப் பார்த்தார்கள். (நசு)

பரதமா டிடமுங் கீதப் பண்ணொலி யரங்குஞ் சீர்மை
விரதமா மறையோ ரோதும் வேதமண் டபமுஞ் செவ்விக்
கரதலஞ் சேப்ப வள்வார்க் கருவியா ரிடமுஞ் செல்வர்
நிரைதரு சிரம சாலை நிறைந்தன பலவுங் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் நாட்டிய மாடுகின்ற இடங்களும், இராகத்தைப்பெற்ற இசைகளைப் பயிலாநின்ற ஒலிகளையுடைய இடங்களும், நன்னடையினைக்கொண்ட பெருமை பொருந்திய தவத்தினையுடைய மறையோர்கள் ஓதாநிற்கும் வேத மண்டபங்களும், அழகிய கையின்புறமானது சிவக்கும்படி கூர்மைதங்கிய நீண்ட ஆயுதத்தொழில்பயிலுவோர்களினிடங்களும் செல்வத்தையுடைய பாலியர்கள் வரிசையாக நிற்கப்பட்ட சிலம்பச் சாலைகளுமான அங்கு நிறைந்திருக்கப்பட்டனவாகிய பல அற்புதங்களையும் பார்த்தார்கள். (நரு)

இன்னன பலவு நோக்கி யெழில்கனிந் தொழுகிக் காந்தி
மின்னொளி மழுக்குஞ் சோதி மெய்முகம் மதுமன் பாகத்
தன்னுயிர்த் தோழ ரோடுந் தரகனு மைசறாவும்
பின்னுற வரவக் காபிர் பெருந்தலைக் கடையிற் சார்ந்தார்.

(இ-ள்) அந்நேரத்தில் அழகானது கனிவுற்று ஒழுகிப் பிரகாசத்தையுடைய மின்னினது ஒளியைமழுங்கச்செய்யும் பிரபையைக்கொண்ட தேகத்தையுடைய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் இப்படிப்பட்ட பல சிறப்புகளையும் தங்கள்கண்களினாற் பார்த்துக்கொண்டு அன்புடன் தங்களது உயிர்போன்ற சினேகிதர்களோடும் அந்த ஷாம்நகரத்திலிருந்து தங்களை வந்துசேர்ந்துத் தங்கள் சரக்கு முதலியவைகளுக்குத் தரகனாகஅம்முதியவனும் கதீஜா நாயகமவர்களால் அனுப்பப்பட்ட மைசறாவும் தங்களது பின்னே பொருந்தும்படி நடந்துவர, அந்தக் காபிர்களாகிய சூதர்களின் பெரிய தலைவாயிலின்கண்போய்ச் சேர்ந்தார்கள். (நசு)

அருளினி லறத்திற் றேர்ந்த வறிவினி லெவரு மோவ்வாக்
குரிசினன் மறைக்கும் வாய்த்த கொண்டலங் கவிகை வள்ளல்

விரிகதிர்க் கலைக ளோடும் வெண்மதிக் காலி னேகி
யிருளிடம் புகுவ போல யிவர்களில் லிடத்திற் புக்கார்.

(இ-ள்.) அவ்வாறு போய்ச்சேர்ந்த கிருபையினாலும் தருமத்தினாலும் தெளிவுற்ற அறிவினாலும் யாவர்களும் ஒப்பாகாத குரிசிலாகிய தௌறாத்து-இஞ்சீல்-சபூர்-புறுக்கான் என்னும் நான்குவேதங்களுக்கும் சங்கையுற்ற அழகிய மேகக்குடையை யுடைய வள்ளல் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் விரிந்த பிரகாசத்தையுடைய கலைகளோடும் வெள்ளிய சந்திரன்போன்ற தங்களது பாதங்களினால் நடந்து சென்று இருளின்கண் புகுவதைப்போல, இந்தக் காபிர்களான சூதர்களின் வீட்டின்கண்போய்ப்புகுந்தார்கள்.

கள்ளவிழ் மரவத் திண்டோட் காரணக் கடலே யன்ன
வள்ளலை யவர்கள் போற்றி மாளிகை வயின்கொண் டேகித்
தெள்ளிய மணியிற் செய்த செவ்வியா சனத்தி லேற்றி
வெள்ளிலை யடைகாய் சந்தம் விரைவின்வைத் திருந்தாரன்றே

(இ-ள்.) அப்போது தேனானது அவிழாநிற்கும் குங்குமப் புஷ்பத்தினாலான மலர்மாலையணிந்த திண்ணிய புயங்களையுடைய காரணத்தினது சமுத்திரத்தையொத்த வள்ளலாகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அந்தச்சூதர்களாகியகாபிர்கள்துதித்துத்தங்களினது மாளிகையின்கண்கூட்டிக்கொண்டுபோய்த்தெள்ளிய இரத்தினங்களினாற்செய்த அழகிய ஓராசனத்தின்மீது ஏறியிருக்கும்படிசெய்து விரைவாகஅவர்களின் முன்னர் வெற்றிலை பாக்கு சந்தனமாகிய இவைகளை வைத்துப் பக்கத்தி லிருந்தார்கள். (௬அ)

மைதவழ் குடையி ரிந்த மனைபிடை புகுத யாங்கள்
செய்தவப் பலனோமுன்னோர் திளைத்தபுண் ணியத்தின்பேறோ
வெய்திய பெற்றி யென்ன விசைந்தநன் முகம தாகப்
பொய்திகழ் நாவால் வஞ்சம் பொருந்திய மனத்தர் சொன்னார்.

(இ-ள்.) அன்றியும்,மேகங்கள் தவழாநின்றகுடையினையுடைய முகம்மதானவர்களே! நீங்கள் இந்தவீட்டின்கண்வந்துநுழையும்படி பொருந்திய இந்தத்தன்மையானது, நாங்களனைவர்களும் செய்யாநிற்கும்தவத்தினதுபிரயோசனமோ? அல்லது எங்களது முன்னோர்கள்

செய்த தருமத்தினது பேருே? என்றுசொல்லிப் பொருந்திய நல்ல முகஸ்துதியாகப் பொய்மையானது மாருது பிரகாசியாநிற்கும் தங்களது நாவினுல் கபடம்தங்கிய மனத்தை யுடையவர்களான அந்தக் காபிர்கள் சொன்னுர்கள். (௩௯)

நன்னய மொழிக ளாக நவிற்றியங் கிருந்த காலை
வன்மனக் கொடிய காபிர் மனத்துறு சூழ்ச்சி யாக
மின்னெளி கரக்கு மாட மேனிலை செறிந்த கற்பாற்
சென்மெனக் கடைக்கண் ணுரச் செப்பின னெருவன்சென்ருன்.

(இ-ள்.) அவ்விதம் நல்ல நயத்தையுடைய வார்த்தைகளாகப் பேசிக்கொண்டு அவ்விடத்தில் இருக்குகின்ற தருணத்தில், வன்மையான மனத்தையுடைய கொடுமைதங்கிய காபிர்களாகிய அந்தச்சூதர்களி லொருவன் தனது மனசின்கண்ணே இரகசியமாகப் பொருந்திய தந்திரமாய் மின்னினது பிரகாசத்தையும் கரக்கும்படி செய்யும் அந்த வீட்டினது மேன்மாடத்தின்கண் சேர்ந்தகல்லினிடமாய் செல்லுங்களென்றுந் தனது கடைக்கண்ணுனது பொருந்தும்படி சைகையாகச் சொன்னுன். அதையறிந்த ஒரு மனிதன் அவ்வண்ணமே அங்குபோய்ச் சேர்ந்தான். (௪0)

தீங்குறு மனத்த னேகிச் செறித்தமேற் பலகை மெல்ல
வாங்கியங் கிருந்த கல்லை வரைப்புயம் பிதுங்க வுன்னித்
தாங்கலி லுருட்டி மெல்லத் தள்ளினன் றள்ள லோடு
நீங்கருங் கரத்தைக் கவ்வி நெரிபட விறுக்கிற் றன்றே.

(இ-ள்.) அவ்வாறு தீமைபிருந்த மனத்தையுடையவனுன அந்தச் சூதன்போய் ஆங்குசேர்த்து வைத்திருந்த மரப்பலகையைத் தனது கையினுல் மெதுவாகவாங்கிவிட்டு அவ்விடத்திலிருந்தகல்லை மலைபோலும் இருபுயங்களும் பிதுங்கும்படி விதனத்துடன் எழுப்பி யுருட்டி மெல்ல நபிகணுயகமவர்களின் தலையைக் குறிப்பிட்டுக் கீழேதள்ளினுன். அங்ஙனம் தள்ளியதோடு அக்கல்லானது நீங்குதற்கரிய அவனது கையை கவ்விப் பிடித்து நசுங்கும்வண்ணம் இறுக்கிற்று. (௪௧)

கரத்தினிற் பதிந்த கலைக் கழற்றினன் கழற்ற லாகா
தூரத்தொடுங் காலையூன்றி யுதைத்திழுத் தசைத்துவெள்வாய்

நிரைத்தபல் லதரங்கவ்வி நெற்றிமேற் புருவ மோட்டி
வரைத்தடப் புயங்கள் வேர்ப்ப வலித்தறச் சலித்து மூன்றான்.

(இ-ள்.) அவ்வாறு அந்தக்காபிராகிய சூதன்கையில் அழுந்திய அந்தக்கல்லை கையைவிட்டுக் கழற்றினான் கழற்றமுடியாமல் வலிமையுடன் தனது கால்களை ஊன்றித் தாக்கி அசைத்து வலித்து வாயின்கண் வரிசையாகிய வெண்ணிறத்தையுடையபற்களினால் இதழ்களைக் கடித்து கண்ணினது புருவங்களை நெற்றியின்மீது ஓட்டி மலைபோலும் விசாலமாகிய இருபுயங்களும் வேர்க்கும் வண்ணம் இழுத்து மிகவும் சலிப்புற்றுச் சுழற்சியடைந்தான். (சஉ)

உரம்புவன் கையைக் கல்லோ டுதறுவ னுதறி டாம
விரம்பநெட் டுயிர்ப்புச் செய்வ னிலைதளர்ந் திடுவன் வாசிக்
குரம்படைத் துகள்போ லாவி குலைகுலைந் திடுவ னிந்தத்
தரம்பட விதிபோ வென்னத் தயங்குவன் மயங்கு வானே.

(இ-ள்) அன்றியும். அவன்தனதுவாயினாலதட்டுவான் கையினை அந்த கல்லினுடன் சிதற அசைத்து வீசுவான். அவ்விதம் அசைத்து வீசமுடியாமல் பெருகும்படி நெடுமூச்சுவிடுவான். தனது நிலைமையானது சோர்வடைவான். குதிரையினது குளம்புகளினால் உண்டாகாநிற்கும் தூசிகளைப்போலத் தன் ஜீவனானது மிகவும் நடுக்கமடைவான். இந்த முறைமையானது படும்படி நமக்கு ஆதிகாலத்திலமைத்த விதிப்பயனோ? என்று சொல்லித் திகைப்பான். புத்தியானது கலக்கமுறுவான். (சங)

மாதிரங் கையைப் பற்றி வரவர நெருக்க மென்மேல்
வேதனை பெருக வாடி வேர்த்துட லயர்ந்து சோர்ந்து
பாதகம் பலித்த வாற்றாற் பதைபதைத் துருகி யேங்கி
யேதினிச்செய்வோமென்ன விடைந்துநெஞ்சுடைந்துநின்றான்.

(இ-ள்) அவ்விதம்கலக்கமுற்ற அவன்அந்தக்கல்லானது தனது கையைப்பிடித்து மேலும் மேலும் நெருக்கவே; வரவரத் துன்பம் அதிகரிக்கும்படி வாட்டமுற்றுச் சரீரம் விசர்க்கப்பெற்று வருந்திச் சோர்வடைந்துத் தான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குச் செய்பத் துணிந்த துரோகமானது தனக்கேவந்துவாய்த்த முறைமையினால் மிகவும் துடித்து உருகி ஏக்கங்கொண்டு இனி நாம் யாது செய்வோம்? செய்புமுபாயமொன்று மில்லையேயென்று சொல்லி வசக்கேடாகி மனமானது தளர்வுற்று நின்றான். (சச)

இனையன துன்ப மெய்தி யிவனிவ ணிருப்ப வன்னோர்
மனையிடைபொருள்கொண் டீங்கு வந்திலன் காணு மென்னச்
சினமுடன் சொல்வார் போலச் செப்பிமே னிலையிற் போந்தார்
புனைமணிக் கரங்கல் லோடும் புரண்டவன் கிடப்பக் கண்டார்.

(இ-ள்.) இவன் இவ்வாறு வருத்தத்தைப் பொருந்தி இங்கு இருக்க வீட்டின்கண் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடனிருந்த காபிர்களாகிய அந்தச்சூதர்கள் போனவன் பொருளெடுத்துக்கொண்டு இதுபரியந்தம் இவ்விடத்திற்கு வந்தானில்லன் ஆகலால் அவனைப் பாருங்களென்று கோபத்தோடும் சொல்லுவோர்களைப் போலச் சொல்லி அவன் இருக்கப்பட்ட அந்த மேன்மாளிகையின்கண் போனார்கள். ஆங்குபோகவே அவன் அழகிய தனது மணிகரங்களானவை கல்லுடன்புரண்டு கிடக்கும்படி பார்த்தார்கள்

மாட்டுவந் திருந்து நின்பால் வந்தவை யெவைகொ லென்னப்
பூட்டிய கல்லுந் தானும் புரண்டவன் றெருண்டு சொல்வான்.
வீட்டினிற் புகுமின் பாரம் வீழ்த்துமி னென்னு நுஞ்சொற்
கேட்டனன் கேட்ட போதே கெட்டனன் கெட்டேனென்றான்.

(இ-ள்.) அவ்விதம் பார்த்த அவர்கள் அந்தச் சூதனின் பக்கத்தில் வந்து இருந்துகொண்டு உன்னிடத்தில் வந்து சேர்ந்தவை யாவை? யென்று கேட்கக்; கொழுவியகல்லும் தானுமாகப்புரண்ட அந்தச்சூதனானவன் தெருட்சியுற்று அவர்களைநோக்கிச் சொல்லுவான். வீட்டின் கண்போய் நுழையும். பாரமாகியகல்லை விழும்படிசெய்யும் என்றுசொல்லிய உங்களுடைய வார்த்தைகளை நான் காதுகளினால் கேட்டேன். அப்படிகேட்டசமையமே நானும் கெட்டேன் கெட்டே னென்றுசொன்னான். (௪௬)

கலிநிலைத்துறை.

வருந்திக் கல்லிரு கையினும் பிடிபட மயங்கி
யிருந்த வன்னிடத் தெய்திய பேரதி சயித்துச்
சரிந்து வீழ்ந்திட வீழ்த்தன ரிகழ்த்தவர் தவித்தார்
விரிந்தி டாதுமேன் மேலற விறுகிய விலங்கல்.

(இ-ள்.) அப்போது அந்தக்கல்லானது இரண்டுகைகளிலும் பிடிபடவே வருத்தமுற்று புத்தியானது மயக்கமடைந்து இருக்கப் பெற்ற அந்தச் சூதனிடத்தில் போய்ச்சேர்ந்த காபிர்களாகிய மற் றச் சூதர்கள் ஆச்சரியமுற்று அக்கல்லானது நழுவி விழுந்திடும்படி இழுத்தார்கள். அவ்விதம் இழுத்தும் இழுத்தவர்கள். தவிப்படை ந்தார்களேயொழிய அக்கல் அகலாது மேலும்மேலும் மிகவாய் இறுகியது. (சஎ)

இல்லி னுட்புகுந் தவரொரு முகம்பட விருந்து
பல்லி னலித முதுக்கிமெய் யுரத்தொடும் பறிப்பச்
சொல்லொ ணாதுயிர் பதைத்திட உடறுடி துடிப்பக்
கல்லி னுட்புக வற்றன வவன்மணிக் கரங்கள்.

(இ-ள்.) அவ்விதம் இறுகவே அந்த வீட்டினகம்போய் நுழைந் தவர்களான அந்தச் சூதச்சாதியார்களனைவர்களும் ஒருமுகமாய்க் கூடி இருந்துக்கொண்டுத் தங்களது பற்களினால் அதரங்களைக் கடி த்துச் சரீரபலத்தோடும் அவனது கையை அந்தக் கல்லைவிட்டும் வலாற்காரமாய் பிடுங்கச், சொல்லமுடியாது அவனது ஆவியானது துடித்திடவும் சரீரம் மிகப்பதைத்திடவும் அவனின் மணிக்கைகள் அக்கல்லினுள் புகும்படி அற்றுப்போயின. (சஅ)

கரங்கள் போயின கல்லொடு மெனநிலை கலங்கி
யிரங்கு வாரிடை வாரிது விதிகொலென் றேங்கி
மரங்கி டந்தெனக் கிடந்தவர் மாட்டினின் றொருவ
னரங்கு நின்றிழிந் தியல்புறுந் தரகனை யடைந்தான்.

(இ-ள்.) அவ்வாறு கைகளானவை அற்று அந்தக் கல்லோடும் போயினவென்று சொல்லி அங்குற்ற சூதர்களனைவர்களும் தங்க ளது நிலைமையை விட்டுங் கலக்கமடைந்து அழுவார்கள் வசக்கே டுறுவார்கள். மேலும் இது ஆதிகாலத்தி லுண்டான ஊழ்விதியி னது பயனென்று சொல்லியொலித்து மரங்கிடந்ததைப் போலக் கிடந்தவர்களாகிய அச் சூதர்களினிடத்தில் நின்று ஒரு மனிதன் அவர்களிருந்த அந்த அரங்கைவிட்டொழிந்து இறங்கித் தகுதி பொருந்திய நபிகணுபகமவர்களோடு தங்கியிருக்கும் தரகனிடத்தி ல்வந்து சேர்ந்தான். (சகூ)

தரக னுக்குரைத் தழைத்துயர் மேனிலை சார்ந்து
விரகர் செய்தொழி லனைத்தையு மொன்றற விரித்தாண்

கரைக ணீருகக் கேட்டவன் மனங்கடு கடுத்து
நரக வாதிக ளாயினீ ரெனநவின் றனனே.

(இ-ள்). அவ்வாறு போய்ச்சேர்ந்த அவன் அந்தத்தாகனுக்கு கிளாமுற்ற அம்மேல் வீட்டின்கண் நடந்த செய்திகளைச் சொல்லி அவனை அழைத்துக்கொண்டு அங்குசென்று விரகராகிய அச்சூதர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கொல்லும் பொருட்டுச் செய்த வேலைகளெல்லா வற்றையும் ஒன்றேனும் ஒழியாது விரித்துச் சொன்னான் அவைகளைதாகனானவன் காதுகளினாற் கேள்வியுற்று இரண்டு கண்களினது ஓரங்களிலும் கண்ணீர் சிந்திடும்படி மனமானது மிகவும் கோபித்து அவர்களைப் பார்த்து நீங்கள் யாவர்களும்நரகவாதிகளாகஆய்ப்போனீர்களென்றுசொன்னான்.

பாரிடைப்பெரி யவர்களுக்கிடர்படுத் திடவென்
றோரும் வன்மனத் தவர்களுக் குறுபொரு ளுலகிற்
சாரு மக்களு மனைவியுந் தாமுந்தம் பொருளும்
வேரொ டுங்கெடு மென்பது நிசமென விரித்தான்.

(இ-ள்.) அன்றியும், அத்தாகனானவன் இப்பூமியின்கண் மேன்மையை யுடையவர்களுக்குத் தீங்குண்டாக்கிட வேண்டுமென்று நினைக்குகின்ற கொடிய இருதயத்தை புடையவர்களுக்குச் சார்ந்த சம்பத்தானது இவ்வுலகத்தினிடை பொருந்தும் புதல்வர்களும்மனையாளும் தாங்களும் தங்களது செல்வங்களும் அடியோடுங் கெட்டுப் போகுமென்று சொல்லுவது சத்தியமென்றுவிவரித்துச்சொன்னான்

ஓங்கு மாநில மாக்களி லொருவருக் கொருவர்
தீங்கி யற்றிட நினைத்திடுங் கொடியவத் தீமை
நீக்கி டாதவ ருயிரினைப் பருகநே ரலர்கை
தாங்கும் வாளென வொல்லையி லுறச்சமைந் திடுமே

(இ-ள்.) அன்றியும், ஓங்குகின்ற பெருமைதங்கிய இப்பூலோகத்தின் கண்ணுள்ள மானிடர்களில் ஒருவருக்கு மற்றொருவர் தீமை செய்திடும்படி மனசின்கண் எண்ணிடுங் கொடுமையையுடைய அந்தத் தீமையானது, அவர்களைவிட்டு யொழியாது அவர்களின் ஆவியைக் குடிக்கும்படி விரைவினில் சத்துராதிகள் தங்களது கையின்கண் தாங்காநின்ற வாளாயுதத்தைப் போலப் பொருந்தும்படி உண்டாகாநிற்கும்,

ஈர மற்றபுன் மனச்சிறி யவர்திரண் டிகலிக்
கோர மாகிய பழியையென் ணுக்கொடுங் கொலையாய்த்
தேரு நல்லறி வாளருக் கிழைத்திடுந் தீங்கு
நீரி டைக்கன னெருப்புகுத் திடுவதொத் திடுமே.

(இ-ள்.) அன்றியும், அன்பில்லாத கீழ்மையான இருதயத்தை யுடைய சிறியவர்கள் ஒன்றுகூடிப் பகைத்து இவ்வுலகத்தின்கண் ணுண்டாகுகின்ற கொடுமையாகிய நிந்தனையையும் மனதினுள்எண் ணுது கொடிய கொலைத்தொழிலாய்த் தேர்ச்சியுறுநின்ற நல்ல அறி வினை யுடையவர்களுக்குச் செய்யுந் தீமையானது, வெப்பத்தையு டைய நெருப்பை ஜலத்தின்கண் சொரிந்திடுவதை நிகராநிற்கும் ()

மக்க மாநகர் முகம்மது தமக்கல மறுவிற்
றக்க பேர்க்கிடர் நினைப்பதுந் தகுவதன் றேயான்
மிக்க வார்த்தையில் விளம்புவ தென்கொனும் வினையாற்
கைக்கு மேற்பலன் பலித்தது காண்டினி ரென்ருன்.

(இ-ள்.) அன்றியும், இந்தத் திருமக்கமா நகரத்தையுடையநபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம வர்களுக்கல்ல. மற்ற குற்ற மற்ற தகுதியை யுடையவர்களுக்குத் தீங்குக ளெண்ணுவதும்தகுவ தல்ல ஆதலால் நான் அவைகளைப்பற்றி அதிகமான வார்த்தைகளி னல் எடுத்துப் பேசுவதில் என்ன பிரயோசனம்? உங்களுடைய செய்கையினுல் உங்களுக்கு இப்போது கையின்மேல் இலாபமானது வாய்த்தது? அதைப் பாருங்களென்று சொன்னுன். (௫௪)

ஆதி தூதுவ ரொருவர்வந் தடைகுவ ரெனவே
வேதவல்லவ ருறுமொழி நமக்குமுன் விரித்தா
ரேத மற்றவ ரவரிவ ரலதுவே றிலையாற்
போதிணைச்சரண் பணிந்திவை புகலுவ மென்ருன்,

(இ-ள்.) அன்றியும், இப்பூமியின்கண் யாவற்றிற்கும் முதன் மையனுன ஜல்ல ஜலாலஹூவத்த ஆலாவின் றசூல் ஒருவர்உதயமாகி வந்து சேர்வரென்று வேதங்களைக் கற்றுத்தேர்ந்த வல்லவர்களான பண்டிதர்கள் நமக்கு முன்னமே பொருந்திய வார்த்தைகளினுல் விவ ரித்துச் சொல்லி யிருக்கிருர்கள், குற்றமற்றவரான அந்நபி இந்த முகம்மதே யல்லாமல் வேறேயொருவரு மில்லாததினுல் நாம் அனே

வர்களும் அவர்களி னிடத்திற்போய் அவர்களின் தாமரைமலர்போன்ற இருபாதங்களையும் வணங்கி இந்தச் சமாசாரங்களெல்லாவற்றையும் சொல்லுவோமென்று சொன்னான். (௫௫)

பொருத்து நன்மொழி யிதுகொலென் றேமிகப் புகழ்ந்து
கருத்த ழிந்தவக் கருத்தினி னன்கெனக் கருதித்
தரித்த பேரனை வருமெழுந் தனரதிற் றரக
னொருத்தன் முன்னெழுந் தணிமுகம் மதினிடத் துற்றான்.

(இ-ள்.) அத்தரகனானவன் அவ்வாறு சொல்ல அந்தச்சூதர்களனைவர்களும் இருதயத்தின்கண் பொருத்தாநிற்கும் நல்லவார்த்தையானது இதுதானென்று சொல்லி அத்தரகனை மிகவாய்த் துதித்துக் கருத்தானது அழியப்பெற்ற அக்கருத்தின்கண் நல்லதென்று நினைத்து அந்த மேன்மாடத்தின்கண் தரித்திருந்த அவர்களெல்லாவரும் தங்களிருந்த இடத்தைவிட்டும் எழும்பினார்கள் அப்போது அவ்விதம் எழும்பியதில் தரகனாகிய அவ்வொருவன் அவர்களுக்கு முன்னரெழும்பி அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இருக்கப்பட்ட இடத்தில்வந்து சேர்ந்தான். (௫௬)

ஏத முற்றவன் மனக்கொடி யவர்களில் விடத்தோர்
பாத கத்தினை விளைத்தனர் பலித்ததங் கவர்பால்
வேத னைப்படர் விள்ளுதற் கரிதுவெள் வேலோ
யீது வந்தவை யெனப்பணிந் துரைத்தவ ணிருந்தான்.

(இ-ள்.) அவ்வாறு வந்து சேர்ந்த அந்தத் தரகனானவன் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்து வெள்ளிய வேலாயுதத்தைத் தாங்கிய கையினையுடைய நபிகள் பெருமானே! குற்றத்தைப் பொருந்திய கொடிய மனத்தையுடைய துஷ்டர்களாகிய இந்தச் சூதர்கள் இவ்வீட்டின்கண் ஒரு துரோகச்செயலைச் செய்தார்கள். அத்துரோகம் அங்கு அவர்களிடத்திலேயே வாய்த்தது அதனால் அவர்களுக்குண்டாயிருக்கும் துன்பத்தையுடையவருத்தமானது வாயினால் எடுத்துச் சொல்லுவதற் கரிதாகும் இதுதான் இங்குவந்து சேர்ந்தவை யென்று அவர்களை வணங்கிச் சொல்லிவிட்டு அவ்விடத்திலிருந்தான். (௫௭)

இருந்த காலையி லனைவரும் வந்தெழி லிலங்கிச்
சொரிந்த மாமுக முகம்மதி னிணையடி தொழுது

புரிந்த தீங்கினல் வந்தவை யனைத்தையும் புகன்ருர்
விரிந்த வாய்புலர்ந் தேங்கிய மனத்தொடு மெலிவார்.

(இ-ள்.) அவ்விதம் அந்தத் தாகனனவன் சொல்லிவிட்டு அங் கிருந்த சமயத்தில், மலர்ச்சியமைந்த தங்களது வாயானது உலர்த லுற்று ஏக்கங்கொண்ட இருதயத்துடன் வாட்டமடைவோர்களா கிய அந்தக்காபிர்களான சூதர்களனைவர்களும் வந்து அழகானது பிரகாசித்துச் சொரியப்பெற்ற பெருமைதங்கிய முகத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் இருபாதங்களை யும் வணங்கித்தாங்கள் செய்தத் தீமையினல் தங்களுக்குவந்து நேர் ந்தவைகளெல்லா வற்றையும் சொன்னர்கள். (௫௮)

வெறுத்த புன்மனக் கொடியம்யாம் விளைத்திடும் வினையைப்
பொறுத்து நல்லரு ளெம்வயின் புரிகெனப் போற்றி
மறுத்து நன்மொழி புகன்றனர் வளருநல் லறத்தை
யறுத்துத் தீவினைப் பயிர்விளைத் திடநினைந் தவரே.

(இ-ள்.) அன்றியும், ஓங்காநிற்கும் நன்மைதங்கிய தருமத்தை அறச்செய்து பாவமாகிய பயிரை விளைத்திடும்படி கருதிய சிந்தை யை யுடையவர்களான அக்காபிர்கள், யாவர்களாலும் மறுக்கப்பட்ட இழ்மையாகிய மனசையுடைய துஷ்டர்களான நாங்கள் செய்திடும் பாதகத்தொழிலைத் தாங்கள் மனஞ்சகித்து எங்கள்பால் நல்லகிருபை யை செய்யுங்களென்றுத் துதித்து நல்வார்த்தை சொன்னர்கள் ()

வருந்தி நன்மொழி தாகனங் குரைத்தது மருவார்
பொருந்தி நின்றவை புகன்றது மனத்தினிற் பொருத்தித்
திருந்து வெண்புகழ் முகம்மது செழுங்கரம் போக்கி
யிருந்த வன்றனைக் கொணர்கென வாய்மலர்ந் திசைத்தார்.

(இ-ள்.) அப்போது திருந்தாநிற்கும் வெள்ளிய கீர்த்தியை யு டைய நமதுநாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர் கள் வருத்தமுற்று நல்லவார்த்தைகளாகத் தாகன்வந்து தங்களிடத் தில் சொல்லிய சமாசாரத்தையும்; சத்துராதிகளாகிய அந்தச் சூதர் களின் கூட்டம் மனமிசைந்து நின்று சொல்லிய சமாசாரத்தையும், இருதயத்தின்கண் பொருந்தும்படி செய்துசெழியகைகளைப்போக்கி இருந்தவனுகிய அந்தச்சூதனை இங்குகொண்டு வாருங்களென்றுத் தங்களது வாயைத் திறந்து சொன்னர்கள் (௬௦)

சொன்ன போதினி லோடினர் சோரிநீர் சொரியத்
தன்னி ருங்கர மிழந்தவன் றனைச்சடு தியினின்
மன்னர் மன்னவர் முன்கொணர்ந் தனர்மணிக் கரத்தைப்
பின்ன மாக்கிய சிலையையுஞ் சிறுமையிற் பெரியோர்.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிய சமயத்தில் அங்குநின்ற சிறுமைத்தொழிலிற்பெரியவர்களான சூதர்கள் ஓடிப்போய் இரத்தநீரானது சிந்தும்படித் தனது பெரிய இருகைகளையும் இகழ்ந்தவனாகிய அந்தச்சூதனையும் அவனதுமணிக்கரங்களைச் சிதைவுபடுத்திய அந்தக்கல்லையும் விரைவில் அரசர்கட்கெல்லாம் அரசரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் முன்னர் கொண்டுவந்தார்கள்.

கல்வி னுட்புதைந் துறைந்திடுங் கரங்களுங் கரம்போ
யல்ல லுற்றிடைந் தழுங்கிடு மவனையு நோக்கிச்
செல்ல லம்பிய கரதல முகம்மது தெளியாப்
புல்லர் வஞ்சக நெஞ்சகந் தெரிதரப் புகல்வார்.

(இ-ள்.) அப்போது மேகங்களானவை அலம்பாநிற்கும் கைத்தலத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கல்லினகம் புதையப்பெற்றுத்த தங்கியிருக்கும்கைகளையும் அக்கைகள் அறுந்துபோய் துன்பத்தையடைந்து வசக்கேடாகி அழுதிடும் அந்தச் சூதனையும் பார்த்துத் தேறுத சிந்தையைக் கொண்ட கீழ்மையையுடையவர்களான அக்குற்றசூதர்களின் கபடமமைந்த நெஞ்சின் அகமானது தெரிந்துகொள்ளும்வண்ணம் சொல்லுவார்கள். (௪௨)

கரிய கல்லினிற் பதிந்திடுங் கரத்தினின் கரத்தைத்
தெரிய வைத்திடென் றுரைதிய மொழியினைத் தேறிச்
சொரித ருங்குரு திகளொடுந் துடிப்பெனுங் கரங்க
ளரிதி னீட்டியே தொட்டிட வொட்டின வன்றே

(இ-ள்) கரும் நிறத்தையுடைய அந்தக் கல்லின்கண் அழுந்திடும் கையில் உனதுகையைத் தெரியும்படி வையென்று கூறியவார்த்தைகளை அந்தச் சூதனனவன் மனசின்கண்தெளிந்து பொழியாநின்ற இருகைகளிலு முள்ள இரத்தங்களுடன் துடிப்பென்று சொல்லாநிற்கும்கைகளை அரிதில்நீட்டித்தொட, அக்கைகள் ஒன்றோடொன்று பொருந்திக்கொண்டது. (௪௩)

உறையுங் கல்லினிற் கரங்களை நெகிழெ்ன வுரைப்பக்
குறைவி லாதுற வாங்கின னீரினிற் குளித்து
மறையு மென்கரம் வாங்கின தெனமறுத் தழும்பு
கறையு மில்லென விலங்கின வவனிரு கரங்கள்.

(இ-ள்.) அவ்விதம் பொருந்தவே நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கல்லின்கண் தங்காநிற்கும் அந்தக்கைகளை நெகிழென்றுசொல்ல, அதைக்கேட்ட அந்தச் சூதனனவன் ஜலத்தின்கண் மூழ்கி அதில் மறையாநிற்கும் மெல்லிய கைகளை இழுத்தாற்போல யாதொரு குறைவுமில்லாது தனதுகைகளைப் பொருந்தும்படி இழுத்தான். அப்போது அவனது இருகைகளும் குற்றத்தையுடைய காயமும் இரத்தமும் இல்லையென்று சொல்லும்வண்ணம் பிரகாசித்தன. (௬௪)

முன்னை நாளிலும் பெலனுறு முழுமலர்க் கரத்தால்
வன்ன மாமலர் முகம்மதி னிணையடி வருடி
யின்ன னீக்கினை யிருகரம் பொருத்தினை யினியென்
றன்னை யாளுதி கடனென வடிக்கடி தாழ்ந்தான்.

(இ-ள்.) அப்போது அந்தச்சூதன் முந்தியநாள்களிலும் அதிகமாய் வலிமைபொருந்தாநிற்கும் முழுமையான தாமரைப் புஷ்பம்போன்ற அந்தக்கைகளினால் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சித்திரிப்பையுடைய பெருமைதங்கிய கமலமர்போலும் இரு பாதங்களையுந் தடவி எனக் குண்டாயிருந்த துன்பங்களை யொழித்தீர்கள். அன்றியும் எனது இரண்டு கைகளையும்பொருந்தும்படி செய்தீர்கள் ஆதலால் இனிமேல் என்னை ஆண்டுகொள்ளுங்கள்? அப்படி ஆண்டுகொள்வது தங்கள்மீது கடனென்று சொல்லி அடிக்கடி வணங்கினன். (௬௫)

கொடிய சூதர்கள் வன்னசு ருனியின் குலத்தோர்
நெடிய கார‌ண மெனமுகம் மதுதமை நெகிழா
தடியி னிற்பணிக் தாசரித் தாசனத் திருத்திக்
கடிதி னும்பொரு ளிவையெனக் கணக்குடன் கொடுத்தார்.

(இ-ள்.) அன்றியும், அங்குசூழ்ந்திருந்த கொடுமையையுடைய சூதர்களும் வன்மைதங்கிய நசுருனிகளின் குலத்தி லுள்ளவர்களும் இஃது நீண்ட காரணமென்று சொல்லி நபிமுகம்மது சல்லல்லாகு

அலைகிவசல்லமவர்களைப்பணிந்து கொண்டாடி ஒருஆசனத்தின்மீது இருக்கும்படிசெய்து இவைகள் உங்களது பொருள்களென்று விரைவில் கணக்கோடும் எடுத்து கொடுத்தார்கள். (௬௬)

கரம்பொருத்துபடலம்.

முற்றிற்று.

ஆ படலம்-௩௬-க்கு-திருவிருத்தம்-௬௬௯

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இ ஃ து

ஊசாவைக்கண்டபடலம்.

கலிநிலைத்துறை.

மிக்க செம்பொனீந் தவர்க்குநன் மொழிபல விளம்பிப்
புக்கி ருந்தவ ருடனெழுந் தகன்றுபொன் றிகழத்
தக்க மாமணிக் கதிர்விடு மருகினிற் சார்ந்தோ
ரக்க சாலையி னிடத்துவந் திருந்தன ரன்றே.

(இ-ள்.) நமது நாயகம் ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிகுந்த செந்நிறத்தையுடைய திரவியங்களை எடுத்துக் கொடுத்த அந்தக் காபிர்களாகிய சூதர்களுக்கு நன்மைபொருந்திய பலவித வார்த்தைகளைச்சொல்லித் தங்களோடு அங்குவந்து புகுந்திருந்த தரகன் முதலிய மற்றவர்களுடன் எழும்பி அவ்விடத்தை விட்டுநீங்கிப் பொன்னனது பிரகாசிக்கும்படித் தகுதியுற்ற பெருமைபொருந்திய இரத்தின வர்க்கங்களினது கிரணங்களைவீசாநிற்கும் மேன்மாடங்களை யுடைய அந்தத் தெருவீதியின்கண் அடைந்தோர்களான அவர்கள் யாவர்களும் ஒரு கொல்லனுலைக் கூடத்தில் வந்து தங்கி இருந்தார்கள். (க)

நெருப்பு குத்திடுங் தெறித்திடுஞ் சுடுஞ்சுடு நெரியி
ரிருப்பிடந்தவிர்த்தெழுமெனத் தபதிய னிசைப்ப
வொருப்ப டத்துனுக் கெனப்புறத் தொதுங்கின ருழையோர்
விருப்பமுற்றிருந் ததிரகு மதுவிளக் கினரால்.

(இ-ள்.) அவ்வித மிருக்கவே அங்குள்ளகொல்லன் அவர்களைப் பார்த்து வழிப்போக்கர்களே! நான்காய்ச்சி யடிக்கும் இந்த இரும்புப்பாளத்திலிருந்து அக்கினிப் பொறிகள் சிதறும். அவை உங்கள் மேலேதெறிக்கும் சுடும்? சுடும்? ஆதலால் நீங்களிருக்கப்பட்ட உங்களது இருப்பிடத்தை விட்டுமொழிந்து எழும்புங்களென்று சொல்ல, அதைக்கேட்ட அவ்விடத்திலிருந்த யாவர்களும் ஒருமனப்படப்பயந்து எழும்பிப் பக்கத்திற்போய் ஒதுங்கினார்கள். அப்போது அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பிரியமுற்று அவனது எதிராக இருந்து அவன்சிந்தையை விளங்கும் வண்ணம் செய்தார்கள். (௨)

தோற்ற நும்மிடத் தலதுவே றிலேச்சுடுங் கனலே
யாற்று மேற்றியா லுமதிடத் தடைகுவ தலது
வேற்றி டம்புகா புக்கினு மெய்யினில் வெதுப்ப
வாற்ற மின்றதற் குறுகுணந் தானுமின் றெனவே.

(இ-ள்.) அவ்வக்கினியின் தோற்றமானது உம்மிடத்தி லிருந்தல்லாமல் வேறே யொருவரிடத்திலிருந்து முண்டாகவில்லை. அன்றியும், நீர் அந்தச்சுடுகிற அக்கினியைச்சகித்துக்கொள்ளும்தன்மையினுல் அது உம்மிடத்தில்வந்து சேருகின்றதன்றிமற்ற இடங்களிற் போய்ச்சேராது ஒருவேளை அப்படிப்போய்ச் சேர்ந்தாலும்அதற்குச் சரீரத்தின்கண் சூட்டைச்செய்ய வலிமையில்லை அங்ஙனம் செய்வது அதற்குப்பொருந்திய குணமுமில்லையென்றுசொன்னார்கள்

மெலிவி லாதசொற் கேட்டலுங் கம்மியன் வெருண்டவ்
வுலேயி னிற்கரும் பொன்புகுத் துமியொடு கரியும்
பொலிய வைத்தெரி மூட்டினன் புகையிருட் படல
மலித ரக்கனல் கொழுந்துவிட் டெழுந்தது வளர்ந்தே.

(இ-ள்.) நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்சொல்லிய வாட்டமற்ற அவ்வார்த்தைகளை அந்தக்கொல்லன் தனது காதுகளினுற்கேள்வியுற்ற மாத்திரத்தில், கோபமாய்அவ்வுலேயின்கண் ஒருஇரும்புப்பாளத்தைப்புகுத்திப் பெருகும்படி உமியுடன் கரிகளை

யும் இட்டு நெருப்பை மூட்டினன். அவ்விதம் மூட்டவே தூமத்தினது அந்தகாரப் படலம் அதிகரிக்கும் வண்ணம் நெருப்பானது ஓங்கிக் கொழுந்து விட்டெழும்பினது. (௪)

உருகி வெந்தவல் லிரும்பினை யுலைமுகத் தெடுத்துக்
கருகு மேனியன் கட்கடைக் கனற்பொறி கதுவ
வருகி ருந்தெழுந் தங்கைகள் செவப்புற வடித்தான்
பெருகு மக்கினிக் கொழுந்துக டெறித்தன பிதிர்ந்தே.

(இ-ள்.) அவ்வாறு கொழுந்து விட்டெழுந்து உருகி வெந்த வலிய அந்த இரும்புப் பாளத்தைக் கருகாநிற்கும் மேனியையுடைய அந்த கொல்லன் உலைப்புறத்தில் நின்றுமெடுத்துத் தனது இருகடைக்கண்களிலும் அக்கினியின் கங்கானது அதிகமாய்ப் பற்றும்படிப் பக்கத்திலிருந்தெழும்பி உள்ளங்கைகள் செந்நிறத்தைப்பொருந்தும் வண்ணம் சம்மட்டிகொண்டு அடித்தான். அங்ஙனம் அடிக்கவே பெருகாநின்ற நெருப்பின் கொழுந்துகளானவை சிதறி நாலுபக்கங்களிலும் தெறித்தன. (௫)

சரிந்து வீழ்ந்திடச் சிதறிய செந்திர்த் தழல்கள்
விரிந்த நன்கதிர் குலவிய முகம்மது மெய்யி
னெரிந்த சந்தனச் சேறுபன் னீரொடுங் குழைத்துச்
சொரிந்த தாமெனக் குளிர்ந்தது சோர்வற வன்றே.

(இ-ள்.) அவ்விதம் அக்கொல்லனால் அடிக்கப்பட்டு நாலுபக்கங்களிலும் சாய்ந்து விழும்படி சிதறுதலுற்ற செவந்த பிரகாசத்தையுடைய அந்நெருப்புப் பொறிகள் பரப்பாகிய நல்ல கிரணங்கள் ஒளிரப்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திருமேனியின்கண் பனிநீருடன் நசிதலடைந்த சந்தனக் குழம்பையும் ஒன்றாய்க் கலந்து பொழிந்ததைப் போலத் தளர்ச்சியான தற்றுப்போகும் வண்ணம் குளிர்ச்சியுற்றது. (௬)

இத்தி றத்தெழில் கண்டுகம் மியனெதிர் நோக்கி
யுத்த மக்குலப் பெயர்தலை முறைப்பெய ரூர்ப்பேர்
பத்தி யின்னுமக் கிடுபெய ரிவைபடிப் படியாய்
வித்த காதெரி தரவுரை யெனவிளம் பினனே.

(இ-ள்.) அப்போது அந்தக் கொல்லனானவன் இந்தத் தன்மையையுடைய அழகிய காரணத்தைத் தனது இருகண்களினாலும்

பார்த்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை எதிரா்க் நோக்கி அறிஞரானவர்களே! மேன்மையையுடைய தங்களது குடும்பத்தின்பெயர் தங்கள் தலைமுறையின் பெயர் ஊரினது பெயர் வரிசையாகத் தங்களுக்கிட்ட பெயராகிய இவைகளைத் தரந்தரமாக எனக்குத் தெரியும் வண்ணஞ் சொல்லுங்களென்று கேட்டான். ()

மக்க மூர்கிலா பருள்குசை யப்துல்முனுபுக்
கக்க மானஹா ஷீமுத லப்துல்முத்தலிபு
தக்க மன்னவர் மைந்தரி லப்துல்லா தவத்தான்
மிக்க னென்பெயர் முக்ம்மது வெனவிளம் பினரே.

(இ-ள்.) அக்கொல்லனானவன் அவ்வாறு கேட்க, அதைக் கேட்ட நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் எனதுவூர் திருமக்கமாநகரம் கிலாபென்பவ ரருளிய குசையுடைய மகன் அப்துல் முனாபுக்குக் கண்மணியான ஹாஷிமின்முதன்மையான அப்துல்முத்தலிபாகிய தகுதியுற்ற அரசரவர்களின் மக்களில் அப்துல்லா வென்பவருடைய தவத்தினால் பெருமையிற் சிறந்தவனான என்பெயர் முகம்மதென்று சொன்னார்கள். (அ)

அறபின் மக்கமா நகரினின் முகம்மதென் றணித்தா
யுறவு தித்துநஞ் சமயங்க ளுலைப்பனென் றுரவோர்
மறையி லோதிய வரன்முறைப் படியஃ துணர்கிற்
குறைவி லாதவ னிவனெனக் குறித்துளங் கொதித்தான்.

(இ-ள்.) நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்விதம் சொல்லிய வார்த்தைகளை அந்தக் கொல்லனானவன் கேள்வியுற்று அறபுதேசத்திலுள்ள பெருமை பொருந்திய மக்கமாநகரத்தில் சமீபமாக முகம்மதென்னு மொருவன் பொருந்தும்படி பிரசன்னமாகி வந்து நமது மார்க்க முதலிய வற்றை இல்லாமற் செய்வானென்று அறிஞர்கள் வேதங்களினால் தெளிந்து சொல்லிய வரலாற்றின்படி அஃதைநாம் உணர்ந்து பார்த்தால் அந்தக் குற்றமற்ற முகம்மதென்பவன் இவன் தானென்று மதித்து மனக்கொதிப்படைந்தான். (௯)

வருந்தி லாமறை யவர்களே ஷாமின்மன் னவரே
திருந்து நல்லறி வாளரே தேவத மனைத்தும்
பொருந்து ருதற வழித்திட நகரிடை புகுந்திங்
கிருந்த வனனிவன் கானெனக் கூக்குர லிட்டான்.

(இ-ள்.) அன்றியும். வருத்தமில்லாதவேதங்களைக்கற்றுத்தெளிந்த பண்டிதர்களே! இந்தஷாமிராஜியத்தினது அரசர்களே! திருந்தாநிற்கும் நன்மைபொருந்திய அறிவினையுடைவவர்களே! நமதுதேவதங்களெல்லாம் பொருந்தாது முழுவதையும் அழித்திடும்படி இவ்வூரின் கண் நுழைந்து இங்கு தங்கியிருந்தவன் இவன்தான் பாருங்களென்று சொல்லிக் கூச்சல் போட்டான் (௧0)

தாழிசை.

கனைவாருதி நிகர்ஷாமுறை கதிர்மாமுடி வீரர்
தனுவாளயி லெறிவேல்கணை தண்டம்பல வேந்தி
முனையாரெவ ரெதிர்வார்முறை யிடுவாரெவ ரென்றே
சினமாயெழு புலிபோல்பவர் சிலர்வந்துவ ளைந்தார்.

(இ-ள்.) அக்கூச்சல் சத்தத்தைக் கேட்ட அந்தஷாம்நகரத்தில் தங்கிய ஒலிக்குகின்றசமுத்திரத்தைப்போன்றபிரகாசத்தையுடைய பெருமையுற்ற கிரீடங்களைத் தரித்திருக்கும் யுத்தவீரர்களில் கோபமாய் எழாநின்ற வேங்கை போல்பவராகிய சிலபேர்கள் வில்-வாள் எறியாநிற்கும் வேல்-அம்பு-தண்ட முதலிய பல ஆயுதங்களைத் தாங்கிப் பகைஞர் யாவர்? நம்மை எதிர்ப்பவர்யாவர்? முறையிடுகிறவர் யாவர்? என்று சொல்லிக்கொண்டு அங்குவந்து சூழ்ந்தார்கள் (௧௧)

கருதார்வரு திறலாவிடு கலகந்தர மன்றென்
றிரைவாகிய சினத்தானய குணத்தாற்றிர ளினத்தாற்
பொருவோமெனு மனத்தாலதி புகழார்முகம் மதுவை
மருவார்மன மலையக்கொடு மதிளின்புறம் வந்தார்.

(இ-ள்.) அப்போது திருமக்கமாநகரத்தை யுடையவர்களான வியாபாரிகள் சத்துராதிகள் வராநின்ற வலிமையினாலே நாமிடுகிற சண்டையானது முறைமையில்லையென்று சொல்லிச் சிறுதலாகிய கோபத்தினாலும் நயப்பையுடைய குணத்தினாலும் திரட்சியுற்றகூட்டத்தினாலும் நாம் அவர்களுக்கு ஒப்பாக மாட்டோமென்னும்மனத்தினல் மிகுத்த கீர்த்தியையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அந்தச் சத்துராதிகள் தங்களது இருதயமானது மலையும் வண்ணம் கூட்டிக்கொண்டு அந்த ஷாம்நகரத்தின் கோட்டை மதிலினது பக்கத்தில் வந்தார்கள். (௧௨)

நறைதுன்றிய சுதைவெண்கதி ரெயிலின்புற நண்ணி
யுறையும்விடு தியில்வந்தன ரொனிமாமுகம் மதுவுந்
துறையின்றொழில் வகையுந்தொகை நிதியும்முறைமுறையாய்
நிறைகின்றன குறையின்றென நெறியேகிட நினைவார்

(இ-ள்.) அவ்விதம்வந்த அவர்க ளியாவர்களும் வாசனையானது நெருங்கப்பெற்ற வெண்ணிறத்தைக் கொண்ட சுண்ணச் சாந்தினை யுடைய பிரகாசமமைந்த அந்தக் கோட்டைமதிலின் பக்கத்தை நெருங்கி அவரவர்கள் தங்கியிருக்கும் விடுதியின்கண் போய்ச் சேர்ந்தார்கள் அப்போது பெருமை பொருந்திய ஒளிவையுடைய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் துறையினையுடைய நமது வியாபாரத் தொழிலின் முறைமையும் தொகையாகிய பொருளும் வரிசைவரிசையாய் அதிகரிக்கின்றன யாதொரு குறையு மில்லை யென்றுசொல்லித் தங்களின் ஊரினது பாதையை நாடிப்போகும்படி மனசின்கண் எண்ணினர்கள். (கஙு)

எருதொட்டக மடல்வெம்பரி யிருபக்கறு நிறைய
மரவத்தொடை புயமுங்கிட வருமக்கிக டாமுந்
தருமத்துரை நபினொரொடு சதுரான்மைச ருவும்
புரிசைப்புற நகர்விட்டணி பொழில்புக்குந டந்தார்.

(இ-ள்.) அவ்வாறு எண்ணிய புண்ணிய வதிகாரியாகிய நபினா் கபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுடன் கதீஜாநாயக மவர்களா லனுப்பப்பட்ட மைசறு வென்பவனும் குங்குமப் புஷ்பத்தினலாகிய மலர்மாலையானது இரண்டு தோள்களும் முங்கும்படி வராநிற்கும் மக்கமா நகரத்தை யுடையவர்களான வியாபாரிகளும் வலிமையைக்கொண்ட இடபங்களும் ஒட்டகங்களும் வெவ்வியகுதிரைகளும் தங்களைச்சூழ்ந்து இருமருங்கிலும் சொலியும் வண்ணம் அந்தக்கோட்டை மதிலினது பக்கத்திலிருக்கும் நகரங்களைத் தாண்டி அழகிய சோலையின்கண் புகுந்து நடந்தார்கள். (கசு)

குருகார்கழ னிகள்வாவிகள் குளிர்சோலைகடந்து
யிருகாதமு மொருகாதமு மெழிலாகநடந்து
கருமாமுகி னிழலுவிய ஹபிபாமுகம மதுவும்
வருபாதையி னடுவேயொரு வளமாமனை கண்டார்.

(இ-ள்.) அவ்விதம் நடந்த பெருமைதங்கிய கரியமேகங்களின் நிழலானது பரவிய ஹபீபாகிய நபிமுகமது சல்லல்லாகு அலைகிவ சல்ல மவர்களும் மற்ற வியாபாரிகளும் அன்னப்பட்சிகள் மிகுத்த வயல்களையும் குளங்களையும் குளிர்ச்சியுற்ற சோலைகளையும்தாண்டி அழகாய் மூன்றுகாதவழி தூரம் நடந்துவருகின்ற வழியின்கண் ஒப்பற்ற செல்வத்தையுடைய ஒரு பெரிய மாளிகையைக் கண்டார்கள். (௧௫)

கனமாமதி யுடையோனெதிர் கழிகாலமு ணர்ந்தோன்
மனமூடுறை யறிவான்முகம் மதுவார்வழி யறிவோன்
குனிவார்சிலை நசுறுனிகள் குருவாகிய வூசா
வெனுமாமறை முதியோனுறை யெழின்மாமனை யேகார்.

(இ-ள்.) அவ்விதம் கண்ட அவர்களியாவர்களும் பெருமை பொருந்திய மிகுத்த அறிவை யுடையவனும், வருங்காலம் நிகழ்காலம் இறந்த காலமென்னும் முக்காலங்களையு மறிந்தவனும்; மனத்தின் கண்ணே தங்கிய புத்தியினால் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வருகின்ற நேர்மையான பாதையை யுணரக்கூடியவனும், வளைவைக்கொண்ட வில்லைத்தாங்கிய நசாறுக்களின் குருவுமாகிய ஊசாவென்று சொல்லும் அபிதானத்தையுடைய மகத்தாகிய வேதபண்டிதனை அம்முதியவன் தங்காநிற்கும் அழகியபெரிய அந்தமாளிகையின் பக்கத்தில் போனார்கள். (௧௬)

மேகக்குடை நிழலுங்கதிர் விரிவாகிய மெய்யும்
பாகத்திடை கமழும்பரி மளமும்மதி முகமு
நாகத்தொடு தனிபேசிய நயினார்முகம் மதுவென்
றாகத்திடை கண்டானவ னடைந்தானரு கிருந்தான்.

(இ-ள்.) அப்போது அந்த ஊசாவென்னு முதியவன் மேகக்குடையினது நிழலையும் பிரகாசம் விரியப்பெற்ற திருமேனியையும் பக்கத்தின்கண் பரிமளியாநிற்கும் கஸ்தூரி வாசனையையும் சந்திரனைப் போன்ற முகத்தையும் பார்த்து இவர்கள் சர்ப்பத்தினுடன் ஒப்பறப்பேசிய நயினாரான நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தாமென்று மனசினிடத்தில் நினைத்து அங்கு போய்ச்சேர்ந்து அவர்களின் அருகிலுட்கார்ந் திருந்தான். (௧௭)

இருந்தான் முகம்மதுதன்கதி ரெழின்மாமுக நோக்கித்
திருந்தாட லரியேதரு செழுமாமழை முகிலே
பெருந்தாரணி தனினும்பதி குலம்பேரவை யனைத்தும்
வருந்தாதுரை யீரென்றனன் மறையோதிய மதியோன்.

(இ-ள்.) அவ்வித மிருந்தவனாகிய வேதங்களைக் கற்றுத்தெளிந்த அறிவினையுடைய ஊசாவென்னும் அம்முதியவன் நபிகள்பிரான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் குளிர்ந்த பிரகாசத்தையுடைய அழகிய பெருமைபொருந்திய முகத்தைப் பார்த்துச் சத்துராதிகளென்னும் யானைகட்கு வலிமைதங்கிய ஆண்சிங்கமானவர்களே! செழுமையுற்ற பெரியமழையைப் பொழியாநிற்கும் மேகமானவர்களே! மாட்சிமையையுடைய இப்பூமியின்கண் தங்களது ஊர் குலம் பெயராகிய அவைகளெல்லாவற்றையுமென்னோடு துன்பமுறாது சொல்லுங்களென்று கேட்டான். (கஅ)

அதுனன்கிளை ஹாஷிம்குல மமரும்பதி மக்கம்
பிதிராநிலை யபித்தாலிபு பின்னோரபு துல்லா
சுதனாமுகம் மதுநானெனச் சொன்னார்மறை வல்லோ
னிதமாகிய நபியாமென விசைந்தான்மன மகிழ்ந்தான்.

(இ-ள்.) அவ்விதம் அந்த ஊசாவென்னும் பண்டிதன் கேட்கவே; நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவனைப் பார்த்து எனதுகிளையாகிறது அதுனன்கிளை குலம் ஹாஷிம்குலம் நாங்கள் தங்கியிருக்கும் ஊர் திருமக்கமாநகரம் எனக்குப்பிதிராகிய நிலைமையினையுடைய அபீத்தாலி பென்பவரின் தம்பி அப்துல்லாவின் புதல்வனான நான் முகம்மது என்று சொன்னார்கள். அதைக் கேட்ட வேதவல்லவனான அவ்வூசா இவர்கள் நன்மையுடைய நபியாகுமென்று சொல்லி மனம் பொருந்தி மகிழ்ச்சி யடைந்தான். ()

வடிவாரிடை யகலாதுறை மைசறுதனை நோக்கிக்
கொடியார்கழ லடலோய்நுமர் குலமேதென நவிலக்
கடுவாராவிழி கொடியாரிடை கதிஜாவெனு மயிலா
ரடியாரினி லெளியேன்மிக வுரியேனென வறைந்தான்.

(இ-ள்.) அவ்வாறு மகிழ்ச்சியடைந்த அவ்வூசாவென்னும் பண்டிதன் அழகுபொருந்திய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பக்கத்தில் நீங்காது தங்கியிராநின்றமைசறுவென்பவனைப்

ார்த்துத் துஷ்டர்களாகிய பகைவர்களை யுதையாநிற்கும் வலிமைத ங்கிய பாதங்களை யுடையவரே! உம்முடைய குலம் யாதென்று கேட்க, நான் விடத்தைப்போலும் கூர்மைதங்கியகண்களையும் கொடியைப்போலும் பொருந்திய இடையினையுமுடைய கதீஜாவென் னும் மயில்போன்ற சாயலை யுடையவர்களின் அடிமையர்களில் எளியவனும் அவர்களுக்கு மிகவும் சொந்தமானவனு மென்று சொன்னன். (௨0)

மடமாமயில் கதிஜாவென வளர்கோதையை யுதவு
மடலாரரி குவைலிதென மறிவோன்மறை மொழியைக்
கடவாதநன் மதியோனுயர் கனபேரரு ளானென்
னுடலாருயி ரெனவேமுத லுறவானவ னென்றான்.

(இ-ள்.) மைசறுவென்பவன் அவ்வாறு பெருமைபொருந்திய இளம்பருவத்தைக் கொண்ட மயில்போலும் சாயலையுடைய கதீஜா வென்று சொல்லியமாத்திரத்தில், அவ்வூசாவென்னும் பண்டிதன் ஓங்காநிற்கும் புஷ்பமாலையணிந்த கூந்தலையுடைய அந்தக்கதீஜாவை இவ் வுலகத்தின்கண் தந்த பகைவர்களென்னும் யானைகளுக்குச் சிங்கமாகிய குவைலிதென்னும் அபிதானத்தைப்பெற்ற அறிவினையுடையவன். வேதவாசகத்தை விட்டும் மீறாத நல்லபுத்தியை யுடையவன் மேலாகிய மிகுத்த பெரிய கிருபையையுடையவன். எனது சரீரத்தின்கண் பொருந்திய ஜீவனைப்போல எனக்கு ஆதிகாலத்திலே சினேகமானவனென்று சொன்னான். (௨௧)

முன்னாளுற வெனவோதிய முதியோன்முக நோக்கி
யென்னாருயி ரனையீரும திடுபேர்சொலு மெனவே
மன்னாகிய மைசறுசொல மறையோனும மகிழ்ந்தே
யொன்னாரரி யேயென்பெய ரூசாவென வுரைத்தான்.

(இ-ள்.) அவ்வாறு ஆதிகாலத்திலேயே சினேகமென்று சொல்லிய முதியவனான அவ்வூசாவென்பவனின் முகத்தை எவற்றுமொழி லிலரசனான மைசறுவென்பவன் பார்த்து எனது சரீரத்தின்கண் பொருந்தாநிற்கும் ஆவியை நிகர்த்தவரே! உமக்கு இட்டபெயர் யாது? அதை என்னோடு சொல்லுமென்றுகேட்க; மறையோனாகிய அவ்வூசாவென்பவனும் மனமகிழ்ச்சியடைந்து சத்துராதிகளாகிய யானைகளுக்குச் சிங்கமானவரே! எனதுபெயர் ஊசாவென்று சொன்னன், (௨௨

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உரையினி லுறவு குவைலிதென் றூசா
வுரைத்தவை யுளத்தினிற் குறித்துக்
கரைவழிந் தொழுகு மகிழ்ச்சியாய் மைசறு
கருங்குழற் செவ்விதழ்க் கனிவாய்த்
திருமொழி யுரைத்த திவளெனக் கருதிச்
செவ்வியோன் முகமதை நோக்கிப்
புரையற வுமக்குச் சொல்வதொன் றுளது
கேண்மினென் றன்பொடு புகல்வான்.

(இ-ள்) அப்போது மைசறுவென்பவன்வார்த்தைகளினால் என க்கு குவைலிதென்பவன் சிநேகமென்று சொல்லிய சமாசாரங்க ளனைத்தையும் மனசின்கண் மதிப்பிட்டுக் கரைகளில் வழிந்து ஒழு காநிற்கும் களிப்பினைக் கொண்டு கரிய கூந்தலையும் சிவந்த அதரங்க ளையும் கொவ்வைக்கனிபோன்ற வாயினையுடைய கதீஜா நாயகமவர் கள் தங்களது தெய்வீகமுற்ற வார்த்தைகளாகச் சொன்னது இவ்வூ சாதானென்று எண்ணி அழகையுடையவனான அந்த வூசா வென்ப வனின் முகமாகிய தாமரைமலரைப்பார்த்துக் குற்றமற உமக்குச் சொல்லவேண்டிய சமாசார மொன்றுள்ளது. அதை உமது காதுகளி னால் கேளுமென்று அன்புடன் சொல்வான். (உ௯)

குறைஷியங் குலத்துக் கொருமணி யெனவுங்
குவைலிதுக் கிருவிழி யெனவு
மறைதிரைக் கடலி லமுதெனப் பிறந்த
வரிவையர்க் கனியெனுங் கதீஜா
நிறைமதி மடியிற் றவழவுந் துகிலிற்
பொதியவு நெறிபடுங் கனவி
னுறைபடும் பொருளை யுணர்கெனச் சலாமு
மோதின ருமக்கென வுரைத்தான்.

(இ-ள்.) அழகிய குறைஷிக்குலத்திற்கு ஒப்பற்ற இரத்தினத் தைப்போலவும், குவைலி தென்பவருக்கு இருகண்களைப்போலவும், ஒலியாநிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் ணுண்டான அமுதத்தை நிகர்த்து இவ்வுலகத்தில் தோற்றமாகிய பெண்களுக்கு நுதலிகனியைப் போலவுமாகிய கதீஜாநாயகமவர்கள் நித்திரையில்

பூரணச் சந்திரனனது ஆகாயத்திலிருந்து மிறங்கித் தங்களின் மடியின்மேலிருந்துத் தவழவும், அதைத் தங்களின் வஸ்திரத்தினற் பொதியவுமான செவ்வையை யுடைய ஒரு சொப்பனத்தில் தங்கா நின்ற பொருளை என்னை யுங்களிடத்தில் கேட்டறிவாயாக வென்று சொல்லிஉங்களுக்கு சலாமுஞ் சொன்னர்களென்று சொன்னன் ()

அம்புய வதனன் குவைலிது வருந்து
　மருந்தவந் திரண்டொரு வடிவாய்க்
கொம்பென வொசிந்த நுண்ணிடைக் கதீஜா
　குறித்திடுங் கனவினைத் தேர்ந்து
கம்பிதஞ் செய்து கருத்தினுண் மகிழ்ந்து
　காரணப் புதுமைக ளனைத்து
மிம்பரின் விளங்க மைசரு மகிழ
　வினிதுற வெடுத்திசைத் திடுவான்,

(இ-ள்.) அதைக்கேட்ட அவ்வூசாவென்னும் பண்டிதன் தாமரை மலர்போலு முகத்தை யுடையவனை குவைலி தென்பவன்வருந்திச் செய்யாநிற்கும் அரிய தவமானது திரட்சியுற்ற ஒப்பற்ற சொரூபமாய்ப் பூங்கொம்பு போலும் துவளாநின்ற நுண்ணிய இடையினையுடைய கதீஜா நாயகமவர்கள் தங்களது மனசின்கண் மதித்திடும் சொப்பனத்தை உள்ளத்தில் தெளிந்துச் சிரக்கம்பிதஞ்செய்து சிந்தையில் மகிழ்ச்சிகொண்டு இவ்வுலகத்தி னிடத்தில் காரணத்தை யுடைய அற்புதங்களெல்லாம் விளங்கும்படி யாகவும் மைசருவென்பவன் மனமகிழ்ச்சி யடையும்படி யாகவும் இனியையுறும் வண்ணம் எடுத்துச் சொல்லுவான். (உரு)

அகிலமுந் திசையுஞ் சுவனமும் விளங்க
　லணிதிகழ் மக்கமா நகரின்
முகம்மதென் றுதித்துத் தீன்பயி ரேற்றி
　மறைவழி தவறிடா நடத்திப்
பகாரு நபியாய் வேதமு முடைத்தாய்
　வருவரொன் றறிவுளோர் பகர்ந்த
நிகரருங் குரிசி லிவரலா லிந்த
　நீணிலத் தினிலிலை யெனவும்

(இ-ள்.) பூலோகமும் சுவர்க்கலோகமும் அங்குள்ள எண்டிசைகளும் விளங்கும்படி அழகானது பிரகாசியாநிற்கும் திருமக்கமா நகரத்தில் முகம்மதென் றொருவர் பிரசன்னமாகி இவ்வுலகின்கண் தீனுல்லிஸ்லாமென்னும் ஓர் மார்க்கப்பயிரை யேற்றி யாவர்களையும் வேத ஒழுங்குதவறாது நடத்திச் சொல்லுதற்கரிய நபியாயும் புறுக்கானுல் அலீமென்னும் வேதத்திற்குச்சொந்தமாயும் வருவாரென்று முன்னுள்ள புத்திசாலிகள் சொல்லிய ஒப்பில்லாத பெருமையிற் சிறந்தவர் இந்தநீட்சியுற்ற பூமியினிடத்தில் இதோ இருக்கிற முகம்மதே யல்லாமல் வேறேயொருவரு மில்லரென்றும் (உசு)

கலைநிறை மதியாய் மடிமிசை யிருப்பக்
கனவுகண் டகமகிழ் கதிஜா
நிலைமிசை யிவர்க்கே மனைவியா யிருந்தி
னீணிலம் புரப்பது தவறில்
குலமிகப் பெருகுஞ் செல்வமும் வளருங்
குறைவிலாப் பதவியும் பேறு
மலகிலா தடைந்த தென்னவு முரைத்தே
னெனவரி வையர்க்குரை யென்றான்.

(இ-ள்.) சோடசகலைகளும் நிறையப்பெற்ற பூரணச் சந்திரனாய் மடியின் மேலிருந்து தவழும்படி சொர்ப்பனங் கண்டு மனமகிழ்ச்சியடைந்த அக்கதிஜா நாயகமவர்கள் இப்பூமியின்மீது இந்தமுகம்மதென்பவருக்கே மனையாளாக இருந்து இந்தநீண்டநிலத்தைக் காப்பதுதப்பாது. அன்றியும், அந்தக் கதிஜா அவர்களின் குலமும் மிகவாய்ப் பெருகும். சம்பத்தும் அதிகரிக்கும் அவர்கள்பால்குறைவற்ற மோட்ச பதவியும் பேறும் கணக்கில்லாது வந்துசேர்ந்த தென்றும் நான் சொன்னே னென்று அந்தக்கதிஜா நாயக மவர்களுக்குச்சொல்லென்று சொன்னான் (உஎ)

மறைதெரி யறிவ னுரைத்தசொற் கேட்டு
மைசறு மனமிக மகிழ்ந்து
நிறைபதி தனைவிட் டிற்றைநாள் வரைக்கு
நிகழ்ந்தகா ரணமுள வனைத்துங்
குறைவிலா தெழுதி முத்திரை பொருத்திக்
குறித்தவ ரிடத்தினிற் கொடுத்துக்
கறையிலா மதிய மெனுமயில் கதிஜா
காத்தினி லளித்திடு மென்றான்.

(இ-ள்.) வேதங்களைக் கற்றுணர்ந்த அறிவினையுடைய அவ்வூசாவென்னும் பண்டிதன் அவ்வாறு சொல்லிய வார்த்தைகளை மைசருவென்பவன் தனது காதுகளினாற் கேள்வியுற்று மிகவும் மனமகிழ்ச்சியடைந்துப் பல செல்வங்களினாலும் பூரணப்பட்ட தங்களது நகரமாகிய மக்காப்பதியை விட்டுவந்த நாள்முதல் ஊசாவைக்கண்ட நாள்வரைக்கும் இடையில் நடைபெற்ற காரணத்தையுடைய எல்லா அதிசயங்களையும் யாதொருகுறைவுமில்லாது எழுதிமடித்து அதன்மேல் முத்திரையும் பொருந்தும்படி செய்து தனது மனதில் மதிப்பிட்ட ஒருவரிடத்தில் கொடுத்துக் குற்றமற்ற சந்திரனென்னும்மயில்போன்ற சாயலையுடைய கதீஜாநாயகமவர்களின் கைகளிற் கொண்டு போய்க் கொடுத்திடுமென்று சொல்லி அனுப்பிவைத்தான்.

விண்ணபத் திரத்தை மக்கமா நகரில்
விளங்கிழைக் கனுப்பிய பின்னர்
பண்ணினிற் சிறந்த மறைமுறை தேர்ந்த
பண்டிதன் பதமலர் போற்றி
வண்ணவார் தடக்கை முகம்மதைப் புகழ்ந்து
வாகனங் கொணர்ந்தனன் மைசரு
வெண்ணிறந் தனைய மக்கிக ளெவரு
மெழுந்தனர் குரிசிலு மெழுந்தார்.

(இ-ள்.) மைசருவென்பவன் அவ்வாறு அந்த விண்ணப்பபத்திரத்தைத் திருமக்கமா நகரத்தில் பிரகாசியாநிற்கும் ஆபரணங்களையுடை கதீஜாநாயகமவர்களுக்கு அனுப்பின பின்னர், இசைகளினாற் சிறப்புத்தங்கிய வேதஒழுங்குகளைக் கற்றுதெளிந்த பண்டிதனாகிய அவ்வூசாவென்னும்முதியவனின் பாததாமரைகளைத்துதித்து அழகிய நீட்சி பொருந்திய பெரிய கையினையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் போற்றி அவர்கள்ஏறிச்செல்லும் ஒட்டகத்தினை அங்கு கொண்டுவந்தான். அப்போது கணக்கில்லாத கூட்டமாகிய மக்கமாநகரத்தை யுடையவர்களான வியாபாரிளெல்லாவரு மெழும்பினர்கள் அதோடு குரிசிலாகிய நபிகள் பெருமானவர்களு மெழும்பினர்கள்.

பாதையிற் புகுத மூதறி வுணர்ந்த
பண்டித னெனவரு மூசா
தீதற வெழுந்து முகம்மதின் வனசச்
செம்மல ரடியிணை பணிந்து

கோதறப் பழுத்த செழுங்கனி கொடுத்துக்
கொண்டலங் கவிகையை நோக்கி
மாதவர் தமையு மடிக்கடி போற்றி
மகிழ்ந்துதன் மனைவயிற் சார்ந்தான்.

(இ-ள்) அவ்விதம் அவர்களியாவர்களு மெழும்பிப் பாதையின்கண் போய்ச்சேர, முதுமையான அறிவுகளெல்லா வற்றையுங்கற்றுத்தெளிந்த பண்டிதனென்று வராநிற்கும் அவ்வூசாவென்பவன் குற்றமில்லாதெழும்பி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சிவந்த தாமரைமலர்போலும் இருபாதங்களிலும் வணங்கிச் சக்கையறப் பழுத்த செழியகனி வர்க்கங்களைக் கொண்டுவந்துகொடுத்து அவர்களுக்கு ஆகாயத்தின்கண் இடாநிற்கும் அழகிய மேகக்குடையைத் தனது இருகண்களினாலும் பார்த்து மகாதவத்தையுடையவர்களான அங்கபிகள் பெருமானவர்களை அடிக்கடி வாழ்த்தி மனமகிழ்ச்சிகொண்டு தனது வீட்டினிடத்தில் போய்ச்சேர்ந்தான்.

ஊசாவைக்கண்டபடலம்

முற்றிற்று.

ஆ படலம்-௨௰-க்கு-திருவிருத்தம்-௬௬௬.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இ ஃ து.

கதீஜா கனவுகண்டபடலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முகைமுறுக கவிழ்ந்து முருகுகொப் பளிக்கு
முளரியு முழுமணி நீல
நகைவிரித் தனைய குவளையுந் துகிரி
னறுமலர் விரிந்தென விரிந்து

திகழ்தருஞ் சேதாம் பலுங்குடி யிருந்து
திருவளர் வாவியின் வாளை
யுகடொறும் வெருவி யொதுங்கிய சிறைப்புள்
ளொலித்திடு மிடங்களுங் கடந்தார்.

(இ-ள்.) செய்யிதுல் ஹறமைன் ஷபீஹுல்முதுனபீன் நபிமுகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் மற்றும் வியாபாரிகளான மக்கமாநகரத்தை யுடையவர்களும் அந்த வூசாவென்னும் பண்டிதன் தங்கியிருக்கும் எல்லையைவிட்டுங்கடந்து மலரரும்புகள் தங்களிதழ்களின் முறுக்கைவிட்டு மகிழப்பெற்றுத் தேனைக் கக்காநிற்கும் தாமரைகளும் முழுமையாகிய நீலவிரத்தினமானது தனது பிரகாசத்தை நானுபக்கங்களிலும் பரவச்செய்ததைப் போன்ற நீலோற்பலங்களும் பவளக்கொடிகளின் நறியமலர் விரியப்பெற்றதைப்போலும் விரிந்து எவ்விடங்களிலும் ஒளிராநிற்கும் செவ்விய ஆம்பல்களும்மாருது குடியாக இருந்து அழகோங்கப்பெற்ற தடாகங்களிலுள்ள வாளைமீன்கள் அத்தடாகத்தைவிட்டும் குதிக்குந்தோறும் அச்சமுற்று ஒதுங்கிய சிறகினையுடைய பட்சிசாலங்கள் ஒலிக்குகின்ற இடங்களையுந் தாண்டினார்கள். (௧)

புனன்முகி லசனி யதிர்தொறுங் கிடந்து
புடைத்துவால் விசைத்தரி யேறு
சினமுடன் சிலம்பப் புகர்முகச் சிறுகட்
சிந்துரம் பிடியொடு மிரிந்து
நனைமல ருதறுங் காவகத் தொதுங்கு
நனிதிரள் குயிலென மயில்க
ளினமணிச் சிறைவிட் டருநடம் புரியு
மிருவரை யிடங்களுங் கடந்தார்.

(இ-ள்.) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுதலிய மற்றும் வியாபாரிகள் நீரைக்கொண்ட மேகங்களி னிடியானது இடிக்குந்தோறும் ஆண்சிங்கங்கள் நமதுசத்துராதிகள் சத்திக்கிறார்களென்றெண்ணிப் பூமியின்மீது படுத்து வாலைத் தரையிலடித்து வேகமுற்று கோபத்துடன் குமுறவும், அதைக்கேட்ட புள்ளிகள் படர்ந்த முகத்தின்கண் சிறிய கண்களையுடைய யானைகள் தங்களது பிடியானைகளோடும் ஓடித் தேனையுடைய புஷ்பங்களைச் சிதற

41

அசையாநிற்கும் சோலையினக மொதுங்குகின்ற மிகுத்த கூட்டங்களை மயில்கள் மேகங்களென்று நினைத்துத் தங்களது கூட்டமாகிய அழகிய சிறகுகளைவிட்டு அரிய நாட்டியமாடும் பெரிய மலைகளையுடைய இடங்களையுந் தாண்டினார்கள். (௨)

படுகொலைப் பார்வை காருடற் கழற்காற்
  பறிதலைப் பங்கிவேட் டுவர்தங்
கொடுமரங் குனித்துத் தூணியுந் தாங்கிக்
  கொழுஞ்சரம் வலக்காந் தூண்டிப்
புடைபுடை பரந்த மானினம் வீழ்த்திப்
  பொருந்தவுண் டிருந்தசீ றூரும்
விடர்படர் கானற் பாலையுங் கடந்தார்
  விறல்பெறு மரபினின் வேந்தர்.

(இ-ள்.) அன்றியும், வலிமைபெறுநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல முதலிய அறபுதேசத்தின் வேந்தர்களான அவ்வியாபாரிக ளனைவர்களும் கெட்ட கொலைகளைக் கொண்ட கண்களையும் கரியசரீரத்தையும் செருப்பணிந்த கால்களையும் பறிந்த மயிரினைப்பெற்ற தலையையுமுடைய வேட்டுவச்சாதிகள் தங்களது விற்களைவளைத்து அம்புறுத்தூணியையும் முதுகினிற் றூங்கிக்கொண்டு செழிய பாணங்களை வலதுகையினால் செலுத்தி இடங்கள்தோறும் பரவிய மான்கூட்டங்களை விழும்படிசெய்து வயிறுனதுபொருந்தும் வண்ணம் புசித்துத் தங்கியிருந்த சிறிய ஊர்களையும் பிளவுகள் படர்ந்த கானலையுடைய பாலைநிலங்களையுந் தாண்டினார்கள். (௩)

தொண்டையங் கனிக டோன்றியிற் சிறப்பத்
  தோன்றிய தரியமா ணிக்கம்
விண்டலர் விரித்துக் காய்த்தன போலும்
  விளங்கிடக் குருந்தொடு காபா
வண்டுறை பிடவுங் கொன்றையுஞ் செறிய
  வளைதருங் குடியிடை பொதுவர்
வெண்டயி ருடைக்கு மொலிமரு முல்லை
  வேலியுங் கடந்தயல் போனார்.

(இ-ள்) அன்றியும், நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல முதலிய அவ்வியாபாரிகளியாவர்களும் அழகிய கொவ்வைக்கனிகள்

மருதோன்றிச்செடியின்மீது சிறக்கும்படி விளங்கியது, அரியமாணிக்கமணிகள் குருத்துவிட்டு மலர்கள் விரியப்பெற்றுக் காய்த்ததைப் போலும் பிரகாசிக்கக், காட்டெலுமிச்ச மரங்களுடன் காசாமரங்களும் தேனீக்கள்தங்காநின்ற பிடவஞ்செடிகளுங் கடுக்கைமரங்களும் மிகுதியாகச் சூழும் ஊரின்கண் இடைச்சியர்கள் வெள்ளிய தயிர்க்கட்டிகளை மத்தினுல் உடையாநிற்கும் ஓசையானது நீங்காத முல்லைநிலங்களையுடைய ஊர்களையுந் தாண்டி அப்புறம் போனார்கள். (ச)

பரித்திர ளனைத்து மொருபுற நெருங்கப்
பாதையிற் பல்லிய மெனவே
யெருத்தின மணிக ளொலித்திட வொருபா
லிளங்கிள வெயில்பிறங் குமிழக்
கரத்தினி னெடுவே லேந்திய மாக்கள்
கவுண்மதக் களிறென நடந்து
விரித்தவெண் குடையுந் துவசமு மலிய
விரைந்தொரு காவகம் புகுந்தார்.

(இ-ள்.) அவ்வாறுபோன பிரகாசியாநிற்கும் இளங்கிரணங்கள் தோற்றமாய் எவ்விடங்களிலும் சொரியும்வண்ணம் கைகளில்நெடிய வேலாயுதம்தாங்கிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம முதலிய மற்றும் வியாபாரிகள் அப்பாதையினிடத்தில் குதிரைக்கூட்டங்களியாவும் ஒருபக்கத்தில் நெருங்கி வரவும், ஒருபக்கத்தில் வாத்திய ஒலியினைப்போல இடபக் கூட்டங்களின் கழுத்திற் கட்டியிருக்கும் மணிகளொளிக்கவும், விரித்த வெள்ளிய குடைகளும் கொடிகளும் அதிகரிக்கவும், கன்னத்தால் மதத்தைப் பொழிகின்றயானைகளை நிகர்ப்ப நடந்துவிரைவாக ஒருசோலையின்கண் போய் நுழைந்தார்கள். (ரு)

சந்தகில் திலகங் குரவுதேக் காரந்
தான்றிகொங் கேழிலைம் பாலை
சிந்துர மசோகு மாதவி நெல்லி
செண்பகம் பாடலந் தேமா
மந்தரை கமுகு புன்னைநா ரத்தை
மகிழ்விளா மருதெலு மிச்சை
குந்தமா சினிமா கடம்பில விதழி
குங்குமஞ் செறிதிரட் சோலை.

(இ-ள்.) அச்சோலையானது சந்தனம், அகில், மஞ்சாடி, குரர், தேக்கு, ஆத்தி, தான்றி, கோங்கு, எழிலைம்பாலை, சிந்துரம், அசோகு, குருக்கத்தி, நெல்லி, சண்பகம், பாதிரி, தேமா, மந்தாரை, கமுகு, புன்னை, நாரத்தை, மகிழ், விழாத்தி, மருது, எலுமிச்சை, குருந்தம் ஆசினி, சூதம், கடம்பு, இலவம், கொன்றை; குங்குமமாகிய இம்மரங்கள் நெருங்கிக் கூட்டமாய் நில்லாநிற்கும் சோலை. (சூ)

நித்திலத் திரளி னரும்பிளம் புன்னை
நிரைமலர் சொரிவன வொருபால்
கொத்தரும் பலர்த்திச் சண்பகத் தொகுதி
குவைதரச் சொரிவன வொருபால்
பத்தியிற் செறிந்த பாடலம் விரித்த
பாயலிற் சொரிவன வொருபால்
புத்தரி சொளுக்கு நிரைமகிழ் செறிந்த
புழைமலர் சொரிவன வொருபால்

(இ-ள்.) அன்றியும், அங்கு அரும்பினையுடைய புன்னைமரங்கள் முத்துக்கூட்டங்களைப்போல வரிசையாகிய புஷ்பங்களைச் சிந்துகிறவை ஒருபக்கம், சண்பகக் கூட்டங்கள் குவிதலாகக் கொத்தாகிய மொட்டுகளை விரியும்படிசெய்துசிந்துகிறவை ஒருபக்கம், பத்தியாக நெருங்கிய பாதிரிமரங்கள் பூமியின்கண்விரித்த பாயலைப் போலப் புஷ்பங்களைச் சிந்துகிறவை ஒருபக்கம், புதிய அரி சொளுக்காநிற்கும் ஒழுங்கினைக் கொண்ட மகிழமரங்கள் நெருங்கிய துவாரங்களையுடைய புஷ்பங்களைச் சிந்துகிறவை ஒருபக்கம். (எ)

முள்ளிலை பொதிந்த வெண்மடல் விரிந்து
முருகுமிழ் கைதைக ளொருபால்
கொள்ளைமென் கனிகள் சிதறுமுள் ளீந்து
குறுங்கழுத் தசைவன வொருபால்
வெள்ளிவெண் கவரி விரிந்தபோற் பாளை
மிடறுரு சிவனகமுகொருபாற்
றெள்ளுநீர்க் குரும்பைக் குலம்பல சுமந்த
செறிதிரட் டாழைக ளொருபால்.

(இ-ள்.) அன்றியும், முட்களையுடைய இலைகளினாற் பொதியப்பெற்ற வெள்ளியமடல்கள்மலர்ந்து வாசனைவீசாநிற்கும் தாழைமரங்

கள் ஒருபக்கம், மிகுதியாகிய மெல்லிய கனிகளைச் சிந்தாநிற்கும் முட்களையுடைய பேரீத்தமரங்கள் தங்களது குறுகிய கழுத்துகளை அசைகிறவை ஒருபக்கம், கமுகமரங்கள் வெள்ளிப் பிடியினையுடைய வெண்ணிறத்தைக்கொண்ட சாமரங்கள் விரிந்தாற்போலம்பாளைகளை விரித்துத் தங்களது கழுத்துகளை அசைகிறவை ஒருபக்கம், தெள்ளிய ஜலத்தினையுடையகுரும்பையினது கூட்டங்களையுடைய பலகுலைகளைத்தாங்கிய நெருங்கித்திரட்சியுற்றதென்னமரங்கள் ஒருபக்கம்.

தூய்திரட் பளிக்குக் கனியையா மல்கஞ்
சொரிதரச் சிதறுவ வொருபாற்
காய்கதிர் நீல மணியென நாவற்
கருங்கனி சிதறுவ வொருபாற்
சேயுயர் தேமாச் செழுந்தலை குழைத்துத்
தீங்கனி யுகுவன வொருபாற்
சாய்பணர்க் கொழுவிஞ் சியின்கனி செவந்த
தனமெனச் சொரிவன வொருபால்.

(இ-ள்,) அன்றியும், நெல்லிமரங்கள் பரிசுத்தமான திரட்சியையுடைய பளிங்குக்கற்கள் போன்ற கனிகளைச்சொரியும்படி சிதறுகிறவை ஒருபக்கம், நாவல்மரங்கள் காய்ந்த கிரணங்களையுடைய நீலரத்தினத்தைப்போன்ற கரியகனிகளைச் சிதறுகிறவை ஒருபக்கம், உயர்ச்சியுற்ற தேமாமரங்கள் தங்களது செழியதலைகளைக் குழையச்செய்துச் செவந்த இனிமையான கனிகளைச் சிதறுகிறவை ஒருபக்கம், சாய்ந்த பணர்களையுடைய கொழுவிஞ்சி மரங்களின் கனிகள் செவந்த பொன்னைப்போலச் சிதறுகிறவை ஒருபக்கம். (௬)

தேங்குட மனைய முட்புறக் கனிக
டிதழ்தரச் செறிந்தன வொருபான்
மாங்கனி யமுதத் திவலைக டெறிப்ப
மலிதரச் சொரிவன வொருபாற்
பூங்குலைக் கூன்காய் பொன்பழுத் தொளிர்வ
போன்றன கதலிக ளொருபாற்
றீங்கில்பொற் கலசம் விண்டுசெம் மணிகள்
சிந்துமா துளைத்திர ளொருபால்.

(இ-ள்.) அன்றியும், பலாமரங்களின் முட்களையுடைய கனிகள் தேன்குடத்தைப்போலும் பிரகாசிக்கும்படி நெருங்கியவைகள் ஒரு

பக்கம், மாமரத்தினது கனிகள் அமுதத்துளிகளைத் தெறிக்கும்வண்ணம் அதிகரித்துச்சிந்துகிறவைகள் ஒருபக்கம், வாழைமரங்கள்பொன்னானது கனிந்து பிரகாசிப்பதைப்போன்ற தங்களது பூங்குலையின் கண்ணுள்ள வளைவையுடைய கனிகளைச் சிந்துகிறவைகளை ஒரு பக்கம், மாதுளைக்கூட்டங்கள் குற்றமற்ற பொற்கலசங்கள் விரிந்து செந்நிறத்தையுடைய இரத்தினங்களைச் சிந்துவனபோலும் தங்களது கனிகள் வெடித்து செவந்தவிரைகளைச் சிந்துகிறவைகள் ஒருபக்கம்.

உலகமுந் திசையும் புகழுசை னயினு
　ருதவுசந் ததியபுல் காசிஞ்
சலதர மனைய கரத்தினி லேற்றோர்
　தம்மனங் குளிர்வபோற் குளிர்ந்து
நிலமிசை கிடையாப் பெருவளஞ் சுரந்து
　நீடிரை வாவிக டிகழ
வலகிலாச் செல்வங் குறைவறு திருந்த
　வணிதிகழ் வனதளிர்ச் சோலை.

(இ-ள்.) அவ்வாறாக இவ்வுலகமும் எண்டிசைகளும் புகழாநிற்கும் ஹுசைன் நயினாரவர்கள் தந்த சந்ததியாகிய இந்நூலின் உதார நாயகர் அபுல்காசிம் மரைக்காய ரவர்களினது மேகத்தைப்போன்ற கைகளினால் பொருள்வரப் பெற்றோர்களின் மனமானது குளிர்ச்சியடைவதுபோலப் பிரகாசிக்கப்பட்ட மிகுந்த கிளைகளையுடைய அந்தச்சோலையானது குளிர்ச்சியடைந்து இப்பூமியின்கண் எவ்விடத்தும் அகப்படாத பெரிய வளங்களதிகரித்து நாலுபக்கங்களிலும் நீண்ட அலைகளையுடையதடாகங்கள் விளங்கும்வண்ணம் கணக்கற்ற செல்வமானது குறையாது தங்கி இருந்தது. (கக)

அறிவினுக் கறிவா யரசினுக் கரசா
　யணியினுக் கணியதாய்ச் சிறந்த
மறுவிமெய் கமழ்ந்த முகம்மதுங் கூண்ட
　மக்கிக ளனைவருஞ் செறிந்து
நிறைவளம் பலகண் டகங்களி கூர்ந்து
　நிரைமணிப் புரவிவிட் டிறங்கித்
துறையின்முத் திறைக்குந் திரைத்தடஞ் சூழ்ந்த
　சோலையி லிருந்தன ரிப்பால்.

(இ-ள்.) அவ்விதமிருந்த நீர்த்துறைகளில்முத்துக்களை அள்ளிச் சொரியாநிற்கும் அலைகளையுடைய குளங்கள் நான்கெல்லைகளிலும் விளங்க அந்தச் சோலையின்கண் அறிவுக்கறிவாகியும் அரசுக் கரசாகியும் அழகுக்கழகாகியும் வரிசைதங்கிய சரீரத்தில் கஸ்தூரிவாசனை கமழப்பெற்ற நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் அவர்களோடுகூடிய மக்கமாநகரத்தை யுடையவர்களான வியாபாரிகளெல்லவரும் நெருங்கி அங்கு பூரணைப்பட்ட பலவிதச் செல்வங்களையும் பார்த்து மனமானது சந்தோஷ மிகுக்கப்பெற்று ஒழுங்காக மணிகளைக் கோத்துக்கட்டிய தாங்களேறியிருக்கும் குதிரைகளைவிட்டுக் கீழேயிரங்கி அவ்விடத்திற்றானே தங்கியிருந்தார்கள் இதன்பின்னர். (௧௨)

வானிழிந் தமர ரெண்ணிலக் கிலபேர்
முகம்மதி னிடத்தில் வந்துறைந்து
தேனிமிர் மரவத் தொடையலுந் தரித்துத்
திகழ்மணிக் கலன்பல வணிந்து
பானுவின் கதிர்கள் பொருவுறு தியன்ற
பன்மணித் தவிசின்மே லிருத்திக்
கான்மலர் தூயொட் டகத்தின்மே லேற்றிக்
கண்கொளா தழகிருந் திலங்க

(இ-ள்.) கணக்கினாற் குறிப்பில்லாத அளவற்ற தேவர்களான மலாயிக்கத்துமார்கள் ஆகாய லோகத்திலிருந்து இறங்கி நாயகம்நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் வந்து தங்கித் தேனீக்க ளொலிக்கப்பெற்ற குங்குமப் புஷ்பத்தினாலான மலர்மாலையும் தரித்துப் பிரகாசியா நின்ற இரத்தின வர்க்கங்கள் அழுத்திய பலவித ஆபரணங்களைப் பூட்டிச் சூரியனின் கிரணங்களும் ஒப்பாகாது பொருந்திய பலமணிகளைப் பதித்த ஓராசனத்தின்மே லிருக்கச்செய்து வாசனைவிரிந்தபரிசுத்தமாகிய ஒரு ஒட்டகையின் மீதேற்றிக் கண்கொள்ளாத அழகான திருந்து ஒளிரவும். (௧௩)

பல்லியங் காங்கக் கொடித்திர ளுடங்கப்
பானிறக் கவரிகள் சுழற்ற
வெல்லவன் கதிரிற் படைக்கலஞ் செறிய
விந்துவெண் குடைதனி நிழற்றச்
செல்லுறழ் கரட மதகரி நெருங்கச்
சிவிகையின் கணந்திசை மலிய

வல்லியின் கொடிபோ லமரர்தம் மகளிர்
மருங்கிரு பாலினு மிடைய.

(இ-ள்.) நாலுபக்கங்களிலும் வாத்தியங்கள் முழங்கவும், கொடிகளினது கூட்டங்கள் அசையவும், வெண்ணிறத்தையுடைய சாமரங்கள் சுழற்றவும், சூரியனது கிரணங்களைப்போல ஆயுதங்கள் பிரகாசித்து அதிகரிக்கவும், வெள்ளிய சந்திரவட்டக்குடை ஒப்பற்ற நிழலைச் செய்யவும், மிகவும் மதத்தைச்சொரியாநிற்கும் மேகத்தைப் போன்ற யானைகள் நெருங்கவும்; பல்லக்கின்கூட்டங்கள் எண்டிசைகளிலும் பெருகவும், வல்லிக்கொடிபோலும் இடையினையுடைய தேவமகளிரான கூறுல்கின்கள் இருபுறத்தினிடத்தும் செறியவும். (௧௪)

பரித்திர டொடர வானவரீண்டிப்
பரிமளப் பொன்னலர் தூற்றத்
தெருத்தலை புகுந்து பவனியி லுலவிச்
செழும்புகழ் முகம்மது வரவுங்
கருத்துடன் கண்ணுங் களிப்புற நோக்கிக்
கவின்மலர்ப் பதம்பணிந் திறைஞ்சத்
திருத்திழை மணியிற் குருத்தெனுங் கதிஜா
தெரிதரக் கனவுகண் டெழுந்தார்.

(இ-ள்.) குதிரைக் கூட்டங்கள் பின்பற்றவும், தேவர்களான மலாயிக்கத்துமார்கள்கூடி வாசனையையுடைய அழகிய புஷ்பங்களைத் தூவவும், செழிய கீர்த்தியினையுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வீதியின்கண் நுழைந்து பவனியாக உலாவிவரவும், மனசினுடன் விழிகளும்சந்தோஷத்தைப்பொருந்தும்படிபார்த்து அவர்களின் அழகியதாமரைமலர்போன்ற இருபாதங்களிலும் தாழ்ந்து வணங்கவும், செவ்வைப் படுத்திய ஆபரணங்களையுடைய இரத்தினக் குருத்தென்று சொல்லாநிற்கும் கதீஜாநாயகமவர்கள் ஒரு சொர்ப்பனத்தைத் தெரியும்படி பார்த்துத் தாங்கள் சயனித்திருக்கும் சயனத்தைவிட்டும் எழும்பினுர்கள். ()

கனவினை நனவென் றகமகிழ்ந் தெழுந்து
கதிர்மணி வாயிலை நோக்க
வினமத கரியும் பரியொடி ரதமு
மிருகடற் சேனையும் விருது

மனமல ருறந்த முகம்மது தமையும்
வானவர் மகளிர்க டமையும்
புனைமணிக் கொடியுங் கவிகையயுங் காணார்
பொருந்திய துயரமே கண்டார்.

(இ-ள்.) அவ்வித மெழும்பிய கதீஜாநாயக மவர்கள் தாங்கள் கண்ட சொப்பனத்தை நனவென் றெண்ணி மனச்சந்தோஷங்கொண்டுத் தாங்களிருந்த இடத்தைவிட்டுமெழும்பிக் கிரணங்களை வீசாநிற்கும் இரத்தினவர்க்கங்கள் அழுத்திய வாயலில் வந்து நின்றுக்கொண்டுத் தெருவீதியைப் பார்க்கக், கூட்டமாகியமதங்களைப் பொழியாநிற்கும் யானைகளையும் குதிரைகளுடன் தேர்களையும் பெரிய சமுத்திரத்தைப்போன்ற சேனைகளையும் விருதுகளினையும் தங்களினது இருதயத் தாமரையின்கண் தங்கிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களையும் தேவமகளிர்களான அரம்பையர்களையும் அலங்கரிக்கப்பட்ட மணிகளையுடைய கொடிகளையும் சந்திரவட்டக் குடையையும் காணாத அவர்கள் பொருந்திய வருத்தத்தையடைந்தார்கள். (௧௯)

இருடுணித் தெழுந்த மின்னெனப் பிறழு
மிழைபல திருத்தில ரிருண்ட
சுரிகுழன் முடியார் தோளணி தரியார்
சுண்ணமுஞ் சாந்தமும் பூசார்
சரிகரத் தணியார் மேகலை யிறுக்கார்
தளிர்மலர்ப் பதத்தணி தாங்கார்
மருமலர் சொருகார் வடுவெனச் சிறந்த
வரிவிழிக் கஞ்சன மெழுதார்.

(இ-ள்.) அவ்வாறு துயரத்தை யடைந்த கதீஜாநாயகமவர்கள் அத் துயரத்தினால் அந்தகாரத்தை அறச்செய்து எழும்பிய மின்னைப்போலும் கிடந்து பிறழாநிற்கும் பலவித ஆபரணங்களைத் தங்களது சரீரத்தின்கண் செவ்வையாகும்வண்ணம் தரித்திலர்கள். கறுத்த முறுக்கினையுடைய கூந்தலைக் கொண்டையாக முடித்திலர்கள். தோளினது கலன்களை யணிந்திலர்கள். சுண்ணச் சாந்தையும் சந்தனத்தையும் மேனியின்மீது பூசிலர்கள். கையில் வளையல்களைப் பூண்டிலர்கள். மேகலாபரணத்தை இறுக்கிலர்கள். தளிர்களையுடையதாமரைமலர்போலும் பாதங்களின் பணிகளைப் புனைந்திலர்கள். அளக

பாரத்தின்கண் பரிமளத்தினையுடைய புஷ்பங்களைச் சொருகிலர்கள். மாம்பிஞ்சுபோலும் வரிகளையுடைய சிறப்புத்தங்கிய கண்களுக்கு மையெழுதிலர்கள். (௧௭)

கந்துகங் கழங்கம் மனைகரத் தேந்தார்
கதிர்மணி யூசலுற் றாடார்
சிந்துரப் பிறைநன் னுதலியர் திளைத்த
சிற்றிலும் பேரிலுந் தேடார்
பந்தா மதின்மண் டபத்திடை புகுந்து
மலர்க்குழற் கதிற்புகை மாட்டார்
சுந்தரக் கமலச் சிறடிக் கிசைந்த
சுடலரத் தகமெடுத் தெழுதார்.

(இ-ள்.) அன்றியும், கதீஜாநாயகமவர்கள் பந்துகழங்கு அம்மானையாகிய இவைகளைத் தங்களது கைகளால் தாங்கார்கள். பிரகாசத்தைக்கொண்ட இரத்தினவர்க்கங்களையுடைய ஊஞ்சலைக் கையினால் தொட்டு ஆடார்கள். சிந்துரப் பொட்டணிந்த இளஞ் சந்திரன் போலும் நல்ல நெற்றியினையுடைய பெண்கள் அதிகமாய்க் கட்டியிருக்கும் விளையாட்டிற்குரிய சிறிய வீடுகளையும் பெரிய வீடுகளையும் தேடார்கள். கோட்டை மதிலினையுடைய மாடத்தின்கண் நுழைந்து புஷ்பமாலையணிந்த கூந்தலுக்கு அகிற்கட்டையினது தூமத்தைச் சேர்க்கார்கள். அழகிய தாமரை மலர்போலும் சிறிய பாதங்களுக்குப் பொருந்திய பிரபையினையுடைய செம்பஞ்செடுத்துக் கோலமெழுதார்கள். (௧௮)

பஞ்சணை பொருந்தா ரிருவிழி துயிலார்
பழத்தொடு பாலமு தருந்தார்
கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்
கொழுமடற் செவிக்கிசை கொள்ளார்
கஞ்சமென் மலர்த்தாள் பெயர்ந்திட வலவார்
கடிமலர் வாசநீ ராடார்
வஞ்சிநு ண்ணிடையார் தம்மிடத் துறையார்
முகம்மது மனத்திடத் துறைந்தார்.

(இ-ள்.) அன்றியும், தாங்கள் சயனியாநிற்கும் பஞ்சணையின் மேல் பொருந்த மாட்டார்கள். இரண்டு கண்களும் நித்திரை செய்யமாட்டார்கள். கனிகளுடன் கலந்த பாலமுதத்தை யுண்ணமாட்டார்கள், கொஞ்சாநின்ற மெல்லிய குதலைச்சொற்களையுடைய கிளிக

ளோடும் பேசமாட்டார்கள். செழிய மடலினையுடைய காதுகளினால் இராகசங்கீதங்களைக் கொள்ளமாட்டார்கள், தாமரை மலர்போன்ற மெல்லிய இரு பாதங்களும் பெயர்ந்திடும்படி பூமியின்மீது உலாவ மாட்டார்கள். வாசனையைக்கொண்ட புஷ்பங்களையுடைய தடாகத்தின்கண்ணுள்ள பரிமளம்பொருந்திய நீரில் ஸ்நானஞ்செய்ய மாட்டார்கள். வஞ்சிக்கொடிபோலும் நுண்ணிய இடையினை யுடைய தங்களது தோழிப்பெண்களுடன் தங்கியிருக்கமாட்டார்கள். நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மனத்தினிடத்தில் தங்கியிருந்தார்கள். (௧௯)

கலிவிருத்தம்.

மருமலர்ப் புயமுகம் மதுபொன் மாமதிற்
றிருநகர்த் தெருவரு பவனி சேர்தரு
முருகலர் குழலிதங் கனவின் முற்படக்
கருதிய துயரெனும் கடற்கு ளாயினர்.

(இ-ள்.) அவ்வாறு தங்கியிருந்த தேனைக்கொண்ட புஷ்பமாலையணிந்தகூந்தலையுடைய கதீஜா நாயகமவர்கள் வாசனைபெற்ற மலர்மாலையணிந்த தோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அழகிய பெருமைதங்கிய மதிலானது சூழ்ந்த தெய்வீகமுற்ற திருமக்கமா நகரத்தின் வீதியில் வாநின்ற பவனியானது பொருந்திய கனவின் முன்னராகவே தாங்கள் எண்ணிய துன்பமென்னும் சமுத்திரத்தினக மாயினர்கள். (௨௦)

மலைநிகர் புயமுகம் மதுநன் மாமணத்
துலவிய பவனியின் கனவொன் றுற்றிடக்
கலைமதி நிகர்கதீ ஜாதங் காதலா
லலைதுயர்ப் பெருக்கினி லாழ்ந்திட் டாரரோ.

(இ-ள்.) அன்றியும் மலைபோலும்தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நல்ல பெருமைதங்கியவிவாகவோலத்துடன் உலாவப்பெற்ற பவனியையுடைய ஒரு சொப்பமானது பொருந்திடவே, சோடச கலைகளையு முடைய பூரணச்சந்திரனுக் கொப்பாகிய கதீஜாநாயகமவர்கள் மனசினுள் ளமைந்த காதலினால் அலையினையுடைய துன்பமென்னும் சமுத்திரத்தின்கண் ஆழ்ந்தார்கள். (௨௧)

துதிபெறுங் குவைவிது கருததுத் துன்புறப்
பதியர்பே தகப்பட பகர்வ ரோவெனு

மதிநிகர் முகம்மதின் மனைவி யாகவென்
விதிவசம் பொருந்துமோ விலக்கு மோவெனும்.

(இ-ள்) அவ்விதம் முழ்கிய கதீஜாநாயகமவர்கள் கீர்த்திபெரு நிற்கும் நமது நந்தையாகிய குவைலிதென்பவரின் சிந்தையானது துன்பத்தைப் பொருந்தும்வண்ணம் நாமிருக்கும் இக்கோலத்தைக் குறித்து இந்தத் திருமக்கமா நகரத்திலுள்ளவர்கள் வேற்றுமைப்படும்படி யாதேனும் சொல்லுவார்களோ? என்று சொல்லுவார்கள். பூரணச்சந்திரனுக் கொப்பாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மனையாளாய் நானுகும்படி எனது விதியினது அமைப்புப் பொருந்தச்செய்யுமோ? அல்லது விலகச்செய்யுமோ? நானறியேனென்று சொல்லுவார்கள். (உஉ)

மடிமிசை மதிவரும் வரவு மாமறை
நெடியவன் மணமென நிகழ்த்தும் வார்த்தையுங்
கடிமணப் பவனியின் கனவு மாதுலன்
றிடமுறும் வசனமுஞ் சிதையு மோவெனும்!

(இ-ள்) அன்றியும் அக்கதீஜா நாயகமவர்கள் தங்களது மடியின்மீது பூரணச்சந்திரன் வாாநிற்கும் வரவும்; மகத்தாகிய வேதபண்டிதனுன உறக்கத்தென்பவன் அதைக்கேட்டு நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கும் உமக்கும் நடந்தேறும் விவாகத்தைக்குறித்ததென்று கூறிய வார்த்தைகளும், அந்நபிகள் பெருமானின்சிறப்பையுடைய மணப்பவனியினதுசொப்பனமும், மாமனுன அவ்வுறக்கத்தின் உறுதியுற்ற வசனங்களும் பொய்யாய்க் கெட்டுப் போகுமா? போகாதென்று சொல்லுவார்கள். (உ௩)

கருத்தினுள் ளுறைமுதல் கனவை மைசரு
விரித்தெடுத் துரைத்தலும் விளங்கத் தேர்ந்துபொன்
வரைத்தடப் புயத்தனு சாதன் வாக்கினு
லுரைத்ததென் னேவென வுளத்தி லெண்ணுமால்.

(இ-ள்.) அன்றியும், நமது கருத்தினகம் தங்காநிறகும் ஆதியிற்கண்ட சொப்பனத்தை மைசருவென்பவன் விரிவாக எடுத்துச் சொல்லவும் அதை விளங்கும்படி மனசின்கண் தெளிந்து மகாமேரு பருவதத்தைப்போலும் விசாலமாகிய பெரிய தோள்களை யுடையவ

ஞன ஊசாவென்பவன் தனது வார்த்தைகளினல் பதில்சொன்னது யாதோ? ஒன்றுந்தெரிந்திலேமென்று இருதயத்தின்கண் நினைப்பார்கள். (உ௪)

நிலமிசை நபிப்பெயர் நிறுத்தும் பேர்களுக்
கலைவுறப் பெரும்பகை யவதி யுண்டெனக்
கலைவல ருரைத்தசொற் கருத்தி லெண்ணமுற்
றலைதர வுடன்மெலிந் துருகி வாடுமால்.

(இ-ள்.) அன்றியும், இப்பூமியின்மீது நபியென்னு மோரபிதானத்தை நிலையாக நிற்கச்செய்யும் ஆள்களுக்குத் துன்பமுறும் வண்ணம் பெரிய பகைமையாகிய வருத்தமுண்டென்று சாஸ்திரவல்லர்களான பண்டிதர்கள் சொல்லிய வார்த்தைகளைத் தங்களதுசிந்தையில் நினைத்துச்சரீரம்நடுக்கமுறும்படி மெலிவடைந்து உருகிவாடுவார்கள்.

உரிமையி னுடைளெழுந் தொழுகு மைசரு
வரைதரு பத்திரம் வரவுங் காண்கிலே
மெரிசுரப் பாலையிற் செய்தி யாவையுந்
தெரிதர விலையெனத் திகைத்துத் தேம்புமால்.

(இ-ள்.) அன்றியும், நாம்நாயகம்நபி முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களோடு சொந்தமுடன் எழும்பிச்செல்லும் மைசரு வென்பவன் எழுதிய கடிதத்தை இதுபரியந்தம் இங்குவரவும்பார்த்திலோம். அக்கினியைப்போலும் சுடாநிற்கும் காட்டிலுள்ள பாலை நிலத்தின்கண் வைத்து நடந்த செய்திமுதலிய யாவும் எமக்குத் தெரியவுமில்லை யென்று சொல்லிப் பிரமித்து வாடுவார்கள். (உரு)

விம்முறு மேங்கிமெய் வருந்தும் வெய்துயிர்த்
தம்மவோ வெனுமுளத் தடக்கி யாழ்கடன்
மம்மரைக் கடப்பதெவ்வகைகொ லோவெனச்
செம்மலர் முகங்கரிந் திருந்து தேம்புமே.

(இ-ள்.) அன்றியும், விம்முதலடைவார்கள். ஏக்கங்கொண்டு உடலானது வருத்தமுறுவார்கள். நெடு மூச்சுவிட்டு அம்ம! ஓ!! என்று சொல்லுவார்கள், அகாதமான சமுத்திரத்தைப் போன்ற காமாசையை மனசின்கண் அமையும்படி செய்து அதைவிட்டும் நாம்தாண்டிச் செல்லுவது எவ்வுபாயத்தினு லென்று செவந்த தாமரைமலர்போன்ற முகம் கரிதலுற்று இருந்து மெலிவார்கள். (உஎ)

மன்னவன் குவைலிது வரத்திற ஞேன்றிய
பொன்னிளங் கொடிவிழி பொருந்தி லாதிருந்
தின்னன துயாமுற் றெண்ணி யேங்கியே
தன்னுளத் தடக்கிமெய் தளருங் காலையில்.

(இ-ள்.) அரசனான குவைலி தென்பவனின் வரத்தினால் உதயமாகிய இளம்பருவத்தையுடைய பொற்கொடிபோலும் கதீஜாநாயகமவர்கள் இரண்டு கண்களும் பொருத்தமுற்று நித்திரைசெய்யாமலிருந்து இந்தப்படியாகத் துன்பத்தைப் பொருந்தி எண்ணங்கொண்டு ஏக்கமடைந்துத் தனதுஇருதயத்தின்கண் அமையும்வண்ணம் செய்து உடலானது தளர்ச்சிபெறும்சமயத்தில் (உஅ)

தழுவற நன்மொழி யெடுத்து மைசரு
வெழுதிய பத்திர மடைந்த தின்றெனச்
செழுமலர்க் குழலிய ருரைப்பத் தேமொழி
விழைவொடுங் கரத்தினில் விரைந்து வாங்கினர்.

(இ-ள்.) செழிய புஷ்பமாலையணிந்த கூந்தலையுடையதாதிப்பெண்கள் இன்றையத்தினம் மைசருவென்பவன் யாதொரு குற்றமுமில்லாத நல்ல வார்த்தைகளை எடுத்துத் தீட்டிய கடிதமொன்று இங்கு வந்து சேர்ந்ததென்று சொல்ல, அக் கடிதத்தைத் தேன்போலும் இனிய வசனங்களையுடைய கதீஜா நாயகமவர்கள் ஆசையோடும் விரைவாகத் தங்களது கைகளினால் வாங்கினார்கள். (உகூ)

முத்திரை தனைவிடுத் தெடுத்து மூரிவெண்
பத்திரந் தனைவிரித் துவந்து பார்த்ததி
னுத்தரந் தனையுணர்ந் தறிய வுள்ளமும்
புத்தியுங் களித்துடல் புளகம் பூத்ததே.

(இ-ள்.) அவ்வாறு வாங்கிய கதீஜாநாயகமவர்கள் அந்தக் கடிதத்தின்மேலே வைத்திருக்கும் முத்திரையைப் பிரித்து அதனுள்ளிருந்த பெருமைதங்கிய வெண்ணிறங்கொண்ட கடிதத்தைக் கைகளினால் உவப்புற்றெடுத்து விரித்துக் கண்களினாற் பார்த்து அதிலெழுதியிருந்த உத்தரத்தைத் தெரிந்தறியத் தங்களது மனமும் புத்தியுங் களிப்படைந்து சரீரமும் புளகம் பூத்தது. (௩௰)

விரிதருங் காரணம் விளங்கி நற்புகழ்
தெரிதர முகம்மதென் றெழுதுஞ் சித்திர
வரிதொறு மிருவிழி வைத்து முத்தமிட்
டுரியதம் முயிர்பெறு முவகை யாயினர்.

(இ-ள்.) அன்றியும், விரிந்த காரணங்களெல்லாவற்றையும் விளங்கும்வண்ணஞ்செய்து அந்த நல்ல கீர்த்தியானது தெரியும்படி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென் றெழுதாநிற்கும் அழகிய ஒவ்வொரு வரிகளிலும் இரண்டுகண்களையும் வைத்து முத்தமிட்டுத் தங்களது சொந்தமாகிய ஆவியைத் தாங்கள் பெற்றுக்கொள்ளும் விதமாக மனமகிழ்ச்சி யடைந்தார்கள். (௩௧)

உரைப்பருங் காரணத் துறுதி யாவையும்
வரைப்புயன் மைசரு வரைந்த பத்திரந்
திரைப்படுங் கடலிடை தியங்கு வார்க்கொரு
கரைப்படுத் திடுமரக் கலத்தை யொத்ததே

(இ-ள்.) அன்றியும், மலைபோலும் தோள்களை யுடைய மைசருவென்பவன் சொல்லுதற் கரிய காரணத்தினது வலிமைகளெல்லாவற்றையும் எழுதிய அந்தக்கடிதமானது, அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் அகப்பட்டுத் தியக்கமடைகிற அக்கதீஜாநாயகமவர்களுக்குக் கரையிற்சேரும்படி செய்யும் ஒப்பற்ற மரக்கலத்தை நிகர்த்தது. (௩௨)

தூயவர் காரணந் தொகுத்த பத்திரம்
பாய்திரை யமுதெனப் பிறந்த பைந்தொடி
காய்கனன் மெழுகெனக் கருத்துச் சிந்திட
மாய்வுறுந் துயர்க்கொரு மருந்து போன்றதே.

(இ-ள்.) அன்றியும், பரிசுத்தத்தை யுடையவர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காரணங்களெல்லாவற்றையும் மைசரு வென்பவனால் ஒழுங்காக எழுதப்பட்ட அந்தக் கடிதமானது, பாயாநிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் ணுண்டான அமுதத்தைப்போலும் இவ்வுலகத்தி லவதரித்த பசிய வளையல்களையுடைய அக் கதீஜாநாயகமவர்கள் காய்ந்த அக்கினியின்கண் அகப்பட்ட மெழுகைப்போலத் தங்களின் கருத்தானது சிதறிடும்படி மாய்கின்ற துன்பத்திற்கு ஒப்பற்ற சஞ்சீவியை நிகர்த்தது. (௩௩)

விரைமல ருடுத்திகழ் மேக வார்குழற்
கரியமை விழிக்கதி ஜாதங் கையினிற்
பிரிவுறு துறைந்தபத் திரத்தைப் பெட்புட
னரசபித் தாலிபுக் கனுப்பி னாரரோ.

(இ-ள்.) அப்போது வாசனைதங்கிய மலர்களாகிய நட்சத்திரங்கள் பிரகாசியாநிற்கும் மேகத்தைப்போன்ற நீண்ட கூந்தலையும் கரியமையினை எழுதப்பெற்ற கண்களையுமுடைய கதீஜா நாயகமவர்கள் தங்களது கைகளில் பிரிவுறாது அமர்ந்திருக்கும் அந்தக்காகிதத்தை அன்போடும் அரசராகிய அபீத்தாலிபவர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். (௩௪)

வந்தபத் திரந்தனை வாங்கித் தம்முயிர்ச்
சந்தது விளைத்தகா ரணத்தின் றன்மைநேர்ந்
திந்தநற் பதவிக ளியன்ற தோவெனச்
சுந்தரப் புயவரை துலங்க வீங்கினர்.

(இ-ள்) கதீஜாநாயகமவர்களால் அவ்வாறு அனுப்பப்பட்டுத் தங்களிடத்தில் வரப்பெற்ற கடிதத்தை அபீத்தாலிபவர்கள் தங்கள் கைகளினால் வாங்கித் தங்களின் உயிர்போன்ற சந்ததியாகியநாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் செய்த காரணத்தினது குணத்தைத் தங்களது மனத்தினால் உடன்பட்டு இந்த நல்ல பதவிகள் பொருந்தினவோ? வென்று சொல்லி அழகிய தங்களினிருதோள்களாகிய மலைகள் பிரகாசிக்கும்படிப் பூரித்தார்கள். (௩௫)

வியனுறு பத்திரம் விளம்புறு செய்திகண்
டுயரபித் தாலிபென் றோது மன்னவர்
செயிரறு முகம்மது வெனுஞ் சஞ்சீவியா
லுயிர்பரந் திடுவதோ ருடல தாயினர்.

(இ-ள்) அன்றியும் மேன்மை தங்கிய அபீத்தாலிபென்று சொல்லும் அரசரானவர்கள் பெருமை பொருந்திய அந்தக் கடிதமான துகூறும் வர்த்தமானங்களைத் தங்களின் கண்களினாற் பார்த்து குற்றமற்ற நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்னும் சஞ்சீவினால்போன உயிர்மீண்டும் வந்து பரவிடும் ஒப்பற்ற சரீரத்தையுடையவர்களைப்போலாயினர்கள். (௩௬)

தருநிகர் கரத்பீத் தாலி பாகிய
குரிசிலுங் கதீஜா வென்னுங் கோதையும்
வருமதிக் கின்புறு மலர்க ளொப்பென
விருவரு முவகையிற் களித்திருந்தனர்.

(இ-ள்.) அன்றியும்; கற்பகத்தருவைநிகர்ந்த கைகளையுடைய அபீத்தாலிபாகிய பெருமையிற் சிறந்தோர்களும் கதீஜாவென்று சொல்லும் பூமாலையணிந்த கூந்தலையுடையவர்களும் உதயமாகிவரா நிற்கும் சந்திரனால் இன்பமடையும் ஆம்பன்மலரையும் குவளைப்புஷ்பத்தையும் ஒப்பென்று சொல்லும்படி அவ்விரண்டு பேர்களும் சந்தோஷத்தினால் மகிழ்ச்சியுற் றிருந்தார்கள். (௩௭)

கதீஜாகனவுகண்டபடலம்
முற்றிற்று.

ஆ படலம்-உக-க்கு-திருவிருத்தம்-ஹ௩௩.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

——(o)——

இ ஃ து

மணம்பொருத்துபடலம்.

அருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உடல்குழைத்தெழுந்துசெந்தே னொழுக்கியமலர்ப்பைங்காவில்
வடவரை யனைய திண்டோள் வள்ளலு மறுவி லாத
கடகரி யனைய வெற்றிக் காளையர் பலருஞ் சேர்ந்த
விடபமும் பரியுந் துன்ன வெழுந்தனர் விரைவி னன்றே.

(இ-ள்.) மகாமேரு பருவதத்தைப்போன்ற திண்ணிய தோள்களையுடைய நாயகம் ஙபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலை

கிவசல்லமவர்களும் குற்றமற்ற மதத்தைச் சொரியாநிற்கும் யானைக ட்கொப்பாகிய வெற்றியினையுடைய காளையர்களான மற்றும் வியா பாரிகளெல்லாவரும் தங்களுடன் பொருந்திய எருதுகளும் குதிரை களும் நெருங்கும்வண்ணம் மரங்களானவை தங்களது சரீரத்தைக் குழையும்படிசெய்து எழும்பிச்செவந்ததேனைத் துளியாநிற்கும்பூக்க ளையுடைய தாங்கள்தங்கி இருந்தபசிய அந்தச்சோலையை விட்டும் விரைவாக எழும்பினர்கள். (க)

சோலைவாய் விடுத்து நீக்கித் துவசமுங் குடையு மல்க
நீலமா மங்குலங்கேழ் நெடுங்குடை நிழற்ற வெற்றிக்
காலவேல் கரத்தி லேந்திக் காளையர் மருங்கு சூழ
மாலையொண் புயத்தி லோங்க முகம்மது மினிதின் வந்தார்.

(இ-ள்.) அவ்விதம்எழும்பிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் அந்தச்சோலையினிடத்தை விட்டுக்கடந்து கொடிகளும் குடைகளும் நிறையவும், நீலநிறத்தையுடையபெருமை தங்கிய மேகங்கள் அழகிய பிரகாசத்தையுற்ற குடையினது நிழலைச்செய்யவும் வெற்றியானதொளிரும் வண்ணம் வேலாயுதத்தைக்கை களினல் தாங்கிக்கொண்டு காளையர்களாகிய வியாபாரிகள் பக்கத்திற் சூழவும் புஷ்பமாலையானது ஒள்ளிய தோள்களில் கிடந்தோங்கவும், இனிமையுடன் நடந்து வந்தார்கள். (உ)

அகிலமுஞ் சுவன நாடு மமாரும் போற்றி வாழ்த்த
மிகுபுகழ் குறைவலி தீன்ற மெல்லியல் களிப்புப் பொங்க
நகிலணி துகிர்க்கொம் பென்ன நாரியர் புளகம் பூப்ப
முகமது வென்னும் வள்ளன் மக்கமா நகரின் வந்தார்.

(இ-ள்.) அவ்விதம்வந்த நாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மென்னும் வள்ளலானவர்கள் பூலோகமும் சுவர்க்கலோகமும் தேவர்களான மலாயிக்கத்து மார்களும் புகழ்ந்து ஆசிர்வதிக்கவும், மிகுந்த கீர்த்தியினைக்கொண்ட குவைலிதென்பவர் பெற்ற மெல்லிய நடையினையுடைய கதீஜாநாயகமவர்கள் மனதில் மகிழ்ச்சியதிகரிக்கவும், முலைப்பாரமமைந்த அழகிய பவளக்கொடி போலும் மற்றும் பெண்கள் தங்களின் சரீரத்தில் புளகம் பூக்கவும், மக்கமாநகரத்தின்கண் வந்து சேர்ந்தார்கள். (௩)

காரணக் கடலே யொண்கேழ்க் கதிருமிழ் பலேயை யாகி
யாரணக் குரிசி லென்னு மகுமதை யெதிரிற் புக்கித்
தாரணிந் திலகு தோட்பூ தரத்தபீத் தாலிப் வெற்றி
வீரமுந் திறலும் வாய்த்த மென்கரத் தணைத்து மோந்தார்.

(இ-ள்.) அவ்வாறு வந்து சேரவே புஷ்பமாலைகள் அணிந்து பிரகாசியாநிற்கும் புயங்களாகிய மலைகளையுடைய அபீத்தாலிபவர்கள் காரணத்தினது சமுத்திர மானவர்களே, ஒள்ளிய பிரபையிணையுடைய கிரணங்களைக் கக்காநின்ற இறும்பூ தானவர்களே, ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் வேதத்தினையுடைய பெருமையிற் சிறந்தோரெனும் அஹ்மதென்ற திருநாமத்தைக்கொண்ட நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமானவர்களே, எதிரிற்போய்ச் சேர்ந்து வெற்றியினதுவீரத்தையும் வலிமையையும் சிறக்கப்பெற்ற தங்களின் மெல்லிய இரண்டு கைகளினாலும் கட்டியணைத்து முத்தமிட்டார்கள். (௪)

அணியிழை சுமந்த செவ்வி யனையெனும் பாத்தி மாவந்
திணைவிழி பெற்றே னென்ன விருகையாற் றழுவிப் பைம்பொன்
மணிமலி பீடத் தேற்றி முகம்மதை யினிது போற்றிக்
கணநிரை யயினி நீராற் கண்ணெச்சிற் கழுவி னால்.

(இ-ள்.) அன்றியும், அலங்காரமான ஆபரணங்களைத் தாங்கிய அழகிய அன்னையென்று சொல்லும் அபீத்தாலிபவர்களின் மனைவியாரான பாத்திமா அவர்கள் வந்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை எனது இரு கண்களையும் பெற்றேனென்று சொல்லி இரண்டு கைகளினாலும் கட்டி யணைத்துப் பசிய பொன்னினாற் செய்த பரிமளமிகுத்த ஓராசனத்தின்மேல் இருக்கும்படி செய்து இனிமையுடன் துதித்துத் திப்பொறிகள் வரிசையாகிய அயினிநீரால் கண்பார்வையினால் வந்த தோஷமானது தீரும்வண்ணம் சுத்திசெய்தார்கள். (௫)

மறமுதிர்ந் திலங்கும் வெள்வான் முகம்மது மினிது புக்கார்
திறலபூ பக்க ரென்னுஞ் செம்மலு மனையிற் சேர்ந்தார்
தொறுவினத் தொடுமப் பாசு மாரிதுஞ் சுபைறு தாமு
மறபிக ளெவருந் தத்த மணிமனை யிடத்திற் சார்ந்தார்.

(இ-ள்.) அப்போது கொலையானது முற்றிப் பிரகாசியாநிற்கும் வெள்ளிய வேளாயுதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு

அலிகிவசல்லமவர்களும் தங்களது வீட்டின்கண் இனிமையுடன்போ்ய்ப் புகுந்தார்கள். வலிமையினையுடைய அபூபக்கரென்னும் செம்மலானவர்களும் தங்களது மனையின்கண் போய்ச் சேர்ந்தார்கள். ஓட்டகக்கூட்டத்தோடும் அப்பாசும் ஆரிதும் சுபைறும் மற்றும் வியாபாரிகளான அறபிகளெல்லாவரும் தங்கள் தங்களின் அழகிய வீடுகளிற் போய்ச்சேர்ந்தார்கள். (௬)

கட்கொலை படிறு நிந்தை களவுடன் கொடிய பாவ
முட்பட வளர்த்த மெய்யா னுறுமொழி யறுதி யில்லா
னட்பினைப் பகைத்துச் செய்த நன்றியைக் கொன்று நஞ்சார்
மட்படு கலமே யன்ன மனத்தபூ ஜகிலும் போனான்.

(இ-ள்.) அன்றியும், கட்குடி, கொலைபாதகம், பொய்மை, நிந்தை, களவோடு கொடிய பாவமாகிய இவைகளெல்லாம் மனசின்கண் பொருந்தும்படி வளரச்செய்த சரீரத்தையுடையவனும், பொருந்திய வார்த்தைகளின் அறுதி யில்லாதவனுமாகிய சுற்றத்தாரை விரோதித்துத் தனக்குப் பிறர்செய்த நன்மைகளைச் சங்கரிக்கு விடம் நிறைந்த மண்ணினாலுண்டான பாண்டத்தை நிகர்த்த அபூஜகிலென்பவனும் தனது வீட்டின்கண் போய்ச்சேர்ந்தான். (எ)

பாங்கினிற் கணக்கர் சூழப் பரிசனக் குருவந் தீண்ட
வாங்குவிற் றடக்கை வெற்றி மலிபுகழ் மைச ரூவு
மோங்குமா நகரம் புக்கி யொளிர்மணித் தவிசி னுய
தேங்குழற் கதிஜா பைம்பொற் சீறடி வணக்கஞ் செய்தான்.

(இ-ள்.) அன்றியும், வளையாநிற்குங் கோதண்டம்தாங்கியபெருமைபொருந்திய கையினையும் வெற்றியினையும் அதிகரிக்காநின்ற கீர்த்தியினையுமுடைய மைசறுவென்பவனும் தனது பக்கங்களில் கணக்கர்கள் வளையவும், ஏவல் செய்வோர்களின் கூட்டமானது வந்து நெருங்கவும்; ஓங்குகின்ற செல்வத்தையுடைய அந்தத்திருமக்கமாநகரத்திற் புகுந்து பிரகாசிக்கின்ற இரத்தின வர்க்கங்க ளழுத்திய ஆசனத்தின் மீதான வாசனையமைந்த கூந்தலையுடையவர்களாகிய கதிஜாநாயக மவர்களினது பசிய பொன்னிறத்தைக்கொண்ட சிறிய பாதங்களில் வணங்கினான். (அ)

தெரிமலர்க் கரங்கள் கூப்பிச் சேவடி வணங்கி நின்ற
வுரிமைதன் முகத்தை நோக்கி யொண்டொடி கதிஜா வென்னு

மரிவையாங் குற்ற செய்தி யறைகென வறையமாரி
மருமலி புயங்கள் விம்ம வாய்புதைத் திருந்து சொல்வான்.

(இ-ள்.) ஒள்ளிய வளையல்களையுடைய கதீஜாவென்று சொல்லும் அரிவை யானவர்கள் அவ்வாறு அறியத்தக்க தாமரைமலர்போன்ற இருகைகளையும் குவித்துத் தங்களின் சிவந்தபாதங்களில் வணக்கஞ் செய்து அவ்விடத்தில் தானே தங்கிநின்ற உரிமையாகிய அம்மை சறுவென்பவனின் முகத்தைப்பார்த்து நீங்கள் பிரயாணப் பட்டுப் போன அவ்விடத்தில் பொருந்திய செய்திகளைச் சொல்லென்று கூற; அதைக்கேட்ட அவன்தேனினது பரிமளமதிகரித்த இருதோள்களும் விம்மிதமுறும்படி தனதுவாயைக் கைகளினுற் பொத்திக் கொண்டு அங்கு ஓரிடத்தில்தங்கியிருந்து சொல்லத்தொடங்கினுன்.

கரும்பெனத்தோன்றிச் செம்பொற்கதிருமிழ்ந் திருந்தகொம்பே
கரும்பிருந் திசைகொ டிண்டோட் டோன்றல்காரணங்களியாவுந்
தரம்பெற விவைகொ லென்னத் தானள வறுத்து மட்டிட்
டிரும்பெரும் புடவி நன்னு ளிபாவரே யிபம்ப வல்லார்.

(இ-ள்.) இவ்வுலகத்தின்கண் கரும்பைப்போல அவதரித்துச்சிவந்த பொற்கிரணங்களைக் கொப்பளித்துத் தங்கியிருக்கப் பெற்ற பூங்கொம்பானவர்களே! இந்தப்பெரிய பூலோகத்தினகம் வண்டுகளானவை மாருமற் குடியாகவிருந்த இசைகள்நீங்காத திண்ணிய புயங்களையுடைய தோன்றலான நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் காரணங்க ளெல்லாவற்றையும் வகைபெறும் வண்ணம் இவைகள் தாமென்று வரையறுத்து மட்டுக்கட்டிச் சொல்லவல்லவர் யாவர்? ஒருவருமில்லர் (௧௰)

சேயுய ரமரர் போற்றுஞ் செவ்விய முகம்ம தென்ன
மாயிரும் புவியிட் டோன்றி மானுட வடிவு கொண்ட
நாயகர் புதுமை யெல்லா நாநெடுத் துரைக்க நானு
ருயிர நாவுண் டாகி லதிற்சிறி துரைப்ப னென்ருன்.

(இ-ள்.) அன்றியும்; நீண்ட உயர்ச்சியினையுடைய வானலோகத்தின் கண்ணுள்ள தேவர்களான மலாயிக்கத்து மார்கள் போற்று நிற்கும் அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்றுமகத்தாகிய பெரிய இந்தப் பூலோகத்தினகம் உதயமாகி

மானுஷிகவடிவத்தைக் கொண்ட நாயகரவர்களின் அதிசயங்களெல்லாவற்றையும் நானெடுத்துச் சொல்லுவதற்கு எனக்கு நான்கிலட்சம்நாவுகள் உண்டாயிருக்குமேயானால் அவற்றில் கொஞ்சம் அந்நாவுகளினால் சொல்லுவேனென்று சொன்னான். (கக)

மறைப்பதம் தழூத்தி யன்னோர் வாய்மொழி மறுத்து நின்றோர்
திரைப்பெரும் புவியின் மேலோர் செல்வமே பெறுவர் கேளார்
நிரைப்பெரு நரக மாழக் கெடுவர்நீ ணிலத்தி லென்னா
லுரைப்பதென் சிறியேன் றீட்டு மோலையே யுரைக்கு மென்றான்

(இ-ள்.) அன்றியும், அந்தநபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தாமரை மலர்போலும் இருபாதங்களையும் துதித்து அவர்களின் வாயின்கண்ணிருந்து தயமாகாநிற்கும் வார்த்தைகளை மறுக்காமல் நின்றவர்கள் சமுத்திரஞ் சூழப்பெற்ற இப்பூமியின் கண்ணுள்ள மேலானவர்களின் சம்பத்தையடைவார்கள் அவ்வார்த்தைகளைக் கேளாதவர்கள் வரிசையாகிய பெரியநரகத்தில் முங்கும்வண்ணம் கெட்டுப் போகுவார்கள். அல்லாது நெடிய இவ்வுலகத்தில் என்னால் சொல்லக்கூடியது என்னை? சிறியனாகிய யான் எழுதிய பாசுரமேசொல்லுமென்று சொன்னான்.

மரவமுங் கியபொற் றிண்டோள் முகம்மது வரவு கண்டேன்
கரையிலாக் காட்சி கண்டேன் காசினி தோயாப் பாதம்
பிரிவுறாப் பதவிகண்டேன் பெண்களுக் கரசே யின்றுந்
திருவடிகண்டேன் காணாச் செல்வமொன் றில்லை யென்றான்.

(இ-ள்.) அன்றியும், பெண்களுக்கெல்லாம் அரசாகிய கதீஜா நாயகமே குங்குமப் புஷ்பத்தினாலான மலர்களைமுங்கப்பெற்ற திண்ணியபுயங்களை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வரவைப் பார்த்தேன். மேலும் எல்லையில்லாத அற்புதங்களைப் பார்த்தேன். பூமியின்கண் தங்காத பாதங்களினது வேற்றுமையற்ற பதவியைப் பார்த்தேன். இன்றையதினம் உங்களுடைய தெய்விகமுற்ற சரணங்களைப் பார்த்தேன், இனியான் பாராத செல்வமானது யாதொன்று மில்லையென்று சொன்னான். ()

தெண்டிரைப் புவன மேழுஞ் சேர்தபொன் னுலக மெட்டுங்
கொண்டுதங் நேமி யொன்றாற் கொற்றவெண் குடையு ளாக்கி

வண்டணி துதையுந் தண்டார் முகம்மதே புரப்பர் தேனுங்
கண்டுமொத் தனைய சொல்லாய் காண்பது திண்ணமென்றான்.

(இ-ள்.) அன்றியும், தேனும் கற்கண்டும் ஒன்றாய்ப் பொருந்தியபோன்ற வார்த்தைகளை யுடைய கதீஜா நாயகமே தேனீக்கள் வரிசையாக நெருங்காநிற்கும் குளிர்ச்சி பொருந்திய மலர்மாலையணிந்த தோள்களை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களே தெள்ளிய அலைகளைக் கொண்ட சமுத்திரஞ் சூழப்பெற்ற இந்த ஏழு பூமிகளையும் செவந்த எட்டுச் சுவர்க்கலோகங்களையும் தங்களினது ஏகச்சக்கரத்தினாற் கொண்டு வெள்ளிய கொற்றக்குடையி னகமாகும்படி செய்து ஆட்சி செய்வார்கள் அதை நாம் நமது கண்களினாற் பார்ப்பது நிச்சயமென்றுசொன்னான் (௧௪)

கடிகமழ் மாவத் திண்டோட் காளைதம் புதுமை யாவும்
வடிவுறத் தெளிந்து தேர்ந்த மைசரா வுரைத்த மாற்றம்
படிபுகழ் கதிஜா மெய்யிற் பசலைபூத் தெழுந்த காமக்
கொடிபடர்ந் தேற நாட்டுங் கொழுங்கொம்பு போன்ற தன்றே.

(இ-ள்.) அவ்வாறாக வாசனை பரிமளியாநிற்கும் குங்குமப் புஷ்பத்தினாலான மலர்மாலையணிந்த திண்ணிய புயங்களைக் கொண்ட காளைப் பருவத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அதிசயங்களெல்லாவற்றையும் அழகுறும்படி தெளிந்துணர்ந்த அந்தமைசரா வென்பவன்சொல்லியசொல்லானது இவ்வுலகமுழுவதும் துதியாநின்ற கதீஜாநாயக மவர்களினது சரீரத்தில் பசலை பூத்தெழும்பிய காமமாகிய கொடியானது பரவி ஏறுவதற்கு நாட்டிய செழிய கொம்பை நிகர்த்தது. (௧௫)

மனையினுக் குயிராய்வந்த மைசரா வுரைத்த மாற்றஞ்
சினவுவேற் கருங்கட் பாவை செவிநுழைந் தகத்திற் புக்கி
நனிதுய ரூறு தொட்டு நதிப்பெருக் காக்கிப் பின்னுங்
கனைகடல் விரிவதாக்கிக் கதித்தெழப் பெருக்கிற் றன்றே.

(இ-ள்.) அன்றியும், தங்களினது வீட்டிற்கு ஜீவனாகவந்துசேர்ந்த அம்மைசரா வென்பவன் சொல்லியசொல்லானது, சத்துராதிகளின் மேற் கோபியாநிற்கும் வேலாயுதம் போன்ற கரிய கண்களை யுடைய பாவையாகிய கதீஜாநாயகமவர்களின் காதுகளில் புகுந்து

மனதின்கண் ளுறைந்து மிகுத்த துன்பமாகிய ஊற்றைத் தோண்டி அதை ஆற்றினது பெருக்கமாக்கிப் பின்னரும் ஒலியாநின்றசமுத்திரத்தினது அகலமாக்கி அதிகரித்துஎழும்பும்படிபெருகச்செய்தது.

செயிரறு கனவு மிங்கு செப்பிய மொழியு மோலைப்
பயனுமுன் னணித்துக் கண்ட பார்வையுங் கலந்தொன்ருகி
நயனுறு கதிஜா வுள்ள நடுக்கநெட் டுயிர்ப்பு மீறுந்
துயர்நெருப் பெழுக மூட்டுந் துருத்தியின் வியத்த தன்றே

(இ-ள்) அன்றியும், கதீஜா நாயக மவர்கள் முன்னவர் கண்ட குற்றமற்ற சொப்பனங்களும் இவ்விடத்தில் உறக்கத்தும் மைசரு வென்பவனும் சொல்லிய வார்த்தைகளும் பாசுரத்தின்கண் தீட்டப்பட்டிருந்த பயனும் முன்னர் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைத் தங்களது சமீபத்திற் பார்த்த பார்வையும் ஒன்ருகிச் சேர்ந்து நன்மைப்பெற்ற அக்கதீஜா அவர்களின்மனதில் நடுக்கத்தையுடைய நெடுமூச்சு அதிகரியாநிற்கும் துன்பமாகிய அக்கினியானது எழும்பும் வண்ணம் மூட்டாநிற்கும் துருத்தியைப் பார்க்கிலும் அதிகமாய் அதிசயமுற்றது. (கஎ)

வையகம் விளங்க வந்த முகம்மதின் செவ்வி காண
வையமி லமரர் மாத ரருந்தவம் புரிவ ரென்ருர்
செய்யகண் குளிரக்கண்ட செழுமுகிற் கரிய கூந்தற்
றையற முளத்தின் காதற் பகுதியார் சாற்றற் பாலார்.

(இ-ள்.) அன்றியும், இப்பூலோக முழுவதிலும் பிரகாசிக்கும்படி உதயமாகிவந்த நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அழகைப் பார்ப்பதற்குச் சந்தேகமற்ற தேவமகளிர்களான கூறுல்ஹீன்கள் அரிய தவத்தைச் செய்வார்களென்றுசொன்னல் செவந்த இருகண்களும் குளிர்ச்சி யடையும்படி பார்த்தசெழிய மேகத்தைப் போலுங் கரியகூந்தலையுடைய தையலாகிய கதீஜா நாயக மவர்ளினது மனசின்கண்ணுள்ள ஆசையின்பிரிவைச்சொல்லும் இயல்பினை யுடையவர்கள் யாவர்? ஒருவரு மில்லர். (கஅ)

பெருகிய துயர மென்னும் பெருங்கட னீந்தி நீந்திக்
கரைபெறற் கரிதாய்ச் சோர்ந்து கண்படை பெருது வாடிப்
பருவரல் படர்ந்து புந்திப் பயிரெனுங் கருத்தை மூடத்
திருமயி லின்புருது சிலபகல் கழிந்த பிற்றை.

(இ-ள்.) அவ்வாறாகிய அழகிய மயிலாகிய கதீஜாநாயக மவர்கள் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மீதுள்ள காதலினா லதிகரித்த துன்பமென்று சொல்லும் பெரிய சமுத்திரத்தின்கண் நீந்தி நீந்திக் கரையை அடைவதற்கு அரிதாய்த் தளர்ந்து இருகண்களும் நித்திரையைப் பொருந்தாது வாட்டமுற்று வருத்தமானது பரவி புத்தியென்னும் பயிரைப் போர்ப்ப இன்ப மடையாது சிலநாள் கழிந்தபின்னர். (கக)

மண்ணினுக் கரசாய் வந்த முகம்மதின் வடிவு கூர்ந்து
கண்ணினுங் கருத்து மாறா தடிக்கடி தோற்ற நாணிப்
பண்ணெனச் சிவந்த வாயார் பஞ்சணை பாயல் புக்கி
யெண்ணிலா தெண்ண முன்றாங் கிருந்தவர் துயிலுங் காலை.

(இ-ள்.) இசைப்பாட்டினைப் போன்ற வார்த்தைகளை யுடைய செவந்த வாயினைக் கொண்ட அக்கதீஜா நாயகமவர்கள் இப்பூலோக முழுவதுக்கும் அரசாக வந்த நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வடிவமானது அதிகரித்துத்தங்களது கண்களிலும் கருத்திலும் நீங்காது உருவெளித் தோற்றமாய் அடிக்கடி தெரிய, அதைக்கண்டு வெட்கமுற்றுப் பஞ்சணையினையுடைய பாயலின்கண்போய்ச்சேர்ந்து எண்ணாத எண்ணங்களையெல்லாம்எண்ணி அவ்விடத்திலே தானே தங்கியிருந்து நித்திரை செய்கின்ற சமயத்தில் (உ௦)

வயிரவே ரூன்றிச் சேந்த மாணிக்கப் பணர்விட் டோடி
யியன்மர கதத்தின் சோதி யிளந்தளிர் குழைப்ப வீன்று
நயனுறு நகரை மூடி நற்கனி யுகுத்து வாசச்
செயமல ரிடைவி டாது சிரமிசை சொரிய மாதோ.

(இ-ள்.) வயிரமாகிய வேர்களை யூன்றிச் செந்நிறத்தையுடைய மாணிக்கமாகிய கிளைகளை நாலுபக்கங்களிலும் விட்டு ஓடி மரகதத்தின் பிரகாசமாகிய இளம்பருவத்தையுடைய இலைகளைக் குழையும்படி ஒழுங்காகப் பெற்று நன்மை பொருந்திய அந்தத் திருமக்கமா நகரத்தைப் போர்த்து நல்ல பழவர்க்கங்களைச் சொரிந்து வாசனையையுடைய செவந்த புஷ்பங்களை இடைவிடாமல் தங்களது தலையின் மீது சிந்தும்வண்ணம்.

வானமட் டோங்கி நீண்ட மாணிக்கத் தருவின் பொற்பூ
நானிலம் முழுதும் விண்ணு நரைகமழ்ந் திடுவ நோக்கித்
தேனமர் குழலி னருஞ் செல்வரும் பெரிது போற்றப்
பானலங் கடந்த கண்ணார் பயனுறுங் கனவு கண்டார்.

(இ-ள்.) ஆகாயலோகம் வரையும் வளர்ந்து நீட்சியுற்ற ஒரு மாணிக்கமரத்தின் அழகிய புஷ்பங்கள் குறிஞ்சி, நெய்தல், மருதம், முல்லை, யென்ற நான்குவகைப்பட்ட இந்தப்பூலோக மனைத்திலும் வானலோக மனைத்திலும் வாசனையானது பரிமளித்திடுவதைப் பார்த்து வண்டுகள்தங்காநின்ற மலர்மாலையணிந்தகூந்தலையுடைய பெண்களும் செல்வத்தையுடைய ஆடவர்களும் அதிகமாகத் துதிக்கும் வண்ணம் அழகிய கருங்குவளைப் புஷ்பத்தையுந் தமக் கிணையில்லை யென்று தாண்டிய கண்களையுடையவர்களான அக்கதீஜாநாயக மவர்கள் நன்மைபொருந்திய ஒரு சொப்பனத்தைக் கண்டார்கள். ()

மெல்லியல் கனவு கண்டு விழித்தெழுந் திருந்து நெஞ்சைக்
கல்விய துயரி னேடுங் கருத்தொடுந் தெளிந்து பார்த்து
வல்லவ னுறக்கத் தென்னு மறைவலான் றன்னைக் கூவி
யல்லினிற் றெரியக் கண்ட காட்சியை யடுத்து ரைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் மெல்லிய நடையினை யுடையவர்களாகிய கதீஜா நாயகமவர்கள் ஒரு சொப்பனத்தைப் பார்த்து இருகண்களையும் விழித்துஎழும்பி இருந்து அதைத் தங்களின்மனதைத் தோண்டிய துன்பத்துட னுங் கருத்துடனும் தேர்ந்து பார்த்துச் சமர்த்தனான உறக்கத்தென்றுசொல்லும் வேதவல்லவனைஅழைத்து அவனை நெருங்கி அவனுக்கு இராப்பொழுதில் தாங்கள் அறியும்படிபார்த்த அச்சொப்பனத்தினது தோற்றத்தைச் சொன்னார்கள். (உ௩)

மடந்தைதங் கனவைக் கேட்டு மனத்தினுட் படுத்தித் தேர்ந்து
கடந்ததூன் முறையி னாலுங் கல்வியோர் கேள்வி யாலும்
படர்ந்ததன் னறிவி னாலும் பகுத்துச்சீர் தூக்கிப் பார்த்துத்
தொடர்ந்தபுன் முறுவலோடன்றத் தோகையர்க் குரைப்பதானான்.

(இ-ள்.) அப்போது உறக்கத்தென்பவன் மடந்தையாகிய கதீஜா நாயகமவர்களினது சொப்பனத்தைத் தனது இரு காதுகளினாலுங் கேள்வியுற்று அதை இருதயத்தினகம் பொருத்தித் தெளிந்து

அளவைக் கடந்த நூற்களினது முறைமையினாலும் அறிவுடையோர்களின் கேள்வியினாலும் விரிந்ததனது புத்தியினாலும்பிரித்து ஆராய்ந்துபார்த்து தொடரப்பெற்ற வெள்ளிய தனது புன்சிரிப்பானது வெளியில்தெரியும்வண்ணம் தோகையராகிய அக்கதீஜாநாயக மவர்களுக்குச் சொல்லத்தொடங்கினான். (உச)

இருநிலத் துறைந்த வேரீ மானிலே யெழுந்து நின்ற
தருமுகம் மதுநல் வாசந் தழைத்தல்தீன் விளக்க மின்பம்
வருகனி கலிமா வாழ்த்து வானவர் செயல்பூ மாரி
தெரிதரச் சொரித லும்மைத் திருமண முடித்த லென்றான்.

(இ-ள்.) பெரிய இந்தப்பூமியின்கண் தங்கிய வேரானது ஈமானிலே. எழும்பிநின்ற மரம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள். நல்ல பரிமளம் ஓங்குதல் தீனுல்லிஸ்லா மென்னும் மார்க்கத்தினது விளக்கம். இனிமையானது உதயமாகிய பழம்கலிமா வாழ்த்துதல் தேவர்களான மலாஇக்கத்து மார்களின் செயல். அறியும்வண்ணம் புஷ்பமழை சிந்துதல் தங்களை அங்நபிகள் பெருமானவர்கள் அழகிய விவாக முடித்துக்கொள்ளுவதென்று சொன்னான். (உரு)

புதியதோர் கனவி னுட்பப் பொருளினைத் தேர்ந்து சோதி
மதிநுதற் குரைத்துப் போற்றி மனமகிழ்ந் தெழுந்து வீரங்
குதிகொளும் வெள்வேற் செங்கைக் குவைலிது மருங்கிற்புக்குத்
துதிசெய்தங்குற்றசெய்தியனைத்தையுந் தொகுத்துச்சொன்னான்.

(இ-ள்.) அவ்வாறு அவ்வுறக்கத் தென்பவன் நூதனமாகிய ஒப்பற்ற சொப்பனத்தின் அந்தரங் கார்த்தத்தைத் தனது மனசின்கண் தெளிந்து பிரகாசத்தைக் கொண்ட இளஞ்சந்திரன்போலும் நெற்றியினையுடையவர்களாகிய அக்கதீஜா நாயக மவர்களுக்குச் சொல்லி அவர்களைத் துதித்து மனமகிழ்ச்சிகொண் டெழும்பி வலிமை யதிகரியாநிற்கும் வெள்ளிய வேலாயுதந் தாங்கிய செவந்த கையினையுடைய குவைலிதென்பவனின் பக்கத்திற் போய்ச்சேர்ந்து அவனைப் புகழ்ந்து கதீஜாநாயகமவர்க ளிருக்குமிடத்தில்பொருந்திய சமாசாரங்களெல்லாவற்றையும் ஒழுங்காகச் சொன்னான். (உசா)

அவிரொளி விரிக்கு மேனி யகுமதின் மனைவி யாகப்
புவியினும்வானும் போற்றப்பொருந்தனும் பொன்னே யென்னக்

குவைலிது கேட்டா நந்தக் கொழுங்கடற் குளித்துக் கூர்ந்து
தவமுய ரறிவி னேடுஞ் சம்மதித் திருந்தா னன்றே.

(இ-ள்.) அன்றியும், ஒளிராநிற்கும் பிரகாசத்தை எவ்விடங்களிலும் விரியும்படிசெய்யும் திருமேனியையுடைய அஹ்மதென்னும் அபிதானத்தைக்கொண்ட நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மனையாளாகவும் இந்தப்பூலோகத்திலும் வானலோகத்திலும் போற்றவும் பொருந்துதல் தங்களினது இலக்குமியாகிய கதிஜாநாயகந்தானென்று சொல்ல; அதைக்குவைலிதென்பவன் தனது இருகாதுகளினாலுங் கேள்வியுற்றுச் செழிய சந்தோஷ சாகரத்தில் மூழ்கித் தவமோங்காநின்ற தனது புத்தியோடும் அவ்விவாகத்திற்கு உடன்பட்டிருந்தான் (உஎ)

சுரும்பிமிர் கரிய கூந்தற் சுடர்க்கொடி கதிஜா தம்பா
லரும்புகழ் மைசறுவை யழைத்தரு கிருத்தி நெஞ்சின்
விரும்பிய வுவகை கூரக் காரண வேந்தர்க் கன்பாய்ப்
பெரும்புவி மணத்தின் கோலம் பெற்றிலா தென்கொ லென்றார்.

(இ-ள்.) குவைலிதென்பவன் அவ்விதம் இருக்கவே, தேனீக்களொலியாநிற்கும் மலர்மாலை யணிந்த கரியகூந்தலையும் பிரகாசத்தைக்கொண்ட வளையல்களையு முடைய கதிஜாநாயக மவர்கள் தங்களது சமுகத்தில் அரிதானகீர்த்தியையுடைய மைசறுவென்பவனைக் கூப்பிட்டுப் பக்கத்திலிருக்கச்செய்து மனசின்கண் ஆசித்தஉவகையான தகிகரிக்கும்வண்ணம் காரணங்களையுடைய வேந்தரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு அன்பாகப்பெரிய இந்தப் பூமியின்கண் நடைபெறும் விவாகத்தினது கோலமானது இதுபரியந்தம் நடைபெறாதது யாதுகாரணத்தினாலென்று கேட்டார்கள். (உஅ)

கூறிய மொழியைவேய்க்குங் குயிலுக்குங்கொடுத்துச் செந்தேன்
மீறிய மதுரச் சொல்லாய் விரும்பிய பயன்க ளியாவுந்
தேறிய கரணம் போகஞ் செழும்புவி யாக்கை போல
வூறிய வூழி னன்றி முடியுமோ வுலகத் தென்றான்.

(இ-ள்.) அவ்வாறு அவர்கள் கேட்ட மைசறுவென்பவன் அவர்களைப் பார்த்து ஆதியிற் பேசிய வார்த்தைகளைப் புல்லாங்குழலுக்கும் குயிலுக்கும் கொடுத்து இப்போது செவ்விய தேனினது அதி

களித்த இனிமையினையுடைய வார்த்தைகளைப் பெற்ற கதீஜா நாயகமே! செழிய இப்பூலோகத்தின்கண் தேர்ச்சியுற்ற காணம், போகம், யாக்கைபோன்ற நாம் இச்சித்த பயன்களனைத்தும் ஊறப்பெற்ற ஊழ்வினையின் பயனின்றி யல்லாமல் இவ்வுலகத்தில் முடியுமா? முடியாதென்று சொன்னான். (உ௯)

சினப்படைச் செழுங்கட் கொவ்வைச் செவ்விதழ் சிறுவெண்மூர
லனப்பெடைக் கதிஜா பால்விட் டடலரி மைசரு மன்
கனப்பெருங் கவிகை யோங்கக் கடுவிடப் பாந்தண் மாய்த்த
வனப்பிருந் தொழுகுஞ் சோதி முகம்மதி னிடத்திற் சார்ந்தான்.

(இ-ள்.) அவ்விதஞ் சொன்ன வலிமைகொண்ட சிங்கமாகிய மைசருவென்னுமரசனானவன் பகைவர்மேற்கோபியாநிற்கும்வாளாயுதம்போன்ற கண்களையும் கொவ்வைக்கனிபோன்ற செவந்த அதரங்களையும் வெண்ணிறத்தைப்பெற்ற சிறியபற்களையும் பெட்டையன்னம்போன்ற நடையினையுமுடைய கதீஜாநாயகமவர்களின் இடத்தைவிட்டும் நீங்கிப் பெரிய மேகக்குடையானது ஆகாயத்திலோங்கும்வண்ணம் கொடிய சர்ப்பத்தை வதைசெய்த அழகான இருந்தொளிர்கின்ற பிரகாசத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் வந்து சேர்ந்தான். (௩௦)

வந்துதாள் வழுத்திச் செவ்வி மலர்க்கொடி கனவுங் காதற்
சிந்தையு னினைவும் வேதந் தெளிந்தவ னுரையுந் தேனூர்
கொந்தலர் மரவ மாலைக் குவைலிது மகிழ்வுங் கூறிட்
டந்தரங் கத்திற் சொன்னா னண்மையு மறிவு மிக்கான்.

(இ-ள்) வலிமையும் அறிவும் மிகுத்தவனான அம்மைசருவென்பவன் அவ்வாறு வந்துசேர்ந்து நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் இருபாதங்களையுந் துதித்து அழகிய பூங்கொம்பாகிய கதீஜாநாயகமவர்கள் கண்ட சொப்பனத்தையும், அவர்களின் ஆசைகொண்ட மனசினகமுள்ள எண்ணத்தையும், வேதங்களைத் தெளிந் தறிந்தவனான உறக்கத் தென்பவன் சொல்லிய வார்த்தைகளையும், தேன்நிறைந்த பூங்கொத்துகளைப்பெற்ற குங்குமமாலையணிந்த குவைலிதென்பவரின் மகிழ்ச்சியையும் பிரித்து இரகசியமாகச் சொல்லினான். (௩௧)

மானவேற் றடக்கை வீரன் மைசறு வசனங் கேட்டுக்
கானமருடலுமுள்ளக் கருத்தும்பூ ரித்துச் சிந்தித்
தானவ னருளை யுன்னி யகத்தினி லடக்கி யுண்மைத்
தூநெறி வழுவா வள்ளற் றோற்றிடா வுவகை கொண்டார்.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிய கீர்த்திபெற்ற வேலாயுதந் தாங்கிய நீண்ட கையினையுடைய வீரனாகிய அம் மைசறு வென்பவனின் வார்த்தைகளைச் சத்தியத்தையுடைய பரிசுத்தமான சன்மார்க்கத்திற் றப்பாத வள்ளலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களிரு காதுகளினாலும் கேள்வியுற்று கஸ்தூரி வாசனைதங்கிய தங்களது சரீரமும் மனத்தினது கருத்தும் பருத்து ஆலோசித்து ஹக்குசுபுகானகுவத்த ஆலாவின் திருவருளை இருதயத்தின்கண் நினைத்து அடக்கிக்கொண்டு ஒருகாலத்திலுமுண்டாகாத சந்தோஷத்தை யடைந்தார்கள். (௩௨)

பொற்றொடிக் கதிஜா பாதம் போற்றிய மைசறுசொல்
வெற்றியுங் குவைலி தென்னும் வேந்தனுக் குறக்கத் தோதும்
பெற்றியின் மகிழ்ந்த வாறும் பெட்புறு கனவி னாலங்
குற்றவை யனைத்துந் தந்தைக் குரைப்பதற் குன்னி னால்.

(இ-ள்.) அவ்விதம் சந்தோஷமடைந்த நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பொன்னினாலான வளையல்களைத் தரித்த கதீஜா நாயகமவர்களின் திருவடிகளைத் துதியாநிற்கும் மைசறு வென்பவன் சொல்லிய சொல்லினது விஜயத்தையும், குவைலீதென்று சொல்லும் மன்னவனுக்கு உறக்கத்தாகிய வேதபண்டிதன் சொல்லிய தன்மையினால் அவன் மகிழ்ச்சிகொண்ட வரலாற்றையும் பெருமைபொருந்திய சொப்பனத்தினால் அவ்விடத் தில்சேர்ந்தவைகள் எல்லாவற்றையும் தங்களினது பெரிய பிதாவாகிய அபீத்தாலிபவர்களுக்குச் சொல்லுவதற்கு மனசின்கண் நினைத்தார்கள். (௩௩)

அணிநிரைத் தெதிர்ந்த வொன்னா ராருயிர் சிதைத்துச் சேந்து
திணிசுடர் விரிக்கும் வேற்கைத் திறலபித் தாலிப் தம்பாற்
பணிமறு தொழுகிச் செப்பும் பாலகன் மைச றுவை
மணிவகுத் தனைய தின்தோள் முகம்மது கூட்டிச் சென்றார்.

(இ-ள்.) அவ்வாறு நினைத்த இரத்தினவர்க்கங்களை வகைப் படுத்தியதைப் போன்ற திண்ணிய புஜங்களையுடைய நாயகம் நபிமு

கம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சேனைகளை வரிசையாக நிறுத்திக்கொண்டு எதிர்த்த சத்துராதிகளின் சரீரத்தின்கண் நிறைந்த ஆவியைச் சிதையும்படி செய்து செவந்து வலிமையினையுடைய பிரகாசத்தை நானுபக்கங்களிலும் பரவாநிற்கும் வேலாயுதந்தாங்கிய கையினது வீரத்தையுடைய அபீத்தாலிபவர்களினிடத்தில் இட்ட ஏவற்பணிகளை மறுக்காது செய்யாநின்ற பாலகனாகிய அம்மைசரு வென்பவனைக் கூட்டிக்கொண்டு போயினார்கள். (ருச)

தந்தைமாட் டேகி யங்கன் சார்பிட மறிந்து சார்ந்து
நுதமர் தனிலு மிக்க நண்பின னிவனென் றோதி
மந்திர மொழியா யேதோ வாசக முளதென் றுன்றன்
சிந்தையை விளக்க மாகக் கேளுதி தெரிய வென்றார்.

(இ-ள்.) அவ்விதம் போன நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களின் பெரிய தாதையாகிய அபீத்தாலிபவர்களின் சந்நிதானத்திற் போய் அங்கு சாரக்கூடிய இடத்தையுணர்ந்து சார்ந்து மைசருவென்பவனைச் சுட்டி இவன் நமது பந்துக்களிலும் மிகுத்த உறவினையுடையவனென்று சொல்லி வேத வார்த்தைகளாக யாதோ சமாசார முண்டு மென்று சொன்னான். ஆதலால் அவனது கருத்தைத் தாங்கள் தெளிவாய்த் தெரியும்வண்ணம் கேளுங்களென்று சொன்னார்கள். (ருரு)

மன்னர்மன் சொற்கேட் டந்த மைசரு தன்னைக் கூவித்
தன்னக மடைந்தன்பாகத் தனித்துவைத் துள்ளத் துற்ற
நன்னய மொழிக ளியாவு மறையினி னவிற்று கென்னப்
பொன்னெடுத்துரைத்ததென்னப் புகன்றெடுத்துரைக்கலுற்றான்

(இ-ள்.) அப்போது அபீத்தாலிபவர்கள் இராஜாதிபர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வார்த்தைகளை இருகாதுகளினாலுங் கேள்வியுற்று அந்த மைசரு வென்பவனை அழைத்துத் தங்களது வீட்டின்கண் போய்ச்சேர்ந்து அன்போடும் அவனை ஏகமாக இருக்கவைத்து உனது இருதயத்தின் கண் பொருந்திய நல்ல நயத்தினைக்கொண்ட வார்த்தைகளெல்லாவற்றையும் வேதவார்த்தைகளை நிகர்த்து என்னிடம் சொல்லென்று கேட்கப் பொன்னைஎடுத்து உரைத்ததைப்போலும்புகழ்ந்து தனது வாயைத்திறந்துச் சொல்ல ஆரம்பித்தான். (ருசா)

நேரிழை கதீஜா பாலி னிகழ்ந்தது முறக்கத் தென்னும்
பேரறி வாளன் றேர்ந்து குவைலிதுக் குரைத்த பேச்சு
மூர்மனத் துயராற் றன்பான் மணமென வுரைத்த வாறுஞ்
சோர்விலா துரைத்தான் மிக்க சூழ்ச்சியிற் றெளிந்த நீரான்.

(இ-ள்.) மிகுத்த நுண்ணிய அறிவினல் தெளிவடைந்த குணத்தினை யுடையவனான அம்மைசறு வென்பவன் நேரிய ஆபரணங்களையுடைய கதீஜா நாயகமவர்களினிடத்தில் நடைபெற்ற வர்த்தமானங்களையும் குவைலி தென்பவருக்கு உறக்கத்தென்று சொல்லும் பெரிய புத்திசாலியானவன் தனது மனசின்கண்ணே தெளிந்து உரைத்த வர்த்தமானங்களையும், பாவிப தனது மனத்துன்பத்தினல் அக்கதீஜா நாயகமவர்கள் தன்னிடத்தில் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் விவாகமென்று சொல்லிய வரலாற்றையும் தளர்வில்லாது சொல்லினுன் (கூஎ)

நிரைத்தெடுத் துரைத்த சொல்லை நெஞ்சில்வைத் திலையுங் காயுங்
கரைத்தசந் தனமும் பூவுங் கட்டுரை யுடனு மீய்ந்த
துரைத்தனத் தபித்தா லிபைச் சுடர்முகம் மதுவை போற்றி
மரைத்தட மலர்க்கை கூப்பி மைசறு மனையிற் போனுன்.

(இ-ள்.) மைசறு வென்பவன் அவ்வாறுவரிசையாக எடுத்துச் சொன்னவார்த்தைகளை மனதின்கண் வைத்துப் பொருந்தியவசனத்தோடும் வெற்றிலையும் அடைக்காயும் கரைக்கப்பட்ட சந்தனமும் புஷ்பங்களும்கொடுத்த அதிகாரத்துவத்தையுடைய அபித்தாலிபவர்களையும் பிரகாசத்தைக்கொண்ட நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களையும் துதித்துத்தனது நீண்ட தாமரைமலரை நிகர்த்த இருகைகளையுங் குவித்து வணங்கிவிட்டுத் தனது வீட்டின்கண் போய்ச்சேர்ந்தான். (கூஅ)

அயர்விலா துரைத்த சொற்கேட் டருளுறை யபித்தா லிபு
புயவகை பூரித் தோங்கிப் பொருவிலப் பாசா ரீது
வயவரி ஹமுசா விரு மன்னுசோ தரரை யெல்லா
நயனுற வழைத்தி ருத்தி நடந்தசொல் லனைத்துஞ் சொன்னர்.

(இ-ள்.) அப்போது மைசறுவென்பவன் தளர்வில்லாது உரைத்த வார்த்தைகளைக்கிருபைதங்கிய அபித்தாலிபவர்கள் தங்களிருகாதுகளினுலுங் கேள்வியுற்றுத்தோள்களாகிய இரண்டுமலைகளும் பருக்கப்

பெற்று வளர்ந்து ஒப்பில்லாதவேங்கையைநிகர்த்த அப்பாசு, ஆரிது, ஹமுசா கடைசியாகப்பொருந்திய தங்களின் சகோதரர்க ளனைவர் களையும் நன்மையுறும்வண்ணம் கூப்பிட்டு வீட்டின்கண் இருக்கும் படிசெய்து நடந்தவர்த்தமானங்க ளெல்லாவற்றையுஞ்சொன்னார்கள்.

பாட்டளி மிழற்றுந் தேறற் படலைவீற் றிருந்த வீரத்
தோட்டுணை யபித்தா லீபு சுடர்நகை முறுவல் வாயாற்
கேட்டசொல் லமிர்தந் தன்னாற் கேகய முகில்கண் டென்னப்
பூட்டிய சிலக்கை வீரர் பொன்றிலா மகிழ்ச்சி பூத்தார்.

(இ-ள்.) தேனீக்கள் இசைப்பாட்டுப் பாடாநிற்கும் மதுவைக் கொண்ட புஷ்பமாலைகள் மாறாது வீறுடனிருக்கப்பெற்ற வீரமமைந்த இருபுயங்களையுடைய அபீத்தாலிபவர்களின் ஒள்ளிய பிரகாசம் தங்கிய பற்கள்பொருந்திய வாயினால் கேள்வியுற்றசொல்லாகிய அமுதத்தால் மயில்களானவை மேகத்தைக் கண்டாற்போல நாணினால் வளைத்துப் பூட்டப்பட்டகோதண்டந்தாங்கிய கையினையுடையவீரர்களான அப்பாசு முதலிய அவர்களியாவர்களும் அழியாத மகிழ்ச்சியுண்டானார்கள். (௪0)

உடைமையிற் பணத்திற் சாதி யுயர்ச்சியில் வணக்கந் தன்னின்
மடமயி லழகி லொவ்வா மாட்சியிற் கதீஜா தம்மைக்
கடிமண முடிக்க நாடிக் கருதின பேர்க ளெல்லா
மடிகளென் றுரைநா நீட்ட வச்சமுற் றிருந்தா ரன்றே,

(இ-ள்.) பாக்கியத்தினாலும் திரவியத்தினாலும் சாதியினது மேன்மையினாலும் தெய்வ வணக்கத்தினாலும் அழகியயாவரும் ஒப்பாகாத மாட்சிமையினையுடைய இளமயிலாகிய அந்தக்கதீஜாநாயகமவர்களை இன்பத்தைப்பெற்ற விவாகமுடிக்கும்படி விருப்பங்கொண்டு எண்ணிய ஜனங்களெல்லாவரும் அவர்களைத் தலைவர்களென்று சொல்லித் தங்களின் வார்த்தைகளையுடைய நாவினை நீட்டிப் பேசப் பயமுற்றிருந்தார்கள். (௪௧)

அந்நெறி யதனை வியாமுங் கேட்பதற் கைய மானே
நன்னெறி மொழிக்க தீஜா மனையினி னடந்த செய்தி
யின்னணங் கேட்டோஞ் செல்வ மணத்தினுக் கிசைந்த தூது
முன்னுதல் பொருளே யென்ன யாவரு மொழிந்தா ரன்றே.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் பயமுற்றிருந்த முறைமையினல் நாங்களும் அப்பெண்ணைக்கேட்பதற்குச் சமுசயமாயினேம். ஆனல் இவ்வண்ணம் நல்ல சன்மார்க்க வார்த்தைகளையுடைய அந்தக்கதீஜாவின் வீட்டின்கண் நடைபெற்ற சாமாசாரங்களை நாங்கள் கேள்வியுற்றேம். இனிச் செல்வத்தையுடைய விவாகத்திற்குப் பொருந்தியதானதை முன்னாக அனுப்பிவைத்ததிலே பொருளென்று அப்பாசு முதலிய யாவர்களும் சொன்னர்கள். (௬௨)

வல்லமை யறிவிற் றேர்ந்த வார்த்தையுத் தரத்திற் சூழ்ச்சிச்
சொல்லிலுட் பொருளி னுட்பத் துடரறிந் துரைக்க வேண்டி
னல்லெழில் ஹமுசா வல்லா னகரின்மற் றுண்டோ வென்னப்
பல்லரும் போற்று மாற்றம் பகர்ந்தன ரபித்தா லீமே

(இ ள்,) அவ்விதம் அவர்கள் சொல்ல அதைக்கேட்ட அபீத்தாலிபவர்கள் சமர்த்தான புத்தியினாலும் தெளிந்த வார்த்தைகளினது உத்திரத்தினாலும் ஆலோசனையையுடைய பேச்சுகளின் அகப்பொருளினாலும் நுண்ணிய தொடர்பினை அறிந்து பேசவேண்டுமானல் நல்ல அழகினையுடைய ஹம்சா அல்லாமல் இந்தத் திருமக்கமாநகரத்தின்கண் வேறேயொருவருள்ளரா ? இல்லரென்று யாவர்களும் துதியாநிற்கும் ஒரு சமாசாரத்தைச் சொன்னர்கள். (௬௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திறலறிவ ரபித்தாலி புரைத்தமொழி
யனைவருங்தஞ் சிந்தை கூர்ந்து
துறுமலர்ப்பொற் புயத்தமுசா தமையழைத்து
மணமொழியைத் தொகுத்துப் பேசி
நிறைநிலைமை தவருத குவைலிதுபா
லினிதேகி நிகழ்த்து வீரென்
றறைதருமுன் னவர்மாற்றம் பின்னவருந்
தலைமேற்கொண் டன்பு கூர்ந்தார்.

(இ-ள்.) திறத்த அறிவினை யுடையவர்களான அபீத்தாலி பவர்கள் அவ்வாறு சொல்லிய வார்த்தைகளுக்கு அப்பாசு முதலிய யாவர்களும் மனங்கூர்ந்து நெருங்கிய புஷ்பமாலை யணிந்த அழகியதோள்களையுடைய ஹம்சா அவர்களைக் கூப்பிட்டு நபிமுகம்மது சல்லல்

ல்ர்கு அலேகிவசல்ல மவர்களின் விவாகத்தினது பேச்சுகளை ஒழுங்காய்ப் பேசி நீவிர் இனிமையுடன் மாட்சிமைதங்கிய உண்மையில் தப்பாத குவைலிதிடத்திற் சென்று சொல்லுமென்று சொல்ல முன்னமே தனது தமையன்மாரான அவர்களின்வார்த்தைகளைத் தம்பியாகிய ஹம்சா அவர்கள்தங்களின் சிரமேற்கொண்டு அன்புற்றூர்கள்.

மனமகிழ்வு மனக்களிப்பு மருங்குவர
வெழுந்தமுசா வாயி னீங்கி
யினமணியொண் கதிர்மாடத் திடுமணியில்
லெறிப்பவட லேறு போலத்
தினகரன்மெய் மறுகுமணி மறுகூடு
மறுகாது சென்று நீங்காக்
கனகமழை பொழிமேகங் குவைலிதுவாழ்ந்
திருந்ததலேக் கடையிற் சார்ந்தார்.

(இ-ள்.) அவ்விதம் அன்புற்ற ஹம்சா அவர்கள் தங்களது பக்கத்தில் மனமகிழ்ச்சியும் மனக்களிப்பும் தொடர்ந்துவரும் வண்ணம் எழும்பி அவ்வீட்டினது வாயிலேக்கடந்து வலிமையையுடைய ஆண் சிங்கத்தைப்போலச் சுழற்சியடையாது ஒள்ளிய கிரணங்களேக்கொண்ட மாடங்களில் பதித்துவைத்த இரத்தினவர்க்கங்கள் அழகிய பிரகாசத்தை நாலுபக்கங்களிலும் வீசச் சூரியன் தனதுசரீரமானது மறுக்கமடையாநிற்கும் அலங்காரங்களேயுடைய தெருவின்நடுவாய் நடந்து மாறுதபொன்மாரிபொழிகின்ற மேகமாகிய குவைலீதுவாழ்ந்திருக்கும் வீட்டினது தலேவாயலிற் போய்ச் சேர்ந்தார்கள். (௪௫)

அபித்தாலிப் திருத்துணேவ ரறத்தாறு
வழுக்காத வண்ண னீங்காக்
கவுட்டான மொழுகுமுரட் கரித்தானே
நெருங்குமணிக் கடையி லாகிப்
புவித்தாரை நடத்திமறு புறத்தேசப்
பொருளனேத்தும் பொருப்பு போலக்
குவித்தானே சொலற்கரிய குலத்தானேக்
குவைலிதைக்கண் குளிரக் கண்டார்.

(இ-ள்.) அபீத்தாலி பவர்களின் அழகிய சகோதரரும் தருமநெறியிற் சறுகாத அண்ணலுமாகிய ஹம்சா அவர்கள் மாறுத கவுளினது மதமொழுகாநிற்கும் வலிமையினேயுடைய யானேப்படைகள்

நெருங்குகின்ற இரத்தினவர்க்கங்கள் பதித்த அந்தக் கடைவாயலி ன்கண் அவ்வாறுபோய்ச் சேர்ந்துப் பூலோகத்திலுள்ள பலவழிகளி லும் ஜனங்களை நடத்தி வியாபாரத் தொழிலினால் அன்னிய தேசங் களினது பொருள்க ளெல்லாவற்றையும் மலைகளைப்போலக் குவித்த வனைச்; சொல்லுதற்கரியகுலத்தையுடையவனை, குவைலீதென்னும் அபிதானத்தையுடையவனைத், தங்களி னிருகண்களும் குளிர்ச்சிய டையும்படி பார்த்தார்கள். (௪௬)

இருந்தவனு மெதிராகி ஹமுசாத
னெழிற்கரந்தன் காத்தி லேந்திப்
பெருந்தவிசி னினி திருத்தி யருகிருந்து
பிரியமொழி பேசிப் பேசி
விரிந்தபிள வரிந்தவிலைக் கருப்பூர
முடனளித்து வெற்றி வேந்தே
யருந்தவமே யெனப்போற்றி யிவணடைந்த
வரலாறே தறியே னென்றான்.

(இ-ள்.) அப்போது அவ்விடத்தில் தங்கியிருந்தவனாகிய குவை லீதென்பவனும் எழுந்து எதிராகச்சென்று ஹம்சா அவர்களின்அழ கிய கைகளைத் தனதுகைகளினால்தாங்கி இனிமையுடன் பெரிய ஓரா சனத்தின்மேல் இருக்கும்படி செய்து தானும் பக்கத்திலிருந்துகொ ண்டு விருப்பமான வார்த்தைகளை மிகவும் பேசிக் கருப்பூரத்தோடு விரிவுற்ற அடைக்காயின் பிளவுகளையும் காம்பரிந்த வெற்றிலைகளை யும் கொடுத்து விஜயத்தையுடைய அரச ரானவர்களே! அரிய தவ மானவர்களே! என்றுசொல்லித் துதித்துத்தாங்கள் இவ்விடம்வந்து பொருந்திய வரலாறு யாது? அதையானறிய மாட்டேன் சொல்லு ங்க ளென்று கேட்டான். (௪௭)

தெரிந்தமறை முறையாலுந் தேர்ந்தவர்சொற்
றெளிவாலுந் தெருண்ட மேலோ
யருந்தவமா யெம்மினத்தோ ராருயிரா
யருமருந்தா யப்துல் லாபா
லிருந்தமணி யாயுதித்த முகம்மதெனும்
விடலைகருத் தினிது கூறப்
பொருந்தமண முடிப்பதற்கு வந்தேனென்
றினையமொழி புகல்வ தானார்.

(இ-ள்.) அவன் அவ்விதம் கேட்க ஹம்சா அவர்கள் வேதங்களைக் கற்றுணர்ந்த முறைமையினாலும் தெளிந்த மகாத்துமாக்களின் வார்த்தைகளினது தேர்ச்சியினாலும் தெளிவடைந்த மேன்மையையுடைய குவைலீதே! அரியதவமாகவும் எமது பந்துக்களின் சரீரத்தில் நிறைந்த ஜீவனாகவும் அருமையுற்ற சஞ்சீவியாகவும் எம் சகோதரர் அப்துல்லா அவர்களி னிடத்திலிருந்த இரத்தினமாகவும் இவ்வுலகின்கண் உதையமான முகம்மதென்று சொல்லும் வாலிபரின் கருத்தானது பொருந்தும்படி இன்பமுற ஒருவிவாகஞ் செய்வதற்காய் இவ்விடத்தில் வந்துசேர்ந்தேனென் றிப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினார்கள். (௬௮)

இந்நகரிற் குறைஷிகணம் மினத்தவரின்
　மதித்தவர்தம் மிடத்தில் வாய்ந்த
பொன்னனைய மடவாரைத் தருதுமென
　வவரவரே புகல்கின் றாராற்
றன்னவரிற் பெரியாரின் மதியாரிற்
　றவத்தோரிற் றலைமை யோரி
னின்னையல திலையெனவே யவருரைத்த
　மொழியனைத்து நிகழ்த்தி யன்றே.

(இ-ள்.) இந்த மக்கமாநகரத்தின்கண் குறைஷிகளான நமது பந்துக்களில் மதிக்கப்பட்டவர்கள் தங்கள் தங்களிடத்திற் பொருந்திய முண்டகாசனையைப்போலும் பெண்களை அந்த முகம்மதுக்கு மனையாளாக விவாகஞ்செய்து தருகின்றோமென்று அவரவரேசொல்லுகின்றார்கள் ஆனால் தன்னவர்களாகிய அவர்களனைவர்களும் பெரியோர்களிலும் அறிவாளர்களிலும் தவத்தார்களிலும் முதன்மையார்களிலும் உன்னையல்லாமல் வேறேயொருவருமில்லரென்று அவர்கள் சொன்ன வர்த்தமானங்களெல்லவற்றையும் உன்னிடத்தில்சொல்லி.

மாற்றுரைநுங் கருத்திலுறும் படிகேட்டு
　வருதியென மறுவி லாது
போற்றியுரைத் தனரெனது முன்னோரி
　னுரைப்படியே புகன்றேன் மிக்க
தேற்றமுறு மனத்தாய்ந்து நிகழ்காலம்
　வருங்காலச் செய்கைநோக்கி
யூற்றமுட னுரைத்திடுக வவ்வுரையின்
　படிநடப்ப துறுதி யென்றார்.

(இ-ள்.) உன்னுடைய எண்ணத்திற் பொருந்தியவண்ணம் பதவார்த்தைகேட்டுக்கொண்டு வருவாயாகவென்று எனது ஜேஷ்டராகிய அபீத்தாலிபவர்கள் குற்றமில்லாது புகழ்ந்து சொன்னார்கள் அவர்களின் சொற்படி யானும் இங்குவந்து பேசினேன் ஆதலினால் அதிகத் தெளிவுற்ற உனது மனத்தின்கண் ஆராய்ந்து நடக்கின்ற காலம் இனிமேல் வராநிற்கும் காலத்தினது செயல்களைப் பார்த்து வலிமையுடன் பதற் சொல்லுவாயாக? அந்தச் சொல்லின்படி நாங்கள் நடப்பது உண்மையென்று சொன்னார்கள். (௫0)

திட்டுதிறற் புகழ்ஹமுசா வுரைத்தமொழி
 யமுதமழை செவியிற் பாய்ந்து
நாட்டமுறு மனத்தடத்தை நிரப்பிடச்செம்
 முகமலர்ந்து நவில்கி லாது
கூட்டுமுத லவன்விதிப்பு மகள்கனவு
 மவைநிகழ்ந்த குறிப்பு நோக்கிப்
பூட்டுமணிக் கதிர்வலய நெகிழுவடிக்
 கடியுங்கள் பூரித் தானே.

(இ-ள்.) அப்போது குவைலிதென்பவன் திட்டாநிற்கும் வலிமைகொண்ட கீர்த்தியையுடைய ஹம்சா அவர்கள் சொல்லிய வார்த்தைகளாகிய அமுதமழையானது தனது காதுகளிற்சாடி விருப்பமுற்ற மனமாகிய தடாகத்தை நிறைத்திடவே, செவந்த முகமானது மலரப்பெற்று யாதொன்றும் பேசாது நன்மையான சகல விஷயங்களையும் சேர்த்து வையாநின்ற முதன்மையனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் நியமிப்பையும் தன்மகளாகிய கதீஜாநாயகியவர்களின் சொப்பனத்தையும் ஹம்சா அவர்களால் நடைபெற்ற குறிப்பாகிய இவைகளையும் பார்த்துக் கைகளிற்பூட்டிய இரத்தின வர்க்கங்களினது பிரகாசத்தையுடைய கடகங்கள் நெகிழும்வண்ணம் அடிக்கடி இருபுயங்களும் விம்முதலுற்றான். (௫க)

வடிவாலுங் குணத்தாலுங் குணத்தாலு
 முகம்மதுநேர் மற்றோ ரில்லைப்
படியாளு முதியாரி லியாவரவர்
 மனம்பொருந்தப் பகர்ந்தி டாதார்
பிடியாரு மென்னடைக்கொம் பினைக்கதீஜா
 வெனத்தமியேன் பெற்றபேறைக்

கடியாரு மலர்சூட்டி நும்மிடத்திற்
றருகமனங் கருதிற் றென்றே.

(இ-ள்.) அவ்வாறு விம்முதலுற்று அழகினாலும் குணத்தினுலும் குலத்தினுலும் முகம்மதென்பவருக்கு வேறேயொருவரும் ஒப்பில்லர். இந்தப் பூலோகத்தை ஆட்சிசெய்யும் முதியவர்களில் அந்த முஹம்மதென்பவரின் விவாகத்திற் கிசைந்து சொல்லாதவர்கள்யாவர்? ஆதலால் அவருக்குப் பெண் யானைபோலும் பொருந்தாநிற்கும் மெல்லிய நடையினையுடைய பூங்கொம்பானவரைக், கதீஜாவென்று சொல்லும் தமியேனாகிய யான்பெற்ற செல்வமானவரை, வாசனை மிகுத்த புஷ்பமாலைசூட்டி உங்களுடைய இடத்தில்தரும்படி எனது இருதயமானது எண்ணிற்று. (௫௨)

எம்மனத்தி னுறுங்களிப்பு நுந்துணைவர்க்
கியம்பிநும தினத்துளானோர்
தம்மனத்துக் கிசைந்தபடி நன்மொழிகள்
சிலதெரிந்து சாற்றி வீறுர்
செம்மலிளங் களிறனைய முகம்மதையெம்
மருகரெனச் செவ்வி தாக்கி
வம்மெனமற் புயத்தமுசா தனையனுப்பி
யினிதிருந்தான் மதிவல் லோனே.

(இ-ள்.) ஆதலினால் எமது மனத்தின்கண் பொருந்திய சந்தோஷத்தை உமது சகோதரராகிய அபீத்தாலிபவர்களுக்குச் சொல்லி உம்முடைய கூட்டத்தினமானவர்களின் மனதிற்கு இசையப்பெற்றவண்ணம் நல்லவார்த்தைகள் சிலவற்றை அறிந்தெடுத்துச்சொல்லிப் பெருமைதங்கிய செம்மலாகிய இளம்பருவத்தையுடைய யானை போன்ற முகம்மதென்பவரை எமது மருமகனென்று சொல்லும் விதம் செவ்வையாக்கி வாருமென்று வலிமைதங்கிய தோள்களையுடைய ஹம்சா அவர்களை அனுப்பிவிட்டு அறிவினால் வல்லவனான குவைலிதென்பவன் இனிமையுடன் அங்கு தங்கியிருந்தான். (௫௩)

நினைத்தபடி முடிந்ததென மனத்தடக்கி
யெழுந்தமுசா நெறியி னேகிச்
சினத்தடக்கை மலையெனவுட் களிப்புமத
மொழுகமணித் தெருவு நீங்கிக்

கனைத்தகடன் முகட்டெழுந்த கதிர்கடுப்ப
வருவதுகண் கவர நோக்கி
யினத்தவர்முன் னவரிதய முககமல
நகையினொடு மிலங்கிற் றன்றே.

(இ-ள்.) அப்போது ஹம்சா அவர்கள் இருதயத்தில் எண்ணின படி நிறைவேறிற்றென்று தங்களின்மனசின்கண் அடக்கிக்கொண்டு அவ்விடத்தைவிட்டும் எழும்பிப்பாதையின்கண் சென்று கோபத்தையும் பெரிய துதிக்கையையுமுடைய மலையாகியயானையைப்போல அகத்தினிடத்துள்ள மகிழ்ச்சியாகிய மதமானது வெளியிலொழுகும்வண்ணம் இரத்தினவர்க்கங்கள்செறிந்த வீதிகளைக்கடந்து ஒலியாநிற்கும் சமுத்திரத்தினது உச்சியிலெழும்பிய சூரியனையொப்ப வருவதை அவர்களின் பந்துக்களும் அபீத்தாலிபுமுதலிய தமயன்மார்களும் தங்களி னிருகண்களும் ஆசிக்கும்படி பார்த்து அவர்களின் இதயமானது முகமாகிய தாமரையினது பிரகாசத்துடன் விளங்கினது, (௫௪)

முன்னவர்தம் முன்னேகிப் பின்னவரு
மிருகரங்கண் முகிழ்த்துத் தாழ்த்துத்
தன்னிதய மலர்மொழித்தே னுவழியே
யொழுகியவர் செவியிற் சார
மன்னவர்மன் குவைலிதுதம் மருங்கிருந்து
மணமொழியின் வரலா றெல்லாஞ்
சொன்னதுவு மவன்மறுத்துச் சொன்னதுவும்
விரித்தெடுத்துச் சொல்லி னூரால்.

(இ-ள்.) அந்நேரத்தில் ஹம்சா அவர்களும் தங்களின் சேஷ்டரான அபீத்தாலி பவர்களின் முன்னர்ச்சென்று இரு கைகளையும் குவித்துப் பணிந்து தங்கள் அகத்தாமரையின் வர்த்தைகளாகிய மதுவானது நாவினதுபாதையாக ஒழுகி அவர்களின் காதுகளிற் போய்ப்பொருந்த இராஜாதிபனான குவைலிதின் பக்கத்திலிருந்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் விவாகச்செய்தியின் வரலாறெல்லாவற்றையும் சொன்னதையும் அதற்கு அக்குவைலிதுமறுத்துச்சொன்னதையும்விரிவாக்கி எடுத்துச்சொல்லினூர்கள்.

திருத்துணைவ ருரைத்தமொழி யபித்தாலிப்
கருத்தூடு திளைப்ப ஹாஷிம்

பெருத்தகுலத் தவர்க்கோதிக் குறைஷிகளின்
முதியாரைப் பெரிது கூட்டிப்
பொருத்தமிது நலதினத்தின் முகுர்த்தமிது
வருகவெனப் பொருவிலாத
குருத்தவள மணிமாலைக் குவைலிதுபாற்
குறித்தெழுந்தார் கொற்ற வேந்தர்.

(இ-ள்.) அழகிய தங்களின் சகோதரரான ஹம்சா அவர்கள் அவ்வாறுசொல்லிய வார்த்தைகள் அபீத்தாலி பவர்களின் கருத்தினகம்போய்ப் பெருக, அதிகரித்த ஹாஷீம் குலத்தவர்க்கு இச்சமாசாரங்களைச்சொல்லி அதிகமாய்க் குறைஷிகளின் முதியவர்களைச் சேர்த்து விவாகத்திற்குறிய பொருத்தமிது நல்லதினத்தினது முகூர்த்தமிது வாருங்களென்று கூப்பிட வெற்றியையுடைய வேந்தர்களான அவர்களியாவர்களும் மனசின்கண் மதிப்பிட்டுப் பிரகாசமானது குருக்கப்பெற்ற இரத்தின மாலைகளையுடைய ஒப்பில்லாத குவைலீ திடத்திற்கு எழும்பினர்கள். (௫௬)

ஆரிதுகு தம்சுபைறு அப்துல்ககு
பாவபூ லஹபுகை தாக்குக்
காரேயும் விருறப்பா சுடன்ஹம்சா
வுடனேமு கைரு தாமுஞ்
சீரேறு மபித்தாலிப் அப்துல்லா
மதலையெனுஞ் செவ்வி யோர்க்குத்
தாரேறு வதுவைமொழி பகரவரும்
வரலாறு தன்னைக் கேட்டான்.

(இ-ள்.) அவ்வாறு எழும்பிய மேகங்கள் பொருந்தா நிற்கும் கைத்தலத்தையுடைய ஆரீது, குதம், சுபைறு, அப்துல்கபா, அபூலஹபுகைதாக்கு, விருறு, அப்பாசொடு ஹம்சாவும் முகைருவும் கீர்த்திமிகுந்த அபீத்தாலி பவர்களும் அப்துல்லா அவர்களின் புதல்வரென்னும் அழகையுடையவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குத் தாரேறும் கலியாண வார்த்தைகள் பேசுவதற்காய்த் தன்னிடத்தில் வருகின்ற வரலாற்றைக் குவைலீதென்பவன் தனது இரு காதுகளினாலும் கேள்வியுற்றான். (௫௭)

அருமறைதேர் குவைலி துகேட் டகத்திலடங்
காவுவகைப் பெருக்கா நந்த
மிருகரையும் வழிந்தகடற் குளித்துநடு
வெழுந்துமிதந் தெதிரே புக்குத்
தருவனைய வபித்தாலிப் தம்முடனே
மன்னவர்க டமையும் போற்றித்
தெரிகதிரா சனத்திருத்தி யனைவருக்கு
முறைமுறையே சிறப்புச் செய்தான்.

(இ-ள்.) அரிய வேதங்களை யெல்லாங் கற்றுத் தெளிந்த அக் குவைலிதென்பவன் அவ்வாறு கேள்வியுற்று மனசின்கண் அடங் காத சந்தோஷ வெள்ளமாகிய ஆநந்த மானது இரு கரைகளிலும் வழியப்பெற்ற சமுத்திரத்தின்கண் மூழ்கி மத்தியில் எழும்பி மித ந்து அவர்களின் எதிராகப்போய்க் கற்பகத் தருவையொத்த அபித் தாலிபவர்களோடு மற்ற அரசர்களையும் புகழ்ந்து பிரகாசமானது விளங்காநின்ற ஆசனங்களில் இருக்கும்படி செய்து அவர்களெல் லாவர்களுக்கும் வரிசைவரிசையாய்ச் சிறப்புகள் செய்தான். (௫௮)

சொல்லரிய காரணத்துக் குறுபொருளாய்
நமர்க்குயிராய்த் தோன்றித் தோன்றுஞ்
செல்லுலவு கவிகைநிழல் வள்ளலுக்கு
மணமுடிக்குஞ் செய்தியாக
வல்லமைஹா ஷிம்குலத்துக் கனைவோருங்
குறைஷிகளு மகிழ்ச்சி யாயெ
னில்லிடத்தில் வரமுதனட் கிடையாத
பெருந்தவஞ்செய் திருந்தே னென்றான்.

(இ-ள்.) அன்றியும், சொல்லுதற்கரிய காரணங்க ளெல்லாவற் றிற்கும் பொருந்திய சம்பத்தாயும் நமதுபந்துக்களின் ஜீவனும் இவ்வுலகத்தின்கண் உதயமாய் விளங்காநிற்கும் மேகங்கள் உலாவு கின்ற குடைநிழலின் வள்ளலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவ சல்லமவர்களுக்கு விவாகமுடிக்கும் சமாசாரமாய் வலிமையையுடைய ஹாஷிம்குலத்தின் எல்லாவரும் குறைஷிகளா னவர்களும் மனக்களிப்பாக எனது வீட்டின்கண் வரும்படி ஆதிகா லத்தில் கிடைத்தற் கரிய பெரிய தவத்தைச் செய்திருந்தேனென்று சொல்லினன். (௫௯)

அவ்வுரைகேட் டபித்தாலி பகக்களிப்புத்
தலைமீறி யரசே கேளீர்
மெளவல்கமழ் குழன்மயிலை யென்மகற்கு
மணமுடிக்க வரப்பெற் றேனாற்
பௌவநதி சூழ்பாரைப் புரந்தளிக்கும்
பெரும்பதவி படைத்தேன் செல்வ
மெவ்வெவையும் படைத்தேனிங் கினிக்கிடையாப்
பொருளுமெனக் கெய்து மென்றார்.

(இ-ள்.) குவைலீது சொல்லிய வார்த்தைகளை அபீத்தாலி பவர்கள் இருகாது களினாலுங் கேள்வியுற்று மனமகிழ்ச்சி யானது சிரசின்கண் அதிகரித்து அக்குவைலீதைப்பார்த்து இராஜரானவரே! நீவிர் கேட்பீராக: யான் வாசனை பரிமளியாநிற்கும் கூந்தலையுடைய மயிலாகிய உமது புதல்வி கதீஜாநாயகியை எனதுமகன் முகம்மதென்பவர்க்கு விவாகம் முடிக்க உம்மிடத்தில் வந்தேன். அதனால் சமுத்திரம்சூழ்ந்த இந்தப் பூலோகத்தைக் காத்து இரட்சிக்கும் பெரிய பதவியைச் சம்பாதித்தேன். அன்றியும் எல்லாவகைப்பட்ட செல்வங்களையும் சம்பாதித்தேன். இனிமேல் இவ்விடத்தில் எனக்கு அகப்படாத பொருள்களும் அகப்படுமென்று சொன்னார்கள்.

இருவருஞ்சம் மதித்துரைத்தா ரெனக்குறைஷிக்
குலத்தரச ரிதயங் கூர்ந்து
மருமருபூங் குழலாட்கு முகம்மதுக்கு
மணநாளை வகுத்துக் கூறித்
தெரிதருசீ தனப்பொருளு மின்னதென
வகைவகையாய்த் தெளியச் சாற்றிப்
பொருவரிய பொற்பிளவும் வெள்ளிலையுக்
தருகவெனப் புகழ்ந்திட் டாரால்.

(இ-ள்.) அப்போது குறைஷிக்குலத்தின் அரசர்களான அங்கிருந்த யாவர்களும் மனமுடன்பட்டு ஒருவர்க்கொருவர் பேசினார்களென்றுத் தங்கள் தங்களது மனமானது கூரப்பெற்று வாசனை பொருந்தும் அழகிய கூந்தலையுடைய கதீஜா நாயகியவர்களுக்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களுக்கும் முகூர்த்த நாளை இன்னதென்று வகைப்படுத்திச்சொல்லி விளக்கமான சீதனப்

பொருளும் இன்னதென்று வகைவகையாகத் தெளிவாய்ச்சொல்லி ஒப்பில்லாத அழகிய அடைக்காயின் பிளவும் வெற்றிலேயும் தருவாயாகவென்று அக்குவைலிதைத் துதித்துக் கேட்டார்கள். (௬௧)

வெள்ளிலேபா கேலமில வங்கமுடன்
 றக்கோலம் விரைகற் பூர
மள்ளியசந் தனச்சேறும் பொற்கலத்தில்
 குவைலிதெடுத் தருள வாங்கி
வள்ளியோர்க் கினிதீந்து மறையோர்க்கு
 மெடுத்தருளி வலக்கை சேர்த்தித்
தெள்ளியநன் முகூர்த்தமுதற் றிங்களென
 வகுத்துரைத்தார் செவ்வி யோரே.

(இ-ள்.) அவ்விதங் கேட்கவே குவைலிதென்பவன் வெற்றிலே, பாக்கு, ஏலம், இலங்கவத்துடன் தக்கோலம் மரிமளத்தையுடைய கற்பூரம், அள்ளப்பட்ட சந்தனக் குழம்பாகிய இவைகளனைத்தையும் எடுத்துப் பொன்னினலான ஒருதட்டத்தில்வைத்துக் கொடுக்க, அதை அழகையுடையவர்களான அபீத்தாலிபவர்கள் தங்களிரு கைகளினலும் வாங்கி வரையாது கொடாநிற்கும் அங்குற்ற வள்ளியோர்க்கு இனிமையுடனருளி வேதியர்களுக்கும் எடுத்துக் கொடுத்துத் தங்களின் வலதுகைபை குவைலிதின் வலதுகையோடு பொருந்தும்படி செய்து தெளிவாகிய நன்மைபொருந்திய முகூர்த்தமானது வருகின்ற முதல்திங்கள் கிழமைக்கென்று வகைப்படுத்திச் சொன்னர்கள். (௬௨)

இலங்கிலேவேற் குவைலிதுபா லிருந்துபசா
 ரத்தினுட னெழுந்து நீங்கா
வலங்கலணி புயத்துணைவ ரனைவரொடு
 மபித்தாலி பன்பு கூர
விலங்கலென வளர்மாட நகர்வீதி
 தனைக்கடந்து விரைவி னேகிக்
குலங்கெழும மனைபுகுந்து மனைவியர்க்கு
 மணமொழியைக் கூறி னரால்.

(இ-ள்.) அவ்வாறுசொல்லி அபீத்தாலிபவர்கள் மாருத இரத்தின மாலையணிந்த தோள்களையுடைய தங்களின் சகோதரர்களோடும் அங்குவந்திருந்த மற்றும் எல்லாவர்களோடும் பிரகாசியாநின்ற

இலைகளைக்கொண்ட வேலாயுதத்தையுடைய குவைலிதி னிடத்தி லிருந்து உபசாரத்தினுடனெழும்பிஅன்பானததிகரிக்கும்வண்ணம் மலைகளைப்போலும் ஓங்காநிற்கும் மாடங்களையுடைய அந்தத்திருமக் கமா நகரத்தின் தெருக்களைத் தாண்டிச் சீக்கிரமாய்நடந்துசென்று இனத்தவர்கள் நிறையும்படி வீட்டின்கண் நுழைந்து தங்கள் மனை யாளான பாத்திமா அவர்களுக்கு விவாகத்தினது வர்த்தமானங்க ளைச் சொன்னார்கள். (௫௯)

மணம்பொருத்துபடலம்·

முற்றிற்று.

ஆ படலம்-உஉ-க்கு-திருவிருத்தம்-௬௬௫

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

மணம்புரிபடலம்.

கலிநிலைத்துறை.

குறைஷி மன்னவ ருடனபித் தாலிபுங் குழூமி
நிறைசெய் மாமதி முகம்மதின் மனவினை நிலவ
விறைவ ரியாவரு மறியவிந் நகர்க்கெழின் முரச
மறைக வென்றலு மெழுந்தனன் கடிமுர சறைவான்.

(இ-ள்.) குறைஷி வேந்தர்களோடு அபீத்தாலிபவர்களுங் கூடி நிறைவைச் செய்யாநிற்கும் பெருமைதங்கிய சந்திரனாகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் விவாகச்செய்கையானது எவ்விடங்களிலும் பரவவும், அரசர்களனை வர்களும் அறியவும், இந்தத் திருமக்கமாநகரம் முழுவதிலும் அழ கிய மணமுரசும் அடிப்பாயாகவென்று சொல்லிய மாத்திரத்தில் மணமுரசறையப்பட்ட ஒருவன் எழும்பினான். (௧)

ஒட்டை மீதினின் மணமுர சினையெடுத் துயர்த்தி
விட்ட வெண்கதி ருமிழ்மணி மறுகிடை மேவி
வட்ட வாருதிச் செல்வமொத் திந்நகர் மாக்க
ளிட்ட மாயினி தூழிவாழ் கெனவெடுத் திசைத்தே.

(இ-ள்.) அவ்வாறு எழும்பிய அவன் மணமுரசை யெடுத்து ஒரு ஒட்டகத்தின்மீது ஏற்றி வெள்ளிய கிரணங்களை நாலுபக்கங்களிலும் விட்டு உமிழாநிற்கும் இரத்தினவர்க்கங்களையுடைய வீதியின்கண் போய்ச்சேர்ந்து வட்டமான சமுத்திரத்தினதுசெல்வத்தை நிகர்த்து இந்தத் திருமக்கமா நகரத்தின்கண்ணுள்ள மனுஷியர்களனைவர்களும் சினேகமாய் இனிமையுடன்ஊழிகாலபரியந்தம்வாழ்வீர்களாக வென்று எடுத்துச் சொல்லி. (உ)

ஹாஷி மாகுலத் தப்துல்லா மகனணி மருவி
வாச மெய்முகம் மதுபெறும் புதுமணக் கோலம்
காசி லாவிதுக் கிழமையி னிரவெனக் காட்டிப்
பாச முற்றவர்க் குரைப்பதுண் டெனப்பகர்ந் திடுவான்.

(இ-ள்.) பெருமைதங்கிய ஹாஷிம் குலத்தினது அப்துல்லா வென்பவரின் புதல்வரான அழகிய கஸ்தூரியினது பரிமளத்தைக் கொண்ட சரீரத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பெறுநிற்கும் புதியவிவாகத்தினது கோலமானது வருகின்ற குற்றமற்ற திங்கட்கிழமையி னிரவென்று யாவர்களுக்கும்எடுத்துக்காட்டி அன்புற்றவர்களுக்கு இன்னம்சொல்லுவ துண்டுமென்று சொல்லுவான். (௩)

நறைகொள் வாயிலின் மகரதோ ரணங்களை நடுமி
னிறையு மாடங்கள் புதுக்குமின் கொடிநிரைத் திடுமி
னுறையும் வெண்சுதை மதிடொறுங் கரைத்தொழுக் கிடுமின்
குறைவி லாதபொற் பூரண குடங்கள்வைத் திடுமின்.

(இ-ள்.) மகரதோரணங்களைப் பரிமளத்தைக் கொண்ட வாசலின்கண் நாட்டுங்கள் பலவித செல்வங்களினாலும் பூரணப்பட்ட மாடங்களைச் செவ்வைப் படுத்துங்கள். கொடிகளை வரிசையாகக்கட்டுங்கள். சுவர்கள்தோறும் உறையாநிற்கும் வெண்ணிறத்தையுடைய சுண்ணச்சாந்தினைக் கரைத்துத் துளித்திடுங்கள். குறைவில்லாத பொன்னினாலான பூரணக்கும்பங்களை வைத்திடுங்கள். (ச)

பூணு நல்லிழை பூணுமின் குழற்ககிற் புகைமின்
காணொ ணுவிடைக் கம்பொன்மே கலைகவின் புனைமின்
பாணி யிற்சரி தோளணி பலபரித் திடுமின்
வாணு தற்கணி கடுவரி விழிக்குமை வரைமின்.

(இ-ள்.) சரீரத்தின்கண் அணியாநிற்கும் நல்ல ஆபரணங்களை அணியுங்கள். கூந்தலுக்கு அகிற்கட்டையினது தூமத்தைப்புகைத்திடுங்கள். கண்ணினுற் காணுதற்கரிதான இடையினுக்கு அழகிய பொன்னுலாகிய சிறந்த மேகலாபரணத்தைத் தரியுங்கள். கைகளிற் சரியாநின்ற பலவிதத் தோளினது கலங்களைப் பூணுங்கள். ஒள்ளிய பிரகாசத்தையுடைய நெற்றிக்குப் பொட்டும் விடத்தைப்போலும் செவ்வரி பரந்த கண்களுக்கு மையும் எழுதுங்கள். (ரு)

இரவ லர்க்கினி தருளொடு மின்னமு திடுமின்
வரைவி லாதெடுத் தேற்பவர்க் கணிவழங் கிடுமி
னிருமை யும்பலன் பெறுமினென் றினையென வியம்பி
யரவ மீக்கொளக் குணிலெடுத் தணிமுர சறைந்தான்.

(இ-ள்.) யாசகர்களுக்கு இனிய கிருபையோடும் இன்பமான அன்னத்தையிடுங்கள். இரப்பவர்களுக்கு ஆடையாபரண முதலியவற்றை வரைவில்லாது எடுத்து வழங்குங்கள். இம்மையிலும் மறுமையிலும் பேற்றைப் பெறுங்களென்று இப்படிப்பட்டவைகளைக் கூறி ஓசையானது அதிகரிக்கும்வண்ணம் வளைந்ததடியையெடுத்து அழகிய முரசினையறைந்தான். (சா)

இந்த மாமொழி பகர்ந்தெழு தினமுர சியம்ப
மந்த ராசல மாளிகை மறுகுக டோறுங்
கந்த மென்மலர்த் துகடுடைத் திருநிலங் கவினச்
சுந்த ரக்கதிர் மடந்தையர் சுதைமெழுக் கிடுவார்.

(இ-ள்.) அவ்வாறு அவன் பெருமைதங்கிய இந்த வார்த்தைகளைச் சொல்லி எழுநாள் வரைக்கும் முரசடிக்கவே, மந்தரிகிரியையொத்த மாளிகைகளையுடைய எல்லா வீதிகளிலும், வாசனை யமைந்த மெல்லிய புஷ்பங்களினது மகரந்தங்களைச் சுத்திசெய்து பெரிய இந்தப் பூலோகமானது சிறக்கும்படி அழகியபிரகாசத்தைக்கொண்ட திருமேனியையுடைய பெண்கள் சுண்ணச்சாந்து பூசுவார்கள், ()

இடன றத்திருக் காவண நிறைநிரைத் திடுவார்
நடலே யுள்ளற மகரதோ ரணம்பல நடுவார்
விடுசு டர்ப்பட மெடுத்துயர் வெளியடைத்திடுவார்
குடுமி மாடத்தி னணியணி கொடித்திர ணடுவார்

(இ-ள்.) அன்றியும்; எங்குமிடமின்றி அழகிய பந்தர்களை வரிசையாக ஒழுங்கு படுத்துவார்கள். வஞ்சகமானதுமனதின்கண் அற்றுப்போகும்வண்ணம் பலவித மகரதோரணங்களை நட்டுவார்கள். நாலுபக்கங்களிலும் பிரகாசத்தைவிடாநிற்கும் படங்களையெடுத்து உயர்ந்த வெளிகளை யடைத்திடுவார்கள். மாடங்களினது சிகரங்களில் வரிசைவரிசையாய்க் கொடிகளின் திரள்களை நாட்டுவார்கள்.

இடைப ழக்குலே யொடுகத லிகணிரைத் திடுவார்
மடல்வி ரிந்தபூங் கமுகினை நிறுவிவைத் திடுவார்
கடிந றவொழு கிடக்கொடிக் கரும்புக ணடுவார்
துடர ணிக்குலேத் தெங்கிள நீர்கடுக் கிடுவார்.

(இ-ள்.) இடைகளிற் பழக்குலைகளுடன் வாழைமரங்களை வரிசைப்படுத்துவார்கள். மடல்கள் விரியப்பெற்ற அழகிய கமுகமரத்தினை நிறுத்திவைப்பார்கள். வாசனையையுடைய தேனனது ஒழுகும்வண்ணம் நீண்ட கரும்புகளை நட்டுவார்கள். ஒன்றோடொன்று தொடரப்பெற்ற அலங்காரத்தைக்கொண்ட குலைகளையுடைய தெங்கின் இளநீர்களைத் தூக்குவார்கள். (௬)

நறவு சிந்திடக் கனியொடு சூதங்க ணடுவார்
நிறையும் பொற்சுளை முட்புறக் கனிநிரைத் திடுவார்
மறுவின் மாதுளைக் கனியொடும் பூவொடும் வனைவார்
செறிதி ரட்கொழு விஞ்சியுங் கனியொடு சேர்ப்பார்.

(இ-ள்.) அன்றியும் தேனைச்சொரியும்வண்ணம் பழங்களுடன் மாமரங்களை நட்டுவார்கள். பெருகாநிற்கும் பொன்போன்றசுளைகளையுடைய பலாப்பழங்களை வரிசைப்படுத்திக்கட்டி வைப்பார்கள். குற்றமற்ற பூவோடும் கனியோடும் மாதுளைச் செடிகளினால் அலங்கரிப்பார்கள். மிகுந்ததிரளாகிய கொழுவிஞ்சியையும் பழங்களோடுசேர்த்துவைப்பார்கள். (௰)

வன்ன பேதபட் டாடைகொய் தணிநிரை வனேவார்
பொன்னி னன்மலர் மாலைக டுயரறப் புனேவார்
நன்ன யம்பெற நறுக்கிய நறுக்குநாற் றிடுவார்
துன்னு வெண்கதிர்க் கற்றைபோற் கவரிதூக் குவரால்.

(இ-ள்.) அன்றியும் வேற்றுமையுற்ற சித்தரிப்புகளையுடைய பட்டு வஸ்திரங்களைக்கொய்து வரிசைவரிசையாய் அலங்கரிப்பார்கள் துன்பமானதறும்படி பொன்னிறமமைந்த நல்ல புஷ்பமாலைகளை வனேவார்கள் மிகுந்த மேன்மை பெறும்வண்ணம் நறுக்கப்பெற்ற நறுக்குகளைத் தூக்குவார்கள். நெருங்கிய வெள்ளிய கிரணக்கற்றைகளைப் போலக்கவரிகளை நாற்றுவார்கள். (௧௧)

முல்லை சண்பகம் பாடலஞ் செவ்விதழ் முளரி
மல்லி கைமடற் கைதைமா மகிழ்மருக் கொழுந்து
பல்ல வத்தொடு நிரைநிரை பன்மலர் தொடுத்தாங்
கெல்லை யில்லெனத் தூக்குவ ரெழில்விளங் கிழையர்

(இ-ள்.) அன்றியும், அழகானது பிரகாசியா நிற்கும் ஆபரணங்களையுடையபெண்கள் முல்லை, சண்பகம், பாடலம், செவ்விய இதழ்களின் தாமரை மல்லிகை, மடல்களமைந்த தாழை, பெருமைதங்கிய மகிழ், முதலிய பலவிதப் புஷ்பங்களை மருக் கொழுந்துகளோடும் தளிர்களோடும் வரிசை வரிசையாக மாலையாய்க் கட்டி அந்தத் திருமக்க பாநகாத்தின்கண் இடமில்லை யென்று சொல்லும் வண்ணம் தூக்குவார்கள். (௧௨)

சால வெண்முகைப் புன்னையின் றண்மலர் தொடுத்து
நால விடட்திற் றும்பிக ணடுநடு வதிந்த
கோல மாக்கட லீன்றமுத் திடங்கிடக் கோத்து
நீல மாமணி யிடையிடை தொடுத்தன நிகர்த்த.

(இ-ள்.) அன்றியும், புன்னைமரங்களின் அதிக வெண்ணிறமமைந்த முகைப் பருவத்தையுடைய குளிர்ச்சிதங்கிய புஷ்பங்களை மாலையாகக்கட்டி நானுபக்கங்களிலும் நாலும்படிவிட்டு அதின்நடுவுகளில் தேனீக்கள் தங்கியிருக்கின்ற சாயலானது, பெருமைபொருந்திய சமுத்திரத்தினுற் பெறப்பெற்ற முத்துக்களைப் பிரகாசிக்கும்

வண்ணம் தொடுத்து அதின் நடுவுகளின் நீலநிறத்தையுடைய மகத்தான இரத்தினங்களைத் தொடுத்தவைகளை ஒத்திருந்தது. (௧௩)

குவளை மைவிழிச் சுரிகுழ லியர்கொழுங் கரத்தாற்
றுவளு மாதுளை மலரினை நிரைநிரை தொடுத்துத்
தவள மாமணிப் பந்தரிற் றூக்கிய தன்மை
பவள மாலிகை நான்றன போன்றன பாங்கர்.

(இ-ள்) அன்றியும், நீலோற்பலப் புஷ்பத்தைப் போன்ற மையுண்டகண்களைப் பெற்ற முறுக்குத்தங்கிய கூந்தலையுடைய பெண்கள் தங்களினது செழிய கைகளினால் துவளாநிற்கும் மாதுளையினது புஷ்பங்களை வரிசை வரிசையாய்க்கட்டி. வெண்ணிறத்தைக்கொண்ட மகத்தான இரத்தினங்களையுடைய பந்தர்களில் தூக்கியவிதமானது, நான்கு பக்கங்களிலும் பவளத்தினாலான மாலைகள் நான்றவைகளை யொத்திருந்தது. (௧௪)

சலதி வெண்டிரைத் தரளவெண் மணியொடு தயங்கக்
குலவு நீலமா மணியிடை கோத்தவை தூக்கி
யிலகு பூந்துகிற் பந்தரின் வயினிடு கதிர்க
ணிலவு வெண்கதி ரொடுமிருள் பரந்தென நிகர்த்த.

(இ-ள்.) அன்றியும், வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்தின்கண் உதயமாகா நிற்கும் முத்தாகிய வெண்ணிறத்தையுடைய இரத்தினங்களுடன் பிரகாசிக்கும் வண்ணம் ஒளிர்கின்ற மகத்தாகிய நீலவிரத்தினங்களை நடுவுகளிற் கோத்து அவைகளை நாலுபக்கங்களிலும் தூக்கி விளங்காநின்ற பூம்பட்டுகளையுடைய பந்தர்களினிடத்து வீசுகின்ற கிரணங்களானவை, இலங்குகின்ற வெள்ளிய கிரணங்களுடன் இருள்களானவை யெங்கும்பரவி இருந்தவைகளை யொத்திருந்தன. (௧௫)

மாச டர்த்தெறி மரகத மணிநிரை வடங்க
ளூச லாயணி நான்றிட வுமிழ்பசுங் கதிர்கள்
பூசு சந்தனச் சுவர்தொறும் வாயிலின் புறத்தும்
பாச டைத்திரள் விரிந்தன பாரினும் பாப்பும்.

(இ-ள்.) அன்றியும், மாசுகளை அடரும்வண்ணம் செய்து எறியாநிற்கும் மரகதமணிகளின் வரிசையையுடையவடங்கள் ஊஞ்சலாய் அழகுடன் நால அதனால் உமிழாநின்ற பசியகிரணங்கள்

சந்தனத்தைப்பூசிய சுவர்க ளெல்லாவற்றிலும் வாயிலின் பக்கங்களி லும் பூமியின் கண்ணும் பச்சைநிறத்தையுடைய இலைகளின் கூட்ட மானது பரவியதைப் போல் பரவும்படி செய்யும். (௧௬)

மிக்க செம்மணித் தொடையலில் விளங்கிய கதிர்கள்
பக்க மீக்கொளப் பந்தரின் வயிரபங் திகளி
னொக்க வெங்கணும் பரந்தது நிறைந்திட வுயர்ந்த
செக்கர் வானக மீனொடு திகழ்வன சிவணும்.

(இ-ள்.) அன்றியும், மிகுந்த செந்நிறத்தைக் கொண்ட இரத் தினமாலைகளில் பிரகாசித்த கிரணங்கள் பக்கங்களில் உயர்ச்சி யமை ந்த அந்தப் பந்தர்களினது வயிரமணிகளின் வரிசையில் ஒருமிக்க எவ்விடங்களிலும் பரவினது, மேலாகிய செவ்வானமானது நிறை யும்வண்ணம் நட்சத்திரங்களுடன் ஒளிர்வதை நிகர்த்திருந்தது. ()

அறைப்பு றத்தினு மாலயத் திடத்தினு மணியாற்
சிறப்பு மிக்கன செய்தவத் தெருத்தலை தோறு
முறப்ப சந்தசெங் குமிழ்க்கிளி யினத்தொடு மொழுங்காய்ப்
பறப்ப தொத்தன பாசிலைத் தோரண பந்தி.

(இ-ள்.) அன்றியும், அறைப்புறங்களிலும் தேவாலயமாகிய கஃபத்துல்லாவி னிடங்களிலும் மிகுந்த இரத்தின வர்க்கங்களினால் அலங்காரங்கள்செய்த அவ்வீதிக ளெல்லாவற்றிலும் பசிய இலைகளை யுடைய தோரணங்களினது வரிசைகளானவை, முழுவதும் பச்சை நிறத்தைக்கொண்ட செவந்த சொண்டினையுடைய கிளிகள் தங்க ளின் இனத்தோடும் வரிசையாகப் பறப்பதை யொத்திருந்தன. ()

கனக மாமழை பொழிதர வருமபுல் காசி
மனதி னன்னெறி யொழுங்குறு மாட்சியின் மான
வினம ணிக்கதிர் தவழ்சிலை மேனிலை யெவையும்
புனைமுகிற்குல மொத்தென வகில்புகைத் திடுவார்.

(இ ள்,) அன்றியும், பெருமைபொருந்திய சொர்னத்தினலான மழையைப்பொழியும்வண்ணம் வந்த இந்நூலின் உதாரநாயகர் அபு ல்காசிம் மரைக்காய ரவர்களின் நல்ல சன்மார்க்கத்தினது வரிசை பொருந்தும் உள்ளத்தின் மாட்சியைப்போலக் கூட்டமாகிய இரத்

இனங்களினது பிரகாசம் தவழாநிற்கும் நிலையினையுடைய மேன்மாடங்க ளெல்லாவற்றிலும் அழகிய மேகக்கூட்டங்களை நிகர்த்துப் பெண்கள் தங்களின் கூந்தல்களுக்கு அகிற்கட்டைகளைப் புகைத்திடுவார்கள். (௧௬)

காக துண்டமுஞ் சந்தனக் கடிகையுங் கலந்து
தோகை மாரிடு புகைத்திர ளிடையிடை தோன்று
மாக மூடெழு மண்டபக் கொடுமுடி வயிர
மேக மூடுறை மின்னெனப் பிறழ்ந்தொளி மிளிரும்.

(இ-ள்.) அன்றியும், மயில்போலும் சாயலையுடைய பெண்கள் அகிற் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் ஒன்றோடொன்று கலக்கும்படிசெய்து தங்களின் கூந்தலுக்கிடாநின்ற தூமத்தினது கூட்டங்கள் இடைஇடை விளங்குகின்ற ஆகாயத்தின்கண் ணெழும்பும் மண்டபங்களினது சிகரங்களிலுள்ள வயிரமணியானது, மேகத்தினிடத்தில் தங்கிய மின்னலைப்போல இலங்கிப்பிரகாசியாநிற்கும்.

குங்கு மஞ்செறி தனத்தியர் செழுங்குழல் விரித்துப்
பொங்கு பன்னறை யூட்டிய காழகில் புகைப்ப
வெங்க ணும்பரப் பிடவொளி திகழெழின் முகங்கண்
மங்கு லூடுவெண் மதியமொத் திருந்தன மாதோ.

(இ-ள்.) அன்றியும், குங்குமச்சேறு மிகுத்த ஸ்தனபாரங்களையுடைய பெண்கள் தங்களது செழிய கூந்தல்களை விரித்து அதிகரியாநின்ற பலவிதவாசனைத் திரவியங்களை யூட்டப்பெற்ற வயிரத்தினை யுடைய அகிற்கட்டைகளைப் புகையும் வண்ணம் செய்வது எவ்விடங்களிலும் பரவிடவே அவர்களின் பிரகாச மொளிர்கின்ற அழகிய வதனங்கள் மேகங்களின் மத்தியில் வெண்ணிறத்தைக் கொண்டசந்திரனனது உதையமாய் இருப்பதை நிகர்த்திருந்தன.

நிலைகொண் மாடத்து மண்டப மருங்கினு நிமிர்ந்த
சிலைநி கர்த்தமே னிலையினுஞ் செவ்வரி விழியார்
குலிக மார்ப்பற வரைந்தெடுத் தெழுதிய கோல
மலைகண் மீதினும் பவளங்கள் படர்ந்தெனவயங்கும்.

(இ-ள்.) அன்றியும், செவந்த இரேகைகள்படர்ந்த கண்களையுடைய பெண்கள் நிலைகளமைந்த வீடுகளின் பக்கத்திலும் மண்ட

பங்களின் பக்கத்திலும் உயர்வுதங்கிய மலைகளையொத்த மேன்மாடங்களிலும் துகளறும்படி சாதிலிங்கத்தைக் குறியம்மிகளில்வைத்து அரைத்து எடுத்து எழுதிய கோலமானது, மலைகளின் மேலும் பவளக்கொடிகள் படர்ந்ததைப்போலப் பிரகாசியாநிற்கும். (௨௨)

புகைத்த காரிருட் குழன்முடித் தருமலர் புனைவார்
பகுத்த நன்னுத லிலங்கிடச் சுடிகைகள் பதிப்பார்
தொகுத்த காதினிற் பலவணி தொகைசுமத் திடுவார்
மிகைத்த வேல்விழிக் கஞ்சனம் விரித்தெழு துவரால்.

(இ-ள்.) அன்றியும், பெண்கள் அகிற்கட்டைகளைப் புகையும்படி செய்த கரியமேகத்தை நிகர்த்த கூந்தல்களைக் கொண்டையாக முடித்து அதன்மீது அரிய புஷ்பமாலைகளைச் சூடுவார்கள். பகுக்கப்பட்ட நல்ல நெற்றியானது பிரகாசிக்கும்வண்ணம் சுட்டிகளைப் பதிப்பார்கள். காதுகளில் தொகுத்த பலவித ஆபரணங்களினது கூட்டங்களை ஏற்றுவார்கள். வேலாயுதத்தையும் தமக் கிணையில்லையென்று மிகைத்த கண்களில் மையினை விரிவாய் எழுதுவார்கள். ()

பூக மென்கழுத் திடனறக் கதிர்மணி புனைவார்
பாகு றச்செழுந் தோள்வளை பலபரித் திடுவார்
நாக மென்முலைக் குவட்டினன் மணிவடந் தரிப்பா
மேக லைத்திரண் மணியொடு மருங்கில்வீக் கிடுவார்.

(இ-ள்.) அன்றியும், கமுகையொத்த மெல்லிய கழுத்துகளில் இடமறப் பிரகாசத்தையுடைய மணிக்கோவைகளைத் தரிப்பார்கள் தோள்களில் பொருந்தும்வண்ணம் செழிய பலவிதத் தோள்வளைகளை அணிவார்கள். மலைபோன்ற மெல்லிய முலைகளினது உச்சியில் நல்ல இரத்தின வடங்களைப் பூணுவார்கள். இடையில் கூட்டமாகிய மணிகளோடும் மேகலாபரணத்தைக் கட்டுவார்கள். (௨௪)

உவரி மென்னுரை போலும்வெண் டுகில்விரித் துடுப்பார்
குவித னத்திடை சந்தனக் குழம்புகள் செறிப்பார்
திவளு நல்லொளி நுதலிடை திலதங்க ளணிவா
ரவிருங் கேழலத் தகமிரு பதத்தினு மணிவார்.

(இ-ள்.) அன்றியும், சமுத்திரத்தினது மெல்லிய நுரைகளைப் போன்றவெண்ணிறத்தையுடைய வஸ்திரங்களைவிரித்து அரையின்

கண் உடுப்பார்கள். குவிந்த மூலைகளினிடத்தில் சந்தனக்குழம்புகளைச் சேர்ப்பார்கள். பிரகாசியாநிற்கும் நல்ல ஒளியினையுடைய நெற்றியின்கண் பொட்டுகளை அணிவார்கள். இரண்டு பாதங்களிலும் ஒளிர்கின்ற பிரபையினையுடைய செம்பஞ்சுகளைத் தரிப்பார்கள். ()

சந்த மான்மதஞ் செழும்பனி நீரொடு சாந்தங்
கந்த மென்னறும் பொடியொடு விரையெழக் கலக்கி
யிந்து வெண்கதிர் பரப்பிய மதிணடு விடுவார்
சிந்து வார்தெருத் தலைதொறு மிடனறத் தெளிப்பார்.

(இ-ள்.) அன்றியும், செழிய பனிநீருடன் சந்தனத்தையும் கஸ்தூரியையும் வாசனையையுடைய மெல்லிய நறியதுகளோடு கலவைச்சேற்றையும் பரிமளமோங்கும் வண்ணம் கலக்கும்படிசெய்து சந்திரனனது தனது வெள்ளிய கிரணங்களை விரித்த மதில்களின் நடுவில்விடுவார்கள். வீதியினிடங்க ளெல்லாவற்றிலுயும் சிந்துவார்கள். எங்குமிடமின்றித் தெளிப்பார்கள். (உசு)

வட்ட வான்மதி முகத்திய ரிடத்தும்வாள் விரித்து
விட்ட வேற்கர வீரர்க ளிடத்தினு மெதிர்த்துத்
தொட்டி தோறும்பன் னீர்சொரிந் தருநறை மறுவி
யிட்ட சந்தனக் குழம்புகள் கரைத்திறைத் திடுவார்.

(இ-ள்.) அன்றியும், வட்டவடிவை யுடைய அழகிய சந்திரன் போலும் முகத்தை யுடையவர்களான பெண்களிடத்தும் நானுபக்கங்களிலும் பிரகாசத்தை விரியச்செய்து வீசிய வேலாயுதந்தாங்கிய கைகளையுடைய வீரர்களிடத்தும் எதிர்த்துத் தொட்டிகள்தோறும் பனிநீரைச்சிந்தி அரியவாசனையையுடைய கஸ்தூரிபோட்டசந்தனக்குழம்புகளைக் கரையும்படிசெய்து அள்ளிச்சொரிவார்கள். (உஎ)

கொந்து றைந்தபூம் பாளைவாய் வெள்ளிவெண் குடங்கள்
சந்த மென்னறை மெழுக்கிடுந் தலத்திடை தயங்கப்
பந்தியாகவைத் திருப்பது பானிலாக் கதிரோ
டிந்து வாயில்க டோறும்வந் திருந்தன வியையும்.

(இ-ள்.) அன்றியும் பூங்கொத்துகள் தங்கிய அழகிய பாளையினைக் கொண்ட வாயையுடைய வெண்ணிறம் பொருந்திய வெள்ளியினலான கும்பங்களை வாசனையமைந்த மெல்லிய சந்தனத்தினல்

பூசிய சுவத்தின்கண் பிரகாசிக்கும்படி வரிசையாக வைத்திருப்பது, சந்திரனுடைய வெள்ளிய பிரகாசத்தை யுடைய கிரணங்களுடன் வவயில்களெல்லாவற்றிலும் வந்திருந்ததை நிகராநிற்கும். (உஅ)

பால னத்தொடும் பழத்தொடும் பசித்தவர்க் கிடுவார்
கோல மென்றுகி லுடகர் கரத்தினிற் கொடுப்பார்
சோலை வாய்க்குயி லெனுமிசை யவர்க்கணி சொரிவா
ரேலு நன்மறை யவர்க்கிரு நிதியெடுத் திறைப்பார்.

(இ-ள்.) அன்றியும், பசியையுடைய ஏழைகளுக்குப் பாலைக் கொண்ட அன்னத்துடனும் பழத்துடனும் விருந்துகள் கொடுப்பார்ப்பள். அழகிய மிருதுவான வஸ்திரங்களை நாடகர்களின் கைகளில் கொடுப்பார்கள். சோலையினிடத்துள்ள குயில்களினது இராகத்தை யொத்துப் பாடாநிற்கும் இராகத்தையுடைய பெண்களுக்கு அதிக ஆபரணங்களைக் கொடுப்பார்கள். பொருந்திய நல்ல வேதியர்களுக்கு மகத்தான திரவியங்களை எடுத்து மிகக் கொடுப்பார்கள். (உகூ)

வான மாமுகி லெனச்சொரி தரவரு மாந்தர்
தூந றுங்கதிர் மணியொடு நிதியினைச் சுமந்து
தீன ரியாசக ரியாரெனத் தெருத்தொறுந் திரிந்து
தான மேற்பவ ரில்லென மனத்திடை சலிப்பார்.

(இ-ள்.) அன்றியும், ஆகாயத்தின்கண்ணுள்ள மகத்தான மேகத்தைப்போலப் பொழியும்வண்ணம் இவ்வுலகத்திலுதையமாய் வந்த ஜனங்கள் பரிசுத்தமான நறியகிரணங்களையுடைய இரத்தினவர்க்கங்களோடும் திரவியங்களை எடுத்துச் சுமந்துகொண்டு அந்தத் திருமக்கமா நகரத்தின் கண்ணுள்ள வீதிகளெல்லாவற்றிலும் அலைந்து வருமையாளிகள்யாவர்? இரப்பவர்கள்யாவர்? என்று விசாரித்து ஈகைபெறுவோர்கள் இவ்விடத்தி லில்லையென்று மனசின்கண் சலிப்படைவார்கள். (௩௦)

மதியின் மிக்கவ ரொருவரால் வருங்கிளை யனைத்துங்
கதியும் வெற்றியும் வீரமும் பெறுவரக் கதைபோற்
புதிய பேரொளி முகம்மதின் மணவினைப் பொருட்டாற்
பதியும் வீதியு மாடமு மணம்படைத் தனவே.

(இ-ள்.) அன்றியும், அறிவினால் மிகுந்தவரான ஒரு மகாத்துமாவால் அந்தக் குடும்பத்தில் வாராநிற்கும் எல்லாவரும் மோட்சத்

தையும் விஜயத்தையும் வீரத்தையும் பெற்றுக்கொள்ளுவார்கள். அந்தச் சரித்திரத்தைப்போல நூதனமாகிய பெரிய பிரகாசத்தினை யுடைய நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் விவாகச்செயலினதுபொருட்டினால் அந்தத்திருமக்கமாநகரமும் அங்குள்ள தெருக்களும் வீதிகளும் பரிமளத்தைப்பெற்றுக்கொண்டன.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறுபிறை நுதற்க திஜா திருமனை யிடத்தும் வெற்றி
விறலபித் தாலிபென்னு மெய்மையோர் மனையின் முன்னு
மறபிகண் மனையுஞ் செம்பொ னுவணத் திடத்தும் வேந்தர்
மறுகுக டோறுஞ் செல்வ மணச்சிறப் பியன்ற பின்னர்.

(இ-ள்.) இவ்விதமாய் இளஞ்சந்திரன் போலும் நெற்றியினையுடைய கதிஜாநாயகியவர்களின் சிறந்த வீட்டினிடத்திலும் வெற்றியினது வீரத்தைக்கொண்ட அபீத்தாலிபென்று சொல்லும் சத்தியத்தையுடையவர்களின் வீட்டினிடத்திலும் மற்றும் அந்த மக்கமாநகரத்தின்கண்ணுள்ள அறபிகளின்மனைகளிலும் செவந்த திரவியத்தைப்பெற்ற கடைவீதிகளினிடத்திலும் அரசவீதிகளெல்லாவற்றிலும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் செல்வத்தையுடைய விவாகாலங்காரமிசைந்தபின்னர். (௩௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அற்புதமாய்விண்ணவரும்புகலரிய
ஆபுஸம்சத் தரிய நீரைம்
பொற் குடத்தி லெடுத்தமுத கதிர்கிரண
மலைமிசையே பொழிவது போலச்
சிற்பரியற் றியபலகை நடுவிருத்தி
முகம்மதுதஞ் சிரசின் மீதே
சொற்பழுத்த மறைமுதியோர் மங்கலவாக்
கியங்கறங்கச் சொரிந்தா ரன்றே.

(இ-ள்.) தேவர்களான மலாயிக்கத்துமார்களும் ஆச்சரியமாய்ச் சொல்லுதற்கரிய ஹலறத்து இசுமாயில் அலைகிஸ்ஸலா மவர்களின் திருக்கரத்தினது விரல்களால் அகழப்பட்ட ஆபுஸம்ஸமென்னும் பெயரையுடைய கிணற்றினது அரியஜலத்தைப்பொன்னினாலானகுடத்தில்எடுத்துசிற்பர்களினால்செய்யப்பெற்றஒருபலகையினது

நடுவில் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை இருக்கும்படி செய்து அவர்களின் தலையின்மீது முற்றிய வார்த்தைகளை யுடைய வேதவயோதிபர்களின் மங்கலவாக்கியங்கள் முழங்கும்வண்ணம் சந்திரனுனது தனது கிரணங்களைப் பொன்னிமாமலையின்மீது சொரிவதைப்போலச் சொரிந்தார்கள். (௬௩)

மஞ்சனத்தீ ரம்புலர்த்தி விரைவாகப்
புகைக்கொழுந்து வயங்கச் சேர்த்திப்
பஞ்சினின்மென் றுகிலரையி னெடுத்தணிந்து
செழுஞ்சுவன பதிக்கு மேலா
ரெஞ்சலில்வெண் கதிர்திரண்டு வந்திருந்த
தெனச்சருவந் திலங்கச் சூட்டிக்
கஞ்சமல ரெனச்சேந்த கண்ணிணையிற்
சுறுமாவுங் கவினச் செய்தார்.

(இ-ள்.) சுவர்க்கலோகத்திற்கு மேலோராகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அவ்வாறுசொரிந்து ஸ்நானஞ்செய்வித்த நீரினது ஈரத்தை யுலரும்படிசெய்து பரிமளத்தை யுடைய கலவைச்சேறு புகைக்கொழுந்தாகிய இவைகளைப் பிரகாசிக்கும் வண்ணம்சேர்த்து அரையின்கண் பஞ்சைப் பார்க்கிலும் மிருதுவான வஸ்திரத்தை எடுத்து உடுத்திக் குறைவில்லாத வெள்ளிய சந்திரன்கள் ஒன்றுகூடி வந்திருந்தாற்போல வெண்ணிறத்தைக் கொண்ட பாகையைத் தலையினிடத்து விளங்கும்படி சூட்டித் தாமரைப்புஷ்பம் போலும் செவந்த இருகண்களிலும் சுறுமாவும் அழகாய் எழுதினார்கள். (௬௪)

பொன்காலுந் திரண்முலைபார் கண்ணேறு
படராது பொதிதல் போலுஞ்
சின்காத வழிக்ககலும் வேதமொழி
யனைத்தும்வந்து செறிந்த போலும்
வன்காபிர் விழிக்கணங்க டிருமேனி
தீண்டாது மறைத்தல் போலு
மின்கால வெண்கிரணக் குப்பாய
மெடுத்தணிந்த வியப்புத் தானே.

(இ-ள்.) அன்றியும், பிரபையான தொளிரும்படி வெள்ளிய கிரணங்களையுடைய குப்பாயத்தை எடுத்துத் திருமேனியின்கண் அணிந்த ஆச்சரியமானது, பொன்போலும் பிரகாசியாநிற்கும் திரண்ட முலையையுடைய பெண்களின் கண்ணெச்சில் பரவாது மூடுதல்போலும். ஜின்கள் காதவழி தூரத்திற்ககன்று செல்லும் வேதவாக்கியங்கள் முழுவதும் ஒன்ருய்வந்து நிறைந்தபோலும். வன்மையையுடைய காபிர்களின் கண்களாகிய பிசாசுகள் தங்களின் திருமேனியைத் தொடாது மறைத்து வைத்தல்போலு மிருந்தன. (௩௫)

மருந்தமுத மெனுங்கலிமாத் தனையிணங்கா
 ருயிரனைத்தும் வானி லேற்ற
விருந்ததென வயிரமணிப் பிடியுடைவா
 ளெடுத்துமருங் கிடத்துச் சேர்த்து
விரிந்தசெழுங் கரகமல விரலிதழின்
 மணியாழி விளங்கித் தோன்றப்
பரிந்தணிந்தா ரழகுவெள்ளம் வழியாது
 மருங்கணைக்கும் பான்மை போன்றே.

(இ-ள்.) அன்றியும், தேவாமிர்தமென்று சொல்லாநிற்கும் தங்களது கலிமாவுக்கு இணங்காதவர்களின் ஆவிகளெல்லா வற்றையும் ஆகாயத்தின்கண் ஏற்றும்வண்ணம் இருந்ததைப்போன்ற வயிரரத்தினங்களைக் கொண்ட பிடியை யுடையகுற்றுடை வாளை யெடுத்து இடையின்கண் பொருத்தி விரிவுற்ற செழியகையாகிய தாமரைமலரின் விரலான இதழ்களில் இரத்தினமோதிரம்பிரகாசித்துவிளங்கும்படி அழகாகிய வெள்ளமானது வழிந்திடாமற் பக்கத்திற் சேர்த்துக் கொள்ளும் பான்மையைப்போல அன்போடு மணிந்தார்கள். (௩௬)

மண்முழுது மாறரிய செவந்தகதிர்
 மணிக்கோவை மறுவி லாத
வெண்மணித் திலவடமு மேருவெனும்
 புயவரையில் விரித்த காந்தி
கண்முழுது மடங்காத வெழிநோக்கி
 யவரவர்கண் ணேற டாது
தண்மதியும் வெஞ்சுடருங் காநீட்டி
 யிருபுறத்துந் தடவல் போலும்.

(இ-ள்.) அன்றியும், பூலோக மனைத்திலும் மாறுதற்கரிய செந்நிறத்தைக்கொண்ட கிரணங்களை யுடைய இரத்தினக் கோவைகளும் குற்ற மற்ற வெள்ளிய மணியாகிய முத்துக்கோவைகளும் மகா மேரு பர்வதமென்று சொல்லாநிற்கும் தோள்களாகிய மலையின்கண் பரப்பிய பிரகாசமானது, ஆகாயமுழுவதிலும் அமையாத அந்நபிகள் பெருமானவர்களின் அழகைப்பார்த்து அங்குள்ளவர்களின் கண்ணெச்சிலானது வந்துபொருந்தாதுகுளிர்ச்சிதங்கிய சந்திரனும் சூரியனும் தங்களதுகைகளை நீட்டிஇருபக்கங்களிலும் தடவுவதைப் போன்றிருந்தது. (௬௭)

பொன்னிதழ்க்குங் குமத்தொடையன் முகம்மதுதம்
வயிரவரைப் புயத்திற் சாத்தி
மின்னிடவெண் மணித்தொடையுஞ் செம்மணியும்
போற்காந்தி விரிந்த தோற்றந்
தன்னிலைமை தவறாத முதியோரை
யெவரேனுஞ் சாரில் வாய்ந்த
நன்னிலைநற் குணமறிவு பெறுவரெனும்
பழமொழியை நவிற்றிற் றன்றே.

(இ-ள்.) அன்றியும், பொன்போலும் இதழ்களையுடைய குங்குமப்புஷ்பத்தினாலான மலர்மாலையை நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வயிரமலைபோன்ற இருதோள்களிலும் பிரகாசிக்கும் வண்ணம் பொருந்தச்செய்து வெண்ணிறத்தைக் கொண்ட முத்துமாலையும் செவந்த இரத்தினமாலையும்போலப் பிரபையை நானுபக்கங்களிலும் பரவிய காட்சியானது, தனது நிலைமையை விட்டும் ஒருகாலத்தும் தவறாதவயோதிபரை யாவராயினும் சார்ந்தால் சிறந்த நல்ல நிலைமையினையும் நல்லகுணத்தினையும் நல்ல அறிவினையும் அடைவாரென்று சொல்லும் முதுமொழியைச் சொல்லிக் காட்டிற்று. (௬௮)

அவனிதனிற் றனியாசை நயினாரை
முகம்மதையா ரணத்தின் வாழ்வைக்
கவினெழுக வலங்கரித்துப் பவனிவர
வெனவெழுகக் கருதுங் காலைச்
சுவனபதி தனைத்திறமி னிரயமடைத்
திடுமினெனத் தூயோன் சத்தம்
பவனமுமண் ணுலகுகடன் மலையுந் திசை
திசையனைத்தும் பரந்த தன்றே.

(இ-ள்.) அவ்வாறாக இப்பூலோகத்தின் ஒப்பற்ற அரசரானவர்களே, நம்மனைவர்களையும் ஆட்கொண்ட நபிநானவர்களே, வேதங்களின் வாழ்வானவர்களே, நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமானவர்களே, அழகான தொழுகும் வண்ணம் அலங்காரஞ்செய்து ஊர்க்கோலம் வரவென்று எழும்பும்படி எண்ணியகாலத்தில் பரிசுத்தமான ஜல்லஷகுனகுவத்த ஆலாவின் பக்கத்தில் நின்றும் சுவர்க்கலோகத்தைத் திறவுங்கள்? நரகலோகத்தை அடைத்திடுங்களென்று ஒருசத்தமானது உண்டாய் வானலோகத்திலும் பூலோகத்திலும், கடல்களிலும் மலைகளிலும் எண்டிசைகளிலும் பரவினது, (கூகூ)

வானவர்பொற் பூமாரி சொரிந்திடமண்
ணவர்வாழ்த்த மறையோ ரேத்தத்
தானமென வேற்பவர்க்குப் பொன்மணிதூ
செடுத்தளித்துச் சடங்கு தீர்த்துக்
கானமர்பூங் குழன்மடவா ரயினிநீர்
கொணர்ந்தெடுத்துக் களித்துப் போத
வினமில்பல் லியமகரக் கடலெனவார்த்
தெடுப்பவினி தெழுந்தா ரன்றே.

(இ-ள்.) அப்போது நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வானலோகத்தின் கண்ணுள்ள தேவர்களானமலாயிக்கத்துமார்கள் பொன்னினாலான புஷ்பமழை பொழியவும், பூலோகத்திலுள்ள மனுஷியர்கள் ஆசீர்வதிக்கவும், வேதியர்கள் துதிக்கவும், ஈகையென்றேற் போர்களுக்குத் திரவியங்களும் இரத்தினங்களும் வஸ்திரங்களும் எடுத்துக்கொடுத்துச் சடங்குகளை முடித்து வாசனைதங்கிய புஷ்பமாலைபணிந்த கூந்தலையுடைய பெண்கள் அயினிநீர் சுமந்துகொண்டு வந்து கழித்துப் போகவும், குறைபாடற்ற வாத்தியங்கள் சுறாமீன்களை யுடைய சமுத்திரத்தைப் போல ஒலித்து ஓங்கவும், இனிமையுடனெழும்பினார்கள். (௪௦)

கலிவிருத்தம்.

கானறு மல்லிகை கமல மெல்லிதழ்ப்
பூநறும் பாயலி னடந்து பொங்கொளி
தேனறுந் தெரியலார் செம்பொ னாட்டுறை
வானவர் வாழ்த்திட வாசி மேற்கொண்டார்.

(இ-ள்.) அவ்விதமெழுந்த ஓங்காநிற்கும் பிரகாசமுற்ற தேன மைந்த சுகந்த மாலையை யுடையவர்களான நாயகம் நபிமுகம்மதுசல் லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வாசனையையுடைய நறியமல்லிகைப் புஷ்பத்தினுலும் மெல்லிய இதழ்களை யுடைய தாமரைப் புஷ்பத்தி னுலுமான பரிமளத்தைப்பெற்ற பாயலின்கண் தங்களிரு பாதங்களி னுலும் நடத்தலைச்செய்து செவந்த பொன்னுலகத்தில் வாசஞ்செய் யாநின்ற தேவர்களான மலாயிக்கத்துமார்கள் சோபனம் சொல்லும் படி குதிரையின் மீதேறினுர்கள். (௬௧)

முறைமுறை தண்ணுமை முருடு துந்துமி
சிறுபறை சல்லரி பதலை திண்டிம
மறுவறு பேரிகை முரசு மத்தளி
யறைதிரைக் கடலொலி யடங்கவார்த்தவே

(இ-ள்,) அப்பொழுது குற்றமற்ற தண்ணுமை,முருடு. துந்துமி சிறுபரை, சல்லரி, பதலை, திண்டிமம், பேரிகை, முரசு,மத்தளமாகிய இவைகள் ஒலியாநிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தினது ஓசை யானது அடங்கும் வண்ணம் வரிசை வரிசையாய் ஒலித்தன. (௬௨)

பெருகிய கடன்முகட் டெழுந்த பேரொளிப்
பரிதியொத் திருந்தன குரிசில் பான்மைமேல்
விரிதரு மதியெனக் கவிகை வெண்ணிலாச்
சொரிவன கற்றையங் கவரி தூங்கின.

(இ-ள்.) அங்கேரத்தில் குரிசிலாகிய நாயகம்நபிமுகம்மதுசல்லல் லாகு அலைகிவசல்ல மவர்களினது தன்மையும் அவர்களின் மீதுவிரி ந்த சந்திரனைப்போன்ற குடையானது வெள்ளிய பிரகாசத்தைச் சிந்துவதும், மயிர்க்கற்றைகளை யுடைய அழகிய சாமரங்கள் அசை வதும். பெருகிய சமுத்திரத்தின் உச்சியில் எழாநின்ற பெரிய பிர காசத்தையுடைய சோமனை நிகர்த்திருந்தன (௬௩)

அவிரொளிக் கொடிமிடைந் தடர வண்ணலார்
பவுரியி னடுமுறைப் பணில மார்த்தெழக்
குவிகைகொம் புகள்குமு குமெனப் பல்லியஞ்
செவியடைத் தனதெருத் தலைக ளெங்குமே.

(இ-ள்.) அன்றியும், வீதியினது இடங்க ளெல்லாவற்றிலும் ஒளிரா நின்ற பிரபையினை யுடைய கொடிகள் ஒன்றோடொன்று

நெருங்கியடாவும், அண்ணலாராகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலை கிவசல்ல மவர்களின் பவுரியினது மத்தியில் வரிசையாகிய சங்குகள் ஒலித்து எழும்பவும் குவிந்த கைக்கொம்புகள் குமுகுமென்று சத்திக்கவும், வாத்தியங்கள் கேட்போர்களின் காதுகளை யடைக்கவும் செய்தன. (௨௪)

மதித்தென மறுகிடை விண்ணின் மண்ணெழப்
பதித்தன குளம்புவிட் டெறிந்து பாரிடை
மிதித்தென வில்லென வேக மீக்கொளக்
குதித்தன நெருங்கின குதிரை யீட்டமே

(இ-ள்.) அன்றியும், குதிரைக்கூட்டங்கள் கொழுத்ததென்று சொல்லும் வண்ணம் தங்களின் பாதங்களைவீதிகளினிடத்தில்விட்டு உதைத்து மண்ணானது ஆகாயத்தி லெழூப்பும்படி பதியச்செய்தன மேலும் பூமியின்கண் மிதித்ததெனவும் அங்ஙனம்மிதிக்கவில்லையெனவும் வேகமானது அதிகரிக்கும் வண்ணம் சாடி ஒன்றோடொன்று நெருங்கின. (௨௫)

மதங்களைச் சிந்தின மறுகின் மாந்தர்தம்,
பதங்களை வழுக்கிடப் படர்செ விச்சுள
கிதங்கொள்வண் டினம்புடைத் தெழுப்ப வெங்கணுங்
கதங்கொடு நெருங்கின கரியின் கூட்டமே.

(இ-ள்.) அன்றியும், யானைக்கூட்டங்கள் வீதிகளிலுள்ள மனுஷியர்களின் கால்களை வழுக்கும்படி மதங்களைச் சொரிந்தன. விரிந்த செவிகளாகிய சுளகினால் இனிமைகொண்ட தேனீக்களின் தொகுதியைக் கொழித்து எழுப்புதற்காய் கோபங்கொண்டு எவ்விடங்களிலும் நெருங்கின. (௨௬)

கடுவிடப் பணத்தலை நெளியக் கண்ணகன்
படிகுழித் தெழுதுகள் பரப்பிப் பாங்கினிற்
கொடிநிறைத் தறைந்தகோ லாரி வண்டில்க
ளிடைவெளி யின்றென வெங்கு மீண்டின.

(இ-ள்.) அன்றியும், பக்கங்களில்கொடிகளை நிறையும்வண்ணம் செய்து அசையப்பெற்ற கோலாரிவண்டில்கள் கொடிய விடத்தைக் கொண்ட படாமகுடத்தையுடைய ஆதிசேடன் தனது சரீரம்நெளி

யும்படி இடமகன்ற இப்பூமியை குழியச்செய்து அதனால் எழாநிற்கும் தூசிகளை நாலுபக்கங்களிலும் விரித்து இடைவெளியில்லையென்று சொல்லும் வண்ணம் எல்லாவிடங்களிலும் கூடின. (௪எ)

இசையொடு பல்லிய மியம்பி யார்த்தெழ
வசையறு காளையர் மருங்கு சுற்றிடச்
சசியெனக் கதிரொளி தவழும் வீதியிற்
றிசைதிசை மலிந்தன சிவிகைவெள்ளமே.

(இ-ள்) அன்றியும், சந்திரனைப்போல பிரகாச ஒளியானது எவ்விடங்களிலும் தவழாநிற்கும் அந்தத்திருமக்கமா நகரத்தின்கண்ணுள்ள வீதிகளினது எல்லாத்திசைகளிலும் கீதங்களுடன் வாத்தியங்கள்முழங்கிஒலித்து எழும்பவும் குற்றமற்ற இளம்பருவத்தையுடைய வாலிபர்கள் இடைகளில் சுற்றவும், பல்லக்கினது கூட்டங்கள் அதிகரித்தன (௪அ)

பிடிபடு குசைப்பரி மீதும் பெய்மழை
கடகரி மீதினுங் கதிர்கொண் மாமணிப்
படமிடு சிவிகையின் மீதும் பாங்கெலாஞ்
சுடரணி திகழ்ந்தெனக் கிளைஞர் சுற்றினர்.

(இ-ள்.) அன்றியும், தங்களின் கிளைஞர்களான ஹாஷீம் குலத்தவர்களும் குறைஷிக் குலத்தவர்களும் நான்கு பக்கங்களிலும் பிரகாசமமைந்த ஆபரணங்கள் ஒளிர்வதைப்போலப் பிடிபடாநிற்கும் கடிவாளங்களையுடைய குதிரைகளின்மீதும் மழைபோலும் பொழியாநின்ற மதங்களையுடைய யானைகளின்மீதும் கிரணங்களைக்கொண்டமகத்தான இரத்தின வர்க்கங்களையுடைய படங்களையிட்டபல்லக்குகளின்மீதும் வளைந்தார்கள். (௪௯)

வெள்ளணி யுடையினர் விரிந்த கஞ்சுகர்
கள்ளவிழ் மாலையர் கலன்கொண் மேனிய
ரள்ளிய வழகின ரரசவீதியி
னெள்ளிட மிலையென வெங்கு மீண்டினர்.

(இ-ள்.) அன்றியும், வெண்ணிறமமைந்த அழகிய உடையினையுடையவர்களும்; விரிவுற்ற கஞ்சுகத்தை யுடையவர்களும். தேனானது அவிழாநிற்கும் மலர்மாலைகளை யுடையவர்களும். ஆபரணங்களைக் கொண்ட சரீரத்தையுடையவர்களும், நெருங்கிய அழகினை யுடைய

வர்களும், அந்தத் திருமக்கமா நகரத்திலுள்ள இராஜவீதிகளில்எட் போடும் இடமில்லையென்று சொல்லும்வண்ணம் எல்லா விடங்களி லும் கூடினார்கள். (௫௦)

செழுமுகிற் கவிகையஞ் செம்மல் வீதிவாய்
வழுவறு பவனியின் வருகின் றாரென
வெழுவகைப் பேதைபே ரிளம்பெ ணீறதாய்க்
குழுவுடன் றிசைதிசை நிறைந்து கூடினர்.

(இ-ள்.) அன்றியும், செழிய மேகக்குடையையுடைய அழகிய செம்மலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர் கள் தெருகளினிடத்துக் குற்றமற்ற பவனியாய் வருகினறார்களெ ன்று எழுவகைப்பட்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் கடைசியாகத் தங்களது கூட்ட த்தோடும் திசைகளெல்லாவற்றிலும்நிறைவுற்றுக்கூடினார்கள். (௫க)

மணிப்பளிக் கறைநிலை மாட மீதினுங்
குணிப்பருங் கூடகோ புரத்து மீதினும்
பணிப்பரு மேனிலைப் பரப்பு மீதினுந்
தணிப்பிலா துயர்ந்தமண் டபத்தின் சார்பினும்.

(இ-ள்;) அழகிய பளிங்கறைகளையுற்ற நிலைகளையுடைய மாடங் களின்மேலும், குணித்தற்கரிய கூடகோபுரங்களின்மேலும், செய் வதற்கு அருமையான மேனிலைகளைக்கொண்ட பரப்புகளின்மேலும் தணிவில்லாது உயரப்பெற்ற மண்டபங்களின் பக்கங்களிலும். ()

சச்சையின் முகப்பினுஞ்சாள ரத்தினும்
வச்சிரமழுத்திய வாயின்மீதினுங்
கச்சணி முலைச்சியர் கதிர்கொண் மால்வரைப்
பச்சையங் கிளியெனப் பரந்து தோன்றினர்.

(இ-ள்.) சக்கைகளின் முகப்புகளிலும், சாளரங்களிலும், வச்சி ரக்கற்க ளழுத்தப்பட்ட வாயில்களின்மீதிலும், பிரகாசத்தைக்கொ ண்ட பெரியமலையின் அழகிய பச்சைநிறத்தையுடைய கிளிகளைப் போல இரவிக்கைதரித்த முலைகளை யுடையவர்களான பெண்கள் பர விவிளக்கமுற்றார்கள். (௫௩)

வெண்முகிற் கவிகையிற் பிறந்த மின்னென
வண்ணமென் பசுங்கதிர்த் தோகை மஞ்ஞைகள்
கண்ணினக் கவிகையைக் கண்டு வந்தென
வெண்ணிறந் தனையமா மாத ரீண்டினர்.

(இ-ள்.) வெண்ணிறம்கொண்ட மேகத்தைப்போன்ற குடைகளினின்று முதயமான மின்னலென்று சொல்லித் தங்களின்கண்களினால் அக்குடைகளைப்பார்த்து மெல்லிய பசிய கிரணங்களையுடைய அழகிய சிறகுகளைப்பெற்ற மயில்கள் வந்ததைப்போல அளவில்லாத பெருமைபொருந்திய அம்மயில்போலும் சாயலையுடைய பெண்கள்வந்து கூடினார்கள். (௫௪)

வழிகதிர் முகம்மதின் வனப்பு வெள்ளமீக்
கெழுதிரைக் குவந்தன மெழுந்த கூட்டம்போற்
பொழிகதிர்க் கலன்பல புரள வெங்கணுந்
தொழுதிகொண் டுற்றனர் தோகை மாதரே.

(இ-ள்.) அன்றியும், வழியாநிற்கும் பிரகாசத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அழகாகிய வெள்ளமானது மேலாய் எழாநின்ற அலைகளையுடைய தடாகத்தை விரும்பி எழும்பிய அன்னப்பட்சியினது கூட்டத்தைப்போலக் கிரணங்களை சிந்துகின்ற பலவித ஆபரணங்கள் தங்களது மேனியின்கண் கிடந்து புரளும்வண்ணம் மயில்போலும் சாயலையுடைய பெண்கள் கூட்டமுற்று எல்லாவிடங்களிலும் வந்து பொருந்தினார்கள். (௫௫)

தேனென வமிர்தெனத் திரண்ட பாகெனத்
தூநறுங் கனியெனச் சுடருங் கொம்பெனப்
பூநறுங் கரும்பெனப் பொருவின் மாதரார்.
வானவ ரமிர்தென வளைந்து சுற்றினர்.

(இ-ள்.) அன்றியும, தேனைப்போலவும் அமிர்தத்தைப் போலவும் திரட்சியுற்ற சர்க்கரையைப் போலவும் பரிசுத்தமான பரிமளத்தையுடைய பழத்தைப்போலவும் பிரகாசியாநிற்கும் பூங்கொம்பைப் போலவும் அழகிய நறிய கரும்பைப்போலவும் ஒப்பில்லாத பெண்களானவர்கள் தேவாமிர்தத்தைப்போலும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைச் சுற்றி வளைந்தார்கள். (௫௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வண்ணவார் முலைக்கொம் பன்னார் மருங்கொசிந் தசைய நோக்கி
கண்ணகன் ஞால மெல்லாங் களிப்புறு மரிய காட்சி
யண்ணறன் மணத்தின் கோல மாமின வென்னு மந்தப்
பெண்ணிருந் தினிது காணப் பெற்றிலள் காணு மென்பார்.

(இ-ள்.) அழகிய இரவிக்கை யணிந்திருக்கும் முலைகளையுடையபூங்கொம்பைப் போன்ற பெண்களானவர்கள் தங்களின் இடையானது ஒசிதலுற்று அசையும்வண்ணம் இரு கண்களினாலும் பார்த்து இடமகன்ற இந்தப் பூலோகமுழுவதும் சந்தோஷத்தை யடையாநிற்கும் அரிதான காட்சியையுடைய அண்ணலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் விவாகத்தினது கோலத்தை அவர்களையீன்றஆமினவென்னு மபிதானத்தையுடைய அந்தப்பெண்ணானவளிருந்து இன்பமுடன் தனது கண்களாற் பார்க்கப் பெற்றிலளென்று சொல்லுவார்கள். (ருஎ)

கடுநடைப் புரவி மேலாய்க் கவிகைமா னிழற்ற வந்த
வடிவுறை முகம்ம தின்றன் வனப்பலால் வனப்பு மில்லைக்
கொடியிடைக் கதீஜா வென்னுங் கொம்புசெய் தவப்பே ருகப்
பிடிநடை யவரிற் பேரு பெற்றவ ரில்லை யென்பார்.

(இ-ள்.) அன்றியும், கடிய நடையையுடைய குதிரையின்மேலாய் மேகங்கள் குடையினது நிழலைச்செய்யும் வண்ணம் வரப்பெற்ற அழகுதங்கிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அழகேயல்லாமல் வேறேயொரு அழகுமில்லை. மேலும் கொடிபோலும் இடையையுடைய கதீஜா நாயகியென்னும் பூங்கொம்பானவர்கள் இயற்றிய தவத்தினது பேருப் பேறுபெற்றவர்கள் பெண்யானைபோலும் நடையையுடையவர்களான பெண்களில் ஒருவரும் இல்லரென்று சொல்லுவார்கள். (ருஅ)

பொன்னெனப் பூங்கொம் பென்னமணியெனப் பொருந்து மாதர்
மின்னெளி கரக்குஞ் சோதி மெய்யெழில் முகம்ம தென்னு
மன்னினைக் கதீஜா செல்வ மனைமண முடித்த போதே
யென்னிலப் பொருளும் வாழ்வு மிவர்க்கினி யெய்து மென்பார்,

(இ-ள்.) அன்றியும், இலக்குமியைப்போலவும் பூங்கொம்பைப் போலவும் இரத்தினமணியைப்போலவும் பொருந்தாநிற்கும் பெண்களானவர்கள் மின்னலினது பிரகாசத்தைக் காக்காநின்ற ஒளியையுடைய சரீரத்தினது அழகைக்கொண்ட நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமென்னும் அரசரானவர்கள் கதீஜா நாயகியவர்களை அவர்களின் செல்வம் பொருந்திய வீட்டின்கண்வைத்து விவாகமுடித்தபோதே இந்தக் கதீஜா நாயகியவர்களுக்கு இனி எல்லா நிலங்களிலுமுள்ள பொருள்களும் வாழ்வும் வந்துசேருமென்று சொல்லுவார்கள். (௫௯)

வனைந்தபூ மாலைத் திண்டோன் முகம்மதின் வடிவை நோக்கி
தனந்தொறும் பசலை பூத்த தையலார் திரண்டு கூடிக்
கனந்துதைந் தொதுங்கு மாடக் கதிர்நிலா வீதிவாயி
றினந்தொறும் பவனி காணச் செய்தவஞ் செய்வோ மென்பார்.

(இ-ள்.) அன்றியும், குங்குமப்புஷ்பத்தினல் அலங்காரஞ்செய்தமலர்மாலையணிந்த திண்ணியபுயங்களையுடையநாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அழகைப்பார்த்து முலைகள்தோறும் பசலை பூக்கப்பெற்ற பெண்கள் ஒருவரோடொருவர் திரட்சியுற்று ஒன்றுகூடி மேகங்கள் நெருங்கி ஒதுங்காநிற்கும் மாளிகைகளின் கிரணங்களினது பிரகாசத்தையுடைய தெருவினிடத்தில் பிரதிதினமும் இவர்களினது பவனியை நாமனைவர்களும் பார்க்கும் வண்ணம் மெய்யாநின்ற தவத்தைச் செய்குவோமென்று சொல்லுவார்கள். (௬0)

வரிசைக்கு மிகுந்த செவ்வி முகம்மதின் வடிவை நோக்கி
யுருசிக்க மலர்த்தே னுண்ட வொண்சிறைப் பறவை போலப்
பரிசிப்ப தொத்து நீங்காப் பவனியி லிருகண் ணாரத்
தெரிசிக்க நம்போன் மிக்க ஜெனனமார் பெறுவ ரென்பார்.

(இ-ள்.) அன்றியும், சங்கையினல் அதிகரித்த அழகையுடைய நாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வடிவத்தைக் கண்களினற்பார்த்து மதுரமுறும்வண்ணம் புஷ்பங்களிலுள்ள மதுவையருந்திய ஒள்ளிய சிறகுகளையுடைய தேனீக்களைப்போலப் பரிசிப்பதை நிகர்த்து மாருத இப்பவனியில் தங்களின் இரண்டு கண்களும் பொருந்தும்படிப்பார்ப்பதற்கு நம்மைப்போல்மேலாகிய ஜெனனம் பெறுவார்யாவார் ஒருவருமில்லரென்றுசொல்லுவார்கள்.

ஆரவா ருதியிற் றோன்று மமுதனார் பரியை நோக்கிப்
பாரிடை பையப்பை பயச் செல்லெனப் பரிவிற் சொல்வார்
வாரமா மறுகிற் போத மனமற மறுகி நின்னைக்
கோரமென் றிதற்கோ பேரிட் டுலகெலாங் கூறிற் றென்பார்.

(இ-ள்.) அன்றியும், ஒலியைக்கொண்ட சமுத்திரத்தி லுதய மாகாநிற்கும் தேவாமிர்தத்தைப்போன்ற பெண்களானவர்கள் நாய கம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஏறியிருக்கும் குதிரையைத் தங்களின் கண்களினாற்பார்த்து இந்தப் பூமியின்கண் நீ மெல்லமெல்லச் செல்லுவாயாகவென்று அன்போடும் சொல்லு வார்கள் அப்போது அந்தக் குதிரை பகுதியாகிய மகத்தானமற் றும் வீதிகளிற் செல்லத் தங்களின் சிந்தையான தற்றுப்போகும் வண்ணம் மறுக்கமடைந்து மறுத்தும் அக்குதிரையைப் பாத்து இதற்காக வேண்டியோ உன்னைக் கோரமென்றுப் பெயரிட்டு உலக மனைத்தும் சொலிற்று என்று சொல்லுவார்கள் (௬௨)

பொருத்துதற் கரிய செவ்விப் புரவல ரழகைக் கண்ணா
லருந்திய துயரக் காற்று லவதியுற் றலைந்து காந்தட்
கரத்தணி பணிக ளியாவுங் கருத்துட னிழந்து வாசம்
விரித்தபூ வுதிர்த்த கொம்பாய் விளங்கிழை யொருத்தி நின்றாள்.

(இ-ள்.) அன்றியும், பிரகாசியாநிற்கும் ஆபரணங்களை யுடைய ஒரு பெண்ணானவள் அமைத்தற்கரிய அழகையுடைய அரசரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வடிவத் தைக் கண்களினால் அருந்திய துன்பக்காற்றினால் வருத்தமுற்று அலைதலடைந்துத் தனது எண்ணத்தோடும் காந்தண்மலர் போலும் கைகளில் தரித்த கலன்க ளனைத்தையும் இழக்கப்பெற்று பரிமளத் தைப் பரவும்படிசெய்யும் புஷ்பங்களைச் சிந்திய ஒரு கொம்பைப் போல நின்றாள். (௬௩)

கோதறு கருணை வள்ளல் குவவுத்தோள் வனப்பைக் கண்ணா
றீதற வாரி யுண்ட செழுங்கொடி யொருத்தி செம்பொற்
பூதரக் கொங்கைச் சாந்து முத்தமும் பொரிவ தென்கொல்
காதினி லுனரமி னென்றோர் காரிகை தன்னைக் கேட்டாள்.

(இ-ள்.) அன்றியும், குற்றமற்ற திருவருளையுடைய வள்ளலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பருப்ப முற்ற புயங்களினது அழகைத் தனது கண்களினால் தீதறும்வண் ணம் வாரியருந்திய செழிய கொடிபோலும் இடையை யுடைய

ஒருபெண்ணானவள் தனது செந்நிறத்தையுடைய பொன்னலான மகாமேருப்பருவதத்தை நிகர்த்த ஸ்தனபாரங்களிலுள்ள கலவைச் சேறும் முத்தங்களும் பொரிவது யாதுகாரணம்? அதை எனதுக் காதுகளில் சொல்லுமென்று வேறேயொரு பெண்ணினிடத்தில் வினவினுள். (௬௪)

திருத்தகு பவனி நோக்குஞ் சேயிழை யொருத்தி காதல்
வருத்தமுற் றிருந்து பஞ்ச வனக்கிளி கையி லேந்திக்
காத்தினைப் பொருத்தச் செய்த காளைபா லேகி யென்ற
னுரத்தினைப்பொருத்தச் சொல்லென் றேதும்வாயொழிகிலாளே

(இ-ள்.) அன்றியும், நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் திருத்தமான பவனியைப் பாராநிற்கும் செவ்ந்த ஆபரணங்களை யுடைய ஒருபெண்ணானவள் காமாசையாகிய துன்பத்தைப்பொருந்தி யிருந்துத் தனது கைக்களில் பஞ்சவன்னத்தை யுடைய ஒருகிளியைத் தாங்கிக்கொண்டு முன்னர் ஷாம்நகரத்தின் கண் வைத்துகைகளைப் பொருந்தும் வண்ணம் செய்த காளைப்பருவத்தை யுடையவர்களான அந்நபிகள் பெருமானவர்க ளிடத்திற் போய் என்னுடைய மார்பைப் பொருத்தச்சொல்லுவாயாகவென்று சொல்லுகின்ற வாயானது மாருதிருந்தாள். (௬௫)

கதியுறு பரியின் மேலார் காளையை நோக்கி நோக்கிப்
புதியதோர் செவ்வி வாய்ந்த பொலன்கொடி யொருத்தி யிந்தப்
பதியினிற் பிறந்து செய்த பலத்தினுக்குற்ற பேருய்
மதியினைக் கொடுத்துக் கொள்ளாமாலையே வாங்கிக் கொண்டாள்.

(இ-ள்.) அன்றியும், நூதனமாகிய ஒப்பற்ற அழகானது சிறக்கப்பெற்ற பொன்னலியன்ற கொடிபோலும் ஒருபெண்ணானவள் மல்லகதி, மயூரகதி, வியாக்ரகதி, வானரகதி, விடபகதி யென்னும் ஐங்கதிகளைக் கொண்ட குதிரையின்மீது தங்கிய இளம்பருவத்தை யுடைய வர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்துப் பார்த்து இந்தப்பூவியின்கண் அவதரித்து இயற்றிய பயனுக்குப் பொருந்திய பேருகத் தனது புத்தியைக் கொடுத்து தான் ஒருநாளுங் கொண்டிராத அவர்களின் மீதுள்ள ஆசையாகிய மயக்கத்தையே பெற்றுக்கொண்டாள். (௬௬)

இனமணிச் செழுங்கொம் பன்ன ருடனெழுந் தெதிரிற் புக்குச்
சினமதக் கரியுந்தேருஞ் சிவிகையும் பரியுஞ் சூழப்

புனன்முகிற் கவிகை வள்ளல் வருவதும் பொருந்த நோக்கிக்
கனவெனத் தெளிவு றுமற் கலங்கிநின் றொருத்தி போனாள்.

(இ-ள்.) அன்றியும், ஒரு பெண்ணானவள் கூட்டமாகிய இத்தின வர்க்கங்களையுடைய செழிய கொம்பைப் போன்றவர்களான மற்றும் பெண்களோடு எழும்பி எதிரிற்போய்ச்சேர்ந்துக் கோபமமைந்த மதங்களையுடைய யானைகளும் இரதங்களும் பல்லக்குகளும்குதிரைகளும் வளையும்வண்ணம் ஜலத்தைப்பெற்ற மேகக்குடையையுடைய வள்ளலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வருவதையும் பொருந்தும்படி பார்த்து சொப்பனமென்று சொல்லி மனத்தெளிவுறுமல் கலக்கமடைந்து நின்று போயினாள். (௯௯)

கனமுகி லனைய கூந்தற் காரிகை யொருத்தியுள்ள
நினைவெலாங் குரிசி றோன்று நெறியிடை யெதிரிற்போக்கி
யினமெங்கே யாய மெங்கே யெவ்விடத் தேகின்றேனென்
மனமெங்கே யான்று னெங்கே யெனநின்று மறுகு கின்றாள்.

(இ-ள்.) அன்றியும். கூட்டமாகிய மேகங்களை நிகர்த்த கூந்தலையுடைய காரிகையாகிய ஒரு பெண்ணானவள் தனதுமனவெண்ணமுழுவதையும் குரிசிலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்தோன்றாநிற்கும் பாதையின்கண்எதிராய்ப்போகச்செய்து யான் எவ்விடத்திற்குச்செல்லுகின்றேன்? எனதுகூட்டத்தை யெங்கே? எனது தோழிகளை யெங்கே? எனது இருதபத்தை யெங்கே? என்னைத்தானெங்கே? யென்று சொல்லிநின்று மறுக்கமடைந்தாள்.

மயற்கடற் படிந்து கூந்தன் மலர்மணிக் கலையும் போக்கிச்
செயற்கையிற் பணிகளியாவுந் தெருத்தலை தோறுஞ் சிந்திப்
புயற்குடைக் குரிசி றந்த பொன்னெலா முடலம் பூத்த
வியற்கையே போது மென்ன விளங்கிழை யொருத்தி போனாள்.

(இ-ள்.) அன்றியும், பிரகாசியாநிற்கும் ஆபரணங்களையுடைய ஒரு பெண்ணானவள் மேகக் குடையையுடைய குரிசிலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களால் தரம்பெற்ற அழகினல் மோகமாகிய சமுத்திரத்தி னகம்மூழ்கித் தனது அளக பாரத்தின்கண் தரித்திருந்த புஷ்பமாலைகளையும் அழகிய வஸ்திரங்களையும் இல்லாமற்செய்து செயற்கையையுடைய ஆபரணங்க ளெல்லாவற்றையும் வீதியினிடங்கள் தோறும் சிந்திச் சரீரமனைத்தும் பசலைபூக்கப்பெற்ற தகுதியேபோதுமென்று சொல்லிப்போயினாள்.

பருமித்த முலேயி னூர்ந்த பன்மணிக் கலன்க ளீந்து
மருமொய்த்த குழலா ளாசை மதிப்பிலா வயிரந் தான்கொண்
டொருமுத்தி லுதித்த வள்ள லுறுகதி ரழகுக் காகப்
பெருமுத்த வாரி கோடி யிறைந்தனள் பெரிய கண்ணால்

(இ-ள்.) அன்றியும், வாசனையினல் மூடப்பட்ட கூந்தலேயுடைய ஒரு பெண்ணானவள் ஒப்பற்றமுத்தி லுதயமான வள்ளலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவ சல்லமவர்களின்மிகுத்த பிரகாசத்தைக்கொண்ட அழகுக்காகக் கணிப்பில்லாத ஆசையாகிய வயிரத்தைக்கொண்டு அலங்காரஞ்செய்த தனது முலேகளிற் பொருந்திய பலவித இரத்தின மணிகளேயுடைய ஆபரணங்களேக்கொடுத்து பெரிய கண்களினுற் கண்ணீராகிய பெருமைதங்கிய முத்தினது மிகுதியைக் கோடியளவாகச் சிந்தினுள்.

காயிள நீரும் வேயுங் கதலியுங் கமுகுங் காந்திப்
பாயொளி யாம்ப லுஞ்செம் பதுமமுங் குவளே மானுஞ்
சேயரி கருங்க ணல்லார் செறிந்துகொண் டெழுந்த தோற்றந்
தூயமே னிலேக ளெல்லாந் துடைவைபோன் றிருந்த மாதோ.

(இ-ள்.) அன்றியும். முலேகளாகிய காயின் பருவத்தைப் பெற்ற இளநீரையும். தோள்களாகிய மூங்கிலேயும், துடைகளாகிய கதலியையும், கழுத்தாகியகமுகையும் இதழ்களாகிய பிரகாசமானதுகுதியாநிற்கும் ஒளியையுடைய ஆம்பன் மலரையும், முகமாகிய செந்நிறமமைந்த தாமரை புஷ்பத்தையுங்கொண்டு நீலோற்பலமலர்போலும் செவந்த இரேகைகள் படர்ந்த கரிய கண்களேயுடைய பெண்கள் நெருங்கி எழும்பியகாட்சியானது, பரிசுத்தந்தைக்கொண்ட அந்த மேன்மாடங்களேத்தும் பூங்காவை யொத்திருந்தது. (எக)

குரும்பைமென் முலேக டாங்கிக் கொடிநிலே மாட மீதிற்
கரும்பெனு மமுதத் தீஞ்சொற் கன்னியர் செறிந்த தோற்றந்
தரும்பெரும் புவியும் வானுந் தழைக்கவந் துதித்த வள்ளல்
வரும்பெரும் பவனிக் கேற்ற மாணிக்க விளக்கம்போன்ருர்.

(இ-ள்.) அன்றியும், கரும்பென்று சொல்லாநிற்கும் அமுதம் போன்ற இனிய வார்த்தைகளேயுடைய பெண்கள் தென்னக்குரும்பை போலும் மெல்லிய முலேகளேத் தாங்கிக்கொண்டு மாருது கொடிகளானவை நிலேக்கப்பெற்ற மாளிகைகளின்மேலே நெருங்கிய காட்சியானது, பலவித செல்வங்களேயுந் தராநின்ற பெரிய இந்தப்

பூலோகமும் வானலோகமும் தழைக்கும்வண்ணம் அவதாரமாய் வந்து தோன்றிய வள்ளலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வாராநின்ற பெருமைதங்கிய பவனிக்குத் தக்கதான அழகிய மாணிக்கத் தீபங்களைப்போன் றிருந்தது. (எ௨)

தாவிய பரிமேற் சேனைத் தளத்தொடும் வீதி வாயின்
மேவிய வள்ள லார்த மெய்யெழி னோக்கி நோக்கி
யாவியு ளடங்கி நெஞ்சத் தறிவுதிர்த் திமைப்பி லாது
பாவையர் நின்றார் செய்த பாவைகள் போலுமன்றே.

(இ-ள்) அன்றியும், பெண்களானவர்கள் தாவப்பெற்ற குதிரையின்மீது சேனையாகிய தளத்துடன் தெருவின்கண் பொருந்திய வள்ளலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களின் திருமேனியின் கண்ணுள்ள அழகைப்பார்த்துப் பார்த்து ஆவியானது அகத்தி லமைதலுற்று மனசி னறிவையுதிர்த்துக் கண்களை மூடி விழியாது தச்சர்களினால் செய்யப்பட்ட மரப்பாவைகளைப்போலும் நின்றார்கள். (எ௩)

கண்களி லடங்காக் காட்சிக் காளைதம் வனப்பு நோக்கும்
பெண்களி லமுத மன்னார் பேரெழின் முகத்தின் றோற்றம்
விண்கதி ரடருஞ் சோதி மேனிலை வாயி றோறுந்
தண்கதிர் கிளைத்த செவ்விச் சசியின முளைத்தல் போலும்.

(இ-ள்.) அன்றியும், கண்களில் அமையாத அற்புதத்தையுடைய இளம் பருவத்தைக்கொண்ட நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அழகைப்பார்க்கும் பெண்களில் தேவாமிர்தத்தைப் போலும் பெண்களான வர்களின் பெரிய வடிவத்தையுடைய முகத்தினது காட்சியானது, ஆகாயத்தின்கண் ணிருக்கும் சூரியனையும் தமக் கிணையில்லை யென்று அடராநிற்கும் பிரகாசத்தையுடைய மேன்மாடங்களினது வாயில்கள்தோறும் குளிர்ச்சிதங்கிய கிரணங்கள் நிறையப்பெற்ற அழகியசந்திரனது கூட்டம் முளைத்ததை நிகராநிற்கும். (எ௪)

வடிசுதை மெழுகிட் டோங்கி வளர்ந்தமண் டபத்தின் சார்பிற்
படர்கதி ரரத்நந் தோய்ந்த பலகணி வாயி றோறுங்
கடிமணப் பவனி நோக்குங் கன்னியர் கதிர்வேற் கண்கள்
கொடிதுடர்ப் பவளத் துடு குவளைகள் பூத்த போன்ற.

(இ-ள்.) அன்றியும், தெளியச்செய்து வடிக்கப்பெற்ற சுண்ண ச்சாந்து பூசி உயர்ச்சியுற்றுவளர்ந்த மண்டபங்களின் பக்கத்தில் பரவிய பிரகாசத்தையுடைய அரத்தத்தினல் தோய்க்கப்பெற்ற சன்னல்களாகிய வாயில்கள்தோறும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் இன்பமமைந்தவிவாகத்தினது பவனியைப்பாரா நிற்கும் பெண்களின் ஒளியையுடைய வேலாயுதம்போன்ற கண்களானவைத் துடர்பைக் கொண்ட பவளக்கொடிகளின் நடுவிலுற்ற நீலோற்பலப் புஷ்பங்களை நிகர்த்திருந்தன. (எரு)

தண்ணில வுமிழுஞ் சோதி தவழ்நிலை வீதி வாயின்
மண்ணகத் தெவரு மொவ்வா முகம்மதின் பவனி நோக்கி
யெண்ணகத் தடங்கா மாத ரிவ்வண்ண நிகழும் வேலை
விண்ணவ ரிடத்தில் வாய்ந்த வியப்பினை விரித்துச் சொல்வாம்.

(இ-ள்.) குளிர்ச்சி தங்கிய நிலவைக் கக்காநிற்கும் பிரபையானது தவழாநின்ற மேன்மாடங்களை யுடைய தெருவின்கண் இப்பூமியினிடத்தில் யாவர்களும் ஒப்பாகாத நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் விவாகத்தினது பவனியைத் தங்களின் இருகண்களினலும் பார்த்து எண்ணிக்கையினுள் ளமையாத அளவற்ற பெண்கள் இந்தப்படியாக நடக்குகின்ற காலத்தில் ஆகாயத்தின்கண்ணுள்ள தேவர்களி னிடத்தில் பொருந்திய அதிசயங்களை விரித்து யாம் சொல்லுவாம். (எசு)

கலிவிருத்தம்.

உம்ப ருள்ளங் களித்தெழுந் தோடிநீள்
செம்பொ னுட்டுயர் ஜன்னத்தின் மாமணிக்
கம்பை சேர்க்குங் கபாடந் திறந்தன
ரிம்பர் நாட்டு மெழுந்தன சோதியே.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது மணக்கோலத்தின் பவனியினல் தேவர்களான மலாயிக்கத்துமார்கள் தங்களின் மனமானது சந்தோஷிக்கப் பெற்று எழும்பி ஓடிச்சென்று நீண்ட செந்நிறமமைந்த பொன்னினற் செய்யப்பட்ட சுவர்க்கலோகத்தின் மேன்மைதங்கிய ஜன்னத்துல் பிறுதௌஸின் மகத்தாகிய இரத்தினவர்க்கங்கள் அழுத்தப்பெற்றகம்பைகள்பொரு

ந்திய கதவுகளைத் திறந்தார்கள். அதனால் பிரபையானது தேவலோகத்தில் மாத்திரமல்லாமல் மானுஷீகரையுடைய இந்தப் பூலோகத்திலும் எழும்பினது. (எஎ)

விரைவி னுதி யுரைப்படி விண்ணவர்
நிரயந் தன்னை யடைத்து நெருப்பையும்
பரவி லாதவித் துள்ளுறைப் பாழ்ங்குழி
யிரையு மூச்சு மடக்கின ரென்பவே.

(இ-ள்.) அன்றியும், யாவற்றிற்கும் முதன்மையவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் கட்டளைப்பிரகாரம் தேவர்கள் சீக்கிரமாய் நகரலோகங்களை யடைத்து அங்குள்ள நெருப்புகளையும் பரவாதவண்ணம் அவியும்படி செய்து அதன் வுள்ளே தங்கியபாழாகிய கிடங்குகள் இரையாநிற்கும் மூச்சுகளையும் அடக்கினாரென்று வேதியர்கள் சொல்லுவார்கள். (எஅ)

அவனி மீதி லகுமது மாமணப்
பவனி வந்தனர் பாருமின் பாரெனக்
கவன வேகத் தமரர் களிப்பொடுஞ்
சுவன நாட்டுறை தோகையர்க் கோதினர்.

(இ-ள்.) அன்றியும், மிகுந்த வேகத்தைக்கொண்ட தேவர்களான மலாயிக்கத்து மார்கள் பூலோகத்தின்மேல் அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மகத்தான விவாகப் பவனிவருகிறார்கள் பாருங்களென்று சந்தோஷத்துடன் சுவர்க்கலோகத்தின்கண் தங்காநிற்கும் தேவமகளிர்களான ஹூறுல் ஹீன்களுக்குச் சொன்னார்கள். (எகூ)

மன்னர் மன்னர் முகம்மது தம்பெயர்
சொன்ன போதிற் சுவன மடந்தையர்
முன்னி ருந்த வடிவினு மும்மடங்
கென்ன லாகி யிருங்களிப் பேறினர்.

(இ-ள்.) இராஜாதி இராஜரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திருநாமத்தை அவ்வாறு சொல்லிய தருணமே சுவர்க்கலோகத்தின் கண்ணுள்ள அரம்பையர்கள் தாங்கள் அத்திருநாமத்தைக் கேட்பதற்கு முன்னர்இருக்கப்பெற்ற அழகைப்பார்க்கிலும் மூன்றுபங்கு அதிகமென்று சொல்லும்படியாகி பெரிய சந்தோஷமானது அதிகரிக்கப்பெற்றார்கள். (அ௦)

விதிக்கு மேலவ னேவலின் விண்ணினிற்
குதிக்குஞ் சோதிக் கொடியிடைக் கொம்பனார்
பதிக்கும் பூரண மாய்ப்பல கோடிமா
மதிக்கு லமவந் தெழுந்தது மானுமே.

(இ-ள்.) அன்றியும், சகல ஜீவராசிகளுக்கும் இன்னபடியென்று கட்டளைசெய்யாநிற்கும் மேலவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் உத்திரவின்படி ஆகாயத்தின்கண் வெளியிற் சாடாநின்ற பிரகாசத்தைக்கொண்ட கொடிபோலும் இடையையுடைய பூங்கொம்பை நிகர்த்த ஹூறுல்ஹீன்கள் பூரணமாய்க் கிரணங்களைத் தரித்த மகத்தான பலகோடி சந்திரனது கூட்டங்கள் வந்து எழும்பினதைப் போலும். (அ௧)

மாக நன்னதி யாடி மணங்கம
ழாக மீதி லணியணிந் தந்நலா
ரேக மாயெழுந் தெங்கணு மெண்ணிலா
மேக மண்டல மின்னெனத் தோன்றினார்.

(இ-ள்.) ஆகாயத்திலுள்ள நன்மைபொருந்திய ஹௌலுல் கௌதறென்ற ஆற்றின்கண் ஸ்நானஞ்செய்து வாசனை பரிமளியாநிற்கும் சரீரத்தின்மீது ஆடையாபரணாதிகள் தரித்து அந்த நன்மையைக் கொண்ட பெண்களியாவர்களும் ஒன்றாக வெழும்பி எவ்விடங்களிலும் அளவற்று மேகமண்டலத்தினது மின்னைப்போலப் பிரகாசித்தார்கள். (அ௨)

தீனெ னும்முதற் செம்மறன் வீதிவாய்
வான நாடுறை மங்கைய ரங்கையா
னான மம்பர் நறுங்கருப் பூரம்பொற்
பூநி றைத்திறைத் துப்பொழிந் தார்களே

(இ-ள்.) தேவலோகத்தின்கண் தங்காநிற்கும் பெண்களான அவ்வரம்பையர்கள் தங்களின் உள்ளங்கைகளில் பரிமளத்தையுடைய கத்தூரி, அம்பர், கருப்பூரம், அழகிய புஷ்பங்களாகிய இவைகளை நிறைத்து தீனென்று சொல்லும் மார்க்கத்திற்கு முதற்செம்மலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பவனிவராநின்ற வீதியினிடத்தில் மிகவும் அள்ளிச்சொரிந்தார்கள். (அ௩)

விண்ணி னுற்றவர் வீசியி றைத்தலாற்
கண்ண கன்ற கடன்மலை கானகம்
பண்ணை சூழ்நக ரும்பல சோலையு
மண்ணும் விண்ணு மலிந்தன வாசமே.

(இ-ள்.) ஆகாயத்தின்கண் பெருந்திய அந்த ஹூறுல் ஹீன்கள் அவ்வாறு அவ்விதியின் நாலுபக்கங்களிலும் வீசிச் சொரிவதினால் வாசனைகள் விலாசமுற்ற சமுத்திரத்திலும் மலைகளிலும் காடுகளிலும் வயல்கள்வளைந்த ஊர்களிலும் பல சோலைகளிலும் இப்பூலோகத்திலும் ஆகாய லோகத்திலும் அதிகரித்தன. (அச)

வள்ள லார்திரு மேனியின் வாசமுந்
தெள்ளி மேலவர் சிந்திய வாசமுங்
கள்ளு லாவிய காவினி னல்வகை
யுள்ள பூவினு முள்ளுறைந் தோங்கிற்றே.

(இ-ள்.) அன்றியும், வள்ளலாரான நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அழகிய சரீரத்தின் கண்ணுள்ள பரிமளமும் ஆகாயத்தின்கண் தங்கிய அரம்பையர்கள் தெள்ளுதலாக்கிச் சொரியப்பட்ட பலவித வாசனைத் திரவியங்களின் பரிமளமும் தேனான துலாவப்பெற்ற சோலையின்கண் மைந்த கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நான்கு விதமாகிய புஷ்பங்களினுள்ளும் தங்கி யதிகரித்தன. (அரு)

திருத்து கூந்தலுந் தேங்கமழ் மாலையும்
விரித்த பூந்துகி லும்மணி மெய்யினும்
பருத்த கொங்கையி னும்புவிப் பாவையர்
கருத்தி னூடுங் கலந்ததவ் வாசமே.

(இ-ள்.) அன்றியும், அப் பரிமளமானது இப் பூமியின்கண்ணுள்ள பெண்களினது திருத்தஞ் செய்யாநிற்கும் அளகபாரத்தினிடத்தும் வாசனை கமழாநின்ற மாலைகளினிடத்தும் விரிவான பூப்போலும் பசுமைகொண்ட வஸ்திரத்தினிடத்தும் அழகிய சரீரத்தினிடத்தும் பருப்பமுற்ற ஸ்தனங்களினிடத்தும் சிந்தையினிடத்தும் கலப்புற்றது. (அசு)

விரைகொ ணனமும் வெண்கருப் பூரமும்
வரிசை வள்ளன் முகம்மதின் வீதியி
லிரிதி னிற்சொரிந் தம்பர மங்கையர்
பெருகுந் தம்மனத் தாசையிற் பேசுவார்.

(இ-ள்.) ஆகாயத்தின்கண்ணுள்ள தேவமகளிர்களான ஹூறு லுல்ஹீன்கள் வாசனைகொண்ட கத்தூரியையும் வெண்ணிறத்தையுடைய கருப்பூரத்தையும் சங்கையமைந்த வள்ளலான நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பவனிவராநின்ற தெருவின்கண் அவ்வாறு அரிதோடும் பொழிந்து தங்களின் மனசினுள் அதிகரியாநிற்கும் ஆசையினுற் பேசிக்கொள்ளுவார்கள். (அஎ)

குற்ற மற்ற கொழுங்கதிர் மெய்யெழில்
வெற்றி வள்ளலை வீதியிற் கண்டன
முற்று ருத முகத்திமை யாவிழி
பெற்று பேறின்று பெற்றமென் பார்சிலர்.

(இ-ள்.) குற்றமில்லாத செழிய பிரகாசத்தையுடைய சரீரத்தின் அழகைக்கொண்ட விஜயமமைந்த வள்ளலானநாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நாம் இன்று வீதியிற்பார்த்தோம். அதனுல் முதிர்தலடையாத நமது முகத்தின்கண் மூடிவிழியாத கண்களைநாம் பெற்றுக்கொண்ட பேருனது இன்றையத்தினம் பெற்றுக்கொண்டோமென்று சில பெண்கள் சொல்லுவார்கள். ()

தண்ணந் தாமரைப் பாதந்த ழீஇத்தொழு
மண்ணின் மாதர்க ளேவலி யாரென்பார்
பெண்ண ணுர்கதி ஜாவொடும் பெட்புற
விண்ணி னூடும் விளங்குவர் காணென்பார்.

(இ-ள்.) அன்றியும், இந்த நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் குளிர்ச்சியுற்ற அழகிய தாமரை மலர்போலும் திருவடிகளைத் தழுவித் தொழாநிற்கும் பூலோகத்தின்கண்ணுள்ள பெண்களே வலியவரென்று சொல்லுவார்கள். அதைக்கேட்ட சில பெண்கள் அன்புபொருந்தும்வண்ணம் மங்கையரான கதிஜா நாயகியவர்களோடும் சுவர்க்கலோகத் திடத்திலும் இருந்து பிரகாசிப்பரென்று சொல்லுவார்கள். (அகூ)

வழுத்து வீரிவ ராரென மற்றவர்
பழுத்த பொன்னிலைப் பன்மணி மின்னவே
யழுத்து வாயிலின் மேலிரண் டாம்வரி
யெழுத்தெ லாமிவர் பேரென்றி யம்புவார்.

(இ-ள்.) அன்றியும், சிலபெண்கள் இந்தப் பவனிவருகிற இவர் யாவர்? அதை யெங்களுக்குச் சொல்லுங்களென்று கேட்க; அதை யறிந்த மற்றும் பெண்கள் கனிந்த பொன்னுலிபன்ற நிலையின்றி பல இரத்தினமணிகள் பிரகாசிக்கும்வண்ணம் அழுத்தப்பெற்ற சொர்க்கலோகத்தினதுவாயிலின்மீதுள்ள இரண்டாம்வரியினது அட்சரங்களனைத்தும் இவரின் அபிதானமென்று சொல்லுவார்கள். (௬௰)

தடந்த யங்குபொன் னாட்டினிற் றானென
நடந்து கொண்டவ னன்னெறி நற்பத
மிடைந்து கெட்டிபு லீசென் றெரிநர
கடைந்த தும்மிவர் தம்பொருட் டாலென்பார்.

(இ-ள்.) அன்றியும், தடாகங்கள் பிரகாசியாநிற்கும் சுவர்க்க லோகத்தின்கண் தான் தானென்று நடந்து கொண்டவனாகிய இபுலீசுல்ல ஈனென்பவன் நல்ல நெறியும், நல்ல பதவியுமற்று வசக்கேடாகி எந்நாளும் அக்கினியைக் கொண்ட நரகலோகம்போய்ச்சேர்ந்ததும் இவர்களின் பொருட்டினால் தானென்று சொல்லுவார்கள்

எந்நி லத்தினு மிக்குய ரேந்தெழின்
மன்னர் மன்னர் முகம்மது தம்பத
நன்னி லத்தொடு நாம்புகழ்ந் தேத்திடப்
பொன்னி னாட்டைப் புரந்தில ரென்னென்பார்.

(இ-ள்.) அன்றியும் சிலபெண்கள் எந்நிலங்களிலும் மிகுந்த மேன்மையைத்தாங்கிய அழகிய நல்ல நிலபாகிய சுவர்க்கலோகத்துடன் இராஜாதி இராஜரான இந்நாபகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திருவடிகளை நாமனைவரும் துதித்துப்போற்றும்வண்ணம் இந்தச்சுவர்க்கலோகத்தைப் புரந்தார்களில்லர். அது யாது காரணத்தினாலென்று கேட்பார்கள். (௬௨)

பூவி னன்கலி மாவைப் பொருந்துற
நாவி லோதிய நம்மனை வாளர்க
டாவி லெண்ணிறந் தோரொடுந் தாநமர்
சேவை செய்திடச் சேர்குவர் காணென்பார்.

(இ-ள்.) அதைக்கேட்ட சில பெண்கள் பூலோகத்தின்கண் நன்மைபொருந்திய "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலல்

லாஹி" என்னும் கலிமாவைப் பொருந்தும்வண்ணம் நாவினாற்சொல்லிய குற்றமில்லாத கணக்கற்றவர்களான நமது நாயகன்மார்களுடன் நம்மவர்கள் ஊழியம் செய்யும்பொருட்டு இங்குவந்து சேருவார்களென்று சொல்லுவார்கள். (௯௩)

காலமேகக் கவிகையி னீழலோ
நீலமோநறை நானநி றைத்ததோ
கோல வார்குவ வுப்புயக் குங்கும
மாலை யூடுறை வணடின மோவென்பார்.

(இ-ள்.) அன்றியும், சில பெண்கள் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் புயங்களில் தோற்றும் பிரகாசமானது, ஒளிராநிற்கும் அவர்களின் அழகிய மேகக் குடையினது நிழலோ? அல்லது நீலரத்தினமோ? பரிமளத்தைக்கொண்ட கஸ்தூரியை நிறையச்செய்ததோ? சிறப்பையுடைய உயர்ந்த திரட்சி பொருந்திய தோள்களி லணிந்திருக்கும் குங்குமப் புஷ்பத்தினாலான மாலையின்கண் தங்காநிற்கும் வண்டினது கூட்டமோ? இவற்றில் யாதென்று கேட்பார்கள். (௯௪)

மண்ணி டந்தெரி வின்றென வந்தடர்
பெண்ணி னங்கள் பெருத்திடு மாசையாற்
சுண்ண மும்மல ருந்திகழ் தோண்மிசைம
கண்ணின் பேரொளி கான்றது காணென்பார்.

(இ-ள்.) அதைக்கேட்ட மற்றவர்கள் பூமியின்இடமானது கண்களுக்குத் தோற்றவில்லையென்று சொல்லும்வண்ணம் வந்து நெருங்கிய பெண்களினது கூட்டங்கள் தங்களின் மனசின்கண் அதிகரியாநிற்கும் ஆசையினால் மகரந்தப் பொடிகளும் மலர்மாலைகளும் ஒளிராநிற்கும் அந்நபிகள் பெருமான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது புயங்களின்மீது பார்க்கின்ற கண்களின்பெரிய பிரபையானது பிரகாசிக்கின்றதென்று சொல்லுவார்கள். (௯௫)

தெளிய வந்துறுஞ் சிந்தையர் சிந்தையி
னளியெ லாமிகழ்ந் தாசையி னுவலா
வொளியெ லாமிவ ருள்ளுறை யாலிந்த
வெளியெ லாமந்த மெய்யுருக் காணென்பார்.

(இ-ள்.) அன்றியும், நேர்ச்சியுறும்வண்ணம் வந்துபொருந்திய மனத்தை யுடையவர்களான அந்தப் பெண்கள் தங்கள் மனசின்கண் கொண்டிருந்த ஆசைகள் அனைத்தையும் நிந்தித்து நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் ஆசையினது ஆவலினால் ஒளிகளியாவும் இவர்களின் மனவெண்ண மானதினாலே இந்த வெளிகளெல்லாவற்றிலும் அந்த மெய்ச்சொருபத்தின் தோற்றமென்று சொன்னார்கள். (கூசா)

வார்த்த டக்கரி வண்முலை விம்முற
வேர்த்து நின்று வெதுப்பி வெதும்பியே
கூர்த்த் தங்கருத் துள்ளுறை கொண்டலைப்
பார்த்த கண்கள் பறிப்பரி தென்பரே.

(இ-ள்.) அன்றியும், கச்சணிந்த பெரிய யானைக்கொம்பை நிகர்த்த அழகிய முலைகள் விம்முதலுறும்வண்ணம் சரீரம் விசர்க்கப்பெற்று நின்று மிகவும் வாட்டமுற்றுக் கூர்மைபொருந்திய தங்களின் கருத்தினகம் தங்காநிற்கும் மேகமாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நோக்கிய கண்களை அந்நோக்கத்தை விட்டும் பறிப்பது அரிதாகுமென்று சொல்லுவார்கள். ()

மன்னைப் பார்த்து மதிமுகம் பார்த்துநின்
றென்னைப் பார்க்கிலர் காணென வேங்குவார்
மின்னைப் பார்த்த விளங்கிழை யார்களென்
றன்னைப் பார்த்தனர் காணவர் தாமென்பார்.

(இ-ள்.) அன்றியும், சிலபெண்கள் அரசரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்தும் அவர்களின் சந்திரன்போன்ற முகத்தைப்பார்த்தும் அவர்கள் என்னைபார்த்தார்களில்லரென்று சொல்லி நின்று ஏக்கமுறுவார்கள். அவ்வாறு ஏக்கமுற்ற பெண்களைப்பார்த்த பிரகாசியாநிற்கும் ஆபரணங்களை யுடைய வேறே சில பெண்கள் அந்நபிகள் பெருமானவர்கள் என்னைப் பார்த்தார்களென்று சொல்லுவார்கள். (கூஅ)

வண்ண வார்புய மன்னவர் மெய்யெழிற்
கண்ணி னூடுங் காந்ததென் பார்சில
ரெண்ணி னூடு மிருந்ததென் பார்சில
ருண்ணி னைவொடு முற்றதென் பார்சிலர்.

(இ-ள்.) அன்றியும், சிலபெண்கள் அழகிய உயர்ச்சியுற்றதோள்களையுடைய இராஜரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது திருமேனியின் கண்ணுள்ள அழகானது கண்களினுள்ளும் ஒளித்தது என்று சொல்லுவார்கள். சிலபெண்கள் எண்ணினிடத்தும் இருந்ததென்று சொல்லுவார்கள். சிலபெண்கள் உள்ளத்தினது நினைப்போடும் பொருந்தினது என்று சொல்லுவார்கள்.

ஏந்து கொங்கை யணியிழப் பார்சிலர்
கூந்தல் சோரக் குழைந்து நிற்பார்சிலர்
காந்தி மேனி கருந்திடு வார்சிலர்
மாந்தி யாசை மயக்குறு வார்சிலர்.

(இ-ள்.) அன்றியும், சிலபெண்கள் தாங்காநிற்கும் ஸ்தனபாரத்தின்கண்ணுள்ள ஆபரணங்களை யிழப்பார்கள். சிலபெண்கள் தங்களின் கூந்தலானது சோரும்வண்ணம் வாட்டமுற்றுநிற்பார்கள். சிலபெண்கள் பிரகாசத்தைக்கொண்ட சரீரம் தீதலடைவார்கள். சிலபெண்கள் அவ்வழகையுண்டு ஆசையாகிய மயக்கத்தைக் கொள்ளுவார்கள். (௧௦௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வானவர் மகளி ரின்னண மியம்பி
மனத்துறு துயருழன் றலைப்பத்
தேனிமி ரலங்கற் செழும்புயக் குரிசிற்
செம்முகம் பருதிய தென்னக்
கானமர் குழலார் செவ்வரி வேற்கட்
கணமெலா நெருஞ்சியை நிகர்ப்பத்
தானவா ரணமும் பரிகளு மிடையச்
சுற்றமுந் தழீஇவரப் போந்தார்.

(இ-ள்.) தேவமகளிர்களான ஹூறுல்ஹீன்கள் இந்தப்படியாக ஒருவர்க்கொருவர் பேசி மனத்தின்கண் பொருந்திய துன்பத்தினாற் சுழற்சியுற்று வருந்துதலடைய, வண்டுகள் ஒலியாநிற்கும் மலர்மாலையணிந்த செழியதோள்களையுடைய குரிசிலான நாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் செவந்த முகமானது சூரியனைப்போலவும், வாசனைதங்கிய கூந்தலைக்கொண்ட பெண்களி

ன்செந்நிறமமைந்த இரேகைகளையுடைய வேலாயுதம்போன்ற கண்களினது கூட்டங்க ளியாவும் நெருஞ்சிச்செடியின் புஷ்பத்தைப் போலவும், மதத்தைப்பெற்ற யானைகளும் குதிரைகளும் பக்கத்தில் நெருங்கவும், பந்துக்களும் மற்றவர்களும் தங்களைத் தழுவிப் பின்னுல் வரவும் பவனிபோயினர்கள். (கoக)

சலதரக் கவிகை நெடுநிழற் பரப்பச்
சலதியிற் பல்லியங் கறங்கக்
குலவிய கொடியுங் கவரியும் விரியக்
கொலைமதக் களிறுக ணெருங்கப்
பலகதிப் பரியு மரசரு மிடையப்
பாவல ரினிதுவாழ்த் தெடுப்பக்
கலைவலர் குவைலி தினிதலங் கரித்த
கடைத்தலைக் காவணம் புகுந்தார்.

(இ-ள்.) அவ்விதம் போயின நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மேகக்குடையானது நெடியநிழலை விரிக்கவும் வாத்தியங்கள் சமுத்திரத்தைப்போல ஒலிக்கவும், பிரகாசியா நிற்கும் துவசங்களும் சாமரங்களும் பரவவும், கொலைத்தொழிலைக் கொண்ட மதத்தையுடைய யானைகள் மிடையவும், ஐங்கதிகளையுமுடைய பல குதிரைகளும் இராஜர்களும் நெருங்கவும் வித்துவான்கள் இனிமையுடன் ஆசீர்வதிக்கவும், சாத்திரவல்லவனுன குவைலி தென்பவன் இன்பத்தோடும் அலங்காரஞ்செய்த அவனினது புறவாயலின்கண்ணுள்ள பந்தரினகம் போய்ச் சேர்ந்தார்கள். (கoஉ)

வரைதிரள் வயிரப் புயமுகம் மதுநன்
மணமலர்க் காவணம் புகுதத்
திரையினிற் பிறந்த வமுதெனு மொழியார்
செழுமணித் திபங்க ளேந்த
விருபுற நெருங்கி பயினிரீர் சுழற்ற
வெண்ணில ராலத்தி யெடுப்பப்
பரவையின் மறையுங் குரவையுஞ் சிலம்பப்
பரியைவிட் டிறங்கின ரன்றே.

(இ-ள்.) வயிரமலைபோலும் திரட்சியுற்ற தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்வாறு நன்மை

பொருந்தும்படி பரிமளத்தைக்கொண்ட புஷ்பங்களையுடைய அந்தப் பந்தரின்கண்போய்நுழையவே, சமுத்திரத்தின்கண்ணுதையமாகிய அமிர்தமென்று சொல்லாநிற்கும் வார்த்தைகளை யுடையவர்களான பெண்கள் தங்களின் கைகரில் செழிய இரத்தினத்தீபங்களைத் தாங்கவும், இருபக்கங்களிலும் நெருக்கமுற்று அயினிநீர் சுழற்றவும், கணக்கற்றவர்கள் ஆலாத்தியெடுக்கவும், சமுத்திரத்தினது ஒலியைப்போல வேதவாக்கியங்களும் குரவைகளும் ஒலிக்கவும், தாங்கள் ஏறியிருந்த குதிரையைவிட்டுங் கிழே இறங்கினார்கள். (௧௦௩)

பணித்தொகை சுமத்தி யிளைத்தநுண் ணிடையார்
பங்கயக் கரப்பனி நீரான்
மணிப்பதம் விளக்கித் துகிலினாற் றுடைத்து
வரிசையின் முறைபல பணித்தார்
துணர்ப்பசுங் கொழுந்து மலர்களுஞ் சொரிந்த
தூநறைப் பாயலி னடந்து
கணிப்பருங் கதிர்கள் பாய்மணித் தவிசின்
முகம்மது கவின்பெற விருந்தார்.

(இ-ள்.) அவ்வித மிறங்கவே ஆபரணத் தொகுதிகளைச் சுமத்தப்பெற்று வாட்டமுற்ற நுண்ணிய இடையை யுடையவர்களான பெண்டுகள் தங்களின் தாமரைமலர்போலும் கைகளினால் பனிநீரைக்கொண்டு அவர்களின் அழகிய திருவடிகளை விளக்கஞ்செய்து வஸ்திரத்தினால் துடைத்துச் சங்கையையுடைய முறைமைகள் பலவற்றைச் செய்தார்கள். அப்போது நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்மவர்கள் பூங்கொத்தைக்கொண்டகொழுந்துகளையும் மலர்களையும் பொழிந்த பரிசுத்தமான வாசனைதங்கிய பாயலின்கண் நடந்து கணித்தற்கரிய கிரணங்கள் வெளியிற்சாடாநிற்கும் கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம் முத்து, வைரம், வைடூரியமென்னும் ஒன்பதுவகை இரத்தினங்களையும் அழுத்தப்பெற்ற ஒரு ஆசனத்தின்மீது அழகுபெறும்வண்ணம் தங்கியிருந்தார்கள். (௧௦௪)

அமரர்விண் ணுலகும் புவனமும் விளக்கு
மணிவிளக் கெனுங்கதி ஜாவைத்
தமனியத் தசும்பு நனிவிரை கமழ்ந்த
தண்ணறும் புதுப்புன லாட்டி

யுமிழ்கதிர்க் கொடியை வெண்ணிலாக் கலேவந்
துடுத்தபோற் கலேயெடுத் துடுத்திச்
சுமையிருட் காவின் முகிறவழ்ந் தென்னச்
சுரிகுழற் ககிற்புகை கமழ்த்தி.

(இ-ள்.) அப்போது தேவர்களான மலாயிக்கத்து மார்களினது ஆகாயலோகத்தையும் பூலோகத்தையும் விளக்காநிற்கும் அழகிய தீபமென்றுசொல்லும் கதீஜாநாயகி யவர்களைப் பொன்னினலியன்ற குடத்தின்கண்ணுள்ள மிகுந்த வாசனைகமழப்பெற்ற குளிர்ச்சிதங்கிய நன்மையையுடைய புதிய ஜலத்தினல் ஸ்நானஞ்செய்வித்துப் பிரகாசத்தை யுமிழாநிற்கும் பொற்கொடியை வெள்ளிய சந்திரகிரணங்கள் வந்து சுற்றியதைப்போல வஸ்திரத்தை எடுத்துடுத்திப் பாரமாகிய இருளேயுடைய சோலேயின்கண் மேகங்கள் தவழ்ந்ததைப்போல முறுக்கைக்கொண்ட கூந்தலுக்கு அகிற்கட்டையினது தூமத்தைக்கமழும்படி செய்து. (கoரு)

இருட்குல மனேத்தும் பிடித்தொரு தலத்தி
லிருத்துவ தெனக்குழ லிருக்கி
யருட்டமுண் டறுகாற் சுரும்பின மலம்பு
மலங்கலே யிலங்குற வணிந்து
திருத்திய முகிலிற் சசிக்கிடை கதிருஞ்
சேர்ந்தெனத் திருப்பிறை தரித்துப்
பொருத்திளம் பிறையில் விரிச்சிகன் கதிர்கள்
புரண்டென நுதற்கணி புனேந்தார்.

(இ-ள்.) அந்தகாரத்தினது கூட்டங்க ளனேத்தையும் பிடித்து ஒருஸ்தலத்தின்கண் இருத்துவதைப்போலக் கூந்தலேக் கொண்டையாக இருகச்செய்து மதுவையருந்தி ஆறுபாதங்களேயுடைய வண்டுக்கூட்டங்கள் அலம்பாநிற்கும் மலர்மாலேகளே அக்கொண்டையின் மீது பிரகாசிக்கும்படி தரித்து திருத்தஞ்செய்தக் கொண்டையான மேகத்தையுடைய நெற்றியாகிய சந்திரனுக் கிடையில் சூரியனும் வந்து பொருந்தியதைப்போலத் திருப்பிறையணிந்து பொருத்துகின்ற இளஞ்சந்திரனில் விரிச்சிகனது கிரணங்கள் கிடந்து புரண்டதை நிகர்ப்ப நெற்றிக்கு நெற்றிச்சுட்டியும் சேர்த்தார்கள். ()

வள்ளையைக் கிழித்துக் குமிழினைத் துரந்த
மதர்விழிக் கஞ்சன மெழுதிக்
கொள்ளைவெண் கதிர்விட் டுமிழ்மணிம் பணியைக்
பொழுமடற் குழைமிசை சுமத்தித்
தெள்ளிய பணிலச் செழுமணிக் கழுத்திற்
றிரள்பணித் தொகைபல திருத்தி
விள்ளரும் பசிய கழைக்குலம் பொருவா
விளங்குதோ ளணிபல தரித்தார்.

(இ-ள்.) அன்றியும், காதுகளாகிய வள்ளையைக் கிழியும் வண்ணம் செய்து மூக்காகிய குமிழினைத் துரந்த மதர்த்தகண்களுக்கு மையெழுதிக் கூட்டமாகிய வெள்ளிய கிரணங்களைவிட்டு உமிழா நிற்கும் இரத்தின அலுக்குத்துகளைச் செழியமடலைப்பெற்ற வள்ளையாகிய காதுகளிற்சுமத்தித் தெள்ளிய சங்கைநிகர்த்த செழுமையுற்ற அழகிய கழுத்தில் திரட்சி பொருந்திய பலவித ஆபரணத் தொகுதிகளை மிகுவித்துச் சொல்லுதற்கரிய பசுமைகொண்ட மூங்கிற் கூட்டமும் பொருந்தாத பிரகாசிக்கின்ற தோள்களுக்குப் பல ஆபரணங்களைப் புனைந்தார்கள். (கoஅ)

கரவளை தரித்து விரலணி பொருத்திக்
கதிர்கொண்மே கலைபல புனைந்து
சரணிணைச் சிலம்புஞ் சில்லரிச் சதங்கை
தருசிறு சிலம்பொடு தரித்து
விரிகதிர்ப் பவளக் கொடியெனும் விரல்கள்
விளைந்தபோன் மணிப்பணி செறித்துப்
பருதியின் கரங்கண் டுவக்குறும் வனசப்
பதத்தலத் தகமெழு தினரே.

(இ-ள்.) அன்றியும், இரண்டு கைகளுக்கும் வளையல்களைத் தரித்து விரல்களுக்கு மோதிரமுதலிய ஆபரணங்களைப் பொருந்தச் செய்துப் பிரகாசத்தைக் கொண்ட பலவித மேகலாபரணங்களைப் பூட்டி இரு கால்களுக்கும் பருக்கைக்கற்க ளமைந்த சதங்கைகளையுடைய பாதசரத்துடன் தண்டைகளையும் புனைந்து விரிந்த பிரகாசத்தைப் பெற்ற பவளக்கொடிக ளென்றுசொல்லும் கால்விரல்கள் முற்றியதைப்போல இரத்தினப் பணிகளை மிகுவித்துச் சூரியனது கிரணங்களைப் பார்த்து மகிழ்ச்சி யடையாநிற்கும் தாமரைமலர் போன்ற இருபாதங்களுக்குச் செம்பஞ் செழுதினார்கள், (கoஅ)

மறுவியும் புழுகுஞ் சுண்ணமுஞ் சாந்தும்
வடித்தபன் னீரொடுங் குழைத்துப்
பொறிநிகர் பொருவாச் செழுங்குழை யமிர்தப்
பொலன்றொடி மெய்யினிற் பூசிச்
சிறுநுதற் பெருங்கட் குவிமுலைச் செவ்வாய்ச்
சேடிய ரிருமருங் கிண்டிக்
கறைதவிர் மதியந் தொழுமுழு மதிக்குக்
கலந்தகண் ணெச்சிலுங் கழித்தார்.

(இ-ள்.) அன்றியும் கஸ்தூரியையும் புழுகையும், சுண்ணப் பொடியையும், சந்தனத்தையும், தெளியச்செய்து வடிக்கப்பெற்ற பனிநீருடன் குழைத்து இலக்குமியும் ஒப்பாகப் பொருந்தாத செழிய குழையினைக் கொண்ட அமிர்தம் போலும் அழகிய வளைய ல்களை யுடைய வர்களான அக்கதீஜா நாயகியவர்களின் திருமேனி யின்கண் பூசிச்சிறிய நெற்றியையும், பெரிய கண்களையும், குவிந்த முலைகளையும், செவந்த வாயையுமுடைய பாங்கியர்கள் இருபக்கங் களிலும் கூடிக் குற்றமற்ற சந்திரனும் நாம் ஒப்பாக மாட்டோ மென்று சொல்லித் தொழாநிற்கும் பூரணச் சந்திரனாகிய அவர் களுக்குக் கலப்புற்ற கண்ணூறும் கழித்தார்கள். (கoகூ)

செறிந்தசந் தனமுங் கலவையும் புழுகுஞ்
சிலதியர் தட்டினி லேந்த
வெறிந்தசா மரையின் கதிர்கள் கொப்பளிப்ப
விலங்கிழை யிகுளைய ரேந்த
வுறைந்தபா ளிதம்பா கிலையெடுத் தேந்தி
யொருங்கினிற் சிலதிய ருதவ
நிறைந்தபூண் சொரிந்த கோடிகஞ் சுமந்து
நின்றனர் மடவிய ரொருங்கே.

(இ-ள்.) அன்றியும், ஏவற்செய்யும் தோழிப்பெண்கள் செறிய ப்பெற்ற சந்தனத்தையும் கலவைச்சேற்றையும் புழுகையும் தட்டு களில் ஏந்தவும், பிரகாசியா நிற்கும் ஆபரணங்களை யுடைய தோழி ப்பெண்கள் வீசுகின்ற சாமரங்களின் கிரணங்களை கக்கும்வண்ணம் தாங்கவும், சிலஏவல்செய்யும் தோழிப்பெண்கள் கூட்டமாய் உறை தலுற்ற பாளிதம் அடைக்காய் வெற்றிலையாகிய இவைகளை எடுத்து ஏந்திக்கொடுக்கவும், சிலபெண்கள் கூட்டமாய் ஆபரணங்களைப் பொழிந்த பூரணமாகிய அணிகலச் செப்பைச் சுமந்துகொண்டு நின்றார்கள். (ககo)

பேரழ கொழுகும் பெண்ணலங் கனியைப்
பிரசமூ றியமொழிக் கரும்பை
யாரணக் கடக் கமுதநா யகியை
யரிவையர் முறைமுறை வாழ்த்திப்
பாரினிற் செறித்த மலர்மிசை நடத்திப்
பல்லிய முரசொடு கறங்க
வார்பொரு முலையார் முகம்மது மருங்கின்
மணித்தவி சிடத்திருத் தினரே.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் நிற்கப்பெரிய அழகொழுகாநிற்கும் பெண்களில்நன்மைபொருந்திய கனியானவர்களைத் தேனூனதுசுரக்கப்பெற்ற வார்த்தைகளையுடைய கரும்பானவர்களை வேதச் சமுத்திரமாகிய நபிகள்பெரு மானவர்களுக்குஅமுதம்போன்றநாயகியானகதீஜா அவர்களைத் தரித்திருக்கும்கச்சிலடங்காதுபொருதாநிற்கும்முலைகளையுடைய மற்றும்பெண்கள் வரிசை வரிசையாக ஆசீர்வதித்துப் பூமியின்கண் செறிக்கப்பெற்ற புஷ்பங்களின் மீது நடக்கச்செய்து முரசுடன்மற்றும் வாத்தியங்களும் ஒலிக்கும்வண்ணம் நாயகம்நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பக்கத்தில் இரத்தின வர்க்கங்க ளழுத்திய ஓராசனத்தின்மேல் இருக்கும்படி. செய்தார்கள்.

பொருவருங் கதிர்விட் டெழும்பொருப் பிடத்திற்
பூத்தகொம் பிருந்தது போன்றுந்
தெரிதரு மறிவின் றருநிழ லுறைந்த
செழும்பொறைப் பசுங்கிளி யெனவு
முருகவிழ் மலரிற் றேன்றுளித் தெனவு
முகம்மதி னிடத்தினிற் கதீஜா
பரிவுட னிருப்ப வமரருங் களிப்பச்
செல்வமும் படர்ந்தெழுந் தனவே.

(இ-ள்.) அப்போது ஒப்பற்ற கிரணங்களை நாலுபக்கங்களிலும் விட்டு ஓங்காநிற்கும் மகாமேரு பருவதத்தி னிடத்தில் புஷ்பித்த மலர்க்கொம்பானது இருந்ததைப் போலவும், உணருமுணர்வாகிய மரத்தினது நிழலின் கண் தங்கிய செழிய பொறுமையான பசிய கிளியைப்போலவும், வாசனைவிரியா நின்ற புஷ்பத்தின்கண் மதுவானது துளித்ததைப் போலவும், நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு

அலேகிவசல்ல மவர்களிடத்தில் கதீஜாநாயகியவர்கள் அன்போடு மிருக்கவும் தேவர்களான மலாயிக்கத்துமார்களும் பூலோகத்தின் கண்ணுள்ள மனுஷியர்களும் மற்றும்பிராணிகளும் பலவிதச செல்வங்களும் படர்ந்து எழும்பின. (ககஉ)

இருகிளை யவருஞ் சம்மதித் தைந்நூ
றிரசித மகரெனப் பொருந்திக்
கருமுகிற் கவிகை முகம்மது தமக்குங்
காரிகை கனங்குழை தமக்கு
மருமலர்த் தொடையல் புனையுநிக் காகை
மனத்துடன் முடித்திடு மென்னப்
பெருகிய ஹாஷிம் குலத்தவ ரனைத்தும்
பிரியமுற் றுரைத்தன ரன்றே

(இ-ள்.) அப்போது மாப்பிள்ளையினது கிளையாரும் பெண்ணின் கிளையருமாகிய இருவர்களும் மகர் ஐந்நூறு வெள்ளியென்றுசொல்லிச் சம்மதித்து மனப்பொருத்த முற்றுக் கரிய மேகக்குடையை யுடைய நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களுக்கும் காரிகையாகிய கதீஜாநாயகி யவர்களுக்கும் பரிமளமமைந்தபுஷ்பத்தினலியன்ற மாலேசூடும் நிக்காகை மனத்தோடும் முடித்திடுங்களென்று பெருக்கமுற்ற ஹாஷீங்குலத்தவர்க ளியாவர்களும் ஆசையுடன் சொன்னர்கள். (ககங)

முதியவ ருவந்து நீதிமுன் மார்க்க
முறைப்படி சடங்குகண் முடிப்ப
மதிவலன் குறைவலி தகமகிழ்ந் தெழுந்து
முகம்மதின் செழுமணிக் கரத்திற்
புதுமதி வதனச் செழுங்கொடிக் கதீஜா
பொன்மலர்க் கரத்தினைச் சேர்த்திக்
கதிர்மதி யுளநாள் வாழ்கவென் றிசைத்துக்
கண்களித் தினிதுவாழ்த் தினரே.

(இ-ள்) அவர்கள் அவ்வாறு சொல்ல அதைக்கேட்ட வயோதிபர்களான வேதாந்திகள் உவப்புற்று நீதியையுடைய முன்மார்க்கமாகியநபிஇபுறாகீ மலேகிஸ்ஸலாமவர்களின் மார்க்கமுறைப்படிச்சடங்குகளை நிறைவேற்ற அறிவினல் வல்லவனான குவைலிதென்பவன் மனமகிழ்ச்சி கொண்டெழும்பி நாயகம் நபிமுகம்மது சல்லாகு அலேகி

வசல்ல மவர்களின் செழுமையான அழகிய கையில் புதியசந்திரனை நிகர்த்த முகத்தையுடைய செழிய கொடிபோலும் கதீஜாநாயகி யவர்களின் பொன்னினுலியன்ற புஷ்பத்தை யொத்த கையினைப்பொருத்திச் சூரியசந்திர னுள்ள நாள் மட்டிலும் நீங்களும் வாழ்வீர்களாகவென்றுத் தனது வாயினுற் கூறி இருகண்களும் களிப்படைந்து இனிமையுடன் ஆசீர்வதித்தான். (கககூ)

செறிதரு மடவார் குரவைக ளியம்பத்
திரளொடு பல்லிய மார்ப்ப
வறிவினர் வாழ்த்த வாணர்க ளேத்த
வந்தரத் தமரர்கள் களிப்பக்
குறைவிலா துயர்ந்து தழைத்தினி தோங்குங்
குலக்கதீ ஜாவெனுங் கொடியு
மறைபடா தெழுந்த பதிமு கம்மதுவு
மணவறை புகுந்தன ரன்றே.

(இ-ள்.) அப்போது மறைவுபடாமல் எழும்பிய சந்திரனை நிகர்த்த நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் யாதொரு குறைவுமில்லாது உயர்ச்சியுற்றுத்தழைத்து இனிமையுடன் ஓங்காநிற்கும் குலத்திற் சிறந்த கதீஜாவென்று சொல்லும் கொடியானவர்களும் ஆங்குநெருங்கிய பெண்களின்குரவைகள் சத்திக்கவும் கூட்டத்தோடு வாத்தியங்கள் முழங்கவும், அறிவாளர்கள் ஆசீர்வதிக்கவும், கவிவாணர்கள் துதிக்கவும், ஆகாயத்தின்கண் தங்கிய தேவர்களான மலாயிக்கத்துமார்கள் சந்தோஷமடையவும், அங்கிருந்தெழும்பி மணவறையிற் போய்ப் புகுந்தார்கள். (ககரு)

மணிகொழித் ததிருந் திரைக்கட லனைய
மனமகிழ் வொடுமுகம் மதுவும்
பணிபட ரவனித் திலதநா யகியும்
பன்மலர்ப் பளிக்கறை புகுந்து
கணிபடா வழகு கண்களிற் பருகிக்
கருத்தென வுயிருமொன் ருகி
யணிகிள ரின்பப் பெருக்கெடுத் தெறியு
மாநந்தக் கடற்குளித் தனரே.

(இ-ள்.) முத்துக்களாகிய மணிகளைக்கொழித்து ஒலியாநிற்கும் அலைகளை யுடைய சமுத்திரத்தைப் போன்ற மனமகிழ்ச்சியுடன்

நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் ஆதிசே டனது படாமகுடத்தின்கண் படரப்பெற்ற இப்பூலோகத்திற்குத் திலதமான கதீஜாநாயகி யவர்களும் அவ்வாறு பல புஷ்பங்களையு டைய பளிங்கினாற் செய்த மணவரையின்கண் நுழைந்து கணக்கற்ற ஒருவரின் அழகை யொருவர் தங்களின் கண்களினாலுண்டு இருவர் களின் கருத்தும் உயிருமொன்றாய் அழகோங்குகின்ற இன்பமாகிய பெருக்கை எடுத்து வீசாநிற்கும் ஆனந்தச் சமுத்திரத்தின்கண் மூழ்கினார்கள். (ககசு)

திண்டிறற் புவியின் முகம்மது தமக்குத்
 திருவய திருபத்தைந் தினின்மேற்
கண்டதிங் களுமோ ரிரண்டுநா ளிரண்டிற்
 கனகநாட் டவர்கள்கண் களிப்ப
வெண்டிசை முழுதுந் திருப்பெயர் விளங்க
 விருநில மணிக்கதீ ஜாவை
வண்டுறை மரவச் செழுந்தொடை புனைந்து
 வரிசைமா மணம்பொருந் தினரே.

(இ-ள்.) திண்ணிய வலிமையையுடைய இப்பூலோகத்தின்கண் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குத் தெய்வீகமுற்றவயதானது இருபத்தைந்தின்மேல் காணப்பெற்றவைப் பற்ற இரண்டு மாதங்களோடு இரண்டுநாளிற் சுவர்க்கலோகத்தார்க ளான தேவர்கள் கண்களிக்கவும், எண்டிசைகள் முழுவதிலும் தங்க ளின் திருநாமமானது விளங்கவும், பெரிய இந்தப் பூலோகத்திற்கு இரத்தினமாகிய கதீஜாநாயகி யவர்களைத் தேனீக்கள் தங்குகின்ற செழிய குங்குமமாலை சூட்டிச் சங்கைகொண்ட மகத்தான மணம் பொருந்தினார்கள். (ககஎ)

அரவினை வதைத்த கரதல நயினா
 ரருங்கரம் பொருத்திய நயினார்
பரல்செறி சுரத்திற் புனறரு நயினார்
 பணிபணிந் திடவரு நயினார்
வரியளி யலம்பும் புயனபுல் காசி
 மனத்துறை வரிசைநங் நயினார்
தெரிமலர்க் கதிஜா நாயகி நயினார்
 செல்வமுற் றினிதுவாழ்ந் திருந்தார்.

(இ-ள்.) அன்றியும், ஷாம்தேசத்திற்குச்செல்லுகின்ற பாதையி ன்கண் வைத்துச் சர்ப்பத்தை வதைசெய்த கைத்தலத்தையுடைய ஆண்டவர்கள், மேலும் அற்றுப்போன அரியகைகளைப் பொருந்தச் செய்த ஆண்டவர்கள், பருக்கைக்கற்கள் மிகுத்த பாலைநிலத்தில் தண்ணீர்தந்த ஆண்டவர்கள், சர்ப்பமானது பணிந்திடும் வண்ணம் உதயமாகி வந்த ஆண்டவர்கள், வரிகள் படர்ந்த வண்டினங்கள் ஒலி யாநிற்கும் மலர்மாலையணிந்த தோள்களையுடையவரான இந்நூலின் உதாரநாயகர் அபுல்காசீ மரைக்காய ரவர்களின் அகத்தின்கண் அமர்ந்த சங்கைபொருந்திய நன்மையையுடைய ஆண்டவர்கள், தெரியப்பெற்ற மலர்மாலையணிந்த கதீஜாநாயகி யவர்களினது ஆண் டவர்களாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர் கள் சம்பத்தடைந்து இனிமையோடும்வாழ்ந்திருந்தார்கள். (ககஅ)

மக்கமா நகருஞ் செல்வமும் வாழ
  மறைவலோ ரறனெறி வாழத்
தக்கமெய்ப் புகழுங் கிளைஞரும் வாழத்
  தரணிநாற் றிசையினும் வாழ
மிக்கநன் னெறிநேர் முகம்மதுஞ் சிறந்த
  விரைகமழ் மதுரமூற் றிருந்த
விக்குமென் மொழியா ரெனுங்கதீ ஜாவு
  மினிதுறப் பெரிதுவாழ்ந் திருந்தார்.

(இ-ள்.) அன்றியும், பெருமைபொருந்தியதிருமக்கமாநகரமும் அங்குள்ள செல்வங்களும் வாழவும், வேதவல்லர்களான பண்டிதர்க ளின் தருமத்தினது சன்மார்க்கம் வாழவும், தகுதியாகிய உண்மை யான கீர்த்தியும் குடும்பத்தார்களும் வாழவும், பூலோகத்தின்கண் நான்குதிக்குகளிலுமுள்ளயாவர்களும் வாழவும், மிகுதியாகிய நல்ல நெறியினைக்கொண்ட சத்தியத்தையுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் சிறப்பாகிய வா சனைபரிமளியாநிற்கும் இனிமையானது ஊற்றுகஇருக்கப்பெற்றகரு ம்பினது இரசத்தைப்போலும் மெல்லிய வார்த்தைகளை யுடையவர்க ளென்று சொல்லும் கதீஜாநாயகியவர்களும் இனிமையுறும்வண்ணம் பெரிதாக வாழ்ந்திருந்தார்கள். (ககக)

மணப்புரிபடலம்
முற்றிற்று.

ஆ படலம்-உங-க்கு-திருவிருத்தம்-கஉகரு.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

கஃபத்துல்லாவரலாற்றுப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தருமமனு நெறியறிவு பொறையொழுக்க
மினையனவுந் தழைத்து வாழக்
கருமுகிலின் செழுங்கவிகை யினிதோங்கக்
குரிசிலகங் களிக்கு நாளில்
வரிவிழிச் செங்கனிதுவர்வாய்க் கொடியிடையார்
புடைசூழ வளருஞ் செல்வம்
பெருகுமிள மயில்கதிஜா ஸயினபெனும்
பசுங்கிளியைப் பெற்ரு ரன்றே.

(இ-ள்.) எப்பொருள்கட்கு மிறைவரான நமது நாயகம் ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் புண்ணியம், மனுநீதி அறிவு, பொறுமை, ஒழுக்கமாகிய இவைகளும் இவைபோன்ற பலவும் தழைப்புற்று வாழவும், கரிய நிறத்தையுடைய செழியமேகத்தினது குடையானது இனிமையுடையனோங்கவும், சந்தோஷ மடைந்திருக்குங் காலத்தில், இரேகைகள் படர்ந்த கண்களையும் செவந்த கொவ்வைக்கனியையும் பவளத்தையும் போன்ற வாயினையும் கொடிபோன்ப இடையினை முடையவர்களானபெண்கள்பக்கத்திற் சூழும்வண்ணம் ஓங்காநின்ற செல்வமானது அதிகரிக்கும் இளமயிலாகிய கதிஜாநாயகியவர்கள் ஸயினபென்று சொல்லும் அபிதானத்தையுடைய பசிய கிளியாகிய ஒரு பெண்குழந்தையைப்பெற்ருர்கள். (க)

ஸயினபெனு மணியீன்ற வலம்புரிநே
ரனையகுலத் தரும மாது
குயின்மொழிருக் கையாவை யீன்றும்மூல்
குல்தூமை யீன்று பின்னர்
செயிரறநா லாவதிலாண் பிள்ளைகா
சிமெனவோர் செம்ம லீன்று
நயமுறப்பின் தையிபெனுஞ் சேயீன்று
தாகிறையு நல்கி ளுரே.

(இ-ள்.) சயினபென்று சொல்லும் இரத்தினத்தை அவ்வாறு பெற்றவலம்புரிச் சங்கையொத்த சத்தியத்தை யுடைய மேன்மை யான புண்ணியத்தைக் கொண்டமாதாகிய கதீஜாநாயகியவர்கள் குயில்போலும் வார்த்தைகளை யுடைய றுக்கையாவைப்பெற்று உம் முல்குல் தூமைப்பெற்றுப் பின்னர்க் குற்றமற நான்காவது காசிமெ ன்றுசொல்லும் திருநாமத்தை யுடைய செம்மலான ஓராண்பிள்ளை யைப் பெற்றுப் பின்னர் இனிமையுறும் வண்ணம் தையிபென்னும் ஓராண்பிள்ளையைப் பெற்று தாகிறென்ற ஆண்குழந்தையும் பெற் ருர்கள். (உ)

மன்றல்கமழ் முகம்மதர்க்கை யேழாண்டு
  நிறைந்ததற்பின் மறுவிலாத
மின்றவழ்வ தெனவொளிருங் கதீஜாநா
  யகியுதரம் விளங்கச் சோதி
துன்றுமணி பெனப்பூவின் மடந்தையர்க்குஞ்
  சுவனபதித் தோகைமார்க்கு
மென்றுமர செனவிருப்பப் பாத்திமா
  வெனுமயிலை யின்ரு ரன்றே.

(இ-ள்.) கஸ்தூரி வாசனை கமழாநிற்கும் காத்திரத்தை யுடைய நபிகள் பெருமான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர் களுக்கு முப்பத்தைந்து வயது பூரணமான பிற்பாடு குற்றமற்ற மின்னனது தவழுவதைப் போலும் பிரகாசிக்கும் கதீஜாநாயகி யவ ர்கள் தங்களின் வயிருனது விளங்கும்வண்ணம் பிரபை நெருங்கப் பெற்ற இரத்தினத்தைப் போல இப்பூலோகத்தின் கண்ணுள்ள பெண்களுக்கும் சுவர்க்க லோகத்திலுள்ள பெண்களுக்கும் எந்நா ளும் அரசென்று சொல்லும்படியிருக்க பாத்திமா றவியல்லாகுஅன் ஹாவென்று சொல்லும் ஓர் மயிலானவர்களைப் பெற்ருர்கள். (ங)

கலிநிலைத்துறை.

ஆதி நாயகன் திருவுளத் தமரர்க ளிறங்கிப்
பூத லத்தினி லறமெனுத் தலநடுப் புகுந்து
சோதி யெங்கணும் பரந்திடக் கருபத்துல் லாவைத்
தீதி லாதுறச் சுவனமா மணத்தொடுஞ் செய்தார்.

(இ-ள்.) யாவற்றிற்கும் முதன்மையான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் திவ்விய சித்தத்தின்படி தேவர்களான மலாயிக்கத்து மார்கள் ஆகாய லோகத்தை விட்டும் இறங்கிப் பூலோகத்தி னிடத்

தில் ஹறமென்று சொல்லும் நடுத்தலத்தில் புகுந்து பிரபையானது எவ்விடங்களிலும் பரவும்வண்ணம் கஃபத்துல்லாவைச் சொர்க்க லோகத்தின் மகத்தாகிய பரிமளத்துடன் பொருந்தும்படி குற்ற மறச் செய்தார்கள். (௫)

அந்த நாட்டொடுத் தளவிடற் கருநெடுங் காலஞ்
சுந்த ரத்தொடு மமரார்கள் புகுந்தவண் டொழுது
புந்தி கூர்ந்துடற் புளகுற விறைவனைப் புகழ்ந்து
சந்த தம்மிவை தொழிலெனத் திரிந்தவண் சார்வார்.

(இ-ள்.) அந்தநாள் தொடங்கிக் கணக்கிடுதற் கரிய நெடிய காலம் தேவர்களான மலாயிக்கத்துமார்கள் அழகுடன் அக்கஃபத்துல்லாவில் நுழைந்து மனமானது கூரப்பெற்றுச் சரீரம் புளகமுறும்படி யாவற்றிற்கும் இறைவனுன ஜல்லஷுனைகுவத்த ஆலாவைப் பிரதிதினமும் வணங்கித்துதித்து இவையேவேலையென்று சொல்லும் வண்ணம் திரிந்து சுவர்க்கலோகத்தின்கண் போய்ச் சேருவார்கள்.

ஆத நன்னபி யமருல கிழிந்திவ ணடைந்து
மாதவ் வாவுட னின்புற வாழுமந் நாளிற்
காதல் கூர்தரக் கஃபத்துல் லாவினைக் கடிதி
னேத முற்றிடா திடம்பெறப் பின்னியற் றினரால்.

(இ-ள்.) பின்னர் நல்ல நபிப்பட்டம் பெற்ற மூலபிதாவான நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்கள் தேவர்களின் உலகமாகிய சொர்க்கலோகத்தை விட்டும் இறங்கி இந்தப் பூலோகத்தின்கண் வந்து சேர்ந்து மாதான ஹவ்வா அலைகிஸ்ஸலாத்துடன் இனிமைபொருந்தும் வண்ணம் வாழுகின்ற அந்தக்காலத்தில் விரைவாய் ஆசையானது அதிகரிக்கும்படி குற்றமுறுது அக்கஃபத்துல்லாவை விசாலமாகச் செய்தார்கள். (௬)

முதிருங் கேள்விய ராதத்தின் மக்களின் முதியோர்
கதிரு மிழ்ந்துகா ரணம்பல விளங்குகஃ பாவைப்
பிதிர்த ரும்படி கண்டதைப் பெலத்தொடு நிறுவி
யதிக மாய்ச்செய் துயர்த்தின ரழகொடு மிலங்க.

(இ-ள்.) பின்னர் நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்களின் புதல்வர்களில் முற்றிய கேள்வியை யுடையவரான வயதால்முதிர்ந்தவர் கிரணங்களை நானுபக்கங்களிலும் உமிழப்பெற்று பலகாரணங்கள் விளங்காநிற்கும் அந்தக் கஃபத்துல்லாவைப் பிதிரும் வண்ணம் தங்கள் கண்களினுற் பார்த்து அதைப் பெலத்துடன் அழகோடும் பிரகாசிக்கும்படி நிறுத்தி அதிகமாகச் செய்து உயர்த்தினர்கள். (௭)

உரக்த ரும்படி நின்றெழில் பிறங்கிட வொளிகள்
பிரிந்தி டாதகஃ பாவெனும் பேரின்பத் துறையை
விரிந்த காரண நூகுதங் காலத்தில் விண்மட்
டிரைந்தெ றிந்திடும் பிரளயத் திடிந்ததை யன்றே

(இ-ள்.) பின்னர் வலிமைதரும் வண்ணம் நின்று அழகானது பிரகாசித்திடப் பிரபைகள் நீங்காத கஃபத்துல்லா வென்றுசொல் லும்பெரிய இன்பத்தை யுடைய அத்துறையானதுவிரிவான கார ணங்களை யுடைய நபிநூகு அலைகிஸ்லா மவர்களினது காலத்தில் ஆகாயம் வரையும் ஒலித்துவீசிய ஜலப்பிரளயத்தினுல் இடிந்தது.

நிறைந்தி லங்கிய திடிந்தது கிடந்தது நெடுநாட்
பிறந்தது நூகுதம் பதினொரு தலைமுறைப் பின்னர்
துறந்த பேரிபு ருகிம்நன் னபியெனுந் தூயோர்
சிறந்தி லங்கிடக் கஃபத்துல் லாவினைச்செய்தார்.

(இ-ள்.) பூரணமாய்ப் பிரகாசித்த அக்கஃபத்துல்லா அவ்வாறு இடிந்து நெடிய காலபரியந்தம் கிடந்தது. நபிநூகு அலைகிஸ்லா மவர்களின் பதினொருதலை முறைக்குப் பின்னர் அவதரித்துத் துற ந்த கீர்த்தியையுடைய நல்லநபியென்று சொல்லும் பரிசுத்த மானவ ர்களான இபுருகீமலைகிஸ் ஸலாமவர்கள் சிறப்புற்றுப் பிரகாசிக்கும் படி இந்தக் கஃபத்துல்லாவைச் செய்தார்கள்.	(சு)

கன்னல் வேலிமக் காபுரக் கஃபத்துல் லாவை
நன்ன யம்பெறு நெறியிபு ருகிம்நன் னபிக்குப்
பின்ன மாலிக்கத் தென்பதோர் கூட்டத்திற் பெரியோ
ருன்ன தம்பெற விடம்பெறச் செய்துயர்த் தினரே.

(இ-ள்.) அவ்வாறு செய்த மிகுத்த மேன்மைகொண்ட சன்மா ர்க்கத்தையுடைய நல்லநபிப்பட்டம் பெற்ற நபி இபுருகீமலைகிஸ் ஸலாமவர்களுக்குப் பின்னர் அழகி மாலிக்கத்து என்றுசொல் லுவதான ஒரு கூட்டத்திலுள்ள பெரியோர்கள் கரும்பினது வேலி களை யுடைய திருமக்கமா நகரத்தினது அந்தக் கஃபத்துல்லாவை உயர்ச்சிபெறும் வண்ணம் விசாலமாகச் செய்து உயர்த்தினர்கள்.

அறப மாலிக்கத் தென்பதோர் கூட்டத்துக் கணித்தாய்ச்
சுறுகு மென்னுமக் கூட்டத்தி னரசர்கள் சூழ்ந்தே
யிறைவ னேர்வழிக் கஃபத்துல் லாதனை யியல்பாய்
மறைப டாதொளிபெருக்கிடச் செய்துவைத்தனரே,

(இ-ள்.) அவ்விதம்செய்து உயர்த்திய அறபிராஜியத்திலுள்ள அழகிய மாவிக்கத்தென்று சொல்லுவதான ஒப்பற்ற கூட்டத்திற்குச் சமீபமாயுள்ள சுறுகுமென்று சொல்லும் கூட்டத்தினது இராஜர்கள்வளைந்து யாவற்றிற்கும் இறைவனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் உண்மையான மார்க்கத்தை யுடைய அந்தக் கஃபத்துல்லாவை இயல்போடும் மறையாது பிரகாசத்தை நாலுபக்கங்களிலும் பெருக்கிடும்படி செய்து வைத்தார்கள். (கக)

விசய மிக்குயர் சுறுகுமாங் கூட்டத்தின் வீரர்
திசைவி ளங்கிடச் செய்தன ரிருந்தது சிலநா
ளிசைய நல்லெழிற் கஃபத்துல் லாதனை யிறக்கிக்
குசையு வென்பவ ரதிகமா யியற்றினர் குறித்தே.

(இ-ள்.) வெற்றியானது அதிகமா யோங்காநிற்கும் அந்தச்சுறுகுமாங் கூட்டத்தின் வீரர்கள் எண்டிசைகளிலும் பிரகாசிக்கும்படி அவ்வாறு செய்தார்கள். அதோடு சிலகாலமாக இருந்தது. பின்னர் ஹுசையு என்பவர் தமதுமனசின்கண் மதிப்பிட்டு இசையும் வண்ணம் நல்ல அழகையுடைய அந்தக் கஃபத்துல்லாவை இறக்கி அதிகமாகச் செய்தார் (கஉ)

பெருகு நற்குலக் குசையெனும் வேந்தர்க்குப் பின்னர்
முருகு பூம்பொழின் மக்கமா நகரியின் முதிர்ந்து
செருகு மாமழைத் தாரையிற் பிரளயஞ் சிதைப்பத்
தருகை மன்னவர் குறைஷிகள் செய்துவைத் தனரால்.

(இ-ள்.) அவ்வாறுசெய்த பெருகாநிற்கும் நல்ல குலத்தினையுடைய ஹுசையு என்று சொல்லும் அரசருக்குப் பிற்பாடு வாசனையமைந்த புஷ்பங்களைக் கொண்ட சோலைகளை யுடைய திருமக்கமா நகரத்தில் முதிர்தலுற்றுப் பிரளயமானது அதை அழிக்கவே, ஈகையை யுடைய வேந்தர்களாகிய குறைஷிகள் அக்கஃபத் துல்லாவைச் செய்துவைத்தார்கள். (கங)

கணமணித்திரள் கதிருமிழ் கஃபத்துல் லாவைப்
பிணைய ருங்கிய புயவரைக் குறைஷிகள் பெரிதா
யிணைபி றப்பதற் கிலையென வெழிலொடு மிலங்க
மணமு றும்படி செய்துவைத் திருக்குமந் நாளில்.

(இ-ள்.) மலர்மாலைகள் சுமந்த தோள்களாகிய மலைகளையுடைய குறைஷியர்கள் நட்சத்திரம் போலும் இரத்தினவர்க்கங்கள் கிரணங்களை யுமிழாநிற்கும் அக்கஃபத் துல்லாவைப் பெரிதாய் ஒப்பானது

வேறே யாதொன்றும் பிறப்பதற் கில்லையென்று சொல்லும்வண்ணம் அழகுடன் ஒளிரப் பரிமளமானது பொருந்தும்படிசெய்து வைத்திருக்கும் அந்தக்காலத்தில். (கச)

அருளி லாமனக் கொடுங்கொலைக் கரவட ரடுத்துப்
பொருளங் குண்டெனக் கஃபத்துல் லாநடுப் புறத்திற்
றிருடுங் கன்னம்வைத் தறப்பறித் தடிமதிள் சிதைப்ப
விருள றுங்கதிர் மேனிலை யொடுமிடிந் ததுவே.

(இ-ள்.) இரக்கமற்ற இருதயமமைந்த கொடிய கொலைத் தொழிலை யுடைய திருடர்கள் அக்கஃபத்துல்லாவை நெருங்கி அங்கேதிரவியமுண்டுமென்று சொல்லி அதன்நடுப்பக்கத்தில் களவுசெய்யாநின்றகன்னக்கோல்வைத்து முழுவதும்தோண்டி அடிச்சுவரை அழிக்கவே, அந்தகாரமான தற்றுப்போகும் கிரணங்களை யுடைய மேனிலையுடன் அந்தக்கஃபாவானது இடிந்துவிழுந்தது. (கரு)

புடைப்ப றித்ததி லுட்புடைச் சோதனை போக்கி
யுடைப்பெ ரும்பொரு ளில்லெனக் கரவட ரொதுங்கி
யிடைப்ப டாததற் கிசைந்தன மெனமன மிடைந்து
துடைப்ப ரும்பெரும் பழிசுமந் தயலினிற் போனார்.

(இ-ள்.) அவ்வாறு அந்தத்திருடர்கள் அக்கஃபத்துல்லாவின் பக்கங்களில் தோண்டி அதன் அகத்தில் சோதனைசெய்து முடித்துப் பெருமையையுடைய திரவியம் யாதொன்று மில்லையென்று அதைவிட்டும் நீங்கி நாம் இடைப்படாத இவ்வேலைக்கு இடைப்பட்டோமென்று சொல்லி இருதயமானது வசக்கேடடைந்துத் தள்ளுதற்கரிய பெரிய பழியைச் சுமந்தவர்களாய்ப் புறத்திற் போனார்கள். (கசு)

கறையி லாமுழு மதியெனுங் கஃபத்துல் லாவைக்
குறைஷி மன்னவ ரனைவரு மொருங்குறக் கூண்டு
நறையு றுஞ்சுதை மதிலினை நாலுபங்காகத்
துறைபெ றும்படி பிரித்துச்செய் தொழிறுணிந் தனரே.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் போகவே குறைஷிக்குலத்தின் அரசர்களான அனைவர்களும் ஒன்றாய்க் கூடிக் குற்றமற்ற பூரணச்சந்திரனென்று சொல்லாநிற்கும் அக்கஃபத்துல்லாவினது பரிமளத்தைக் கொண்ட சுண்ணச்சாந்தையுடைய மதில்களை நான்குபாகமாகப் பிரிவுசெய்து விசாலமாய் வேலைசெய்ய முயன்றார்கள். (கஎ)

வசையி லாக்குலக் குறைஷிக ளனைவரு மதித்துத்
திசையும் வானமும் போற்றிய செவ்விய ஹஜறுல்
அசுவ தென்னுமக் குவட்டினை யணைத்தெடுத் தசையா
திசையுந் தானத்தில் வைத்திடு பவரெவ ரென்றார்.

(இ-ள்.) அவ்வாறு முயன்ற குற்றமற்ற மேன்மையையுடைய குறைஷியர்களான அவர்களெல்லாவரும் மதிப்பிட்டு எண்டிசைகளும் வானலோகமும் துதியாநிற்கும் அழகிய ஹஜறுல் அசுவதென்று சொல்லும் கருங்கல்லைத்தழுவித்தூக்கவும் அது அசையாததால் அது பொருந்தும் இடத்தில் வைப்பவர்கள் யாவரென்று கேட்டார்கள். (கஅ)

அன்ன காலையிற் செவ்விய நெறிபனி ஹாஷீ
மென்னும் வங்கிடத் தொருவரிப் பள்ளியி னிடத்து
முன்ன தாகவந் தவர்நிறு வுவரென முதலோன்
பன்னு மாமறை தெளிந்தவர் சிலர்பகர்ந் தனரே.

(இ-ள்.) அந்தச் சமயத்தில் யாவற்றிற்கு முதன்மையனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் சொல்லிய மகத்தான வேதங்களைக் கற்றுத் தேர்ந்தவர்களாகிய சிலபேர்கள் இந்த ஹஜறுல் அசுவதென்னும் கல்லை அழகிய சன்மார்க்கத்தையுடைய பனீஹாஷிமென்று சொல்லும் குடும்பத்திலுள்ள ஒருவர் இந்தக் கஃபத்துல்லாவினிடத்தின்முன்னாகவந்து அவரேநிறுத்துவாரென்றுசொன்னார்கள்.

ஈது நன்றெனக் குறைஷிக ளனைவரு மிசைவுற்
றோதும் வேலையி லகமலர்க் களிப்புட னுலவித்
தூத ராகிய முகம்மது மவ்வுழித் தோன்றச்
சீத வொண்கம லானனங் குளிர்தரச் சிறந்தார்.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம்சொல்லவே அதைக்கேட்ட குறைஷிகளான யாவர்களும் இதுவே நல்ல சமாசாரமென்று மனம்பொருந்திச் சொல்லுகின்ற தருணத்தில், ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இருதயத் தாமரையினது சந்தோஷத்தோடும் உலாவி அவ்விடத்தில்வர, அதைக்கண்ட அக்குறைஷிகள் யாவர்களும் தங்களின் குளிர்ச்சிதங்கிய ஒள்ளிய முண்டகமலர்போலும் முகங்கள் குளிரும் வண்ணம் சிறப்படைந்தார்கள். (உ0)

நீங்கி டாக்கனற் சுரத்திடை நிறைபுன லளித்து
வேங்கை யோடுரை பகர்ந்தசெங் கதிர்வடி வேலோய்

பாங்கி னிற்கருங் குவட்டைமுன் பதித்திடுந் தலத்திற்
ருங்கி வைத்திடு மென்றனர் நிலைபெறுந் தலத்தோர்.

(இ-ள்.) அவ்வாறு சிறப்படைந்த நிலைபெருநிற்கும் அத்தானத்தையுடையவர்களான குறைஷிகள் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப்பார்த்து மாறாத அக்கினியையுடைய பாலைநிலத்தின்கண் நிறைந்த தண்ணீரை யருளிப் புவியுடன் வார்த்தைகள் பேசிய செந்நிறமமைந்த பிரகாசமுற்ற கூர்மையான வேலாயுதத்தை யுடையவர்களே! பக்கத்திலிருக்கும் கரியகல்லை முன்னர்பதித்த இடத்தில் உங்கள் கைகளினால் தாங்கிவையுங்களென்று சொன்னார்கள். (உக)

உரைத்த தங்குல மன்னவ ருளங்களிப் பேற
வரைத்த டம்புய மேலுறு போர்வையை வாங்கி
விரித்து நன்குறு துகிலிடை நாப்பணின் விளங்க
விருத்தி னார்செழுங் கரத்தினிற் கருங்கலை யெடுத்தே.

(இ-ள்.) அவ்வாறு சொல்லிய தங்களின் குடும்பத்தினது அரசர்களான அந்தக் குறைஷிகளின் மனதில் சந்தோஷமானது அதிகரிக்கும்வண்ணம் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மலைபோலும் விசாலமாகிய தங்களின் தோள்களின் மேலே பொருந்தும் போர்வையை வாங்கிப் பூமியின்மீது விரித்து நன்மையதிகரித்த அப்போர்வையினது மத்தியின்கண் பிரகாசிக்கும்படி செழிய கைகளினால் அந்த ஹஜறுல் அசுவதென்னும் கரிய கல்லைத் தூக்கி இருத்தினார்கள். (உஉ)

வெற்றி மன்னவர் தலைவரி னால்வரை விளித்துப்
பொற்ற டந்துகின் முந்தியி னான்கினும் பொருந்த
விற்று றாவகை யெடுமென விவரொடு மெடுப்பக்
குற்ற மின்றிமுற் றலத்திடை யிருத்தினர் குறித்தே.

(இ-ள்.) அவ்விதம் இருத்தி விஜயத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அங்குநின்ற தலைவர்களான குறைஷிகளில் நான்குபேரைக் கூப்பிட்டுப் பொன்போலும் விசாலமாகிய அந்தப்போர்வையினது நான்கு முன்றானைகளிலும் பொருந்தும்வண்ணம் இற்றுப்போகாதவிதத்தில் தூக்குங்களென்று சொல்ல, இவர்கள் தூக்க இவர்களோடும் குறிப்பாகயாதொரு குற்றமுமில்லாது முன்னிருந்ததலத்தின்கண் இருக்கும்படிசெய்தார்கள்.

வலிய வீரர்க ளுரைத்திடும் படிமுகம் மதுவு
நலிவி லாதெடுத் திருத்திய நறுங்கருங் குவட்டை
யொலிகொ ளும்படி தொட்டுற முத்தமிட் டுவந்து
நிலைத ரும்படி சதுர்தர மதிணிறு வினரே.

(இ-ள்.) வலிமையையுடைய வீரர்களான அந்தக் குறைஷிகள் சொல்லியவண்ணம் நாயகம் ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்த பாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் யாதொரு வருத்தமு மில்லாது அவ்வாறுதூக்கி இருக்கச்செய்த நன்மையமைந்த அந்தக் கரியகல்லை ஓசைகொள்ள யாவர்களும் தங்கள் கைகளினால் தொட்டுப் பொருந்தும்படி முத்தமிட்டு மகிழ்ச்சியாகி நிலைக்கும்விதமாய் நான் காக மதில்களை நிறுத்தினர்கள். (உச)

பொன்ன கத்தினுந் தீவினும் பூவினும் பொருவா
மின்னி லங்கிய மக்கமா நகரினில் வியப்பா
மன்னர் மன்னவர் மதித்திடச் சிறந்தகஃ பாவை
முன்னி ருந்ததின் மும்மடங் கெனும்படி முடித்தார்.

(இ-ள்.) அவ்விதம் நிறுத்தி சொர்க்கலோகத்திலும் தீவுகளி லும் பூலோகத்திலும் ஒப்பாகாத பிரகாசமானது இலங்கப்பெற்ற திருமக்கமாநகரத்தில் ஆச்சரியமாய் இராஜாதி இராஜர்களும் மதி க்கும்வண்ணம் சிறப்புற்ற அந்தக் கஃபத்துல்லாவை முன்னிருந்ததி லும் மூன்றுபங்கு அதிகமென்று சொல்லும்படி செய்து முடித்தா ர்கள். (உரு)

கஃபத்துல்லா வரலாற்றுப்படலம்

முற்றிற்று.

ஆ படலம், உச-க்கு- திருவிருத்தம், கஉச௦.

முதலாவது

விலாதத்துக்காண்டம்

முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

இரண்டாவது

நுபுவ்வத்துக்காண்டம்.

நபிப்பட்டம்பெற்றபடலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சோதியா யெவைக்கு முள்ளுறைப் பொருளாய்த்
தோற்றமு மாற்றமுந் தோன்று
வாதிதன் பருமான் கொண்டினி தோங்கி
யமரிழிந் தமரருக் கரசன்
மேதினி புகுந்து முகம்மது தமக்கு
விளங்கிய நபியெனும் பட்டங்
கோதறக் கொடுப்பத் தீன்பயிர் விளைத்த
கூறெலாம் விரித்தெடுத் துரைப்பாம்.

(இ-ள்,) பிரகாசமாகவும் யாவற்றிற்கும் உள்ளே தங்காநின்ற பொருளாகவும் பிறப்பும் இறப்பும் உண்டாகாத ஆதியான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் கட்டளை கொண்டு தேவர்களாகிய மலாயிக்கத்துமார்கள் அதிபரான ஜிபுறீல் அலைகிஸ்ஸலா மவர்கள் இனிதாக வோங்கி தேவலோகத்தை விட்டும் இறங்கி இப்பூலோகத்தின்கண் நுழைந்து ஹபீபுறப்பில் ஆலமீன் நபிமுகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குக் குற்றமற விளங்கிய நபியென்று சொல்லும்பட்டமருள, அவர்கள் இப்பூலோகத்தின்கண் தீனென்னும் பயிரை விளையச்செய்த காரணங்களெல்லாவற்றையும் விரைவாய் எடுத்து யாம் சொல்லுவாம். (க)

புள்ளிவண் டருட்ட முண்டிசை பயிலும்
பொழிறிகழ் மக்கமா புரத்திற்
றெள்ளிய குறைஷிக் குலத்தினி லுதித்த
செம்மலுக் குறைந்தபே ராண்டு
விள்ளருங் கணக்கா ருறிரண் டதின்மேல்
மேலவன் றிருவுளப் படியால்
வெள்ளிடை யதனிற் சிறிதொளி திரண்டு
விழித்திடும் விழிக்கெதிர் தோன்றும்.

(இ-ள்.) புள்ளிகளை யுடைய தேனீக்மள் மதுவை யருந்தி இராகம் பாடும் சோலைகள் பிரகாசிக்கின்ற திருமக்கமா நகரத்தின் கண் தெளிவான குறைஷிக் கூட்டத்தி லுதயமாகிய செம்மலான கீர்த்தி தங்கிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குச் சொல்லுதற்கரிய வயசின் கணக்கானது முப்பத்தெட்டின் மேல் மேலவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் திவ்விய சித்தத்தின்வண்ணம் வெளியில்சிறிது பிரகாசமானது திரட்சியுற்று பார்த்திடும்பார்வைகளுக்குளதிராய்த்தோற்றுநிற்கும்.

தெரிந்திடு மொளியைத் தம்மிரு விழியாற்
றெரிதர நோக்குவர் காணு
திருந்திடும் பின்னுந் தோற்றிடு மிதனை
யெவரொடும் விடுத்தெடுத் துரையார்
பொருந்துளக் களிப்பு மச்சமும் பிறப்பப்
புந்தியிற் றேர்குவர் பொருவாக்
கருந்தலைக் கவைநா வரவுட றடிந்த
கவின்கர நலமுகம் மதுவே.

(இ-ள்.) அவ்வாறு தோற்றமாகும் பிரகாசத்தை யாதொன்றும் ஒப்பாகாத கரிய சிரத்தையும் பிளவைக்கொண்ட நாவையுமுடைய சர்ப்பத்தினது சரீரத்தைவெட்டிய அழகிய கைத்தலத்தைப்பெற்ற நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களின் இரு கண்களினாலும் தெரியும்வண்ணம் பார்ப்பார்கள் அப்போது அப்பிரகாசமானது அவர்களின் கண்களுக்குத் தெரியாதிருக்கும் பின்னரும் முன்போலவே தோற்றமாகும் இவ்வற்புதத்தை யாரோடும் பிரித்தெடுத்துச் சொல்லார்கள் மனசின்கண் பொருந்தா நின்ற சந்தோஷமும் பயங்காமும் உண்டாகும்படி அறிவினாலேயே தெளிவடைவார்கள். (௩)

திசையனைத் தினுமந் தரத்தினு மிருந்த
திசையினு மிரவினும் பகலு
மிசையுறச் சிறிது தொனிகளே பிறக்கு
மெதிர்ந்துநோக் கிடிலுருத் தெரியா
தசையினும் பிரியா தடுத்துறைந் தவர்தஞ்
செவியினு மத்தொனி சாரா
வசையறுங் குறைஷிக் குலத்துறுங் குரிசின்
மனத்தினி லதிஜயம் பெறுவார்.

(இ-ள்.) அன்றியும், எண்டிசைகளிலும் ஆகாயத்திலும் அங்கிருக்கப்பெற்ற திசைகளிலும் இராக் காலங்களிலும் பகற் காலங்களிலும் சிறிது சத்தங்கள் பொருந்தும் வண்ணம் உண்டாகும். எதிர்த்துப் பார்த்ததால் யாதொரு சொருபத்தையுங் காணாது அசைந்து சென்றாலும் அத்தொனிகள் நீங்காது. நெருங்கித் தங்கி யிருக்கப்பட்டவர்களின் காதுகளிலும் கேளாது. அதனால் குற்றமற்ற குறைஷிக் கூட்டத்திற் பொருந்திய குரிசிலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களினது மனத்தின்கண் ஆச்சரிய மடைவார்கள். (௪)

இவ்வணஞ் சிறிது பகனிகழ்ந் ததற்பி
னெழில்பெறும் வரிசிலைக் குரிசின்
மைவண விழியா ரிடத்தினி லுறையா
மற்றொரு வரையுடன் கூட்டாச்
செவ்வணக் கருத்திற் றனியிருப்ப தற்கே
சிந்திக்கு மதன்படி தேறி
யெவ்வரை யிடத்துங் காலினி லேகி
யெழில்பெறத் தனித்தனி யிருப்பார்.

(இ-ள்.) இந்தப் படியாகக் கொஞ்சநாள் நடந்ததின் பின்னர் அழகு பெற்ற நெடிய வில்லையுடைய குரிசிலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் மையைக்கொண்ட அழகிய கண்களையுடையவர்களான கதீஜாநாயகி யவர்களிடத்தில் தங்காமலும் வேறேயொருவரைத் தங்களோடு சேராமலும் செவ்விய குணத்தை யுடைய தங்களின்கருத்தில் ஏகமாய் இருப்பதற்கு எண்ணும். அந்த எண்ணத்தின்படி தெளிந்து எந்த மலைக ளிடத்திலும் தங்களின் பாதங்களினால் ஒப்பற நடந்துசென்று அழகுபெறும் வண்ணம் தனியாகவே தங்கி யிருப்பார்கள். (௫)

உலகினிற் பிறந்து வருமெழு வகைக்கு
முயிரெனுஞ் சலதரக் கவிகை
நிலைபெறு நிழலார் முகம்மது தனித்து
நிறைகதிர் தவழ்கிரு மலையி
னலனுற வுலவி மனனுறும் படியே
நாலுநா ளிரண்டுநா ளிருந்து
சிலையென வளைந்த சிறுநுதற் கதீஜா
திருமனை யிடத்தினில் வருவார்.

(இ-ள்.) அவ்வாறு உலகத்தின்கண் உதயமாய் வராநிற்கும் தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமாகிய இவ்வெழுவகைத் தோற்றத்திற்கும் ஜீவனென்று சொல்லும் மேகக் குடை நிலைபெற்ற நிழலையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வரிசையாகிய கிரணங்கள் தவழாநிற்கும் ஹிறாமலையின்கண் நன்மையுறும்படி ஏகமாய் உலாவித் தங்களின் மனமானது பொருந்தும் வண்ணம் நாலுநாள் இரண்டுநாள் தங்கியிருந்து விற்போலும் வளைந்த சிறிய நெற்றியை யுடைய கதீஜாநாயகியவர்கள் தங்கியிருக்கும் தெய்வீகம் பொருந்திய வீட்டின்கண் வருவார்கள்.

வரிசைக்குங் கதிக்கு முதற்றிருத் தலமாய்
மதித்திட வருங்கிறு மலையி
லருசிக்குங் கனிவாய் மடமயிற் கதிஜா
வுடன்வர முகம்மது மெழுந்து
தெரிசிக்கப் பொருந்து மமரர்தம் முருவுந்
தெரிந்திடா தவணிடை யிருந்து
பரிசுத்த மனைய குயிலொடுந் தாமும்
பகற்கொழு தாற்றியே வருவார்.

(இ-ள்.) அன்றியும், சங்கைக்கும் மோட்சத்திற்கும் ஆதியான தெய்வீகம்பொருந்திய இடமாய் யாவர்களும் மதிப்பிடும்படிவந்த ஹிறாமலையில் இனித்திடும் இனிப்பைக் கொண்ட கனிபோலும் வாயை யுடைய இளமயிலாகிய கதீஜாநாயகி யவர்கள் தங்களோடு வரும் வண்ணம் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் எழும்பிப் பார்ப்பதற்காய்ப் பொருந்தும் தேவர்களுடைய சொரூபமும் தோற்றாது அவ்விடத்தின் கண்ணே தங்கியிருந்து பகற்காலத்தைக் கழித்துப் பரிசுத்தத்தைப் போன்ற குயிலான அக்கதிஜா நாயகி யவர்களுடன் தாங்களும் வீட்டிற்குத் திரும்பி வருவார்கள். (எ)

மக்கநன் னகருந் தெருத்தலை மதிளும்
வழியிடை கிடக்குங்கல் லனைத்தும்
புக்குநல் லிடத்திற் றெரிந்தவை யெவையும்
புகழொடு முகம்மது தமக்குத்
தக்கநற் பொருளா யுறுசலா முறைக்குந்
தனித்தொனி யிருசெவி தழைப்ப
மிக்கமெய்ப் புதுமை தனையுணர்ந் துணர்ந்து
மிகக்களித் ததிசயித் திருப்பார்.

(இ-ள்.) அன்றியும், நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களுக்கு நன்மைபொருந்திய திருமக்கமா நகரமும் வீதிகளினிடத்துள்ள மதில்களும்பாதையின்கண் கிடக்கப்பெற்றகற்கள் முழுவதும் அவர்கள் போகின்ற இடத்தில் அவர்களைப்பார்த்த மற்றும் எல்லாவஸ்துக்களும் கீர்த்தியுடன் தகுந்தநல்ல பொருளாக ஓப்பற்ற ஓசையினுல் இருகாதுகளும் செழிக்கும்வண்ணம் பொருந்திய சலாம் சொல்லும் அதிகரித்த உண்மையான அவ்வாச்சரியத்தைத் தங்களின் மனசின்கண் ஆலோசித்து ஆலோசித்து மிகவும் சந்தோஷித்து ஆச்சரியமுற்றிருப்பார்கள். (அ)

முருகவிழ் புயவள் ளலுக்குறும் வருட
முப்பதிற் றொன்பதின் மேலாய்த்
தெரிதருந் திங்க ளாறுஞ்சென் றதற்பின்
றினந்தொறும் புதுமைய தாக
மருமலர்ச் செழுந்தார்க் கனங்குழற் கதீஜா
வெனுமயின் மணமனை யிடத்தி
லிருவிழி துயில மண்ணிடை தோன்று
தெழில்பெறக் கனவுகள் காண்பார்.

(இ-ள்.) அன்றியும், தேனுனது அவிழ்கின்ற மலர்மாலை யணிந்த தோள்களையுடைய வள்ளலான நாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப் பொருந்திய வயசானது முப்பத்தொன்பதின் மேலாய்க்காணப்படும் மாதங்களும் ஆறுசென்றதின் பிற்பாடு பிரதிதினமும் ஆச்சரியமாக வாசனை பொருந்திய செழிய புஷ்பமாலையமைந்த மேகம் போலுங் கூந்தலை யுடைய கதீஜாவென்று சொல்லும் மயிலானவர்களினது பரிமளத்தை யுடைய வீட்

டின்கண் இரண்டு கண்களும் நித்திரை செய்யவே, இவ்வுலகத்தில் தோற்றாத அழகுபெறும் வண்ணம் சொப்பனங்கள் காணுவார்கள்.

வெண்டிரைக் கடலி லமுதமும் பொருவா
  வியனுறு மெல்லிதழ்க் கதீஜா
கொண்டுறு மயலு ளுயிரினு முயிராய்க்
  குலவிய முகம்மது நபினர்
வண்டுறை மலர்ப்பஞ் சணைமிசை பொருந்தி
  மறுவிலா தொளிர்மதி முகத்துக்
கண்டுயில் பொழுதிற் கனவுக ளனைத்துங்
  கண்டது கண்டதாய்ப் பலிக்கும்.

(இ-ள்.) அவ்வாறு வெள்ளிய அலைகளை யுடைய சமுத்திரத்தின் அமிர்தமும் ஒப்பாகாத அதிசயம் பொருந்திய மெல்லிய அதரங்களைப் பெற்ற கதீஜாநாயகி யவர்கள் தங்களின் மனசிற்கொண்டு அதிகரியா நிற்கும் ஆசையினால் சரீரத்தினகம் பொருந்தும் ஜீவனிலும் ஜீவனாய்க் குலவப்பெற்ற ஆண்டவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தேனீக்கள் தங்காநின்ற புஷ்பங்களினாலான பஞ்சணையின் மீது பொருந்திக் குற்றமில்லாது பிரகாசிக்கின்ற சந்திரன்போன்ற முகத்தினது கண்கள் நித்திரை செய்யும் காலத்தில் பார்த்த சொப்பனங்க ளெல்லாம் பார்த்தது பார்த்ததாகவே வாய்க்கும். (௧௦)

துய்யவ னருளா லாதமானுவாய்த்
  தோன்றிய வவனியின் வருட
மையமி லாறு யிரத்தினி லொருநூற்
  றிருபத்து மூன்றினி லழகா
வையக மதிக்கு முகம்மதின் வயது
  நாற்பதில் றபீயுலவ் வலினி
லெங்கிய வெட்டாந் தேதியிற் சனியி
  னிரவினிற் கிருமலை யிடத்தில்.

(இ-ள்.) பரிசுத்தத்தை யுடையவனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் திருவருளினால் மூலபிதவாகிய நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்கள் இப்பூலோகத்தின்கண் பெருமை தங்கிய மானிடவடிவமாய் உதயமான சந்தேகமற்ற வருடமானது ஆறுயிரத்தி யொருநூற்றி

யிருபத்துமூன்றில் இப்பூமிமுழுவதும் அழகாக மதியாநிற்கும்நாய கம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வயதானது நாற்பதில் றபீயுல் அவ்வல் மாதத்திற் பொருந்திய தேதி எட்டில் சனிக்கிழமை இராவில் ஹிறுமலையி னிடத்தில். (கக)

நித்தில நிறைத்த விருசிறை யொழுங்கு
நீணிலாக் கதிர்கள்விட் டொழுக
வித்துரு மத்தாள் சிறந்தணி திகழ
வில்லுமிழ் கரங்கிடந் திலங்கப்
பத்திவிட் டெறிக்குஞ் செம்மணி யிருகட்
பார்வையிற் கருணைவீற் றிருக்கச்
சித்திர வடிவைச் சுருக்கிமா னுடர்போற்
ஜெபுறயீ லவ்விடத் தடைந்தார்.

(இ-ள்.) முத்துக்களை நிரைக்கப்பெற்ற இரு சிறகுகளின் ஒழுங்குகளும் நீண்ட பிரகாசத்தினது கிரணங்களை விட்டு ஒழுகவும், பவளம்பொன்ற இருபாதங்களும் சிறப்புற்று அழகு பிரகாசிக்கவும், ஒளியை யுமிழ்கின்ற இருகைகளும் கிடந்து ஒளிரவும், வரிசைவிட்டுப் பிரபையை வீசாநிற்கும் செவந்த இரத்தினம்போன்ற இரண்டு களினது பார்வைகளிலும் கிருபையானது வீறுடனிருக்கவும், தங்களின் அழகிய சொரூபத்தைச் சுருங்கச்செய்து மனுஷியர்களைப் போல அமராதிபரான ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அவ்விடத்தின்கண் வந்து சேர்ந்தார்கள். (க௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மானுட வடிவாய் வந்த வானவர்க் கரசன் செவ்வி
யானனக் குரிசி லென்னு மகுமதின் வதன நோக்கி
கானமுங் கியமெய்ச் சோதி நாயகா வரையின் கண்ணே
தினுற விருக்கின் றீரோ வென்றுசே ணடைந்தா ரன்றே.

(இ-ள்.) அவ்வாறு மனுஷியசொரூபமாய் வரப்பெற்ற தேவராதிபரான ஜிபுறீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அழகிய முகத்தைக்கொண்ட குரிசிலென்று சொல்லும் அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வதனத்தைப்பார்த்துக் கஸ்தூரிவாசனை முங்கப்பெற்ற காத்திரத்தினதுபிரகாசத்தையுடைய நாயகமானவர்களே! இம்மலையினிடத்தில்

தினுல் இஸ்லாமென்னும் மார்க்கமானது வந்து பொருந்துதற்காக் இருக்கின்றீர்களோ? என்று சொல்லிவிட்டு ஆகாயத்தின்கண் போய்ச்சேர்ந்தார்கள். (கங)

மற்றைநாட் பருதி ராவில் கிருமலை யிடத்தில் வானோர்
கொற்றவ ருறைந்து வள்ளற் குவவுத்தோள் வனப்பு நோக்கி
யுற்றவென் னுயிரே நீரிங் குறைந்தினி ரோவென் ருேதி
வெற்றிவெண் விசும்பு கீறி மேலுல கிடத்திற் சார்ந்தார்.

(இ-ள்.) அவ்விதம்போய்ச்சேர்ந்த அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் மற்றநாளாகிய ஞாயிற்றுக்கிழமை இராவில் அந்த ஹிருமலையின்கண் வந்து தங்கிய வள்ளலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் திரட்சியுற்ற இரு புயங்களினது அழகையும் பார்த்துப் பொருந்திய எனது ஜீவனானவர்களே! நீங்கள் இவ்விடத்தில் தங்கினீர்களோ? என்று சொல்லி வெற்றியையுடைய வெள்ளிய ஆகாயத்தைப் பிளந்து சொர்க்கலோகம் போய்ச் சேர்ந்தார்கள். (கச)

விண்ணகத் தரசர் தோன்றும் விதிமுறை யறியா வள்ளன்
மண்ணகத் திவரை நேரும் வனப்பினில் விசையி லந்தக்
கண்ணகன் வான நாட்டுங் காண்குற வரிதே யென்ன
வெண்ணமுற் றிதயத் தாராய்க் திருப்பிடம் பெயர்ந்தி ராரால்.

(இ-ள்.) ஆகாயலோகத்தின் அதிபரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் உதயமாகும் விதத்தினது ஒழுங்குகளை யுணராத வள்ளலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இடமகன்ற இப்பூலோகத்திலும் அந்த வானலோகத்திலும் இவரைப்போல் பொருந்தும் அழகிலும் துரிதத்திலும் பார்ப்பது அரிதாகுமென்று சொல்லி மனசின்கண் சிந்தித்துத் தாங்கள் இருந்த இடத்தைவிட்டும் பெயர்ந்தார்க ளில்லர். (கரு)

வரிசைநேர் றபியு லவ்வல் மாதமீ ரைந்து நாளிற்
றெரிதர விளக்குந் திங்க ளிரவினிற் சிறப்பு மிக்கோ
னருளினில் ஜபுற யில்வந் தருவரை யிடத்தில் வைகுங்
குரிசிறங் கமலச் செங்கண் குளிர்தர வெதிர்ந்து நின்ருர்

(இ-ள்.) அப்போது சங்கைபொருந்திய றபீயுல் அவ்வல்மாதம் பத்தாந்தேதியில் தெரியும்வண்ணம் பிரகாசியா நிற்கும் திங்கள் கிழமையிராவில் வரிசையானது அதிகரித்தவனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருவருளினுல் ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் வானலோகத்தை விட்டும் இறங்கிவந்து அரிதாகிய அந்த ஹிறுமலையின்கண் தங்கியிருக்கும் குரிசிலான நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தாமரை மலர்போலும் செவந்த இரண்டுகண்களும் குளிர்சியுறும்படி எதிராக நின்றுர்கள். (கசு)

நானிலம் பரம்புஞ் சோதி நாயகக் கடவு டம்மை
வானகத் திருந்த சோதி வந்துசந் தித்த தேபோற்
மானமர் துண்டச் செங்கட் கலைநிலாத் தவழு மியாக்கை
யீனமில் ஜபுற யீல்வந் திறையவன் சலாமுஞ் சொன்னுர்.

(இ-ள்) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென்னும் நான்கு வகைப்பட்ட நிலங்களிலும் விரியும்படி செய்யும் பிரகாசத்தையுடைய நாயகக்கடவுளான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை ஆகாயத்தின்கண் இருக்கப்பெற்ற மின்னலானது வந்து சந்தித்ததைப்போல வாசனைதங்கிய முகத்தினது செவந்த கண்களையும் சந்திரனது பிரகாசத்தை யொத்த பிரகாசமானது தவழா நிற்கும் சரீரத்தையுமுடைய குற்றமற்ற ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அவ்வாறு வந்து யாவற்றிற்கும் இறைவனுன ஜல்ல ஷகுனகுவத்தஆலாவின் சலாமும் சொன்னுர்கள். (கஎ)

மரகதப் பத்தி கோலி வச்சிரத் தாரை சாத்தி
யுரகமா மணிக ளுப்ப ளுெளிபெறக் குயிற்றி வெள்ளைத்
தரளமென் புருட ராகம் பலமணி தயங்கத் தாக்கிச்
சொரிகதிர் பரப்புஞ் சோதித் துகிலினைக் கரத்திற் கொண்டார்.

(இ-ள்.) அவ்வாறு சொன்ன ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் மரகதத்தினுல் பாத்திவளைந்து வச்சிரத்தினுல் தாரைசார்த்தி நடுவில் பிரகாசிக்கும் வண்ணம் பெருமை பொருந்திய நாகரத்தினங்கள் பதித்து வெண்ணிறத்தை யுடைய முத்துக்கள் மெல்லிய புருடராகங்கள் முதலிய பல இரத்தினங்களை ஒளிரும்வண்ணம் அதில் தாக்கிச் சிந்தாநிற்கும் கிரணங்களை விரியச் செய்யும் ஒளியையுடைய ஒரு வஸ்திரத்தைத் தங்களின் கையில் கொண்டார்கள், (கஅ)

ஜெகமதில் விண்ணி லொவ்வாச் செழுந்துகி லதனை யேந்தி
யகமகிழ் தினிது போற்றி யமரருக் கரசர் வாய்த்த
முகமதி நோக்கி யாதி முறைமறைக் கலிமா வோதி
முகம்மதை விளித்துச் செவ்வி வலக்கரத் திடத்தில் வைத்தார்,

(இ-ள்.) அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் இப்பூலோகத்திலும் ஆகாயலோகத்திலும் ஒவ்வாத செழிய அந்த வஸ்திரத்தை அவ்விதம் தங்களின் கைகளில் தாங்கி மனமகிழ்ச்சி யடைந்து இனிமையுடன் துதித்துச்சிறப்புற்ற நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் முகமாகிய சந்திரனைப் பார்த்து யாவற்றிற்கும் முதன்மையனான ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் ஒழுங்கை யுடைய வேதத்தினது "லாயிலாஹஇல்லல்லாஹு முஹம்மதுர்றசூலல்லாஹி" என்னும் கலிமாவைச் சொல்லி அந்நபிகள் பெருமானைக் கூப்பிட்டு அவர்களின் அழகிய வலதுகையின் கண் வைத்தார்கள். (கக)

மரைமலர் வதனச் சோதி முகம்மதின் கரத்தில் வானோ
ரரசர்மிக் குவகை கூர்ந்தவ் வணிதுகி லிருத்தும் போதிற்
றிரைமுகில் வரையும் விண்ணுந் திசாந்தமு நடுவு மீக்கொ
ளிரைகட லேழும் பாரு மிலங்கொளி விரிந்த தன்றே.

(இ-ள்.) அவ்வாறு தாமரை மலர்போலும் முகத்தினது பிரகாசத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின்கையில் தேவர்களின் அரசரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் அதிகச்சந்தோஷம் அதிகரித்து அலங்காரமாகிய அந்த வஸ்திரத்தை இருத்துகின்ற சமயத்தில், ஒளிர்கின்ற பிரபையானது திரைவைக்கொண்ட மேகங்களை யுடைய மலைகளிலும், ஆகாயத்திலும், திசையினது முடிவிலும், நடுவிலும் மேலான ஒலியையுடைய எழு சமுத்திரத்திலும் பூலோகத்திலும் விரிவுற்றது. (உ0)

மண்டலம் புரக்குஞ் செங்கோன் முகம்மதின் வதன நோக்கி
விண்டலம் பரவும் வேத நபியெனும் பட்ட நும்பாற்
கொண்டலே குதாவின் றந்தா னெனுமொழி கூறிப் பின்னு
மண்டர்வாழ்த் தெடுப்பச் செவ்வி யாரணம் புகறி யென்றார்.

(இ-ள்.) அப்போது இந்தப் பூலோக மனைத்தையும் காக்காநிற்கும் செங்கோலை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி

வசல்லமவர்களின் முகத்தை ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்கள் பார்த்து மேகமானவர்களே! ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவானவன் இன்றையத்தினம் ஆகாயலோகமும் புகழாநின்ற வேத நபியென்று சொல்லும் ஓர் பட்டத்தை உங்களிடத்தில் தந்தானென்னும் வார்த்தையைச் சொல்லி மறுத்தும் தேவர்களான மலாயிக்கத்துமார்கள் வாழ்த்தும்வண்ணம் அழகிய வேதத்தை யோதுங்க ளென்று சொன்னார்கள். (உக)

செப்பிய வசனங் கேட்டுச் செபுறயீல் முகத்தை நோக்கி
முப்படி விளங்கும் வண்ண முழுமணிக் குரிசி லேயா
னிப்பெரும் புவியிற் றீட்டு மெழுத்திலொன் றறியே னோதி
யொப்பரும் வேத மென்ப தோதினே னல்ல னென்றார்.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்மவர்கள் அவ்வாறு சொல்லிய வார்த்தைகளைத் தங்களின் இரு காதுகளினாலும் கேள்வியுற்று ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களின் முகத்தைப் பார்த்து வானம், பூமி, பாதாளமென்னும் மூன்றுலோகங்களும் பிரகாசியாநிற்கும் அழகியபூரணரத்தினம்போன்ற குரிசிலானவர்களே! யான் இந்தப் பெரிய பூமியின்கண் எழுதும் எழுத்தில் ஒன்றேனும் அறியமாட்டேன். அன்றியும், ஒப்புதற்கரிய வேதமென்று சொல்லுவதையும் ஓதினவ னல்லேனென்று சொன்னார்கள். (உஉ)

சிறைநிறஞ் சுருக்கித் தோன்றுஞ் ஜெபுறயீல் முதலோன் கூறு
முறைவழி முகம்ம தன்பான் முன்னிருங் திருகை யார
விறுகுறத் தழுவிப் பின்ன ரியம்புமென் றியம்பத் தோன்றன்
மறைமுதல் வசன நாவின் வழக்கின னல்ல னென்றார்.

(இ-ள்.) அதைக்கேட்ட சிறகுகளினது பிரகாசத்தைச் சுருங்கச்செய்து மானிட வடிவமாய்த் தோன்றாநிற்கும் ஜிபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் யாவற்றிற்கும் ஆதியான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் சொல்லும் முறைமயினொழுங்காய் அன்போடும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் முன்னர் இருந்து தங்களின் இரண்டு கைகளினாலும் பொருந்தும்படி நெருங்கும்வண்ணம் கட்டியணைத்துப் பிற்பாடு ஓதுங்களென்றுசொல்லத், தோன்றலாகிய அந்நபிகள் பெருமானவர்கள் வேதத்தினது ஆதிவாரத்தையாவது யான் எனதுநாவில் வழக்கமாக்கினவ னல்லேனென்று சொன்னார்கள். (உங)

எதிரிருந் தரசர் பின்னு மிடருறத் தழுவி நோக்கி
மதியினு மிலங்குஞ் சோதி முகம்மதே யோது மென்னப்
புதுமையி னரிய பேறே புவியிடத் தரிய வேதங்
கதிபெறக் கண்டுங் கேட்டுங் கற்றறிந் திலனியா னென்றார்.

(இ-ள்.) அவ்வாறு சொல்லவே அமராதிபரான ஜிபுறயீல் அலை கிஸ்ஸலாமவர்கள் மறுத்தும் நாயகம் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் முன்னராக இருந்து அவர்களைத் துன்பமுறும்வண்ணம் கட்டியணைத்துப் பார்த்துச் சந்திரனைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பிரகாசியாநிற்கும் பிரபையையுடைய முகம்மதென்பவர்களே! ஓதுங்களென்றுசொல்ல; ஆச்சரியத்தையுடைய அரிய பேறானவர்களே! யான் கதிபெறும்படி இப்பூலோகத்தின்கண் அருமையான வேதத்தைக் கண்களினாற் கண்டாயினும் அல்லாகு காதுகளினாற் கேள்வியுற்றாயினும் கற்றுணர்ந்தவ னல்லேனென்று சொன்னார்கள்.

கேட்டவா னவர்கோ மானுங் கிளரொளி வனப்பு வாய்ந்த
தோட்டுணை நெருங்க வுள்ளந் துனிவர வுடலஞ் சோரப்
பூட்டிய கரங்கள் சேப்பப் புல்லிநந் நபியை நோக்கி
மீட்டுமெய் மறைநூன் மாற்றம் விரித்தெடுத் தியம்பு மென்றார்.

(இ-ள்.) நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு சொல்லியதை அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்களும் தங்களின் இருகாதுகளினாலும் கேள்வியுற்று ஓங்காநிற்கும் பிரகாசத்தினது அழகானது சிறக்கப்பெற்ற அவர்களின் இருதோள்களும் நெருங்கவும், மனதில் துன்பமுண்டாகவும் சரீரமானது தளரவும், பூட்டிய இரண்டுகைகளும் செவக்கவும், கட்டியணைத்து அந்நபியவர்களைப்பார்த்துமறுத்தும் உண்மையான வேதநூலின்வாசகத்தை விரித்துஎடுத்து ஓதுங்களென்றுசொன்னார்கள்.

நெருக்கிவிட் டதற்பின் வேத நெறிநபி யுள்ளத் துள்ளே
திருக்கிளர் புவியில் விண்ணோர் தெளிதரு மறிவு முன்னா
விருக்கினி லறிவுந் தோன்று யிடனறப் பெருகி நல்லோ
ருருக்கொளு மரசை நோக்கி யோதவேண் டுவதே தென்றார்.

(இ-ள்) அவர்கள் அவ்வாறுநெருக்கிவிட்டதின் பிற்பாடு வேதத்தினது சன்மார்க்கத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு

அலைகிவசல்ல மவர்கள் தங்களின் மனதினகம் செல்வமானது ஓங்கு கின்ற பூமியின்கண் தேவர்களான மலாயிக்கத்து மார்கள்தோராநிற்கு முணர்வும் முந்நூலாகிய வேதத்தினது உணர்வும் உதையமாகி இட மில்லாது அதிகரித்து நன்மைபொருந்தியஒப்பற்ற மானிடவடிவங் கொண்டிருக்கும் அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்களை ப்பார்த்து யான் ஓதவேண்டியதுயாது? அதைச் சொல்லுங்க ளென் றுகேட்டார்கள் (உ௬)

மிக்குயர் மறையின் வள்ளல் விளம்பவின் னவர்கள் கோமா
னிக்கற வெனும் சூறத்தி லிருந்துநா லாயத் தின்ப
மெய்க்குற மாலம் யகுல மெனுமட்டும் விளம்பு வீரென்
றொக்கலி லுயிரின் மிக்கா யுறுநபிக் குணர்த்தி னரால்.

(இ-ள்.) மிகுந்த மேன்மையை யுடைய வள்ளலானநாயகம் நபி; முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்வாறுகேட்க உம்பரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் இக்றகு என்று சொல்லும் சூறத்திலிருந்து நான்காயத்து மாலம் யகுலம் என்று சொல்லும் வரையும் ஓதுங்களென்று இனிமையானது சரீரத்தின் கண் பொருந்தும் வண்ணம் சொல்லிக்காட்டி உறைவினரைப்பார்க் கிலும் உயிரைப்பார்க்கிலும் அதிகமாய்ப் பொருந்தாநிற்கும் அந் நபிகள் பெருமானவர்களுக்கு அறிவித்தார்கள் (உ௭)

எழுத்தினிற் றவறுச் சொல்லி னியன்முறை சிதகா வின்பம்
பழுத்தபண் ணொலியாற் றீய்ந்த பயிருயிர் பெறுவ தாகச்
செழித்தமெய் ஜபுற யீல்தஞ் செவியகங் குளிரக் கல்வி
வழுத்திய பொருளுட் டோன்ற வகுமது மோதி னரால்.

(இ-ள்) அஹமதென்னும் திருநாமத்தை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அட் சரத்தில் தப்பாத வார்த்தைகளின் இயலினது ஒழுங்கு சிதகாது இனிமை முற்றிய இராகத்தினது ஓசையினல் கரிந்த பயிர்கள் ஜீவ னையடைவ தாகவும், சத்தியமானது செழிக்கப்பெற்ற ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் தங்களின் செவிகளும் மனமும் குளிர்ச்சி யுறவும், அறிவானது பதியப்பட்ட பொருளானது மனசின்கண் தெரியவும் தங்களின் திருவாய்மலர்ந்து ஓதினர்கள். (உ௮)

உறைந்தமெய்ம் மறையின் றீஞ்சொன் முகம்மதாண்டுரைப்பச்செ
யறந்தழைத் தனநன் மார்க்கத் தரும்புவிதழைத்த வெற்றித் [வ்வி
திறந்தழைத் தனவிண் ணோர்கள் செயறழைத் தனதி காந்தப்
புறந்தழைத் தனநந் தீனின் புகழ்தழைத் தேங்க வன்றே.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சத்தியமே யுறையப்பெற்ற புறுக்கானும் அலீமென்னும் வேதத்தினது இனியவசனத்தை அவ்வாறு அந்த ஹிறாமலையின்கண் வைத்து ஓதவே, நமது தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது கீர்த்தியானது வளர்வுற்று ஓங்கும்வண்ணம் அழகிய தருமங்களியாவும் வளர்வுற்றன. நல்ல சன்மார்க்கத்தையுடைய அரிய இந்தப் பூலோகம் வளர்வுற்றது. பெற்றியையுடைய காரணங்கள் வளர்வுற்றன. வானவர்களான மலாயிக்கத்துமார்களின் செயல்கள் வளர்வுற்றன. திசைகளினது முடிவின் பக்கங்கள் வளர்வுற்றன. (௨௯)

பறவைக ளினங்கள் போற்ற விலங்கினம் பலவும் போற்ற
வுறைதருந் தருக்கள் போற்ற வூர்வன வெவையும் போற்ற
நிறைதரு மலகை போற்ற நிரைதிரைப் பரவை போற்ற
மறைவிலா தமரர் போற்ற முகம்மது மோதி னூரால்.

(இ-ள்.) அன்றியும் பட்சிசாதிகளின் கூட்டங்களியாவும் மிருகக் கூட்டங்களியாவும் புகழவும், பூமியின்கண் தங்காநிற்கும் விருட்சங்களியாவும் புகழவும், ஊர்வனங்களியாவும் புகழவும், நிறைவுற்றபைசா சங்கள்புகழவும், வரிசையுடைய அலைகளையுடைய சமுத்திரங்கள் புகழவும், மறைவில்லாது தேவர்களான மலாயிக்கத்துமார்கள் புகழவும், நபிகள்பெருமான் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் திருவாய்மலர்ந்து ஓதினூர்கள். (௩௰)

உயிரினுக் குயிராய் வந்த முகம்மது முரைப்பச்
செயிரறு ஜபுற யில்தம் மெய்மயிர் சிலிர்ப்ப வோங்கி
முயலகன் மதியம் போன்ற முகம்மதைப் போற்றி வேக
வெயிலவன் கதிரிற் றாண்டி மேலுல கிடத்திற் புக்கார்.

(இ-ள்.) அப்போது குற்றமற்ற ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் தங்களின் ஜீவனுக்கு ஜீவனுய்வரப்பெற்ற நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் தங்களின் திருவாயால் ஓதும்வண்

ணம் இருகாதுகளினுலும் கேள்வியுற்றுத் தங்களின் சரீரத்தின்கண்ணுள்ள உரோமங்கள் சிலிர்க்கும்படி வளர்ந்துகளங்கமற்ற சந்திரனைப்போன்ற நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் புகழ்ந்து வேகத்தையுடைய சூரியனது கிரணங்களைப்போலத் தாண்டி ஆகாயலோகத்தின்கண் போய்ப் புகுந்தார்கள். (கக)

அரியவன் றூத ரான வருமது கலக்க முற்று
மருமலர்ச் சோலை சூழ்ந்த மால்வரை யிடத்தை நீங்கி
யெரிபகற் கதிர்கா ரேன்று விரவினிற் றனித்து வல்லே
விரிகதி ருமிழும் பைம்பூண் மின்னகத் திடத்திற் சார்ந்தார்.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம்போகவே அரியவனுகிப அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலான அஃமதென்னும் திருநாமத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனசின்கண் அச்சமுற்று வாசனைகொண்ட புஷ்பங்களையுடைய காவுகள்வளைந்த பெரிய அந்த ஹிறுமலையினது இடத்தைவிட்டும் நீங்கிப் பிரகாசத்தையுடைய சூரியனது கிரணங்கள் தோற்றப்பெருத இராக்காலத்தில் ஏகமாக விரைவாய் விரிந்த பிரபையை யுமிழாநிற்கும் பசியஆபரணங்களையுடைய மின்னுகிய கதீஜாநாயகி அவர்களின் வீட்டின்கண் வந்தார்கள். (கஉ)

கலிநிலைத்துறை.

நடுக்க முற்றுமெய்ச் சுரத்தொடுங் குளிர்தர நலிந்து
மிடுக்க கன்றிடப் பயத்தொடு மரிவையை விளித்துத்
திடுக்க முற்றது துகில்கொடு பொதிமனந் தெளியா
திடுக்க ணியாதென வறிகில னென்றன ரிறசூல்.

(இ-ள்.) அவ்வாறு வந்துசேர்ந்து றசூலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சரீரம் நடுக்கமுற்றுச் சுரத்தோடும் குளிரும்வண்ணம் மெலிந்து மனப்பயங்கரத்துடன் தங்களின் துன்பமானது நீங்கும்படி மனைவியாகிய கதீஜாநாயகி யவர்களைக் கூப்பிட்டு எனது இருதயம் தேர்ச்சியடையாது தேகம் திடுக்கமுற்றது. அத்துன்பமானது யாதென்று யானறிகிலன். ஆதலால் ஒரு வஸ்திரத்தைக்கொண்டு எனது சரீரத்தைப் பொதியுங்களென்று சொன்னார்கள். (கங)

தலைவர் கூறிய மொழிசெவி புகவுட றயங்கி
நிலைகு லைந்தெழுந் தயர்வொடு நெட்டுயிர்ப் பெறிந்து

பலமலர்த்தொடை செறிந்தபஞ் சணைமிசை படுத்திச்
சலவை கொண்டுறப் போர்த்தரு கிருந்தனர் தையல்.

(இ-ள்.) அப்போது தையலாகிய கதீஜாநாயகியவர்கள் தங்களின் நாயகரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு சொல்லிய வார்த்தைகள் தங்களின் காதுகளில் நுழையவே, சரீரமானது தயக்கமுற்று தங்களி நிலைமை குலையப்பெற்று எழும்பிச் சோர்வுடன் பெருமூச்சுவிட்டுப் பல புஷ்பங்களினுலான மாலைகள்நெருங்கிய பஞ்சணையின்மீதுபடுக்கும்படிசெய்து வஸ்திரத்தைக்கொண்டு பொருநதும்வண்ணம்மூடிப் பக்கத்தில்இருந்தார்கள்.

நொந்து மெய்யகம் பதறிடக் கணவரை நோக்கி
யெந்த மாருயி ரேயிக லடலரி யேறே
சிந்தை சிந்திமெய் திடுக்கொடு மதிமுகந் தேம்ப
வந்த வாறெவை யுரைக்கவென் றுரைத்தனர் மடமான்.

(இ-ள்.) அவ்விதமிருந்த இளமானுகிய கதீஜாநாயகி யவர்கள் தங்களின் சரீரமும் மனமும் வருத்தமுற்று நடுங்கும்வண்ணம் நாயகரான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப்பார்த்துப் பொருந்திய எமது ஜீவனுனவர்களே! பகைமையாகிய யானைகட்கு வலிமையையுடைய ஆண்சிங்கமானவர்களே ! தங்களின் கருத்தானது அழியப்பெற்றுச் சரீரத்திடுக்கத்துடன் முகம் வாட்டமடைவதற்குத் தங்களில் வந்துசேர்ந்த வரலாறு யாவை? அவையைச் சொல்லுங்களென்று கேட்டார்கள். (௩௫)

மலையி னுச்சியி னிருந்தது மொருவர்வந் தடுத்து
நிலைபெ றுந்துகில் கரத்தளித் துரைத்தது நெருங்க
வுலைவு றத்தனி யணைத்தது முரைத்துளப் பயத்தா
லலம லர்ந்தன னென்றன ராசருக் கரசர்.

(இ-ள்.) அப்போது இராஜாதிபரான நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தாங்கள் ஹிறுமலையினது உச்சியின் கண்ணிருந்ததையும், ஒருவர் அங்குவந்து தங்களைநெருங்கி நிலைபெறுநிற்கும் ஒரு வஸ்திரத்தைக் கையிற்கொடுத்து சொன்னதையும், நெருங்கும்படி புலைவுறும் வண்ணம் ஏகமாய்க் கட்டித் தழுவியதையும், அவர்களுக்குச்சொல்லி மனப்பயங்கரத்தினுல் வருத்தமுற்றேனென்று சொன்னுர்கள். (௩௬)

துணைவர் கூறிய மாற்றமு மறைகள்சொற் றதுவு
மிணைபடுத்திநேர்ந் தின்பமென் றுளத்தினி லிருத்திப்
பிணையை நேர்விழி கனிமொழி சிறுபிறை நுதலா
ரணையுந் தம்வயின் றுனிபல வகற்றின ரன்றே.

(இ-ள்.) மானைநிகர்த்த கண்களையும் கனிபோன்ற வார்த்தைக ளையுங் கொண்ட இளஞ்சந்திரன்போலும் நெற்றியை யுவையவர் களான கதிஜா நாயகியவர்கள் தங்களின் நாயகரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு சொல்லிய சமாச்சார ங்களையும் வேதங்கள் சொல்லியதையும் இணைபடுத்தி யுடன்பட்டு இனிமையானது தானென்று மனத்தின்கண் இருக்கும்படி செய்து தம்மிடத்திற் பொருந்தாநிற்கும் பலதுன்பங்களையும் நீக்கினார்கள்.

தாங்கு மெய்ப்பொரு ளறிவருள் குணந்தய விரக்க
நீங்கி டாதறம் பெருகிட வளர்க்குநன் னெறியீ
ரோங்கு மானிலத் திடத்துறை பவர்களா லுமக்குத்
தீங்கு றாதென வுரைத்தனர் மடந்தையர் திலதம்.

(இ-ள்.) அவ்விதம் நீக்கிய பெண்களிற் றிலதமாகிய கதீஜாநாய கியவர்கள் தாங்காநிற்கும் சத்தியப்பொருள் அறிவு. அருள் குணம், தயவு இரக்கமாகிய இவைகள் நீங்காது புண்ணியமானது அதிகரிக் கும்படி வளர்க்குகின்ற நல்ல சன்மார்க்கத்தை யுடையவர்களே! உங் களுக்கு ஓங்காநின்ற பெரிய இந்தப்பூலோகத்தின்கண் தங்கியிருப்ப வர்களினால் யாதொரு தீமையும் வந்து சாராதென்று சொன்னார்கள்.

சிந்து தேன்மொழிச் செழுங்குயில் றூதெனுந் திருப்பேர்
வந்த தாமெனத் தெருளுற முகம்மது நபியு
ருந்து வெங்குயிர் களைவதித் தரமென வுயர்வா
னிந்து நேரிரு ளொடுக்கிவின் னெழுந்தன னிரவி.

(இ-ள்) அப்போது சூரியனானவன் தேனைச்சொரிகின்ற வார்த் தைகளையுடைய செழிய குயிலாகிய கதீஜா நாயகியவர்கள்தங்களின் நாயகருக்கு றசூலென்று சொல்லுந் திருநாமம் வந்ததாமென்று சொல்லித் தெளிவடையவும், ஆண்டவர்களான நபிமுகம்மது சல் லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஓங்காநிற்கும் வெவ்விய குயிரான

வர்களை இல்லாமற் செய்வது இம்முறைதானென்று சொல்லவும், உயர்ச்சியுற்ற ஆகாயத்தின்கண்ணுள்ள கரியைப்போன்ற அந்தகாரத்தை ஓடுங்கும்வண்ணம் செய்து வானத்தின்கண் ணெழும்பினன்.

நிறக்க ருங்கமு நீர்குவி தரநிறை வனசந்
திறக்க மெல்லிதழ் வெய்யவ னெழுந்தபின் றிருவு
முறக்கத் தென்னுமல் வேந்தனைக் கொணர்கென வொருவ
னறக்க டும்விசை கொண்டெழுந் தேகின னன்றே.

(இ-ள்.) கரிய பிரகாசத்தையுடைய ஆம்பன்மலர்கள் குவியவும் தாமரைமலர்கள் நிறைந்த தங்களின் மெல்லிய இதழ்களைத் திறக்கவும் அவ்வாறு சூரியனானவ னெழும்பின பிற்பாடு இலக்குமியாகிய கதீஜா நாயகியவர்களும் நபி றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் உறக்கத்தென்று சொல்லும் அவ்வரசனானவனைக் கூட்டிக்கொண்டு வருவாயாகவென்று கட்டளைசெய்ய, ஒருவேலையாளன் மிகவும் அதிகவிசைகொண்டு எழும்பி அவ்வுறக்கத்திருக்கும் வீட்டினது திசையை நோக்கிப் போயினன். (சஎ)

மடங்க லேறெனு முகம்மதும் வரிபரந் திருண்ட
விடங்கொள் வேலினை நிகர்த்துமை பொருவிழி மயிலு
முடன்க லந்தினி தழைத்தனர் வருகவென் றுணர்வு
துடங்கு மும்மறை தெளிந்தவற் குரைத்தனன் றூதன்.

(இ-ள்.) அவ்விதம் எழுந்துபோன தூதனாகிய வேலையாளன் ஆண்சிங்கமென்று சொல்லும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் இரேகைகள் படர்ந்து கறுத்தவிடத்தைக் கொண்ட வேலாயுதத்தைப் போன்று மையானது பொருந்திய கண்களையுடைய மயிலாகிய கதீஜாநாயகியவர்களும் ஒருவரோடொருவர் உடன் கலந்து உன்னை இனிமையுடன் கூப்பிட்டார்கள். வருவாயாகவென்று அறிவானது தொடங்காநிற்கும் முன்னுள்ள தௌறாத்து, இஞ்சில், சபூறென்னும் மூன்றுவேதங்களையுங் கற்றுத் தெளிந்தவனான அவ்வுறக்கத்தென்பவனுக்குச் சொன்னன். (சஅ)

பழுதி லாக்குலப் பாவைதம் பாலினிற் பரிவா
லெழுக வென்றன ரென்றசொற் சிரமிசை யேற்றி
வழுவி லாமறை வுறக்கத்தென் றேகிய வள்ள
றழுவு மெய்க்கதிர் முகம்மது மனைவயிற் சார்ந்தான்.

(இ-ள்) குற்றமற்ற வேதங்களை யுணர்ந்த உறக்கத்தென்றுசொல்லிய வள்ளலானவன் பழுதில்லாத மேன்மையையுடைய பாவையாகிய கதீஜாநாயகியவர்களின் பக்கத்தில் அன்போடும் எழும்புவாயாக என்று சொன்னார்களென்று சொல்லிய வார்த்தைகளைத் தலையின்மீது கொண்டு தழுவுகின்ற சத்தியப்பிரகாசத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது வீட்டின்கண் வந்து சேர்ந்தான். (௩௨)

கற்றவேதியன் வருதலுங் கிளிமொழிக் கதீஜா
பொற்றொ டிக்கரஞ் சாய்த்திவ ணுறைகெனப் புகன்று
மற்ற டப்புய முகம்மது வரையிடை புதுமை
யுற்ற செய்தியுண் டென்றன ரறிகவென் றுரைத்தார்.

(இ-ள்) வேதங்களைப்படித்த வேதியனான அவ்வுறக்கத்தென்பவன் அவ்வாறு வந்தமாத்திரத்தில் கிளிபோலும் வார்த்தைகளையுடைய கதீஜாநாயகியவர்கள் தங்களின் பொன்னாலாகியவளையல்களையுடைய கையை அசைத்து இவ்விடத்தில் தங்கியிருப்பாயாகவென்று சொல்லித் தங்களின் நாயகரான வலிமையமைந்த விசாலமாகிய தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆச்சரியமாக ஹிறாமலையின்கண் அடைந்த சமாச்சார முண்டுமென்று சொல்லி அதை நீ அவர்களிடத்தில் கேட்டு அறிவாயாகவென்று சொன்னார்கள். (௩௩)

பதியின் மிக்கநன் மறையவன் முகம்மதை நோக்கித்
துதிசெய் தும்முழை வந்தவா றனைத்தையுந் தொகுத்து
முதிர்த ரும்புக ழோயுரை கென்றலு முறையா
விதிய வன்றிருத் தூதர்நன் றெனவிளம் புவரால்.

(இ-ள்.) அதைக்கேட்ட இப்பூமியின்கண் மிகுந்த நன்மையையுடைய வேதியனான அவ்வுறக்கத் தென்பவன் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்துப் புகழ்ந்து முற்றிய கீர்த்தியையுடையவர்களே! தங்களிடத்தில் வந்த வரலாறுகளெல்லாவற்றையும் ஒழுங்காய் என்னிடத்தில் சொல்லுங்களென்றுகேட்டமாத்திரத்தில், வரிசையாக சகல ஜீவராசிகளுக்கும் இன்னபடியென்று நியமிக்கும் விதிப்பை யுடையவனான ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் திருத்தூதராகிய அந்நபிகள் பெருமானவர்கள் நல்லதென்று சொல்லுவார்கள். (௩௪)

வரையி லிற்றனி யிரவினி லிருக்கையின் மதியி
னுரையின் மிக்கவ ரொருவர்வந் தென்பெய ருரைத்துப்
பரவி னுலிவ ணுறைந்தினி ரோவெனப் பகர்ந்து
விரைவி னின்மறு நாளுமவ் வுரைவிளம் பினரால்.

(இ-ள்.) யான் தனியாக இராக்காலத்தில் ஹிறுமலையின்கண் இருக்கும்போதில் அழகையுடையவார்த்தைகளினுல் மிகுந்தவரான ஒருவர்என்னிடத்தில்வந்து எனது நாமத்தைச்சொல்லி அன்பினுல் இவ்விடத்தின்கண் தங்கினீர்களோ? என்று கூறிச் சீக்கிரத்தில் மற்றநாளும் அந்த வார்த்தைகளையே சொன்னுர். (சரு)

இருதி னத்தினு முரைத்தவர் மறுதினத் தெய்தித்
தெரிம ணித்துகி லெனதுசெங் கரத்தினிற் சேர்த்தி
யரிய நாயக நபியெனும் பெயருமக் களித்தா
னுரிமை யீரினி யோதுமென் றுரைத்தன ருவந்தே.

(இ-ள்.) அவ்வாருக இரண்டு நாளிலும் சொன்ன அவர் மறு நாளாகிய மூன்ரும்நாளில் என்னிடத்தில்வந்து பொருந்தி இரத்தி னவர்க்கங்கள் விளங்கிய ஒரு வஸ்திரத்தை செவ்விய எனது கையிற்சேர்த்து சிநேகிதரான முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமானவர்களே! உங்களுக்கு அரியநாயகனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் நபியென்றுசொல்லும் ஓர்பட்டத்தைக்கொடுத்தான் நீங்கள் இனுயோதுங்களென்று ஆசையோடும் சொன்னுர். (சசு)

ஓது மென்றசொற் கேட்டலு மோதின னலனென்
ருேத முன்னிருங் திருகையி னிருக்கிமுன் னுரைபோ
லோது மென்றலும் பின்னரு மோதின னலனென்
ருேத மற்றுமென் றனைமிக விருக்கின ருரத்தின்.

(இ-ள்.) அவர் அவ்விதம் ஓதுங்களென்றுசொல்லிய வார்த்தையைக்கேட்டமாத்திரத்தில் யான்ஓதினவனல்லேனென்றுசொல்ல, அவர் எனது முன்னுக இருந்து அவரின் இருகைகளினுலும் என்னைக்கட்டியிறுக்கி முன்னர்சொன்ன வார்த்தையைப்போல ஓதுங்களென்று சொல்லவும், பின்னரும் யான் ஓதினவனல்லேனென்று சொல்லப் பின்னரும் என்னை வலிமையோடு அதிகமாகக் கட்டியிருக்கி. (சஎ)

மறுத்து மோதுமென் றுரைத்திட மறுத்தநான் மறுத்து
மிறுக்கி யோதுமென் றுரைத்தன ரெதிரிருந் தெளியேன்
றிறக்க வோதுவ தெவையென வுரைத்தனன் றீட்டா
தறத்தி னுட்படுஞ் சொல்லினைக் குறித்தெடுத்தறைந்தார்.

(இ-ள்.) மறுத்தும் என்னை ஓதுங்களென்று சொல்ல அதற்கு யான் மறுத்துச்சொன்னேன்; பின்னரும் கட்டியிருக்கி யோதுங்களென்றுசொன்னார். அப்போது எதிராக இருந்துகொண்டு எளியேனாகியயான் வலிமையுடன் ஓதுவதுயாது? என்றுகேட்டேன். எழுதாத அறத்தினுட்படும் வார்த்தைகளைக் குறித்து எடுத்துச்சொன்னார். (௨அ)

அந்த நல்லுரை கேட்டன னவருரைப் படியே
பிந்தி டாதெடுத் தோதினன் செழும்பொருள் பிறக்க
வெந்தை யீரெனப் போற்றிவின் னடைந்தன ரெழிலோய்
வந்த வாறிவை யெனவெடுத் துரைத்தனர் வள்ளல்.

(இ-ள்.) அவர் அவ்வாறு சொன்ன அந்த நன்மைபொருந்திய வார்த்தைகளை யான் எனதுகாதுகளினாற்கேள்வியுற்றேன். அவரின் சொற்படி செழிய பொருளானது தோற்றும்வண்ணம் பிந்தாது எடுத்து ஓதினேன் ஓதவே, எனதுதந்தையரானமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களே! என்று சொல்லிப் புகழ்ந்து ஆகாயலோகம் போய்ச்சேர்ந்தார். அழகையுடைய உறக்கத்தேவந்து பொருந்திய வரலாறு இவைதானென்று வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் எடுத்துச் சொன்னார்கள். (௨௯)

புவியி னிற்பெரும் புதுமைய தாகிய பொருளாய்
நபியு ரைத்தசொல் லனைத்தையு மனத்தினி னயந்து
குவித ருங்கதிர் செழுமணிக் கொடியிடைக்-கதீஜா
செவிகு ளிர்ந்திட மனங்களித் திடப்பொரு டெரிவான்.

(இ-ள்.) நபிகள்பெருமானான நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு இப்பூமியின்கண் பெரிய ஆச்சரியமானபொருளாய்ச் சொன்ன வார்த்தைகளெல்லாவற்றையும் உறக்கத் தென்பவன் தனது மனசின்கண் விரும்பி நெருங்கிய பிரகாசத்தைக்கொ

ண்ட செழிய இரத்தினக்கொடிபோலும் இடையையுடைய கதீஜா நாயகி யவர்களின் இருகாதுகளும் குளிரவும், மனமானது சந்தோஷிக்கவும், அவற்றின் பொருளைத் தெரிந்துச் சொல்லுவான். (௫௦)

மலையல் வள்ளனும் மிடத்தினில் வரைமிசை யடைந்த
தலைவர் நாயகன் றூதரிற் ஜபுறயீல் சரதம்
பலக திர்த்துகில் கரத்தளித் ததுநபிப் பட்டம்
விலக வோதுமென் றேகிய துமக்குறும் வேதம்.

(இ-ள்.) வள்ளலாகிய முகம்மதானவர்களே! நீங்கள் மயங்காதீர்கள்? உங்களிடத்தில் மலையின்மீன் வந்து சேர்ந்த தலைவரானவர் யாவற்றிற்கும் நாயகனான அல்லாகு சுபுகானகுவத்தஆலாவின் தூதர்களில் ஜபுறயீலானவர். இதுசத்தியம். பலகிரணங்களையுடைய வஸ்திரத்தைக்கையில் தந்தது நபிப்பட்டம் விளங்கும்வண்ணம் ஓதுங்களென்றுசொன்னது உங்களுக்கு வந்து சேரா நிற்கும் புறக்கானுல் அலீமென்னும் வேதம். (௫௧)

உடலு லைந்திட விறுக்கிய துமதிடத் தினிமேல்
வடுவின் மும்மறை யிடுக்கண்வந் துற்றது மாறும்
படியி டத்தினும் மினத்தவர் பெரும்பகை விளைத்து
மிடரு றும்படி யூரைவிட் டெழுத்துரத் திடுவார்.

(இ-ள்.) சரீரமானது உலைந்திடும்படிக் கட்டியிறுக்கினது இனிமேல் தங்களிடத்தில் மூன்றுதரம் குற்றத்தையுடைய இக்கட்டுகள் வந்து பொருந்தி அவை நீங்கிப்போகும். உங்களின் பந்துஜனங்கள் இந்தப் பூமியின்கண் பெரியபகையைத் துன்பமுறும்வண்ணம் உண்டாக்கியும்தங்களையும் ஊரைவிட்டு எழும்பும்படி துரத்துவார்கள்.

என்ற விம்மொழி மறையவ னுரைத்தது மிசைத்தேன்
துன்று மென்மலர்ப் புயநபி மனத்தினிற் றுணுக்கும்
ஜென்று மென்னினத் தவர்பகை யெனக்குவந் துறுமோ
பொன்று மோவென வுரைத்தலு முதியவன் புகல்வான்.

(இ-ள்.) வேதியனான அவ் வறக்கத்தென்பவன் என்று சொல்லிய இவ்வார்த்தைகளைச்சொன்னமாத்திரத்தில், இனியதேனானது நெருங்கிய மெல்லிய புஷ்பமாலையணிந்த தோள்களையுடைய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனப்பயங்காமுற்று என

க்குப் பொருந்திய எனது பந்துக்களின் விரோதம்வந்து சேருமா? அல்லது அவ்விதம் சேராது அழிந்துபோகுமா? என்றுகேட்கவும் முதியவனான அவன் சொல்லுவான். (ருக)

முன்னர் மாமறை நபியெனும் பெயர்முதி யவருக்
கின்னல் வந்துறு திலதுநும் மிடத்திட ரணுகா
நன்ன லம்பெறு நபிகளு யகமுநீ லரது
மன்னு மானில நபியினி யிலையென வகுத்தான்.

(இ-ள்.) ஆதியில் மகத்தான வேதத்தையுடைய நபியென்று சொல்லிய முதியவர்களுக்குத் துன்பமானது வந்து பொருந்தாது இருக்கவில்லை. ஆனால் உங்களிடத்தில் அப்படிப்பட்ட துன்பங்கள் வந்து நெருங்காது. நல்ல மேன்மைபெறாநிற்கும் நபிகளினது நாயகமும் நீரேயல்லாமல் பொருந்திய இந்தப்பெரிய பூமியின்கண் இனிமேல் நபியானவர்க ளில்லரென்று வகுத்துச் சொன்னான். (ருச)

மாத வத்துறும் பொருளெனு முகம்மது நபிதம்
பாத பங்கயத் திணைமிசை சிரங்கொடு பணிந்து
கோதி லாக்கதீ ஜாதமை யிருகரங் குவித்துத்
தீதி லாதெழுந் தேகினன் பலகலை தெளிந்தோன்.

(இ-ள்.) அவ்வாறு சொன்ன பலசாத்திரங்களைக் கற்றுத் தெளிந்தவனான அவ்வுறக்கத்தென்பவன் மகாதவத்தோடும் வந்து பொருந்திய பொருளென்று சொல்லாநிற்கும் நபிகள் பெருமான் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பாதங்களாகிய இருதாமரை மலர்களின்மீதும் தனது தலையைக்கொண்டு தாழ்ந்துக் குற்றமற்ற கதிஜாநாயகி யவர்களை இரண்டு கைகளையும் குவியும்படிசெய்து வணங்கி யாதொரு தீதுமில்லாது தானிருந்த இடத்தைவிட்டு மெழுந்துத் தனது வீட்டை நோக்கி நடந்துசென்றான். (ருரு)

நபிப்பட்டம்பெற்றபடலம்

முற்றிற்று.

ஆ படலம்-க-க்கு-திருவிருத்தம்-ருரு.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

தொழுகைவந்தவரலாற்றுப்படலம்.

கலிவிருத்தம்.

உடையவ னொருவன்ற னுண்மைத் தன்மையை
நடைவர விளக்கிநல் வழியி லியாரையு
மடைதர வழைத்திடற் கனுப்புந் தூதரென்
றிடைவரு மமரர்கோ னீய்ந்த பட்டமே.

(இ-ள்.) யாவற்றையுஞ் சொந்தமாயுடையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் ஒருவன். அவனது சத்யமாகிய தன்மையை முறையாகவிளக்கி யாவர்களையும் நல்லமார்க்கத்தில் சேரும்படிக் கூப்பிடுவதற்கு அனுப்பாநிற்கும் தூதரென்றுதங்களிடத்தில் வரும் அமரேசுவரரான ஜபுறயில் அலைகிஸ்ஸலாமவர்கள் நாயகம்நபி முகமமது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குக் கொடுத்த நபிப்பட்டம். (க)

ஒருத்தனு யகனவற் குரிய தூதெனு
மருத்தமே யுரைகலி மாவங் நிண்ணயப்
பொருத்தமீ மானடை புனைத லாமமல்.
திருத்தமே யிவையிசு லாத்திற் சேர்தலே.

(இள்.) யாவற்றிற்கும் நாயகனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் ஒருவன். நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்மவவர்கள் அந்நாயகனுக் குரியதூதரென்றுசொல்லும்பொருளே "லாயிலாஹ இல்லல்லாகுமுகம்மதுர்ற சூலுல்லாஹி" யென்று ஓதாநிற்கும் கலிமா அந்நிண்ணயத்தினது பொருத்தமே "ஈமான்" அதற்குறிய முறைமைகளை அலங்காரமாய்ச்செய்வதேயாகும் "அமல்" அவற்றின் திருத்தமாகிய இவைகளே தீனுல்இஸ்லாமென்னும் மார்க்கத்தில் சேருதல். (உ)

இப்பொருள் பொதிந்ததோ ரிறைமை தாங்கிய
மைப்புயல் கவிகையின் வள்ளல் தம்மிடத்
தொப்புற வொழுகுவார்க் குரிமை யார்க்கெலாஞ்
செப்பினர் வெளிப்படாச் சிறப்பிற்றுகவே.

(இ-ள்.) இந்த அர்த்தத்தினுல் மூடப்பட்டதாகிய ஒப்பற்றதெய் வத்தன்மையைத்தாங்கிய மேகக்குடையையுடைய வள்ளலான நாய கம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் தங்களிடத்தில் ஒப்பாகநடக்கும் ஜனங்களுக்கும் சொந்தமானவர்களுக்கும் வெளி யாகாத சிறப்பாய்ச் சொன்னுர்கள். (௩)

ஒருவனே நாயன்மற் ருெழிந்த தேவத
மிருமையும் பேறிலா திழிவு கொண்டதென்
றருமொழி விளக்கலா லாய்ந்து நன்னபி
திருமொழி யுண்மையிற் சிந்தை செய்குற்ருர்.

(இ-ள்.) அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவான நாயகன் ஒருவ னே. அவனெழிந்த மற்ற தேவதம் இம்மை மறுமையாகிய இருமை யிலும் பேறற்றது. அன்றியும், குற்றத்தைக் கொண்டது என்று அருமையான வார்த்தைகளேவிளக்கிச் சொல்லுவதினுல் யாவர்களும் அவைகளே மனத்தின்கண் ஆராய்ந்து நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களினது தெய்வீகத்துவம் பொருந் திய வார்த்தைகளின் சத்தியத்தில் சிந்தைசெய்தார்கள். (௪)

வல்லிய மெனுமுகம் மதுதம் மாமணம்
புல்லிய புயவரை படர்ந்த பொற்கொடி
முல்லேயங் குழற்கதீ ஜாமின் னேமுத
லில்லறத் தொடுமிசு லாத்தி லாயினர்.

(இ-ள்.) அப்போது வேங்கையென்று சொல்லாநிற்கும் நபிமு கம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களின் பெருமைபொருந்திய பரிமளமமைந்த தோள்களாகிய மலேகளில் படரப்பெற்ற பொற்கொ டியான அழகிய முல்லேமலர்கள் தாங்கிய கூந்தலேயுடைய கதீஜாநா யகியவர்கள் ஆதியில் இல்லறத்தோடும் தினுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திலானுர்கள். (ரு)

மனுமுறை நெறிவழு வாவபூ பக்க
ரெனுமுகில் கண்டுயில் காலே யின்புறத்
திகரன் மதிமடி யிருப்பச் செவ்விய
கனவுகண் டெழுந்தங் களிப்புற் ருரரோ.

(இ-ள்.) அன்றியும்' புண்ணிய நூலினெழுங்குகளில் வழுவாத அபூபக்கரென்று சொல்லும் மேகமானவர்கள் நித்திரைசெய்கின்ற

சமபத்தில் இனிமைபொருந்தும் வண்ணம் சூரியனும் சந்திரனும் தங்களின் மடியிலிருக்கும்படி அழகிய ஓர் சொப்பனத்தைப் பார்த்துப் படுக்கையைவிட்டு மெழும்பிச் சந்தோஷமடைந்தார்கள். ()

இன்னதன் மையின்கன வியாது கொல்லென
மன்னிய மனத்தினன் மதியிற் றேர்குவர்
பன்னுவர் புதுமையிற் பலனுண் டாமென
வுன்னுவர் தெளிந்தொரு வருக்கும் விண்டிலார்.

(இ-ள்.) அவ்விதம், சந்தோஷமடைந்து இப்படிப்பட்ட தன்மையின் சொப்பனமானது யாதாயிருக்குமென்று தங்களின் மனசின்கண்ணே பொருந்திய நல்ல அறிவினால் தெளிவார்கள். அன்றியும், ஆச்சரியமான இந்த சொப்பனத்தில் நமக்குப் பிரயோசன முண்டுமென்று சொல்லுவார்கள். மனசின்கண் தேர்ந்து ஆலோசிப்பார்கள். வேறே யொருவருக்கும் சொல்லார்கள். (எ)

பொன்னக ரத்தினும் புவியுங் காணுறு
நன்னல முண்டுநம் மிடத்தி லென்னவே
யின்னலைப் பிரித்தெரிந் தெழுந்து பொற்புற
மன்னவர் நபியுறை மனையி லாயினர்.

(இ-ள்,) அவ்வாறு சொல்லாத மன்னவரான அபூபக்கரவர்கள் சொர்க்கலோகத்திலும் இந்தப் பூலோகத்திலும் காணாத நல்ல நலமானது நம்மிடத்தில் உண்டுமென்று சொல்லி மனசின்கண் தங்கிய துன்பங்களைப் பிரிந்து வீசித் தாங்களிருந்த இடத்தைவிட்டு மெழும்பி அழகாக நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கியிருக்கும் வீட்டின்கண் வந்தார்கள். (அ)

ஆரணக் கடவுளு மழகின் கன்னியும்
பூரண மனத்துட னிருத்திப் போற்றிபே
த்ாரணி யிடத்தினிற் றனிய னுலுறுங்
காரண மனத்தையுங் கழறி னாரரோ.

(இ-ள்.) வேதக்கடவுளான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் அழகையுடைய கன்னியாகிய கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களும் நிறைவாகியமனசோடும் அவ்வாறு

வந்த அபூபக்கரவர்களை இருக்கும்படிசெய்து அவர்களைப் புகழ்ந்துத் தனியவனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவினால் இந்தப் பூமியின்கண் பொருந்தாநிற்கும் காரணங்க ளெல்லாவற்றையும் சொன்னார்கள். (கூ)

அம்மொழி கேட்டட லரிய பூபக்கர்
தம்மனக் கனவையுஞ் சார்ந்த செய்தியுஞ்
செம்மையி னுணர்ந்துளத் திருத்திச் சிந்தையின்
விம்மிதத் தொடும்புயக் களிப்பு வீங்கினர்.

(இ-ள்.) வலிமையையுடைய சிங்கமாகிய அபூபக்கரவர்கள் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளைத் தங்களின் இருகாதுகளினாலும் கேள்வியுற்று மனசின்கண்ணுள்ள சொப்பனத்தையும் அங்குபொருந்திய சமாச்சாரத்தையும் செவ்வையா யறிந்து இருதயத்தில் இருக்கும்படிசெய்து தோள்களினது பூரிப்போடும் சிந்தையின்கண் சந்தோஷ மதிகரித்தார்கள். (ய)

சுரத்தினிற் பெருநதி யழைத்துத் தோன்றிய
சரத்தினிற் கட்செவி தடிந்து பாதகன்
கரத்தினைப் பொருத்திய காவ லாளநும்
வரத்தினை யெவரினும் வகுக்கற் பாலதோ.

(இ-ள்.) அவ்வித மதிகரித்துப் பாலைநிலத்தின்கண் பெரியஆற்றைவரும்படி செய்துப் பாதையிலுண்டான சர்ப்பத்தைக் கொன்றுப் பாதகனான அந்த ஷாம் தேசத்தானின் கைகளைப் பொருந்தச் செய்த இராஜா வானவர்களே! உங்களின் வரத்தை யாவராலும் வகுக்கற்பாலதோ, (கக)

என்றுரைத் தருளிய வெழில பூபக்கர்
தன்றிரு மதிமுக நோக்கித் தாழ்விலா
வென்றிகொண் டுறுங்கலி மாவை விள்ளுத
னன்றுமக் கெனநபி நவிற்றி னாரரோ.

(இ-ள்.) என்றுசொல்லிய அழகிய அபூபக்க ரவர்களின் மேன்மையாகிய சந்திரன்போன்ற முகத்தை நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பார்த்துக் குறைவற்ற விஜயத்தைக்

கொண்டு பொருந்தா நிற்கும் "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்ம துர் றசூலுல் லாஹி" என்னும் கலிமாவை நீவிர்சொல்லுதல் உம க்கு நல்லதென்று சொன்னார்கள். (கஉ)

அருமறை நாயக நபிக ளானவர்
தெரிதரும் புதுமையின் வழியிற் சேர்த்துவர்
பெரியவன் றூதென வெனக்கும் பெட்புற
விரிதரும் புதுமையொன் றுதவ வேண்டுமே.

(இ-ள்.) அதைக்கேட்ட அபூபக்க ரவர்கள் அருமையான வேதங்களினது நாயகமானவர்களே! நபிகளானவர்கள் விளங்காநிற் கும் அற்புதங்களினால் ஜனங்களைத் தங்களின்மார்க்கத்திற் சேர்ப் பார்கள். ஆதலினால் தாங்களும் பெரியவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலென்று பெருமை பொருந்தும் வண்ணம் என க்கும் விரிவாகிய ஒரு அற்புதங் காட்டுதல் வேண்டும்.

எனவுரைத் தவர்மனங் களிப்புற்றின்புறப்
புனைமலர்ப் பஞ்சணை பொருந்துங் காலையிற்
கனவுகண் டினிது புதுமை காணென
வனமலர்த் தொடைப்புய முகம்ம தோதினார்.

(இ-ள்.) என்றுசொல்லிய அவ்வபூபக்க ரவர்களின் மனமா னது சந்தோஷமுற்று இனிமை பொருந்த நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நீவிர் புஷ்பங் களினால் அலங்காரஞ் செய்யப்பட்ட பஞ்சணையின்மீது பொருந்திய சமயத்தில் ஒரு சொப்பனத்தைப் பார்த்தீர். அது ஆச்சரியமெ ன்று சொன்னார்கள். (கசு)

சொல்லிய நன்மொழி கேட்டுத்துன்புறு
மல்லலும் போக்கறுத் தடல பூபக்கர்
செல்லுறழ் நபிதிரு நாமஞ் சீர்பெற
நல்லிய லொடுமிசு லாத்தி னண்ணினார்.

(இ-ள்.) வலிமையையுடைய அபூபக்கரவர்கள் அவ்வாறு நாய கம்நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் சொல்லிய நன்மைபொருந்திய வார்த்தைகளைத் தங்களின் இருகாது களினாலுங் கேள்வியுற்று வருத்தமிகுத்த மனத்தின்கண்ணுள்ள அல்

ஸலேயும் இல்லாமற்செய்து மேகத்துக்கொப்பாகிய அங்கபிகள் பெரு மானவர்களின் கீர்த்தியானது சிறப்படையும்வண்ணம் நல்ல குணத் தோடும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தில் பொருந்தினர்கள்.

அந்தமி னுயகன் றூதர்க் கன்புறுஞ்
சிந்தையர் புகழபித் தாலிப் சேய்களிற்
சுந்தரப் புலியலி யென்னுங் தோன்றலும்
வந்தனே செய்துதீன் வழியி லாயினர்.

(இ-ள்.) அன்றியும், முடிவற்ற நாயகனுன அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின் றசூல் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்ல மவர்களுக்கு அன்பு மிகுத்த மனத்தைக் கொண்டவர்களான கீர்த் தியையுடைய அபீத்தாலிபவர்களின் புதல்வர்களில் அழகிய புலி யாகிய அலியென்று சொல்லும் திருநாமத்தையுடைய அரசரான வர்களும் வணக்கஞ்செய்து தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தி லாயினர்கள். (யசு)

அடிமையி லோங்கிய வறிவின் மிக்கவர்
வடிவுறும் மாரிதா மதலே யாகிய
மிடலவர் சைதெனும் வீர கேசரி
யிடாறுங் கதியிசு லாத்தி லாயினர்.

(இ-ள்.) அன்றியும், அடிமைகளில் உயர்ச்சிபெற்ற அறிவினல் மிகுந்தவரான அழகுபொருந்திய ஆரிதென்பவரின் புதல்வராகிய வலிமையையுடையவரான வீரத்தைக்கொண்ட சிங்கமானவர்களும் துன்பமற்ற மோட்சத்தையுடைய தீனுல்இஸ்லாத்தில் ஆயினர்கள்.

இயன்மறை முறையொடு மிவர்க ளிங்ஙன
மயலவ ரறிவுரு தடங்கி நன்னெறிச்
செயலென நாட்குநாட் டேர்ந்து தம்மன
மயலறத் தீனெனும் வழியிற் றேறினர்.

(இ-ள்.) இத்தன்மையாக இஸ்லாமாகிய இவர்கள் ஒழுங்கையு டைய வேதமுறையுடன் அன்னிய ஜனங்கள் அறியாது அடக்கமு ற்று நல்ல சன்மார்க்கத்தினது செயலென்று தங்களினது மனசின் கண் நாட்குநாள் தெளிந்து மயக்கமறும்படி தீனென்று சொல்லும் மார்க்கத்தில் தேற்றமடைந்தார்கள். (யஅ)

அறிவினிற் றெளிந்தபூ பக்க ரன்பெனு
முலவினிற் கிளைகளி லுற்ற பேர்களுக்
கிறையவ னபியிவ ரென்ன வேதநூற்
றுரையொடும் ரகசியச் சொல்லிற் சொல்லினர்.

(இ-ள்.) அன்றியும், அறிவுகளில் தேர்ந்த அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் அன்பென்று சொல்லும் சினேகத்திலுற்ற பேர்களுக்கும் தங்களின் குடும்பத்திலுற்ற பேர்களுக்கும் இந்த முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் யாவற்றிற்கும் இறைவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் நபியென்று வேதநூற்களின்றுறையோடும் இரகசியமானவார்த்தைகளினாற்சொன்னார்கள்.

செவ்விய ரிவர்மொழி சிதைவி லாதென
வவ்வவர் கருத்தினு ளாய்ந்தவ் வாற்றிடைக்
கவ்வையங் கடனதி கடப்ப வன்றொரு
நவ்விபி னெழுநபி பதத்தை நண்ணினர்.

(இ-ள்.) அதைக்கேட்ட ஒவ்வொருவர்களும் அழகை யுடையவர்களான இந்த அபூபக்கரவர்களின் வார்த்தை சிதைவற்றதென்று தங்களின் கருத்தினகம் ஆராய்ந்து அந்த ஷாம்தேசத்திற்குப் போகின்ற வழியின்கண் ஒலியையுடைய அழகிய சமுத்திரத்தைப்போன்ற ஆற்றைத் தாண்டும்வண்ணம் அன்றையத்தினம் ஒரு மானின் பின்னால் எழுந்தருளிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பாதத்தில் வந்து நெருங்கினார்கள். (உய)

அலகில்வண் புகழபூ பக்கர் சொல்லினைப்
பெலனுறக் குறித்தவ ணடைந்த பேர்க்கெலா
மலைவற வறத்தொடுஞ் சுவன வாழ்வெனு
நிலைபெற நல்வழி நிகழ்த்தி னாரோ.

(இ-ள்.) கணக்கற்ற வளமையான கீர்த்தியையுடைய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களின் வார்த்தைகளைப் பெலனுறும்படி மனசின்கண் குறித்து அவ்விடத்தில் அவ்வாறு வந்துசேர்ந்த ஜனங்க ளெல்லாவருக்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மயக்கமறத் தருமத்துடன் சொர்க்கவாழ்வென்னும் நிலைபாத்தைப் பெறும்வண்ணம் நல்ல சன்மார்க்கத்தைச் சொன்னார்கள். (உக)

பண்வர வடர்ந்தவர் பகரக் கேட்டலு
மண்மனத் தொடுங்கதி வாழ்வுக் கிதொரு
துணையென நற்கலி மாவைச் சொல்லிநின்
றிணையிலான் றூதடி யிறைஞ்சி வாழ்த்தினர்.

(இ-ள்.) படத்தினையுடைய சர்ப்பத்தைப் பொருதியவர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு சொல்லக்கேட்டமாத்திரத்தில் அவர்க ளியாவர்களும் மனமகிழ்ச்சியுடன் மோட்சவாழ்வுக்கு இஃது ஒப்பற்ற துணையென்று சொல்லி நன்மைபொருந்திய "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர் றசூலுல்லாஹி" யென்னுங் கலிமாவைத் தங்களின் வாயினால் ஓதி ஒப்பற்றவனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாகிய அந்நபிகள் பெருமானவர்களின் பாதங்களை வணங்கி நின்றுப் புகழ்ந்தார்கள்.

கரும்பெனு நபிகலி மாவைக் காமுற
விரும்பிய பேர்களிற் றலைமை மிக்கவ
ரரும்புவிக் கரசபு துற்றஃ மானுடன்
தரும்புகழ் சுபைறுதல் காவுஞ் சஃதுவும்.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது கரும்பென்று சொல்லாநிற்கும் கலிமாவை அவ்வாறு ஆசையுறும்படி விருப்பமுற்ற ஜனங்களில் தலைமைத் தனத்தினால் மிகுந்தவர்கள் அரிய புவியினுக்கு அரசாகிய அப்துர்றஹ்மானுடன் கீர்த்தியைத் தராநிற்கும் சுபைறும் தல்காவும் சகுது றலியல்லாகு அன்கு அவர்களும். (உரு)

அருமறைப் பொருட்குரை யாணி யாகிய
வரிசைநன் னெறியுது மானு மாசிலாத்
திருநபி பெயர்க்கலி மாவைச் செப்பிய
பரிசனத் தொடுந்தனி பழகு நாளினில்.

(இ-ள்.) அருமையாகியவேதப்பொருள்கட்கு உரையாணியான சங்கைகொண்ட நல்ல சன்மார்க்கத்தையுடைய உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களும் குற்றமற்ற தெய்வீகத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் திருநாமத்தையுடைய கலிமாவை ஓதியமற்றும் பரிஜனங்களோடும் ஒப்பற்ற பழகாநிற்கும் காலத்தில். (உசு)

அண்டருக் கரசிழிந் தடுத்தென் முன்னுரை
விண்டனர் போயினர் மறுத்தும் வெற்பிடை
கண்டில னெனமனங் கலங்கிக் கார்கடன்
மண்டலம் புகழ்நபி வருத்த முற்றனர்.

(இ-ள்.) கரிய சமுத்திரத்தையுடைய இப்பூலோக முழுவதும் போற்றுநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அமராதிபரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் ஆகாயத்தை விட்டு மிறங்கி எனது முன்னர் நெருங்கி வார்த்தைகள்பேசிப் போனுர்கள். மறுத்தும் அந்த ஹிறுமலையின்கண் அவர்களைப் பார்த்திலேனென்றுசொல்லி மனமானது கலக்கமுற்று வருத்தமடைந்தார்கள்.

குருநபிப் பட்டமே கொண்ட மேலவர்
வருவது நிகழ்வதும் வழூத்து வாரெனு
மிருநில மாந்தருக் கென்சொல் வோமெனப்
பருவர லடிக்கடி படர்வ தாயினர்.

(இ-ள்.) அன்றியும், நபிப்பட்டங் கொண்ட குருவாகிய மேலானவர்கள் இனிமேல் வரப்பட்டதையும் நடக்கப்பட்டதையும் சொல்லுவார்களென்று சொல்லும் பெரிய இப் பூலோகத்தின்கண்ணுள்ள மனுஷியர்களுக்கு யாம் யாது சொல்லுவோமென்று அடிக்கடி துன்பமானது படர்வதாயினர்கள். (உசு)

மருப்புகுங் கருங்குழன் மடந்தை தம்மொடு
மிருப்பர்பின் றனித்தெழுந் திரவி னேகியப்
பொருப்பிடை வைகுவர் புகழ்ந்து விண்ணினை
விருப்பொடு நோக்குவர் மீள்வ ரெண்ணுவார்.

(இ-ள்.) அன்றியும், வாசனையானது புகுதப்பெற்ற கரிய கூந்தலையுடைய மடந்தையாகிய கதிஜா றலியல்லசு அன்ஹா அவர்களோடும் இருப்பார்கள். இராக்காலங்களில்ஏகமாய்எழும்பிச்சென்று அந்த ஹிறுமலையின்கண் தங்கியிருப்பார்கள். ஹக்கு சுபுகானகுவத்தஆலாவைத்துதித்து ஆசையோடும் ஆகாயத்தைப் பார்ப்பார்கள். திரும்பிவருவார்கள். மனசின்கண் ஆலோசிப்பார்கள். (உஎ)

வானுதற் குரைதர மறுப்பர் தம்முளம்
பானியிற் சசியெனப் பதைப்பர் நல்லுரை.

பேணினர் தம்முகம் பெரிது நோக்குற
நாணுவ ருயிப்பர்மெய் நலிதல் கொண்டனர்.

(இ-ள்.) அன்றியும், ஒள்ளிய நெற்றியையுடையவர்களான சதீஜாறலியல்லாகு அன்ஹா அவர்களுக்குச் சொல்லமறுப்பார்கள். தங்களின் மனமானது ஜலத்தின்கண் தோற்றும் சந்திரனைப் போலப் பதறுவார்கள். தங்களினது நன்மை பொருந்திய வார்த்தைகளைப்பேணினவர்களின் முகத்தை அதிகமாய்ப் பார்ப்பதற்கு வெட்கமடைவார்கள். பெருமூச்சு விடுவார்கள். மேலும் சரீரவாட்டமுற்றார்கள்.

என்னினி யுரைப்புதென் றெண்ணி யின்புறுந்
தன்னுயிர்த் துணைவியைத் தணந்து நெஞ்சகந்
துன்னிய துயரொடு மெழுந்து சூன்முகின்
மன்னிய தடவரை முகட்டின் வைகினர்.

(இ-ள்.) அவ்விதம் வாட்டமுற்றுத் தங்களைச் சேர்ந்தவர்களுக்கு இனிச்சொல்லுவது யாதென்று நினைத்து இனிமைபொருந்திய தங்களின் உயிர்போன்ற நாயகியாகிய சதிஜா றலியல்லாகு அன்ஹா அவர்களை நீங்கி நெஞ்சினுள் நெருங்கிய துன்பத்தோடும் எழும்பிச் சூலமைந்த மேகங்கள் பொருந்திய பெரிய அந்த ஹிறாமலையினது சிகரத்தின்கண் தங்கியிருந்தார்கள். (உகூ)

தனியவன் றூதெனச் சார்ந்து பூவிடை
நனிபெறும் புதுமைக ணடத்த வில்லெனிற்
பனிவரை நின்றுவீழ்ந் திடுதல் பண்பலா
லினியிருப் பதுபழு தென்னுங் காலையில்.

(இ-ள்.) அவ்வாறு இருந்து நாம்தனியவனான ஜல்லஜலாலகுவத்தஆலாவின் றசூலென்று இப்பூமியின்கண்பொருந்தி மிகுத்த அற்புதங்களைநடத்துவது இல்லையென்றால் இந்தப்பனியையுடைய மலையில்நின்று கீழேவிழுந் திறந்துவிடுவதே தகுதியல்லாமல் இனிமேல் இவ்வுலகத்தில்ஜீவித்திருப்பது குற்றமென்றுசொல்லுஞ்சமயத்தில்.

வாடிய பயிர்க்குறு மழையும் போற்றினந்
தேடிய பொருள்கரஞ் சேரு மாறென
வீடில்வா னவர்க்கிறை விரைவி னேகியக்
கோடுறை நபிவயின் குறுகி னாரோ.

(இ-ள்.) விடுதலில்லாத அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் தண்ணீரில்லாமல் வாட்டமுற்ற பயிருக்குப் பொருந்திய மழையைப் போலவும், பிரதிதினமும்விரும்பிய ஒரு பொருளானது கையில்வந்து கிட்டினமார்க்கத்தைப்போலவும், சிக்கிரத்தில் சென்று அந்த ஹிறுமலையினது உச்சியில் தங்கியிருக்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களிடத்தில் அணுகினார்கள். (௯௧)

திண்ணிய பெருஞ்சிறைச் செபுற யீல்வரை
கண்ணிய முகம்மதை யடுத்து நன்குறு
தெண்ணமென் னுமக்கென விளம்பி யாவர்க்கு
முண்மைநீர் நபியென்ப துரைத்துப் போயினார்.

(இ-ள்.) அவ்வாறு சென்று அணுகினவலிமையுற்ற பெரிய சிறகுகளையுடைய ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் அந்த ஹிறுமலையின்கண் பொருந்திய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நெருங்கி நன்மையுறாத சஞ்சலமான எண்ண மானது உங்களுக்கு ஏனென்றுகூறி நீங்கள் எல்லா ஜனங்களுக்கும் நபியென்று சொல்லுவது சத்தியமென்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டும் ஆகாயத்தின்கண் போயினார்கள். (௯௨)

தன்னுடற் குயிரெனுந் தகைமைத் தாகிய
பொன்னகர்க் கிறைசொலும் புனித வாசகங்
கன்னலஞ் சுவையினுங் கனிந்த பாகென
நன்நபி செவிப்புக நடுக்க நீங்கினார்.

(இ-ள்.) தங்களின் சரீரத்திற்கு ஜீவனென்று சொல்லும் தகைமைத்தான சொர்க்கலோகத்திற் கதிபராகிய ஜபிறயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் அவ்வாறு சொல்லும் பரிசுத்தமான வார்த்தைகளானவை அழகிய கரும்பினது மதுரத்திலும் அதிகமாய்க் கனியப்பெற்ற சர்க்கரையைப்போல நன்மை பொருந்திய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் காதுகளிற்போய் நுழையவே, தங்களுக்கிருந்த பயங்காத்தைவிட்டும் நீங்கினார்கள். (௯௨)

ஜகமதில் தின்பயிர் தழைப்பத் தூநெறி
முகம்மதின் திருப்பெயர் வளர மாசிலாப்
புகழொடுஞ் ஜபுறயீல் போற்றி யிம்மொழி
யிகலறப் பலதர மியம்பிப் போயினார்.

(இ-ள்.) அன்றியும், ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் இப்பூமியின்கண் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கப் பயிரானது வளரவும், பரிசுத்தமான சன்மார்க்கத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது திருநாமம் ஓங்கவும், குற்ற மற்ற கீர்த்தியுடன் புகழ்ந்து இந்த வார்த்தைகளைப் பகைமையறும் வண்ணம் பலதடவை சொல்லிப் போயினார்கள். (ருசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முருகுண் டறுகாற் சஞ்சரிக
  முரலும் புயத்தா ருசைனயினு
ரருமைத் தவத்தால் வந்துதித்த
  வபுல்கா சிம்தன் செழுங்கரம்பொற்
பெருகத் தருஞ்செல் வினக்குலங்கள்
  பிறங்கும் பிறங்க லிடத்திருந்த
வரிசை நபியை நோக்கிப்பின்னும்
  வந்தார் வானோர் கோமானே,

(இ-ள்.) அவ்வாறு போன தேவர்களின் அரசராகிய ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் மறுத்தும் ஆறுபாதங்களையுடைய தேனீக்கள் மதுவையருந்தி ஒலியாநிற்கும் மலர்மாலையணிந்த தோள்களையுடைய ஹுசைன்நயினாரவர்களின்தவத்தினால் இவ்வுலகத்தின்கண் வந்து தோற்றிய அருமையையுடைய இந்நூலின் கொடைநாயகர் அபுல்காசிம்மரைக்காய ரவர்களின் செழிய கையைப்போல அதிகமாய்த் தராநிற்கும் மேகத்தின் இனமான கூட்டங்கள் பிரகாசிக்கும் அந்த ஹிறுமலையின்கண் ணிருந்த சங்கையை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப்பார்த்து வந்து சேர்ந்தார்கள்.

கலன்சூழ் கிரண மணிநாப்ப
  ணிருந்த கதிர்மா மணிக்குறைஷிக்
குலஞ்சூழ் வரிசை நபிக்கமரர்
  கோமான் சலாமுன் கூறியபி
னிலஞ்சூழ் பரவைப் புறப்புவியு
  மிறைஞ்ச நெடியோன் றிருவருளாற்
சொலும்சூ றத்தில் முஸம்மிலெனுஞ்
  சுருதி வசன மிறங்கினவே.

(இ-ள்.) அவ்விதம் வந்த அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ் ஸலாமவர்கள் ஆபரணங்களில் விளங்க பிரகாசத்தையுடைய இரத் தினவர்க்கங்களினது மத்தியில் இருக்கப்பெற்ற கிரணங்களையுடைய மாணிக்கத்தைப் போலக் குறைஷிகளினது கூட்டங்கள் விளங்க சங்கையையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க ளுக்கு ஸலாம் சொல்லிய பிற்பாடு, இந்தப் பூமியைச் சூழப்பெற்ற சமுத்திரத்தினது புறப்புவியும் வணங்கும் வண்ணம் மனத்தளவிற் கெட்டாத நெடியவனான அல்லாகுசுபுகானகு வத்த ஆலாவின் திரு வருளினால் சொல்லிய சூறத்துல் முஸம்மிலென்று கூறும் வேதவ சன மிறங்கிற்று. (௬௬)

சிலம்பி லுறைந்த முகம்மதுவைத்
　திருந்து மமரர் கோமான்கொண்
டுலம்பற் றுயரஞ்சின் னெறியினிழிந்
　துடனின் றரிதோர் மருங்கணைந்து
நிலம்பிட் டுதிர மண்சிதற
　நிலவாமணித்தாள் கொடுகீண்டப்
பிலம்பட் டுறைந்த நறுஞ்சலிலம்
　பிறந்து குமிளி யெழுந்தனவே.

(இ-ள்.) அப்போது வானவர்களின் இராஜரான ஜபுறயீல் அலை கிஸ்ஸலாமவர்கள் அந்த ஹிறாமலையின்கண் தங்கியிருந்த நபிமுகம் மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் தங்களுடன் கூட்டிக் கொண்டு திரளைக்கற்கள் பொருந்திய ஒரு சிறிய பாதையிலிறங்கித் திருந்திய அரிதான ஒருபக்கத்தில் சேர்ந்து தங்களின் பிரகாசித்த இரத்தினப் பாதத்தைக்கொண்டு பூமியைப்பிள்ளச்செய்து சொரிய வும் மண்கள்சிதறவும் கிளைக்கவே பாதத்தில்பதிந்துதங்கியிருந்தவா சனையையுடையதண்ணீரானது உதையமாய்க்குமிழிகள் எழும்பின.

பெருகிப் பரந்த புனற்கரையிற்
　பெரியோன் றூதை யருகிருத்தி
மருவு மலரு மெனவுலுவின்
　வகையுந் தொகையும் வரவருத்திக்
குரிசி னபியைப் பின்னிறுத்திக்
　குறித்த நிலைரண் டிறக்க அத்துப்
பரிவிற் றொழுவித் திருந்துவிண்ணிற்
　படர்ந்து சுவனத் தலத்துறைந்தார்.

(இள்.) அவ்வாறு எழும்பி அதிகரித்துப் பரவிய தண்ணீரினது கரையில் ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் பெரியவனுகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலானவர்களைத் தங்களின் பக்கத்திலிருக்கும்படி செய்து வாசனையையும் புஷ்பத்தையும் போல உலுவினது வகையையும் தொகையையும் வரும்வண்ணம் வருத்திக் குரிசிலான அங்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைத் தங்களுக்குப் பின்னுக நிறுத்தி மனசின்கண் குறித்த நிலைபரத்தோடும் அன்புடன் அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவைத் தொழுது திருந்திய ஆகாயத்தின்கண் நடந்து சொர்க்கலோகத்தி னிடத்திற் போய்ச் சேர்ந்தார்கள். (கூஅ)

மறையார் நபிக்கி ரகசியத்தின்
வணக்கம் படித்துக் கொடுத்துமணிச்
சிறையா ரமரார்க் கரசர்முகி
றீண்டா விசும்பி னடைந்ததற்பி
னறையார் கூந்தற் கதீஜாவை
நண்ணி யுலுவும் வணக்கமுமுன்
முறையா யுரைப்ப வுரைத்தபடி
முடித்தார் கனகக் கொடித்தாயே.

(இ-ள்.) இரத்தினச் சிறகுகளை யுடையவர்களான அமரேசுவரர் ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் புறுக்கானுல் அலிமென்னும் வேதத்தை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு இரகசியமாய்த் தொழுகையைக் கற்பித்து மேகமண்டலத்தைத் தொட்டு ஆகாயலோகத்தின்கண் போய்ச் சேர்ந்தபிற்பாடு, நபிகள் பெருமானவர்கள் வாசனை மிகுந்த கூந்தலையுடைய கதீஜாறலியல்லாகு அன்ஹா அவர்களை நெருங்கி உலுவையும் தொழுகையையும் முன்னர் ஜபுறயீல் அலைகிஸ் ஸலாமவர்கள் தங்களுக்குக் கற்பித்த ஒழுங்காய்ச் சொல்லப், பொற்கொடிபோலும் உலகமாதாவாகிய அக்கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களும் சொன்னவண்ணம் செய்து நிறைவேற்றினுர்கள். (கூகூ)

மாரி யருந்திப் பண்மிழற்றி
வரிவண் டுறங்கு மலர்க்கூந்த
ஞரி சுருதி முறைவணங்கி
நளின மனங்கூர்ந் திருந்தததற்பின்

முரித் திறலோன் சிலக்கையபூ
பக்கர் முதன்மற் றுள்ளோரு
மேருப் புயத்தார் பெருவரத்தா
ரிைைத்தா மரைத்தாட் புகழ்ந்தடுத்தார்.

(இ-ள்.) இரேகைக ளமைந்த வண்டுகள் தேனையுண்டு இசைப யின்று நித்திரை செய்யாநிற்கும் புஷ்பமாலை தங்கியகூந்தலையுடைய கதீஜாறலியல்லாகு அன்ஹா அவர்கள் அவ்வாறு வேதத்தினது ஒழுங்காய்த் தொழுது இனிமையுடைய மனமானது கூரப்பெற்று இருந்த தன்பின்னர், பெருமை பொருந்தியவலிமையினது ஒள்ளிய கோதண்டம் தாங்கிய கையையுடைய அபூபக்கர் சித்தீகு றலியல் லாகு அன்குமுதல் மற்றும் தீனுல் இஸ்லாத்திலான யாவர்களும் மகாமேரு பருவதத்தைப் போன்ற தோள்களை யுடையவர்களான பெரிய வரத்தைக் கொண்ட நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல் லமவர்களின் வாசனையுற்ற தாமரை மலர்போலும் பாதங்களைத்துதி த்து அவர்களை நெருங்கினார்கள். (௪௰)

வந்த குறைஷிக் குலத்திலுறு
மடங்க லனைய முதியோர்தஞ்
சிந்தை குளிர வானவர்கோன்
றிருத்தி யுரைத்த வணக்கமுறை
யந்த மிலிதன் றூதரெடுத்
தறைய நேரிநேர் வழுவாமற்
பந்தி பெறநின் றுறுந்தொழுகை
படித்தார் பாவந் துடைத்தாரே.

(இ-ள்.) அவ்வாறு வந்துசேர்ந்த குறைஷிக்குலத்திற் பொருந் திய சிங்கத்தை நிகர்த்த முதியவர்களாகிய அவர்களினது மனமா னது குளிரும்படி முடிவற்றவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலா வின் றூதராகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களுக்கு அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் செவ்வைப் படுத்திக் கூறிய தொழுகையினது ஒழுங்கை எடுத்துச் சொல்ல, அவர்களியாவர்களும் சன்மார்க்க முறைமை யானது தப் பாது வரிசை பெறும்வண்ணம் நின்று பொருந்திய தொழுகை யைக் கற்றுத் தங்களின் பாவங்களை இல்லாமற்செய்தார்கள். (௪௧)

வடுவைப் பகிர்ந்த கரியவிழி
　　மயிலும் வரிசை நபிஞரு
மடல்வெம் புரவிக் குரிசிலபூ
　　பக்க ரலிசஃ துதுமானுந்
தடவெண் கவிகைச் சுபைறெடுதல்
　　ஹாவு மப்துல் றஹ்மானும்
புடைவிட் டகலாச் செழுந்தேனைப்
　　பொருந்துஞ் சிறைவண் டெனத்தொழுதார்.

(இ-ள்.) அவ்விதம் கற்று மாம்பிஞ்சைத் தமக்கிணை யில்லை யென்று பிளக்கும்படி செய்த கரிய கண்களையுடைய மயிலாகிய கதீஜாறலியல்லாகு அன்ஹா அவர்களும், சங்கையையுடைய ஆண்டவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும், வலிமைகொண்ட வெவ்விய குதிரையையுடைய குரிசிலாகிய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களும். அலிறலியல்லாகு அன்கு அவர்களும், சகுதுறலியல்லாகு அன்கு அவர்களும், உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களும், விசாலமாகிய வெள்ளைக் குடையையுடைய சுபைறு றலியல்லாகு அன்கு அவர்களோடு தல்ஹாறலியல்லாகு அன்கு அவர்களும், அப்துர் றஹ்மான் றலியல்லாகு அன்கு அவர்களும், பக்கம்விட்டு நீங்காத செழிய தேனைப் பொருந்தும் சிறகுகளை யுடைய வண்டுகளைப்போல ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவைத் தொழுதார்கள். (சஉ)

சீற்ற மடங்கா வரிவேங்கை
　　திரியும் வனமுங் கொடுமடங்க
லேற்றை வெருவி விலங்கினங்க
　　ளிருக்கு மிடமும் வரையிடத்துந்
தூற்று மறுவிச் சாரலினுந்
　　தோன்று திருண்ட மனையிடத்தும்
வேற்றுச் சமயப் பயத்தொதுங்கி
　　விதித்த தொழுகை முடித்துவந்தார்.

(இ-ள்.) அவ்வாறு தொழுதவர்கள் கோபமானது அடங்காத இரேகைகளையுடைய புலிகள் சஞ்சரிக்கும் காடுகளிலும், கொடிய ஆண்சிங்கத்திற்குப் பயந்து மிருகக்கூட்டங்க ளிருக்கின்ற இடங்களிலும், மலையினிடங்களிலும், தூற்றுநிற்கும் அருவிகளையுடைய

சாரல்களிலும், பிரகாசியாது கருத்திருக்கின்ற மனையினிடங்களிலும், புறசமயத்தினது அச்சத்தினல் ஒதுக்கமுற்று அல்லாகுத்த ஆலாவினல் விதிக்கப்பட்டதொழுகையை நிறைவேற்றி வந்தார்கள்.

வேதப் பொருளாய்ப் பொருளொளியாய்
 விளங்கு முதலோன் றிருக்காட்சித்
தூதென் றுதித்த முகம்மதுவுஞ்
 சுருதி நெறித்தீன் பெரியோருந்
தீதுற் றலைக்குங் கொடுங்காபிர்
 தெரியா வண்ண மூவாண்டு
பேதப் படாதி ரகசியத்தின்
 பெரியோன் வணக்கம் பெருக்கினரே.

(இ ள்.) வேதார்த்தமாகிப் பொருளினது பிரகாசமாய் விளங்கு முதன்மையனுன ஜல்லஷகுனகு வத்தஆலாவின் அழகிய காட்சியின் றசூலென்று உதயமாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் வேத ஒழுங்கையுடைய தீனுல் இஸ்லாமென்று சொல்லும் மார்க்கத்தினது பெரியோர்களும் தீமையுற்று வருத்தாநிற்கும் கொடிய காபிர்களுக்குத் தெரியாதபடி வேற்றுமைப்படாது மூன்றுவருடம் இரகசியமாய்ப் பெரியவனுன ஹக்கு சுபுகானகுவத்தஆலாவின் தொழுகையை அதிகமாய்த் தொழுது வந்தார்கள். ()

தொழுகைவந்தவரலாற்றுப்படலம்

முற்றிற்று.

ஆ படலம்-உ-க்கு-திருவிருத்தம். ௯௯.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இ ஃ து

தீனிலைக்கண்டபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீதவொண் கவிகை நீழ லிருந்திய குரிசி லானோர்
தூதென நபியின் பட்டந் துலங்கிய நான்கா மாண்டில்
வேதம்நல் வணக்கம் யாவர்க்கும் விரித்துற விளக்கு மென்ன
வாதிதன் பருமான் மேற்கொண் டமரர்கோ னுரைத்துப்போனார்.

(இ-ள்.) ஒள்ளிய மேகக்குடையினது நிழலானது திருத்தமாகிய குரிசிலானவர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு றசூலென்று நபியின்பட்டம் விளங்கிய நான்காம் வருடத்தில் அமராதிபரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் ஆதியாகிய ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் கட்டளையை மேற்கொண்டு யாவர்களுக்கும் தங்களின் புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தையும் நன்மை பொருந்திப தொழுகையையும் விரித்துப் பொருந்தும்வண்ணம் விளக்குங்களென்று அந்நபிகள் பெருமா னவர்களிடத்தில் சொல்லிவிட்டு சொர்க்கலோகத்திற்குப் போயினார்கள். (க)

பொருப்பிடத் தொளித்தும் வாழாப் புறமனை யிடத்தும் புக்கி
யிருப்பது தகாதென் றுயத் திறங்கிய தென்னக் கேட்டு
மருப்பருங் கரடக் கைமா மதர்த்தன மதர்த்து வீரர்
தெருப்புகுந் தெவர்க்குந் தோன்றத் தீனிலை வணக்கஞ்செய்தார்.

(இ-ள்.) அப்போது வீரர்களாகியதீனுல்இஸ்லாத்திலான அனைவர்களும் மலைகளினிடத்தில் ஒளித்தும் வாழாத புறமனைகளிடத்தில் புகுந்தும் நாம் இருப்பது தகாது என்று வேதவசன மிறங்கிற்றென்று நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினாற் கேள்வியுற்றுக் கொம்புகளையும் அரிய மதங்களையுமுடைய யானைகள் மதங்கொண்டதைப்போல மதங்கொண்டு வீதிகளில் நுழைந்து யாவர்களுக்கும் தெரியும்வண்ணம் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையாகிய தொழுகையைத் தொழுதார்கள். (உ)

நீருறை யிடத்துஞ் செவ்வி நிழறிக ழிடத்தும் வாய்ந்த
பேரொளி மாட வாயும் பெருகுமண் டபத்தின் சார்புங்
கூறுநல் லறிவி னோடு மறபிகள் குலத்து வேந்த
ரீரமுற் றுருகி நெஞ்ச மிணங்குற வணங்கி நின்றார்.

(இ-ள்.) அறபிகளின் கூட்டத்தினது அரசர்களான அவர்களி யாவர்களும் தண்ணீர் தங்கியிருக்கப்பெற்ற இடங்களிலும் அழகிய நிழல்கள்பிரகாசிக்கப்பட்ட இடங்களிலும் சிறந்த பெரியபிரபையை யுடைய வீட்டினிடங்களிலும் பெருமையமண்டபங்களின் சார்புகளி லும் அதிகரித்த நல்ல அறிவோடு அன்புற்று உருகி மனமானது பொருந்தும்வண்ணம் ஹக்குசுபுகானகுவத்தஆலாவைவணங்கி நின் றார்கள். (ங)

ஆரணத் துலுவும் வாய்ந்த வறிவுமந் திரத்தின் வாயும்
பூரண நிலையின் றங்கை பொருந்துற வளைக்கு மாறும்
பாரினி னெற்றி நீண்டப் படும்படி குழைவு மற்றுங்
காரண மிதுகொ லென்னக் காபிர்கண் டைய முற்றார்.

(இ-ள்.) வேதத்தினது உலுவையும், சிறந்த அறிவாகிய மந்தி ரத்தை யோதுகின்ற வாயையும், பூரணமாகிய நிலையாக நின்று அழ கியகைகள் பொருந்தும்வண்ணம் வளைக்கின்ற மார்க்கத்தையும், பூமி யின்கண் நெற்றியானது நீண்டும்படி குழைகின்ற குழைவையும், மற்றவைகளையும் இது காரணமானதென்று அந்தத் திருமக்கமா நக ரத்தின்கண்ணுள்ள காபிர்கள் பார்த்துச் சந்தேக மடைந்தார்கள்.

மார்க்கமோ நெறியோ வீதோர் வணக்கமோ மாறு பாடீ
தேற்குமோ நல்லோர் கேட்கி லிணங்குமோ வினத்தார் வேத
நூற்கிது பொருந்து மோவிந் நூதனச் செய்கை யாவு
நாற்குலத் தவர்க்கு மொவ்வா நகையென நகைத்துச் சொல்வார்.

(இ-ள்.) அன்றியும், இது ஒருமார்க்கமா? நெறியா? வணக் கமா? வேற்றுமையான இது யாவர்களுக்கும் பொருந்துமா? நல் லவர்கள் கேள்வியுற்றால் அவர்கள் கருத்திற்கு இணங்குமா? நமது கூட்டத்தார்களின் வேதகலைக்கு இது இசையுமா? இந்தப் புது மையான செய்கைகளனைத்தும் நான்குகுலத்தவர்களுக்கும் ஒவ்வாத சிரிப்பை யுடையதென்று சிரித்துச் சொல்லுவார்கள். (ரு)

மீறிய மதப்பி ஞலோர் வேதமொன் றிறங்கிற் றென்று
மீறிலா னிறுதித் தூத னெனும்பெய ரெனக்குண் டென்றுந்
தேறிய வறிஞர் போலத் தெளிவுறு முகம்ம தென்போன்
கூறிய கூற்றைத் தேற்று விளைத்திடுங் கோட்டி யென்பார்.

(இ-ள்.) அன்றியும், அறிவில்லாத முகம்மதென்று சொல்லப்பட்டவன் அதிகரித்த செருக்கினுல் தனக்குஆராயாநிற்கும் ஒருவேதமிறங்கிற்றென்றும் முடிவற்றவனுன ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் கடைசியாகிய றசூலென்று சொல்லும் நபிப்பட்டம் எனக்கு உண்டுமென்றும் தெளிவடைந்த அறிஞர்களைப்போலச் சொல்லிய சமாச்சாரத்தை நாம் தீர்க்காது அவன் உண்டாக்கிடும் கோட்டியென்று சொல்லுவார்கள். (௬௰)

பொறுத்துளத் தடக்கிக் கண்டு போவது தகுவ தன்று
மறுத்துடைப் பனபோன் மார்க்க வழிகெட நின்ற பேரைக்
கறுத்தகட் டுரைக டம்மான் மதமனங் கலங்கக் கூறிச்
செறுத்திவர் தம்மைத் தண்டஞ் செய்விரா லொழியு மென்பார்.

(இ-ள்.) அன்றியும், நமது மார்க்கத்தினது முறைமைகள் அழியும்வண்ணம் நிற்கப்பெற்ற பேர்களான இவர்களை நாம்பார்த்து இவர்களின் செய்கையைச் சகித்து மனசின்கண் அடங்கச்செய்து போவது தகுவதல்ல, மறுக்களைத் துடைப்பனபோலக் கோபித்த உறுதிவாக்கியங்களினுல் இவர்களின் மதத்தைக் கொண்ட மனமானது கலங்கும்படிசொல்லி வெறுத்து இவர்களைத் தண்டம் செய்வீர்களேயானுல் இச்செய்கைகள் ஒழிந்துபோகுமென்று சொல்லுவார்கள்.

ஊனுறு மனத்தி னூடு மூலைவிலாச் சமைய நீங்கார்
பரகதி யடைவர் வேறு படுத்திநல் லறத்தைத் தீய்த்தோர்
நரகமே யடைவ ரென்ற நன்மறை வசனந் தன்னுல்
விரகர்கள் பகுத்துக் காட்டி விலக்கவுங் கலக்க நீங்கார்.

(இ-ள்.) அன்றியும், வலிமை பொருந்திய மனத்தினுள்ளும் உலைவற்றமார்க்கத்தை யொழியாதவர்கள் மோட்சவாழ்வைப் பெருவார்கள். அதை வேருக்கி நல்ல புண்ணியத்தை நாசஞ்செய்தவர்கள் நரகலோகத்தைப் பெறுவார்களென்று சொல்லிய நன்மை தங்கிய வேதவசனத்தினுல் புத்திசாலியானவர்கள் பிரித்துக்காட்டி விலகும்படிசெய்தும் அவர்கள் அக்குழப்பத்தைவிட்டும்நீங்கிலர்கள்.

மனத்துறு வருமக் காபிர் வலிபகை சிறிது மெண்ணு
தினத்துடன் கூடிச் சஃதென் றிலங்குறு மலங்கன் மார்பர்
புனற்றடக் கரையி லுள்ளப் புகமொடும் பொருவி லானை
நினைத்துலுச் செய்து நீங்கா நெறிமுறை வணக்கஞ் செய்தார்.

(இ-ள்.) அப்போது சஃதென்று பிரகாசியாநிற்கும் மலர்மாலை யணிந்த மார்பை யுடையவர்கள் தங்களின் இனத்தவர்களோடுஞ்சேர்ந்து மனதின்கண் பொருந்திய வைராக்கியத்தையுடைய காபிர்களின் வலிமையான விரோதத்தைக் கொஞ்சமும் நினையாது விசாலமாகிய ஒரு தண்ணீர்க்கரையில்மனப்புகழ்ச்சியுடன் ஒப்பற்றவனானவனுக்கு சுபுகானகுவத்த ஆலாவை உன்னி உலுச்செய்து மாறுதசன் மார்க்க ஒழுங்கைக்கொண்ட தொகுகையைத் தொழுதார்கள். (க)

வணக்கமுற் றிருந்த சஃது மன்னவன் றன்னை நோக்கி
யிணக்கியிவ் விடரைத்தீர்ப்போ மிவர்க்கென வுரைப்பர் பின்னும்
பிணக்கெனுஞ் சமய பேதப் பேய்பிடித் தவர்க்கு நீதிக்
கணக்கறி வுறுமோ வென்னக் காபிர்கள் கடுத்து நின்றார்.

(இ-ள்.) அவ்வாறு தொழுதுகொண்டிருந்த மன்னவரான சகுதறலியல்லாகு அன்கு அவர்களைக் காபிர்கள்பார்த்து இவரை இணங்கச்செய்து இவரினது இந்தத் துன்பத்தை நீக்குவோமென்றுசொல்லுவார்கள். பின்னரும் பிணக்கென்று சொல்லும் மாறுபாடான மதப்பேய் பிடித்தவர்களுக்கு நீதியின் காரியமாகிய அறிவுகள் பொருந்துமா? பொருந்ாதென்று மனங்கொதித்து நிற்பார்கள். (உ)

சிற்றமுங் கடுப்பு மாறாச் சினத்தொடுங் காபிர் கூடி
மாற்றலர் போலச் சூழ்ந்து மன்னவர் சஃதை நோக்கித்
தேற்றுறு முதியோர் முன்செய் செயலினைச் செய்ய லன்றி
வேற்றழ லூழல் புக்கத் தொழிலினை விருப்ப முற்றீர்.

(இ-ள்.) அவ்விதம் நின்றசிற்றமும் கொதிப்புமீங்காத அந்தக் காபிர்கள் ஒன்றுசேர்ந்து சத்துராதிகளைப்போல வளைந்து அரசரான சஃது லயிலல்லாகு அன்கு அவர்களைப் பார்த்துத் தெளிவையடைந்த நமது முதியவர்கள் முன்னர் இயற்றிய தொழிலை இயற்றுதலல்லாது வேற்றுமைகொண்ட அக்கினியையுடைய நகரத்திற் புகுதாநிற்கும் அந்தத்தொழிலை மனசின்கண் இச்சித்தீர். (௩)

வருநெறி பிழைத்தீர் கஃபா வலஞ்செய்து குபலேப் போற்றுந்
திருநெறி விடுத்தீர் செய்யாத் தீவினை விளைத்தீர் வீணி
லொருநெறி தொடுத்தீர் முய்மோ டுற்றவர்க் கெல்லா நந்தங் [டீர்.
குருநெறி தவித்தீர் கொள்ளாக் கொடும்பவம் விளைத்துங் கொண்

(இ-ள்.) அன்றியும், நாம் நடத்திவரும் சன்மார்க்கத்தில் தவறினீர். தேவாலயமாகிய கஃபாவைப் பிரதக்ஷணஞ்செய்து நமது தம்பிரானுகிய குபலேத் துதிக்கும் அழகிய முறைமையை விட்டீர். ஒருகாலத்தும் செய்யாத தீமையை விளையச்செய்தீர். உம்மோடு பொருந்திய ஜனங்களெல்லாவருக்கும் வீணுக ஒருமார்க்கத்தைப் பொருத்தினீர். நம்முடைய குருவினது வழியைத் தவிரச்செய்தீர் கொள்ளாத கொடிய பாவத்தை உண்டாக்கியுங் கொண்டீர். (கஉ)

அமரருக் கவலஞ் செய்தீ ரருமறை வசனந் தீய்த்தீ
நமர்களுக் கிடுக்கண் செய்தீர் நோற்றைநோ பதனை மாய்த்தீ
ரெமருடன் பகைத்தீ ரிவ்வூ ரிருப்பிடம் பெயர்ந்தீர் பொல்லாக்
கமரிடை வீழ்வ தல்லாற் கதியொன்றுங் காண மாட்டீர்.

(இ-ள்.) அன்றியும், தேவர்களுக்குக் கேட்டைச்செய்தீர். அரிதான வேதவாக்கியத்தை நாசம்பண்ணினீர். உம்மவர்களான பந்துஜனங்களுக்குத் துன்பத்தைச் செய்தீர். இயற்றிய தவத்தை மடியச்செய்தீர். எம்மவர்களுடன் விரோதித்தீர், இந்தத் திருமக்கமா நகரத்தினது இருப்பிடத்தைப் பெயரப்பெற்றீர். ஆதலினுல் நீவிர் பொல்லாத பிளவாகிய நரகத்தின்கண் வீழ்வதே யல்லாமல் ஒரு பதவியையும் காண்கமாட்டீர். (கங)

என்றவ ருரைப்பக் கேட்ட விளவல்புன் முறுவ ருேன்ற
நின்றுபுன் மொழிகள் வேறு நிகழ்த்திய பெயரை நோக்கித்
தொன்றுதொட் டுவந்து நீவிர் துதிசெய்யும் புத்து கானே
யின்ருெழித் திடுமி ஞெனென் றியம்புதல் கேண்மி னென்ருர்.

(இ-ள்.) என்று அந்தக் காபிர்கள் சொல்ல இளம்பருவத்தையுடையவர்களான சகுது றலியல்லாகு அன்கு அவர்கள் தங்களின் இரு காதுகளினுலுங் கேள்வியுற்றுப் புன்சிரிப்புத் தோன்றும்வண்ணம் அவ்விடத்தில் தானே நின்று வேருய்க் கீழ்மையாகிய வார்த்

தைகளைச் சொன்ன ஜனங்களான அக்காபிர்களைப்பார்த்து நீங்கள் ஆதிதொட்டு விரும்பி வணங்கும் விக்கிரகங்களை இன்றோடு நீக்குங்கள். நான் ஒன்றுசொல்லுவதைக் கேளுங்களென்று சொன்னார்கள்.

வானமும் புவியும் மற்றும் வகுத்தவ னுண்மைத் தூத
ரானவர் முகம்ம தென்போ ரவர்மொழி மறுத்து நின்றோ
ரீனமில் சுவன நன்னா டெய்துவ ரெங்கட் குற்ற
தீனிலை பொய்மை யென்ற தேவரு நரகஞ் சேர்வார்.

(இ-ள்.) நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மென்று சொல்லப்பட்டவர்கள் வானலோகத்தையும் பூலோகத்தையும் மற்றுமுள்ளவைகளையும் வகுத்தவனான றப்பில் ஆலமீன்கள் சத்தியத் தூதரானவர்கள். அவர்களின் வார்த்தைகளை மறுக்காது நின்றவர்கள் அழிவில்லாத நன்மைபொருந்திய சொர்க்கலோகத்தை யடைவார்கள். எங்களுக்குப் பொருந்திய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையைப் பொய்மையென்று சொன்ன மனுஷியர்களே யல்லாமல் தேவர்களும் நரகம்போய்ச் சேருவார்கள். (கரு)

தீய்நர கடைவ ரென்ற சொற்செவித் துளையின் மாறுக்
காயெரி நெய்யிட் டென்னக் கட்கனல் கதுவக் காபிர்
பாய்மதக் களிறு போலப் படுகொலை மனத்த ராகி
வாய்துடி துடிப்பப் பேசி வருமித்து நெருங்கி நின்றார்.

(இ-ள்.) சகுது றலியல்லாகு அன்கு அவர்கள் அவ்வாறு அக்கினியையுடைய நரகத்தின்கண் போய்ச்சேருவார்கள். என்று சொல்லிய வார்த்தையானது நீங்காத காய்ந்த நெருப்பில்நெய்யை இட்டதைப்போல அந்தக்காபிர்களின் செவித் துவாரங்களிற்செல்ல அவர்கள் இரண்டுகண்களிலும் தீயானது அதிகமாய்ப் பற்றும்வண்ணம் பாயாநிற்கும் மதங்களையுடைய யானைகளைப்போல மிகுத்த கொலைத்தொழிலைக் கொண்ட மனசை யுடையவர்களாகித் தங்களின் வாயானது துடிதுடிக்கும்படிப் பேசி வைராக்கியமுற்று நெருங்கி நின்றார்கள். (கசு)

வரைதிரண் டனைய பொற்றோண் மன்னனவர் சஃது கோபங்
கரைகடந் தென்னச் சோகத் தென்பினைக் கரத்தி லேந்தி
விரைவொடுஞ் செறுத்து நின்ற வீரரி லொருவன் றன்னைத்
சிரசுடைக் துதிரஞ் சிந்தச் சினத்துடன் புடைத்து நின்றார்.

(இ-ள்.) அப்போது மலைகள் ஒன்றோடொன்று திரட்சியுற்ற தைப்போன்ற அழகிய தோள்களையுடைய அரசரான சகுது றவிய ல்லாகு அன்கு அவர்கள் கோபமானது எல்லை தாண்டியதென்று சொல்லும்வண்ணம் அங்கு கிடந்த ஒரு ஒட்டகத்தி னெலும்பைத் தங்களின் கைகளில் தாங்கி விரைவுடன் சினத்துநின்ற வீரர்களான அந்தக் காபிர்களில் ஒருவனைத் தலையானது உடைந்து இரத்தம் சொரியும்படிக் கோபத்தோடும் அடித்து நின்றார்கள். (௧௭)

சினத்துட னெதிர்ந்த காபிர் திரளையுங் கஃது வேந்த
ரினத்தையும் வேற தாக்கி யிவர்க்குறு மொழிகள் சாற்றி
மனத்தினிற் கோத மாற்றி மனைவயின் புகுதச் செய்தார்
கனத்தநூன் முறையி னுட்பங் கண்டவல் லவர்க ளன்றே.

(இ-ள்) அங்நேரத்தில் பாரந்தங்கிய நூற்களினது ஒழுங்கின் நுட்பங்களை யறிந்த வல்லவர்களான பண்டிதர்கள் கோபத்துடன் எதிர்த்த காபிர்களின் கூட்டத்தையும் அரசரான சகுது றவியல் லாகு அன்கு அவர்களின் கூட்டத்தையும் வேறாக்கி இவ்விரு கூட் டத்தார்களுக்கும்பொருந்திய வார்த்தைகளைச்சொல்லி மனசின்கண் ணுள்ள கோபத்தைத் தணித்து வீட்டின்கண் போய்ப் புகுதும்படி செய்தார்கள். (௧௮)

உதித்தமுன் முதன்மை யாக பீஸபீ லுதிரங் காட்டி
மதித்தவீ ரியத்தின் செவ்வி மன்னவர் சஃதும் புக்கார்
கொதித்தபுன் மனத்தி னோடுங் குறுகலர் மனையிற் சார்ந்தார்
பதித்தவே ரூன்றித் தீனும் படர்கொழுந் தோங்கிற் றன்றே.

(இ-ள்.) முதன் முதலாகத் தோற்றிய பிசபீலென்னும் பாதை யில் இரத்தத்தைக் காட்டி மதிக்கப்பெற்ற வீரியத்தையுடைய அழ கிய அரசரான சகுது றவியல்லாகு அன்கு அவர்களும் அவ்வாறு வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார்கள். கொதிப்படைந்த கீழ்மையா கிய மனசினுடன் சத்துராதியான காபிர்களும் தங்களின் வீட்டின் கண் போய்ச்சேர்ந்தார்கள். தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கமாகிய மரமும் பதிதலுற்ற வேர்களை யூன்றி விரியாநின்ற கொழுந்துகளை விட்டு வளர்ந்தது. (௧௯)

கலிநிலைத்துறை.

தூத ராகிய முகம்மது மவர்க்குறுஞ் சுருதி
யோது நன்னெறி யுடையரு மினத்துட னுறைந்து

நிது றுங்கொடுங் காபிர்கள் செயலினைச் சிதைப்ப
வேத நன்மொழிப் பொருளொடுந் தீனிலை விரித்தார்.

(இ-ள்.) அப்போது அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூத ராகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் அவர்களுக்குப் பொருந்தா நிற்கும் புறுக்கானுல்அலீமென்னும் வேதத்தையோதும் நல்ல சன்மார்க்கத்தையுடையவர்களும்தங்களினது கூட்டத்தோடும் தங்கியிருந்து தீமையுற்ற கொடிய காபிர்களின் செயலைச் சிதைக்கும்வண்ணம் வேதத்தினது நன்மைபொருந்திய வார்த்தைகளின் பொருளுடன் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை விரியச்செய்தார்கள். (உ0)

கோத றுந்துகில் பொதிந்தரு மணிபல குயிற்றி
யோது நன்மொழி யொடுமிரு கரங்குவித் தொதுங்கிப்
பேத முள்ளற வணங்கு மிப் பேயினு லுமக்குப்
பாத கம்பலித் திடுமிச மெனப்பழித் தனரே.

(இ-ள்.) அன்றியும், குற்றமற்ற வஸ்திரத்தினுல் மூடி அரிய இரத்தினங்களை அனேகமாய்ப் பதித்து ஓதாநிற்கும் நல்ல வார்த்தைகளுடன் இரண்டுகைகளையும் குவியும்படிசெய்து ஒதுக்கமுற்று வேற்றுமையானது மனத்தின்கண் அற்றுப்போகும்வண்ணம்வணங்குகின்ற இந்தப் பிசாசத்தினுல் உங்களுக்குத் துரோகமே வாய்க்கும் இது சத்தியமென்று அந்தக்காபிர்களின் செயல்களைப் பழித்தார்கள். (உக)

வம்பி ராதசொன் மறைதன துரையென வகுத்தெந்
தம்பி ரானையும் பழிப்பது தகுவதன் றெனவே
வெம்பி மாசினத் தொடும்பல விக்கினம் விளைப்ப
வம்பு ராசியொத் தூரவர் முகம்மதை யடர்ந்தார்.

(இ-ள்.) அப்போது அந்தத் திருமக்கமா நகரத்தை யுடையவர்களான காபிர்கள் சமூத்திரத்தைநிகர்த்து வம்பானது இருக்கப்பெருத வார்த்தைகளையுடைய வேதமானது தனதுவசனமென்று வகைப்படுத்தி எங்களுடைய சுவாமியையும் நீங்கள் பழித்துப் பேசுவது உங்களுக்குத் தகுவதல்லவென்று மனமானது வாட்டமுற்று பெரிய கோபத்தோடும் அனேக இடையூறுகளை உண்டாக்கும்படி நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நெருங்கினுர்கள்

அடர்ந்து வந்தவர்க் கெதிரபித் தாலிப்சென் றடுத்துத்
தொடர்ந்து வந்ததிங் கென்னெனச் சூழ்ச்சியாற் றேற்றிக்
கடந்த சொல்லொடு மிதத்தொடும் பலவுரை காட்டித்
திடம்ப டைத்தவர் விக்கின மனத்தையுஞ் சிதைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு நெருங்கிவந்தவர்களான காபிர்களுக்குமுன்னர் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பெரிய தந்தையாரான அபீத்தாலி பவர்கள்போய் நெருங்கி நீங்கள் யிவ்விடத்திற்குப் பின்பற்றி வந்தது என்ன காரணமென்று தங்களின் நுண்ணிய அறிவினால் அவர்களைத் தேறும்படிசெய்து மீறிய வார்த்தைகளோடும் இதத்தோடும் பல வசனங்களைச் சொல்லிக்காட்டித் திடத்தைக் கொண்டவர்களான அந்தக்காபிர்களின் இடையூறுக ளெல்லாவற்றையும் இல்லாமற் செய்தார்கள். (௨௩)

சமய பேதபுத் தனைத்தையுந் தகர்த்திடுந் தீனி
லமையு மென்பவர் சிலர்சில ரம்மொழிப் பகையாற்
கமைய றக்கடு கடுப்பவர் சிலர்சில ரிவர்க
டமைவி லக்குத லொழிலபித் தாலிபு தமக்கே.

(இ-ள்.) அன்றியும், மாறுபாடான மதப்புத்துகள்க ளெல்லாவற்றையும் பொடியாக்குங்கள். தீனுல் இஸ்லாமென்னுமார்க்கத்திற்கு உட்படுங்களென்று சொல்லுகிறபேர்கள் சிற்சிலர். அந்த வார்த்தைகளினது விரோதத்தினால் பொறுமையான சற்றுப்போகும் வண்ணம் வெடுவெடுப்பவர்கள் சிற்சிலர். இவர்களைக்கலகமில்லாது விலக்கிவிடுவதே அபீத்தாலிபவர்களுக்குப்பிரதிதினமும்தொழிலாகஇருந்தது.

இவ்வ ணஞ்சில பகலிக லொடுகடந் ததற்பின்
பௌவ மார்த்தெனக் குறைஷிக டலைவர்கள் பலருஞ்
செவ்வி தாயொரு நெறிபடத் திரண்டுவந் தடைந்தார்
மைவ ணந்தரு கொடையபித் தாலிபு மனைக்கே.

(இ-ள்.) இந்தப்படி யாகச் சிலபகல் விரோதத்தோடுங் கழிந்ததின் பிற்பாடு சமுத்திரமானது ஒலித்ததைப் போலக் குறைஷிகளின் தலைவர்கள் பலபேர்களும் ஒலித்து அழகாய் ஒரு நெறிப்படும்படிக் கூடி மேகங்களைப்போலத் தாகிற்கும் ஈகையை யுடைய அபீத்தாலி பவர்களின் வீட்டிற்கு வந்தார்கள். (௨௫)

இகன்ம னத்தவர் திரண்டபித் தாலிபை யெதிர்த்து
ஜகத லத்திரு ளறவரும் பருதியொத் தவரேயோய்!
விகட விக்கினம் விளையுமுன் விலகநும் மிடத்திற்.
புகலு தற்கொரு கருமமுண் டெனப்புக லுவரால்.

(இ-ள்.) விரோதத்தைக் கொண்ட மனத்தை யுடையவர்களான அந்தக் கபிர்கள் அவ்வாறு கூட்டமுற்று அபீத்தாலி பவர்களை எதிர்த்து இந்தப் பூமியின்கண் அந்தகாரமானது அறும் வண்ணம் வராநிற்கும் சூரியனை நிகர்த்தவர்களே! உங்களிடத்தில் தொந்தரவான இடையூறுகள் உண்டாகு முன்னர் விலக்கும்படிச் சொல்லுவதற்கு ஒருகாரிய முண்டுமென்று சொல்லுவார்கள். (உசு

ஹாஷி யாகுலக் கடனடு வெழுந்தக லிடத்தின்
மாசி லாமதி நின்றுணை யவர்தரு மதலை
யேசு வார்க்கிட மெனப்பிறந் திழிதர வினத்துப்
பாச நீக்கிநந் தேவத மனைத்தையும் பழித்தான்.

(இ-ள்.) மகத்தான ஹாஷிம் குலமாகிய சமுத்திரத்தின் மத்தியிலெழும்பி விசாலமாகிய இந்தப் பூலோகத்தில் குற்றமற்ற அறிவையுடைய உமது சகோதரர் அப்துல்லா வென்பவர் தந்த மதலையான முகம்மதென்பவன் பேசுகிறவர்களுக் கிடமென்று சொல்லும் வண்ணம் உதயமாய்நிந்தையுறும்படி நம்முடையகூட்டத்தவர்களின்விருப்பத்தையும் ஒழித்துத் தேவதங்க ளெல்லாவற்றையும் பழித்தான்.

நடந்த முன்னெறி பழுதென நவிற்றியா லயத்து
ளடைந்த பேரனை வரும்வழி கேடரென் றறைந்து
கடந்த நான்மறைப் பெரியவ ரிருசெவி கசப்பத்
தொடர்ந்து பேசுவ தொறுத்தில னடிக்கடி தொடுத்தான்.

(இ-ள்.) அன்றியும், நாம் அனைவர்களும் முன்னர் நடந்துவந்த மார்க்கமானது குற்றமென்றுகூறி நமது ஆலயமாகிய கஃபாவினுள் தேவதங்களை வணங்கும்படி போய்ச் சேர்ந்த ஜனங்க ளெல்லாவரையும் வழிகேடர்க ளென்று சொல்லி வேதநூற்க ளெல்லாவற்றையுங் கற்றுத் தாண்டிய பெரியவர்களினது இருகாதுகளும் கசக்கும்படிப் பின்பற்றிப் பேசுவதை வெறுக்காது அடிக்கடி ஆரம்பித்தான். ()

தந்தை தாய்தமர்க் குறும்பொருட் சமயநின் னயத்தை
நிந்தை செய்தனன் றனக்குறும் வடுவென நினையான்

சிந்தை யுற்றதே துணிந்தனன் பிறர்மொழி தேறு
னிந்த வாறலால் வேறுரு கருமமு மிசையான்.

(இ-ள்.) அன்றியும், பிதா மாதாபந்துக்களாகிய இவர்களுக்குப் பொருந்திய பொருளான மார்க்க நியமங்களை வெறுத்தான். அவ்வி தம் வெறுப்பதைத் தனக்கும் பொருந்தும் குற்றமென்று எண்ணி லன். மனசின்கண் சார்ந்ததையே துணிந்தான். அன்னியருடைய வார்த்தைகளைக் கேட்டுந் தெளிந்திலன். எப்போதும் இந்த வழி யேயல்லாமல் வேறே யொருகாரியத்தையும்பேசிலன். (உகூ)

நின்னை நோக்கியு நின்குல முறைப்பெரி யவர்நேர்
தன்னை நோக்கியும் பொறுத்தனந் தணிந்தன மிவனை
யுன்னி நோக்கியே வணக்கிடு முமதுசொற் கடந்தாற்
பின்னை நோக்குமெந் திறமெனப் பேசின ரன்றே.

(இ-ள்.) ஆதலால் நாங்கள் உங்களைப் பார்த்தும் உங்கள் குடும் பத்தின் சத்திய முறைமையை யுடைய பெரியவர்களைப் பார்த்தும் அந்த முகம்மதின் துஷ்டத்தனத்தைச் சகித்தோம்மேலும் தணிந் துகொண்டோம். ஆனால் நீங்கள் மனசின்கண் யோசித்து இந்த முகம்மதைப் பார்த்து வணக்கிடுங்கள். அப்படி வணக்குவதில் அவன் உங்களது வார்த்தைகளைத் தாண்டினால் பிற்பாடு பாருங்கள்? எங்கள் திறத்தை என்று சொன்னார்கள். (கூ0)

முறைமு றைப்படி காபிர்கள் கூறிய மொழிகேட்
டறம தித்தநெஞ் சுடைந்தபித் தாலிபங் கவர்கட்
குறும னக்குறை தவிர்ந்திட நன்மொழி யுரைப்பப்
பொறைம னத்தொடு மனைவரு மனைவயிற் போனார்.

(இ-ள்.) அவ்வாறு அந்தக் காபிர்கள் வரிசை வரிசையான வித த்தில் கூறிய வார்த்தைகளை அபீத்தாலிபவர்கள் தங்களின் காதுக ளினால் கேள்வியுற்றுத் தருமத்தையே கருதிய மனமானது தகர்ந்து அவ்விடத்துற்ற அந்தக் காபிர்களுக்குப் பொருந்திய மனக்குறை யானது ஒழிந்திடும் வண்ணம் நல்லவார்த்தைகளை எடுத்துச்சொல்ல அவர்களெல்லாவரும் பொறுமையையுடைய உள்ளத்தோடும் தங்கள் தங்களின் வீட்டின்கண் போய்ச்சேர்ந்தார்கள். (கூக)

மாற்ற லர்க்கரி முகம்மது காபிர்கள் வணங்கிப்
போற்று புத்தையு மினத்தையும் பொருந்திலா திகழ்ந்து

தூற்று நிந்தனை யுரைமறுத் திலர்செழுஞ் சுருதி
தேற்றும் வானவர் கோனுரை நிலைபடுந் திறத்தால்.

(இ-ள்.) சத்துராதிக ளென்னும் யானைகளுக்குச் சிங்கமாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் செழிய வேதத்தைத் தேற்றா நிற்கும் அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலாமவர்களின் வார்த்தைகளானவை நிலைபடுகின்ற தன்மையினால் அந்தக் காபிர்கள் தொழுது துதிக்கும் விக்கிரகங்களையும் அவர்களின் கூட்டத்தையும் இணங்காது நிந்தித்துப் பேசுகின்ற நிந்தனையான பேச்சுகளை மறுத்திலர்கள். (ருஉ)

உரைத்த வாசக மனத்திடை தரித்தில னூரவோர்
நிரைத்த டைந்தபித் தாலிபுக் குரைத்தது நெகிழ்ந்தான்
குரைத்த லென்னினி முகம்மது பெலத்தொடுங் குறும்பைக்
கரைத்தல் வேண்டுமென் றவரவர் தனித்தனி கடுத்தார்.

(இ-ள்.) அப்போது காபிர்கள் முகம்மதென்பவன் நாமனைவர்களும் சொல்லியவார்த்தைகளையும்மனதின்கண் தரித்திலன். முதியவர்களான நமது கூட்டத்தார்கள் வரிசையாய்ப் போய்ச்சேர்ந்து அபீத்தாலிபவர்களுக்குச் சொல்லிய வார்த்தைகளையும்விட்டு நீங்கினான். இனிநாம் குரைப்பதினால் என்ன பிரயோசனம்? அந்த முகம்மதின் வலிமையேங்கும் குறும்புகளைக் கறையும்படி செய்தல் வேண்டுமென்று அவர்களொவ்வொருவரும் தனித் தனியாகச் சோபித்தார்கள். (ருங)

கோதில் கற்பகச் செழுங்கொடிக் கொழுங்கனிக் கதீஜா
மாது தன்மணம் புணர்ந்தவர் பொருடரு மதமோ
சாதி ஹாஷிமென் குலத்தவர் பெலன்குறித் ததுவோ
வேதி வற்குறுங் குறும்பெனச் சிலரெடுத் திசைத்தார்.

(இ-ள்) அன்றியும், சிலபேர்கள் குற்றமற்ற கற்பகத் தருவின் செழிய கொடியினது கொழுங்கனியாகிய கதீஜாவென்று சொல்லும் பெண்ணினது விவாகமாய்இசைந்து அவரின் சம்பத்துகளினால் தரா நிற்கும் மதமோ? அல்லது தன் சாதியாகிய ஹாஷிமேன்று சொல்லப்பட்ட குடும்பத்தவர்களின் குறித்த வலிமைரே? இந்த முகம்மதுக்குப் பொருந்தும் இக்குறும்புகள் வேறே யாது? என்று எடுத்துச் சொல்லுவார்கள். (ருச)

தந்தி ரத்தினுற் சிலவரைத் தனதுரைக் கடக்கி
மந்தி ரத்துருச் சித்தியான் மார்க்கமொன் றெடுத்தான்
சிந்தை யிற்றெளி வுற்றுநோக் கிடுமறைச் செயலீ
ரிந்த வாறிவன் ருெழிலெனச் சிலரெடுத் திசைத்தார்.

(இ-ள்.) அன்றியும், சிலபேர்கள் வேத ஒழுங்கை யுடையவர்களே! நீங்கள் உங்களது சிந்தையின்கண் தேர்ந்து பாருங்கள். சில ஜனங்களை உபாயத்தினுல் தனது வார்த்தைகளுக்கு அடங்கும் வண்ணஞ் செய்து மந்திர வுருவின் சித்தியினுல் தனக்கு ஒருமார்க்கத்தைத் தெரிந்துகொண்டான். இந்த முகம்மதினது தொழில் இவ்வாறு தானென்று எடுத்துச் சொல்லுவார்கள். (௬௫)

இழிவு செய்தொரு குலம்பிறந் தொருகுல மெடுத்து
வழிகெ டத்தனி நின்றவன் றனதுயிர் மாய்க்கப்
பழியும் பாவமு நினைத்திவை பழுதென பலகால்
மொழிய வேண்டுவ தில்லெனச் சிலர்மொறு மொறுத்தார்.

(இ-ள்.) அன்றியும், சிலபேர்கள் ஒருகூட்டத்திற் பிறந்து அக்கூட்டத்தை நிந்தை செய்து வேறே ஒரு கூட்டத்தைத் தெரிந்துகொண்டு:நெறியானதுகெடும் வண்ணம் ஏகமாய் நின்றவனுன அந்த முகம்மதென்பவனின் ஆவியை மாய்ப்பதற்குப் பழியையும் பாவத்தையும் எண்ணி இவை குற்றமென்று பலபோதும் பேசவேண்டுவதில்லையென்று சொல்லி மொறு மொறுப்பார்கள். (௬௬)

நிறைத்த நந்நெறித் தேவத நிலைதலை குலைய
வெறுத்த பேருயி ரகம்விசும் பினிற்குடி படுத்த
லொறுத்த லென்னபித் தாலிபுக் குரைத்தினி யொருகாற்
பொறுத்துச் செய்வது கருமமென் றனைவரும் புகன்ருர்.

(இ-ள்.) அன்றியும், அவர்கள் நிறைந்த நமது மார்க்கத் தேவதங்களின் நிலைமையானது தலைகுலையும் வண்ணம் நிந்தித்த பேர்களினது ஆவியை விசாலமாகிய ஆகாயத்தின்கண் குடிபடுத்துவதை வெறுப்பது என்னகாரண மென்று கேட்க, அதற்கு அங்குற்ற யாவர்களும் இன்னம் ஒரு தடவை அபீத்தாலி பவர்களுக்குச் சொல்லிப் பொறுத்துச் செய்வதே காரியமென்று சொன்னுர்கள். (௬௭)

இசைத்து ரைத்தவை நன்கென வினத்தொடு பலரும்
விசைத்தெ ழுந்தபித் தாலிபு திருவயின் மேவித்
திசைத்த டங்களுந் திக்கினும் திரிதரு கவனக்
குசைத்த டப்பரிக் குரிசின்முன் கூறுதல் குறித்தார்.

(இ-ள்.) அவ்விதம் யாவர்களும் இணங்கிச் சொன்னவைகள் நல்லதென்று தங்கள் கூட்டத்துடன் பல ஜனங்களும் விரைவா யெழும்பி அபீத்தாலி பவர்களின் திருச்சமுகத்தில் வந்து சேர்ந் துத் திசைகளினது பாதைகளிலும் திக்குகளிலும் திரியாநிற்கும் வேகத்தைக் கொண்ட புறமயிரமைந்த பெருமை பொருந்திய குதி ரையை யுடைய குரிசிலான அவ் வபீத்தாலி பவர்களின் முன்னர் சொல்ல நியமித்தார்கள். (௬அ)

குரிசி னங்குல மகன்முகம் மதுசெயுங் குறும்பைப்
பரிவி னிற்பொறுத் திருந்தநும் மிருசெவிப் படுத்தித்
தெரிய வேண்டுவ திலையினிச் சேர்தரு மினத்திற்
குரிய ரியாமல வறிகவென் றுரைத்தயல் போனர்.

(இ-ள்.) குரிசிலாகிய அபீத்தாலிபானவர்களே! நமது கூட்டத் திலுற்ற புதல்வனான முகம்மதென்பவன் செய்யும் குறும்புத் தன த்தை நாங்கள் அன்போடு சகித்திருந்தும் இனிமேல் உங்களுடைய இருகாதுகளிற் படுத்தியறிய வேண்டுவதுயாதொன்று மில்லை. நாங் கள் கூடாநிற்கும் நமது இனத்திற்குச்சொந்தமானவர்கள் அல்லேம். நீங்கள் அறிவீர்களாக வென்று சொல்லி அப்புறம் போயினர்கள்.

உற்ற தங்குலப் பெரியவ ரனைவரு முரைத்த
பெற்றி யும்மகன் குறிப்பையும் பிரித்தெடுத் தாய்ந்து
வெற்றி வாளபித் தாலிபு மனமிடை மிடைந்திட்
டுற்ற தங்கருத் தொடுமயற் குரைத்திடா துறைந்தார்.

(இ-ள்.) வெற்றியமைந்த வாளாயுதத்தை யுடைய அபீத்தாலி பவர்கள் அவ்வாறு வந்து பொருந்திய தங்களின் குலத்தினது பெரி யவர்களெல்லாவரும் சொல்லிய தன்மையையும் தங்களின் புதல்வ ரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் குறிப்பையும் வேறுபடுத்தி மனசின்கண் எடுத்தாராய்ந்து மனமா னது மிகவும் மிடைந்துப் பொருந்திய தங்கள் கருத்துடன் பக்கத் தார்களுக்குச் சொல்லாது தங்கி யிருந்தார்கள். (௭௦)

பத்தி விட்டினம் வெறுப்பதும் பழுதுயிர்த் துணைவன்
புத்தி ரற்கிடர் வருவதும் பழுதெனப் புழுங்கி
யெய்த்த சிந்தையோ டியனபி தமையழைத் திருத்தி
வைத்து நன்னய மொழிசில வகுத்தெடுத் துரைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு இருந்த அபீத்தாலி பவர்கள் அன்பான தொழியப் பெற்றுப் பந்துக்களைப் பகைப்பதும் குற்றம் நமது ஜீவனை நிகர்த்த சகோதரராகிய அப்துல்லா வென்பவரின் புதல்வரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்குத் துன்பம் வந்து சேருவதுங் குற்றமென்று புழுக்கமுற்று மெலிந்த சிந்தையோடு ஒழுங்கை யுடைய நபிகள் பெருமானவர்களைக் கூப்பிட்டு இருக்கவைத்து நல்ல நயத்தை யுடைய சிலவார்த்தைகளை வகைப் படுத்தி எடுத்துச் சொன்னார்கள். (சக)

வருத்த முற்றபித் தாலிபங் குரைத்திடும் வசனந்
திருத்துந் தீனிலை முகம்மது செவியிடைப் புகுந்து
கருத்தி னிற்றெளிந் தெண்ணிய நல்வினைக் கருமம்
பொருந்து தற்கிட ரிதுகொலென் றகத்திடை பொறுத்தார்.

(இ-ள்.) அபீத்தாலி பவர்கள் அவ்விதம் துன்பமுற்று அவ்விடத்தில் சொல்லிய வார்த்தைகள் செவ்வைப் படுத்தாநிற்கும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களினது காதுகளின்கண் நுழைந்துச் சிந்தையில் தேர்ந்து நாம் நினைத்த நல்ல செயலையுடைய காரியத்தை பொருந்தச் செய்வதற்கு இச்சமாசாரம் இடரானதென்று மனசின்கண் தரித்தார்கள். (சஉ)

வந்து ரைத்ததம் பினத்தவர் மனவெறுப் பகல
நந்த மைச்சிறி திகழ்வரென் றகத்தினி னாட்டித்
தந்தை தந்திரு முகமலர் தனியெதிர் நோக்கிச்
சிந்து முத்தவெண் ணகையித ழமுதவாய் திறந்தார்.

(இ-ள்.) அவ்வாறு தரித்த நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்களின் சமுகத்தில் வந்து சொன்ன பந்துக்களின் மனவிரோதமானது நீங்கும் வண்ணம் நம்மைக் கொஞ்சம் இகழ்வார்க ளென்று மனசின்கண் ஸ்தாபித்துத் தங்களின் பெரிய பிதாவான அபீத்தாலி பவர்களின் அழகிய முகமாகிய தாம

ரைமலரை எதிராய்ப் பார்த்துச் சிந்ாநிற்கும் முத்தைப் போன்ற வெண்ணிறத்தைக் கொண்ட பற்களையுடைய அதரங்களை யுற்ற அமுதவாயைத் திறந்தார்கள். (௪௩)

பருதி யைக்கொணர் தனிவலக் கரத்திடை பதித்து
மதிதி னிற்கசி கொணர்ந்திடக் கரத்தினி லமைத்து
மொருமொ ழிப்பட வினத்தவ ரொருங்குற நெருங்கிப்
பொருத டக்கினு நும்மனம் பொருந்திலா திருந்தும்.

(இ-ள்.) நமது இனத்தவர்களாகிய அறபிகள் அரிதாகச் சூரிய னைக்கொண்டு வந்து அழகிய வலதுகையி னிடத்தில் வைத்தும் சந் திரனைக் கொண்டுவந்து இடதுகையின்கண் அமையப் பண்ணினு லும் ஒரு சொற்படும் வண்ணம் சேர்மானமாகச் செறிந்து சண்டை செய்து என்னை அடக்கினுலும் உங்களுடைய உள்ளமானது பொரு ந்தா திருந்தாலும். (௪௪)

ஈத லாற்சில விடரெனை யடுக்கினு மிறையோன்
றூத னியானெனச் சுருதியை விளக்குவ தலது
பேதி யாதென தகமென முகம்மது பிரியாத்
தாதை யோடுரைத் தனிரு விழிமழை தயங்க.

(இ-ள்.) இதல்லாமல் சில இடைஞ்சல்கள் என்னை அடுத்தாலும் இறையவனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூல் நானெ ன்று வேதத்தை விளக்குவதே யல்லாமல் எனது மனமானது பேத ப்படாதென்று நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவ ர்கள் இரண்டு கண்களிலு மிருந்துண்டாகும் நீரானது பிரகாசிக்கு ம்படி நீங்காத தங்களின் பெரிய தந்தையாகிய அபீத்தாலிபவர்க ளோடும் சொன்னுர்கள். (௪௫)

அழுது ரைத்தநன் னெறிமுகம் மதுதமை யடுத்துத்
தழுவி யென்னுயிர் நீயல திலையெனச் சாற்றி
முழுது நின்கருத் துறும்படி முயல்வதே யன்றிப்
பழுதி லென்மனத் திதுகொனின் னையமெனப் பகர்ந்தார்.

(இ-ள்.) அவ்வாறு அழுதுசொன்ன நல்லசன்மார்க்கத்தையுடைய நபிமுகம்மதுசல்லல்லாகுஅலைகிவசல்லமவர்களை அபீத்தாலிபவர்கள் நெருங்கிக் கட்டியணைத்து எனது ஜீவனனது நீரேயல்லாது வேறி

றில்லேயென்று சொல்லி முழுவதும் உம்முடைய எண்ணமானது பொருந்தும்வண்ணம் முயற்சிப்பதே யன்றி எனது மனசின்கண் யாதொரு பொல்லாங்குமில்லே. இஃது சத்தியமென்று சொன்னார்கள். (௬௬)

சிதைவி லாமொழி தனையபித் தாலிபு தெளிப்ப
மதலே யாகிய முகம்மது மனத்திடை களித்துப்
புதிய நாயக ஞானம் புடைபரந் தோங்க
விதுவி னெண்கலே வளர்த்தெனத் தீன்பயிர் விளேத்தார்.

(இ-ள்.) அபீத்தாலி பவர்கள் அவ்விதம் கேடற்ற வார்த்தைகளைத் தெரிவிக்கப் புதல்வரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் தங்களின்மனசின்கண் சந்தோஷித்துப் புதிய ஆலத்தையுடைய நாயகனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் வேதமானது பக்கங்களில் பரவி வளரும்வண்ணம் சந்திரனின் ஒள்ளிய கிரணங்கள் வளர்வதைப்போலத் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கப்பயிரை விளேயச்செய்தார்கள். (௬எ)

வருந்தி லாதொரு சமயமென் றகுமது வடுவைத்
தருந்த வப்பிழைக் கொடுமுடி தனைமறுத் திலனென்
றிருந்த பேரினிற் றலேவர்க ளவரவர்க் கிசைத்துத்
திருந்தி லாமனக் காபிர்கள் கிளேயொடுந் திரண்டார்.

(இ-ள்.) அப்போது திருந்தாத மனத்தை யுடையவர்களான காபிர்கள் அஹ்மதென்னும் பெயரையுடைய முகம்மதானவன் வருந்ாது ஒருமார்க்கமென்று வசையைத் தராநிற்கும் மிகுத்த குற்றமாகிய கொடுமுடியை மறுத்திலனென்று அங்குற்றிருந்த ஜனங்களில் தலேவர்களானவர்களுக்குச் சொல்லித் தங்களின் குடும்பத்தோடும் திரண்டு கூட்ட முற்றார்கள். (௬அ)

மாத வத்தின னலீதருண் மதலேயைக் கொடுபோய்க்
கோதி லாதபித் தாலிபு திருக்கரங் கொடுத்துத்
தீதி ழைத்திடு முகம்மதை நமதிடஞ் சேர்த்துப்
பேத கத்தினைத் துடைப்பமென் றுரைத்தனர் பெரியோர்.

(இ-ள்.) அவ்வாறு கூட்டமுற்ற காபிர்களில் பெரியவர்கள் மகாதவத்தையுடையவனான ஒலீதென்பவன் தந்த மதலேயாகிய உமாறத்தென்பவனே யாதொரு குற்றமுமில்லாது கொண்டுபோய் அபீத்தா

லிபவர்களின் அழகிய கைகளிற் கொடுத்து அவனுக்குப் பதிலாகத் தீமைசெய்திடும் முகம்மதென்பவனை நமது இடத்தில் சேரப்பண்ணி அவனுடைய மாறுபாட்டை இல்லாமற் செய்வோமென்று சொன்னார்கள். (சகூ)

குறித்த வாசக நன்கெனத் திரளொடுங் கூடி
நறைத்த டப்புய வொலீதருண் மகனைமுன் னடத்தி
நிறைத்த மாமலர்ப் புயரபித் தாலிபு நிலவச்
செறித்த நீணிலை மணித்தலைக் கடையிடை சேர்ந்தார்.

(இ-ள்.) அவ்விதம் அந்தக் காபிர்களிற் பெரியவர்கள் குறிப்பிட்ட வார்த்தைகளை யாவர்களும் நல்லதென்று சொல்லத், தங்களின் கூட்டத்தோடுந் திரண்டு வாசனையமைந்த விசாலமாகிய தோள்களையுடைய ஒலீதென்பவன் தந்த மகனாகிய உமாறத்தென்பவனை முன்னால் நடத்திக்கொண்டு பெருமைபொருந்திய புஷ்பமாலைகளினால் நிறைக்கப்பட்ட புயங்களையுடைய அபீத்தாலிபவர்கள் பிரகாசிக்கும்படி சேர்த்த இரத்தினவர்க்கங்களையுடைய நீண்ட நிலைகளைக் கொண்ட தலைவாசலின்கண் வந்து சேர்ந்தார்கள். (ரு௦)

கலிவிருத்தம்.

மாலை யிட்ட வரைப்புய மன்னபித்
தாலி பைக்கண் டனைவருங் கைமுகிழ்த்
தோலி டுங்கட லுட்படு நஞ்சினைப்
போலு மாற்றம் புகலப் பொருந்தினர்.

(இ-ள்.) அவ்விதம் வந்துசேர்ந்த காபிர்களான யாவர்களும் புஷ்பமாலைதரித்த மலைபோலுந் தோள்களையுடைய மன்னவரான அபீத்தாலிபவர்களைக் கண்டு இருகைகளையும் குவியும்படிசெய்து வணங்கி ஓலமிடாநிற்கும் சமுத்திரத்தி னகம்பொருந்திய விஷத்தைப்போலும் வார்த்தைகளைச் சொல்ல இசைந்தார்கள். (ருக)

உத்த மத்தொலி தென்பவன் செய்தவப்
புத்தி ரன்கலை யிற்பொரு வற்றவன்
சித்தி ரத்தினு மிக்குயர் செவ்வியன்
மத்த மாகரி யொத்த மனத்தினன்.

(இ-ள்.) சத்தியத்தையுடைய ஒலீதென்று சொல்லப்பட்டவன் செய்த தவப்புதல்வனான உமறத்தென்பவன் சாஸ்திரங்களில் ஒப்பற்றவன். அழகிலும் மிகஉயர்ந்த அழகையுடையவன், அன்றியும் பெருமைபொருந்திய மதத்தைக்கொண்ட யானையை நிகர்த்த மனத்தையுடையவன். (ருஉ)

மறுவ றுங்குல மைந்தனிம் மைந்தனை
யறுதி நன்மனத் தோடு மளித்தன
மிறைவ நின்மக னுக்குக வில்லகத்
துறைக பின்னு மொருமொழி கேட்டியால்.

(இ-ள்.) குற்றமற்ற குலப்புதல்வனாகிய இந்த மைந்தனானவனை நல்ல மனத்தோடும் உங்களுக்குச் சொந்தமாகத் தந்துவிட்டோம் அரசரான அபீத்தாலிபவர்களே! உங்களுடையபுதல்வனாக ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் உங்கள் வீட்டின்கண் தங்கியிருந்து கொள்ளுங்கள். இன்னம் ஒருவார்த்தை கேளுங்கள். (ருங)

பெறத்த காத பெரும்பழி யாய்நம
தறத்தி னுக்கழி வாயவ தூறமாய்
ம்றுத்தோர் மார்க்கம் வகுத்த முகம்மதை
வெறுத்தி னத்தவர்க் கீந்திடல் வேண்டுமால்.

(இ-ள்.) பெறத்தகாத பெரிய விரோதமாகவும் நமது புண்ணியத்திற்குக் கேடாகவும் நிந்தனையாகவும் வேறேயொரு மார்க்கத்தை வகைப்படுத்திய முகம்மதென்பவனை நீங்கள் விரோதித்து இனத்தவர்களான எங்களுக்குத் தருதல் வேண்டும். (ருச)

இந்த மாற்ற மிசைந்தினி ரேற்பகை
வந்தி டாது மறுத்தொரு தீங்கிலேச்
சிந்தை வேறுசெய் தீரெனி னீள்பகை
பிந்தி டாத பெரும்பழி சூழுமே.

(இ-ள்.) நீங்கள் இந்தவார்த்தைகளைப் பொருந்தினீர்களேயாகில் நம்மில் யாதொரு விரோமும் வராது. வேறே யொரு தீமையுமில்லை. இதற்குப் பொருந்தாது உங்களுடைய எண்ணத்தை வேறுசெய்வீர்களானல் தாமதியாத பெரிய விரோதமானது நம்மைவந்து வளைந்து கொள்ளும். (ருரு)

எனவு ரைத்த வினத்தவர் தம்மொழி
மனதி னுட்புகுந் தங்கி வளர்த்துறு
சினமெ ழுப்பின சிந்தையுட் டீயைநன்
னினைவி னுட்பொதிந் தோர்மொழி நீட்டுவார்.

(இ-ள்.) என்று சொல்லிய தங்களின் கூட்டத்தாருடைய வார்த்தைகள் மனசின்கண் நுழைந்து அக்கினியை வளர்த்துப் பொருந்திய கோபத்தை எழும்பும்வண்ணம் செய்தது. அப்போது அமீத்தாலிபவர்கள் அவ்வாறுற்ற மனசின்கண்ணுள்ள அக்கினியை நல்ல எண்ணத்தினுல் அகத்திலேயே மூடி ஒருவார்த்தையை நீளமாய்ச் சொல்லுவார்கள். (ருசு)

நலிவி லாது நடுவுரைத் தீரும
தொலிது மைந்தனு மாறத்தென் போன்றனை
மலியும் வெண்சுதை மாடத்தில் வைத்தியான்
மெலிவி லாது வளர்த்திடல் வேண்டுமால்.

(இ-ள்.) நீங்கள் வாட்டமில்லாது நீதியைப் பேசினீர்கள். உங்கள் ஒலீதென்பவனுடைய மகன் உமாறத்தென்பவனை யான் வெண்ணிறத்தையுடைய சுண்ணச்சாந்துகள் மலிந்த வீட்டினகம் வைத்து யாதொரு வருத்தமு மில்லாமல் வளர்க்குதல் வேண்டும். (ருஎ)

எங்க டங்குலத் தின்னுயிர்த் தம்பிதன்
மங்கை யீன்ற மணியைமு கம்மதை
யுங்கள் பாற்கொடு போயுமர் தம்மனப்
பங்கந் தீரப் படுத்தலும் வேண்டுமால்.

(இ-ள்.) எங்கள் குலத்திலுள்ள இனிய உயிர்போன்ற தம்பியாகிய அப்துல்லா வென்பவரின் மனைவி ஆமினவென்பவள் பெற்ற மாணிக்கமானவரை, முகம்மதானவரை, உங்களிடத்திற் கொண்டு போய் உம்மவர்களுடைய மனத்தின்கண்ணுள்ள பின்னமானது தீரும்வண்ணம் கொலைசெய்தலும் வேண்டும். (ருஅ)

ஈது நன்னெறி யீது மனுநெறி
யீது நங்குலத் தாருக் கிணங்குவ
தீது வேதத் துரைப்படி யாவர்க்கு
மீதலாதுநன் னீதியு மில்லையே.

(இ-ள்.) இதுவே நமது ஒழுங்கு. இதுவே மனுநீதி. இதுவே நமது கூட்டத்தாருக்குப் பொருந்துவது. இதுவே வேதத்தினது வசனமுறைமை. இதல்லாமல் யாவர்களுக்கும் நல்ல நீதியும் வேறே யாதொன்றுமில்லை. (௫சூ)

அறபெ னும்பதி யாரா ரூழியேச
ரறவு நல்லறத் தாலறி வோங்கியோர்
பிறவு மிவ்வுரை யாவர்கள் பேசுவார்
பிறரு மில்லெறும் போற்பெரி யோர்களே.

(இ-ள்.) அன்றியும், அறபென்று சொல்லும் நகரத்தி லுள்ளவர்கள் நெடுங்கால அரசையுடையவர்கள். நல்ல புண்ணியத்திலுல் மிகவும் அறிவானது ஓங்கப்பெற்றவர்கள். வேறும் இந்த வார்த்தைகளை எவர்கள் பேசுவார்கள். உங்களைப்போல பெரியவர் மற்றவர்களி லாருமில்லை. (சூ0)

உரைத்த லென்னுமர்க் குற்றசொல் லென்மனம்
பொருத்த மில்லெனப் புண்ணியர் கூறலுந்
திருத்தி லாதென்கொல் செய்குவ மியாமென
வருத்த முற்ற மனத்தொடும் போயினர்.

(இ-ள்.) ஆதலினுல் நான் உங்களுக்குச் சொல்லவேண்டியது என்ன? ஆனுல் நீங்கள் சொன்னதற்கு விடையாகப் பொருந்திய வார்த்தையானது என்மனம் பொருத்தமில்லை யென்று தருமத்தை யுடையவர்களான அவ் வபீத்தாலிபவர்பள் சொன்ன மாத்திரத்தில் அந்தக்காபிர்கள் தங்கள் மனமானது திருந்தாது இனி நாம் யாது செய்வோம்? செய்யு முபாயமொன்று மில்லையே யென்று துன்பமுற்ற இருதயத்தோடும் தங்களின் திசையை நோக்கி நடந்து சென்ருர்கள். (சூக)

கனன்று சென்றற பிக்குலக் காபிர்க
ளனந்த ரக்குறை ஷிக்குலத் தாரொடு
வனைந்த பொற்கழன் மன்னவர் தம்மொடு
சினந்து தங்க ளினங்க டிரட்டினர்.

(இ-ள்.) அறபிக் குலத்தினது காபிர்கள் அவ்வாறு காய்ந்து சென்று தங்களின் அனந்தரத்தையுடைய குறைஷிக் கூட்டத்தா

ரோடும் அலங்கரித்த அழகிய பாதங்களையுடைய அரசர்களோடும் கோபங்கொண்டு தங்களின் கூட்டங்களைக் கூட்டினார்கள். (௬௨)

கேட்டு வந்தவ ருஞ்சிலர் கேட்டினை
மூட்ட வந்தவ ருஞ்சிலர் மூள்பகை
வீட்டு மென்று வெகுண்டவ ருஞ்சிலர்
கூட்ட மிட்டுக் குலத்தொடுங் கூடினர்.

(இ-ள்.) அவ்வாறு கூட்டவே அச் சமாசாரத்தைக் காதுகளினால் கேள்வியுற்று வந்துசேர்ந்த பேர்களும் சிலர். பொல்லாங்கை மூட்டுதற்காய் வந்துசேர்ந்த பேர்களும் சிலர். மூளாநிற்கும் விரோதத்தையுடைய சத்துராதிகளைக் கொலைசெய்யுங்களென்று கோபித்தபேர்களும் சிலராகிய இவர்கள் யாவர்களும் கூட்டமிட்டுத் தங்களின் குலத்தோடும் திரண்டார்கள். (௬௩)

வடித்த மெய்ம்மறை நந்நபி வாக்கினிற்
படித்த சொல்லைப் பகர்ந்திடும் பேர்களைப்
பிடித்த டித்துப் பெலன்குறைத் தில்லமு
மிடித்து டைத்திடை யூறு படுத்தினர்.

(இ-ள்.) அவ்விதம் திரண்ட யாவர்களும் வடிக்கப்பெற்ற சத்தியத்தைக்கொண்ட புறுக்கானுல் அலிமென்னும் வேதத்தையுடைய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வாக்கினலோதிய வார்த்தைகளைச் சொல்லாநிற்கும் ஜனங்களைப் பிடித்து அடித்து அவர்களின் வலிமையையுங் குறையும்படிசெய்து வீடுகளையும் இடித்துத் தகர்த்து ஊறுபாடு படுத்தினார்கள். (௬௪)

செறுநர் செய்திடுந் தீயவக் கோட்டிகண்
டறிவு றும்மபித் தாலிபு மங்கவர்க்
கிறுதி செய்குவ னியானென வீரமுற்
றுறைபெ ருங்குலஞ் சேர்ப்பதற் குன்னினர்.

(இ-ள்.) சத்துராதிகளான அந்தக் காபிர்கள் அவ்வாறு செய்யாநிற்கும் கொடிய துன்பங்களை அறிவானது மிகுக்கப்பெற்ற அபீத்தாலிபவர்களும் தங்களின் கண்களினாற் பார்த்து அக்காபிர்களுக்கு யான்முடிவு செய்வேனென்று சொல்லி வீரமடைந்து அங்கு தங்காநிற்கும்பெரிய கூட்டத்தைக் கூட்டுவதற்காய்த் தங்களின் மனசிலெண்ண முற்றார்கள்: (௬௫)

பெருகி நின்ற தலைமுறைப் பேரராய்
வருமவ் வப்துல்மு னுபுதம் மக்களி
னுரிய ஹாஷிமெ னுங்கிளை யோரையும்
பொருவின் முத்தலி புக்கிளை யாரையும்.

(இ-ள்.) அவ்விதமெண்ணிய அபீத்தாலி பவர்கள் தங்களின் தலைமுறைப்பேரராக வந்த அந்த அப்துல் முனுபுஎன்பவர்களினது புதல்வர்களில் அதிகரித்து நின்றசொந்தமான ஹாஷீமென்று சொல்லும் கிளையார்களையும், ஒப்பற்ற மூத்தலிபுக் கிளையார்களையும். ()

தனத்த வப்து ஷமுசுக் கிளையையுஞ்
சினத்த வேல்நவு பல்கிளைச் சேனையுங்
கனத்த வெண்டிரை மாகடற் கொப்பென
மனைத்த லத்தில் வரவழைத் தாரரோ.

(இ-ள்) செல்வத்தை யுடைய அப்துஷ் ஷம்சுக்கிளை யார்களையும், சத்துராதிகளின்மீது கோபிக்கின்ற வேற்படையை யுடைய கூட்டமாகிய நௌபல் கிளையார்களையும், பாரமான வெள்ளிய அலைகளை யுடைய பெரிய சமுத்திரத்திற்கு நிகரென்று சொல்லும் வண்ணம் தங்களினது வீட்டின்கண் வரும்படி கூப்பிட்டார்கள். (௬எ)

முன்றி லெங்கணு மொய்த்தசெவ் வேற்கர
வென்றி வீரரை நோக்கி விளித்தணி
மன்றன் மார்பின் முகம்மது வான்முனஞ்
சென்ற செய்தி யனைத்தையுஞ் செப்பினர்.

(இ-ள்.) அபீத்தாலி பவர்கள் அவ்வாறு கூப்பிட வந்து முற்றத்தில் எவ்விடங்களிலும் நெருங்கிய செவந்த வேலாயுதந் தாங்கிய கையினது வெற்றியை யுடைய அவ்வீரர்களைப் பார்த்துக் கூப்பிட்டு அழகிய வாசனை யமைந்த மார்பை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மகத்துவமுற்ற எதிரில் நடந்த சமாச்சாரங்க ளெல்லாவற்றையுஞ் சொன்னார்கள். (௬அ)

மாறி லாதெழின் மான்மதங் காவத
நாறு மேனி முகம்மதை நாடோறும்
வேறு பாடு விளைத்திடும் பேர்களைக்
கோற லென்குறிப் பென்னவுங் கூறினர்.

(இ-ள்.) அன்றியும், அழகிய கஸ்தூரி வாசனையானது காதவழித்தூரம் நீங்காது பரிமளியா நிற்கும் திருமேனியை யுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்குப் பிரதிதினமும் விகற்பத்தைச் செல்யும் ஜனங்களைக் கொல்லுவதே எனது மனசி லுள்ள குறிப்பென்றும் சொன்னார்கள். (சுகூ)

ஆட்டி றந்தபித் தாலி புரைத்தசொற்
கேட்டு முத்தலி புக்கிளை யோர்களுங்
கூட்டத் தாஷிம் குலப்பெரி யோர்களு
நாட்ட முற்றிது நன்றெனக் கூடினர்.

(இ-ள்.) புருடர்களில் வல்லமையை யுடைய அபீத்தாலி பவர்கள் அவ்வாறு சொல்லிய வார்த்தைகளை அங்நான்கு கூட்டத்தார்களுங் கேள்வியுற்றுத் திரளான முத்தலிபுக் கிளையார்களும் ஆஷிங் குலத்திலுள்ள பெரியவர்களும் மனசின்கண் விருப்பமுற்று இஃதுவே நல்லதென்று சொல்லி அவ்வபீத்தாலி பவர்களோடுஞ் சேர்ந்தார்கள். (எய)

மற்றி ரண்டு கிளைமுதன் மன்னரிவ்
குற்ற வார்த்தை யுசாவி யுருதென
வெற்றி வேந்தக நீங்கி வெறுத்திடும்
பற்ற லாருறை பாலடைந் தாரரோ.

(இ-ள்.) மற்ற இரண்டுகிளையாகிய அப்துஷ் ஷம்சுக்கிளையிலும் நௌபல் கிளையு முள்ள முதன்மையான அரசர்கள் இவ்விடத்திற் பொருந்திய வார்த்தைகளை மனசின்கண் ஆராய்ந்து இஃது கூடாதென்று விஜயத்தைக்கொண்ட மன்னவரான அபீத்தாலிபவர்களின் வீட்டைவிட்டும் நீங்கி விரோதித்திடும் சத்துராதிகளாகிய அந்தக்காபிர்கள் தங்காநிற்கும்இடத்தின்கண் போய்ச்சேர்ந்தார்கள்.

மறுவு றுத்து மனத்தின னாகிநல்
லறிவு நீங்கி யபூலகு பென்பவன்
பெறுமு றைத்தலை மைப்பெய ரானுமக்
குறுக லாருறை கூட்டத்தி லாயினன்.

(இ-ள்.) அன்றியும், அபீத்தாலிபவர்களின் சகோதரர்களி லொருவனென்னும் அபூலஹபென்று சொல்லப்பட்டவனாகிய பெருகிற்கும் வரிசையான தலைமைப்பெயரை யுடையவனும் குற்ற

த்தையே வருவித்துக்கொள்ளும் மனத்தையுடையவனாகி நல்ல அறிவுமாறி அந்தச் சத்துராதிகளாகிய காபிர்கள் தங்காநின்ற கூட்டத்தின்கண் போய்ச்சேர்ந்தார்கள். (எஉ)

பிரிவு செய்கிளை தன்னொடும் பின்னவ
னுரிய னுயினை னென்று முளத்தினில்
வெருவி லாதுபுன் மூரல் விளைத்தட
லரியின் சீற்றமுற் றுராபித் தாலிபே.

(இ-ள்.) அப்போது அபீத்தாலிபவர்கள் பிரிவைச்செய்த தங்களின் கிளையார்களோடும் தங்கள் தம்பியாகிய அபூலஹபென்பவனும் சிநேகத்தை யுடையவனுயினு னென்றுசொல்லி மனதின்கண் அஞ்சாது புனசிரிப்புச்செய்து வலிமையையுடைய சிங்கத்தைப் போலக் கோபமுற்றுர்கள். (எங)

பகைத்த காபிர்கள் கூடிப் பனைக்கைமா
வுகைத்த வீர னொலிதிடம் புக்கிரா
மிகைத்த ஹஜ்ஜின் முகம்மதின் வீரத்தைத்
தகைத்தல் வேண்டுவ துண்டெனச் சாற்றுவார்.

(இ-ள்.) அந்நேரத்தில் விரோதித்த அந்தக் காபிர்கள் ஒன்றுசேர்ந்துப் பனைமரம்போன்ற தும்பிக்கையுடைய யானைகளை நடத்தாநிற்கும் வீரனாகிய ஒலீதென்பவனிடத்தில்போய் நாம்ஹஜ்ஜிப்பெருநாளில் அந்த முகம்மதென்பவனின் அதிகரித்த வீரத்தைத் தடுக்கவேண்டுவது ஒன்றுண்டுமென்று சொல்லுவார்கள். (எச)

கணிதன் றுன்பக் கவிய ன்கபடித
வணிதன் வஞ்சனை யன்வரை வற்றபித்
தணித னென்றொரு பேரையுண் டாக்குத
றுணித னன்றென யாவருஞ் சொல்லினர்.

(இ-ள்.) அந்த முகம்மதென்பவன் சோதிடன் அன்றியும், துன்பத்தையுடைய பாட்டுகளைப் பாடப்பட்டவன். தந்திர வார்த்தைகளினது இணக்கத்தை யுடையவன். வஞ்சனையை யுடையவன். எல்லையில்லாத பித்தமானது நெருங்கியவன் என்று சொல்லி ஒரு நாமத்தைச் சிருட்டிக்க நாமனைவர்களும் முயலுவது நல்லதென்று யாவர்களும் சொன்னுர்கள். (எரு)

நீட்டு கைக்கரி யைநிக ரிற்புலி
காட்டு மாறென மாறிடுங் காபிர்கள்
மாட்டி ருந்து வழங்கிய யாற்றத்தைக்
கேட்டி ருந்த வொலீது கிளத்துவான்.

(இ-ள்.) நீட்டாநிற்கும் துதிக்கையையுடைய யானைக்கு ஒப்பாகப் பூனையைக் காட்டுகின்ற மார்க்கத்தைப்போல நன்னெறியைவிட்டும் நீங்கிய காபிர்களான அவர்கள் தன்னிடத்திலிருந்து சொல்லிய வார்த்தைகளை இரு காதுகளினாலுங் கேள்வியுற்றிருந்த ஒலீதென்பவன் சொல்லுவான் (எகூ)

ஈதெ லாம்பெய ரன்றிவன் சொல்லினைக்
கோத டர்த்தக் குறிப்பரி தாற்குலம்
பேத கப்படுத் தும்பெரு வஞ்சனைச்
சூத னென்றிடும் பேரெனச் சொல்லினன்.

(இ-ள்.) இஃதனைத்தும் நாமமல்ல, இந்த முகம்மதின் குற்றத்தை யடர்த்தாநிற்கும் அந்த வார்த்தைகளைக் குறிக்க அருமையானதினால் தனது குலத்தை மாறுபாடுபடுத்தும் பெரிய வஞ்சனையையுடைய வஞ்சகமென்று சொல்லும் நாமமென்று சொல்லினன். (எஎ)

இத்த லத்தினி லிவ்வரு டத்தினின்
மொய்த்த ஹஜ்ஜின் முகம்மது வஞ்சனைப்
பித்த னென்று பெரும்பெயர் நாட்டுதல்
புத்தி யென்றித மித்தனர் பொய்மையோர்.

(இ-ள்.) அதைக்கேட்ட பொய்மையை யுடையவர்களான அந்தக் காபிர்க ளனைவர்களும் இந்தத் திருமக்கமா நகரத்தின்கண் இவ்வருஷத்தில் நெருங்கிய ஹஜ்ஜிப் பெருநாளில் முகம்ம தென்பவனை வஞ்சனையையுடைய பித்தனென்று பெரிய நாமத்தை நிறுத்துவது அறிவென்று சொல்லி ஒருமித்தார்கள். (எஅ)

மக்க மாநகர் வந்தவர் தம்மிடம்
புக்கி ருந்து முகம்மதின் புத்திகேட்
டொக்க லோடுமிவ் வூரிழந் தொவ்வொரு
திக்கினில்லலை வார்சிலர் காணென்பார்.

(இ-ள்.) அவ்வாறு ஒருமித்த யாவர்களும் ஹஜ்ஜிப் பெருநாளுக்காக பெருமை பொருந்திய அந்த மக்காப் பதிக்கு வந்தவர்களிடத்திற்போய் இருந்து சிலஜனங்கள்முகம்மதென்பவனின் அரிவைக்கேட்டுத் தங்களின் பந்துக்களோடும் இந்தத் திருமக்கமா நகரத்தையிழக்கப்பெற்று ஒவ்வொருதிக்குகளிலும் போய்ச்சேருவார்களென்று சொல்லுவார்கள்.

தாயைத் தந்தையைத் தன்னுயிராகிய
சேயைப் பெண்டிரைச் சிந்தையில் வேறதாய்
பாயத் தோடும் பகைப்பிக்க வல்லதோர்
மாயக் காரன் முகம்மதென் றோதுவார்.

(இ-ள்.) அன்றியும், அந்த முகம்மதென்பவன் மாதாவையும் பிதாவையும் தனது ஜீவனான மக்களையும் மனைவியையும் மனசின்கண் வேறாக உபாயத்துடன் பகைப்பிக்கும் வண்ணம் வல்லதானவைப் பற்ற மாயத்தை யுடையவனென்று சொல்லுவார்கள். (௩0)

ஆதி வேறுண் டொருவனென் பானவன்
றூத னியானெனச் சொல்லுவன் றெய்வங்கள்
பேத கம்படப் பேசுவன் பேதியா
வேத மொன்று விளைந்தது காணென்பான்.

(இள்.) அன்றியும், முதன்மையனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலா ஒருவன் வேறே யுண்டுமென்று சொல்லுவான், நான் அவனுடைய தூதனென்று சொல்லுவான், நமது சுவாமிகள் மாறுபாடுபடும் வண்ணம் பேசுவான். பயப்படாதுஎனக்கு ஒருவேதமுண்டாயினதென்று சொல்லுவான். (௩க)

மடுத்த சிந்தை முகம்மதென் போன்றனை
யடுத்த வன்மொழிக் குள்ளகப் பட்டுநீ
ரெடுத்த நல்வழி கெட்டெளி மைக்குங் கீழ்ப்
படுத்த லாகப் படநினை யீரென்பார்.

(இ-ள்.) ஆதலால் இவ்விதமாக வஞ்சனையே நிறைக்கப் பெற்ற மனசை யுடையவனான அந்த முகம்மதென்று சொல்லப் பட்டவனை நெருங்கிய கொடிய வார்த்தைகளினுள் அகப்பட்டு நீங்கள் எடுத்த

கல்லமார்க்க மானது கெட்டு ஏழைகளுக்குங் கிழாய்ப்படுத்தப்படும் வண்ணம் எண்ணுதிர்க ளென்று சொல்லுவார்கள். (அஉ)

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

மலிதரும்புகழ் முகம்ம தைக்கொடிய
வஞ்ச னென்றுபெயர் பேசிய
வொலிது மக்களு மிழந்து கைப்பொரு
ளொழிந்து பேறுமுத வாமலே
நலிதருங்கொடிய நரகடைந் திடுவ
னென்ன வாதிதிரு நன்மொழி
யலைவி லாதமரர் கோனிறிந்தவனி
யிற்பு கன்றவணி லேகினர்.

(இ-ள்) அப்போது அதிகரியா நிற்கும் கீர்த்தியை யுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கொடுமையையுடைய வஞ்சகனென்று நாமத்தைச்சொவ்லியஉலீதென்பவன் தன்னுடைய புத்திரர்களையும் இழக்கப்பெற்று கையிலுள்ள திரவியங்களும் அழிந்துயாதொரு பதவிக்கும் உதவாமல்மெலிவைத்தாரா நின்ற கொடிய நரகலோகம் போய்ச் சேருவானென்று யாவற்றிற்கும் முதன்மையனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் நன்மைபொருந்திய திருவசனத்தை அமராதிபரான ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் துன்பமில்லாது ஆகாயத்தை விட்டு மிறங்கி இப்பூலோகத்தின்கண் அந்நபிகள் பெருமானவர்க ளிடத்திற் சொல்லிவிட்டுத் திரும்பவும் அவ்வாகாய லோகத்திற்குச் சென்றூர்கள்.

மாசி லாவரிசை முகம்ம தின்பெயரை
மாற்றி வஞ்சக னெனும் பெயர்
பேசி யூரவி ரண்டு பட்டவுரை
பெருகி யெங்கணு மறிந்துபொன்
னூச லாடுதெரு வீதி மாமதின்
முற்ற மன்னரு மறிந்துமா
பூச லாகுவ தினத்தி னுக்கிது
பொருந்து மோவென வருந்தினர்.

(இ-ள்.) அன்றியும் குற்றமற்ற சங்கையையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் திருநாமத்தை யொழி

த்து வஞ்சகனென்று சொல்லும் நாமத்தை.தச்சொல்லி அந்தமக்கமா நகரத்தை யுடையவர்கள் இரண்டுபெட்டவர்ந்தமானமானது அதிகரித்து எல்லாவிடங்களிலுந் தெரிந்து பொன்னினாலான ஊஞ்சல்களா டாநிற்கும் தெருவினது வீதிகளையுடைய பெருமைபொருந்திய மதீன நகரத்தின்கண் தங்கிய அரசர்களும் அறிந்து பெரிய கலகமாகுவதான இஃதுபந்துக்களுக்குப்பொருந்துமா? பொருந்தாதென்று சொல்லித் துன்ப மடைந்தார்கள். (அச)

மதின மானக ரவர்க்கு மக்கநக
 ருற்ற மன்னவர் தமக்குமோ
ருதார பேதமஃ தன்றி யாவியுட
 லொத்தி ருப்பவர்க ளாகையால்
விதியி னுட்பமறை கற்ற வன்புகழின்
 மிக்க னைவபு கைசவன்
பதிவு பாசுரமொ டுறைய நீதிமுறை
 பழுதி லாதபடி யெழுதினன்.

(இ-ள்.) அன்றியும், பெருமைதங்கிய மதீனநகரத்திற் பொருந்திய அரசர்களுக்கும் மக்கநகரத்திற் பொருந்திய அரசர்களுக்கும் உதாரபேதமே யல்லாமல் ஒப்பற்ற ஜீவனுந் தேகமும் ஒத்திருப்பவர்களாகையினால் அறிவினது சூட்சத்தையுடைய வேதங்களைப் படித்தவனும் கீர்த்தியில் மிகுந்தவனுமாகிய அபூகைசென்பவன் பதிவையுடைய வசனங்களுடன் நீதியினது ஒழுங்குகள் தங்கும்படி குற்றமில்லாதவண்ணம் ஒரு நிருபத்தைத் திருமக்கமா நகரத்தார்களுக்கு எழுதினன். (அரு)

ஓலை யுத்தா முகம்மதைக்கொடு
 முரைத்த நிந்தைபழு தென்னவுஞ்
சீல மற்றபகை யொருவ ருக்கொருவர்
 செய்து கோடல்பழு தென்னவு
மேலு நல்லவழி திருத்தி னோர்கள்பத
 மீது சார்தனல னென்னவுஞ்
சால மிக்கவி தைத்தி றத்தொடு
 தனைப்பி லாதுற வனுப்பினன்.

(இ-ள்.) அவ்விதமெழுதிய நிருபத்தின் உத்தரமானது நபிமும்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கொண்டும் சொல்லிய நிந்தனையையுடைய வார்த்தைகள் குற்றமென்றும், ஒருவருக்கொருவர் குணமற்ற விரோதத்தைச் செய்துகொள்ளுவது குற்றமென்றும், மேலும் நல்ல சன்மார்க்கத்தில் திருத்தினவர்களுடைய பாதங்களின்மேல் பொருந்துவது நலமென்றும், அதிகமானபெருமைபொருந்த கவிதையினது வல்லமையுடன் பிரிவில்லாது பொருந்தும்வண்ணம் மக்கமா நகரத்தார்களுக்கு அனுப்பிவைத்தான். (அசு)

வந்த வாசக முணர்ந்து காபிர்கண்
முகம்ம தைப்பழுது பேசிய
நிந்த னைச்சின மொறுக்கி லார்தின
நிகழ்த்து நல்வழி மனங்கொளார்
தந்தி ரத்தினுயர் மன்னர் சொன்னமொழி
தன்னை யுந்நினைவி லெண்ணிலார்
செந்த ழற்குழிக ளேழு மாளமுறை
தேடி நன்னெறியை மூடினர்.

(இ-ள்.) அவ்வாறு அபூசுகை சென்பவனால் அனுப்பப்பட்டுத் தங்களிடத்தில் வந்துசேர்ந்த நிருபத்தினது வாசகத்தை அந்தக் காபிர்கள் அறிந்து நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் குற்றம்பேசிய நிந்தனையையுடைய கோபத்தை வெறுத்திலர்கள். பிரதிதினமும் கூறுநிற்கும் நல்ல மார்க்கத்திற்கு மனங்கொண்டிலர்கள். உபாயத்தினால் உயர்ந்தஅரசர்கள் சொல்லிய வார்த்தைகளையும் கருத்தில் நினைத்திலர்கள். செவந்த அக்கினியையுடைய நரகக்குழிக ளேழையும் ஆட்சிசெய்யும்வண்ணம் ஒழுங்கைத் தேடி நல்ல சன்மார்க்கத்தை மூடினர். (அஎ)

இன்ன வாறுமுரா ஞன காபிரிட
ராயி ருப்பவுமு கம்மது
முன்னு நன்னெறி நிறுத்து வேனெனு
முளத்தி னேடுதடு மாறிலா
தன்ன மன்னமட வார்க்கு மாடவர்
தமக்கு மற்றவர் தமக்குமே
வின்ன லற்றவிசு லாத்தி னேர்வழி
யினைக்கி லாதுற விளக்கினர்.

(இ-ள்.) இந்தப்படி விரோதமான அந்தக்காபிர்கள் இடராக இருக்கவும், நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நினையாநிற்கும் நல்ல சன்மார்க்கத்தை நிலையாக நாட்டுவேனென்று சொல்லும்இருதயத்துடன் தடுமாற்றமடையாது அன்னப்பட்சிபோலும் நடையையுடைய பெண்களுக்கும் புருஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பமற்ற தீனுல் இஸ்லாமென்னும்மார்க்கத்தினது ஒழுங்கான பாதையைத் தளராது மேலுறும்வண்ணம் விளக்கிக்காட்டினார்கள். (அஅ)

சிந்து ரத்திர ளடர்த்து நின்றதொரு
சிங்க வேறெனு முகம்மது
தந்தி ரத்தையு மவன்ற னேர்வழி
தனக்சி சைந்தவர்க டம்மையு
மந்த ரத்தின்வழி யாவி டற்கினியோ
ரைய மில்லையென வங்கவர்
புந்தி யிற்கருதி வேறு வேறுகொலை
பூணு நாளில்வர வோதுவாம்

(இ-ள்.) அப்போது அந்தத் திருமக்கமா நகரத்தையுடைய காபிர்களான அவர்கள் யானைக்கூட்டத்தை அடர்த்து நின்றதாகிய ஒப்பற்ற ஆண்சிங்கமென்று சொல்லும்முகம்மதினது உபாயத்தையும் அவனுடைய நேரான மார்க்கத்திற்குப் பொருந்தியவர்களையும் ஆகாயத்தினதுபாதையாக அனுப்புவதற்கு இனியொருசந்தேகமுமில்லையென்று மனதின்கண்நினைத்து வெவ்வேறாகியகொலைத்தொழிலிற் பொருந்தாநிற்கும் நாளில்வந்த வருகையை யாம்சொல்லுவாம்.

மதுவ ழிந்தொழுகு மரவ மாலைபுனை
வரைநி கர்த்தபுய வப்துல்லா
புதல்வ ராகியமு கம்ம துந்தனியோர்
போது நீடுகரு பாவடுத்
ததிவிதப் புதுமை மறைமொ ழிக்குமுத
லாதி யைத்தலை வணங்கியே
புதிய வேதமொழி கொடுபு கழ்ந்துநிலை
பொருந்தி யங்ஙன மிருந்தனர்.

(இ-ள்.) தேனானது வழிந்து ஒழுகாநிற்கும் குங்குமப்புஷ்பத்தினாலானமாலைகளைத் தரித்த மலைபோலும் தோள்களையுடைய அப்

துல்லா வென்பவர்களின் புத்திராகிய நாயகம் நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்ல மவர்களும் ஒரு தருணத்தில் ஏகமாக நீட்சியை யுடைய கஃபத்துல்லாவைநெருங்கி அதிக விதமான ஆச்சரியங்களை யுடைய வேதவாக்கியத்திற்குமுதன்மையாகிய ஆதிபான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவைத் தலையைக்குனிந்து சுஜூதிட்டு நூதன மாகிய புறுக்கானுல்அலீமென்னும் வேதவசனத்தைக்கொண்டு துதி த்து அவ்விடத்திற்றனே தரித்திருந்தார்கள். (சு௦)

கண்ட காபிர்களி லொருவ னோர்துகில்
 கரத்தி லொப்பற முறுக்கியே
யண்டர் நாயகமு கம்ம தின்றம
 தருங்க ழுத்துற விறுக்கினன்
விண்டி லாரெதிர் விழித்தி லாரதனை
 மெய்மை யோருமபு பக்கர்தா
மிண்டு வல்வினையி தென்று கண்டற
 விரைந்து பாலினி லடைந்தனர்.

(இ-ள்.) அவ்விதம் இருப்பதைக் கண்களினுற் பார்த்த காபிர்க ளிலொருவன் ஒரு வஸ்திரத்தை நிகரறும்வண்ணம் தனது கைகளி னுல் திரித்துத் தேவர்களுக்கும் நாயகமான நபிமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லமவர்களின் அருமையாகிய கழுத்திற் பொருந்து ம்படிப் போட்டு இறுக்கினன். அப்போது அந்நபிகள் பெருமானவர் கள் யாதொன்றும் பேசிலர்கள். மேலும் அவனை எதிராகப் பார்த் திலர்கள். அதை உண்மையைத் தெளியாநிற்கும் அபூபக்கர் சித்தீ குறலியல்லாகு அன்கு அவர்கள் தங்களின் கண்களினுற் பார்த்து இஃது வலிய பாவத்தொழிலென்று சொல்லி மிகவும் துரிதமாய் நெருங்கி அவர்களினிடத்திற் போய்ச் சேர்ந்தார்கள். (சுக)

மிடற்றி லுற்றதுகி றனைநெகிழ்த்துமிகு
 வினைகொ லைக்கபடர் தங்களை
யடுத்த டாதசில மொழியின் வேகமோ
 டடர்த்து விட்டெழின் முகம்மதி
னிடத் திருந்தொழு தெழுந்த பின்புட
 னெழுந்தி ருந்துதம தாவித
முடற் புகுந்தபடி மனைபு குந்தபி
 னுயர்ந்த தம்மனை யடைந்தனர்.

(இ-ள்.) அவ்வாறு போய்ச்சேர்ந்த அபூபக்கரவர்கள் கழுத்திற் பொருந்திய வஸ்திரத்தை நெகிழச்செய்து மிகுத்த சொலேத்தொழிலேயுடைய கபடர்களான அந்தக்காபிர்களை நெருங்கித் தகாதசில வார்த்தைகளினது வேகத்துடன் அடர்த்துவிட்டு அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்களி னிடத்தில் தங்கியிருந்து அவர்கள் தொழுது எழும்பின பிற்பாடு அவர்களுட னெழும்பித் தங்களின் ஜீவனானது தங்கள் சரீரத்தில் நுழைந்த வண்ணம் அவர்கள் வீட்டின்கண் போய் நுழைந்த பிறகு உயர்ச்சியுற்ற தங்களின் வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (கூஉ)

அன்றொ ழிந்துசில நாள கன்றபி
னனுதி தூதெனு முகம்மது
மன்ற றுன்றுமது மாலே நாற்றி யொளிர்
மணிதி கழ்ந்தககு பாவிடஞ்
சென்ற டுத்தரு கிருந்து மூதுரை
தெளித்த மாமறை வழிக்கொடே
யொன்று பட்டமன மங்க னஞ்சிறி
துணங்கி லாதுற வணங்கினர்.

(இ-ள்.) அன்றையத்தினம் போய்ச் சிலநாட்கள் கழிந்த பின்னர் அனுதியான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலென்று சொல்லும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் வாசனையானது நெருங்கநிற்கும் தேனையுடைய புஷ்பமாலேகளைத் தூக்கப்பெற்றுப் பிரகாசிக்கின்ற இரத்தினங்கள் விளங்கிய கஃபத்துல்லாவினிடத்திற்போய் நெருங்கி அதன் பக்கத்திலிருந்து முதிய வார்த்தைகளைத் தெளிக்கப்பெற்ற மகத்தான வேதநெறியைக் கொண்டு அவ்விடத்தில் ஒன்றுபட்ட தங்களின் மனமானது கொஞ்சமும் வாட்டமுறாது பொருந்தும்வண்ணம் ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவைத் தொழுதார்கள். (கூகூ)

தக்க நன்னெறி பிழைத்த பாவியபு
ஜகல்சை பாவொலிது தன்னுட
னுக்கு பாவுமுத்து பாவுமுடனுமை
யாவு மீனனு மாறுவு

யொக்க லோடவ னடைந்து நங்நபி
யொழுங்கு றுங்தொகை நோக்கியோர்
விக்கி னத்தினை நினைத்தொ ருத்தனை
விளித்து ஊரிடை விடுத்தனர்.

(இ-ள்.) அப்போது தகுதியான நல்லசன்மார்க்கத்தில் தவறப் பெற்ற பாவிகளாகிய அபூஜகிலும், சைபாவும், ஒலீதொடு உக்குபாவும், உத்துபாவும், அறிவீனனாகிய உமையாவும், ஈனனான உமாறுவுமாகத் தங்களின் பந்துக்களுடன் அந்தக் கஃபத்துல்லாவிற் போய்ச்சேர்ந்து நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது வரிசைபொருந்திய வணக்கத்தைக் கண்களினாற் பார்த்து மனசின்கண் ஒருதீமையை எண்ணி ஒருமனிதனைக் கூப்பிட்டு ஊரினது உள்ளிடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். (௬௪)

ஊரி னிற்குபுகுந் தோரொட்ட கத்தெலும்
புடற்கு டர்க்குருதி யூனுலம்
வாரி வந்தவன் முகம்ம தின்றனி
மணிப்பு றத்திடை படுத்தலும்
வேரி யங்கமுத லைம்பு லன்களும்
வெறுத்தொ டுக்கிய சுஜூதினிற்
பாரி டைப்படிதல் கண்டு தீனிலை
பகைத்த பாவிக ணகைத்தனர்.

(இ-ள்.) அவ்வாறு அனுப்பப்பட்ட காபிரான அவன் ஊரின் கண் புகுந்து ஒரு ஒட்டகத்தின் சரீரத்திலுள்ள எலும்பு, குடல், இரத்தம், தசையின் திரளையாகிய இவைகளை வாரிக்கொண்டு வந்து நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் ஒப்பற்ற அழகிய முதுகின்கண் செறித்தமாத்திரத்தில் அவர்கள் தங்களின் கஸ்தூரிவாசனையை யுடைய சரீரமுதல் பஞ்ச புலன்களையும் வெறுக்கப்பெற்று அடக்கிய சுஜூதில் பூமியின்கண் படிவதைத் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கநிலைமையை விரோதித்தபாவிகளான அபூஜகில் முதலிய அவர்களியாவர்களும் தங்களின் கண்களினாற் பார்த்துச் சிரித்தார்கள். (௬௫)

பிடரின் மீதுசுமை யுஞ்சு ஜூதியல்
பிரிந்தி டாதவ னுரைந்தது
மடைய லார்கணகை யோடு நின்றது
மகம்வெ தும்பவொரு காளைகண்

டிடைய ருதவசை கொண்ட பாவிக
ளிழைத்த பாதகமி தென்னாவே
யுடைய நாயனபி புயில்வி தம்மிட
மொதுங்கி நின்றிவை யுரைத்தனன்.

(இ-ள்.) அப்போது ஒரு இளம்பருவத்தையுடை வாலிபன் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது பிடரியின்மேல் சுமையையும், அவர்கள் சுஜூதி னெழுங்கை யகலாது அவ்விடத்தில் தங்கினதையும், சத்துராதிகளான அபூஜகில்முதலிய காபிர்கள் சிரிப்புடன் நிற்பதையும், தனது மனமானது வாடும் வண்ணம் பார்த்து இஃது நடுவில் முடிந்துபோகாத வசையைக்கொண்ட பாவிகளாகிய அந்தக் காபிர்கள் செய்த துரோகமென்று சொல்லி நாயனை அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவினுடையநபியாகிய அந் நாயகமவர்களின் புத்திரி பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களிடத்தில் வந்து விலகிநின்று இச் சமாச்சாரங்களைச் சொல்லினன்.

மாத ருக்கரசி பாத்தி மாவெனு
மடந்தை கேட்டுள மயக்குற
வீதி வாயிடை புகுந்து மின்னென
நடந்து மாமறை விளக்கிடுந்
தாதை வெங்கிட மிருந்த தைச்சிதறிச்
சரிவளைக்கைகொடு தனிதுடைத்
தேத முற்றமொழி காபி ரைச்சிறி
தெடுத்து ரைத்துமனை மேவினர்.

(இ-ள்.) பெண்களுக்கு அரசியானபாத்திமாறலியல்லாகு அன்ஹாவென்று சொல்லும் மடந்தையானவர்கள் அவன் அவ்வாறு சொல்லிய சமாச்சாரங்களைத் தங்களின் காதுகளினுற் கேள்வியுற்று மனமானது மயக்கமுறும்வண்ணம் வீதியினிடத்தில் நுழைந்து கட் பார்வைக்குத்தோற்றியும்தோற்ருதவிதத்தில் அதிசீக்கிரமாய் ஆகாயத்தின்கண் உதயமாய் மறையாநிற்கும்மின்னலைப்போல விரைவாய் நடந்து மகத்தான புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தை இவ்வுலகத்தின்கண் விளக்கும் தங்களின் தாதையாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது முதுகினிடத்தி லிருக்கப்பெற்ற சுமையைச் சிதறிக் கூட்டமான வளையல்களையுடைய தங்களின்

கையைக்கொண்டு ஒப்பறத் துடைத்து அந்தக் காபிர்களாகிய அபூஜகில் முதல்பேரை குற்றத்தைப் பொருந்திய சிறிது வார்த்தைகளை எடுத்துப்பேசி வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (கூஎ)

ஏக னைத்தொழு தெழுந்தி ருந்துபி
 ளிடும்புசெய் தவரை நோக்கியே
மோக முற்றதனி றப்பனு வுனது
 முனிவி னுலிவர்க டங்களை
வேக முற்றகொடு நரகி டைப்புகுத
 விடுதல் வேண்டுமென விரைவினன்
மாக நோக்கியிரு கரமெ டுத்துபது
 வாவுரைத்து நபி போயினர்.

(இ-ள்.) பின்னர் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஏகனுன ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவை வணங்கி எழுந்திருந்துத் தங்களுக்குத் துன்பத்தைச் செய்தவர்களான அந்தக்காபிர்களைப்பார்த்து யாவர்களும் விரும்பிய எங்களுடைய றப்பானவனே! உன்னுடைய ஒப்பற்ற கோபத்தினுல் இந்தக்காபிர்களை வேகத்தைப்பொருந்திய கொடிய நரகலோகத்தின்கண் புகுதும்வண்ணம் விடுதல்வேண்டுமென்று துரிதமாய் ஆகாயத்தைப்பார்த்து இரண்டு கைகளையு மெடுத்துப் பதுவாவென்னுப் சாபம் சொல்லிவிட்டுத் தங்களின் திசையைநோக்கிச் சென்றுர்கள். (அகூ)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வீணுரை பகர்ந்து மிடும்புக டொடுத்தும்
 வெவ்வினைக் கொடுங்கோலை நினைத்துங்
காணிலாப் புதுமை விளைத்தநா யகத்தை
 காபிர்கள் வெறுத்திடுங் காலங்
தூணினைத் துரும்பா நினைத்தென ஹாஷிம்
 ளுேன்றவி லக்கமென் ளுெருவன்
பூணிலாப் பவநோய் பூண்பது தனக்கே
 பொருவிலா தொருதொழி லெடுத்தான்.

(இ-ள்.) அந்தக் காபிர்கள் ஒருகாலத்திலும் காணுத அற்புதங்களைச் செய்த நாயகமான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அவ்வாறு வீணுன வார்த்தைகளைத் பேசியும் துன்

பங்களைப் பொருத்தியும் வெவ்விய செயலையுடைய கொடிய கொலைத்தொழிலை எண்ணியும் பகைத்திடுங் காலத்தில் ஹாஷீம் மக்களில் அக்கமென்று சொல்லு மொருவன் தூணைத் துரும்பாக நினைத்ததைப்போல அணியாத பாவமாகிய பிணியைத் தனக்கு அணிவதையுடைய ஒப்பற்றதான ஒருவேலையை எடுத்தான். (கூகூ)

இருவிழிக் கறுப்பு மொருபுறத் தொதுங்க
விதழ்கடை வாயிடைப் பிதுங்கத்
திருகுற முகத்தைச் சுரிப்பொடு வளைத்துத்
திகழ்தரு நாசியைச் சிலிர்த்துப்
பெருகிய கழுத்தி னரம்புகள் விறைப்பப்
பிளந்துவாய் நாநுனி புரட்டி
வரிவர வலித்து முகம்மதை நோக்கி
மனத்துறு திகழ்ச்சிசெய் தனனால்.

(இ-ள்.) இரண்டு கண்களிலு முள்ள கறுப்புகள் ஒருபக்கத்தில் ஒதுங்கவும், இரண்டு உதடுகளும் கடைவாயின்கண் பிதுங்கவும், முகத்தைத் திருகும் வண்ணம் சுரிப்புடன் வளைத்துப் பிரகாசியா நிற்கும் நாசியைச் சிலிர்க்கும்படி செய்துப் பெருக்கமுற்ற கழுத்தின் நரம்புகள் மரத்துநிற்க வாயைப் பிளந்து நாவினது நுனியைப் புரளச் செய்து வரியுண்டாகும் வண்ணம் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்து வலித்து மனத்தின்கண் பொருந்தாது நிந்தை செய்தான். (ஙா)

கதிர்விரிந் தொழுகு மெய்யெழி னபியைக்
காண்டொறுங் காண்டொறும் வலித்திட்
டெதிரெதிர் வருவன் விலக்குதற் கமையா
னிவ்வனஞ் சிலபக றிரிந்தான்
புதியவன் றாத ரிவன்றனை நோக்கிப்
பொருவிலாச் செவ்விதழ் திறந்து
பதிபெற வலித்திட் டிதனிலெண் மடங்காய்ப்
பழிப்பொடுந் திரிகுவை யென்றார்.

(இ-ள்.) பிரகாசமானது விரிவுற்றுஒழுகாநிற்கும் சரீரத்தினது அழகையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல

மவர்களைப் பார்க்கும் தடவையெல்லாம் அவ்வாறு வலித்துக்கொண்டு முன்னல் முன்னல் வருவான். விலக்கினலும் அடங்கமாட்டான். இந்தப் படியாகச் சிலபகல் வலித்துக்கொண்டு திரிந்தான். அப்போது புதிய ஆலத்தை யுடையவனுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதராகிய அங்நபிகள் பெருமானவர்கள் இந்த அக்கமென்பவனைப் பார்த்துத் தங்களின் ஒப்பற்ற செவந்த அதரங்களைத்திறந்து நீ இதில் எட்டுப்பங்காய் வலித்து நிந்தனையோடும் இவ்வுலகத்தில் பொருந்தும் வணணம் திரிகுவாயென்று சொன்னர்கள்.

பலித்தது நபிதங் திருமொழி யவன்பாற்
பதின்மடங் காயின விதழ்வாய்
வலித்தலுங் கண்கள் சிமிட்டலு முலகில்
வழங்கிலா வலிப்பெலாம் வலித்துச்
சிலிர்த்தது முகங்கண் டடுத்தவர் மனங்க
டிகைத்ததும் பெருங்குல மனைத்துஞ்
சலித்ததுந் தவிரா விடும்பினல் வருநோய்
படர்ந்தது வைகலுந் தழைத்தே.

இ-ள்.) அவ்விதம் சொல்லிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தெய்வீகமுற்ற வார்த்தையானது அவனிடத்திற் பலித்தது. அதனல் அவனுடைய உதடுகளும் வாயும் வலிப்பதும் கண்களைச் சிமிட்டுவதும் முகமானது இந்தவுலகத்தின்கண் வழங்காத வலிப்புகளனைத்தையும் வலித்துச் சிலிர்ப்பதும் அதைப் பார்த்து நெருங்கிய ஜனங்களின் மனமானது பயங்கர மடைவதும் அவனின் பெரிய குடும்பத்தார்க ளனைவர்களும் துக்கப்படுவதும் பத்துப் பங்காயின. அன்றியும், ஒழியாத இடும்பினல் உண்டான அந்நோயானது பிரதிதினமும் ஓங்கிப்படர்ந்தது.

பெறுமவ ரிடத்து மனைவிதன் னிடத்தும்
வலிப்பது தவிர்ந்திலன் பெரியோர்
மருகெதிர்ப் படினு முகத்தெதிர் நோக்கி
வலித்திட லொழுத்திடான் புதியோர்
சிறுவர்கள் காணி லெவ்விட மனைத்துஞ்
சிதறியே வெருவிடத் திரிவன்
குறைவிலா நபியைப் பழித்தநிந் தனையாற்
குவலயம் பழித்திடத் திரிந்தான்.

(இ-ள்.) மேலும், அவன் தன்னை யீன்றவர்களான தாய் தந்தையர்களிடத்திலும் தனது நாயகி யிடத்திலும் வலிப்பதை யொழிந்திலன். தெருவின்கண்பெரியோர்கள் எதிர்ப்பட்டாலும்அவர்களின் முகத்தை எதிராய்ப்பார்த்து வலிப்பதைத் தவிர்த்திலன். தன்னைப் புதிய மனிதர்களும் சிறிய பாலியர்களும் கண்டால் பயந்து எல்லா விடங்களிலும் சிதறும் வண்ணம் திரிவான். இவ்வாறுகக் குறைவற்ற நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நிந்தித்த நிந்தனையால் இவ்வுலகமானது தன்னை நிந்தித்திடும்படி திரிந்தான்.

குருநெறி யவரைக் காண்டொறும் வலிப்பன்
கோயிலிற் றேவத மிடத்திற்
சிறசினை வளைத்து முகஞ்சுளித் திருகண்
சிமிட்டுவ தடிக்கடி மறவான்
வருநெறி பிழைத்த பாவிகள் குலமும்
வணங்கிய புத்துக ளனைத்துந்
தருநபி பழித்துக் காட்டுதற் கிவனோர்
சாட்சியிற் றலைமைய னானன்.

(இ-ள்.) அன்றியும்,குருவினது முறைமையை யுடையவர்களைப் பார்க்குந் தோறும் வலிப்பான். கோயிலின் தேவதங்களி னிடத்தில் தனது தலையை வளையச்செய்து முகத்தைச் சுழித்து இரண்டு கண்களையும் சிமிட்டுவதை அடிக்கடி மறக்கமாட்டான். ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவால் வராநிற்கும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தில் தவறிய பாவிகளான காபிர்களின் கூட்டத்தையும் அவர்கள் தொழுகின்ற விக்கிரகங்க ளெல்லாவற்றையும் கற்பகத்தருவை நிகர்த்த நாயகம் நபிமுகம் மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நிந்தித்துக் காட்டுவதற்கு இந்த அக்கமென்பவன் ஒப்பற்ற சாட்சியில் தலைமைத்தனத்தை யுடையவனாயினன். (௱சு)

மருந்தினன் மணியான் மந்திரத் தொழிலான்
மாறிலா மாயரோ யதனாற்
றிருந்திய மதிகெட் டங்கமும் வேருய்த்
திரிந்தவ னாட்குநாட் டேய்ந்தான்
பருந்தெழுங் கதிர்வேன் முகம்மதை யிகழ்ந்தோன்
படும்வர லாற்றையு மறிந்து
மிருந்தகா பிர்களி லொருவனுண் மதத்தா
லிடதுசெங் கரங்கொடு புசித்தான்.

(இ-ள்.) அன்றியும், அந்த அக்கமென்பவன் ஔஷதத்தினுலும் தருமமுதலிய வைகளைச் செய்து அதனுலுண்டாகும் நன்மையினு லும் மந்திரச் செயலினுலும் மாருத மாயத்தைக் கொண்ட அப்பி ணியினுல் செவ்வையுற்ற தனது புத்தியும் பழுதாகிச் சரீரமும் வேருகத்திரிந்து நாட்குநாள் மெலிவையடைந்தான். பருந்துகள் ஆகாயத்தின்கண் எழாநிற்கும் பிரகாசத்தைக் கொண்ட வேலாயுத த்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம வர்களை நிந்தித்த அவன்படுகின்ற வரலாற்றையு முணர்ந்து மிருக் கப் பெற்ற காபிர்களி லுள்ள ஒருவன் மனத்தின்கண் பொருந்திய செருக்கினுல் செவந்த இடது கைகையைக் கொண்டு சாப்பிட்டான்.

போனக மருந்தாக் கரத்தினு லமுது
புசித்தவன் றனையெதிர் விழித்து
வானநா யகநன் னெறிமுகம் மதுவும்
வலக்கரங் கொடுபுசித் திடுமென்
றீனமற் றுரைப்ப விடருறு மொழியா
யிடக்கரம் வழங்குவ தலது
தேனவிழ் தொடையாய் வலக்கரம் வழங்கா
தெனவவர் திருமொழி மறுத்தான்.

(இ-ள்.) அன்னத்தைச் சாப்பிடாத இடதுகையினுல் அன்னத் தைச் சாப்பிட்ட அந்த மனிதனைச் சுவர்க்க லோகத்தின் நாயகமா கிய நல்லசன்மார்க்கத்தை யுடைய நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் எதிராகக் கூப்பிட்டு அழிவில்லாது வலது கையை க்கொண்டு சாப்பிடுமென்றுகூற; அவன் துன்பத்தைப் பொருந்திய வார்த்தைகளாகத் தேனுனது அவிழப் பெற்ற மலர்மாலை யணிந்த தோள்களை யுடையவர்களே! எனக்கு இடதுகை வழங்குவதே யல் லாமல் வலதுகை வழங்காதென்று சொல்லி அந்நபிகள் பெருமா னவர்களின் தெய்வீகமுற்ற வார்த்தைகளை மறுத்தான். (ாசுு)

வலிபெற வழங்கும் வலக்கரம் வழங்கா
தெனமறுப் படிறுரைத் தவனைக்
கலியென நினைத்துக் கவிதழ் திறந்தெக்
காலமு முனதுரைப் படியே.

நிலைபெற நிலத்தி லிருப்பது நிசமென்
　　றுரைத்தனர் நெடுமுடி யாதந்
தலைமுறைப் பெயரின் முதன்மணி விளக்காய்த்
　　தருகதிர் நபிமுகம் மதுவே.

(இ-ள்.) வலிமை பெறும் வண்ணம் வழங்காநிற்கும் வலது கையைவழங்கா தென்று குற்றத்தை யுடைய பொய்மையான வார்த்தைகளைச் சொல்லிய அவனை வஞ்சகனென்று நெடியகிரீடத்தைப் பெற்ற மூலபிதாவான நபி ஆதமலைகிஸ்ஸலா மவர்களின் தலைமுறையையுடைய பேர்களின் முதன்மையை யுடைய இரத்தினத் தீபமாகத் தராநிற்கும் பிரகாசத்தைக் கொண்ட நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் தங்களின் மனசிலெண்ணிப் பிளவை யுடைய இருவு தடுகளையும் திறந்து நீ உனது சொல்லின் வண்ணம் எந்தக்காலமும் நிலைமை பெறும்படி இந்தப் பூமியின்கண் இருக்கப் பெறுவது சத்தியமென்று சொன்னார்கள்.

அடங்கலர்க் கரியா யுதித்தநங் நபிநா
　　ரறைந்தசொன் மறுத்தவன் வலக்கை
முடங்கில சிறிது நீண்டில வுணர்வு
　　முழுதினு மிலதுகெட் டொடுங்கி
வடங்கொள்வெம் முலையார் நகைத்தரு வருப்ப
　　வருந்தினும் வாய்க்குத வாம
லிடங்கொளம் புவியு ளோக்குநர்க் கிழிவா
　　யிணங்கிலா தொழிந்திருந் ததுவே.

(இ-ள்.) சத்துராதிக ளென்னும் யானைகளுக்குச் சிங்கமாக அவதரித்த நமது ஆண்டவர்களான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சொல்லியவார்த்தைகளை மறுத்தவனாகிய அந்தக் காபிரின் வலது கையானது கொஞ்சமும் மடங்கிலது அன்றியும், நீண்டிலது. ஆபரணங்களைக் கொண்ட வெவ்விய முலைகளை யுடைய பெண்கள் சிரிப்புற்று அருவருக்கவும் முழுவதும் உணர்ச்சி யில்லாது பழுதாகிச் சுருங்கி எதையாயினும் சாப்பிட்டாலும் அவ்வஸ்து வானது வாய்க்குஉதவாமல் இடங்கொண்ட அழகியஇப்பூமியினகம் பார்க்கப்பட்டவர்களுக்கு இணங்காது நிந்தையா யொழிந்திருந்தது. (ளஅ)

மண்ணினிற் செழுந்தீன் பயிர்நலந் தழைக்க
வளர்த்தமா மறைநபி நயினர்
கண்ணுடைக் கரும்பின் சுவையினு மினிய
கட்டுரை நெறிக்கலி மாவை
யுண்ணிறை யமிர்த மெனவறி யாம
லொடுங்கிலா தெதிரிடர் பகர்ந்திட்
டெண்ணிறந் தனையர் சிலபக லிவர்போ
லிடும்பைநோய் சுமந்திருந் தனரே.

(இ-ள்.) இப்பூலோகத்தின்கண் செழிய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கப் பயிரினது நலமானது தழைக்கும் வண்ணம் வளரச் செய்த மகத்தாகிய வேதங்களினது நயினரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களி னிடத்திற் பொருந்திய கரும்பினது மதுரத்திலும் அதிக மதுரத்தைக் கொண்ட உறுதியாகிய வார்த்தைகளின் முறைமையையுடைய "லாயிலாஹ இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாஹி" என்னுங் கலிமாவைமனசின்கண் நிறையப்பெற்ற அமுதமென்று தெரியாமல் அடங்காது முன்னாக இடர்களைக் கூறி அளவற்றவர்கள் இவர்களைப்போல வருத்தத்தைக்கொண்ட நோய்களைச் சிலகாலம் தாங்கினர்கள். (௱கூ)

மறைபடாப் புகழை யுலகினில் வளர்த்து
வருமொரு துரையபுல் காசிங்
குறைபடா மனமும் வாக்குமொன் றாகப்
புகழ்ந்திடுங் குரிசிறன் நபிக்கு
நிறைபட வடுத்த கிளையனைத் தையுந்தீ
னிலைபெற நிறுத்திடு மென்ன
விறையவ னுயத் திறங்கிய தெனவங்
கிருந்திறங் கினர்ஜிபு ரீலே,

(இ-ள்.) அப்போது இவ்வுலகத்தின்கண்மறைவுபடாத கீர்த்தியை வளரும்வண்ணம் செய்த ஒப்பற்ற அதிகாரியாகிய இந்நூலின் கொடைநாயகர் அபுல் காசிம் மரைக்காய ரவர்கள் தங்களின் குறையாத இருதயமும் வார்த்தையு மொன்றாகத் துதித்த குரிசிலான நமது நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குப் பூரணமாக நெருங்கியதங்களின் பந்துக்களெல்லாவரையும் தீனுல்

இஸ்லாமென்னும் மார்க்கத்தினது நிலைமையைப் பெறும்படி நிற்கச் செய்யுங்களென்று யாவற்றிற்கும் இறைவனுகிய ஜல்லஜலாலகு வத்தஆலாவின் ஆயத்தென்னும் வேதவசன மிறங்கிற்றென்று ஆகாய லோகத்தின் கண்ணிருந்து ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் இப்பூலோகத்தின்கண் இறங்கினர்கள். (௱கo)

திருமறை மொழியொன் றுரைத்துவிண் ணவர்கோன்
சேணிடை யுறைந்தபின் மாரு
விரைகிடங் தருந்தேன் றுளித்தகுங் குமத்தார்
விளங்கிய புயவரை துலக்க
வருமுதன் மதமா கரியெனத் திருந்து
மனத்திடை களிப்பொடு மகிழ்ந்து
தருமுகிற் கவிகை யிலங்கிடச் சிறந்த
சபாமலை யிடத்தினிற் சார்ந்தார்.

(இ-ள்.) அவ்வாறு இறங்கிய அமரேசுவரரான ஜபுறயீல்அலைகிஸ் ஸலா மவர்கள் தெய்வீகம் தங்கிய வேதவாசக மொன்றைச் சொல்லி ஆகாயத்தின்கண் சென்று தங்கிய பிற்பாடு வாசனையானது நீங்காது கிடக்கப்பெற்று அரிய மதுவைத் துளிக்கும்படி செய்யும் குங்குமப் புஷ்பத்தினுலான மலர்மாலை பிரகாசிக்கும் தோள்களாகிய மலைகள் இலங்கும் வண்ணம் வராநிற்கும் முதலான நபிமுகம்மது சல்லல் லாகு அலைகி வசல்லமவர்கள் மதங்களை யுடைய பெருமை பொருந் திய யானையைப்போலச் செவ்வையாகிய தங்களின் மனசின்கண் சந் தோஷத்தோடு மகிழ்ச்சி யடைந்து மேகங்கள் தருகின்ற குடையா னது ஒளிரும்படி சிறப்பமைந்த சபா மலையினது இடத்திற்போய்ச் சேர்ந்தார்கள். (௱கக)

உடுப்புறம் பொதிந்த மதிதவழ் மலையி
னுச்சியி னடுமிசை யுறைந்து
கடுப்பறக் கொடுஞ்சொற் பிறந்திடா தமிர்தங்
கனிந்தவா யிதழ்திறந் தெவர்க்கு
மெடுப்பரும் புதுமை யுண்டென வினத்தோ
ரியாரையு மினிதுற நோக்கிக்
கொடுப்பதற் கெழுமா முகிலினம் பொருவாக்
குருநெறி முகம்மது விளித்தார்.

(இ-ள்.) அவ்விதம் போய்ச்சேர்ந்த ஈவதற் கெழாநிற்கும் பெருமைதங்கிய மேகக் கூட்டங்களும் ஒப்பாகாத குருநெறியை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் பக்கங்களில் நட்சத்திரங்களினால் பொதியப் பெற்ற சந்திரனுனது தவழாநிற்கும் அந்த மலையினது முகட்டின் நடுவில் தங்கிக் கோப மறும்வண்ணம் கொடுமையையுடைய வார்த்தைக ளுண்டாகாமல் அமிர்தமானது கனியப்பெற்ற தங்களின் வாயினது அதரங்களைத்தி றந்து யாவர்களுக்கும் தாங்குதற்கரிய ஓரற்புத மானது உண்டுமெ ன்று சொல்லித் தங்களின் குடும்பத்தார்கள் எல்லாவரையும்பார்த்து இனிமை யுறும்படி கூப்பிட்டார்கள். (௩௧௨)

கல்லகத் துறைந்து முகம்மது விளித்த
கட்டுரை கேட்டலு மினத்தோர்
பல்லருஞ் செறிந்து திரளொடு மெழுந்து
பார்த்தறி குவமென நடந்து
செல்லிடம் பிரியாக் கருமுகிற் கவிகை
நீழலிற் சேட்டிளங் கதிர்விட்
டெல்லவ னெழுந்த தெனநபி யிருந்த
விடத்தினி லுறைந்தன ரன்றே.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர் கள் அவ்வாறு அந்தச் சபாமலையின்கண் தங்கிக் கூப்பிட்ட உறுதி யான வார்த்தைகளை அவர்களின் பந்துக்களாகிய மக்கமா நகரத்தி லுள்ள காபிர்கள் தங்களின் காதுகளினுற் கேள்வியுற்ற மாத்திரத் தில், பலபேர்களும் நெருக்க முற்றுத் தக்களின் கூட்டத்தோடும் எழும்பி முகம்மது சொன்ன அற்புதத்தை நாம்போய்க் கண்டு அறி குவோமென்று செல்லி நடந்து சென்று செல்லா நிற்கும் இடங்க ளெல்லாவற்றிலும் நீங்காத கரிய மேகக்குடையினது நிழலில் அழ கிய இளங்கிரணங்களை நாலுபக்கங்களிலும் விட்டுச் சூரியனுனவன் எழும்பினதைப்போன்ற அங்நபிகள் பெருமானவர்கள் இருந்த இட த்தின்கண் தங்கி யிருந்தார்கள். (௩௧௩)

காரண முளதென்றுரைத்தெமை விளித்த
கருத்தறி கிலமெனக் கடிதி
னூரவ ருரைப்ப வானவ ருரைத்த
வுரையினை யுளத்தினி லிருத்தித்

தாரணிப் புறத்திற் றெறும்படை திரண்டு
வந்தது தார்க்கிட ரெனயா
னீரமுற் றுரைப்ப வெவர்க்குமுண் மையதா
யிருப்பதோ வெனநபி யிசைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் தங்கியிருந்த ஊரவர்களான அந்தக் காபிர்கள் எங்களை விரைவாய் ஓரற்புத முண்டுமென்று சொல்லிக் கூப்பிட்ட தங்களின் கருத்தை யறிந்திலோம். அது யாது? என்றுகேட்க, அதற்கு நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வானவரான ஜபுறயீற் அலைகிஸ்ஸலா மவர்கள் சொல்லிய வார்த்தைகளை மனசின்கண் இருக்கும்படிசெய்து நான் அன்புற்று நமது உறவினர்களுக்கு இடராக நமது பூமியாகிய இந்தத் திருமக்கமா நகரத்தின் பக்கத்தில் பகைமையை யுடைய ஒரு சேனையானது கூட்டமுற்று வந்ததென்று சொன்னால் அது யாவர்களுக்கும் சத்தியமாய் இருக்கக் கூடியதா? என்று கேட்டார்கள்.

உரைத்தசொல் லெவர்க்கு முறுதிநின் னயமென்
றனைவரு முரைத்திட மகிழ்ந்து
நிறைத்தகுங் குமத்தார்ப் புயநபி யினியா
னிகழ்த்திய மார்க்கநன் னெறியைத்
தரைத்தலத் தீமான் கொள்ளுதற் கிசையாத்
தரம்படைத் தவரனை வரையும்
கரைத்திட நனிய தாபெனுங் கொடிய
கடும்பிணி பிடித்திடு மென்றார்.

(இ-ள்.) அவ்வாறு அவர்கள் கேட்கவே, அங்கு தங்கி யிருந்த காபிர்க ளெல்லாவர்களும் நீங்கள் சொல்லும் வார்த்தைகள் எங்கள் யாவர்களுக்கும் உண்மையான நிச்சயந்தானென்று சொல்ல வரிசையாக்கப்பட்ட குங்குமப் புஷ்பத்தினாலான மலர்மாலை யணிந்த தோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் மகிழ்ச்சி யடைந்து யான் இந்தப் பூலோகத்தின்கண் கூறிய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தினது நன்மை பொருந்திய பாதையை ஈமான் கொள்ளுவதற்கு உடன்படாத முறைமையைப் படைத்தவர்க ளெல்லாவரையும் இனிக் கரைக்கும்வண்ணம் மிகுத்த அதாபென்று சொல்லும் கொடிய கடுமையான நோயானது பிடிக்குமென்று சொன்னார்கள். (ாகரு)

கூறிய மொழிகேட் டபூலகு பெனுமக்
 கொடியவ னிருவிழி செவந்து
மாறுபட் டிதற்கோ குலத்தொடுங் கெடுவாய்
 வரவழைத் தனையெனச் சீறித்
தேறிலா துறக்கி யிருகரம் புதைப்பச்
 செறிதரு பூழ்தியை வாரி
யீறிலான் றூதை முகம்மதைச் சிறிது
 மெண்ணிலா தெதிர்ந்துநின் றெறிந்தான்.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு சொல்லிய வார்த்தைகளை அவர்களின் பெரிய தந்தையர்களி லொருவனுன அபூலஹபென்று சொல்லும் அந்தக்கொடுமையை யுடையவன் தனது காதுகளினுல் கேள்வியுற்று இரண்டு கண்களும் செவந்து அவ்வார்த்தைகளுக்கு மாறுபட்டுக் "குடும்பத்தோடும் நாசமடைவாய்" இதற்காகவா? எங்களை இங்கு வரவழைத்தாய்? என்று சொல்லிக் கோபித்து மனங்தேறாது அதட்டி இரண்டு கைகளும் புதையும் வண்ணம் பூமியின்கண் கிடக்கப்பெற்ற செறிந்த பூழ்தியை வாரி முடிவற்றவனுன அல்லாகு சுபுகானகு வத்தஆலாவின் றசூலானவர்களை. முகம்மதானவர்களை, மனசின்கண் கொஞ்சமும் நினையாமல் எதிர்த்து நின்று வீசினுன். (௱௧௬)

அடர்ந்தெதிர்ந் துரைத்த கொடியவ னபூல
 கபுபுவி யிடத்துமா கிறத்து
மிடைந்திடும் பெருங்கே டுடையவ னிவனே
 யென்னுமப் பொருளுரை பிறப்பத்
துடங்குதப் பத்ய தாவெனத் தோன்றுஞ்
 சூறத்தொன் றிறங்கிய துலகிற்
கிடந்தமும் மறையுந் தெரிதரப் புகழ்ந்த
 கிளரொளி முகம்மது நபிக்கே.

(இ-ள்.) அப்போது இவ்வுலகத்தின்கண் கிடக்கப்பெற்ற தௌறுத்து; இஞ்சீல், சபூறென்னு மூன்று வேதங்களும் அறியும் வண்ணம் துதித்த ஓங்காநிற்கும் பிரகாசத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குத் தங்களை எதிர்த்து நெருங்கிப் பேசிய கொடியவனுன அபூலஹ பென்பவனை இப்பூமியின்

கண்ணும் ஆகிறத்தின் கண்ணும் வசக்கேடுற்றிடும் பெரியகேட்டை யுடையவன் இவன்தானென்றுசொல்லும் அந்தஅர்த்தத்தினதுவச னமான்று உண்டாகும்படி துடங்குகின்ற "தப்பத்யதா" வென்று உதயமாகிய ஒரு சூறத்தானது இறங்கினது. (கக்ள)

சூறத்தின் பொருளை முகம்மது முரைப்பத்
துணுக்குறு துனதுரை யுலகிற்
றேறத்துன் புறுங்கே டெனக்குவந் தடைந்தாற்
றேடிய திரவிய மனைத்து
மீறத்தந் திரருக் களித்திட ரதனை
விரைவினிற் போக்குவ னென்னப்
பேறத்த மிலசொ லுரைத்தன னெவர்க்கும்
பெருங்கொலைப் பிழைவிளைத் திடுவான்.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர் களும் அவ்வாறு இறங்கிய சூறத்தினது அர்த்தத்தைச் சொல் லவே, யாவர்களுக்கும் பெரிய கொலையாகிய குற்றத்தை விளைக்கப் பட்டவனான அவ்வபூலஹ பென்பவன் பயப்படாது உனது வார்த் தையை இந்த உலகத்தில் தேறும் வண்ணம் எனக்கு வருத்தம் பொருந்தும் கேடானது வந்து சேர்ந்தால் நான் சம்பாதித்த பொரு ள்க ளெல்லாவற்றையும் அதிகமாய்த் தந்திரர்களுக்குக் கொடுத்து அந்த இடரைச் சீக்கிரத்தில் இல்லாமற் செய்வேனென்று பேரு னது முடிவிலு மில்லாத சொல்லாகச் சொல்லினன். (ரகஅ)

இறையவன் றூதர்க் கிசைத்தசொற் கெதிரா
யிசைத்திடு மபூலஹ பென்போ ...
னிறைதரும் பொருளு மிழந்துத வாம
னெட்டுடற் பெருந்தலை யரவ
முறைதரு நரகம் புகுவனென் றுயத்
திறங்கிய துலகெலாம் விளங்க
மறைமொழி பயிற்றுஞ் செவ்விதழ் மணிவாய்
முகம்மது மனமகிழ் பெறவே.

(இ-ள்.) அவன் அவ்வாறு சொல்லவே யாவற்றிற்கு மிறைவ னாகிய ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவானவன் தனது றசூலான நபிகள் பெருமானவர்களுக்குச்சொல்லியவார்த்தைகளுக் கெதிராகச் சொல்

லும் அபூலஹபென்பவன் தனது பெருகிய பொருள்களையும் இழக்கப்பெற்று யாதொன்றுக்கும் உதவாமல் நெடிய சரீரத்தையும் பெரிய தலையையுமுடைய சர்ப்பங்கள் தங்கிய நரகலோகம் போய்ச் சேருவானென்று எல்லாவுலகங்களும் விளங்கும் வண்ணம் வேதவசனங்களைப் பயிற்று நிற்கும் செவந்த அதரங்களைக் கொண்ட அழகிய வாயையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனமகிழ்ச்சி பெரும்படி ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் பக்கத்தில் நின்றும் ஆயத்தென்று சொல்லும் ஒரு வேதவசன மிறங்கிற்று. (௱கக௬)

அவனியிற் கேடு முடிவினி னரகு
மடைகுவ னபூலகு பெனவே
செவியுற வாயத் திறங்கிற்றென் றுரைத்த
வுரைக்குஞ்சேர் தருமின மனைத்துங்
கவினற வதாபென் றொருபிணி பிடிக்கு
மென்றகட் டுரைக்குமே கன்றித்
தவிர்கிலா வயிர மனத்தராய்க் காபிர்
தனித்தனி கொலைத்தொழி னினைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு அபூலஹ பென்பவன் பூலோகத்தின்கண் கேட்டையும் கடைசியில் நரகலோகத்தையும் பெறுவா னென்று ஆயதென்னும் ஒருவேதவசன மிறங்கிற்றென்றுநாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அங்குற்ற அனைவர்களின் காதுகளிலும் பொருந்தும் வண்ணம் கூறிய வார்த்தைகளுக்கும், அவனைச்சேர்ந்த இனத்தவர்களெல்லாவரையும் அழகானதற்றுப் போகும்படி அதாபென்று சொல்லும் ஒப்பற்றநோயானது பிடிக்குமென்று சொல்லிய உருதிவாக்கியத்திற்கும், அந்தக்காபிர்கள் கோபித்து ஒழியாத வயிரத்தைக் கொண்ட மனத்தை யுடையவர்களாய்த் தனித்தனியாகக் கொலைத்தொழிலை இருதயத்தின்கண் எண்ணினார்கள். ()

கலிவிருத்தம்.

தேன்தரு மினியசொற் செவ்வி நந்நபி
யாய்ந்தசொ லுணர்ந்திசு லாத்தி லாகிய
மாந்தரைப் பிடித்தக மறுக்க முற்றற
வீய்ந்திட விடர்பல விளைத்திட் டாரரோ!

(இ-ள்.) அவ்விதம் எண்ணிய அந்தக்காபிர்கள் தேனினது மதுரத்தைப் போலும் தராநிற்கும் மதுரத்தைக்கொண்டவார்த்தைகளை

யுடைய அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தேற்ச்சியுற்ற வசனங்களைத் தெளிந்து தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்திலான மனிதர்களைப் பிடித்து மனமானது சுழ ற்றியடைந்து அற்றுப்போகும் வண்ணம் இறக்குப்படி பலதுன்பங் களைச் செய்தார்கள். (ாஉக)

வீசுவர் சிலர்தமை விடுத்து நன்மொழி
பேசுவர் சிலர்தமைப் பிடித்துப் புன்மொழி
யேசுவர் சிலர்தமை யிரண்டு பட்டுறும்
பூசலுக் கடிப்படை புணர்த்து வார்சிலர்.

(இ-ள்) அன்றியும், அந்தக் காபிர்களில் சிலபேர்கள் இஸ்லா மானவர்களில் சிலபேர்களைப் பிடித்து அடிப்பார்கள். சிலபேர்கள் அவ்விதம் அடிப்பதைத் தள்ளிச் சிலபேர்களைப் பிடித்து நல்லவார் த்தைகளைச் சொல்லுவார்கள். சிலபேர்கள் சிலபேர்களைப் பிடித்துக் கீழ்மையான வார்த்தைகளினால் திட்டுவார்கள். சிலபேர்கள் இரண் டுபட்டுப்பொருந்தாமிற்கும் கலகத்திற்கு அடிப்படையை உண்டா க்குவார்கள், (ாஉஉ)

மாயவன் முகம்மது வகுத்த மார்க்கத்தி
லாயின னிவனென வடுத்தம் மாறையுங்
கூயவன் றந்தையா சிறையும் கோதிலாத்
தாய்சுமை யாவையுந் தமக்கை தன்னையும்.

(இ-ள்) அன்றியும், அவர்கள் இவன் வஞ்சகத்தை யுடையவ னன முகம்மதென்பவன் வகைப்படுத்திய மார்க்கத்தி லானவனெ ன்றுசொல்லி நெருங்கி அம்மா றென்பவறையும் அவரின் தகப்பனார் ஆசிறையும் குற்றமற்ற அவரின்தாய் சுமையாவைவும் அவரின் தம க்கையையும் கூப்பிட்டு. (ாஉரு)

பிடித்தனர் சினத்தொடிந் நான்கு பேரையு
மடித்தன ரிருகர மழுந்த வங்கமுந்
துடித்திடக் கயிற்றினிற் சுருக்கிப் பாதலம்
வெடித்திடச் சுடும்பரல் வெளியி லாக்கினர்.

(இ-ள்.) கோபத்தோடு இந்நான்கு பேர்களையும் பிடித்து அடித் தார்கள். இரண்டுகைகளும் அழுந்தவும் சரீரமும் மனமும் துடித்

திடவும் கயிற்றினால் சுருக்கிக்கட்டிப் பாகலமானது பிளந்திடும்வண்ணம் சுடாநிற்கும் பரற்கற்களை யுடைய வெயிலின்கண் ஆகும்படி செய்தார்கள். (௱௨௪)

ஏங்குவ ரிரங்குவ ரிருக ணீர்விழத்
தேங்குவ ரடிக்கடி தீனை மாறியு
நீங்குவ தில்லென நினைத்திட் டுள்ளகம்
வீங்கிட நெட்டுயிர்ப் பெறிந்து வீழ்குவார்.

(இ-ள்.) அவ்விதம் அவர்கள் ஆகும்படி செய்யவே அந்நான்கு பேர்களும் சத்தமிடுவார்கள். இரண்டு கண்களிலுமுள்ள கண்ணீரானது கீழே விழும்வண்ணம் அழுவார்கள். அடிக்கடிப் பயப்படுவார்கள், தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை யொழிந்தும் நீங்குவதில்லையென்று மனதின்கண் எண்ணி வீங்கும் வண்ணம் பெருமூச்செறிந்து பூமியில் விழுவார்கள். (௱௨௫)

தங்கிய கதிரவன் றழலின் மெய்யொளி
மங்கியுள் ளீரலும் வறந்து தீய்ந்திடப்
பங்கிகள் பூழ்தியுற் பதிய மூட்டிய
வங்கியிற் கிரிமியொத் தறிவு போக்கினர்.

(இ-ள்.) அன்றியும், தங்காநிற்கும் சூரியனின் வெப்பத்தினால் சரீரத்தின் பிரபையானது மழுங்கப்பெற்று அகத்தின் கண்ணுள்ள ஈரலும் காய்ந்து கரிந்து உரோமங்கள் புழுதியிற் பதியும்படி மூட்டப்பெற்ற நெருப்பினது புழுவை நிகர்த்துத் தங்களின் புத்தியையும் போக்கடித்தார்கள். (௧௨௬)

வேனலிற் கிடந்துடல் வெதும்பிச் செவ்வரி
பானலத் தருவிநீர் பரப்பி யுள்ளுடைந்
தூனென வியர்ப்பெறிந் துதிர நந்நபி
தீனிலை மறுத்திலர் செவ்வி யோர்களே.

(இ-ள்.) அவ்வாறு போக்கடித்த அழகை யுடையவர்களான அந்நான்கு பேர்களும் வேனலின்கண் கிடக்கப்பெற்றுச் சரீரமானது வாடிச்செவந்த இரேகைகள் படர்ந்த நீலோற்பலமாகிய இருகண்களென்னும் அருவியினது ஜலத்தை எல்விடங்களிலும் பரவச்

செய்து மனமானது தளர்வடைந்து நிணத்தைப்போல வியர்வையை வீசிச் சொரிந்தும் நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகி வசல்ல மவர்களின் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை நீத்திலர்கள். (கஉஎ)

உறுக்கினர் செழுங்கர முரத்தொ டொன்றவே
யிறுக்கின ரடிக்கடி யெடுத்த தீவினை
முறுக்கின ரல்லது மூட்டுந் தண்டனைக்
குறுக்கின ரிலேக்கொலேக் கொடுமை யாளரே.

(இ-ள்.) கொலேயினது கொடுமையையுடையவர்களான அந்தக் காபிர்கள் அவ்வாறு இருக்கும் அங்நால்வர்களேயும் அதட்டி அவர்களின்செழிய கைகள் மார்போடு பொருந்தும் வண்ணம் இறுகச் செய்துகொடிய செயல்களே அடிக்கடி முறுக்கினர்களே யல்லாமல் அவர்கள்மூட்டாநிற்கும் ஆக்கினையைக்குறைத்தார்களில்லர். (கஉஅ)

நன்னிலே கெடுமவர் நடத்தும் வல்வினை
யின்னல்கண்டெழினபி யிடருற் றுரோடு
மன்னிய துயரினேப் பொருத்த மாட்சியாற்
பொன்னுல குமக்கென வுரைத்துப்போயினர்.

(இ-ள்.) அப்போது அழகிய நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலேகிவசல்லமவர்கள் நல்ல நிலேமையானது கெடப்பெற்ற அந்தக் காபிர்கள் அவ்வாறு நடத்தாநிற்கும் கொடிய செயலேப்பார்த்து அத் துன்பத்தைக் கொண்ட அங்நால்வர்க ளோடும் நீங்கள் பொருந்திய வருத்தத்தைப் பொறுத்துக் கொண்ட பெருமையினல் உங்களுக் குச்சொர்க்க லோகமென்று சொல்லிவிட்டுப் போயினர்கள். (கஉகூ)

மண்ணிடை கணவனே நோக்கி மைந்தனே
யெண்ணுற நோக்குவ ளிதயம் வாடுமப்
பெண்ணினே நோக்குவள் பெய்யுஞ் சேந்தழல்
விண்ணினே நோக்குவள் வீடு நோக்குவாள்.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் போகவே அங்நால்வர்களி லொருவரான சுமையாவென்பவர் இப்பூமியின்கண் தமது நாயகராகிய ஆசிரென்பவரைப் பார்த்துக் கவலேயானது பொருந்தும் வண்ணம்தமது மகன் அம்மாறென்பவரைப் பார்ப்பார். மனமானது சோர்வடையும்

தமது மகளாரான அப்பெண்ணைப் பார்ப்பார். செவந்த அக்கினியை ப்பொழியா நிற்கும் ஆகாயத்தைப் பார்ப்பார் தமது வீட்டைப் பார்ப்பார். (கஙம)

ஆசிறு மனைவிநல் லறிவுக் கில்லிட
மாசறத் தீன்பயிர் வளர்க்கும் வேலியார்
பாசமற் றவரிடர் பார்த்தி லேனெனக்
காசறு பொன்னகர் காணப்போயினர்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்த ஆசிறென்பவரின் நாயகியானவர் நன்மை பொருந்திய அறிவுகளுக்கு இருப்பிடமானவர். குற்றமறும் வண்ணம் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கப் பயிரை வளர்க்கா நிற் கும்வேலியானவர். அன்பான தொழியப்பெற்று அந்த நாயகர்,மகன் மகளாகிய மூவர்களின் துன்பங்களையும் பாரேனென்று சொல்லிக் களங்க மற்ற சுவர்க்கலோகத்தைப் பார்க்கும்வண்ணம் போய்ச்சேர் ந்தார்கள். (கஙக)

தெரியமறை முகம்மதின் தீனுக் காகவே
யிருநிலத் திடைமுதலிறந்து தேன்சொரி
மருமலர் சுவர்க்கமா ராயம் பெற்றவர்
தருவம்மா றுடையதா யெவர்க்குந் தாயரே.

(இ-ள்.) வேதங்களில் தெரியப் பெற்ற புறுக்கானுல் அலீமெ ன்னும் வேதத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற்கா கப் பெரிய இப்பூலோகத்தின்கண் முதலாவது மரித்து மதுவை ச் சிந்தாநிற்கும் பரிமளமமைந்த புஷ்பங்களை யுடைய சொர்க்கலோ கத்தினது சோபனத்தைப் பெற்றவர் கற்பகத்தருவை நிகர்த்த அம் மாறுடைய தாயாரானவர் யாவர்களுக்கும் தாயாரானவர். (கஙஉ)

அன்னமென் னடைச்சுமை யாவென்றுேதிய
மின்னம ருலகிடை மேயபின்னெடு
வன்னியின் குழிக்குடல் வளர்க்கும் பாதக
ருன்னிய கொடுஞ்சின மொழிந்திலாரரோ.

(இ-ள்.) அவ்வாறு அன்னப் பட்சியினது நடையை யொத்த மெல்லிய நடையை யுடைய சுமையாவென்று சொல்லும் பெண்ணு

தேவர்களின் உலகமான சொர்க்கலோகத்தின்கண் போய்ச் சேர்ந்த பின்னரும் அக்கினியைக் கொண்ட 'நெடிய கிடங்குகளை யுடைய நரகலோகத்திற்காய்த் தங்களின் சரீரங்களை வளர்க்கா நிற்கும் துரோகத்தை யுடையவர்களாகிய அந்தக் காபிர்கள் தாங்கள் நினைத்த கொடிய கோபமானது நீங்கிலர்கள். (ாகூகூ)

துன்னல ரிழைத்திடுந் துன்பத் தாலடன்
மன்னவ ளுசிறு மகளும் வாடிநின்
றின்னலி லிடைந்திடைந் திறந்து சோதிவாய்ப்
பொன்னுல கினிற்குடி புகுதப் போயினர்.

(இ-ள்.) அவ்விதம், நீக்காத சத்துராதிகளாகிய அந்தக் காபிர்கள் செய்திடும் வருத்தத்தினுல் வலிமையை யுடைய மன்னவராகிய ஆசிறும் அவரின் புதல்வியும் வாட்டமுற்று நின்று துன்பத்தினுல் மிகவும் வசக் கேடடைந்து மரித்துப் பிரகாசத்தைக் கொண்ட இடங்களை யுடைய சொர்க்க லோகத்தின்கண் குடிபுகுதும் வண்ணம் போய்ச் சேர்ந்தார்கள். (ாகூச)

தந்தையு முடன்பிறந் தவளுந் தாயரு
மிந்தவல் வினையினு லிறந்திட் டாரென
மந்தரப் புயரம்மா றென்னு மன்னவர்
சிந்தையிற் சூழ்ச்சியொன் றுன்னித் தேறினர்

(இ-ள்.) அப்போது மலைபோலும் புயங்களை யுடையவரான அம்மாறென்று சொல்லும் அரசரானவர் தமது பிதாவும், சகோதரியும். மாதாவும் இந்தக் கொடிய செயலினுல் மரித்தார்க ளென்று சொல்லி ஒருபாயத்தை மனசின்கண் நினைத்துத்தெளிவடைந்தார்.()

வாயினி லொன்றுந்தம் மனத்தி லொன்றுமத்
தீயினுங் கொடியவ ரிடத்திற் செப்பியே
மேயதுன் பனைத்தையும் விலக்கி வில்விடுஞ்
சாயக மெனநபி யிடத்திற் சார்ந்தனர்·

(இ-ள்.) அவ்வாறு தெளிவடைந்தஹம்மாறென்பவர்நெருப்பிலும் அதிகக் கொடியவர்களான அந்தக்காபிர்களி னிடத்தில் தமதுவாயிலொன்றும் மன்சிலொன்றுமாகச் சொல்லிப் பொருந்தியவருத்தங்க

ளெல்லா வற்றையும் தவிர்த்து வில்லின்கண் இடாநிற்கும்சரத்தைப் போல நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்தில் போய்ச் சேர்ந்தார்கள் (௱௩௬)

மாதவ ரிடம்புகுந் தமரர் வாழ்த்திய
பாதபங் கயமல ரிறைஞ்சிப் பற்றொடுங்
கோதறு தீனிலை நிறுத்துங் கொற்றவர்
சீதவொண் கட்கடையருவி சிந்தினர்.

(இ-ள்.) குற்றமற்ற தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தைநிலையாக நிற்கச் செய்யும் அரசராகிய ஹம்மாறென்பவர் மகாதவத்தையுடையவர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களினிடத்தில் அவ்வாறு போய்ச் சேர்ந்து தேவர்களாகியமலாயிக்கத்து மார்கள் வாழ்த்துகின்ற அவர்களின் சரணமாகிய தாமரைப் புஷ்பங்களை அன்புடன் வணங்கிக் குளிர்ச்சி தங்கிய ஒள்ளிய இருகடைக் கண்களிலு மிருந்து அருவியாகிய நீரைச் சொரிந்தார்()

அழுதவர் திருமுக நோக்கி யங்கையாற்
செழுமலர்க் கண்ணினீர் துடைத்துத் தீயவர்
குழுவினைக் கடந்திவ ணடைந்த கொள்கையை
மொழியென வுரைத்தனர் முதல்வன் றூதரே.

(இ-ள்.) அப்போது யாவற்றிற்கு முதல்வனுகிய அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் தூதராகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அவ்விதம் அழுதவரான ஹம்மா றென்பவரின் அழகிய முகத்தைப் பார்த்து அவரின்செழியதாமரைமலர்போன்ற கண்களினது நீரைத் தங்களின் உள்ளங் கையினல் துடைத்து நீவிர் கொடியவர்களாகிய அந்தக் காபிர்களின் கூட்டத்தைத்தாண்டி இவ்விடத்திற்கு வந்த செய்கையைச் சொல்லுமென்றுகேட்டார்கள்

பெற்றவ ரிருவரும் பிறப்புந் துஞ்சின
ருற்றவ ரிலையென வுன்னி யுண்மையை
முற்றுறக் கருத்தினின் முடித்துக் காபிர்கள்
சொற்றவைக் கேற்பவை சொல்லி னேனென்ருர்.

(இ-ள்) அவ்விதம் கேட்கவே ஹம்மா றென்பவர்என்னையீன்ற மாதா பிதாவாகிய இரண்டு பேர்களும் எனது சகோதரியும்

பங்கவர்களின் துன்பத்தினல் மரித்துப் போயினர்கள். ஆதலினல் யான் இனிநமக்கு உறவானவர் ஒருவரு மில்லரென்று மனசின்கண் நினைத்துச் சத்தியத்தை முற்றும்வண்ணம் சிந்தையில் முடிவுசெய்து நானும் அந்தக் காபிர்கள் சொல்லியவைகளுக்கு ஏற்கப்பட்டவைகளை சொல்லினேனென்று சொன்னர். (௱௩௬)

ஆக்கமற் றவரிட ரடுக்கி யின்னமும்
வாக்கினி லொருமொழி வழங்கி யுண்மையைத்
போக்கறச் சிந்தையுட் பொருத்தித் தீவினை
நீக்குதல் கடனென நிகழ்த்தி னாரரோ.

(இ-ள்.) ஹம்மாறென்பவர் அவ்வாறு சொல்லிய சமாச்சாரங்களைக் கேள்வியுற்ற நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆதாயமற்றவர்களான அந்தக் காபிர்களினது துன்பமானது உங்களை நெருங்கினல்இனிமேலும்நீங்கள் சத்தியத்தைவிடாது மனசின்கண் பொருந்தச்செய்து வாக்கினல் அவர்களுக் கிசைந்த ஒப்பற்ற வார்த்தைகளைப் பேசி அவர்களின் தீயசெயலை நீக்குதல் கடமையென்று தங்களினினத்தவர்களுக்குக் கட்டளைசெய்தார்கள்

இவ்வண நிகழ்ந்திவ ணிருக்கு நாளபி
னெவ்வி மனத்திபு னுகல பென்பவன்
வெவ்விய னடிமைபி லாலை நோக்கிமா
செவ்விய னிவனென நகைத்துச் சீறினன்.

(இ-ள்.) இந்தப்படியாக நடந்து அங்கு இருக்கின்றநாளில் வருத்தமுற்ற மனத்தைக்கொண்ட இபுனு கலபென்று சொல்லப்பட்டவனன கடுமையையுடையவன் தனது அடிமையாகிய பிலாலென்பவரைப்பார்த்து இவன் மகத்தான அழகனென்றுசொல்லிநிந்தித்துக் கோபித்தான். (௱௩௪)

அடிமைய னறிவில னறியுந் தன்னுரைப்
படிநட வாமுரண் படித்த வஞ்சன்பொய்
பிடிபடு முகம்மதின் பேச்சுக் குட்படுங்
கொடியவ னிவனெனக் கனன்று கூறினன்.

(இ-ள்.) அன்றியும், இந்தப்பிலாலென்பவன் அடிமையானவன் அறிவில்லாதவன். அறியாநிற்கும் தன்னுடைய வார்த்தைகளின்வண்

ணம் நடவாத விரோதத்தைக் கற்ற வஞ்சகத்தையுடையவன் பொய்மையானது அகப்பட்ட முகம்மதென்பவனின் வார்த்தைகளுக்கு உட்படும் கொடுமையுடையவனென்று கோபித்துச் சொன்னான்.

மாயவஞ் சனைத்தொழின் முகம்ம தின்வயின்
போயிசு லாத்தினிற் புகுந்த தென்னெனக்
காயெரி நிலத்திடை படுத்திக் கல்லெடுத்
தேயவ னுரத்தினி லிருத்தி னனரோ.

(இ-ள்.) அவ்வாறுசொன்ன அந்த இபுனுகலபென்பவன் பிலாலென்பவரைத் தந்திரத்தைக்கொண்ட வஞ்சனைச் செயலையுடைய அந்த முகம்மதினிடத்தினிற் சென்று அவனது இஸ்லாம் மார்க்கத்தில் நுழைந்துகொண்ட காரணம் யாதென்றுசொல்லிக் காய்ந்த) அக்கினியையுடைய பூமியின்கண் கிடக்கும்படிசெய்து ஒருகல்லைத் தூக்கிப் பொருந்திய அவரின் மார்பில் இருத்தினான். (௧௩௩

படருல முரத்தினிற் பதியப் பாற்கரன்
சுடுகதிர் நிலத்திடை சோர்ந்து மூச்செறிந்
துடலுலைந் துள்ளுயி ரொடுங்குங் காலையி
லிடர்தவிர்த் திருவிழி யெரிய நோக்குவான்.

(இ-ள்) அவ்விதம் இருத்திய விரிந்த கல்லானது மார்பில் அழுந்தவே பிலாலென்பவர்சுடாநிற்கும் சூரியனின் கிரணங்களையுடைய பூமியின்கண் வாட்டமடைந்து பெருமூச்செறிந்துசரீரமானது உலையப்பெற்று உள்ளேயுள்ள ஜீவனானது ஒடுங்குகின்ற சமயத்தில், அந்தஇபுனுகலபென்பவன்தான்செய்யும் துன்பங்களையொழித்து இரண்டுகண்களிலும் அக்கினியானதுஎரியும்வண்ணம்பார்ப்பான். ()

மற்றுமத் தரையிடை கிடத்தி மார்பக
மிற்றிடப் பெருஞ்சிலை யுரத்தி லேற்றுவன்
சற்றொரு கொடிவரை தவிர்ந்தி ரான்மனப்
பற்றறு மிரக்கமி லாத பாவியான்.

(இ-ள்.) அன்பற்ற இரக்க மில்லாத மனத்தை யுடைய பாவியான அந்த இபுனு கலபென்பவன் பிலாலென்பவரை மறுத்தும் அப்பூமியின்கண் கிடக்கும்படிசெய்து மார்பினிடமானது இற்றிடும்

வண்ணம் பெரியகல்லே வலிமையோடும் ஏற்றுவான், அன்றியும் ஒரு சிறிய நொடிப்பொழுதாவது அவ்விதம்செய்யும் கொடிய தொழிலே விட்டும் நீங்கியிரான். (கசரு)

நெஞ்சினிற் பெருஞ்சிலே சுமந்து நீங்கிலா
வெஞசுரத் திடைமிடை மிடைந்தும் வேதநூல்
விஞ்சையின் முகம்மது விளக்கு முண்மையை
யஞ்சலித் தவனலா லறிவு நீங்கிலான்.

(இ-ள்.) அப்போது பிலாலென்பவர் தமது மார்பில் பெரிய கல்லேத்தாங்கியும் மாறாத வெவ்விய பாலேநிலத்தின்கண் கிடந்து மிகமிடைந்தும் வேதநூலின் கல்வியை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகிவசல்ல மவர்கள் விளக்கா நிற்கும் சத்தியத்தை அஞ்சலித்தவரே யல்லாமல் தமது அறிவானது ஒழிந்திலர். (கசசு)

இபுனுகல் பவனிட ரென்னுந் தீயினி
னவநித மெனப்பிலால் நடுங்க விண்ணுமிவ்
வவனியும் புகழ்நபி தோழு ராகிய
கவனவாம் பரியபூ பக்கர் கண்டனர்.

(இ-ள்.) அந்நேரத்தில் ஆகாயலோகமும் இந்தப் பூலோகமும் போற்றாநிற்கும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகி வசல்ல மவர்களின் சிநேகிதரான விரைவாகத் தாவாநிற்கும் குதிரையை யுடைய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் இபுனுகலபாகிய அந்தக்காபிரின் துன்பமென்றுசொல்லும் அக்கினியின்கண் வெண்ணெய்யைப் போலப் பிலாலென்பவர் நடுங்கும் வண்ணம் தங்களின் கண்களினுற் பார்த்தார்கள். (கசஎ

பொறுக்கரும் வேதனே பொருத்து நிண்ணய
மறுக்கில னிவனென மதித்துக் கூறிய
வெறுக்கைகொண் டடிமைபி லாலே மீட்டிநம்
பெறக்கரு முரிமையா னென்னப் பேசினர்.

(இ-ள்.) அவ்வாறுபார்த்த அபூபக்கர் சித்தீகுறலியல்லாகு அன்கு அவர்கள் இந்தப்பிலா லென்பவர் தாம் சகித்தற்கரிய வருத்தத்தைச் சகித்தும் தமதுநிச்சயத்தை மறுத்திலரென்று சொல்லித்தங்களின்

மனசின்கண் மதிப்பிட்டு அந்த இபுனுகலபென்பவன் சொல்லியதிரவியத்தைக் கொண்டு அடிமையான அப்பிலாலே அடிமையை விட்டு மீட்டி பெறுதற் கரிதான நமது உரிமையை யுடையவனென்று சொன்னார்கள். (கசஅ

மன்னிய புகழபூ பக்கர் மாசிலா
நன்னிலை யவன்றனை யுரிமை நாட்டிய
பின்னரும் பகைப்பிணி பிணிப்பு நீக்கியே
தன்னரு ளொடும்பெருந் தீனைத் தாங்கினார்.

(இ-ள்.) கீர்த்தி பொருந்திய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் அவ்வாறு குற்றமற்ற நல்ல நிலைமையை யுடையவரான அந்தப் பிலாலென்பவரை யுரிமையாக நிறுத்திய பிற்பாடும் அவர் விரோதமாகிய நோயினது கட்டைத் தவிர்த்துத் தமது கிருபையோடும் பெரிய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தைத் தாங்கினார்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருநெறித் தீனுள் ளோரைத் தீநெறி மாறினோர்கண்
மருளுடை மனத்த ராகி முரண்மறு திருக்கு நாளில்
விரிகதி ரிலங்கிச் சேரார் மெய்நிணம் பருகும் வெள்வேற்
கரதல ஹம்சா வென்னுங் காளைகா னிடத்திற் புக்கார்.

(இ-ள்.) தெய்வீகத்தைக்கொண்ட தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தி லுள்ளவர்களை அத்தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை விட்டும் நீங்கினவர்களான காபிர்கள் மயக்கத்தைப் பொருந்திய மனத்தை யுடையவர்களாகி விரோதத்தை மறுக்காது அவ்விதம் இருக்குகின்ற நாட்களில் விரிந்த கிரணங்கள் பிரகாசிக்கப் பெற்றுச் சத்துராதிகளது சரீரத்தின் கண்ணுள்ள கொழுப்பை அருந்தாநிற்கும் வெள்ளிய வேலாயுதத்தைத் தாங்கிய கைத்தலத்தை யுடையஹம்சா வென்று சொல்லும் நாபகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சிறிய தந்தையர்களி லொருவராகிய இளம்பருவத்தையுடையவர் காட்டின்கண் போய்ப்புகுந்தார். (ஈருய)

மெல்லிலைக் கானத் தேகி விலங்கினம் வேலிற் றாக்கிப்
பல்லருங் குழுமி யார்ப்பப் பரிவொடும் வேட்டை யாடி
யொல்லையி லடவி நீந்தி யுள்ளகம் பூரித் தோங்கச்
செல்லுறை புரிசை வேலித் திருநகர் சாருங்காலை.

(இ-ள்.) ஹம்சா அவர்கள் அவ்விதம் மெல்லிய இலைகளை யுடைய காட்டின்கண் சென்று தங்களின் வேலாயுதத்தினால் அங்குற்ற பல ஜனங்களும் கூட்டமுற்று ஒலிக்கும்படி மிருகக் கூட்டங்களைத் தாக்கி அன்புடன் வேட்டையாடி மனமானது பூரித்துஓங்கும் வண்ணம் விரைவில் அந்தக்காட்டைக் கடந்து மேகங்கள் தங்காநின்ற கோட்டைமதிளின் காவலையுடைய தெய்வீகம் பொருந்திய மக்கமா நகரத்தில் வந்து சேருகின்ற சமயத்தில். (௱ருக)

செல்லுறழ் கரச்சுத் ஆனெனன் றோதிய செவ்வித் தோன்ற
வில்லுறைத் தொழும்பி லுள்ளா ளிளங்கொடி யொருத்தி வெற்றி
வில்லணி தடக்கை யேந்தி வரும்விறல் ஹம்சா வென்னும்
வல்லிய மெதிரிற் புக்கு வாய்திறந் துரைக்க லுற்றாள்.

(இ-ள்.) மேகத்தைப் போன்ற கைகளை யுடைய சுத்ஆனென்று சொல்லிய அழகிய அரசரானவரின் வீட்டின்கண் தங்காநிற்கும் அடிமைகளி லுள்ளவளான இளம்பருவத்தைக் கொண்ட கொடி போலும் ஒரு பெண்ணானவள் அழகிய பெரிய கையின்கண் விஜயத்தைப் பெற்ற கோதண்டத்தைத் தாங்கி வராநிற்கும் வீரத்தை யுடைய ஹம்சாவென்று சொல்லும் புலியானவர்களின் முன்னர்ப் போய்த் தனது வாயைத் திறந்து சொல்ல ஆரம்பித்தாள். (௱ருஉ)

ஒன்னலர்ச் செகுக்கும் வேலோ யுமதுயிர்த் துணைவ ரீன்ற
மன்னர்மன் னவரைச் செல்வ முகம்மதை வதன நோக்கி
யின்னலுற் றகமுங் கொள்ளா விழுக்கொடும் வழுக்கோன் மாற்ற
முன்னியுற் றுரைக்க வொண்ணா தபூஜகி லுரைத்த தன்றே.

(இ-ள்.) சத்துராதிகளைக் கொல்லாநிற்கும் வேலாயுதத்தை யுடைய வர்களே! உங்களது உயிர்போலும் சகோதரர்பெற்ற இராஜாதிஇராஜரானவர்களைச், செல்வத்தை யுடைய நபிமுகம்மதுசல்லல்லாகுஅலைகிவசல்லமானவர்களை, அவர்களின் முகத்தைப்பார்த்துவருத்த மடைந்து மனமுங்கொள்ளாத நிந்தனையோடும் குற்றத்தைக் கொண்ட வார்த்தைகள் அபூஜகி லென்பவன் சொன்னவற்றை மனசின்கண் நினைத்துப் பொருந்திச் சொல்லமுடியாது. (௱ருங)

கைப்புரை சினக்கக் கூறுங் கருதலன் முகத்தை நோக்கி
மைப்படுங் கவிகை வள்ளன் மறுத்தொன்று மொழிகி லாமு

லெய்ப்புறு மனத்த ராகி யினமில்லாத் தமியர் போலச்
செய்ப்படும் வனச மொவ்வாச் செம்முகம் வெளிறிற் றென்றாள்.

(இ-ள்.) அவ்வண்ணம் கசப்பான வார்த்தைகளைக் கோபித்துப் பேசின சத்துராதியாகிய அவ்வபூஜஹிலின் முகத்தை மேகங்களினாற் செறிந்த குடையையுடைய வள்ளலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பார்த்து அவனது வார்த்தைகளுக்கும றுத்து யாதொன்றும்பேசாமல் பந்துக்களற்ற தனித்தவரைப்போல இளைப்பைக் கொண்ட மனத்தை யுடையவர்களாகி வயலின்கண் உண்டாகுந் தாமரைப் புஷ்பங்களும் இசையாத அவர்களின் செவந்த முகமானது வெண்மையாயிற் றென்று சொன்னாள். (௩௫௪)

பழுதுறுங் கொடிய மாற்ற மபூஜகல் பகர்ந்த வெல்லாம்
பொழிகதிர்ப்பொருப்புத்திண்டோட்புரவலர்பொறுத்தாரென்ன
வழுவறு ஹம்சா கேட்டு மனத்தினுள் வேக மீறிக்
குழுவொடுந் திரண்டு வைகுங் கொடியவனிடத்திற் சார்ந்தார்.

(இ-ள்) அபூஜகி லென்பவன் அவ்விதம் பேசிய குற்றமுற்ற கொடியவார்த்தைக ளெல்லாவற்றையும் கிரணங்களைப் பொழியாநிற்கும் மகாமேரு பருவதத்தைப் போன்றதிண்ணிய புயங்களையுடைய அரசரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சகித்தார்களென்று அவர்களின் சிறிய தந்தையர்களி லொருவரான அந்த ஹம்சா அவர்கள் தங்களின் காதுகளினாற் கேள்வியுற்று மன சினகம் கோபமானது அதிகரித்துத் தங்களின் கூட்டத்தோடும் கூடி அங்கு தங்கிய கொடுமையை யுடையவனான அந்த அபூஜகி லிடத்திற் போனார்கள். (௩௫௫)

படிறபூ ஜகிலென் றோதும் பாதகன் வதன நோக்கி
யடல்முகம் மதுவைச் சொல்லா தவமொழி பகர்ந்த தெந்த
மிடலெனச் சினந்து சீறி வீரவேற் றடக்கை வில்லா
லுடைபடச் சிரத்திற் றாக்கி யுறக்கொடுங் கறுத்துச்சொல்வார்.

(இ-ள்.) அவ்விதம்போன ஹம்சா அவர்கள் வஞ்சகமமைந்த அபூஜகிலென்று சொல்லும் துரோகத்தையுடையவனின் முகத்தைப்பார்த்து வலிமையையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களைப் பேசாத வீணானவார்த்தைகளினாற் பேசினது எந்த வலிமையினாலென்று கோபித்துச் சீற்றமுற்று வீரத்தையுடைய

தைக் கொண்ட பெரியகையினது வில்லினல் உடைபடும் வண்ணம் அவனின் தலையில் அடித்து அதட்டுதலுடன் கோபித்துச்சொல்லுவார்கள். (கருசு)

துனிமனத் துறைய முன்னேன் ருேன்றலை யுரைத்தா யென்னி
லினியெவை யுரைப்ப னியானு மிபனபி மொழிந்த மார்க்கந்
தனினடு நிலைமை யானேன் சாதியிற் றலைவர் கூடி
நனிபகை வரினுங் காண்பேன் காணுநீ நவிற லென்ருர்.

(இ-ள்.) எனதுதமையனுரான அப்துல்லா வென்பரிவன் புத்திரராகிய முகம்மதை மனசின்கண் துன்பமானது தங்கும் வண்ணம் பேசினுயென்று சொன்னல் இனியானெவற்றைப் பேசுவேன். யானும் ஒழுங்கையுடைய அந்நபிகள் பெருமானவர்கள் கூறிய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது நீதியையுடையவனுயினன். நமது இனத்தின் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து அதனுல் மிகுத்த விரோதமானது வந்தாலும் பார்ப்பேன். நான் சொன்னதை நீ பார்ப்பாயாகவென்று சொன்னுர்கள். (கருஎ)

அணிதிகழ் ஹம்சா வஞ்ச மடாபூ ஜகிலை நோக்கித்
தணிவிலா வெகுளி மாற்றஞ் சாற்றலு மவனைச் சூழ்ந்து
பணிபனீ மகுசூ மென்னுந் திரளவர் பலருங் கோபத்
துணிவுட னமருக் கேற்ற சுடர்ப்படைக் கலன்க ளேற்ருர்.

(இ-ள்.) அழகானது பிரகாசியா நிற்கும் ஹம்சா அவர்கள் வஞ்சகம் நெருங்கப்பெற்ற அபூஜகி லென்பவனைப் பார்த்து அவ்வாறு குறையாத கோபத்தை யுடைய வார்த்தைகளைப் பேசினமாத்திரத்தில் அவனை வளைந்து வணங்கா நிற்கும் பனீமகுசூ மென்று சொல்லுங் கூட்டத் தவர்களான பலபேர்களும் கோபத்தினது திடத்தினுடன் யுத்தத்திற்குப் பொருந்திய் பிரகாச மமைந்த ஆயுதங்களைக் கொண்டார்கள். (கருஅ)

இனத்தவர் நெருங்கிச் செவ்வா யிதழ்மடித் திருகண் சேப்பச்
சினத்ததும் ஹம்சா வென்னுஞ் சிங்கவே றியல்பு நோக்கி
மனத்தினி லடக்கிச் செவ்வி மதியொடுந் தமருக் கேற்பக்
கனத்துரை யெடுத்துக் காட்டி யபூஜகற் கழற லுற்ருன்.

(இ-ள்.) தனது பந்துக்களான அந்தப் பனீமகுசூ மென்னும் கூட்டத்தார்கள் அவ்வாறு ஒருவரோ டொருவர் நெருக்கமுற்றுத் தங்களின் செவந்த வாயினது அதரங்களை மடியச்செய்து இரண்டு கண்களும்செந்நிற மடையும்படிக் கோபித்ததையும் ஹம்சாவென்று சொல்லும் ஆண்சிங்க மானவர்களின் தகுதியையும் அபூஜகி லென்பவன் பார்த்து மனத்தின்கண் அமையச்செய்து அழகியபுத்தியோடும் பந்துக்களாகிய அந்தக் கூட்டத்தார்களுக்குப் பொருந்தும்வண்ணம் பெருமை தங்கிய வார்த்தைகளை எடுத்துக் காட்டிச் சொல்ல ஆரம்பித்தான். (ாருகூ)

அங்கவன் றனையன் மைந்த னகுமதை வாய்கொள் ளாத
பங்கமுற் றுறுஞ்சொற் கேற்பத் தண்டனை படுத்தல் செய்தா
னங்குலத் தவர்க்குக் கோப நடத்துதல் பழுதென் றோதி
வெங்கொலை மனதது ளாக்கி விளைபகை தவிர்த்து நின்றான்.

(இ-ள்.) அந்த ஹம்சா வென்பவனின் தமையனான அப்துல்லாவின் புதல்வனாகிய அஹ்மதென்னும் நாமத்தை யுடைய முகம்மதென்பவனை அவ்விடத்தில் நான் வாய்கொள்ளாத ஈனமுற்றுப் பொருந்திய வார்த்தைகளைப் பேசினதற்குத் தகுதியாக என்னை அவன் ஆக்கினைபடுத்தினான். ஆதலால் நமது கூட்டத்தார்களுக்குக் கோபத்தைச் செலுத்துவது குற்றமென்று சொல்லி வெவ்விய கொலைத் தொழிலை மனசினகம் ஆகும்வண்ணம் செய்து உண்டாகா நிற்கும் விரோதத்தை யொழித்து நின்றான். (கசூ௦)

அடலரி ஹம்சா கோபித் தபூஜகி லவையை நீங்கிக்
கடிமலர் மரவத் திண்டோட் கனவரை கதித்து வீங்க
வுடைதிரை யமுத மொவ்வா தோதிய கலிமா வேந்த
ரிடைவிடா திருப்பத்தோன்று மெழின்முகம் மதுவைச்சார்ந்தார்.

(இ-ள்) அப்போது வலிமையைக்கொண்ட சிங்கத்தை நிகர்த்த ஹம்சா அவர்கள் கோபமுற்று அந்த அபூஜகிலினது கூட்டத்தைவிட்டும் தாண்டிப் பரிமளமமைந்த குங்குமப் புஷ்பத்திலான மாலைகளை யணிந்த தங்களின் திண்ணிய புயங்களாகிய மகாமேரு பருவதங்கள் அதிகமாய்ப் பூரிக்கும் வண்ணம் அலைகளை யுடைய சமுத்திரத்தின் கண்ணுள்ள தேவாமுதமும் நிகராகாது சொல்லாநிற்கும் கலிமாவை யுடைய அரசர்கள் பக்கம் விட்டும் நீங்காது இருக்கும்படிப் பிரகாசியாநிற்கும் அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் வந்து சேர்ந்தார்கள். (கசூக)

வள்ளலென் றுதவுஞ் செவ்வி முகம்மதின் மதுரவாக்கின்
விள்ளரு மறையின் றீஞ்சொல் விடுத்தெடுத் துரைப்பத் தேறி
யுள்ளமு முடலும் பூரித் தருசிக்கு மமுதின் மிக்காய்த்
தெள்ளிய கலிமா வோதித் தீனிலைக் குரிய ரானார்.

(இ-ள்.) அவ்வாறு வந்து சேர்ந்த ஹம்சா அவர்கள் வள்ளலென்று கொடாநிற்கும் அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் இனிய வாக்கினால் சொல்லுதற்கரிய புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது மதுரமாகிய வார்த்தைகளை எடுத்துப்பிரித்துச் சொல்லத் தங்களின் மனசின்கண் தெளிந்துமனமும் சரீரமும் பூரிக்கப்பெற்று இனியாநின்ற அமுதத்தைப்பார்க்கிலும் அதிகமாய்த் தெளிவுற்ற "லாயிலாஹ இல்லல்லாகு முகம்மதுர் றசூலல்லாஹி,, யென்னும் கலிமாவைச் சொல்லித் தீனுல்இஸ்லா மென்னும் மார்க்க நிலைமைக்குச் சொந்தக்காரராயினார்கள். ()

அறிவுறும் ஹம்சா தீனி லாயின ரென்னு மாற்ற
மறுவுறை குபிர்கேட்டு மனத்தினிற் றுன்ப முற்றா
ரிறையவன் றூதர் செவ்வி யியனபிக் கலிமா வோதுந்
திறல்கெழும் வேந்த ரியாருஞ் சிந்தையிற் செல்வம் பெற்றார்.

(இ-ள்.) அறிவைப் பொருந்திய ஹம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் அவ்வாறு தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தி லாயினார்களென்று சொல்லும் சமாசாரத்தைக் குற்றமானது தங்கப்பெற்ற அந்தக் காபிர்கள் கேள்வியுற்று மனசின்கண் வருத்த மடைந்தார்கள் யாவற்றிற்கு இறைவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் தூதாகிய அழகிய ஒழுங்கைக்கொண்ட நாயகம் நபிமுகம்மது மூஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் கலிமாவைச் சொல்லிய வலிமையானது நிறையப் பெற்ற அரசர்களான முஸ்லிங்களெல்லாவரும் மனசின்கண் இன்பத்தைக் கொண்டார்கள். (கசுரு)

தீனிலைக்கண்டபடலம்

முற்றிற்று.

ஆ படலம்-ரு-க்கு-திருவிருத்தம். உகூஉ.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது.

உமறுகத்தாபீமான்கொண்டபடலம்.

கலிநிலைத்துறை.

சமர கேசரி யப்துல்லா கருதிரு மதலைக்
கமரர் கோனிழிந் தருநபி யெனும்பெய ரளித்துத்
திமிர வெங்குபிர் கடிந்துதீ னிலைநெறி நிறுத்திக்
கமைத ரும்படி யாண்டுநான் கெனக்கடந் ததற்பின்:

(இ-ள்.) யுத்தச் சிங்கமாகிய அப்துல்லா அவர்கள் இவ்வுலகத்தின் கண்தந்த தெய்வீகம் பொருந்திய புதல்வரான நாயகம் ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அமரேசுவராகிய ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் ஆகாயத்தை விட்டும் இறங்கிவந்து நபியென்று சொல்லும் நாமத்தை யுதவிப் பொறுமை தரும்வண்ணம் அந்தகாரமான குபிர்மார்க்கத்தை யழித்துத் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை நிலைநிறுத்தி வருடமானது நான்கென்று சொல்லும்படி சென்றதின் பின்னர். (க)

வருட நான்குசென் றைந்தினின் முகம்மது மொருநா
ளிரவி னிற்றனித் திருந்திரு கரமெடுத் தேந்திப்
பொருவி லாமுத லிறைவனை யீறிலாப்பொருளை
யுருகு மெய்ம்மன வாக்கொடும் புகழெடுத் துரைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு நான்கு வருடம் சென்று ஐந்தாவது வருடத்தில் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு தினம் இரவில் ஏகமாயிருந்து இரண்டு கைகளையும் தூக்கி எந்தி ஒப்பற்ற முதன்மையாகிய இறைவனை, முடிவில்லாத பொருளானஹக்கு சுபுகானகுவத்த ஆலாவை, இளகாநிற்கும் மனம், வாக்கு, காயமாகிய மூன்றினோடும் துதிகளை எடுத்தோதினர்கள். (உ)

உலகி னிற்கரு தலர்க்கட லரியும றினைக்கொண்
டலத பூஜகி லினைக்கொடு தீனிலை யதனைப்

பலனு றும்படி யெனக்கருள் பிறிதிலே யெனவே
நலனெ டுந்து ஆச் செய்தனர் முகம்மது நபியே.

(இ-ள்.) அவ்விதம் ஓதிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் சத்துராதிக ளென்னும் யானைகளுக்கு வலிமையை யுடைய சிங்கமாகிய உமறென்பவரைக் கொண்டு அல்லது அபூஜ ஹிலைக் கொண்டு எனக்கு இவ்வுலகத்தின்கண் தீனுல் இஸ்லாமென் னும் மார்க்க நிலைமையை வலிமையுறும் வண்ணம் அருள் செய்வாய் இதைத்தவிரவேறே யாதொன்று மில்லையென்று நன்மையுடன்து ஆச்செய்தார்கள்,

இந்த மன்னர்க ளிருவரி லொருவரென் வசமாய்த்
தந்து தீனிலை நிறுத்துவையெனத்தனி முதலைப்
புந்தி கூர்தர வுரைத்தனர் கேட்டனர் புகழ்ந்தார்
சிந்து வெங்கதி ரெழுந்தது விழுந்தது திமிரம்.

(இ-ள்.) அன்றியும், இந்த அரசர்களாகிய இருவர்களில் ஒரு வரை எனது பக்கத்தில் அருளித் தீனுல் இஸ்லா மென்னும் மார்க் கத்தை நிலையாக நிற்கச் செய்குவா யென்று சொல்லி ஒப்பற்ற முத லான அல்லாகு சுபுகானகு வத்தஆலாவைப் புத்தியானது அதிகரிக் கும் வண்ணம் விறவித் துதித்தார்கள். அப்போது சூரியன் கீழ்பாற் கடலில் உதயமாயினன். அந்தகார மானது வீழ்ந்தது. (ச)

அற்றை யிற்பகற் போதினி லபூஜகு லவையுள்
வெற்றி வேந்தர்கள் பலருடனுமறையும் விழித்துக்
கற்ற வாள்வலி யவர்க்குறு கருமமென் மனத்தி
லுற்ற தொன்றுள தியாவருங் கேண்மினென்றுரைத்தான்.

(இ ள்.) அன்றையத்தினம் பகற் சமயத்தில் அபூஜகி லென்ப வன் தனது சபையினகம் விஜயத்தை யுடைய அரசர்க ளனேகரு டன் உமறென்பவரையும் பார்த்து வாள்வல்லமையிற் பழகியவர்களு க்கு ஒருகாரியம் எனது மனசின்கண் பொருந்தினதுண்டு. அதை நீங்கள் யாவர்களும் கேளுங்களென்று சொன்னன். (௫)

திக்கு நான்கினுந் திசையினுந் தேயங்க டனினு
மக்க மேயிக லுந்தலம் வலுமையு மஃதே
மிக்க வீரத்தி னம்மினத் தவர தின் மேலோ
ரொக்கு மியாந்தொடுத் ததின்முடியாததொன் றிலையே.

(இ-ள்.) நான்கு திக்குகளிலும் எண்டிசைகளிலும் அவற்றின் கண்ணுள்ள ஊர்களிலும் மக்கமாநகரமே விரோதமற்றதலம். அன்றியும், வலிமையை யுடையதும் அந்நகரமே. மிகுந்த வீரத்தினாற் பொருந்தா நிற்கும் நமது கூட்டத்தார்கள் அதிலும் மேலானவர்கள் ஆதலால் நாம் தொடங்கிய கருமங்களில் முடியாது யாதொன்று மில்லை. (௬)

பதிக்கு நம்மினத் தவர்க்குநல் வழிக்குமுட் பகையா
யுதிக்கும் பாதகர் போனபி முகம்மதென் றுதித்தான்
சதிக்கும் வஞ்சனைத் தறுகணை னிவன்றனைப் பொருளாய்
மதிக்க வேண்டுவ தில்லையினி வதைத்திட வேண்டும்.

(இ-ள்.) நமது இராச்சியத்திற்கும் குடும்பத்திற்கும் நல்ல மார்க்கத்திற்கும் உள்விரோதமாகத்தோற்றமாகிய துரோகர்களைப்போல முகம்மது நபியென்று சொல்லித் தோற்றமாயினான். சதிவுசெய்யும் வஞ்சகத்தையுடைய குரூரனாகிய இவனை இனிநாம் ஒருபொருளாக மதிக்க வேண்டியதில்லை கொல்லவேண்டும். (எ)

உதிரஞ் சிந்திட முகம்மதி னுயிர்செகுத் தவர்க்கென்
பதியி னுற்றதெப் பொருளுள தப்பொருள் பலவு
நிதியு மீய்குவ னெனக்கர செனநிகழ்த் திடுவ
னெ கிரும் வீரர்க ளுளரெவ ரெனவெடுத் திசைத்தான்!

(இ-ள்.) இரத்தமானது சொரியும் வண்ணம் முகம்மதென்பவனுடைய ஜீவனை யழித்தவர்களுக்கு எனது இராச்சியத்திற் பொருந்தியதான எவ்வஸ்து உள்ளதோ அந்த வஸ்துவுகள் பலவும் திரவியமும் கொடுப்பேன். அன்றியும், எனக்கு அரசென்றும் சொல்லுவேன். ஆதலால் இங்கு உள்ளவர்களில் அவ்வாறு எதிர்க்கப்பட்ட வீரர்கள்யாவர்களென்று எடுத்துக் கூறினான். (அ)

மானம் போக்கிய கொடுங்கொலை விளைத்திடு மனத்தா
னீன னிவ்வுரை பகர்தலு மவையகத் திருந்தோ
ரான திவ்வுரை தீங்கிவை யெனவுரை யாடா
தூன ருந்திய வேனுழை பவரையொத் திருந்தார்,

(இ-ள்) அபிமானத்தை விட்ட கொடிய கொலைத் தொழிலைச் செய்திடும் மனத்தை யுடையவனான கீழ்மைகொண்ட அபூஜகிலென்பவன் இந்தவார்த்தைகளைச் சொல்லிய மாத்திரத்தில் அந்தச் சபை

யின்கண் இருந்தவர்கள் இவ்வார்த்தை ஆகுமானது. இவ்வார்த்தைகள் குற்றமென்று யாதொன்றும் பேசாது ஊனுண்ட வேலாயுதம் புகுந்தவர்களை நிகர்த்திருந்தார்கள். (சூ)

வெற்றி வீரத்தின் மிக்கவரெவரென விரித்துச்
சொற்ற திற்கடு வெகுளியுற் றிருவிழி சுழல
வுற்று நோக்கிவெற் பதிர்த்திடு முறுவலிப் புயங்க
ளிற்ற தோவென வவைவெரு விடவும றிசைத்தார்.

(இ-ள்.) விஜயத்தைக் கொண்ட வீரத்தினால் மிகுந்தவர்கள் யாவர்களென்று அபூஜகி லென்பவன் கேட்டதற்கு உமரென்பவர் கடுமையான கோபமடைந்து இரண்டு கண்களும் சுழலும் வண்ணம் ஊன்றிப் பார்த்து அச்சபையானது பயங்கர மடையும்படி மலைகளும் நடுங்கிடும் மிகுத்த வலிமையை யுடைய எனது தோள்கள்இற்றதா? இறவில்லை யென்று சொன்னார். (ய)

புதிய வேதமொன் றுளதெனும் படிறுரை புகன்றிப்
பதியி லுளவர்க் கருங்களை யெனப்பகை விளைத்த
மதுகை மன்னவன் முகம்மதி னுடல்வதைத் திடும்வா
ளிதுகொல் காணுதி நீவிரென் றடலும றெழுந்தார்.

(இ-ள்.) அவ்வாறு சொன்ன வெற்றியை யுடைய உமறென்பவர் தனக்கு நூதனமான ஒருவேத முண்டு மென்றும் பொய்மையாகிய வார்த்தைகளைச் சொல்லி இந்தத் திருமக்கமா நகரத்தின் கண்ணுள்ளவர்களுக்கு அரிய களையைப்போல விரோதத்தை யுண்டாக்கிய வலிமையை யுடைய அரசனான முகம்ம தென்பவனின் சரீரத்தைக் கொல்லாநிற்கும் வாளானது இஃது? நீங்கள் பாருங்களென்று சொல்லி எழும்பினார். (யக)

குறுக லாருயி ருதிரங்கொப் பளித்தகுற் றுடைவா
ளிறுக வீக்கிமற் றொருபடைக் கலம்வல னேந்தித்
தறுகி லாமன வலியொடு புயவரைத் தடத்தி
நறைகொள் குங்குமத் தொடைபுரண் டசைந்திட நடந்தார்.

(இ-ள்.) அவர் அவ்வாறு எழும்பிச் சத்துராதிகளின் ஆவியையும்இரத்தத்தையுங் கக்காநிற்கும் ஒரு குற்றுடைவாளை அரையின் கண் இறுகும்படி கட்டி வேறேயொரு படைக்கலத்தை வலதுகையில்

தாங்கித் தடைப்படாத மனவலிமையுடன் தோள்களாகிய பெருங்ம் பொருந்திய மலைகளின்கண் வாசனைகொண்ட குங்குமப் புஷ்பத்தினு லானமாலைகள் புரண்டு அசையும்வண்ணம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிருக்கும் திசையை நோக்கிச் சென்ருர் (௰உ)

உமறெ ழூந்திடும் வெகுளியி னுடையவ னருளா
லமார் தங்களி லொருவரா னேறுரு வாகிக்
கமல மென்பத முகம்மதி னரும்பகை களைய
விமைநொ டிக்குளந் தரமிருந் தவனியி னிழிந்தார்.

(இ-ள்.) உமறென்பவர் அவ்வாறு எழுந்திடும் கோபத்தினல் யாவற்றையும் சொந்தமா யுடையவனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருவருள் கொண்டு தேவர்களான மலாயிக்கத்து மார்க ளில் ஒருமலக்கானவர் தாமரை மலர்போன்ற மெல்லியபாதங்களை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் அரியவிரோதத்தை நீக்கும் வண்ணம் காளைமாட்டின் வடிவமாகி இமையாநிற்கும் நொடிப் பொழுதினகம் ஆகாயத்தி லிருந்து இப்பூ லோகத்தின்கண் இறங்கினர். (௰௩)

காற்றி ரட்சியுங் கவையடிக் குளம்பின்கட் டிரமு
மேற்றி ருக்கற வளைந்தெழு மருப்பினில் வியப்புங்
கூற்று ருதுருள் கழுத்தடித் தோனெளிக் குழைவு
நாற்றி மேற்றுளை நாசியிற் றவழ்தரு நாவும்

(இ-ள்.) அவ்வாறு இறங்கிய காற்களினது திரட்சியையும்பிளவு ற்ற பாதமாகிய குளம்புகளின் உறுதியான வலிமையையும் மேலே திருக்கில்லாது வளைந்து எழாநிற்கும் கொம்புகளில் ஆச்சரியத்தை யும் கூற்றுருது உருண்ட கழுத்தடியின் தோலினது நெளிவைக் கொண்டவளைவையும் நாற்றி மேல்துவாரத்தைப்பெற்ற மூக்கில்தவ ழ்கின்ற நாவையுமுடைய. (௰௪)

அசைத்த வாலெடுத் திருபுடைபுடைத்துமண் ணதிர
விசைத்த கால்களி லுலவித்தண் பசியபுன் மேய்ந்து
பசித்த வள்ளுகிர் நிகரும தேகிய பாதைக்
கிசைத்த டுத்தது வானகத் துருமென மிடபம்.

(இ-ள்.) ஆகாயத்தின்கண் ணுண்டாகும் இடியென்றுசொல்லா நிற்கும் அந்தக் காளை மாடானது அசைக்கின்ற தனது வாலைத் தூக்கிஇரண்டு பக்கங்களிலும் மண்ணுனது அதிரும் வண்ணம்

அடித்து வேகமுற்ற காற்களினல் உலாவிக் குளிர்ச்சி தங்கிய பசிய புற்களைச் சாப்பிட்டு பசியைக் கொண்ட புலியைப்போலும் உமறென்பவர் செல்லுகின்ற பாதையைப் பொருந்தி நெருங்கினது. (கரு)

உலங்கொ டிண்டிறற் புயனும றெனுமொரு சியங்
கலன்கள் வில்லிட வியர்ப்பொடும் விழிக்கனல் கதுவத்
துலங்கு செவ்விதழ் வெள்ளெயி றதுங்கிடச் சுடர்வா
ளிலங்கி டத்தனி வருவது நோக்கிய திடபம்.

(இ-ள்.) அவ்வாறு நெருங்கிய அந்தக் காளை மாடானது திரண்ட கல்லைப் போலும் திண்ணிய வலிமையைக்கொண்ட தோள்களை யுடையவரான உமறென்று சொல்லும் ஒப்பற்ற சிங்கமானவர் ஆபரணங்கள் நாலு பக்கங்களிலும் பிரகாசத்தை வீசவும், கோபத்துடன் இரண்டு கண்களிலு முள்ள அக்கினியானது அதிகமாய்ப் பற்றவும், பிரபையை யுடைய வாளாயுதம் மின்னவும், ஏகமாக நடந்து வருவதைக் கண்களினுற் பார்த்தது. (கசு)

கவ்வை யங்கடற் புவியினின் முகம்மதைக் கசப்பத்
தெவ்வ ரில்லென மனத்திடை களிப்பொடுஞ் சிரித்துக்
குவ்வ திர்ந்திட வுமறுகத் தாபெனக் கூவி
யெவ்வு ழித்தனி செல்குற்றீர் நீவிரென் றிசைத்த.

(இ-ள்.) அவ்விதம் பார்த்த அந்தக் காளை மாடானது ஓசையையுடைய அழகிய சமுத்திரத்தைக் கொண்ட இப்பூலோகத்தின் கண் நாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை வருத்தும் வண்ணம் சத்திராதிக ளில்லரென்றுசொல்லி மனசின்கண் சந்தோஷத்தோடும் நகைத்துப் பூமியானது நடுங்கும் வண்ணம் உமறு கத்தாபே! என்று கூப்பிட்டு நீவிர் ஏகமாகஎவ்விடத்திற்குச் செல்லுகின்றீரென்று கேட்டது. (கஎ)

உரைத்த சொற்செவி புகவுழை யெவரென நோக்கித்
தரைத்த லத்திவ ணொருவரு மிலரெனச் சார
விரைத்த லோடுமவ் வுரைபகர்ந் துமறென விசைப்பத்
திருத்தி நாற்றிசை யெங்கணு நோக்கினர் செம்மல்.

(இ-ள்.) பெருமையிற் சிறந்தவரான உமறு கத்தாபென்பவர் அக்காளைமாடு சொல்லிய வார்த்தையானது தமதுகாதுகளில் நுழையவே பக்கத்தில் யாவர்களென்று பார்த்து இப்பூமியி னிடத்தில்

ஒருவரு மில்லரென்று சொல்லித் தமது திசையை நோக்கிச் சார வும், அம்மாடானது ஓசையோடும் அந்தவார்த்தைகளையே சொல்லி மறுத்தும் உமறென்று கூப்பிடச் செவ்வையாக நான்கு திக்குகளி லுமுள்ள எல்லாவிடங்ளிகலும் பார்த்தார். (கஅ)

கூறு மாந்தர்க ளிலெயெனப் பினும்வழி குறுக
வேறு கூவிய தெவரென மறுத்துமுள் ளிடைந்து
வேறு மாக்களைக் காண்கிலர் விடையினை நோக்கித்
தேறு மிவ்வுரை பகர்ந்ததிங் கெவரெனத் திகைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் பார்த்து வாய்திறந்து பேசும் மனிதர்கள் ஒருவரு மில்லரென்று சொல்லிப்பின்னரும் தமதுபாதையிற் பொரு ந்த மறுத்தும் கூப்பிட்டது. அப்போது அந்த உமறென்பவர் இவ் விதம் கூப்பிடுவோர் யாவரென்று தமது மனமானது வசக்கேட டைந்து தம்மையல்லாமல் மற்ற மனுஷியர்களை அங்குகாணுதவராய் அந்தக் காளை மாட்டைப் பார்த்துத் தெளிந்த இந்தவார்த்தைகளைச் சொன்னது இங்கே யாவரென்று சொல்லித் திகைப்படைந்தார். ()

பருந்தெ ழுங்கதிர் வேலும றெழின்முகம் பார்த்து
வருந்தி லாதுமைக் கூவிய தியானென மதித்துப்
பொருந்து மில்லிடந் தவிர்ந்தெவண் புகுவது புகழோய்
விரிந்த வாய்திறந் தறையுமென் றுரைத்தது விடையே.

(இ-ள்.) அப்போது அந்தக் காளை மாடானது பருந்துகள் எழாநிற்கும் பிரகாசத்தைக் கொண்ட வேலாயுதத்தை யுடைய உம றென்பவரின் அழகிய முகத்தைப் பார்த்து உம்மை மனசின்கண் கருதி வருந்ாது கூப்பிட்டது நான்தானென்று சொல்லிக் கீர்த்தி யை யுடைய உமறு கத்தாபே! நீவிர் பொருந்தும் வீட்டை விட்டும் விலகி எவ்விடத்திற்குச் செல்லுகின்றீர்? அச்சமாசாரத்தைஉமது விரிவுற்ற வாயைத்திறந்துஎன்னிடத்தில்சொல்லுமென்றுகேட்டது

ஞான மாமறை முன்னவர் மொழிகட ாவம
லீன மின்றிய தேவத மனைத்தையு மிகழ்ந்து
மானி லத்தினிற் புதிதொரு மார்க்கமுண் டாக்கித்
தீனெ னும்பெயர் நிறுத்தித்தன் னுரைப்படி திருத்தி

(இ-ள்.) அவ்விதம் கேட்கவேமகத்தாகிய அறிவைக்கொண்ட வேதங்களினது முன்னோர்களின் வார்த்தைக ளானவை நடைபெறு

மல் இழிவற்ற நமது தேவதங்க ளெல்லாவற்றையும் நிந்தித்துப் பெருமை தங்கிய இந்தப் பூலோகத்தில் நூதனமாக ஒருமார்க்கத்தையுண்டுபடுத்தி அதற்குத் தீனென்று சொல்லும் நாமத்தை நாட்டித் தனது சொல்லின் வண்ணம் யாவர்களேயும் திருந்தச் செய்து (உக)

இனமெ லாம்வெறுத் திடப்பகை யெனத்தலே யெடுத்துத்
துனிவி ளேத்திடு முகம்மதி னுடறுணி துணித்துச்
சினம கற்றுதற் கெழுந்தன னெனத்தெளிந் தெதிராய்
வினவு மேறுடன் மொழிந்தன ருமறெனும் வீரர்

(இ-ள்.) பந்துக்க ளெல்லாவரும் விரோதிக்கும் வண்ணம் விரோதியைப் போலத் தலேயெடுத்துத் துன்பத்தை யுண்டாக்கிடும் முகம்மதென்பவனின் சரீரத்தைக் துண்டாக வெட்டிஎங்களுடைய கோபத்தை நீக்குவதற்காய் எழும்பினே னென்று தேறுதலுற்றுத் தமக்கு எதிராகக் கேட்கும் காளே மாட்டுடன் உமறென்று சொல்லும் வீரத்தை யுடையவர் சொன்னூர். (உஉ)

ஆதி தூதரை வெறுத்துல கடங்கலுந் திரண்டு
வேத னேத்தொழில் விளேக்கினு மவர்வயின் விளேபா
தேத முற்றதும் மனமலி மிடரினேத் தவிர்ந்து
போதல் வேண்டுமா னுமக்கென மறுத்துரை புகலும்

(இ-ள்.) அவர் அவ்விதம் சொல்லவே அந்தக் காளேமாடானது இந்தப் பூமியின் கண்ணுள்ள ஜனங்க ளெல்லாவரும் ஒன்றுசேர்ந்து யாவற்றிற்கும் முதன்மையனுன ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் றசூலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலேகி வசல்ல மவர்களே விரோதித்து துன்பத்தை யுடைய செய்கைகளேச் செய்தாலும் அத்துன்பமானது அந்நபிகள் பெருமானவர்க ளிடத்திற் சம்பவியாது ஆதலால் குற்றமுற்றதான உமது மனதின்கண் பெருகாநிற்கும்துன்பத்தை யொழிந்து நீர் போகவேண்டுமென்று சொல்லி அவரின்வார்த்தைகளேமறுத்துச் சிலவார்த்தைகள் சொல்லும் (உங)

பரிக ரித்திரட் படையொடு நிலத்தினிற் பரப்பி
யரச ராயிர ரிகலினின் மனவலிக் கணுவே
திரம தாயினு முகம்மதி னிடத்தினிற் சேர
லுரம தன்றுநின் னூனது முரனல வுரவோய்

(இ-ள்.) வலிமையை யுடையவரான உமறு கத்தாபே! இந்தப் பூமியின்கண் கூட்டமாகிய சேனைகளுடன் குதிரைகளையும் யானைகளையும் பரவச்செய்து அரசர்கள் ஆயிரம்பேர் உம்மோடு பொருதினால் உமது இருதயவல்லமைக்கு அப்பொருதுதல் அணுப்போன்ற வலிமையேயானாலும் உமக்கு அங்கமிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் சென்று பொருத வல்லமை யில்லை உம்முடைய வல்லமையும் ஒருவல்லமை யல்ல. (௨௪)

படைக் கலத்திலொன் றெடுத்தறி யாப்பகுத் தறியா
விடைக்குண் மெல்லிய னிளமையன் றனியவன் வினையேன்
புடைக்குள் வீரத்தை விளைத்தியேன் முகம்மதின் புகழை
யுடைக்கு நின்வலி யென்பதை யறிவனென் றுரைத்த.

(இ-ள்.) அன்றியும், நான்யுத்தத்திற்குரியஆயுதங்களில்ஒன்றையாவது எடுத்தறியாத பிரித்துணராக் காளை மாட்டுகளுள் மெலிவையுடையவன். மேலும்இளமையையுடையவன் ஏகனானவன். வினையையுடையவனாகிய எனது பக்கத்துள் உமது வீரத்தை விளைப்பீரேயானால் நான் உம்முடைய வல்லமை அந்தமுகம்மதின் கீர்த்தியைத்தகர்க்கு மென்பதை உணர்வேனென்று சொல்லிற்று. (௨௫)

நந்தி யிவ்வுரை பகர்ந்திட நரபதி யுமறு
கந்த டர்த்தெறி களிறென விருவிழிக் கனல்கள்
சிந்தி டக்கரும் பிருகுடி நுதல்செலச் சினந்து
மந்திரக் கதிர் வாளெடுத் தசைத்தெதிர் வந்தார்.

(இ-ள்.) அந்தக் காளை மாடானது இந்தவார்த்தைகளைச்சொல்ல மனிதாதிபரான உமறென்பவர் கட்டுத்தறியை அடர்த்து வீசாநிற்கும் யானையைப்போல இரண்டு கண்களிலுமுள்ள நெருப்புகள்சொரியும்வண்ணம் கரிய புருவங்கள் நெற்றியிற் செல்லும்படிக் கோபித்து பிரகாசத்தை யுடைய மந்திரவாளைக் கையில் தூக்கியசைத்து அதன் முன்னாக வந்தார். (௨௬)

எதிர்த்து நின்றற வீசினர் வீசலு மிடபங்
குதித்து தம்வலப் பாரிச மாகின குறுகி
மதித்து வீசலு மிடப்புற மானது மறுத்தும்
பதித்து வீசலும் பிற்புற மானது பறந்தே.

(இ-ள்) அவ்விதம் வந்த அவர் அக் காளைமாட்டை எதிர்த்து நின்று அதின் சரீரமானது அற்றுப் போகும் வண்ணம் வாளினுல் வீசினுர். அவ்வாறு வீசின மாத்திரத்தில் அக் காளை மாடானதுதான் நின்றிருந்த இடத்தை விட்டும் சாடித் தமது வலப்பக்கமாகினது மறுத்தும் மனசின்கண் மதிப்பிட்டு அணுகி வீசலும் இடப்பக்க மாயினது. மறுபடியும் அழுத்தி வீசலும் கிளம்பிப் பின்புறமாயினது.

நான்கு திக்கினுங் குதித்துமுன் னணித்துற நடக்குந்
தேன்கு தித்தசெந் தொடைப்புய ருரத்தொடுஞ் சினந்து
வான்கு தித்தமின் னெனக்கர வாளொளி மயங்கத்
தான்கு தித்தனர் துரத்தினர் திரிந்தனர் சாரி

(இ-ள்) அவ்வாறு அக் காளைமாடானது நான்கு திக்குகளிலும் சாடி முன்னர்ச் சமீபமாய்ச் செல்லும். அதைப்பார்த்துத்தேனுனது குதிக்கப் பெற்ற செவ்விய மலர்மாலை யணிந்த தோள்களையுடையவரான உமறென்பவர் வலிமையுடன் கோபித்து வானிலிருந்து பாயாநிற்கும் மின்னலைப் போன்ற தமது கையின் கண்ணுள்ளவாளினது பிரகாசமானது மயங்கும் வண்ணம் சாடித் துரத்திவலசாரிஇடசாரி முன்சாரி பின்சாரியாக நான்கெல்லைகளிலும் திரிந்தார் (உஅ)

எட்டி யொட்டுவர் வெட்டுவர் வெட்டலு மிடபங்
கிட்டி டாதக லாதுடல் கிழிபட வெதிர்ந்து
முட்டித் தாக்குற வருவபோ லடிக்கடி முடுகுந்
தொட்டி டாதொழி யாதருஞ் சூறையிற் சுழலும்.

(இ-ள்) அன்றியும், தாவிப் பொருந்தி வெட்டுவார் அவ்விதம் வெட்டின மாத்திரத்தில் அந்தக் காளைமடானது அந்த வெட்டுக்கு அகப்படாமலும் அவ்விடத்தை விட்டு நீங்காமலும் எதிர்த்து அவரின் சரீரமானது கிழிபடும் வண்ணம் முட்டித்தள்ளும்படிவருவதைப்போல அடிக்கடி நெருங்கும் மேலும் அவரைத் தீண்டாமலும் அவரைவிட்டு மொழியாமலும் அரிய சூறைக்காற்றைப்போலச் சுழலாநிற்கும். (உகூ)

அடுத்து முன்னெதிர்த் திருவளை மருப்பினை யஃசக்கும்
வெடித்த வாலிரு புறத்தினு மடிக்கடி விசைக்கும்
படித்த லத்துகள் விசும்புறக் குளம்பினிற் பறிக்கு
மிடித்த வானுறு மேறென வதிர்ந்திடு மிடபம்.

(இ-ள்.) அன்றியும், அந்தக் காளை மாடானது அவ்வுமறென்பவரைச் சமீபித்து அவரின் முன்னாக எதிர்த்து வளைந்தஇரண்டுகொம்புகளையும் அசையும்படி செய்யும் பிளவுற்ற வாலினால் அடிக்கடி இருபக்கங்களிலும் அடிக்கும் பூமியின்கண்ணுள்ள தூளானது ஆகாயத்திற் பொருந்தும் வண்ணம் காற்களினது குளம்புகளினால் பூமியைப் பறியச் செய்யும் ஆகாயத்தின்கண் இடியாநிற்கும் இடியைப்போல ஒலிக்கும். (௩0)

கண்ணி னுக்கெதிர் தோன்றிடுங் காணொணு தகலும்
விண்ணி னிற்பறந் திடும்திசை விசும்பெலாந் திரியு
மெண்ணு முன்னுமுன் வந்திடுங் கான்மடித் தெதிரே
மண்ணி னிற்படுத் திடுங்குனிந் தெழுந்துவா னிமிர்க்கும்

(இ-ள்.) அன்றியும், கண்களுக்கு எதிராகத்தெரியும்காணொண்ணுது அவ்விடத்தை விட்டும் அகன்று செல்லும் ஆகாயத்தின்கண் பறக்கும், எண்டிசைகளிலும் அந்தர முழுவதிலும் திரியும் நினைப்பதற்கு முன்னும் முன்னராக வரும் நான்கு காலுகளையும் மடித்துக்கொண்டு எதிராகப் பூமியின்கண் படுக்கும் குனிந்து எழும்பிவாலை நிமிரும் வண்ணம் செய்யும். (௩௧)

இடப மிவ்வணந் திரிதர விருவிழி செவந்து
தொடரு வார்சுடர் வாட்கொடு தாக்குவர் துரத்தி
யடரு வார்மறிப் பார்திகைப் பாரடுத் தடுத்துக்
கடுவி சைகொளுங் காறளர்ந் திதழினைக் கறிப்பார்.

(இ-ள்.) அந்தக் காளை மாடானது இந்தப்படியாகத் திரிய உமறு கத்தா பென்பவர் இரண்டுகண்களும்செவப்புற்றுஅம்மாட்டைப் பின்பற்றிப் பிரகாசத்தை யுடைய வாளாயுதத்தைக்கொண்டு தாக்குவார், ஓட்டிக்கொண்டு நெருங்குவார் எதிர்த்துத் தடுப்பார், மயங்குவார், சமீபித்துச் சமீபித்துக் கடிய விசையைக் கொண்டதமது இருகால்களும் தளர்ச்சியுற்று உதடுகளைக் கடிப்பார் (௩௨)

கரத்தை நோக்குவர் வாளினை நோக்குவர் கடுப்பி
னெருத்தை நோக்குவர் வீரத்தை நோக்குவ ரெதிராத்
தரத்தை நோக்குவ ரவையினி லபூஜகி லுடனே
யுரைத்த வார்த்தையை நோக்குவர் நோக்குவ ருளத்தை

(இ-ள்.) அன்றியும், விரைவாய்த் தமதுகைகளைப்பார்ப்பார் வாளைப் பார்ப்பார். அந்தக்காளை மாட்டைப்பார்ப்பார். தமது வீரத்தைப்பார்ப்பார் அக்காளை மாட்டை எதிர்த்து ஜெயிக்காத ஒருதன்மையைப் பார்ப்பார். அபூஜகிலோடும் சபையில் பேசின வார்த்தைகளைப் பார்ப்பார் தமது இருதயத்தைப் பார்ப்பார். (ருங)

இன்றி ருந்தெழுந் திகலட லரிமுகம் மதுவை
வென்றி கொண்டன மிலையல திவணெறிமேவுங்
கன்றி னைக்கடிந் தோமிலை யெனமனங் கசங்கி
நன்று நன்றுநம் வீரமென் றகத்திடை நகுவார்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்த உமறுகத்தா பென்பவர் நாம் இன்றையத்தினம் அங்கிருந்து எழும்பி விரோதத்தைக கொண்ட வலிமையையுடைய சிங்கத்தை நிகர்த்த முகம்மதென்பவனை வெற்றி கொண்டோமில்லை. அல்லது இந்தப் பாதையின்கண் பொருந்தியகாளையாகிய மாட்டுக் குட்டியை வெட்டினோமில்லையென்று சொல்லி இருதயம் கசங்கப்பெற்று நமது வீரமானது நல்லது! நல்லது!! என்று மனசின்கண் சிரித்தார். (ருச)

முனிந்து புன்னகை கொண்டவா ளுமறைமுன் னடுத்துக்
குனிந்து பாதல மோந்துடல் குழைத்தறத் தூங்கிக்
கனிந்த வாயசைப் போட்டிரு காதினை யசைத்து
வனைந்த போலக லாதுநின் றதுமழை விடையே.

(இ-ள்.) அவ்விதம், கோபித்துப் புன்சிரிப்புக் கொண்ட வாளாயுதத்தை யுடைய உமறுகத்தா பென்பவரை இளம்பருவதையுடைய அந்தக்காளை மாடானது முன்னுகை நெருங்கித் தலையைத் தாழ்த்திப் பரப்பை யுடைய பூமியை முகந்துத் தனது சரீரத்தைக் குழையச் செய்து மிகவும் தூக்கமுற்றுக் கனியப்பெற்ற வாயை அசைபோட்டு இரண்டு செவிகளையும் அசையும்படி செய்து வளைந்ததைப் போல நீங்காது அவ்விடதிலேயே நின்றது. (ருரு)

ஏறு முன்னணித் திட்டதென் றெழிற்கர வாளான்
மாறி வீசினர் முடுக்கின ரடிக்கடி வளைத்துக்
கோறல் செய்குவ னியானெனக் குவலயங் குலுக்கச்
சீறி முன்னினு மும்மடங் கெனும்படி திரிந்தார்,

(இ-ள்.) அப்போது உமறுகத்தா பென்பவர் அந்தக்காளை மாடானது தமக்குமுன்னுகச் சமீபித்ததென்றுசொல்லி அழகியதமது கையிலிருந்த வாளினல் மாறிவீசி நெருக்கினர். அன்றியும், நான்உன்னைக் கொல்லுவேனென்று சொல்லி இப்பூமியானது குலுங்கும் வண்ணம் சிற்றமுற்று அடிக்கடி தடுத்து முன்னிலும் மூன்று பங்கென்று சொல்லும் வண்ணம் நான்கெல்லைகளிலும் திரிந்தார். ()

தொலைந்ததிவ்வணம் வெய்யவன் ருேன்றுமுன் றொடுத்திட்
டலைந்து லைந்திடைந் தறத்தவித் தசறுமட் டாகக்
கலைந்த தன்றியே றகப்பட விலையெனக் கலங்கி
மலைந் திடாமன மறுகுற வுமறுள மலைந்தார்.

(இ-ள்.) உமறென்பவர் இந்தப்படியாகச் சூரியன் உதயமாகுமுன்னர் தொட்டு அசறுவரைக்கும் அலைந்து உலைந்து வசக்கேடாகி மிகவும் தவிப்புற்று அக்காளைமாடானது கலைந்து நம்மைவிட்டுமொழிந்ததேயல்லாமல் நம்மிடம் அகப்படவில்லையேயென்று சொல்லிக் கலக்கமடைந்து தடுமாற்றமுருத தமது மனமானது சுழலும் வண்ணம் தடுமாற்றமுற்ருர். (௩எ)

மட்டு வார்பொழி னெறியிடை மழவிடை யெதிர்ந்து
வெட்டு மென்றுரை பகர்ந்ததும் வெகுளியி னடந்து
பட்ட செய்தியும் புதுமையு மூரவர் பலர்க்கும்
விட்டு ரைத்திட வேண்டுமென் றெழுந்தனர் விரைவின்.

(இ-ள்) அவ்வாறு தடுமாற்ற முற்ற உமறென்பவர் தேனுனது ஒழுகாநிற்கும் சோலைகளை யுடைய பாதையின்கண் இளம் பருவத்தையுடைய காளைமாடானது எதிர்த்து வெட்டுமென்று வார்த்தைகள் சொன்னதையும் கோபத்தோடும் சென்று தாம்பட்ட சமாசாரத்தையும் அதனுலுண்டான ஆச்சரியத்தையும் தமது ஊராகியதிருமக்கமா நகரத்தை யுடையவர்களான காபிர்கள் பலருக்கும் பிரித்துச் சொல்ல வேண்டுமென்று சீக்கிரமாய் எழும்பினர். (௩அ)

குறித்து வந்தவை விடுத்தெழு முமறினைக் கூவித்
தெறித்தநுண் டுளி முகிற்குடை முகம்மதைச் செகுப்ப
வெறித்த வெஞ்சின வீரத்தின் விழைவுக ளனைத்து
மறைத்தி ரோவெனப் புகன்றுபோ யதுமழ விடையே.

(இ-ள்.) அப்போது இளம்பருவத்தையுடைய அந்தக்காளை மாடானதுமனசின்கண் குறிப்பிட்டு வந்தவைகளைவிட்டு எழாநிற்கும் உமறு கத்தாபைக் கூப்பிட்டு நுண்ணிய திவலைகள் தெறிக்கும் மேகக்குடையை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கொலைசெய்யும் வண்ணம் ஆவேசமாகிய வெவ்வியகோபத்தைக் கொண்ட வீரத்தினது ஆசைப் பெருக்கங்களெல்லாவற்றையும்மறையச் செய்தீரோ? என்று சொல்லிப் போயிற்று. (ரு கூ)

கொண்ட வேகமும் வீரமும் புறந்தலை குனியக்
கண்டு காரணத் தொடுமிளைப் பருநெறி காட்ட
விண்டு திர்த்துமெய் வெயர்ப்பொடு மெல்லென நடந்து
மண்டு பேரவை யபூஜகி லிடத்தில்வந் தனரே.

(இ-ள். அந்தக் காளைமாடானது அவ்வாறு போகவே உமறுகத்தாபென்பவர் தாம்கொண்ட கோபமும் வீரமும் பின்னால் தலைசாயும் வண்ணம் கண்களினாற் பார்த்த காரணத்துடன் தம் மெலிவானது அரிய பாதையைக் காட்டும்படி வேறுபட்டு உதிர்க்கப்பெற்ற சரீரத்தின் வேர்வையோடும் பையப்பைய நடந்து நெருங்கிய பெரிய சபையையுடைய அபூஜகி லிடத்தில் வந்து சேர்ந்தார். (சூ0)

முகம லர்ச்சிகெட் டறத்தவித் துடல்வெயர் முழுகப்
பகும னத்தும றடைந்தவை யனைவரும் பார்த்து
முகம்ம தின்வயி னடைந்தது நடந்ததும் வகுத்துப்
புகரு றும்புக ழோயுரை யெனப்புகன் றனரே.

(இ-ள்) பிரிவைக்கொண்ட மனத்தை யுடைய உமறென்பவர் அவ்விதம் சந்தோஷமற்றுமிகவும் தவிப்புற்றுவெயர்வையினால்சரீரமானது முழுகும் வண்ணம் அங்குவந்து சேர்ந்தவைகளை யாவர்களும்பார்த்துக் குற்றமற்ற கீர்த்தியை யுடையவரே! நீவிர் முகம்மதென்பவனிடத்தில் போனதையும் அங்குநடந்ததையும் வகைப்படுத்திச்சொல்லு மென்று கேட்டார்கள். (சூக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறபிகள் குழுவி னுப்ப னமரபூ ஜகிலை நோக்கிப்
பொறைமதக் கரிகோ டேற்ற புரவல ருயிரை மாங்கிக்

கறைகெழூங் குருதி வைவேற் காவல ருமறு கத்தாப்
மறைபடா நெறியிற் கண்டபுதுமையை வகுக்க லுற்ருர்

(இ-ள்).அவர்கள் அவ்வாறுகேட்கவே மதத்தைக் கொண்ட கொம்புகளை யுடைய மலைபோன்ற யானைகளின்மீது பொருந்திய அரசர்களின் ஆவியைக் குடித்து இரத்தக்கறை நிறைந்த கூர்மை தங்கிய வேலாயுதத்தை யுடைய இராஜரான உமறுகத்தா பென்பவர் அறபிகளான காபிர்களின் கூட்டத்தினது மத்தியில் உறைந்திருக்கும் அபூஜகிலைப்பார்த்துத் தாம்பாதையின்கண் மறைவுபடாது தமதுகண்களினுற் பார்த்த அற்புதத்தை வகுத்துச் சொல்ல ஆரம்பித்தார்.

மண்ணினிற் றிசையிற் சூழ்ந்த மறிதிரைக் கடற்குள் வானேர்
விண்ணினிற் பெரியோராய்ந்த மெய்ம்மறை தனக்குட்டேர்ந்த
திண்ணிய ருரைக்குட் கேட்ட திலமனந் தெளிய வென்றன்
கண்ணினிற் கண்ட தியாருங் காணுணுப் புதுமை யென்ருர்.

(இ-ள்)இப்பூமியின் கண்ணும் திசைகளிலும் பூமியை வளைந்தமடங்காநிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தினுள்ளும் தேவர்களான மலாயிக்கத்து மார்களின் ஆகாயத்திலும் மேன்மையை யுடையவர்களால் ஆராயப்பெற்ற சத்தியத்தை யுடைய வேதத்தினுள்ளும் வலிமையை யுடையவர்களின் வார்த்தைகளி னுள்ளும் மனமானது தெளியும் வண்ணம் கேள்வியுற்றதில்லை.அன்றியும்,என்னுடையகண்களினுல் பார்த்தது யாவர்களும் பார்க்கமுடியாத அற்புதமென்று சொன்னுர். (சஙு)

சாத்திடைவிடையொன் றங்ஙன்றனித்துநின் றதிர்ந்தென்பேரை
யுரைத்தது விளிப்பக் கேட்டே னுணர்ந்தியா ரென்னநேர்ந்தேன்
விரைத்தலி னெங்கே கின்றீ ரெனவிறன் முகம்ம துற்ற
துரைத்தனக்குறும்புதீர்ப்பத்துணிந்தனென் றுரைத்தன்மாதோ.

(இ-ள்)யான் போனபாதையின் கண்ணுள்ள அவ்விடத்தில்ஒருகாளைமாடானது ஏகமாக நின்று ஒலித்து என் நாமத்தை கூறி அது என்னைக் கூப்பிடும் வண்ணம் எனது காதுகளினுற் கேள்வியுற்றதை மனசின்கண் தெரிந்து நம்மைக் கூப்பிடுகிறவர் யாவரென்றுநேர்ந்து பார்த்தேன். அப்போது அந்தக் காளைமாடானது நீவிர் விரைவோடும் எங்கேசெல்லுகின்றீரென்றுகேட்க,வலிமையையுடையமுகம்ம

தென்பவன் பொருந்திய அதிகாரத்தை யுடைய பொல்லாங்கை நீக்கும் பொருட்டு நிச்சயித்துச் செல்லுகின்றேனென்று சொன்னேன்.

இன்றெனை யடர்ந்தோர் செவ்வி யியன்முகம் மதுவை வென்றோ
ரென்றதற் கெதிர்ந்து கைவா ளெறிந்தன னூரத்திற் றாக்கி
நின்றனன் மறித்தே னெந்த நிலத்தினுந் தொடர்ந்து கானில்
சென்றனன் றவித்தே னென்னாற் செய்ததொன் றில்லை யன்றே.

(இ-ள்.) அதைக் கேட்ட அந்தக் காளை மாடானது இன்றையத் தினம்என்னைச் சண்டைசெய்து ஜெயித்தவர்கள் அழகிய ஒழுங்கை யுடைய அந்தமுகம்மதென்பவர்களை ஜெயித்தவர்கள் என்றுசொன்ன தற்காய் யான் எதிர்த்து எனது கையிலிருந்த வாளாயுதத்தினால் வீசிவலிமையோடும் அம்மாட்டைத்தாக்கி நின்றுதடுத்து எந்நிலங்களிலும்எனது காற்களினால் நடந்துப் பின்பற்றித் தவிப்படைந்தேன். ஆனால் இவ்வித மெல்லாம் சிரமப்பட்டும் அம்மாட்டை என்னாற் செய்தது யாதொன்று மில்லை. (சரு)

காற்றெனப் பறக்கு மூழிக் கனலெனச் சீறுங் கொல்லுங்
கூற்றென வெதிருஞ் செல்லிற் குயவரை யனைத்துஞ் சுற்றும்
தோற்றிடா விசும்பிற் றாவுஞ் சுழலுமட் டிகிரி யென்னச்
சீற்றமுற் றடுத்துப் பின்னு முன்னுமே திரியு மன்றே.

(இ-ள்) ஆனால்,அந்தக் காளைமாடானது காற்றைப் போலப் பறக்கும்.வடவாமுகாக்கினியைப்போலச்சீறும்.கொல்லாநிற்கும் எமனைப் போல எதிர்க்கும்.மேகங்களை யுடைய மேன்மை கொண்ட மலைகளெல்லாவற்றையும் சுற்றும்.கட்பார்வைக்குத்தோற்றாது ஆகாயத்தின்கண் தாவும். சுழலாநிற்கும் மண்ணினது சக்கிரத்தைப்போலக் கோபமுற்று நெருங்கி, பின்னாலு முன்னாலும் திரியும். (சசா)

அலகையின் குலமோ வானி னமரரி லொருவன் றானோ
வுலகுறுஞ் ஜின்னோ தெய்வ முருவெடுத் ததுவோ செவ்விச்
சிலைநுதல் கதீஜா கேள்வன் செய்தொழில் வஞ்சக் தானோ
நிலமிசை விடையாய்த் தோன்றி நின்றவம் மாயந் தானே.

(இ-ள்.) ஆதலால் இப்பூமியின்கண் காளைமாடாக உதயமாகிநின்ற அந்த மாயமானது,பைசாசங்களின்குலத்திலுள்ளதோ? அல்லதுவானலோகத்தின்கண்ணுள்ள தேவர்களானமலாயிக்கத்து மார்களிலொரு

வனோ? இவ்வுலகத்தின்கண் பொருந்திய ஜின்னோ? தெய்வ மானது உருவெடுத்த தோற்றமோ? அழகிய வில்லைப்போலும் நெற்றியை யுடைய கதீஜாவென்பவளின்நாயகனுன முகம்மது செய்யாநிற்கும் வஞ்சனைத் தொழிலோ? இவற்றில் இன்னதென்று யானறியேன்.

மாற்றுரை வேதம் பேசு முகம்மதைத் தேடிச் செல்லு
மாற்றிலிவ் விடையைக் கண்டேனசறுமட்டாகக் கண்ணிற்
றோற்றிடாத் துன்ப முற்ற புதுமையைத் தொகுத்து வல்லே
சாற்றுதற் கமைந்தேன் வீரந் தனைமறுத் திலனியா னென்றார்.

(இ-ள்.) ஆனல் யான் மாறுபாடானவார்த்தைகளைக்கொண்ட வேதத்தைச் சொல்லும் முகம்மதென்பவனை நாடிச் செல்லுகின்ற பாதையின்கண் இந்தக் காளைமாட்டைப் பார்த்து அசறுவரையும் கண்களில் தோற்றாத வருத்தத்தை யடைந்த ஆச்சரியத்தை ஒழுங்காய் உங்களிடத்திற் சொல்லுவதற் காகச் சீக்கிரமாய் இங்கு வந்து பொருந்தினேன். எனது வீரத்தையான்மறுத்திலேனென்றுசொன்னார்.

கொடுவரி யனைய கத்தாப் குமரரீ துரைப்பக் கேட்டு
விடமெனக் கறுத்துச் சிந்தை விறலபூ ஜகிலுஞ் சுற்றி
யுடனிருந் தவருந் தம்மி லொண்புயங் குலுங்க நக்கி
யடலுறு முமறு கத்தா பணிமுக நோக்கிச் சொல்வார்.

(இ-ள்.) வேங்கையைநிகர்த்த கத்தாபென்பவரின்புதல்வரான உமறென்பவர் அவ்வாறு சொல்ல வலிமையை யுடைய அபூஜகி லென்பவனும் அவனுடன் சூழ்ந்திருந்தவர்களாகிய மற்றும் காபிர்களும் தங்களின் காதுகளினுற் கேள்வியுற்றுமனமானது விஷத்தைப்போலும் கறுப்படைந்து ஒருவருக் கொருவர் தங்களின் ஒள்ளிய தோள்கள்குலுங்கும் வண்ணம் சிரித்து வலிமை பொருந்திய அவ்வுமறு கத்தா பின் அழகிய முகத்தைப் பார்த்துச் சொல்லுவார்கள். (௪௯)

ஈதொரு புதுமை யாக வெண்ணிநீ ருரைத்திர் வேத
மாதவன் முகம்ம தென்போன் வளர்த்தவஞ் சனைக்கு ணூறு
பேதமொன் றதற்குக் காணு திதனைநீர் பிதற்றிப் பேச
றீதுறு மிவைபோ லியாங்கள் கண்டதுந் தெரிக்கொணாதே.

(இ-ள்.) நீவிர் இதையொரு ஆச்சரியமாக மனசின்கண் நினைத்துச் சொல்லவந்தீர்' ஆனுல் இது வேதத்தினது மகாதவத்தை யுடையவனுன அந்த முகம்மதென்பவன் உண்டாக்கிய வஞ்சனைகளுக்குள் நூறுபகுப்பான ஒன்றிற்குப் பற்ருது. இவ்வாச்சரியத்தை நீவிர்பலகால்பேசுவதினல் தீதுண்டாகும். இவைபோல நாங்கள் பார்த்ததையுந் தெரிவித்துச் சொல்லமுடியாது. (ருo)

இன்னமு மிவைபோ லூரு யிரம்விதங் கண்ணுற் ருலு
மன்னவன் விளைக்கும் வஞ்ச மதனைநீ ரமைத்தல் வேண்டும்
பன்னுத லெவருங் கேட்பிற் பழுதுறும் பருதி வேலோய்
முன்னுமுன் கருத்தி னுன்னும் படிமுடித் திடுமி னென்ருர்.

(இ-ள்.) இன்னமும் சூரியனையொத்த வேலாயுதத்தை யுடையவரே! இவைபோல இலட்சம் விதம் நீவிர் பார்த்தாலும் மன்னவனுன அந்த முகம்மதென்பவன் செய்யும் வஞ்சகத்தை, அமைத்தல் வேண்டும். அவ்விதம் அமைக்காது வெளியிற் சொல்லுவதை யாவர்களும் கேட்பார்களே யானல் அதனல் குற்றமுண்டாகும். ஆதலால் ஆதியில் உம்முடைய கருத்தில் நினைத்தவண்ணம் செய்து முடித்திடுமென்று சொன்னுர்கள். (ருக)

பொய்யினைப் புகலேன் கண்ட புதுமையைப் புகன்றேன் ருென்று
மெய்யினைப் பொய்யென் ருேத லியாவர்க்கும் விதிய தன்றே
யையுற லுரைக்க லாகா ததிசய மறைக்க லாகா
வையகத் தியற்கை யீதென் றுமறிவை வழங்கிப் போனர்.

(இ-ள்) அவர்கள் அவ்விதம் சொல்லவே உமறுகத்தா பென்பவர் நான் பொய்மையான வார்த்தைகளைச் சொல்லமாட்டேன் கண்களினுற் கண்ட ஆச்சரியத்தைச் சொன்னேன். தோற்றப்பெற்ற மெய்மையான செய்தியைப் பொய்மையென்று சொல்லுவது யாவர்களுக்கும் கட்டளையல்ல, சந்தேகப் படுவதைச் சொல்லலாகாது, ஆச்சரியமானவற்றை மறைக்கலாகாது. இஃது இந்தப்பூலோகத்தினது சுபாவமென்று இவைகளைச் சொல்லிவிட்டுத் தமது திசையைநோக்கிச் சென்ருர்: (ருஉ)

அற்றைநாட் கழிந்த பிற்றை யடனும றெழுந்து செவ்வேற்
கொற்றவ ரப்துல் லாதங் குமரரைக் கோறல் வேண்டி

முற்றிய மனத்தி னேடு முரண்மதக் கரியை நேராய்
வெற்றிவெண் கதிர்வாட் டாங்கி நடந்தனர் விளைவ தோரார்.

(இ-ள்.) அவ்விதம் சென்ற உண்டாகா நிற்கும் காரணத்தைய றியாதவரான வலிமையையுடைய உமறென்பவர் அன்றையத்தினம் போய் மறுநாள் எழும்பிச் செவந்தவேலாயுதத்தையுடைய அரசராகிய அப்துல்லா வென்பவரின் புதல்வரான நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கொலைசெய்யவேண்டி முதிர்ந்த மனசினுடன் அமையாமையைப்பெற்ற மதத்தைக் கொண்ட யானையை யொத்து விஜயத்தை யுடைய வெள்ளிய பிரகாசம் பொருந்திய வாளாயுதத்தைக் கையில் தாங்கிக்கொண்டு அங்நபிகள் பெருமானவர்கள் இருக்கும் திசையை நோக்கி நடந்து சென்றார். (ருங)

நடுவுறு மனத்தார் நீதி நான்மறை தெரிந்த நாவார்
படிறுரை பகராச் செவ்வி யறபிகள் பல்லர் கூடி
யுடனெரு வழக்கைத் தேற்றித் தேறிலா தொளிருஞ் செம்பொற்
கொடுமுடி விசும்பு தூண்டுங் கோயிலின் வாயிற் புக்கார்.

(இ-ள்.) அப்போது நீதியானது பொருந்திய மனத்தையுடையவர்களும் சத்தியத்தை யுடைய நான்கு வேதங்களையுமுணர்ந்த நாவை யுடையவர்களுமாகிய பொய்யான வார்த்தைகளைச் சொல்லாத அழகிய அறபிகளனேகர் ஒருவரோடொருவர்சேர்ந்து ஒரு நியாயத்தைத்தீர்த்தும் தீராதுப் பிரகாசிக்கின்ற செவந்த பொன்னினுற் செய்த சிகரமானது ஆகாயத்தைத் தூண்டாநிற்கும் ஒருகோயிலினது வாயலின்கண் போய் நுழைந்தார்கள். (ரு௪)

ஆலயம் புகுந்து செந்தே னலங்கலுரேய் சுவாகு பூம்பொற்
காலிணை யிறைஞ்சி யேத்திக் கைமுகிழ்த் திருந்து நோக்கி
மேலவ வெங்கட் குற்ற வழக்கினை விளங்கக் கேட்டுச்
சாலவுந் தீர்த லாகச் சாற்றுதல் வேண்டு மென்றார்.

(இ-ள்.) அவ்வாறு அவர்க ளியாவர்களும் அந்தக் கோயிலின் கண்போய் நுழைந்துசெவந்ததேனையுடைய மலர்மாலைகளினால் தோயப் பெற்ற சுவாகென்று சொல்லும் விக்கிரகத்தின் தாமரைப்புஷ்பம் போன்ற அழகிய இருபாதங்களிலும் வணங்கித் துதித்து இரண்டுகைகளையும் குவித்து அவ்விடத்தில் தங்கியிருந்து அவ்விக்

கிரகத்தைப்பார்த்து மேன்மை யுடைய சுவாமியே! எங்களிற்பொருந்திய நியாயத்தை விளங்கும் வண்ணம் கேள்வியுற்று மிகவும் நிசமாகத்தீர்ப்புச்சொல்ல வேண்டு மென்று கேட்டார்கள். (ருரு)

தோட்டலர் நாற்றும் வாயிற் சுவாகெனும் புத்துத் தன்னை
வாட்டிறத் தறபி வீரர் மகிழ்ந்தெமர் வழக்கி னுட்பப்
பூட்டறுத் துரைக்க வெண்டு மெனப்புகழ்ந் திருக்குங் காலை
நீட்டிய கதிர்வேற் செங்கைத் திறலும றவணின் வந்தார்.

(இ-ள்.) வாளினது வல்லமையை யுடைய அறபிகளான அந்த வீரர்கள் அவ்வாறு மனமகிழ்ச்சி யடைந்து எங்களுடைய நியாயத்தின் நுட்பத்தினது கொழுவுதலை யறும்படி செய்துத் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று இதழ்களை யுடையமலர் மாலைகளைத் தூக்கிய வாயலினது அந்தச் சுவாகென்று சொல்லும் விக்கிரகத்தைத் துதித்துக்கொண்டு இருக்கின்ற சமயத்தில் நீட்டப்பெற்றபிரகாசத்தைக் கொண்ட வேலாயுதத்தை யுடைய செவந்த கையினது வல்லமை தங்கிய உமறுகத்தாபென்பவர் அங்குவந்து சேர்ந்தார். (ருசு)

வகையறு வழக்குத் தீர்த்துத் தருகென மன்னர் சூழ்ந்த
தொகையினி லுமரென் றேருதுந் தோன்றலு மிருப்பக் கண்டுத்
திகைதெரி விளக்க மாகச் சுவாகெனுந் தெய்வம் வாய்விண்
டகமகிழ்ந் தவையோர் கேட்ப நன்மொழி யாய்ந்து சொல்லும்,

(இ-ள்.) அப்போது சுவாகென்று சொல்லும் அவ்விக்கிரகமானதுகாரண மின்னதென்று மனசின்கண் அறுத வழக்கைத்தீர்த்துத் தருவாயாக வென்று அரசரான அறபிகள் வளைந்த கூட்டத்தில் உமறென்று சொல்லும் மன்னவரும் இருக்கும்படி பார்த்து எண்டிசைகளிலும் தெரியும்வண்ணம் விளக்கமாகத் தனது வாயைத் திறந்து மனமகிழ்ச்சி யடைந்து அச்சபையோர்க ளெல்லாவரும் கேட்கும்படி நல்லவார்த்தைகளை ஆராய்ந்து சொல்லும். (ருஎ)

மதிகதி ரவனி காயம் வானமற் றெவையும் போற்றும்
புதியவ னுண்மைத் தூதர் நபிகளிற் புகழின் மிக்கோர்
பதியிரண் டினுக்கு மேலோர் படைப்புள வெவைக்கு முன்னோர்
கதிதருங் காட்சி பெற்ருேர் ஹபீபெனு முகம்ம தென்போர்.

(இ-ள்.) ஹபீபென்று சொல்லும் காரணப் பெயரை யுடைய முகம்மதென்று சொல்லப்பட்டவர். சந்திரன், சூரியன், பூமி, ஆகாயம், வானமுதலிய மற்ற எல்லாப்படைப்புகளும் துதியாநிற்கும் புதிய ஆலத்தையுடையவனுன ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் சத்தியத் தூதர். அன்றியும், நபிமார்களில் கீர்த்தியினால் மிகுந்த கீர்த்தியை யுடையவர். இம்மை மறுமையென்னும் இரண்டு பதிக்கும் மேன்மையை யுடையவர். படைப்பாகவுள்ள யாவற்றிற்கும் முதன்மையானவர் மோட்சத்தைத் தாராநிற்கும் அற்புதத்தைப் பெற்றவர்.

அன்னவர் முன்ன ரேகி யவர்நிலை கொண்ட தீனின்
சொன்னயக் கலிமா வோதித் துணைமல ரடியைப் போற்றிப்
மன்னுமா மறையின் றீஞ்சொற் படிவழு வாது நேர்ந்து
பொன்னுமா மணியும் போலப்பொருந்துத லெவர்க்கும்வேண்டும்

(இ-ள்.) அந்தமுகம்ம தென்பவரின் முன்னர்ச் சென்று அவரின் நிலைமையைக் கொண்ட தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது சொல்லின் நயத்தை யுடைய "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர்றசூலுல்லாகி" என்னும் கலிமாவைச் சொல்லி அவரின் தாமரைமலர்போன்ற இருபாதங்களையும் துதித்துப் புகழாநிற்கு மகத்தான வேதத்தினது இனிய வார்த்தைகளின் வண்ணம் தவறாது உடன்பட்டுப் பொன்னையும் பெருமை பொருந்திய இரத்தினத்தையும் போல இசைவது யாவர்களுக்கும் வேண்டும். (௫௯)

தேவநன் மொழியென் றென்சொற் சிந்தையிற் சிந்தித் தோர்கள்
காவல ரெவர்க்கு மேலாய்க் காசினிக் கரச ராகிப்
பூவலர் சுவன நாட்டைப் பொதுவறப் புரப்போராகி
மேவுதீ வினைக டீர்த்து வேதநல் லறிவ ராவார்.

(இ-ள்.) ஆதலால் என்னுடைய வார்த்தைகளை நன்மைபொருந்தியதெய்வ வாக்கியமென்று மனசின்கண் எண்ணினவர்கள் அரசர்களியாவர்களுக்கும் மேன்மையராகி இந்தப் பூலோகத்திற்கும் இராஜாகிப் புஷ்பங்கள் மலராநிற்கும் சோலைகளை யுடைய சொர்க்க லோகத்தை ஏகமாக ஆட்சி செய்வோராகிப் பொருந்திய பாவங்களும் தீரப்பெற்று வேதத்தினது நல்ல அறிவை யுடையவர்களாவார்கள். (௬௦)

வருந்திடா தகலு நுந்த மனத்துறை வழக்கின் சொல்லைத்
திருந்திட வுரையு நீதிச் செவ்வியன் முகம்ம தின்சொற்
பொருந்திட நடவு மென்முன் புகல்வது புந்தி கேடென்
றிருந்தவப் பெயருக் கெல்லா மிணையன வியம்பிற் றன்றே.

(இ-ள்.) ஆதலால் நீங்கள் வருத்தமுறாது அகன்று சொல்லுங்கள் உங்களுடைய மனத்தின்கண் தங்கிய வழக்கினது வார்த்தைகளைத்திருந்தும்படி முகம்மதிடத்திற் சொல்லுங்கள். செவ்வையான நியாயத்தினது ஒழுங்கையுடைய அந்த முகம்மதின் வார்த்தைகளைக் கேட்டுப் பொருந்தும்வண்ணம் நடவுங்கள். எனது முன்னர் சொல்லுவது உங்களின்புத்திகேடென்று அங்கு தங்கியிருந்த அவ்வறபிகளெல்லாவருக்கும் இப்படிப்பட்டவைகளைச் சொல்லிற்று. ()

புத்துநன் குரைத்த மாற்றம் புதுமையென் றெவரும் போந்தார்
மத்தகக் கரடக் கைமா மடுத்தெறிந் துதிரஞ் சிந்துஞ்
சித்திர வடிவாட் செங்கை யுமறெனுஞ் செம்மல் வேற்றி
னுத்தரந் தனையு மிந்த வுறுதியு நினைத்துத் தேர்ந்தார்.

(இ-ள்.) அந்த விக்கிரகமானது அவ்வாறு நன்றாகச்சொல்லிய சமாச்சாரங்களை அங்கு தங்கியிருந்த யாவர்களும் ஆச்சரியமென்று சொல்லிப் போயினார்கள். அப்போது மத்தகத்தைக்கொண்ட மதங்களையுடைய யானைகளை வெட்டி அவற்றின் இரத்தத்தை யுண்டு சிந்தாநிற்கும் அழகியகூர்மைதங்கிய வாளாயுதத்தைப்பெற்ற செவந்த கையையுடைய உமறென்று சொல்லும் செம்மலானவர் முன்னைநாள் சந்தித்த காளைமாட்டினது உத்தரத்தையும் இந்தநிண்ணயத்தையும் மனசின்கண் எண்ணித் தெளிவடைந்தார். (சஉ)

நென்னலேற் றுரையுந் தெய்வ நிகழ்த்திய மொழியும் பார்த்து
முன்னுறு காட்சி யேதோ முடிவதொன் றுளதென் றெண்ணித்
தன்னகத் திருத்திச் செவ்வி முகம்மதின் சார்பை மிட்டு
மன்னுசோ தரியென் றோதும் பாத்திமா மனையிற் சென்றார்.

(இ-ள்.) அவ்வாறு தெளிவடைந்த உமறென்பவர் முந்தின நாளில் அந்தக் காளைமாடு பேசின வார்த்தைகளையும் தற்சமயம் தெய்வமாகிய விக்கிரகம் சொல்லிய வார்த்தைகளையும் பார்த்து ஆதியிற் பொருந்தியஅற்புதனமானது யாதோஒன்றுமுடியவேண்டியதுண்டு

மென்று நினைத்து அதைத் தமது மனசின்கண் இருக்கும்படிசெய்து தாம் போகவேண்டிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் இடத்தைவிட்டும் திருப்பிப் பொருந்திய தமது சகோதரியென்று சொல்லும் பாத்திமா அவர்களின் வீட்டிற்கு வந்தார்.

திருமயில் பாத்தி மாவுஞ் செவ்வியல் ஸஹீதுந் தேன்சோர்
மருமலி படலைத் திண்டோண் முகம்மதின் கலிமா வோதிக்
குருநெறி ஹப்பா பென்னுங் குரிசின்முன் னிருந்து செல்வம்
பெருகிய மறைநேர் கேட்டுப் பிரியமுற் றிருக்குங் காலை.

(இ-ள்.) அவர் அவ்வாறு வரவே அழகிய மயிலான பாத்திமா அவர்களும் அவர்களின் நாயகராகிய செவ்வையான ஒழுங்கையுடைய ஸகிதென்பவர்களும் தேனனது நெகிழப்பெற்ற வாசனை யதிகரியாநிற்கும் மலர்மாலையணிந்த திண்ணிய புயங்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சலிமாவைச் சொல்லிக் குருவின்முறைமையையுடைய ஹப்பாபென்றுசொல்லும் குரிசிலானவர்களின் முன்னாகத் தங்கியிருந்து இன்பமிகுத்த புறக்காஹுல் அலீமென்னும் வேதத்தினது உண்மைகளைக் கேட்டு உவகையடைந்திருக்கும் சமயத்தில். (௬௪)

எறும்வலித் தடக்கை வெற்றி யெழிலும திவணி னம்பாற்
குறுகின ரென்னச் செல்வக் குலக்கொடி பாத்திமாவும்
பெறுகதி ஸஹீதுந் தம்மிற் பேதுற்று நெறிஹப் பாபை
மறைபட விருத்திச் செவ்வி மனைத்திரு முன்றி னின்றார்.

(இ-ள்.) மிகுத்த வல்லமைதங்கிய பெரிய கைகளைக் கொண்ட விஜயத்தையுடைய அழகிய உமது கத்தாபென்பவர் இங்கு நம்மிடத்தில் குறிகினரென்று செல்வத்தையுடைய தமது குலத்திற்குக் கொடிபோலும் பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களும் கதியைப் பெற்ற சஹீது றலியல்லாகு அன்கு அவர்களும் தங்களில் மதிமயங்கி சன்மார்க்கத்தையுடைய ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்களை மறையும்வண்ணம் இருக்கும்படிசெய்து தாங்கள் அழகிய செல்வத்தையுடைய வீட்டினது முற்றத்தில் வந்து நின்றார்கள். ()

மென்னபிக் கீமான் கொண்டோ ரிவரெனும் வெறுப்பி னாலும்
பன்னுமா மறைச்சொ லில்லுட் பகர்ந்ததோ ரையத் தாலு

மன்னிய சில நீக்கி மைத்துனர் ஸஹீதைக் கோபித்
தின்னுயிர் தடிவே னென்ன விருவிழி கனல நின்றார்.

(இ-ள்.) அப்போது உமறு கத்தா பென்பவர் இவ்விருவர்களும் மென்மையையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு ஈமான் கொண்டவர்களென்று சொல்லும் சினத்தினாலும் வீட்டினகம் புகழாநிற்கும் மகத்தான வேதவாக்கியமோதிய ஒரு சந்தேகத்தினாலும் பொருந்திய தமது சுபாவத்தையொழித்து இரண்டு கண்களிலும் நெருப்பானது எரியும்வண்ணம் தமது மைத்துனரான சகீது றலியல்லாகு அன்கு அவர்களைக் கோபித்து இனிமைதங்கிய உம்முடைய ஜீவனைக் குறையச் செய்வேனென்று சொல்லி நின்றார். (சுசு)

கணவனைச் சினந்தா ரென்னக் காரிகை பாத்தி மாகண்
டிணைவிழி முத்தஞ் சிந்த வின்னுயிர்ப் பிறப்பை நோக்கி
மணவலித் தடக்கை வேந்தே மறுவலர் போலச் சீற
லணவது நுமக்கென் றோதி யடர்த்ததை விலக்கா நின்றார்.

(இ-ள்.) அந்நேரத்தில் காரிகையாகியபாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் தங்களின் நாயகரான ஸகீதுறலியல்லாகு அன்கு அவர்களை உமறுகத்தாபென்பவர் கோபித்தாரென்று மனசின்கண் நினைத்துத் தங்களின் இரண்டு கண்களிலுமிருந்து முத்துப்போலும் கண்ணீரானது சொரியும்வண்ணம் இனிய உயிர்போன்ற சகோதரைப்பார்த்துக் கூட்டமாகிய வல்லமையைக்கொண்ட பெருமை பொருந்திய கையையுடைய அரசரானவரே! நீவிர் சத்துராதிகளைப்போலக் கோபிப்பது உமக்குப் பொருந்தாதென்று சொல்லி அவர் நெருக்கியதை விலக்கினார்கள். (சுஎ)

மடித்தவா ளெயிறு கவ்வி நின்றமன் மடந்தை தன்னை
வெடித்திட வுறுக்கிக் கூறி விழிக்கனல் சிதறச் சீறி
யெடுத்ததோர் கரத்திற் றண்டா லிலம்பிறை நுதற்கு மேல்பா
லடித்தன ருதிர மாரி யாறுபட் டொழுகிற் றன்றே.

(இ-ள்.) அவ்வாறு விலக்கவே ஒள்ளியபற்களினால் மடித்த அதரத்தைக் கடித்துநின்ற அரசரான உமறுகத்தா பென்பவர்மடந்தையாகிய தமது சகோதரி பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களை

விரோதித்துக் கடிய ஓசையுடன் பேசி இரண்டு கண்களிலு மிருந்து அக்கினியானது சிந்தும்வண்ணம் சிற்றமுற்று ஒப்பற்றகையின் கண் எடுத்த தண்டாயுதத்தினால் இளம்பருவத்தையுடைய சந்திரன் போன்ற நெற்றியினது மேற்பக்கத்தில் அடித்தார். அவ்வடியினால் இரத்த மழையுண்டாய் ஆறாக ஒழுகிற்று. (௬௮)

சிரசுடைந் துதிரஞ் சிந்தித் தேங்கிய மயிலை நோக்கி
விரிகதிர் பணிப்பைம் பூணார் வெகுளியுள் ளடங்க வேங்கி
யரிவைநும் மனைக்கு ணீவி ரடிக்கடி யோதி யோதிப்
பரவிய மாற்ற மென்னே தெளிதரப் பகர்மி னென்றார்.

(இ-ள்.) அவ்வாறு தலைபானது தகர்ந்து இரத்தம் சொரிந்து நிறையப்பெற்ற மயிலாகிய பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களைப் பார்த்து விரிந்த கிரணங்களைக் கொண்ட வேலையையுடைய பசிய ஆபரணங்களைப் பெற்றவரான உமறுகத்தா பென்பவர் தமது கோபமானது மனசின்கண் அமையும்வண்ணம் இரக்கமுற்று அரிவை யானவரே! நீவிர் உமது விட்டினகம் அடிக்கடிப் படித்து படித்து வணங்கிய சொல்லானது யாது ? அதைத் தெளியும்படி எனக்குச் சொல்லுமென்று கேட்டார். (௬௯)

படித்தசொ லியாது வேறு பகர்ந்தவ ரெவர்கொ லென்ன
வடித்தடங் கதிர்வேன் மைக்கண் மடமயின் மறைத்துக் கூறக்
கடித்தடக் கரத்து வேழக் காவலர்க் கசனி யொப்பார்
பிடித்தசொற் றனைம றாது விருப்புற்றுப் பின்னுங் கேட்டார்.

(இ-ள்.) அவ்வாறு கேட்கவே அதற்குக் கூர்மைதங்கிய பெருமையான பிரகாசமமைந்த வேலாயுதம்போலும் மையுண்ட கண்களையுடைய பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் இங்கே படித்த சொல்லானது யாது? அதைப் படித்தவர் வேறே யாவர்? ஒருவரு மில்லரென்று மறைத்துச்சொல்லப், பின்னரும் உவகையுற்று மதத்தைப்பெற்ற பெரிய திதிக்கையையுடைய யானைகளினது இராஜர்களுக்குச் சிங்கத்தை நிகர்த்தவரான உமறுகத்தா பென்பவர் தாம் பிடித்த வார்த்தையை மறுக்காது கேட்டார். (௭௦)

உடன்பிறந் திகலா நின்ற வுமறெனு முயிரை நோக்கி
மடந்தையர் திலக மன்ன பாத்திமா மணிவாய் விண்டு

இடங்கவ ழுண்மை வேதந் தெளிந்தசொல் லதனைத் தீனைக்
கடந்தவர் புனித மில்லார் கரத்தளிந் திடறீ தென்ருர்.

(இ-ள்.) அவ்விதம் கேட்கவே பெண்களுக்குத்திலதத்தை யொத்தபாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் தம்முடன் அவதரித்து விரோதிக்கின்ற உமறென்பவரைப் பார்த்துத் தங்களின் அழகிய வாயைத்திறந்து வலிமையானது தவழுகின்ற சத்தியத்தையுடைய புறுக்கானுல் அலீமென்றுசொல்லும் வேதத்தினது தெளிந்தவார்த்தைகளை அவ்வார்த்தைகளுக் குரிய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தைவிட்டும் தாண்டினவர்களான பரிசுத்த மற்றவர்களின் கைகளில் கொடுப்பது குற்றமென்று சொன்னுர்கள். (எக)

முன்னவள் கனிவாய் விண்டு மொழிந்தசொன் மனத்துட்கொண்டு
மன்னவ னபுல்கா சிந்தன் மனத்தெளி வதனின் மிக்காய்ப்
பன்னருஞ் சிறப்பு வாய்ந்த பங்கய வாவி நண்ணித்
தென்னுறு கதிர்வேற் சிங்கஞ் சீதநீ ராடி ஞரால்.

(இ-ள்.) அவ்வாறு தமது தமக்கையாரான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் தங்களின் கொவ்வைக் கனிபோன்ற வாயைத்திறந்துசொல்லிய வார்த்தைகளை அழகிய பிரகாசந்தங்கிய வேலாயுதத்தையுடைய சிங்கமாகிய உமறென்பவர் தமது மனசினகம் கொண்டு இராஜரான இந்நாவின் கொடை நாயகர் அபூல் காசிம் மரைக்காய ரவர்களின் மனத்தெளிவிலும் மிகுந்த தெளிவாய்ச் சொல்லுதற்கரிய வரிசை பொருந்திய தமரைப் புஷ்பங்களையுடைய ஒரு தடாகத்தைநெருங்கிக் குளிர்ச்சியுற்ற அத்தடாகத்தினது நீரின்கண் ஸ்நானஞ்செய்தார். (எஉ)

புனைந்தமென் றுகிலை நீத்து வேறொரு புதிய தூசும்
வனைந்தகம் புனித மாக்கி வாவியங் கரையை நீக்கிச்
சினந்தங்கு கதிர்வேற் கண்ணு டிருமனை புகுந்து நீவிர்
நினைந்தவை முடித்தே னியானு நிகழ்த்திய தருள்க வென்ருர்.

(இ-ள்.) அவ்விதம் ஸ்நானஞ்செய்த அவர் தாம் முன்னர் தரித்திருந்த மெல்லிய வஸ்திரத்தை யொழித்து வேறேயொரு நூதனமாகிய வஸ்திரத்தையுந் தரித்து மனசைப் பரிசுத்தமாகச் செய்து அந்தஅழகியகுளக்கரையை நீத்துக்கோபமானது தங்காநிற்குப்பிர

காசத்தையுடைய வேலாயுதம்போலும் கண்களை யுடையவர்களான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்களின் தெய்வீகம் பொருந் தியவீட்டின்கண் நுழைந்து நீவிர் எண்ணியவைகளைச் செய்து முடி த்தேன். யானும் கேட்டதைத் தாருமென்று கேட்டார். (எ௩)

சுந்தரப் புதுநீ ராடித் தூசணிந் திகலி லாது
வந்தபின் ஞேனை நோக்கி முகம்மதே யுண்மைத் தூதென்
றந்தமி லாது சொற்ற வாயத்தும் பொருளுந் தீஞ்சொற்
சிந்துபத் திரத்தை யீந்தார் சிற்றிடை பெரிய கண்ணார்.

(இ-ள்.) அவ்வாறு கேட்கவே சிறியஇடையையும் பெரிய கண் களையு முடையவரான பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் அழகிய புதிய ஜலத்தில் ஸ்நானஞ்செய்து வஸ்திரமணிந்து விரோ தமில்லாது வரப்பெற்ற தங்களின் தம்பியாகிய உமறென்பவரைப் பார்த்து நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களே சத்தி யத்தையுடைய றசூலென்று முடிவற்றவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவானவன் சொன்ன ஆயத்தும் அதின் அர்த்தமுமாகிய இனிய சொல்லானது சிந்தாநிற்கும் ஒரு கடிதத்தை எடுத்துக்கொ டுத்தார்கள். (எ௪)

பத்திரங் கரத்தில் வாங்கிப் பார்த்திவ ருமறு கத்தாப்
சித்திர வரியி லொன்றைத் தெளிவுறத் தேர்ந்து வாசித்
தித்தகைக் குரிய ரியாவ ரெவர்மொழி யிதுகொ லென்னப்
புத்தியுட் களித்துத் தேறிப் பொருவிலா வுவகை பூத்தார்.

(இ-ள்.) பாத்திமா றலியல்லாகு அன்ஹா அவர்கள் அவ்வாறு கொடுத்த கடிதத்தை அரசரான உமறுகத்தா பென்பவர் தமது கைகளினால் வாங்கி அதிலிருந்த அழகிய வரிகளில் ஒரு வரியைத் தேரும்வண்ணம் படித்துத் தெளிந்து இந்தத் தகுதிக்குச் சொந்த மானவர் யாவர்? இஃது யாருடைய வார்த்தைகளென்று சொல்லித் தனது புத்தியினகம் சந்தோஷித்துத் தேர்ந்து ஒப்பற்ற விருப்பமு ற்றார். (எ௫)

மறைமொழிப் பொருளைத் தேர்ந்து மானுடர்மொழியீதன்றென்
றிறையவன் மொழியே யென்ன விதயத்தி லிருத்தி வேத
நிறைநிலை மனத்த ராகி நினைத்தவஞ் சகத்தைப் போக்கிக்
குறைபடுங் குபிரைச் சூழ்ந்த குலத்தொடும் வெறுத்து நின்றார்.

(இ-ள்.) அவ்விதம் விருப்பமுற்ற உமறுகத்தா பென்பவர் அந்த வேதவாசகத்தின் அர்த்தத்தை மனசின்கண் தெளிந்து இஃது மனுஷியர்களின் வார்த்தைகளல்ல, என்னுடைய இறைவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் வார்த்தைகளே யென்றுசொல்லி இருதயத்தின்கண் இருக்கும்படி செய்து வேதமானது நிறையப்பெற்ற நிலைமையைக்கொண்ட உள்ளத்தையுடையவராய் தாம்முன்னர் எண்ணிய வஞ்சகத்தையொழித்துக் குறைவைப் பொருந்திய அந்தக் காபிர்களை வளைந்த கூட்டத்தோடும் விரோதித்து நின்றார். (எகூ)

வழிபிழைத் திருளின் முட்சார் வனத்திடை கிடந்துள் ளாவி
கழிபட விடைந்தெற் றேன்றுங் காலைநன் னெறிபெற் றோர்போ
லழிதருங் குபிரை நீக்கி யகுமது தீனை நோக்கிப்
பொழிகதிர் வதனச் செவ்விப் புரவல ருமறு நின்றார்.

(இ-ள்.) அன்றியும், செல்லும்பாதையில் தவறி அந்தகாரத்தில் முட்கள்பொருந்திய காட்டின்கண்கிடந்து சரீரத்தினுள் தங்கிய ஜீவனானது கழியும்வண்ணம் வசக்கேடாகிச் சூரியனானவன் உதயமாகும் பொழுது நல்லபாதையை யடைந்தவர்களைப் போலக் கிரணங்களைச் சிந்துகின்ற அழகிய முகத்தையுடைய அரசரான உமறுகத்தா பென்பவர்கேட்டைத் தராநிற்கும் குபிரென்னும் மார்க்கத்தை யொழித்து அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தைக் கவனித்து நின்றார். (எஎ)

ஓதுநன் னெறிக்கு நேர்பட்டிசைந்தன ருமறென் றெண்ணிக்
காதர மகற்றி யில்லுட் கரந்தது தவிர்ந்து ஹப்பாப்
தாதவி மூலங்நற் கோதைத் தையலும் ஸஹீது முற்ற
வேதிக்கை யிடத்திற் புக்கு விளைவதுகாண்ப நின்றார்.

(இ-ள்) அப்போது ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்களும் மகரந்தங்கள் அவிழாநிற்கும் மலர்மாலை யணிந்த கூந்தலையுடைய தையலான பாத்திமாறலியல்லாகு அன்ஹா அவர்களும் சகீதுறலியல்லாகு அன்கு அவர்களுகம் உமறென்பவர் ஓதாநின்ற நல்ல சன்மார்க்கத்திற்கு உடன்பட்டுப் பொருந்தினரென்று மனசின்கண் நினைத்துத் தங்களின் பயங்கரத்தை யொழித்து வீட்டினகம் ஒளித்ததைத் தவிர்ந்து பொருந்திய திண்ணையின்கண் நுழைந்து மேல் உண்டாகுவதைப் பார்க்கும்படி நின்றார்கள். (எஅ)

மருங்கினி னின்ற ஹப்பாப் மன்னவ ருமறை நோக்கித்
தருங்கா தலத்தோய் நும்பாற் சகத்தினும் விண்ணு மொவ்வா
வருங்கன வெற்றி நன்மா ராயமொன் றடைவ தாக
நெருங்கிய பொருளா யின்றோர் சோபன நிகழ்வ னென்றார்.

(இ-ள்.) அவ்வாறு பக்கத்தில் நின்ற ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்கள் அரசரான உமறுகத்தா பென்பவரைப் பார்த்து யாவர்களுக்கும் அருளாநிற்கும் கைதலத்தையுடையவரே! உம்மிடத்தில் இந்தப்பூமியின்கண்ணும்ஆகாயலோகத்திலும் ஒவ்வாத அரிய மிகுதியான வெற்றியையுடைய நல்ல விசேஷமானது பொருந்தும் வண்ணம் நெருக்கமுற்றபொருளாக இன்றையத்தினம் ஒருசோபனமானது சம்பவிக்குமென்று சொன்னார்கள். (எகூ)

இணையட றவிர்வெள் வேலோ யின்றிர வுமைதீ னுக்கோர்
துணையென வருள்செய் வாயென் றுதியைத் துதித்துச் செவ்வி
மணவலி புயத்தார் வள்ளன் முகம்மதாண் டிரந்து கேட்ப
வுணர்வுறக் கேட்டே மென்றா ரோங்குநன் னெறியை நீங்கார்.

(இ-ள்.) ஓங்காநிற்கும் நல்ல சன்மார்க்கத்தை விட்டும் நீங்காதவரான ஹப்பாபுறலியல்லாகு அன்குஅவர்கள் தம்மையொத்தசத்துராதிகளின் வலிமையை யொழிக்கும் வெள்ளிப் வேலாயுதத்தையுடைய உமறுகத்தா பானவரே! உம்மை இன்றைய இராவில் கூட்டமுற்ற வலிமையினது அழகிய தோள்களை யுடையவர்களான வள்ளலாகிய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அங்கு தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற்கு ஒப்பற்ற துணையென்று சொல்லும்படி கிருபை செய்வாயாக வென்று ஆதியாகிய ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவைப் புகழ்ந்து இரந்து கேட்கும்படி யாம் அறிவுறும் வண்ணம் எமது காதுகளினால்கேள்வியுற்றோ மென்று சொன்னார்கள். (அய)

எடுத்திவை யுரைத்தஹப்பாப் தமைவிழித் திரப்போர்க்கென்றுங்
கொடுத்ததிற் செவந்த செங்கைக் கோளரி யுமறு கத்தாப்
கடுத்தவழ்ங் திருண்டு சேந்த கயல்விழிக் கதீஜா கேள்வ
ரடுத்துறைந் தவணெங் கென்ன வணியிதழ் வாய்விண் டாரால்.

(இ-ள்.) இச்சமாசாரங்களை எடுத்துச் சொன்ன ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்களை யாசிப்பவர்களுக்கெந்நாளும்கொடுத்தினால்

செவப்படைந்த செவந்த கைகளை யுடைய ஆண்சிங்கமான உமறுக த்தாபென்பவர் பார்த்து விடமானது தவழப்பெற்றுக் கறுத்துச் சிவ ப்புற்ற கெண்டை மீன்போலும் கண்களை யுடைய கதீஜா அவர்களி ன் நாயகராகிய அந்த முகம்ம தென்பவர்கள் நெருங்கி யிருக்கின்ற இடமானது எங்கே? என்று தமது அழகிய அதரங்களை யுடைய வாயைத்திறந்து கேட்டார். (அக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முதிருங் கருஞ்சூற் சலதரத்தை
  முடியிற் றாங்கிச் செழுந்தேனை
விதிருஞ் சினைத்தண் டலையுடுத்து
  விளங்குங் குவவு சபாவரைக்குச்
சதுரி னணித்தா யொருமனையுண்
  டதனிற் றறித்தா ரஹ்மதுவும்
முதிருங் கலிமா நிலைதவறு
  முதியோர் சிலரு முரணறவே.

(இ-ள்) அவ்விதம் கேட்கவே சூலானது முதிரப்பெற்ற கரிய மே கத்தைச் சிகரத்தின்கண் சுமந்து செழிய மதுவை விதிர்க்கா நிற்கும் கிளைகளை யுடைய சோலைகளைச் சூழப்பெற்று விளங்குகின்ற பெரு மைதங்கிய சபாமலைக்குச் சமீபத்தில்சதுரத்தையுடைய ஓர்வீடுண்டு அவ்வீட்டில் அஹ்ம தென்னும் திருநாமத்தை யுடைய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் முதிர்ந்த கலிமா வினது நிலைமையில் தவறாத முதியவர்களான சில முஸ்லீங்களும் யாதொரு விரோதமு மில்லாமல் தங்கியிருக்கிறார்களென்று. (அஉ)

மறைமா மொழிநா வொழியாது
  வளர்க்கு முதியோ ரினிதுரைப்பக்
கறையா ரிலைவேற் கரத்தேந்திக்
  கடிதின் விருப்பி னுடனெழுந்து
குறையா மதிய மெனத்தீனை
  வளர்க்குங் குரிசின் முகம்மதுவு
முவைார் பொழில்சூழ் வரையினிடத்
  துற்றா னுமறு கத்தாபே.

(இ-ள்.) மகத்தான வேதவாக்கியத்தை ஒழியாது வளர்க்கா நிற்கும் நாவை யுடைய முதியவரான ஹப்பாபு றலியல்லாகு அன்கு அவர்கள் இனிமையுடன் சொல்ல, உமறுகத்தாபென்பவர் இரத்தக் கறைகள் பொருந்திய இலைகளையுடைய வேலாயுதத்தைக்கையின்கண் தாங்கிக்கொண்டு உவகையோடும் சீக்கிரத்தி லெழும்பிக் குறையாத சந்திரனைப்போலத் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை வளர்க்கும் குரிசிலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தங்கு தலைப் பொருந்திய சோலைகள் சூழ்ந்த அந்தச் சபாமலையின்கண் போய்ச் சேர்ந்தார். (அ௩)

மலையி னிடத்தி னுயர்ந்திருந்த
　மனையை நோக்கி யெம்மருங்குங்
குலவ நோக்கி மாந்தருறை
　குறிப்புற் றறியத் தோன்றுமல்
விலகுங் கதிர்மெய்க் குரிசினபி
　யுறைவ திவணே யெனவிரைவி
னிலைகொள் கபாடந் தனைத்தீண்டி
　நின்று ரறிவு குன்றுரே.

(இ-ள்) அவ்வாறு போய்ச்சேர்ந்த அறிவானது குறையாதவரான உமறுகத்தா பென்பவர் அந்தச் சபாமலையின்கண் உயர்ச்சியுற்றிருந்தவீட்டைக்கண்டுப் பிரகாசிக்கும் வண்ணம் எப்புறங்களிலும் பார்த்து மனுஷியர்கள் தங்காநின்ற அடையாளத்தை பொருந்தி யறிவதற்குத் தெரியாது பக்கத்தில் விலகி யொளிரும் பிரகாசத்தைக் கொண்ட சரீரத்தை யுடைய குரிசிலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்கும் இடம் இவ்விடந்தானென்று சொல்லிச் சீக்கிரமாய் நிலையைக்கொண்ட அவ்வீட்டினது கதவைத் தொட்டுத் தட்டி நின்றார். (அ௪)

இணைத்தாள் செறித்த மணிக்கதவந்
　தீண்டி யிவணி லடைந்தோர்தீ
னணித்தார் புறத்தா ரெனநோக்கி
　யுமறென் றறிந்தங் கனைவோரும்
பணித்தாழ் குழியிற் களிற்றினம்போற்
　பதறிப் பயந்துள் ளகங்கலங்கித்
தணித்தா ரிலைமெய் நடுக்கமுறை
　தவிர்ந்தார் முகங்கள் குவிந்தாரே.

(இ-ள்) அப்போது அங்குள்ள யாவர்களும் இவ்விடத்தில் வந்து சேர்ந்து இருதாட்களைச் செறிக்கப்பெற்ற அழகிய கதவைத் தொட்டுத் தட்டினவர்கள் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தில்நெருங்கினவர்களா? அல்லது அவ்விதம் நெருங்காத அன்னியர்களா? என்று பார்த்து உமறுகத்தா பென வுணர்ந்து தாழ்வை யுடைய பொறிக்கிடங்கின் யானைக் கூட்டத்தைப் போன்று நடுக்கமுற்று அஞ்சி மனமானது கலக்கமடைந்து சரீரப் பதறுதலைத் தணியாதவர்களாய்த் தங்களின் வார்த்தைக ளொழிந்து முகங்களும் குவியப் பெற்றார்கள். (அரு)

வெருவி யுரையா திருந்தவரை
விழித்துக் கரத்தா லடர்களிற்றைப்
பொருவும் ஹம்சா மனம்வெகுண்டு
புகழ்தற் கரிய திருக்கலிமா
மருவி வருவா ரெனிலுமறு
மதிக்கு மதிக்கும் படியாகப்
பெருகு நலனுஞ் சுவனபதிப்
பேறும் பெறுவ ரெனவுரைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு பயந்து பேசா திருந்தவர்களான முஸ்லிங்களை க்கையினால் அடராநிற்கும் யானையை நிகர்த்த ஹம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் பார்த்து மனமானது கோபிக்கப் பெற்று உமறென்பவர் துதித்தற் கருமையான நமது தெய்வீகந் தங்கிய கலிமாவைப் பொருந்தி வந்தாரென்னில் யாவர்களும் தங்களின் புத்தியின்கண் மதிக்கும் வண்ணமாய்ப் பெருகாநின்ற நன்மையையும் சொர்க்க லோகத்தின் பேற்றையும் பெறுவாரென்று சொன்னார்கள். ()

இகலுந் தீங்கு மனத்திருத்தி
யெழுந்தா ரெனிலங் கவர்கரத்திற்
றிகழுங் கதிர்வாட் டனைப்பறித்துச்
சென்னி களைவ தறுதியிதற்
ககலு மனத்தால் வெருவிடலிவ்
வவையீர் மணித்தாள் செறிகதவந்
தகவல் விடுமி னெனமறுத்து
முரைத்தார் தடத்தார்ப் புயத்தாரே

(இ-ள்.) அவ்விதம் சொன்ன பெரியமாலையைபணிந்த தோள்களை யுடையவர்களான அந்த ஹம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் விரோதியாநிற்கும் தீமையை மனசின்கண் இருக்கும்படி செய்து யெழும்பிவந்தரே யானல் அவ்விடத்தில் அவரினது கையில் பிரகாசியா நிற்கும் கிரணங்களை யுடைய வாளாயுதத்தைப் பறித்து அவரின் சிரத்தைக்களைவதே முடிவு. இந்தச் சபையை யுடையவர்களே! நீங்கள் இதற்கு உள்கள் அகன்ற மனசின்கண் அஞ்சாதீர்கள். அழகிய தாளினல்செறியப்பெற்ற கதவினது தகவலை விடுங்களென்று மறுத்துஞ் சொன்ஞர்கள். (௭௭)

அறந்தாங் க்கத்தார் ஹம்சாசொல்
லறிவு ளிருத்தி மணிக்கதவந்
திறந்தார் திறந்த மனைநோக்கிச்
செம்மை குடிகொண் டெழுந்தடல்வெம்
மறந்தாங் கியபொற் புயத்துமறு
வந்தார் வரலுஞ் செழுஞ்சோதி
பிறந்தாரெழினர் நபிக்குரிசில்
பிந்தா திருந்தா ரெழுந்தாரே.

(இ-ள்.) தருமத்தைச்சுமந்த இருதயத்தை யுடையவர்களான ஹம்சா றலியல்லாகு அன்கு அவர்கள் அவ்வாறு சொல்லிய அறிவாகிய வார்த்தைகளை அங்கிருந்த யாவர்களும் மனசின்கண் இருக்கும்படி செய்து அழகிய கதவைத் திறந்தார்கள். அவ்விதம் திறந்த வீட்டைப்பார்த்து அழகானது குடிகொண்டு ஓங்கிய வலிமையை யுடைய வெவ்விய வீரத்தைத் தாங்கப்பெற்ற பிரகாசமமைந்த தோள்களை யுடைய உமறுகத்தா பென்பவர் வந்தார். வந்தமாத்திரத்தில் உட்கார்ந் திருந்த வர்களான செழிய பிரபையானது உதயமா யதிகரித்த அழகிய நமது நபிகள் பெருமான் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தாமதியாது எழும்பினர்கள்.

நரந்தங் குலவி மாவமலர்
நருந்தேன் குளிக்கும் புயவரையோ
டுரந்தங் கிடவா ளரியுமறைத்
தழுவி யொளிருங் கரந்தீண்டி

யிருந்திங் கிவணில் வரும்வரவா
றியம்பு மெனக்கென் றெழிலி முற்றுங்
கரந்தங் கியநல் லருள்பெருகும்
ஹபீபு முகம்ம துரைத்தனரால்.

(இ-ள்.) மேகங்கள் முழுவதும் கையின் கண் தங்கப் பெற்றதைப்போன்று நல்ல கொடையானது அதிகரியா நிற்கும் ஹபீபென்னும் காரணப்பெயரை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு எழும்பி வாசனையானது உலாவப்பெற்றுக் குங்குமப் புஷ்பத்தினது நறிய தேனில் படிந்த தங்களின் தோள்களாகிய மலைகளோடு வாளாயுதத்தையுடைய சிங்கமான உமறுகத்தாபென்பவரை வலிமையானது தங்கும் வண்ணம் கட்டியணைத்துப் பிரகாசிக்கின்ற அவரின் கையைத் தொட்டுத் தங்கியிருந்து நீவிர் இங்கே வந்த வரலாற்றை எனக்குச் சொல்லுமென்று கேட்டார்கள் ()

வரிசை நபியே முகம்மதுவே
வானோர்க் கரசே புவிக்கரசே
யுரிய தனியோன் முதற்றூதே
யுமது கலிமா வுரைப்படியே
யரிய மறைதேர்ந் தீமான்கொண்
டறத்தா றொழுகும் படிகருத்திற்
கருதி யிவணி லடைந்தேனென்
றுரைத்தா ருமறு கத்தாபே.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் கேட்கவே உமறுகத்தா பென்பவர் சங்கையை யுடைய நபியானவர்களே! முகம்ம தானவர்களே! தேவர்களான மலாயிக்கத்துமார்களினது இராஜா வானவர்களே! இப்பூலோகத்தின்கண் ணுள்ள யாவற்றிற்கும் அரசானவர்களே! உரிமையையுடைய தனியவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் முதன்மையாகிய றசூலானவர்களே! உங்களின் கலிமாவினது சொற்படி அருமையான புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தைத் தெளிந்து ஈமான் கொண்டு தருமநெறியி லொழுகும் வண்ணம் எனது கருத்தில் நினைத்து இங்கு வந்து சேர்ந்தேனென்று சொன்னர். (கூ௰)

கூறுங் கலிமா வுரைத்தீமான்
கொள்ளும் படிக்கிங் கடைந்தனெனத்

தேறு மொழிகேட் டகுமதுதஞ்
செவ்விக் கமல முகமலர்ந்து
பேறு மிதுவே கிடைத்ததெனப்
பெரியோ னுதி தனைப்புகழ்ந்து
மீறுங் களிப்பா நந்தமன
விழைவாற் றக்கு பீறுரைத்தார்.

(இ-ள்.) அவர் அவ்வாறு யாவர்களும் புகழாநிற்குங்கலிமாவை யோதி ஈமான் கொள்ளும் வண்ணம் இங்கு வந்து சேர்ந்தேனென்று சொல்லத் தெளிவுற்ற அவ்வார்த்தைகளை அஃமதென்னுந் திருநாமத்தை யுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் காதுகளினால் கேள்வியுற்று அழகிய தாமரை மலர்போன்ற முகமானது மலரப்பெற்று நாம்பெற வேண்டிய பேறும் இது தான். அதுவே நமக்குக் கிடைத்ததென்று சொல்லிப் பெரியவனான அல்லாகு சுபுகானகு வத்தஆலாவைத் துதித்து மனசின்கண் அதிகரியா நிற்கும் சந்தோஷமாகிய ஆநந்தத்தினது பெருக்கத்தினால் "அல்லாகு அக்குபற்" என்னும் தக்குபீறைச் சொன்னார்கள். (௬௧)

வல்லோ னபியுங் கலிமாவை
வகுத்துக் காட்டி முன்னுரைப்பச்
செல்லேர் கரத்தா ருமறுகத்தாப்
செப்பி யிசுலா நெறிதேக்கி
யல்லார் குபிரைக் கடிதகற்றி
யழியாத் தொழுகை முறைபடித்து
நல்லோர் பரவும் படிவணங்கி
நறுந்தி னடுக்கந் தனைத்தவிர்த்தார்.

(இ-ள்.) அவ்வாறு தக்குபீறுசொன்ன வல்லவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் நபியாகிய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் கலிமாவை வகைப்படுத்திக் காட்டி முன்னர் ஓதவே மேகத்தைப்போன்ற அழகிய கைகளை யுடைவரான உமறுகத்தாபென்பவர்களும் பின்னர் ஓதித் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது ஒழுங்குகளை மனசின்கண் நிறையும்படி செய்து அந்தகாரமானது அதிகரித்த கடியதான குபிரென்னும் மார்க்கத்தையொழித்துக் கெடாத தொழுகையினது முறைமைகளைக் கற்று நல்லவர்களா

கிய மற்றும் முஸ்லிங்கள் வணங்கும் வண்ணம் ஜல்லஜலாலகு வத்த ஆலாவை வணங்கி நன்மைபொருந்திய தீனுல் இஸ்லா மார்க்கத்தினது அச்சத்தை யொழித்தார்கள். (கூஉ)

விரியுங் கதிர்மெய்ச் சிறைத்தடங்கண்
 விண்ணோர்க் கரசர் பொருப்பினிருந்
தருவி யெனச்செய் திடுங்கலிமா
 வடங்கா நதியின் பெருக்காக்கிச்
சுருதி மொழித்தீன் பயிர்தழைப்பச்
 சுற்றுங் குபிர்வெங் களை தீய்க்குங்
குருவி னெறியான் மனங்களிப்புக்
 கொண்டா ரீமான் கொண்டாரே.

(இ-ள்.) அப்போது ஈமான் கொண்டவர்களாகிய முஸ்லிங்களியாவர்களும்விரிந்த பிரகாசமமைந்த சிறகுகளை யுடைய சரீரத்தையும் பெரிய கண்களையு முடைய அமரேசுவரரான ஜபுறயீல் அலைகிஸ்லாமவர்கள் அந்த ஹிறுமலையின்கண் தங்கியிருந்து அருவியைப்போலச் செய்திடும் கலிமாவை அமையாத ஆற்றினது பெருக்கமாக்கிப் புறக்கானுல் அலீமென்னும்வேதவாக்கியத்தையுடைய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கப் பயிரானது தழைக்கும்வண்ணம் வளைந்த குபிராகிய வெவ்விய களையைத் தீயும்படி செய்யும் குருவான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் நீதியினால் மனமானது சந்தோஷமடையப் பெற்றார்கள். (கூகூ)

விதியின் முறையென் றகுமதுதாம்
 விளக்கு முரைகேட் டுமறுகத்தாப்
மதிமெய் மயங்கி வஞ்சனையின்
 மாயத் துறைந்தா ரெனவூரும்
புதியும் பெருக்க வுரைநடத்திப்
 பற்றா ரிவரென் றபூஜகில்தன்
புதிய மொழியைத் தொல்கிளைக்குப்
 பகழ்ந்தா னபியை யிகழ்ந்தானே.

(இ-ள்.) அப்போது அபூஜகி லென்பவன் உமறுகத்தா பானவர் அஹ்மதென்னும் பெயரையுடைய முகம்மதென்பவன் விளக்கிக் காட்டும் வார்த்தைகளைக் கேள்வியுற்று கடவுளால் நியமிக்கப்பட்ட

விதியினது முறைமைகளென்றுத் தமது அறிவும் உடலும் மயக்கப்பெற்று வஞ்சனையையுடைய மாயத்தின்கண் தங்கினரென்று அந்தத் திருமக்கமா நகரத்திலும் மற்றும் தேசங்களிலும் அதிகரிக்கும்வண்ணம் வார்த்தைகளை நடாத்தி இந்த உமறுகத்தாபென்பவர் இனி நமது சத்துராதி யானவரென்று நூதனமாகிய சொற்களைப் பழைய தனது குடும்பத்தி லுள்ளவர்களுக்குப் புகழ்ந்து கூறி நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை நிந்தித்தான். (௯௪)

சரியுந் திரைமுத் தெறிந்திரைக்குஞ்
சலதிக் குபிரி னிடையினடு
விரியு மமுதமெனுங்கலிமா
மேலோ ரொருமுப் பஃதுடன்மூன்
றரிய மகடூ வறுவருமு
றரச ரொருவ ரவனியினிற்
றெரியு மிலக்க மிங்நான்கு
பதின்ம ருடனுஞ் சிறந்திருந்தார்.

(இ-ள்.) சாயாநிற்கும் அலைகளினால் முத்துக்களை வீசி ஒலிக்கும் சமுத்திரமாகிய காபிர்களி னிடை மத்தியில் விரிகின்ற அமுதமென்று சொல்லும் கலிமாவைப் பெற்ற மேன்மையை யுடையவர்களான முஸ்லீங்கள் முப்பத்துமூன்று பேர்களும் அருமையாகிய பெண்கள் ஆறு பேர்களும் உமறுகத்தாபென்று சொல்லும் இராஜரான ஒருவருமாகிய விளங்கிய இலக்கத்தை யுடைய இந்த நாற்பதுபேர்களோடும் இப்பூமியின்கண் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சிறப்புற்றிருந்தனர். (௯௫)

உமறுகத்தாபீமான்கொண்டபடலம்

முற்றிற்று.

ஆ படலம்-௪-க்கு-திருவிருத்தம்-௩௦௧.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

உடும்புபேசியபடலம்.

கலிவிருத்தம்.

வடிவுறு முமறெனும் வள்ள னந்நபி
யுடனுயர் தீனிலைக் குரிய ராயபின்
றிடமுடைத் தவர்களாய்ச் சிந்தை யிற்பெறு
மடமக றரப்பெரு மகிழ்ச்சி யெய்தினர்.

(இ-ள்.) நமது நாயகம் நபியுற்றஹ்மத்து செய்யிதுல் கௌனைன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களோடு அழகானது பொருந்தப்பெற்ற உமறு கத்தாபென்று சொல்லும் வள்ளலானவர்களும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கநிலைமைக்குச் சுதந்தரர்களான பின்னர்,முஸ்லிங்க ளியாவர்களும் தைரியமுடையவர்களாய் மனசின்கண் கொண்ட மடமையானது அகலும் வண்ணம்பெரியசந்தோஷத்தை யடைந்தனர்கள். (க)

செயிரறுந் தீனிலைக் குரிய செவ்விய
பயிரென வருங்கலி மாவைப் பண்பொடு
நயனுறப் பெருக்கிய நண்ப ரியாவரு
முயிரென முகம்மதை யுவந்து காமுற்றார்.

(இ-ள்.) அன்றியும்,குற்றமற்ற தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமைக்கு உரித்தான அழகிய பயிரைப்போன்றுவந்த "லாயிலாஹ இல்லல்லாகு முகம்மதுர்ற சூலுல்லாஹி"யென்று சொல்லும் கலிமாவைத் தகுதியுடன் நன்மையுறும் வண்ணம் மனசின்கண் பெருகச் செய்த நேசர்க ளெல்லாவர்களும் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களைத் தங்களின் ஜீவனைப்போல விரும்பி மோகமுற்றார்கள். (உ)

உடலுயி ரெனவுவந் துறையு நாளினி
லடலபூ பக்கரு மலியுந் தெவ்வரைக்
கடவிய வேற்கர வுமறுங் கள்ளவிழ்
மடலிகழ் மாலிகை யறபி மன்னரும்.

(இ-ள்.) அவ்வாறு சரீரத்தையும் ஆவியையும் போலவிரும்பித் த ங்காநிற்கும் தினத்தில் வலிமையை யுடைய அபூபக்கர்சித்தீகு றலி யல்லாகு அன்கு அவர்களும் அலிறலியல்லாகு அன்கு அவர்களு ம் சத்துராதிகளின்மீது பிரயோகியாநிற்கும் வேலாயுதத்தைக் கொ ண்ட கையையுடைய உமறுகத்தாபுறலியல்லாகு அன்கு அவர்களும் மதுவானது நெகிழ்கின்ற இதழ்கள் பிரகாசிக்கும் புஷ்பமாலை யணி ந்த அறபிவேந்தர்களும். (௩)

தோமகன் முகம்மது நபியுஞ் சூழ்வர
மாமதி ணகர்ப்புறத் தெய்தி மற்றொரு
தேமலர்ப் பொழிலிடை தெரிய வைகினர்
காமரு மதியமுங் கணமு மென்னவே.

(இ-ள்.) குற்றமானது நீங்கப்பெற்ற நாயகம் நபிமுகம்மது சல் லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் தங்களைச் சூழ்ந்துவரும் வண்ண ம்பெருமை பொருந்திய மதிள்களையுடைய தங்கள் நகரமாகிய மக்கா ப்பதிக்கு வெளியில் அடைந்து வாசனையைக் கொண்ட புஷ்பங்களை யுடைய ஒரு சோலையின்கண் அழகிய சந்திரனையும் நட்சத்திரங்க ளையும் போல விளங்கும் வண்ணம் தங்கி யிருந்தார்கள். (௪)

செல்லிடுங் குடைநபி செவ்வி காண்டலுங்
கல்லொடு மரமும்புற் கானும் வாவியு
மெல்லிய சிறைப்புளும் விலங்கி னங்களு
மொல்லையூர் வனவனத் துகளுஞ் சாதியும்.

(இ-ள்.) அப்போது மேகங்க ளிடுகின்ற குடையை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் சரீர வழகைப் பார்த்தமாத்திரத்தில் அங்குள்ள கற்களுடன் மரங்களும் புற்களையு டைய காடுகளும் தடாகங்களும் மெல்லிய சிறகுகளை யுடைய பட்சி களும் மிருகக் கூட்டங்களும் விரைவில் ஊர்ந்து திரியும் ஊர்வனங் களும் காட்டின்கண் பாய்ந்து திரியும் சாதிகளும். (௫)

தோற்றிய தெவ்வையுந் துலங்கக் கேட்பதாய்
மாற்றருஞ் சுருதியின் வசனந் தன்னொடும்
போற்றரும் புகழ்ச்சியாற் புகழ்ந்து பொங்கிய
வூற்றமுற் றுயர்சலா முரைத்து நின்றவே.

(இ-ள்.) கண்பார்வைக்குத் தெரியக்கூடியதான மற்ற எல்லாவகைகளும் விளங்கும் வண்ணம் காதுகளினாற் கேட்கும்படியாக மாற்றுதற்கரிய வேதவசனத்தோடும் போற்றுதற்கு அருமையான துதிகளினால் துதித்து அதிகாரியா நிற்கும் அறிவினுடைமையைப் பொருந்தி மேலாகிய "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று சலாஞ்சொல்லி நின்றன. (சு)

கானகத் துற்றகா ரணங்க ளியாவையுந்
தீனவர் செவியுறத் தேக்கிச் சீர்பெற
வானவர் புகழ்தர மக்க மாநபி
யீனமின் மனையகத் தேகி னாரரோ.

(இ-ள்.) அப்போது மக்கமா நகரத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள்தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற் குரியவர்களான முஸ்லிங்கள் அந்தக் காட்டின்கண் பொருந்திய காரணங்க ளெல்லா வற்றையும் தங்களின் காதுகளிற் பொருந்தும் வண்ணம் நிறையும்படி கேட்டுச் சிறப்பைப் பெறவும், தேவர்களான மலாயிக்கத்துமார்கள் துதிக்கவும், குறைபாடற்றதங்களின் வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (எ)

அற்றையிற் போழ்தவை யகன்று பின்னைநாள்
வெற்றிவெங் கதிரயில் வீரரி யாவருஞ்
சுற்றிட மெய்யெழி றுலங்க மானபி
மற்றொரு தலத்திடை வைகினாரரோ.

(இ-ள்.) அவ்வாறு பெருமை பொருந்திய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அன்றையத்தினம் தங்களின் கூட்டத்தை நீங்கி மறுநாள் விஜயத்தையும் வெவ்விய பிரகாசத்தையுங் கொண்ட வேலாயுதத்தை யுடைய வீரர்களான முஸ்லிங்களனைவர்களும் தங்களை வளையும் வண்ணம் தங்களின் சரீரத்தினது பிரகாசமானது ஒளிரும்படி வேறே யொரு தலத்தின்கண் போய்த் தங்கி யிருந்தார்கள். (அ)

நல்லறி வுடையவர் சூழ நந்நபி
யில்லிருந் தெழுந்திவ ணிருப்ப மற்றொரு
வில்லினன் வலையினன் வேடன் கையினிற்
கல்லிய தடியொடுங் கானி லேகினான்.

(இ-ள்.) நல்ல அறிவையுடையவர்களான முஸ்லிங்கள் சூழும் வண்ணம் நமது நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு வீட்டின்கண்ணிருந் தெழும்பி இவ்விடத்தில் தங்கியிருக்கக், கோதண்டத்தையும் வலையையு முடையவனான வேறே யொரு வேடன் தனது கையில் பூமியைக் கல்லுகின்ற தடியுடனும் காட்டின்கண் சென்றான். (௯)

கானகஞ் சுற்றியுங் கல்லைத் தள்ளியு
மானினந் தடைபட வலைகள் வீக்கியுந்
தான்மலை முழைஞ்சினுந் தடவி நோக்கியு
மூன்புசித் திடுவதற் கொன்றுங் காண்கிலான்

(இ-ள்.) அவ்விதம் சென்ற வேடனானவன் காட்டினுள் வளைந்து திரிந்தும் கற்களைத் தள்ளியும் மான்கூட்டங்கள் தடைபடும் வண்ணம் வலைகளைக் கட்டியும் மலைகளினது குகைகளிலும் தடவிப் பார்த்தும் மாமிச முண்பதற்காக யாதொன்றும் கண்டிலன். (௧௦)

அடவியிற் புகுந்தரும் பதுக்கை சுற்றியோர்
புடையினின் முசலிகை புகுதக் கண்டனன்
றடைபட வலைவயின் சாய்த்து மேற்சிலை
யுடைபடத் தாக்கித்தன் னுரத்திற் பற்றினான்.

(இ-ள்.) அதனால் அவன் சோலைகளில் நுழைந்து அரிய பாறைகளைச் சுற்றி ஒரு புடையின்கண் ஒருடும்பானது புகுதும்வண்ணம் பார்த்து அவ்வுடும்பைத் தடைபடும்படி வலையினிடத்தில் சரித்துப் புடையினது மேலே யுள்ள கல்லானது உடையும் வண்ணம் அடித்துத் தனது மார்போடும் பிடித்தான். (௧௧)

வள்ளுகி ருடும்பினை வலைக்குள் மாட்டிவை
முள்ளுறை கானமு முரம்பு நீக்கித்த
னுள்ளக மகிழ்வொடு முழையர் சூழ்தர
நள்ளுறை முகம்மது நபியை நோக்கினான்.

(இ-ள்.) அவ்விதம் பிடித்த கூரிய நகத்தையுடைய அந்த உடும்பை அவ்வேடனானவன் வலையினகம் கட்டித் தனது மனசினுள் மகிழ்ச்சியோடும் நுணுக்கமாகிய முட்கள் தங்கிய காடுகளையும் பாறைகளையுந்தள்ளி நடந்து தங்களின் உழையர்களான முஸ்லீங்கள் வளையும் வண்ணம் நடுவில் தங்கிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கண்களினாற் பார்த்தான். (கஉ)

மன்னிய வறிஞரி னுப்பண் வைகிய
தென்னிவர்க் குறுஞ்செய லியாது கொல்லென
முன்னிய வேட்டுவன் மொழிய வாதித
னன்னிலைத் தூதிவர் நபியென் றோதினர்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்து இவர் பொருந்திய அறிவை யுடையவர்களான இவர்களின் நடுவில் தங்கினது என்னகாரணம்? அன்றியும், இவருக்கு இசைந்த தொழில் யாது? என்று நினைத்த அந்த வேடன் அங்கிருந்த அசுகாபிமார்களிடத்திற் கேட்க; அதற்கவர்கள் இவர்கள் யாவற்றிற்கு முதன்மையனான ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் நன்மைபொருந்திய நிலைமையை யுடைய றசூலான நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மென்று சொன்னார்கள். ()

மைமுகிற் கவிகைநன் னபிமுன் வந்துநின்
றெம்மறைக் குரியவர் நீவி ரெந்நெறி
செம்மையி னடத்துத றெளியச் செப்புமென்
றிம்மொழி யறபிவேட் டுவனி சைத்தனன்.

(இ-ள்) அதைக்கேட்ட அந்த அறபியாகிய வேடன் கறுத்த மேகக்குடையை யுடைய நன்மை பொருந்திய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் முன்னர் வந்து நின்றுகொண்டு நீவிர் எந்த வேதத்திற்கு உரித்தானவர்? அழகாய் நீர் நடாத்துவது எந்த மார்க்கம்? அவற்றை யான் தேரும் வண்ணம் சொல்லுமென்று இந்த வார்த்தைகளைக் கேட்டான். (கச)

கூறிய வறபியைக் குறித்துக் காசினிக்
கீறினில் வருநபி யான லாதிலை
யூறிய பொருட்புறக் கானென் றோதிய
தேறுநன் மறையெனக் குற்ற செவ்வியோய்,

(இ-ள்.) அவ்வாறு கேட்ட அந்த அறபியாகிய வேடனை நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனசின்கண் மதித்து அழகையுடைய வேடனே! யான் இப் பூலோகத்திற்குக் கடைசியாக வந்தநபி. என்னை யல்லாமல் இனிமேல் இந்தப் பூமியின்கண் நபிமார்களு மில்லர். சுரக்காநின்ற பொருளையுடைய புறுக்கானுல் அலீமென்றுசொல்லும் எனக்குற்ற நன்மைபொருந்திய வேதமானது உயர்வாகும். (கரு)

என்னுரை நின்றிசு லாத்தி லாயினோர்
மின்னொளிர் மாளிகைச் சுவன மேவுவர்
பன்னியிம் மொழிபழு தென்னும் பாவியோர்
வன்னியின் குழியிடை கிடந்து மாழ்குவார்.

(இ-ள்) அன்றியும், எனது வார்த்தைகளில் நின்று தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தி லானவர்கள் பிரபையானது ஒளிரா நிற்கும் மாளிகைகளை யுடைய சுவர்க்க லோகத்தைப் பொருந்துவார்கள். இந்த வார்த்தைகளைத் தெளிந்து குற்றமென்று சொல்லும் பாவிகள் அக்கினியினது குழிகளை யுடைய நரகத்தின்கண் கிடந்து மயங்குவார்கள். (கசு)

ஈதுநன் றெனமன மிசைந்தென் னுவினி
லோதிய நன்கலி மாவை யோதிநின்
பாதகந் துடைத்துநற் பதவி யெய்தென
வாதிதன் றூதுவ ரறைந்திட் டாரரோ.

(இ-ள்.) ஆதலால் இதுவே நல்லதென்று உனது மனமானது பொருந்தி எனது நாவினால் சொல்லும் நன்மை தங்கிய கலிமாவைச் சொல்லி உனது துரோகத்தை இல்லாமற் செய்து நல்ல பதவியை அடைவாயென்று யாவற்றிற்கு முதன்மையனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் சொன்னார்கள். (கஎ)

தெரிதர நன்மொழி தெளித்த நந்நபி
மரைமலர்ச் செவ்விய வதன நோக்கிநும்
முரைமறுத் திலனெனக் குண்மை யாகவித்
தரையினி நபியெனச் சாட்சி வேண்டுமால்.

(இ-ள்.) அவ்வாறு நல்ல வார்த்தைகளைத் தெரியும்வண்ணம் தெளித்துச் சொன்ன நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தாமரைமலர்போன்ற அழகிய முகத்தை அந்த வேடன் பார்த்து யான் தங்களுடைய வார்த்தைகளை மறுக்கவில்லை. எனக்கு இப்பூலோகத்தின்கண் தாங்கள் நபியென்று சொல்லும்படி மெய்யாக சாட்சி வேண்டுமென்று சொன்னான். (கஅ)

கானிடை யறபியிவ் வுரையைக் காட்டலுந்
தேனகு மலர்ப்புயச் செவ்வி நந்நபி
வானிடை மண்ணிடை படைப்பின் மற்றதி
லீனமில் கரியுனக் கியைவ தேதென்றார்.

(இ-ள்.) அந்தக் காட்டின்கண் அறபியாகிய அவ்வேடன் இந்த வார்த்தைகளை வெளிப்படுத்தின மாத்திரத்தில் தேனானது பிரகாசியாநிற்கும் மலாமாலையணிந்த தோள்களையுடைய அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வானலோகத்தின்கண்ணும் பூலோகத்தின் கண்ணுமுள்ள படைப்பையுடையவைகளில் குறைபாடற்றசாட்சியாக உனக்குப் பொருந்துவதுயாதென்று கேட்டார்கள். (ககூ)

கடும்பரற் கான்கவிழ் வலையி னுட்படு
முடும்பென திடத்திலொன் றுளது முள்ளெயி
றிடும்பகு வாய்திறந் தினிதி னுகறும்
மொடும்பகர்ந் திடின்மறுத் துரைப்ப தில்லையே.

(இ-ள்.) அவ்விதம் கேட்கவே வேடன் கடிய பரற்கற்களையுடைய காட்டின்கண் கவிழ்த்திய வலையினது அகத்தில் அகப்பட்ட ஒருடும்பானது என்னிடத்திலுள்ளது. அவ்வுடும்புதனதுகூர்மையாகிய பற்களைத் தரித்த பிளந்த வாயைத்திறந் தின்பமாக உங்களுடன் பேசினால் அதை யான் மறுத்துச்சொல்லுவது வேறே யாதொன்று மில்லையென்று சொன்னான், (உ௦)

என்றுரை பகர்ந்தவ னிதயங் கூர்தர
நன்றென முறுவல்கொண் டினிய நந்நபி
குன்றினிற் றிரிதரு முடும்பைக் கூடிய
மன்றினில் விடுகவென் றுரைவ ழங்கினர்.

(இ-ள்.) என்று வார்த்தைகள்சொன்னவனுன அந்தவேடனின் மனமானது கூரும்வண்ணம் இனிமையையுடைய நமது நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நல்லதென்று சிரித்து மலைகளில் திரியாநிற்கும் அந்த உடும்பைக் கூட்டமுற்றஇந்த சபையின்கண் விடுவாயாகவென்று ஆக்கியாபித்தார்கள். (உக)

கானிடை திரிந்தறத் தவித்துக் காறளர்ந்
தேனினி விடிலுடும் பெளிதி னெய்திடா
தானதான் மடிமிசை யாக்கி னேனறுந்
தேனவி மூலங்கலோ யென்னச் செப்பினுன்.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் ஆக்கியாபிக்கவே அந்த வேடனுனவன் நறிய தேனுனது நெகிழப்பெற்ற மலர்மாலையை யுடையவர்களே! யான் இந்த உடும்பைப் பிடிப்பதற்காய்க் காட்டின்கண் திரிந்து மிகவும் இளைத்து இரண்டுகாலங்களும் தளர்ச்சியடைந்தேன். இனி இதை விட்டால் இவ்வுடும்பு இலேசாய் நம்மிடத்திற் சேராது. ஆனதினுல் அதை யான் எனது மடியின்மீது ஆகும்படி செய்தேனென்று சொல்லினுன். (உஉ)

எடுத்துன துடும்பையென் னிடத்தின் முன்னிதாய்
விடுத்திடி லகன்றிடா தெனவி ளம்பலு
மடுத்தமென் மடிபுகு முடும்பை வாங்கியங்
கடுத்தனன் விடுத்தன னறபி வேடனே.

(இ-ள்.) அப்போது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உனது உடும்பைத் தூக்கி எனது இடத்தின் முன்னுகவிட்டால் அவ்வுடும்பானது அவ்விடத்தைவிட்டும் நீங்கிச் செல்லாதென்று சொன்னமாத்திரத்தில் அறபியாகிய அந்தவேடன்நிறைந்த மெல்லிய தனது மடியின்கண் புகாநிற்கும் அவ்வுடும்பை வாங்கி அந்நபிகள் பெருமானவர்களை நெருங்கிக் கீழே விட்டான். (உங)

நெடுந்தலை யெடுத்துவா னிமிர்த்து முள்ளெனப்
படுந்தரத் துகிர்நிலம் பதிப்ப வூன்றியெள்
ளிடுந்தரை யகன்றிடா திறைவன் றூதெனத்
திடந்தர மனத்தினிற் றெளிந்து நோக்கிற்றே.

(இ-ள்.) அவ்வாறு விடவே அவ்வுடும்பானது நெடிய தனது தலையைத்தூக்கி வாலை நிமிரும்படி செய்து முள்ளைப்போ லுண்டாகிய தன்மையையுடைய நகங்களைப் பூமியின்கண் பதியும் வண்ணம் ஊன்றி எள்ளிடும் அளவுள்ள தலமாயினும் நீங்கிச் செல்லாது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை யாவற்றிற்கும் இறைவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் றசூலென்று வலிமை தரும்படி மனசின்கண் தேறிப் பார்த்தது. (உச)

ஆரமு தனையசொல் லரிய வாய்திறந்
தோர்மொழி நந்நபி யுடும்பைக் கூவலுஞ்
சீர்பெற விருவிழி திறந்து நோக்கிநின்
றீர்தரு நாவெடுத் தியம்பிற் றன்றரோ.

(இ-ள்.) அவ்விதம் பார்க்கவே நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நிறைந்த தேவாமிர்தத்தைப்போலும் வார்த்தைகளையுடைய அருமையான தங்களின் வாயைத் திறந்து ஒப்பற்ற வார்த்தையாக அந்த உடும்பைக் கூப்பிட்டமாத்திரத்தில் அவ்வுடும்பானது கீர்த்திபெறும்வண்ணம் தனது இரண்டு கண்களையும் திறந்து நின்று அந்நபிகள் பெருமானவர்களைப் பார்த்துப் பிளவையுடைய நாவைத் தூக்கி வதில்பேசிற்று. (உரு)

இகம்பர மெனவரு மிருமைக் குண்மையா
யுகம்பல வுதிக்குமுன் னுதித்துப் பின்னுதித்
தகம்பயி லாரணத் துறைந்து செப்புமுச்
சகம்புகழ்ந் திடவருந் தக்க நீதியோய்.

(இ-ள்.) இம்மை மறுமையென்று சொல்லும்வண்ணம் வராநிற்கும் இரண்டிற்கும்சத்தியமாகப் பலயுகங்களும் தோற்றமாகும் முன்னர்த்தோற்றமாகிய நபிமார்களுக்கெல்லாம் பின்னர் இவ்வுலகத்தின்கண் அவதரித்து மனமானது பழகாநிற்கும் வேதங்களில் தங்கிச் சொல்லாநின்ற வானம் பூமி, பாதாளமாகிய மூன்று லோகங்களும் துதித்திடும்வண்ணம் வந்த தகுதியான நீதியை யுடையவர்களே!.

அண்டர்கள் பரவுறும் மடியை நாடொறுந்
தெண்டனிட் டிருவிழி சிரசின் மீதுறக்

கொண்டசிற் றடிமையே னுய்யக் கொண்டுவாய்
விண்டெனை விளித்தவை விளம்பு கென்னவே.

(இ-ள்.) தேவர்களான மலாயிக்கத்துமார்கள் வணங்காநிற்கும் தங்களின் பாதங்களைப் பிரதிதினமும் வணங்கி இரண்டு கண்களிலும் தலையின்மீதும் பொருந்தும்வண்ணம் பற்றிய சிறிய அடிமையனான யான் ஈடேறும்படி கொண்டு தங்களின் வாயைத்திறந்து என்னைக் கூப்பிட்ட சமாசாரங்களைச் சொல்லுங்களென்று கேட்க. ()

தேறிய மொழியிவை செவியிற் சார்தலு
மாறிலா தியாரைநீ வணங்கு கின்றனை
வேறற வுரையென விளங்கு நந்நபி
கூறலு முசலிகை மறுத்துங் கூறுமால்.

(இ-ள்.) தெளிவையுற்ற இந்த வார்த்தைகள் காதுகளிற் பொருந்தினமாத்திரத்தில் விளங்காநிற்கும் நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நீமாறுதல் யாரை வணங்குகின்றாய்? அதை வேற்றுமையான தற்றிடும்வண்ணம் சொல்லென்று கேட்டவளவில் அவ்வுடும்பானது மறுத்துஞ் சொல்லும். (உ௭)

மருமலி வள்ளலியான் வணங்கு நாயக
னொருவனன் றேனெழி லுயர்சிங் காசனம்
பொருவறும் வானில்ரா ஜாங்கம் பூமியிற்
றெரிதருங் கிருபையோ செம்பொ னாட்டினில்.

(இ-ள்.) கத்தூரி வாசனை யதிகரித்த காத்திரத்தையுடைய வள்ளலானவர்களே! நான் வணங்குகின்ற நாயகனானவன் ஏகன். அவனுடைய அழகிய மேலான சிங்காசனமானது ஒப்பற்ற வானலோகத்தில். இராசாங்கம் பூமியில். தோற்றாநிற்கும் கருணை செவந்த பொன்னினாலான சொர்க்கலோகத்தில். (உ௯)

தீதிக லற்றவன் சினந்து செய்யுமவ்
வேதனை நரகமென் றெரியும் வீட்டினிற்
பேதமி லன்னதோர் பெரிய வன்றனை
யோதியான் வணங்குவ துண்மையென்றதே.

(இ-ள்.) தீமையும் பகைமையு மற்று அவன் கோபித்துச் செய்யுகின்ற அந்த வேதனையானது நரகலோகமென்று சொல்லிப் பற்று நிற்கும் வீட்டில் மாறுபாடற்ற அவ்வித ஒப்பில்லாத பெரியவனுனை ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவைத் துதித்து நான் வணங்குவதுசத்தியமென்று சொல்லிற்று. (௩௦)

அறத்தொடு முரைத்தனை யென்னை யாரெனக்
குறித்தனை யெனநபி கூறக் கேட்டலுஞ்
சிறுத்தமுள் ளெயிற்றவெண் ணிறத்த செம்முனை
யிறுத்தநு லிரட்டைநா வெடுத்தி யம்புமால்.

(இ ள்.) அப்போது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வுடும்பை நீதருமத்தோடும் சொன்னாய் ஆனால் என்னை யாரென்று மதித்தாயென்று சொல்லும்படி கேட்டமாத்திரத்தில் சிறுத்த முட்போன்ற பற்களையுடைய வெள்ளிய நிறமும் செவந்த நுனியும் தங்கிய பஞ்சின் நூலையொத்த தனது இரட்டை நாவுகளைத் தூக்கிச் சொல்லும். (௩௧)

பரவைவிண் ணிலமலை பருதி மற்றவு
முரியதும் மொளியினி லுள்ள வுண்மையிற்
றெரிதர முதலவன் செவ்வித் தூதரா
யிருநில நபிகளி னிலங்கு மேன்மையர்.

(இ-ள்.) சமுத்திரமும் ஆகாயமும் பூலோகமும்மலைகளும் சூரியனும் மற்றவைகளும் உரித்தான தங்களின் ஒளியிலுள்ளன. அன்றியும், சத்தியமாய் விளங்கும்வண்ணம் யாவற்றிற்கும் முதன்மையனை ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் அழகிய றசூலாய்ப் பெரிய இத்தப்பூமிலோகத்தின நபிமார்களில்பிரகாசிபா நிற்கும்மேன்மையாக.

ஈறினில் வருநபி யிவணும் வாக்கினிற்
கூறிய மார்க்கமே மார்க்கங் கோதறத்
தேறினர் சுவர்க்கமே சேர்வர் தீதென
வேறுரைத் தவரவர் நரகின் வீழ்வரால்,

(இ-ள்.) கடைசியில் வந்த நபியானவர்கள். இப்பூமியின்கண் தங்களுடைய வாக்கினுற் சொல்லிய மார்க்கமே மார்க்கம். அதைக் குற்

றா.றும்வண்ணம் தெரிந்தவர்கள் சுவர்க்கலோகத்தைச்சேருவார்கள். குற்றமென்று வேறுபாடாய்க் கூறினவர்களான அவர்கள் நரகலோகத்தின்கண் விழுவார்கள். (௩௩)

இனிதினும் பெயர்க்கலி மாவை யென்னெடும்
வனமுறை யஃறிணை வாழ்த்து கின்றது
நனிபுக ழுண்மைநன் னபியு நீரலாற்
பினையிவ ணிலையென வுடும்பு பேசிற்றே.

(இ-ள்.) இன்பமாய்த் தங்களின் திருநாமத்தையுடைய கலிமாவை யென்னுடன் காட்டின்கண் தங்கிய அஃறிணைச்சாதிகள் துதிக்கின்றன. மிகுத்த கீர்த்தியையுடைய மெய்யான நன்மை பொருந்திய நபியும் நீங்களே யல்லாமல் இவ்வுலகத்தின்கண் வேறே நபிமார்களில்லரென்று அந்த உடும்பானது சொல்லிற்று. (௩௪)

உடம்பிவை யுரைத்தலு முவந்து தன்மனத்
திடும்பினைத் தவிர்ந்துநின் றறபி யென்பவன்
குடும்பமு மெளியனுங் குபிரி னுற்றினம்
படும்பவந் தவிர்கெனப் பாதம் பற்றினன்.

(இ-ள்) அந்த வுடும்பானது இந்த சமாசாரங்களைச் சொன்ன மாத்திரத்தில் அவ்வறபியாகிய வேடனென்று சொல்லப்பட்டவன் மனசின்கண் விருப்பமடைந்து தனது துன்பங்களையொழித்துநின்று எளிமையையுடையவனான யானும் எனது குடும்பமும் குபிர் மார்க்கத்தினால் பிரதிதினமும் படாநிற்கும் பாவத்தை யொழியுங்களென்று சொல்லி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பாதங்களைப் பிடித்தான். (௩௫)

வண்ணவொண் புயநபி பாதம் வைத்தகை
கண்ணினிற் பதித்தகங் கனிய முத்தமிட்
டெண்ணில வுவகையுற் றெவரும் போற்றிட
வுண்ணெகிழ்ந் தருங்கலி மாவை யோதினன்.

(இ-ள்.) அழகிய பிரகாசத்தைக்கொண்ட தோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பாதங்களில் அவ்வாறு வைத்த கைகளைக் கண்களில் பதியும்படிசெய்து

மனமானதுகனியும் வண்ணம் முத்தமிட்டுக் கணக்கில்லாத மகிழ்ச்சியடைந்துயாவர்களும் துதிக்கும்படி இருதயம்நெகிழப்பெற்று அருமையானகலிமாவைத் தமது வாயினல் ஓதினர். (ருசு)

புதியவ னபிகலி மாவின் பொற்புற
வுதுவுடன் வருமுறை யொழுகி மாமறை
விதிமுறைத் தொழுகையு மேவி மேதையின்
முதியவ னிவனென முசுலி மாயினன்.

(இ-ள்.) அவ்விதம் ஓதிய அவர் புதிய ஆலத்தையுடையவனுன ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் நபியாகிய றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் கலிமாவினது அழகான துறும் வண்ணம் உலுவோடும் வாராநிற்கும் முறைமைகளில் நடந்து மகத்தான விதியினது ஒழுங்குகளையுடைய தொழுகையையும் விரும்பி இவர் அறிவினது முதியவரென்று சொல்லும் வண்ணம் முசிலி மாயினர். (ருஎ)

உனைப்பிடித் தடர்ந்தன னுனது செய்கையா
லெனைப்பிடித் தடர்பவ மின்று போக்கினேன்
மனைத்தட வளைசெலென் றுடும்பை வாழ்த்தினன்
பனைத்தடக் கரக்களி றனைய பண்பினன்.

(இ-ள்.) அன்றியும், பனைமரத்தை யொத்த பெரிய துதிக்கையைக் கொண்ட யானையைப் போன்ற தகுதியை யுடையவரான அவர் அந்த உடும்பை யான் உன்னை நெருங்கிப் பிடித்தேன். உனது செய்கையினல் என்னைப் பிடித்து நெருங்கிய பாவங்களை இன்றையத்தினம் போக்கடித்தேன். ஆதலால் உனது வீடாகிய பெரிய வளையின்கண் போவாயாக வென்றுசொல்லி ஆசீர்வதித்தார். (ருஅ)

உறைத்தருங் குழுவின ருவப்ப நோக்கித்தன்
னறபிதன் முகமல ரதனை நோக்கிமெய்
மறைநபி பங்கய வதன நோக்கிப்பின்
னிறைதரு மகிழ்ச்சிபெற் றுடும்பு நின்றதே.

(இ-ள்.) அப்போது அந்த உடும்பானது அங்கு தங்கிய கூட்டத்தார்களான அசுஹாபிமார்கள் மகிழும் வண்ணம் அவர்களைப் பார்த்து தனது அறபியினது முகமாகிய தாமரைப் புஷ்பத்தைப்பார்

த்து சத்திய வேதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் முண்டக மலர்போன்ற முகத்தைப் பார்த்துப் பின்னர் பூரணப்பட்ட சந்தோஷத்தைப் பெற்று நின்றது. ()

மருப்புய நபிதிரு மதுர வாய்திறந்
திருப்பிடத் தேகென வுடும்புக் கின்புற
வுரைப்பது கேட்டுளங் கனிந்து கானிடை
விருப்பொடும் போயது விலங்கின் சாதியே.

(இ-ள்.) அவ்விதம் நிற்கவே வாசனையைக் கொண்ட தோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் தெய்வீகமுற்ற இனிமையை யுடைய வாயைத் திறந்து அந்த உடும்பை நீ உனது இருப்பிடத்திற்குச் செல்லென்று மகிழ்ச்சிபொருந்தும் வண்ணம் சொன்னதை விலங்கின் இனமாகிய அந்த வுடும்பானது தனது காதுகளினாற் கேள்வியுற்று மனமானது கனிபப்பெற்று விருப் பத்தோடும் காட்டின்கண் சென்றது. (சo)

உடும்புபேசியபடலம்.

முற்றிற்று.

ஆ படலம்-ரு-க்கு-திருவிருத்தம்-நகூஎ.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

உத்துபாவந்தபடல்ம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடவியினி லுடும்பகல அறபிவே
டனுமறிவுள் ளகத்திற் றேக்கிப்
புடையகலா நிழல்போலுந் தோழருட
னகுமதையும் புகழ்ந்து போற்ற

மடலவிழ்பைங் குவளைசெறி மடுச்சூழு
நீள்புரிசை மக்க மீதி
னுடுவினமு மடுவுறையு நிறைமதியு
நிகர்த்திடவந் துறைந்தா ரன்றே.

(இ-ள்.) நபிகள் பெருமா னவர்களின் சந்நிதியிலிருந்த அந்த உடும்பானது காட்டின்கண் நீங்கிச் செல்ல அறபியாகிய இஸ்லாமான வேடரும் மனத்தினகம் அறிவானதை நிறையும்படிசெய்து பக்கம்விட்டு நீங்காத நிழலைப்போன்ற தோழர்களாகிய அசுஹாபிமார்களுடன் அஹ்மதென்னுந் திருநாமத்தையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களையும் துதித்து வணங்கும்வண்ணம் அவர்கள் இதழ்களானவை நெகிழ்ந்த பசிய குவளைப் புஷ்பங்கள் நெருங்கிய தடாகங்கள் வளையப்பெற்ற நீண்ட கோட்டை மதிலையுடைய திருமக்கமா நகரத்தின்கண் நட்சத்திரக் கூட்டங்களையும் அவற்றின் மத்தியின் தங்காநிற்கும் பூரணச் சந்திரனையும் ஒப்பாகும்படி வந்து தங்கி யிருந்தார்கள். (க)

திரைக்கடலி னடுவெழுந்த மதிக்கதிர்போன்
முகம்மதுதஞ் செழுந்தீன் செவ்வி
நிரைத்தெழுந்த பயிர்போலத் தழைத்தோங்க
நிலைநிறுத்தி நிகழுங் கால
முரைக்கடங்கா வெகுளிபொங்கு மனத்தினராய்க்
குபிர்த்தலைவ ரொருங்கு கூடி
வரைத்தடத்தைக் கொதுகினங்க ளரிப்பதெனச்
சிலவசனம் வளர்க்கின் றாரால்.

(இ-ள்.) அலைகளையுடைய சமுத்திரத்தின் மத்தியில் உதயமான சந்திரனின் கிரணங்களை நிகர்த்த நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் செழிமையுற்ற அழகிய தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கமானது வரிசைகொண்டு எழும்பிய பயிரைப்போலத் தழைப்புற்று வளரும் வண்ணம் நிலையாக நிற்கச்செய்து நடக்குகின்ற காலத்தில், குபிர் மார்க்கத்திலுள்ள தலைவர்கள் சொற்களினு லமையாத கோபமானது அதிகரிக்கும் மனதையுடையவர்களாய் ஒன்றாகச் சேர்ந்து பெருமை தங்கிய மலையைக் கொதுகின் கூட்டங்கள் அரிப்பதைப்போலச் சில வார்த்தைகளை வளர்த்தார்கள்.

தண்டரளக் கதிர்வடிவின் முகம்மதினைக்
  குறைபடுத்தி யவர்தம் வாக்கின்
விண்டுரைக்கு மறைமொழியை யெளியமொழி
  யெனவாக்கி வினவி யீமான்
கொண்டவர்க டமையுமவர் மனையும்புறம்
  படுத்திநமர் குலத்துக் காகாத்
தண்டனைகள் படுத்திடவும் பலபலதந்
  திரவசனஞ் சாற்றி னரால்.

(இ-ள்.) குளிர்ச்சி தங்கிய முத்தினது பிரகாசத்தைக்கொண்ட அழகையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் குற்றப்படுத்தி அவர்கள் தங்களின் வாயைத் திறந்து வாக்கினால் சொல்லும் வேத வசனத்தைத் தாழ்ந்த வசனமென்று ஆகும்படி செய்து அதைக்கேட்டு அவர்களுக்கு ஈமான் கொண்டவர்களையும் அவர்களின் மனைவிமாரையும் இவ்வூரிலில்லாமல் வெளியாக்கி நம்மவர்களின் கூட்டத்திற்காகாத தண்டனைகள் படுத்தவும் பற்பல உபாயவார்த்தைகளைப் பேசினார்கள். (௬)

பிறவியா திவனுரையா தெனவிரித்துப்
  பகுத்தறியாப் பேத மாக
அறபியா கியகுபிரர் பலர்கூறு
  மொழிவழிகேட் டவரை நோக்கி
யிறபியா தரும்புதல்வ னிரங்காத
  கெடுமனத்த னென்று நீங்கா
வுறவியா னென்பவரைப் பகையாக்கும்
  விடனாக்கி னுரைக்கின் றானால்.

(இ-ள்.) அப்போது உற்பத்தி யாது? இவன்வார்த்தையானது யாது? என்றுசொல்லி விரிவாக்கிப் பகுத்துணராத மாறுபாடாக அறபியான அந்தக் காபிர்கள் அனேகர் சொல்லும் வார்த்தைகளின் ஒழுங்குகளை றபியா வென்பவன் தந்த புத்திரனும் இரங்காத கெட்ட மனத்தையுடையவனுமான உத்துபாவென்பவன் தனது காதுகளினால்கேள்வியுற்று அந்தக் காபிர்களைப்பார்த்து எக்காலமும் அகலாத சிநேகம் யானென்று சொல்லப்பட்டவர்களை விரோதமாக்கும் விஷத்தைக் கொண்டதனது நாவினாற் சொல்லுகின்றான். ()

முகிற்கவிகை முகம்மதிடஞ் சென்றுசிறி
துத்தரத்தை மொழிந்தி யானோர்
பகற்பொழுதி னவனுரையா லவனெடுத்த
நெறியனைத்தும் பழுதி லாக்கி
நிகர்க்கரிய குபலலது முதற்பிறிதொன்
றில்லையென நிறுத்தி மேலும்
விகற்பமிலை யெனப்படுத்தி வருவனென
மொழிந்தெழுந்தான் வீரர்க் கன்றே.

(இ-ள்.) யான் மேகக்குடையை யுடைய அந்த முகம்ம தென்பவனிடத்திற்சென்று சிறிது உத்தரகங்களை வினவி ஒருபகற்பொழுதிலேயே அவனின் வார்த்தைகளினால் அவன் எடுத்த ஒழுங்குகளெல்லாவற்றையும் குற்றத்திலாக்கும்படிசெய்து உவமைக் கருமையான நமதுகுப லென்னும் தம்பிரா னல்லாது வேறே யொரு தெய்வமு மில்லை யென நிலைநாட்டி மேலும் வேற்றுமை இல்லையென்று சொல்லும்படி படுத்திவருவேனென்று வீரர்களான அந்தக் காபிர்களுக்குச்சொல்லி யெழும்பினான். (ரு)

ஒருகாலுந் தறுகாது குணக்கெழுந்து
குடக்கோடற் குறும்வெய் யோனை
யிருகாலும் வழங்காதான் முன்னோடி
மறிப்பனெனு மியற்கைபோலக்
குருகாலு மலர்வாவிபுடைசூழு
மக்கநகர்க் குரிசி றன்பாற்
பொருகாலக்கதிரிலைவேல் வலனிலங்க
விரைவினெடும் புறப்பட் டானே.

(இ-ள்) அவ்வித மெழும்பின உத்துபாவென்பவன் ஒரு காலத்திலும் தடைப்படாது கீழ்த்திசையி லுதயமாய் மேற்றிசைக்கு ஓடுதற்குப் பொருந்தாநிற்கும் சூரியனை இரண்டு கால்களும் வழங்கப்பெறாதவனான ஒரு முடவன் அதன்முன்னாக ஓடிச்சென்று தடைபடுத்துவேனென்று சொல்லும் தன்மையைப்போலப் பக்கங்களில் அன்னப்பட்சிகள் ஆடாநிற்கும் தாமரைப் புஷ்பங்களையுடைய தடாகங்கள் விளங்க திருமக்கமா நகரத்தையுடையகுரிசிலான நபிமுகம்

மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களி னிடத்தில் குற்றத்தைக் கொப்பளிக்கும் கிரணங்களை யுடைய வேலாயுதமானது தனது வல துகையின்கண் ஒளிரும்படி துரிதத்தோடும் புறப்பட்டான். (சு)

உத்துபா வரவினைக்கண் டுருட்டுவார்
திரைக்கரத்தி னேடிச் சோர்ந்து
கத்துவால் வளைத்தரளங் கதிர்த்துவார்க்
தொழுகுமணிக் கடலி னுப்பண்
வைத்துவாழ்ந் தெழுங்கதிர்போற் கதிர்கான்ற
முகம்மதுள மகிழ்ந்து நோக்கித்
தத்துவாம் பரிவயவ ருடனணித்தங்
குறைகவெனச் சாற்றி னாரால்.

(இ-ள்.) அவ்வாறு புறப்பட்டு வாாநின்ற உத்துபாவென்பவனின் வரவைக்கண்டு புரட்டுகின்ற நீண்ட அலைகளென்னும் கையின்கண் ஓடித் தளர்வடைந்து ஒலியாநிற்கும் வெண்ணிறத்தைக் கொண்ட சங்கங்களினது முத்துகளைப் பிரகாசித்து நீண்டு ஒழுகுகின்ற இரத்தினங்களையுடைய சமுத்திரத்தினது மத்தியில் வைத்து வாழ்ந்து ஓங்கும் சூரியனைப்போலப் பிரபையானது பிரகாசிக்கப் பெற்ற நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் மனச்சந்தோஷமுற்று அவனைப் பார்த்துத் தாணடிப்பாய்கின்ற குதிரைகளையுடைய வீரர்களான அசுஹாபிமார்களோடும் சமீபமாய் அங்கே தங்கியிருப்பாயாக வென்று சொன்னார்கள். (எ)

இகல்பொருந்து முளத்தோடு மிறபியா
தரும்விடலை யிருந்து சோதி
முகம்மதினை முகநோக்கிச் சூழ்ந்திருந்த
பெரியோரை மதித்துப் போற்றிப்
பகருமொழி சிறிதுளதென் னிடத்திவலம்
மொழி யனைத்தும் பரிவிற் கேட்டுப்
புகாறநும் மனத்தாய்ந்து தெளியுமென
மறுத்துமுரை புகல்கின் றானல்.

(இ-ள்) அவ்விதம் சொல்லவே விரோதத்தைப் பொருந்திய மன தோடும் றபியாவென்பவன் தந்த இளம்பருவத்தையுடையவனான அவ் வுத்துபாவென்பவன் அவ்வாறேஅங்கு இருந்துபிரகாசத்தையுடைய

நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் முகத்தைப் பார்த்து அவர்களைவளைந்து இருக்கப்பெற்ற பெரியவர்களான அசுஹாபிமார்களை இருதயத்திலெண்ணித்துதித்து என்னிடத்திற் சொல்லுவதற் கருமையாகிய சில வார்த்தைகளுண்டு. அந்த வார்த்தைக ளெல்லாவற்றையும் அன்புடன் கேள்வியுற்றுக் குற்றமறும் வண்ணம் தங்களின் மனதின்கண் ஆராய்ந்து அறியுங்களென்று சொல்லிப் பின்னரும் சில வார்த்தைகளைச் சொன்னான். (அ)

பெருந்தவத்தால் வரும்புகழோய் தனியிறைவ
னொருவனெனப் பெருக்கும் பேச்சு
மிருந்தமறை யனைத்தையும்விட் டெனதுமொழி
மறைமொழியென் றிசைக்கும் வாக்குந்
திருந்துநெறி புதுநெறியொன் றுளதெனமுன்
னெறிவழுவாய்ச் செப்பு மாறும்
வருந்தமர்க்குந் திசையோர்க்கு மறையோர்க்கு
மனம்பொருத்த மன்று தானே.

(இ-ள்.) பெரிய தவத்தினால் இவ்வுலகத்தின்கண் அவதாரமாய் வந்த கீர்த்தியையுடைய முகம்மதானவர்களே! நீங்கள் ஒப்பற்ற இறைவனான ஜல்லஜலா லாகுவத்த ஆலாவானவன் ஒருவனென்று அதிகப்படுத்துகின்றவார்த்தைகளும் இருக்கப்பெற்ற வேதங்க ளெல்லாவற்றையும் ஒழித்து என்னுடைய வார்த்தைகள்வேதவார்த்தைகளென்று சொல்லுகின்ற வார்த்தைகளும் யாவர்களும் செவ்வைப்படும் மார்க்கமானது நூதனமாகிய ஒரு மார்க்கமுண்டென்று முன்னேயுள்ள மார்க்கத்தைக் குற்றமாகச் சொல்லுகின்ற உத்தரமும் இப்போது இருப்பவர்களே யல்லாமல் இனிமேல் வராநிற்கும் நமது பந்துக்களுக்கும் எண்டிசைகளி லுள்ளவர்களுக்கும் வேதியர்களுக்கும் மனப்பொருத்தமில்லை. ()

ஒருவனென வுரைத்தீரிந் நிறத்தனிவ
னுளனெனக்கண் ணுறச்செய் தீரிற்
றிருவணக்க மெனத்தொடுத்தீர் முகங்கைகா
றனைத்தோய்த்தோர் திசையை நோக்கித்
தரையினுத றைவரலா யடிக்கடிதாழ்ந்
தெழுந்திருகை தன்னை யேந்தி
வருவதலா லொருகுறிப்பு மிலையெவர்க
ளிவ்வணக்கம் வணங்கி னேரே.

(இ-ள்.) அன்றியும், கடவுள் ஒருவனென்று சொன்னீர்கள் அக்கடவுள் இன்னநிறத்தையுடையவன். இன்னவன் இங்கேயுள்ளவனென்று கண்களினுற் பார்க்கும்படி செய்திர்களில்லை. மேலும்தெய்வீகம் பொருந்திய தொழுகையென்று ஒரு தொழுகையைப் பொருத்தினீர்கள். முகத்தையும் கைகளையும் கால்களையும் நனைத்து ஒரு திசையைப் பார்த்து பூமியின்கண் நெற்றியானது தடவும்படியாக அடிக்கடி தாழ்ந்து எழும்பி இரண்டு கைகளேயும் ஏந்தி வருவதேயல்லாமல் யாதொரு குறிப்புமில்லை இந்தத் தொழுகையைத் தொழுதவர்கள் வேறே யாவர் ? ஒருவருமில்லர். (ய)

முதலவன்றன் றிருத்தூத ரெனப்பேரிட்
　டரியமறை மொழியென் றேத்திப்
புதியமொழி யுரைத்தீமான் கொள்வித்தீ
　ரிஸ்லாத்திற் புக்க பேரி
லிதமுறநம் மிறைவனிவ னெனக்கண்டோ
　மெனவுரைத்தோ ரில்லை மேலும்
பதவியுள வெனிலதுவு மெவரறிவர்
　சாதமெனப் பருதி வேலோய்.

(இ-ள்.) அன்றியும், சூரியனையொத்த வேலாயுதத்தை யுடையவர்களே! யான் யாவற்றிற்கும் முதன்மையனுன ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலென்று ஒரு நாமத்தைச்சூட்டி நூதனமாகிய வார்த்தைகளைச் சொல்லி இது அருமையான வேதவார்த்தைகளென்று கூறித் துதித்து ஜனங்களை யுங்களுக்கு ஈமான் கொள்ளும்படி செய்தீர்கள். ஆனுல் அவ்விதம் ஈமான்கொண்டு உங்களுடைய தீனுல் இஸ்லாமென்னு மார்க்கத்தில் நுழைந்த ஜனங்களில் நமது இறைவனுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவானவன் இவன்தானென்று இனிமை யுறும்வண்ணம் பார்த்தோமென்றுசொன்னவர்களில்லர் மேலும் முத்தி யுண்டென்று சொன்னுல் அதையும் சத்தியமென்று அறியப்பட்டவர்கள் யாவர்? ஒருவருமில்லர். (கக)

மந்திரமொன் றுருவேற்றிக் கண்கட்டா
　யுடும்பினெடும் வசனித் தோமென்
றந்தரத்தைக் காரணமாய் விளைவித்தீர்
　விச்சையலா லருளோ நாளும்
புந்தியினிற் சிறியோர்க ளறியாது
　மயக்குறுவர் பொருவி லாத

தந்திரமும் மறையோர்க ளிதனையொரு
பொருளாகச் சார்ந்தி டாரே.

(இ-ள்.) அன்றியும். ஒருமந்திரத்தை உருவேற்றிக் கண் கட்டாக உடம்போடும் பேசினுேமென்று அந்தரத்தைக் காரணமாக விளையச்செய்தீர். இது வித்தையேயல்லாமல் தெய்வகிருபையோ? அல்ல, சிறியவர்கள் தங்களின் புத்தியின் கண் அறியாமல் பிரதிதினமும் மயக்கமடைவார்கள் இதை ஒப்பற்ற தந்திரத்தை யுடைய மூன்று வேதங்களையும் கற்றறிந்த வேதியர்கள் ஒருபொருளாக பொருந்தார்கள். (கஉ)

குலத்தினுக்கு மரசருக்கு முதியோர்க்கு
மறையோர்க்குங் கோதி லாதித்
தலத்தினுறை குபலெனுமத் தம்பிரான்
றனக்குமெந்தச் சமயத் தோர்க்கு
நலத்தகைமைத் தலக்கேடும் பிறர்சூடும்
பெரும்பகையு நடவா முன்ன
மிலத்தொடொழு கினத்தொடுறைந் திவைதவிர்வெண்
ணிணம்பருகி யிலங்கும் வேலோய்.

(இ-ள்.) ஆகலால் வெண்ணிறத்தையுடைய நிணத்தைப் புசித்துப்பிரகாசிக்கும் வேலாயுதத்தை யுடையவர்களே! நமது குலத்திலுள்ளவர்களுக்கும் இராஜர்களுக்கும் முதுமையையுடையவர்களுக்கும்வேதியர்களுக்கும் குற்றமில்லாத இந்தப்பூமியின்கண் தங்கியகுபலென்று சொல்லும் அந்தத் தம்பிரானுக்கும் எச்சமயத்தார்க்கும் நல்ல தகைமையினது தலக்கேடும் அன்னியர்கள் சூடாநிற்கும்பெரியவிரோதமும் நடக்கிறதற்கு முன்னர்நீங்கள் இல்லிடத்தோடும் ஒழுகாநிற்கும் பந்துக்களோடும் தங்கி இவைகளைத் தவிர்த்துவிடுங்கள்.

தந்தைதாய் தமர்வணக்க முறையொழுகிப்
பழையமறை தழுவி னீரேல்
வந்தமா வினைநீங்கு மினத்தோர்க
ளெவருமன மகிழ்ச்சி யாகிக்
கந்தடர்வெங் கரியிரதம் பரிநெருங்கப்
படைசூழக் கவிகை யோங்க
விந்தமா நிலத்தரசர் யிறைஞ்சுவது
சரதமென வியம்பி னுனல்.

(இ-ள்.) அன்றியும், பிதாமாதா பந்துக்களாகிய இவர்களின் வணக்கத்தினது ஒழுங்காய் நடந்து பழைய வேதத்தை ஏற்றுக் கொண்டீர்களே யானல் இப்போது வந்திருக்கப் பெற்ற பெரியவினை யானது அகலும். மேலும் குடும்பத்தார்கள் யாவர்களும் மனக்களிப் பாகிக்கட்டுத்தறியை யடராநிற்கும் வெவ்விய யானை, தேர், குதிரை யான இவைகள் நெருங்கவும்,சேனைகள் சூழவும், கொற்றக்குடையா னது ஓங்கவும் தங்களை இந்தப் பெருமை பொருந்திய பூமிக்கு இராஜாராக வணங்குவது சத்தியமென்று சொன்னுன். (கச)

அச்சமணு விலதகத்தி னுத்துபா
வுரைத்தமொழி யனைத்துங் கேட்டு
முச்சகமும் புகழ்முகம்ம துறசூல்தம்
மிதழினிற்புன் முறுவ லூன்றி
விச்சையெனத் தெளிந்துபல பலசூழ்ச்சி
விரித்தறத்தை விளக்கி யென்னே
டிச்சைபெற வுரைத்தனைநன் கியானுரைத்தல்
கேட்டியென விசைக்கின் ருரால்.

(இ-ள்.) உத்துபா வென்பவன் அவ்வாறு மனத்தின்கண் பய மானது அணுப்போது மில்லாது சொல்லிய வார்த்தைக ளெல்லா வற்றையும் வானம், பூமி, பாதாளமாகிய மூன்று லோகங்களுந் துதி யாநிற்கும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் தங்களின்காதுகளினுற் கேள்வியுற்றுத் தங்களினது அதரத்தின்கண் புன்சிரிப்புண்டாய் வித்தையென்று மனசின்கண் தேறிப் பற்பலஉபா யவார்த்தைகளை விரித்துத் தருமத்தை விளக்கிப் பெரிய ஆசையா னது பெறும்படி என்னேடு சொன்னுய்? நல்லது யான் சொல்லு வதை நீ கேட்பாயாக வென்று சொல்லுவார்கள். (கரு)

எனக்கிறையோ னுரைத்தமறை மொழிவசனந்
திறத்ததல வென்னக் கூறல்
மனக்குறையோ வலதுனது மதித்திறனே
வறிகிலன்மும் மறையுந் தேர்ந்தோய்
கனக்கமொழி யொன்றெடுத்துக் காட்டுகநீ
யெனதுமொழிக் கவினைப் பின்ன
ருனக்குரைப்பக் கேட்டுமொழித் திறனறியென்
றெடுத்துறைத்தா ரொளிரும் பூணர்.

(இ-ள்.) முன்னுள்ள தொளறுத்து, இஞ்சில், சபூறென்னும் மூன்று வேதங்களையுந் தெளிந்தவனே! எனக்கு இறைவனுன ஜல்ல ஷகுனகுவத்த ஆலாவானவன் சொல்லிய புறுக்கானுல் அலீமென் னும் வேதமானது சொல்லுகின்ற வார்த்தைகள் யுறுதியை யுடைய வைக எல்லவென்று நீ சொல்லுவது உனது பிரிய வீனமோ? அல் லது உன்னுடைய அறிவினது வல்லமையோ? அவற்றை யானறிந் திலேன். ஆனுல் இந்தப்படி நீ கற்ற வேதங்களிலுள்ள வார்த்தைக ளில் ஒருவார்த்தையையாவது கனதியாக எடுத்துக் காட்டுவாயாக! பிற்பாடு எனது வார்த்தைகளின் தக்க பண்மை உனக்குச் சொல்லக் கேட்டு அந்த வார்த்தைகளின் உறுதியை யறிவா யென்று பிரகா சியாநிற்கும் ஆபரணங்களை யுடையவர்களான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் எடுத்துச் சொன்னுர்கள் (கசு)

தாளவொளி தனிஹுருவா யுதித்தமுகம்
  மதுவிதனைச் சாற்றக் கேட்டுப்
பெருகுமுதன் மறைவசனமெவ்வுலகு
  மறிவதியான் பேசி லென்னே
யிரு்மையினும் கதிதருநும் புதுமொழியை
  யெனதுசெவிக் கியைவ தாக
வுரையுமென வெடுத்துரைத்தா னிறபியா
  தரும்புதல்வ னுத்துபாவே.

(இ-ள்.) முத்தினது பிரகாசத்தில் நின்று வடிவமாக அவதரி த்த நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் இவ் வார்த்தைகளைச் சொல்ல றபியாவென்பவன் தந்த புத்திரனுகிய உத் துபாவென்பவன் தனது காதுகளினுற் கேள்வியுற்று ஓங்காநிற்கும் முதன்மையான முன்னுள்ள வேதவாக்கியங்கள் எல்லா வுலகங்களி லும் அறிந்தவைகள்தாம். ஆதலால் அவற்றையான் சொல்லுவதி னுல் என்னபிரயோசனம்? ஒன்றுமில்லை. இம்மை மறுமையென் னும் இரண்டிலும் பேற்றைத் தராநிற்கும் உங்களுடைய நூதனமா கிய வேதவசனத்தை எனது காதுகளுக்குப் பொருந்தும் வண்ணம் சொல்லுங்க ளென்று எடுத்துச் சொன்னுன். (கஎ)

ஆதிதனை யுளத்திருத்தி பிசுமிலெனு
  முரை திருத்தி யமுத மூறும்
வேதமெனும் புறுக்கானி லொருசூறத்
  தெடுத்தோதி விரிவ தாகப்

போதமுறு முபனிடதப் பொருளனைத்துந்
தொகுத் துரைத்தார் பொருவி லாத
சீதரவொண் கவிகைநிழ றனினுலகம்
புரந்தளிக்குஞ் செவ்வி யோரே.

(இ-ள்.) அவன் அவ்வாறு சோல்லவே ஒப்பற்ற பிரகாசத்தை யுடைய மேகக் குடையினது நிழலின்கண் இவ்வுலகத்தைக் காத்து இரட்சிக்கும் செவ்வியரான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலை கிவசல்ல மவர்கள் யாவற்றிற்கும் முதன்மையனுகிய ஹக்கு சுபுகான குவத்த ஆலாவினது நாட்டத்தை மனத்தின்கண் இருக்கும்படி செய்து "பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்" என்னும் வார்த்தையைத் திருத்தமாக ஓதி அமுதமானது சுரக்காநிற்கும் வேதமென்று சொல்லும் புறுக்கானில் ஒரு சூறத்தை யெடுத்துச் சொல்லி விரிவாக அறிவானது பொருந்திய அதினுட் பொருள்க ளெல்லாவற்றையும் அளவுபடுத்திச் சொன்னூர்கள். (௧௮)

இரவியென்னுங் கலிமாவிற் குபிர்த்திமிர
மடர்த்தெறியு மிறசூ லுல்லா
தெரிமறையினுரைகேட்டுப் பொருடேர்ந்து
பகுப்பவதி ஜயித்து நோக்கி
யுருகிமதி மயங்கியெதி ருரையாம
லூமனென வொடுங்கி வான்றோய்
பெருவரையின் மடங்கலெதிர் வரையாடு
நிகர்வதெனப் பேதுற் றானே.

(இ-ள்.) சூரியனென்னும் கலிமாவினல் அந்தகாரமாகிய குபிர் மார்க்கத்தை அடர்த்து வீசாநிற்கும் ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலான நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் விளங்காநின்ற புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது வசனங்களை அவ்வுத்துபா வென்பவன் தனது காதுகளினுற் கேள்வியுற்று அதன்பொருள்களை மனசின்கண் தெளிந்து பிரித்துப்பார்த்து ஆச்சரியப்பட்டு உருகி அறிவானது மயங்கப் பெற்று பதில் பேசாமல் ஊமையைப் போல ஒடுக்கங்கொண்டு ஆகாயத்தின்கண் தோய்ந்த பெரிய மலையினது சிங்கத்திற்கு முன்னர் குறும்பாட்டை ஒப்பென்று சொல்லும் வண்ணம் புத்தியானது கலங்கப் பெற்றான். (௧௯)

அலங்குளைவா லரியேறு முகம்மதுநா
விற்பிறந்த தன்றித் தீஞ்சொ
லிலங்கமர ரிறைமொழிகேட் டிவர்க்குரைத்த
தறுதியென விதயத் தோர்ந்து
கலங்குமனந் தெளிந்துநபி கமலமலர்
முகநோக்கக் கண்க ணாணி
விலங்கினமொத் தெவரோடு மொழியாது
தனியெழுந்து விரைவிற் போனான்.

(இ-ள்.) அவ்வாறு கலங்கப்பெற்ற உத்துபாவென்பவன் இந்த இனிமையான வசனமானது பிரகாசியாநிற்கும் மயிரைக் கொண்ட வாலையுடைய ஆண்சிங்கமாகிய முகம்மதென்பவரின் நாவினாலுண்டானதல்ல; ஒளிர்கின்ற ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் இறைவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் வார்த்தைகளைக் கேள்வியுற்று இந்த முகம்மதுக்குச் சொன்னது முடிவென்று தனது மனசின்கண்தெளிந்து கலக்கமடைந்த இருதயமானது தேறுதலமைந்து அங்நபிகள் பெருமான் நபிறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தாமரைப்புஷ்பம்போன்ற முகத்தைப் பார்ப்பதற்குத் தனது கண்கள் வெட்கிக்கப்பெற்று மிருக்ச்சாதியைப்போல ஒருவருடனும் பேசாது ஏகமாகத் துரிதமா யெழும்பித் தனது திசையை நோக்கிச்சென்றான். (உ௰)

கலைமறைதேர் முகம்மதுட னுரையாம
லெழுந்துதலை கவிழ்ந்து நாணி
நிலைமையட லறிவகன்ற நெஞ்சினொடும்
புலம்பிநெடு மூச்சிற் சோர்ந்து
சிலைவயவர்க் கெதிருரைப்ப தென்னெனச்சஞ்
சலத்தினடுத் தியங்கி வாடிக்
குலைகுலைந்து குலத்தவரு மபூஜகிலு
மிருந்தபெருங் குழுவைச் சார்ந்தான்.

(இ-ள்.) உத்துபா வென்பவன் அவ்வண்ணம் வேதசாஸ்திரங்களில் தெளிந்த நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவ்சல்ல மவர்களுடன் பேசாது எழும்பிச் சிரத்தைக் குனிந்து வெட்கமுற்றுத் தனது நிலைமையும் வலிமையும் அறிவும்

நீங்கிய மனத்தோடும் புலம்பி நெடுமூச்சினால் தளர்ந்து வில்லினது வல்லவர்களான தனது கூட்டத்தார்களுக்கு முன்னர் நாம்சொல்லு வது யாது? ஒன்றுமில்லையே யென்று சஞ்சலத்தினது மத்தியில் கிடந்து தியக்கமடைந்து சோர்ந்து ஈரற்குலையானது குலையப்பெற் றுத் தனது கூட்டத்தார்களும் அபூஜகி லென்பவனும் தங்கியிருக் கப்பட்ட பெரிய கூட்டத்தில் போய்ச்சேர்ந்தான். (உக)

உத்துபாவந்தபடலம்

முற்றிற்று.

ஆ-படலம்-சூ-க்குத்-திருவிருத்தம்-சகஅ.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

ஹபீபுமக்கத்துக்குவந்தபடலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உள்ளறிவு குடிபோக்கி யிருந்தவன்றன்
  முகநோக்கி யுரவ நீயவ்
வள்ளலிடஞ் சென்றதுவு மிருந்ததுவு
  நிகழ்ந்ததுவும் வகுத்துக் கூறென்
றள்ளிலைவே லவர்கேட்ப முகம்மதுசொற்
  கெதிராக வமா ராலும்
விள்ளரிதிந் நிலத்திலெவ ரெதிருரைப்பு
  ரெனுமொழியை விளம்பி னானே.

(இ-ள்.) அகத்தின்கண் தங்கிய அறிவைக் குடிபோக்கி இருக் கப்பெற்ற உத்துபா வென்பவனை மாமிசத்தை அள்ளிக்கொள்ளும் இலைகளைக்கொண்ட வேலாயுதத்தையுடைய அந்த அபூஜகிலின் சபையிலிருந்தவர்கள்பார்த்து அறிவையுடையஉத்துபாவானவனே!

நீ அந்த வள்ளலாகிய முகம்மதினிடத்தில் போனதையும் இருந்ததையும் அங்கு நடந்ததையும் வகைப்படுத்திச் சொல்லுவாயாக வென்று கேட்க, அதற்கு அவன் அந்த முகம்மதென்பவனுடைய வார்த்தைகளுக்கு எதிராகத் தேவர்களான மலாயிக்கத்து மார்களாலும் பேசுவதற் கருமையாகும். இப் பூலோகத்தின்கண் எதிராகப் பேசுவோர்கள் யாவர்? ஒருவருமில்லரென்று இந்த வார்த்தைகளைச் சொன்னான்; (க)

அரியலம்பு புயவிடலை மனமயக்குற்
றுரைத்தவைகேட் டறிவின் மாந்தர்
பெருகுமஃ றிணைச்சாதி யுளமனைத்தும்
பேதுறுத்திப் பெட்பி னோடு
முரைதரச்செய் துவரிவரை நிலைமாறச்
செய்பவனிவ் வுத்து பாதன்
றிருமனத்தைப் பேதுறுத்த லவற் கரிதோ
வெனநகைத்துச் செப்பி னூரால்.

(இ-ள்.) வண்டுகள் ஒலியாநிற்கும் புஷ்பமாலையணிந்த தோள்களைக்கொண்ட இளம்பருவத்தையுடையவனான அந்த உத்துபாவென்பவன் தனது மனமானது மயக்கமுற்று அவ்வாறு சொல்லியவார்த்தைகளை அறிவற்ற ஜனங்களாகிய அந்த அபூஜகிலின் கூட்டத்தார்கள் தங்களின் காதுகளினால் கேள்வியுற்றுப் பெருகிய அஃறிணைச் சாதிக ளெல்லாவற்றையும் அவைகளின் மனசை வேற்றுமைப்படுத்தி ஆசையோடும் பேசும்வண்ணம் செய்து சமுத்திரங்களையும் மலைகளையும் தங்களின் நிலைமையை மாறும்படி செய்பவனான அந்த முகம்மதென்பவன் இந்த உத்துபாவினுடைய அழகிய மனசை வேற்றுமைப்படுத்துவது அவனுக்கு அருமையான காரியமா? இல்லையென்று சிரித்துச் சொன்னார்கள். (உ)

கனைத்தமுரட் கரிநிகர்த்த வுத்துபா
கலங்கியகட் டுரையு நேர்ந்தங்
கினத்தவர்க ளுரைத்ததுவுஞ் சரதமெனச்
சிரந்தூக்கி யெண்ணித் தேர்ந்து
மனத்தடக்கித் தீனெனுமோர் பெரும்பயத்தைப்
புறத்தாக்கி வரிவி லேந்து
முனைத்தடக்கை யபூஜகல்தன் குலத்தோரை
யெதிர்நோக்கி மொழிவ தானன்,

(இ-ள்.) அப்போது நீண்ட கோதண்டத்தைத்தாங்கும் துணிகரத்தைக்கொண்ட பெரியகையையுடைய அபூஜகிலென்பவன் ஆரவாரியாநிற்கும் அமையாமையையுடைய யானையைப்போன்ற உத்துபாவென்பவன் கலக்கமுற்றுச் சொன்ன உறுதி வாக்கியத்தையும் அதை மனசின்கண் நேர்ந்து அவ்விடத்தில் இனத்தவர்களான அந்தக் காபிர்கள் சொன்னதையும் சத்தியமென்று ஆலோசித்துத் தெளிந்து தனது மனசின்கண் அமையும்படி செய்துத் தலையை யுயர்த்தித் தீனென்று சொல்லும் ஒப்பற்ற பெரிய பயங்கரத்தை மனசைவிட்டும் வெளியிலாக்கித் தனது கூட்டத்தார்களை எதிராகப் பார்த்துச்சொல்ல ஆரம்பித்தான். (௫)

எத்திறத்து மெப்புதுமை விளைத்திடினு
மம்மாயத் திடைப்ப டாத
புத்தியினும் வாள்வலியின் றிடத்தானும்
வஞ்சனையைப் பொதிந்து தோன்றுஞ்
சத்துருவா முகம்மதுத னுயிர்விசும்பு
குடிபுகுதத் தக்க தாக்கும்
பத்தியின னினைத்தபடி முடித்திடுவன்
பார்மினெனப் பகர்ந்து மாதோ

(இ-ள்.) என்ன வலிமையாலும் என்ன ஆச்சரியங்களைச் செய்தாலும் அந்தத் தந்திரத்தின்கண் அகப்படாத அறிவாலும் வாள் வலிமையி னுறுதியாலும் பொய்மையைப் பொதிந்து தோன்றுநிற்கும் விரோதியாகிய முகம்மதென்பவனின் ஆவியானது ஆகாயத்தின்கண் குடியாகப் புகுதுவதற்குத் தகுதியாக்கும் முறைமையையுடையவனை நான் எண்ணினபடி நிறைவேற்றுவேன் பாருங்களென்று சொல்லி. (௬)

தேருத மதியாலு முற்ருத
வலியாலுஞ் செவ்வி யோர்க்கு
மாருத பெரும்பகையாய் முகம்மதென
வுதித்தோன்றன் மாயந் தானோர்
பேருத நினைத்துமறு கத்தாபைப்
போலமனம் பேது றேனியான்
வீருரும் வேல்வேந்தி ரிவைசாத
மெனமறுத்தும் விளம்பி னானே.

(இ-ள்.) பிரகாசமானது நிறையப்பெற்ற வேலாயுதத்தையுடைய அரசரானவர்களே! தெளியாத அறிவினாலும் முதிராத வலி

மையினுலும் அழகை யுடையவர்களுக் கொழியாத பெரிய விரோதமாய் முகம்மதென்று சொல்லும் வண்ணம் தோன்றினவ னுடைய வஞ்சகத்தை ஒருதியமாக எண்ணி உமறுகத்தா பென்வவரைப் போல நான் மனமானது வேற்றுமைப் படேன் இவை சத்தியமென்று மறுத்துஞ்சொன்னுன்: (ரு)

மதியார்தஞ் செவிக்கியைய வாக்கிஞ
விவையுரைத்து மனத்தி னூடு
கொதியார்வெவ் விடவரவின் வாய்த்தேரை.
யெனவறிவு குலைந்து மேனுள்
விதியாதென் றறியாத கொடும்பாவி
யவைநீங்கி விண்ணி னூடும்
பதியாகப் படுத்தகொடி மணிமாட
மனைபுகுந்தான் பண்பி லானே.

(இ-ள்.) இனி வராநிற்கும் தினத்தில் தனது விதியானது இன்னதென்றறியாத கொடிய பாவியான குணமற்ற அந்த அபூஜகிலென்பவன் உண்மையைக் கருதாதவர்களாகிய அந்தக் காபிர்களின் காதுகளுக்குப் பொருந்தும்வண்ணம் தனதுவாக்கிஞல் இந்த வார்த்தைகளைக்கூறி மனசின்கண் கொதித்தலைக்கொண்டவெவ்விய விஷத்தையுடைய சர்ப்பத்தினது வாயிலகப்பட்டத் தேரையைப் போலப் புத்தியானது குலையப்பெற்று அந்தச் சபையைவிட்டும் அகன்று ஆகாயத்தின் கண்ணும் பதிவாகச் செறிக்கப்பெற்ற கொடிகளமைந்த அழகிய மேன்மாடத்தையுடைய தனது வீட்டின்கண் போய் நுழைந்தான். (சு)

அற்றையினி லிரவகற்றி யறிவிஞ
லுயர்ந்தோரை யாவி போலு
முற்றவரை மதிக்கேற்ப வுரைகொடுக்குந்
திறத்தவரை யுறவி ஞேரை
வெற்றியொடு மினிதழைத்தங் கோர்மாடத்
திடத்திருத்தி வியந்து நோக்கிக்
குற்றமற வபூஜகல்த னுளத்தினுறும்
வரவாறு கூற லுற்முன்.

(இ-ள்.) அவ்வாறு போய் நுழைந்தவனுன் அந்த அபூஜகிலென்பவன் அன்றையத்தினத்தின் இராப்பொழுதையொழித்து

மறுநாள் புத்தியினால் உயர்ச்சி யுற்றவர்களையும் தனது ஜீவனைப் போலும் பொருந்தினவர்களையும் தனது புத்திக்கு இசையும்வண்ணம் வதிற்பேசும் வல்லமை யுடையவர்களையும் தனது குடும்பத்தார்களையும் விஜயத்துடன் இனிமையாகக் கூப்பிட்டு அவ்விடத்தில் ஒரு வீட்டின்கண் இருக்கும்படிசெய்து அவர்களைப் பார்த்துத் துதித்துக் களங்கமறும்படி தனது மனசின்கண் சேர்ந்த வருகையினது ஒழுங்குகளைச் சொல்ல ஆரம்பித்தான். (எ)

பிறந்தகுலந் தனைவழுக்கி நமர்க்குமொரு
பெரும்பகையாய்ப் பேதி யாத
மறந்தவழுமனத்தினனு யிருந்தமுகம்
மதுவையுயிர் மாய்த்தல் வேண்டு
நிறந்தவழுங் கதிர்வேலீ ரில்லெனில்தீ
னிலைபெரிகி நிலத்தின் மீது
புறந்தயங்கப் படர்ந்துநமர் குலஞ்சமயந்
தேய்த்தமிழ்த்திப் போடுந் தானே.

(இ-ள்.) பிரபையானது தவழாநிற்கும் கிரணங்களைக் கொண்ட வேலாயுதத்தை யுடையவர்களே! தான் அவதரித்த கோத்திரத்தை இழுக்கும் வண்ணம்பேசி நம்மவர்களுக்கும் ஒருபெரியவிரோதமாகப் பேதியாத கொலையானது தவழும் மனசை யுடையவனு யிருக்கப்பெற்ற முகம்மதென்பவனின் ஆவியை மாயும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவனது தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது நிலைமையானது இப்பூமியின்மீது அதிகரித்துப் பக்கங்களில் பிரகாசிக்கும் வண்ணம் பரவி நமது குலத்தையும் மார்க்கத்தையுங் குறைத்துத் தாழ்த்திப் போடும். (அ)

பகையினொடல் லுடல்வருத்து நோயதனைக்
கொடுநெருப்பைப் பாரின் மீதிற்
றெருகுவிடத்தைத் தோற்றரவிற் பரிகரித்த
லியாவருக்குஞ் சூழ்ச்சித் தாகு
மிகுமெனிலிந் நிலமாக்கண் மதியாலும்
வலியாலும் வெல்வ தாகா
நிகரும்வெஞ் சமர்தொலைத்து நிறங்குருதி
பிறங்கியொளிர் நிணங்கொள் வேலீர்.

(இ-ள்.) அன்றியும், ஒப்புச் சொல்லுதற் கருமையான வெவ்விய யுத்தத்தை அழித்து இரத்தத்தினது பிரபையானது நிறைந்து பிரகாசியாநிற்கும் நிணத்தைக் கொண்ட வேலாயுதத்தை யுடையவர்களே! இப்பூலோகத்தின்மீது விரோதத்தையும் நல்ல சரீரத்தை வருத்தாநிற்கும் வியாதியையும் கொடிய அக்கினியையும் நெருங்கிய விடத்தையும் உண்டான போழுதே நீக்குவது யாவர்களுக்கும் துணிய அறிவாகும். அவ்விதம் நீக்காது அவைகள் அதிகப்படுமேயானால் இந்தப்பூமியின் கண்ணுள்ள மனுஷியர்களின் புத்தியினாலும் வலிமையினாலும் அவற்றை ஜெயிக்க முடியாது. (கூ)

கலிநிலைத்துறை

குடிமை யின்னமர் குலத்தையு மனத்தினிற் குறித்து
மடிமை யாயிருந் தேமெனின் முகம்மது தனக்கே
யடிமை யாயவன் றண்டனைக் கடல்வலி யிழந்து
மிடிமை யாகுதல் சரதமின் னவிர்கதிர்வேலீர்.

(இ-ள்.) அன்றியும், பிரபையானது ஒளிர்கின்ற கிரணங்களைக் கொண்ட வேலாயுதத்தை படையவர்களே! குடியினது இயல்பை யுடைய நம்மவர்களின் குலத்தையும் மற்றவைகளையும் மனசின்கண் கருதி நாம் முகம்மதைத் தண்டிக்காமல் சோம்பேறிகளாக இருப்போமேயானால் அந்த முகம்மதுக்குத் தொண்டர்களாய் அவனது தண்டனைக்கு நமது வீரத்தை யுடைய வலிமைகளையும் இழக்கப் பெற்று ஏழைகளாவது சத்தியம். (௪0)

உறைந்த வர்க்கிடர் வருமுன மொருமனத் துணிவாய்
மறந்த ரித்திடுங் கிளைனத் தொடுமுகம் மதுவை
யிறந்தி டும்படிக்கியற்றுவ மெனினமர்க் கெளிதி
னறந்த ரும்பரகதியுடன் புகழுமுண் டாமால்.

(இ-ள்.) அன்றியும், இந்தத் திருமக்கமா நகரத்தின்கண் தங்கியிருக்கப் பட்டவர்களுக்குத் துன்பமானது வருவதற்கு முன்னர் நாமனைவர்களும் ஒன்றுபட்டமனத்தினது தீர்க்கமாய் வலிமையைத் தரித்த கூட்டமாகிய நமது பந்துக்களோடும் அந்த முகம்மதென்பவனை மாளும் வண்ணம் செய்குவோமே யானால் நம்மவர்களுக்குத் தருமமானது தாரநிற்கும் மோட்சத்துடன் கீர்த்தியுமுண்டாகும்.

இந்த வல்வினை தவிர்த்திடற் கெனதுளம் பொருந்தச்
சிந்தி டாதுறு மொழிபல ருளத்தினுந் தேர்ந்து
மந்தி ரத்தொடு வழுவறு முரைவழங் கிடுமென்
றந்த மன்னவர் தமக்குரைத் தபூஜகில் கேட்டான்.

(இ-ள்.) ஆதலால் எனதுமனமானது இசையும் வண்ணம் இந்த வலிய வினையைத் தவிர்ப்பதற்குக் கெடாது பொருந்தாநிற்கும் வார்த்தைகளை நீங்கள் உங்கள் பலபேர்களின் மனசின்கண்ணும் தெளிந்து ஆலோசனையுடன் குற்றமற்ற வார்த்தைகளாய்ச் சொல்லுங்களென்று அங்கு கூடியிருந்த அரசர்களான அந்தக் காபிர்களுக்கு அபூஜகிலென்பவன் சொல்லி வினவினன். (கஉ)

மாறு கொண்டகு மதுநடத் திடும்வா லாற்றை
வேறு கொண்டபூ ஜகில்விளம் பியமொழி யனைத்துங்
கூறு கொண்டவர் சிந்தையிற் பலபல குறித்து
வீறு கொண்டொரு மொழிப்பட வெதிர்விளம் புவரால்

(இ-ள்.) அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்தக்காபிர்களின் செய்கைகளுக்கு மாறுகொண்டு நடத்தாநிற்கும் ஒழுங்குகளை வேற்றுமை யாகக் கொண்டு அபூஜகிலென்பவன் அவ்வாறு வினவிய வார்த்தைகளெல்லாவற்றையும் அந்தக் காபிர்கள் வகையாய் உட்கொண்டு வேகமடைந்து மனசின்கண் பற்பல ஆலோசனைகளைக் குறித்து ஒரு வார்த்தைப்பட அவன் வினவுக்கு பதில் சொல்லுவார்கள். (கங)

உரைத்த வாசக நன்குன துறுமொழிக் கெதிராய்த்
திருத்தி வேறுரை பகரவல் லவரெவர்திறலோய்
விரித்து மேலுரை பகரவு நமர்குலம் விளங்கப்
பொருத்த வும்நினை யலதுவே றிலைசெழும் புவிக்கே.

(இ-ள்.) வலிமையையுடைய அபூஜகிலே! நீ கூறிய வார்த்தையானது நல்லவார்த்தை. பொருந்திய உனது வார்த்தைகளுக் கெதிராகத்திருத்தி வேறுவார்த்தைகள் சொல்ல வல்லமையுடையவர்கள் யாவர்? ஒருவரு மில்லர். மேலும் செழிய இந்தப் பூலோகத்தின்கண் மேலானவார்த்தைகளை விரிவாய்ச் சொல்லவும் நம்மவர்களின் குலமானது பிரகாசிக்கும் வண்ணம் பொருத்தவும் உன்னையல்லாமல் வேறே பொருவருமில்லர். (கச)

சிதைவி லாமனத் திறல்வலிச் செயலினுக் கேற்ற
மதிவ லோமியா மலமின நும்மதிக் கியையப்
புதிய சூழ்ச்சியொன் றுரைத்தியே லெங்கள்புந் தியிற்கும்
விதிய தாமவை நடத்துக வெனவுரை விரித்தார்

(இ-ள்.) அன்றியும், நாங்கள் குறைபாடற்ற மனசினது வீரத்தைக்கொண்ட வலிமையான தொழில்களுக்கும் பொருந்திய புத்தியினது வல்லமை யுடையவர்களல்லேம் மேலும் உன்னுடைய புத்திக்குப்பொருந்தும் வண்ணம் நூதனமாகிய ஒரு ஆலோசனையைச் சொல்லுவாயானல் அது எங்களுடைய புத்திக்கும் குணமானது தான் அந்த ஆலோசனையின்படி வேண்டிய அவைகளை நடத்துவாயாக வென்று வார்த்தைகளை விரிவாய் எடுத்துச் சொன்னார்கள். ()

உற்ற செய்திக ளனைத்தையு மோர்ந்துணர்ந் துரவோர்
வெற்றி வாண்முக நோக்கிவெவ் வினைமுசம் மதுவைப்
பற்ற றுக்கொலை படுத்திட னமரொடு பரிவின்
முற்று மிந்நகர்ப் படைகொடு முடித்திட லரிதே.

(இ-ள்.) அவ்விதம் சொல்லவே அங்கு பொருந்திய வர்த்தமானங்களெல்லாவற்றையும் அபூஜகிலென்பவன் தனது மனசின்கண் ஆராய்ந்தறிந்து விஜயத்தைக்கொண்ட வலிமையை யுடையவர்களான அந்தக் காபிர்களின் ஒள்ளிய முகத்தைப் பார்த்து கொடிய செயலை யுடைய முகம்மதென்பவனைப் பற்றறுக் கொலைசெய்யும் தொழிலை நம்மவர்களுடன் அன்பை யுடைய இந்தத் திருமக்கமா நகரத்தினது சேனைமுழுவதைக் கொண்டும் முற்றுவிப்பது அருமையாகும். (கசஅ)

வஞ்ச னைத்தொழி லினின்முகம் மதினெடும் வாதா
விஞ்சை கற்றவ ராயிர ரெதிரினும் விளையா
தஞ்ச லாதுரு வேற்றிடி லேறுரு வனைத்து
நஞ்ச மாம்நம துயிரினைச் செகுத்திட நடக்கும்.

(இ-ள்.) மேலும், வஞ்சனையை யுடைய செய்கைகளில் சபதமாய்விஞ்சைத்தொழிற் படித்தவர்களான ஆயிரம்பேர்கள் அந்த முகம்மதோடும் பயப்படாது எதிர்த்தாலும் இவர்களின்தொழில்கள் அவனிடத்தில் விளையாது. அவன் உருவேற்றினல் அந்த உருவுக

ளெல்லாம் நமக்கு விஷமாகும். அன்றியும், நமது ஜீவனை அழிக்கும் வண்ணம் திரியும். (௧௭)

வன்ம திட்புறத் தாலயத் துறைந்ததே வதத்தை
யென்ம னக்குறை தவிர்த்திடர்தவிர்த்தியென் றிசைக்கி
னன்மை யாயுரைத் திடுவதோ நமர்குலப் பவத்தாற்
றின்மை யாயுரைத் திடுவதோ வெனத்தெரி கிலமால்.

(இ-ள்.) அன்றியும், வலிமையைக் கொண்ட மதிளின் பக்கத்திலுள்ள கோவிலில் தங்கிய நமது தெய்வத்தை எனது மனதின் குறைபாட்டை யொழித்து எங்களின் துன்பங்களை யொழிப்பாயாக வென்றுகேட்டால் அத்தெய்வம் நன்மையாகச் சொல்லுமோ? அல்லது நம்மவர்களின் கூட்டத்தினது பாவத்தினால் தின்மையாகச் சொல்லுமோ? என்று நாம் அறிந்திலோம். (௧௮)

ஆயந்து ளார்ந்துளத் தெண்ணிய காரிய மனைத்துந்
தேய்ந்த தல்லது தேறிய தெருட்சிய தன்றே
வாய்ந்த புந்தியொன் றுளதினந் தெளிந்திடு மதிப்பாய்க்
காய்ந்த செங்கதிர் வேல்வல னேந்திய கரத்தீர்.

(இ-ள்.) அன்றியும், நாம் மனசின்கண் ஆராய்ந்தரிந்து எண்ணிய காரியங்க ளியாவும் தேய்ந்ததே யல்லாமல் தெளிந்த அறிவல்ல, ஆகலால் பிரகாசியாநிற்கும் செவந்த கிரணங்களைக் கொண்ட வேலாயுதத்தைத் தாங்கிய வலக்கரத்தை யுடையவர்களே! இன்னம் பொருந்திய புத்தியான தொன்றுண்டு. அதை மதிப்பாய் நீங்கள் உங்கள் மனசின்கண் அறியுங்கள். (௧௯)

உரனி னம்பெருங் குலத்தினி லரசரி னுயர்ந்தோன்
மரைம லர்த்தடஞ் சூழ்திமஸ் கதிபதி மாலிக்
கருள்ஹபீபெனு மாசனுக் கறிந்திட வுரைத்து
விரைவி னம்பெரும் பகையினைத் துடைத்திடல் வேண்டும்.

(இ-ள்.) வலிமையிலும் நமது பெரிய குலத்திலும் இராஜர்களிலும் மேன்மையை யுடையவனான தாமரைப் புஷ்பங்களைக் கொண்ட தடாகங்கள் வளைந்த திமஸ்கு நகரத்தினது இராஜன் மாலிக்கென்பவன் இவ்வுலகத்தின்கண் தந்த ஹபீபென்று சொல்லும் மன்

ன்வனுக்குத் தெரியும் வண்ணம் முகம்ம தென்பவனின் செய்திக ளைக் கூறிச் சீக்கிரமாக நமது பெரிய விரோதத்தை இல்லாமற் செய்யவேண்டும். (௨௦)

ஈத லாற்பிறி திலையென வபூஜகி லிசைப்ப
வாத ரத்துடன் கேட்டவ ரனைவரு மகத்திற்
கோத றத்தெளிந் திம்மொழி நன்கெனக் குறித்து
மாதி ரப்புயம் வீங்கிட மகிழ்ந்துசம் மதித்தார்.

(இ-ள்.) இஃதல்லாமல் வேறேயொரு உபாயமு மில்லையென்று அந்த அபூஜகிலென்பவன் கூற அவ்வார்த்தைகளை அன்போடும் கேட்டவர்களான அக்காபிர்க ளெல்லாவரும் தங்களின்மனசின்கண் குற்றமறும் வண்ணம் தேறி இந்த வார்த்தைகள் நல்ல வார்த்தைகள் தாமென்று மதித்து மலைகளை நிகர்த்த தங்களின் தோள்கள் பூரிக் கும்படி சந்தோஷமுற்று அவ்வார்த்தைகளுக்கு உடன்பட்டார்கள்.

மாந்த ரியாவரு மொருப்பட வெழுந்தொரு மருங்கிற்
போந்தி ருந்துநல் லறிவினிற் கேள்வியிற் புகழிற்
சார்ந்த உத்தரப் பிரத்தியுத் தரத்திவன் றனைப்போ
லாய்ந்த பேரிலை யெனவொரு வனைக்குறித் தழைத்தார்.

(இ-ள்.) அப்போது அங்கு கூடியிருந்த மனுஷியர்க ளெல்லாவ ரும் ஒன்றுபட எழும்பி ஒருபக்கத்தில் போயிருந்து பொருந்திய நல்ல அறிவினாலும் கேள்வியினாலும் கீர்த்தியினாலும் உத்தரத்தினா லும் மறுமொழியினாலும் இவனைப்போலத் தேர்ந்தஜனங்கள் வேறே யொருவரு மில்லரென்று சொல்லி மனசின்கண் மதித்து ஒரு மனி தனைக் கூப்பிட்டார்கள். (௨௨)

பத்தி ரம்மிவன் வரைத்திடிற் காரியம் பலிக்கும்
புத்தி யிற்றிறத் தவனிவ னெனப்பல புகழ்ந்து
முத்தி ரைப்பட முறையொடுந் தேர்ந்தியா மொழிந்த
வுத்த ரந்தனை வரைகென யாவரு முரைத்தார்.

(இ-ள்.) அவ்விதம் கூப்பிட்டு அங்கு தங்கியிருந்த அனைவர்க ளும் இவன் கடித மெழுதினால் நமது கருமம் சித்திபெறும். அன் றியும், இவன் அறிவினால் உறுதியான அறிவை யுடையவனென்று பலவாக அவனைத் துதித்து நாங்கள் வரிசையோடும் ஆலோசித்துச் சொல்லும் உத்தரத்தை நீ அடையாளப்படும்வண்ணம் எழுதுவாயா கவென்று சொன்னார்கள். (௨௩)

காசி லாத்துரை வரைபவன் கேட்டுளங் களித்து
மாசி லாப்பெருந் தலைவரைத் தாழ்ந்துற வாழ்த்திச்
சூசி யுங்கடு தாசியு மெடுத்துமை தோய்த்துப்
பாசு ரந்தனை யுரைமின்க ளெனுமுரை பகர்ந்தான்.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறு சொல்லவே அவ் வார்த்தைகளை வாசகங்களைக் குற்றமில்லாது எழுதப்பட்டவனான அந்த மனிதன் தனது காதுகளினால் கேள்வியுற்று மனமானது சந்தோஷிக்கப்பெற்றுக் களங்கமற்ற பெருமையை யுடையவர்களாகிய அந்தத் தலைவர்களைப் பணிந்து இசையும்படி துதித்து எழுதுகோலையும் காகிதத்தையும் கையிலெடுத்து மையை நனைத்துக் கடிதத்தினது வாசகத்தைச் சொல்லுங்களென்று கேட்டான். (உ௪)

எழுது கின்றன னென்றது மவனிருந் ததுவும்
பழுதி லாதிற்றை முகுர்த்தமு நிமித்தமும் பார்க்கின்
முழுதும் வெற்றியே யலதிடரிலையென முதலோர்
தொழுது புத்தினைப் புகழ்ந்துவக் கணைதொகுத் துரைப்பார்.

(இ-ள்.) அப்போது அரசர்களான அபூஜகில் முதலிய யாவர்களும் களங்கமில்லாது அவன் கடிதத்தை எழுதுகிறேனென்றுசொன்னதையும் அவன் இருந்ததையும் இன்றையத்தினத்தினதுசுபவேளையையும் நிமித்தத்தையும் ஆலோசித்துப் பார்த்தால் நமக்கு முழுவதும் ஜெயமேயல்லாமல் துன்பமில்லையென்று சொல்லித் தங்களின் தெய்வமாகிய விக்கிரகத்தை வணங்கித் துதித்துக் கடிதத்திற்குரிய வர்ணனைகளைக் கூட்டிச் சொல்லுவார்கள். (உ௫)

ஆதி நாலுரை தெரிதரு ஹபீப ரசறிக
வோது நன்னெறி மக்கமா நகரினி லுறைந்த
சாதி யோர்களுந் தலைவரு மபூஜகில் தானும்
கோதி லாதவிண் ணப்பமென் றிருகரங் குவித்தே.

(இ-ள்.) வேத வசனங்களை யுணர்ந்த ஹபீபரசரவர்கள் அறிக: புகழாநிற்கும் நல்ல சன்மார்க்கத்தை யுடைய திருமக்கமாநகரத்தில் தங்கியிருக்கும் சாதியார்களும் தலைவர்களும் அபூஜகிலும் இரண்டு கைகளையும் குவியச்செய்து எழுதும் குற்றமற்ற விண்ணப்பமென்று சொல்லி. (உ௬)

குபலு றைந்தநற் றலத்தினில் ஹாஷிமா குலத்தி
லபுதுல் லாவயி னவதரித் தாமிஞ மகவாய்த்
தவமி லாமுகம் மதுவெனும் பெயரினைத் தரித்துப்
புவியி கழ்ந்திடப் பிறந்திருந் தனனெரு புதியோன்.

(இ-ள்) குபலென்னும் நமது சுவாமியவர்கள் தங்கியிருக்கும் நன்மைபொருந்திய ஸ்தலமாகிய இந்தத் திருமக்மா நகரத்தின்கண் பெருமையுற்ற ஹாஷிம் குலத்தில் அப்துல்லா வென்பவரிடத்திருந்து உற்பத்தியாய்ஆமினுவென்பவளின் மகனுகமுகம்மதென்றுசொல்லும் ஓரபிதானத்தைப் பூண்டு இப்பூலோகமானது நிந்தித்திடும் வண்ணம் தவமற்ற நூதனத்தை யுடையவனுன ஒருவன் அவதரித்ருக்கின்ருன். (உஎ)

சலதி யூடுறை கொடுவிட மெனத்தலை யெடுத்திட்
டுலேவொ டன்னையுந் தந்தையு மிழந்தொரு தனியா
யலகி லாதவஞ் சனைவிதத் தொழில்படித் ததனல்
விலகு தற்கரி தாகிய மாயங்கள் விளைத்தான்.

(இ-ள்.) அவ்விதம் அவதரித்திருக்கின்ற அவன் சமுத்திரத்தின்கண் தங்கிய கொடிய விஷத்தைப்போலும் தலையெடுத்துத் தனது மாதாவையும் பிதாவையும் உலைவுடன் இழக்கப்பெற்று ஏகமாகக் கணக்கற்ற ஒப்பில்லாத வஞ்சனையினது தன்மையையுடைய செயல்களைக்கற்று அச்செயலினுல் விலக்குதற்கருமையான மாயங்களையுண்டாக்குகின்ருன். (உஅ)

அந்த நாட்குவை லிதுமக ளரசெனு மயிலைப்
பிந்தி டாமண முடித்தன னவர்பெரும் பொருளாற்
சிந்தை யிற்கரு விதத்தொடு மதத்தொடுஞ் சிலநா
ளெந்த மன்னவர் தம்மையு மாசரித் திணங்கான்.

(இ-ள்) அன்றியும், அவன் அந்தக்காலத்தில் தாமதியாது குவைலிதரசனுடைய மகளென்று சொல்லும் மயிலான கதீஜாவை விவாகமுடித்து அக்கதிஜாவென்பவரின் பெரியசெல்வத்தினுல் சிலகாலமாய் மனசின்கண் செருக்குடனும் மதத்துடனும் எந்த அரசர்களையும் கைக்கொண்டு பொருந்தமாட்டான். (உகூ)

ஆண்டு நாற்பது சென்றபி னவனியி லெவருந்
தூண்டி டாப்பெருங் கோட்டிச டொடுத்துவன் றுணிவாய்க்

காண்ட காவிறை யொருவனுண் டெனுமொழி கணித்து
மீண்டு மன்னவன் றூதனியா னெனுமுறை விரித்தான்.

(இ-ள்.) அன்றியும், அவனுக்கு நாற்பதுவயது கழிந்த பிற்பாடு இப்பூலோகத்தின்கண் யாவர்களும் சுட்டிக்காட்டுதற் கரிய பெரிய கோட்டிகளைச் செய்ய ஆரம்பித்து அவன் தைரியமாகக்கண்களினாற் காணுதற்கு முடியாத கடவுள் ஒருவனுண்டுமென்று சொல்லும்வார்த்தையைக் குறித்துத் திரும்பவும் நான் அந்தக் கடவுளுடைய றசூலென்னும் வார்த்தைகளை விரித்துச் சொல்லுகின்றான். (௯௦)

தூத னியானெனக் காதிதன் றாய்மொழி புறுக்கான்
வேத மொன்றிறங் கிற்றெனப் பலரொடும் விரித்தான்
பூத லத்திலெவ் விடத்தினுஞ் சிரந்தரை புரள
வீத லானெறி யிலையென விழுந்தெழுந் திடுவான்.

(இ-ள்.) அன்றியும், பல ஜனங்களோடும் நான்றசூல். எனக்குக் கடவுளின் பரிசுத்தமான வார்த்தைகளாகிய புறுக்கானுல் அலீமென்னும் ஒருவேதம் இறங்கிற்றென்று விரிவாய்ச் சொல்லுகின்றான். இப் பூலோகத்தின்கண் இஃதல்லாமல் சன்மார்க்கம் வேறே யாதொன்று மில்லையென்றுசொல்லி எந்த இடங்களிலும் தலையானது பூமியின்கண் புரளும் வண்ணம் விழுந்து எழும்புகின்றான். (௯௧)

எனக்கு றுங்கலி மாவுரை தனக்கியை யாதான்
றனக்கெ ரிந்திடு நரகமென் றிசைத்தவன் றனக்குக்
கனக்க மேம்படு மவர்கடாங் கனகநன் னாட்டின்
மனைக்குள் வாழ்குவர் சரதமென் றுரைவழங் குவனால்.

(இ-ள்.) அன்றியும், அவன் எனக்குப் பொருந்திய கலிமாவினது வார்த்தைகளுக்கு உடன்படாதவனுக்கு எரியாநிற்கும் நரகலோகமென்று கூறி அவன் கலிமாவுக்கு மேன்மையுடன் உட்படுவோர்கள் மிகவாய் மேன்மை பொருந்திய சுவர்க்கலோகத்தின் வீட்டிற்குள் வாழுவார்கள் இஃது சத்தியமென்று சொல்லுகின்றான்.

தேறி லாதகட் டுரையினிற் புதுநெறி திருத்தி
மாறு பட்டவ ரெவரையுந் தன்வசப் படுத்தி
வீறு கொண்டகங் தேவத மனைத்தையும் விழலா
யேறு மாறுகொண் டிரும்புகல் லெனவிகழ்ந் திடுவான்.

(இ-ள்.) அன்றியும், தேருத பொய்வார்த்தைகளினால் நூதன மாகிய ஒரு மார்க்கத்தைச் செவ்வைப்படுத்தி மாறுபட்டவர்களான யாவர்களேயும் தனது வசப்படுத்திப் புண்ணியத்தைக் கொண்ட நமது தேவதங்க ளெல்லா வற்றையும் வீணாய்க் குழப்பங்கொண்டு இரும்பென்றும் கல்லென்றும் நிந்திக்கின்றான். (௩௩)

ஆல யங்களைக் காண்டொறுங் கண்புதைத் தகல்வன்
மேலை யோர்செயும் வணக்கங்க ளனைத்தையும் வெறுப்பன்
பாலை நேர்மறைக் குருக்களைத் தினம்பழித் திடுவன்
சால வும்மனப் பெருமையிற் கிளையொடுஞ் சாரான்.

(இ-ள்.) அன்றியும், அவன் கோயில்களைப் பார்க்குந்தோறும் தனது கண்களைப் பொத்திக்கொண்டு நீங்கிச் செல்லுகின்றான். பெருமையிற் சிறந்தவரான நம்மவர்கள் செய்யும் வணக்கங்க ளெல்லாவற்றையும் வெறுக்குகின்றான். பாலை நிகர்த்த களங்கமில்லாத நமது வேதக்குருக்களைப் பிரதிதினமும் நிந்திக்கின்றான். தனது மனச்செருக்கினால் மிகவும் கிளையோடும் இணங்கிலான். (௩௪)

அகில மீதுறை யரசர்க ளெவரையு மடிக்கீழ்ப்
புகவி டுத்துவ னென்பது சரதமாய்ப் புகல்வன்
பகும னத்தறி வினிற்றெளி வினிற்பல நெறியி
னிகலி யென்னுட னெதிர்ப்பவ ரிலையென விசைப்பன்.

(இ-ள்.) அன்றியும், இந்தப் பூலோகத்தின்கண் தங்கிய இராஜர்களியாவரையும் எனது பாதத்தினகம் புகுதும்வண்ணம் விடுப்பேனென்பதைச் சத்தியமாய்ச் சொல்லுகின்றான். பகுக்காநிற்கும் அகத்தினது அறிவினாலும் தெளிவினாலும் பல ஒழுங்குகளினாலும் என்னோடு எதிர்க்கப்பட்டவர்க ளொருவரு மில்லரென்று சொல்லுகின்றான். (௩௫)

வாதி யாயித லாற்சில வாய்க்கொளா வசனங்
காதினாற்கொளப் படுவதன் றிழிந்தகட் டுரையை
யோதி யோலையிற் றீட்டவு முடிவதன் றுடையோன்
றூத னியானென வுரைத்தவ னுரைத்திடுந் துணிவே,

(இ-ன்.) அன்றியும், நான் யாவற்றையும் சொந்தமா யுடையவனான கடவுளின் றசூலென்று சொல்லி இதல்லாமல் அந்த முகம்மதென்பவன் தைரியமாய் எங்கனோடு கூறி வாதியாகக்கூறிடும் சில

வாய்கொள்ளாத வார்த்தைகளைச் செவிகளினால் கொள்ளப் படுவனவல்ல. அந்த இழிவை யுடைய பொய்யான வார்த்தைகளை வாயினாற் சொல்லி ஓலையில் எழுதவும் முடிவனவல்ல. (௩சு)

மறந்த வழ்ந்திடு முகம்மது விரித்தசொன் மனுவாய்ப்
பிறந்த வர்க்கிடர் வடுவலாற் பெறுபய னிலையா
லறந்தழைத்திடுந் தலத்துறை யறபிக ளெவரு
மிறந்தி டாவுயி ராய்த்தலை கவிழ்ந்திவ ணிருந்தோம்.

(இ-ள்) அன்றியும், மறமானது தவழப்பெற்ற அந்த முகம்மதென்பவன் விரித்துச்சொன்ன வார்த்தைகளினால் இவ்வுலகத்தின்கண் மனுவாகப் பிறந்தவர்களுக்குத் துன்பத்தை யுடைய குற்றமேயல்லாமல் பெறக்கூடிய பிரயோசன மானது யாதொறு மில்லை. தருமமானது ஓங்கப்பெற்ற தலமாகிய இந்தத் திருமக்கமா நகரத்தின்கண் தங்கியிருக்கப்பட்ட அறபிகளான நாங்க ளியாவர்களும் இறக்காத உயிராக எங்களது தலைகளைத் தாழச்செய்து இங்கு தங்கியிருக்கின்றோம். (௩எ)

இந்த வாசக மறிந்திவ ணிடத்தெழுந் தருளி
வந்து பார்த்திடின் முகம்மது மாயவஞ் சனையும்
விந்தை யேற்றுரு மந்திர சூழ்ச்சியும் வீறுஞ்
சிந்தி நங்கிளை யவர்மனத் துன்பமுஞ் சிதையும்.

(இ-ள்.) ஆதலினால் தாங்கள் இந்த வாசகத்தை யுணர்ந்து இத் திருமக்கமா நகரத்தின்கண் எழுந்தருளிவந்து பார்த்தால் அந்த முஹம்மதென்பவனின் மாயத்தை யுடைய வஞ்சனைகளும் வித்தையினால் ஏற்றுநின்ற உருவினை யுடைய மந்திரத்தினது நுட்பமும் அவனது பெருமையும் கெட்டு நமது குடும்பத்தவர்களின் மனசிலுள்ள துயரமும் அழியும். (௩அ)

இனைய பாசுர மனைத்தையும் விரித்தெடுத்திசைத்து
வனையும் வார்கழ லறபிக ளனைவரும் வகுத்தார்
தினையி னவ்வள வென்னினுஞ்சிதைவிலா வண்ண
நினைவி னேர்வழி தொடுத்தெழு தினன்வரி நிரைத்தே.

(இ-ள்,) இப்படிப்பட்ட வாசகங்களெல்லாவற்றையும் அலங்கரியாநிற்கும் நேர்மையான பாதங்களை யுடைய அந்த அறபிகளெல்லாவரும் விரிவா யெடுத்து வகைப்படுத்திச் சொன்னார்கள். அப்போது

கடித மெழுதுவோனுகிய அவன் தினையை நிகர்த்த அவ்வளவாயினும் குற்றமில்லாதபடி வரிகளை வரிசையாக்கி அவர்களின் எண்ணத்தினது நேர்மையை ஒழுங்காக எழுதினுன். (௩௯)

எழுது பத்திரந் தனைமடித் திலங்குபட் டதனுன்
முழுதி னும்பொதிந் திருவயின் முத்திரை பதித்துக்
குழுவி லாய்ந்தொரு விரைவினன் கரத்தினிற் கொடுப்பத்
தொழுது வாங்கினன் காலினுங் காலினிற் ருெடர்வான்.

(இ-ள்.)அவ்வாறு எழுதிய அந்தக்கடிதத்தை மடித்துப் பிரகாசியா நிற்கும் ஒரு பட்டு வஸ்திரத்தினுல் அதைமுழுதும் மூடி இரண்டு பக்கங்களிலும் முத்திரையைப் பதியும் வண்ணம் வைத்து அங்கு கூடி யிருக்கின்ற கூட்டத்தின்கண் ஆராய்ந்து விரைவாய் நடக்கப்பட்ட ஒருவன் கையில் அக்காகிதத்தைக் கொடுக்க,காற்றைப்பார்க்கிலும் அதிகமாய்க் காலினுல் தொடர்ந்து செல்லுகின்ற அவன் அவர்களியா வர்களையும் வணங்கித் தனது கையினுல் அதை வாங்கினுன். (௪0)

எடுத்த முத்திரைப் பத்திரஞ் சிரமிசை யேற்றிக்
கொடுத்த மன்னரைப் பணிந்துகொண் டறபிகள் குழுவை
விடுத்து வீதிநன் னிமித்தமெய் திடவிரை வுடனே
தடத்து கிற்கொடி நுடங்கிய மதிட்புறஞ் சார்ந்தான்.

(இ-ள்.) அவ்வாறு வாங்கின அந்தக் கடிதத்தைத் தனது தலையின்மீது உயர்த்தி வைத்து அக்கடிதத்தைத் தனது கையில் கொடுத்த அந்த அரசர்களை வணங்கிக்கொண்டு அவ்வறபிகளின் கூட்டத்தைவிட்டுத் தெருவின்கண் நல்ல நிமித்தமானது பொருந்தும் வண்ணம் சீக்கிரமாய் வஸ்திரத்தினுலாய பெரியகொடிகள் அசையாநிற்கும் மதிளினது பக்கத்தில் போய்ச் சேர்ந்தான். (௪௧)

கரட மும்மதக் கரிநிகர் துரையபுல் காசீ
மிரவ லர்க்களித் தவனிரு நிதிபெரு கினபோன்
மரும லர்த்தட வாவியுங் கழனியும் வழிதேன்
முருகொ டுங்கனி தரும்பொழி லனைத்துமுன் னினனுல்.

(இ-ள்.) அவ்வாறு போய்ச் சேர்ந்த அவன் கன்னமதம், கைமதம், கோசமத மென்னும் மூன்று மதங்களையுமுடைய யானையை

நிகர்த்த அதிகாரியாகிய இக்நூலின் தியாக நாயகர் அபூல்காசீம் மரைக்காயரவர்கள்யாசகர்களுக்குக் கொடுத்து அதனல் அவர்களின் செல்வமானது அதிகரித்ததைப் போல அதிகரித்திருக்கும் பரிமள மமைந்த புஷ்பங்களை யுடைய பெரிய தடாகங்களையும் வயல்களையும் வழிகின்ற மதுவினது வாசனையுடன் பழங்களைத் தராநிற்கும் சோலைக ளெல்லாவற்றையும் தாண்டினுன். (சஉ)

குன்றுங் கானமு மடவியு நதிகளுங் குறுகிக்
கன்று மென்மயிர்க் கவரியுந் திரிவனங் கடந்து
வென்றி வெய்யவன் கதிரினு மனத்தினும் விரைவா
யென்றும் பூமகள் பொருந்திய திமஸ்கினை யெதிர்ந்தான்.

(இ-ள்.) அன்றியும், அவன் மலைகளையும் காடுகளையும் சோலைகளையும் ஆறுகளையும் நெருங்கி மெல்லிய உரோமங்களை யுடைய கவரிமான் களும் அவற்றின் குட்டிகளும் திரிகின்ற வனங்களையும் தாண்டி விஜயத்தையுடைய சூரிய கிரணத்திலும் மனத்திலும் அதிகவேகமாக இலக்குமி யானவள் எந்தக்காலமும் நீங்காது தங்கியிருக்கும் திமஸ்கென்றுசொல்லும்பட்டணத்தைப் போய்ச்சந்தித்தான்.

மின்னெ னக்கதிர் தருமணி குயிற்றிவெண் சுதையாற்
றென்னு லாவிய மேனிலை மாடமுஞ் செறிந்த
பொன்னி னன்கதிர் குலவிய கொடிகளும் பொருவாக்
கன்னி மாமதிட் புரிசையுந் திமஸ்கையுங் கண்டான்.

(இ-ள்.) அவ்விதம் சந்தித்த அவன் மின்னைப்போலப் பிரகாசத்தைத் தராநிற்கும் இரத்தின வர்க்கங்களைப் பதித்து வெண்ணிறத்தைக் கொண்ட சுண்ணச் சாந்தினுல் அழகானது உலாவப்பெற்ற மேனிலைகளை யுடைய மாடங்களையும் செந்நிறத்தைக் கொண்ட பொன்னினது பிரபையை நிகர்த்த நல்லொளியானது ஒளிரப்பெற்ற கொடிகளையும் யாவும் ஒப்பாகாத அழிவின்மையை யுடைய கோட்டைமதில்களையும் திமஸ்கு நகரத்தையும் தனது கண்களினுற் பார்த்தான். (சச)

திரையெ டுத்தெறிந் திரைதரு கடலினுஞ் செழித்து
விரைக மழ்ந்தமென் குவளையும் வனசமு மேவிக்
கரைத தும்பிய சீகாத் தகழினைக் கடந்து
புரிசை வாயிலுங் கடந்தரும் பெரும்பதி புகுந்தான்.

(இ-ள்-)அவ்வாறு பார்த்து அலைகளையெடுத்து வீசி ஒலியாநிற்கும் சமுத்திரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செழிப்புற்றுவாசனை பரிமளிக்கும்மெல்லியகுவளைப் புஷ்பங்களையும் தாமரை மலர்களையும் பொருந்தி இருகரைகளிலும் வழியப்பெற்றஅலைகளையுடைய அகழ்க்கிடங்கையும்தாண்டிக் கோட்டை வாயிலையுங்கடந்து அருமையான பெருமைதங்கிய அந்தத் திமஸ்குப்பட்டணத்தின்கண் நுழைந்தான்

நிரைகொ ணித்திலத் தாவண வீதியு நிமிர்ந்த
வரையெ னத்திகழ் மண்டப மறுகையுங் கடந்து
பரக திப்பரி கரியோடு படைக்கலம் பரப்பி
யரசு தங்கிய கோயிலின் வாயிலி னுற்ருன்.

(இ-ள்)அவ்விதம் நுழைந்த அந்தமனிதன் வரிசையைக்கொண்ட முத்துக்களினது தெருவுகளையும் உயர்ச்சி யமைந்தமலையைப் போலும்பிரகாசியாநிற்கும் மண்டபங்களை யுடைய வீதிகளையும் தாண்டி மிகுத்த வேகத்தைக் கொண்ட குதிரைகள் யானைகளுடன் ஆயுதங்களைப் பரவும்வண்ணம் செய்து மன்னவனான ஹபீபென்பவன் தங்கிய இராஜ மாளிகையினது வாயிலின்கண்போய்ச் சேர்ந்தான். (சுசு)

மெய்யின் வெண்டுகிற் கஞ்சுகி யணிந்தடல் விளைந்த
கையின் வேத்திர மேந்திய வாயில்கா வலரை
யையு ருதடுத் தவரொடும் வரவெடுத் தறைந்தான்
றுய்ய நன்னினை வகற்றிய வபூஜகில் தூதன்

(இ-ள்.) அவ்வாறு போய்ச் சேர்ந்த பரிசுத்தமான நல்லெண்ணத்தைத் தன்னைவிட்டு மொழித்தவனுய் அபூஜகிலினது தூதனுன அவன் வெண்ணிறத்தைக் கொண்ட வஸ்திரத்தினுலாகிய அங்கியைச் சரீரத்தின்கண் தரித்து வலிமை முற்றப்பெற்ற கையில் அம்பைத் தாங்கிய வாயிற் காப்போரை நெருங்கி அவரோடும் தனது வருகையை யெடுத்துச் சமுசயமுருது சொன்னுன், (சுஎ)

வந்த தூதுவ னுரைத்தலும் வாயிற்கா வலவர்
பிந்தி டாதெழுந் தெண்ணரும் படைக்கலம் பிறங்கத்
தந்தி ராதிபர் மந்திரத் தலைவர்சொற் றணவாச்
சிந்தை யன்ஹபீ பெனுமட லரசன்முன் சென்ருர்.

(இ-ள்.) திருமக்கமா நகரத்தின்கண் ணிருந்து அங்குவந்து சேர்ந்த தூதனுன அவன் அவ்வாறு சொன்ன மாத்திரத்தில் வாயிற்

காப்போராகிய அவர்கள் கணக்கற்ற ஆயுதங்கள் பிரகாசிக்கும்படி தாமதியாது தாங்களிருந்த இடத்தைவிட்டும் எழும்பித் தந்திரத் தலைவர் மந்திரத் தலைவர்களின் வார்த்தைகளை விட்டு நீங்காதசிந்தை யையுடையவனுன ஹபீபென்று சொல்லும் வெற்றியைக்கொண்ட மன்னவனின் முன்னர் போயினுர்கள். (௪அ)

போற்றி நின்றுகும் புட்டணி யொதுக்கிவாய் புதைத்துத்
தூற்று தேம்பொழின் மக்கமா நகரவர் தூதன்
மாற்ற ருங்கதிர் வாயிலில் வந்தன னெனுஞ்சொற்
சாற்றி ஞர்செழும் பொன்மழைக் கரதலன் றனக்கே.

(இ-ள்.) அவ்வாறு போயின அவர்கள் செழிய சொர்ன மழை யைக்கொண்ட கைத்தலத்தை யுடையவனுன அந்த ஹபீபரசனுக்கு அவனைத் துதித்து நின்று வணங்கி தங்களின் ஆபரணமுதலியவை களை ஒதுங்கும் வண்ணம் செய்து வாயைப்பொத்தி மதுவைச் சொரியா நிற்கும் சோலைகளையுடைய மக்கமாநகரத்தையுடையவர் களான அபூஜகில் முதலானோர்களால் அனுப்பப்பட்ட தூதனுகிய ஒருவன் நீக்குதற் கருமையான கிரணங்களையுடைய நமதுவாயிலின் கண் வந்திருக்கின்றுனென்னும் வார்த்தைகளைச் சொன்னுர்கள் ()

கரைகொ ளாப்பெருஞ் சேனையங் கடனடுக் கடிதின்
வரவி டுத்துக வென்றலும் வாயில்கா வலவர்
விரைவி னேகியத் தூதனை விளித்துமின் னணிபூ
ணரசர் நாயகன் றிருமுன மழைத்துவந் தனரால்.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் சொல்லவே அதைக்கேட்டஹபீ பரசன் அவனை விரைவாய்க் கூப்பிட்டுக் கரைகொள்ளாத அழகிய பெரிய சேனையாகிய இந்தச் சமுத்திரத்தின்கண் வரும்படி விடுங்க ளென்று ஆக்கியாபித்த வளவில் அவ்வாயிற் காப்போர்கள் சீக்கிர மாய்ச்சென்று அத்தூதனை அழைத்துக் கொண்டு பிரகாசமமைந்த ஆபரணங்களைத் தரித்த அரசரேசுரனுன அவ்வரசனின் திவ்விய சந்நிதானத்தின் முன்னர் வந்தார்கள். (௫௦)

எதிர்ந்த தூதுவன் றரையினிற் றெண்டனிட் டெழுந்து
முதிர்ந்த பேரவை யரசனை முறைமுறை பணிந்து
பதிந்த முத்திரை புணர்த்திய விண்ணபத் திரத்தைப்
பொதிந்த மென்றுகி லொடுந்திறற் புரவலற் கீய்ந்தான்.

(இ-ள்.) வாயிற் காப்போர்களால் அவ்வாறு கூட்டிக்கொண்டு வர அங்குவந்து சந்தித்த தூதனாகிய அவன் பூமியின்கண் படுத்துச் சாஷ்டாங்கஞ்செய்து எழும்பி முற்றிய பெரிய சபையையுடைய ஹபீபரசனை வரிசை வரிசையாக வணங்கிப் பதியாநிற்கும் முத்திரையை விளங்கும் வண்ணம் செய்த அந்தக் கடிதத்தை அதை மூடிய மெல்லிய பட்டுவஸ்திரத் தோடும் வலிமையை யுடைய அவ்வரசனுக்கு கொடுத்தான். (ருக)

ஈய்ந்த முத்திரைப் பத்திர மதனையோ ரிளவல்
வாய்ந்த செங்கரத் தேந்திமுத் திரைத்துகில் வாங்கி
யாய்ந்த பாசுர மனைத்தையுந் தெரிதர வணியாய்ச்
சாய்ந்தி டாதபொன் மணிமுடி யவர்க்குரைத் தனனே.

(இ-ள்.) அவ்வாறு கொடுத்த முத்திரையை யுடைய அந்தக் கடிதத்தை ஒப்பற்ற இளம்பருவத்தை யுடையவனான ஒருவன் சிறப்புத்தங்கிய சிவந்த தனது கைகளினால் தாங்கி அதிலுள்ள முத்திரையைக்கொண்ட வஸ்திரத்தைவாங்கிவிட்டு ஆராயாநிற்கும் வாசகங்களெல்லாவற்றையும் விளங்கும் வண்ணம் தெரியும்படி பொன்னாற் செய்து இரத்தினங்கள் அழுத்தப்பெற்ற சாயாதகிரீடத்தையுடையவனாகிய அந்த ஹபீபாசனுக்குச் சொன்னான். (ருஉ)

வனைந்த பாசுர மனைத்தையும் வரன்முறை கேட்டுச்
சினந்த யங்குவே லவன்மன துறச்சிரந் தூக்கி
யினந்த னிற்பெரி யவர்மறை யவர்க்கெடுத் தியம்பிப்
புனைந்த பொன்முடி மண்டப மாளிகை புகுந்தான்.

(இ-ள்.) அப்போது அக்கடிதத்தின்கண் சிறப்பித்து எழுதிய வாசகங்களெல்லாவற்றையும் கோபமானது பிரகாசியாநிற்கும் வேலாயுதத்தை யுடைய அந்த ஹபீபரசன் ஒழுங்காய்த் தனது காதுகளினால் கேள்வியுற்று மனமானது பொருந்தும் வண்ணம் தலையையுயர்த்தித் தனது கூட்டத்திலுள்ள பெரியவர்களுக்கும் வேதியர்களுக்கும் அச்சமாசாரத்தை எடுத்துக் கூறி அலங்கரிக்கப்பட்ட பொன்னினாலான சிகரத்தைக் கொண்ட உப்பரிகையை யுடைய ஒருமாளிகையின்கண் போய் நுழைந்தான். (ருங)

தனித்தி ருந்தொரு மண்டபத் தரசர் கடமையு
நினைத்த சூழ்ச்சியை யுரைதரு நிருபர்க டமையு

மனத்தி னின்புற வழைத்தரு கிருத்திமும் மறையின்
ஹெனித்த செய்தியு நிகழ்ந்ததுந் தொகுத்தெடுத் துரைத்தான்

(இ-ள்.) அவ்வாறு போய் நுழைந்த அவன் ஏகமாக இருந்து கொண்டு ஒப்பற்ற அம்மண்டபத்தின்கண் மற்றும் அரசர்களையும் மனதில் எண்ணிய நட்பத்தைக் கூறுநிற்கும் மன்னவர்களையும் இருதயத்தின்கண் இனிமையுறும்படி கூப்பிட்டுப் பக்கத்திலிருக்கச் செய்து முன்னுள்ளதௌறுத்து, இஞ்சீல், சபூறென்னும்மூன்றுவேதங்களினுலும் தொனிக்கப்பெற்ற சமாச்சாரத்தையும் தற்போதுநடந்திருக்கின்ற சமாச்சாரத்தையும் ஒழுங்காக எடுத்துச் சொன்னுன்.

அரசன் சொற்றவை கேட்டவ ரனைவருந் தெளிந்து
புரிசை சூழ்தரு மக்கமா நகரியிற் புதுமை
விரைவிற் காண்குவ துண்டெனச் சூழ்ச்சியின் விரித்தார்
மரைம லர்த்தடஞ் சூழ்தரு திமஸ்குமன் னனுக்கே

(இ-ள்.) அரசனுகிய ஹபீபென்பவன் சொல்லிய சமாச்சாரங்களைக்காதுகளினுற் கேள்வியுற்ற அவர்களியாவர்களும் தங்களின்மனசின்கண் தெளிந்துத் தாமரைப் புஷ்பங்களை யுடைய தடாகங்கள் வளைந்த திமஸ்குநகரத்தின் அதிபனுன அவ்வரசனுக்குக்கோட்டைமதிள்கள் சூழப்பெற்ற திருமக்கமா நகரத்தில் சீக்கிரமாகக் காணக்கூடிய அற்புதமுண்டு மென்று தங்களின் நுண்ணிய அறிவினுல் விரித்துச் சொன்னுர்கள், (௫௫)

கேட்டு மன்னவ னன்கெனக் கிளரொளி வடிவாட்
பூட்டுந் திண்கர வீரரு மடற்புர விகளுங்
கோட்டு வாரணத் தொகுதியு மரசர்கள் குழுவு
மீட்டு மிற்றையி லெழும்புற விடுதியி லென்றுன்.

(இ-ள்) அவர்கள் அவ்விதம் சொல்லிய சமாச்சாரத்தை ஹபீபரசன் தனதுகாதுகளினுல் கேள்வியுற்று நல்லதென்றுசொல்ல உயர்ந்த பிரகாசமமைந்த கூர்மைதங்கிய வாளாயுதத்தை யணியாநிற்கும் திண்ணிய கையை யுடைய வீரர்களும் வலிமையைக் கொண்ட குதிரைப் படைகளும் கொம்புகளை யுடைய யானைப்படைகளும் இராஜர்களின் கூட்டமும் அளவு படுத்திய இன்றையத் தினத்திலேயே வெளிவிடுதியின்கண் எழும்பிச் செல்லுங்களென்று கட்டளைசெய்தான். (௫௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நிருபர்கோ னெழுக வென்ன நிகழ்த்தமந் திரத்தின் மிக்கார்
புரவியுந் தறுக ணல்வாய்ப் புகர்முகக் களிறுந் தேரு
மரசரும் வருக வென்ன வணிமணிக் கனக மாடத்
தெருவினு நகர முற்றுஞ் செழுமுர சறைவித் திட்டார்.

(இ-ள்.) இராஜாதிபனான அந்த ஹபீபரசன் அவ்வாறு எழும்புங்களென்று கட்டளைசெய்யவே, ஆலோசனையினால் மேலாகிய அங்குகூடி யிருந்தவர்கள் குதிரைகளும் அஞ்சாமையையும் நாலப்பெற்ற வாயையும் புள்ளிபடர்ந்த முகத்தையு முடைய யானைகளும் இரதங்களும் இராஜர்களும் வருக வென்று அழகிய இரத்தினங்களைக் கொண்ட பொன்னினாலான மாடங்களையுடைய வீதிகளிலும் மற்று முள்ள அந்த நகரத்தி னெல்லா விடங்களிலும் செழிய முரச மறைவோனைக் கொண்டு முரச மறைவித்தார்கள் (௫௭)

முரசதி ரோசை கேட்டு முரண்மற முதிர்ந்து வெற்றி
மருமலி வாகை தாங்கு மன்னவர் திரளிற் கூண்டு
திருநகர்ப் புறத்துங் கோயிற் றெருவினுஞ் செறிந்து தூளி
பருதியும் விசும்புந் தூர்ப்பப் படைக்கலம் பரப்பிவந்தார்.

(இ-ள்.) அவ்வாறு அறைவித்த முரசானது ஒலிக்குகின்ற ஓசையைக் கேட்டு வலிமையும் கோபமும் முற்றப்பெற்று வாசனை அதிகரியாநிற்கும் வெற்றி மாலை தரித்த அரசர்கள் யாவர்களும் கூட்டமாய்கூடிச் செல்வத்தைக்கொண்ட அந்த திமஸ்கு நகரத்தின் வெளியிலும் இராஜ மாளிகைகளை யுடைய வீதிகளிலும் நெருங்கித் தூசியானது சூரியனையும் ஆகாயத்தையும் தூர்க்கும்வண்ணம் ஆயுதங்களை விரித்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். (௫௮)

சேனையிற் றிரளிற் செம்பொற் செழுங்கொடி நுடங்க வெற்றி
வானதி ர்சனி யொப்ப மதகரி முரச மார்ப்பக்
கானமர் கூந்தற் செவ்வாய்க் கடுவடர் கொடிய வாட்கட்
டேனிதழ் மடவார் சூழச் சியமொத் தெழுந்தா னன்றே.

(இ-ள்.) அப்போது ஹபீபரசனானவன் சேனையினது கூட்டத்தில் செழிய பொன்னை நிகர்த்த கொடிகள் ஆடவும், யானையின்மீதுள்ளவெற்றி முரசங்கள் ஆகாசத்தின்கண் ஒலியாநிற்கும் இடியைப் போல ஒலிக்கவும், வாசனைதங்கிய கூந்தலையும் செவந்த வாயையும்

விஷமானது நெருங்கப்பெற்ற கொடிய வாளை நிகர்த்த கண்களையும் தேனைக்கொண்ட அதரங்களையு முடைய பெண்கள் சூழவும், சிங்கத்தைப்போன்று எழும்பினன். (ருகூ)

திக்கடங் காத வெற்றித் திறற்படை ஹபீபு வேந்த
னக்கலின் புறப்ப தாதி யுவர்க்கடல் கடுப்பப் பொங்கித்
திக்கிரு நான்குந் தூது செலத்துக ளமரர் போற்று
மக்கமா நகரை நோக்கி நடந்தனன் வயங்க மாதோ.

(இ-ள்.) அவ்வாறு எழும்பிய எண்டிசைகளிலும் அமையாத விஜயத்தைக் கொண்ட படைகளை யுடையஹபீபரசன் தனது இடையின்கண்ணுள்ள சேனைகள் உப்புநீரை யுடைய சமுத்திரத்தைப் போல அதிகரித்து அதனா லுண்டாகும் தூசியானது எண்டிசைகளிலும் தூதாய் முன்னர் செல்லும் வண்ணம் தேவர்களான மலாயிக்கத்து மார்களும் போற்றுநிற்கும் திருமக்கமா நகரத்தைநோக்கிப் பிரகாசிக்கும்படி நடந்து வந்தான். (சுO)

வண்டுக ளுண்டு பாட மணிச்சிறை மயில்க ளாடக்
கொண்டல்கண் டுஞ்குஞ் செந்தேன் கொழுங்கனிகுழைபைங்காவு
முண்டகத் தடமுஞ் செவ்வி முருகவிழ் கழனிக் காடுந்
தெண்டிரை பரந்த தென்னத் திரட்படை படர்ந்த தன்றே.

(இ-ள்.) அப்போது அங்குள்ளகூட்டமாகிய சேனைகளானது தேனீக்கள் மதுவையருந்திக் கீதங்களைப் பாடவும் அழகிய சிறகுகளையுடைய மயில்களாடவும் மேகங்கள் நித்திரைசெய்யாநிற்கும் செவந்த தேனைக்கொண்ட செழிய பழங்களமைந்த தளிர்களையுடைய பசிய சோலைகளிலும் தாமரைத் தடாகங்களிலும் அழகிய நறவமானது நெகிழும் புஷ்பங்களை யுடைய வயற்காடுகளிலும் தெள்ளிய சமுத்திரமானது பரந்ததைப் போலப் பரந்து நடந்தது. (சுக)

வரிவளைக் குலத்தின் குப்பை வாசியின் குரத்திற் றாக்கி
விரிகதிர் தரளஞ் சிந்தும் விளைநிலங் கடந்து செந்தே
னருவிகள் வரையிற் செம்பொ னணிவடம் புரள்வ போல
நிரைநிரை செறிந்து தோன்று நெடுமுடிக் குறிஞ்சி சார்ந்தார்.

(இ-ள்.) அன்றியும், இரேகைகளைக் கொண்ட சங்கினங்களின் குவியல்கள் குதிரைகளின் குளம்புகளினால் தாக்குண்டு விரிந்த கிரணங்களையுடைய முத்துக்களைச் சொரியாநிற்கும் வயற்களைத்தாண்டி

மலையின்கண் செவந்த தேனினாலான அருவிகள் செந்நிற மமைந்த பொன்னினாலாகிய அழகிய மாலைகள் கிடந்து புரள்வதைப் போல வரிசை வரிசையாக நெருக்குமுற்று விளங்கும் நெடிய சிகரங்களை யுடைய குறிஞ்சி நிலத்தின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (சூஉ)

கண்விரித் தனைய தூவிக் கலாபமா மயிலுங் கீதப்
பண்விரித் தென்னப் பேசுங் தத்தையும் பறவை யாவும்
விண்படர்ந் திரியச் செந்தேன் விளைதருப் படிந்து தோன்று
மண்பட னெரியத் தாவும் விலங்கின மலைய வந்தார்.

(இ-ள்.) அன்றியும், கண்ணானதைத் திறந்ததைப் போன்ற தூவிகளையுடைய கலாபத்தைக்கொண்ட பெருமைபொருந்திய மயில்களும் இராகத்தினது பண்ணை விரித்ததைப்போன்று பேசாநிற்கும் கிளிகளும் மற்றும் பட்சி சாலங்களும் ஆகாயத்திற் பரவியோடவும், செவந்த மதுவானது விளைகின்ற தருக்களானவை கட்பார்வைக்குத்தோற்றாத பூமியானது கெடும்வண்ணம் நெரியவும், பாயாநிற்கும் மிருகக்கூட்டங்கள் மயங்கவும், நடந்து வந்தார்கள். (சூஈ)

வரிப்புலிக் குழுவு மாறா மதகரித் திரளுஞ் செங்கட்
டிருக்கறத் திசைக ணோக்குஞ் சீயமும் வெருவி யோடிப்
பொருப்புறைந் தொதுங்கிற் றென்றாற் புரவலன் சேனைவீரர்
விருப்புறும் வீரத் தன்மை யாவரே விரிக்கற்பாலார்.

(இ-ள்.) அன்றியும், இரேகைகளையுடையபுலிக்கூட்டங்களும் நீங்காத மதத்தையுடைய யானைக்கூட்டங்களும் செவந்த கண்களினால் திருக்கானது அறும்வண்ணம் எண்டிசைகளிலும் பாராநிற்கும் சிங்கக்கூட்டங்களும் பயந்து தாங்கள்நின்ற இடத்தைவிட்டும் ஓடி மலைகளில் ஒதுக்கமுற்றுத் தங்கிற்றென்று சொன்னால் ஹபீபரசனினது சேனையிலுள்ள வீரர்களின் உவகையுற்ற வீரத்தினது தன்மையைவிரித்துச் சொல்லும் இயல்பை யுடையவர்கள் யாவர்? ஒருவருமில்லர். (சூச)

நெடுவரைக் குறிஞ்சி நீந்தி நிரைதொறு புகுதச் சேர்த்தி
யிடுகுறு நுனைமுள் வேலி யிடையர்தம் பாடி யேங்கப்
படர்கொடி நுடங்கு முல்லைப் பரப்பையு நீந்தி யீந்தி
னடவிகள் புடையிற் றோன்று மறபுகாட் டகத்திற் புக்கார்.

(இ-ள்.) அவ்வாறு அவர்களியாவர்களும் நெடிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தைத் தாண்டி வரிசையாகிய பசுக்களானவை புகுதும் வண்ணம் சேர்த்து வைத்த குறிய முனையை கொண்ட முள்ளினது வேலிகளை யுடைய இடையர்கள் வாசஞ்செய்யும் ஊர்களிலுள்ள யாவும் அஞ்சும்படி படர்ந்த கொடிகளானவை அசையாநிற்கும் முல்லை நிலத்தினது விரிவையுங் கடந்து பக்கங்களில் ஈத்தஞ் சோலைகள் விளங்கிய அறபி ராச்சியத்தின் எல்லையில் வந்து புகுந்தார்கள். (௬௫)

மதிதவழ் குடுமி மாட மக்கமா நகர மென்னும்
பதியினுக் கடுப்ப மற்றோர் பாடியி னிழிந்து பாயுஞ்
சதிகதிப் பரியு நீண்ட தடக்கைமா கரியும் பொங்கக்
கதிரயின் மன்ன ரீண்ட ஹபீப ரிருந்தா னிப்பால்.

(இ-ள்.) அவ்விதம் புகுந்து சந்திரனனது தவழப்பெற்ற சிகரங்களைக் கொண்ட மாளிகைகளை யுடைய மக்கமாநகரமென்று சொல்லும் பட்டினத்திற்குச் சமீபமாய் வேறே யொரு சிற்றூரில் இறங்கிப் பாயா நிற்கும் விரைந்த நடையை யுடைய குதிரைகளும் நீண்ட கையை யுடைய பெருமை பொருந்திய யானைகளும் ஓங்கவும், பிரகாசத்தைப் பெற்ற வேலாயுதத்தை யுடைய அரசர்கள் நெருங்கவும், ஹபீபரசன் தங்கியிருந்தான். இதன் பின்னர். (௬௬)

மைக்கருங் கவிகை வள்ளன் முகம்மதுக் குதவி யாகத்
தக்கவ னருளாற் செம்பொற் றலத்தினும் பாரிற் றோன்றுந்
திக்கினுங் கதிர்கு லாவுஞ் செழுஞ்சிறைத் தடங்கட் செவ்வி
மிக்குயர் வடிவ தாகச் சபுறயீல் விசும்பில் வந்தார்.

(இ-ள்.) கரிய மேகக் குடையையுடைய வள்ளலாகிய நபிமுஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு ஒத்தாசை யாகத் தக்கவனான ஜல்ல ஜலாலகு வத்தஆலாவின் திருவருளினால் செவந்த பொன்னினாலாகிய சுவர்க்க லோகத்தின் கண்ணும் பூமியின் கண் தோற்றா நிற்கும் எண்டிசைகளிலும் பிரகாசமானது ஒளிர்கின்ற செழிய சிறகுகளினது பெரிய கண்களி னழகைக் கொண்ட ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் மிகவும் உயர்ந்த வடிவமாக ஆகாயத்தின்கண் வந்தார்கள். (௬௭)

ஆயிரஞ் சிறைய மொவ்வா வாயிரஞ் சிரசு மாயி
ராயிரம் விழியுந் தோன்ற வாயிர முகமு மாகி

யாயிர நாவி னாலு மகுமதே யென்னக் கூவி
யாயிரம் பெயரி னான்றன் சலாமென வருளிச் செய்தார்.

(இ-ள்.) அவ்விதம் வந்த ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் தங்களின் ஈராயிரம் சிறகுகளும் யாவும் ஒப்பாகாத ஆயிரம் தலைகளுமாகி இரண்டாயிரம் கண்களும் தெரியும்படி ஆயிரமுகங்களுமாய் ஆயிரம் நாவுகளினாலும் நபிமுஹம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை அஹ்மதே! என்று சொல்லிக் கூப்பிட்டுத் தங்களுக்கு ஆயிரம் நாமத்தை யுடையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் சாலா மென்று அருளிச் செய்தார்கள். (சூஅ)

விரைவினிற் சலாமென் றோது மொழிவழி விசும்பை நோக்கிக்
கரையிலா வடிவு தோன்றுங் காரணங் கண்டி யாரோ
தெரிகில மென்ன வுள்ளந் தெருமந்து வருத்த முற்றார்
மரையிதழ் வனப்பு மொவ்வா மலர்ப்பத முகம்ம தன்றே.

(இ-ள்.) அப்போது தாமரைமலரினிதழ் களினது அழகும் ஒப்பாகாத பூம்பதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சீக்கிரமாய்ச் சலாமென்று சொல்லும் வார்த்தைகளின் வழியாக ஆகாயத்தைப் பார்த்து எல்லையில்லாத வடிவமானது தெரியும் காரணத்தைக் கண்டு இவர் யாவரோ? நாம் அறிந்திலோமென்று சொல்லித் தங்களின் மனமானது சுழலப்பெற்றுத் துன்பமடைந்தார்கள். (சூசு)

குரிசிறன் னுளத்தி னச்சஞ் ஜபுறயீல் குறித்துப் பின்னும்
வரிசையின் விழித்துச் சோதி முகம்மதே வருந்தன் மேலோன்
பரிவுட னும்பால் வெற்றிப் பதவிக ளளித்த தியாவும்
தெரிதரக் கேண்மி னென்னச் செய்யவாய் திறந்து சொல்வார்:

(இ-ள்.) அவ்விதம் துன்பமடையவே ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் குரிசிலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களினது மனதின் கண்ணுள்ள பயங்கரத்தை மனசின்கண்ணுணர்ந்து மறுத்தும் சங்கையோடு கூப்பிட்டுப் "பிரகாசத்தை யுடைய முஹம்மதானவர்களே! நீங்கள் வருந்தாதீர்கள் உங்கள்பால் மேலவனான ஹக்கு சுபுகானகு வத்தஆலா வானவன் அன்புடன் அருளியதாய விஜயத்தை யுடைய பதவிக ளெல்லா வற்றையும் தெரியும் வண்ணம்

கேளுங்களென்று தங்களின் அழகிய வாயைத் திறந்து சொல்ல ஆரம்பித்தார்கள். (௭௰)

வானுல கினினீ ராடை மண்ணுல கினில்வெண் டிங்கள்
பானுவி னரிதா யுள்ள படைப்பினி லெவைக்கு மேலா
மீனமின் முகம்ம தைப்போ லிலையென வரிசை மேலுந்
தானவன் பெருமை மேலு மாணையிற் சாற்றி னானால்.

(இ-ள்.) தானவனான அல்லாகு சுபுகானகு வத்தஆலாவானவன் வானலோகத்தின் கண்ணும் சமுத்திரத்தை ஆடையாகஉடைய பூலோகத்தின் கண்ணும் வெண்ணிரத்தைக்கொண்ட சந்திர சூரியரிலும் இவையல்லாத மற்றும் அருமையாயுள்ள படைப்புகளில் யாவற்றிற்கும் மேலான இழிவற்ற முகம்மதைப்போல யாதொன்றுமில்லையென்று தனது வரிசையின் மீதும் பெருமையின் மீதும் பிரமாணிக்கத்துடன் சொன்னான். (௭௧)

செந்நெலங் கழனி சூழுந் திமஸ்கினின் ஹபீபு வேந்தன்
பொன்னணிப் புரோசை நால்வாய்க் களிறொடும் புரவி யோடு
மிந்நகர்ப் புறத்திற் சார்ந்தங் கிருந்தன னதனால் தீனின்
மன்னவ துன்ப மென்ப வருவதொன் றில்லை யன்றே.

(இ-ள்.) அன்றியும், தீனுல் இஸ்லாமென்னும்மார்க்கத்திற்கு அதிபரானவர்களே! அழகிய செந்நிறத்தை யுடையநெற்களைக்கொண்ட வயல்களானவை வளைப்பெற்ற திமஸ்கு நகரத்தினது ஹபீபரசன் பொன்னாலியன்ற அழகிய கயிற்றையும் நாலப்பெற்றவாயையுமுடைய யானைகளோடும் குதிரைகளோடும் இந்தத் திருமக்கமாநகரத்தின் பக்கத்தில்பொருந்தி அங்கச்சிற்றூரில் தங்கியிருக்கின்றான். அதனால்வருத்தமென்பது யாதொன்றும் வராது. (௭௨)

கடற்படி நிலத்தி லில்லாக் காரணங்களை ஹபீபு
தொடுத்துரைத் திடுவன் கேட்டு மகிழ்ச்சியில்து ஆச்செய்வீரா
லடுத்திருந் தவர்க்குந் தூரத் தவர்க்குங்கண் டறிய வல்லே
படைப்புள தெவைக்குந் தோன்றப் பலித்திடுங் கடிதின் மாதோ.

(இ-ள்.) அன்றியும், அந்த ஹபீபரசன் சமுத்திரமானது தோயப்பெற்ற இந்தப் பூலோகத்தின் கண் இல்லாத காரணங்களைக்

கோத்துத் தங்களிடத்தில் சொல்லுவான். நீங்கள் அவைகளைக்காது களினால் கேள்வியுற்றுச் சந்தோஷத்தோடும் துஆச்செய்வீர்களே யானால் அவ்வண்ணமே தங்களைச் சமீபத்தி லிருப்பவர்களும் தூரத் திலுள்ளவர்களும் சீக்கிரமாய்ப் பார்த்து உணரும்வண்ணம் படைப் பாக வுள்ளதான யாவற்றிற்கும் தெரியும்படி விரைவில் வாய்த்திடும்.

உடற்றசை திரண்ட தல்லா லுறுப்பொன்று மிலதாய்ப் பின்னோர்
மடக்கொடி தனைக்கொ ணர்ந்தான் வடிவுசெய் திடுமி னென்னத்
துடக்குறக் கேட்பன் கேட்கு முரைப்படி துஆச்செய் வீராற்
கடற்படு புவிக்குட் காணாக் காரணந் தோன்று மாதோ.

(இ-ள்.) பின்னர் உடலினது மாமிசங்கள் திரட்சியுற்றதே யல் லாமல் ஒருறுப்பேனு மில்லாததாக ஒப்பற்ற இளம்பருவத்தையுடைய கொடிபோலும் ஒருபெண்ணைச் கொண்டு வருகிறான் அதைத்துடக் குறும்படி மானிடவடிவஞ் செய்திடுங்க ளென்று கேட்பான். அவன் கேட்கும் வார்த்தையின் வண்ணமே நீங்கள் துஆச் செய்வீர்களே யானால் அதனால் சமுத்திரமானது தோயப்பெற்ற இப்பூமியினகம் ஒருக்காலத்திலும் காணாத காரணமுண்டாகும். (எச)

வாட்படைத் திமஸ்கு வேந்தன் மறைபுணர் தெளிவா லெண்ணிக்
கேட்பதெவ் வழிக்கு முந்தங் கிளரொளித் திருவாய் விண்டு
கோட்பட வுரையு மென்னச் சபுறயீல் கூறி னார்தேங்
தோட்படு மரவ மாலை துலங்கிய குரிசிற் கன்றே.

(இ-ள்.) அன்றியும், வாளாயுதத்தையுடைய திமஸ்கு நகரத்தி னது அதிபனான ஹபீபென்பவன் வேதங்களை அறிந்த தெளிவினால் தனதுமனசின்கண் ஆலோசித்துக் கேட்பதாய் எந்நெறிக்கும் உங்க ளுடைய உயர்ந்த பிரகாசத்தை யுடைய தெய்வீக வாயைத் திறந்து குணமாகவதில் சொல்லுங்க ளென்று மதுவைக்கொண்ட குங்குமப் புஷ்பத்தினாலான மாலைகள் தோயப்பெற்ற தோள்களானவை பிரகா சிக்கும்குரிசிலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் சொன்னார்கள். (எரு)

அமரர்கோ னினைய மாற்ற மாதிதன் பருமான் மேற்கொண்
டிமைநொடிப் பொழுதிற் றேன்றி யியம்பிய திணங்கா ரான
திமிரவெம் பகைக்குத் தோன்றுந் தினகர னாகப் பூத்த
கமலவொண் வதனச் செவ்வி முகம்மது களிப்புக் கொண்டார்.

(இ-ள்.) யாவற்றிற்கு முதன்மையனான ஹக்கு சுபுகானகு வத்தஆலாவின் உத்திரவை அமரேசுரராகிய ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் மேற்கொண்டு இப்படிப்பட்ட சமாச்சாரத்தை இமையாநிற்கும் கொடிப்பொழுதில் ஆகாயத்தின்கண் பிரசன்னமாய்ச் சொன்னதைச் சத்துராதிகளான அந்தகாரத்தைக் கொண்ட வெவ்விய விரோதத்திற்கு உதயமாகும் சூரியனாக மலர்ந்த தாமரைமலரை யொத்த ஒள்ளிய முகத்தையுடைய அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் கேட்டுச் சந்தோஷங் கொண்டார்கள்()

என்னுயிர்த் துணைவ ரான ஜபுறயீ லிருகண் ணுர
முன்னுறு கோலம் போல முகத்தெதிர் நிற்பப் பேதந்
தன்னைமாற் றுகவென் றுதி தன்னுட னிரந்து நின்ருர்
மன்னிய ஜபுற யீலு மறுத்துமுன் வடிவம் போன்ருர்.

(இ-ள்.) அவ்விதஞ் சந்தோஷத்தைக் கொண்ட நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் யாவற்றிற்கும் முதன்மைய னான ஹக்கு சுபுகானகு வத்தஆலா வோடும். எனது உயிர் போன்ற துணைவராகிய ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்களை எனது இரண்டு கண்களும் பொருந்தும் வண்ணம் முன்னருற்ற கோலத்தைப் போல என்முகத்தினது எதிராக நிற்கும்படி இப்போதிருக்கின்ற பேதத்தை மாற்றுவாயாக வென்று சொல்லி இரந்துநின்ருர்கள். அப்போது ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்களும் மறுத்தும் முன்னர் பொருந்திய வடிவத்தைப் போன்ருர்கள். (எஎ)

அவிரொளி ஜபுற யீல்முன் வடிவெடுத் தடுத்துப் பேசிப்
புவியினின் றகல்வான் புக்கார் பொறுந்தல ருயிரை மாந்திக்
கவினுறு நெடுவே லேந்துங் காதல முகம்ம தென்னு
நபியினி திருந்தா ரிப்பா னடந்தவாறெடுத்ததுச் சொல்வாம்.

(இ-ள்.) ஒளிராநிற்கும் பிரபையை யுடைய ஜபுறயீல் அலைகிஸ்ஸலா மவர்கள் அவ்வாறு முன்னருள்ள சொருபத்தை எடுத்துநெருங்கிப் பேசிவிட்டுப் பூமியின்கண் நின்று விசாலமாகிய ஆகாயத்திற் போய்ப் புகுந்தார்கள். சத்துராதிகளின் ஆவியையருந்தியழகானது மிகுத்த நெடிய வேலாயுதத்தைத் தாங்கும் கைத்தலத்தை யுடைய முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மென்னும் நபியானவர்கள் இனிமையுடனிருந்தார்கள் பிற்பாடு நடைபெற்ற வரலாறுகளை யாம் எடுத்துச் சொல்லுவாம். (எஅ)

மறுகிவெள் ளெகினஞ் சிந்த வரிவராற் ருவும்வாவி
செறிதிமஸ் கிறைவன் செல்வத் திருநக ரடுத்த சீறூர்ப்
புறனிடத் துறைந்தா னென்னப் பொருவருந் தடக்கை வெள்வே
லறபிகட் குரைத்தார் தூத ரபூஜகி லறிய வன்றே.

(இ-ள்.) வெண்ணிறத்தைக் கொண்ட அன்னப் பட்சிகள் மனங் குழம்பிச் சிதறும்படி இரேகைகளை யுடைய விரால் மீன்கள் பாயா நிற்கும் தடாகங்கள்செறிந்ததிமஸ்கு நகரத்தினது அதிபனுனஹபீ பென்பவன்செல்வத்தையுடையதெய்வீகநகரமாகிய மக்காவைநெருங்கின பக்கத்திலுள்ளசிற்றூரின்கண் தங்கியிருக்கின்றுனென்று தூதர்கள் அபூஜகி லென்பவன் அறியும்வண்ணம்ஒப்பற்ற பெரியகையினதுவெள்ளியவேலாயுதத்தையுடைய அறபிகளுக்குச்சொன்னார்கள்

கவ்னவாம் பரியு நால்வாய்க் கரியுடன் ஹபீபு வேந்த
னிவணில்வந் தடைந்தா னென்ன வபூஜகி லிணைத்தோள்வீங்கி
யவிர்கதிர்க் கலன்க டாங்கி யகுமதை வெல்வேன் மேலும்
புவனியி லெதிரியா ரென்னப் புதுமதிக் களிப்புப் பூத்தான்.

(இ-ள்.) அவ்வாறு சீக்கிரமாய்த் தாவாநிற்குங்குதிரைகளுடனும் நாலப்பெற்ற வாயையுடைய யானைகளுடனும் இவ்விடத்தில் ஹபீபரசன் வந்துசேர்ந்தா னென்று சொல்ல, அபூஜகி லென்பவன் இரண்டு புயங்களும் பூரிப்புற்று பிரகாசிக்கும் கிரணங்களை யுடைய ஆபரணங் களைத் தரித்து நான் அஹ்மதென்னும் பெயரையுடைய முகம்மதென்பவனை ஜெயிப்பேன், மேலும் எனக்கு இப்பூலோகத்தின்கண் எதிரியானவர்கள் யாவர்? ஒருவருமில்லரென்று சொல்லி ஒருகாலத்திலு முண்டாய் இராத நூதனமாகிய விருப்பத்தைக் கொண்ட சந்தோஷமானது உண்டாகப் பெற்றான். (அ௰)

நிகரரும் பதிக்குட் செவ்வி நெடுந்தெரு வனைத்துந் தூதைப்
புகவிடுத் தறிவிற் றேர்ந்த புரவலர் தம்மைக் கூவி
முகிலுறை கனக மாட முன்றிலி னிருத்திச் சேர்ந்த
தொகுதியில் ஹபீபுவேந்தன் வந்தவை யெடுத்துச்சொன்னான்.

(இ-ள்) அவ்விதம் சந்தோஷ முண்டாயின அபூஜகி லென்பவன் ஒப்பற்ற தனது மக்கமாநகரத்தின் உள்ளிலுள்ள அழகிய நெடியதெருவுக ளெல்லாவற்றிலும் தூதர்களைப் புகுதும்படி அனுப்பி

அறிவினால்தேர்ச்சியுற்ற அரசர்களாகிய அறபிகளைக்கூப்பிட்டுமேகங்கள் தங்காநிற்கும் பொன்னினாலான தனது மாளிகையின் முற்றத்திலிருக் கும்படி செய்து அங்குசேர்ந்த அக்கூட்டத்தார்களுக்கு ஹபீபாசன்வந்த சமாச்சாரங்களை எடுத்துச் சொன்னான். (அக)

நெறிகுலஞ் சமயஞ் சாயா நிறுத்திட வந்த வேந்தைத்
திறைகொடு பணிந்துவேறோர் திருமனை யிடத்திற் சேர்த்தி
மறுவறும் படிகுற் றேவல் வகுத்தவை நடத்தப் போதல்
பொறியெனயெவர்க்குஞ்சொன்னான்பொறியறிந்துரைக்கிலானே.

(இ-ள்.) அன்றியும், அறிவானதை யரிந்துஉரையா தவனான அந்த அபூஜகி லென்பவன் நமது ஒழுக்கமும் குலமும் மார்க்கமும் சாயாது நிறுத்தும் வண்ணம் வந்த ஹபீபரசனைத்திறைகொண்டு தொழுது வேறே யொரு அழகிய வீட்டின்கண் சேர்த்துக் குற்றமறும் வண்ணம் அவன் வகுத்துச் சொன்ன குற்றேவல்களை நாமனைவரும் நடத்தும் படிபோவது புத்தியென்று அங்கு தங்கியிருந்த யாவர்களுக்கும் சொன்னான். (அஉ)

மனமதிக் குறியன் கூறும் வசனங்கேட் டறபி மன்ன
ரனைவரு மிதுநன்கென்ன வகத்தினிற் கொண்டு வேறோர்
புனைகதிர் விடுதி மாடம் புதியதொன் றியற்றிச் செம்பொன்
கனைகழ லரசைச் சேர்த்திக் கவல்வது கருமமென்றார்.

(இ-ள்.) சுருங்கிய அறிவைக்கொண்ட மனத்தை யுடையவனான அந்த அபூஜகிலென்பவன் அவ்வாறு சொல்லும் வார்த்தைகளை அறபி மன்னவர்களான அவர்களியாவர்களும் தங்களின் காதுகளினால் கேள்வியுற்று இச்சமாச்சாரமானது நல்லது என்று மனசின்கண் கொண்டு வேறேயொப்பற்ற நூதனமாகிய அழகியகிரணங்களையுடைய விடுதிமாளிகையொன்றுசெய்து செவந்த பொன்னினாலாய ஒலியாநிற்கும் வீரக்கழலையுடையஅரசனானஹபீபென்பவனை அம் மாளிகையில் சேரச்செய்து நமது குறைகளைச் சொல்லுவது காரியமென்று சொன்னார்கள். (அங)

மரவினை யவர்க்குஞ் சிற்ப மறுவறு தொழிலினோர்க்குந்
திரகம தளித்துச் செவ்விச் செழுமுடிக் கனகமாட
நிரைநிரை யியற்றிச் சுற்று நெடுமதி றிருத்தி வாயில்
விரிகதிர்க் கபாடஞ் சேர்த்தி வீதிகள் பலவுஞ் செய்தார்.

(இ-ள்.) அவ்விதம் சொன்ன அவர்கள் மாத்தொழில் செய்யப்பட்டவர்களான கம்மாளர்களுக்கும் குற்றமற்ற சிற்பத்தொழிலையுடையவர்களான மண்ணீட்டாளர்களுக்கும் ஓர்வகைத்தங்க நாணயங்களைக் கொடுத்து வரிசை வரிசையாக அழகிய செழிய பொன்னினாலசிகரங்களை யுடைய மண்டபங்களைச் செய்து சுற்றும் மதிள்களைச் செவ்வையாய் வைத்து வாயிலின்கண் விரிந்த கிரணங்களை யுடைய கதவைச் சேரப்பண்ணிப் பல வீதிகளையும் செய்தார்கள். (அச)

பரிர்தரிட் டலர்க ளூற்றிப் பருமணிக் கலன்க டேக்கிச்
சந்தனம் பனிநீர் சிந்தித் தரைமெழுக் கெறிந்து சோதி
யந்தரத் துடுவின் கூட்ட மனைத்தும்வந் தடைந்த தென்னச்
சிந்துவெண் டரள ராசி செறித்தலங் காரஞ் செய்தார்.

(இ-ள்.) அவ்விதஞ்செய்து பந்தர்களிட்டுப் புஷ்பமாலைகளைத் தூக்கிப் பருத்த இரத்தின வர்க்கங்களை யுடைய ஆபரணங்களை நானுபக்கங்களிலும் நாலும்படிசெய்து சந்தனத்தையும் பனிநீரையும் தரையின்கண் சொரிந்துமெழுகி ஆகாயத்திலுள்ள நட்சத்திரக்கூட்டங்களியாவும் பிரகாசத்தை எவ்விடக்களிலும் வீசி வந்து சேர்ந்தனபோலச் சமுத்திரத்தின்கண் ணுற்பத்தியான வெள்ளிய முத்தினதுகூட்டங்களை சேர்த்து அலங்காரஞ் செய்தார்கள். (அரு)

கண்படைத் தவர்க ளியாருங் கண்டதி சயிப்பக் காந்தி
விண்படர் மாட வாயின் வெளியினிற் படங்கு கோட்டிப்
பண்பட ரிசையின் வாய்ந்த பழக்குலைக் கதலி நாட்டி
மண்பட ருலகி னில்லா வளம்பல செய்வித் தாரால்.

(இ-ள்.) அன்றியும், கண்களைப் படைக்கப்பெற்றவர்களானயாவர்களும் அக்கண்களினாற் பார்த்து ஆச்சரியப் படும்படி பிரபையானது ஆகாயத்தின்கண் படாநிற்கும் மாளிகையினது வாயிலின் வெளியில் பெரிய கொடிகளை வளைத்துக்கட்டி மண்ணானது விரியப்பெற்ற இசைகளைப்போலும் பொருந்திய பழக்குலைகளையுடைய வாழைமரங்களை நிறுத்தி அகன்ற இம்மண்ணுலகின்கண் ஒருகாலத்திலும் இல்லாத பலவளங்களைச் செய்தார்கள், (அசா)

மேதினித் துறக்க மென்ன விடுதிக ளியற்றி யோதும்
வேதியர் குழுவும் வெள்வேல் வீரர்க டலைவ ரோடு
மேதகயில் திமஸ்கில் வாழு மிறைவனை யெதிரிற் காணக்
காதலித் தினத்தி னோடு மபூஜகில் கடிதிற் போனான்.

(இ-ள்.) அபூஜகிலென்பவன் அவ்வாறு பூலோகச் சுவர்க்கமென்று சொல்லும் வண்ணம் விடுதிகளைச் செய்வித்துக் குற்றமற்ற திமஸ்கு நகரத்தின்கண் வாசஞ்செய்யும் ஹபீபரசனை எதிராய்க் காணும்படி ஆசித்து ஓதாநிற்கும் வேதியர்களின் கூட்டத்தோடும் வெள்ளிய வேலாயுதத்தையுடைய வீரர்களின் தலைவர்களோடும் தனது குடும்பத்தார்களோடும் சீக்கிரமாய்ச் சென்றான். (அஎ)

மாலமர் நகர மாக்க ளபூஜகில் மரபி னோடு
நால்வகைப் பதாதி சூழ நனிபல திறைக ளீந்து
நீலவா ருதியே யன்ன நெடும்படைக் கடலி னுப்பண்
காலைவெங் கதிரிற் றோன்றும் ஹபீபெனு மரசைக் கண்டார்.

(இ-ள்.) அவ்விதம் செல்லவே பெருமைதங்கிய திருமக்கமா நகரத்திலுள்ள மனுஷியர்கள் அபூஜகிலினது கிளையார்களோடும் இரதம், கஜம், துரகம், பதாதியென்னும் நான்குவகை சேனைகளும் வளையும் வண்ணம் மிகுதியான பல அரசிறைகளைக் கொடுத்து நீல நிறத்தையுடைய சமுத்திரத்தைப்போன்ற நெடிய சேனையாகிய கடலின் நடுவில் உதய காலத்தினது சூரியனைப்போலப் பிரகாசிக்கும் ஹபீபென்று சொல்லும் இராஜனைக் கண்டார்கள். (அஅ)

கண்டுகண் குளிர நோக்கிக் கரஞ்சிரங் குவித்துக் கான
வண்டம ரலங்கற் றிண்டோண் மன்னவர் மருங்கு நிற்பத்
தெண்டிரைப் புவனங் காக்குந் திறல்வலி யரசர்கோமான்
விண்டகல் லுரையி னோடு மிருமென விரைவிற்சொன்னான்.

(இ-ள்.) அவ்வாறு கண்டு தங்களின் இரண்டு கண்களும் குளிரும்படி பார்த்து இருகைகளையும் தலையின்கண் குவியச்செய்து கானகத்தினது தேனீக்கள் தங்காநிற்கும் மாலையணிந்த திண்ணிய புயங்களையுடைய அரசனான ஹபீபென்பவனின் பக்கத்தில் நிற்கவே தெள்ளிய சமுத்திரத்தைக் கொண்ட இப்பூலோகத்தைக் காப்பாற்றும் தைரிய

மான வலிமையை யுடைய இராஜாதிபனாகிய அவ்வபீபரசன் சொல்லிய நல்ல வார்த்தைகளோடும் இருங்களென்று விரைவாய்ச் சொன்னான். (அ௯)

போதலர்க் கழனிசூழ்ந்த திமஸ்கினைப் புரந்த வேந்துங்
கோதறு மக்க மென்னுங் கொழும்பதித் தலைவ மாரு
மாதரத் துடனு மொன்றா யளவளா மகிழ்ச்சிபொங்கிப்
பேதமின் மனத்த ராகிப் பிரியமுற் றெழுந்தாரன்றே.

(இ-ள்.) அவ்விதம் சொல்லிய புஷ்பங்கள் விரியாநிற்கும் வயல்கள் சூழப்பெற்ற திமஸ்கு நகரத்தைக் காக்கும் அரசனான ஹபீபென்பவனும் குற்றமற்ற மக்கமென்று சொல்லும் செழியநகரத்தினது தலைவர்களும் அன்போடும் ஒன்றாய்க்கலந்து சந்தோஷமதிகரித்து வேற்றுமையில்லாத மனத்தை யுடையவர்களாக விருப்பமுற்று எழும்பினார்கள். (௯0)

குரகதத் திறளி னோடுங் கொலைமதக் கரியினோடும்
விரிகதி ரெஃகங் கூர்வாள் வில்லுடைத் தலைவரோடு
மருமலர்ச் சோலை சூழ மக்கமா நகரஞ் சேர்ந்து
புரவலர்க் கரியே றன்னான் புதியமண் டபத்திற் புக்கான்.

(இ-ள்.) அவ்வாறு எழும்பவே அரசர்களாகிய யானைகளுக்கு ஆண்சிங்கத்தை நிகர்த்தவனான ஹபீபரசன் குதிரைக்கூட்டங்களோடும் கொலைத்தொழிலையுடைய மதத்தைக்கொண்ட யானைகளோடும் விரிந்த பிரகாசத்தைப்பெற்ற வேலாயுதத்தையும் அழகிய கூர்மை தங்கிய வாளாயுதத்தையும் கோதண்டத்தையுமுடைய தலைவர்களோடும் வாசனைபமைந்த புஷ்பங்களையுடைய காவுகள்வளைந்த திருமக்கமாநகரத்தை யடைந்து தனக்கென்று ஏற்படுத்தியிருக்கும் நூதனமாகிய மாளிகையின்கண் நுழைந்தான். (௯க)

செய்யவா யொளிவெண் மூரற் சிறுநுதற் பெரிய கண்ணார்
கையின்வெண் ணிலவின் காந்திக் கவரிகா லசைப்ப நீண்ட
வையக முழுதுங் காக்கு மணிக்குடை நிழற்ற வெற்றி
வெய்யவ னிருந்த தென்ன விருந்தனன் திமஸ்கு வந்தேன்,

(இ-ள்.) அவ்விதம் நுழைந்த திமஸ்கு நகரத்தின்து அரசனுன் ஹபீபென்பவன் செவந்த வாயையும் பிரகாசத்தைக்கொண்ட வெள்ளியபற்களையும் சிறியநெற்றியையும் பெரியகண்களையு முடையவர்களாகிய பெண்கள் தங்களின் கைகளிற்கொண்ட வெள்ளிய நிலவினது பிரபையையுடைய சாமரத்தினுல் காற்றை அசைக்கவும், நெடிய இந்தப்பூலோகமனைத்தையும்காப்பாற்றும் இரத்தினங்களையுடையகொற்ற குடையானது நிழலைச்செய்யவும், விஜயத்தைப்பெற்றசூரியனுனவன் இருந்ததைப்போலும் ஆசனத்தின்கண் தங்கியிருந்தான். (௬௨)

ஹபீபு மக்கத்துக்கு வந்த படலம்
முற்றிற்று.

ஆ படலம்-எ-க்குத்-திருவிருத்தம்-௫௪0

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

இஃது

மதியையழைப்பித்தபடலம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தவிசினி லிருந்து வெற்றித் தடமுடி யரசர் கோமா
னபுஜகில் தன்னைக் கூவி யணிநகர்க் கழைத்த மாற்றங்
கவரற மனத்தி னுற்ற கருமங்க ளனைத்து நாளுங்
குபலினை மனத்திற் கொண்டோய் கூறெனக் கூறினுனல்.

(இ-ள்.) விஜயத்தைக்கொண்டபெருமை பொருந்திய கிரீடத்தையுடைய அரசரேசுவரனுன ஹபீபுனு மாலிக்கென்பவன் அவ்வாறு ஓராசனத்தின்கண் தங்கியிருந்து அபூஜஹ்லென்பவனைக் கூப்பிட்டுக் குபலென்று சொல்லும் தம்பிரானைப் பிரதிதினமும் மனத்தின்கண் கொண்ட அபூஜகிலே எங்களை அழகிய இந்தத் திருமக்கமா நகரத்திற்கு விளித்த சமாச்சாரத்தையும் உனது இருதயத்தின்கண் பொருந்திய எல்லாக் காரியங்களையும் பிரிவில்லாது என்னுேடு சொல்லென்று கேட்டான். (௧)

ஒலிதுத்து பாவு மாரு வுக்குபா வுமையா சைபா
மலிதருங் கொடுமை பூண்ட மனத்தபூ ஜகிலு மொன்ருய்
நலிதலி லெழுந்து போற்றி நமர்க்கல ருற்ற யாவு
மலர்தலை யுலகம் போற்று மரசுகேட் டருள்க வென்ருர்.

(இ-ள்.) அவ்விதங்கேட்கவே ஒலீது, உத்துபா, உமாரு, உக்குபா உமையா, சைபாவாகிய இவர்களும் மிகுத்த,கொடுமையைத்தரித்த மனத்தை யுடைய அபூஜகிலும் மெலிவில்லாது ஒன்ருயெழும்பித் துதித்துவிரிந்த,இடத்தையுடைய இவ்வுலகமானது துதியாநிற்கும் அரசரானவர்களே,பழிச்சொல்லாய் நம்மவர்களுக்குப் பொருந்திய அனைத்தையும் கேட்டருளுங்களென்று சொல்லுவார்கள். (உ)

முகம்மதென் ருெருத்தன் ருேன்றி வணக்கமு நெறியு மிந்த
வகலிடந் தோன்றத் தோன்று மாலய முழுது முன்னோர்
புகலுநன் மறையுஞ் சூழ்ந்த பொருவருங் குலமு மற்று
மிகலொடுங் கெடுத்து நின்ரு னிவையிவண் விளைந்தவையா.

(இ-ள்.) அரசரானவர்களே, முகம்மதென்று ஒருவன் உதயமாய் நமது வணக்கத்தையும் மார்க்கத்தையும் விசாலமாகிய இந்தப்பூலோகமானது உண்டான அக்காலத்திலேயே உண்டா யிருக்கும் கோயில்களெல்லாவற்றையும் நமது முன்னவர்கள்கூறும் நன்மைபொருந்திய வேதங்களையும்வளைந்த ஒப்பற்ற குலத்தையும்மற்றவைகளையும் பகையோடும் அழித்து நின்ருன். இவைகள்தாம்இங்கு உண்டாயின வைகள். (ங)

அகலிடம் விளக்குஞ் செங்கோ லணிமணித் தீப வேநேர்
புகலுமும் மறையுந் தேர்ந்த புந்தியிற் கடலே நாளு
மிகலுடை யாசர்க் கெல்லா மெதிரிடி யேறே வானுஞ்
சகமுமெண் டிசையுந்திக்கும்வெண்புகழ் தடவும் வேந்தே.

(இ-ள்) விசாலமானஇப்பூலோகத்தைவிளக்காநிற்குஞ்செங்கோலை யுடைய அழகிய இரத்தினத்தீபமானவர்களே!சத்தியத்தைக்கூறுகின்ற தௌருத்து, சபூர், இஞ்சீலென்னும் மூன்று வேதங்களையும் தெளிந்த அறிவையுடைய சமுத்திரமானவர்களே பிரதிதினமும்விரோதத்தையுடைய அரசர்களெல்லாவருக்கும் எதிராயுள்ள இடியேருனவர்களே! ஆகாயத்திலும் பூலோகத்திலும் எண்டிசைகளிலும் நான்குதிக்குகளிலும்வெள்ளிய கீர்த்தியைத் தடவும்அரசரானவர்களே! (ச)

மறுவற வுலகி னில்லா வயதொரு நூற்றின் மேலு
மறுபது மிருந்தோய் நுந்த மறிவினு லறியா தில்லைச்
சிறியவ ருரைத்த தல்லாற் செவியினுந் தெரிவ தாகுங்
கறையற விற்றைப் போதிற் கண்ணினுங் காண்பிரென்றார்.

(இ-ள்) குற்றமற இவ்வுலகத்தின்கண் இல்லாத வயதானது ஒப்ப ற்ற நூற்றினது மேலும் அறுபதும் இருந்தவர்களே! உங்களுடைய அறிவினுல் அறியாதது யாதொன்று மில்லை சிறியவர்களான நாங்கள் சொன்னதேயல்லாமல் தங்களின்காதுகளினுலும்தெரிவதாகும். களங்கமற இன்றையத்தினத்திற்கண்களினுலும் பார்ப்பீர்களென்றுசொன்னார்கள். (௫)

ஓலையுத் தரமு மியாங்க ளுரைத்தது முகம்ம தென்போன்
பாலினின் முரணி னூறு பங்கினி லொன்றுங் காணு
தோலிடுங் கடல்போற் சேனை யுரவவென் றுரைப்ப மூன்று
காலமுந் தெரிந்து நோக்குங் காவலன் செவியிற் கொண்டான்.

(இ-ள்) முன்னர் நாங்கள் எழுதிஅனுப்பிவைத்த ஓலையினதுஉத் தரமும் இப்போது நாங்கள் முகதாவில்போதித்ததும் அந்த முகம்ம தென்பவனின்பக்கத்திலுள்ள முரணில் நூறுபாகத்தில் ஒன்றிற்கும் பற்றாது ஒலமிடாநிற்கும் சமுத்திரத்தை நிகர்த்த பெருமை தங்கிய சேனையையுடைய முதியவர்களே! என்றுசொல்ல? அவற்றைஇறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலமென்னும் முக்காலங்களையும் உணர்ந்துபார்க்கும் அரசனுன ஹபீபென்பவன் தனது காதுகளில்கொண்டான். (சு)

உரைத்தவிவ் வசன மெல்லா முள்ளுறப் பொருத்தி நாளை
வரைத்தடப் புயத்து வீர முகம்மதை விளித்து மார்க்கம்
பொருத்தறப் புகன்ற செய்தி யறிகுவ மிற்றைப் போதிற்
றிருத்தகு மனையின் கண்ணே யாவருஞ் செல்க வென்றான்.

(இ-ள்.) அபூஜகில் முதலிய அவர்கள் கூறிய இந்த வார்த்தை களெல்லாவற்றையும் ஹபீபரசன் தனது மனசின்கண்ணே பொருந் தும் வண்ணம் பொருத்தி மலையை நிகர்த்த பெரிய தோள்களைக்கொண்டவீரத்தையுடையஅந்த முகம்மதுவை நாளையதினத்தில் இங்கு வரவழைத்து அவன் நமது மார்க்கமானது பொருத்தறும்படி சொல்லிய வார்த்தைகளை அறிகுவோம். இன்றையத்தினம் நீங்களியாவர்களும் உங்களின் செல்வத்தையுடைய வீட்டிற்குச்செல்லுங்களென்று சொன்னான். (எ)

அரசுரை கேட்டு வீர ரவரவர் மனையிற் சார்ந்தார்
கரைதிரை புரட்டு மேலைக் கடலிடை கனலி சார்ந்தா
னிரவினைப் பகலைச் செய்யு மெழின்மணித் தவிசின் மீதிற்
குரவர்கண் விழிப்ப வோசைக் குணகடல் வெளுத்த தன்றே.

(இ-ள்.) அவ்வாறு சொன்ன அரசனாகிய ஹபீபென்பவனின் வார்த்தைகளை வீரர்களான அபூஜகில் முதலிய யாவர்களும் தங்களின் காதுகளினால்கேள்வியுற்று அவரவர்களின்வீட்டின்கண்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது சூரியனானவன் அலைகளைக் கரையின்கண் புரட்டா நிற்கும் மேல்பாற்சமுத்திரத்தின்கண் போய்ச்சேர்ந்தான். பின்னர் இராக்காலத்தைப் பகற்காலமாய்ச் செய்யாநிற்கும் அழகிய இரத்தினவர்க்கங்களையுடைய ஆசனத்தின் மீதில் ஹபீபரசன் முதலிய மந்திரி பிரதானியர்கள்கண்விழிக்கும்வண்ணம் ஒளியையுடைய கீழ்பாற் கடல் வெளுத்தது. (அ)

விடிந்தபி னவனிப் பொன்னா டெனும்விறற் பதியின் வீர
ரிடந்தரு திமஸ்கின் வேந்தைக்காண்பதற் கெழுந்தார்வெற்றிப்
படந்தரு கொடியிற் றாண்டும் பகைப்பெருங் கடலைக் கையாற்
கடந்தவே லபித்கா லீபு கலன்பல வணிவ தானார்.

(இ-ள்.) அவ்வாறு வெளுத்து நேரம்விடிந்த பின்னர் பூலோகத்தினது சுவர்க்கலோகமென்று சொல்லும் வெற்றியையுடைய திருமக்கமா நகரத்தின் வீரர்களான காபிர்கள் விசாலமாகிய திமஸ்கு நகரத்தினது அரசனான ஹபீபென்பவனைப் பார்ப்பதற்காய் எழும்பினார்கள். வெற்றியைக் கொண்ட படங்களையுடைய கொடிகளினால் தாண்டாநிற்கும் பகைமையாகிய பெரிய சமுத்திரத்தைக்கையினால் தாண்டிய வேலாயுதத்தை யுடைய அபித்தாலிபவர்கள் பல ஆபரணங்களைத் தரிக்க ஆரம்பித்தார்கள். (௯)

வையகம் புரந்த தீனை வளர்த்திடு மிபுரு கீந்தங்
கையொலி யலைச்செங் கையா லரையினிற் கவினச் சேர்த்தித்
துய்யவன் றூதர் முன்னந் தோன்றிய வாத மென்போர்
மெய்யணி குப்பா யத்தை வியன்பெற மெய்யிற் சேர்த்தார்.

(இ-ள்.) இந்தப்பூலோகத்தைக்காத்து தீனைவளர்த்த நபி இபுருகீம் அலைகிஸ்ஸலா மவர்களின் கையொலியலைத் தங்களின் செவந்த

கையினால் அரையின்கண் அழகாயிருக்கும் வண்ணம் சேர்த்துப்பரி சுத்த முடையவனாய் ஹச்கு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலான இப்பூலோகத்தின்கண் ஆதியிலுதயமாகிய நபி ஆதமலை கிஸ்ஸலா மென்பவர்கள் தங்களின் திருமேனியின்கண்தரித்த குப்பாயத்தைப் பெருமை பெறும்படி சரீரத்தின்கண் சேர்த்தார்கள். (ம)

கருவிமென் மிடற்றிற் றீண்டாக்காரண ரிசுமாயீல்தஞ்
சருவந்து சிரசிற் சேர்த்தித் தாரணி தனிற்பொன் னாட்டு
மருமலர்ப் புயத்திற் றூங்கி வளர்நபி சீதுமெய்யிற்
றருக,தி ருத்தரீயந் தனைபெடுத் தணிந்தா ரன்றே.

(இ-ள்.) அன்றியும், தங்களின் தந்தையாகிய நபி இபுறுகீ மலை கிஸ்ஸலா மவர்களால் அறுத்த ஆயுதமானது மெல்லிய கழுத்தில் தீண்டாத காரணரான நபி இஸ்மாயீ லலைகிஸ்ஸலாமவர்களின் தலைப் பாகையைத் தலையின்கண் சேர்த்து இப்பூலோகத்தில் சுவர்க்கலோக த்தினது வாசனையைக்கொண்ட புஷ்பத்தினாலான மாலையைத் தோ ளின்கண் தரித்து ஓங்கிய நபி சீது அலைகிஸ்ஸலாமவர்கள் சரீரத்தில் தரித்த பிரகாசத்தை யுடைய உத்தரீயத்தைத் தூக்கி மெய்யின்கண் தரித்தார்கள். (மக)

சூலினைத் தரித்த கொண்டற் சுகைபுநன் னபிதஞ் செம்பொற்
காலிணைக் கபுசை வீரக் கழலடி பொருந்தச் சேர்த்திச்
சாலவுங் குலத்து முன்னோர் தரித்திடுங் கலன்க டாங்கி
வேலினைக் கரத்தி லேந்தி வீரவாண் மருங்கு சேர்த்தார்.

(இ-ள்.) அன்றியும், சூலைத்தரித்த மேகமாகிய நன்மைபொருந் திய நபி சுகைபு அலைகிஸ்ஸலாமவர்களின் இரு திருவடிகளது செம் பொன்னாலான கபுசென்னும் பாதரட்சையைத்தங்களின் வீரக்கழலை யுடைய பாதத்தின்கண் பொருந்தும்படி சேர்த்துத் தங்களின் குல த்திலுள்ள முன்னவர்கள் தரித்த ஆபரணங்களை மிகவும் அணிந்து கையின் கண் வேலாயுதத்தைத் தாங்கி வீரத்தையுடைய மந்திரவா ளைப் பக்கத்தில் சேர்த்தார்கள். (கஉ)

தனக்குறுங் குலத்தி லாய்ந்த தலைவரின் முதியார் பாரிற்
சினக்கதிர் வேற்கை கொண்ட செல்வர்காற் பதின்மர் தம்மைக்
கனக்குற மருங்கு கூட்டிக் காவல ரபித்தா லீபு
வனக்கட கரியை நேராய் மகிழ்வொடும் புறப்பட் டாரால்.

(இ-ள்.) அவ்வாறணிந்த மன்னவரான அபீத்தாலி பென்பவர் தமக்குச் சொந்தமாகிய குடும்பத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட தலைமைத் தனத்தை யுடையவர்களில் வயதால் முதிர்ந்தவர்களும், இவ்வுலகத்தின்கண் கோபத்தைச் செய்யாநின்ற ஒள்ளிய வேற்படை தாங்கிய கரத்தினைக் கொண்டவர்களுமான நாற்பது செல்வ வந்தர்களைத் தமதுபக்கத்திற் பெருமையுடன் கூட்டிக்கொண்டு வனத்திற் சஞ்சரியா நிற்கும் மதத்தினைக்கொண்ட யானைக்கொப்பாய் ஹபீபரசனை நாடி மகிழ்ச்சியோடும் புறப்பட்டார். (௧௩)

கலி விருத்தம்.

மாதிர மெனக்கனக மண்டப வநருங்கும்
வீதியிடை புக்குவிறன் மன்னர்புடை சூழக்
கோதறு மறக்கொடு வரிக்குழுவி னுப்ப
ணேதமற வந்தவரி யேறென நடந்தார்.

(இ-ள்,) அவ்விதம் புறப்பட்ட அவர் வெற்றியையுடைய அரசர்களாகிய அந்நாற்பதுபேரும் தமது பக்கத்திற் சூழ்ந்துவரும் வண்ணம் குற்றமற்ற கொலைத்தொழிலைக் கொண்ட புலிக் கூட்டத்தின் மத்தியில் களங்கமில்லாது வந்த ஆண்சிங்கத்தைப் போன்று மலைகளுக்கொப்பான பொன்னினாற்செய்த மாளிகைகள் நெருங்கப்பெற்ற அம்மக்கமாநகரத்தினது வீதியின்கண் புகுந்து நடந்தனர்.

நித்தில நிரைத்துமலர் நீடொடையை னூற்றிப்
புத்தரி சொழுக்குமுயர் பந்தரிடை புக்குச்
சித்திர விறற்குரிசில் செவ்வியழி யாத
மத்தகரி பைத்திமஸ்கு மன்னையெதிர் கண்டார்.

(இ-ள்.) அழகிய வீரத்தன்மையையுடைய அரசராகிய அபீத்தாலிபென்பவர் அவ்விதம் நடந்து முத்துக்களை வரிசையாய்ப் பதித்துப் புஷ்பங்களினாலான நெடிய மாலைகளைத் தூக்கப்பெற்றுப் புதிய நறவத்தைச் சொரியாநிற்கும் மேன்மையையுடைய பந்தரின்கண் நுழைந்து அழகானது மாறப்பெறாத மதயானையாகிய திமஸ்கு நகரத்தினை அரசாட்சிசெய்யும் ஹபீபரசனை எதிரிற் பார்த்தார். (௧௫)

கங்கமுல வுங்கதி ரயிற்கடவு டன்னை
மங்குலக லொண்கதிர் மணிக்கடக மின்ன
வங்கையிணை தொட்டினி தழைத்தரு கிருத்தி
யிங்கித மொடுந்திமஸ்கி னுக்கிறை யிருந்தான்.

(இ-ள்.) அப்பொழுது திமஸ்கு நகரத்தினது அதிபதியாகிய ஹபீபென்பவன் பருந்துகளானவை யுலவாநிற்கும் பிரகாசத்தைக் கொண்ட வேல்வித்தையின் கடவுளான அபீத்தாலிபென்பவரை அந்தகாரமான தகலப்பெற்ற ஒள்ளிய பிரகாசத்தையுடைய தனது இரத்தினக் கடகங்களானவை யொளிரும்வண்ணம் இருவுள்ளங் கைகளினாலுந் தொட்டு இனிமையுட னழைத்துப் பக்கத்தினுட் காரச்செய்து இன்பத்துடன் தானு மிருந்தான். (கசு)

மூரியட லேறபுதுல் முத்தலிபு மைந்தர்
மாரிபொரு வாதகர மன்னவனை நோக்கித்
தேருமதி யாற்பல தெரிந்தபுக ழோடு
மாரமுத மானசில நன்மொழி யறைந்தார்.

(இ-ள்.) அவ்வாறிருக்கவே, மேலான வீரத்தைக்கொண்ட சிங்கத்திற்கொப்பான அப்துல் முத்தலிபென்பவரின் புத்திரசிகாமணியாகிய அபீத்தாலிபென்பவர் மேகங்களு மொப்பாகாத கைகளையுடைய ஹபீபரசனைப் பார்த்துத் தெளிவினைக்கொண்ட தமது அறிவினாலும், பலவற்றையும் உணர்ந்த கீர்த்தியினாலும், மேன்மையையுடைய அமுதத்திற்குச் சமமான சில நன்மைபொருந்திய வார்த்தைகளை எடுத்துக்கூறினர். (கஎ)

ஓதுநெறி நீதியபித் தாலிபுரை கேட்டுச்
சீதமதி போலுமொளிர் செம்முக மிலங்க
வாதரவி னேடுமகிழ் வின்சிர மசைத்துச்
சோதிமதிள் சூழ்திமஸ்கி னுக்கிறைசொல் வானல்

(இ-ள்) அபீத்தாலிபென்பவர் அவ்வாறு கூறிய சன்மார்க்கத்தினது ஒழுங்கினைக்கொண்ட அவ்வார்த்தைகளை ஒள்ளிய மதில்கள் சூழப்பெற்ற திமஸ்கு நகரத்தினது அதிபதியாகிய ஹபீபென்பவன் அன்புடன் குளிர்ச்சிதங்கிய சந்திரனைப்போலும் பிரகாசியா

நிற்கும் தனது செவந்த முகமானது இலங்கும் வண்ணம் இருகா துகளினுலும் கேள்வியுற்று மகிழ்ச்சியினல் தனது தலையை அசைத் துச்சொல்ல ஆரம்பித்தான். (௧அ)

இந்நகரி யிற்றலைவ ரியாவரினு மிக்கோய்
மன்னுகிளை யிற்பகை வரத்தவிர்தல் செய்யா
தன்னவர் துணிந்தவை துணிந்தனை யறத்தோ
ருன்னவு மிழுக்கென வுளத்திலிவை கொள்ளார்.

(இ-ள்.) இந்த மக்கமாநகரத்தின் கண்ணுள்ள தலைவர்களியாவ ரிலும் மேலான அபீத்தாலிபே! குடும்பத்தினுள் பொருந்திய பகை யானதுவர; அப்பகையை யொழித்தல் செய்யாது அப்பகைக்குக் காரணமாகிய அவர்கள் துணிந்தவைகளில் நீயும் துணிவுற்ருய். இவற்றைத் தருமவான்கள் நினைப்பதுங்கூடக் குற்றமென்று கருதி மனசின்கண் நினையார்கள். (௧௯)

சீலமறி யாதசிறி யோர்கள்பிழை செய்யின்
மேலவர்கள் கண்டவை விலக்கல்கட னல்லாற்
கோலிய பெரும்பகை குலத்தினில் விளைத்தன்
மாலுற வளர்த்தன்மட மைத்தகைமை யாமால்.

(இ-ள்.) நல்லொழுக்க மின்னதென் றுணராத சிறியவர்கள் குற் றஞ்செய்தால் அக்குற்றத்தை மேலோர்கள் பார்த்து அவ்விதம்அவர் கள் செய்யாது அவர்களை அவற்றில் நின்றும் விலக்கி விடுவதுகட மையே அல்லாது சூழ்ந்த குடும்பத்தின்கண் அவர்கள் பெரியபகை யை விளையச் செய்வதும் அதைப் பெருமையுற வளரச்செய்வதும் அறியாத்தன்மையாகும். (௨௦)

ஆதியொரு வன்றனிய னுண்டெனவ வன்றன்
றூதனபி யானளவில் சோதியுரை யான
வேதமென தின்சொலென விஞ்சையின் விளைத்த
பேதமொழி வஞ்சமொடு பேசுவது மன்றே.

(இ-ள்,) யாவற்றிற்கும் முதன்மையாகிய ஏகனுண கடவுள் ஒரு வன் உண்டென்றும், யான் அக்கடவுளின் தூதனுகிய நபி என்றும், அளத்தலற்ற பிரகாசமே சொரூபமாய்க்கொண்ட அக்கடவுளின்

வார்த்தைகளாகிய வேதமானது எனது வாயில்நின்று முண்டாகும் இனிய வார்த்தைகளென்றும், மாயாஜாலத்தினுல் உற்பத்திசெய்த மாறுபாடான வார்த்தைகளைக் கூட்டத்தோடு கூறுவதையுர். (உக)

மாறுபக ரற்கரிய மக்கநக ரத்திற்
றேறுமறை மன்னவர் செழுங்குறைஷி மன்னர்
கூறுவதி லொன்றுபடி றின்றுகுல முற்றும்
வேறுபடல் வேதவிதி யன்றுபுகழ் மிக்கோய்.

(இ-ள்.) மிக்க கீர்த்தியையுடைய அபீத்தாலிபே! பேதஞ் சொல்லுதற்கரிய இம்மக்கமா நகரத்தின் கண்ணுள்ள வேதங்களில்தெளிவடைந்த அரசர்களும், செழுமையான குறைஷிக் குலத்திலுள்ள இராஜர்களும், சொல்லுவதில் ஒன்றேனும் பொய்பல்ல. இங்குள்ள கூட்டத்தாரனைவர்களும் ஒருவருக்கொருவர் வேறுகுதல் வேதவிதியுமல்ல. (உஉ)

காரண நினைத்தவர் கருத்துற முடித்திப்
பாரிலிறை தூதுவ ரெனப்பகர்தல் வேண்டும்
வேருமொரு தூருமில்ல யென்பதொரு விஞ்சை
யார்வமொடு கொண்டுநபி யென்பதியல் பன்றே.

(இ-ள்.) அன்றியும், இவ்வுலகத்தின்கண் யாதேனும் ஓர்காரணத்தைச் சிந்தித்த அவர்களின் கருத்தானது பொருந்தும் வண்ணம் நிறைவேற்றிக்காட்டி யான் அல்லாகுசுபுகானகுவத்தஆலாவின் தூதரென்று சொல்லல்வேண்டும். ஒப்பற்ற வேரும் தூருமில்லையென்பதான ஒரு மாயாஜாலத்தை ஆர்வத்துடன்கொண்டு யான்நபியென்று சொல்வது இயல்பல்ல. (உ௩)

நன்றிவை யறிந்திடுவ துண்டுநபி தம்மை
யின்றவை யிடத்தினி லழைத்திடுக வென்ன
வென்றிவிறல் சேருமபித் தாலிபை விழித்து
மன்றல்கம ழுந்திமஸ்கு மன்னவ னுரைத்தான்.

(இ-ள்.) நல்லது? இவைகளை அறியும் மார்க்கமானதுண்டு. இன்றையத்தினமே அந்நபியென்பவரை இந்தச் சபையின்கண் அழைப்பாயாக என்று வெற்றியும் வீரமும் பொருந்திய அபீத்தாலிபென்பவரைக் கூப்பிட்டு வாசனையானது பரிமளியாநிற்கும் திமஸ்கு நகரத்தினது அரசனுன ஹபீபென்பவன் கூறினுன். (உ௪)

மந்தர மதிற்றிமஸ்கு மன்னவ னுரைப்பச்
சிந்தைகளி கொண்டபுதுல் முத்தலிபு செல்வ
ரிந்தமொழி நன்கென வெடுத்துற வியந்திச்
சந்தென வொருத்தனை யழைத்தனர் தனித்தே.

(இ-ள்.) மலைகளை நிகர்த்த மதில்களையுடைய திமஸ்கு நகரத்தினது அரசனான ஹபீபென்பவன் அவ்வாறுகூற; அப்துல் முத்தலிபென்பவரின் புத்திரப்பேருகிய அபீத்தாலிபென்பவர் தமது மனசின்கண் மகிழ்ச்சிகொண்டு இவ்வார்த்தைகள் நல்லதென்று மிகவுமெடுத்து வியந்து ஒருவனைத் தூதாய்த் தனிய அழைத்தார். (உரு)

மங்குறவ ழுங்கவிகை வள்ளலை விரிந்த
பங்கயப தக்குரிசி லைப்பரிவி னேடு
மிங்கினித ழைத்துவரு கென்றனர் விரைந்தே
பொங்கிய புயங்கள்புள கங்கொள வெழுந்தான்.

(இ-ள்.) அவ்வாறு அழைத்த அவனை மேகங்கள் தவழாநிற்கும் குடையினையுடைய வள்ளலும், மலர்ந்த தாமரை மலர்போலும் திருவடிகளையுடைய குரிசிலுமாகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அன்போடும் விரைவாய் இனிமையுடன் இவ்விடத்திற்குக் கூட்டிக்கொண்டு வருவாயாக என்றனர். அத்தூதுவனும் ஓங்கிய இருபுயங்களும் புளகம் கொள்ளும் வண்ணம் அங்கிருந்து மெழும்பினான். (உசு)

ஊதையை நிகர்த்தகதி யொண்புரவி மேற்கொண்
டேதமறு மாநகர வீதியிடை புக்கி
யாதமுத லானநபி நாயகம தூதி
தூதுவரை வந்தநர தூதனெதிர் கண்டான்.

(இ-ள்.) அவ்வாறு எழும்பிவந்த நரதூதுவனாகிய அவன் காற்றைப்போலும் நடக்கும் நடையினையுடைய ஒள்ளிய ஒருகுதிரையின் மீதேறிக் குற்றமற்ற மகத்தாகிய அந்த மக்கமாநகரத்தினது வீதியின்கண் நுழைந்து சென்று ஆதமலைகிஸ்ஸலாமுதலிய எல்லா நபிமார்களின் நாயகமும் ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவருமான நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை எதிரிற் கண்டான். (உஎ)

கண்டுகடி திற்பரி யிழிந்திருகை யார
முண்டக மலர்ப்பத மிருத்திமுடி மீது
கொண்டுற வணங்கிநய னங்கள்களி கூர
வண்டென மலர்க்கர வனப்பினை நுகர்ந்தான்.

(இ-ள்.) அவ்விதம் கண்டு விரைவாய்த் தானேறியிருக்கும் குதிரையைவிட்டும் கீழிறங்கி நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தாமரைமலர்போலும் பாதங்களைத் தனது இருகைகளாலும் பொருந்தும்வண்ணம் சிரமீது இருக்கச்செய்து மிகவும் பணிந்து கண்களானவை அதிகக்களிப்படைய வண்டையொத்து நளின மலரை நிகர்த்த கைகளின் அழகை அருந்தினன். (உஅ)

மாதவமு கம்மதின் வனப்பினை நுகர்ந்த
தூதனொரு வில்லினிடு தூரமதி னின்று
காதலொடு மெய்யணி கலன்கலை யொதுக்கிச்
சூதற விரிந்தமணி வாய்புதைத்துச் சொல்வான்.

(இ-ள்) மகாதவத்தையுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் அழகை அவ்வாறு குடித்த அந்தத் தூதுவன் ஓர்வில்லிடு தூரத்தினப்பால் நின்று தனது சரீரத்தின்கண் தரித்திருக்கும் ஆபரணங்களையும் வஸ்திரத்தையும் ஒதுங்கும்படிசெய்து ஆசையோடும் வஞ்சகமில்லாது அழகிய விரிந்தவாயை கைகளால் மறைத்துக்கொண்டு சொல்ல ஆரம்பித்தான். (உகூ)

பவக்கட னடுப்படு மனுப்பகுதி யெல்லா
முவப்பொடு கரைப்படு மரக்கலம தொத்தே
நவப்பட வுதித்தநபி நாயக விளக்கே
துவர்க்கமுடி விற்கொரு சுடர்க்கதிரின் மிக்கோய்.

(இ-ள்.) பாவச் சமுத்திரத்தினது மத்தியிலகப்பட்ட மானுஷிகக் கூட்டங்களனைத்தையும் உவப்புடன் கரைசேர்க்கா நிற்கும் மரக்கலத்தினை நிகர்த்து அற்புதத்தோடும் உதயஞ்செய்த நபிமார்களுக்கெல்லாம் நாயகமான தீபமே! ஆதியந்தத்திற் கொப்பற்ற கிரணங்களையுடைய சூரியனைப் பார்க்கிலும் மேலானவரே!. (௩0)

தேனமர் பொழிற்றிமஸ்கு மன்னெடு செறிந்திம்
மானகரின் வீரரு மதிக்குடை கவித்த
ஈோனபுதுல் முத்தலிபு புத்திரரு முற்றே
யீனமற நும்மைவர வென்றனர்க ளென்ருன்.

(இ-ள்.) வண்டுகளானவை உறையப்பெற்ற சோலைகளையுடைய திமஸ்கு நகரத்தினது மன்னவனான ஹபீபென்பவனேடு இப்பெருமை பொருந்திய மக்கமாநகரத்தின் கண்ணுள்ளவீரர்களும் சந்திரவட்டக்குடை கவியப்பெற்ற அரசராகிய அப்துல் முத்தலிபென்பவரின் புத்திரசிகாமணியான அபீத்தாலிபென்பவரும் நெருக்கமாயிருந்துகொண்டு உங்களைக் குற்றமற வரும்படி அழைத்தார்களென்று சொன்னான். (௬௧)

வருகவென நன்மொழி வகுத்தனர்க ளென்ன
வருகினி துறைந்தவ னறைந்தது தெளிந்தே
தருமநெறி நந்நபி தருக்கொடு மகிழ்ந்தே
மருமலர் பொதிந்தமணி மாளிகை புகுந்தார்

(இ-ள்.) இனிமையோடும் டக்கத்தில் தங்கியிருந்தவனாகிய அத்தூதுவன் வருவீர்களாகவென நன்மைபொருந்திய வார்த்தையைச் சொன்னார்களென்று சொன்னதைத் தருமநெறியையுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தெளிந்து பெருமையுடன் மகிழ்ச்சிகொண்டு வாசனைதங்கிய புஷ்பங்களினால் பொதியப்பெற்ற இரத்தினங்க ளழுத்திய தங்களின் மாளிகையிலுள் நுழைந்தார்கள். (௬௨)

மாசகல வந்தகுல மாதினை விளித்துப்
பாசன் அபில் ஹக்கமொடு பற்பல ருடன்று
பூசலை நினைத்தெழுதி விட்டதும் புரிந்தே
யாசில்திமஸ் கிக்கிறை யடைந்ததுவு மன்றே.

(இ-ள்.) அவ்விதம் நுழைந்த நாயகமவர்கள் குற்றமானது நீங்கும்வண்ணம் வந்த மேன்மையையுடைய தங்களின் நாயகியவர்களை அழைத்துப் பாதகனாகிய அபுல்ஹிக்க மென்னும் இயற்பெயரையுடைய அபூஜகிலோடு அனேகர்கூடி யுத்தத்தைக்கருதி ஓலை யெழுதி விட்டதையும், களங்கமற்ற திமஸ்கு நகரத்தினது அதிபதியாகிய ஹபீபென்பவன் வந்துசேர்ந்ததையும், (௬௩)

துன்றுமடல் வெம்புரவி சேனைபுடை சூழ
வன்றிற லமச்சரொ டிருந்துமதி வல்லோன்
வென்றிகொ ளயிற்படை யொருத்தனை விடுத்தே
யொன்றிய மறத்தொடு மழைத்தது முரைத்தார்.

(இ-ள்.) அறிவில் வல்லவனான அவ்ஹபீபென்பவன் தன்னை நெருங்கிய வீரத்தன்மையைப் பெற்ற கொடிய குதிரைகளையுடையசேனைகள் பக்கத்தில் சூழும் வண்ணம் வன்மைபொருந்தியவெற்றியினது மந்திரிமார்களுடன் இருந்துகொண்டு விஜயத்தைக்கொண்டவேலாயுதத்தைத் தாங்கிய ஒரு தூதுவனை அனுப்பித் தங்களை யச்சபைக்கு நெருங்கிய கொடுமையுடன் அழைத்ததையுங் கூறினார்கள் ()

வேறு.

மறத்திகன் மனத்தவர் திரண்டு மாநகர்ப்
புறத்திருந் தழைத்தன ரென்னும் புன்மொழி
நறைத்தடப் புயநபி நவிலக் கேட்டலு
நிறைத்தகற் புடைமையா ரறிவு நீங்கினார்.

(இ-ள்.) நிறைக்கப்பெற்ற கற்பென்னும் ஆபரணத்தையேதங்களுக்கு அணிகலமாக அணிந்துகொண் டிருக்கப்பட்டவர்களான கதீஜா நாயகி யவர்கள் மகத்தாகிய அம்மக்கமா நகரத்தினது பக்கத்தில் கொடிய பகையைக்கொண்ட மனத்தையுடைய சத்துராதிகள்கூட்டமாய்க் கூடியிருந்துகொண்டு தங்களை அழைத்தார்களென்று கூறும் புன்மையான வார்த்தையை வாசனைதங்கிய விசாலமானதோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கூறிய மாத்திரத்தில் தங்களினறிவானது நீங்கப்பெற்றார்கள். (௩௫)

காரதி ரிடிக்கெதிர் கலங்கித் தன்னுடல்
சோர்தரு மயிலெனச் சோர்ந்து கண்ணினீர்
வார்தரு கலன்கலை நனைப்ப வார்குழல்
பார்தர விரிப்பமெய் பதைத்து வாடினார்.

(இ-ள்.) அன்றியும், மேகத்தின்கண் ஒலியாநிற்கும் இடிக்கு முன்னால் பயந்து தனது சரீரமானது சோர்வடையப் பெறும்மயில் போலச் சோர்வுற்று கண்களிலிருந்தொழுகும் நீரானது ஆபரணங்களையும் வஸ்திரத்தையும் நனையும்படிசெய்ய நீண்ட கூந்தலானது பூமியிற்படும்படி விரியச் சரீரமானது துடித்து வாட்டமுற்றார்கள்.

மறைத்திடாமதியென வளருந் தீனிலே
நிறைத்தநற் பதவியை நிலத்தி லெங்களுக்
குறத்தரு மிறைவவுன் றூத ருன்றிருப்
புறத்தினி லடைக்கல மென்னப் போற்றினர்.

(இ-ள்.) அவ்வித வாட்டமுற்ற கதீஜா றலியல்லாகு அன்கா அவர்கள் யாவராலும் மறைக்கக்கூடாத சந்திரனைப்போலும் நாளுக்குநாள் வளராநிற்கும் தீனுல் இஸ்லாமென்னும் மெய்மார்க்கத்தினது நிலைமையினால் நிறைக்கப்பெற்ற நன்மைபொருந்திய பதவியை இவ்வுலகத்தின்கண் எங்களுக்கு மிகவும் தருகின்ற இறைவனே! உனது தூதுவராகிய எங்கள் நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் உனது திருச்சந்நிதானத்தில் அடைக்கலமென்று சொல்லித் துதித்தார்கள். (௩௭)

நவ்வியின் பெரும்புன னடந்த நந்நபி
மௌவலங் குழற்கதி ஜாதம் வாட்டங்கண்
டவ்வயி னினிதுற வடுத்து நன்மறைச்
செவ்விய தெருட்சியிற் றெளியச் செப்புவார்.

(இ-ள்.) ஜலத்தைக்கொண்ட பெரிய ஆற்றின்கண் மானினது பின்னால் நடந்துசென்ற நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வாசனைதங்கிய அழகியகூந்தலையுடைய கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களின் அவ்வித வாட்டத்தைப் பார்த்து அவகர்ளின் சமுகத்தில் நெருங்கி நன்மைபொருந்திய வேதவாசகத்தினது அழகிய அறிவினால் அவர்கள் தெளிவடையும்படி இனிமையோடும் கூறத் தொடங்கினார்கள். (௩௮)

குவைலிதுக் கரும்பெருங் குலத்திற் றீபமே
புவியில்விண் ணவர்தினம் போற்றும் பூவையே
கவினுமென் னுயிரன்னீர் கவலல் காவலோ
னவனரு ணம்மிடத் தகல்வ தில்லையால்.

(இ-ள்.) குவலை தாசனின் அருமையான பெரிய குலத்திற்குத் தீபமானவரே! தேவர்களான மலாயிக்கத்துமார்கள் இவ்வுலகத்தின் கண் பிரதிதினமும் துதியாநிற்கும் பூவையானவரே! அழகிய

எனது உயிருக்குச் சரியானவரே! நீவிர் கவலைப்படவேண்டாம்? யாவற்றையும் காப்பவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் கிருபையானது நம்மிடத்தில் நின்றும் ஒருபோதும் நீங்குவதில்லை.

மன்பெரும் புவியினில் வாழு மாந்தரிற்
துன்புறு தவரிலைத் துன்பைத் துன்புறு
இன்பமே கொள்பவ ரிலங்கும் பொற்பதிக்
கன்பரா யிருப்பரென் றறிவு சொற்றதே.

(இ-ள்.) பொருந்திய இந்தப் பெரிய உலகத்தின்கண் வாழாநிற்கும் மனுஷியர்களில் துன்பமடையாதவர்கள் ஒருவருமில்லர். அத்துன்பத்தைத் துன்பமாய்க் கொள்ளாது இன்பமாய்க்கொள்பவர்கள் பிரகாசிக்கின்ற சொர்க்கலோகத்திற்கு அன்பராயிருப்பார்க ளென்று அறிவாகிய வேதமானது சொல்லிற்று. (௬௦)

இனப்படைக் கடனடு விருந்து ளோமியாந்
தனிப்பவ னருண்மரக் கலத்தின் சார்பினாற்
பனிப்படா மகிழ்கரை படுத லல்லது
துனிப்பட லறிவெனுஞ் சூழ்ச்சித் தன்றரோ.

(இ-ள்.) அன்றியும், நாம் இனமாகிய படையென்னுஞ் சமுத்திரத்தினது மத்தியில் இருந்துள்ளோம். யாவும் ஒழிந்து தனிப்பவனான லாகு சுபுகான குவத்த ஆலாவின் கருணையாகிய மரக்கலத்தினது சார்பினால் பயமற்ற மகிழ்வென்னும் கரைசார்வதே யல்லாமல் துன்பப்படுவது அறிவென்று சொல்லாநிற்கும் தன்மைத்தல்ல. ()

கொதிப்படர் குபிரெனுங் குறுக லார்திர
ளெதிர்ப்படர் தீன்படைக் கலத்தி னாக்கம்போ
லெதிர்ப்படுந் துன்பெனு மிருளை யுண்மகிழ்
மதிப்பெனுங் கதிரினான் மாய்த்தல் வேண்டுமால்.

(இ-ள்.) அன்றியும், கொதித்தலானது நெருங்கப்பெற்ற காபிர்களென்னும் சத்துராதிகளின் கூட்டத்தை ஆரவாரத்தோடும் அடராநிற்கும் தீனுல் இஸ்லாமென்னும் படைக்கலத்தினது ஆக்கத்தைப்போல, நமக்கெதிர்ப்படுகின்ற வருத்தமென்னு மந்தகாரத்தை மனமகிழ்ச்சியையுடைய மதிப்பென்னும் சூரியனால் மாயும்படி செய்தல்வேண்டும். (௬௨)

தன்மமே பொருளெனத் தவத்தின் மேற்செலு
நன்மனத் தவர்க்கொரு நாளுந் தீங்கெனும்
புன்மைவந் தடைந்திடா தென்னப் பூவினின்
முன்மறை தெளிந்தவர் மொழிந்த வாய்மையே.

(இ-ள்) அன்றியும், தருமமே தனமென்று சொல்லித் தவத்தின் மீது செல்லாநிற்கும் நன்மைபொருந்திய மனத்தையுடையவர்களுக்கு ஒருநாளேனும் தீமையென்று சொல்லப்பட்ட புன்மையானது வந்து சேராதென்று இவ்வுலகத்தின்கண் முன்னுள்ள வேதங்களைக் கற்றுத் தெளிந்த வேதாந்திகள் கூறிய சத்தியமாகும். (௪௩)

இன்னன பலமொழி யியம்பிக் கற்பெனு
நன்னிலைக் கொடிமன நடுக்கந் தீர்த்தொரு
மின்னகத் திருந்தெழு மேக நீழலிற்
பொன்னணி முன்றிலின் புறத்தி லாயினர்.

(இ-ள்.) இப்படிப்பட்ட பல நீதிவாக்கியங்களைக் கூறிக் கற்பென்னும் நல்ல நிலைமையையுடைய கொடிபோல்பவரான கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களின் மனத்தினது பயத்தைத் தீர்த்துப் பிரகாசந்தங்கிய தங்களின் மாளிகையிலிருந்து ஓங்காநிற்கும் ஒப்பற்ற மேகநிழலில் பொன்னினாற் செய்த ஆபரணங்கள் கிடக்கப்பெற்ற முற்றத்தின் பக்கத்தி லாயினர்கள். (௪௪)

உள்ளகக் களிப்பொடு முவந்து நந்நபி
விள்ளரும் விசும்பினி னோக்க வெள்ளிடைத்
தெள்ளிய பெருஞ்சிறைச் செபுற யீல்தமைக்
கள்ளவிழ் தாமரைக் கண்ணுற் றாரரோ.

(இ-ள்.) அவ்விதம் முற்றத்தின் பக்கத்திலான நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனசினுள் மகிழ்ச்சியோடும் உவப்புற்றுக் கூறுதற்கரிய ஆகாயத்தைப் பார்க்க; அவ்வாகாயத்தினது வெள்ளியதானத்தில் தெளிவாகிய பெரிய சிறகுகளையுடைய ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்களை மதுவையுடைய மலர்ந்த தாமரை மலருக்கு நிகரான தங்களின் கண்களாற் கண்டார்கள். (௪௫)

முரணுறும் வானகோ னெடுமு வாயிர
வரமுறு மலக்குகள் வந்து தோன்றினர்.

சிரயொரு கிரியெனத் திகழச் செவ்விய
கரதலம் புயவரை ககனந் துன்னவே.

(இ-ள்.) அப்போழுது வலிமைமிகுத்த வானவர்களாகிய மலாயிக்கத்துமார்களின் மன்னவரான ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்களுடன் தலையானது ஒரு மலையைப்போலத் பிரகாசிக்கவும் அழகிய கைத்தலங்களும் புயங்களாகிய பர்வதங்களும் ஆகாயத்தில் நெருங்கவுமான வரத்தினைப்பொருந்திய மூவாயிரம் மலாயிக்கத்துமார்கள் வந்து அவ்வெள்ளியதானத்தில் தோற்றமாயினர்கள். (௬௬)

பெரும்படைப் பெனுமவர் பிடித்த வல்லய
மரும்பெரும் பொருளவன் முனிவி லாயது
தரும்பெருங் கதிரவன் றனினும் வெய்யதா
யிரும்பெரும் புவிக்கட லேழு முண்ணுமால்.

(இ-ள்,) பெரும் படைப்பென்று சொல்லாநிற்கும் அம்மலாயிக்கத்துமார்கள் தங்களின் கைகளிலே பிடித்திருந்த வல்லையமானது அருமையான பெருமையையுடைய பொருளாகிய அல்லாஹ் சுபுகான குவத்த ஆலாவின் கோபத்தினாலாயது. அன்றியும், பெரிய கிரணங்களைத் தருகின்ற சூரியனைப் பார்க்கிலும் கொடிதாய் மிகவும் பெரிதான இவ்வுலகத்தின்கண்ணுள்ள ஏழுசமுத்திரங்களையும் அருந்தாநிற்கும். (௬௭)

அறத்தனி படைப்பவர் கரத்தி லாயவை
மறத்தினைத் திரட்டியோர் வடிவு கொண்டென
வுறைத்தெழுங் கொழுந்தழ லோங்கி யொவ்வொரு
புறத்தினி லெழுபது தலைக்கும் பொங்குமால்.

(இ-ள்) மேலும், ஒப்பற்ற தருமப் படைப்பினரான அம்மலாயிக்கத்துமார்களின் கைகளில் ஆயவைகள் கொடுமையையே யொன்றாகத் திரளும்படிசெய்து அது ஒருவடிவத்தைக்கொண்டாற்போல உறைப்புற்றோங்கும் செழிய அக்கினியானது ஒவ்வொரு பக்கத்தில் எழுபது தலைக்கும் எழும்பி அதிகரியா நிற்கும். (௬௮)

வருமெழு வான்படு வானென் றோங்கிய
விருதிசைக் கிருதலை யிடமுந் தீண்டுந்தீப்
பொருகதி ரயிற்கெதிர் பொருவ வாயிரம்
பருதியுஞ் செழுங்கதிர் பரப்ப வெட்குமால்.

(இ-ள்.) அன்றியும், சூரியனது வருகையையுடைய எழுவான் படுவானென் றோங்கப்பெற்ற இருதிசைகளையும் இருமுனிப்பக்கமும் தொடும். நெருப்பெரியப்பெற்ற பிரகாசத்தையுடைய வேலாயுதத்திற்கு முன் ஒப்பாக ஆயிரஞ் சந்திரன்களும் ஒன்றாய்த் தமது செழியகிரணங்களை விரிக்க வெட்காநிற்கும். (சகூ)

அப்பெருந் திறலயி லங்கை யேந்திநன்
மைப்படி திரளென வந்த வானவர்
செப்பருஞ் சலாமெனச் செய்ய வாய்திறந்
தொப்பரும் புகழ்நபிக் கோதி னாரரோ,

(இ-ள்.) அப்பேர்ப்பட்ட பெரிய வலிமையைக்கொண்ட வேலாயுதத்தை அழகிய கைகளில் தாங்கிக்கொண்டு நல்லமேகங்களானவை கவியாநிற்கும் கூட்டத்தைப்போன்று அவ்வெள்ளியதானத்தில் வந்த தேவர்களாகிய மலாயிக்கத்துமார்கள் தங்களின் அழகிய வாய்களைத் திறந்து உவமைக் கருமையான கீர்த்தியையுடைய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்குச் சொல்லுகின்ற அரிய சலாமென்று சொன்னார்கள். (ருo)

முருகலர் தொடைப்புய முகம்ம தேயெமக்
கருளினன் பெரும்பொரு ளாதி நாயக
னிருளற நும்விரும் பேவல் செய்திடத்
திரளொடும் வந்தனஞ் செகத லத்தினே.

(இ-ள்.) வாசனையானது பரிமளிக்கப்பெற்ற மலர்மாலை யணிந்த தோள்களையுடைய நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே! எங்களுக்குப் பெரும்பொருளாகிய ஆதிநாயகனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் உங்களது விரும்பப்பட்ட ஏவற்றொழிலை மயக்கமில்லாது செய்யும் வண்ணம் கட்டளைசெய்தான். ஆதலால் கூட்டத்தோடும் நாங்கள் இவ்வுலகத்தின்கண் வந்தோம். (ருக)

கொலைமனக் கொடியவர் கூட்டத் தான்மன
மலையனி ரேவிடின் மாந்தர் சேனைக
ளலைசட லாயினு மனுவன் றுதித
னிலைபெறுந் தீநெறி நிறுத்தல் வேண்டுமால்.

(இ-ள்.) கொலைத்தொழிலைப் பெற்ற மனத்தையுடைய கொடியவர்களான சத்துராதிகளின் கூட்டத்தினால் மனமானது பயப்படவே

ண்டாம் நீங்கள் உத்திரவுதரும் காலத்தில் மாந்தர்களாகிய அப்பகைவரின் படைகள் அலைகளையுடைய சமுத்திரத்திற் கொப்பாயினும் அவைகள் எங்களுக்கு ஒரு அணுப்பிரமாணமுமல்ல யாவற்றிற்கும் முதன்மையான ஹக்கு சுபுகான குவத்த ஆலாவின் நிலைமையைக் கொண்டதினால் இஸ்லாமென்னும் சன்மார்க்கத்தை நிலையாக நிறுத்த வேண்டும். (ருஉ)

இருங்கலைக் குரிசிலெம் மேவல் காண்பிராற்
கருங்கட லேழையுங் கலக்கி நீறதாய்ப்
பெருங்கிரி யனைத்தையும் பிதிர்த்திட் டோர்நொடி
யருங்கதிர்ப் பொழுதினி லடைகு வோமென்றார்.

(இ-ள்.) பெரிய வேதசாஸ்திரங்களுக் கிறைவராகிய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களே! எங்களது ஏவற்றொழிலைப் பார்ப்பீர்களேயாயின் கரியசமுத்திரங்க ளேழையும் கலங்கும்படி செய்து பெரியமலைகளெல்லாவற்றையும் நீறாகப் பிதிர்த்திட்டு சூரியனது அரிய ஓர் நொடிப்பொழுதில் இங்குவந்து சேர்வோமென்று சொன்னார்கள். (ருங)

விண்ணவ ருரைத்தவை கேட்டு மெய்சிலிர்த்
துண்ணிறை மகிழ்வொடு முணர்ந்து தேர்ந்தியன்
மண்ணகத் தென்னொடும் வந்து சென்மினென்
றண்ணலும் பொறுமைபி னவர்கட் கோதினார்.

(இ-ள்.) தேவர்களாகிய மலாயிக்கத்துமார்கள் அவ்வாறு கூறியவைகளை நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கேள்வியுற்றுச் சரீரப்புளகங்கொண்டு மனசின்கண் பூரணமாகிய மகிழ்ச்சியோடும் ஆராய்ந்து தெளிந்து நீங்கள் இயல்பினையுடைய இவ்வுலகத்தின்கண் என்னுடன் பொறுமையோடும் வந்து போவீர்களாகவென்று அவர்களுக்குச் சொன்னார்கள். (ருச)

அமரருக் கினிதுரை யருளிச் செய்தபின்
றமர்வரத் திறலபூ பக்கர் தம்மொடு
முமறுது மானலி யும்வந் துற்றன
ரிமையினி லடலரி யேறு போலவே.

(இ-ள்.) தேவர்களாகிய மலாயிக்கத்து மார்களுக்கு அவ்வாறு இனிமையான வார்த்தைகளைக் கூறியபின்னர், வீரத்தைக்கொண்ட

ஆண்சிங்கங்களைப்போன்று மிகவும் விரைவில் தம்மவர்களாகிய வரத்தினைக்கொண்ட வலிமையையுடைய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களுடன் உமறுகத்தாப் றலியல்லாகு அன்கு அவர்களும், உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களும், அலிறலியல்லாகு அன்கு அவர்களும், வந்துசேர்ந்தார்கள் (ருரு

காரண மெனும்பல கலன்க டாங்கிமே
லாரண வெற்றிவெள் ளலங்கள் சூடியோர்
வீரவே லெனுவங்கதிர் பிசுமி லேந்தினற்
பூரண மதியெனப் புறப்பட் டாரரோ.

(இ-ள்.) அவ்வாறு வந்து சேரவே காரணமென்றுசொல்லாநிற்கும் பல ஆபரணங்களைத் தரித்து அதனப்பால் வேதமாகிய வெள்ளிய வெற்றிமாலைசூடி ஒப்பற்ற பிஸ்மிலென்னும் பிரகாசத்தைக்கொண்ட வீரம்பொருந்திய வேலாயுதத்தைத் தாங்கி நல்ல பூரணச்சந்திரனைப்போல அவ்விடத்தைவிட்டும் ஹபீபரசனின் சபையை நாடிப் புறப்பட்டார்கள். (ருசு)

தீனெனுங் கொடிமுக னிறுத்திச் செவ்விய
மானெனு மதகரி மருங்கு சூழ்வரப்
பானல னெனுங்கலி மாப்ப ரந்திடத்
தானவ னருளெனுந் தானை முன்செல.

(இ-ள்.) அன்றியும், தீனுல் இஸ்லாமென்னுங்கொடியைமுதன்மையாக நிற்கும்படி செய்து அழகிய ஈமானென்னும் மதத்தினைக்கொண்ட யானையானது பக்கத்திலே சூழ்ந்துவரவும், பாலினது சுவை யென்னும்படியான மதுரத்தையுடைய கலிமாவானது எவ்விடமும் பரந்திடவும். தானவனை ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் கிருபையென்னும் சேனையானது முன்னே செல்லவும். (ருஎ)

மூதுரை யென்னுந் தீன்தீன் முகம்மதென்
றோதிய பெருமுர சொலிப்ப நால்வரு
மாதித னமரு மணிய தாய்வர
வீதியி னடந்தனர் வேத வீரத்தார்.

(இ-ள்.) மூதுரையென்று சொல்லாநிற்கும் தீன்தீன் முகம்மதென் றோதப்பெற்ற பெரிய முரசமானது சத்திக்கவும், அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு முதலிய அந்நால்வரும் அல்லாகுசுபுகா

ளகுவத் ஆலாவின் அமரார்களான மலாயிக்கத்துமார்களும் வரவும் வேதவலிமையையுடைய நமது நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வீதியின்கண் நடந்துசென்றார்கள். (ருஅ

அடனபி வருவது கேட் டபூஜகு
லுடலுயிர் மனமறி வொடுங்கி யெவ்வண
முடிவதோ வெனத்திமஸ் கிறைமுன் னேகியோர்
வடிவுறுங் கவிதையின் வாழ்த்திச் சொல்லுவான்.

(இ-ள்.) வலிமையையுடைய நமது நாயகம் நபி முகம்மது முஸ் தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்வாறு வருவதை அபூஜகி லென்பவன் கேள்வியுற்றுத் தனது உடல், உயிர், மனம், அறிவு ஆகிய நான்கும் ஒடுங்கப்பெற்றுஎவ்விதம்முடியுமோ?என்று திமஸ்கு நகரத்தினது அதிபதியாகிய ஹபீபென்பவனின் முன்பாய்ச் சென்று ஒப்பற்ற அழகுபொருந்திய பாட்டினால் அவ்வரசனைத்துதி த்துச் சொல்லத் தொடங்கினன். (ருசு)

மறைதெரி யறிவன்மா லீக்குசெய்தவ
முறைதர வுருவெடுத் துதித்த தீபமே
குறைபடாப் பெருக்குலங் காக்குங் கொற்றவ
நிறைபட வுலகினைப் புரக்கு நேமியோய்.

(இ-ள்.) முன்னுள்ள வேதங்க ளனைத்தையும் கற்றுணர்ந்தஅறி வினையுடையவனான மாலிக்கென்பவன் செய்த தவங்களெல்லாம் தங் கும்படி சொரூபமெடுத்து இவ்வுலகத்தின்கண் தோற்றமாகிய விளக் கமே! குறையாத இப்பெரிய கூட்டத்தைக்காக்காநிற்கும்வெற்றியை யுடைய அரசனே இவ்வுலகத்தைப் பூரணமாய் அரசாட்சி செய்யும் ஏகச்சக்கிராதிபதியே! (சுO)

மருப்பொதி முகம்மது வாக்கி னுற்றின
முரைப்பது படிறலா லுண்மை யில்லைபா
னிரைத்தடர் வஞ்சனை நிறுத்தி யாரையு
மொருப்பட மாயத்து ளொடுக்கி னனரோ.

(இ-ள்.) வாசனையினால் பொதியப்பெற்ற அந்த முகம்மதென்ப வன் பிரதிதினமும் தனது வாக்கினால்சொல்லப்பட்டவையனைத்தும் பொய்யேயல்லாமல் மெய்யல்ல. அன்றியும்; நெருங்கிய கபடவார்த் தைகளை வரிசையாக நிற்கும்படி செய்து எல்லாரையும் ஒருமையாய் அவனது மாயத்தினகம் ஒடுக்கிவிட்டச் செய்தான். (சுக

வஞ்சனை யாகிய வலையி னுட்படு
நெஞ்சரல் லானெறி நிலைநின் றாரிலை
வெஞ்சமர்க் கவனொடும் வீரம் போக்கிநின்
றஞ்சின ரலதெதிர்ந் தவரு மில்லையால்.

(இ-ள்.) அன்றியும், அந்த முகம்மதென்பவனின் கபடமாகிய வலையினகம் சிக்கிக்கொள்ளும் மனத்தையுடையவர்களே யல்லாமல் சன்மார்க்கத்தினது நிலைமையில் நின்றவர்கள் ஒருவருமில்லர். கொடியபகைத்தொழிலுக்கு அவனோடும் எதிர்த்துத் தங்களினது வீரத்தையிழந்து நின்று பிரமித்தார்களே யல்லாமல் எதிர்த்து நின்றவர்களுமில்லர். (௬௨)

வருந்திட முகம்மதின் மாய வெள்ளமே
பரந்ததி லமிழ்ந்துமுன் பரிவிற் றாங்குநற்
கருந்தவ மரக்கல மாக வந்திவ
ணிருந்தனை மார்க்கமு மிறந்த தில்லையால்.

(இ-ள்.) அன்றியும். அந்த முகம்மதென்பவனின் மாயமாகிய நீர்ப்பெருக்கானது யாவர்களும் வருந்தும் வண்ணம் எவ்விடமும் பரவி அவ்வெள்ளத்தில் நாங்களனைவரும் மூழ்கிப்போகுமுன்னர் அன்போடும் எங்களைத் தாங்கும்படியாக அருமையான தவத்தைக் கொண்ட மரக்கலத்தைப்போலும் வந்து இவ்விடத்திலிருந்தாய். ஆதலால் இனி நமது மார்க்கமும் இறவாது. (௬௩)

நிரைதிரைக் கடற்படை நிரப்பி நாமிது
வரையினு மிவணிடை வருவ தில்லையா
விருநில மாந்தர்க ளியாருஞ் சூறையிற்
சொரிதரு பூளையொத் திடுவர் சொல்லினே.

(இ-ள்.) மேலும், இவ்விடத்தில் இதுவரையிலும் நாம் வரிசையைக்கொண்ட அலைகளையுடைய சமுத்திரத்தை யொத்த சேனைகளை நிரப்பிக்கொண்டு வந்ததில்லை. இக்காலத்தில் இவ்விதம் வந்ததைப் பற்றிக் கூறுங்கால் பெரிய இவ்வுலகத்தின் கண்ணுள்ள ஜனங்கள் யாவர்களும் நம்மோடெதிர்த்தாலும் சூறைக்காற்றில் சொரியப்பட்ட பூளைக்கு நிகராவார்கள். (௬௪)

நவிபல புதுமையி னபிகள் வேடமா
யினமொடு வருகுவ னியாவ ராயினு

மனமலேத் திடமொழி வளர்ப்பன் மெய்யெனக்
கனவினு மனதினிற் கருதல் காவலோய்.

(இ-ள்.) அன்றியும்; அரசே! அந்த முகம்ம தென்பவன் மிகுந்த பலவிதமான புதுமைகளையுடைய ருஷிமார்களின் வேடத்தைத் தரித்துக்கொண்டு தனது இனத்தார்களுடன் வருவான். யாவராயினும் தனது மனமானது பிரமிக்கும்படி அதிகமாய் வசனிப்பான். அவைகளைக் கனவிலாயினும் உண்மையென்று மனசின்கண் நினைக்கலாகாது. (௬௫)

அடுத்துறைந் தபூஜகு லளவி லாதசொல்
லெடுத்திசைத் திடத்திமஸ் கிறைவன் கேட்டுளங்
கடுத்திலன் களித்திலன் கவிதை யாற்சில
தொடுத்துரை யெடுத்தவை யெவர்க்குஞ் சொல்லுவான்.

(இ-ள்) அபூஜகி லென்பவன் அவ்வாறு சமீபித்திருந்துகொண்டு அளவில்லாத வார்த்தைகளை எடுத்துக்கூறவே; அவைகளைத் திமஸ்கு நகரத்தினது மன்னவனான ஹபீபென்பவன் தனது காதுகளினால் கேள்வியுற்று மனசின்கண் கோபித்திலன், அல்லது மகிழ்ந்திலன், பாட்டினால் சிலவார்த்தைகளை வரிசையாயெடுத்து அங்கு கூடியிருந்த சபையின ரனைவருக்கும் கூறத்தொடங்கினன். (௬௬)

தன்றுணைத் தவத்தினர் தீயர் தன்மையிற்
குன்றிலர் நாடொறுங் குளத்தைப் பல்லுறத்
தின்றிடி லிரதமே செனிக்கு மியாவரு
மென்றிடி லினியவை வேம்புக் கில்லையால்.

(இ-ள்.) தனது துணையாகிய தவத்தை யுடையவர்களும் தீமையையுடையவர்களும் தத்தந் தன்மையில் நின்றுங் குன்றினவர்களல்லர். பிரதிதினமும் சர்க்கரையைப் பற்களிற் பொருந்தும் வண்ணம் அருந்தினாலும் அதனால் இன்பமே யுண்டாகும். யாவரும் சாப்பிட்டாலும் அவ்வித இனிமையான குணமானது வேம்புக்கில்லை. (௬௭)

பொய்மையோர் நொடிவரைப் பொழுதிற் றீர்ந்திடு
மெய்மைசூழ் கடலினும் விளங்கித் தோன்றுமாற்
கைமத கரியினைக் கருப்பை மாய்த்திடா
துய்மதிப் பெரியவ ருளத்திற் காண்பரால்.

(இ-ள்,) அன்றியும், பொய்மையானது ஓர் நொடிப் பொழுதில் இல்லாமல் அழிந்துபோகும், மெய்மையானது உலகத்தைச் சூழ்ந்த

ச்முத்திரத்திலும் பிரகாசித்து விளங்கா நிற்கும். கரிய எலியானது தும்பிக்கையினையுடைய மதத்தைக்கொண்ட யானையைக் கொல்லாது. பெரியோர்கள் தாங்கள் பிழைத்துக்கொள்ளும் புத்தியைத் தங்கள் மனசினாலேயே அறிந்து கொள்ளுவார்கள். (௬௮)

வஞ்சனைக் கிழ்மையோர் மாயக் காரண
மெஞ்சலி லுளதில தென்னத் தோன்றிடு
மஞ்சலி லிறைவன்றூ தவர்கள் காரணம்
விஞ்சையன் றுலகெலாம் விளங்க நிற்குமால்.

(இ-ள்.) மேலும், கபடத்தொழிலையுடைய புல்லர்களின் மாயத்தைக் கொண்ட காரணங்களானவை குறைவின்றி சத்தியம் அசத்தியமென்ன தெரிந்துவிடும். ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவினது அச்சமற்ற தூதுவர்களான றசூல்மார்களின் காரணமானது விஞ்சையல்ல. எல்லா லோகங்களிலும் பிரகாசிக்கும்படி நிலையாய் நிற்கும். ()

தூயவன் மறைவழித் தூதர் செய்கையு
மாயமந் திரத்தவர் வழக்கின் வண்ணமு
நேசமு மும்மறை நிகழ்ந்துங் கேள்வியி
னுயுநல் லறிவினு மறிவ தாகுமால்.

(இ-ள்.) பரிசுத்தத்தையுடையவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் வேதநெறியில்வந்த றசூல்மார்களின் செய்கைகளும்; மாயமாகிய மந்திரத்தைக் கொண்டவர்களின் வழக்கினது தன்மையும், அவர்களின் நேசமும், முன்னுள்ள மூன்றுவேதங்கள் கூறிய கேள்வியினாலும், ஆராயுகின்ற நமது நல்ல அறிவினாலும் அறியக்கூடும்.

வரியளி மலர்த்தடத் திமஸ்கு மன்னவன்
குருநெறி முகம்மது கொண்ட பெற்றியை
யெரிகதிர் படுமுன மிற்றைப் போதினிற்
றெரிவதுண் டெனப்பல கவியிற் செப்பினான்.

(இ-ள்.) அன்றியும், இரேகைகளைக்கொண்ட வண்டுகளினது புஷ்பத்தடாகங்களையுடைய திமஸ்குநகரத்தின் அதிபதியாகிய ஹபீபென்பவன் குருமார்க்கத்தை வகித்த முகம்மதென்பவன் கொண்டிருக்கும் தன்மையை இன்றையப்பொழுதிலேயே பிரகாசியாநிற்கும் சூரியனானவன் அஸ்தமனமாகும் முன்னர் தெரிந்துகொள்ளும் மார்க்கமானது உண்டுமென்று பாட்டினாற் கூறினான். (எக)

செவியினு முளத்தினுங் காயத் தீயசொல்
லபுஜகு லுரைத்ததுந் திமஸ்கி னுதிபன்
கவியினிற் சொற்றதுங் கேட்டுக் கல்வியின்
மவுலுவர் குரிசின்முத் தலிபு மைந்தரே.

(இ-ள்.) குரிசிலாகிய அப்துல் முத்தலிபென்பவரின் புத்திர ரத்தினமான அபீத்தாலிபென்பவர் செவியின் கண்ணும் மனசின் கண்ணும் சுடும்படியாக அபூஜகிலென்பவன் கூறிய கொடியவார்த்தைகளையும், திமஸ்கு நகரத்தினது மன்னவனான ஹபீபென்பவன் பாட்டினால் சொன்னவைகளையும், தமது காதுகளினாற் கேள்வியுற்றுத் தாமும் அறிவோடும் சொல்ல ஆரம்பித்தார். (எஉ)

அறிவினிற் குணத்தினி லெவர்க்கு மன்பினிற்
பொறுமையி னன்னெறிப் புகலிற் செய்கையிற்
றிறன்முகம் மதினொடு முவமை செப்புதற்
குறுபவ ரெவருமிவ் வுலகி லில்லையால்.

(இ-ள்.) அறிவிலும் குணத்திலும் யாவர்களிடத்தில் வையாநிற்கும் அன்பிலும் பொறுமையிலும் நல்ல சன்மார்க்கங்களைப் போதிப்பதிலும் அதன்வண்ணம் செய்வதிலும் வலிமையைக்கொண்ட அந்த முகம்மதென்பவரோடு உவமைசொல்லுவதற்குப் பொருந்தியவர்கள் இவ்வுலகின்கண் ஒருவருமில்லர். (எங)

மைதருங் கவிகையின் வள்ளல் வாக்கினிற்
பொய்யெனப் பிறந்தசொற் புகல்வ தில்லையாற்
கைதவச் சூனியங் கற்று மந்திரஞ்
செய்பவ ரிடத்தினுஞ் சேர்ந்த தில்லையால்.

(இ-ள்.) அன்றியும், மேகங்களானவை கொடாநிற்கும் குடையினையுடைய வள்ளலான அந்த முகம்மதென்பவர் பொய்யென்று தோற்றமுற்ற வார்த்தைகளைத் தமது வாக்கினாற் கூறுவதேயில்லை. பாவத்திற் கேதுவான மாயவித்தைகளைப் படித்து மந்திரஞ் செய்பவர்களிடத்தில் சேர்ந்ததுமில்லை. (எச)

பெற்றனன் வளர்த்தனன் பிறந்த நாட்டொடுத்
திற்றைநாள் வரையினு மெவரோ டாயினும்
வெற்றிகொண் டிணங்குதல் விருப்ப மல்லது
குற்றமென் றொருமொழி குறித்த தில்லையால்.

(இ-ள்) அன்றியும், எனது தம்பி பெற்றுன். நான் வளர்த்தேன் அவர் பிறந்தநாள் முதல் இந்நாள் பரியந்தம் எவரோடாயினும் வெற்றிகொண்டு நேசிப்பது அவருக்கு விருப்பமேயல்லாது குறுமென்று ஒருவார்த்தையாயினும் அவர் கூறினது கிடையாது. (எரு)

பிறபல மொழியினைப் பிதற்ற லென்கொலோர்
சிறுநொடிப் பொழுதிவண் சேர்வர் கண்களாற்
றிறனுறக் கண்டவர் செப்புஞ் செய்தியு
மறிகவென் றெடுத்தபித் தாலி போதினர்.

(இ-ள்.) ஆதலால் பலவாகிய மற்ற வார்த்தைகளை எடுத்துப் பிதற்றிப்பேசுவதில் என்னபிரயோஜனம்? ஒன்றுமில்லை. சிறிய ஒரு நொடிப்பொழுதில் அந்த முகம்மதென்பவர் இவ்விடம் வந்துசேர்வார். உங்கள் இருகண்களினலும் அவரை வலிமைபோடும்பார்த்து அவர்கூறும் வர்த்தமானங்களையும் அறிவீர்களாக என்று அபீத்தாலிபென்பவர் எடுத்துச் சொன்னர். (எசு)

இவ்வணம் பலமொழி நிகழு மெல்லையின்
மைவணக் கவிகையர் மெய்யின் மான்மத
மவ்வவைக் குற்றது தாக முன்னமே
செவ்விநன் னெறித்திமஸ் கிறைமுன் சென்றதே.

(இ-ள்.) இவ்விதமாகபலசமாச்சாரங்கள் நிகழா நிற்கும் சமயத்தில் அழகிய மேகக்குடையை யுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் காத்திரத்தின் கண்ணுள்ள கஸ்தூரி வாசனையானது முதலில் அவர்கள் கூடியிருக்கும் அக்கூட்டத்தினுக்குத் தூதாய் அழகிய நல்ல சன்மார்க்கத்தையுடைய திமஸ்கு நகரத்தினது அதிபனை ஹபீபென்பவனின் முன்னற் போய்ச் சேர்ந்தது. (எஎ)

திசைகதிர் தரநபி நடந்து தீனென
வசையறும் புகழுபுல் காசி மன்னனுக்
கிசைதரா மருவல ரிதயம் போலநின்
றசைதருங் கொடிமதிள் வாயி லாயினர்.

(இ-ள்.) எத்திசையும் தீனென்று கூறப்பட்ட பிரகாசத்தைத் தரும் வண்ணம்நபிறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நடந்து குற்றமற்ற கீர்த்தியையுடைய இந்நூலினது கொடை நாயகனை அ

பூல்காசிமென்னு மரசனுக்குச் சம்மதப்படாத சத்துரர்களின் உள்ளத்தைப்போல நின்று அசையா நிற்கும் கொடிகளையுடைய கோட்டைமதிளின் வாயிலிலானார்கள். (எஅ)

மெய்யொளி பரப்பிட விரிந்த வாயிலின்
மையலங் கடகரித் திரளும் வாசியும்
பெய்கழற் சேனையு நீக்கிப் பெட்புறத்
துய்யவன் றிருமறைத் தூதர் தோன்றினர்.

(இ-ள்.) அவ்வாறாயின, பரிசுத்தனான அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் தெய்வீகந்தங்கிய புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது தூதுவரான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தங்கள் சரீரமானது எவ்விடத்திலும் பிரகாசத்தைப் பரவும்படிசெய்ய விரிந்த அக்கோட்டை வாயிலின்கண் மயக்கத்தினது மதத்தைக் கொண்ட அழகிய யானைக் கூட்டங்களையும் குதிரைகளையும் வீரக்கழல்செறித்த காலாட்படைகளையும் விடுத்துப் பெருமையோடும் பிரசன்ன மானார்கள். (எகூ)

மான்மதங்கமழ்ந்திரு மருங்கு மெய்யெழில்
பான்மதிக் கதிரொளி பரப்ப வந்தநந்
நான்மறைக் குரிசிலைக் கண்டு நண்பொடுந்
தேனவிழ் தொடையலா னெதிரிற் சென்றனன்.

(இ-ள்.) கஸ்தூரி வாசனை கமழ்தலுற்று இருபக்கங்களிலும் சரீரத்தின் அழகானது வெள்ளிய சந்திரக்கிரணங்களைப்போலப் பிரகாசத்தைப் பரவும்படி செய்ய; அவ்வாறு அங்கு பிரசன்னமான தௌராத்து, இஞ்சீல், சபூர், புறுக்கானென்னும் நான்கு வேதங்களுக்கும் அதிபராகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நறவமான தொழுகப்பெற்ற மலர்மாலையையுடைய ஹபீபென்பவன்பார்த்து அன்போடும் எதிரிற்போனான்.

அணிதிமஸ் கிறைபெருந் தெதிரி னன்பொடு
மணியொளி முகம்மதை மருங்கி ருத்திநற்
பணிவிடை யொடும்பல பகர்ந் தடிக்கடி
தணிவிலா மகிழ்மொழி சார நோக்கினன்.

(இ-ள்.) அவ்வாறு போன அழகிய திமஸ்கு நகரத்தினது அதிபனான ஹபீபென் பவன்எழும்பி அன்போடும்முத்தொளிவாகியநாய

கம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை எதிராய்ப் பக்கத்தில் இருக்கும்படி செய்து நல்ல பணிவிடைகளுடன் அடிக் கடி பலவார்த்தைகளைக் கூறிக் குறையாத மகிழ்ச்சியைத் தருகின்ற அவர்களின் வார்த்தைகளைப் பொருந்தும் வண்ணம் பார்த்தான். ()

மருங்கினி லிருத்திமா லீக்கு தன்மக
னிருங்குழு நாப்பணி னிருப்பக் காபிர்க
ளொருங்குற நோக்கியுள் ளுடைந்து மாமுகம்
பெருங்குகை வங்மொத் தழுங்கிப் பேசுவார்.

(இ-ள்.) மாலீக்கரசனின் மகனான ஹபீபென்பவன் நாயகம் நபிறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை அவ்வாறு பக்கத்தில் இருக்கும்படி செய்து அங்கு கூடியிருக்கும் பெரிய கூட்டத்தினது மத்தியில் இருக்கவே காபிர்களி யாவரும் ஒருமித்துப்பார்த்து மன வருத்தமுற்று மகத்தாகிய தங்களின் முகங்கள் பெரிய குகையில் வைத்து உருக்காநிற்கும் ஈயத்தைநிகர்த்து வருந்திப் பேசத்தொ டங்கினார்கள். (அ௨)

கன்னலங் கழனிசூழ் திமஸ்குக் காவல
னின்னண மெழுந்தெதி ரிறைஞ்சிப் போந்தனன்
முன்னமியா னினைத்தவை முடிவ தென்கொலென்
றன்னவர் சஞ்சலித் தவல முற்றனர்.

(இ-ள்.) அன்றியும், அழகிய கரும்புகளையுடைய வயல்களான வை சூழப்பெற்ற திமஸ்கு நகரத்தினது மன்னவனான ஹபீபென்ப வன் இப்பொழுதே எழும்பி அந்தமுகம்மதென்பவனுக்கு எதிராய்ச் சென்று வணங்கினான். இனி நாம் ஆதியில் கருதியகாரியங்கள் நிறை வேறுவது எவ்விதமென்று அந்தக் காபிர்கள் துக்கித்து அவலமுற் றார்கள். (அ௩)

திருந்திலாக் காபிர்கள் சிந்தை நொந்தவ
ணிருந்ததும் ஹபீபுட னபியி ருந்ததும்
பொருந்துறக் கண்டுபொற் புரிசை சூழ்தர
வருந்திமஸ் கவர்சில வசனங் கூறுவார்.

(இ-ள்) செவ்வைப்படாத அந்தக் காபிர்கள் அவ்வாறு சிந்தை யானது வருந்தப்பெற்று அவ்விடத்தில்தானே இருந்ததையும், ஹபீ பாசனோடு நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலை கிவசல்லமவர்க ளிருந்ததையும், பொன்னினாலான கோட்டை மதில்

கள் சூழ வராநிற்கும் திமஸ்கு நகரத்தை யுடையவர்கள் பொருந்து ம்படி பார்த்துச் சில வார்த்தைகள் சொல்லத் தொடங்கினார்கள். ()

நிலத்தினிற் சுவடில நிழலுந் தோன்றில
கலந்துமெய் பொலிவொடு நறைக மழ்ந்தன
சலந்தரு கவிகையொன் றெழுந்து சார்ந்தன
குலந்தரு மனுவல ரென்னக் கூறுவார்.

(இ-ள்) இந்த முகம்ம தென்பவருக்குப் பூமியின்கண் பாதங்கள் தோய்கநில்லன. சரீரத்தினது சாயலையும் காணவில்லை. காத்திர ப்பிரகாசத்தோடு கஸ்தூரி வாசனையானது கலந்து எவ்விதத்திலும் சுமழ்கின்றது. மேகங்களானவை கொடாநிற்கும் ஒப்பற்ற குடையானது எழும்பி ஆகாயத்தின்கண் வந்தது. ஆதலால் இவர் மேன்மையைத் தருகின்ற மானிடரல்லரென்று சொல்லுவார்கள். (அரு)

சலி நிலைத்துறை

அருளி னோக்கமு மமுதுகு வசனமு மழகா
யிருளி லாதமெய் யவயவத் தாசிலக் கணமுந்
தெருளுங் கல்வியும் பொறுமையு நிறைந்தவிச் சேயை
மருவி லாதள விடற்கரி தெனச்சிலர் மதிப்பார்.

(இ-ள்.) சில ஜனங்கள் கிருபையைக்கொண்ட பார்வையும் அமிர்தமானது சிந்துகின்ற வார்த்தைகளும், அந்தகாரமற்ற அழகுபொருந்திய சரீரத்தினது அவயவங்களின் குற்றமற்ற இலக்கணங்களும், தெளிவும், அறிவும், பொறுமையும் பூரணப்பட்ட இவரைச் சாராது அளவிட் டறிதற்கரிதென்று தங்களின்மனசின்கண் மதிப்பார்கள், ()

இறைவன் றூதுவ ரென்றது மிறைதிரு வசன
மறையி றங்கிய தென்றது மார்க்கமென்றதுவு
நிறையும் வாக்கினிற் றெரிவது நிகரிலிந் நகரா
ரறையும் வாசகம் படிறெனச் சிலரெடுத் தறைவார்,

(இ-ள்.) சில ஜனங்கள் இந்த முகம்மதென்பவர் நான் இறைவனான ஜல்லஷகுன குவத்த ஆலாவின தூதுவராகிய றசூல்றென்று சொன்னதும், அவ்விறைவனான அல்லாவினது தெய்வீகம்தங்கியவசனமாகிய புறுக்கானுல் அலீமென்னும் வேதமானது எனக்கு இறங்கிற்றென்று சொன்னதும், தீனுல் இஸ்லாமென்னும்மார்க்கமானது எனது மார்க்கமென்று சொன்னதும், பூரணப்பட்ட இவரினது வா

யே தெரியக்கூடியது. ஒப்பற்ற இந்த மக்கமாநகரத்தினது மனுஷி யர்கள் கூறும் வார்த்தைகளானவை பொய்யென்று எடுத்துச்சொல் லுவார்கள், (அஎ)

மதியி லாமனத் தபுஜகல் வரைந்தபத் திரத்துக்
கிதய நேர்ந்திவண் வந்தன மிவன்மொழி கேட்கி
லதிக பொன்னுல கிழந்துபாழ் நரகடை வதலாற்
பதியி னல்லறி விலைநமக் கெனச்சிலர் பகர்வார்,

(இ-ள்.) சிலஜனங்கள் அறிவற்ற அகத்தையுடைய அபூஜகி லென்பவன் எழுதி அனுப்பிய நிருபத்திற்குநாமனைவரும் மனமொ த்து இவ்விடத்தில்வந்து சேர்ந்தோம். நாம் இவனது வார்த்தைகளை கேட்போமாயின் மேலாகிய சொர்க்கலோகத்தை நமக்கில்லாமற் செய்து பாழாகிய நரகலோகத்தில்போய்ச் சேருவதுமல்லாமல் இவ் வுலகத்தின்கண்ணும் நமக்கு நல்லஅறிவானதில்லையென்றுசொல்லு வார்கள். (அஅ)

பத்தி ரத்தினுற் கடிதினிப் பதியடைந் திவர்த
முத்த ரத்தினுக் கொழுகியுற் பவிபவந் துடைத்து
முத்தி யெய்துதற் கெழுகிய முதல்விதி யியற்றுஞ்
சித்தி ரத்திற னிஃதெனச் சிலரெடுத் திசைப்பார்.

(இ-ள்.) சில ஜனங்கள் இவ்வித நிகழ்ச்சியானது விரைவாய் அபூஜகி லென்பவன் எழுதி அனுப்பும் நிருபத்தினுல்நாமனைவரும் இந்த மக்கமா நகரத்தில் வந்து சேர்ந்து இந்த முகம்மதென்பவரின் உத்திரத்திற்கு வழிப்பட்டு நடந்து நம்மிலுண்டான பாவங்களை இல் லாமற்செய்து மோட்சமடைவதற்கு வரைந்த முதன்மையான கற் பனையையுண்டாக்கும்அழகியதிறனென்றுஎடுத்துச்சொல்லுவார்கள்

கண்ப டைத்தவ ரிவரெழிற் காண்பவர் முகத்திற்
புண்ப டைத்தவ ரிவர்தமைக் காண்கிலர் புதியோன்
பண்ப டைத்தசொன் மறைநபி பதம்பணி யாதார்
மண்ப டைத்திற் படைப்பல ரெனச்சிலர் வகுப்பார்.

(இ-ள்.) சில ஜனங்கள், முகத்தில் கண்களைப் படைக்கப்பெற்ற வர்கள் இந்த முகம்மதென்பவரின் அழகைப் பார்க்கப்பட்டவர்கள். புண்களைப் படைக்கப்பெற்றவர்கள் இவரைப் பாராதவர்கள் அன்றி யும் புதிய ஆலத்தினையுடைய அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின்

கெத்தை உண்டாக்காநிற்கும் வார்த்தைகளையுடைய புறக்கானுல் அலீமென்னும் வேதத்தைப்பெற்ற நபிபாகிய இவரின்திருவடிகளில் வணங்காதவர்கள் இவ்வுலகத்தின்கண் மானிடராகப் படைக்கப்பட்டதில் ஒரு படைப்பானவர்க ளல்லரென்று சொல்லுவார்கள். (௬0)

அண்டர் நாயக முகம்மதின் காரண மனைத்துங்
கண்டு நல்வழி யொழுகிப்பொன் னுலகுகை விலையாய்க்
கொண்டு போவதற் கடைந்தன மெனச்சிலர் குழுமி
விண்டு மெய்புள கெழக்களிப் பொடும்விரித் துரைப்பார்.

(இ-ள்.) சில ஜனங்கள் கூடி தங்கள் சரீரங்களில் புளகமெழும் வண்ணம் மகிழ்ச்சியோடும் தேவர்களுக்கெல்லாம் நாயகரான இந்த முகம்மதென்பவரின் காரணங்க ளெல்லாவற்றையும் நமது கண்களினுற் பார்த்து நல்ல சன்மார்க்கத்தில் நடந்து சொர்க்கலோகத்தைக் கைவிலைபாய்ப் பெற்றுத் திரும்பி நமதூர் போவதற்காக இங்குவந்து சேர்ந்தோமென்று விரிவாய்த் தங்கள் வாய்களைத் திறந்து சொல்லுவார்கள். (௬௧)

உறுதி யாகம தரசபு ஜகுலுரை கேட்டு
மறுகும் வெம்பகை விளைத்திடி லனைவரு மதியா
தறுதி யீதென வரசுட னபுஜகல் தனையுங்
தெறுத லேதுணி வெனச்சிலர் தெளிந்துசெப் புவரால்

(இ-ள்.) சில ஜனங்கள் நமது அரசனுகிய ஹபீபென்பவன் அபூஜகிலினது வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு யாவர்களும் மறுகாநிற்கும் கொடிய பகையை உண்டாக்குவானேயாயின் திண்ணமாக நாமனைவரும் அவ்வாசனை மதித்தல் செய்யாது இதுவேமுடிவென்று சொல்லி அவ்வரசனேடு அவ்வபூஜகி லென்பவனையும்கொல்லுதலே துணிவாகுமென்று தெளிவுற்றுச் சொல்லுவார்கள். (௬௨)

முகம்ம துதமக் கிடர்செயத் திமஸ்குமன் னவனுஞ்
செகத லத்துறை மன்னவ ரடங்கலுஞ் சினந்தே
யிகல்பொ ரத்துணிந் தெதிரினு மிருங்கதிர்ப் பனிபோ
லகல்வ தல்லது முடிவதில் லெனச்சில ரறைவார்.

(இ-ள்,) சில ஜனங்கள் இந்த முகம்மதென்பவருக்குத் துன்பஞ் செய்வதற்காகத் திமஸ்கு நகரத்தினது அதிபனுன ஹபீபென்பவனும் இவ்வுலகத்தின்கண் தங்கிய மற்றும் அரசர்க ளெல்லாவரும்

துணிவுற்றுக் கோபித்து யுத்தஞ் செய்வதற்காய் எதிர்த்தாலும் அவ்வெதிர்ச்சியானது பெரிய சூரியனெதிரிற்பட்ட பனியைப்போலநீங்கிப்போகுமேயல்லாது நிறைவேறுவ தில்லையென்றுசொல்லுவார்கள்

ஈத லாற்சில வுரைபிறர் தரத்திமஸ் கிறைவன்
காத லான்முகம் மதுதிருக் கவின்முக நோக்கி
மூது ரைத்தெளி வினுமறை யினுமுதிர் மொழியாய்ப்
போத ரத்தொடும் புகழொடு மிதத்தொடும் புகல்வான்.

(இ-ள்.) இஃதல்லாமல் இன்னஞ் சில வார்த்தைகளை மற்றவர்கள் கூறத் திமஸ்கு நகரத்தினது மன்னவனுனஹபீபென்பவன் ஆசையோடும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் தெய்வீகம் தங்கிய அழகிய முகத்தைப்பார்த்து முதிய வசனங்களினது விளக்கத்தாலும் வேதத்தாலும் முற்றிய வார்த்தையாகபோதரத்துடனும் கீர்த்தியுடனும் இனிமையுடனும் சொல்லத் தொடங்கினன். (சுஈச)

வரிசை ஹாஷிமென் குலத்தினி லுதித்த மாமணியே
தருமலர்ப்புய அப்துல்லா தருதிரு மகவே
யிருநிலத்தவர்க் கிசைந்திட வெனதுளத் திருந்த
வுரையி னிற்சில கேட்டியென் றினிதெடுத் துரைப்பான்.

(இ-ள்.) சிறப்பினைக்கொண்ட ஹாஷிமென்று சொல்லாநிற்கும் குலத்தின்கண் தோற்றமான மகத்தாகிய இரத்தினமே! புஷ்பமாலையைத் தருகின்ற தோள்களையுடைய அப்துல்லா வென்பவரால் இவ்வுலகத்தின்கண் தரப்பெற்ற தெய்வீகம் தங்கிய புத்திரரே! பெரிய இந்தப் பூலோகத்தினிடத்துள்ள மானுஷீகரனைவருக்கும் பொருந்தும் வண்ணம் எனது இருதயத்தின்கண் இருக்கப்பெற்ற வார்த்தைகளில் சில்வற்றைக் கேட்பீர்களாகவென்று இனிமையோடும் எடுத்துச் சொல்லத் தொடங்கினன். (சுஈரு)

தந்தை தாய்தமர் தம்வழி யொழுகிலா தனவு
மெந்த னுபக னொருவனுண் டென்றது மெழிலா
யந்த நாளையின் வருங்குப லினைப்பழித் ததுவும்
வந்த தென்றனக் கருமறை யெனவகுத் ததுவும்.

(இ-ள்.) நமது பிதா, மாதா, பந்துக்களின் மார்க்கத்தில் வழிப்பட்டு நடவாததும், எமது நாயகனுன கடவுளொருவனுண்டென்று

சொன்னதும், ஆதிகாலத்திலேயே அழகாய்வந்த குபலென்னும்நம்து தம்பிரானை நிந்தித்ததும், எமக்கு அருமையானபுறுக்கானுல்அலீமென்னும் வேதம் வந்ததென்று சொன்னதும். (சுசு)

நபியு நானலா லினியிலை யெனநவின் றதுவும்
புவியு ளோர்க்கெலா மொருகலி மாவெனப் புகன்று
செவிசு டச்சுட வுரைத்ததுங் குலத்தொடு தினமுந்
தவிர்கி லாப்பகை கொண்டதுந் தகுவதன் றுமக்கே.

(இ-ள்,) இவ்வுலகத்தின்கண் நபியும் நானல்லாமல் இனி நபியாய் வரப்பட்டவர்களொருவருமில்லரென்று சொன்னதும் பூமியின்கண்ணுள்ள மானுஷீக ரனைவருக்கும் ஓரே கலிமாவென்று அவர்களின் காதுகளானவை மிகவும் சுடும்வண்ணம் விளம்பி கூறியதும், நிதமும்குடும்பத்தோடு ஒழியாத பகையைக் கொண்டதும். உமக்குத் தகுவதல்ல. (சுஎ)

இன்ன வாசகங் கூறநம் மிறையவன் றூதாய்
மன்னு நன்னபி மார்க்குறுந் தொழின்முதன் மறையோர்
சொன்ன சொற்படி பெரியர்க்குஞ் சிறியர்க்குந் தோன்ற
முன்னி லைப்படி மிகுதிகா ரணங்களை முடிப்பார்,

(இ-ள்.) ஆனல், இப்படிப்பட்ட வார்த்தைகளை வெளியிற்பேசுவதற்கு நமது இறைவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் றசூலாய்ப் பொருந்தும் நல்ல நபிமார்களுக்கு உற்ற தொழிலாகிய பழைய வேதங்களை யுடையவர் கூறிய வார்த்தையின்வண்ணம்பெரியோர்களுக்கும், சிறியோர்களும் விளங்க முன்னுள்ள நிலைமைப்படி அனேககாரணங்களைச் செய்து முடிப்பார்கள். (சுஅ)

இறந்த பல்லுயி ரனைத்துமுற் பிரளய மதனி
லிறந்தி டாவகை நூகுநன் னபியினி தளித்தார்
நிறந்த ரூஇயிபு ருஹிநன் னபியொரு நெருப்பைச்
சிறந்த மென்மலர் வாவியிற் குளிர்தரச் செய்தார்.

(இ-ள்.) முன்னர், நல்ல நபியாகிய நூகு அலைகிஸ்ஸலா மவர்கள், பூலோகத்தின்கண் தோற்றமாகிய பலஜீவராசிக ளியாவும்ஜலப்பிரளயத்தினுல் இறந்துபோகா விதத்தில் இனிமையுடன் காத்தார்கள், நல்ல நபியாகிய இபுறுகீ மலைகிஸ்ஸலா மவர்கள் பிரகாசத்

ஷைக்கொண்ட ஒப்பற்ற அக்கினியைச் சிறப்புப் பொருந்திய மெல்லிய மலர்களை யுடைய வாவியைப் பார்க்கிலும் குளிரும்படி செய்தார்கள். (கூகூ)

முரணிடும்பிரு ஊன்முன மறைநபி மூசா
கரத லத்துறை கோறனைப் பெருமலை கடுப்ப
வரவ மாக்கின ரரியதா வூதுவல் லிரும்பை
யுருகு மென்மெழு காக்கினர் செருநர்நெஞ் சுருக.

(இ-ள்.) வேதத்தையுடைய நபிமூசா அலைகிஸ்ஸலா மவர்கள் சத்துருத்துவம் வைத்த பிருஊ னென்னும் அரசன் முன்னர் தங்களின் கைத்தலத்தில் தங்கிய கோலாகிய ஆசாவைப் பெரியபருவத்திற் சொப்பான பாப்பாகச்செய்தார்கள். தாவூது அலைகிஸ்ஸலா மவர்கள் சத்துராதிகளின் இருதயமானது உருக்கும் வண்ணம் அருமையானகொடிய இரும்பை உருகுகின்ற மெல்லிய மெழுகாகுகினார்கள் ()

நிறைந்த நீணதி யிடங்கரின் வாயிடை நெடுநா
ளிறந்த வர்க்குயிர் கொடுத்தனர் மறைநபி யீசா
வறைந்த வெண்டிரைக் கடற்படு தலத்திவை யறியா
துறைந்த பேரெவ ராமினு வயிற்றினி லுதித்தோய்.

(இ-ள்.) வேதத்தினையுடைய நபி ஈசா அலைகிஸ்ஸலா மவர்கள் நீரினால் நிறையப்பெற்ற நீட்சியைக்கொண்ட ஆற்றினது முதலைவாயின்கண் நீண்டகாலத்திற்கு முன் அகப்பட்டு இறந்துபோனவருக்கு உயிரைக் கொடுத்தார்கள். ஆமினுவென்னு மாதினது வயிற்றின்கண்ணிருந்து தோற்றமாகிய முகம்மதுவே! இவைகளை ஒலியாநிற்கும் வெள்ளிய அலைகளையுடைய சமுத்திரமானது பொருந்தப்பெற்ற இவ்வுலகத்தின்கண் அரியாதிருந்தவர்கள் யாவர்? ஒருவருமில்லர். ()

பண்டு மேலவர் காரணப் படிக்கவர் கலிமா
கொண்டி ருந்தவர் சிலரினங் குவலயத் தரவோர்
கண்டு தேறிடும் படிதருங் காரண ருளரேற்
றெண்டு செய்திடா ரெவரெனத் திமஸ்கிறை சொன்னான்.

(இ-ள்.) மேன்மையை யுடையவர்களான அங்கபிமார்களின் காரணப்படிக்கு ஆதிகாலத்தில் அவர்களின்கலிமாவைக் கைக்கொண்டிருந்தவர்கள் சிலரே. இன்னமும் இவ்வுலகத்தின் கண்ணுள்ள அறிவாளர்கள் பார்த்து தெளியும் வண்ணம் காரணங்களைத்தரும் நபிமார்களுண்டாயின் அவர்களுக்குத் தொண்டுசெய்யாதிருப்பவர்கள் யாவர்?

ஒருவருமில்லரென்று திமஸ்கு நகரத்தினது மன்னவனுன ஹபீபெ ன்பவன் கூறினன். (௧0௨)

வேத நந்நபி கேட்டெதி ராசனை விளித்திப்
போது ரைத்தனை நடுநிலே நின்னுளம் வொறுத்த
கேது காரண காரியங் குறித்தெடுத் தெனக்குக்
கோதி லாதுரை யெனவுரைத் தனர்நபிக் குரிசில்.

(இ-ள்.) அவ்வாறு கூறவே, அவற்றை நமது புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது நபியாகிய நபிகட்கெல்லாம் நாயகமான றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் காதுகளினுற் கேள்வியுற்று முன்னிருக்கப்பட்ட அவ்ஹபீபரசனை யழைத்து நீ! இப்போது நீதியைக் கூறினுய். நினதுமனசின்கண் தங்கியதான காரண காரியம் யாது? அதைக் குற்றமின்றிக் குறித்தெடுத்து எனக்குக் கூறுவாயாகவென்று கேட்டார்கள். (௧0௩)

குரிசி லாகிய முகம்மதி னுரைசெவி குளிர
வருளி னேக்கொடு மனக்களிப் பொடுஞ்சிர மசைத்துத்
தெருளி னூடொறுந் தெரிந்துதன் சிந்தையாற் றிரட்டும்
பொருள தாகிய நன்மொழி திமஸ்கிறை புகல்வான்.

(இ-ள்.) குரிசிலாகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்அவ்வாறு சொல்லிய வார்த்தைகளாற் திமஸ்கு நகரத்தினது அதிபனுன ஹபீபென்பவனின் இருகாதுகளும்குளிர்ச்சியடையக் கிருபையானபார்வையுடனும்மன மகிழ்ச்சியுடனும் தனது தலையை அசையும்படி செய்து பிரதிதினமும் அறிவினுல் தெரிந்து மனசினுற் கூட்டிவைத்திருக்கும் பொருளாகிய நல்ல சமாச்சாரத்தைச் சொல்லத் தொடங்கினன். (௧0௪)

மதியி னுஞ்செழுங் கதிர்தரு முகமுகம் மதுவே
கதிரின் வெய்யவன் மேர்கடற் புகக்ககன் முழுது
முதிரும் வல்லிருள் பரந்திட வேண்டும்பின் முரம்பார்
பொதிய பூக்குபை சென்கிரிக் குடுமியிற் புகுந்தே

(இ-ள்.) சந்திரனைப்பார்க்கிலும் செழியபிரகாசத்தைத் தராநிற்கும்முகத்தைக்கொண்டமுகம்மதென்னும் திருநாமத்தையுடையவரே! கிரணங்களையுடையசூரியனுனவன் மேல்பாற் சமுத்திரத்திற் போயடைய முதிர்ச்சியைக்கொண்ட கொடிய அந்தகாரயானது

ஆகாயமுழுவதிலும் பரவல்வேண்டும் பின்னர்பாறைகளினல் பொதியப்பெற்ற அபூகுபைசென்னும்மலையினது உச்சியில் சென்று. ()

நின்று நீரம வாசையிற் கலைநிறை மதியம்
வென்றிவெண்டிரைக் கடன்முகட்டெழச்செயல் வேண்டுங்
குன்றி டாதெழுந் தந்தரங் குலவிப்பின் னிறங்கித்
தொன்று தோன்றுகஃபாமிசை தோன்றவும் வேண்டும்.

(இ-ள்.) நீவிர் நின்றுகொண்டு அமாவாசையிரவில் சோடசகலைகளும் நிறையப்பெற்ற பூரணச்சந்திரனுனது விஜயந்தைக்கொண்ட வெள்ளிய அலைகளையுடையக்ஷீர்பாற்சமுத்திரத்தினது உச்சியில்எழும்படி செய்தல்வேண்டும். அவ்விதம் எழச்செய்த சந்திரனுனது குறைவில்லாது மேலோங்கி ஆகாயத்தின்கண்பிரகாசித்துப் பின்னர் கீழிறங்கி ஆதிகாலந்தொட்டுவிளங்காநிற்கும் கஃபத்துல்லாவின்மீதிருந்து ஒளிரவும் வேண்டும். (கOசு)

இருந்த பூரண மதியநன் னிலத்திடை யிறங்கி
வருந்தி டாதுகஃ பாவினை யெழுதாம் வலமாய்த்
திருந்த வந்துபின் னுட்புகுந் திறைவனைச் சிரஞ்சாய்த்
தருந்த வத்தொடு மிதயமன் புறத்தொழ வேண்டும்.

(இ-ள்.) அவ்வாறு இருக்கலுற்ற அப்பூரணச் சந்திரனுனது இந்தப் பூமியின்கண்வருந்தாதிறங்கிநன்மைபொருந்திய கஃபத்துல்லாவை செவ்வையாய் ஏழுதரம் வலமாகப் பிரதக்கணம் வந்து பின்னர் அக்கஃபாவினகம் நுழைந்து அரியதவத்துடன் மனசின்கண் அன்பானது பொருந்தும் வண்ணம்இறைவனுன அல்லாகு சிபுகானகுவத்த ஆலாவைத் தனது தலைபைத் தாழ்த்தி வணங்கவேண்டும்

வணங்கி யங்கிருந் தெழுந்துபொன் வாயிலைக் கடந்து
கணங்கொண் மாந்தரி னடுநடந் தழகொடு கடிதி
னிணங்கொண் மால்வரை யேறிநின் றும்முட னியல்பாய்ப்
பிணங்கி லாதநன் மொழிபல பேசவும் வேண்டும்.

(இ-ள்.) அவ்விதம் வணங்கி அந்தக் கஃபாவிலிருந் தெழும்பி பொன்னினுற்செய்த வாயிலைத்தாண்டிக் கூட்டத்தைக்கொண்டமாந்தர்களின் மத்தியில்அழகுடன்நடந்துவிரைவாய் நிணத்தைப்பெற்ற பெரிய அந்த அபூகுபைசென்னும்மலையின்கண் ஏறிநின்றுகொண்டு

உம்மோடும் இபல்பாக மாறுபடாத நன்மைபொருந்திய பல வார்த்தைகளைப் பேசவும் வேண்டும். (௧0அ)

ஆதி நாயக னொருவனுண் டெனவுமங் கவன்றன்
றூதர் நீர்நபி யென்பது மறபெனுஞ் சொல்லினாற்
பாத லத்தினி லியாவருஞ் செவியுறப் பகர்ந்தப்
போதி னுந்திருச் சட்டையுட் புகுதவும் வேண்டும்.

(இ-ள்.) அன்றியும், ஆதிநாயகனென ஹக்கு சுபுகான குவத்தஆலாவானவன் ஒருவன் உண்டென்றும், நீவிர் அந்நாயகனின் தூதராகிய நபியென்பதும், பூமியின்கண்ணுள்ள யாவர்களும் தங்களின் காதுகளினாற் கேட்கும் வண்ணம் அறபுபாஷையினாற்கூறி அச்சமயத்தில் உமது அழகிய அங்கியினகம் நுழைபவும் வேண்டும். ()

அங்கி ருந்திரு பிளவதா யணிசெழும் வலது
செங்க ரத்துறை சட்டையிற் புறப்படத் திறத்தோர்
பங்கி டக்கரச் சட்டையிற் புறப்படப் பரிவா
யிங்கி தத்தொடுங் குறையற வெதிரவும் வேண்டும்.

(இ-ள்.) அவ்விடத்திருந்து இருபிளப்பாகித் திறத்தைக்கொண்ட ஓர் பங்கானது குறைவில்லாது அழகிய செழுமையான செவ்விய வலதுபுறந் தங்கிய சட்டைக்கையில் நின்று வெளிவரவும், மற்றொன்று இடதுசட்டைக்கையில் நின்று வெளிவரவும் அன்பாய் இனிமையுடன் உமக்கு எதிரிற் நிற்கவும் வேண்டும். (௧௧0)

ஒருப குப்பெழு வானினிற் புகுந்தொரு பகுப்பு
விரிதி ரைப்படு வான்புகுந் தந்தரம் விளங்கப்
பொருவி லாதிரு பங்குயோர் மதியெனப் பொருந்திப்
பருதி வானகத் திடைகதிர் பரப்பவும் வேண்டும்.

(இ-ள்) ஒரு பங்கு விரிந்த சமுத்திரத்தையுடைய எழுவானென்னும் கீழ்புறத்திற் போயடைந்து ஒரு பங்குபடுவானென்னும் மேல்பாற்போயடைந்து ஒப்பின்றி இரு பங்கும் ஆகாயத்தில் பிரகாசிக்கும்வண்ணம் ஒருசந்திரனைச்சேர்ந்துசூரியனையுடைய வானத்தினிடத்துத் தனது கிரணங்களைப்பரவும்படிசெய்யவும் வேண்டும். (௧௧௧)

பரப்பும் வெண்மதி பின்னுமிப் பாரெலா மறிய
வுரப்பி நாயக னொருவனென் றவன்மறைக் குரித்தாய்

வரப்படுந்திறன் முகம்மதென் றருமொழி வகுத்து
விரிப்பர் தீனிலை யென்பதும் விளக்கவும் வேண்டும்.

(இ-ள்) அவ்வாறு பரவும்படி செய்த வெள்ளிய சந்திரனது பின்னும் இப்பூலோகத்தின் கண்ணுள்ள ஜீவராசிகளனைத்தும் அறியும்வண்ணம் சத்தமிட்டு நாயகனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் ஒருவனென்றும், அவனது புறக்கானுல் அலீமென்னும் வேதத்திற்குச் சொந்தமாய் வராநிற்கும் வெற்றியையுடைய முஹம்மதென்றும், அருமையான வார்த்தைகளைக்கூறி அம்முகம்மதென்பவர் இவ்வுலகத்தின்கண் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை விரியச்செய்வாரென்பதையும் விளக்கிக்காட்டவும் வேண்டும். (௧௧௨)

ஈதெலாமுடித் திடுவிரே னும்முரைக் கிணங்கிக்
காதலாவிணை யடிமிசைச் சிரமுகங் கவிழ்த்தி
யாதரந்திலென் றிரளொடுந் தீனிலைக் காகிப்
போதுவேனென வுரைத்தனன் திமஸ்கினைப் புரப்போன்,

(இ-ள்.) இவையெல்லாவற்றையும் செய்து நிறைவேற்றி விடுவீரேயாயின் ஆசையோடும் உமது வார்த்தைகளுக்குப் பொருந்தி உமது இருபாதங்களின்மீது எனது தலையையும் முகத்தையும் கவிழச்செய்து முத்தமிட்டு என் கூட்டத்தார்களுடன் யானும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையிலாய்ப் போவேனென்று திமஸ்குநகரத்தை ஆள்வோனான ஹபீபென்பவன் அன்புடன் கூறினன்.

உள்ள மீதினி யிதுகொலோ வின்னுமற் றுளவோ
விள்ளுவாயென நபிதிமஸ் கிறைவனை விளித்துக்
கிள்ளையின்றி ளரசருஞ் சேனையுங் கேட்கக்
கள்ள நெஞ்சபூ ஜகல்மனங் கருகக்கட் டுரைத்தார்.

(இ-ள்,) அவ்வாறு கூறவே, நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திமஸ்கு நகரத்தினது அதிபனான ஹபீபென்பவனை யழைத்து உனது உள்ளத்தினிடத்துள்ளது இதுதானோ? இன்னும் வேறேதாவது உளதோ? கூறுவாயாகவென்று குதிரைக்கூட்டத்தையுடைய மன்னர்களும் படையினரும் கேட்கவும் திருட்டுநெஞ்சத்தைக் கொண்ட அபூஜகிலென்பவனின் மனமானது தீய்ந்திடவும் உறுதியாய்க் கேட்டார்கள். ()

புகலுஞ் சொற்செவி புகத்திமஸ் கினிற்புர வலனு
மகமகிழ்ச்சிகொண் டிவையலால் வேறென்னென் றறைய
விகன்ம னத்தவர் முகமரைக் கிருஞ்சசி யெனலாய்
மகித லம்புகழ் நபியெழுந் தனர்திரு மனைக்கே.

(இ-ள்.) அவ்விதம் கேட்ட வார்த்தைகளானவை காதுகளில் நுழைந்தமாத்திரத்தில் திமஸ்கு நகரத்தினது மன்னவனான ஹபீபென்டவனும் மனக்களிப்படைந்து இவைகளல்லாது வேறேயாது? ஒன்றுமில்லையென்று கூறச்; சத்துருத்துவம்கொண்ட சிந்தையையுடையவர்களான பகைவர்களின் முகமாகிய தாமரைக்குப் பெரிய சந்திரனைப்போன்று இவ்வுலகமானது புகழாநிற்கும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் தெய்வீகம் தங்கிய மாளிகைக்கு எழுந்தருளினார்கள். (௧௧௫)

கரிந்த சிந்தைய னபூஜகல் சடிதினி லெழுந்து
புரிந்த பொன்மலர்ப் புயத்திமஸ் கிறைவனைப் போற்றி
வருந்தி லாதுசம் மதித்தனன் முகம்மது மினிமேற்
றெறிந்த தங்கவன் படிறென வுரைத்தயல் சேர்ந்தான்.

(இ-ள்.) அப்போது தீய்ந்த மனத்தை யுடையவனான அபூஜகி லென்பவன் விரைவாயெழும்பிப் பொன்னினாற்செய்த மலர்மாலையையுடைய தோள்களைக்கொண்ட திமஸ்கு நகரத்தி னதிபதியாகிய ஹபீபென்பவனைத் துதித்துத் தாங்கள் கூறியவற்றை வருந்தாது முகம்மதென்பவன் சம்மதித்தான். அவன்பொய்யானது இனிமேல் தெரியுமென்று சொல்லிவிட்டுப் பக்கத்தில்போய்ச் சேர்ந்தான். ()

வாய்ந்த பேரவை விடுத்தின மாந்தரை விளித்துச்
சாய்ந்த புந்தியன் முகம்மதின் சரிதையும் வலியு
மாய்ந்த வேதமு மார்க்கமும் வணக்கமு மறிவுந்
தேய்ந்த தின்றென அபூஜகில் குலுங்கிடச் சிரித்தான்.

(இ—ள்.) அன்றியும், அவ்வபூஜகி லென்பவன் சிறப்புத்தங்கிய பெரிய அந்தச் சபையைவிட்டும் நீங்கித் தனதுகூட்டத்தார்களாகிய ஜனங்களைக் கூப்பிட்டுக் கெட்ட புத்தியை யுடையவனான அந்த முகம்மதென்பவனின் சரித்திரமும் வலிமையும் ஆராயப்பெற்றபுறுக்கானுல் அலீமென்னும் வேதமும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்

க்கும் தொழுகையும் அறிவும் இன்றே தேய்ந்துபோயிற்றென்று சொல்லித் தனது தேகமானது குலுங்கும்வண்ணம் சிரித்தான். ()

மருவ லாருரை செவிக்கிடா தெழின்முகம் மதுமப்
பொருவி லாவணங் கடந்துதங் திருமனை புகுந்து
பெருகுங் கேள்வியன் குவைலிது தவத்தினிற் பிறந்த
விரிம லர்க்குழற் றெரிவையை யருகினில் விளித்தார்.

(இ-ள்.) அழகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்வாறு கூறும் சத்துராதிகளாகிய அந்த அபூஜகில் முதலியோர்களின் வார்த்தைகளைக் காதுகளில் கொள்ளாது ஒப்பற்ற அந்த மக்கமா நகரத்தினது வீதிகளைத் தாண்டித் தங்களின் தெய்வீகம்தங்கிய மாளிகையினுள் நுழைந்து ஓங்காநிற்கும் கேள்வியையுடையவனான குவைலிதரசனின் தவத்தினால் இவ்வுலகத்தின்கண் உதயஞ்செய்த விரிந்த புஷ்பங்களைச் சூடப்பெற்ற கூந்தலையுடைய கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களைப் பக்கத்தில் அழைத்தார்கள். (கக௮)

அடர்ந்த வேல்விழி மடைந்தையை யருகுற விருத்தித்
திடந்த ருங்கதிர் வேற்கர தலத்திமஸ் கிறைமுன்
னடந்த வுத்தர மனைத்தையும் வான்முறை நவின்றார்
மடந்த ராதநன் மறைமன வலிமுகம் மதுவே.

(இ-ள்.) அறியாமையைக் கொடாத நன்மைபொருந்திய புறுக்கானுல் அலீமென்னும் வேதவாக்கியத்தைக்கொண்ட மனவலிமையுடைய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், அவ்வாறு அழைத்த நெருங்கிய வேலாயுதம்போலும் கண்களையுடைய கதீஜா றலியல்லாகு அன்ஹா அவர்களைப் பக்கத்தில்பொருந்தும்வண்ணம் இருக்கச்செய்து தைரியத்தை யருளாநிற்கும் ஒள்ளிய வேற்படையைத் தாங்கிய கைதலத்தையுடைய திமஸ்கு நகரத்தினது மன்னவனான ஹபீபென்பவன் முன்னால் நிகழ்ந்த உத்தரங்களெல்லாவற்றையும் வரிசையாகக் கூறினார்கள். (ககக)

அடிகள் கூறிய மொழிவழி கேட்டகந் துணுக்கிக்
கடிகொண் மென்மலர்ப் பல்லவச் செழுங்கரமேந்தி
நெடிய வாவென துயிரவர் மனத்தினி னினைத்த
படிமு டித்தரு ளென்றிறை யொடுபகர்ந் திருந்தார்.

(இ-ள்.) குருவாகிய, நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அவ்வாறு கூறிய ஒழுங்கான வார்த்தைகளைக் கதீ ஜாறலியல்லாகு அன்ஹா அவர்கள் தங்களின் காதுகளினாற் கேள்வி யுற்று மனமானது அச்சப்பட்டு வாசனையைக்கொண்ட மெல்லிய புஷ்பத்தளிரையொத்த செழிய இருகைகளையும் உயர்த்தி எவ்வித அளவிற்கு மெட்டா மேலவனே! எனது உயிருக்குச் சமமான நாய காவர்கள் தங்களி னிதயத்தின்கண் சிந்தித்தபடி நிறைவேற்றிக் கொடுப்பாயாக வென்று ஹக்குசுபுகானகுவத்த ஆலாவோடும் போ தித்திரந்தார்கள். (சஉ0)

அன்று நங்கபி தனித்தொரு வயினுறைந் தறிவா
னின்றி ரண்டிறக் ஆத்துநன் னெடியனை வணங்கி
வென்றி தாவென விருந்தனர் விரைவின்வந் தடைந்தார்
தென்றி றற்றம துயிரென வருஞ்ஜிபு ரீலே.

(இ-ள்.) அன்றையத்தினமே; நமது நாயகம் நபிமுகம்மது முஸ் தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் ஏகமாய் ஓரிடத்திற் போய்த் தங்கிநின்று அறிவுடன்நன்மையைக்கொண்ட நெடியவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவை இரண்டுறக் ஆத்துத்தொழுது வெற்றியருள்வாயாகவென்று சொல்லியிருந்தார்கள்; தங்களுயிரைப் போன்று வராநிற்கும் அழகிய வலிமையையுடைய ஜிபுறயீலலைகிஸ் ஸலா மவர்கள் விரைவில் அவ்விடம்வந்து சேர்ந்தார்கள். (கஉக)

எனக்கு றுந்துணை யேயுயி ரேமுத லிறையென்
றனக்கு மக்குச லாமெடுத் துரையெனச் சாற்றிச்
சினக்குங் காபிர்க் ளொடுங்திமஸ் கிறைவன்செப் பினதும்
நினைக்கு முன்வரு மென்றன னெனநிகழ்த் தினரால்.

(இ-ள்.) அவ்வாறு வந்து சேர்ந்த ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர் கள் நாயகம் நபி றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த் து எனக்குப் பொருந்திய துணைவரே! எனது பிராணனுக்குச் சரி யான முகம்மதுவே! உமக்கு யாவற்றிற்கும் முதன்மையான ஹக்கு சுபுகான குவத்த ஆலாவானவன் எனது சலாத்தை எடுத்துக் கூறு வாயாக வென்று எனக்குக் கற்பித்துக்கோபியாநிற்கும் காபிர்களோ டும் தியஸ்கு நகரத்தினது அதிபனான ஹபீபென்பவன் கூறினதும் சிந்திப்பதற்கு முன்னாலேயே வந்துவிடுமென்று சொன்னானென்று சொன்னார்கள். (கஉஉ)

மன்றன் மெய்முகம் மதினுரை மறுத்திடா தேவ
வென்றுஞ் செய்தவர்க்கமைத்தனன்மதியையென்றிறைபோன்
வென்றி யாய்ப்பினு முரைத்தன னெனுமுரை விரித்தார்
குன்றி லாப்பெருஞ் சிறைசெறி வானவர் கோமான்.

(இ-ள்.) பின்னரும் குறையாத பெரிய சிறகுகளானவை செறியப்பெற்ற தேவர்களுக்கெல்லாம் அதிபதியாகிய ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் இறைவனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவானவன் கஸ்தூரிவாசனை கமழாநிற்கும் காத்திரத்தையுடைய நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வார்த்தைகளை மறுக்காது எக்காலமும் அவர்களினது ஏவல்களைச் செய்யப்பட்டவர்கட்கே நான் சந்திரனைப் படைத்தேனென்று விஜயத்துடன் சொன்னானென்னும் வார்த்தைகளை விரித்துச் சொன்னார்கள். (௧௨௩)

விண்ணு வர்க்கிறை யிவையலாற் பலபல விரித்து
மண்ண கத்திருந் தரும்விசும் படைந்தபின் மகிழ்வா
யண்ண லாகிய முகம்மது மகத்தினிற் களிப்புற்
றெண்ண மின்றியங் கிருந்தனர் திருந்தல ரிடியின்.

(இ-ள்.) அமராதிபரான ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் இவைகளல்லாமல் இன்னம் பற்பல விஷயங்களை விரிவாயெடுத்துச் சொல்லிவிட்டு இப்பூலோகத்தினிடத் திருந்து அருமையான வானலோகம்போய்ச் சேர்ந்தபின்னர் மகிழ்வாக அண்ணலாகிய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மனசின்கண் களிப்படைந்து சத்துராதிகளுக் கிடியேறுபோன்று யாதொரு கவலையுமின்றி யிருந்தார்கள். (௧௨௪)

மருவ லர்க்கரி நிகரபித் தாலிபு மன்னர்
திரும னைப்புகுந் திருந்துதம் முளத்தினிற் செனித்த
பருவ ரற்பெரு நோயினுற் றனித்துடல் பதைத்துத்
தெரியுந் தேற்றமு நலக்கமும் வரச்சில புகல்வார்.

(இ-ள்.) சத்துராதிக ளென்னும் யானைகளுக்குச்சிங்கேற்றைப் போன்ற அரசராகிய அபீத்தாலிபென்பவர் தமது அழகியமாளிகையின்கண் நுழைந்து இருந்துக்கொண்டு நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் ஹபீபரசனின் முன்னுற்கூறியவார்த்தைகளை நினைத்துத் தமது சிந்தையின்கண் ணுண்டான துன்பத்

தைக்கொண்ட பெரிய வியாதியில் ஏகமாய்ச் சரீரமானது துடிக்கப் பெற்று அறியாநிற்கும் தெருட்சியும் கலக்கமும்வரும் வண்ணம் சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினர். (௧௨௫)

கான கச்சுரத் திடைநதி யழைத்தனர் கடிதி
ஞான ருந்திய புலிபணி தரவெதி ருரைத்தார்
பானு வின்கதிர் மணிமுடி யரவுடற் பகிர்ந்தா
ரீன வன்கொலைக் கறுங்கரம் பொருந்தியங் கிருந்தார்.

(இ-ள்.) முகம்மதென்பவர், விரைவில் கானகத்துள்ள பாலைநில த்தின்கண் ஆற்றினை வரும்படி செய்தார். மாமிச மருந்தா நிற்கும் புலியானது வணங்கும் வண்ணம் அதற்கெதிர் பேசினர். சூரியகிர ணத்தையொத்த பிரகாசத்தினது இரத்தினத்தைக்கொண்ட பண முடியினையுடைய பாம்பினது சரீரத்தை யிருதுண்டாய்ப் பகிரும் படி செய்தார். புன்மையான கொடிய கொலைத்தொழில்செய்ய எத் தனித்தவர்களுக்கு அற்றகையைப் பொருந்தச்செய்து அவ்விடத் தில்தானே தங்கி யிருந்தார், (௧௨௬)

நிலவ ழைத்திடத் திமஸ்கிறை நிகழ்த்தின னவன்மு
னலைவி லாதெதிர்த் தறுதிசொற் றனருல கறிய
விலகு கார ணெவ்வண முடியுமோ வெனத்தம்
மலைவி னுலுடன் மதியற மயங்கிடுங் காலை.

(இ-ள்.) திமஸ்கு நகராதிபதியான ஹபீபரசன் சந்திரனையழை க்கும்படி கூறினன். அதற்கு அலைவின்றி யெதிர்த்து அப்படியே யாகட்டுமென்று இவ்வுலகத்திலுள்ள சகலரும் அறியும்படி முடிவு கூறினர். ஆனல் விளங்கா நிற்கும் அக்காரணமானது எவ்வாறு நிறைவேறுமோ என்று தம்மனசின்கண் கொண்ட அச்சத்தினல் சரீரமானது அறிவின்றி மயக்கமுறுஞ் சமயத்தில். (௧௨௭)

இருந்த வில்லகத் தொருமதி ளிடியென முழங்கி
விரிந்த செங்கதிர் வேலபித் தாவிபை விளித்துத்
திருந்தும் பொன்னகர் வானவர் மொழியெனத் தெளியப்
பொருந்த நன்குறத் தெரிதர வினியன புகலும்.

(இ-ள்.) தாம் தங்கியிருந்த வீட்டினிடத்துள்ள ஒருமதிலானது இடியைப்போலச் சத்தித்து விரிந்த செவ்விய கிரணங்களையுடைய

வேலாயுதத்தைக்கொண்ட அபீத்தாலிபென்பவரைக் கூவித்திருத்த மானசொர்க்கலோகத்தினதுதேவர்களாகியமலாயிக்கத்துமார்களின் வார்த்தைகளென்று விளங்கவும், பொருந்தும் வண்ணம் நல்ல உரை வும் இட்படிக் கூறும். (௧௰௮)

மெலிவு மெண்ணமுங் கவலையும் விரைந்தெடுத் தெறிமின்
வலிய வன்னரு ணின்மக விடத்தினின் மலிவாய்த்
தொலைவி லாப்பெருங் காரணம் விளைப்பதாற் சுடர்வெண்
ணிலவு மிற்றையில் வருஉமது மறுவற நிறைந்தே,

(இ-ள்) நீவிர் உமது வாட்டத்தையும் நினைப்பையும் விசாரத் தையும் சீக்கிரத்தில் உம்மிலிருந்து மெடுத்துவீசிவிடும். உமதுபுத்தி ரப்பேருகிய முகம்மதென்பவரிடத்தில்வலியவனுனஜல்ஜெலாகுவத் த ஆலாவின் திருவருளானது அதிகப்பட்டு முடியாதபெருங்காரண ங்களை விளைப்பதினுல் இற்றைப்போதினில் பிரகாசத்தையுடையவெ ள்ளியசந்திரனும் குற்றமறப் பூரணப்பட்டு வராநிற்கும் (௧௰௯)

மருவ லார்பெருங் கிளையொடுங் குழுவொடும் வதனங்
கருகி யங்கவர் வலியிழந் திடுதல்கண் டறிமி
னரிய தீனெனுஞ் செழுங்கதிர்க் குபிரிரு ளறுத்துப்
பெருகு மென்பதுங் கேட்டன ரறிவினிற் பெரியோர்.

(இ-ள்.) அன்றியும், சத்துராதிகளாகிய காபிர்கள் தங்களின் பெரிய குடும்பத்தோடும் கூட்டத்தோடும் முகமானது கருகப்பெற் று அவர்கள் தங்களின் வலிமையையும் இழந்துபோவதைக்கண்களி னுற் பார்த் துணர்வீராக! இன்னம் அருமையான தீனுல் இஸ்லா மென்னும் செழிய சந்திரனுனது குபிராகிய அந்தகாரத்தை அறச் செய்து அதிகப்படுமென்பதையும் அறிவினுற் பெரியவரான அபீத் தாலிபென்பவர் தமது காதுகளினுற் கேள்வியுற்ருர். (௧௱௦)

நிகதி பெற்றிலா வதிஜய மிஃதென நினைத்து
முகம்ம தின்றிரு மனைபுகுந் தவர்வயி னுறைந்து
பகரு ருஞ்சுதை மதிண்முறை பகர்ந்ததைப் பகர்ந்தார்
செகத லத்தினும் விண்ணினும் பெரும்புகழ் சிறந்தோர்.

(இ-ள்.) அவ்விதம் கேள்வியுற்றஇப்பூலோகத்திலும்வானலோ கத்திலும் பெரியகீர்த்தியினுற் சிறப்புற்றவரான அபீத்தாலிபென்ப

வர் இஃது அதிஷ்டத்தைக்கொண்ட ஆச்சரியமென் றுணர்ந்து நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தெய்வீகம் தங்கிய மாளிகையின் கண் ணுறைந்து அந்நாயக மவர்களின் பக்கத்திலுட்கார்ந்து சொல்லுதற்கரிய சுண்ணைச்சார்ந்து தீற்றியமதிலானது சொன்னதை அவர்களோடு சொன்னார். (௧௩௧)

தந்தை கூறிட வானந்த முளத்தடங் ததும்பி
யெந்தை யீரெனப் போற்றிவிண் ணவர்க்கிறை யிசைத்த
மந்தி ரத்தையும் வரன்முறை வகுத்தெடுத் துரைத்தார்
கந்த மென்மலர்ப் புயவபித் தாலிபுங் களித்தார்.

(இ-ள்) தந்தையாகிய அவர் அவ்வாறு சொல்லநாயகம்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சந்தோஷத்தினுல்மனமாகிப வாவியாகைது ததும்பப்பெற்று எனது தகப்பனாரே! என்றுசொல்லிப் புகழ்ந்து தேவரனைவருக்கும் அதிபரான ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் தங்கள்பால் வந்துகூறிய வேதவாக்கியத்தையும் வரிசையா யெடுத்து விபரித்துக் கூறினார்கள் வாசனையைக்கொண்ட மெல்லிய புஷ்பமாலையையணிந்த தோள்களையுடைய அபீத்தாலி பென்பவரும் அவைகளைக் காதுகளினுற்கேட்டு மகிழ்ச்சி யடைந்தார். ()

அவிரு மொய்யொளி முகம்மதே யும்மிடத் தவனுற்
புவியின் மிக்குயர் செல்வமும் பெரும்புது மைகளுந்
தவிர்கி லாதுவந் தடைவதுண் டெனப்பல சாற்றித்
திவளு மாலைக டெயல்வா மனைவயிற் சேர்ந்தார்.

(இ-ள்.) அவ்வண்ணம், மகிழ்ச்சியடைந்த அபீத்தாலி பென்பவர் பிரகாசியாநிற்கும் சரீரகாந்தியைப்பெற்றமுகம்மதென்னும்திருநாமத்தை யுடையவரே! உம்மிடத்தில் அவ்ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவினுல் இப்பூலோகத்தின்கண் மிகமேலாகியசெல்வமும்பெரிய அற்புதங்களும் தவிராது வந்து சேர்வதுண்டுமென்று கூறிஒளிரா நிற்கும் தமது மாலைகளானவை அசையும் வண்ணம் வீட்டின்கண் போய்ச் சேர்ந்தார். (௧௩௩)

அற்றை நாளகன் றரும்பெரும் புகழ்முகம் மதுவு
மற்றை நாளுயிர்த் தோழர்க டமைவர வழைத்துக்
குற்ற மற்றதம் பெருங்குலத் தவரையுங் கூட்டி
யொற்றர் முன்புகப் பின்னெழுந் தனர்குழு வுடனே.

(இ-ள்.) அருமையான பெரிய கீர்த்தியையுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அன்றையப்பொழுதுபோய் மறுநாள் தங்களின் உயிருக்குச்சமமான தோழர்களாகிய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்களையும், உமறு கத்தாபு றலியல்லாகு அன்கு அவர்மளையும், உதுமானிபுனு அப்பான் றலியல்லாகு அன்கு அவர்களையும், அலியிபுனு அபீத்தாலிபு றலியல்லாகு அன்கு அவர்களையும், வரும்படி விளித்துக் களங்கமில்லாத பெரிய தங்களின் குலத்தார்களையும் கூட்டிக்கொண்டு கூட்டத்தோடுந் தூதுவர்கள் முன்னே செல்லும்வண்ணம் பின்னால் எழுந்தருளினார்கள். (௧௩௪)

கொடிய பாதகம் வஞ்சனை குபிர்கொலை யனைத்து
மடிய நல்லறங் குருவொடும் வருவன போன்றுங்
கடிகொண் மான்மதங் கமழ்தரத் தெருத்தலை கடந்து
முடியின் மைதவழ் கருபத்துல் லாவைமுன் னினரால்.

(இ-ள்.) அவ்வாறெழுந்தருளிய நாயகமவர்கள் கொடுமையான பாவம் கபடம், குபிர், கொலையாகிய யாவும் இல்லாமலொழிந்து போகும்வண்ணம் நல்ல தருமமானது குருவுடன் வருவதைப்போன்றும் பரிமளத்தைக்கொண்ட கஸ்தூரி வாசனையானது எவ்விடமும் பரிமளிக்க அம் மக்கமா நகரத்தினது தெருவீதிகளைத்தாண்டி மேகங்களானது சிகரத்தின்கண் தவழாநிற்கும் கஃபத்துல்லாவைப்போய் அடுத்தார்கள். (௧௩௫)

உயிரு றுந்துணைத் தோழமை நால்வர்க ளுடனே
வயிர வொண்கதிர்க் கருபத்துல் லாவலஞ் சூழ்ந்து
செயிர றத்தொழு திருந்தினத் தவருடன் சிறப்ப
வியல்பெ றுந்தனி மறைமுகம் மதுநபி யெழுந்தார்.

(இ-ள்.) அவ்விதம் போயடுத்த இயல்புபொருந்திய ஒப்பற்ற புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களி னுயிருக்குப் பொருந்திய துணையாகிய தோழமையையுடைய அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு முதலிய அந்நால்வர்களோடுங் குலத்தவர்களுடன் வயிரமணியினது ஒள்ளிய கிரணங்களையுடைய கஃபத்துல்லாவை

வலஞ்சுற்றி ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவைக் குற்றமற்ற அவ்விட
த்தில்தானே இருந்து வணங்கிச் சிறப்பாக எழுந்தருளினூர்கள். ()

வடிவு றுஞ்சல தரக்குடை நிழற்றிட வானோர்
நெடுவி சும்பிடை யிடனறத் திசைதிசை நெருங்க
வுடலு றும்படைப் பெவையுநல் வாழ்த்தெடுத் தொலிப்பப்
புடைப ரந்தினம் வரநபி பொருப்பினி லானூர்.

(இ-ள்.) அவ்வித மெழுந்தருளிய நாயகம் நபிமுகம்மது முஸ்த
பாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அழகுபொருந்திய
மேகக்குடையானது நிழலைச் செய்யவும், தேவர்களாகிய மலாயிக்க
த்துமார்கள் நெடிய ஆகாயத்தின்கண் இடமில்லாது நானுதிசைகளி
லும் நெருங்கவும், சரீரத்தைக்கொண்ட படைப்பினங்களெவையும்
நல்லதுதிகளையெடுத்துச் சத்தமிட்டுக் கூறவும், இனத்தவர்கள் பக்க
த்தில் பரப்புற்றுவரவும், அந்தக் குபைசென்னும் மலையின்கண்
போய்ச் சேர்ந்தார்கள். (௧௬௭)

சிறுவ ருந்தணை முலையணை பிரிந்திடாச் சேயு
மறுகு மைக்கய லஞ்சன விழிமடந் தையருந்
தெறுக திர்ப்படைப் பன்னகர் மாக்களுஞ் சிலையைக்
குறுகி நின்றனர் நால்வகைக் குலந்தலை மயங்க.

(இ-ள்.) பாலியர்களும், இருமுலைகளென்னும் தலையணையை விட்
டுநீங்காத குழந்தைகளும், மறுகா நிற்கும் விடத்தையும் கெண்டை
மீனையும் ஒத்தமையெழுதப்பெற்ற கண்களையுடைய பெண்களும், நெ
ருங்கிய பிரகாசத்தைக்கொண்ட அம்மக்கமா நகரத்தினது படைப்பி
னர்களாகிய புருஷர்களும், தங்களில் சிறுவர் விருத்தாப்பியர் ஆண்
பெண்ணென்னும் நால்வகைக் கூட்டங்களும் மாறுபடும் வண்ணம்
அந்த அபூகுபைசென்னும் மலையை நெருங்கி நின்றூர்கள். (௧௬௮)

கனைகு ரற்சிறு கட்பெருஞ் செவிமத கரியும்
புனைம யிர்க்கடு விசைவளை முகப்புர விகளு
மினம ணிக்கடற் சேனையும் புறப்பட வெழுந்தான்
வனச மென்மலர்த் தடந்திகழ் திமஸ்குமன் னவனே.

(இ-ள்.) மெல்லியதாமரைமலரைக்கொண்டதடாகங்களானவை
பிரகாசியாநிற்கும் திமஸ்குநகரத்தினது அதிபதியாகிய ஹபீபென்

பவன் ஒலிக்குகின்ற குரலையும், சிறிய கண்களையும், பெரிய செவிகளையுமுடைய மதத்தினைக்கொண்ட யானைகளும், அலங்கரிக்கப்பட்ட புறமயிரையும்; கொடிய விசையையும் வளைந்த முகத்தையுமுடைய குதிரைகளும், கூட்டமாகிய முத்துக்களையுடைய சமுத்திரத்தை நிகர்த்த காலாட்படைகளும் தன்னுடன் புறப்படும் வண்ணம் எழும்பினன். (௱௩௯)

திவட டங்கடற் சலஞ்சல முரறரத் திசைவிண்
டவழ்த ருங்குடைத் திரள்களுங் கவரியுந் தயங்கத்
துவட ருங்கொடி மலிதரப் பல்லியந் தொனிப்பக்
குவட டங்கலுஞ் செருகின நிறைந்தன குழுமி.

(இ-ள்,) அந்த அபூகுபைசு மலை முழுவதும் ஒளிரா நிற்கும் பெரிய சமுத்திரத்தின்கண் ணுற்பத்தியாகிய சங்குகளானவை சத்திக்கவும், திசைகளிலும் ஆகாயத்தின்கண்ணும் தவழ்கின்ற குடைக்கூட்டங்களும் சாமரங்களும் பிரகாசிக்கவும், அசையுகின்ற கொடிகளானவை மிகுக்கவும், பல வாத்தியங்கள் முழங்கவும், கூட்டமுற்று நெருங்கி நிறைந்தன. (௧௪0)

முருக லர்த்தருப் பொருப்பிடந் தொடுத்தணி முதிர்ந்த
தெருவும் வீதியுங் கானமும் பார்த்திடுந் திசையு
மிருநி லத்திடை யெள்ளிட விடமரி தெனலாய்ப்
பெருகி நின்றது நிறைதரு மனுப்பிர ளயமே.

(இ-ள்.) அன்றியும், பூரணப்பட்ட மானிடப் பிரளயமானது பரிமளத்தைக்கொண்ட புஷ்பங்களினது சோலைகளையுடைய அந்த அபூகுபைசென்னும் மலையினிடம் தொடுத்து முதிர்ந்த அலங்காரத்தையுடைய மக்கமா நகரத்தினது தெருக்களிலும் வீதிகளிலும் கானகத்திலும் பார்க்கப்பட்ட திக்குக ளெல்லாவற்றிலும் பெரிய இந்தப் பூமியினிடத்து எள்ளிடுதற்கு இடமில்லையென்று சொல்லும்படியாய்ப் பெருக்கமுற்று நின்றது. (௧௪௧)

கலையி ழந்தன மானின கடிசுரை கவிழ்பான்
முலையி ழந்தன கன்றுகள் விலங்கின முழுது
நிலையி ழந்தன பறவைக ணெடும்விசும் பெழுந்த
மலைய மிழ்ந்திய திரைதரு வெனுமனுக் கடலுள்.

(இ-ள்.) அன்றியும், மானின் கூட்டங்கள் தங்களின் துணையாகிய ஆண்மான்களையொழியப்பெற்றன. அம்மானின்குட்டிகள் மடிப்

பைக்கொண்டசுரையினது கவிழாநிற்கும் பாலினையுடைய மூலைகளை யொழியப்பெற்றன. மிருகச்சாதிக ளனைத்தும் தாங்கள் நிற்கும் நிலையை பொழியப்பெற்றன. பறவைச்சாதிகளெல்லாம் நெடிய ஆகாயத்தின்கண்ணெழும்பிப் பறந்தன. அந்த அபூகுபைசென்னும் மலையானது ஒலியா நிற்கும் மனுவென்னுஞ் சமுத்திரத்தினுள் மூழ்கியது. (கசஉ)

எறிந்த வெண்டிரைக் கடன்முகட் டெழுந்துவின் ணோகிச்
செறிந்த பார்மனுக் கடலினைக் கண்களாற் றெரிசித்
துறைந்த திண்கதி ராயிரங் கரங்களு மொடுக்கிக்
குறைந்த காந்திகொண் டிரவிமேற் கடலிடை குதித்தான்.

(இ-ள்.) சூரியனானவன் வீசாநிற்கும் வெள்ளிய அலைகளையுடைய கீழ்பாற் சமுத்திரத்தினது உச்சியில் தோற்றஞ் செய்து ஆகாயத்தின்கண் சென்று உலகத்திளிடத்துள்ள நெருங்கிய மானிடவாருதியைத் தனது கண்களாற் பார்த்து வலிமையானது தங்கப்பெற்ற தன் ஆயிரங் கிரணங்களையும் சுருக்கிக்கொண்டு குறைவுற்ற பிரகாசத்தோடும் மேல்பாற் சமுத்திரத்திற் சாடினன். (கசரு)

அடரும் வான்றிரிந் துடலினைப் பாற்றுதற் கணிமேற்
கடல ணைத்திரைத் துகிலினிற் கதிர்க்கர மூன்றி
யுடல்கு ழைத்திடச் செக்கரின் படத்தினுள் ளுறைந்து
படரும் பேரொளி மறைந்திடப் படுத்தனன் பருதி.

(இ-ள்.) மேலும், அச்சூரியனானவன் நெருங்கிய வானலோகத்தின்கண் சஞ்சரித்துத் தனது சரீரத்தை இளைப்பாற்றுதற்காய் அழகிய மேல்பாற் சமுத்திரமாகிய தலையணையையுடைய அலைகளாகிய வஸ்திரத்தினிடத்துக் கிரணங்களான கைகளை யூன்றித் தேகமானது குழையும்படி செவ்வானென்னும் போர்வையுள் தங்கி விரியாநிற்கும் பெரிய பிரகாசமானது மறையும் வண்ணம் சயனித்தான். ()

மதியி னைப்பகிர் தரநபி மலைமிசை வானோர்
துதிசெ யத்தனி நின்றனர் கதிரையுந் தொடர்ந்து
பதியி னிற்றரு கென்றிடிற் பகர்வதென் னெனத்த
னிதய மச்சமுற் றடைந்தபோ லடைந்தன னிரவி,

(இ-ள்.) அன்றியும், சூரியனானவன் நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தேவர்க

ளாகிய மலாயிக்கத்துமார்கள் போற்றும்படி அந்த அபூகுபைசென்னும்மலையின்மீது சந்திரனை யிருபிளவாகச் செய்யும்வண்ணம் ஏகமாய் நின்றார்கள். பூமியின்கண் சூரியனையும் தொடர்ந்துகருவாயாக வென்று கேட்கில் நாமதற்குச் சொல்லுவது யாது? ஒன்றுமில்லை யென்று தன் மனமானது பயமுற்று அடைந்ததுபோல் மேல்பாற் சமுத்திரத்தில் போயடைந்தான். (௧௪௫)

அந்த ரத்தமா வாசையி னபிமதி யழைப்ப
வந்தி ருந்தனர் வானவ ரெவருமண் ணிலத்தி
லிந்த வானகத் திருப்பது பழுதென விரவி
சிந்து வெண்டிரைக் குடகட லிடத்தினிற் சேர்ந்தான்.

(இ-ள்.) அன்றியும். சூரியனானவன் நமதுநாயகம் ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அமாவாசை யிரவில் ஆகாயத்தினது சந்திரனை அழைக்க தேவர்களான மலாயிக்கத்து மார்களனைவரும் பூமியின்கண் போயிருந்தார்கள். ஆதலால் நாமும் இந்த வானலோகத்தின்கண் ணிருப்பது குற்றமென்று கருதி வெள்ளிய அலைகளைச் சிந்தாநிற்கும் மேல்பாற் சமுத்திரனிடத்துப்போய்ச் சேர்ந்தான். (௧௪௬)

மாதி ரப்புய நபிமனங் களிப்புற மதியைக்
கோதி லாதிவண் கொடுவரு வேனெனக் குறித்து
வீதி வானக வழியினைத் தொடர்ந்துமேற் கடலுட்
போது போனவ ரொத்தனன் சொரிகதிர்ச் சுடரோன்.

(இ-ள்.) அன்றியும், கிரணங்களைச் சொரியாநிற்கும்சூரியனானவன் மலைகளையொத்த தோள்களையுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மனமானது மகிழ்ச்சி யடையும் வண்ணம் சந்திரனை யாதொரு களங்கமுமில்லாது இங்குகொண்டு வருவேனென்று கூறிக்கொண்டு வீதியாகிய ஆகாயமார்க்கத்தினைத் தொடர்ந்து மேல்பாற்சமுத்திரத்தினுள் தூதுபோன வரைப் போன்று போய்ச்சேர்ந்தான். (௧௪௭)

வெய்ய வன்கடற் புகுந்தபின் செக்கர்மே லெழுந்த
துய்ய மென்மறை முகம்மதின் மொழியிலொன் றதனைப்
பொய்யென் பார்கிளை யொடுமுடல் பொரிதரப் புழுங்கி
யைய மற்றெழு நரகிடை நெருப்பென லாமால்.

(இ-ள்.) சூரியனானவன் அவ்வாறு மேல்பாற் சமுத்திரத்தில் போய் நுழைந்தபின்னர் ஆகாயத்தின்கண்செவ்வானமானது உதயஞ் செய்தது, உஜ்ஜீவியாநிற்கும் மெல்லிய புறுக்கானுல்அலீமென்னும் வேதத்தையுடைய நமதுநாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்ல ல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வார்த்தைகளில் ஒன்றையேனும் பொய்யென்று சொல்லப்பட்டவர்கள் தங்கள் குடும்பத்தோடும்தேக மானது பொரியும்படி சந்தேகமில்லாது புழுக்கமுற்றுஎழும்புகின்ற நரகலோகத்தின் கண்ணுள்ள அக்கினியென்று சொல்லலாம். ()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிதரும் பருதிக் கதிர்களைத் தேக்கி
மேற்கடல் கொப்பளித் தனபோற்
றெரிதரச் சேர்ந்து செக்கர்வின் ணிலங்கச்
செழு மறை புகழ்முகம் மதுபூச
சொரிமது விதிர்க்கும் பொரியரைத் தருக்கள்
சுற்றிய வரைமிசை யேறி
மரைமலர் பொருவா விருகர மேந்தி
வல்லவன் றனையிரந் துரைப்பார்.

(இ-ள்.) விரிந்த சூரியனானவன் தனது கிரணங்களைச் சுருக்கி மேல்பாற் சமுத்திரமானது கொப்பளித்ததுபோன்று யாவருக்கும் விளங்கும் வண்ணம் போயடைந்து செவ்வானமானது ஆகாயத்தின் கண் பிரகாசிக்கச் செழுமையான நான்கு வேதங்களும் புகழாநிற் கும் நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலை கிவசல்ல மவர்கள் புஷ்பங்களானவை பொழிகின்றநறவமானது விதி ர்க்கும் முட்களைக்கொண்ட அரையினையுடைய விருக்கங்களினாற் சூழப்பெற்ற அந்த அபூகுபைசென்னும் மலையின்மீது ஏறித் தாம ரை மலர்களும் ஒப்பாகாத தங்களி னிருகைகளையு முயர்த்தி வல்ல வனு அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவிடத்தில் இரந்துகூறத் தொடங்கினார்கள். (௧௪௯)

ஆதிநா யகனே யழிவிலா தவனே
யளவறுத் திடற்கரும் பொருளே
சோதியே யெவையி னுவமையில் லவனே
தொடரின்ப துன்பமற் றவனே,

நீதியே குபிரத் தெளிதரும் படியா
　　னினைத்தவை முடித்திடென் றுருகிக்
கோதற மனமும் வாக்குமொன் ருகிக்
　　குதாதனை யடிக்கடி புகழ்ந்தார்.

(இ-ள்.) யாவற்றிற்ரும் முதன்மையான நாயகனே ! ஒருக்காலமும் அழியாதவனே! அளவிட்டுக் கூறுதற் கருமையாகிய வஸ்துவே! ஒளிவானவனே! எவற்றினலும் சொல்லா நிற்கும் உவமானத்தில் அமைவில்லாதவனே!யாவரையும் தொடருகின்ற இன்பதுன்பமில்லாதவனே! நீதியானவனே! காபிர்கள் தெளியும் வண்ணம் யான் எனது மனசின்கண் சிந்தித்தவைகளை நிறைவேற்றித் தருவாயாக வென்று சொல்லிக் குற்றமற மனமும்வாக்கு மொன்ருயுருக்கமுற்று குதாவாகிய ஹக்கு சுபுகான குவத்த ஆலாவை அடிக்கடி துதித்தார்கள். ()

இரந்துநின் றதற்கா யாதிவல் லவனு
　　மிருட்டறை மலக்கினைக் கூவிப்
பரந்திட விருளிற் சிறிதெடுத் தூசித்
　　துளையினுட் படவிடு கென்னத்
திருந்திட வுரைப்ப அம்மலக் கெழுந்து
　　செறியிருட் பிழம்பினிற் சிறிது
பொருந்திட விடுத்தார் ககனமும் புவியும்
　　பொதுவற விழுங்கிய தன்றே.

(இ-ள்.) நாயகம் நபிமுகம்மது றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு கேட்டு நின்றதற்காக யாவற்றிற்கும் முதன்மையுற்றவல்லவனுனஜல்லஜலாலகுவத்த ஆலாவானவன் இருட்டறையினது மலக்கைக்கூப்பிட்டு ஊசித்துளையி னுள்படும் வண்ணம் செவ்வையாய் எவ்விடமும்பரவும்படி இருளில் கொஞ்சமெடுத்து விடுவீராக வென்று கற்பிக்க அம்மலக்கானவரெழுந்து நெருங்கிய இருள்பிழம்பில் நின்றும் கொஞ்ச விருளைப் பொருந்தும்படி விட்டார். அவ்விருளானது வானலோகத்தையும் பூலோகத்தையும்ஏகமாய் விழுங்கிற்று.

மனுநெறி பிழைத்த அபுஜகல் கொதித்த
　　மனத்தினு மிருண்டமைக் கடலொன்
றினமணி கொழிக்கும் பரவையுங் கிரியு
　　மெடுத்தகட் டிடைமடுத் தெரியுங்

தினகர னுலவும் விண்ணினைத் தடவித்
திசைதிசை யிடனறச் செருகித்
தனிநிலை பெருகும் பிரளய மெனலாய்ச்
சகத்தினிற் பரந்தவல் லிருளே.

(இ-ள்.) அன்றியும், கொடுமையைக்கொண்ட அவ்விருளானது மனுஷியர்களின் சன்மார்க்கத்தில் நின்றுந்தவறிய அபூஜகிலென்பவனின் கொதிக்கப்பெற்ற மனத்தைப் பார்க்கிலும் மிகவும் கருத்த ஒரு கரிய சமுத்திரமானது கூட்டமாகிய இரத்தினங்களைத் தனது அலைகளென்னுங் கைகளினால் கொழியாநிற்கும் கடலையும்,மலைகளையும், எடுத்துத் தனது வயிற்றின்கண் நிரப்பிப் பிரகாசிக்கின்ற சூரியனானவன் உலவாநிற்கும் ஆகாயத்தைத் தடவிக்கொண்டு எண்டிசைகளிலும் இடமில்லாதுநெருங்கி ஒப்பற்ற தன்னிலைமையானது பெருகுகின்ற பிரளயத்தைப்போன்று உலகத்தின்கண் பரந்தது. (கரு௨)

கரைபுரளிருளா லக்கினிக் கொழுந்துங்
கரிந்துகண் ணினிலொளி மறுகி
விரிகதிர் மணியின் குலங்களு மிருண்டு
விசும்பிடை கணங்களு மறைந்து.
சொரிமத கரியும் பரியொடி ரதமுந்
துவண்டணி மறுகிலந் தோன்று
தொருவருக் கொருவர் வதனமுந் தெரியா
துலகமெங் கணுமயங் கியதே.

(இ-ள்,) அவ்விதம் பரந்த கரைபுரளாநிற்கும் அவ்விருளினால் காடாக்கினியின் கொழுந்தும் கரிதலுற்றுக் கண்களிலுள்ள பிரகாசமும் மறுக்கமடைந்து விரிந்த கிரணங்களையுடைய இரத்தினக் கூட்டங்களும் இருண்டு ஆகாயத்தின் கண்ணுள்ள நட்சத்திரங்களும் மறைவாகி மதங்களைச்சொரிகின்ற யானைகளும் குதிரைகளும் தேர்களும் துவள்தலுற்று அழகிய தெருக்களும் வீடுகளும் இன்ன இடத்திலிருக்கின்றன வென்று விளங்காது ஒருவருக் கொருவர் முகங்களும் தெரியாது உலகமுழுவதும் மயக்கமுற்றது. (கருங)

முடிவுறுங் காலத் தியற்கையேர் வலது
முகம்மதைக் குறைபட நினைத்த
கொடியவர் பொருட்டால் விளைத்திடும் பவமோ
குவலயத் துதித்திடு மாந்த

ரிடருற வெவர்க்குங் கண்ணொளி மழுங்கி
யிருந்ததோ மதிமயங் கியதோ
படர்விட முலகிற் பரந்ததோ வெவையென்
றுரைப்பரி தெனப்பதை பதைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு மயக்கமுறவே ஜனங்களியாவரும் இவ்விதம்வாய்த்த இஃது கடைசிநாளென்னும் கியாமநாளினது இயற்கையோ? அல்லது முகம்மதென்பவரைக் குற்றமுறும்படி சிந்தித்த கொடிய சத்துருக்களின் பொருட்டால் உண்டான பாதகமோ? அல்லது இந்தப் பூமியின்கண் தோற்றமாகிய ஜனங்கள் துன்பமுறும்படி யாவர்களுக்கும் தங்களின் கண்களினது பிரகாசமானது தேய்ந்திருந்ததோ? அல்லது அவர்களின் புத்திதான் மயங்கிவிட்டதோ? அல்லது விரிந்தவிடமானது இவ்வுலகத்தின்கண் பாவியதோ? இவற்றில் நாம் எவையென்று சொல்லுவதரிதென்று மிகவும் துடித்தார்கள்.

கனமுகிற் கவிகை முகம்மது விளைத்த
காரண முளதிதன் றென்பார்
தினகர னிறந்து பேரிரு ளரசு
செலுத்திடுங் காலமீ தென்பார்
மனமகிழ் தரவந் தடைந்தவ ரெவரு
மனையிடம் புகலரி தென்பா
ரினமொரு கடிகைப் பொழுதினிற் றெரியா
திறந்திடுங் காலமீ தென்பார்.

(இ-ள்.) அன்றியும், பெருமைபொருந்திய மேகக்குடையையுடைய நாயகம் நபிமுகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உண்டாக்கும்காரணமுள்ளது. இதுவல்லவென்றுசொல்லுவார்கள். இஃது சூரியனிறந்து பெரிய அந்தகாரமானது அரசுசெலுத்தாநிற்கும் காலமென்று சொல்லுவார்கள். மனக்களிப்புட னிங்கு வந்து சேர்ந்தவர்களியாவர்களும் தங்களது வீட்டின்கண் போய்ச்சேர்வது அரியகாரியமாகுமென்று சொல்லுவார்கள். இஃது இன்னம் ஒருநாழிகை நேரத்தில் ஒன்றும் விளங்காது யாவர்களும் மரணித்துப்போகுங் காலமென்று சொல்லுவார்கள், (௧௫௫

அன்பினர்க் கிரங்காத் தருகனான் கொடிய
　னபூஜகு லொழியுநா ளளவுந்
துன்பமு மொழியா தினம்பெருங் கேடு
　சூழ்தர விளைந்திடு மென்பா
ரின்புறு நபிசொற் கிணங்கிலா ரிருக்கு
　நகரினு மிருக்கொணு தென்பார்
வன்பெரு மிருடீர்ந் துய்விரே னடக்கு
　மாற்றமு மிஃதென மதிப்பார்.

(இ-ள்.) அன்றியும், அன்பர்க்கிறங்காத அஞ்சாத நெஞ்சையுடைய கொடியவனான அபூஜகிலென்பவன் இவ்வுலகத்தைவிட்டுத் தொலைந்துபோகும் நாள்வரைக்கும் வருத்தமும் தொலையாது. இன்னம் பெரிய கேடுகள்சூழ உண்டாகுமென்றுசொலுல்வார்கள். இனிமைபொருந்திய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் வார்த்தைகளுக்குச் சம்மதப்படாதவர்கள் வாசஞ்செய்யும் ஊரின்கண்ணும் வசிக்கக்கூடாதென்று சொல்லுவார்கள். கொடுமை தங்கிய பெரிய இந்த இருளானது ஒழிந்து ஜீவிப்பீர்களேயானல் நடந்துகொள்ளும் சமாச்சாரமும் இஃதென்று தங்க ளிருதயத்தில் மதித்துச் சொல்லுவார்கள். (௧௫௬)

மல்விதம் பயின்று திரடரும் புயத்தார்
　முகம்மதைத் தினந்தொரும் பகைத்துச்
செல்லுழி மறுத்த அபூஜகி லழைத்த
　திமஸ்கினுக் கிறைவனைச் சினந்து
கொல்விதச் சூழ்ச்சி இதுகொலென் றுரைப்பார்
　குதாதிரு வருளினல் வானில்
லெவ்விதப் புதுமைக் காரண மலது
　வேறுதுன் பிலையென விரிப்பார்.

(இ-ள்.) அன்றியும், இஃது யுத்தத்தன்மையிற் பழகித் திரட்சியைப்பெற்ற தோள்களையுடையவர்களான நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பிரதிதினமும் விரோதித்து அவர்கள் செல்லாநிறகும் மார்க்கங்களில் தடைசெய்த அபூஜகி லென்பவன் கூப்பிட்ட திமஸ்கு நகரத்தி னதிபதியாகிய ஹபிபென்வனைக் கோபித்துக் கொல்லுகின்ற விதத்தைக்கொ

ண்ட நட்பமென்று சொல்லுவார்கள். அவ்வாகு சுபுகானகு வத்த ஆலாவின் அழகிய கிருபையினல் வானலோகத்தின்கண் வெல்லுகிறன் தன்மையினது அற்புதங்களையுடைய காரணமல்லாது வேறே யாதொரு துன்பமு மில்லையென்று விரித்துச் சொல்லுவார்கள். ()

உயிரினும் பிரியாத் துணைவரைக் காணு
 துலைந்திடு மடந்தையர் சிலரே
செயிரறு மகவைத் தவறவிட் டலைந்து
 திரிந்திடு மடந்தையர் சிலரே
குயில்புரை யமுதக் கிளிமொழி மடவார்
 குழூப்பிரிந் தழுங்கவர் சிலரே
மயலுறழ்ந் தணியும் பணியிழந் திரங்கி
 மறுகுறு மடந்தையர் சிலரே.

(இ-ள்.) அன்றியும், தங்களுயிரைப் பார்க்கிலும் மிகவும் நீங்காத தங்களின் நாயகன்மாரைக் கண்களாற் பாராது உலைவுறும் பெண்கள் சிலர், குற்றமற்ற தங்களின் மக்கண்மாரைத் தவறும்படி விட்டு அலைந்து திரியும் பெண்கள் சிலர், குயிலையும் அமுதத்தையும் கிளியையுமொத்த இனிய வார்த்தைகளையுடைய மாதர்களின் கூட்டத்தை விட்டும் நீங்கி வருத்தப்படுபவர் சிலர், மயக்க மிகுத்து தாங்கள் தரியாநின்ற ஆபரணங்களை யொழியப்பெற்று அழுது துன்பமுறும் பெண்கள் சிலர். (கருஅ)

தெரிதரா விருளா லரசருந் தேர்ச்சித்
 துணைவரும் வரிசை மன்னவரும்
பரியினின் றிழிந்த வீரரு மற்றப்
 படைக்களத் தவர்களு நகரிற்
பெருகிய மாந்த ரனைவரு நிறைந்த
 பெண்ணினத் துடன்றலை மயங்கி
விரிதருந் தலைமத் தெறிதருந் தயிரின்
 மிக்குடைந் தறமிடைந் தனரே.

(இ-ள்.) அவ்வித விளக்கமற்ற அந்தகாரத்தினல் இராஜர்களும் மந்திரிமார்களும், சிறப்பையுடைய அரசரும் குதிரையினின்றிறங்கிய வீரர்களும் மற்ற படைக்களத்தை யுடையவர்களும் அந்த மக்கமாநகரத்திலிருந்து கூடிய ஜனங்க ளியாவரும் பூரணப்பட்ட பெண்

களினது கூட்டத்துடன் தலைமயங்குதலுற்று விரித்த சிரத்தையு டைய மத்தை வீகிய தயிரைப்போல மிகவருந்தி அதிகத் துன்பப் பட்டார்கள். (கருகூ)

புதுநற வருந்தி வரிச்சுரும் பிரைக்கும்
பொழிலுடைப் பொருப்பிடைத் திரண்ட
முதுமரத் துறைந்த பறவைக ளனைத்து
முயங்கிய பெடையினைக் காணு
ததிர்தரும் வாய்விட் டந்தர முழுது
மாற்றுவ தகுமது நொடிக்குண்
மதியழைத் திடுவ ரையுற லெனுஞ்சொன்
மானிடர்க் குரைப்பன போலும்.

(இ-ள்.) மேலும், இரேகைகளைக் கொண்ட வண்டினங்கள் புதி யமதுவைக் குடித்துப் பாடாநிற்கும் சோலைகளையுடைய அந்த அபூ குபைசென்னும் மலையின்கண் திரட்சியுற்ற முதிய மரங்களில் தங்கி யிருக்கும் பட்சி ஜாதிக ளியாவும் தாங்கள் தழுவிய பெடைகளைக் காணாது ஒலிக்கின்ற தங்களின் வாய்களைத் திறந்து ஆகாய முழு வதும் சத்திப்பது, நாயகம் அகமது றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் சந்திரனை இங்கு நொடிநேரத்தினகம் வரும்படி செய்வார்கள். நீங்கள் சந்தே கப் படவேண்டாமென்னும் வார்த்தைகளை அங்கு கூடியிருக்கும் மானிடர்களுக்குக் கூறுவன நிகர்க்கும். (கஙா0)

விலங்கினங் கலையப் பறவைகண் மறுக
மேதினிப் படைப்புள வெவையுங்
கலங்கிடக் கலங்கித் திமஸ்கினுக் கரசன்
கண்கொளாப் புதுமையாய்ச் சிறந்த
நிலங்கொள நிறைந்த மறைமுகம் மதுவை
நெஞ்சுறப் புகழ்ந்துமுன் னிலையாய்ப்
பலன்கொளும் பதமும் படைத்தன மென்னப்
பண்பொடு களித்தெழுந் திருந்தான்.

(இ-ள்.) அன்றியும், மிருகக் கூட்டங்கள் கலையவும், பட்சிஜாதி கள் மறுக்கமுறவும், இந்த வுலகத்தின்கண்ணுள்ள படைப்புகளியா வும் கலக்கமடையவும், தானுங் கலக்கமடைந்து திமஸ்கு நகரத்தி னதிபதியாகிய ஹபீபென்பவன் கண்கொள்ளா ஆச்சரியமாய்ச் சிறப்

புத் தங்கிய இம்மானிலமானது கொள்ளும்படி நிறைவுற்ற புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை மனமானது பொருந்தும் வண்ணம் துதித்து முதனிலைபாக மோட்சத்தைக் கொள்ளும் பதவியும் படைத்தோமென்று பண்புடன்மகிழ்ந்துஎழுந்திருந்தான்

மீனக டுரிஞ்சுங் குவட்டிடை வடிவாய்
  விளங்கிய முகமமதை விளித்து
வானமட் டிருண்ட கொடியவல் லிருளை
  மறைபட நொடியினின் மாற்றிப்
பானலங் கொழிக்கு நிறைந்தவெண் மதியைப்
  பரவையின் முகட்டெழப் படுத்தி
யீனமற் றிவணில்வரவழைத் திடுக
  வென்றனன் திமஸ்கினுக் கிறைவன்,

(இ-ள்.) அவ்வித மெழுந்திருந்த திமஸ்கு நகராதிபதியாகிய ஹபீபென்பவன் நட்சத்திரங்கள் தங்களின் அகட்டை யுரிஞ்சாநிற்கும் சிகரத்தினிடத்து அழகோடும் விளக்கமுற்ற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கூப்பிட்டு ஆகாயமட்டு மிருட்டிய கொடிதான வலிய அந்தகாரத்தை நொடிநேரத்தில் மறைந்து போகும்படி இல்லாமலாக்கிப் பாலினது வெண்டன்மையை கொழிக்காநிற்கும் பூரணப்பட்ட வெள்ளிய சந்திரனைக் கீழ்பாற் சமுத்திரத்தினது உச்சியில் எழும்வண்ணம் செய்து களங்கமில்லாது இங்கு வரவழையுங்களென்று சொன்னுன் ()

திரைத்தடத் தலர்த்தேன் சேலினஞ் சிதறுந்
  திமஸ்கினுக் கிறையவன் றெரிய
வுரைத்தசொ லுளத்து டிருத்திநந் நபியு
  முடையவ னிடத்தினை நோக்கி
நிரைத்தவல் லிருளைச் சடுதியி லகற்றி
  நீணிலாக் கதிர்கள்கொப் பளிப்பத்
தரைத்தலம் புகல முழுமதி யழைத்துத்
  தருகவென் றினிதுரைத் தனரே.

(இ-ள்.) அலைகளைக்கொண்ட வாவிகளில் வசிக்காநிற்கும்கெண்டைமீன் கூட்டங்கள் புஷ்பங்களிலுள்ள மதுவைச் சிந்துகின்ற திமஸ்குநகராதிபதியான ஹபீபென்பவன் அவ்வாறு விளங்கும்படிகூ

றியவார்த்தைகளை மனதின்கண் இருக்கச்செய்து நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் யாவற்றையும் சொந்தமா யுடையவனுன அல்லாகுசுபுகானகுவத்தஆலாவின் சந்நிதானத்தைப் பார்த்து வரிசையாக்கப்பட்ட கொடியஅந்தகாரத்தை விரைவில் இல்லாமலாக்கி நீண்ட பிரகாசத்தையுடையகிரணங்களைக் கொப்பளிக்கவும், இப்பூலோக முழுவதும் துதிக்கவும், பூரணச் சந்திரனை யழைத்துத் தருவாயாக வென்று இனிமையோடுங் கேட்டார்கள். (கசுா)

இறையவன் றனைநன் னயமனத் திருத்தி
யிரந்துநின் றிடும்பொருட் டதனு
லறைதருந் திரைமுத் திறைத்தபைஞ் சலதி
யகட்டிடை யிருந்துவெண் கலைக
ணிறைபடப் பரப்பி விசும்புறத் தடவி
நெடும்புவி யடங்கலு நபினா
மறைபடாப் புகழின் கொழுந்தினிற் பூத்த
மலரென வெழுந்தது மதியம்

(இ-ள்) இறைவனை ஹக்குசுபுகானகுவத்த ஆலாவை அவ்வாறு நல்ல நபத்தையுடைய மனதில் இருக்கச்செய்து வேண்டி நின்றகாரணத்தினுல் சந்திரனைனது ஒலியாநிற்கும் அலைகளானவை முத்துக்களை இறைக்கப்பெற்ற பசிய சமுத்திரத்தினது வயிற்றின்கண்ணிருந்து வெள்ளிய கலைகள் நிறையும்படி விரித்துக்கொண்டு ஆகாயத்தினிடத்து பொருந்தும் வண்ணம் தடவி நெடியஇந்தப்பூலோக முழுவதும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மறையாத கீர்த்தியினது கொழுந்தில்மலர்ந்தமலரைப்போலஎழுந்தது

திணிசுடர்ச் சுவனத் தரம்பைய ரமரர்
தினந்தொறும் பரவிய நபியை
ரணிபெறத் திமஸ்குக் கிறைமனங் களிப்ப
வவனியில் தீன்பயிர் படராப்
பணிநெடும் படத்திற் கிடந்தபா ருடுத்த
பரவைவேங் தனுக்குவெண் டரள
மணியினி லமைத்த செழுமுடி நிகர்ப்ப
வந்தது நிறைந்தவெண் மதியம்.

(இ-ள்,) அன்றியும். திண்ணிய பிரகாசத்தைக்கொண்ட சுவர்க்கலோகத்தினது அரம்பையர்களாகிய கூறுலீன்களும் தேவர்களான மலாயிக்கத்துமார்களும் பிரதிதினமும் வணங்கும் நபினாகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சிறப்புப்பெறவும், திமஸ்கு நகராதிபதியாகிய ஹபீபென்பவனின் மனமானதுமகிழவும், இவ்வுலகத்தின்கண் தீனுல்இஸ்லாமென்னும் பயிரானது படரவும், ஆதிசேடனது நெடிய பணாமுடியினிடத்து கிடக்கப்பெற்ற பூமியை உடுத்த சமுத்திர இராஜனுக்கு வெண்ணிறத்தையுடைய முத்துக்களினாற் செய்தசெழிய கிரீடத்தை நிகர்க்கப் பூரணப்பட்ட வெள்ளிய சந்திரனானது வந்தது. (௧௬௫)

இடனறக் கலைகள் பெருகிய மதிய
மெங்கணுங் கதிர்கள்விட் டெறிந்து
கடுவிட மனைய விருட்குல மறுத்துக்
ககன்முகட் டொளிசுதை தீற்றி
மடலவிழ் குவளை மதுமலர் மலர்த்தி
முகம்மதைத் தெளிதர நோக்கி
மிடலுடைக் குபிர ரகமுகங் கருக்கி
விண்ணகத் தினிதெழுந் ததுவே.

(இ-ள்.) அன்றியும், இடமில்லாது கிரணங்கள் பெருகப்பெற்ற சந்திரனானது எல்விடத்தும் தனது கலைகளைவிட்டு வீசிக் கடிய விஷத்தை யொத்த இருட்கூட்டத்தை இல்லாமல் அறும்படி செய்து ஆகாயத்தினதுஉச்சியில்பிரகாசத்தைக்கொண்டவெண்ணிறத்தைத் தீற்றி இதழ்கள் அவிழாநிற்கும் குவளையினது தேனையுடைய புஷ்பங்களை அலரப்படுத்தி நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைத் தெளியும் வண்ணம் பார்த்து வலிமையையுடைய காபிர்களின் மனத்தையும் முகத்தையும் கருகச்செய்து ஆகாயத்தினிடத்து இனிமையுடன் எழுந்தது. (௧௬௬)

விண்ணகத் தமுதங் கான்றவெண் மதிய
மீனடு மதியினிற் றிகழ்ந்து
மண்ணக நோக்கி மெலமெலத் தாழ்ந்து
மக்கமா நகரியிற் கஃபா

நண்ணிவின் முகட்டி னடுநிலை நோக்கி
  நலங்கெழுங் கலைநிலா வொழுகப்
பண்ணுதற் கியைந்த வெள்ளிவெண் குடம்போற்
  பரிவுற வினிதுவந் துறைந்த.

(இ-ள்.) ஆகாயத்தினிடத்து அவ்வாறு அமுதத்தைச் சொரிந்தவெள்ளிய சந்திரனனது நட்சத்திரங்களினது மத்தியிலுள்ள மதியத்தைப்போலும்பிரகாசித்துப் பூலோகத்தைக்கண்டு மெல்ல மெல்லவிறங்கித் திருமக்கமா நகரத்தினது கஃபத்துல்லாவை நெருங்கிவாலத்தினது உச்சியின் மத்திய நிலையைப் பார்த்து நலமானதுசெழிக்கப்பெற்ற கிரணங்களினது பிரகாசஞ்சிந்தும்படி செய்யுதற்குப் பொருந்திய வெண்ணிறத்தைக் கொண்ட வெள்ளியினலானகுடத்தை நிகர்த்து அன்போடும் இனிமையுடன் வந்து தங்கியது.

படியினிற் சுவனப் பதிநிகர்த் தனைய
  பழமறைப் பள்ளியிற் சிறந்த
கொடுமுடி யெனலா யுறைந்த வெண்மதியங்
  குவலயத் திடத்தினிற் றாழ்ந்து
வடிவுறுங் கருபாவாயிலி னெதிர்ந்து
  மகிழ்வொடு மெழுதரம் வலம்வந்
துடல்குழைத் தரிதி னுள்ளுறப் புகுந்தங்
  குறைந்தது திசைதிசை யொளிர.

(இ-ள்.) இப்பூலோகத்தின்கண் சொர்க்கலோகத்தைப் போன்றபழய வேதங்கள் கூறும் பள்ளியாகிய அக்கஃபத்துல்லாவில் சிறப்புத் தங்கிய சிகரமென்று சொல்லுதற்காய் அவ்விதம் தங்கிய வெள்ளிய அந்தச் சந்திரனனதுப் பூலோகத்தி னிடத்து இறங்கி அழகுபொருந்திய அக்கஃபாவின் திருவாயிலி லெதிர்த்து மகிழ்ச்சியோடும் எழுதரம் பிரதக்கண மென்னும் வலம் வந்துதனதுசரீரத்தைக்குழையும்படிசெய்து அரிதாக உள்ளே பொருந்தும் வண்ணம்புகுந்து எண்டிசைகளிலும் பிரகாசிக்கும்படி அங்கே தங்கியது. ()

நறைகுடி புகுந்த கருபத்துல் லாவி
  னடுவிருந் தொளிருமா மதிய
மிறைவனைப் பரிவி னெடுமனப் பயத்தா
  லிருந்தரை யிடத்தினிற் றெழுது

முறைமுறை பணிந்து பலதரம் புகழ்ந்து
முகம்மது நபியையும் வாழ்த்தி
நிறைமதிக் கதிர்த்தாள் வாயிலைக் கடந்து
நின்றது நிலம்பிறங் கிடவே.

(இ-ள்.) வாசனையானது குடியாகப் புகுதப்பெற்ற அந்தக் கஃபத்துல்லாவினது மத்தியிலிருந்து அவ்வாறு பிரகாசியாநிற்கும் மகத்தாகிய சந்திரனுனது மன ஆச்சத்தினுல்அன்போடும் இறைவனுன அல்லாகு சுபுகானகு வத்தஆலாவைப் பெரிய இந்தப் பூமியினிடத்து வணங்கி வரிசை வரிசையாகத் தாழ்ந்து பலதடவை துதித்து நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களையும் வாழ்த்திப் பூம்ணமதியினது பிரகாசத்தைக் கொண்ட தாளையுடைய அக்கஃபாவின் வாயிலைத் தாண்டி உலக முழுவதும் ஒளிரும்வண்ணம் நின்றது. (கசுகூ)

முதிர்கதி ரெறித்த கருபத்துல் லாவின்
முன்றிலிற் சிறந்தவெண் மதிய
மதுவிரி பொழில்சூழ் வரையிடை நோக்கி
வந்துமா மறைமுகம் மதுவை
யெதிர்தரப் பணிந்து சலாமெடுத் தோதி
யிணைமரை மலர்ப்பதம் போற்றி
விதியவன் றூதர் பேரினிற் கவிமா
விரைந்தடுத் துரைத்துநின் றதுவே.

(இ-ள்.) முற்றிய கிரணங்களை வீசிய அந்தக் கஃபத்துல்லாவினது முற்றத்தில் அவ்விதம் சிறப்புற்றுநின்ற வெள்ளிய சந்திரனுனது நறவத்தை யொழுகப் பெற்ற சோலைகள் வளைந்த அந்த அபூகுபைசென்னும் மலையி னிடத்தைப் பார்த்துவந்து மகத்தாகிய புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபாசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களை யெதிர்த்து வணங்கிச் சலாமெடுத்துச் சொல்லித் தாமரை மலரை யொத்த இரு திருவடிகளையும் துதித்து விதியவனுன ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் தூதராகிய அந்நாயகம் றசூல் பேரில் விரைவாய்க் கவிமாவை யெடுத்துக் கூறி நின்றது, (களO)

திருந்திநற் கலிமா வோதிமுன் னெதிர்ந்த
சிறப்பினை நோக்கிநன் னெறியாய்
வருந்திடா தெனது மரவினை யெவர்க்கு
மவுலென முகம்மது மவுலப்
பொருந்திய மனத்திற் களிப்பொடும் வாக்கிற்
புகழொடும் பொழிநிலா மதிய
மிருந்தவ ரெவர்க்குந் தெரிதர வறபி
யிசையினிற் றெளிதர வியம்பும்.

(இ-ள்.) கிரணங்களைச் சிந்துகின்ற அந்தச் சந்திரனானது அவ்வாறு செவ்வையாய் நன்மை பொருந்திய கலிமாவைக் கூறி முன்னாலெதிர்ந்த சிறப்பை நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் பார்த்து வருந்தாது யாவருக்கும்எனது வரவினை நல்ல ஒழுங்காய்ச் சொல்லுவாயாக வென்று கற்பிக்கப், பொருந்தமுற்ற இருதயத்தின்கண் மகிழ்ச்சியோடும் வாக்கினில்கீர்த்தியோடும் அங்குகூடியிருந்த அனைவர்களுக்கும் விளங்கும்படி அறபுப் பாஷையினால் தெளியும் வண்ணம் கூறத் தொடங்கிற்று.(கஎக)

நெடியவன் படைப்பெப் பொருட்குமுன் னொளியாய்
நின்றுபி னப்துல்லா வயிற்றில்
வடிவுறு மரசா யுதித்தநன் னபியே
முகம்மதே தனியவன் றூதே
படியினுங் கலிமாப் பகர்ந்தவர் சுவனப்
பதியடை குவர்பக ராதார்
கெடுநர கடைவர் சரதமென் றெவர்க்குங்
கிளத்திநின் றதுசெழு மதியம்.

(இ-ள்) அவ்வாறு கூறத் தொடங்கிய செழிய அந்தச் சந்திரன் நெடியவனான அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின் படைப்புகளாகிய எவ்வஸ்துவுக்கும் முதலொளியாய் நின்று பின்னர் அப்துல்லா அவர்களின் வயிற்றில் அழகுபொருந்திய அரசாய்த்தோற்றமுற்ற நன்மையைக்கொண்ட நபியே! முகம்மதென்னும் அபிதானத்தை யுடையவரே! தனியவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் தூதானவரே! இவ்வுலகத்தின்கண் உங்களது கலிமாவைக் கூறுபவர்கள்

சொர்க்க லோகஞ் சேர்வார்கள். கூறுதவர்கள் கெட்ட நரகலோகம் போய்ச் சேர்வார்கள். இஃது சத்தியமென்று யாவர்களுக்கும் கூறி நின்றது. (௧௭௨)

பாரினி லெவர்க்குந் தோன்றிட மதியம்
பழமறை முகம்மதின் மெய்யிற்
போர்வையிற் புகுந்தங் குரனடு விருந்து
பொருவற விருபகுப் பாகிச்
சீர்பெற வலது கரத்திடை யொருபாற்
செழுமிடக் கரத்தினி லொருபா
லேர்பெற வெழுந்து முகம்மதுக் கெதிரா
யிருபிறை யிலங்கநின் றனவே.

(இ-ள்.) அன்றியும், அந்தச் சந்திரனனது இவ்வுலகத்தினிடத்து யாவர்களுக்கும் விளங்கும் வண்ணம் பழய வேதங்களையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்களின் திருமேனியினது போர்வையின்கண் ணுழைந்து அங்கு மார்பினது மத்தியிலிருந்து ஒப்பற்ற இருபிளவாகிச் சிறப்புப் பெறும்படி ஒரு பங்கு வலதுகையின் கண்ணும் ஒரு பங்கு செழிய இடதுகையின் கண்ணும் அழகாக எழுந்து அந்நாயக மவர்களுக்குமுன்பாய் இரண்டு சந்திரன்கள் பிரகாசிக்கும் வண்ணம் நின்றன. ()

முன்னெதிர்ந் திலங்கு மொருபகுப் பெழுவான்
முரிதிரைக் கடன்முகட் டேகிப்
பின்னொரு பகுப்புக் குடகடற் புகுந்து
பெருவிசும் பிடையினிற் பிறங்கித்
தன்னிரு பகுப்பு மந்தரத் துலவித்
தவணிலாக் கதிரொடுந் தாழ்ந்து
மன்னிய கருபாக் குடுமிமேற் சிறந்து
மறுவறப் பொருந்திய தன்றே

(இ-ள்.) அவ்வாறு முன்னாக எதிர்ந்து பிரகாசியாநிற்கும் ஒரு பிளவானது எழுவாயாகிய கீழ்பாலின் தோற்றுகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தினது உச்சியிற் சென்று மற்றொரு பிளவானது மேல்பால் சமுத்திரத்தில் நுழைந்து பெரியஆகாயத்தினிடத்துவிள

ங்கி இருபிளவும் விண்ணில் உலவி வெள்ளிய கிரணங்களோடு மிற ங்கிப் பொருந்திய கஃபத்துல்லாவினது சிகரத்தின்மேற்களங்கமறச் சிறப்புற்று சேர்ந்தது. (௧௭௪)

உலகெலாம் விளங்கச் செழுங்கதிர் பரப்பி
 யொளிர்தர வயங்குமா மதிய
நிலமிசை யுதித்த முகம்மதே யெவர்க்கு
 நெடியவன் றூதரென் றிசைத்துக்
குலவுமெப் படைப்பு மிவர்தமக் கீமான்
 கொண்டது சரதமென் றறைந்து
மலிதர நபிக்குச் சலாமெடுத் தேத்தி
 வளர்ந்தது வானகத் திடத்தில்.

(இ-ள்.) உலக முழுவதும் விளங்கும் வண்ணம் அவ்வாறு செழிய கிரணங்களை விரித்து ஒளிரும்படி பிரகாசிக்கும் மகத்தான சந்திரனானது இப்பூலோகத்தின்மீது தோற்றமாகிய முஹம்மதென்னும் அபிதானத்தை யுடையவரே யாவர்களுக்கும் நெடியவனான அல்லாகுசுபுகானகுவத்த ஆலாவின் தூதுவரென்று கூறித் தோற்றுநிற்கும் எந்தப் படைப்புகளும் இந்த முஹம்மதென்பவருக்கு ஈமான் கொள்வது சத்தியமென்று புகன்று நாயகம் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குச் சலாமெடுத்துச் சொல்லி மிகவாய்த் துதித்து ஆகாயத்தினிடத்தி லோங்கியது. (௧௭௫)

வானகத் துலவி யமுதவெண் கதிர்க்கான்
 மாநிலப் பரப்பெலாம் பரப்பி
மீனொடுஞ் செறிந்து தன்னர சியற்றி
 விரைவொடு மேற்றிசை படர்ந்து
தேனின மிருந்து புதுநற வருந்திச்
 செழித்திடும் பெருந்தடத் திருந்த
பானலங் குவியக் குடகடற் றிரைக்குட்
 பாய்ந்தது மூதுமுழு மதியம்.

(இ-ள்.) அவ்வாறு ஓங்கிய புதுமையை யுடைய பூரண சந்திரனனது ஆகாயத்தினிடத்து உலவி அமுதத்தின் வெள்ளிய கிரணக்கால்களை மகத்தான இந்தப் பூலோகத்தினது பரப்புக ளெல்லாவற்றிலும் பரவும்படி செய்து நட்சத்திரங்களோடும் பொருந்தித்

தனது அரசாட்சியைச் செய்து சீக்கிரமாய் மேற்றிக்கிற் சென்று வண்டுக்கூட்டங்கள் தங்கிப் புதிப தேனைக் குடித்துச் செழிப்புற்றி டும் பெரியவாவியின் கண்ணிருந்த குவளைப் புஷ்பங்களானவைகுவி யும்வண்ணம் மேல்பாற் சமுத்திரத்தினது அலையினகம் சாடிற்று.

மதிவர வழைத்துக் காரணம் விளைத்த
முகம்மதின் பொருட்டினற் சுவனக்
கதிபத மடைந்தே மெனச்சிர மசைத்து
ஹபீபுதன் னகத்தினிற் களித்து
முதிர்கலை நூலோர் தமக்கெடுத் திசைத்து
முன்முறை விளக்கமும் விளக்கி
யெதிரிவர்க் கிலையென் றதிசயம் பிறப்ப
வெவரொடுந் தனித்தனி யிசைத்தான்.

(இ-ள்) அப்போது ஹபீபென்பவன் சந்திரனை வரச்செய்து காரணத்தை யுண்டாக்கிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பொருட்டினல் சுவர்க்க லோகத்திதை மோட்சமாகிய பதவியை யடைந்தோ மென்று தனது தலையை அசைத்து மனசின்கண் மகிழ்ச்சியடைந்து முற்றிய வேத சாஸ்திரங்களை யுடையவர்களுக்கு எடுத்துச் சொல்லி முன் னுள்ள வேதங்களாகிய தௌறாத்து, இன்சீல், சபூரென்னும் மூன் றினது விளக்கத்தையும் விளங்கும்படி செய்து இந்த முஹம்மதெ ன்பவருக்கு எதிர் ஒருவரு மில்லரென்று ஆச்சரிய முண்டாக யாவ ரோடும் தனித்தனி கூறினன். (௧௭௭)

மாதவன் திமஸ்குக் கிறையுரைத் ததுவு
முகம்மது விளைத்த காரணமும்
பூதலத் தினிற்கண் டறிகொணுப் பெரிய
புதுமையிற் புதுமைகொ லென்னச்
சீதவொண் கமலமுகமலர் மலர்ந்து
தேர்ச்சியிற் றுணைவர்மன் னவரும்
பேதுற லகற்றிச் சிந்தையிற் றேறிப்
பெரியவன் றாதினைப் புகழ்ந்தார்.

(இ-ள்.) மகா தவத்தை யுடையவனுன திமஸ்கு நகராதியாகி ய ஹபீபென்பவன் அவ்வாறு கூறியதும், நாயகம் நபி முகம்மது

முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் செய்தி கர்ணமும், இந்தப் பூலோகத்தினிடத்து நாம் ஒருக்காலமும் பார்த்து அறிய வொண்ணாத பெரிய ஆச்சரியத்தில் ஆச்சரியமென்று அரசர்களும் மந்திரிமாரும் குளிர்ச்சிதங்கிய ஒள்ளிய தாமரை மலர்போன்ற முகமானது மலர்தலுற்று தங்களின் மயக்கத்தை மாற்றி மனசின்கண் தேர்ச்சியடைந்து பெரியவனான அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின் தூதுவராகிய அந்நபிநாயகமவர்களைத் துதித்தார்கள்.

மருவலர்க் கரியே றெனுந்திமஸ் கிறைவன்
மனக்களிப் புடனெழுந் திருந்து
குருமுகம் மதுதம் மிணையடி மலரைக்
கொழுமலர்க் கரத்தினாற் றடவி
யிருவிழி குளிர வைத்துமுத் தமிட்டீ
மானினை யுளத்தினி லிருத்தித்
திருமுக மலர்ந்து மணியெயி றிலங்கச்
செவ்விதழ் திறந்துசெப் புவனால்

(இ-ள்.) அன்றியும், சத்துராதிகளாகிய யானைகளுக்கு ஆண் சிங்கத்தை நிகர்த்த திமஸ்கு நகராதிபதியான ஹபீபென்பவன் மனமகிழ்ச்சியோடும் எழுந்திருந்து குருவாகிய நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் இரு திருவடிகளாகிய தாமரைமலரைச் செழிய தனது மலர்க் கரத்தினால் நீவி இரண்டு கண்களும் குளிர்ச்சியடையும்படி அத் திருவடிகளில் வைத்து முத்தமிட்டு இருதயத்தின்கண் ஈமானை இருக்கச்செய்து அழகிய முகமானது மலர்ச்சியுற்று முத்தைப்போன்ற பற்களானவை பிரகாசிக்கும்வண்ணம் செவந்தவாயினது அதரங்களைவிரித்துச் சொல்ல ஆரம்பித்தான். (௧௭௬)

ஆதிதன் றூதே பேரின்ப விளக்கே
யமருல கினுக்குநல் லரசே
மாதலத் தேவர்க்கும் பவக்கடல் கடப்ப
வருமொரு திருமரக் கலமே
தீதற வெனது கருத்துறு மறிவே
தீனிலை நிறுத்துநா யகமே
பூதரத் துறைந்த முழுமணிச் சுடரே
புண்ணியர் திரண்டமெய்ப் பொருளே.

(இ-ள்.) யாவற்றிற்கும் முதன்மையான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் தூதே! பேரின்ப வீட்டினது தீபமே! தேவர்களாகிய மலாயிக்கத்து மார்களின் சொர்க்க லோகத்திற்கும் நன்மையைக் கொண்ட எந்தலே! மகத்தான இந்தப் பூலோகத்தின்கண் யாவருக்கும் பாவமாகிய சமுத்திரத்தைத் தாண்டுவதற்கு வந்த ஒப்பற்ற தெய்விகந் தங்கிய மரக்கலமே! குற்றமற எனது கருத்தினிடத்துப் பொருந்திய கதியே! தீனுல் இஸ்லாமென்னும் மெய் மார்க்கத்தினது நிலைமையை என்னும் நிற்கச் செய்யும் நாயகமே! மலையின் மீது வைகிய முழுமையான மணி விளக்கே! புண்ணியமானது திரட்சியுற்ற சத்தியவத்துவே! (கஅ0)

உமதுரை திருத்து மவர்கள்பொற் பதியோ
ருமதுரை படிறெனவுரைத்தோர்
தமரொடு நரகிற் புகுவர்நும் மரிய
தண்ணளி யெவரறி குவரிந்
நிமிர்தருங் குடுமிக் கிரியினின் றிறங்கி
நிறைமணி மாளிகை புகுமென்
றமரரும் புகலு முகம்மதுக் குரைத்தா
னணிமதிள் திமஸ்கினுக் கதிபன்.

(இ-ள்.) உங்களது வார்த்தைகளை மனசின்கண் செவ்வைப் படுத்துவோர்கள் சுவர்க்கலோகத்தை யுடையவர்கள். உங்களது வார்த்தைகளைப் பொய்யென்று கூறுவோர்கள் தங்களின்பந்துக்களோடும் நரக லோகத்திற் போய்ச் சேர்வார்கள். உங்கள் அருமையானகுளிர்ச்சி தங்கிய காருண்ணியத்தை அறிவார் யாவர்? ஒருவருமறியமாட்டார்கள், ஆதலால் இந்த உயர்ந்த சிகரத்தை யுடைய அபூகுபைசென்னும் மலையை விட்டு மிறங்கி வரிசையாய்ப் பதித்த இரத்தினங்களை யுடைய மாளிகையினிடத்துபோய்ச் சேருங்களென்று தேவர்களாகிய மலாயிக்கத்துமார்களும் துதியாநிற்கும் நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குச் சிறந்த கோட்டை மதிலையுடைய திமஸ்கு நகரத்தினது மன்னவனை ஹபீபென்பவன் கூறினன். (கஅக)

குருத்துவெண் ணிலவு கொப்பளித் தெறியுங்
கொடிமதிள் திமஸ்கினுக் கிறைவ
னுரைத்தசொற் றவறு தழகொளிர் நயின
ருலகெலாஞ் செழும்புகழ் விளங்கத்

திருத்திய வகுதைப் பதியபுல் காசீந்
சிந்தையிற் பலன்பெறத் தினமு
மிருத்திய மரைத்தா டருங்கதிர் குலவ
விறும்பினின் றிருநிலத் திழிந்தார்.

(இ-ள்.) அழகானது மிகுகாகியாநிர்க்கும் நபியானான நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வெள்ளிய இள நிலாவைக் கொப்பளித்து வீசுகின்ற கொடிகளைக் கொண்ட கோட்டை மதிலையுடைய திமஸ்கு நகராதிபதியாகிய ஹபீபென்பவன் அவ்வாறு கூறிய வார்த்தைகளைத் தவறாது செழிய கீர்த்தியானது எல்லா வுலகங்களிலும் விளங்கும் வண்ணம் திருத்தஞ் செய்த அழகிய வகுதை நகரினது அபுல் காசீமென்னும் இந்நூற் கொடை நாயகனின் மனசின்கண் பலன் பெறும்படி பிரதி தினமும் இருத்தப் பெற்ற தாமரை மலரை யொத்த பாதங்கள் தருகின்ற ஒளியானது தோற்றும்படி அந்த அபூகுபைசென்னும் மலையின் மீதிருந்து பெரிய இப்பூமியி னிடத்து இறங்கினார்கள். (கஅ௨)

மண்டலத் தரிய புதுமதி விளங்கி
வானெழுந் தகத்தடைந் தனபோல்
விண்டுநின் றிறங் கிமுகம்மது நபியும்
விரிகதிர் மாளிகை புகுந்தார்
திண்டிறற் பரியுஞ் சேனையு மிடையத்
திமஸ்கிறை யவனிடஞ் சேர்ந்தா
னெண்டிசை யவரு நகரவ ருடனு
மின்புறக் கலந்தயல் போனார்.

(இ-ள்.) நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும்இந்தப்பூலோகத்தினிடத்து அருமையான புதிய சந்திரனானது பிரகாசித்துஆகாயலோகத்திலெழும்பிச் சமுத்திரத்தி னகத் தடைந்ததைப் போலும், அவ்வாறு அந்தஅபூகுபை சென்னும் மலையில் நின்றிறங்கி விரிந்த பிரகாசத்தை யுடைய மாளிகையின்கண் போய் நுழைந்தார்கள். திமஸ்கு நகராதிபதியாகியஹபீ பென்பவன் திண்ணிய வலிமையைக்கொண்டகுதிரைகளும் மற்றும் படைகளும் நெருங்கும் வண்ணம் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்

தான். எண்டிசைகளில் வசிக்கப்பட்டவர்களும் அந்த மக்கமா நகரத்தவர்களுடன் கலப்புற்று இனிமையோடும் தாங்கள் தங்குமிடம் போனார்கள். (௧௮௩)

மக்கமா நகரக் குறைஷிகள் பலரு
மதியிலி யபூஜகு லுடனிவ்
வொக்கலுந் துன்புற் றெழின்முகம் வெளிறி
யுள்ளுணர் நினைவறக் கருகித்
தக்கவ ரொருவர்க் குரைகொடுப் பதற்குத்
தங்களிற் றனிதடு மாறிப்
புக்கிடம் புகுதற் கருநெறி யறியாய்
புல்லறி வினிற்சில புகல்வார்.

(இ-ள்.) அன்றியும், அந்த மக்கமாநகரத்தினது குறைஷிகளாகிய பலரும் அறிவில்லாதவனான அபூஜகி லென்பவனோடு இந்தக் குடிகளும் வருத்தமடைந்து அழகிய தங்களின் முகங்களானவை வெளிறுதலுற்று மனசினது அறிவின் நினைவானது அற்றுப்போகும்வண்ணம் கரிந்து மேலோரொருவர் வினவும் வினவிற்கு ஏகமாய் விடை கூறுவதற்குத் தங்களில் தடுமாற்றமடைந்து தாங்கள் புகுமிடம் புகுவதற்கு அரிய வழியுந் தெரியாது கீழ்மையான அறிவாற் சில வார்த்தைகளைக் கூறுவார்கள். (௧௮௪)

வருடமீ ரைம்பா னருபதின் மேலு
மிருந்துமா மறைகளைத் தெளிந்த
புருடரா திபனிம் முகம்மதிக் கியற்றும்
புன்மைவஞ் சனையிடத் தடைந்து
திருடர்போல் விழித்தா னென்னிவிந் நிலத்திற்
றெளிமறை தெளிந்தசிந் தையினு
மிருடரா திருத்த லரிதெனச் சினந்த
விடரொடும் படிறெடுத் திசைப்பார்.

(இ-ள்.) 'பகத்தாகிய வேதங்களைக் கற்றுத் தெளிந்த மானிடாதிபனான இந்த ஹபீபென்பவன் நூற்றியறுபது வருடத்தின்மேலும் இப்பூலோகத்தின்கண் ணிருந்தும் இந்த முகம்மதென்பவன் இவ்விடத்தில் செய்யும் கீழ்மையான வஞ்சனையினிடத் தடைந்து கள்ள

ர்களைப்போல விழித்தா னென்ருல் இந்தப்பூமியின்கண் தெளிவான வேதங்களைக் கற்றுத் தெளிந்த மனசிலும் இருள் தராமல்இருப்பது அரிய காரியமென்று கோபிந்த துன்பத்தோடும் பொய்களை எடுத்துப் பேசுவார்கள். (௧௮௫)

விறற்பெரும் படைகொண் டபூஜகல் விளைக்கும்
வினைகளு மிகுந்ததந் திரமு
மறற்பல கொழிப்ப நதிசுரத் தழைத்த
அகுமதி னிடத்தினி லணுகாப்
புறப்பல நகரிற் சமயமுஞ் சிதையப்
புதுமறை யெனும்புறுக் கானி
லுறப்படுத் துலக மடங்கலு மிவன்ற
னுள்ளடி படுக்குமென் றுரைப்பார்.

(இ-ள்.) அன்றியும், அபூஜகிலென்பவன் வெற்றியை யுடைய பெரிய சேனைகளைக் கொண்டு செய்யாநிற்கும் செய்கைகளும் அதிகப்பட்ட தந்திரங்களும் பாலை நிலத்தின்கண் பல கருமணற்களைக் கொழிக்கும்வண்ணம் நதியை வரவழைத்த அஹ்மதென்னும் திருநாமத்தைப்பெற்ற முகம்மதென்பவரிடத்தில் அணுகாது. பலவாகிய புறநகரங்களில் பழய மார்க்கமும் சிதைவுறப் புதிய வேதமென்னும்புறுக்கானல் அலீமில்பொருந்த அகப்படுத்தி உலகமுழுவதும் இந்த முஹம்மதென்பவனின் பாதத்தினகம் கிடக்குமென்று சொல்லுவார்கள். (௧௮௬)

தெரிமறை மாலிக் குருளர சறியாச்
சிந்தைய னெனவுமா மதியை
வரவழைத் தரிய காட்கியை முடித்த
முகம்மதை வஞ்சக னெனவும்
பெருகிய குபிரர் தனித்தனி யுரைப்பப்
பெருஞ்சிறை திரண்டமுள் வளைவாய்க்
குருதிகொப் பளித்த வேதினச் சூட்டுக்
குக்குடந் திசைதொறுங் கூப.

(இ-ள்,) அன்றியும், வேதங்களை யுணர்ந்த மாலிக்கென்பவன் இவ்வுலகத்தின்கண் தந்த ஹபீபரசனை அறியாத மனதையுடையவனென்று, மகத்தாகிய சந்திரனை வரவழைத்து அரிய காட்சியை நிறைவேற்றிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவு

ர்களை வஞ்சகனென்றும், அதிகரித்த காபிர்கள்தங்களில் தனித்தனி கூறப், பெரிய சிறகுகளையும் திரண்ட முட்களையும் வளைந்த சுண்டையும் இரத்தத்தைக் கொப்பளிக்கப்பெற்றாசர்வாளையொத்த உச்சிக்கொண்டையையுமுடைய சேவற்களானவை திசைகள் தோறுங் கூவியன. (கஅஎ)

இனவளை முரலுந் தடத்தன மிரைப்ப
விசைக்குரற் கோகில மியம்ப
மனநிலை யுணராக் குபிரர்தம் முளத்தில்
வல்லிருட் குலம்புகுந் தொளிப்ப
நனிபொருண் மறைதீ னவர்மனத் தெளிவி
னடிநிலந் தெளிதரக் குணக்கிற்
றினகரன் கதிர்கள் வெளிறிடப் பரப்பித்
தொண்டரைக் கடன்முளைத் தெழுந்தான்.

(இ-ள்.) கூட்டமாகிய சங்குகளானவை ஒலியாநிற்கும் வாவிகளினிடத்து அன்னப்பட்சிகள் சத்திக்கவும், கீதத்தைக்கொண்ட ஓசையையுடைய குயில்கள்கூவவும், மனத்தினது நிலைமையை இன்னதென் றறியாத காபிர்களி னகத்தில் கொடிய இருட் கூட்டமானது போய் நுழைந்து ஒளிக்கவும், மிகுத்த பொருளினது புறுகானுல் அலீமென்னும் வேதத்தையுடைய தீனுல் இஸ்லாமென்னும் மெய்மார்க்கத்தையுடையவர்கள் மனசினது தெளிவைப்போல இவ்வுலகமானது தெளியச் சூரியனானவன் கிழக்கில் தனது கிரணங்களை வெளிறும்வண்ணம் விரித்து தெள்ளிய அலைகளையுடைய சமுத்திரத்திலிருந்து வெளிப்பட்டு எழுந்தான். (கஅஅ)

மதியை யழைத்த படலம்

முற்றிற்று.

ஆ படலம்-அ-க்குத்-திருவிருத்தம்-சுகஅ.

தசைக்கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருமலர் சுமந்து தேன்வழிந் தொழுகு
  மணிப்புய முகம்மது நபியுந்
தெரிதருந் தீனி னெறிமுறை யவருஞ்
  சிந்தையிற் களிப்பொடுஞ் சிறப்ப
வரியமெய்ப் பொருளை முறைமுறை வணங்கி
  யற்றையிற் கடன்கழித் தமரர்
திருவடி பரவத் தம்முயி ரனைய
  செல்வரோ டுறைந்திடுங் காலை.

(இ-ள்,) வாசனை பொருந்திய புஷ்ப மாலையைத்தாங்கித் தேனானது வழிந் தொழுகாநிற்கும் அழகிய தோள்களை யுடைய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களும், தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நெறியினது முறைமைகளைத்தெரிந்த மற்றும் அசுஹாபிமார்களும், தங்களி னிருதயத்திற் சந்தோஷத்தோடும் சிறப்பாய் அருமையான உண்மைப் பொருளாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவை வரிசை வரிசையாகப் பணிந்து அன்றையத் தினத்திற் குரிய கடன்களைச் செய்து முடித்துத் தேவரான மலாயிக்கத்துமார்கள் தெய்வீகம் பொருந்திய இரு பாதங்களையும் வணங்கும் வண்ணம் தங்களி னுயிரைப் போன்ற செல்வமுற்ற தோழர்களோடும் தங்கி யிருக்கின்ற சமயத்தில். (க)

பூரண களப கனதன மடவார்
  பொருதிரைக் கவரிகா லசைப்ப
வாரணி முரச மதிர்தரச் சிறு
  மடங்கலின் கொடிமுனங் குலவ
வாரணத் தலைவர் மருங்கினிற் பிரியா
  தரசர்க ளுடன்வரத் தொலையாக்
காரணக் குரிசின் முகம்மதி னிடத்தில்
  வந்தனன் ஹபீபெனு மரசன்.

(இ-ள்.) ஹபீபென்று சொல்லாநிற்கும் அபிதானத்தையுடைய அரசன் கலவைச் சாந்தணிந்த பூரணமாகிய கனத்தைக் கொண்ட ஸ்தன பாரங்களை யுடைய ஏவற் பெண்கள் சமுத்திரத்தினது அலையைப்போலச் சாமரங்க ளிரட்டவும், தோலினாலான வாரையணியப் பெற்ற வெற்றி முரசமானது ஒலிக்கவும், பெருங் கோபத்தைக் கொண்ட சிங்க ரூபம் தீட்டிய துவஜமானது முன்னாற் பிரகாசிக்கவும், வேதத்தலைவர்கள் இருபக்கங்களிலும் நீங்காது மற்றும் அரசர்கள் கூடவரும் வண்ணம் தொலையாத காரணங்களை யுடைய ஸ்ரீசிலாகிய நாயகம் நபி றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களினிடத்தில் வந்து சேர்ந்தான். (உ)

செம்மலர்ப் பதத்தில் வெண்கதிர் குலவுஞ்
செழுமணி முடிசிரஞ் சேர்த்தித்
தம்மினத் தவர்க ளுடன்சலா முரைத்துத்
தக்கதோ ரிடத்துனின் றவனை
வம்பெனத் திருவா யுரையருள் கொடுத்து
முகமமது மருங்கினி லிருத்தி
வெம்மையி னமுதக் கனிபெனுங் கலிமா
விளம்புக வெனவிரித் துரைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு வந்து சேர்ந்து செதந்த தாமரை மலர்போலும் இரு பாதங்களிலும் தனது வெள்ளிய கிரணங்கள் பிரகாசியாநிற்கும் செழுமை தங்கிய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற மகுடமணிந்த தலையைப் பொருத்திப் பணிந்து தமது கூட்டத்தார்களோடும் சலாங் கூறித் தகுதியாகிய ஓர் தானத்தில் நின்ற அந்த ஹபீபரசனை; நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் வருவாயாக வென்று தங்களின் தெய்வீகம் பொருந்திய வாயினது கிருபை தங்கிய வார்த்தையைக் கூறியழைத்துப் பக்கத்தி லுட்காரச்செய்து ஆசையைத் தருகின்ற அமுதத்தைக் கொண்ட கனியென்னும் கலிமாவைச் சொல்லுக வென்று விரிவாய் எடுத்துச் சொன்னார்கள். (௩)

நன்றெனப் புகழ்ந்து மனங்களித் தெழுந்து
நரபதி திமிஸ்கினுக் கரசன்
வென்றிகொ ளரசே யினமொரு வசனம்
வினவுதல் வேண்டுமென் னிடத்தி

லென்றவ னுரைப்ப முகம்மது நபியு
  மின்புறு முறுவல்கொண் டினிதாய்த்
துன்றுமென் மனத்திற் றெரிந்ததுன் மகடன்
  றொல்வினை தெளிப்பதற் கென்றார்.

(இ-ள்.) அவ்விதம் சொல்லவே, மனுடாதிபதியாகிய திமஸ்கு நகரத்தினது அரசனான ஹபீபென்பவன் நல்லதென்று புகழ்ந்து மனமானது மகிழப் பெற்று எழும்பி வெற்றியைக் கொண்ட அரசரானவரே! என்னிடத்தில் இன்னமொரு வார்த்தை கேட்டருள வேண்டுமென்று கூற, நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும் இனிமை பொருந்திய புன்சிரிப்புக் கொண்டு நீ கூறப்போகும் சமாச்சாரமானது இன்பமாய்நெருங்கிய எனது மனதின்கண் தெரிய வந்தது, அதென்னவெனில் உன்னுடைய மகவினது பூர்வீக வினையைச் சுத்தப் படுத்துவதற் கென்று சொன்னார்கள். (௬)

ஆண்டகை யுரைத்த புதுமொழி நறுந்தே
  னகத்தினிற் புகுந்துடல் களித்து
வேண்டுநற் பதவி படைத்தனன் சிறியேன்
  விலைத்திடும் பவக்கட றொலைத்தேன்
காண்டகாப் புதுமை யனைத்தையுந் தெரிந்தேன்
  கடிகம ழணிமலர்ப் பதத்தைத்
தீண்டவும் பெற்றே னினியரும் பொருளொன்
  றிலையென வுரைத்தனன் றிறலோன்.

(இ-ள்.) ஆண்டகையான நமது நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு கூறிய ஆச்சரியத்தைக்கொண்ட வார்த்தையாகிய நறியதேனானது மனசின்கண் நுழைந்து உடற் களிப்படைந்து வீரியத்தையுடையவனான ஹபீபரசன் சிறியேனாகிய யான் வேண்டாநிற்கும் நன்மைபொருந்திய மோட்ச பதவியைச் சம்பாதித்தேன். செய்திடும்பாவமாகிய சமுத்திரத்தைத்தொலைக்கப்பெற்றேன். காணமுடியாத அற்புதங்கள்யாவையுங் கண்டுகொண்டேன். வாசனை யானது கமழப்பெற்ற அழகிய தாமரை மலரை யொத்த தங்களின் இருபாதங்களையும் கைகளினால் தீண்டவும் பெற்றேன். இனி யெனக்கு வேண்டுதலான அரிய பொருளானது வேறே யொன்று மில்லை யென்று சொன்னான்

புதியவன் றூதர் முகம்மதுந் திமஸ்கைப்
புரந்திடு மருந்தவத் தவனு
மதுரமென் மொழியா லளவளா யுளங்கண்
மகிழ்ந்தினி திருக்குமக் காலை
ககனிழிந் தரிய பெருஞ்சிறை யொடுக்கிக்
கடிதினிற் கண்ணிமைத் திடுமுன்
செகதலத் துறைந்த நபியிடத் துவந்தார்
தெரிமறை கொடுஜிபு ரீலே.

(இ-ள்.) புதிய ஆலத்தையுடைய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதராகிய நாயகம் றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களும் திமஸ்கு நகரத்தை அரசாட்சி செய்யாநிற்கும் அரிய தவத்தையுடைய ஹபீபரசனும் இனிமை தங்கிய மெல்லிய வார்த்தைகளினால் கலந்து இருவர்களின் மனங்களும் மகிழ்ச்சி யுற்றுஇன்பத்துடன் இருக்கின்ற அச்சமயத்தில், ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் தெரிதலான வேத கட்டளையைக் கொண்டு விரைவினில் வானலோகத்தை விட்டு மிறங்கி கண்களை மூடி விழிக்குமுன் அரிதாகியதமது பெரிய சிறகுகளை யொடுக்கிக் கொண்டு பூதலத்துறைந்த அந்நபிகள் பெருமானிடத்தில் வந்து சேர்ந்தார்கள். (௬)

மருங்கினி லெவர்க்குந் தோன்றிடா துறைந்து
வல்லவன் சலாமெடுத் தியம்பிப்
பெருங்குலம் விளக்கு முகம்மதை நோக்கிப்
பிறந்துருத் தோன்றிலாத் தசையை
நெருங்குவெண் கொடிக்கஃ பாவிடத் தேகி
நிரைமயிர்ப் போர்வையான் மூடி
யருங்கதிர்க் கலசத் தாபுஸம் ஸத்தி
னரியநீர் கரங்கொடு தெளித்தே

(இ-ள்.) அவ்விதம் வந்து சேர்ந்த ஜிபுரீல் இலைகிஸ்ஸலாமவர்கள் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் பக்கத்தில் யாவருக்குந் தெரியாது தங்கிப் பெரிதாகியதீன்குலத்தை விளங்கச் செய்யும் அந்நபிகள் பெருமானவர்களின் முகத்தைப்பார்த்து வல்லவனான் ஹக்குசுபுகானகுவத்த ஆலாவினதுசலாமெடுத்துச் சொல்லி உலகத்தின்கண் அவதரித்து வடிவமானது தோற்றப்பெ

ருந அந்த ஹபீபரசனது மகந்தாகிய தசைக் கட்டியை வெள்ளைக் கொடிகளானவை நெருங்கப்பெற்ற கஃபத்துல்லா விடத்திற் சென்று உரோமத்தால் நிறைந்த ஓர் போர்வையினால் மூடி ஆபுசம்சமென்னும் கிணற்றினது அருமையானதண்ணீரை அரிய பிரகாசத்தைத் தருகின்ற ஒரு கலசத்தில் கொண்டு தங்களின் கைகளினால் தெளித்து, (எ)

இறைவனை நோக்கித் துஆவிரந் தினிரே
  விலங்குருத் தோன்றுமென் றினசத்துச்
சிறைநிறந் தோன்று தமருல கதனிற்
  ஜெபுறயீ லேகிய பின்னர்
கறைநிறங் குலவுஞ் செழுங்கதிர் வடிவேற்
  கரதல முகம்மது நபியு
மறைமுர சதிரத் திமஸ்கிறை யவனு
  மெழுந்தன ரரியகஃ பாவில்.

(இ-ள்.) இறைவனை அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவினது சந்நிதானத்தைப் பார்த்து துஆக் கேட்பீரே யானால் விளங்குகின்ற உருவமானது உண்டாகுமென்று சொல்லிவிட்டுத் தமது சிறகுகளின் ஒளிவானது ஒருவருக்குந் தெரியாது தேவலோகம் போய்ச் சேர்ந்த பின்னர், இரத்தக் கறையும் பிரகாசமும் தோற்றும் செழிய கிரணங்களைக்கொண்ட கூர்மை தங்கிய வேலாயுதந் தாங்கும் கைத்தலத்தையுடைய நமது நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும், திமஸ்கு நகரத்தினது அரசனானஹபீபென்பவனும், அரையாகிற்கும் வெற்றி முரசமானது ஒலிக்கும் வண்ணம் அருமையாகிய கஃபத்துல்லாவை நோக்கி எழுந்தார்கள். (அ)

வானவ ரிறையோ னருட்படி யமைத்த
  மக்கமா நகரியி னுப்பண்
கானலர் பொதுளுங் ககுபத் துல் லாவிற்
  கடிமதிட் புறத்தொரு பாவில்
தீனவ ருடனு மணிபெற விருந்து
  செவ்வியன் ஹபீபினை நோக்கி
யினமற் றுனது மகவெனுந் தசையை
  யீவண்கொடு வருகவென் றிசைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு எழுந்த அவர்கள் தேவர்களாகிய மலாயிக் கத்துமார்கள் இறைவனான ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் கட்டளையின்வண்ணம் பெருமைபொருந்திய மக்காப்பதியின் மத்தியில்செய்து முடித்த வாசனை தங்கிய புஷ்பமாலைகள் நெருங்கப்பெற்ற கஃபத்துல்லாவின் காவலையுடைய மதிட்புறத்தி னோர்பக்கத்தில் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற் குட்பட்ட தங்களின்தோழர்களோடும் அழகாகவிருந்துகொண்டு செம்மையான கீர்த்தியையுடைய ஹபீபரசனைப்பார்த்துக் குற்றமற்ற உனது மகவென்று சொல்லாநிற்கும் தசைக்கட்டியை இங்கு கொண்டுவருவாயாக வென்று கூறினர்கள். (கூ)

அந்தநன் மொழிகேட் டடற்படை மாலிக்
கருளிய ஹபீபெனு மரசன்
சிந்தையிற் களித்து மருங்குநின் றவரைத்
திண்ணிய தசையினைக் கொணர்கென்
றுந்திட வுரைப்ப வோடினர் சிலவ
ருறுபொருட் பொதிந்தெனப் பொதிந்து
தந்தபெட் டகத்தி னெடுமெடுத் துவந்தார்
தனுவிடு சரத்தினுங் கடிதின்.

(இ-ள்.) அந்த நன்மைபொருந்திய வார்த்தைகளைத் திண்ணிய ஆயுதங்களைத் தாங்கிய மாலிக்கரசனால் இவ்வுலகத்தின்கண் தரப்பெற்ற ஹபீபென்னும் அபிதானத்தையுடைய அதிபதியானவன் தனது இரு காதுகளினாலுங் கேள்வியுற்று மனசின்கண் மகிழ்ச்சி கொண்டு பக்கத்தில் நின்றிருந்த ஏவலாளர்களை நோக்கிஉயர்ச்சியாய் வலிமைதங்கிய அந்தத் தசைக்கட்டியை இங்கு கொண்டுவாருங்களென்று உத்திரவுசெய்யச், சில ஏவலாளர்கள் வில்லி லேற்றி விடாநிற்கும் அம்பைப்பார்க்கிலும் விரைவாய ஓடிச்சென்று சேர்மானமான பொருளைப் பொதிந்ததைப்போலும் பொதிந்துவைத்திருந்த பெட்டகத்துடன் எடுத்துக்கொண்டுவந்தார்கள். (க0)

முன்னுறப் பணித்த பெட்டகத் திருந்த
முதிர்தசைக் கட்டியை யெடுத்து
மன்னிய குரிசின் முகம்மது நபிமுன்
வைத்தனன் சுரிகுழற் கருங்கண்

மின்னெனப் பிறழு மடைந்தைய ருடனும்
விரிதிரைப் பசுங்கட லனைய
வங்நகர் மாக்க ளனைவரும் விரைவி
னடுத்ததி சயித்திட வன்றே.

(இ-ள்.) முன்னர் பொருந்தும்படி செய்த அந்தப் பெட்டகத்தி லிருந்த முதிர்ச்சிதங்கிய தசைக்கட்டியை அவ்வபீபரசன் முறுக்கைப்பெற்ற கூந்தலையும் கருமைதங்கிய கண்களையுமுடைய மின்னலைப்போலும் பிரகாசியாநிற்கும் பெண்களோடும் விரிந்த அலைகளைக் கொண்ட பசியகடலைப்போன்ற அந்த மக்கமாநகரத்தினது ஆடவர்களெல்லாவரும் சீக்கிரமாய் நெருங்கி வந்து அதிசயிக்கும்வண்ணம் கைகளினலெடுத்துக்குரிசிலாகப் பொருந்திய நமதுநாயகம்நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் முன்னல் வைத்தான். (௧௧)

கடல்கிடங் துடுத்த பெரும்புவி யிடத்திற்
கண்டறி யாப்பெருங் காட்சி
மடலவிழ் கமல வாவிசூழ் திமஸ்கு
மன்னவன் மகவெனப் பிறந்து
மிடலுறுங் கதிர்வாண் முகம்மது பொருட்டால்
விளக்குங்கா ரணத்தினுக் கிருந்த
வுடலெனுங் தசைத னுயிரலா தியைந்தோ
ருறுப்பெனும் வடிவுபெற் றிலவே.

(இ-ள்,) சமுத்திரமானது கிடந்து ஆடையாக வுடுக்கப்பெற்ற பெரிய இந்தப் பூலோகத்தினிடத்து ஒருவரும் தமது கண்களினற் பார்த்து அறியாத காட்சியாய் இதழ்களானவை அவிழ்தலுற்ற தாமரைத்தடாகங்கள் சூழ்ந்த திமஸ்கு நகரத்தினது அரசனை ஹபீபென்பவனின் மகவென்று சொல்லும் வண்ணம் இவ்வுலகத்தின்கண் அவதரித்து வலிமைபொருந்திய பிரகாசத்தைக்கொண்ட வாளாயுதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களது பொருட்டினல் செய்யும் காரணத்துக்காக விருந்த உடலென்னும் தசையானது தனது ஜீவனையல்லாமல் மற்றும் மனுஷியர்களைப்போலும் பொருந்திய ஒப்பற்றஉறுப்புகளென்று கூறும் வடிவமானது யாதொன்றும் பெற்றிலது. ()

பொருந்துறுங் குறிப்பொன் றணுவினு மிலதாய்ப்
பொருவறும் புதுமையி னெதிரி
னிருந்தவத் தசையை முகம்மது நோக்கி
யிறையவ னருளெனக் குறித்துத்
திருந்துற மயிரின் போர்வையிற் போர்த்துச்
செங்கரத் தரியநீ ரேந்தி
மருந்திலுமமா ரமுதினுஞ் சிறப்ப
மகிழ்வொடுந் தெளித்து நின் றனரால்

(இ-ள்.) அவ்வாறு பொருந்திய குறிப்பு யாதொன்றும் அணுப்போலுமில்லாததாய் ஒப்பற்ற அற்புதத்தோடும் தங்களின்முன்னால் இருக்கம்பெற்ற அந்தத் தசைக்கட்டியை நாயகம் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் கண்களினாற் பார்த்து ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் காருண்ணியமென்று மனசின்கண் குறிப்பிட்டுச் செவ்வையாக மயிரினாற்செய்த ஓர் போர்வையால்மூடிச் செவந்தகரத்தில் அருமையான ஆபுசம்சமென்னுங் கிணற்றினதுதண்ணீரை ஏந்திக்கொண்டு மருந்தோடு தேவர்களான மலாயிக்கத்துமார்களின் அமுதத்தைப்பார்க்கிலும் சிறக்கும்வண்ணம் மகிழ்ச்சியுடன் தெளித்து நின்றார்கள். (கங)

மணியெனச் சிறந்து மலரின்மென் மையவா
மழைச்செழுங் கரங்களை யேந்தி
யணிதரப் போற்றிக் கனிந்தற நெகிழ்ந்த
வகத்தினி லரியநா யகனைத்
தணிவிலா துயர்த்திப் பலபல புகழாற்
சாற்றிநன் னெறிமுறை தவறுப்
பணிபணிந் திரந்தார் தீனிலை நிறுத்தும்
பதுமமென் பதமுகம் மதுவே.

(இ-ள்.) அன்றியும், தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை நிலையாக நிறுத்துந் தாமரைமலர்போலும் மெல்லிய பாதங்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் இரத்தினத்தையொப்பச் சிறப்புற்றுப் புஷ்பத்தைப்பார்க்கிலும் மெதுவாகிய மேகத்தை நிகர்த்த செழுமைதங்கிய இரண்டு கைகளையும்ஏந்தி அருமையான அல்லாகுசுபுகானகுவத்தஆலாவை அழகாய்த் துதித்துக்கனிந்துமிகவும் நெகிழப்பெற்ற மனசின்கண்கு

றையாது உயர்வு படுத்திப் பலபல புகழினாற் கூறி நன்மை பொருந்திய சன்மார்க்கத்தினது முறைமையானது தவறாத வணக்கத்தினால் வணங்கி இரந்தார்கள். (கச)

பூதலத் தெவர்க்கு மறைநெறி புதுக்கிப்
பொருவருஞ் சுவனநா டளிப்பத்
நூதென வுதித்த முகம்மதின் துஆவைத்
துய்யவ னுறக்கபூ லாக்கப்
பாதகக் குபிரர் மனம்பதை பதைப்பப்
பலன்படாப் பெருந்தசைத் திரட்சி
நீதறத் தோன்று மவயவஞ் சிறப்பத்
தெரிவையின் றிருவுரு வெடுத்த.

(இ-ள்.) அவ்விதமிரக்கவே, பரிசுத்தத்தையுடைய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவானவன் இந்தப் பூலோகத்தின்கண் சகல மானவர்களுக்கும் புறுக்கானுல் அலீமென்னும் வேதவழியைப் புதிப்பித்து ஒப்பற்ற சுவர்க்க லோகத்தை யருளும் வண்ணம் றசூலாகத் தோற்றிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் துஆவைப் பொருந்தும் விதத்தில் கபூலாக்கப், பாதகத்தைக் கொண்ட காபிர்களாகிய சத்துராதிகளின் மனங்களானவை மிகவும் பதைக்கும்படி யாதொரு பிரயோசனத்தையு மடையப்பெறாத அந்தப் பெரிய தசையினது திரட்சியானது குற்றமறப் பிரகாசியாநிற்கும் உறுப்புக ளானவை சிறக்கும் வண்ணம் பெண்ணினது அழகிய சொரூபத்தை யெடுத்தது. (கரு)

வரியிழை மயிர்ப்போ ருவையெனுங் கரிய
வல்லிரு ளிடையெழு மதிபோல்
விரிகடற் பெருநீ ருண்டுகூ லுளைந்த
விசும்பிடை யுதித்தமின் குலம்போ
லருயின நறவுண் டலம்புகுங் குமக்கா
ரணிபுய முகம்மதின் கலிமாத்
தெரிதரப் பவள விதழ்திறந் தோதிச்
செறிதரு மவையிடத் தொழுந்தாள்.

(இ-ள்.) அவ்வாறு சொரூபத்தை யெடுத்து வரியைக்கொண்ட இழைகளையுடைய மயிரிற் செய்யப்பட்ட அந்தப் போர்வையென்று சொல்லும் கருநிறந் தங்கிய வலிமையான அந்தகாரத்தினிடத்து

உதயமாகாநிற்கும் சந்திரனைப்போலும், விரிந்த சமுத்திரத்தினது பெரிய ஜலத்தை யருந்திச் சூலினை லுலைப்பெற்ற மேகத்தின்கண் தோற்றமாகும் மின்னலினது கூட்டத்தைப் போலும், வண்டினங்கள் மதுவை யருந்திப் பாடுகின்ற குங்குமமாலையணிந்த தோள்களை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர்ற சூலுல்லாஹி" யென்னும கலிமாவை யாவர்களுக்கும் தெரியும்படி பவளம் போன்ற தமது வாயி னிதழ்களைத் துறந்து ஓதிக்கொண்டு நெருங்கிய அந்தச் சபையின்கண் எழுந்து நின்றாள். (௧௬)

விண்ணகத் தரம்பைக் குலத்தினும் வடிவாய்
விரிகடன் மகளினும் வியப்பாய்
மண்ணகத் துறையு மெழுவகைப் பருவ
மடந்தைய ரணிந்திடு மணியாய்க்
கண்ணினுக் கடங்கா தழகினைச் சுமந்த
கனியுரு வெடுத்தகாட் சியதாய்ப்
பெண்ணலங் கனிந்து நலனெழில் பிறங்கப்
பெருநிலத் தெழுந்துநின் றனளே.

(இ-ள்) அன்றியும், வான லோகத்தின் கண்ணுள்ள தேவ மகளிர்களினது கூட்டத்தைப் பார்க்கிலும் வடிவாகவும், விரிந்த கடன் மகளைப் பார்க்கிலும் வியப்பாகவும், இப் பூமியின்கண் தங்கும், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ணென்னும் எழுவகைப் பருவங்களை யுடைய மாதர்கள் தரித்திடும் ஆபரண மாகவும், கண்களுக் கமையாத அழகைத் தாங்கிய கனிந்த சொரூபத்தை யெடுத்த தோற்ற மாகவும், பெண் ணலமானது கனியப் பெற்று நல்ல அழகானது பிரகாசிக்கும் வண்ணம் இந்தப் பெரிய பூமியி னிடத்து எழும்பி நின்றாள். (௧௭)

மங்குலிற் பெருகி விடத்தினுங் கருகி
வரியற லினமினு மினுத்துத்
தங்கிய விதழித் திரளினுந் திரண்டு
சைவலத் தொடரினுந் தழைத்துக்

கொங்குறக் குழன்று நெறித்துவார்ந் தொழுகிக்
குவலயத் திளைஞர்கண் வழுக்க
வெங்கணன் னயிரூர் முன்னைநா ளழைத்த
விருளினு மிருண்டமைக் குழலாள்.

(இ-ள்.) அன்றியும், மேகத்தைப் பார்க்கிலும் பெருக்க முக்று விஷத்தைப் பார்க்கிலும் கறுப்படைந்து சமுத்திரத்திற்பொருந்திய கரிய மணலைப் பார்க்கிலும் பளபளப்புற்றுப் பூங்காவுகளில் தங்கியிருக்கும் கொன்றைக் காய்த் திரளைப் பார்க்கிலும் திரட்சியுற்றுக் கடற்பாசியினது தொடரைப் பார்க்கிலும் தழைப்புக்கொண்டு வாசனையானது கமழும் வண்ணம் குழற்சியாகி நெறித்துவார்தல்பெற்று ஒழுகிப் பூலோகத்தி னிடத்துள்ள வாலிபர்களின் கண்களை வழுக்கும்படி எங்களின் நன்மைபொருந்தியநயினரான நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் முந்தின நாளில் ஹபீபாசனின் சொற்படி சந்திரனை வரவழைக்கு முன்னர் அழைத்த இருளைப்பார்க்கிலும் இருண்ட கருமைபான கூந்தலை யுடையவள்.

கீற்றிளம் பிறையுங் கணிச்சியின் வளைவுங்
கிளர்ந்தசெவ் வகத்திமென் மலருந்
தோற்றிடத் தோற்றி விளக்குநன் னுதலாள்
சுடருமுள் வாரணத் தலகு
மாற்றருந் தனுசுங் கருங்கொடி யெதிர்வு
மாற்றிமைக் கட்கடற் கரையின்
மேற்றிகழ் கரிய பவளமென் கொழுந்தாய்
விளங்கிய செழும்புரு வத்தாள்.

(இ-ள்.) அன்றியும், கீற்றாகிய இளஞ் சந்திரனையும், வளையுளியின் வளைவையும், ஓங்கிய செவ்வகத்தி மரத்தினது மெல்லிய புஷ்பத்தையும், தோற்றுப் போகும் வண்ணம் பிரகாசித்து விளங்காநிற்கும் நல்ல நெற்றி யுடையவள். ஒளிருகின்ற முட்களையுடைய சேவலினலகையும், மாற்றுதற் கரிய வளைவைக் கொண்ட வில்லையும் கருநிறத்தையுடைய காகங்க ளிரண்டு தம்மில் எதிர் முகங்கொண்டு நிற்கும் எதிர்ப்பாட்டையும், மாறுதலாக்கி மையினை எழுதப்பெற்ற கண்ணாகிய கடலினது கரையின்மேல் பிரகாசிக்கும் கருமை யுற்ற மெல்லிய பவளக் கொழுந்தாய் இலங்கப் பெற்ற செழிய புருவத்தை யுடையவள். (கக)

மடற்குழை கிழித்துத் தடக்குழல் குழைத்து
வரியளி யிணைச்சிறை படுத்திக்
கடற்குளந் தேரு தலைதாச் செய்து
கணையயில் கடைபடக் கறுவி
விடத்தினை யரவப் படத்திடை படுத்தி
மீனினம் பயப்படத் தாழ்த்தித்
திடக்கதிர் வடிவா ளெனக்கொலை பழகிச்
செவந்தரி படர்ந்தமை விழியாள்.

(இ-ள்.) அன்றியும், காதின் மடலினது குழையைக் கிழியச் செய்து விசாலித்த கூந்தலைக் குழைத லாக்கி வரிகளைக் கொண்ட வண்டுகளைச் சிறைப்படுத்தச் சமுத்திரத்தை மனந்தேருது அலையப் பண்ணி, அம்பையும், வேலாயுதத்தையும், கடைபடும் வண்ணம் கறுவி விஷத்தைப் பாம்பினது படத்திடத்திற் சேர்த்து மீன் கூட்டங்களைப் பயப்படும்படி நீரின்கண் தாழ்த்தி உறுதியான பிரகாசத்தையும்கூர்மையையுங் கொண்ட வாளைப் போலப் பிரதிதினமும் கொலைத்தொழிலிற் பழக்க முற்றுச் சிவந்து இரேகைகள் படர்ந்த மை தீட்டப் பெற்ற கண்களை யுடையவள். (உ0)

வள்ளையை வாட்டி யூசலை யசைத்து
மண்ணெழி லாடவ ருயிரைக்
கொள்ளைகொண் டுடலங் குழைப்பதற் கன்றோ
குழையெனும் பெயரிடுங் குழையா
ளெள்ளையுஞ் சிறந்த குமிழையும் வாசத்
தினியசண் பகமலர் தனையும்
விள்ளருங் கானத் திடையலர் படுத்தி
விலங்கிட விலங்கிய குமிழாள்.

(இ-ள்.) அன்றியும், வள்ளை யிலையை வதங்கச் செய்து ஊசலை யாட்டு வித்துப் பூமியின் கண்ணுள்ள அழகிய ஆடவர்களின் ஆவியைக் கொள்ளைக் கொண்டு அவர்களி னுடலைக் குழையும்படி செய்வதற் காகவே குழையென்று பெயரிடாநிற்கும் காதுகளை யுடையவள் எள்ளின் புஷ்பத்தையும் சிறப்புத் தங்கிய குமிழ மலரையும், வாசனையைக் கொண்ட சண்பகப் பூவையும், தனக் கிணையில்லை யென்று சொல்லுதற் கரிய காட்டி னிடத்து அலரப்படுத்தித் துலங்கும்வண்ணம் பிரகாசியாநிற்கும் நாசியை யுடையவள். (உக)

வெண்ணிலாத் தாள நகைநிரை பொதிந்து
விரிந்தசெம் பவளமோ விலவோ
வண்ணவாய்ச் செழுஞ்சே தாம்பலின் மலரோ
வடிவுறு தொண்டையங் கனியோ
வெண்ணிநோக் கினருக் குவமையி னடங்கா
தெழில்குடி யிருந்தமு தொழுகிப்
பண்ணெலாஞ் சுவற்றி யாடவ ரிருகட்
பார்வையிற் செவந்தமெல் லிதழாள்.

(இ-ள்.) அன்றியும், வெள்ளிய பிரகாசத்தைப் பொருந்தியமுத்தைப் போன்ற பற்களை வரிசையாகப் பொதித லுற்றுப் பரந்தசெந்நிறத்தை யுடைய பவளமோ? இலவ மலரோ? அழகிய வாயைக்கொண்ட செழிய செவ்வல்லிப் புஷ்பமோ? வடிவந் தங்கிய ஆதொண்டைக் கனியோ? வென்று நினைத்துப் பார்ப்பவர்களுக் குவமையிலமையாது அழகானது குடிபாக இருக்கப் பெற்று அமுதமொழுகி இராகங்களெல்லாவற்றையுமுண்டு ஆடவர்களின் இரு கண்களினதுபார்வையாலும்செவப்படைந்தமெல்லிய அதரத்தையுடையவள்

முல்லையு முருந்து நிரைத்தன போன்று
முத்தெனத் திகழ்ந்தற நெருங்கி
மெல்லெனச் செவந்த மணியினிற் பிரித்து
விளக்கியொப் பித்துவைத் தனபோல்
வில்விடக் கவின்கொண் டிருபுறத் தொழுங்கும்
விரிந்தபூங் காவிகள் படர்ந்து
சொல்லரு மனத்தா டவர்மய லிருளைத்
துணித்திட நகைக்குமென் னகையாள்.

(இ-ள்.) அன்றியும்; முல்லை மலரையும், இறகடிக்குருத்தையும், வரிசையாக வைத்தமை யொத்து முத்தைப் போலும் பிரகாசித்து மிகவும் செறிந்து மிருதுவாய்ச் செவப்புற்ற மாணிக்க மணியிற் பிரித்து விளக்க மாக்கி யொப்பித்து வைத்தன போல ஒளிரும்படி அழகைக்கொண்டு இரு பக்கங்களினது வரிசையும் விரி வமைந்த பூங்காவிகள் படரப் பெற்றுச் சொல்லுதற் கரிய ஆடவரின்மனத்தினது மையலாகிய அந்தகாரத்தை துணிக்கும் வண்ணம் சிரியாநிற்கும் மெல்லிய பற்களை யுடையவள், (உ௬)

பாலென வெளிறுக் கனியென வழியாப்
பசுமடற் றேனெனச் சிதறு
வேலவார் குழலார் செழுங்கரத் தேந்து
மிளங்கிளி மொழியெனக் குழறு
வேலைவா ழமுதம் பிறந்தென வுலகம்
விளங்கிடப் பொன்மழை பொழியச்
சாலவு மிறந்த தருவினந் தழைப்பத்
தரவரு மினியமென் மொழியாள்.

(இ-ள்.) அன்றியும், பாலைப்போல வெளிறுமலும், கனியைப் போல அழியாமலும், பசிய மடலினது தேனைப்போலச் சிதறுமலும், வாசனைதங்கிய நீண்ட கூந்தலையுடைய மாதர்கள் தங்களின் செழிய கைகளில் தாங்காநிற்கும் இளம்பருவத்தைக்கொண்ட கிளியினது வசனத்தைப்போலக் குழறுமலும், திருப்பாற்கடலிற் றங்கிய அமுதம்பிறந்ததைப்போன்று உலகமானது விளங்கவும், பொன்மழைபொழியவும், மிகவும் பட்டுப்போன மரக்கூட்டங்கள் தழைக்கவும், நன்மையைத் தருதற்காய்வந்த இனிமையுற்ற மெல்லிய வார்த்தைகளை யுடையவள். (உச)

வெய்யவ னலர்த்த விகசிதம் பொருந்தி
விரிநலைக் கமலமென் மலரிற்
செய்யவ ளிருப்ப தெனவெழில் சிறந்து
செழுங்களைக் கதிர்கள்கான் றெழுக
வையக மதிப்பத் திமஸ்கிறை யுரைத்த
வழிமுறை முகம்மதங் கழைத்த
துய்யவெண் மதிய நிகரென வுலகிற்
சொலும்படி சிறந்தமா முகத்தாள்

(இ-ள்.) அன்றியும், சூரியனானவன் அலர்த்த அதனால்மலர்ந்து பரவிய தேனைச் சொரியாநிற்கும் மெல்லிய தாமரை புஷ்பத்தில் தில் திருமகள் வீற்றிருப்பதைப்போலும் அழகானது சிறக்கப்பெற்றுச் செழுமையானபிரகாசக்கிரணங்கள் பிரகாசித்தொழுகும்வண்ணம் திமஸ்குநகரத்தினது அதிபனாகிய ஹபீபென்பவன் கூறிய வாழிபாட்டின்முறையாக இவ்வுலகமானது மதிக்கும்படி நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அ

ந்த அபூகுபை என்னும் மலையின்மீது நின்றுகொண்டு வரவழை த்த பரிசுத்தத்தைப்பொருந்திய வெள்ளியசந்திரனது நிகரென்று இந்தப் பூமியின்கண் சொல்லும்படி சிறப்புத்தங்கிய மகத்தானமுக த்தையுடையவள். (உரு)

திரளினின் மணியாய் முரல்வினின் வளையாய்ச்
செவ்விநெய்ப் பினிற்கமு கெனவாய்
விரிகதிர் மணிப்பூண் டாங்குமென் கழுத்தாள்
வேயினைக் கரும்பைமெல் லணையைச்
சருவிடப் பசந்து திரண்டுமென் மையவாய்த்
தழைத்தெழில் பிறங்கிய தோளாள்
வரிவளை சுமந்தி யாழினும் வியந்து
மயிர்நிரைந் தொளிருமுன் கையினாள்.

(இ-ள்.) அன்றியும், திரட்சியில் இரத்தினமணியாகி, உள்ளிசை யில் வலம்புரிச் சங்காகி, அழகிய நெய்ப்பினிற் கமுகமரமாகி, விரி ந்த பிரகாசத்தைக்கொண்ட இரத்தினாபரணங்களைத்தாங்காநிற்கும் மெல்லிய கழுத்தையுடையவள். மூங்கிலையும், கருணைக் கரும்பை யும், மெல்லிய பஞ்சணையையும் தமக் கிணையில்லையென்று மிருது வாக வோங்கி அழகானது பிரகாசிக்கப்பெற்ற தோள்களையுடைய வள். இரேகைக ளமைந்த வளையல்களைத் தாங்கி வீணையைப் பார்க் கிலு மிக வியப்படைந்து உரோமங்கள் வரிசையாய் இருந்து பிரகா சியாநிற்கும்முன் கைகளையுடையவள். (உசா)

குலிகமார்ந் தனபோ லரக்கினுஞ் செவந்த
கொழுமடற் காந்தளங் கரத்தாள்
மலிசினைக் கெளிற்றின் வனப்பினும் வனப்பாய்
மணியணி சுமந்தமெல் விரலாள்
பொலிவுறச் செவந்தீந் திலையெனக் கிளர்ந்து
புனக்கிளி நாசியின் வடிவாய்
நலிவிலா திளைத்த வயிரவொண் கதிராய்
கலங்கிடந் திலங்கிய வுகிராள்

(இ-ள்.) அன்றியும், சாதிலிங்கம் ஆர்ந்தமைப்போல அரக்கை ப்பார்க்கிலும செவப்புற்ற செழிய இதழ்களையுடைய அழகானகாந் தட்புஷ்பத்தை நிகர்த்தகைகளையுடையவள். மிகுந்த சினையினைக்கொ ண்ட கெற்றினது அழகிலும் அழகாய் இரத்தினக் கணையா

ழிக ளணியப் பெற்ற மெல்லிய விரல்களை யுடையவள். மிகவாய்ச் செ வந்து ஈந்த மரத்தி னிலையை யொத்துப் பிரகாசித்துக் கொல்லைகளி லுறைபாநிற்கும் கிளியினது நாசியின் வடிவ மாக நலிவில்லாமல் செய்பப்பட்ட வைரத்தினது ஒள்ளிய கிரணமாய் நன்மையானது கிடந்து பிரகாசிக்கின்ற நகத்தை யுடையவள். (உஎ)

தடித்தடி பரந்திட் டெழுந்துபூ ரித்துத்
 தளதளத் தொன்றொடொன் றமையா
தடர்த்திமை யாத கறுத்தகண் ணதனு
 லருந்தவத் தவருயிர் குடித்து
வடத்தினு ளடங்கா திணைத்தகச் சறுத்து
 மதகரிக் கோட்டினுங் கதித்துப்
படத்தினும் பிறங்குஞ் சுணங்கணி படர்ந்த
 பருமிதத் துணைக்கன தனத்தாள்.

(இ-ள்.) அன்றியும், தடிப்புற்று அடி பரந்து மேலோங்கிப் பூரிப்புக்கொண்டு தளதளப்பாகி ஒன்றுடனொன்று அடங்காது நெருங்கி இமைக்கப் பெறாத கறுப்புத் தங்கிய கண்களினால் அருமையான தவத்தை யுடைய பெரியோர்களி னுயிரை அருந்தி வடத்திற்குள் அமையாமல் கட்டிய இரவிக்கையைக் கிழிக் கன்னமதம், கைமதம், கோசமத மென்னும் மும்மதங்களை யுடைய யானைகளினது கொம்பைப் பார்க்கிலும் தழைத்துச் சர்ப்பத்தினது படத்தைப்பார்க்கிலும் பிரகாசியாநிற்கும் தேமலானது வரிசையாய்ப் படரப்பெற்ற பருமிதமமைந்த கனத்த இரு தனங்களை யுடையவள். ()

பரிமளச் சிமிழோ குலிகச்செப் பினமோ
 பசுமதுக் கலசமோ வமிர்தம்
பெருகிய குடமோ காமநீ ருறைந்த
 பேரிளங் குரும்பையோ கதிரின்
முருகுகொப் பளிக்கும் வனசமென் முகையோ
 முழுமணி பதித்தமென் முடியோ
கரையிலா வழகா ரெழுகிய வரையோ
 கவலுதற் கரிதெனுந் தனத்தாள்.

(இ-ள்.) அன்றியும், பரிமளாதிகளை யுடைய சிமிழ்களோ? சாதிலிங்கச் செப்புகளோ? பசிய மதுக்கலசங்களோ? பாலானது பெருகப் பெற்ற குடங்களோ? காமசலந் தங்கிய பெரிய இளங் குரும்

பைகளோ? பிரகாசத்தைக் கொண்ட தேனைக் கொப்பளியாநிற்கும் மெல்லிய தாமரைமொட்டுகளோ? முழுமையான இரத்தினங்களைப் பதித்த மிருதுவை யுடைய மகுடங்களோ? கரை யில்லாத அழகென்று சொல்லும் அருவியானது ஒழுகுகின்ற மலைகளோ? எனவரை யறுத்துச் சொல்லுவதற்கு முடியாத ஸ்தனபாரங்களை யுடையவள். (உகூ)

தனமெனு மிருகோட் டக்கியோ ராலிற்
றளைபடப் பிணித்தசங் கிலியோ
மனநிலை கவருங் கடிதட வரவின்
வாலணி கிடந்ததோ வலது
சினவுவிற் காமன் மலைக்குந்தன் மனைக்குஞ்
சேர்த்திய மயநடு நூலோ
வினனுட னழகு நிறைகுடி யிருந்த
விவள்வயி றணிமயி ரொழுங்கே.

(இ-ள்.) அன்றியும், சூரியப் பிரகாசமானது பூரணமாகக் குடியிருக்கப் பெற்ற இப்பெண்ணினது வயிற்றின் அழகிய உரோமங்களானவை, ஸ்தன மென்று சொல்லும் இரு கொம்புகளை யுடைய யானையை ஓராலினிற் றளை படும்படி சேர்த்த சங்கிலியோ? இருதயத்தினது நிலைமையைக் கவராநிற்கும் அல்குலாகிய சர்ப்பத்தின் வாலணியானது கிடக்கப் பெற்றதோ? அல்லது கோபிக்கின்ற கோதண்டத்தை யுடைய மன்மதன் தனது மலையாகிய முலைகளுக்கும் வீடாகிய கடிதடத்திற்கும் நடுவாகச் சேர்த்த அழகிய நூலோ?. ()

பெருவரை யிடத்தி னடியுறைந் திலங்கும்
பேரெழிற் சுமந்தபொற் கொடியோ
விரிகதிர் மணிமே கலைநடுக் கோத்து
விளங்கிட நடங்குமெல் லிழையோ
குருமுகம் மதுநன் மொழிவழி யடங்காக்
குயிர்க்குலந் தேய்ந்தெனத் தேய்ந்து
தெரிவரி தெனலா யுவமையிற் பொருவாச்
சேயிழை மடந்தைசிற் றிடையே.

(இ-ள்.) அன்றியும், குருவான நமது நாயகம்நபிமுகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் நன்மை தங்கிய வார்த்தைகளினது வழியி லமையாத காபிர்களாகிய சத்துராதிகளின் கூட்டமானது தேய்ந்ததைப் போலுந் தேய்ந்து தெரியுதற் கரிதென்று சொல்லும் படியாய் உவமையி லடங்காத செவந்த ஆபரணங்களை யுடைய இப்பெண்ணின் சிறிய இடையானது, பெரிய மலையினடிவாரத்தில் தங்கிப்பிரகாசிக்கும் பேரழகைச் சுமந்த பொற்கொடியோ? விரிந்த கிரணங்களைக் கொண்ட இரத்தினங்க ளழுந்தப் பெற்ற மேகலாபரணத்தை மத்தியிற் கோத்து விளங்கும் வண்ணம் அசையாநிற்கும் மெல்லிய நூலோ? (௩௧)

கதிரொளி வழுக்கி ரைம்பையைப் பழித்துக்
கவினுறுந் திரட்சியுற் கதத்த
மதமலைக் கரத்தின் வனப்பினை யழித்து
மாறரு மிருதுமென் மையினி
லிதமுறச் செவந்த விலவினைக் கடந்திட்
டிணையடி யணையெனப் படுத்திப்
புதுமையின் விளங்கித் தவத்துறை யவரும்
புகழ்ந்திடச் சிறந்தபொற் குறங்காள்.

(இ-ள்.) சந்திர சூரியரின் பிரகாசத்தை வழுக்கச் செய்யும் பளபளப்பின் வாழை மரத்தை நிந்தித்து அழகு பொருந்திய திரட்சியினாற் கதத்த மதங்களை யுடையயானையினது துதிக்கையின் அழகைத் தூஷணித்து மாறுதற் கரிய மிருதுவான மேன்மையினில் இனிமை பொருந்தச் செவப்புற்றவிலவம்பூவையும்தாண்டி இணையாகிய அடியினால் விளக்கமுற்றுப் பிரதிதினமும் தவத்திலே தங்கியிருக்கப்பட்டவர்களும் துதிக்கும் வண்ணம் சிறப்புப் பெற்ற அழகிய துடைகளை யுடையவள், (௩௨)

அணிமுகட் டலவன் றனைமுகந் தடுத்த
வரிவரிச் சினைவராற் போன்று
மணியினிற் செறித்த தூணியும் பெருவா
வடிவதாய் வெற்றிமன் னவர்முன்.

றணிவிலா திசைக்குங் காளமும் பொருவாத்
தன்மைய வாகிமென் மையவாய்ப்
பணிபல சுமந்து சிறுமயிர் நெருங்காப்
பண்புறு மிணைக்கணைக் காலாள்.

(இ-ள்) அன்றியும், அழகிய முகட்டினது நண்டைக் கவ்விக் கொண்டு நெருங்கிய அடர்ந்த இரேகைகளை யுடைய கெற்ப முற்ற வரால் மீனை யொத்து மணிகளினுற் செறிக்கப் பெற்றஅம்புருத்தூணியு மொப்பாகாத வடிவமாகி விஜயத்தை யுடைய அரசர்களின் முன்னர் குறைவில்லாது ஊதாநிற்கும் காகளமும் நிகராகாத தன்மையை யுடையன வாகி மென்மை யாகிப் பல ஆபரணங்களைத்தாங்கிச் சிறிய உரோமங்கள் அடரப் பெறாத தகுதி பொருந்திய இரு கணைக்கால்களை யுடையவள். (௯௩)

நிறைதரு தராசின் வடிவுறும் பரடாள்
நிறைமணிப் பந்தெனுங் குதியாள்
பொறையொடுங் கமடத் தினம்வனம் புகுந்து
பொருவரு தைந்தையு மொடுக்கி
மறைபடத் தவஞ்செய் திணைபடற் கரிதான்
மதித்திடற் குறும்புறந் தாளாள்
கறைதரா மணியின் குலமென விரல்கள்
கவின்கொளச் செவந்தமென் பதத்தாள்.

(இ-ள்.) அன்றியும், நிறையைத் தராநிற்கும் தராசினது வடிவைப்பொருந்திய பரடுகளையுடையவள். வரிசைவரிசையாக இரத்தினங்களை யழுத்தப்பெற்ற பந்தென்றுசொல்லும்படியான குதிங்கால்களையுடையவள். பொறுமையோடும் ஆமைக்கூட்டங்கள்நீரில்நுழைந்து ஒப்பிடக்கூடாத பஞ்ச புலன்களையும் அடக்கிக்கொண்டுமறைவாகத் தவஞ்செய்தும் ஒப்பாவதற்கருமை யானதினுல் மதித்தற்குறும் புறந்தாள்களை யுடையவள். களங்கத்தைத் தராத மாணிக்க மணியின் கூட்ட மென்று சொல்லும் வண்ணம் விரல்கள் அழகைக் கொள்ளச் சிவப்புற்ற மெல்லிய பாதங்களை யுடையவள், (௯௪)

வனமயிற் சாயற் குலமென வெழுந்து
மரைமல ரிதழின்மேற் குலவு
மனமென நடந்து நபிமுகம் மதுத
மடிமலர்ப் பதத்தினி லிறைஞ்சி
யினியன புகழ்ந்து பலரதி சயிப்ப
வினமுகிற் கருங்குழ னெகிழப்
புனைமணி பிறழ மின்னென நுடங்கிப்
புதுமையிற் றோன்றநின் றனளால்.

(இ-ள்.) இவ்வித ரூபலா வர்ணியங்களையுடைய அந்தப் பெண் காட்டின்கண் சஞ்சரியாநிற்கும் கூட்டமாகிய மயில்களினது சாயலை போன் றெழுந்து தாமரை மலரினது இதழ்களின்மேல் பிரகாசிக்கும் அன்ன பட்சியை யொப்ப நடந்து நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம வர்களின் பாத கமலங்களில் பணிந்து இனிமையான பலவிதப்புகழ்களை எடுத்துக் கூறித் துதித்து அங்கு சூழ்ந்திருந்த பல ஜனங்களும் அதிசயிக்கவும், கூட்டமாகிய மேகத்தை யொத்த கரிய கூந்தலானது நெகிழவும், அணிந்திருக்கும் இரத்தி னாபரணங்கள் புரளவும், மின்னலைப் போலும் ஒசித லூற்றுப் புதுமை யாகத் தோற்றும்படி அங்கு தங்கி நின்றாள். (௯௫)

தசைக்கட்டியைப் பெண்ணுருவமைத்த படலம்

முற்றிற்று.

ஆ படலம் ௯-க்குத்-திருவிருத்தம்-எ௯௯.

ஹபீபுராஜா வரிசைவரவிடுத்த படலம்.

கலிவிருத்தம்,

பூங்கொடி யெனமுன நின்ற பூவையைத்
தேங்கம ழமுதவாய் திறந்து நந்நபி
தாங்குதெண் டிரைத்தடத் திமஸ்கு மன்னவன்
பாங்கினி லுறைகெனப் பரிவிற் கூறினர்.

(இ-ள்.) நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பூவினாலான கொடிபோலும் முன்னால் நின்ற அந்தப் பெண்ணைப் பரிமள மானது கமழப் பெற்ற தங்களின் அமுதவாயைத் திறந்து தெள்ளிய அலைகளைபடியாநிற்கும் தடாகங்களையுடைய திமஸ்கு நகரத்தினது அரசனாகிய ஹபீபென்பவனின் பக்கத்தில் போய்த் தங்குவாயாகவென்று அன்போடுங்கூறினார்கள்.

வரிவிழிச் சிறுநுதன் மடந்தை நன்னெறிக்
குருவிடம் விடுத்தெழில் குலவச் சென்றணி
விரிகதி ரிலங்கிலை வேற்கை மன்னவன்
திருவடி கருங்குழற் சென்னி சேர்த்தினள்.

(இ-ள்) அவ்வாறு கூறவே, வரிகள் படர்ந்த கண்களையும் சிறிய நெற்றியையு முடைய அப் பெண்ணானவள் நன்மை பொருந்திய சன்மார்க்கத்தினது குரு வாகிய நாயகம் நபி றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சந்நிதானத்தை விட்டும் நீங்கி அழகானது பிரகாசிக்கும் வண்ணம் நடந்து போய் அலங்கார மானவிரிந்தகிரணங்களொளிரா நிற்கும் இலைகளைக் கொண்ட வேலாயுதத்தைத் தாங்கிய கையை யுடைய ஹபீபரசனின் அழகிய பாதங்களில் கரிய கூந்தலை யுடைய தனது தலையைப் பொருத்தி வணங்கினள். (உ)

தெண்டனிட் டெழுந்தபொன் மயிலைச் சீர்பெறக்
கண்டன னுவகையங் கடற்கு ளாயினன்
விண்டலத் தினிலிலாப் பதவி வெற்றியைக்
கொண்டன னெனமனக் குறைவு நீக்கினன்.

(இ-ள்.) அவ்விதம் தெண்டனிட் டெழும்பிய அழகிய மயில் போலும் சாயலையுடைய அப்பெண்ணை ஹபீபரசன் சிறப்புப்பொருந்தும்வண்ணம் பார்த்துச் சந்தோஷ சமுத்திரத்தி னுள்ளாகி ஆகாயலோகத்திலும் பூலோகத்திலுமில்லாதபதவியையும் வெற்றியையும் நாம் பெற்றுக்கொண்டோமென்று தனது மனக்குறைவை நீக்கினன். (ங)

தெரிவையின் வரத்திமஸ் கிறைவர் செவ்விய
குருசினங் நபிகொழுங் கமல மெல்லடி
பரவிநற் புகழ்சில பகர்ந்து வாக்கொடும்
வரிசையி னெறிக்கலி மாவை யோதினர்.

(இ-ள்.) திமஸ்கு நகரத்தினது அரசரான அந்த ஹபீபென்பவர் தனது மகவாகிய அப்பெண் பின்னல் தொடர்ந்துவரும் வண்ணம் அழகிய குரிசிலான நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் செழிய தாமரை மலரையொத்த மெல்லிய பாதங்களிற் பணிந்து நன்மையைக்கொண்ட சில புகழினற் றுதித்து வரிசையினது ஒழுங்கையுடைய "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர்ற சூலுல்லாஹி" யென்னுங் கலிமாவைவாக்குடன் கூறினர். (ச)

அரசரு மமைச்சருந் திமஸ்கி னதிபர்
பரிகரி வீரரும் படைக்கு ழாங்களுந்
தெரிவையின் றெகுதியுஞ் சிறந்த நந்நபிக்
குரிமையி னெடுங்கலி மாவை யோதினர்.

(இ-ள்.) அன்றியும், அங்கு வந்திருந்த அரசர்களும், மந்திரிமாரும், திமஸ்குநகரத்தினது மன்னவரான ஹபீபென்பவரின் குதிரைவீரர்களும், யானைவீரர்களும், மற்றும் படைக்கூட்டங்களும், பெண்களின் தொகுதியும், சிறப்புத்தங்கிய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு உரிமையோடுங் கலிமாவை யோதினர்கள். (ரு)

ஈனமொன் றில்லதோ ரிறைவ னாகிய
தானவன் றனையுளத் திருத்தித் தக்கதோர்

வானவர் புகழ்முகம் மதுவை வாழ்த்திநற்
றேனெனுங் கடற்பெருந் தீனி லாயினர்.

(இ-ள்.) அவ்வித மோகி யாதொரு குற்றமுமில்லாத ஒப்பற்ற இறைவனாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் நினைப்பை மனதின்கண் இருக்கும்படிசெய்து தகுதிபொருந்திய இணையற்றதேவர்களான மலாயிக்கத்துமார்கள் புகழாநிற்கும் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் துதித்து நன்மைதங்கிய தேனென்னும் கடலாகிய பெரிய தீனுல் இஸ்லாத்தி லானார்கள். (சுஎ)

மறைமுறை யொடுங்கின வணக்க நீங்கிலா
திறைவனைத் தொழுதிசு லாத்தி னேர்வழி
குறைவறப் படித்தருங் குபிரை நீக்கியே
முறைதவ றுப்பெரு முசிலி மாயினர்.

(இ-ள்.) அன்றியும், புறுக்கானுல் அலீமென்னும்வேதவொழுங்கோடு பிரதிதினமும் வணக்கத்தைவிட்டு நீங்காது இறைவனாகிய ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவைப் பணிந்து இஸ்லா மார்க்கத்தினது நேர்மையான பாதைகளைக்குறைவில்லாதுகற்று அரிதான குபிர் மார்க்கத்தை யொழித்து முறை தவறாத பெரிய முசிலி மானார்கள்.

மானகர்த் திமஸ்குமன் னவருந் தம்பெருஞ்
சேனையு முகம்மதின் றிருமு னாகிச்செங்
கான்மல ரடியிணை யிறைஞ்சிக் கைகொடுத்
தானநல் லறிவாய்ப் புறப்பட் டாரரோ.

(இ-ள்.) அவ்வித முசிலிமாகிய பெருமைபொருந்திய திமஸ்கு நகரத்தினது மன்னவரான ஹபீபென்பவரும் அவரின்பெரியசேனைகளும் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தேய்வீகம்தங்கிய முன்பிலாகி வாசனையையுடைய செவந்த தாமரை மலர்போன்ற இரு பாதங்களிலும் பணிந்து கையைக் கொடுத்துத் தஸ்பீகுசெய்து நன்மையைக்கொண்ட அறிவை யுடையவர்களாய் அந்த மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டார்கள். (அ)

நபியெனு முகம்மதை வாழ்த்தி நன்னெறிப்
புவியெனு நகரினோர் புறத்தி னீங்கிநின்

றபுஜகல் தனையழைத் தரசர் நாயகர்
கவினுறும் பலமொழி யெடுத்துக் காட்டினர்.

(இ-ள்.) அவ்வாறு புறப்பட்ட இராஜநாயகரான ஹபீ பென்பவர் நபியென்னும் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைத் துதித்து நன்மையுற்ற சன்மார்க்கத்தையுடைய தானமென்றும் கூறுநிற்கும் அம்மக்கமா நகரத்தினது ஓர் பக்கத்தில் அகன்று நின்றுகொண்டு அபூஜகி லென்பவனைக் கூப்பிட்டு அழகுபொருந்திய பல வார்த்தைகளை எடுத்துச்சொல்லி காட்டினர். (கூ)

மந்திர மறைமுகம் மதுவை வாக்கினிற்
சிந்தையி லிகழ்ந்தவர் நரகஞ் சேர்குவ
ரந்தமி னாயகன் றூத ராமெனப்
புந்தியிற் புகழ்வர்பொன் னுலகம் போதுவார்.

(இ-ள்.) மந்திரமாகிய புறுகானுல் அலீமென்னும் வேதத்தையுடைய நாயகம் நயிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை வாக்கினாலும் மனசினாலும் நிந்தித்தவர்கள் நரகலோகம்போய்ச் சேர்வார்கள். முடிவில்லாத நாயகனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதராகுமென்றுசொல்லி இருதயத்தின்கண் துதிக்கப்பட்டவர்கள் சொற்கலோகம்போய்ச் சேர்வார்கள்.

மலையென நிமிர்மதிள் திமஸ்கு மன்னவர்
நிலைகுலை மனத்தபூ ஜகல்த னென்சினிற்
கலைமறை தெளிவினுங் கார ணத்தினும்
பலதர முரைத்துத்தம் பதியை நோக்கினர்.

(இ-ள்.) மலைகளைப்போலும் உயர்ந்த கோட்டைமதில்களையுடைய திமஸ்கு நகரத்தினது மன்னவராகிய ஹபீபென்பவர் தனது நிலைகுலைந்த மனத்தையுடையவனான அபூஜகி லென்பவனின் நெஞ்சினது வேதசாஸ்திரங்களின் தெளிவினாலும்காரணங்களினாலும் பல தடவை கூறித் தமது நகராகிய திமஸ்குப்பதியை நோக்கினர். ()

மதகரி யிருபுற நெருங்க மாப்படை
கதழ்வொடுங் கதியொடுங் கனைத்து முன்செலப்
பதலையு முரசமும் பம்பக் கானக
நதிகளுங் கடந்தய னடந்து போயினர்.

(இ-ள்.) அவ்வாறு நோக்கிய அவர் மதங்களை யுடைய யானைகள் இரு பக்கங்களிலும் நெருங்கவும், குதிரைப் படைகள் உக்கிரத்தோடும், மல்லம், மயூரம், வியாக்கிரம், வானரம், இடபமென்னும் ஐங் கதிகளோடும் கனைத்துக் கொண்டு முன்னே செல்லவும், பதலைகளும் முரசங்களும் சத்திக்கவும், கானகத்தின் கண்ணுள்ள நதிகளையும் தாண்டி அப்புறம் நடந்து சென்றார். (கஉ)

கரித்திர ளொலித்தகம் பலையுங் காவளர்
பரித்திர ளொலித்தகம் பலையும் பண்முர
சிரைத்ததுந் தீன்கலி மாவை யின்புற
வுரைத்திடுந் தொனிக்கட லுடைத்துக் காட்டுமால்.

(இ-ள்.) யானைக்கூட்டங்கள் சத்தித்த ஓசையியும், சோலையின்கண் வளராநிற்கும் குதிரைக் கூட்டங்கள் சத்தித்தஓசையும், கீதத்தைக் கொண்ட முரசங்கள் சத்தித்த ஓசையும், தீனுல் இஸ்லாமென்னும் மெய் மார்க்கத்தினது "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர்ற சூலுல்லாஹி" யென்னுங் கலிமாவை இனிமையுடன் ஓதிய ஓசையும், சமுத்திரத்தினது ஓசையைக் கொடுத்துக் காட்டா நிற்கும். (கங)

கனியினுந் தேனினுங் காய்ந்த பாகினு
மினியன புதுமறை யியற்று நாவினர்
நனிபல சூழ்வர நகரை நண்ணினார்
பனிவரை யினும்புகழ் பரித்த பான்மையார்.

(இ-ள்.) இமய மலையைப் பார்க்கிலும் மிகுந்த கீர்த்தியைத் தாங்கிய பான்மையை யுடைய வரான் ஹபீ பென்பவர் பழத்திலும், தேனிலும், வற்றிய பாலிலும் மிஞ்சிய இன்பத்தை யுடைய தாகிய புதிய புறுகானுல் அலீ மென்னும் வேதத்தை ஓதுகின்ற நாவையுடைய வர்களான தமது பரிகாரங்கள் மிகவும் தம்மைச் சூழ்ந்து வரும் வண்ணம் தம் பதியாகிய திமஸ்கு நகரத்திற் போய்ச் சேர்ந்தார். (கச)

விண்ணுறை கொடிமதிள் திமஸ்கு மேவிய
வண்ணலும் பதிமுதி யவருக் கன்பொடு
பண்ணருந் தீன்மொழி பயிற்றி நன்னெறி
யெண்ணிலை பெறவிசு லாத்தி லாக்கினார்.

(இ-ள்.) ஆகாயத்தின் கண் சென்று தரியாநிற்கும் கொடிகளைப்பெற்ற கோட்டை மதிலை யுடைய திமஸ்கு நகரத்தை அவ்வாறு போய்ச் சேர்ந்த அண்ண லாகிய ஹபீ பென்பவர் அன்புடன் தமது நகரத்திலுள்ள வயதால் முதிர்ந்தோர்களுக்குக் கீதத்தைக்கொண்ட அருமையான தீனுல் இஸ்லா மென்னும் மெய் மார்க்கத்தினது வசனங்களைக் கற்பித்துச் சித்திக்கும் நல்ல சன்மார்க்கதநின் நிலைமையைப் பெறும் வண்ணம் தீனுல் இஸ்லாத்தி லாகும்படி செய்தார் ()

தீன்முறை நடத்திய திமஸ்கு மன்னவர்
மான்மதங் கமழ்ந்தமெய் நபிக்கு மாசிலாப்
பான்மதிக் கலைகலை பணிபொன் பட்டிவை
கூன்வெரிந் தொறுவினிற் கொடுத்த னுப்பினர்.

(இ-ள்.) அவ்வாறு தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க முறைமையைத் தமது பட்டணத்தின்கண் நடாத்திய திமஸ்கு நகரத்தினது மன்னவரான ஹபீ பென்பவர் கஸ்தூரி வாசனை கமழப் பெற்ற காத்திரத்தை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்குக் குற்ற மற்ற பால் யோலும் சந்திரக் கிரணங்களை நிகர்த்த வஸ்திரம், ஆபரணம், கனகம், பட்டு, இவைகளை வரிசையாக வளைந்த முதுகை யுடைய ஒட்டகத்தில் ஏற்றிக் கொடுத்தனுப்பினர். (கசு)

நிதிமணி பணிபல நிறைந்த வொட்டகப்
பொதிபதிற் றுடுபரற் புடவி நீந்திவான்
மதிநடந் துலவிய மக்க மாகிய
பதியினுக் கடுத்தொரு பாலுற் றாரவர்.

(இ-ள்.) பொன், இரத்தினம், ஆபரண மாகிய இவைகள் பல நிறைந்த ஒட்டகப் பொதி பத்தோடும் அவற்றைக் கொண்டு வரப் பட்ட அவர்கள் பரற் கற்களை யுடைய காடுகளைக் கடந்து வான லோகத்தின்கண் சஞ்சரியாநிற்கும் சந்திரனது நடந்து உலவப் பெற்ற மக்கமாகிய நகரத்திற்குச் சமீபித்து ஓர் தானத்தில் வந்து சேர்ந்தார்கள். (கஎ)

அருமறை நபி முகம் மதுவுள் ளன்புறக்
குருமணி யொடுநிதி திமஸ்கிற் கொற்றவர்

வரவிடுத் தனரென வழங்கும் வாசகந்
தெரிதர அபூஜகல் செவியிற் சார்ந்ததே.

(இ-ள்.) அருமையான புறுகானுல் அலீ மென்னும் வேதத்தையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் மனமானது அன்பைப் பொருந்தப் பிரகாசத்தைக் கொண்ட இரத்தினங்களோடு மற்றும் திரவியங்களைத் திமஸ்கு நகரத்தினது மன்னவ ராகிய ஹபீ பென்பவர் வரவிடுத் தாரென்று கூறும் சமாச்சாரமானது விளங்கும் வண்ணம் அபூஜகி லென்பவனின் காதுகளிற் சார்ந்தது. (௧௮)

மடித்தசிந் தையினெழுந் தேகி மன்னவன்
கொடுத்தனுப் பியநிதிக் குவையும் பண்டமும்
விடுத்ததிங் கெமக்கென வெகுண்டு வெஞ்சொலாற்
றடுத்தடுத் தனனபூ ஜகுலென் பானரோ.

(இ-ள்.) அவ்வாறு சாரவே, அபூஜகி லென்பவன் வஞ்சகத்தைக்கொண்ட மனத்தோடு மெழுந்து சென்று மன்னவனான ஹபீ பென்பவன் கொடுத் தனுப்பிய பொற் குவையும்; மற்று முள்ள பண்டங்களும் இவ்விடத்திற்கு விட்டது எமக்கென்று சொல்லிக் கோபித்துக் கொடிய வார்த்தைகளால் தடுத்து அவைகளின் சமீபத்தில் நெருங்கினன். (௧௯)

ஹபிபர சனுப்பிய கனக மியாவையு
மபுஜகல் தடுத்தன னென்ன வாதிநூற்
புவியினில் விளக்கிநற் புகழ்ந டாத்திய
நபிதிரு முனஞ்சிலர் நவின்றிட் டாரரோ.

(இ-ள்.) ஹபீ பரசர் அனுப்பிய நிதிக ளெல்லாவற்றையும் அபூஜகி லென்பவன் அவ்வாறு தடை செய்தா னென்று சில ஜனங்கள் யாவற்றிற்கும் முதன்மைய னான ஜல்ல ¦ ஜலாலகு வத்த ஆலாவின் புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தை இப் பூலோகத்தின் கண் விளக்கி நல்ல கீர்த்தியை நடாத்திய நாயகம் நபி முகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் தெய்வீகந் தங்கிய முன்னுற் கூறினர்கள் (௨0)

கலிநிலைத்துறை.

விரைவி னடக்கிட முகம்மதுந் தோழர்க ளுடனும்
விரைவி னேகிப்பொன் றடுத்தவ ரெவரென வினவத்
தரையி லியானல திலையென வபூஜகல் சாற்ற
வருள்கி டந்தகட் கடைசெவப் புண்டவப் போதில்

(இ-ள்.) அவ்வாறு அவர்கள் அச் சமாசாரத்தை விளக்கிக்கூற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களும் தங்களின் தோழர்களோடும் விரைவாக அத்தானத்திற்குச் சென்று இப்பொன்னைத் தடை செய்தவர் யாவரென்றுகேட்க அபூஜகி லென்பவன் இவ் வுலகத்தின்கண் யானல்லாது வேறுஒருவரு மில்ல ரென்று சொல்ல, அந்நபிகட் பெருமா னவர்களின் கிருபையானது கிடக்கப்பெற்ற கடைக் கண்க ளானவை செவப் புண்டன அந்தச் சமயத்தில். (உ௯)

உனக்கு வந்தது மோங்கிய தீன்முகம் மதுகீர்
தனக்கு வந்ததுங் கொணர்ந்தவர் சொல்குவர் சரதஞ்
சினக்க வந்திவண் மறிப்பது தகுவதோ செலுநின்
மனைக்கெ னச்சிலர் கூறலு மனத்திடை கொதித்தான்.

(இ-ள்.) சில ஜனங்கள் அபூஜகிலைப் பார்த்து இத் திரவியங்களனைத்தும் உனக்கு வந்ததும், சிறப் போங்கப் பெற்ற தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை யுடைய முகம்மதுக்கு வந்ததும், அவைகளைக் கொண்டு வந்தவர்கள் இன்னாருக்கென்றுசத்தியத்தைச்சொல்லுவார்கள். நீ இங்கு கோபத்துடன் வந்து மறிப்பது தகுவதா? அல்ல ஆதலால் உனது வீட்டிற்குச் செல்லுவாயாக வென்று கூறியமாத்திரத்தில் அவ்வபூஜகி லென்பவன் மனசின்கண் கொதிக்க லானான் ()

மட்டு வார்பொழிற் றிமஸ்குமன் னவன்வர விடுத்த
பெட்ட கத்தையும் பொன்னையும் பிணக்கறக் கரியாய்ப்
பட்ட றத்தெளிந் தமக்கெமக் கெனப்பல ரறிய
வொட்டை வாய்திறந் துரைக்குமென் றபூஜகு லுரைத்தான்

(இ-ள்.) அவ்விதம் கொதித்த அபூஜகி லென்பவன் தேன்ஒழு காநிற்கும் சோலைகளை யுடைய திமஸ்கு நகரத்தினது அரசனான ஹபீ பென்பவன் அனுப்பிய பெட்டகத்தையும்பொன்னையும்உமக்கு அல்லது எமக்கென்று யாவர்களு முணரும் வண்ணம் யாதொருபிணக்கு மின்றி மிகவுந் தெளிந்து அவ் வொட்டகங்களே தமது வாய்களைத் திறந்து சாக்ஷியாக ஏற்பட்டுக் கூறு மென்று கூறினான் ()

உரைத்த வாய்மையிங் கெமக்கியை வதுபடி யுளத்தோய்
விரித்துக் கேட்டரு ளென்றன ரபூஜகல் விரைவி
னிருத்தி யிப்பொரு ளனேயிவ் வூரவ ரறியப்
பரித்த வொட்டகங் கரிநகர்ந் திடுமெனப் பகர்ந்தான்.

(இ-ள்.) அவன் அவ்வாறு கூற நாயகம் நபிமுகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அசத்தியத்தைக்கொண்ட மனத்தை யுடைய அபூஜகிலே! நீ இவ்விடத்தில் கூறியசமாச்சாரம் எமக்கும் பொருந்திற்று அஃதை விரித்துக் கேட்பாயாக வென்று சொன்னார்கள் அதற்கு அபூஜகி லென்பவன் இன்றையத் தினம்இத் திரவியங்களை இங்கு இருக்கும்படி செய்து நாளை இத் திரு மக்கமா நகரத்தி லுள்ள யாவர்களும் அறியும் வண்ணம் இச்சபாசாரத்தைப் பற்றிச் சுமைகளைத் தாங்கிய இவ் வொட்டகங்க ளானவைவிரைவில் சாக்ஷி கூறு மென்று கூறினான், (௨௪)

நன்று நன்றெனத் தோழரு முகம்மது நபியும்
பொன்றி கழ்ந்தெழில் குலவிய மனையிடை புகுந்தார்
கன்று புன்மனத் தபூஜகல் கிளையுடன் கடிதிற்
சென்று வெண்மலர் செறிதரு மாலயஞ் சேர்ந்தான்.

(இ-ள்.) அவ்விதம் கூறவே, நாயகம் நபி காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் அவர்களின் தோழன்மார்களும் நல்லது! நல்லது!! என்று சொல்லிக் கொண்டு பொன்னினுற் பிரகாசித்து அழகு குலவப்பெற்ற தங்கள் மாளிகையின்கண்போய் நுழைந்தார்கள் கன்றிய கீழ்மையானமனத்தை யுடைய அபூஜகி லென்பவனும் தனது பந்துக்களோடும்விரைவாய்ச் சென்று வெள்ளிய புஷ்ப மாலைகள்நெருங்கியகோவிலினிடத்திற் போய்ச் சேர்ந்தான், (௨௫)

ஆல யம்புகுந் தழியுரு வெடுப்புத் ததற்குச்
சால மென்மலர்த் தொடையொடும் பலபணி தரித்துக்
கோல மார்ந்தெழத் தீபமுந் தூபமுங் கொடுத்துத்
தால மீதினிற் சிரம்பட விருகரந் தாழ்த்தான்.

(இ-ள்.) அவ்வாறு கோவிலின்கண் போய்நுழைந்து அளிந்து போகும் சொரூபத்தை எடுத்த அங்குள்ள புத்துகானுக்கு அழகானது அதிகரித்து ஓங்கும்வண்ணம் மிகவும் மெல்லியமலர்களாலாகிய மாலைகளோடும் பல ஆபரணங்களைப் பூட்டி தீபமுந் தூபமுங் கொடுத்துப் பூமியின்மீது தனது தலையானது படும்படி இரண்டுகைகளையும் பணித்தான். (௨௬)

விழுந்து தெண்டனிட் டெழுந்திரு கரம்விரித் தேந்திப்
பொழிந்த நீர்விழி தரவிரந் தேத்திய புகழான்
மொழிந்து வல்வினை தொடுத்திடு முகம்மதின் வாய்மை
யழிந்தென் சொற்பழு தறவர மருள்கவென் றறைந்தான்.

(இ-ள்.) அன்றியும், பூமியின்மீது விழுந்து சாஷ்டாங்கஞ்செய்து எழுந்து இரண்டு கைகளையும் விரித்து உயர்த்திக் கண்கள் சிந்தாநிற்கும் கண்ணீரைத் தரும்வண்ணம் இரந்து துதிக்கின்ற புகழினால் துதித்துக் கொடிய பாதகத்தையுண்டாக்கும் முகம்மதென்பவனின் வார்த்தைகளானவை கெட்டு எனது வார்த்தைகள் குற்றமறும்படி வரமருள்வாயாக வென்று கேட்டான். (௨எ)

மரைத்த டந்திகதிமஸ்கிழ்றைவர் விடுநிதியந்
தரைத்த லம்புகழ்ந் திடவபூ ஜகல்தனக் கெனவே
நுரைத்துத் தூங்கித ழொட்டைவாய் திறந்தெனை நோக்கி
யுரைத்த ளித்திட வேண்டுமென் பதுமெடுத் துரைத்தான்.

(இ-ள்.) அன்றியும், அபூஜகிலென்பவன் தாமரைத்தடாகங்கள் பிரகாசியாநிற்கும் திமஸ்கு நகராதிபதியாகியஹபீபென்பவன்: அனுப்பிய திரவியங்கள் தனக்கென்று இப் பூலோகமானது துதிக்கும்வண்ணம் நுரைக்கப்பெற்றுத் தூங்கிய இதழ்களை யுடைய ஒட்டகங்கள் தமது வாய்களைத் திறந்து தன்னைப் பார்த்துச் சொல்லித் தன் பாவில் தரவேண்டுமென்பதையும் எடுத்துச்சொன்னான். (௨அ)

எதிரி னின்றுதன் றேவதை தனைப்புகழ்ந் தேத்திக்
கதிர்கொள் பொன்முடிக் கோயிலின் வாயிலைக் கடந்த
சதியன் றன்முக நோக்குத றவறெனச் செவந்து
கொதிகொ தித்தழன் றருக்கன்மேற் கடலிடை குதித்தான்.

(இ-ள்.) அவ்வாறு முன்னர் நின்று தனது தேவதையாகியபுத்துகாலைத் துதித்து எதித்திப் பிரகாசத்தைப்பெற்ற பொன்னிஞலான சிகரத்தினது அக்கோயினின் வாயிலைத் தாண்டி வெளியில் வந்த சதிவையுடையவனுகிய அவ் வபூஜகிலென்பவனின் முகத்தைப்பார்ப்பது குற்றமென்று சொல்லிச் சூரியனுனவன் மிகவும் கொதித்துக் கனன்று செவப்புற்று மேல்பாற் சமுத்திரத்திற் போய்ப்பாய்ந்தான். (௨௯)

அற்றை நாளைகன் றிடமறு தினத்தபூ ஜகல்தன்
சுற்ற மோடடைந் தான்றுணைத் தோழர்க ளோடும்
வெற்றி நன்னெறி முகம்மது விரைவினி லேகிக்
கொற்ற மன்வா விடுத்தவ ரிடத்தினிற் கூண்டார்.

(இ-ள்.) அன்றையத்தினம்நீங்கி மறுநாள் அபூஜகிலென்பவன் தனது பந்துக்களோடு அவ்விடத்திற்போய்ச்சேர்ந்தான். விஜயத்தினது நல்ல சன்மார்க்கத்தையுடைய நாயகம்நபிமுகம்மது முஸ்தபா ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும்தங்களின் துணையாகியசினேகிதன்மார்களோடும் விரைவாய்ச் சென்று வெற்றியையுடைய அரசராகிய அவ் வபீபென்பவர் அனுப்பியவர்களிடத்திற் கூடினார்கள். ()

ஓட்டை வாய்திறந் துரைப்பதற் கெவர்முன முரைப்ப
திட்ட மாயுரை யெனவபூ ஜகுலுட னியம்பக்
கட்டு ரைப்படிக் கரியினை யெவர்களுங் களிப்ப
விட்டு ரைத்திடென் றுரைப்பதி யானென விரித்தான்.

(இ-ள்.) அவ்விதம் கூடி அபூஜகிலென்பவனேடு ஓட்டகங்கள் தமது வாயைத்திறந்து கூறுவதற்கு முன்னர் சொல்வோர் யாவர்? இட்டமாய்க் கூறுவாயாகவென்று கேட்க; அவன் யாவர்களும் மகிழும்வண்ணம் சத்தியவாசகப்படி சாக்ஷியை விடுத்துச்சொல்லென்று கூறுவது யானென்று விரித்து விடை கூறினன். (௩௧)

நன்று கூறுமு னென்றலு மபூஜகல் நடந்து
சென்று பூம்பொழி லொட்டகை யனைத்தையுந் திரட்டி
நின்று நீவிர்கள் சுமந்திவ ணிறக்கிய நிதியம்
வென்றி மன்னவ னெவர்க்கனுப் பியதென விரித்தான்

(இ-ள்.) அவ்வாறு கூற, நல்லது நீயே முன்னர் கூறுவாயாக வென்ற அளவில் அவ்வபூஜகிலென்பவன் நடந்துபோய் அழகிய சோலையின்கண்ணுள் ஒட்டகங்க ளெல்லாவற்றையும் ஒன்றாகக்கூட்டி அங்கே நின்றுகொண்டு நீங்கள் சுமந்து இவ்விடத்தில் கொண்டுவந்து இறக்கிய திரவியங்கள் வெற்றியையுடைய மன்னவனாகிய ஹபீபென்பவன் யாவருக்காய் இங்கு அனுப்பினதென்று விரித்துக் கேட்டான். (௩௨)

கேட்ட பூஜகல் நிற்பவொட் டகக்கிளை பதிற்றும்
நாட்டி வைத்திடுஞ் சிலையென நவின்றில மறுகி
மீட்டுங் கேட்டலு நவின்றில வீரமும் வலியும்
போட்டுக் கேட்டனன் பிற்றையும் புகன்றிசைத் திலவே

(இ-ள்) அபூஜகிலென்பவன் அவ்வாறு கேட்டு நிற்க ஒட்டகவினம் பத்தும் பூமியில் நாட்டிவைத்திருக்கும் கற்சிலையைப்போல யாதொன்றும் கூறிலன. திரும்பியும் மறுக்கமுற்றுக் கேட்டமாத்திரத்தில் அப்பொழுதும் கூறிலன. திரும்பியும் மறுக்கமுற்றுக்கேட்டமாத்திரத்தில் அப்பொழுதும் கூறிலன. தனது வீரத்தையும் வலிமையையும் போட்டுக்கேட்டான். பிறகும் தமதுவாய்களாற் கூறிப் பகிர்ந்திலன. (௩௩)

பரித்த வொட்டகை பகர்ந்தில கரியெனப் பலரு
மிரைத்து மாமறை முகம்மதின் றிருமுகத் தெரிந்து
பிரித்தி டாக்கரி யாய்ப்பெரு வாயினைப் பிளந்து
விரித்து ரைத்திட விளம்புமென் றெடுத்துரை விரித்தார்,

(இ-ள்.) அப்பொழுது அங்கு கூடியிருந்த பல ஜனங்களும் சுமைகளைத் தாங்கிய ஒட்டகங்கள் சாக்ஷிகூறவில்லை யென்று சத்தித்து மகத்தாகிய புறுகானுல் அலீமென்னும் வேதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களினது முகத்தின்கண் எதிர்ப்பட்டு நீங்கள் பிரிக்கக்கூ

டாத சாக்ஷியாக அவ் வொட்டகங்கள் தமது பெரியவாயைப் பிளந்துவிரித்துக்கூறும் வண்ணம்கூறுங்களென்றுவார்த்தைகளைஎடுத்து விரிவாய்ச்சொன்னார்கள். (ருச)

நிகா ரும்பதி முதியவர் நிகழ்த்திடும் வசன
முகம்ம தின்செவிப் புகுதலு மனமிக மகிழ்ந்து
மிகுவி தப்புது மைகடா வொட்டயை விளித்துப்
புகலு மென்றன ரபூஜகல் கெடுமனம் புழுங்க

(இ-ள்.) ஒப்புச் சொல்லுதற் கருமையாகிய அந்த மக்கமா நகரத்தினது வயதால் முதிர்ந்தவள் அவ்வாறு கூறும் வார்த்தைகள் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் காதுகளில் நுழைந்த மாத்திரத்தில் மிகவும் மனக்களிப்படைந்து அபூஜகிலென்பவனின் கெட்டமனமானது புழுக்க மடையவும், அதிவித மான ஆச்சரியங்களைக் கொடுக்கவும், அந்த ஒட்டகங்களை யழைத்து நீங்கள் சாக்ஷி கூறுங்க ளென்று கூறினார்கள். ()

உரைத்த சொல்லுளங் தரித்திடக் கிடந்தவொட் டகங்க
ளிரைத்தெ ழுந்தற வளைநெடுங் கழுத்தினை நீட்டி
விரித்த வாலசைத் துவந்திரு விழிகளை விழித்துப்
பெருத்த வாய்திறந் தறபெனு மொழியினிற் பேசும்.

(இ-ள்.) நாயக மவர்கள் அவ்வாறு கூறிய வார்த்தைகள் மனசின்கண் தங்கப், படுத்திருந்த ஒட்டகங்கள் விருப் புற்று வரிசையாயெழும்பி மிகவும் வளைந்த நெடிய கழுத்தை நீட்டி விரித்த வாலை அசையும படி செய்து இரண்டு கண்களையும் விழித்துப் பெரிய வாயைத் திறந்து அறபென்னும் பாஷையினாற் கூறுநிற்கும். (ருசு)

வரிசை நாயகம் றூதெனு முகம்மது நபியே
யரசர் கேசரி ஹபிபெனுந் திமஸ்கினுக் காச
ரிரசி தம்பணி மணிதம னியமிவை யனைத்தும்
பரிச னத்தொடு நமக்கனுப் பினரெனப் பகர்ந்த.

(இ-ள்.) வரிசையை யுடைய நாயகனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதரென்று சொல்லாநிற்கும் முகம்ம தென்னும் திரு நாமத்தை யுடைய நபியே! அரசர்க ளாகிய யானைகளுக்குச் சிங்கேற்றைப் போன்ற ஹபிபென்று சொல்லும் திமஸ்கு நகரத்தி

னது மன்னவர் தமது பரிசனத்தோடும் வெள்ளி, ஆபரணம், இரத்தினம், பொன்னுகிய இவைக ளெல்லாவற்றையும் உங்களுக்கு அனுப்பினு ரென்று கூறின். (௩௭)

உரைத ராவிலங் கினங்கரி யுரைத்ததென் றுரவோர்
தெரித ராப்பெரும் புதுமைகொ லெனச்சிர மசைத்து
விரித ராநிறை பெருங்கடன் மேதினி யனைத்தும்
புரித ராதிய ரிவரெனப் புகழ்ந்தயல் போனர்.

(இ-ள்.) அவ்விதம் கூற அம்முதியோர்கள் வாய் திறந்து பேசாதவிலங்கின் கூட்டமானது சாக்ஷி கூறிற்று. இஃதுஎன்றுங் காணக்கூடாத பெரு மாச்சரியமென்று தங்களின் தலைகளை யசைத்துச் சங்குகளைக் கொண்ட விரிந்த பெரிய பூரணப்பட்ட சமுத்திரத்தையுடைய இந்தப் பூலோக முழுவதையும அரசாட்சி செய்யும் அதிபர் இம்முகம்மதென்று சொல்லித் துதித்துவிட்டு அயலில் போய்ச் சேர்ந்தார்கள். (௩௮)

மருந்தி லாப்பெரும் பிணிவளைத் தெனமதி மயங்கிக்
கரிந்து மாமுகம் வாயவெளுத் தறத்தலை கவிழ்ந்து
திருந்தி லாமனத் தொடுஞ்சினத் தொடுஞ்செய லழிந்து
பொருந்தி லாதுதன் கிளையொடு மபூஜகல் போனுன்.

(இ-ள்.) அபூஜகி லென்பவன் அவிழ்த மிலலாத பெரிய நோயானது சூழ்ந்ததைப் போலும் அறிவழிந்து மகத்தாகிய முகம்கருகப் பெற்று வாய் வெளுப்புற்று மிகவும் தலை கவிழ்ந்து செவ்வைப்படாத சிந்தையோடும் சினத்தோடும் தனது செயலானது கெடுதலடைந்து தன் பந்துக்களோடும் பொருந்தாது இருப்பிடம்போனுன்.

கன்ன லஞ்சுவைத் தீனிலை நிறுத்திய ஹபீபு
மன்னர் மன்னவர் வரவிடு நிதியமு மணியு
நன்ன யம்பெறுந் தோழர்கள் சூழ்வர நயினர்
தங்க கத்தினிற் செறித்தனர் தழும்புகழ் தழைப்ப.

(இ-ள்.) அன்றியும், நயினு ராகிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நல்லநயத்தைப் பெற்ற தக்களின் சிநேகிதன்மார்கள் தங்களை வளைந்து வரும் வண

ணம் அழகிய கரும்பினது இரசத்தை யொத்த தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையை நிலையாக நிற்கச் செய்த இராஜாதி ராஜரான ஹபீபென்பவர் அனுப்பிய பொன்னையும் இரத்தினங்களையும் செழிய கீர்த்தியானது ஓங்கும்படி தங்களின் மாளிகையினிடத்துக் கொண்டு போய்ச் செறித்து வைத்தார்கள். (௪0)

மல்ல லம்புவி யிடத்தினில் தீனெறி வழுவா
தில்ல றத்தொடு முதிர்மறை யவரிர வலர்க
ளல்ல லற்றிடப் பெருநிதி யெடுத்தினி தருளிப்
பல்ல ரும்புதழ் தரஙபி யிருந்தனர் பரிவின்.

(இ-ள்.) அவ்வாறு வைத்த நமது நாயகம் செய்யிதுனா ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் வளமையையும் அழகையும் கொண்ட இவ்வுலகத்தின் கண் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நெறியானது பிழையாது இல்லறத்துடன் முதிர்ந்த வேதியர்களுக்கும் யாசகர்களுக்கும் துன்பமறும்படி இனிமையோடும் பெரிய திரவியங்களை எடுத்துக் கொடுத்தும் பலரும் புகழும் வண்ணம் அன்புற் றிருந்தார்கள். (௪௧)

ஹபீபுராஜா வரிசைவரவிடுத்தபடலம்

முற்றிற்று.

ஆ படலம் ௧0-க்குத்-திருவிருத்தம்-எ௪௪.

ஈமான்கொண்டவர்கள்

ஹபஷா ராச்சியத்துக்குப் போந்த படலம்.

கலிநிலைத்துறை

மாசி லானருள் பெருகிய மக்கமா நகரி
லாசி லாநபி தீனிலை நிறுத்துமங் நாளிற்
பாச மற்றவ னபூஜகல் கிளைபல பகுப்பாய்ப்
பூச லிட்டனர் பெரும்பழி நடுநிலை புகுந்தே.

(இ-ள்.) களங்க மில்லாத நமது நாயகம் நபி காத்திமுல் அம்பி யா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் குற்ற மற்றவனாகிய ஜல்ல ஜலாலகு வத்த ஆலாவின் திருக்காருண்ணி யம் ஓங்கப் பெற்ற மக்கமா நகரத்தின் கண் தீனுல் இஸ்லா மென் னும் மார்க்க நிலைமையை நிலையாக நிறுத்துகின்ற அந்நாளில், அன் பற்றவனான அபூஜகி லென்பவனது பந்து ஜனங்கள் பலபிரிவாய்மத் தியில் நுழைந்து பெரிய பழியைக் கொண்ட கலகத்தைச் செய்யலா னார்கள். (க)

சிகையி னீண்முடி குயிற்றிவெண் சுதைநடுத் தீற்றி
நகைநி லாத்தரு மேனிலை மக்கமா நகரின்
மிகைம னத்தொடு காபிர்க டினந்தொறும் விளைக்கும்
பகையி னேடரும் பஞ்சமு முடன்பரந் ததுவே.

(இ-ள்.) அன்றியும், உச்சியில் நெடிய மகுடத்தைப் பதித்து நடுவில் வெள்ளிய சுண்ணச் சாந்து தீற்றி ஒள்ளிய பிரகாசத்தைத் தரா நிற்கும் மாளிகைகளை யுடைய மக்கமா நகரத்தின்கண் காபிர் கள் பிரதி தினமும் மிகைக்கப் பெற்ற சிந்தையுடன் செய்யும் பகை மையோடு கூட அரிதாகிய பஞ்சமும் பரவிற்று. (உ)

வெறுத்த காலமுங் காபிர்க டொடுத்தவல் வினையு
மறுத்தி லாமையும் பீஸபீ லாற்களை மாய்த்து
நிறுத்துந் தீனென வேவலு மில்லையா னிதமும்
பொறுத்தி ருப்பதெவ் வழியென வகத்திடை பொறுத்த

(இ-ள்.) அன்றியும்; அங்கபிகட் பெருமா னவர்களுக்குவெறுக் கப்பெற்ற காலமாகிய பஞ்ச காலமும், காபிர்கள் ஆரம்பித்த கொடு மை தங்கிய வினைகளும், மறுத்து நடக்கும் வேறு மார்க்கங்கள்இல் லாமையும் பிஸபீ லென்னும் யுத்தத்தினல் களைக ளாகிய அக்காபிர் களைக் கொன்று தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை நிறுத்து மென்று எவலும்; இல்லாததினல் பிரதி தினமும் சகித்திருப்பது எவ்வாறென்று யனசின் கண் கவலைபானது தங்கியது. (ங)

கொலத்த காப்பெரும் பகைதொடுத் தினத்தொடுஞ் சூழ்ந்து
குலத்தி னுய்பிரித் தறநெறித்தீனிலைக் குரியோ
ரிலத்தி னும் வரப் பொருந்திலா நமரினு வினியிந்
நிலத்தி ருப்பது பழுதென மனத்திடை நினைத்தே.

(இ-ள்.) அன்றியும், கூறத் தகாத பெரிய பகையைத்தொடுத்து இனத்துடன் வளைந்து குலத்தை விட்டும் வேறு படுத்தித்தருமவழி யை யுடைய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமைக்குச் சொந் தப் பட்டவர்கள் வீட்டின் கண்ணும் வரச் சம்மதப் படாத நம்மவர் களினுல் இனி இந்த மக்கவா நகரத்தி லிருப்பது குற்ற மென்றுசிந் தையின்கண் கருதி. (ச)

மறுவி லாதநன் னெறிமறை தேருது மானை
யறிவி னுய்ந்தகு மதுதனிப் தழைத்தரு கிருத்திப்
பிறவு முற்றதும் வருவது நிகழ்வதும் பேசி
யுறையு மிப்பதி பெரும்பகைக் காவன வுரைத்தார்.

(இ-ள்.) குற்ற மற்ற நல்ல சன்மார்க்கத்தினது புறுகானுல்அலீ மென்னும் வேதத்தைத் தெளிந் தறியும் உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களை அஹ்ம தென்னுந் திருநாமத்தையுடையுநாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் ஏகமாய்க் கூப்பிட்டுப் பக்கத்தி லிருக்கும்படி செய்து தங்களின் அறிவினுல் ஆராய்ந்து தம்மவருக்கு வந்து சேர்ந்த துன்பங்களையும் மேல் வரப்பட்டவைகளையும் தற்போது நடக்கப் பட்டவைகளையும் மற்றவைகளையும் கூறித் தங்கி யிருக்கும் இவ்வூரினது பெரியபகை க்கு ஆகப் பட்டவைகளையுங் கூறினர்கள். (ரு)

உற்ற நும்மனத் துடன்பட வுறைபவ ருடனும்
வெற்றி மன்னஜா சிய்யுறை திருநகர் மேவிக்
குற்ற மின்றியங் குறைவது கருத்தெனக் குறிப்ப
மற்று வேறுரை யாதுது மானுஞ்சம் மதித்தார்.

(இ-ள்.) அன்றியும், பொருந்திய உமது மனதின்கண் சம்மத ப்படும்வண்ணம் தங்கியிருப்பவர்களோடும் விஜயத்தையுடைய அரச னை நஜாசிய்யு வசிக்கும் அழகிய நகரமாகிய ஹபஷாராச்சியத்தை யடைந்து அவ்விடத்தில் யாதொரு குற்றமுமில்லாமல் தங்கியிருப் பது கருத்தென்று குறித்துச்சொல்ல, அதற்குவேறுசொல்லியாது? ஒன்றுமில்லாததால் உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களும் சம் மதித்தார்கள். (சு)

ஷரகி றங்கிநன் னபியெனும் பெரும்பெயர் தரித்த
வருட மைந்தென வரவரு மிறஜபு மாதந்
தரும நேருது மானொடு றுக்கையா தமையு
மிருளும் போதனுப் பினர்ஹப ஷாவெனுந் தேயம்.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறு சம்மதிக்கவே ஷறகினையுடைய நமது தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கமானது இறங்கி நல்லநபியெ ன்னும் பெருமைபொருந்திய அபிதானத்தைத் தரிக்கப்பெற்ற வரு டமானது ஐந்தென்றுவர; வராநிற்கும் றஜபுமாதம் புண்ணியத்தை யும் சத்தியத்தையுமுடைய உதுமான் றலியல்லாகு அன்கு அவர்க ளோடு றுக்கையா றலியல்லாகு அன்ஹா அவர்களையும் இருட்டுகி ன்ற சமயத்தில் ஹபஷாவென்னும் நகரத்திற்கு அனுப்பிவைத்தார் கள். (எ)

திருந்துந் திண்புய நபிதிரு மகளுடன் சிறப்ப
விரிந்த பூங்குழன் மடந்தையர் மூவரும் வியப்பப்
பொருந்துந் தீனவர் பதின்மரும் புகழுது மானும்
பிரிந்தி டாதுசென் றந்நக டைந்தபின்னர்.

(இ-ள்.) செவ்வைப்பட்ட திண்ணிய தோள்களையுடைய நாய கம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க ளின் அழகிய மகளாராகிய றுக்கையா றலியல்லாகு அன்ஹா அவர் களுடன் சிறக்கும்படி விரிந்த அழகிய கூந்தலையுடைய மூன்றுபெ ண்களும் ஆச்சரியப்படும்வண்ணம் பொருந்தியதீனுல் இஸ்லாமென்

னும் மார்க்கத்தைக் கைக்கொண்டவர்களான பத்துசஹாபாக்களும் கீர்த்தியையுடைய உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களும் ஒருவரையொருவர் நீங்காது நடந்துசென்று அந்த ஹபஷா வென்னும் நகரம் போய்ச் சேர்ந்ததின் பின்னர். (அ)

சந்த னந்திகழ் புயவபித் தாலிபு தவத்தால்
வந்த ஜஃபறு மவருடன் மைந்தர்கள் சிலரு
நந்து வெண்டர ளந்திகழ் நதிஹப ஷாபாற்
பிந்தி டாதொரு முறைமறை தனித்தனுப் பினரே.

(இ-ள்.) அன்றியும், அங்ஙபிகட் பெருமானவர்கள் சந்தனக்குழம்புப் பிரகாசிக்கப்பெற்ற தோள்களையுடைய அபீத்தாலிபென்பவரின் தவத்தினுல் இவ் வுலகின்கண் தோற்றமாகிய ஜஃபறு றலியல்லாகு அன்கு அவர்களையும் அவர்களோடு சில மைந்தர்களையும் சங்கினங்களினது வெள்ளிய முத்துக்களானவை ஒளிருகின்ற ஆற்றையுடைய ஹபஷாநகரத்திற்கு ஒருகடவையிற் பிந்தாது இரகசியத்துடன் ஏகமா யனுப்பிவைத்தார்கள். (கூ)

அன்ன மன்னமென் னடையினர் சிறுவர்க ளல்லான்
மன்னு மாடவ ரெண்ணொரு பஃதிரு வருமாய்ப்
பொன்னு லாஹப ஷாவள நாடணி புரத்தி
லின்ன லில்லெனச் சேர்ந்தவண் மகிழ்வொடு மிருந்தார்.

(இ-ள்.) அவ்விதம் அனுப்பிய அன்னப்பட்சியை நிகர்த்தமெல்லிய நடையையுடையவர்களான மாதர்களும் பாலியர்களு மல்லாமல் பொருந்திய புருஷர்கள் பன்னிரண்டுபேர்களும் கணக்காய்ஒளிவானது உலாவப்பெற்றவளநாடாகிய ஹபஷாவென்னும் அழகியநகரத்தில் யாதொரு துன்பமுமில்லை யென்றுபோய்ச்சேர்ந்து அவ்விடத்தில் மகிழ்ச்சியோடும் தங்கியிருந்தார்கள்.

உறைந்த மாந்தருக் கபஷிப ராசெனு முரவோர்
நிறைந்த நன்கலை யெடும்பல வரிசையு நிதியுங்
குறைந்தி டாதெடுத் தருளினர் மொழிபல கொடுத்துச்
சிறந்த தம்முத லினத்தினு மினத்தராய்ச் செய்தார்,

(இ-ள்.) அவ்வாறு போய்த் தங்கிய அந்த ஜனங்களுக்கு அவ் வபஷநாட்டி லுள்ளவர்களான அரசரென்று கூறும் முதியோர்கள்

பூரணப்பட்ட நல்ல வஸ்திரங்களுடன் பல வரிசைகளும் திரவியமு மகுறையாது எடுத்துக் கொடுத்தார்கள். அன்றியும், பல வார்த்தைகளைப் பேசிச் சிறப்புற்ற தங்களின் முதன்மையான பந்துக்களிலும் மிகவும் பந்துக்களாகச் செய்தார்கள். (௧௧)

விதித்த தீனிலேக் குரியரை ஹபஷியர் வேந்தர்
மதித்து நன்கொடு முயர்த்தின ரெனும்வர லாற்றைக்
கொதித்த சிந்தைய னபூஜகல் குழுவொடுங் கேட்டுக்,
கதித்த சூழ்ச்சியின் வேறொரு வினைகரு தினனே.

(இ-ள்.) நியமிக்கப்பட்ட தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற்குச் சொந்தமானவர்களை ஹபஷி நாட்டையுடையவர்களான மன்னர்கள் அவ்வாறு மதித்து நன்மையுடன் மேன்மைப் படுத்தினார்களென்னும் வரலாற்றைக்கொதிக்கப் பெற்ற மனத்தை யுடையவனாகிய அபூஜகிலென்பவன் தனது கூட்டத்தோடும் கேள்வியுற்று அதிகரித்த தந்திரத்தினால் வேறேயொரு செயலைத்தன்சிந்தையின்கண் எண்ணினான். (௧௨)

வில்லு மிழ்ந்தசெம் மணித்தொடை திரண்டவெண் டாளம்
பல்ல வம்பொரு வாத்தம ணியத்துகில் பலவுஞ்
சொல்ல ரும்பிர தச்சுவை யொட்டகச் சுமையா
மல்லு றும்புயன் கரத்தின்முத் திரையொடும் வைத்தான்.

(இ-ள்.) அவ்விதம் எண்ணிய வலிமை பொருந்தியதோள்களை யுடையவனான அபூஜகிலென்பவன் பிரகாசத்தைக் கொப்பளியாநிற்கும் செவந்த இரத்தின மாலைகளும் திரட்சியுற்ற வெள்ளியமுத்துக்களும் இளந் தளிர்களும் நிகராகாத பல பொற்றுகில்களும்; சொல்லுதற் கருமையான வாகனச் சுமையாகவும், ஒட்டகச் சுமையாகவும், தனது கைமுத்திரை யோடும் வைத்தான். (௧௩)

ஓதிக் கேட்டறிந் தொழுகிமுக் காலமு முணர்ந்த
மூத றிஞரி லிருவரை யழைத்துமுன் னிருத்தி
யாத ரத்தொடு சேர்த்தநல் வரிசையு மளித்துக்
கோத றத்தெளிந் தெழுதுபத் திரத்தையுங் கொடுத்தான்.

(இ-ள்.) அவ்வாறு வைத்த அவன் படித்துக் காதுகளினாற்கேள்வியுற்று உணர்ந்து அதன் பிரகாரம் நடந்து செல்காலம், நிகழ்காலம், வருங்கால மென்னும் மூன்று காலங்களையுந் தெரிந்த மூற்றிய

முற்றிய அறிவை யுடையோர்களில் இருவரை விளித்துத் தனது முன்னால் இருக்கும்படி செய்து அன்போடும் தான் சேகரப் படுத்திய நல்ல வரிசைகளையும் அவர்கள் பால் கொடுத்துக் குற்ற மறும்படி தெளிந்து எழுதிய நிருபத்தையும் கொடுத்தான்.

கொடுத்துநன்மொழி கொடுத்துந ஜாசிய்யாங் கோவுக்
கடுத்து நின்றளித் திடும்வரி சைகளிவை யவன்சொற்
படுத்தி டாமதி மந்திரர்க் கிவையெனப் பகுத்து
விடுத்த னன்பெரு வஞ்சமும் படிறும்வி டாதான்.

(இ-ள்.) பெரிய வஞ்சகத்தையும் பொய்யையும் தன்னைவிட்டும் விடாதவனான அவ்வபூஜகி லென்பவன் அவ்வாறு அவர்கள் பால் கொடுத்து நல்ல வார்த்தைகளைக் கூறி இவைகள் நஜாசிய்யா மென்னும் அரசனுக்குச் சமீபித்து நின்று கொடுத்திடும் வரிசைகள். அவ்வரசனது வார்த்தைகளைப் படுத்திடாத அறிவைக் கொண்ட மந்திரிமார்களுக்கு இவை யென்று பாகித்து அனுப்பினான். (கரு)

அறும னத்தின னபூஜகல் கொடுத்தவை யனைத்து
மெறுழின் மிக்குய ரொட்டக மீதினி லேற்றித்
தறுகி லாதெழுந் திருவரு மரிதினிற் சார்ந்தார்
நறவு யிர்த்ததன் டலைதிகழ் ஹபஷிநன் னாட்டில்.

(இ-ள்.) அற்றுப்போகின்ற மனத்தை யுடையவனான அவ்வபூஜகி லென்பவன் அவ்வாறு கொடுத்தவைக ளெல்லாவற்றையும் பலத்தினது மிக வளர்ந்த ஒட்டகங்களின் மீது ஏற்றிக்கொண்டு அவர்களிருவரும் தாமதியா தெழும்பி அரிதில் வாசனையை உயிர்க்கப் பெற்ற சோலைகள் பிரகாசியாநிற்கும் ஹபஷா வென்னும் நல்ல நகரத்தின்கண் போய்ச் சேர்ந்தார்கள். (கசா)

சென்ற தூதுவர் வரிசைகளனைத்தையுந் திருந்தக்
குன்றே னத்திரள் புயனஜா சியின்முனங் குவித்து
மூன்றி லிற்றனித் தெழுதிய முடங்கலை யெடுத்து
நின்று நீட்டினர் நிருபர்க ணெருங்கிய சபையில்.

(இ-ள்.) அவ்வாறு போன தூதுவர்களிருவரும் அந்த வரிசைகளெல்லாவற்றையும் செவ்வையாக மலையைப் போலும் திரண்டதோள்களை யுடையவனான நஜாசி யென்னு மரசனது முன்னர் குவித்து

விட்டு மன்னவர்கள் செறிந்த அந்தச் சபையின்கண் முற்றத்திற் நின்றுகொண்டு அவ் வஹூஜகி லென்பவன் வரைந்த நிருபத்தைத் தனித்து எடுத்து நீட்டினார்கள். (கஎ)

வரைந்த பத்திரப் பாசுர மக்கமாநகரி
லிருந்த ஹாஷிமா குலத்தொரு வன்றலை யெடுத்து
விரிந்த மந்திர வஞ்சக மாயங்கள் விளைத்துத்
தெரிந்த வேதமுஞ் சமயமு நிலைகெடச் சிதைத்தும்.

(இ-ள்.) அவ்விதம் நீட்டிய, எழுதிய அந்தக் கடிதத்தினது வாசக மாவது, மக்கமா நகரத்தில் தங்கிய மகத்தான ஹாஷிம் குலத்தில் ஒரு மனிதன் தலை யெடுத்து விரிந்த மந்திரங்களும், வஞ்சகங்களும், மாயங்களும், செய்து நாமனைவரு முணர்ந்த நமது வேதத்தையும் மார்க்கத்தையும் தனது நிலைமை யானது கெடும் வண்ணம் சிதையச்செய்தும். (கஅ)

குடிபொ ருந்திலா திங்கர்க் குலம்பழு தாக்கிப்
படிப குத்திடக் கொலைபொடு பாதகம் விளைத்து
முடிவி லாப்பெருந் தேவத மாலய முழுது
மடிய றுந்திடத் துணிந்தனன் முகம்மதென் பவனே.

(இ-ள்.) குடியோடும் சேராமல் இந்தமக்கமா நகரத்தினதுகூட்டத்தைக் குற்றப் படுத்திப் பூமியைப் பாகிக்கும்படி கொலையுடன் பாதங்களைச் செய்து முடிவற்ற பெரிய தேவதங்களை யுடைய கோவில்க ளெல்லாவற்றையும் மூட்டோடு அறுக்கும் வண்ணம் துணிந்தனன். அவன் முகம்மதென்னும் அபிதானத்தையுடையவன். ()

அங்க வன்மொழிக் கொழுகின ரவனினுங் கொடியோர்
பொங்கு மவ்வுழை புகுந்தனர் ஹபஷிமா புரத்தைப்
பங்க மாக்குமு னவர்களைத் தண்டனை படுத்தி
யெங்கி ருக்கினு மிருக்கொணு தகற்றிடு மெனவே.

(இ-ள்.) அந்த முகம்ம தென்பவனின் வார்த்தைகளுக்குவழிப்பட்டு நடக்கப் பட்டவர்க ளாகிய அவனிலும் கொடுமையையுடையவர்கள் ஓங்காநிற்கும் அவ்விடத்தில் வந்துசேர்ந்தார்கள். மகத்தான

ஹபஷி நகரத்தைப் பங்க மாக்குவதற்கு முன்னர் அவர்களைத்தண்டனை செய்து எங்கே யிருந்தாலும் இருக்கவொட்டாது அவ்விடத்தை விட்டும் அகற்றி விடு மென்றும். (உ0)

இன்ன வாசக மனைத்தினுங் கேட்டவ ரெவருந்
துன்ன லார்கொலோ சிட்டரோ வெனச்சிரந் தூக்கிப்
பன்னு வானதின் மந்திரர் பகைத்தவா சகத்தாற்
சொன்ன வாற்றினின் முடிப்பது துணிவெனத் துணிந்தார்.

(இ-ள்.) இப்படிப்பட்ட வாசகங்க ளெல்லாவற்றையும் அந்த நஜாசிய் யென்னும் மன்னவன் காதுகளினாற் கேள்வியுற்று அவர்களியாவரும் சத்துராதிகளா? நல்லவர்களா? என்று தலையையுயர்த்திக் கேட்டான். அதில் மந்திரி மார்கள் சலகித்த வாசகத்தினால் கூறிய விதத்தில் முடிப்பது துணி வென்று சொல்லித் துணிந்தார்கள். ()

அரசர் நாயகன் ஹபஷிந ஜாசிபா மரசன்
பரிச னத்தவர் மொழியினு மறிவினும் பார்த்தே
யுரைச மர்ப்பக மு·கம்மதின் வழியினுக் குரிய
வரிசை செய்திவ ணிருத்தலே கடனென வகுத்தான்.

(இ-ள்.) அவ்விதம் துணியவே இராஜ நாயக னான ஹபஷி நகரத்தினது நஜாசியா மென்னும் மன்னவன் தனது பரிசனர்களின் வார்த்தைகளினாலும் அறிவினாலும் பார்த்துக் கூறுநிற்கும் கொடையையுடைய முகம்ம தென்பவரின் மார்க்கத்திற் குரிய வரிசைகளைப் புரிந்து இவ்விடத்தில் தங்கி இருப்பதுவே கடமையென்று வகுத்துச் சொன்னான். (உஉ)

மலைம னத்தபூ ஜகுலனுப் பியவெகு மானத்
தலைவ ரைத்தன திருமபதி யிடையினிற் சாராக்
குலனு டன்னுமர் பதிக்கடைந் திடுமெனக் குறித்து
விலகி யங்கவர் கொணர்ந்தபல் பொருளையும் வெறுத்தான்,

(இ-ள்.) அன்றியும், மலையினைக் கொண்ட மனத்தை யுடைய அவ் வபூஜகி லென்பவன் அனுப்பிய வரிசைத் தலைவரைத் தனது பெரிய நகரமாகிய ஹபஷி நாட்டி னிடத்திற் பொருந்தாது கூட்டத்

தோடும் உமது ஊருக்குப் போய்ச் சேருமென்று குறித்துச் சொல்லிவிட்டு நீங்கி அவ்விடத்தில் அவர்கள் கொண்டு வந்த பலபொருட்களையும் தனக்கு வேண்டா மென்று வெறுத்தான். (உங)

சதும றைப்பொருண் முகம்மதின் வழியவர் தமைநல்
விதம னத்தொடு மனுசரித் தபூஜகி லிடத்திற்
புதிய ரைப்புறம் போக்கின னெனுமொழிப் புகழை
மதுகை வேந்தபீத் தாலிபு கேட்டுள மகிழ்ந்தார்.

(இ-ள்.) அப்பொழுது வெற்றியைத் தரித்த மன்னவரான அபித்தாலி பென்பவர் தௌறாத்து, இன்சீல், சபூர், புறுக்கானென்னும் நான்கு வேதங்களின் பொருளாகிய நாயகம் நபி முகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களினது தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தை யுடையவர்களை நல்ல இதத்தைக் கொண்ட சிந்தையோடும் அனுசரித்து அபூஜகி லென்பவ னிடத்தி னுள்ள புதியராகிய தூதுவர்களைத் தனது ஊரில் நின்றும் வெளியில் போகும் வண்ணம் செய்தா னென்னும் கீர்த்தியை யுடைய வார்த்தைகளைத் தமது காதுகளி னூற் கேள்வியுற்று மனக் களிப் படைந்தார். (உச)

வணக்க வாசகத் தொடும்ஹப சரசனை வாழ்த்தி
யிணக்கி நற்பொருள் பெறப்பல பயித்தெடுத் தெழுதி
யுணக்கும் புன்மனத் தபூஜகு லெழுதிய வோலைப்
பிணக்க றுத்தபீத் தாலிபு கொடுத்தனுப் பினரால்.

(இ-ள்.) அவ்வாறு களிப் படைந்த அபீத்தாலிபென்பவர்வணக்கத்தைக் கொண்ட வாசகத்துடன் ஹபஷா நகரத்தினது மன்னவனைத் துதித்து இணக்கி நல்ல அர்த்தத்தைப் பெறும் வண்ணம்பலபயித்துக்க ளென்னும் அறபிக் கவிகளை எடுத்து வரைந்து வாடாநிற்கும் கீழ்மை யான மனத்தை யுடைய அபூஜகி லென்பவன் வரைந்த நிருபத்தினது பிணக்கை இல்லாமல் அறுக்கும்படி கொடுத்து அனுப்பினர். (உரு)

புதிய நற்பொருள் பெறத்தெரி கவிதையின் புகழ்ந்
மதுர வாசக மெழுதிய துணர்ந்துள மகிழ்ந்து
துதிசெ யுங்கலி மாநெறிப் படிமறைத் தூயோர்க்
கதிவி தப்பல வரிசைசெய் தபஷா சிருந்தான்,

(இ-ள்.) புதுமையை யுடைய சல்ல அர்த்தத்தைப் பெறும்வண்ணம் தெரியுகின்ற கீர்த்தியினது பாட்டுகளால் இனிமையாகிய வாசக மெழுதிய நிருபத்தை ஹபஷா நகரத்தினது மன்னவன் அறிந்து மனக் களிப் படைந்து துதிக்கின்ற "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர்ற சூலுல்லாஹி" யென்னும் கலிமா வினது ஒழுங்கு படா நிற்கும் புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தின் பரிசுத்தர்களான அங்கு தங்கிய சஹாபாக்களுக்குப் பலவித மாகிய மிகுந்த வரிசைகளைச் செய்து வீற்றிருந்தான், (உசு)

அந்த நாளையின் மக்கமா நகரவ ரெவரும்
வந்து நற்கலி மாவுரைத் தனரெனும் வசனம்
புந்தி கூர்தரக் கேட்டனர் சிலரதிற் பொருவாச்
சிந்தை யாயினர் நகர்க்கெனத் திரும்பினர் சிலரே.

(இ-ள்.) அத்தினத்தில் மக்கமா நகரத்திலுள்ள யாவர்களும் வந்து நன்மைபொருந்திய கலிமாவை ஒதினர்க ளென்னும் வார்த்தைகளைச் சில ஜனங்கள் தங்களின் உள்ள மானது கூர்தரும்படிகேள்வியுற்று அதனல் ஒப்பில்லாத மனத்தை யுடையவர்க ளானார்கள். சில ஜனங்கள் தங்களின் ஊருக் கென்று சொல்லித் திரும்பிப் பிரயாணமானார்கள். (உஎ)

படைக்கை வேந்துது மானுடன் மனைவியும் பலருந்
தொடைக்கி ணங்கிய புயத்தவர் சூழ்வர நெறியி
னடக்க முன்மொழி பழுதென நவிரா நடுங்கி
யடைக்க லத்தினுங் கரவினும் பதியைவந் தடைந்தார்.

(இ-ள்.) ஆயுதத்தைத் தாங்கிய கையை யுடைய மன்னவ ரான உதுமான் றலியல்லாகு அன்கு அவர்களோடு அவர்களின் நாயகி றுக்கையா றலி யல்லாகு அன்ஹா அவர்களும் மற்று மனேகரும் மாலைகளுக் கிணக்க மாகிய தோள்களை யுடையவர்களான சஹா பாக்கள் தங்களை வளைந்து வரும் வண்ணம் வழியில் நடக்க மக்கமா நகரத் தவர்கள் கலிமா உரைத்தார்க ளென்னும் முன்னுள்ள வார்த்தையானது தப்பென்று கூற, நடுக்கமுற்று அடைக்கலத்திலும் கள்ளத்திலும் ஊரை வந்து சேர்ந்தார்கள். (உஅ)

புதிதின் மூவொரு பதின்மரு மூவரும் புறத்திற்
சதிய றத்தனி யவரவர் சார்பினிற் சார்ந்தா
ரதில பூசல்மா வென்பவ ரறிவினி லுயர்ந்த
மதியின் மிக்கபித் தாலிபை யடுத்துவந் திருந்தார்.

(இ-ள்.) நூதனமாக வந்ததில் பதினறுபேரும் பக்கத்தில் யாதொரு சதிவுமில்லாமல் தனியாய் அவரவர்களின் சார்புகளிற் போய்ச் சார்ந்தார்கள். அதில் அபூசல்மா வென்பவர் அறிவினலோங்கிய அழகில் மிகுந்த அபீத்தாலிபென்பவரை யடுத்து வந்திருந்தார்.

சினத்து வன்கொலைக் காபிர்க டிரண்டிகல் செருக்கு
மனத்தின் மிக்கபித் தாலிபு மதிமுக நோக்கி
யினத்தி னைத்தவிர்த் தபூசல்மா வென்டவன் றனைநும்
மனைத்த லத்தில்வைத் திருப்பது பழுதென வகுத்தார்.

(இ-ள்.) அவ்வாறு வந்திருக்கவே கொடிய கொலைத்தொழிலையுடைய காபிர்கள் கோபித்துக் கூடி சத்துராதிகளின் வலிமையை அழியாநிற்கும் மனத்தினல் மிகுந்த அபீத்தாலிபென்பவரின் சந்திரனையொத்த வதனத்தைப் பார்த்து நீவிர் நமது கூட்டத்தைத் தவிரச்செய்து அவ்வபூசல்மா வென்பவனை உம்முடைய வீட்டின்கண் வைத்திருப்பது தப்பென்று கூறினர்கள். (௯0)

பொய்த்த மாமறை முகம்மதை மனையிடை புகுத்தி
வைத்தி ருந்தனை யபூசல்மா தனையுநும் மனைக்கு
ளெய்த்து வைத்திருப் பதுமழு தெனவிக லிடாய்
மொய்த்த டர்ந்தன ரபூஜகு லொடுமுரண் மதத்தார்.

(இ-ள்.) அன்றியும், அபூஜகிலோடு மாறுபட்டமதத்தைக்கொண்டவர்களான காபிர்கள் பொய்க்கப்பெற்ற பெரிய வேதத்தையுடைய முகம்மதென்பவனை உமது வீட்டின்கண் நுழைத்துவைத்தீர். அபூசல்மாவென்பவனையும் அறிந்தும் வீட்டினகம் வைத்திருப்பதுகுற்மென்று பகையினது துன்பத்தோடும் இடித்து நெருங்கினர்கள்.

எடுக்கும் வாளயில் படைக்கலம் பலகரத் தேந்தித்
தொடுக்கும் பூசலிட் டடலபித் தாலிபைத் துரத்தி
விடுக்கு மென்பது மனையுட னகரையும் வெறுப்பக்
கெடுக்குமென்பது மபூலகு பெனுமவன் கேட்டான்.

(இ-ள்.) அபூலகுபென்று கூறுமவன் அவ்வாறு அடர்ந்த அவர்கள் எடாநிற்கும் வாள், வேலாகிய பல படைக்கலன்களைக் கைகளில் தாங்கித் தொடுக்குகின்ற பூசலிட்டு வலிமையைக்கொண்ட அவ்வபீத்தாலி பென்பவரை யோட்டிவிடுவோமென்பதையும், வீட்டுடன் ஊரையும் வெறுக்கும் வண்ணம் கெடுத்துப் போடுவோ மென்பதையும் தனது, காதுகளினாற் கேள்வி யுற்றான். (௩௨)

எனக்கு முன்னவன் றனையிடர் விளைத்திட லெனது
மனக்கு றைப்பட ரிவைதவிர்த் திடீரெனின் மதியை
நினைக்கு முன்பகி ரகுமது நெறிநிலை நிறுவிக்
கனக்க வைத்தலியா னலதிலை யெனக்கழ றினனால்.

(இ-ள்.) அவ்வாறு கேள்வியுற்ற அவன்எனக்குத் தமைய னான அவ் வபீத்தாலி பென்பவனைத் துன்பஞ் செய்தல் எனது பிரிய வீனமாகிய கருத் தாகும். இவற்றை நீங்கள் தவிர்க்க மாட்டீர்களே யானால் நினைத்தற்கு முன்னமே சந்திரனை இரு பிளவாகப் பகிர்ந்த அகமதென்னும் திரு நாமத்தை யுடைய முகம்மதென்பவரின் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை நிலையாக நிறுத்தி அதிகப்பட வைப்பது யானல்லாது வேறு ஒருவரு மில்ல ரென்று கூறினான். ()

மோதும் வாய்மையி னபூலகு பெனுமவன் முரணி
யோதும் வாசகங் குபிரவ ருளங்களை யுருவிப்
போது கின்றதென் றடர்ந்துநின் றவர்பொறி கலங்கித்
தீத கற்றியங் கவரவர் மனைவயிற் சேர்ந்தார்.

(இ-ள்.) இடியாநிற்கும் வார்த்தைகளினால் அபூலகு பென்று கூறும் அவன் அவ்வாறு மாறு பட்டுச் சொல்லிய வசனங்கள் காபிர்

களின் இருதயங்களை யூடுருவிப்போயதென்று அங்கு நெருங்கிநின்றவர்கள் தங்களின் பொறிகளானவை கலங்கப்பெற்று மனசினது களங்கத்தை யொழித்துத் தத்தம் வீடுகளிற் போய்ச் சேர்ந்தார்கள்.

கறைத விர்ந்திடா மனக்குறைஷிபக்குலக் காபி
ரறவு நொந்தகத் தடங்கின ரெனவற முதிர்ந்து
நிறையுந் தீனிலைக் குரியவர் மகிழ்ந்தநெஞ் சினராய்
மறைப டாமுகம் மதின்வழி வளர்ந்திருந் தனரால்.

(இ-ள்.) குற்ற மானது தவிரப்பெறாத இருதயத்தையுடைய அழகிய குறைஷிக்குலத்தினது காபிர்கள் மிகவும் வருந்தித்தம் வீட்டின்கண் அடங்கினார்களென்று சொல்லிப் புண்ணிய முதிர்ந்து பூரணப் பட்டதீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமைக்குச் சொந்தமானவர்கள் சந்தோஷித்த மனத்தினர்களாய் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் மறையாதமார்க்கத்தில் விர்த்தியடைந்திருந்தார்கள். (௬௫)

அரிய நாயகன் றூதுவா னவர்க்கிறை பணுகிக்
கிரியின் மீதுநின் றரும்பெயர் நபியெனக் கிளத்தும்
வருட மாறினின் மாறுகொண்ட வர்மனங் கலையத்
தெருளு மேன்மையின் முகம்மதுஞ் சிறந்திருந் தனரால்.

(இ-ள்.) அன்றியும், அரிய நாயகனாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவரான தேவர்களுக்கரசர் ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்கள் மலையின் மீது நெருங்கி நின்று அருமை தங்கிய பெயராகிய நபி யென்று கூறின ஆறுவது வருடத்தில் மாறு கொண்டவர்களான காபிர்களின் மன மானது கலையும்படி தெருளாநிற்கும் மேன்மை யோடும் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களும் சிறப்புற் றிருந்தார்கள். (௬௬)

பொருந்த மானிலத் துலவிய புகழுசை னயினு
ரருந்த வத்தினுட் பொருளென வருமபுல் காசீம்

விரிந்த மெய்ந்நெறிச் சிந்தையி னடுவுற விளங்கி
யிருந்த மென்மலர்ப் பதமுகம் மதுமினி திருந்தார்.

(இ-ள்.) பெரிய இவ் வுலகத்தின்கண் பொருந்தும்படி உலவும் கீர்த்தியை யுடைய உசை னபிஞ ரென்பவரின் அரிய தவத்தினது அகப்பொருள் போல வந்து இந்நூலினதுகொடை நாயகனுன் அபுல் காசி மென்பவனின் மலர்ந்த சத்திய மார்க்கத்தையுடைய மன தின்மத்தியில் மிகவும் பிரகாசித்து இருக்கப்பெற்ற மெல்லிய தாமரை மலரை நிகர்த்த சரணங்களை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் இனிமையுட னிருந்தார்கள். (கஎ)

ஈமான்கொண்டவர்கள்

ஹபஷாராச்சியத்துக்குப் போந்தபடலம்.

முற்றிற்று.

ஆ படலம்-ம-க்குத்-திருவிருத்தம்-அரசுயக,

மானுக்குப் பிணை நின்ற படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

குயினிழல் பரப்பச் செவ்விக் கொழுந்தொடை நறவஞ் சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி வளர்ந்ததிண் புயத்து வள்ளல்
செயிரது மறையின் றீஞ்சொற் செழுமழை பொழிந்துதீனின்
பயிர்வளர்ந் தேறச் செய்து பரிவுட னிருக்கு நாளில்.

(இ-ள்.) மேகங்களானவை குடையினது நிழலை விரிக்கும்வண்ணம் அழகிய செழிய புஷ்ப மாலைகள் மதுவைச் சொரியும் ஒள்ளிய

வயிர மலையைப் பார்க்கிலும் மிகப் பருத்து ஓங்கிய திண்ணிய தோள்களையுடைய வள்ளலான நமது நாயகம் நபி காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் குற்றமற்ற புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது இனியசொல்லாகிய செழிய மழையைப் பொழிந்து தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கப் பயிரை வளர்ந் தேறச் செய்து அன்புடனிருக்கும் நாளில்.

அரியினஞ் செறிந்த போன்ற அறபிகள் குழுவி னுப்ப
ஞொருதனிச் சீப மொப்ப வுடையவன் றூதர் செல்வத்
திருநகர்ப் புறத்து நீங்கிச் செழுமுகின் முயிடிற் றூங்கி
மருமலர் செறியுஞ் சோலை சூழ்ந்ததோர் வரையைச் சார்ந்தார்.

(இ-ள்.) செம்மறி யாட்டுக் கூட்டம் நெருங்கியதை நிகர்த்த அறபிகளின் கூட்டத்தினது மத்தியில் மிகவும் ஒப்பற்ற சிங்கத்தைப்போன்று யாவற்றையுஞ் சொந்தமா யுடையவனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் தூதுவராகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வளத்தைக்கொண்ட அழகிய அந்த மக்கமா நகரத்தினது எல்லையை விட்டு மகன்று செழிய மேகங்களைத் தனது சிகரத்தின்கண் சுமந்து வாசனை தங்கிய புஷ்பங்கள் அடரப் பெற்ற சோலைகள் வளைந்த ஒருமலையிற் போய்ச் சார்ந்தார்கள்.

கொன்றையுங் குருந்துங் கார்க்கோற் குறிஞ்சியும் வேயுந் தெ
துன்றிய நிழலு நன்னீர் சொரிதரு மிடமுஞ் செந்தேன் [ற்றித்
மன்றலொண் மலரு நீங்கா வனந்திகழ் வரையின் கண்ணே
சென்றன ரெறிக்குங் காந்திச் செவ்விமெய்முகம்ம தன்றே.

(இ-ள்.) அவ்வாறு சார்ந்து நானு பக்கங்களிலும் வீசாநிற்கும் பிரகாசத்தினது அழகைப் பொருந்திய திரு மேனியை யுடைய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் கொன்றை மரங்களும், எலுமிச்ச மரங்களும், கரிய கொம்புகளை யுடைய ஈத்த மரங்களும், மூங்கிற்களும். தம்மில் ஒன்றோ டொன்றுபின்னி நெருங்கிய நிழலும், நல்ல நீரைப் பொழிகின்ற தானமும், செவந்த தேனினது வாசனையைக் கொண்ட ஒள்ளிய புஷ்பங்களும் மாறாத சோலைகள் ஒளிரப் பெற்ற அந்த மலையி னிடத்துப் போனார்கள் ()

வனந்திரி விலங்கு மாய்த்து வன்றசை வகிர்ந்து வாரித்
தினந்தொறுங் கோலிற் கோலித் தீயிடை யமிழ்த்திக் காய்த்தித்
தனந்தனி யிருந்து தின்று தன்றசைப் பெருக்க லன்றி
யனந்தலிற் பொழுதும் வேறோ ரறிவென்ப தறிந்தி லானே

(இ-ள்.) அங்கு பிரதி தினமும் காட்டின்கண் திரிகின்றமிருகங்களைக் கொன்று வலிமையை யுடைய அதன் மாமிசத்தை அறுத்து வாரிக் கொம்புகளில் வளைத்துத் தீயின்கண் யமிழச் செய்து சுட்டு மிகவும் ஏகமாக இருந்து அருந்தித் தனது மாமிசத்தை அதிகப் படச் செய்வதே யல்லாமல் நித்திரை சமையத்தி லாயினும் வேறே யொரு அறி வென்பதை அறியாதவன். (௪)

காலினிற் கழலு நீண்ட கரியகா ழகத்தின் வீக்கும்
பாலினில் வலையுங் கையிற் பருவரைத் தனுவுங் கூருங்
கோல்வெறி துணியுந் தோளிற் கூன்பிறை வாளு மென்மை
வாலுடைப் பறவை சேர்த்துங் கண்ணியு மருங்கிற்கொண்டோன்

(இ-ள்.) அன்றியும், காலின்கண் செருப்பையும், அரையில்நீட்சியுற்ற கரிய கந்தையினது கட்டையும், பக்கத்தில் வலையையும்கரத்தில் பருத்த அளவையுடைய கோதண்டத்தையும், முதுகில் அச்சத்தை தருகின்ற கூரிய அம்பினது தூணியையும், தோளிடத்து வளைந்த இளஞ் சந்திரனைநிகர்த்த வாளாயுதத்தையும், இடையில்மேன்மையைப் பெற்ற வால்களை யுடைய பட்சிகளைச் சேரச் செய்யும்கண்ணிகளையும் கொண்டவன். (௫)

குறுவெயர்ப் புதித்த மெய்யுங் கொழுந்தசை மணத்த வாயும்
பறிதலை விரிப்புங் கூர்ந்த படுகொலை விழியு மாக
வறமினி லறபி வேட னடவியிற் றொடர்ந்தோர் மானைக்
கறவொடும் வலையிற் சேர்த்திக் கட்டிவைத் திருப்பக் கண்டார்.

(இ-ள்.) அன்றியும், குறிய வெயர்ப்பானது தோற்றப் பெற்ற சரீரமும் செழிய மாமிசம் மணக்கப் பட்ட வாயும், பறிந்த சிரத்தினது விரிப்பும், மிகவும் அதிகரித்த கொலையினது கண்களுமாக அற இராச்சியத்தி லுள்ள ஓர் அறபி வேடனவன் காட்டிற் சென்று ஒரு மானைக் கோபத்துடன் தனது வலையின்கண் சேர்த்துக் கட்டி வைத்திருப்பதைத்தங்களின் கண்களினாற்பார்த்தார்கள். (௬)

குழைகுழைத் தெறிபுஞ் செந்தேன் கொழுமலர்க் காவைநோக்கார்
பொழிமலை யருவி நோக்கார் புறத்துநன் னிழலை நோக்கார்
செழுமுகிற் கவிகை வள்ளல் செறிதரு மீந்தின் செங்காய்
மழையெனச் சொரிவ நோக்கார் மானையே நோக்கிச் சென்றார்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்த செழிய மேகக் குடையை யுடைய வள்ள லான நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லாகு அலைகி வசல்ல மவர்கள் குழைகளைக் குழைத்து வீசாநிற்கும் செவந்ததேனை யுடைய செழிய புஷ்பச் சோலையைப் பார்த்திலர்கள். அந்த மலையினது சொரிகின்ற அருவிகளைப் பார்த்திலர்கள். பக்கத்திலுள்ள நல்ல நிழலைப் பார்திலர்கள். நெருங்கிய ஈந்த மரங்களின் செந்நிறத்தைக் கொண்ட காய்களை அம்மரங்கள் மழைபோலும் பொழிவதைப் பார்த்திலர்கள். அந்த மானையே பார்த்துக்கொண்டு அதன்பக்கமாய் போனார்கள். (எ)

அருளடை கிடந்த கண்ணு மழகொளிர் முகமுஞ் சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன்முகிற் கவிகை யோடும்
வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப்
பருவர லுழக்கு முள்ளத் தொடும்பிணை பகரு மன்றே.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறு போக அந்த மானனது காருண்ய மான தடையாகக் கிடக்கப்பெற்ற கண்களும், அழகுபிரகாசிக்கின்ற வதனமும், ஒளிவு சிந்துகின்ற கஸ்தூரிவாசனை கமழும்காத்திரமும், சூலைக் கொண்ட மேகக் குடையு மாகிய இவைகளோடும் இங்கு வருவது பரிசுத்தனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூத ராகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் தாமென்று தனதுமனசின்கண் தேற்றமுற்றுத் துன்ப மான துழக்காநிற்கும் இருதயத்தோடும் சொல்ல ஆரம்பித்தது. ()

நெடியவன் றூதர் வந்தார் வேடனு னிலத்தி னந்த
முடலுயிர்க் கிறுதி யில்லை யுழைபினத் தோடுஞ் சேர்ந்து
கடிதினிற் கன்றுங் காண்போ மெனமுகம் மதுவைக் கண்ணு
னெடிவரை யிமைமூடாம னோக்கியே கிடந்த தன்றே.

(இ-ள்.) இவ்விடத்தில்நெடியவ னாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவர் நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் வந்தார்கள். இனிப்பூமியின்கண் இவ்வேடனால் நமது

உடலுக்கும் உயிருக்கும் யாதொரு முடிவில்லை. நாம் நமது கன்றை யும் கண்களினாற் பார்ப்போமென்று அந் நபிகட் பெருமானவர்களை ஒருநொடிநேர வரையிலாவது தனது இமைகளை மூடாமல் கண்களி னாற் பார்த்துக்கொண்டே கிடந்தது. (௬)

பொருப்பிடைத் துறுகற் சார்பிற் பொரியரைத் தருவி னீழன்
மருப்புடைப் படலைத் திண்டோண் மன்னவ ருடனும் புக்கு
நெருப்பிடைத் தசைவா யார்ந்து நின்றவே டனையுஞ் செம்மான்
திருப்புதற் கருங்கட் டுண்டு கிடப்பதுஞ் சிறப்பக் கண்டார்

(இ-ள்.) அவ்விதம் கிடக்க அந்த மலையின்கண் நெருங்கிய கல் லின் சார்பில் பொருக்குக ளமைந்த அரையைக் கொண்ட மரத்தி னது நிழலில் வாசனை யானது அதிகரிக்கப் பெற்ற புஷ்பமாலைகள் தங்கிய திண்ணிய புயங்களை யுடைய அரசர்களோடும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் புகு ந்து நெருப்பின்கண் வாட்டிய மாமிசத்தை வாயினா லருந்திக்கொண் டுநின்ற அந்த வேடனையும் செந்நிறத்தை யுடைய மானினது திரும் புதற்கரிய கட்டுண்டு கிடப்பதையும் சிறக்கும்படி பார்த்தார்கள்.

இடைநிலத் துருக்கி விட்ட விரசிதம் பரந்த தென்ன
மடிசுதை யமுதஞ் சிந்த வடிக்கணீர் பனிப்பத் தேங்கு
முடலகந் துருத்தி யொப்ப நெட்டுயிர்ப் புயிர்த்துக் காலிற்
றுடரொடுங் கிடப்பத் தூயோன் றாதுவ ரடுத்து நின்றார்.

(இ-ள்.) அவ்வாறு பார்த்த பரிசுத்தனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதுவர் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல் லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பூமியினிடத்து உருக்கிவிட்டவெள் ளியானது பரவியதைப்போலும் மடியினின்றும் வெள்ளிய பாலா னது சொரியவும், கூர்மையான கண்களின் நீரானது சிந்தவும், கலங்கிய சரீரமும் மனமும் காற்றூதும் துருத்தியை நிகர்த்திப்பெ ருமூச்சுவிட்டுக் காலின்கண் கட்டிய கயிற்றினோடும்கிடக்க அதைச் சமீபித்து நின்றார்கள். (௧௧)

கொடியடம் பிலையை மானும் குளம்பின்மேற் சுருக்கும் புள்ளிப்
பொடியுடற் பதைப்பும் வீங்கிப் புதையுநெட் டுயிர்ப்பு நோக்கி
நெடியவ னிறகு லில்லா நைஞ்சுநெக் குருகிக் கானின்
பிடிபடு மானின் றன்பாற் பேரருள் சுரப்ப நின்றார்.

(இ-ள்.) அன்றியும், அடம்பங் கொடியினது இலையை நிகர்த்த குழம்பின் மீது கயிற்றினது கட்டையும் புள்ளியை யுடைய சிறிய தேகத்தின் பதைப்பையும், ஓங்கிப் புதையாநிற்கும் பெருமூச்சையும்பார்த்து நெடியவனான ஹக்கு சுபகானகு வத்த ஆலாவின் றசூல் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் தங்களின் மனமானது மிகவு மிரங்கிக்காட்டின்கண் பிடிபட்ட அம்மானினிடத்து பெரிய கிருபை யானது அதிகரிக்கும் படி நின்றார்கள். (கஉ)

கதிர்விரி ஹபீபு நிற்பக் கானகத் தருக்க ளியாவும்
புதுமல ரலர்த்திச் செந்தேன் பொழிவமான் வருத்த நோக்கி
விதிர்சினைக் கரங்கள் சாய்த்து மென்றழைக் கூந்தல் சோர
மதியழிந் திரங்கிக் கண்ணீர் வடிப்பன போன்ற தன்றே.

(இ-ள்.) பிரகாசத்தை விரிக்காநிற்கும் ஹபீ பென்னுங்காரணப் பெயரை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அவ்வாறு அங்கு நிற்க, அக் காட்டினது மரங்களனைத்தும் புதிய புஷ்பங்களை அலரும்படி செய்து செவந்த தேனைச் சிந்துவது, அந்த மானின் வருத்தத்தைப் பார்த்து அசைகின்ற கிளைகளான கைகளைச் சாய்த்து மெல்லிய தழைகளாகிய கூந்த லானது சோரும் வண்ணம் தனது அறிவழிந்து அழுதுகண்ணீர் சொரிவதைப் போன்றது. (கங)

குலத்தோடும் பறவை தத்தங் குடம்பயிற் புகுதன் மானை
நிலத்திடை கிடத்திக் கட்டி நின்றவேட் டுவனைக் கண்ணா
னலத்தொடுங் காண்ப தாகா தெனநடு நடுங்கி யுள்ள
முலைத்தறப் பெடையி னோடு மொளிப்பன போன்ற தன்றே

(இ-ள்.) அன்றியும், பறவைச் சாதிகள் தங்கள் கூட்டத் தோடும் தத்தங் கூடுகளில் போய் நுழைபவை, அந்த மானை கட்டிப்பூமியின்கண் கிடத்தி நின்ற அவ் வேடனைக் கண்களால் நலத்தோடும் பார்ப்பது ஆகாதென்று மிகவும் நடுங்கி மன மானது உலைவுற்று அறும் வண்ணம் தங்களின் பெடைக ளோடும் ஒளிப்பவற்றை போன்றது. (கச)

எட்டலர் நறவ மாந்தி யிருஞ்சுரும் பிசைக்குந் தோற்றம்
வாட்டமின் முகம்ம திங்ஙன் வந்தனர் வருந்து மானை

மீட்டனர் வேட னீமான் விரும்பினன் பயங்க ளோத்தார்
கூட்டுறைந் தொளித்தன் மாற்று மெனப்பல கூய போலும்

(இ-ள்.) அன்றியும், சிறந்த வண்டுக ளானவை இதழ்களைக் கொண்ட பஷ்பங்களினது தேனை யருந்திப் பாடுகின்றதோற்றமான து, இவ் விடத்திற்கு வாட்ட மற்ற நமது நாயகம்நபிமுகம்மதுமுஸ் தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வந்தார்கள்துன்பப் படுகின்ற அம்மானை மீட்பார்கள். அந்த வேடனும் ஈமானை ஆசிப் பான். மற்றும் பயங்களை நீக்குவார்கள். நீங்கள்உங்கள்கூடுகளில்தங் கி ஒளிப்பதை மாற்றுங்க ளென்று பலவாய்க்கூவியதைப்போன்றது

நிறைவளஞ் சுரந்த கானி னின்றநந் நபியை நோக்கிக்
குறியவா லசைத்து நீண்ட கொழுங்கழுத் துயர்த்தி நீட்டி
மறைபடா மதியே வண்மை முகம்மதே யென்னப் போற்றித்
தறுகிடா தெவர்க்குங் கேட்பச் சலாமெடுத் துரைத்துக் கூறும்.

(இ-ள்.) நிறைந்த செல்வ மானது அதிகரிக்கப் பெற்ற அக்கா ட்டி னிடத்து நின்ற நமது நாயகம் நபி காத்திமுல் அம்பியா முகம் மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களை அந்த மானானது பார்த்துத் தன் குறிய வாலை யாட்டி நீட்சி யுற்ற செழிய கழுத்தை யுயரச் செய்து நீட்டி ஒரு காலத்தி லாயினும் மறையாத சந்திர னனவரே! அழகிய முகம்ம தென்னும் திருநாமத்தையுடை யவரே! என்று சொல்லித் துதித்துத் தறுகாது யாவர்களுக்கும் கே ட்கும் வண்ணம் சலா மெடுத்துச் சொல்லிக் கூறத் தொடங்கியது.

வல்லவ னுண்மைத் தூதே மன்னுமா நிலத்தின் மாந்த
ரல்லலை யகற்றி வேதத் தறநெறி பயிற்றிச் சொர்க்கத்
தில்லிடை புகுத்தப் பூவி னிடத்தினி லுதித்த கோவே
பொல்லேயி னெனது சொற்கேட் டுவந்தரு ளளிக்க வேண்டும்.

(இ-ள்.) வல்லவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின்சத் திய தூதுவரே! பொருந்திய மகத்தான இப் பூமியினது மாந்தர்களி ன் துன்பங்களை யொழித்துப் புறுக்கானுல் அலீ மென்னும் வேதத் தின் புண்ணிய மார்க்கத்தைக் கற்பித்துச் சொர்க்க லோகத்தினது வீட்டின் கண் புகுத்தும்படி இவ் வுலகத்தில் அவதரித்த அரசரே எனது வார்த்தைகளை விரும்பிக் கேட்டு விரைவில் கிருபை யருளல் வேண்டும். (எக)

என்னுயி ரெனநீங் காத வினமுமென் கலையுங் கன்றுந்
துன்னிடத் திரண்டு பைம்புற் றுறைதொறு மேய்ந்துநாளு
முன்னிய பசிக டீர்த்தோர் மிருகங்கட் குயிர்கொ டாமன்
மன்னிய மலையின் சார்பு மனப்பய மகற்றி வாழ்ந்தேம்.

(இ-ள்.) எனது ஜீவனைப்போலும் பிரியாத என் கூட்டமும் ஆண்மானும் குட்டியும் நெருங்கும்வண்ணம் ஒன்று சேர்ந்து பசிய புற்களையுடைய துறைகள்தோறும் மேய்ந்து பிரதிதினமும் ஓங்கா நிற்கும் பசிகளைப்போக்கி ஓர் துட்ட மிருகங்களுக்காயினும் ஆவியைப்பறிகொடாமல் மனசின்கண்ணுள்ள அச்சங்களை யொழித்துப்பொருந்திய மலையினது சார்பில் வாழ்ந்திருந்தோம். (கஅ)

இருநிலத் தாசைக் காயோ ரிளங்கன்றென் வயிற்று ளூதான்
மருவிய கலையு நானும் வருத்தமுற் றிருக்குங் காலம்
பெருகுதீன் முகம்ம தேநும் பெயரினைப் போற்றல் செய்தே
னுருவமைந் திளஞ்சூன் முற்றி யுதரமும் வளர்ந்த தன்றே.

(இ-ள்.) பெரிய இப் பூலோகத்தினது ஆசைக்காய் ஓர் இளங் கன்றானது எனது வயிற்றின்கண் கெற்பமாகப் பொருந்தாததினால் கலந்த எனது ஆண்மானும் நானும் துன்பமடைந்திருக்கின்றகாலத்தில் பெருகாநிற்கும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களே! உங்களின் திருநாமத்தைத் துதிசெய்தேன். உடனே எனது வயிற்றில் கருத்தங்கி இளம்பருவத்தைக்கொண்ட சூலானது முற்றிவயிறும் வளர்தலுற்றது. (கக)

தனியனென் னுயிருங் காக்குங் கலையுயிர் தானு மொன்று
யினிதினென் றுய தென்ன விளங்கன்றீன் றின்றே னின்ப
நனிகளி கடலி லாழ்ந்து நறுமலை யிடத்திற் சேர்ந்து
துனிபல வகற்றி னேன்முன் சூழ்வினை யறிகி லேனே.

(இ-ள்.) ஏகனாகிய எனது ஜீவனும் என்னைக் காக்காநிற்கும் கலையினது ஜீவனும் ஒருங்குசேர்ந்து இனிமையுடன் ஓர் ஜீவனானதைப்போல நான் ஒரு இளங்கன்றைப் பெற்றேன். அதனால் இன்ப மிகுத்த சந்தோஷ சாகரத்தி லமிழ்ந்து வாசனை தங்கிய மலையினிடத்துச் சேர்ந்து பல துன்பங்களையும் ஒழித்தேன். ஆதியில் சூழ்ந்திருக்கும் செயலை இன்னதென்று அறிந்தேனில்லன். (உ0)

உள்ளுயி ரனைய கன்று மொருத்தலு மியானு மோர்நாள்
வெள்ளமொத் தனைய மானி னினமுமோர் வெற்பின் சார்பி
னள்ளிலை யள்ளி வாய்கொண் டரும்பசி தடிந்து நீருண்
டெள்ள வெனினு மச்ச மின்றிநின் றுலவு நேரம்.

(இ-ள்.) ஓர்நாள் எனது சரீரத்தினகம் பொருந்தி யிருக்கும் ஜீவனையொத்த குட்டியும் ஆண்மானும் நானும் சமுத்திரத்தை நிகர்த்த தமான்கூட்டங்களும் ஓர் மலையினது சார்பில் வாயினால்நெருங்கிய இலைகளைக் கவ்வி யெடுத்து அரிய பசியைக்குறைத்துத் தண்ணீர்குடித்து எள்ளளவாயினும் பயமில்லாமல் நின்று உலாவுகின்ற சமயத்தில். (உக)

அத்திசைக் கெதிரின் மேல்பா லடுத்தொரு குவட்டின் கண்ணே
மத்தகக் கரியு மாய்க்கும் வரிப்புலி முழக்க நீண்ட
குத்திரத் தசனித் தாக்கின் குவலய மதிரக் கேட்டுத்
தத்தியெத் திசையுந் திக்குந் தனித்தனி சிதறி னேமால்.

(இ-ள்.) நாங்கள் நின்றிருந்த அந்தத் திசைக்கு முன்னாற் சமீபித்து மேற்பக்கத்தில் ஒருமலையின்கண் மத்தகத்தைக்கொண்டயானையையும் வதைசெய்யாநிற்கும் இரேகைகளையுடைய ஓர் புலியினது முழக்கத்தை நெடிய குரூரமமைந்தஇடியினது தாக்கைப்போலஇவ்வுலகமானது அதிரும்படி காதுகளினாற் கேள்வியுற்றுச் சாடி எந்தத்திசைகளிலும் தனித்தனி சிதறலாயினோம். (உஉ)

கூடிய தூறும் பாரிற் குளித்திடக் குதித்து வல்லே
யோடிய திசையி னொன்றை யொன்றுகாண் கிலதா யானும்
வாடிய மனத்தி னோடு மறியையு நோக்கா தாக்கை
யாடியிற் றுரும்பாய் வேறோ ரடவியி னடைந்திட் டேனால்.

(இ-ள்.) கூட்டத்தைக்கொண்ட சிறு செடிகளும் பூமியின்கண் படியும்படி சாடி விரைவாய் அவ்வாறு ஓட்டமுற்ற திக்குகளில் ஒன்றையொன்று பாராததாய் நானும் வாட்டமடைந்த இருதயத்துடன் எனது குட்டியையும் பாராது சரீரமானது சமுத்திரத்திலகப்பட்ட துரும்பைப்போன்று வேறேபொரு காட்டின்கண் போய்ச் சேர்ந்தேன். (உ௩)

அடவியி னடையுங் காலை யவ்வுழை கரந்திவ் வேடன்
றுடரிடும் வலையைச் சுற்றிச் சுருக்கிடப் புலிவாய் தப்பி

மிடலரி யுழையிற் சிக்கி மிடைந்தென மிடைந்து செவ்வி
யுடலுயிர் பதைப்பத் தேம்பி யுணர்வழிந் தொடுங்கா நின்றேன்.

(இ-ள்,) அவ்வாறு அந்தக்காட்டின்கண் போய்ச்சேர்ந்தசமயத் தில் அவ்விடத்தில் இந்த அரபிவேடன் ஒளித்துக் கயிற்றினால் உண்டாகிய தனது வலையைச்சுற்றி சுருக்கப், புலியின் வாயில் நின்றுந் தப்பி வலிமையைக்கொண்ட சிங்கத்தினது இடத்திலகப்பட்டு வருத்தமடைந்தாற்போலும் வருத்தமடைந்து அழகிய தேகமும் ஆவியுத பதைக்கும்வண்ணம் அழுது அறிவழிந்து ஒடுக்கமுற்றேன்.

வலையிடத் துறைந்த தென்ன மகிழ்ந்தெழுந் தோடிவந்து
நிலைபெற வடுத்துச் சாய்த்து நின்றெனை நோக்கியாகத்
துலைவுறும் பசிக்கின் றென்பா லுற்றனை யென்னக்கூறிச்
சிலைகணை நிலத்திற் சேர்த்தித் தெரிந்தொரு பாசந் தொட்டான்

(இ-ள்.) அவ்விதம் ஒடுக்க முற அவ் வேடன் மானனது நமது வலையி னிடத்துத் தங்கிற் றென்று களிப்புற்று எழும்பி ஓடி வந்து நிலைபெறச் சமீபித்து நின்று என்னைச் சரித்துப் பார்த்து எனது உடலின் கண் உலை வுறுநிற்கும் பசிக்காய் நீ இன்றையத் தினம் என்னிடத்தில் வந்து சேர்ந்தாய். என்று சொல்லித் தனது வில்லையும், அம்பையும், பூமியின்கண் பொருந்தவைத்து விட்டுக் கையினால் ஒரு கயிற்றைத் தீண்டித் தெரிந்து எடுத்தான். (உரு)

திருக்கர நாலுகாலுஞ் செவ்விதிற் கூட்டி யங்கை
வரிக்கயி றதனாற் சுற்றி மாறுகொண் டிழுத்துக் கட்டிக்
கரிக்கர மென்ன நீண்ட கரத்தினாற் றூங்கி முன்னர்ச்
சுருக்கிய வலையை நீக்கித் தோளினி லெடுத்துக்கொண்டான்.

(இ-ள்.) நான்கு பாதங்களையுங் களங்கமறும்படி சிறப்பாய்ச் சேர்த்து அவ்வாறு எடுத்த அழகிய கரத்தின்வரியைப்பெற்ற கயிற்றினால் மாறுகொண்டு சுற்றி இழுத்துக் கட்டி யானைத் தும்பிக்கையைப்போலும் நிண்ட தனது கைகளால் தாங்கி ஆதியிற் சுருக்கிய வலையை விட்டும் வேறு படுத்தித் தோளின் கண் எடுத்துக் கொண்டான். (உசு)

கவைமுனைக் கோட்டுச் செவ்விக் கலையுட லுயிரு மீன்ற
நவியுட லுயிரு மோர்மா னுடன்கொண்டு நடப்ப தொத்துச்

சவிபுறந் தவழுங் கோட்டுச் சார்பிலிவ் வனத்தின் கண்ணே
சுவையறு மொழியா னென்னைச் சுமந்திவ ணிறக்கி வைத்தான்.

(இ-ள்.) இரச மற்ற வார்த்தைகளை யுடையவனான இவ்வேடன் அவ்விதம் எடுத்துக் கவரைக் கொண்ட முனையினது கொம்புகளை யுடைய அழகிய என்கலை மானின் சரீரத்தையும் ஜீவனையும் யான் பெற்ற கன்றினது சரீரத்தையும் ஜீவனையும் ஒரு மானுடன் கொண்டுசெல்வத்தை நிகர்த்து என்னைச் சுமந்து வந்து சூரிய னானவன் விலகிப் பக்கத்தில் தவழாநிற்கும் அம் மலையினது சார்பில் இச் சோலையி னிடத்து இறக்கி வைத்தான். (உஎ)

கட்டுடன் கிடந்து நெஞ்சிற் கவலையுள் ளழிந்து மாறா
நெட்டுயிர்ப் பெறிந்து சோர்ந்து நிலத்திடை கிடக்கு நேரம்
வட்டவெண் கவிகை வள்ளல் முகம்மது நபியே யும்மைத்
திட்டியிற் றெரியக் கண்டேன் றிடுக்கமுந் தீர்ந்த தன்றே.

(இ-ள்.) அந்த அறபி வேட்டுவன் அவ்வாறு கட்டிய கட்டோடு நானிருந்து மனசினது விசாரத்தினால் நெஞ்ச மழிந்து நீங்காத பெருமூச்சு விட்டு மெலிந்து பூமியின் கண் கிடக்கின்ற சமயம் வெள்ளிய சந்திரவட்டக் குடையினது வள்ள லாகிய முகம்மதென்னுந் திரு நாமத்தையுடைய நபிகட்பெருமானே! உங்களை எனது கண்களில் தெரியும்படி பார்த்தேன். எனது திடுக்கமும் நீங்கிற்று.

எனவிவை யுரைத்துப் பின்னு மெழினபி முகத்தை நோக்கி
மனநிலை வாக்கி னோடு முகம்மதே யென்னப் போற்றிப்
புனமுறை விலங்கின் சாதி யாயினுந் தமியேன் புன்சொற்
றனையருட் படுத்திக் கேட்பீ ரென்றுரை சாற்றிச் சாற்றும்.

(இ-ள்.) என்று இவைகளைக்கூறிப் பின்னரும் அழகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வதனத்தைப் பார்த்து மன நிலைமையைப்பெற்ற வாக்குடன் முகம்மதென்னும் அபிதானத்தை யுடையவரே! என்று சொல்லித் துதித்து யான் கொல்லைகளில் தங்காநிற்கும் மிருகச் சாதி யானாலும் தமியேனாகிய எனது கீழ்மையான வார்த்தைகளைக் கிருபைவைத்துக் கேட்பீர்களாக வென்று கூறிச் சொல்லத் தொடங்கியது. (உகூ)

இச்சிலை வேடன் கையி னிறத்தலை யுளத்தி லெண்ணி
யச்சமுற் றுரைப்ப தன்றிவ் வவனியிற் சீவ னியாவு

நிச்சய மிறந்த லல்லா லிருப்பன்வை நிலத்தி னுண்டோ
முச்சகம் விளக்குந் தீனின் முதன்மறைமுறைமைச் சொல்லோய்

(இ-ள்.) வானலோகம் பூலோகம் பாதாள லோகமெனனும் மூன்றுலோகங்களிலும் விளக்காநிற்கும் தீனுல் இஸ்லா மென்று கூறு மார்க்கத்தினது முதன்மை யான புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தின் முறைமை யமைந்த வசனங்களை யுடைய முகம்மது நபியே! நான் இந்த மலையினது வேட்டுவன் கையால் இறப்பதை மனசின்கண் ணினைத்துப் பயந்து கூறுவதல்ல, இந்த வுலகத்தில் ஜீவன்க ளனைத்தும் நிச்சயமாக இறப்பதே யல்லாமல் இருக்கப் பட்டவைகள் பூமியினிடத் துள்ளனவா? இல்லை. (௬0)

கலையெனப் பிரிவி லாது கண்ணிமை காப்ப தென்ன
வலைவறக் காப்பச் சின்னா ளவனியிற் கலந்து வாழ்ந்தேன்
குலவிய மறியு மீன்றேன் குறித்தினி யிருப்ப தென்கொ
லிலைநுனிப் பனியி னுக்கை யிறத்தலே நலத்தன் மன்றே.

(இ-ள்.) அன்றியும், எனது கலைமானென்று என்னை விட்டும் நீங்காது கண்களை இமை காப்பது போலும் துன்பமறக் காக்கும் வண்ணம் குறையக் காலம் இந்தப் பூமியின்கண்கலந்து வாழ்ந்தேன். அவ்விதம் வாழ்ந்து பிரகாசியாநிற்கும் ஓர் கன்றையும் பெற்றேன். இனி இவ்வுலகத்தினிடத்து மனசின்கண் சிந்தித் திருப்பது யாது? ஒன்றுமில்லை. இலையினது நுனியிற்றங்கியபனியை நிகர்த்த இந்திரியத்தால் உருவெடுத்த இந்தச் சரீரமானது இறந்து படுவதே நல்லது. (௬௧)

அடவியிற் கிரியில் வீணிலவதியுற் றிறந்தி டாமல்
வடிவுடைக் குரிசி லேறும் மலர்ப்பதச் செவ்வி நோக்கிப்
படுபரற் கானில் வேடன் பசிப்பிணி தீர்ப்ப தாக
வுடலிறத் திடுத லெவ்வெவ் விறப்பினு முயர்ச்சி மேலோய்

(இ-ள்.) அழகையுடைய குரிசிலே! மேன்மையைக் கொண்ட முகம்மதென்னும் அபிதானத்தை யடைந்த நபிகட்பெருமானே! காட்டி னிடத்தும் மலையினிடத்தும் வீணாகத்துன்பப்பட்டு இறந்து போகாமல் உங்களது தாமரை மலரைப்போன்ற திருவடிகளின் சிறப்பைப் பார்த்து மிகவும் பாறக்கற்களை யுடைய கானகத்தினது வேட்டுவன் பசி யாகிய நோயைத் தீர்ப்பதற் காகச் சரீரத்தை இறக்கச் செய்யுதல் எங்கெந்த இறப்பைப் பார்க்கிலும் மிக உயர்ந்தது. (௬௨)

வரிப்புலி முழக்கங் கேட்டு மானினஞ் சிதறித் தத்தந்
தரிப்பிட மறியா தொன்றுக் கொன்றுடன் சாரா தெங்கு
முரைப்பரி தென்னப் போந்த தாலெனை தொருத்தரேடி
யிரைப்பரு நெடுங்கான் போய்ப்போ யிருந்ததோ விறந்ததேயோ.

(இ-ள்.) ஆயினும் இரேகைகள் படர்ந்த புலியினது முழக்கத்தைக் காதுகளினாற் கேள்வியுற்று மான் கூட்டமானது சிதறுதலடைந்து தத்தம் இருப்பிடத்தை யுணராமலும் ஒன்றுக் கொன்று கூடப்பொருந்தாமலும் சொல்லு தற்கரி தென்று எவ்விடத்தும் போனதினால் எனது ஆண்மான் என்னைத் தேடி ஒலியானது மாறப் பெறாத நெடிய காட்டினிடத்திற் சென்று சென்றுதங்கி யிருந்ததோ? அல்லது இறந்து போயிற்றோ? (௩௩)

ஒல்லையி னோடி நீங்கா தொருத்தலின் றளவு மோந்து
புல்லினைக் கறியா நீரும் புசித்திடா திருந்து தேடி
யல்லலுற் றழுங்கிக் கண்ணி னருவிநீர் சொரியவாடிப்
பல்லவ மெரியிற் புக்க தெனவுடல் பதைக்கு மன்றே.

(இ-ள்.) அன்றியும், அவ்வாறு அம்மானனது இன்று முழுவதும் விரைவிலோடிப் பிரியாமலும் புற்களை மணத்திப் பற்களினாற் கறியாமலும் தண்ணீருங் குடியாமலும் தங்கியிருந்து என்னைத் தேடித் துன்பமுற்று அழுதுகண்களின் அருவியாகிய நீரானது சிந்தும் வண்ணம் மெலிந்து நெருப்பினகம் விழுந்த தளிரைப் போலும் சரீரமானது பதையாநிற்கும். (௩௪)

பிடிபடு மிதற்கு முன்னே மூன்றுநாட் பிறந்த புல்லின்
கொடிநுனை மேய்ந்து நீருங் குடித்தறி யாத பாவி
மடிமுலை யிரங்கிப்பாலும் வழிந்தது குழவி சோர்ந்து
படிமிசை கிடந்தென் பாடு படுவதோ வறிகிலேனே.

(இ-ள்.) அன்றியும், மட்டுக் கட்டாநிற்கும் இதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் பிறந்து புல்லினது கொடியான நுனியைச் சாப்பிட்டுத் தண்ணீரும் அருந்தத் தெரியாத கன்றானது வாட்டமுற்றுப் பூமியின் மீது கிடந்து என்ன துன்பப் படுகின்றதோ? பாவியாகிய யான் அறிகிலேன். எனது மடிப்பைக்கொண்ட முலைகளானவை இறங்கிப் பாலும் வழிகின்றது. (௩௫

கோட்டுடைக் கலையி னோடுங் கூடிற்றோ வலதோர் பாலின்
மீட்டதோ வினத்தைச் சேர்ந்து விம்மிநின் றேங்கிற் றோகான்
காட்டிடைப் புலிவாய்ப் பட்டுக் கழிந்ததோ வென்னைத் தேடி
வாட்டமுற் றலறி யோடி மறுகிற்றோ வறிகி லேனே.

(இ-ள்.) அன்றியும், கொம்புகளையுடைய ஆண்மானோடும் சேர்ந்ததோ! அல்லது ஓரிடத்தில் திரும்பினதோ? தனது கூட்டத்தைப்பொருந்தி நின்று விம்மி அழுததோ? ஆற்றைக்கொண்ட காட்டினிடத்துப் புலியின்வாயி லகப்பட்டுக் கழிந்துபோயிற்றோ? என்னைத்தேடி மெலிவடைந்து சத்தித்து ஓடி மறுகுகின்றதோ? ஒன்றும் அறியேன். (௯௬)

தேங்கிய பசியால் வாடித் திரிந்ததோ விறந்த தோவென்
றேங்கிய வருத்த மல்லா லிவ்விட ரதனி லாவி
நீங்குமென் றுள்ளத் துள்ளே னெட்டுட லுடம்பி னாவி
தாங்கிய தரும வேந்தே தவறன்று சரத மன்றே.

(இ-ள்.) அன்றியும், நிறைந்த பசியினால் மெலிந்து திரிந்ததோ? செத்ததோ? என் றேங்கப்பெற்ற துன்பமே யல்லாமல் இந்த வேட்டுவன் வலையி லகப் பட்ட துன்பத்தினால் நமது ஜீவனானது பிரியுமென்று மனசின்கண் நினைத்திலன். நெடிய தேகத்தையுடைய உடம்பினது ஜீவனைத் தாங்கிய புண்ணிய அரசாகிய முகம்மதென்னும் நபிகட் பெருமானே! இது தப்பல்ல, சத்தியம். (௯௭)

மன்னிய கலிமா வென்னும் வழிநிலை மாந்த ரியாரும்
பொன்னிலம் புகுதச் செய்யும் புண்ணியப் புகழின் மிக்கோய்
கொன்னிலைச்சிலைக்கைவேடன் கொடும்பசி தணிப்பனென்றுட்
பின்னிய பிணிப்பு நீக்கிப் பிணையென விடுத்தல் வேண்டும்.

(இ-ள்.) பொருந்திய கலிமாவென்னும் ஒழுங்கினது நிலைமையினால் ஜனங்க ளனைவர்களையும் சொர்க்கலோகத்தின்கண் போய்ச்சேரச் செய்யுகின்ற புண்ணியத்தைப் பெற்ற கீர்த்தியினது மேன்மையமைந்த முகம்மது நபியே! யான் பிராணிகளைக் கொல்லாநிற்கும் நிலைமையைக்கொண்ட வில்லைத் தாங்கிய கையையுடைய இந்த வேட்டுவனது கொடிய பசியைத் தணியும்படிசெய்வேன். எனது பாதங்களிற் பின்னிய கட்டையொழித்து எனக்காகத் தங்கள் பிணையென்று சொல்லி என்னை விடுவித்தல் வேண்டும். (௯௮)

விடுத்திரேற் கலையைச் சேர்ந்து விழைவுறுங் கவலை தீரப்
படுத்தியென் னினத்துக் கோதிப் பறழினுக் கினிய தீம்பால்
கொடுத்தரும் பசியை மாற்றிக் குலத்தொடுஞ் சேர்த்து வல்லே
யடுத்தொரு கடிகைப் போதி லடைவனென் றறைந்த தன்றே.

(இ-ள்.) அவ்வாறு தாங்கள் என்னை விடுவிப்பீர்களேயானால் யான் எனது ஆசைப்பெருக்கமுற்ற ஆண் மானைச் சேர்ந்து அதன் விசாரங்களை யொழித்து என் கூட்டத்திற்கும்சொல்லிமிகவும் இனிமையமைந்த பாலைக் கன்றுக் கீந்து அரிதான அதன்பசியை அகற்றி அக் கூட்டத்தோடும் சேர்த்துவிட்டு விரைவில் ஒரு நாழிகைநோக்கில் இவ்விடத்தில்வந்து சமீபித்துச் சேருவேனென்று கூறிற்று.()

மானுரை வழங்கக் கேட்டு மனத்தினிற் கருணை பொங்கிக்
கானவேட் டுவனை நோக்கிக் கன்றிடை வருத்தந் தீர்த்துத்
தான்வரு மளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்
தீனெனும் பயிரைக் காத்துச் செழும்புகழ் விளக்குஞ் செம்மல்.

(இ-ள்.) தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கப்பயிரைக் காத்து செழிய கீர்த்தியை விளக்காநிற்கும் செம்மலாகிய நமது நாயகம்நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு அந்த மானானது தனது சமாச்சாரத்தைக் கூறத் தங்களின் காதுகளினாற் கேள்வியுற்று இருதயத்தின்கண் காருண்ணியம் அதிகரித்து அந்தக் காட்டினது வேடனைப்பார்த்து இந்த மானானது தனது குட்டியினிடத்துள்ள துன்பத்தை யொழித்து மீண்டு இங்கு வருமட்டும் அதற்கு வதிலாக யான் பிணையென்று கூறி நின்றார்கள்.

பிரியமுற் றிரங்கிக் காட்டின் பிணைக்கியான் பிணையென் றோது
முரைதனைக் கேட்டு வேட னெண்புயங் குலுங்க நக்கித்
தெரிதரு மறிவி னோடுஞ் சினத்தொடுங் கலந்து தேர்ந்து
கருமுகிற் கவிகை வள்ளல் கவின்முக நோக்கிச் சொல்வான்.

(இ-ள்.) அவ்வாறு அன்புற்று இரங்கிக் கானகத்தின்கண் சஞ்சரியாநிற்கும் மானுக்கு நான் பிணையென்று கூறும் வார்த்தைகளைத் தனது காதுகளினாற் கேட்டு அந்த வேட்டுவன் ஒள்ளிய தோள்கள் குலுங்கும்வண்ணம் சிரித்துத் தெரிந்த தன் புத்தியோடும் கோபத்தோடும் கலந்து தேர்ச்சிகொண்டு கரிய மேகக் குடையை யுடைய

வள்ள லாகிய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவ
வர்களின் அழகிய முகத்தைப் பார்த்துச் சொல்லுவான். (௪௧)

முள்ளுடைக் கானி லேகி முகமழிந் துச்சி வேர்வை
யுள்ளங்கா லனைப்ப வோடி யுடலுலைந் தொன்றுங் காணு
விள்ளரும் பசியான் மீளும் வேளையிப் பிணையை நோக்கி
யொள்ளிழை வலையிற் றாக்கிப் பிடித்திவ ணொருங்கு சார்ந்தேன்,

(இ-ள்.) முட்களை யுடைய காட்டின்கண் சென்று எனது முகமானது அழியப் பெற்று உச்சியினது வேர்வை உள்ளங்காலை நனைக்கும் வண்ணம் ஓடிச் சரீரம் சீரழிந்து ஒரு மிருகத்தையும் காணாது சொல்லுதற் கரிய பசியினால் திரும்பாநிற்கும்சமயத்தில் இம்மானைக் கண்டு ஒள்ளிய இழைகளை யுடைய வலையினால் பாய்ந்து பிடித்து ஒருங்குடன் இவ் விடத்தில் வந்து சேர்ந்தேன். (௪௨)

பெருத்தமான் சையா விற்றறைப் பெரும்பசி தவிர்ந்த தென்று
ளிருத்தியிங் கிருந்தே னந்த விருமனக் களிப்பை நீக்கி [சொற்
வருத்தமுற் றிடுஞ்சொற் சொன்னீர் முகம்மதே யெவர்க்கு மிச்
பொருத்தம தன்று விண்ணு மண்ணினும் புகழின் மிக்கோய்.

(இ-ள்.) ஆகாயத்தின்கண்ணும் பூலோகத்தின்கண்ணும் கீர்த்தியினால் மிகுந்த நபிகட் பெருமானே! முகம்மதென்னுந் திருநாமத்தையுடையவரே! பருப்பமுற்ற இந்த மானினது மாமிசத்தால் இன்றையப்பொழுதின் பெரியபசியானது ஒழிந்ததென்று இருதயத்துள் இருக்கும்படிக்கு செய்து இவ்விடத்தில் தங்கியிருந்தேன். அந்தப் பெரிய மனச்சந்தோஷத்தை மாற்றித் துன்பமுற்றிடும் வார்த்தைகளைக் கூறினீர். இவ் வார்த்தைகள் யாவர்களுக்குஞ் சம்மதமானவையல்ல. (௪௩)

கானிடை பிடித்த மானைக் கட்டவிழ்த் தவணிற் போக்கின்
மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்ன ருண்டோ
ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்யுளு நாட்டிற் றுண்டோ
வூனமிப் பிணைச்சொ லையா வோதுவ தொழிக வென்றான்.

(இ-ள்.) அன்றியும். ஐயாவே! காட்டின்கண் பிடித்தமானை அதன் கட்டுகளை யவிழ்த்து அந்தக் காட்டி னிடமாகப் போகச் செய்தால் திரும்பியும் மாந்தர்க ளிடத்து வருவது ஆதியி லுளதா? ஞானத்தைக்கொண்டமுன்னுள்ளமூன்றுவேதங்களையுங்கற்றுத் தெளிந்தவர்

கள் அவ்வாறு வருமென்று செய்யுட்களும் இவ்வுலகத்தின்கண் நாட்டிற் றுளதா? இல்லையே! ஆதலால் இந்தப் பிணையென்று கூறும் வார்த்தை குற்ற மானது. அதைக் கூறுவதை ஒழித்துப்போடுங்களென்று சொன்னான். (சச)

என்னுறு பிணையாய்ப் போன விரும்பிணை கடிகைப் போதி
னுன்னிடத் துறும்வா ராதே லுன்பசி தீர்ப்ப தாகப்
பின்னிரண் டொன்றுக் கன்பாய்த் தருகுவன் பேது றேலென்
றன்னவன் றனக்குச் சொன்ன ராரணத் தமிர்தச் சொல்லார்.

(இ-ள்.) வேடன் அவ்வாறு சொல்லப்புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது அமிர்த வார்த்தைகளை யுடையநாயகம்நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பொருந்திய எனது பிணையாகச் சென்ற பெரிய பெண் மானனது ஒரு நாழிகை நேரத்தில் திரும்பி உனது பால் வந்து சேரும். அவ்விதம்வாராதிருக்கு மானல் உனது பசியைத் தீர்ப்பதற்காகப் பின்னர் அன்புடன் ஒரு மானுக்கு இரண்டு மான் தருவேன். நீ உன் அறிவானது கலக்க மடைய வேண்டா மென்று அவனுக்குக் கூறினார்கள் ( )

காரணக் குரிசில் கூறுங் கட்டுரை செவியி னோர்ந்து
பாரினி லெவர்க்குந் தோன்றாப் புதுமைபார்த் தறிவோ மல்லாற்
சார்பினிற் சாரா லொன்றுக் கிரண்டுமே தருது மென்றார் [ன்
பேரினிற் பிணையாக் கொள்ளல் கருத்தெனப் பெரிதுட்கொண்டா

(இ-ள்.) காரணத்தைக் கொண்ட குரிசி லாகிய நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அவ்வாறு கூறும்உறுதியானவார்த்தைகளை அவ்வேடன் தனது செவிகளினுற் கேள்வியுற்று அறிந்து இப் பூலோகத்தின்கண் யாவர்களுக்கும் வெளிப்படாத ஆச்சரியத்தைக் கண்களாற் பார்த் துணர்வோம்; அல்லாமலும், இம் மான் நமது சார்பில் வந்து சாரா விட்டால் ஒரு மானுக்கு இரண்டு மான் தருவே னென்று சொன்னர். இவர் பேரில் பிணையாகக் கொள்ளுதல் கருத் தென்று பெரிதாய்ச் சிந்தையின்கண் எண்ணினன். (சரு)

கள்ளமுங் கரப்பு மாறாக் கருத்தின னுயிர்கட் கென்று
மெள்ளள விரக்க மில்லா வேட்டுவ ரினத்தி னுள்ளே
யுள்ளம தறிந்துங் கேட்டீ ருரைப்பதென் னுயர்ந்த மேன்மை
வள்ளலும் மதுர வாய்மை மறுத்திலேன் விடுத்தி ரென்றான்,

(இ-ள்.) அவ்வாறு எண்ணிய வேட்டுவன் ஓங்கிய மேன்மையைக் கொண்ட வள்ளலாகிய முகம்மதென்னும் திரு நாமத்தையுடையவரே! இருட்டும் ஒளிப்பும் நீங்காத சிந்திப்பை யுடையவனும் ஜீவப் பிராணிகளுக்கு எக்காலமும் எள்ளினது அளவாயினும் இரக்க மில்லாத வேடர்களின் குலத்தி லுள்ளவனு மான எனது இருதயத்தை யுணர்ந்தும் தாங்கள் இவ்வாறு கேட்டீர்கள். அதற்கு வதிலாக உரைப்பது யாது? ஒன்று மில்லை. உங்களது இனிமை தங்கிய வார்த்தைகளை யான் மறுத்தவ னல்லேன். மானை விட்டு விடுங்களென்று சொன்னான். (சஎ)

வேட்டுவ னுரைப்பக் கேட்டு முகம்மது விருப்ப முற்று
வாட்டமுற் றிருந்த புள்ளி மானிடத் திருந்து பாரி
னீட்டிய காலிற் சேர்த்த துடரினை நெகிழ்த்துக் கானிற்
கூட்டுறுக் குழவிக் குப்பால் கொடுத்திவண் வருக வென்றார்

(இ-ள்.) வேடனானவன் அவ்வாறு சொல்ல நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் காதுகளினாற் கேள்வியுற்று விருப்பமாய் மெலிவடைந்திருந்த அந்த புள்ளிகளை யுடைய மானினது இடத்தில் உட்கார்ந்து பூமியின்கண் நீட்டிய காலிற் பொருத்திய கயிற்றை நெகிழும்படி அவிழ்த்துக்காட்டினகம் கூட்டுதலுறுத குட்டிக்கு அமுத மளித்துஇவ்விடத்திற்கு வருவாயாக வென்று கூறினார்கள். (சஅ)

இருந்துகான் மடக்கி நீட்டி யெழுந்துடன் முறுக்கு நீக்கி
மருந்தெனு மமுதத் தீஞ்சொன் முகம்மதின் வதன நோக்கிப்
பொருந்திய கலிமா வோதிப் புகழ்ந்துடற் பூரிப் போடுந்
திருந்தவே டனையும் பார்த்துச் சென்றது கானின் மானே

(இ-ள்.) அவ்விதம் கூறவே அந்த மானானது இருந்து தனது கால்களை மடித்து நீட்டி எழும்பிச் சரீரத்தினது திருக்கை மாற்றி மருந் தென்று சொல்லாநிற்கும் அமுதம் போன்ற இனியவார்த்தைகளை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் முகத்தைப் பார்த்து "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர்றசூ லுல்லாஹ்" என்று பொருந்திய கலிமாவைக் கூறித் துதித்துத் தேகப் பூரிப்புடன் செவ்வையாகவேட்டுவனையும் பார்த்துக் கொண்டு காட்டின்கண் சென்றது; (சகூ)

வெண்ணிலாக் கதிர்கான் றென்ன மென்முலை சுரந்த தீம்பால்
மண்ணெலா நனைப்பச் சூழ்ந்த வனமெலாந் திரிந்து தேடிக்
கண்ணினி லினங்கா ணாது கலங்கியோர் வனத்தின் கண்ணே
யெண்ணரும் பிணையுங் கன்றுங் கலையுட னினிது கண்ட

(இ-ள்.) அவ்விதம் சென்ற மானானது வெண்மையைக்கொண்ட சந்திரனது கிரணங்கள் பிரகாசித்தன போலும் மெல்லிய முலையின் கண் ணிருந்து சுரப் புற்ற இனிய அமுத மானது பூமி முழுவதையும் நனையும் படி செய்யத், தன் னினங்களை வளர்ந்த காடுகளெல்லாவற்றிலும் திரிந்து தேடிக் கண்களிற் காணாது கலக்க முற்று ஓர் காட்டினிடத்து எண்ணுதற் கரிய மான்களையும் தனது குட்டியையும் ஆண்மானோடு இனிமையுடன் கண்டது. (௫௦)

மலைவற வினத்து ளாகி மனத்தினுட் கவலை நீக்கிக்
கலையினுள் வருத்தந் தீர்த்துக் கன்றினை யணைத்து விம்மு
முலையினை யூட்டி மென்மை முதுகுவா லடிநா நீட்டி
யலைதர வளைத்து மோந்து வேட்கையை யகற்றிற் றன்றே

(இ-ள்.) அவ்வாறு கண்ட அம் மானானது மயக்க மறும் வண்ணம் தனது கூட்டத்தின் உட் பக்கத்திலாகி இருதயத்தினகமுள்ள விசாரங்களை யொழித்துத் தன் ஆண்மானின் மனத்துன்பத்தையும் நீக்கிக் குட்டியைச் சேர்த்து விம்முகின்ற முலையினது பாலை யுண்ணும்படி யுண்பித்து மெல்லிய முதுகையும் வாலையும் பாதங்களையும் நாவை நீட்டி அசையும்படி வளைத்துமுத்தித்தன் னாசையையொழித்தது

கன்றது வயிறு வீங்கக் கதிர்முலை யமுத மூட்டி
நின்றதன் னினத்துக் கெல்லா நெறிபடுங் கானி லோடி
வன்றிறல் வேடன் கையிற் படும்வர வாறுந் தூதர்
வென்றிகொள் பிணையின் மீட்டு விட்டது மோதிற் றன்றே

(இ-ள்.) அவ்வாறு கன்றுக்குத் தன் வயிறானது பருக்கும்படி பிரகாசத்தை யுடைய முலையினது பாலை யுண்பித்து அங்குகூடிநின்ற தனது கூட்டத்திற் கெல்லாம் தான் நெறிபடாநிற்கும் கானகத்தின்கண் ஓடிக்கொடியவலிமையையுடையவேட்டுவன்கையில் அகப்பட்டவாற்றையும் நக்குசுபுகான குலத்த ஆலாவின் தூதுவரானநா

யகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வெற்றியைக் கொண்ட தமது பிணையினால் திருப்பி விட்டதையுங், கூறிற்று. (௫௨)

பிணையென வுரைத்த மாற்றம் பிணைக்குல மனைத்துங் கேட்டுப்
பணைபடு கானி லுள்ள பதைப்பொடுந் துணுக்கி நிற்பத்
துணையெனுங் கலையி னங்கஞ் சோர்ந்துநெட் டுயிர்ப்பு வீங்கி
யணைதர வடுத்து நோக்கி யாற்றுவான் றொடங்கிற் றன்றே.

(இ-ள்.) அவ்வாறு நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பிணை யென்று கூறிய வார்த்தைகளை அங்கு கூடி நின்ற மானின் கூட்டங்க ளியாவும் தங்களின் காதுகளினாற் கேள்வி யுற்று மூங்கிலைக் கொண்ட அக்கானகத்தில் மனப்பதறுத லுடன் துணுக்குதலடைந்து நிற்கத், தனது துணையென்று கூறுநிற்கும் ஆண்மானின் சரீரமானது வாடிப் பெருமூச்சு விட்டு உதவியைச் செய்யும் வண்ணம் சமீபித்துப் பார்த்து அப் பெண்மானின் துன்பங்க ளியாவையும் ஆற்றுவதற்கு ஆரம்பித்தது. (௫௩)

மாறுகொண் டவர்கை தப்பி வந்தமா னினத்தின் சாதி
கோறலை விரும்பி முன்னு நரர்கையிற் கூடிற் றுண்டோ
வேறுரை பகரேல் பார்ப்பை வெறுத்துமுன் னினத்தை நீத்து
மீறெனப் போதல் வேண்டா மெனுமுறை யியம்பிற் றன்றே.

(இ-ள்.) அன்றியும், விரோதத்தைக் கொண்டவர்களான அந்த மாந்தர்களின் கையில் நின்றுந்தவறிவந்த மான்கூட்டத்தினது சாதியானதுகொல்லுதலை ஆசித்து ஆதியிலும் நரர்களாகிய அம்மானுஷீகரின்கரத்திற் போய்ச் சேர்ந்த துளதா? இல்லையே! நீ வேறுவிதமான வார்த்தைகளைப் பேசக்கூடாது. உனது குட்டியை வெறுத்தும் கூட்டத்தை யொழித்தும் நமக்கு இதுவே முடிவென்று போக வேண்டாமென்னும் சமாச்சாரத்தைக் கூறிற்று. (௫௪)

இணைத்தென்னைப் பிணித்த வேட னிதயத்துக் கியையப்பேசிப்
பிணைத்தன்னைப் பொருத்தி நின்றோர் பெரியவன் றாத ரிந்தத்
திணைத்தலத் தறிவி லாத சேதனச் சாதி யன்றே
யணைத்துயி ரனைத்துங் காத்தற் கவரல தில்லை யன்றே.

(இ-ள்.) அவ்வாறு கூற என்னைச் சேர்த்துக் கட்டிய அந்த வேட்டுவனது மனசுக்குப் பொருந்தும் வண்ணம் வார்த்தைகளை

யாடித் தங்களைப் பிணையாகப் பொருந்தச் செய்து நின்றவர்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்த லென்னும் ஐந்திணைகளையுடைய இந்தப் பூலோகத்தின்கண் அறிவில்லாத உணர்ச்சியைக் கொண்ட சாதியானவரல்லர். யாவற்றிற்கும் பெரியவனான ஜல்ல ஜலாலகுவத்த ஆலாவின் றசூலாகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் ஜீவராசிக ளெல்லாவற்றையும் அணைத்துக்காப்பதற்கு அவர்களல்லாமல் வேறேயொருவரு மில்லர்.

என்னுயி ரதனை வேட னிரும்பசிக் கியைய வீந்து
நந்நபி பிணையை மீட்ப நன்மனம் பொருந்தி லேனாற்
பொன்னுல கிழந்து தீயு நரகினிற் புகுவ தல்லாற்
பின்னொரு கதியு முண்டோ பிழையன்றிப் பெருமையன்றே.

(இ-ள்.) அன்றியும், எனது ஜீவனை அந்த வேட்டுவனது பெரியபசிக் காகப் பொருந்தும்படி கொடுத்து நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் பிணையை மீட்பதற்கு நன்மையைக் கொண்ட மனமானது பொருந்தாமலிருப்பேனானால் சொர்க்க லோகத்தையு மிழந்து தீயாநிற்கும் நரகலோகத்திற் போய்ச் சேர்வ தல்லாமற் பின்னே ஒரு பேறுமுளதா? இல்லை! பிழையே யல்லாது பெருமையு மல்ல. (ருகூ)

சிறப்புடைக் குரிசின் முன்னஞ் செப்பிய மாற்ற மாறி
மறப்பொடு மிருந்தே னாகில் வரிப்புலி யினத்தின் வாய்ப்பட்'
டிறப்பதே சரத மல்லா லிருப்பதற் கிடமற் றுண்டோ
வுறப்பெரும் விருப்ப மேன்மே லிருத்தலை யொழித்தல்வேண்டும்.

(இ-ள்.) அன்றியும், சிறப்பை யுடையகுரிசிலான நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் முன்னர் கூறிய வார்த்தைகளை மாறி மறதியுடன் இருந்துவிட்டேனேயானால் இரேகைகளைக் கொண்ட புலியினது இனத்தின் வாயிலகப்பட்டு இறந்து போவதே சத்தியம் அல்லாது இவ்வுலகத்தின்கண் ஜீவித்திருப்பதற்குஇடமுள்ளதா? இல்லை! இந்தப் பூமியின்கண் மேலும்! மேலும்!! தங்கி யிருக்கும் பெரிய விருப்பம் இருப்பதை மாற்றுதல் வேண்டும்.

நதியிடை பெருக்கின் முன்னோர் நவ்விபி னடகது நாளின்
மதியிலி பொருத்தன் வள்ளன் முகம்மதின் வசன மாறிப்
புதியவன் னீரு ளாழ்ந்து நொடியினில் வீழ்ந்து போய
வதிசய முலகில் விண்ணி லியாவரே யறிகி லாதார்.

(இ-ள்.) அன்றியும், முன்னர் ஆற்றின்கண் ஜலப் பிரவாகத்தில் ஒப்பற்ற மானினது பின்னல் நடக்கும் நாளில், அறிவற்றவனான ஒருவன் வள்ளலாகிய நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் வார்த்தைகளை மாறி கொடி நோத்தில் புதுமையைக் கொண்ட நல்ல தண்ணீரில் விழுந்து அமிழ்ந்து இறந்து போன ஆச்சரியத்தை இப் பூலோகத்திலும் வான லோகத்திலும் அறியாதவர்கள் யாவர்? ஒருவரு மில்லர். (ருஅ)

ஈதெலா மறிந்து மென்னை யிவணிடை யிருத்தல் வேண்டி
யோதுதல் பழுதென் றோதி யுழைபின மனைத்துந் தேற்றிக்
காதலிற் கலையைப் போற்றிக் கன்றினை யதன்பாற் சேர்த்திப்
பேதற லெனப்பா லூட்டி யெழுந்தது பிணையு மன்றே.

(இ-ள்.) இவைக ளியாவையு முணர்ந்தும் என்னை இவ்விடத்தின்கண் இருக்க வேண்டிச் சொல்லுதல் குற்றமென்று கூறி மான் கூட்டங்க ளெல்லாவற்றையும் தேறும்படி செய்து அன்பைக் கொண்ட ஆண் மானைத் துதித்துக் குட்டியை அதனோடு சேர்த்து உங்களின் புத்தியானது மயங்க வேண்டா மென்று கூறிக் குட்டிக்கு அமுதமுண்பித்து அந்தப் பெண் மானும் எழும்பிற்று. (ருகூ)

இனத்தினை விடுத்து நீங்கி யிருங்களிப் பிதயம் பூப்ப
வனத்தினி லேகுங் காலை மறிமுன மறிப்பச் சீறிச்
சினத்தது தடுப்ப வோடிச் செவ்விமான் முகத்தை நோக்கி
யினித்தவாய் புற்றீண்டாத விளமறி யுரைக்குமன்றே.

(இ-ள்.) அவ்வாறு தனது கூட்டத்தை விட்டு மகன்று பெரிய சந்தோஷ மானது மனதின்கண் உண்டாகும் வண்ணம் கானகத்தினிடத்துச் சொல்லுகின்ற சமயத்தில் கன்றானது முன்னே மறிக்கப் அப்பெண்மான் சீற்ற முற்றுக் கோபித்து அக்கன்றைத் தடுக்க, இனிக்கப்பெற்ற வாயினாற் புல்லைத் தொடாத இளமறி யாகிய அக்கன்றானது ஓடி அழகிய அப்பெண் மானின் வதனத்தைப்பார்த்துச் சொல்லத்தொடங்கியது. (சுo)

மாதவம் பெற்று நின்போன் முகம்மது நபிதஞ் செய்ய
பாதபங் கயத்தைக் கண்டு பரிவுட னீமான் கொண்டு

போதலே யன்றி நின்னைப் புறத்தினி லகற்றி வாழே
னீதுமுத் திரையென் ருேதி யெழுந்துமுன் குதித்த தன்றே.

(இ-ள்.) உன்னைப் போலும் மகத்தாகிய தவத்தைப் பெற்று நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் செவந்த சரணங்களான தாமரை மலரைப்பார்த்து அன் போடும் ஈமான் கொண்டு போவதே யல்லாமல் உன்னைப் பக்கத்தில் நீக்கி விட்டு நான் உயிர்வைத்து வாழமாட்டேன். இஃது முத்திரை யென்று கூறி எழும்பி முன்னே சாடிற்று. (௬௪)

இறையவன் றூதைக் கண்ட வதிசய மிதுகொ லென்ன
மறிமன மறுகிலாது வதைதனைப் பொருந்திச் சேற
லிறுதியற் றின்ப நம்பா லெய்துமென் றகத்தி னெண்ணிச்
செறிவனங் கடந்து வேடன் றிசைதனை யடுத்ததன்றே.

(இ-ள்.) அவ்வாறு இஃது இறைவனுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதுவர் நாயகம் நபி காத்திமுல் அம்பியா முகம் மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைப் பார்த்த ஆச்சரியமென்று தனது குட்டியின் மனமானது மறுகாது கொலை யைச் சம்மதித்துச் செல்லுவதினல் நம்மிடத்தில் இன்பமானது முடிவற்று வந்து சேருமென்று மனசின்கண் நினைத்துநெருங்கிய கானகத்தைத் தாண்டி அவ் வேட்டுவனது திசையைச் சமீபித்தது.

குருளையும் பிணையுங் கூடி வருவது குறித்து நோக்கி
முருகலர் புயத்தார் வள்ளல் முகம்மது மகிழ்ந்தன் பாக
விருளுறு மனத்தனுன வேடனை யினிது கூவி [ரால்.
யொருபிணைக் கிரண்டுன் பாலில் வருவதென்று றுரைத்திட்டா

(இ-ள்.) அப்போது வாசனையைக் கொண்ட புஷ்ப மாலையைத் தாங்கிய தோள்களையுடைய வள்ளலான நமது நாயகம் எம்மறைக் கும் தாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வ சல்ல மவர்கள் குட்டியும் அப்பெண் மானும் தம்மிற் கூடி வருவ தைக் குறிப்பாய்ப் பார்த்துச் சந்தோஷித்து அந்தகார மமைந்த அகத்தை யுடையவனுகிய அந்த வேட்டுவனை அன்பாக இனிமையு டன் அழைத்து உன்னிடத்தில் ஒரு மானுக்கு இரண்டுமான் வரு கின்றனவென்று கூறினுர்கள். (௬௫

அன்னது கேட்டு வேட னேக்கியன் புற்ற காலை
முன்னிய கன்று மானு முகம்மதி னடியிற் ருழ்ந்து
பன்னிய சலாமுங் கூறிப் பாவியெற் காக வேட்டு
மன்னிய பிணையை மீட்டு மெனுமுறை வழங்கிற் றன்றே.

(இ-ள்.) அவர்கள் அவ்விதம் கூற அவ்வேட்டுவன் அந்தவார்த்தைகளைத் தனது காதுகளினுற் கேள்வி யுற்றுப் பார்த்து நேசமடைந்த சமயத்தில், நினையாநிற்கும் அக்குட்டியும் மானும் நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பாதங்களில் பணிந்து ஓதுகின்ற சலாமும் சொல்லிப் பாவியாகிய எனக்காக விரும்பிப் பொருந்திய தங்களின் பிணையை மீட்டிக் கொள்ளுங்க ளென்னும் வார்த்தைகளைக் கூறிற்று. (௬௪)

மாடுறைந் திலைவமான் கூற முகம்மது நபியுப் விற்கை
வேடனை விளித்து நந்தம் பிணையினை விடுத்து நின்றன்
பீடுடை பசியை மாற்றிப் பெரும்பதிக் கடைக வென்ருர்
வீடுபெற் றுயர்ந்து வாழ்ந்தே னெனமலர்ப்பதத்தின் வீழ்ந்தான்.

(இ-ள்.) அந்தமானுனது பக்கத்தில் தங்கி இவைகளைச் சொல்ல நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் வில்லைத் தாங்கிய கையையுடைய அந்த வேட்டுவனை யழைத்து நமது பிணையைத் தள்ளி உனது துன்பத்தைக் கொண்ட பசியை நீக்கிப் பெருமையை யுடைய ஊருக்குப் போயச் சேர்வாயாகவென்று சொன்னார்கள். உடனே அவன் நான் சொர்க்க லோகத்தைப்பெற்று மேன்மை யுற்றுவாழ்ந்தேனென்றுசொல்லி அந்நபிகட் பெருமானின் தாமரை மலரை யொத்த திருவடிகளில் வீழ்ந்தான். ()

பாதபங் கயத்தைப் போற்றிப் பருவர லகற்றி யாதி
தூதுவ ரிவரே யல்லா லிலையென மனத்திற் றூக்கி
வேதநா யகமே யென்பால் விருப்புருங் கலிமாத் தன்னை
யோதுமென் றிருகை யேந்தி யுவந்துநின் றுரைப்பதானுன்.

(இ-ள்.) அவ்வாறு பாதங்க ளாகிய தாமரை மலரைத் துதித்துத் தனதுதுன்பங்களை யொழித்து யாவற்றிற்கும்முதன்மைய னுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவர் இந்த முகம்மதென்பவரே யல்லாமல் வேறு ஒருவரு மில்ல ரென்று மனசின்கண் சிந்தித்து நான்கு வேதங்களுக்கும் நாயக மாகிய நபிகட் பெருமானே! என திடத்

திற் ஆசை பொருந்திய உங்களது கலிமாவை ஓதுங்க வென்று விருப்புற்று இரண்டு கைகளையு முயர்த்தி நின்று கூறலானன். ()

கருமுகிற் கவிகை வேந்தே கானக வேட னென்னு
முருவினன் விலங்கோ டொப்பே னுள்ளறி வுணர்வு மில்லேன்
றெருளுறப் பாவி யென்னைத் தீனிலைக் குரிய னென்னப்
பெரிதளித் திடுநல் நூந்தம் பெருமையிற் பெருமை யென்றான்.

(இ-ள்.) அன்றியும், கரிய மேகக் குடையினது அரச ராகிய முகம்மதென்னும் திருநாமத்தை யுடைய நபிகள் நாயகமே கானகத்தினது வேட்டுவ னென்னும் வடிவத்தையுடையவனும், மிருகங்களுக்கு நிகராகப் பட்டவனும், மனசின்கண் அறிவாகிய உணர் வில்லாதவனும் பாவியு மாகிய என்னைத் தெருட்சி யுறும் வண்ணம் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்திற்கு உரிமையனென்று சொல்லப் பெருமை பேடும் புரப்பது உங்களது பெருமையிற் பெருமை யென்று கூறினன். (கூஎ)

மதிமுக மகிழ்ச்சி கூர முகம்மது கலிமாச் சொல்ல
விதயமுற் றோதி வேட னினிதினி னீமான் கொண்டு
புதியனை வணங்கிச் செய்யுஞ் செய்தொழில் பொருந்தக் கேட்டு
நிதிமனைக் குரிய னாகித் தீனிலை நெறிநின் றானே.

(இ-ள்.) அவ்வாறு அந்த வேட்டுவன் கூற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் சந்திரனை நிகர்த்த முகத்தின் கண் சந்தோஷம் அதி கரிக்கும்படி ,,லாயிலாஹ இல்லல்லாகு முகம்மது றசூலுல்லாஹி,, என்னும் கலிமாவைச் சொல்ல வேட்டுவனும் தனது மன மானது பொருந்திச் சொல்லி இனிமை யுடன் ஈமான் கொண்டு புதிய ஆலத்தை யுடையவ னான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவைத் தொழுதுசெய்யா நிற்கும்நித்தியச் செயல்களைப்பொருந்தும் வண்ணம்கேட்டுச் சொர்க்கலோகத்திற்கு உரியவனாய்த் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையினது ஒழுங்கில் நின்றனன். (கூஅ)

பெறுகதி நின்னாற் பெற்றேன் பெரும்பவங் களைந்தேன் மாறாத்
தெறுகொலை விளைத்து முன்னஞ் செய்தொழி றவிழ்த்தே னீயு
மறுகலை பெறிந்து தேறு மனக்கலை யொடுகன் றோடு
முறுகலை யிடத்திற் போய்ச்சேர்ந் தொழுகலை முயல்கி யென்றான்.

(இ-ள்.) அவ்விதம் நின்ற வேட்டுவன் அந்த மானைப் பார்த்து நான் உன்னால் பெருநிற்கும் மோட்சத்தை பெற்றுக் கொண்டேன். என பெரிய பாவத்தை இல்லாமற் செய்தேன். ஆகிபில் நீங்காத நெருங்கிய கொலையை விளைத்துச் செய்கின்ற தொழில்களையும் ஒழித்தேன். நீயும் உனது மறுகுகலை வீசி விட்டுத் தேறுகின்ற மனசினது பிரகாசத்தோடும் குட்டியோடும் பொருந்தி ஆண்மானிடத்திற் சென்று சேர்ந்து நடப்பதை முயல்வாயாகவென்று கூறினான். ()

வானவர் பரவுங் கோமான் முகம்மது மானை நோக்கிக்
கானகஞ் சென்னீ யென்றார் கமலமென் பதத்திற் றாழ்ந்து
தீனிலைக் குரிய வேடன் றன்னையுந் திருந்தப் போற்றி
மானிலம் புகலப் பாரி னடங்கினஞ் சேர்ந்த தன்றே.

(இ-ள்.) தேவர்க ளாகிய மலாயிக்கத்து மார்கள் வணங்கா நிற்கும் கோமானுகிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் அந்த மானைப் பார்த்து நீ காட்டினிடத்துச் செல்லுவாயாக வென்று சொன்னார்கள். உடனே அவர்களின் தாமரை மலரை யொத்த மெல்லிய பாதங்களிற் பணிந்து தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்திற் குரிய வேட்டுவனையும் செவ்வையாய்த் துதித்து நெய்தல், மருதம், குறிஞ்சி, முல்லை யென்னும் நான்கு நிலங்களையு முடைய இவ்வுலகமானது வாழ்த்தும் வண்ணம் பூமியின்கண் நடந்து தனது இனத்தைப் போய்ச் சேர்ந்தது. (எ0)

தேனைக்குங் குமங்கள் சிந்தச் செழித்ததிண் புயத்து வள்ளல்
கானைக்குவ் விடத்திற் காட்டுங் கமலமென் பதத்தைப் போற்றித்
தானைக்கும் பதிக்கு மிபானே தலைவனென் பவர்போல் வேடன்
மானைக்கொண் டுவரப் போயி மானைக்கொண் டகத்திற் புக்கான்.

(இ-ள்.) குங்குமப் புஷ்பங்களினு லான மாலைகள் நறவத்தைச் சொரியும்படி செழிப்புற்ற திண்ணிய தோள்களை யுடைய வள்ளலாகிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களது பூமியி னிடத்திற் பரிமளத்தைக் காட்டா நிற்கும் தாமரை மலரைப் போன்ற மெல்லிய சரணங்களைத் துதித்து நான் சேனைகளுக்கும்இவ் வுலகத்திற்கும்தலைமைத்தனத்தையுடையவ னென்று சொல்பவரைப் போலும் அவ் வேட்டுவன் அந்தமானைக் கொண்டு வரப்போய் ஈமானைக் கொண்டு தனது வீடடின்கண் போய்ச் சேர்ந்தான். (எக)

துடவைநன் மலரைத் தூற்றுந் தூய்நிழ லிடத்தை நீந்திப்
படர்முகிற் கவிகை யோங்கப் பாருள தெவையும் வாழ்த்த
வடவரை யனைய திண்டோள் வயவர்க ளினிது சூழக்
கடிமனை யிடத்திற் புக்கார் ஹபீபிற சூலு மன்றே.

(இ-ள்.) அன்றியும், ஹபீ பென்னுங்காரணப் பெயரை யுடைய நமது நாயகம் எம்மறைக்குந் தாயகம் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களும் சோலைக ளானவை நல்ல புஷ்பங்களைச் சொரியா நிற்கும் பரிசுத்த மான நிழலை யுடைய அவ்விடத்தை விட்டுந் தாண்டி விரிந்த மேகக் குடையானது ஓங்கவும், பூமியின் கண்ணுள்ள யாவும் துதிக்கவும், மகாமேருப் பருவதத்தை நிகர்த்த திண்ணிய புயங்களை யுடைய வீரர்களாகிய சகாபாக்கள் இனிமையுடன் சூழ்ந்து வரவும், காவலைக் கொண்ட தங்கள் மாளிகையின் கண் வந்து நுழைந்தார்கள். (எஉ)

மானுக்குப் பிணைநின்ற படலம்
முற்றிற்று.

ஆகப்படலம் ௰உ-க்குத் திருவிருத்தம்-அஅங.

ஈத்தங்குலை வரவழைத்த படலம்.

கலிவிருத்தம்.

சுருதியின் முறைவழித் துணைவர் சூழ்தரக்
கருமுகி னிழலொடுங் கருணை பொங்கிட
மருவுமெண் டிசைக்குமான் மதங்க மழ்ந்திட
விருநிலம் புகழ்நபி யிருக்கும் போதினில்.

(இ-ள்.) பெரிய இந்தப் பூலோக மானது துதியாநிற்கும் நபியாகிய நமது நாயகம் எம்மறைக்குந் தாயகம் காத்திமுல் அம்பியா

முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள்புறு க்கானுல் அலீ மென்னும் வேதத்தினது முறைமையான மார்க்கத் துணைவர்க ளாகிய சஹாப் பாக்கள் சூழவும், கரிய நிறத்தைக்கொண் டமேகக் குடையினது நிழலுடன் காருண்ணியம் அதிகரிக்கவும், கஸ்தூரி வாசனை யானது பொருந்திய எட்டுத் திக்குகளிலும் கமழ வும், இருக்குங்காலத்தில். (க)

காலினிற் கபுசுவோர் கையிற் குந்தமு
மேலிடுஞ் சட்டையும் விசித்த கச்சையுந்
தோலொரு தோளினுந் தூக்கி வந்தவ
னலகந் நபிதமை யடுத்து நோக்கினன்.

(இ-ள்.) பாதங்களில் கபு சென்று கூறுநிற்கும் பாதரட்சையும் ஒரு கையின்கண் ஜட்டியும், சரீரத்தின்கண் இட்டிராநின்ற அங்கி யும், அரையின்கண் கட்டிய கச்சையும், ஒரு தோளின்கண் பரிசை யும், தூக்கிக் கொண்டு வந்தவனான ஓர் அறபி ஆல நபியாகிய நமது நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல் லாகு அலைகி வசல்ல மவர்களைச் சமீபித்துப் பார்த்தான். (உ)

தரியலர்க் கன்புறுஞ் சார்பி னன்மறைக்
குருநெறி முகம்மதைக் குறித்தெ திர்ந்துநீ
ரிருநிலத் தெவரென வியம்பி னன்பர
ருரநெரிந் திடச்செவி யுளுக்குஞ் சொல்லினல்.

(இ-ள்.) அவ்விதம் பார்த்துப் பகைவர்களின் மார்பானது நெரி யும் வண்ணம் காதுகள் உளுக்குப் போகின்றவார்த்தையினல் அந்த அறபிச் சத்துராதிகளுக்கு அன்பு பொருந்தும் சார்பினல் புறுக்கா னுல் அலீ மென்னும் வேதத்தை யுடைய குருமார்க்கத்தைக்கொண் ட நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவச ல்ல மவர்களைக் குறிப் பிட்டு எதிர்ந்து பெரிய இந்தப் பூமியின்கண் நீவிர் யாவரென்று வினவினன். (௩)

அச்சமொன் றின்றிநின் றறபி கூறலும்
வச்சிரப் புயமுகம் மதுதம் வாய்திறந்
திச்சகம் புகழ்தனி யிறைவன் றூதியா
னிச்சய மிதுவென நிகழ்த்தி னாரோ,

(இ-ள்.) அந்த அறபியானவன் அவ்வாறு ஒரு பயமுமில்லாமல் நின்று வினவுதலும்; வச்சிரத்தை நிகர்த்த தோள்களை யுடைய நமது நாயகம் நபிமுகம்மது முஷ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் வாயைத் திறந்து நான் இந்த வுலக மானது துதியாகிற்கும் ஒப்பற்ற இறைவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் தூதாகிய றசூல் இஃது உண்மை யென்று கூறினார்கள். (ச)

ஆதிதன் றூதென வறிவ தற்கரும்
பூதலத் தென்மனம் பொருந்தி யன்பொடுஞ்
சாதமுற் றிடப்பெருஞ் சாட்சி யாமெனுங்
கோதறு குறிப்பெவை கூறுவீ ரென்றான்.

(இ-ள்.) அவ்விதம் கூறவே அதற்கு அறபிநீவிர்யாவற்றிற்கும் முதன்மையனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதாகிய றசூலென்று உணர்வதற்கு அருமையான இந்தப்பூமியின்கண்எனது இருதயமானது சம்மதித்து அன்புடன் உண்மையைப் பொருந்தும் வண்மைம்பெரிய சாட்சியா மென்னுங் குற்ற மற்ற குறிப்புயாவை ? அவற்றைக் கூறுவீராகவென்று கேட்டான். (ரு)

காரணக் கரியுனக் கியையக் காண்கிலென்
றூரணத் துறுங்கலி மாவை யன்பொடும்
பூரண மனத்தொடும் புகல்வை யோவெனச்
சீர்தரு மமுதமாய் திறந்து செப்பினர்.

(இ-ள்.) அவன் அவ்விதம் கேட்க உனக்குக் காரணத்தைக் கொண்ட சாட்சியைப் பொருந்தும்படி பார்த்தால் எனது புறுக்கானில் அலீ மென்னும் வேதத்திற் சார்ந்த கலிமாவை அன்போடும் நிறைவாகிய மனதோடும் கூறுவாயா? என்று தங்களின் சிறப்பைப் பெற்ற அமுத வாயைத் திறந்து கேட்டார்கள். (சா)

அவனியி லெவர்க்குநன் கறிய வென்மனக்
கவரறக் காரணக் கரியுண் டாமெனி
னபியுமை யலதிலை யென்ன நன்பொடும்
பவமற நும்வழிப் படுவ னியானென்றான்.

(இ-ள்.) இந்தப்பூலோகத்தின்கண் யாவர்களும் நல்ல அறியவும் எனது இருதயத்தின் கவரறவும் காரணத்தைக் கொண்ட சாட்சியா

உண்டுமே யானுல் உம்மை யல்லாது வேறே நபி யில்லையென்று நன் போடும் எனது பாவங்களானவை அற்றுப்போகும்படி நான் உமது மார்க்கத்தி லுட்படுவேனென்று கூறினன். (எ)

நிலத்தினில் விண்ணினீ டிசைக்கு ணின்மன
நலத்தது கரியெவை நாட்டு வாயெனக்
குலத்துறு முகம்மது கூறக் கேட்டுநற்
சிலைத்தழும் பிருந்ததோ ளறபி செப்புவான்.

(இ-ள்) நற்குலத்திற் பொருந்திய நாயகம் நபிமுகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இப்பூலோகத்திலும் வானலோகத்திலும் நீட்சியுற்ற எண்டிசைகளுக்குள்ளும் உனது இருதயத்திற்கு நன்மையை யுடையதான சாட்சியானது யாவை? அவற்றை எடுத்து இங்கு நாட்டிக் கூறுவாயாக வென்று சொல்ல, நல்ல வில்லினது தழும்பானது இருக்கப்பெற்றதோள்களையுடைய அறபி தனது காதுகளினுற் கேள்வியுற்றுக் கூறுவான். (அ)

இருவருக் கெதிர்தா நின்ற வீந்ததின்
விரிதலைக் குலைமலர் வீழ்ந்தி டாதிவண்
வரவழைத் திடுவிரேன் மனமும் வாக்குமொத்
தருமறை மொழிவழி யாவ னியானென்முன்.

(இ-ள்.) நம் மிருவருக்கும் எதிராக நிற்கப்பெற்ற விரிந்த தலையையுடைய இந்த ஈத்தமரத்தின் ஈத்தங்குலையைப் புஷ்பங்கள் கீழே விழாமல் இவ்விடத்திற்கு வரும்படி செய்வீரேயானுல் நான் மனமும் வாக்கு மொத்து அருமையான உமது புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது வார்த்தைகளின் வழியி லாகிப் போவேனென்று கூறினன். (கூ)

ஈந்தினை நோக்கிநின் றிறைவன் றூதுவர்
வாய்ந்தநின் கொலையிவண் வருக வேண்டுமென்
ருய்ந்தநன் மறைதெரி யமுத நற்கனி
யேந்தவாக் கினைத்திறந் தியம்பி னாரோ.

(இ-ள்.) இறைவனை ஜல்லஜ லாலகுவத்த ஆலாவின் தூதுவராகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்த ஈத்தமரத்தைப்பார்த்து நின்றுகொண்டு சிறந்த

உனது குலையானது இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று ஆராயப் பெற்ற நன்மை தங்கிய வேதங்களைத் தெரிந்த அமுதத்தையும் நல்ல கனியையும் நிகர்த்த வாக்கையுடைய வாயைத் திறந்து கூறினார்கள். (ய)

ஆதிதன் றூதுவ ரறையக் கேட்டலுஞ்
சோதிவெண் குறுத்தொடுந் தோன்ற மேலெழுந்
தேதினுஞ் சிதைகிலா திழிழ்ந்து மாநில
மீதினில் விரிதலை விளங்கி நின்றதே,

(இ-ள்.) யாவற்றிற்கும் முதன்மையனான ஜல்ல ஷகுனகுவத்த ஆலாவின் தூதுவாகிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு கூறக்கேட்ட மாத்திரத்தில் அந்த ஈத்தமரமானது பிரகாசத்தைக்கொண்ட வெள்ளிய குருத்தோடும் விளங்கும்வண்ணம் மேலோங்கி யாதிலும் சிதை வடையாது இறங்கி மகத்தாகிய இந்தப் பூமியின்மீதில் விரிந்ததலையானது விளக்கமுற்று நின்றது. (கக)

விரிதலைத் தருவடி நின்ற மென்குலைப்
பரிவொடும் பயப்பயக் குதித்துப் பாரிடை
யிருவிழி தெரிபவ ரெவர்க்கு மின்புறத்
திருமுகம் மதுமுனஞ் சிறந்து நின்றதே.

(இ-ள்.) அன்றியும்,விரிந்த தலையையுடைய அந்த வீத்தமரத்தின் உச்சியில் நிற்கப்பெற்ற மெல்லிய ஈத்தங்குலையானது அன்போடும் மெல்லமெல்லச் சாடி வந்து இந்தப் பூமியின்கண் இரண்டு கண்களும் தெரிவோர்களாகிய யாவர்களும் இன்பமடையும்படி தெய்வீகந் தங்கிய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் முன்னர் சிறப்புற்று நின்றது. (கஉ)

அந்தர விரிதலைக் கமைந்த பூங்குலை
யிந்தமா நிலத்திடை யிறங்கி யிவ்வுழை
வந்ததிற் புதுமையு மறுத்துண் டோவெனச்
சிந்தையுற் றறபிநந் நபியைச் சிந்தித்தான்.

(இ-ள்.) அப்பொழுது அந்த அறபி யானவன் ஆகாயத்தினிடத்து விரிந்த சிரத்தைக்கொண்ட ஈத்தமரத்தில் அமைந்த புஷ்பங்களையுடைய அழகிய குலையானது மகத்தாகிய இந்தப்பூமின் கண்

ணிறங்கி இவ்விடத்தில் வந்ததைப் பார்க்கிலும் ஆச்சரிய மானது வேறே யுளதா? இல்லையென்று தனதுமன தின்கண்பொருந்தி நமது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம வர்களை நினைத்தான். (கங)

படித்தலம் புகழ்நபி பாதம் போற்றிநின்
றடிக்கடி புதுமையுற் றறபி யீங்கின
திடத்தினிற் குலைபொறுந் திடச்செய் வீரெனத்
திடத்தொடும் பயத்தொடுஞ் செப்பி னனரோ.

(இள்.) அன்றியும், அந்த அறபியானவன் இப் பூலோகமானது புகழாநிற்கும் நபியாகிய நபிகட்பெருமான் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைசிவசல்லமவர்களின் திருவடிகளை அடிக்கடி துதித்து நின்று ஆச்சரிய மடைந்து இந்த ஈத்தங் குலையை ஈத்த மரத்தின்கண் பொருந்தும்வண்ணம் செய்வீர்களாக வென்று தைரியத்தோடும் அச்சத்தோடும் கூறினன். (கச)

மழைமுகிற் கவிகையின் வள்ள னன்கெனக்
குழைதரும் விரிதலைக் குலையைப் பார்த்துநின்
னுழையினிற் செல்கென வுரைப் வோடிமுற்
புழைவழி நுழைந்தது பொருந்தி நின்றதே.

(இ-ள்.) அறபியானவன் அவ்வாறுகூற மழையைப் பொழியா நிற்கும் மேகக்குடையினது வள்ளலான நாயகம் ஹபிபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நல்லதென்று தளிர்களைத் தராநிற்கும் விரிந்த தலையையுடைய அந்த ஈத்தமரத்தினது குலையைநோக்கி நீஉன்னிருப்பிடத்திற் செல்வாயாகவென்று சொல்ல, அக் குலையானது ஓடி முன்னருள்ளபுழையினது நெறியிற் புகுந்து சேர்ந்து நின்றது. (கரு)

மேதையச் சமுமுள விலங்கி னயதோர்
சாதியன் றீதொரு தருமுன் ஞந்தலும்
போதலும் படைத்தவர் புதிய நாயகன்
றாதுவ ருண்மையென் றடியைச் சூடினன்.

(இ-ள்.) அவ்வாறு நிற்க, இஃது அறிவையும் அச்சத்தையுமுடைய மிருகங்களிலான ஒரு சாதி யல்ல; ஒருமரம், இஃதை முன்னே வரவும் போகவும் செய்தவர்கள் புதியஆலத்தையுடைய நாயக

ஞகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவினது சத்தியத்தைக்கொ ண்ட றசூல் தாமென்று அந் நபிகட் பெருமானவர்களின் பாதங்களை த் தனது சிரசின்கண் அணிந்தான். (கசு)

பாதபங் கயமலர் சிரசிற் பற்றிநின்
ஞுதியிற் சொலுங்கலி பாவை யன்பொடு
மோதினன் றெளிந்தன னுரிய நாயகன்
றூதுவர்க் கிவனொரு துணைவ னயினன்.

(இ-ள்.) ஆவ்வாறு அவர்களின் பாதங்களாகிய தாமரைமலரை த் தனது தலையிற் கொண்டு நின்று முதலில் கூறும் "லாயிலாஹஇல் லல்லாகு முகம்மதுர் றசூல் லுல்லாஹி" யென்னுங் கலிமாவை அன் புடன் ஓதி அதைத் தெளிந்தறிந்து உரிமையான நாயகனகிய அல் லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவர் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு இந்தஅறபி ஒப்பற்ற துணைவனயினன். (கஎ)

ஈத்தங்குலை வரவழைத்தபடலம்.

முற்றிற்று.

ஆ படலம்-ம்கூ-க்குத்-திருவிருத்தம்-கூ00.

ஒப்பெழுதித் தீர்ந்த படலம்.

கலிவிருத்தம்.

பரிவுறு நபியெனும் பட்ட மாகிய
வருடமே ழினிற்றின முஹற்ற மாத்தையிற்
றெரிதரும் பிறைமுத லிரவிற் சேரலர்க்
குரியவர் குறைஷிக ளொருங்கு கூடினர்.

(இ-ள்.) அன்பைப் பொருந்திய நபி யென்னும் பட்டமானது ஆகப்பெற்ற ஏழாவது வருடத்தின் முஹர்ற மாதத்தில் சந்திரன னது தோற்றுநிற்கும் முதற்றின இரவில் சத்துராதிகட்குச் சொந் தப்பட்டவர்களான குறைஷிக் காபிர்கள் ஒன்று சேர்ந்தார்கள். (க)

கறைகெழு மனக்கொடுங் காபிராகிய
குறைஷியந் தலைவர்கள் பலருங் கூட்டமிட்
டறபிக டம்முட னுய்ந்து வாய்மையான்
முறைதவ றிடுமொரு கரும முன்னினர்

(இ-ள்.) களங்க மானது நிறையப்பெற்ற இருதயத்தையுடைய கொடிய காபிர்களான அழகிய குறைஷித் தலைவர்கள் பலரும் அவ்வாறு கூட்ட மிட்டு மற்றும் அறபிகளுடன் ஆராய்ந்து தங்களின் வலிமையினுல் ஒழுங்கு தப்பிய ஒரு காரியத்தை நினைத்தார்கள். (உ)

ஹாஷிமுத் தலிபென வடுத்துக் கூடிய
மாசறு மிருகுலத் தவரின் வாணிகம்
பேசுதம் சம்பந்தம் பிறவு நீக்கிவிட்
டேசறு சாதியின் விலக்கிட் டாரரோ.

(இ-ள்.) அவ்விதம் நினைத்த அவர்கள் குற்ற மற்ற ஹாஷிம், முத்தலி பென்று நெருங்கிக் கூடிய இரண்டு குடும்பத்தார்களின் வியாபாரத்தையும், பேசுதலேயும், சம்பந்தத்தையும், மற்றவைகளையும் ஒழித்து விட்டுக் களங்க மற்ற சாதியினது விலக்கு வைத்தார்கள்.

நெருப்புநீ ரிவைமுத லீக்கி நீணிலத்
திருப்பவ ரெவருமங் கவர்க்கி டங்கொடா
துருப்பமோ டிகல்வதே யெவர்க்கு மூழென
வரைப்புற வொருமுறி வரைந்திட் டார்களால்.

(இ-ள்.) அன்றியும், அக்கினி, தண்ணீராகிய இவை முதலானவைகளை யொழித்து நீண்ட இந்தப் பூமியின்கண் இருக்கப்பட்டவர்கள் யாவர்களும் அந்த இரு குடும்பத்தார்களுக்கும் இடங்கொடாது கோபத் தோடும் அடர்வதே யாவர்கட்கும் முறைமை யென்று எல்லையுற ஒரு சீட்டு எழுதினுர்கள். (௪)

சாதியின் விலக்கெனத் தவறி லாதெடுத்
தோதிய வொப்பெனு முறியை யூரவர்
மாதிர மடர்கரு பாவியின் வாயிலிற்
றாதரு மறியவென் றெடுத்துத் தூக்கினர்.

(இ-ள்.) அம் மக்கமா நகரத்தை யுடையவர்கள் அவ்வாறு சாதியின் விலக் கென்று தவறுது எடுத்துக் கூறிய ஒப்பென்னும் அர்

தச் சிட்டை மலைகளையும் அடரா நிற்கும் கஃபத் துல்லாவின் வாயி னில் தூதர்களும் அறிய வென்று சொல்லி எடுத்துத் தொங்க விட் டார்கள். (ரு)

கொடுமனக் குறைஷியங் காபிர் கூடியப்
படிநடத் திடுமந்நாட் பலன்கொண் மாமறை
பிடிபடுந் தீனவ ரியாரும் பேதுறு
துடலுயி ரெனவுவந் தொருங்கு கூடினர்.

(இ-ள்.) கொடிய இருதயத்தை யுடைய அழகிய குறைஷிக் காபிர்கள் ஒன்று சேர்ந்து அவ்வாறு நடத்தாநிற்கும் அந்தநாளில், பிரயோசனத்தைக் கொண்ட மகத்தாகிய புறுக்கானுல் அலீ மென்னும் வேதமானது பிடிபடுகின்ற தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தையுடையவர்கள் யாவர்களும் தங்களின்புத்தியானது மயக்கமடையாது உடலையும் உயிரையும் போல விருப்ப முற்று ஒன்று சேர்ந்தார்கள். (சா)

தெரிதருந் தீனெறி யவருஞ் சேர்தரு
மிருவகைக் கிளைஞரு மிசைந்த பேர்களுந்
தருவெனத் தருமபித் தாலிப் தம்புய
வரையென வளைந்தவர் வாழு நாளினில்.

(இ-ள்.) விளங்காநிற்கும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தையுடையவர்களும், பொருந்திய ஹாஷீம், முத்தலி பென்னும் இரு வகைக் குலத்தார்களும், மற்றுஞ் சேர்ந்தபேர்களும், கற்பகத் தருவைப் போலும் கொடுக்கின்ற அபீத்தாலி பென்பவரின் தோள்களாகிய மலைகளை யொப்பச் சூழ்ந்து அவர்கள் வாழும் நாளில் (எ)

போதலர் மதினமா புரத்தி னுடோறுங்
கோதுறு தவுசெனுங் கூட்டத் தார்கட்குங்
காதிய ஹசுறசு கிளைக்குங் கட்டறு
தோதிய பெரும்பகை யொழிந்த தில்லையால்

(இ-ள்.) புஷ்பங்க ளானவை மலரா நிற்கும் மதினமா நகரத்தில் பிரதி தினமும் வலிமை யறுது களங்கமற்ற அவு செனுங் கூட்டத்தார்களுக்கும், கொலைத் தொழிலைக்கொண்ட ஹசுறசுக் கூட்டத்தார்களுக்கும் கூறப் பெற்ற பெரிய பகைமை யானது ஒழியவில்லை.

இசையுநூற் றிருபது வருட மும்ஹசு
றசுவெனுங் கூட்டத்தா ரமைத்த வெற்றியே

திசைபுகழ்ந் தனஅவு சென்னுந் திண்மையோர்
விஷயமோ ராண்டினும் வேய்ந்த தில்லையால்.

(இ-ள்.) பொருந்தாநிற்கும் நூற்றிருபது வருஷங்களும் ஹசு றசு வென்னும் கூட்டத் தவர்கள் பொருத்தியவிஜயத்தையேஎண்டி சைகளுந் துதித்தன. அவு சென்று கூறும் வலிமையை யுடையவர் களான கூட்டத்தார்கள் ஒரு வருட மாயினும் வெற்றியை யடைந்த வர்க ளல்லர். (கூ)

இந்தவல் வினையின விடைந்தவ் வௌசுளர்
தந்தம ரொடும்பலர் தனித்து சாவியே
சிந்தையிற் றெளிவொடுந் தெரிந்து பார்த்துநன்
மந்திர மீதென வகுத்துக் காட்டியே.

(இ-ள்.) இந்தக் கொடிய வினையினால் அந்த அவு சென்னுங் கூட்டத்தார்கள் வருந்தித் தமது பந்துக்களோடும் அனேகர் ஏகமாய் உசாவி மனசின்கண் தெளிவுடன் உணர்ந்து நோக்கி இஃது நல்ல மந்திர மென்று வகுத்து யாவர்கட்குங் காட்டி (க0)

மக்கமா நகருறை மன்னவர் தம்மைநம்
மொக்கலி னின்புற வுவந்து சேர்த்துவந்
திக்கணம் ஹசுறசை யெதிர்வ தல்லது
புக்கிட மிலையெனப் பொருந்தக் கூறினர்.

(இ-ள்.) திரு மக்கமா நகரத்தின்கண் தங்கிய அரசர்களை இச்சு ணம் நமது கிளையில் இனிமை பொருந்தும் வண்ணம் விருப்புற்றுச் சேர்த்துக் கொண்டு வந்து ஹசுறசு என்னுங் கூட்டத்தாரை எதிர் வதே யல்லாமல் நமக்கு வேறே புகு மிட மில்லை யென்று அமையும் படி கூறினர்கள். (கக)

பெறுமுறை யீதெனப் பேசி நால்வரைத்
திறனெடுஞ் சேகாஞ் செய்து வம்மெனக்
குறைவற வரிசையுங் கொடுத்த யாசினை
யறமெனு மக்கமா நகர்க்க னுப்பினர்.

(இ-ள்.) நாம் வெற்றியை யடையும் ஒழுங் கானது இஃதென்று கூறி நான்கு மனிதர்களைத் திறத்தோடும் சேகாஞ் செய்துவாருங்க ளென் றழைத்து யாதொரு குறைவு மில்லாது வரிசைகளுங்கொடுத்

து அயா சென்பவரைப் புண்ணிய தல மென்னுந் திரு மக்கமா நக ரத்திற்கு அனுப்பினர்கள், (கஉ)

பெருகிய கிளேபவு சென்னும் பெற்றியோர்
வரவிடுத் தவர்சிலர் மக்க மீதினி
லரிதின்வந் தனரென வறிந்து நங்நபி
பரிவுட னெழுந்தவர் பாலி னேகினர்

(இ ள்.) நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம்நபிகட் பெருமானர் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பெருக்க முற்ற குலத்தினைக் கொண்ட அவு சென்று கூறுநிற்கும் தன்மையை யுடையவர்கள் அனுப்பிபவர்க ளாகிய சில ஜனங்கள் மக்கமா நகரத்தின்கண் அரிதில் வந்து சேர்ந்தார்க ளென்று தெரிந்து அன்போடு மெழும்பி அவர்க ளிடத்திற்குச்சென்றார்கள்

அங்குறைந் தவரகத் தன்பு கூர்தரப்
பொங்கிய சிலமொழி புகன்று பின்னரு
மெங்கினுந் தீன்படர்ந் தேற நன்மறை
தங்கிய நாவினு லெடுத்துச் சாற்றுவார்

(இ-ள்.) அவ்வாறு சென்று அவ் விடத்தில் தங்கி அவர்களின் இரு தயத்தில் அன் பானது அதிகரிக்கும் படி ஓங்கிய சில வார்த்தைகளைக் கூறிப் பின்னரும் எவ் விடத்தும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க மானது படர்த லுற்று வளரும் வண்ணம் நன்மைபொருந்திய புறுக்கானுல் அலீ மென்னும் வேத வசனம் தங்கப் பெற்ற தங்களின் நாவினுல் எடுத்துக் கூறுவார்கள். (கச)

பற்றல ரிடாடப் படர்ந்திவ் வூரினி
லுற்றநீ ருள்ளிவந் ததனி னேங்கிடும்
பெற்றியுண் டெனதுரை பெற்றி ரேற்பெரும்
வெற்றியுண் டுமெதிடத் தெனவி ளம்பினர்.

(இ-ள்.) சத்துராதிகளின் துன்ப மானது மேற்கொள்ளும் வண்ணம் பரப் புற்று இந்த மக்கமா நகரத்தின் கண் அடைந்த நீர் நினைத்து வந்த அக் காரிய மானது வளர்ச்சி யுறும் தன்மை யுள்ளது. எனது வார்த்தைகளைக் கொள் வீர்களே யானுற் உங்க ளிடத்தில் பெரிய விஜயமு முள்ளது. என்று கூறினர்கள். (கரு)

வள்ளலிவ் வுரைதர மதீன மாநக
ருள்ளவ ருள்ளகத் துவகை யூர்தர
வின்னுறுங் கருத்தென வினவ நன்மொழி
தெள்ளிய மதுரவாய் திறந்து செப்பினர்

(இ-ள்.) வள்ள லாகிய நபிகட் பெருமானர் நபி முகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் இந்த வார்த்தைகளைச் சொல்ல, மதீனமா நகரத்தி லுள்ளவர்க ளான அவர்கள் தங்களின் மனசின்கண் சந்தோஷ மானது பரவும் வண்ணம் உங்களின் கருத்தைக் கூறுவீர்களாக வென்று கேட்க, நன்மை பொருந்திய வார்த்தைகளைக் கொண்ட தெள்ளிய இனிய வாயைத் திறந்து கூறுவார்கள். (கசு)

அரியவ னருளினு லமரர் கோனெனக்
கிருநிலத் தினிநபி யென்னும் பேர்கொடுத்
துரியவே தமீனி துதவி நன்னெறி
வரிசைநேர் வணக்கமும் வகுத்துப் போயினர்.

(இ-ள்.) அரியவ னுன ஹக்கு சுபுகான குவத்த ஆலாவினதுகாருண்ணியத்தினுல் தேவாதிப ராசிய ஜபுறயீ லலைகிஸ்ஸலா மவர்கள் பெரிய இந்தப் பூலோகத்தின்கண் எனக்கு நபி யென்னும் அபிதானத்தைக் கொடுத்து இனிமையுடன் உரிமையானபுறுக்கானுல்அலீமென்னும் வேதத்தையு மீந்து நல்ல சன்மார்க்கத்தினதுவரிசையைக்கொண்ட ஒழுங் காகிய தொழுகையையும் வகுத்து விட்டு வானலோகம் போய்ச்சேர்ந்தார்கள். (கஎ)

அகமகிழ்ந் திம்மொழி யனைத்தும் வேறிதென்
றிகழ்விலா துண்மையென் றிசைந்து நீவிர்யான்
புகழ்கலி மாநெறி பொருந்தி னீரெனிற்
பகையறும் வெற்றியும் படரு மென்றரோ.

(இ-ள்.) நீங்கள் மனக் களிப் படைந்து இந்த வார்த்தைகளியாவும் வேறென நிந்தனை யிற்லாது சத்திய மென்று பொருந்திநான்துதிக்கின்ற கலிமாவினது மார்க்கத்தில் சேர்ந்தீர்களே யானல் உங்களின் பகை யானது அற்றுப் போகும்விஜபமும்படராநிற்குமென்று

நறைகமழ் முகம்மதாண் டுரைத்த நன்மொழி
திறனயா சறிந்துளந் தேறித் தன்வயி

னுறைபவர்க் கணிபெற வோதி வேண்டுவ
பிறிதினி லிலையினி யெனவும் பேசினர்.

(இ-ள்.) கஸ்தூரி வாசனை கமழப் பெற்ற நாயகம் ஹபீபு றப்பி ல் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அங்கு கூறிய நல்ல வார்த்தைகளை வலிமையை யுடைய அபா செனப்பவ ருணர்ந்து மனசின்கண் தேற்ற முற்றுத் தன் னிடத்தில் தங்கி யிருக்கப் பட்டவர்களுக்கு அவற்றை அழகு பெறக் கூறி இனி வேண்டுவ தான அன்னிய சிந்தனை யாதொன்று மில்லை யென்றும் கூறினர் (கக)

நன்பதந் தரும்புகழ் நபியைப் போற்றியா
னென்பதி புகுந்தெமர்க் கியம்பி யொல்லையி
னின்பதம் வாநிலை நிறுத்து வேனென
வன்புற வுரைத்தெழுந் தயாசு போயினர்.

(இ-ள்.) அபா செனப்பவர் நன்மை பொருந்திய மோட்ச பதத்தைத் தராநிற்கும் கீர்த்தியை யுடைய நபிகட் பெருமானர் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களைத் துதித்து நான் எனது ஊராகிய மதீனமா நகரத்தில் போய் நுழைந்து என் பந்து ஜனங்களுக்குச் சொல்லி விரைவில் அவர்களை உங்க ளிடத்திற்கு வரும் வண்ணம் சீர்ப்படுத்துவேனென்று ஆசை யுறக் கூறி எழும்பிப் போனர். (உ0)

தடங்கிகழ் மதீனமா நகரைச் சார்ந்தினத்
துடனபி யுரைத்தவை யுரைப்பக் கேட்டவர்
திடம்பெற விஃதுநன் றென்னச் சிந்தையி
னிடம்பெறக் களிப்பொடு மிருக்குங் காலையில்.

(இ-ள்.) அவ்வாறு போன அவர் வாவிக ளானவை பிரகாசியா நிற்கும் திரு மதீனமா நகரத்தை யடைந்து தமது கூட்டத்தார்களோடு நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் கூறிய வார்த்தைகளைக் கூற, அவர்கள் அதைத் தங்களின் காது களினுற் கேள்வி யுற்றுத் திடங் கொள்ள இஃது நல்லதென்று மனசின்கண் இடம் பெறும் வண்ணம் மகிழ்ச்சி யோடும் இருக்கின்ற சமயத்தில். (உக)

கொடுஞ்சிலே ஹசுறசு வென்னுங் கூட்டத்தா
ரிடும்பகை யுடனிவ ரெதிர்ந்து தாக்கலும்
விடும்பரி படைக்கலம் வீழ்த்திக் காறளர்ந்
தடும்படை யொடுமுறிந் தவதி யாயினர்.

(இ-ள்.) கொடிய கோதண்டத்தை யுடைய ஹசுறசு வென்னுங் கூட்டத்தார்கள் இடாநிற்கும் பகைமையோடும் இவர்கள் எதிர்த்துத் தாக்கிய மாத்திரத்தில் அவர்கள் விடுகின்ற குதிரைகளையும் ஆயுதங்களையும் பூமியில் வீழ்த்தி விட்டுக் கால்கள் தளர்ச்சி யுற்று மேற்கொண்ட சேனை யோடும் முறிந்து வருத்த மானார்கள். (உஉ)

பாடினில் ஹசுறசு படையெ லாமுறிந்
தோடின ரவுசெனுங் கூட்டத் தோர்க்கெனப்
பீடுடைப் பெரும்புகழ் பெருகிச் சூழ்திசை
நாடடங் கலுந்தெரி தரக டந்ததே.

(இ-ள்.) அவ்விதம் வருத்தமாய் அவு செனுங் கூட்டத்தார்களுக்கு ஹசுறசு வென்னும் கூட்டத்தார்களின் சேனைக ளியாவும் துன்பத்தினாற் றோல்வி யுற்று ஓடினார்க ளென்றுபெருமையையுடைடபெரிய கீர்த்தி யானது அதிகப்பட்டு வளைந்த எண் டிசைகளிலு முள்ள நாடுக ளெல்லாவற்றிலும் தெரியும்படி சென்றது. (உங)

நபிதமைக் கண்டுரை நடத்தி வெற்றியும்
புவியினிற் பெற்றனம் பொருந்தி னேமெனி
லெவர்நமக் கெதிரவர்க் கியைவ தேயென
அவுசெனும் பெருங்குலத் தவர்கள் கூறினர்.

(இ-ள்.) அன்றியும், அவுசென்று கூறாநிற்கும் பெரிய கூட்டத்தார்கள் நாயகம் நபிகட் பெருமானார் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களைப் பார்த்து வார்த்தைக ளாடி இந்தப் பூலோகத்தின்கண்விஜயத்தையும் பெற்றோம். அந்நபிக ணயக மவர்களுக்குச் சம்மதிப் போமே யானல் நமக்குச் சத்துராதி யாகப் பொருந்துவோர் யாவர்? ஒருவரு மில்லரென்று சொன்னார்கள். (உச)

முகம்மதின் தீனிலே வழிசெல் வோமென
வகமகிழ்ந் தவுசினத் தவர்கள் கூறலும்
புகழொடு மறுவர்க ளெழுந்து பொன்னில
நகரெனு மக்கமா நகரை நண்ணினர்.

(இ-ள்.) அன்றியும், அவு செனும் கூட்டத்தார்கள் நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையினது நெறியிற் போகுவோ மென்று மனக்களிப் படைந்து சொல்லியமாத்திரத்தில் கீர்த்தி யோடும் ஆறுபேர்க ளெழும்பிச் சொர்க்க லோகப் பதி யென்று கூறுநிற்கும் திரு மக்கமா நகரத்தைப் போயடுத்தார்கள். (உரு)

மறுவறு மவுசெனுங் குலத்து மன்னவ
ரறுவரு நபிபத மடுத்துச் செவ்வியி
னுறுகலி மாவெடுத் தோதி யன்பரா
யெறுழ்வலி யொடுமிசு லாத்தி லாயினர்.

(இ-ள்.) களங்க மற்ற அவுசென்று கூறும் கூட்டத்து அரசர்களான அந்த ஆறு பேர்களும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் திருவடிகளைச்சமீபித்து அழகினுற் பொருந்திய "லாயிலாஹ இல்லாஹு முஹம்மதுர் றசூலுல் லாஹி" யென்னும் கலிமாவை எடுத்துக் கூறி அன்பராய் மிகுத்த வலிமை யோடும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தி லானார்கள்.

வாருதி யெனவரு மதீன மென்னுமவ்
வூரவர் நமக்குயிர்த் துணைவ ராகிய
பேரெனப் படைத்தனம் பெரிய னுலென
வேர்பெற நபிமன மகிழ்ந்தி ருந்தனர்,

(இ-ள்.) நமது நாயகம் எம்மறைக்குந் தாயகம் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் சமுத்திரத்தைப் போலும் வராநிற்கும் திரு மதீன மென்று கூறும் அந்நகரத் தவர்களை நமக்கு உயிரை நிகர்த்த தோழர்க ளெனப்பெரியவ னுன ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவினுற் சம்பாதித்தோ மென்று அழகு பொருந்தக் களிப்புற் றிருந்தார்கள். (உஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பின்னுதிரைக் கடனிலத்தில் விளங்குபுக
ழுசைனயினர் பெரும்பே றுன
மன்னவர்மன் னபுல்காசி மனத்தினுநா
வினுமறவா திருத்தி வாழ்த்து

மின்ன விர்செம் மலர்ப்பதத்தான் முகம்மதுதம்
பெருமறைத்தீன் வேர்விட் டோடி
யெங்கிலமு மிசுலாத்தின் கொழுந்துபல
படர்ந்தேறி யிலங்கிற் றன்றே.

(இ-ள்.) பின்னிய அலைகளின் சமுத்திரத்தைக் கொண்ட இந்தப் பூலோகத்தின்கண் விளங்கிய கீர்த்தியை யுடையஉசைன் நயினரென்பவரின் பெரிய பேருன இராஜாதிராஜனுகிய இந் நூலினது உதார நாயகன் அபுல் காசி மென்பவனின் இருதயத்தின் கண்ணும் நாவின் கண்ணும் மறவாது இருக்கும்படிசெய்து துதியாநிற்கும்பிரகாச மானது ஒளிர்கின்றசெவந்த தாமரை மலர்போலும் திருவடிகளினது நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் பெருமை தங்கிய புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது தீனுனது எவ்விடங்களிலும்தனது வேரை விட்டோடி இஸ்லாம் மார்க்கத்தினது பல கொழுந்துகளைப்பரப்பி ஓங்குதலுற்று இலங்கிற்று. (உஅ)

உலகடங்கத் தனியரசு செலுத்தும் பெரி
யவனருளா லுயர்வா னீந்தி
யலகில்கதிர்ச் சிறைச்சபுற யீலகும
துறைந்தகுவ டடுத்தன் பாக
விலகுகலி மாவோதி மணித்துகில்செங்
கரத்திருத்தி வேத மீந்து
பலரறிய நபியெனும்பேர் பரித்தாண்டு
மிருநான்கும் படரு நாளில்.

(இ-ள்.) எல்லா வுலகங்களும் அடங்கும் வண்ணம் ஒப்பற்ற அரசு செலுத்தும் பெரியவ னுன ஜல்ல ஜலாலகு வத்த ஆலாவின் கிருபையினுல் கணக் கற்ற பிரகாசத்தைக்கொண்ட சிறகுகளை யுடைய ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்கள் உயர்ந்த வான லோகத்தை விட்டும் நீந்தி அஹம தென்னும் திரு நாமத்தை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்கியமலையை நெருங்கி அன்பாய் ஒளிராநிற்கும் லாயிலாஹ இல்லல்லாகு முஹமதுர் றசூலுல்லாஹி யென்னும் கலிமா வாகியவேத வசனத்தைக் கூறிச் சிறந்த வஸ்திரத்தை நாயக மவர்களின் செந் நிற மமைந்த கைகளி லிருக்கச் செய்துபுறுக்கானுல் அலீமென்னும் வேதத்தைக்

கொடுத்துப் பல ஜனங்களும் அறியும் வண்ணம் நபி யென்னும் அபி தானத்தைத் தரிப்பித்து எட்டு வருடங்களும் சென்ற காலத்தில்.()

இறுமிகட்கும் பாரிசுநாட்டவர்க்கும்பெரும்
பகையாக விருந்தவ் வாண்டு
மறமுதிர்ந்து பாரிசவர் வெற்றிகொண்டா
ரெனும்வசன மக்க மீதி
லுறையும்பெருங் குபிரவர்கேட்டுடற்பூரித்
திசுலாத்தி லுற்ற பேரைத்
திறனடுத்த தெமர்க்கிழிந்த சிதைவடுத்த
துமர்க்கெனவுஞ் செப்பி னுரால்

(இ-ள்.) றூமிகட்கும் பாரிசுநாட்டையுடையவர்களுக்கும் பெரிபபகைமைபாக இருந்து அவ்வருடத்தில் கொடுமைமுதிர்ந்த பாரிசுநாட்டை யுடையவர்கள் விஜபத்தைக் கொண்டார்களென்னும் வார்த்தைகளைத் திரு மக்கமா நகரத்தின்கண் தங்கியிருக்கும் பெரியகாபிர்கள் கேள்வியுற்றுத் தங்களின் சரீரமானது பருக்கப் பெற்றுத்தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தி லடைந்த ஜனங்களை எம் மவர்களுக்குமேன்மை யான வெற்றி வந் தடுத்தது உம் மவர்களுக்குத்தாழ்மையாகியசிதை வானதுவந் தடுத்ததுஎன்றுங் கூறினர்கள். (௬0)

தருவைநிகர் முகம்மதுநன் னபியுரைத்தா
ருறூமிகடஞ் சமர்க்காற் றுது
வெருவியிரு நிலத்தோடிப் பாரிசற
முறியுமென விரித்த வாய்மை
யொருபொழுதும் பழுதாகா தென்னவபூ
பக்கரெடுத் துரைப்பக் கேட்டே
யிருமையினும் பலனறியா னிபுனுகல
பெனுமவன்வந் தெதிர்ந்து சொல்வான்

(இ-ள்.) அவ்வாறு கூறக் கற்பகச் சோலையை நிகர்த்தநல்ல நபியாகிய நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பெரிய இந்தப் பூமியினிடத்தில்உறூமிக ளினதுயுத்தத்திற்குப் பாரிசு நாட்டை யுடையவர்களின் சேனையானது ஆற்றுமற்பயந்து ஓடி முழுவதும் தோற்றுப் போகுமென்று கூறினர்கள். அப்

படி விரித்துக் கூறிய வசனங்கள் ஒரு காலத்தும் தப்பாகா தென்று அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் எடுத்துச் சொல்ல, இம்மை, மறுமை யென்னும் இரண்டிலும் பப மறிபாதவனுனஇபுனு கல பென்று கூறுபவன் தனது காதுகளினுற் கேள்வியுற்று வந்து எதிர்த்துக் கூறுவான். (௩௧)

எங்கள்குலத் தவருரையே பழுதாகிப்
பாரிசவ ரிரிந்தா ரென்னி
லுங்கடமக் கருள்வேனு ரொட்டகையீ
தொட்டமென வுரைப்ப நோக்கி
யெங்கணபி முன்னுரைத்த வுரைதவறி
யுறாமிகள்போ ரிடைந்தா ரென்னி
லுங்கடமக் களித்தலஃ தென்னவபூ
பக்கரெடுத் தோதி னுரால்.

(இ-ள்.) எங்கள் கூட்டத்தார்களின் வார்த்தைகள் தப்பாய்ப்பாரிசு நாட்டை யுடையவர்கள் தோற்று ஓடினுர்களென்று கூறினுல் நான் உங்களுக்கு நூறு ஒட்டகங்கள் தருவேன் இஃது பந்தயமென்று சொல்ல அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் பார்த்து எங்களது நபி யாகிய நபிகட் பெருமானுர் நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லம்வர்கள் ஆதியிற்கூறிய வார்த்தைக ளானவைத்வறுதலுற்று உறாமிகள்யுத்தத்தில்தோற்று ஓடினுர்க ளென்று கூறினுல் யான் உங்களுக்குத் தருவது அந்த நூறு ஒட்டகங்க ளென்று எடுத்துச் சொன்னுர்கள். (௩௨)

இருவருஞ்சம் மதித்திகலி யொட்டியவொட்
டகத்தினெடு மிருக்கு நாளி
லொரு கவிகை நிலவவுறு மிகளடர்ந்து
பாரிசவ ருடைந்தா ரென்னப்
பெரிதுமொழி யவரவர்கேட் டிபுனுகல
புடனுரைப்பப் பெரிதி னீந்தா
னருவரைநே ரொட்டகநூ றடலரியே
றென்னுமபூ பக்கர்க் கன்றே.

(இ-ள்.) இரண்டு பேர்களும் அவ்வாறு விரோதித்துச்சம்மதங்கொண்டு பொருந்திய ஒட்டகத்துடன் இருக்கின்ற நாளில், ஒப்பற்ற சந்திர வட்டக் குடையானதுபிரகாசிக்கும்வண்ணம்உறாமிகள் அட

ர்த லுற்றுப் பாரிசு நாட்டை யுடையவர்கள் தோற்று ரென்று பெரியவார்த்தைகளை அவ ரவர்கள் தங்களின் காதுகளினுற் கேள்வி யுற்று இபுனுகல பென்பவனோடு கூற, அவன் அரிய மலைகளைப் போலும் நூறு ஒட்டகங்களைப் பெருமையுடன் வலிமையைக் கொண்ட சிங்க மென்று கூறுநிற்கும் அபூபக்கர் சித்தீகு றலி யல்லாகு அன்கு அவர்களுக்குக் கொடுத்தான். (கூக)

ஒட்டிபொட்டம் பலித்தவொட்டக் திரளொடும்வந்
துயருமபூ பக்க ரோங்கி
மட்டவிழ்திண் புயக்குரியின் முகம்மதுதம்
முனம்விடுப்ப மகிழ்ந்து நோக்கிக்
கட்டியபொன் மதிட்ககுபா நகரிடைவெங்
குபிரர்மனங் கருகி வாட
விட்டமுடன் சதக்காவென் றிரப்போர்க்கும்
வறிஞோர்க்கு மீந்திட் டாரால்

(இ-ள்.) அவ்வாறு அவன் கொடுக்கவே ஓங்காநிற்கும் அபூபக்கர் சித்தீகு றலி யல்லாகு அன்கு அவர்கள் பந்தயத்தைப் பொருத்திப் பலிக்கப் பெற்ற அவ் வொட்டகக் கூட்டத் தோடும் வந்துதேனுனது அதிகரிந்துச் சிந்துகின்ற திண்ணிப தோள்களை யுடைய குரிசி லாகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் முன்னர் விடுக்க, அவர்கள் களிப்படைந்துபார்த்துப் பொன்னினுற் கட்டப் பெற்ற மதில்களை யுடைய கஃபத்துல்லாவி னிடத்து பட்டணத்தின் கண்ணுள்ள கொடிய காபிர்களின் இருதய மானது தீய்ந்து மெலி வடையும் வண்ணம் இஷ்டமுடன் சதக்கா வென்று சொல்லி இரக்கப் பட்டவர்களுக்கும் தாரித்திரர்களுக்கும் கொடுத்தார்கள். (கூச)

அன்பரா முகம்மதுவுக் கரியநபிப்
பெயர் வானோர்க் கரச ரீந்த
வொன்பதாம் வருடம்வரை யளவுமுயர்
ககுபாவி னெருங்கு தாக்கி
வன்பரா கியகுரைஷிக் காபிரிடு
மொப்புமுறி வசன மியாவு
மின்புறு நின்றுசித லரித்ததெனப்
பெரியதந்தைக் கியம்பி னுரால்,

(இ-ள்,) அன்பாகிய நாயகம் நபிகட்பெருமானார் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அருமையான நபி யென்னும் அபிதானத்தைத் தேவ ராதிபராகிய ஜபுறயீலலைகிஸ்ஸலா மவர்கள் கொடுத்த ஒன்பதாவது வருடத்தில் அவர்கள் கொடியவம்பன குறைஷிக் காபிர்கள் மலையி னளவைப் போலும் உயர்ச்சிதங்கிய கஃபத்துல்லாவில் ஒருங்கு தூக்கி யிடாநிற்கும் ஒப்பைக்கொண்ட முறிபின துவார்த்தைகளனைத்தையும் சிதல்களானவை இன்பமுற்று நின்று அரித்துப் போட்டதென்று தங்களின் பெரிய தந்தையாகிய அபீத்தாலி பென்பவருக்குக் கூறினார்கள்.

அரசரட லரியகும துரைத்தமொழி
யபித்தாலி பகத்தி னோர்ந்து
கரிசமிடுங் குலக்காபிர்க் குரைப்பவதி
லைவர்மனக் கறுப்பு நீக்கி
விரைவினொடு மொப்புமுறி தனைக்கிழிப்ப
வரும்போது வெகுண்டு கூறி
யெரியிடைநெய் யிட்டதெனச் சிலகாபிர்
தடுப்பமன மியைந்தி லாரே.

(இ-ள்.) அரசர்களாகிய யானைகளுக்கு வலிமையைக் கொண்டசிங்கத்திற்கு நிகரான அஹ்மதென்னும் திருநாமத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு கூறிய வார்த்தைகளை அபீத்தாலி பென்பவர் தமதுசிந்தையின்கண் ணறிந்து கரிசமிடாநிற்குங் குலத்தினது காபிர்களுக்குக் கூற அதில் ஐந்து காபிர்கள் தங்களின் இருதயத்தினது கறுப்பை யொழித்துச் சீக்கிரமாய் அந்த ஒப்புமுறியைக் கிழிக்கும் வண்ணம் வருகின்ற சமயத்தில், சில காபிர்கள் கோபித்துப் பேசி நெருப் பிடத்து நெய்யை இட்டதைப்போன்று தடுக்க அதற்கு அவர்கள் மனம் பொருந்திலர்கள். (௩௬)

சாதிவிலக் கொப்புமுறி பரிகரிக்கும்
வார்த்தைசெவி தடவக் கேட்டுக்
காதியெழுந் தபூஜகல்கண் செவந்துமனங்
கறுத்துமுகங் கடுத்து நோக்கி.

மோதுதலுங் கேளாது கருபாவிற்
  றாக்கிவைத்த முறியை வாங்கிப்
பேதமறம் பார்ப்பளவின் முன்னெழுது
  மெழுத்திலொன்றும் பெற்றி ராதே.

(இ-ள்.) அன்றியும், சாதியினது விலக்கைக்கொண்ட அந்த ஒப்பு முறியை நீக்காநிற்கும் வார்த்தைகளைக் காதுகளில் தடவும்படி கேள்வியுற்றுக் கொலைத் தொழிலை யுடையவனான அபூஜகி லென்பவ னெழும்பி இரு கண்களுஞ் செவக்கப்பெற்று மனமானது கறுத்து முகம் கடுத்துப்பார்த்து மோதுதலையும் கேளாமல் கஃபத் துல்லாவிற்றாக்கி வைத்திருந்த அந்த முறியை வாங்கிப் பேதமறும் வண்ணம் பார்த்தமாத்திரத்தில் ஆதியில் எழுதிய எழுத்தில் ஒரெழுத்தையேனும் அந்த முறியானது பெற்றிருக்கவில்லை (௯எ)

அல்லலறச் சிறந்தவரி யல்லாவென்
  றொருபெயரி னளவே யன்றி
யில்லையெழுத் தினியிதனு லிருந்துபல
  னென்னெனவு மெழுது நாளிற்
பல்லருட னியான்பொருந்த லிலையெனவு
  மெடுத்தோதிப் பலருங் காண
வொல்லையினிற் கிழித்தெறிந்தான் சாதிவிலக்
  கெனும்பெயர்விட் டோடிற் றன்றே.

(இ-ள்.) அன்றியும், துன்பமறும் வண்ணம் சிறப்புத் தங்கிய வரியான "அல்லா" வென்னும் ஒரு நாமத்தி னளவே யல்லாமல் வேறே எழுத்துகள் ஒன்று மில்லை. இனி இதனுல் இருந்து பிரயோசனம் என்ன? ஒன்றுமில்லையென்றும் இந்த முறியை எழுதுகின்ற தினத்தில் அநேகரோடு நான் சம்மத மில்லையென்றும், எடுத்துக் கூறிப் பல பேர்களும் பார்க்கும்படி விரைவிற் கிழித்து வீசினன். சாதி விலக்கு என்று கூறும் அபிதான மானது அவ் விடத்தை விட்டு மோடிற்று. (௯அ)

இன்னிசைநன் மறைமுகம்ம திருங்கவிமாத்
  தனைவிளக்கி யிருந்தோர்க் கெல்லா
மன்னமருந் திடநீருப் பங்கியளி
  யாதவரோ டடுத்தி டாமற்

சொன்னபடி சாதிவிலக் கொப்புமுறி
யெழுதினமன் சூறு வென்போன்
றன்னிருகை வழங்காமன் மாருத
பிணிபிடித்துத் தாழ்ந்திட் டானல்

(இ-ள்.) அன்றியும் இனிய இராகத்தைக்கொண்ட நல்ல புறங் காணுல் அலீ மென்னும் வேதத்தையுடைய நபிகட் பெருமானுர் ஹபீபு றப்பில் ஆலமீன் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்களின் பெரிய கலிமாவை விளங்குர்வண் ணஞ் செய்து இருந்தவர்களியாவர்கட்கும் அன்னமுண்ணுதற்குத் தண்ணீர், உப்பு, நெருப்பு ஆகிய இவைகளைக் கொடாது அவர்க ளோடு நெருங்காமற் கூறியபடி சாதி விலக்கினது ஒப்பு முறிபைவ ரைந்த மன்சூறு வென்பவன் தனது இரண்டு கைகளும் வழங்கப் பெறுமல் நீங்காத நோய் பிடித்துத் தாழ்ந்தான். (௩௧)

ஒப்பெழுதித் தீர்ந்த படலம்
முற்றிற்று.

ஆகபடலம் ௬௪-க்குத் திருவிருத்தம்-௩௩௩.

புத்து பேசிய படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிலத்தரசுக் கிதத்தநடுச் சிரத்தினணி
யெனச்சிறப்பு நிறைமக் காவிற்
குலத்தரச ரினிதுவப்பக் கலிமாவெண்
டிசைமுழுதுங் குலவி யோங்கச்
சிலத்தடக்கை வயவேந்த ரினிதுசூழ்ந்
திருக்குநபி செவ்வி நோக்கி
மலைத்தடத்திண் புயகுசைனு வெனுமறபி
மகிழ்விஞெடும் வந்துற் ருனே.

(இ-ள்.) பூமி யாகிய அரசனுக்கு இதத்தைக் கொண்ட நடுத் தலையினது மகுடத்தைப்போலும் சிறப்பானது பூரணப்பட்ட திரு மக்கமா நகரத்தில் மேன்மை யுடைய இராஜர்கள் இனிமை புடன்

விரும்பவும், கலிமாவானது எட்டுத் திக்குகளின் முழுவதிலும் பிரகாசித்து வளரவும், கோதண்டத்தைக் கொண்ட பெரிய கையினது விஜயத்தைப்பெற்ற அரசர்கள் இன்பத்தோடு விளங்கிருக்கும் நபிகட்பெருமான் நாயகம் எம் மறைக்குந் தாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் அழகைப் பார்த்து மலை போலும் விசாலமாகிய திண்ணிய தோள்களை யுடைய குசைனு வென்னும் அறபியானவன் களிப்போடும் வந்து சேர்ந்தான். (க)

எதிரடுத்த குசையினுக்கன் பருளினெடுங்
 காஞ்சாய்த்திட் டிருக்கை யீந்து
மதியினுமும் மறையினுந்தோந் தவரவர்கள்
 கருத்தறிய வல்லோய் நாளுங்
கதிதருமென் புறுக்கானின் வழியொழுகா
 திருந்ததென்னுன் கருத்தி னூடும்
பதிவுபெறக் கலிமாவை யுரையெனநந்
 நபியினிது பகர்ந்திட் டாரால்.

(இ-ள்.) அவ்வாறு வந்துசேர்ந்து தங்களுங்கு எதிராகநெருங்கிய குசைனு வென்னும் அந்த அறபிக்கு நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் தங்களின் கையைச் சரித்து அன்பினது கிருபையோடும் இருக்கை கொடுத்துப் புத்தியினாலும் முன்னுள்ள தௌறாத்து, இஞ்சீல், சபூறென்னும் மூன்று வேதங்களினாலும் தெளிந் துணர்ந்து அவ ரவர்களின் கருத்துகளை விளங்கும் வன்னம் வல்லமை யடைந்த குசைனுவே! பிரதிதினமும் மோட்சத்தைத் தராநிற்கும் எனது புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தில் வழிப்பட்டு நடவா திருந்த காரணம் யாது? உனது கருத்தினிடத்தும் பதிவு பெறும்படி கலிமாவைக் கூறுவாயாகவென்று இனிமையுடன் கூறினார்கள். (உ)

மானுரைத்த துடும்புரைத்த தமாவாசை
 யிடத்தினிறை மதிவந் தோடித்
தானுரைத்த தறியேனே வுமதுவழி
 படுமவர்க டமைக்கா னேனே

யானுரைப்ப திலேக்கலிமா விதயம்பொருந்
தாப்புகழ்நா வேற்று வேறே
தீனுரைத்த ஹபீபரசன் றடியினையோர்
வடிவாக்குஞ் செவ்வி யோயே.

(இ-ள்.) அவ்விதம் கூறத்தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தைப்புகன்ற ஹபீபரசனது அவயவங்க ளற்ற மாமிசத் தடியைப் பெண் சொரூபமாக்கும் அழகை யுடைய முகம்மதரே! தங்களுடன் மான் கூறியதையும் உடும்பு கூறியதையும், அமாவாசையி னிடத்தில் பூரணப்பட்ட சந்திரன் ஓடி வந்து கூறியதையும், யான் உணரேனு? உணருவேன். உங்களது மார்க்கத்தி லுட்பட்டவர்களைப் பாரேனு? பார்ப்பேன். ஆயினும் உங்கள் கலிமாவைக் கூறுவதில்லை எனது மனமானது இசையாத கீர்த்தியை நாவினுற் றுதிப்பேனு? துதிக்க மாட்டேனென்று சொன்னுன். (௱)

அனைத்தையுங்கா ரணமலவென் றகத்திருத்தி
வெறுத்தனையுள் ளருளி னேடு
மனைத்தலத்தோ ருருத்தனைநீ வணங்கினைபவ்
வுருத்திருந்த மணிவாய் விண்டு
கனைத்ததிரைக் கடனிலத்திற் பலர்புகழ
வுரைக்குரைகட் டுரைக்கு மேலியா
னினைத்தபடி கலிமாவை யுரைப்பையோ
வெனநபியு ரிக்ழ்த்தி னுரால்.

(இ-ள்.) நபிகட் பெருமானுர் நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களும் நீ அவ்வாறு யாவற்றையும் காரணமல்லவென்று இருதயத்தின்கண்ணிருக்கும்படி செய்து மறுத்தாய். உனது வீட்டினிடத்து மனக்கிருபை யோடும் ஒரு சொரூபமாகிய புத்துக்கானை வைத்துவணங்குகின்ருய். அந்தச் சொரூபமான புத்துக்கான் செவ்வையாய்த் தனது அழகிய வாயைத்திறந்து சத்திக்காநிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தினது இந்தப் பூமியின்கண் அனேகர் துதிக்கும் வண்ணம் வார்த்தைக்கு வார்த்தையுறுதியாகப் பேசுமேயானுல் நான் சிந்தித்தபடி கலிமாவைக் கூறுவாயா? வென்று கேட்டார்கள்.

நங்கபியின் றெறியுரைப்ப குசையினெனு
  மறபிசிறு நகையி னேடு
மென்னிடத்தி லாறுபத்தைந் தாண்டுவரை
  யிருந்துமன மினிது கூரச்
சொன்னதிலே யோர்மொழிமந் திரத்தடங்கித்
  தெய்வமுரை சொல்லு மோநீ
ருன்னியவா சகத்தினெடு முரைக்குமென
  வுரைப்பதென்கொ லுறுதித் தன்றே.

(இ-ள்.) நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் இவ்வொழுங்கைக்கூறக், குசையினென்னும் அவ்வறபியானவன் புன்சிரிப்போடும் அஃது என்னிடத்தில் அறுபத்தைந்து வருடங்கள் வரையிருந்தும் எனது இருதயமானது இன்பமடையும்படி ஒரு வார்த்தையாயினும் பேசின தில்லை. தெய்வமானது மந்திரத்தில் அமைந்து வார்த்தையாடுமா? ஆடாது. நீங்கள் எண்ணிய வாசகத்தோடும் பேசு மென்று பேசுவது என்ன வலிமையை யுடையது. (ரு)

பொன்னணிநன் மணிதூசு நறுமலர்கள்
  பலசொரிந்து புகழ்ந்திட்டேத்து
மென்னெடுரை யாதகுல தெய்வமும
  துரைக்குரைநேர்ந் தியம்பு மேயாற்
பன்னுமறை வழியொழுகிப் படிதீண்டா
  மலரடியைப் பரவி வாழ்த்தி
மன்னுமிசு லாமாகிக் குபிரகற்றித்
  தீனிலைமை வளர்ப்ப னென்றுன்.

(இ-ள்.) அன்றியும், பொன்னினுலான ஆபரணங்களும், நல்ல அழகிய வஸ்திரங்களும், பரிமளத்தைக் கொண்ட புஷ்பங்களும், பல சிந்தித் துதித்து வாழ்த்தும் என்னுடன் பேசாத மேன்மையை யுடைய அத்தெய்வ மானது உங்களது வார்த்தைகளுக்குப் பதில் வார்த்தைகள் நேர்ந்து பேசுமே யானுல் யான் கூறுகின்ற புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது மார்க்கத்தில் வழிப்பட்டு நடந்து பூமியைத் தொடாத உங்களின் தாமரை மலரைநிகர்த்த சரணங்களைப் புகழ்ந்து துதித்துப் பொருந்திய தீனுல் இஸ்லா மாகக் குபிர்

மார்க்கத்தையொழித்து அ,ந்தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை ஓங்கும் வண்ணஞ் செய்வே னென்று கூறினன். (௬)

திசைமுழுது மொருபுடையிற் கிட,ந்துங்கரு
முகிற்கவிகைச் செம்ம னேர்ந்த
குசையினை நின் மனைத்தலத்தி விருந்தவுரு
வெடுத்திவணிற் கொடுவா வென்ன
விசைதரும்வண் டிமிர்தொடையல் புரண்டசைய
வெழுந்துமனை யிடத்தி னேகி
வசையறுநன் மணிக்கலன்க ளொடுபலதூ
சணிந்துமலர் வணிந்திட் டானல்.

(இ-ள்.) எண்டிசைகள் முழுவதையும் ஒருபுடையிற் கிடக்கச்செய்யும் கரிய மேகக் கவிகையை யுடைய செம்மலான நமது நாயகம் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவ்வாறு உடன்பட்ட குசைனுவென்பவனை உனது வீட்டின்கண் ணிருக்கும் சொரூபமாகிய புத்துக்கானை எடுத்து இவ்விடத்தில் கொண்டு வருவாயாக வென்று கற்பிக்க, இராகத்தைக் தராநிற்கும் வண்டுகளானவை ஒலிக்கின்றமாலைகள் புரண்டு அசையும் வண்ணம் எழும்பி வீட்டின்கண் சென்று அப் புத்துகானுக்கு நிந்தை யற்ற நல்ல இரத்தின ஆபரணங்களுடன் பல வஸ்திரங்களைத் தரித்துப் புஷ்பங்களினுல் அலங்காரஞ் செய்தான். (எ)

விரைத்தழைகள் சுமத்திநறும் புகைகமழ்த்தி
விளங்குசெழுங் காத்தி லேந்தி
யுரத்தினணைத் தொருதுகில்கொண் டுறப்போற்றி
நடந்துமறு கூடு லாவி
வரைத்தடத்திண் புயத்துநறை கமழ்ந்தமுகம்
மதுதண்மதி வதன நேரா
யிருத்தியொரு பாலிருந்தான் மும்மறையுந்
தெரிந்துமனத் திருத்தி னேனே.

(இ-ள்.) அவ்வாறு செய்து முன்னுள்ள தௌறுத்து, இஞ்சீல் சபூறென்னும் மூன்று வேதங்களையும் அறிந்து இருதயத்தின் கண் இருக்கச் செய்தவனுன குசைனு வென்னும் அறபி யானவன்பரிமள

த்தைக் கொண்ட தளிர்களை அதன் மேற் சுமத்திவாசனையையுடைய தூமத்தைக் கமழப் பண்ணி விளங்குகின்ற செழிய கைகளிற் றாங்கி மார்போடு மணைத்து ஒரு வஸ்திரத்தைக் கொண்டுமுழுவதும்மூடித் தெருவின்கண் உலாவி நடந்துவந்து மலைகளைப் போலும் பெரிய வலிமை யமைந்த தோள்களினது வாசனை யானது கமழப் பெற்ற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் குளிர்ச்சி தங்கிய சந்திரனுக்கு நிகரான முகத்தினது நேராக இருத்தித் தானும் ஒரு பக்கத்தி லிருந்தான். (அ)

வைத்தபுத்தை முகநோக்கி யுனைவணங்கி
யிருந்தோன்றன் மனது கூர
வித்தலத்துள் ளோரறிய வெனதுவர
லாறுமெனக் கியைந்த பேரு
மெய்த்தவுரை மறைப்பேரும் விண்ணினுமண்
ணினுமறிய விளம்பு வாயென்
றுத்தமசற் குணநயினா ரமுதமலர்
வாய்திறந்தங் கோதி னாரால்.

(இ-ள்.) மேன்மை தங்கிய நல்ல குணத்தை யுடையநயினாரான நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்ல மவர்கள் அவ்வாறு வைத்த அந்தப் புத்துக்கானின்முகத்தைப் பார்த்து உன்னைப் பணிந்து இருந்தவனான குசையினென்னும் அற யினது மன மானது கூரவும்,இந்தப் பூமியின் கண்ணுள்ளவர்களுண ரவும், எனது வரலாற்றையும் எனக்குப் பொருந்திய அபிதானத்தை யும், அறியாதிற்கும் வசனங்களை யுடைய எனது வேதத்தினது நா மத்தையும், பூலோகத்தின் கண்ணும் வானலோகத்தின் கண்ணும் தெரியும் வண்ணம் கூறுவாயாக வென்று தங்களின் அமுதத்தைக் கொண்டதாமரை மலரைநிகர்த்த வாயைத்திறந்து அங்குகூறினார்கள்

வெண்ணிலவு துளித்தொழுகு மதிவதன
முகம்மதினை விளித்து நோக்கி
வண்ணமலர் வாய்திறந்து பெரியோன்றன்
திருத்தூதாய் வந்த கோவே

பண்ணருநன் மறைநபியே வானவர்பொன்
னடிபரவப் படியின் வந்தோ
யெண்ணரும்பே ரொளியுமும தொளியில்வரக்
கதிர்வடிவா யிருந்த வேந்தே.

(இ-ள்.) அவ்வாறு கூற அந்தப் புத்துகான் வெள்ளிய நிலவானது சொரிந்து ஒழுகாநிற்கும் சந்திரனை நிகர்த்த முகத்தையுடைய ஹபீபுறப்பீல் ஆலமீன் நபிமுகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை அழைத்துப்பார்த்து அழகிய தாமரை மலரை நிகர்த்த தனது வாயைத் திறந்து பெரியவனுன அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின் தெய்வீகந் தங்கிய றசூலாய் வந்த அரசரே! இராகத்தைக்கொண்ட அருமை யாகிய நல்ல வேதத்தினது நபியே! தேவர்களான மலாயிக்கத்துமார்கள் பொன்னைப்போலும் திருவடிகளை வணங்கும் வண்ணம் இந்தப் பூலோகத்தின்கண் வந்தவரே! நினைத்தற் கரிய பெரிய பிரகாசமும் உமது பிரகாசத்தில் நின்றும்வரும்படி சூரிய வடிவமாய் இருந்த இராஜரே. (௯௦)

அல்லாவின் றிருத்தூதர் வேதநபி
முகம்மதென வகத்திற் கொள்ளார்
பொல்லாத நரகடைவ ருமதடியிற்
பணிந்துகலி மாவைப் போற்றிச்
சொல்லார மனத்திருத்த வறிந்தவரே
சிறந்தபொருட் சுவன மாள்வா
ரெல்லாரு மெனைப்போல்வா ரறிவரிது
சாதமென வியப்பிற் றன்றே.

(இ-ள்.) உங்களை அல்லாகு சுபுகான குவத்த ஆலாவின் தெய்வீகந்தங்கிய றசூலான புறக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது நபி முகம்மதென்னும் திருநாமத்தையுடையவரென்று மனசின்கண் கொள்ளாதவர்கள் பொல்லாத நரக லோகத்திற் போய்ச் சேர்வார்கள். உங்களது பாதங்களில் தாழ்ந்து கலிமாவைத் துதித்து வாக்கார இருதயத்தின்கண் இருத்தத் தெரிந்தவர்களே சிறப்பைக் கொ

ண்ட வஸ்துக்களை யுடைய சுவர்க்க லோகத்தை யாள்வார்கள். என்னைப் போல்வா ராகிய எல்லா ஜனங்களும் அறியுதற் கரிது. இஃது சத்தியமென்று கூறிற்று. (கக)

புத்துரைத்த மொழிகேட்டு குசைனெனுமவ்
வறபியுடற் புளகத் தோடு
முத்தமணி யொளிமுகம்ம தடிபரவிக்
கலிமாவை முழங்க வோதிப்
பத்திபெறத் தொழுகைமுதற் படித்துத்தீ
னெனுமொழுங்கின் பரிவி னோடு
மெத்தலமும் புகழ்ந்தேத்த வீமான்கொண்
டிசுலாத்தி னிணங்கி னாரே.

(இ-ள்.) குசையி னென்னும் அந்த அறபி யானவர் அவ்வாறு அந்தப் புத்துக்கா னனது கூறிய வார்த்தைகளைத் தமது இருகாதுகளினாலுங் கேள்வியுற்றுச் சரீரப்புளகத்துடன் முத்தினது அழகிய ஒளியாகிய நாயகம் நபி காத்திமுல் அம்பியா முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் பாதங்களில் வணங்கி "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர் றசூ லுல்லாஹி" யென்னுங் கலிமாவை முழங்கும்படிகூறிப் பத்தியானது பெறும்வண்ணம்தொழுகை முதலியவைகளைக் கற்றுத் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தில் அன்போடும் எவ்விடங்களும் துதிக்க ஈமான் கொண்டு இசுலாத்தில் இணங்கி இருந்தார். (கஉ)

புத்துபேசியபடலம்

முற்றிற்று.

ஆகப் படலம்-ருடு-க்குத்-திருவிருத்தம்-கூடுக.

பிராட்டியார் பொன்னுலகுபுக்கபடலம்.

சலிநிலைத்துறை.

தனுவின் மான்மத முலவிய முகம்மது தழைப்பப்
புனித மாமறை மதிகலி மாக்கதிர் பொழிய
வினிதில் தீன்றிசை விளங்கிட விருக்குமந் நாளி
லனில மொத்தபித் தாவிபுக் கடைந்ததா யாசம்.

(இ-ள்.) காத்திரத் தினது கஸ்தூரி வாசனை உலவப் பெற்ற நபிகட் பெருமானார் நாயகம் எம் மறைக்குந் தாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தழைக்கவும், பரிசுத்தத்தைக் கொண்ட மகத்தாகிய புறுக் கானுல் அலீமென்னும் வேதத்தினது சந்திரனை நிகர்த்த கலிமாவா னது கிரணங்களைச் சிந்தவும், தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க மானது இனிமையுடன் எண்டிசைகளிலும் பிரகாசிக்கவும், இருக் கின்ற அந்தக் காலத்தில் அபீத்தாலி பென்பவருக்குக் காற்றினது விரைவைப் போலும், துன்பமானது வந்து சேர்ந்தது. (க)

வருத்த நாட்குநாண் முற்றிமெய் மெலிவொடு மயங்கி
யிருத்தல் கண்டுநந் நபிமன மிடைந்தரு கிருந்தார்
திருத்தி லாவபூ ஜகுலொடு நகரவர் திரண்டு
குருத்த வெண்கதிர்ச் சுதைமனை யிடனறக் குவிந்தார்.

(இ-ள்.) அன்றியும், அத் துன்பம் நாளுக்கு நாள் அதிகப்பட் டுச் சரீர வாட்டத்துடன் மயக்கமுற்று இருப்பதை நபது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பார்த்து இருதயத்தின்கண் வருத்தங் கொண்டு அவ் வபீத்தாலி பென்பவரின் பக்கத்தி லுட்கார்ந்திருந்தார்கள். மேலும் செவ்வைப் படாத அபூஜகிலென்பவனோடு அந்தத் திருமக்கமா நகரத்திலுள்ள ஜனங்கள் கூடி வெள்ளிய கிரணங்கள் தழைத்த வெண்சாந்தைக் கொண்ட அவ்வீட்டில் இடமில்லாது வந்து கூடினார்கள் (உ)

பெருக வந்திருந் தவர்களை விழித்துரை பிறழா
தொருவ ருக்கொரு பகையிலை யெனும்படி யொழுகி
யிருமெ னத்தலத் தவர்க்கினத் தவர்க்கெடுத் திசைத்தார்
தெருளுஞ் சீரபித் தாலிபென் றுரைத்திடுஞ் செம்மல்.

(இ-ள்.) அவ்வாறு கூடவே உணராநிற்கும் சிறப்பை யுடைய அபீத்தாலி பென்னும் அரசரானவர் அதிகமாக அங்கு வந்து தங்கிய ஜனங்களைக் கூப்பிட்டு நீங்கள் வாக்கு மாருது ஒருவருக்கும் ஒரு சத்துருத்துவ மில்லை யென்று சொல்லும் வண்ணம் வழிப்பட்டு இருங்களென்று அந்தத் தலத்தவர்களுக்கும் பந்துக்களுக்கும் எடுத்துக் கூறினர், (ங)

கடந்த மும்மதக் கரிதொடு குழியினைக் கடவா
தடைந்த வாறெனக் கிடந்திடும் பெரியதந் தையரைப்
படர்ந்த நன்கலி மாச்சொலுஞ் சொலுமெனப் பகர்ந்தார்
தொடர்ந்து வானவர் பரவிட வருமிற சூலே.

(இ-ள்.) தேவர்களான மலாயிக்கத்து மார்கள் துடர்ச்சி யுற்று வணங்கும் வண்ணம் வரா நிற்கும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தாண்டிய கன்னமதம், கைமதம், கபோல மதமென்னு மூன்று மதங்களை யுடைய யானையானது தொட்ட குழியைக் கடவாது அதிற்றனே அடைந்த மார்க்கத்தைப் போலுங் கிடக்கும் தங்களின் பெரிய தந்தையராகிய அபீத்தாலி பென்பவரை விரிந்த நன்மை பொருந்திய "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மது றசூலுல்லாஹி" யென்னுங் கலிமாவைக் கூறுங்கள்! கூறுங்கள்!! என்று சொன்னர்கள். (ச)

காதி னுட்புகுந் தனவிலை யெனப்பினுங் கருதி
யோது நன்கலி மாவென முகம்மது முரைக்கும்
போதி னிற்றனி யழன்றபூ ஜகுலுடல் புழுங்கி
மோதி வந்தபித் தாலிபுக் குரிமைகூறின் மொழிவான்.

(இ-ள்.) நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் நாம் அவ்வாறு கூறியவைகள் காதுட் புகுந்தனவோ? இல்லையோ? என்று பின்னருஞ்சிந்தித்து நன்மைபொருந்திய கலிமாவைக் கூறுங்களென்று சொல்லும் சமயத்தில் அபூஜகிலென்பவன் ஒப்பறக் கோபித்துச் சரீரம் வெம்பி மோதுதலுற்று வந்து அபீத்தாலி பென்பவருக்குச் சொந்தத்தில் சொல்லுவான். ()

தந்தை தாய்தம ரொழுகிய மொழிவழி தவிர்ந்திட்
டிந்த நாளினின் முகம்மதி னுரையினுக் கியைந்தீர்

பிந்து நாளையின் முன்னுரை மறைநெறி பிசகா
தந்த வாய்மையை மனத்தினின் மறவலென் றறைந்தான்.

(இ-ள்.) இத்தினத்தில் நமது பிதா, மாதா, பந்துக்கள் நடந்த சொல்லினது மார்க்கத்தைத் தவிர்த்து முகம்மதென்பவனின் வார்த்தைகளுக்குப் பொருந்தினீர். பிந்திய காலத்தில் ஆதியிற் கூறிய வேத மார்க்கத்திற் றவறாது அந்தச் சத்தியத்தை இருதயத்தின் கண் மறக்கக்கூடாது என்று கூறினன். (சு)

உரப்பி யாங்கரித் தபூஜகு லுரைத்திடு முரையிற்
பரப்பு நன்கதிர் முகமமது பகர்ந்தது தெரியா
திரைப்பெ ருங்கட லெனவினஞ் சூழ்தர விறந்தார்
மரைப்ப தத்தபித் தாலிபென் றழகுறும் வள்ளல்.

(இ-ள்.) தாமரை மலர் போலும் பாதங்களை யுடைய அபீத்தாலி பென்று அழகு பொருந்தாநிற்கும் வள்ள லானவர் அபூஜகி லென்பவன் அங்கே சத்த மிட்டு மூர்க்கங்காட்டிக் கூறிடும் வார்த்தைகளினால் நல்ல கிரணங்களை விரியச் செய்யும் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்ல மவர்கள் கூறியது தெரியாமல் ஒலிக்குகின்ற பெரிய சமுத்திரத்தைப் போல பந்துக்களானவர் வளையும் வண்ணம் உயிர் துறந்தார். (எ)

வட்ட வாரிதிப் புவியிடை முகம்மது தமக்குப்
பட்ட மென்பவ னிறங்கிய வருடம்பத் ததின்மே
லெட்டு மாதமும் பதினொரு நாளுஞ்சென் றிதற்பின்
சட்ட கந்தனை விட்டுயிர் பிரிந்தவண் சார்ந்தார்.

(இ-ள்.) வட்ட மாகிய சமுத்திரத்தைக் கொண்டபூமியின்கண் நாயகம் நபிகட் பெருமானார் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு நபிப்பட்டமென்பது வந் திறங்கிய வருட மானது பத்தின் மேல் எட்டு மாதங்களும் பதினொரு நாட்களும் கழிந்து இதற்பின் அவ் வபீத்தாலிபென்பவர் உடலை விட்டும் உயிரானது நீங்கிவானலோகத்தைப்போய்ச்சேர்ந்தார்

மறந்த யங்குவேற் கரவபித் தாலிபு மன்ன
ரிறந்த காலையிற் கடலுடைத் தெனநக ரிரங்கச்
சிறந்த மாதர்மை விழிமழை பொழிதரச் செருமி
யறங்கி டந்தநெஞ் சவரொடு மழுதிரங் கினரால்.

(இ-ள்.) கொலைத் தொழிலானது பிரகாசியாநிற்கும் வேலாயுதத்தைத்தாங்கிய கையை யுடைய அபித்தாலி யென்னுமரசர் உயிர் துறந்த காலத்தில் சமுத்திர மானது உடைத்தாற் போல அந்தத் திருமக்கமா நகரத்தி லுள்ளவர்கள் அழவும், சிறப் புற்ற பெண்களினது மையெழுதப் பெற்ற கண்க ளானவை மழை போலும் நீரைச்சிந்தவும், புண்ணிய மானது கிடைக்கப் பெற்ற மனத்தையுடையவர்களுடன் நெருங்கி அழுது இரங்கினார்கள். (௯)

வரிசை நந்நபி முகம்மது வயிறலைத் திரங்கப்
பரிச னத்தவ ரடங்கலும பதைபதைத் தேங்க
வரச ரியாவரும் வந்தடுத் தெடுத்துநீ ராட்டிச்
சரகி னேர்வழி யடக்கினர் முடித்தனர் சடங்கு.

(இ-ள்.) அன்றியும், சிறப்பை யுடைய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் வயற்றி லரைந்துக் கொண்டு இரங்கவும், பரிசனத்தவர்களான யாவர்களும் மிகவும் துடித்து ஏங்கவும், மன்னர்க ளாகிய அனைவர்களும் வந்து நெருங்கி அபித்தாலி யென்பவரின் சரீரத்தை எடுத்து ஸ்நானஞ் செய்வித்து ஷறகினது நேர்மையைக் கொண்ட ஒழுங்கில் அடக்கஞ்செய்தார்கள் சடங்குகளையுஞ் செய்து நிறைவேற்றினார்கள். (௧௦)

பெரிய தந்தைய ரிறந்திடும் பருவரல் பெருகி
யரிய நாயகன் றூதுவ ரகத்தினி லழுங்கி
வரிகொள் வண்டிமிற் செம்மலர் மரைமுகம் வாடி
யுரைதெ ரிந்திலர் போலிடைந் தகத்துறைந் திருந்தார்.

(இ-ள்.) அருமை யானநாயக னாகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் தூதுவ ரான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் பெரிய பிதாவாகிய அபித்தாலி யென்பவர் உயிர் துறந்த துன்பமானது அதிகரித்துமனசின் கண் அழுங்குத லுற்று இரேகைகளைக் கொண்ட வண்டுகளானவை ஒலியாநிற்கும் செவந்த தாமரை மலர் போலும் முகமானது வாட்டமடைந்து வார்த்தை தெரியாதவர்களைப் போலவருந்தித்தங்களினது மாளிகையின் கண் தங்கி யிருந்தார்கள். (௧௧)

அகத்தி னிற்பெருந் துன்பொடு மிருக்குமுன் றுநாள்
வகுத்த நாயகன் விதிவழி குவைலிது மகளா

ரிகத்தி னிற்புகழ் நிறுத்திவிண் ணகம்புக ழிலங்கத்
தகுத்தொ டும்பெரும் புதுமையிற் றிருவடி சாய்ந்தார்.

(இ-ள்.) அவ்வாறு மனசின்கண் பெரிய வருத்தத்தோடும் இருக்கின்ற மூன்றும் நாளில் யாவற்றையும் வகுத்த நாயகனான ஜல்ல ஜலாலகு வத்த ஆலாவின் விதியினது ஒழுங்கில் குவைலிது அரசனின் புதல்வியராகிய கதீஜா றலி யல்லாகு அன்ஹா அவர்கள் இவ்வுலகத்தின் கண் தங்களின் கீர்த்தியை நிற்கும்படி செய்து வானலோகத்தி னிடத்து புகழானது பிரகாசிக்கும் வண்ணம் தகுத்துடன் பெரிய ஆச்சரியத்தில் உயிர் துறந்தார்கள், (கஉ)

முடிவி லாதவன் றூதுவர் முகம்மது நபிக்கு
வடிவ மைந்தமெய்த் துணைவியாய் மகிதலத் திருந்து
கடிகொள் பொன்னக ரத்தினிற் கதிர்கொண்மா ளிகையிற்
குடிபு குந்தனர் கத்தீஜா வெனுங்குலக் கொடியே.

(இ-ள்) கதீஜா றலி யல்லாகு அன்ஹா வென்று கூறும் மேன்மை யாகிய கொடி போல்பவர்கள் ஒரு காலத்தும் முடி வில்லாதவனான ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் தூதுவராகிய நபிகட் பிரானூர் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களுக்கு அழகு சிறக்கப் பெற்ற உண்மையான துணைவியாய் இந்தப் பூலோகத்தின்கண் இருந்து பரிமள மமைந்த சொர்க்கலோகத்தினது பிரகாசத்தைக் கொண்டிருக்கும் மாளிகையில் குடியாகப் போய்ப் புகுந்தார்கள். (கங)

நனைத தும்பிய மலர்ப்புய முகம்மது நபிக்கு
மனைவி யாகிய கத்தீஜா வெனுங்குல மயிலைப்
புனையும் பூந்துகிற் பொதிந்துநற் புகழொடு மேந்தி
வனையு மென்மணம் போலினி தடக்கினர் மகிழ்ந்தே.

(இ-ள்.) நறவ மானது ததும்பப் பெற்ற புஷ்ப மாலை யணிந்த தோள்களையுடைய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு நாயகியாகிய கதீஜா றலியல்லாகு அன்ஹா வென்னும் மேன்மையான மயில் போலும் சாப லுடையவர்களை அலங்கரிபாநிற்கும் அழகிய வஸ்திரத்தினுற் பொதிந்து நல்ல கீர்த்தியோடும் தாங்கிச் சிறந்த மெல்லிய விவாகத்தைப் போல் களிப் புற்று இனிமையுடன் அடக்கஞ் செய்தார்கள், (கச)

பேதை யர்க்கர சினையருட் பெரியவன் றூதர்க்
காத ரம்பெரு மயிலினை யெடுத்தினி தடக்கிக்
காத லுற்றுயர் தீனிலை யவர்கலங் கிருந்து
கோத றச்செயுஞ் சடங்குகள் குறைவற முடித்தார்.

(இ-ள்.) அன்றியும், மடையர்களுக்கும் இரா ஜாங்கத்தைக் கொடாநிற்கும் பெரியவனான ஜல்ல ஷுகுனகுவத்த ஆலாவின் தூதுவராகிய நாயகம் நபி ஹபீபுறப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு அன்பை யுடைய பெரிய மயில்போலுஞ் சாயலைக்கொண்டவர்களான கதீஜா றலி யல்லாகு அன்ஹா அவர்களை இனிமையுடன் எடுத்து அடக்கஞ்செய்து தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையை யுடையவர்கள் ஆசையுற்றுக் கலங்கிருந்து குற்றமறக் குறைவில்லாது செய்யுஞ் சடங்குக ளெல்லாவற்றையும் செய்து நிறைவேற்றினார்கள், (சரு)

இலக்க முற்றிடும் பெரியதந் தைபரிறந் திருந்த
வலக்கண் மேற்கொள வருந்திய காலைபி லணியாய்
நிலைக்கும் பேரெழின் பனைவியு மிறந்திட நிலையாக்
கலக்க முற்றது மறைமுகம் மதுநபி கருத்தில்.

(இ-ள்) அவ்வாறு நிறைவேற்றவே புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தையுடைய நாயகம் நபிகட் பெம்மானூர் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் கருத்தில் பிரகாசத்தைப் பெற்ற பெரிய தந்தையாகிய அபித்தாலி யென்பவர் உயிர் துறந்து அதனாற்றங்கிய துன்பமானது அதிகப்பட வருத்த முற்ற காலத்தில் வரிசையாக நிலைக்கும் பெரிய அழகையுடைய நாயகியான கதீஜா றலி யல்லாகு அன்ஹா அவர்களும் மரித்துப்போக நிலைபாத கலக்கமானது வந்து சேர்ந்தது. (கசு)

பிராட்டியார் பொன்னுலகு புக்கபடலம்

முற்றிற்று.

ஆகபடலம் ௰சு-க்குத் திருவிருத்தம்-கூசுஎ.

பருப்பதராஜவணக் கண்ணுற்ற படலம்.

கலிநிலைத்துறை.

ஆர ணப்பொரு ளகுமது மவதியுற் றதனுற்
கார ணப்பல னறிந்தும்வஞ் சனையெனுங் காபிர்
பார ணைத்தெறிந் திருகவுண் மதசலம் பரப்பும்
வார ணத்தினு மும்மடங் கெனும்படி வலித்தார்.

(இ-ள்.) வேதப் பொருளாகிய அஹ்மதென்னுந் திரு நாமத்தையுடைய நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் துன்ப மடைந்ததினுல், காரணத்தினது பிரயோசனத்தை யுணர்ந்தும் வஞ்சனை யென்று சொல்லும் காபிர்கள் பூமியை யணைத்து வீசி இரண்டு கவுட்களிலு முள்ள மதநீரைப் பரப்பாநிற்கும் யானைகளைப்பார்க்கிலும் மும்மடங் கென்று கூறும்படி வலித்தார்கள். (க)

மிகைத்த வீறரி முழைபுகுந் தெனவிற னயினு
ரகத்திற் றுன்பினி லடங்கின ரெனவறி கிலாய்ப்
பகைத்த புன்மனக் கொடியவர் பெரும்பகை தொடுத்தா
ரிகத்தி னும்மறு புரத்தினு மிவையிலை யெனவே.

(இ-ள்.) அன்றியும், அதிகப்பட்ட வலிமையைக் கொண்ட சிங்கமானது குகையிற் புகுந்ததைப்போலும் வெற்றியையுடைய நயினுரான நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் மனதின் கண்ணுள்ள வருத்தத்தினுல் அடங்கினுர்க ளென்று உணராதவர்களாய் இவ் வுலகத்தி னிடத்தும் வானலோகத்தி னிடத்தும் இவைகளில்லை யென்றுகூறும் வண்ணம் விரோதித்த கீழ்மையான மனத்தை யுடைய கொடியவர்களாகிய காபிர்கள் பெரிய பகையைத் தொடுத்தார்கள்.

குறைஷி யங்குலக் காபிர்கள் விளைத்திடுங் கொடுமை
யறவு மேல்வளர்ந் தன, றைந் திலவயித் தாலி
பிறைவன் முன்விதி யமைத்திடும் படியிவ ணிறந்து
நிறையுந் திங்களு மூன்றெனத் தினநிகழ்ந் தனவே.

(இ-ள்.) அழகிய குறைஷிக் குலத்தினது காபிர்கள் அவ்வாறு விளையும்படி செய்திடும் அநியாய மானவைகள் மிகவும் மேலோங்கின. குறைக் கில்லன. இறைவனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலா வானவன் ஆதியில் விதியை அமைத்த வண்ணம் அபீத்தாலி பென்பவர் இங்கு உயிர் துறந்து பூரணமாக மாதமும் மூன் றென்று நாட்களும் சென்றன. (௩)

காய முள்ளுறை யுயிரெனு மிருவருங் கம்புக்
காய தும்மினத் தவர்பகை யையுமனத் தடக்கித்
தூய நாயகன் றீனிலை பெருக்கிடுந் துணிவாற்
ரூயி பென்னு மத் தலத்தினுக் கெழுந்தரு ளினரே.

(இ-ள்.) அவ்வாறு செல்லத் தங்களின் சரீரத்தினகந் தங்கா நிற்கும் ஜீவ னென்னும்படியான அபீத்தாலி பென்பவரும் கதீஜா றலி யல்லாகு அன்ஹா அவர்களும் வானலோகத்தின்கண் போய்ப் புகுதலா யதையும் இனத்தவர்களின் விரோதத்தையும் இருதயத்தின்கண் அடங்கிக் கொண்டு பரிசுத்தத்தை யுடைய நாயகனுகிய ஜல்ல ஜலாலகு வத்த ஆலாவின் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையைப் பெருகச் செய்திடும் துணிவினல் தாயிபென்றுகூறும் அந்த இடத்திற்கு எழுந்தருளினர்கள். (௪)

சவிகொள் வெண்சுதை மாமதிள் தாயிபி லிபுனு
அபுது யாலிலென் றிடும்பெயர்க் குறைஷியென் பவனை
நபிக ளுயகங் கண்டன ரவனெதிர் நடந்து
குவிகை கொண்டுபின் னிவரொடு மனைகுறு கினனே.

(இ-ள்) நபிகட் பெருமானு ரான நாயகம் நபி முகம்மது முஸ் தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பிரகாசத்தைக் கொண்ட வெள்ளிய சுண்ணச் சாந்து தீற்றிய மகத்தான கோட்டை மதில்களையுடைய அந்தத் தாயிபென்னும் நகரத்தில் இபுனு அபுது யாலிலென்றுகூறிடும் நாமத்தையுடைய குறைஷியென்பவனைக் கண்டார்கள். அவன் எதிராக நடந்துவந்து கைகளைக்குவித்துக் கொண்டு பின்னர் இவர்களோடும் தனது வீட்டைப் போய்ச் சேர்ந்தான்.

மனையி னிற்கொடு போய்முகம் மதுதமை யிருத்தி
யினிய வாசகத் தன்பொடும் புகழ்ந்தெடுத் தேத்தி
வனச மென்மலர் செழும்பதத் திணைவருந் திடவே
தனிய வென்வயின் சார்ந்தவை சாற்றுக வென்ருன்,

(இ-ள்.) அவ்வாறு வீட்டின்கண் கூட்டிக் கொண்டுபோய் நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை இருக்கச்செய்து இனிமையான வார்த்தைகளினால் அன்புடன் துதித்து எடுத்துப் போற்றி மெல்லிய தாமரை மலர்போலும் செழுமையாகிய இருபாதங்களும் வருந்தும்வண்ணம் தாங்கள் ஏகனுன என திடத்தில் வந்த வரலாற்றைக் கூறுவீர்களாகவென்று சொன்னான். (சா)

கண்ட போதினி லுவகையி லிருகரங் குவித்துக்
கொண்டு நின்றுநன் மொழிபகர்ந் தனனெனக் குறித்து
வண்டு வாழ்மலர்ப் புயமுகம் மதுநபி மணிவாய்
விண்டு தேன்சொரிந் தெனச்சில மொழிவிளம் புவரால்.

(இ-ள்.) வண்டுகளானவை வாழாநிற்கும் புஷ்பமாலைகளைத்தாங்கிய தோள்களையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்த இபுனு அப்து யாலிலென்பவன் தங்களைக் கண்ட காலத்தில் அவ்வாறு சந்தோஷத்தினால் இரண்டு கைகளையுங் குவியும்படி செய்து கொண்டு நின்று நல்ல வார்த்தைகளைப் பேசினனென்று மனசின்கண் குறித்து அழகிய வாயைத் திறந்து நறவத்தைச் சிந்தினாற் போலச் சில வார்த்தைகளைக் கூறுவார்கள். (எ)

ஆதி தன்னருள் வானவர்க் கரசெனை யடுத்து
நீதி நன்னபி யெனும்பெய ரளித்துநீ ணிலத்தில்
வேத மும்மெனக் கருளிதீ னிலைவிரித் திடுமென்
ரோதி விண்ணகத் துறைந்தனர் செழுங்கதி ருலவ.

(இ-ள்.) யாவற்றிற்கும் முதன்மையனுன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் கிருபையையுடைய தேவர்களாகிய மலாயிக்கத்துமார்களுக்கு ராஜரான ஜபுறயீ லலைகிஸ்ஸலாமவர்கள் என்னைச் சமீபித்து நீதியையுடைய நல்ல நபியென்னும் அபிதானத்தைக் கொடுத்து நீட்சியைக் கொண்ட இப் பூலோகத்தின் கண் புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தையுந்தந்து தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமையை விரியும்படி செய்யுமென்று சொல்லிச் செழிய பிரகாசமான துலவும் வண்ணம் ஆகாய லோகத்தின்கண் போய்ச்சேர்ந்தார்கள். (அ)

அந்த நாட்டொடுத் திற்றைநாள் வரையுநல் லறிவர்
புந்தி கூர்தரச் செழுங்கலி மாத்தனைப் புகட்டி

வந்து சூழ்தரு பவக்களை தவிர்த்துமண் ணிலத்தி
லுய்ந்து நற்கதி பெறுவதற் குறுதிசெய் தன்னால்.

(இ-ள்.) அந்த நாள் தொடுத்து இந்த நாள் வரைக்கும் நல்ல அறிவை யுடையோர்கள் தங்களின் சிந்தையானது கூர்கின்ற செழியகலிமாவைப்புகட்டி வந்து வளையாநிற்கும் பாவமாகிய களையையொழித்து இந்தப் பூலோகத்தின்கண் ஜீவித்து நன்மைபொருந்தியமோட்சத்தைப் பெறுவதற்கு உறுதி செய்தேன். (௯)

உன்னு நன்மறை முதற்கலி மாவெடுத் துரைத்துன்
றன்னை நல்வழி யவனெனுந் தகமையிற் படுத்தி
மன்னுந் தீனிலை விரித்தறம் வளர்த்திட வேண்டிற்
றென்னு ளம்மதி னடைந்தனென் றுரைத்தன ரிறசூல்.

(இ-ள்.) றசூலாகிய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் நினையாநிற்கும் நன்மை பொருந்திய புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது முதன்மை யான கலிமாவை எடுத்துக் கூறி உன்னை நல்ல சன்மார்க்கத்தையுடையவ னென்று கூறும் தன்மையிற் படுத்திப் பொருந்திய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்க நிலைமையை விரியச் செய்து புண்ணியத்தை வளர்க்கும் வண்ணம் எனது மனமானது வேண்டிற்று. அதனால் இங்கு வந்து சேர்ந்தேனென்று கூறினார்கள். (௧௦)

கதிர்தி ரண்டுரு வெடுத்தவ ருரைத்தகட் டுரைகேட்
டதிவி தத்தொடு நன்கெனச் சிரங்கர மசைத்துப்
புதிய மாமறைக் கையமி லெனப்புகழ் படுத்தி
மதியின் வேறுவைத் திசைத்திடுஞ் சிலமொழி வகுப்பான்.

(இ-ள்.) பிரகாச மனைத்தும் ஒன்றாய்க்கூடி ஒரு சொரூபத்தை எடுக்கப் பெற்றவராகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அவ்வாறு கூறிய உண்மை யான வார்த்தைகளை அந்த இபுனு அப்து யாலி லென்பவன் தனது காதுகளினாற் கேள்வியுற்று அதிக விதத்துடன் நல்லதென்று தலையையும் கைகளையும் அசையும்படி செய்து நூதன மாகிய மகத்தான வேதத்திற்குச் சந்தேகமில்லை யென்று துதிசெய்து தனது புத்தியின்கண் வேறே யொன்றை வைத்துக் கொண்டு பொருந்திய சிலவார்த்தைகளை வகுத்துக் கூறுவான். (௧௧)

எடுத்து ரைத்தவை யென்னினத் தவர்க்கெடுத் தியம்பி
யடுத்தி ரண்டொரு தினத்தினு மிடத்தினி லணுகி
வடித்த வாய்மையி னொழுகுவன் மறைதெரி மதியோய்
படித்த லம்புகழ் நகரினிற் செலுமெனப் பகர்ந்தான்.

(இ-ள்.) வேதங்களை யுணர்ந்த அறிவைக் கொண்ட முகம்மதென்னுந் திரு நாமத்தை யுடையவரே! நீவிர் எடுத்துக் கூறியவைகளை எனது பந்துக்களுக்கு எடுத்துச் சொல்லிச்சமீபித்து இரண்டொரு நாளையில் உம்மிடத்தில் வந்து தெளிந்த உமது வார்த்தைகளின்படி வழிப்பட்டு நடப்பேன். இவ் வுலக மானது துதியாநிற்கும் உமது ஊராகிய திரு மக்கமா நகரத்திற்குச் செல்லு மென்று கூறினான்()

இனைய வாசக முரைத்தவ னிருப்பநம் மிறசூல்
வினைய முற்றதிவ் விடத்தெனத் தாயுபை விடுத்து
நினைவு நேரொடு தொழுதெழுந் திருந்துநன் னெறிக்கே
நனைகொண் மென்மலர் கானகத் தருத்தர நடந்தார்.

(இ-ள்,) இப்படிப்பட்ட வார்த்தைகளை அந்த இபுனு அப்துயாலி லென்பவன் கூறி இருக்க நமது றசூ லாகிய நபிகட் பிரானார் முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் இவ் விடத்தில்வஞ்சகம் வந்து சேர்ந்த தென்று தாயு பென்னும் அந் நகரத்தை விட்டுச் சிந்தையினது நேர்மையுடன் அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவை வணங்கி எழும்பியிருந்து திருமக்கமா நகரத்தினது நல்ல பாதையில் நறவத்தைக் கொண்ட மெல்லிய புஷ்பங்களைக் கானகத்தின் கண்ணுள்ள மரங்க ளானவை தரும் வண்ணம் நடந்து சென்றார்கள் ()

ஆல மும்வெளி றிடக்கெடுங் கொடுமனத் தப்து
யாலி லென்பவன் சிறியவர்க் கினியவை யுரைத்து
மேலும் பேதைநெஞ் சவருட னிவரையும் விரவிக்
கோலும் வன்கதம் வரசில மொழிகொளுத் தினனால்.

(இ-ள்.) அவ்வாறு செல்ல விஷமும் வெளிறும் வண்ணம் கெட்டகொடிய மனத்தை யுடைய அந்த அப்துல் யாலிலென்பவன்சிறியவர்களுக்கு இனிமை யான வார்த்தைகளைக் கூறிமேலும்மடத்தனத்தைப் பெற்ற இருதயத்தை யுடையவர்க ளோடு இப் பாலியர்களையும் சேர்த்து உண்டாகாநிற்கும் வன்மை யமைந்த கோபமானது வரும்படி சில வார்த்தைகளைக் கொளுத்தினன். (கச)

வெறியும் பித்துமுற் றவனிவன் பெருவழி விடுத்தோர்
நெறியி டைத்தனி சென்றன னவன்றனே நேடி
மறியுங் காறலை தக ந்திட வலியகல் லெடுத்திட்
டெறியு மேகுமென் றுரைத்தன னரகிடை யெரிவான்.

(இ-ள்.) அன்றியும், நரகத்தின்கண் எரியக் கூடியவனான அந்த அப்துயாலி லென்பவன் மயக்கமும் பயித்தியமும் பொருந்தியவனாகிய முகம்மதென்னு மொருவன் இவ் விடத்திலுள்ள பெரிய மார்க்கத்தை விட்டு ஒப்பற்ற பாதையின்கண் ஏகமாய்ப் போகின்றான். அவனை விரும்பி மறியாநிற்கும் கால்களும் சிரமும் தகரும்படி வலிய கற்களை எடுத்து எறியுங்கள்! செல்லுங்க ளென்று கூறினான். (கரு)

வஞ்ச கக்கொடி யவனுரைத் திடுமொழி வழியே
பஞ்ச பாதகர் நடந்தரும் பாதையைக் குறுகிக்
கஞ்ச மென்பத முகம்மதைக் கடிதினில் வளைந்திட்
டஞ்ச லாதுகற் குணிலெடுத் தெறிந்துநின் றடர்ந்தார்.

(இ-ள்.) வஞ்சகத்தினது கொடுமையை யுடையவனான அந்த அப்துயாலி லென்பவன் அவ்வாறு கூறும் வார்த்தைகளின் மார்க்கமே பஞ்ச பாதகத்தை யுடையவராகிய அச் சிறுவர்கள் நடந்து சென்று அருமை யான அவ் வழியைக் குறுகித் தாமரை மலர்போலும் மெல்லிய பாதங்களையுடைய நமது நாயகம் நபிமுகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களை விரைவிற்சூழ்ந்து பயப்படாது கவண் கல்லினால் வீசி நின்று அடர்ந்தார்கள். (கசு)

கல்லி னாலுரஞ் சிரங்கரங் கான்முகங் காணு
தெல்ல வன்கதிர் பொழிந்தெனப் பலதொடுத் தெறிந்து
பல்லி னாலித ழதுக்கியு முறுக்கியும் படர்ந்தார்
சொல்லொ ணாப்பெரும பாதகம் விளைத்திடுஞ் சூமர்.

(இ-ள்.) சொல்ல முடியாத பெரிய பாவத் தொழிலைச்செய்யும் சூமராகிய அந்தச் சிறுவர்கள் கற்களினால் மார்பு, தலை, கை, கால், முகமிவைகளைக் காணாது சூரிய னானவன் தனது கிரணங்களைச்சொரிந்தாற் போல பலவற்றைத் தொடுத்து வீசிப் பற்களாற் றங்களின் அதரங்களை அதுக்கியும் கோபித்தும் சென்றார்கள். (கஎ)

இருமை யும்பத மிழந்தவர் செலச்சினந் தெறிந்து
கருணு தாலிபு மட்டினுர் தொடர்ந்தவர் கலைந்தார்

கருகை வள்ளனங் நபிமுகம் மதின்முழங் தாளி
லொருகல் லேறுபட் டேறுபட் டுதிர்ந்தன வுதிரம்.

(இ-ள்.) இம்மை, மறுமை யென்னும் இருமையிலும் மோட்ச மிழந்தவர்க ளாகிய அந்தச் சிறுவர்கள் கொடையை அருளாநிற்கும் கைகளையுடைய வள்ளலான நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அவ்வாறு நடக்கக் கோபித்துக் கற்களினால் வீசி கருனைதாலி பென்னுந் தல மட்டிலும் பின்பற்றிக் கலைவுற்றார்கள். அதனால் அவர்களுக்கு முழந்தாளில் ஒரு கல்லினது ஏறு பட்டுக் காய முண்டாய் இரத்தமானது துளித்தது. (கஅ)

ஊறு பட்டதின் வருத்தமும் பசியினுள் ளுலைவு
மாறு பட்டவர் தொடர்ந்ததி னடந்தமெய்ம் மலைவும்
பேறு பட்டமுந் தந்தவ னருளெனப் பெரிதின்
றேறு பட்டவ ணிருந்தனர் திருநபி யிறசூல்.

(இ-ள்.) அன்றியும், தெய்வீகந் தங்கிய நபி றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அவ்வாறு காயப் பட்டதின் துன்பமும், பசியினது உள் ளுலைவும், மாறு பட்டவர்களான அந்தச் சிறுவர்கள் பின் பற்றியதில் நிகழ்ந்த சரீரத்தினது மலைவும், ஆகிய இவைகள் நமக்கு மோட்சத்தைக் கொண்ட நபி பட்டத்தைக் கொடுத்தவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் காருண்ணிய மென்று பெரிதாய்த் தேறுதல் கொண்டு அவ்விடத்தில் தங்கியிருந்தார்கள். (கசு)

இருந்து மெய்வருத் தந்தவிர்த் தந்தரத் திடத்திற்
றிருந்த நோக்கினர் மங்குலின் வயின்ஜிபு ரீலைப்
பொருந்தக் கண்டுகண் களித்தனர் புதியவன் றூதர்
விரிந்த வெள்ளிடை கடந்தணித் துறவிளங் கினரால்.

(இ-ள்.) அவ்வாறு அங்கு தங்கியிருந்து சரீரத்தினது வருத்தங்களை யொழித்துச் செவ்வையாக ஆகாயத்தின்கண் பார்க்க ஜிபுரீலலைகிஸ்ஸலா மவர்களை அவ் வாகாயத்தி னிடத்து பொருந்தும்படி கண்டு கண்களானவை மகிழ்ச்சி யடையப் பெற்றார்கள். புதிய ஆலத்தை யுடையவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதராகிய அஜ்ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்களும் பரந்த அந்த வெள்ளிய தானத்தைத் தாண்டிச் சமீபமாய் வந்து பிரகாசித்தார்கள். (உ0)

வந்த டுத்திறை யவன்சலா முரைத்துமெய் வருந்த
லிந்த மாநிலத் திற்றைநும் மினத்தவ ரிடரா
லந்த நாயக னமரரில் வரைக்கர சவரை
யுந்த மேவலுக் கேவின னெனவெடுத் துரைத்தார்.

(இ-ள்.) அவ்வாறு, வந்து சமீபித்து இறையவனுன அல்லாகு சுபுகானகு வந்த ஆலாவின் சலாம் சொல்லி நீங்கள் உங்களின் சரீர மானது வருந்த வேண்டாம். இந்த மகத்தாகிய பூமியின்கண் இன் றையத் தினம் உங்களது இனத்தவர்களான சத்துராதிகளின் துன் பத்தினுல் அந்த நாயக னுகிய ஜல்ல ஜலாலகு வத்த ஆலா வானவன் தேவர்களான மலாயிக்கத்து மார்களில் பருப்பதங்களுக்கு இராஜா வானவரை உங்களது ஏவலுக்காக ஏவினு னென்று எடுத்துக் கூறி ஞர்கள். (உக)

இரும்பி னுக்கர சாகிய மலக்கும திடத்தி
னுறும்ப கைத்திர ளெத்தனை யாகிலு மொடுக்கிக்
குறும்பி னைத்தவிர்த் திடவரு குவரெனக் கூறிப்
புறம்ப ரந்தசெங் கட்கடை யருளொடும் போனுர்.

(இ-ள்.) அன்றியும், பருப்பதங்களுக்கு இராஜா வாகிய மலக் கானவர் உங்களிடத்தில் பொருந்திய பகைக் கூட்டங்க ளெத்தனை யானுலும் அவைகளை ஒடுங்கும்படி செய்து அவர்களின் குறும்பு களை யொழித்திடும் வண்ணம் வருவா ரென்று சொல்லி வெளியிற் பரவிய செவந்த கடைக் கண்களின் காருண்ணியத் தோடும் வான லோகத்தின்கண் போய்ச் சேர்ந்தார். (உஉ)

உருப்பொ திந்தநல் வடிவவ ருரைத்தொரு நொடிக்குட்
பருப்ப தங்களுக் கிறைசெழுந் தடஞ்சிறை பரப்பித்
திருப்பு நீரலைக் கடல்வரை புவிதிடுக் கிடவே
விருப்ப முற்றுநந் நபியிடத் தடுத்தனர் விரைவின்.

(இ-ள்.) அழகைப் பொதியப் பெற்ற நல்ல சொரூபத்தை யு டைய அந்த ஜபுறயீ லலைகிஸ் ஸலாமவர்கள் அவ்வாறு கூறி ஒரு நொ டி நேரத்தினகம் பருப்பதங்களுக்கு இராஜாவாகிய அம்மலக் கான வர் செழுமையான பெரியசிறகுகளைவிரித்து மடக்குகின்ற அலைகளை யுடைய சமுத்திரங்களும் மலைகளும் பூமியும் திடுக்கிடும்படி ஆசை யுற்று நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களி னிடத்து சீக்கிரமாய் வந்து அடுத்தார்கள். ()

வெற்ப டங்கலுங் கரங்களிற் பிசைந்துவிட் டெறிந்து
புற்பு தக்கட லிறைத்தொரு கடலினிற் புகட்டிப்
பற்ப மாக்கும்வெங் கனலையும் புகையறப் படுத்தி
நிற்ப வீரமும் வலிமையும் படைத்தநன் னெறியார்.

(இ-ள்.) அன்றியும்; அவர் மலைக ளெல்லாவற்றையும் தமது கைகளினாற் பிசைந்து விட்டு வீசி நீர்க் குமிழியை யுடைய சமுத்திரங்களை இறைத்து ஒரு சமுத்திரத்திற் புகட்டி யாவற்றையும் பற்ப மாக்காநிற்கும் கொடிய அக்கினியையும் தூமமானது அற்றுப் போகும்படி செய்துநிற்கும் வண்ணம் வீரமும் பெலமும் படைத்த நல்ல நேர்மையை யுடையவர். (உச)

உதய மாகிரிக் கொருகரந் தடவுவ ரொருகை
புதைய மேற்கிரி தடவுவர் விண்ணைமண் புரளச்
சிதறித் தீவக மேழையுங் கடலிடை சிதைப்பார்
விதிய வன்விதித் திடுமவை யெவையெனும் விரதர்.

(இ-ள்.) அன்றியும், விதியவனான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவானவன் விதிக்கும் அவைகள்யாவை? என்று வினவாநிற்கும் விரத ராகிய அந்த மலக் கானவர் மகத்தான உதய கிரியை ஒருகையினாற் றடவுவார். ஒரு கையினாற் புதையும்படி மேன்மலையாகிய அஸ்தகிரியைத்தடவுவார். ஆகாயலோகத்தை மண்ணானது புரளும் வண்ணம் சிதறச்செய்து ஏழுதீவகங்களையும் கடலின்கண்சிதையும் படிசெய்வார். (உரு)

ஒருநொ டிக்குளந் தரமடங் கலுந்திரிந் துலவி
யொருநொ டிக்குளிவ் வானகங் கவிந்தமட் டுலவி
யிரும னத்தொடும் வரவரம் படைத்தவ ரெழிலா
ரிருசெ விக்கொடுத் தேவலின் படிக்கிசைந் திருப்பார்.

(இ-ள்.) அன்றியும், ஒரு நொடிநேரத்தினகம் ஆகாயமுழுவதிலு மலைந்து உலாவி ஒரு நொடி நேரத்தினகம் இந்த வான மானது கவிந்தமட்டும் திரிந்து பெரிய மனத் தோடும் வரும் வண்ணம் வரத்தைச் சம்பாதித்தவர். அழகு பொருந்திய இரண்டு காதுகளையும் கொடுத்துக் கூறும் ஏவலின்படி பொருந்தி இருப்பவர். (உசு)

சித்தி ரத்தடப் புயவரை முகம்மது திருமு
னுத்த மத்தொடு மொடுங்கிநின் றுருசலாமுரைத்து

முத்த வெண்கதி ரவரிரு மெனுமொழி கேட்டுப்
பத்தி யாயரு கிருந்தொரு மொழிபகர்ந் திடுவார்.

(இ-ள்.) அவ்வாறு அவர் அழகிய பெரிய தோள்க ளென்னும் மலைகளையுடைய நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்த பா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் தெய்வீகந் தங்கிய சந்நிதானத்தில் மேன்மையோடும் ஒடுக்கமுற்று நின்று ஒப் பற்ற சலாமோதி முத்தினது வெள்ளிய பிரகாசத்தை யுடையவர்க ளான அந்நாயக மவர்கள் இரு மென்று கூறும் வார்த்தைகளைத் தமது காதுகளினூற் கேள்வியுற்றுப் பத்தியாக அருகி லுட்கார்ந்து ஒரு வார்த்தைசொல்லுவார். (உஎ)

எத்த லத்துயி ரினுக்குநல் லுணவளித் திரங்கு
மத்த னென்னைநும் மேவலுக் கருளின னதனு
லித்த லத்தில்வந் தடைந்தன னினியருட் கடைக்கண்
வைத்தி ரேற்பணி விடைதவ றிலன்மறை மதியோய்.

(இ-ள்) வேதங்களினது அறிவைக் கொண்ட முகம்மதென் னுந் திருநாமத்தை யுடையவர்களே! எந்த இடத்தி லுள்ள ஜீவப் பிராணிகளுக்கும் நல்ல உணவைக் கொடுத்து இரங்காநிற்கும் அத் தனை அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவானவன் என்னை உங்களது ஏவற்றொழிலுக்காய்க் கற்பித்தான். அதனால் நான் இந்தப் பூலோ கத்தின்கண் வந்து சேர்ந்தேன். இனித் தாங்கள் காருண்ணியத் தையுடைய கடைக்கண்ணினது நோக்கம் வைப்பீர்களேயானால் தங் களின் பணிவிடைகளிற் றவறமாட்டேன். (உஅ)

அருந்து மாரமு தக்கலி மாவுரைக் கடங்கா
திருந்த வூரெவை பகைத்தவ ரியாவர்நும் மிதயம்
பொருந்தி டாத்திசை யெத்திசை பொருவராக் கதிர்மெய்
வருந்தல் செய்தவ ரெவர்தெரி தரவழங் கிடுமே.

(இ ள்.) அன்றியும், அருந்தாநிற்கும் பொருந்திய அமுதத்தை நிகர்த்த கலிமாவினது வார்த்தைகளுக் கமையாது இருந்த ஊர்கள் யாவை? உங்களை விரோதித்தவர்கள் யாவர்? உங்களின் மனமானது பொருந்தாத திசை யானது எந்தத் திசை? சூரியனது பிரகாசமும் மொப்பாகாத திருமேனியை வருந்தல் செய்தவர்கள் யாவர்? எனக் குத் தெரியும்படி கூறுங்கள். (உகூ)

செப்பி னீரெனிற் செறுநர்க டிரளுமத் திசையு
முப்பு வாரியு ளமிழ்த்துவ னலதொரு வரையா

லிப்பெ ரும்புவிக் குள்ளரைத் திடுகுவ னெளியேன்
றப்ப ரிந்திட வேண்டுமென் றிரவோடுஞ் சொன்னர்.

(இ-ள்.) அவ்வாறுகூறுவீர்களே யானல் சத்துராதிகளின்கூட்டத்தையும் அந்தத் திசையையும் உப்பை யுடைய சமுத்திரத்தின் கண் அமிழும்படி செய்வேன். அல்லது ஒப் பற்ற மலையினுல் இந்தப்பெரிய பூமியினகம் அரையும் வண்ணம் செய்வேன். எளியவனுகிய எனது சாமர்த்தியத்தை தாங்கள் யுணர்ந்திட வேண்டுமென்று இரத்தலோடுங் கூறினர். (௬௦)

விண்டி னுக்கர சிவைபகர்ந் திடத்துளி விதிர்க்குங்
கொண்ட லங்கவி கைக்கிறை யகங்களி கூர்ந்து
மண்ட லத்தும துரைவழி நடத்திடின் மறைநேர்
கண்டு தேறுவ ரெவர்பொறை நிலத்தினிற் கடனே.

(இ-ள்.) பருப்பதங்களுக்கு இராஜாவாகிய அந்த மலக்கானவர் இவைகளைக் கூறத் திவலைகளை விதிர்க்காநிற்கும் அழகிய மேகக்குடையினது அரசரான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் மன மகிழ்ச்சி யடைந்து இந்தப் பூலோகத்தின்கண் உமது வார்த்தைகளின் ஒழுங்கில் நடத்தினுல் புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தினது உண்மைகளைக் கண்டு தெளிவோர்கள் யாவர்? ஒருவரு மில்லர்? ஆதலால் பொறுமையானது பூமியின்கண் கடமையாகும். (௬௧)

இறைய வன்னருட் படிக்கிட ரடைந்ததென் னிடத்திற்
குறையி தென்றுமா நிலத்தவர் தமைக்குறை படுத்தன்
மறையி னேரல வெகுளியை மனத்தினி லடக்கி
நிறையி னிற்பது பெரியவர்க் குரியநன் னிலையே.

(இ-ள்.) அன்றியும், இறைவனுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் கிருபைப்படிக்கு என்னிடத்திற் றுன்ப மானது வந்து சேர்ந்தது. இஃது குற்றமென்று மகத்தாகிய பூமியின் கண்ணுள்ள அவர்களைக் குற்றப் படுத்துவது வேதத்தினது ஒழுங்கல்ல கோபத்தை இருதயத்தின்கண் அடங்கும்வண்ணம் செய்து தைரியத்தில் நிற்பது பெரியோர்களுக்குச் சொந்த மான நல்ல நிலைமை யாகும்

மிக்க வன்குபிர்க் கொலைத்தொழின் மனத்தினை விடுத்திட்
டிக்க ணத்தில் வழிப்படா ரெனிலிவர் பயந்த

மக்க ளாயினு நல்வழிக்கொழுகுவர் மறையுந்
திக்க டங்கலும் பரந்துதீ னெறிமுறை செயுமே.

(இ-ள்.) அன்றியும், அதிகரித்த கொடிய குபிராகிய கொலைத் தொழிலைக் கொண்ட இருதயத்தை விட்டு இக் கணத்தில் நன்மை பொருந்திய சன்மார்க்கத்தி லுட்படாரே யானால் இவர்கள் பெற்ற புத்திரர்களாயினும் நல்லமார்க்கத்தில் வழிப்பட்டுநடப்பார்கள். புறுக்கானுல் ஹமீ மென்னும் வேதமும் எல்லாத்திசைகளிலும் பரவித் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கத்தினது முறைமையைச் செய்யா நிற்கும். (௯௯)

வான நாயக னேவலுக் குரியவ மகிழ்வினி
யானி னைத்திடும் பொழுதினில் வருகவிற் றையினுந்
தான மீதினிற் செல்கவென் றிசைத்தனர் தளரா
தான செய்கையி தெனவெழுந் தனர்மலைக் கரசர்.

(இ-ள்.) அன்றியும், வானலோகத்தினது நாயகனுகிய அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் ஏவற்றொழிலுக்குச் சொந்தமானவரே! சந்தோஷத் தோடும் நான் சிந்திக்குஞ் சமயத்தில் வருவீராக இன்றையத்தினத்தில் உமது தானமாகிய இருப் பிடத்திற்குப் போகுமென்று கூறினுர்கள். உடனே பருப்பத இராஜா வாகிய அந்தமலைக்கானவர் தளர்ச்சி பெருதான தொழில் இஃதென்று எழும்பினுர்.

உள்ள மீதிலன் பொடுநபிக் குயர்சலா முரைத்து
வெள்ளி டைப்படர்ந் தவணடைந் தனர்மலர் விரிந்து
கள்ள லம்பிய பொழில்செறி கருணுத ஆலிப்
வள்ள லாரிருந் தனர்புவி யிடையெழு மதிபோல்.

(இ-ள்.) அவ்வாறு எழும்பி அவர் மனசின்கண் கிருபையோடு நாயகம் நபிகட் பெருமானுர் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு மேலான சலா மோதி வெள்ளிய தானத்தில் படர்தலுற்று அந்த வானலோகத்தின்கண் போய்ச் சேர்ந்தார். வள்ளலா ராகிய நபிகணுயகமவர்கள் புஷ்பங்களானவை மலர்ந்து நறவ மானது அலம்பப்பெற்ற சோலைகள் நெருங்கிய கருணுதாலி பென்னு மிடத்தில் பூமியின்கண் எழா நிற்கும் சந்திரனைப்போலு மிருந்தார்கள். (௯௫)

பருப்பதராஜனைக் கண்ணுற்ற படலம்

முற்றிற்று.

ஆகபடலம் ௬௭-க்குத் திருவிருத்தம்-௪௦௦௨.

அத்தா சீமான் கொண்ட படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மறைகலை புகழ்ந்த செவ்வி முகம்மது தனித்துத் தாக
நிறையொடும் பசியுந் துன்னி நீணெறி யிருப்ப வவ்வூ
ரிறபீஆ புதல்வர் தம்மி லிருவர்க ளினிது நோக்கிக்
குறைவிலா மனத்தி னோர்ந்து மனையிடங் குறுகி னால்.

(இ-ள்.) வேத சாஸ்திரங்கள் துதியாநிற்கும் அழகை யுடைய நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபிகட் பிரானூர் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் ஏகமாய் நிறைந்த தாகத்துடன் பசியும் நெருக்கமுற்று நீண்ட அந்தப் பாதையின்கண் இருக்க, அதை அக்கருனு தாலி பென்னும் பதியிலுள்ள இறபீஆ வென்பவனின் புத்திரர்களில் இருவர்கள் இனிமையுடன் பார்த்துக் குறை வற்ற மனசின்கண் ஓர்ந்து தமது வீட்டினிடத்துப் போய்ச் சேர்ந்தார்கள். (க)

அன்னவர் தொழும்ப னத்தா சென்பவ னவனைக் கூவிக்
கன்னலஞ் சுவையின் மிக்காங் கிரிகையின் கனியை யேந்தி
யின்னணங் கொடுபோ யாண்டி னிருப்பவர் கரத்தி னீந்து
பன்னரும் பசியை மாற்றி வாவெனப் பரிவிற் சொன்னார்.

(இ-ள்.) அவ்வாறு சேர்ந்த அந்த இறபீஆ வென்பவனின் புத்திரர்கள் தங்களின் தொண்டனாகிய அத்தா சென்று கூறப்பட்டவனை அவனைக் கூப்பிட்டு அழகிய கரும்பினது இரசத்திலு மதிகமாகிய முந்திரிகைப் பழத்தை இவ்விதம் ஏந்தி கொண்டு சென்று அந்தத் தானத்தி லிருக்கப் பட்டவரின் கையிற் கொடுத்துச் சொல்லுதற்கரிய பசியை நீக்கி வருவாயாக வென்று அன்போடுங் கூறினார்கள். (உ)

காசறுந் தட்டத் திட்ட பழத்தினைக் கரத்தி லேந்தித்
தூசினிற் பொதிந்து தோளிற் சுமந்தரு நெறியை முன்னிப்
பாசடைத் தருக்க ளியாவும் பலமலர் சொரிய வாய்ந்த
வாசமூ டுலவுஞ் செவ்வி முகம்மது திருமுன் வைத்தான்.

(இ-ள்.) அவ்விதம் அவர்கள் கூற அத்தொண்டனாகிய அத்தா சென்பவன் குற்ற மற்ற தட்டத்தின்கண் இடப்பட்டக் கனியைக்

கைகளாற் றூங்கி வஸ்திரத்தினால் மூடித் தோளின்கண் வைத்துச் சுமந்து அருமையான பாதையை நெருங்கிச் சென்று பசிய தளிர்களைக் கொண்ட மரங்களனைத்தும் பல புஷ்பங்களைச் சிந்தச் சிறந்த பரிமளமானது எவ்விடத்து முலவாநிற்கும் அழகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் தெய்வீகந் தங்கிய முன்னால் வைத்தான். (ங)

கனியினைக் கொணர்ந்து வைத்தோன் செம்முகம் கவின நோக்கி
யினிதினி லிருக்கை யீந்திட் டெழிற்செழுங் கமலக் கையாற்
பனிமலர்த் துகிலை நீத்துப் பழத்தினைத் தீண்டி யின்ப
மனையநல் பிசுமி லோதி யமுதென நுகர்தல் செய்தார்.

(இ-ள்.) அந்தப் பழத்தை அவ்வாறு கொண்டு வந்து வைத்தவனாகிய அத்தா சென்பவனின் செவந்த முகத்தை நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அழகோடும் பார்த்து அவனுக்கு இனிமையுடன் இருக்கை கொடுத்து அழகிய செழுமையான தாமரை மலர்போலும் தங்களின் கையினால் குளிர்ச்சி தங்கிய புஷ்பத்தை நிகர்த்த அந்த வஸ்திரத்தை நீத்துப் பழத்தைத் தொட்டு இன்பத்தைப்போன்ற நன்மை பொருந்திய "பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீ" மென்று கூறி அமுதத்தை யொத்து அருந்தினார்கள். (ச)

பண்ணினு மினிய தேன்சார் பழத்தினிற் பசியைப் போக்கி
யுண்ணிறை யுவகை கூர்ந்தெவ் வூரவ னின்பே ரேதென்
றண்ணலு முரைப்பச் செவ்வி யகமகிழ்ந் தத்தா சென்போன்
புண்ணியப் பொருளே யென்னப் போற்றிவாய் புதைத்துச் சொல்வான்.

(இ-ள்.) அவ்வண்ண மருந்திய அண்ணலாகிய நபிகட் பிரானார் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களும் இசைப் பாட்டைப் பார்க்கிலும் இனிமை யான நறவ மானது பொருந்திய கனியினால் தங்களின் பசியை யொழித்து மனசின்கண் நிறைந்த சந்தோஷமானது அதிகரிக்கப்பெற்று நீ எந்த ஊரையுடையவன்? உனது நாமம் யாது? என்று கேட்க, அந்த அத்தா சென்பவன் அழகிய மனக்களிப் படைந்து தரும வஸ்துவே! என்று சொல்லித் துதித்து வாயைப் பொத்திக் கூற ஆரம்பித்தான். (ரு)

நள்ளென வுலகி னூழின் வருநசு றூனி மார்க்கத்
துள்ளவ னீனவா வென்றோதிய வூரி னுள்ளேன்

றெள்ளிய னிறபி ஆதன் றிருமனைக் கிணகன் சேர்ந்த
வள்ளிலை வேலோ யத்தா சென்பவ னடியே னென்றான்

(இ-ள்.) செந் நிறத்தைக் கொண்ட மாமிசத்தை அள்ளுகின்ற இலைகளைப் பெற்ற வேலாயுதத்தை யுடையவரே! அடியேனாகிய யான் நடு வென்று சொல்லாநிற்கும் இந்தப் பூமியினிடத்து ஆதியில் வந்த நசுறானி மார்க்கத்தி லுள்ளவன் ஈனவா வென்று கூறிய நகரத்தின் கண்ணுள்ளவன். கல்வியிற் சிறந்தவனான இறபிஆ வென்பவனின் அழகிய வீட்டினது வேலைக்காரன். அத்தா சென்னும் நாமத்தை யுடையவனென்று கூறினான். (௬)

விரிந்தமுன் மறைக டேர்ந்து மெய்ந்நெறி முறைமை நாளும்
பிரிந்திடா துரையூ னூசு நபியெனும் பெயரின் வள்ள
லிருந்தவூ ரவனோ வென்றா ரினிதின்முன் னவரை யின்னோர்
தெரிந்தவா றெவ்வா றென்னச் சிந்தையுட் சிந்தித் தானே

(இ-ள்.) அவன் அவ்விதம் கூற நபிகட் பெருமானாரவர்கள் விரிவைக் கொண்ட முன்னுள்ள வேதங்களைத் தெளிந்து சத்தியமாகிய மார்க்கத்தினது ஒழுங்கைப் பிரதி தினமும் பிரியாது கூறிய நபி யூனூ சலை கிஸ்ஸலா மென்னுந் திருநாமத்தை யுடைய வள்ளலானவர் தங்கிய நகரத்தை யுடையவனா? என்று கேட்டார்கள். அதனால் அவன் முன்னவராகிய அவரை இவர் இனிமையுடன் அறிந்த வழி எவ்வா றென்று தனது மனசின்கண் கருதினான். (௭)

பொன்னுலக மார் போற்றப் பூவிடை யிருந்த யூனு
சென்னுநன் னபியை நீவி ரெவ்வண மறிவீ ரென்ன
நன்னிலை யொடுமத் தாசு நவின்றனன் வணங்கி லாத
மன்னவர்க் குருமே றென்ன வருமுகம் மதுபின் சொல்வார்.

(இ-ள்.) அவ்வாறு கருதிய அத்தா சென்பவன் சொர்க்க லோகத்தின் கண்ணுள்ள தேவர்களான மலாயிக்கத்துமார்கள் துதிக்கும் வண்ணம் இந்தப் பூலோகத்தினிடத்து இருந்த யூனு சலை கிஸ்ஸலா மென்னும் நன்மையைக் கொண்ட நபியவர்களை நீவிர் நல்ல நிலைமையோடும் எவ்வித முணர்வீ ரென்றுகேட்டான். பின்னர் பணியாத அரசர்களுக்கு இடி யேற்றைப் போன்று வாராநிற்கும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் கூறுவார்கள். (௮)

டடியிடத் தினில்யூ னூசு நபியெனும் பட்டம் பெற்ளுேர்
நெடியவன் றூத ரியானு நபியெனு நிலைமை பெற்றேன்
வடிவுளோ யதனு லெற்கு மன்னுயிர்த் துணைவ ராகு
மடனபி மாரு மென்று ராரணங் கிடந்த வாயார்.

(இ-ள்) வேதங்க ளானவை கிடக்கப் பெற்ற வாயை யுடைய வர்க ளான காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல் லாகு அலைகி வசல்ல மவர்கள் அழகையுடைய அத்தா சென்பவ னே! இந்தப் பூலோகத்தின்கண் யூனுசு அலைகிஸ்ஸலா மவர்கள் நபி யென்னும் பட்டத்தைப் பெற்றவ ராகிய நெடியவ னுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் றசூ லானவர்கள். யானும் நபி யென்று கூறும் நிலைமையைப் பெற்றேன். அதனுல் வலிமையை யுடைய நபி மார்களும் எனக்குப் பொருந்திய உயிர்த் துணைவர்க ளாகுமென்று சொன்னுர்கள். (கூ)

நபிகளுக் கரசாய் வந்த நாயக முரைத்த மாற்றஞ்
செவியினிற் புகுத வுண்மைத் திருநபி யிவரே யென்னத்
தவிர்கிலா துள்ளத் துன்னிச் சரணிணை யிறைஞ்சி யேத்திக்
கவினுறுங் கலிமா வோதிக் கண்ணிணை களிப்ப நின்றுன்.

(இ-ள்.) நபிமார்களுக் கிராஜ ராக வந்த நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அவ்வாறு கூறி ய வார்த்தைக ளானவை அந்த அத்தா சென்பவனின் காதுகளில் நுழைய, உண்மையான தெய்வீகந் தங்கிய நபி இவர்களே யென்று தவிராது மனசின்கண் சிந்தித்து அவர்களின் இரு பாதங்களையுந் தொழுது துதித்து அழகு பொருந்திய "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர் றசூ லுல்லாஹி" யென்னும் கலிமாவைச் சொல்லி இர ண்டு கண்களும் மகிழும்படி நின்றுன். (கo)

மக்கநன் னகரில் வாழு முகம்மதுக் கத்தா சென்போ
னிக்கணத் தீமான் கொண்டா னெனுமொழி யிறபீ ஆதன்
மக்கள்கேட் டறவு நக்கி மாயவஞ் சகத்துட் புக்கிச்
சிக்கினன் ஞெழுப்ப னியாமென் செய்குவோ மென்ன நைந்தார்.

(இ-ள்.) நன்மை பொருந்திய மக்கமா நகரத்தில் வாழும் முகம் ம தென்பவனுக்கு அத்தா சென்று கூறப்பட்டவன் இச் சமயத்தில் ஈமான்கொண்டா னென்னும் வார்த்தையை இறபிஆ வென்பவனின்

புத்திரர்கள் தங்களின் காதுகளினுற் கேள்வியுற்று மிகவுஞ்சிரித்துத் தொண்டனுகிய அவன் அந்த முகம்மதின் மாயத்தைக் கொண்ட வஞ்சகத்தினகம் புகுந்து சிக்கினுன். அதற்கு நாம் என்னசெய்வோ மென்று சொல்லி நைத லுற்றுர்கள். (கக)

மதிபகிர் நபிக்கன் பாக மந்திரக் கலிமா வோதி
யிதயமொத் தினிதீ மான்கொண் டிருமனக் குபிரை நீத்துப்
பதமலர் துதித்துத் தேடாப் பலன்கதி படைத்தே னென்னப்
புதியநல் வடிவ னுகிப் பொருவிலைத் தாசு போனுன்.

(இ-ள்.) ஒப்பற்ற அத்தா சென்பவன் சந்திரனை இரண்டாகப் பகிரச்செய்த நாயகம் நபிகட் பிரானுர் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்கு அன்பாய்ப்புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது கலிமாவைச்சொல்லி மன மொத்து இனிமையோடும் ஈமான் கொண்டு பெரிய இருதயத்தினது குபிரை நீக்கி அவர்களின் பாதங்களாகிய தாமரைமலரைப் புகழ்ந்து தேடாத பலனை யுடைய மோட்சத்தைச் சம்பாதித் தேனென்று நல்ல நூதன சொரூபத்தை யுடையவனுய்த் தன்னிருப்பிடத்திற்குச் சென்றுன். (கஉ)

அத்தா சீமான் கொண்ட படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்-கஅ-க்குத்-திருவிருத்தம்-க௦கசு.

ஜின்க ளீமான்கொண்ட படலம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

படர்ந்துவண் டினந்தே னுண்டு செவ்வழி பாடுங் கஞ்சத்
தடங்கிகழ் கர்னுத ஆலி பென்னுமத் தலத்தை நீங்கிக்
கடங்கனிற் குபிரென் ரேுதுங் களிறட ரரியே றென்ன
நடந்துநன் னகுலாவென்னுந் தலத்தினை நண்ணி னுரால்.

(இ-ள்.) வண்டினது கூட்டங்கள் படர்ந்த லுற்று மதுவை யருந்திச் செவ்வழிப் பண்ணைப் பாடாநிற்கும் தாமரை மலர்களின் வாவிக

ளானவை விளங்கப்பெற்ற கர்ஙுத ஆலியென்னும் அந்த இடத்தை நாயகம் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல் லாகு அலைகிவசல்ல மவர்கள் விட்டுக் கடந்து குழி ரென்று சொல் லும் யானைகளை அடருகின்ற ஆண் சிங்கத்தைப் போன்று காட்டில் நடந்து நன்மை பொருந்திய நகுலாவென்னு மிடத்தில் வந்து சேர்ந் தார்கள். (க)

பொங்கிநின் றமர ரியாரும் பொன்னடி பரவி யேத்து
மங்குலங் கவிகை வள்ளன் முகம்மது நகுலாத் தன்னிற்
றங்கினர் பறவை தத்தங் குடம்பையிற் சார வாவிப்
பங்கயங் குவியச் செங்கே முலரிமேற் பரவை சார்ந்தான்.

(இ-ள்.) தேவர்களாகிய மலாயிக்கத்துமார்களெல்லாவரும் அதி கரித்து நின்று பொன் போலுஞ் சரணங்களை வணங்கித் துதிக்கும் அழகிய மேகக்குடையை யுடைய வள்ளலான நாயகம் நபி முகம் மது முஸ்தபா றசூசல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அந்த நகுலா வென்னுந் தலத்திற் றங்கி இருந்தார்கள். பட்சிகள் தங்களின் கூடு களிற் போ யடையவும், தடாகங்களிலுள்ள தாமரைமலர்களானவை கூம்பவும், செவந்த பிரகாசத்தைக் கொண்ட சூரிய னனவன் மேல் பாற் சமுத்திரத்தின்கண் போய்ச் சேர்ந்தான். (உ)

அலரிமேற் கடலுட் புக்க வடரிருட் படலஞ் சீப்ப
நிலவுகொப் பளித்த தென்ன நீண்டமெய்ச் சோதி கால
நலனுறு நகுலா வென்ன நாட்டிய தலத்தி னோர்பாற்
சலதரக் கவிகை யோங்கத் தனித்தவ ணிருந்தா ரிப்பால்.

(இ-ள்.) சூரியனனவன் அவ்வாறு மேல்பாற் சமுத்திரத்தி ன கம் போய் நுழைய நெருங்கிய இருளாகியபடலத்தைச்சீய்க்கும்வண் ணம் நிலவானது கொப்பளித்ததைப்போலும் நீண்ட திருமேனியி னது பிரகாசமானது ஒளிரவும், நன்மைபொருந்திய நகுலாவென்னு நாட்டப்பட்ட அத் தலத்தினது ஒரு பக்கத்தில் மேகக் குடையா னது ஓங்கும்படி ஏகமாய் அவ்விடத்தி லிருந்தார்க ளதன்பின்னர்.

அலைகடற் றிரைக்கு நாப்ப ணளிபா சனத்தில் வைகி
யுலகெலாங் கொடுங்கோ லோச்சி யொருகுடை நிழலிற் றங்கிப்
பலகலை மருவ லார்க்குப் படிறெனும் படைந டாத்துந் [ன்.
தலைமையன் சிறுமைகிழ்மை தனைப்பெரு மையதாய்க்கொண்டோ

(இ-ள்.) அலேயாநிற்கும் அலேகளேயுடைய சமுத்திரத்திற்கு மத்தியில் சிங்காசனத்தின்கண் தங்கி உலகங்க ளெல்லாவற்றிலுங் கொடிய செங்கோல் செலுத்தி ஒப்பற்ற குடையினது நிழலினற் ருங்கிப் பல நூல்களேப் பொருந்தாதவர்களுக்குப் பொய் யென்னுஞ் சேனையை நடத்தும் தலேமைத்தனத்தையுடையவன். சிறுமையையு ந்தாழ்மையையும் பெருமையாகக் கொண்டவன். (௪)

கொலேயினுக் குரிய தந்தை கோளுயிர்த் துணைவன் மாரு
நிலேகெடுங் களவுக் கன்ப னிந்தனேக் குற்ற தம்பி
யிலேபிழி மதுவுக் கீன்ற சேயினு மினிய னீண்ட
வுலகினின் மாய மெல்லா மோருரு வெடுத்து நின்ருேன்.

(இ-ள்.) அன்றியும், கொலேத் தொழிலுக்குச் சொந்த மாகிய பிதாவானவன். கோளுக்குப் பிராண சகோதர னுனவன். நீங்காத நிலேமை கெட்ட களவுக்கு அன்பனுனவன். நிந்தனேக்குப் பொருந்திய தம்பியானவன். இலேயிற் பிழியாநிற்கும் கள்ளுக்குப் பெற்ற பிள்ளேயிலும் இனிமையானவன். நீட்சியுற்ற இந்த வுலகத்தின் கண்ணுள்ள மாயங்க ளத்தனேயினுலும் ஓர் வடிவத்தை எடுத்து நின்றவன். (௫)

எண்ணிறந் தனேய கால மிருந்திறை யேவன் மாறி
விண்ணில மிழந்து மெய்ம்மை விதிமறை தனக்கு நாணி
மண்ணிலத் திருந்து வாழு மானுட ரெவர்க்கும் வெய்ய
தண்ணிய ளிபுலீ சென்னுந் தனிப்பெரு நாமத் தானே.

(இ-ள்.) அன்றியும், கணக்கற்றகாலம் இருக்கப்பெற்று இறைவனுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் ஏவற்ருெழிலேமாறிச் சுவர்க்க லோகத்தை யிழந்து சத்தியத்தை விதிக்காநிற்கும் வேதங்களுக்கு வெட்கமுற்று இந்தப் பூமியின்கண் ணிருந்து வாழும் மாந்தர்க ளியாவருக்கும் கொடிய தாழ்மையையுடைய இபுலீ சென்று கூறும் ஒப்பற்ற பெரிய பெயரை யுடையவன். (௬)

மக்கடங் குழுவின் வைகி மந்திரத் தலேவர் சூழ
மிக்கஜின் சிலதைக் கூவி விறன்முகம் மதுவை நீவி
ரிக்கணத் திற்றைப் போதி லெவ்விடத் துறைந்தா ரென்றென்
பக்கலி லுரைப்ப நோக்கி வம்மெனப் பரிவிற் சொன்னுன்.

(இ-ள்.) புத்திரர்களின் கூட்டத்தில் மந்திரத் தலேவர்கள் வளேயும் வண்ணம் தங்கி யிருந்து கொண்டு மேன்மையை யுடைய சில

ஜின்களை யழைத்து நீங்கள் வெற்றியைக் கொண்ட முகம்மதென்பவரை இன்றையப்பொழுதினது இந்தச்சமயத்தில் எந்த ஸ்தானத்தில் தாமதித் திருக்கிருரென்று பார்த்து என் னிடத்திற் கூறும்படி வாருங்களென்று அன் போடுஞ் சொன்னுன். (எ)

அருந்தவந் தவறி நின்ற வரசனீ துரைப்பக் கேட்டுப்
பெருந்தொகைக் குழுவி னேடும் பெரிதெழுந் தாழிசூழ
விருந்தவை யகத்தி காந்த மெட்டினுந் தேடிச் சென்று
பிரிந்ததி லொன்பான் ஜின்கள் பேரற படைந்த வன்றே.

(இ-ள்.) அருமையான தவத்தில் நின்றுந் தவறிநின்ற மன்னவனுகிய அந்த இபுலீசென்பவன் இந்த வார்த்தைகளை அவ்வாறுசொல்லக் கேள்வி யுற்றுப் பெரிய தொகையைக்கொண்ட கூட்டத்தோடும் பெரிதா யெழும்பிச் சமுத்திரமானது வளையும்வண்ணம் இருக்கப்பெற்ற இந்தப் பூமியினது எட்டுத் திசைகளின் முடிவுகளிலும் விசாரித்துப் போய் அதில் ஒன்பது ஜின்கள் பிரிந்து பெரிய அறபு தேசத்தைப் போய்ச் சேர்ந்தன. (அ)

அற்றையிற் பொழுதி ராவில் ரகசியத் தொழுகை யன்பாய்
முற்றுற முடித்து வள்ளன் முதலவன் றன்னை யேத்திக்
குற்றமற் றிரந்து நின்ற வசனத்தின் குறிப்புக் காதி
னுற்றடுத் தொருங்கு நோக்கி யோரிடத் துறைந்த வன்றே.

(இ-ள்.) அவ்வாறு போய்ச் சேரவே வள்ளலாகிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அன்றையத் தின பொழுதில்இராக் காலத்தில் அன்பாக இரகசியத்தைக் கொண்ட தொழுகையை முடியும்படி தொழுது நிறைவேற்றியாவற்றிற்கும் முதன்மையை யுடையவனுனஜல்ல ஜலாலகுவத்த ஆலாவைப் புகழ்ந்து களங்க மில்லாது வேண்டி நின்ற வார்த்தைகளின் குறிப் பானது காதுகளிற் பொருந்தி நெருங்கி ஒழுங்காகப்பார்த்து ஓரிடத்தில் தங்கி யிருந்தன. (கூ)

தரிப்பொடுந் துவாவை யோதித் தனிநபிகுலாவி னேர்பால்
விருப்பொடு மிரப்பக் கேட்டு மிகமகிழ்ந் திதய நோக்கி
யிருப்பது நபியே வாய்கொண் டிசைப்பது புறுக்கா னென்னத்
திருப்புதற் கரிதாய் நின்று ஜின்கண்மெய் சிலிர்த்த வன்றே.

(இ-ள்.) அவ்வாறு ஒப்பற்ற நகுலா வென்னுந் தலத்தினது ஒரு பக்கத்தில் தரித்தலுடன் ஆசையோடு துஆவை ஓதி இரக்கத் தங்களின் காதுகளினாற் கேள்வியுற்று மனமானது அதிகங் களிக்கப் பெற்றுப் பார்த்து இவ்விடத்தில் தங்கி யிருப்பது நபி முகம்மதென்பவர். வாயிற்கொண்டு ஓதுவது புறுக்கானுல் அலீ மென்னும் வேதமென்று திரும்புதற் கரிதாக நின்று அந்த ஒன்பது ஜின்களும் தங்களின் சரீரங்க ளானவை சிலிர்க்கப் பெற்றன. (௧0)

இத்தினத் தினிலன் பாக வெழினபி கமல பாத
முத்திபெற் றீமான் கொண்டு முதற்பவந் துடைப்போ மென்ன
வொத்தித மித்துத் தம்மி லொன்றுக்கொன் றுறுதி கூறிப்
பத்தியுள் ளிருத்தி நாட்டத் துடன்வெளிப் பட்ட வன்றே.

(இ-ள்.) அவ்வாறு சிலிர்க்கப் பெற்ற ஜின்கள் இந்த நாளில் அன்பாக அழகிய நபி யாகிய முகம்மதென்பவரின் தாமரை மலர் போலும் திருவடிகளின் மோட்சத்தை யடைந்து ஈமான் கொண்டு ஆதியி லுள்ள பாவங்களை இல்லாமற் செய்வோ மென்று தம்மில் ஒன்றுக்கொன்று சம்மதித்து இணங்கி யுறுதி சொல்லி மனசின் கண் விசுவாசத்தை இருக்கும்படி செய்து ஆசை யோடும் வெளிப் பட்டன. (௧௧)

பனியொடு திமிர மூடப் படவரு மிரவின் கண்ணே
தனியிருந் தெழின் மெய்ச்சோதி தயங்கிய நபிமுன் பாக
வினியவர் போலச் சென்று வந்தவா றெடுத்து கூறிக்
கனியென நெகிழ்ந்து நெஞ்சிற் கருதையுங் கூற லுற்ற.

(இ-ள்.) அவ்விதம் வெளிப்பட்ட அந்த ஜின்கள் பனியுடன் இருளானது மூடும் வண்ணம் வராநிற்கும் அந்த இராவி னிடத்து ஏகமாயிருந்து அழகிய திருமேனியினது பிரகாசம் விளங்கப்பெற்ற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களினது முன்பாக மேன்மையை யுடையவர்கள் போலப் போய் தாங்கள் வந்த வரலாற்றை எடுத்துச் சொல்லிக் கனியைப் போலும் நெகிழ்த லுற்றுத் தங்களின் இருதயத்தின் கண்ணுள்ள சிந்தனையையும் கூறத்தொடங்கின. (௧௨)

பின்னணித் தாதி தூதர் பிறப்பரென் றுதி நூல்கள்
பன்னிய துளதின் றெங்கட் பார்வைகள் குளிரக் கண்டே

முன்னைநாட் பவங்க ளெத்தே முகம்மதே யென்னப் போற்றிச்
சொன்னயக் கலிமா வோதிச் சுடர்ப்பதந் தொழுது போன.

(இ-ள்.) முகம்ம தென்னுந் திரு நாமத்தை யுடையவர்களே! யாவற்றிற்கும் முதன்மையனை அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் றசூலானவர் பின்னர் சமீபமாய் இவ்வுலகத்தின்கண் அவதரிப்பார்களென்று வேதங்கள் கூறிய துண்டு. அதை இன்றையத் தினம் எங்கள் கண்கள் குளிரும் வண்ணம் பார்த்தோம் முந்திய நாள்களிலுள்ள பாவங்களை யொழித்தோம். என்று சொல்லித் துதித்துச் சொல்லினது நயத்தைக் கொண்ட "லாயிலாஹ இல்லல்லாகு முகம்மதுர் றசூ லுல்லாஹி" யென்னுங் கலிமாவைக் கூறிப் பிரகாசந் தங்கிய அவர்களின் திருவடிகளை வணங்கித் தங்களின் இருப்பிடத்திற்குச் சென்றன, (௧௩)

நன்கலி மாவை யோதி நறுமனக் களிப்பி னோடும்
ஜின்கடம் மினத்தைச் சேர்ந்து சென்றது மறபு நாட்டின்
மின்கடந் திலங்குஞ் சோதி விரிந்தமெய்ம் முகம்ம தென்னுங்
கொன்கதிர் வேலார்க் கிமான் கொண்டது முறைத்துக் கூறும்.

(இ-ள்.) நன்மை பொருந்திய கலிமாவை அவ்வாறு கூறி நறிய மனமகிழ்ச்சியோடும் ஜின்களின் கூட்டத்தைச் சேர்ந்து அறபு நாட்டின்கண் போனதும், மின்னலை ஜெயித்து ஒளிராநிற்கும் பிரகாசமானது விரியப்பெற்ற திருமேனியையுடைய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமென்னும் அச்சத்தைத் தருகின்ற கிரணங்களைக் கொண்ட வேலாயுதத்தை யுடையவர்களுக்கு ஈமான் கொண்டதையும், சொல்லிப் பின்னுஞ் சொல்லும். (௧௪)

பூதலத் திடத்தின் மக்கா புரத்தினின் முகம்ம தென்போர்க்
காதித னருளாற் றூதென் றருநபிப் பட்டம் வந்து
வேதமு மிறங்கிற் றின்பத் தீனெறி விளக்கஞ் செய்தார்
பேதம தன்று காணு திருப்பதும் பிழைய தன்றே.

(இ-ள்.) இந்தப் பூமியின்கண் திரு மக்கமா நகரத்தில் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு யாவற்றிற்கும் முதன்மையனை ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவினது கிருபையினுல் றசூலென்று அருமையாகிய நபிப்பட்டம் வந்து புறுக்கானுல் அலீ மென்னும் வேதமு மிறங்கிற்று

அவர்கள் இனிமையினது தீனுல் இல்லா மென்னும் மார்க்கத்தை எவ்விடமும் விளக்கஞ் செய்தார்கள். அஃது மாறுபா டான தல்ல, அவர்களைப் பாரா திருப்பதுங் குற்ற மானது. (௧௫)

வஞ்சக னிபுலீ சென்போன் வார்த்தையுள் ளடக்கிப் பேதை
நெஞ்சின ராகித் தீயோ ரெனநிலை நின்றேம் வேறொன்
றஞ்சலித் தறியோம் நல்லோர்க் கவம்விளைத் தோமீ தெல்லாம்
நஞ்சுறை நரகம் புக்கு நெறியலா னலனு முண்டோ.

(இ-ள்.) அன்றியும் வஞ்சக னுகிய இபுலி சென்பவனின்வார்த்தைகளை மனசின்கண் அடக்கஞ்செய்து மூடத்தனத்தைக்கொண்ட இரு தயத்தை யுடையவர்க ளாகித் தீயர்க ளென்று சொல்லும்படியான நிலைமையில்நின்றேம் வேறே யொன்றைவணங்கி யறியமாட்டோம் நல்ல ஜனங்களுக்கு வீணான கருமங்களைச் செய்தோம் இஃதனைத்தும் விஷமானது தங்கப் பெற்ற நரக லோகம்போய்ச் சேரும் மார்க்கமே யல்லாமல் இதிற் பிரயோசனமு முளதோ? இல்லை. (௧௬)

நபிதிருப் பாதம் நண்ணி நன்னெறி முடைவ ழாதோர்
புவியிடத் தினிது வாழ்ந்து பொன்னுல காள்வ ரென்றார்
கவினுறும் பெரியோர் வேதங் காட்டிய நெறியு மீதே
தவிர்கிலா தெழுக வென்னச் சாற்றின ஜின்க ளன்றே

(இ-ள்.) அன்றியுப் அந்த ஜின்கள் நபிகட் பெருமானார் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் தெய்வீகந் தங்கிய சரணங்களை யடைந்து நல்ல சன்மார்க்கத்தினது முறையில் நின்றும் வழுவாதவர்கள் இந்தப் பூமியின்கண் இனிமையுடன் வாழ்ந்து சுவர்க்க லோகத்தை யாள்வார்க ளென்று அழகு பொருந்திய பெரியோர்கள்கூறினூர்கள் வேதங்கள் காட்டியமார்க்கமுமிஃதே ஆதலால் நீங்கள் தவிராது எழும்புங்க ளென்று கூறின.

கூறிய மொழியைக் கேட்டுக் குழுவுட னிருந்த ஜின்க
டேறிய கருத்து ளொத்துத் தேர்ந்தெழுந் தவிட நீங்திப்
பேறுடை மக்க மென்னும் பெரும்பதி யடுத்தோர் ஜின்னை
யீறிலான் றூதர்க் கன்பாய்த் தூதுவிட் டிருந்த வன்றே.

(இ-ள்.) அந்தஜின்கள் அவ்வாறு கூறியவார்த்தைகளைத் தங்கள் காதுகளினூற்கேள்வியுற்றுக் கூட்டத்தோடுமிருந்தஜின்கள் தெளிந்த கருத்தினகம் சம்மதித்துத் தேர்ச்சியுற்றெழும்பி அந்த இடத்தைக்

கடந்து மோட்சத்தை யுடைய திரு மக்க மென்னும் பெரிய நகரத்தைச் சமீபித்து ஒரு ஜின்னை ஒரு காலத்தும் முடிவற்றவ னுனஜல்லஷஹுனஹு வத்த ஆலாவின் தூதுவ ராகியநாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு அன்பாகத்தூதாய் அனுப்பி விட்டு அவ் விடத்தில் தானே இருந்தன. (கஅ)

நறைகொளுஞ் செவ்வித் திண்டோ ணபிநகு லாவை நீத்தி
யிறைவனே வலினுல் வானே ரெண்ணிலர் சூழச் செல்வங்
குறைவறு மக்க மென்னுங் கொழுநக ரதனின் வந்தார்
மறைபட விருந்து ஜின்கள் வரவிடுந் தூதும் வந்த.

(இ-ள்.) பரிமளத்தைக் கொண்ட அழகிய திண்ணிய புயங்களையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் நகுலா வென்னும் அந்தத் தலத்தைவிட்டுக்கடந்து இறைவனுகிய அல்லாகு சுபுகானகுவத்தஆலாவின் ஏவலினுல் கணக்கற்றவர்க ளான மலாயிக்கத்துமார்கள் தங்களை வளையும் வண்ணம் வளமானது குறையாத திருமக்கமென்னும் செழிய ஊரின்கண் வந்து சேர்ந்தார்கள் ஜின்கள் மறைவாக இருந்து அனுப்பும்தூதும் வந்து சேர்ந்தது. (கசு)

வநதது திருந்த செவ்வி மதிமுகப் மதுவைக் கண்டு
கந்தமென் மலர்த்தாள் வீழ்ந்து கைகுவித் தெழுந்து போற்றிச்
சிந்தையின் மகிழ்ந்தன் பாக ஜின்களால் விடுக்க வந்த
சந்தியா னென்னச் சாற்றிப் பின்னருஞ் சாற்று மன்றே.

(இ-ள்.) அவ்வாறு வந்த தூதாகிய ஜின் னுனது அங்கு தங்கியிருந்த அழகிய சந்திரனைப் போலும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களைக் கண்களினுற் கண்டு வாசனையைக் கொண்ட மெல்லிய தாமரை மலரை நிகர்த்த பாதங்களில் விழுந்து இரண்டு கைகளையுங்கூப்பி எழுந்து துதித்து மனசின்னிடத்து களிப்படைந்து அன்பாக நான் ஜின்களினுல் அனுப்பவந்த தூதுவ னென்று கூறிப் பின்னருங் கூறுநிற்கும். (உ௦)

எங்கடங் குலத்தி னுள்ளா ரெண்ணிலர் நகர்க்க ணித்தாய்
மங்குலின் கவிகை யோய்நும் மலர்ப்பதங் கண்டு தீனி
னிங்கிதத் தொடுமீ மான்கொண் டேகுதற் கிசைந்து நின்று
ரங்கெழுந் தருள வேண்டு மென்றினி தரைந்த தன்றே

(இ-ள்.) மேகக் குடையை யுடைய முகம்ம தென்னுந் திருநாமத்தை யுடையவரே ! எங்களின் கூட்டத்தி லுள்ளவர்க ளானகணக்கற்றவர்க ளாகிய ஜின்கள் இந்தத் திரு மக்கமா நகரத்திற்குச் சமீபமாய் வந்து உங்கள் தாமரை மலர்போலு மிரு பாதங்களையும் பார்த்துத் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தில் இனிமையுடன் ஈமான் கொண்டு போவதற்குப் பொருந்தி நின்றார்கள். தாங்கள் அவ்விடத்திற்கு எழுந்தருள வேண்டு மென்று இனிமையோடுங் கூறிற்று

ஜின்னிவை யுரைப்பக் கஞ்சச் செழுமுக மலர்ந்து வேதம் (௨௧)
பன்னிய பிசுமி லோதிப் பண்புட னெழுந்து வள்ளல்
பொன்னணி மாட வீதி நகர்ப்புறத் தடுத்துக் கூண்டு
மன்னிய குழுவின் வந்தார் மாநிலந் தழைக்க வந்தார்.

(இ-ள்.) மகத் தாகிய இந்தப் பூலோக மானது தழைக்கும்வண்ணம் வந்தவர்க ளான வள்ளல் நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அந்த ஜின்னனது இவைகளைக் கூறத், தாமரை மலர்போலும் செழிய முகமானது மலர்ச்சி யுறறுப் புறுக்கானுல் அலீ மென்னும் வேத மானது உரைத்த "பிஸ்மில்லாஹிற் றஹ்மா னிர்றஹீ" மென்று கூறிப் பண்போடு மெழும்பிப்பொன்னினுற் செய்த அழகிய மாடங்களைக் கொண்ட வீதிகளை யுடைய அந்தத் திரு மக்கமாநகரத்தினது புறத்தைச் சமீபித்து ஒருங்கு சேர்ந்து பொருந்திய கூட்ட மாகிய அஜ்ஜின்க ளிடத்தில் வந்து சேர்ந்தார்கள். (௨௨)

கருமுகி னிழற்றக் கஞ்சக் கதந்தரை படாது நானம்
பொருவறக் கமழ வந்த புண்ணியப் பொருளைக் கண்டு
திருமுகத் தெதிர்ந்து ஜின்க டிரளொடு மிறைஞ்சி வாழ்த்திப்
பருவர லகற்றித் தேறச் சிலமொழி பகரு மன்றே.

(இ-ள்.) கரிய நிறத்தைக் கொண்ட மேகங்க ளானவை நிழலைச் செய்யவும், தாமரை மலர் போலும் பாதங்கள் பூமியிற் படாமல்கஸ்தூரி வாசனை ஒப்பறக் கமழவும், அவ்வாறு வந்த புண்ணியப்பொருளாகிய நாயகம்நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களை அந்த ஜின்கள் தங்களின் கண்களினுற் பார்த்துத்

தெய்வீகந் தங்கிய முகத்தி லெதிர்ந்து கூட்டத்தோடுந் தொழுது புகழ்ந்து துன்பங்களை யொழித்துத்தெளியும்படிசிலவார்த்தைகளைக் கூறுநிற்கும். (உகூ)

வானகத் தமரர் செய்ய மலரடி பரவி யேத்த
நானிலத் தரிய வேத நபியெனும் பட்ட மும்பா
லானதற் குரித்தா யெங்க ளகத்தினிற் களங்க மென்னு
மூனமற் றிடவே றுண்மை யுறுதியொன் றறிய வேண்டும்.

(இ-ள்.) வான லோகத்தின் கண்ணுள்ள தேவர்க ளாகிய மலா யிக்கத்து மார்கள் தொழுது துதிக்கும் வண்ணம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருத மென்னும் நான்கு நிலங்களை யுடைய இந்தப்பூலோ கத்தினிடத்து அருமை யான புறுக்கானுல் அலீ மென்னும்வேதத் தினது நபி யென்று கூறும் பட்ட மானது உங்க ளிடத்தில்ஆனதற் கு உரியதாய் எங்களது மனசிற் களங்க மென்னும் குற்றம் அற்றுப் போக வேறே யுண்மை யாகிய ஓ ருறுதி யானது தெரிய வேண்டும்

வன்களங் ககற்றித் தீனின் வழிநிலை குறித்து வந்த
ஜின்களிற் றலைமை யான ஜின்களிவ் வுரையைத் தேற்றப்
பொன்கடங் தொளிருந் திண்டோட் புரவல ரிறசூ லுல்லா
வின்களிப் பொழுக நோக்கி யெடுத்துரை கொடுப்பதானூர்.

(இ-ள்.) கொடிய குற்றத்தை யொழித்துத்தீனுல் இஸ்லாமென் னும் மார்க்கத் தினது நிலைமையைக் குறிப்பிட்டு வந்த ஜின்களிற் றலைமைத் தனத்தை யுடைய ஜின் னானது இந்தவார்த்தைகளைத்தே றும்படி கூறப் பொன் னுனது கிடங் தொளிராநிற்கும்திண்ணியபுய ங்களை யுடைய புரவல ரான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் இனிமை யாகிய மகிழ்ச்சியான து சிந்தும் வண்ணம் பார்த்து வார்த்தைகளை எடுத்துச் சொல்ல லானூர்கள். (உரு)

குவடுறை விலங்கி னுலோ கொழுஞ்சிறைப் பறவையாலோ
தவழ்தரு முயிரி னுலோ தருக்களி னுலோ வுங்கள்
செவியறிந் திதயங் கூர்ந்து தெரிதர வென்னை யிந்த
வவனியி லுண்மைத் தூதென் றறியவேண் டுவதே தென்றூர்

(இ-ள்.) மலையின்கண் தங்காநிற்கும் மிருகங்களினுலோ? செழிய சிறகுகளை யுடைய பட்சிகளினுலோ? தவழ்ந்து திரிகின்ற ஜீ

வப்பிராணிகளி னாலோ? மரங்களி னாலோ? உங்களின் காதுகளானவை யுணரப் பெற்று மனங் கூர்ந்து என்னை இந்தப் பூமியி னிடத்து மெய்மையான றசூலென்று தெரிய வேண்டுவதுஎதென்றுகேட்டார்கள்.

பேத மற்றுரைத்தீர் சோதி பெருகுதீன் விளக்கே யிந்தப்
பாதையிற் றருவந் தெங்கள் பார்வையிற் கணித்தாய் நின்று
தூதுவ ரென்றோர் மாற்றஞ் சொல்லுமேற் கலிமா வோதிக்
கோதற மனத்து ஈமான் கொள்வது திண்ண மென்ற.

(இ-ள்.) அவ்வாறு கேட்கவே அந்த ஜின்கள் பிரகாச மானது ஓங்காநிற்கும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தினது தீப மாகிய முகம்ம தென்னுந் திரு நாமத்தை யுடையவர்களே! நீங்கள் மாறுபாடின்றிக் கூறுனீர்கள் இந்த வழியின் கண்ணுள்ள மர மானது வந்து எங்களது பார்வைக்குச் சமீபமாய் நின்று றசூலென்று ஒரு வார்த்தை கூறுமே யானால் குற்ற மறக் கலிமாச் சொல்லி இருதயத்தினகம் ஈமான் கொள்வது நிச்சயம். (௨௭)

கடத்தின்மா னுரைப்ப நின்ற காரணக் குரிசி றூரத்
திடத்தினி னின்ற வஞ்சித் தருவினை யெதிர்ந்து நோக்கிப்
படித்தலத் துறைந்த வேரின் பற்றறு தெழுந்து வெற்பி
னடுத்திவண் வாவென் றின்ப வமுதவாய் திறந்து சொன்னார்.

(இ-ள்.) காட்டின் கண்ணுள்ள மானனது உரைக்கும்படிநின்ற காரணத்தை யுடைய குரிசி லான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தொலையிற் றிடத் தோடும் நின்ற ஒரு வஞ்சி மரத்தை எதிர்த்துக் கண்களினாற் பார்த்துப் பூமியின்கண் தங்கிய வேர்களினது பற்றானது அற்றுப் போகா தெழும்பி மலையைச் சமீபித்து இவ்விடத்தில் வருவாயாக வென்றுஇனிமையையுடைய அமுத வாயைத் திறந்து கூறினார்கள் (௨௮)

பாசடை குழைத்த வஞ்சித் தருபடி துளைத்துள் ளோடி
வீசிய கவட்டுச் சில்லி வேரிலொன் றறுத வண்ண
மாசற வெழுந்து செவ்வி முகம்மதின் பாத நோக்கிக்
காசினி யிடத்திற் றோயக் கவின்பெறப் படிந்த தன்றே

(இ-ள்.) அவ்வாறு கூறப் பசிய தழைகளைக் குழைக்கப் பெற்ற அந்த வஞ்சி மரமானது பூமியைத் துளைத்து அகத்திலோடி எறிந்த கவட்டினது சில்லி வேர்களில் ஒன்றும் அறுத வண்ணம் குற்ற மற

எழும்பி அழகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் திருவடிகளைப் பார்த்து இப்பூமியின்கண் தோயும்படி அழகு பெறப் படிந்தது. (௨௯)

பலனுறுங் கலிமாத் தன்னைப் பனைரெனும் பலகை யார
நிலைபெறு மறபி னூனன் னெடுநிலத் தெழுதிச் சின்கள்.
குலனொடு மினிது காணக் கொழுந்தழை குழைப வூர்ந்து
கலைமுகம் மதுதம் முன்கண் களித்திட நின்ற தன்றே.

(இ-ள்.) அன்றியும், பிரயோசனத்தைப் பொருந்த பெற்ற கலிமாவைக் கிளைக ளென்று கூறும்பலகைகளினுற் பொருந்தும்படிநிலை பெற்ற அறபிப் பாஷையினுல் நல்ல நெடிய இந்தப் பூமியின்கண் வரைந்து அந்த ஜின்கள் தங்கள் கூட்டத் தோடும் இனிமை யுடன் பார்க்கும் வண்ணம் செழிய தழைக ளானவை குழைப் நகர்ந்து புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தை யுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் முன்னர் கண்க ளானவை களிக்க நின்றது. (௩௦)

நின்றமா மரத்தை நோக்கி நெறிபட வெவருங் கேட்ப
வின்றெனை யிவர்கட் கின்னு ரெனவிடுத் தியம்பு கென்ன
மன்றலங் குரிசில் கூற மலரிலை குலுங்க வாடா
வென்றிகொ ளிறையோ னுண்மைத் தூதென விளம்பிற் றன்றே,

(இ-ள்.) அவ்வாறு நின்ற மகத் தாகிய அந்த மரத்தைப் பார்த்து அழகிய வாசனையை யுடைய குரிசிலான நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல்சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் ஒழுங்காக யாவர் களுந் தங்களின் காதுகளினுற் கேட்கும்படி இன்றையத் தினம் என்னை இவர்களுக்கு இன்னு ரென்று விட்டுக் கூறுவயாக வென்று சொல்லத் தனது புஷ்பங்களும் இலைகளும் குலுங்கும்வண்ணம்சோராத வெற்றியைக் கொண்ட இறைவ னன அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் மெய்மையாகிய றசூ லென்று கூறிற்று. (௩௧)

சாடினி தெழுந்து வந்து தவறிலா துரைத்த மாற்றங்
கூடிய ஜின்க ளெல்லாஞ் செவிமனங் குளிரக்கேட்டு
நீடிய வுவகை யென்னு நெடுங்கட னீந்தி நீந்தித்
தேடிய பொருளி தென்னச் சேவடி சிரசிற் கொண்ட

(இ-ள்.) அந்த மாயானது குதித்துஇனிமையுட னெழும்பிவந்து குற்ற மில்லாது அவ்வாறு கூறிய வார்த்தைகளை அங்கு கூடிய ஜின்கள் யாவும் தங்களின் காதுகளும் இருதயமும்குளிர்ச்சி யடையும்படி கேள்வி யுற்று நீண்ட சந்தோஷ மென்னும் நெடிய சமுத்திரத்தில் நீந்தி நீந்தி நாம்தேடிய பொருள் இஃதென்று செவந்தபாதங்களைத் தங்களின் தலை மேற் கொண்டன. (௩௨)

சீதமென் கவிகை நீழற் றிருநபி யிறசூ லுல்லா
பாதபங் கயத்தை முத்திக் கண்மலர் பரிவிற் சாத்திக்
கோதறுங் கலிமா வோதிக் குழுவொடு மீமான் கொண்டு
வேதநன் னிலைமை நீங்கா மெய்ந்நெறி மேவி நின்ற.

(இ-ள்.) அக்குறியும்மெல்லிய மேகக்குடையினது நிழலை யுடைய தெய்வீகந் தங்கிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் சரணங்க ளாகிய தாமரை மலரை மோந்து கண்க ளான புஷ்பத்தை அன்போடும் சாத்தித் தங்களின் கூட்டத் துடன் குற்ற மற்ற லாயிலாஹ இல்லல்லாகு முகம்மதுர் றசூ லுல்லாஹி யென்னுங் கலிமாவைச் சொல்லி ஈமான் கொண்டு புறுக்கானுல் அலீ மென்னும் வேதத்தினது நல்ல நிலைமை யானது மாறுத சத்திய மார்க்கத்தைப் பொருந்தி நின்றன. (௩௩)

கலைநெறி டகரும் வள்ளல் கானகத் தருவை நோக்கி
யுலைவிலா துனது தானத் துறைகென வுரைப்பத் தீனி
னலனுறு மபுல்கா சீம்தம் நல்லிசை திசைக டோறு
நிலைபெற நின்ற தென்ன நெறிசென்று நின்ற தன்றே,

(இ-ள்) அவ்வாறு நிற்கவே வேதத்தினதுஒழுங்குகளைக் கூறி நிற்கும் வள்ள லாகிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைசி வசல்ல மவர்கள் காட்டின்கண்ணுள்ள அந்தமரத்தைப் பார்த்து உலை வில்லாது உனது தலத்தில் போய்த் தங்குவாயாக வென்று சொல்லத். தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தினது நலத்தைப் பொருந்திய இந் நூலினது உதார நாயக னான அபுல்காசி மென்பவனின் நல்ல கீர்த்தி யானது திக்குகள்தோறும்நிலைபெறும் வண்ணம் நின்றதைப் போலப் பாதையின்கண் போய் நின்றது.

கணத்தொடும் ஜின்கள் வள்ளல் கமலமென் முகத்தை நோக்கி
யிணைத்தநன் னெறியி னின்றே மின்றுதொட் டினிமே லுங்கட்
குணத்தக்க வுணவீ தென்ன தெனவெடுத் துரையு மென்னப்
பணிந்துவாய் புதைத்து நின்று பண்புறப் பகர்ந்த வன்றே.

(இ-ள்.) அப்போது அந்த ஜின்கள் தங்கள் கூட்டத்தோடும் வள்ளலாகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் தாமரை மலர் போலும் மெல்லிய முகத்தைப் பார்த்து நாங்கள் சேர்க்கப்பட்ட நல்ல சன்மார்க்கத்தில் நின்றோம் இன்று தொட்டு இனிமேல் உங்களுக்கு அருந்தத் தக்க ஆகாரமிது வென்றுஎடுத்துச் சொல்லுங்களென்றுவணங்கிவாய் பொத்தி நின்று பண்புறக் கூறின. (ருரு)

பறவையில் விலங்கி லுள்ள படைப்பினிற் றக்கு பிரி
யிறையவன் விதித்த வண்ணந் திறந்ததென் பவையு நுங்கட்
குறைபசிக் குணவென் றன்பா யோதினர் கேட்டு மீட்டு
மறுவற வெங்கட் குற்ற வாகனத் துணவே தென்ற.

(இ-ள்.) அந்த ஜின்கள் அவ்வாறு கூற நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் பட்சிகளிலும் மிருகங்களிலு முள்ள சிருட்டிகளில் தக்குபீறில் இறைவ னான ஹக்கு சுபுகானகுவத்தஆலா வானவன் கற்பித்தபடி மரித்தஎலும்புகளாகிய அவைகளும் உங்களுக்குத் தங்கியபசிக்கு ஆகாரமென்று அன்பாய்க் கூறினர்கள் அதைக் காதுகளினாற் கேள்வியுற்றுத் திரும்பியும் எங்களுக்குப் பொருந்திய களங்க மற்றவாகனங்களுக்கு ஆகாரம் யா தென்று கேட்டன. (ருசா)

தேறிய மறையின் றீஞ்சொல் தீனிலைக் குரிய தூயோ
ரேறுவா கனத்தின் றற்ற தெவையுள வவைக ளெல்லா
மாறுபா டன்றி நுங்கள் வாகனத் துணவே யென்னக்
கூறினர் பிணைக்கி யானே பிணையெனக் கூறுங் கொண்டல்.

(இ-ள்.) அவ்வாறுகேட்கப் பெண்மானுக்குநான் பிணையென்று சொல்லிய மேகத்தை நிகர்த்தவர்களான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தேறிய புறு

க்கானுல் அலீ மென்னும்வேதத்தினது இனிய வார்த்தைகளைக்கொண்டதீனுல் இஸ்லா மென்னும்மார்க்கத்திற்குச் சொந்த மாகிய பரிசுத்தத்தை யுடையோர்கள் ஏறுகின்ற வாகனங்கள் புசித்து அற்ற தெவைபுள்ளன? அவைகளனைத்தும் பேதமன்றியுங்களது வாகனங்களின் ஆகார மென்று கூறினர்கள். (கூஎ)

விரிதரு மமுதச் செவ்வாய் திறந்திவை விளம்பக் கேட்டுத்
திருமுகத் தெதிர்ந்த பன்னீ ராயிரஞ் ஜின்க டங்கள்
சிரமடி மலரிற் சேர்த்தித் தீனவர் தமையும் வாழ்த்திப்
பரிவொடு மகிழ்ந்து தத்தந் திசையினிற் படர்ந்த வன்றே)

(இ-ள்) விரிந்த அமுதத்தைக் கொண்டசெவந்த வாயைத் திறந்து இவைகளைக் கூறக் காதுகளினுற் கேள்வி யுற்றுத் தெய்வீகந் தங்கிய சந்நிதானத்தின்கண் எதிர்ந்து அந்தப் பன்னீராயிரம் ஜின்களும் தங்களின் தலைகளை நாயகம் நபி முகம்மது றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் பாதங்க ளாகிய தாமரைமலரில் பொருத்தித் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தையுடையவர்களையும் புகழ்ந்து அன் போடும் மகிழ்ச்சி யடைந்து தங்கள் தங்கள் திக்குகளில் சென்றன. (கூஅ)

பரவையும் விசும்பும் பாரும் படர்ந்திருள் செறிந்து தோன்று
பிரவினிற் றிரண்ட ஜின்க ளினத்தினை யீமான் கொள்வித்
தரியட லேறெ தென்ன வழகொளி விரித்துக் காட்ட
மருமலர்க் கரிய கூந்தன் மயிலுறை மனையில் வந்தார்.

(இ-ள்.) அவ்வாறு செல்லவே நாயம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள்சமுத்திரமும் ஆகாயமும் பூமியும் இருளானது பரவி நெருக்க முற்று விளங்காநிற்கும்இராக்காலத்தில் ஜின்களானவை கூடியகூட்டத்தை ஈமான் கொள்ளும்படி செய்வித்துவலிமையைக் கொண்ட ஆண்சிங்கத்தைப் போலஅழகினது பிரகாசத்தை எவ்விடமும் விரித்துக்காட்டும்படி வாசனைதங்கிய புஷ்பங்களைச் சூடிய கரிய கூந்தலையுடைய மயில்போலுஞ் சாயலைப் பெற்ற தங்களின் நாயகியிருந்த மாளிகையின்கண்வந்தார்கள். (கூகூ)

நெருங்கி கங்குற் போதி அறைந்தவல் லிருளை மோதி
யிருங்கதிர் கரங்க ளார வெடுத்தெடுத் தெறிந்து சிந்தி

யருங்கண மனைத்து நாணி யகல்விசும் பொளிப்ப நோக்கி
கருங்கடன் முகட்டில் வெய்ய கதிரவன் றோன்றி னானே

(இ-ள்.) அன்றியும், சூரிய னானவன் நெருக்க முற்ற இராக் காலத்தில் பூரண மாகிய கொடிய அந்தகாரத்தை மோதிப் பெரிய கிரணங்க ளான கைகள் நிறையும்படி எடுத்தெடுத்து வீசிச் சொரிந்து அரிய நட்சத்திரங்களி யாவும் வெட்கித்து விசால மாகிய ஆகாயத்தின்கண் ஒளிக்கும் வண்ணம் பார்த்துக் கரிய சமுத்திரத்தினது உச்சியில் உதய மானான். (சு0)

காசினி யிடத்தி னற்றைக் காலையின் கடன்க ழித்து
நேசமுற் றுவந்து தீனோ ருடனினி துறைந்து ஜின்கள்
மூசிவந் தீமான் கொண்டு போயது முறைவ ழாமற்
பேசிநல் லுணவு மீந்த செய்தியும் பிறக்கச் சொல்வார்.

(இ-ள்.) பூமியின்கண் அன்றையத் தினத்தினது காலைக் கடனாகிய சுபுஹை நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை யுடையவர்க ளோடு நேசமுற்று விரும்பித் தொழுது தீர்த்து இனிமை யுடன் தங்கி யிருந்து கொண்டு ஜின்கள் மூசுத லுற்று முறை தவறாமற் கூறி வந்து ஈமான் கொண்டு சென்றதும் நல்ல ஆகாரமுங் கொடுத்த வர்த்தமானமும் தோற்றும்படி கூற ஆரம்பித்தார்கள். (சுக)

மறச்சிலைக் கரத்தீர் தீனின் மானுடர் வாயின் மிச்சி
லிறைச்சியென் பனைத்துஞ் ஜின்கட் குணவென வீந்தேன் மேலுங்
கறித்தவன் பிறைச்சி மிச்சி லென்பதைக் களங்க மில்லாப்
புறத்தினில் வீச வியார்க்குங் கடனெனப் பொருந்தச்சொன்னார்

(இ-ள்.) கொடுமையினது கோதண்டத்தைக் கொண்டகையை யுடையவர்களே! தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை யுடைய மாந்தர்களினது வாயின் எச்சி யாகிய மாமிச மென்பதி யாவும் அந்த ஜின்களுக்கு ஆகார மென்று கொடுத்தேன் மேலும் கறித்த வன்மையைக் கொண்ட மாமிசத்தினது எச்சி லென்பதைக் குற்ற மற்ற பக்கத்தில் எறிதல் யாவர்களுக்கும் கடமை யென்று பொருந்தும் படி கூறினார்கள், (சுஉ)

பூமணம் பொருந்தக் காட்டும் புதுமைகண் டரிய ஜின்க
டாமதி யாது கூடித் தளத்தொடுந் திரண்டு வந்தி
மான்மனம் பொருந் திற் றென்ற வார்த்தையிற் புளகங்கொண்டு
தேமலர்ப் புயத்தார் போற்றத் திருநபி யிருந்தா ரிப்பால்.

(இ-ள்.) புஷ்பத்தினது பரிமளத்தைப் பொருந்தும்படி காட்டும் ஆச்சரியத்தைப்பார்த்து அரிய ஜின்கள் தாமதி யாது திரண்டுதங்களின் தளத்தோடுங் கூடி வந்து ஈமானை இருதயத்தின்கண் பொருந் திற் றென்று சொல்லிய வார்த்தையினால் புளக முற்று வாசனையைக் கொண்ட மலர் மாலை யணிந்த தோள்களை யுடையவர்களான சஹாபாக்கள் துதிக்கத், தெய்வீகந் தங்கிய நமது நாயகம் எம்மறைக்கும் தாயகம் நபிகட் பெருமானார் ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இருந்தார்கள். இதன் பின்னர். (சகூ)

ஜின்க ளீமான் கொண்ட படலம்
முற்றிற்று.

ஆ படலம்-௰கூ-க்குத்-திருவிருத்தம்-க௦௩௰௭.

காம்மாப்படலம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நரையொளி பிறங்க வுடம்பெலாந் திரைந்து
நரம்புக டெரிந்திட வறந்து
தெரிதருங் கட்பா வையினொளி மழுங்கித்
திரள்படப் பீளையுஞ் சாடித்
தரிபடா நாசித் துளையினீர் ததும்பத்
தைத்தறக் கிழிந்ததோர் துணியு
மரையிடை கிடந்து சரிந்தடிக் கடிவீழ்ந்
தவிழ்ந்திட வொருகரந் தாங்க,

(இ-ள்.) நரையினது பிரகாச மானது பிரகாசிக்கவும், சரீரமுழுவதும் திரைதலுற்று நரம்புகள் புறத்தில் தோற்றும் வண்ணம்

மெலிந்து தெரியாநிற்கும் கண்களிலுள்ள பார்வையின் ஒளி யான து மழுங்கிக் கூட்டமாகப் பிழையுஞ் சாடி. மூக்கினினது துவாரத் தில் ஜலமானது தங்காது ததும்பவும், மிகவும் தைக்கப் பெற்றுக் கிழிந்ததான ஓர் வஸ்திரமும் அரையி னிடத்து கிடந்து சரிந்து அ டிக்கடி விழுந்து அவிழ்ந்திடவும், அதையொருகையினுல்தாங்கவும்.

உடற்குறை கூனுஞ் செவித்துளை யடைப்பு
மொருகையிற் றடிக்குளா தாவி
னடக்கையி னடக்குந் தலைக்கிடு கிடுப்பு
நனிதர வசைந்துதள் ளாடி
யடிக்கடி யிளைப்பிற் குலுக்கிய கனைப்பு
மறத்தவித் தெழுந்தகோ லமுமா
யிடுக்கணுற் றொருவன் முகம்மது நயினு
ரிருந்திடு மவையகத் தெதிர்ந்தான்.

(இ-ள்.) தேகக் குற்றமாகிய கூனும், காதுகளினது துவாரங் களின் அடைப்பும், ஒரு கரத்தில் தடிக் குள்ள ஆதரவினுல் நடக் கையில் நடக்காநிற்கும் தலையினது கிடுகிடுப்பும், மிகவும் ஆட்டமு ற்றுத் தள்ளாடி அடிக்கடி இளைப்பினுற் குலுக்கப்பெற்ற கனைப்பும், மிக்கத் தவிப்புற் றெழும்பிய கோலமுமாய் ஒருவன் துன்ப மடைந் து நயினுரான நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபிகட் பெரு மானுர் ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுல் அம்பியாமுகம்மது முஸ் தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கியிருக்கும் சபை யின்கண் வந்து எதிர்ப்பட்டான். (உ)

உள்ளுறக் கிடந்த பல்லறப் பெயர்ந்த
வுதட்டினில் வாயினீ ரொழுக
வில்லுதற் கரிதா யொருசலாங் குழறி
விளம்பிநின் றனன்முக நோக்கி
வள்ளலும் பிரத்தி யுரைத்திவன் சூமன்
வங்கிஷத் துளனெரு வேடத்
தெள்ளுருங் குணத்தா லடைந்தன னிவன்கூ
றீதென மனத்திருத் தினரே.

(இ-ள்.) அவ்வாறு எதிர்ப்பட்ட அவன் அகத்திற் பொருந்து ம்படி கிடக்கப்பெற்ற பற்கள் முழுவதும் பெயர்ந்த அதரத்தின்கண் வாயினது ஜலமானதுசிந்தும்வண்ணம் சொல்லுதற்கரிதாய்க்குழறு

த் லுற்று ஒப் பற்ற சலாம் சொல்ல, அவனது வதனத்தை வள்ளலா கிய நமது நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் பார்த்துப் பிரதி சொல்லி இவன் சூமனு ன இபுலீசு லகுனத் துல்லாவினது கிளையிலுள்ளவன். ஒரு கோல த்தினது தள்ளுதற் கரிய தன்மையினல் இங்கு வந்து சேர்ந்தான். இவனது காரணமானது இது வென்று தங்களின் மனசின்கண் இரு க்கும் வண்ணம் செய்தார்கள். (௩)

ஊன்றிய தடியிற் கிடந்துழன் றொதுங்கி
நின்றவ னுழையினை நோக்கி
வான்றிகழ் புகழார் திருமொழி கொடுத்து
வரவழைத் தொருமருங் கிருத்தி
யீன்றவ ரியாவ ரெவ்வழிக் குளனின்
னிருங்குலப் பெயரியா துனக்குத்
தோன்றிய நாம மேதிவை விடுத்துச்
சொல்லென மீளவு முரைத்தார்.

(இ-ள்.) அவ்வித மிருக்கும்படி செய்த வானலோகத்தின்கண் ணும் பிரகாசியாநிற்கும் கீர்த்தியையுடைய நாயகம் நபி முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் பூமியினிடத்து ஊன்றப்பெற்ற தடியிற் கிடந்து உழலுத லடைந்து ஒதுங்கி நின்ற வனை அவனிடத்தைப் பார்த்துத் தங்களின் தெய்வீகந் தங்கியவா ர்த்தையைக் கொடுத்துக் கூப்பிட்டு ஒப்பற்ற பக்கத்தி லுட்காரச் செய்து உன்னைப் பெற்றவர்கள் யாவர்? நீ எந்த மார்க்கத்தி லுள்ள வன்? உனது பெரிய குடும்பத்தினது நாமமென்ன? உனக்கு விளங் கிய பெயரியாது? இவைகளை விட்டுக் கூறுவாயாகவென்று திரும்பி யுங் கேட்டார்கள். (௪)

நபியெனும் பெயர்பெற் றவர்க்கெவர் கருத்து
நன்குறத் தெரிந்திடும் விசும்பி
னவரினும் புதியோன் றூதரின் முதலோ
ரவனியிற் பின்வரும் நபினு
ரிவர்கருத் தறியத் தெரிந்திடாப் பொருள்க
ளிலையெனக் கருத்தினி லிருத்தித்
தவறுவந் ததுந்தன் றலைமுறைப் பெயருந்
தனித்தனி விடுத்தெடுத் துரைப்பான்.

(இ-ள்.) அவ்வாறு கேட்க அவன் நபியென்னும் அபிதானத்தைப் பெற்றவர்களுக்கு நன்மை பொருந்தும்வண்ணம் யாவர்களுடைய சிந்தனையும் தெரியும். இவர் தேவர்களாகிய மலாயிக்கத்துமார்களைப் பார்க்கிலும் புதிய ஆலத்தை யுடையவனான ஜல்லஜலாலகுவத்த ஆலாவின் றசூல்மார்களைப் பார்க்கிலும் முதன்மையானவர். இந்தப் பூமியின்கண் அந்த றசூல்மார்களுக் கெல்லாம் பின்னால்வந்த நபினாகிய முகம்மதென்னுந் திருநாமத்தையுடையவர். இவரின் கருத்தான துணரும்வண்ணம் அறியாத வஸ்துக்க ளொன்றுமில்லையென்று தனது மனசின்கண் இருக்கச்செய்து தனக்குத் தவறுதல் வந்ததும் தனது தலை முறையின் நாமமும் தனித்தனி எடுத்துவிட்டுச் சொல்லுவான். (ரு)

வானுல கடங்கத் தன்வசப் படுத்தி
மறுவறும் பெயர்க்கிடர் விளைத்துப்
பானிற வளைவெண் டிரைக்கடற் பரப்பி
பகையற வொருதனிக் கோலாற்
றுனெனச் செலுத்தி யரசுவீற் றிருந்தோன்
றணப்பிலாப் பெரும்படை யுடையோ
னீனமுற் றொழியா மாயைகள் விளக்கு
மியலிபு லீசெனும் பெயரோன்.

(இ-ள்.) வானலோகமும் அடங்கும்வண்ணம் தனது வசப்படுத்திக் களங்கமற்ற மாந்தர்களுக்குத் துன்பத்தைச் செய்து விரோதமறும்படி பாலினது நிறத்தைக்கொண்ட சங்குகளை யுடைய வெள்ளிய அலைகளினது சமுத்திரப் பரப்பில் ஒப்பற்ற ஏகச் செங்கோல் செலுத்தித் தானென்னும் அகங்காரத்தோடு அரசாக வீறுடனிருந்தவன். பிரியாத பெரிய சேனைகளையுடையவன். ஈனமுற்று மாறாத மாயைகளை யுண்டாக்காநிற்கும் இயல்பினைப் பெற்ற இபுலீஸ் லகுனத்துல்லாவென்று கூறும் நாமத்தை யுடையவன். (சா)

அப்பெரும் புகழோன் றருதிருமதலை
யவனினு மும்மடங் காகி
முப்பெரு நிலத்துந் தன்பெயர் நிறுத்து
முறைமைய னுளியா சனத்தா

ஒப்பருந் திறலா னிலாக்கிசென் றோங்கி
யுறும்பெய ரினன்பெறும் புதல்வன்
கைப்படுங் கதிர்வாட் பெரும்படைக் கிறைவன்
காயிமென் றுரைத்தகா வலவன்.

(இ-ள்.) அந்தப் பெரிய கீர்த்தியை யுடையவனான "இபுலீ செ பவன் இவ் வுலகத்தின்கண் தந்த அழகிய புதல்வ னானவனும், அவ் விபுலீ சென்பவனிலும் மும் மடங்காய்ப் பெரிய வானலோகம், பூ லோகம் பாதாள லோக மென்னும் மூன்று நிலத்தின் கண்ணும்தன து நாமத்தை நாட்டும் முறைமை யுடையவனும் சிங்காசனத்தை யு டையவனும், ஒப்புதற் கருமையான வலிமையை யுடையவனும், இ லாக்கி சென்று ஓங்கிப் பொருந்திய நாமத்தை யுடையவனுமாகிய, அவன் பெற்ற புத்திரனான கையிற் றங்கிய பிரகாசத்தைக்கொண்ட வாளாயுதத்தை யுடைய பெரிய சேனைகளுக்கு இராஜாவாகிய காயி மென்று கூறப் பெற்றபெயரை யுடைய அரச னானவன் (எ)

காயிமென் பவன்றன் கண்ணிணை மணியாய்க்
கருத்தினுள் ளுறைந்தமெய்ப் பொருளாய்ச்
சேயெனப் பிறந்தே னிசைபெறக் காம்மா
வென்னுமப் பெயரினன் சிறியே
னாயிரந் திருப்பேர்க் குரியவன் றூதே
யமரருக் கரியநா யகமே
மாயிரும் புவிமா னுடரிடர் களையு
முகம்மதே யெனப்புகழ்ந் திசைத்தான்.

(இ-ள்.) சிறியே னாகிய யான் அக் காயி மென்று கூறப்பெற்ற வனின் இரு கண்களினது மணியாகவும், கருத்தி னகம் தங்கிய சத் திய வத்து வாகவும், புத்திரனென்று இவ் வுலகத்தின்கண் அவதரி த்தேன் கீர்த்திபெறும்படி காம்மா வென்றுகூறும் அந்த நாமத்தை யுடையவன், ஆயிரம் தெய்வீகந் தங்கிய அபிதானங்களுக்குச் சொ ந்தமான வனாகிய ஹக்கு சுபுகானகுவத்த ஆலாவின் றசூ லானவரே! தேவர்க ளாகிய மலாயிக்கத்து மார்களுக்கு அருமையானநாயகமே! மகத் தாகிய பெரிய இந்தப் பூமியினது மாந்தர்களின் துன்பத்தை இல்லாமற் செய்யும் முஹம்ம தென்னுந்திருநாமத்தையுடையவரே! என்று சொல்லித் துதித்துக் கூறினான். (அ)

மருங்கினி லிருந்துபகர்ந்தகாம் மாதன்
வார்த்தைகேட் டகத்தினிற் களித்துத்
தருங்கதிர்த் தரள நகையிற்புன் முறுவ
றாவரு விருத்தனை நோக்கி
நெருங்கிட வறந்த காறடு மாற
நெடிதுசஞ் சலத்தொடும் வருந்தி
யிருங்கண மடுத்தென் னிடத்தினி லுறைந்த
தென்னினை வெனவெடுத் திசைத்தார்.

(இ-ள்) பக்கத்தி லுட்கார்ந்து அவ்வாறு கூறிய காம்மாவென் பவனின் வார்த்தைகளை நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல்சல் லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் காதுகளினுற் கேள்வி யுற்று மனசின்கண் மகிழ்ச்சி யடைந்து பிரகாசத்தைத் தராநிற்கும் முத்தினது ஒளியைப்போல புன் சிரிப்பைத் தரும் வண்ணம் அங்கு வந்த அந்தக் கிழவனைப் பார்த்து நெருங்கும்படி மெலிந்த காற்களா னவை தடுமாற்ற முற நீண்ட துக்கத் தோடும் துன்ப மடைந்து பெரிய இந்தக் கூட்டத்தைச் சமீபித்து என் னிடத்தில் வந்து தங் கிய கருத்துயாது? என்று எடுத்துக் கேட்டார்கள். (கூ)

முன்னெடுங் காலத் திப்பெரும் புவன
முழுதினு மொருகுடை நீழ
றன்னிடை படுத்தி நால்வகைக் கதத்த
தளத்தொடு மொருதனிக் கோலான்
மன்னிய திசைகள் பொதுவறப் புரந்து
மருவல ரிலையெனத் தடிந்திட்
டென்னையொப் பவரிந் நிலத்தினி லிலையென்
றிருந்தன னரியா சனத்தில்.

(இ-ள்.) அவ்விதங் கேட்க அந்தக் காம்மா வென்னும் விருத் தன் ஆதியில் நெடுங்கால மாக இந்தப் பெரிய பூலோக முழுவதை யும் ஒரு குடையினது நிழலின்கண் படுத்தி உக்கிரத்தைக்கொண்ட இரதம், கஜம் துரகம், பதாதி யென்னும் நான்கு வகைச் சேனைக ளோடும் ஒப் பற்ற ஏகச் செங்கோலினுல் பொருந்திய எண் டிசை களையும் பொதுமையான தறும் வண்ணம் அரசாட்சிசெய்து சத்து ராதிகள் இல்லையென்று குறைத்து என்னை நிகராவார்கள் இப்பூலோ கத்தின்கண் ஒருவருமில்லரென் றசிங்காசனத்திலுட்கார்ந்திருந்தேன்

ஒருதனித் திகிரி செலுத்தி யெங்கிலமு
முள்ளடிப் படுத்திடு நாளிற்
பொருவறு மதத்தாற் றவங்குண மிரக்கம்
பொறைநிறை புண்ணியம் பிறவுந்
தெரிவரா திகழ்ந்து பவம்பழி தொடரச்
செய்வழி முறைமையிற் செய்தேன்
பெருகிய வலியுஞ் சீர்த்தியு முடையோய்
பின்வருந் துன்பமொன் றறியேன்.

(இ-ள்.) அன்றியும் ஓங்காநிற்கும் வலிமையையும் மிகுத்த கீர்த்தியையு முடைய முகம்மதென்னுந் திரு நாமத்தைக் கொண்டவரே! ஒப் பற்ற ஏகக் சக்கரத்தைச் செலுத்தி எத் தலங்களையும் எனது பாதத்தி னகம் படுத்திய காலத்தில் உவமை யில்லாத மதத்தினல் தவம், குணம் கிருபை, பொறுமை, நிறை தருமமாகிய மற்றவைகளுந் தெரியாமற் பழித்து பாவமும், பழியும், பின்பற்றும்வண்ணம்செய்யும் மார்க்கத்தினது முறைமையில் செய்தேன். பின்னர் வரும் வருத்தங்கள் ஒன்றையு மறிந்திலன். (கக)

தீவினைக் குரித்தாய் வருந்தொழிலனைத்துஞ்
செய்தர சிருக்குமந் நாளிற்
பாவியென் னுடலு மிதயமு நடுங்கப்
பார்த்தெனைக் கடிந்துவற் புறுத்திக்
கூவிமுன் னிருத்தித் தாட்பெரு விரல்க
ளிரண்டையுங் கூட்டுற நெருக்கி
நோவர விறுகக் கட்டிவைத் தெழுந்து
போயின னொருநொது மலனே.

(இ-ள்.) பாதகத்திற்குச் சொந்தமாய்வராநிற்கும்செயல்களியாவையும் அவ்விதம் செய்து அரசிருக்கு மந்தக் காலத்தில், ஒரு நொய்மையை யுடைய மனிதன் பாவி யாகிய எனது சரீரமும் மனமும் நடுக்க மடைய என்னை நோக்கிக் கோபித் துறுதிப் படுத்திக் கூப்பிட்டு முன்னு லுட்காரச் செய்து பாதங்களினது பெரு விரல்களிரண்டையும் சேரும் வண்ணம் நெருக்கித் துன்பம் வரும்படி இறுகக் கட்டி வைத்து எழும்பிப் போயினன். (கஉ)

காலினிற் பிணித்த பிணிப்பினை வலிதிற்
கழற்றின னேக்கினன் கழலா
தோலிடுங் கடகக் கரத்தின லவிழ்த்தே
னவிழ்ந்திடா தொருங்குநின் றவர்கள்
மேலுற வகிர்ந்துங் கருவியா லறுத்தும்
விரிந்தசெந் நெருப்பிடைகொடுத்து
நாலள வெனினு நெகிழ்ந்தில வதனின்
வலியினை நுவலுதற் கரிதே.

(இ-ள்.) அவன் போகவே காலிற் கட்டியகட்டைவலிமையோடும் கழற்றிப் பார்த்தேன். கழந்திலது ஒலிபாதிற்கும் கடகத்தைக் கொண்ட கைகளால் அவிழ்த்தேன். அவிந்திலது. கூடி நின்றவர்கள் அக்கட்டின் மேல் பொருந்தும் வண்ணம் கருவிகளால் வகிர்ந்தும் அறுத்தும் விரிவுற்ற செவந்த அக்கினியின்கண் கொடுத்தும் ஒரு நாலினது அளவாயினும் நெகிழ்ந்திலது அந்தக் கட்டின் பலத்தைக் கூறுவதற் கரிதாகும். (கரு)

கட்டினன் மிகுதி வருத்தமுற் றொடுங்கிக்
கலங்கினன் மலங்கின னெடுநாள்
விட்டிடா திழைத்த பாவங்க டிரண்டு
வெகுண்டொரு கயிற்றுரு வெடுக்கப்
பட்டதோ வலதென் னூழ்விதிப் பயனே
படிபுரந் திடும்பெரும் பலனே
கிட்டிய தவத்தோர் முனிந்திடு முனிவோ
வெனக்கிடந் தனன்மதி யிலியேன்.

(இ-ள்.) அன்றியும், அறிவற்றவனை யான் நீண்ட நாள் அந்தக்கட்டினல் அதிகந் துன்பமடைந்துஒடுங்குதலுற்றுக்கலங்கினேன் மலங்கினேன் விடாது செய்த பாவங்கள் ஒன்ருய்ச் சேர்ந்துகோபித்து ஒரு கயிற்றினது சொரூபத்தை எடுக்கப் பட்டதோ? அல்லது எனது ஊழினது விதியின் பிரயோசனமோ? இப் பூமியை யரசாட்சிசெய்த பெரிய பலனே! தவத்தைக் கிடைக்கப் பெற்றோர்கள் சபித்திடும் சாபமோ? என்று சொல்லிக் கிடந்தேன். (கசு)

அரசிழந் தெனது கிளையிழுற் பெரியோ
ரிடத்தினு மடுத்தன னவரா
லொருதிருக் கெடுத்து நெகிழ்க்கவும் பயமுற்
றொடுங்கினர் பெருவரை யிடத்துங்

குரைகட லிடத்து மெண்டிசை புரக்குங்
    கொற்றவ ரிடத்தினு மடைந்தே
னிருமென விருத்தி நோக்குவ ரலதென்
    னிடர்தவிர்த் திடுபவ ரிலையே.

(இ-ள்.) அன்றியும், எனது அரசாட்சியை யொழித்து என் குடும்பத்திலுள்ள பெரியோர்க ளிடத்துப்போய்ச்சேர்ந்தேன். அவர்கள் அந்தக் கயிற்றினது ஒற்றைத் திருக்கை எடுத்து நெகிழ்க்கவும் ஏலாமல் பயங்கரமடைந்து ஒடுங்கினார்கள். பெரிய மலைகளினிடத்தும் சத்திபாநிற்கும் சமுத்திரத்தினிடத்தும் எட்டுத் திக்குகளையும் ஆளாநிற்கும் அரசர்களிடத்தும் போய்ச் சேர்ந்தேன். அவர்கள் என்னை யுட்காருமென்று உட்காரச்செய்து பார்த்தார்களே யல்லாமல் எனது துன்பத்தை யொழித்தவர்க ளொருவருமில்லர். ()

அந்தரம் புவிமட் டுலவியுங் காற்கட்
    டவிழ்க்கவல் லமையின ரிலையென்
றிந்தன மெரியிற் கிடந்தென விதய
    மிடைந்திட வுடைந்தன னெளியேன்
புந்தியற் றொடுங்கி யளவருங் காலம்
    போயபி னவனியின் மனுவிற்
சுந்தரத் தொடும்பே ரறத்தொடு முருவாய்த்
    தோன்றின ராதமென் றொருவர்.

(இ-ள்) அன்றியும், எளியேனாகிய யான் வானலோகம் பூலோகம்வரைக்கும் உலாவித் திருந்தும் எனது காலினது கட்டை அவிழ்க்கும்படி தைரியத்தைப்பெற்றவர்க ளொருவரு மில்லரென்று விறகானது நெருப்பில் கிடந்ததைப்போல மனமானது வருந்தும் வண்ணம் உடை வுற்று அறிவற்று ஒடுங்குதல்கொண்டு அளவற்றகாலம் சென்ற பின்னர் இப் பூமியின் கண்ணுள்ள மானிடர்களில் அழகுடனும் பெரிய புண்ணியத்துடனும் ஆதமென்று ஒருவர் உருவாய் அவதரித்தார், (கசு)

அவனிபி லாத நபியெனும் பேர்பெற்
    றிருந்தன ரவரிடத் தேகித்
தவிர்கிலா திடருற் றனனென வெளியேன்
    சாற்றினன் வீக்கினை நோக்கிக்

கவாறப் பிணித்த காவல னலது
 கட்டறுப் பவரெவ ரென்னக்
குவிதருந் திருவாய் விரிதர வுரைத்தார்
 கொடியனென் வலிகுறைந் திடவே.

(இ-ள்.) அவ்வாறு அவரித்த அவர் இந்தப் பூலோகத்தின்கண் ஆதநபியென்று கூறும் அபிதானத்தைப்பெற் றிருந்தார். எளியே னாகிய யான் அவரிடத்திற் சென்று தவிராது துன்பமுற்றேனென் று கூறினன். அவர் அந்தக்கட்டினைப்பார்த்துக் கொடியவனுனஎன துவல்லமையானது குறையும்வண்ணம் கள்ள மறக் கட்டிய அவ்வா சனே யல்லாமல் வேறே யாவர் இந்தக்கட்டை யறுப்பவர்களென்று குவிந்த தெய்வீகந் தங்கிய தமது வாயானது விரியும்படி கூறினர்.

இவ்வுரை பகர்ந்தா ராதநன் னபியென்
 றிருந்தநன் வருந்தின னதற்பின்
குவ்வினி னபிமா ரென்னுமப் பெயர்பெற்
 றிருந்தவ ரிடந்தொறுங் குறுகிச்
செவ்விதி னுரைத்தே னவ்வவ ரெவருந்
 திருநபி முகம்மதென் பவரால்
வவ்விய தளைவிட்ட கன்றிடு மலது
 மறுத்தெவர் தவிர்ப்பரென் றிசைத்தார்.

(இ-ள்.) நன்மைபொருந்திய நபியாகிய ஆதமென்பவர் இந்த வார்த்தைகளைக் கூறினரென்று இருந்து துன்பமடைந்து அதன்பி ன்னர் இந்தப் பூலோகத்தின்கண் நபிமாரென்று கூறும் அந்த அபி தானத்தைப்பெற்றிருந்தவர்கள் இடந்தோறும் நடந்துசென்று அழ காகக் கூறினேன். அந்த அவர்க ளியாவரும் தெய்வீகந்தங்கிய நபி யான நாயகம் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மென்பவர்களினல் வவ்விய இந்தக் கட்டானது விட்டு நீங்குமேயல் லாமல் யாவர் மறுத்துத் தவிர்ப்பவர்களென்று கூறினர்கள். (௧௮)

அன்னவ ருரைத்த மொழிமனத் தடக்கி
 யிருந்தன னறிவெனுந் துணையா
லெங்கெடுங் காலத் தெப்புவி யிடத்தி
 னினிதொடும் பிறப்பரென் றெண்ணிப்

பன்னெடுங் கால மிதுநினை வலது
வேறுரை பகர்ந்திருந் தறியேன்
மன்னிய புகழார் முகம்மது பிறந்தா
ரெனுமுரை மறைகள்சொற் றனவே.

(இ-ள்.) அந்த நபிமார்கள் அவ்வாறு கூறிய வார்த்தைகளைஇருதயத்தின்கண் அமையும் படி செய்து இருந்து அறி வென்று கூறும் துணையினால் நீட்சி தங்கிய எந்தக் காலத்தில் எத் தலத்தின்கண் இனிமை யோடும் அவதரிப்பாரென்று நினைத்து நீண்ட பலகாலம் இதுவே சிந்தனை யல்லாமல் வேறு வார்த்தைகளைக் கூறியிருந்தறிய மாட்டேன் வேதங்கள் பொருந்திய கீர்த்தியையுடையவர்களானநபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அவதரித்தார்க ளென்னும் வசனத்தைச் சொல்லின. (கசு)

புவியினி லறத்தின் மக்கமா புரத்திற்
பொதுவற வேதமு மிறங்கி
நபியெனுந் திருப்பட் டமுந்தரித் தரிய
நன்னிலைத் தீனெறி நடத்திக்
குவிகுபி ரகற்றி யிருந்தன ரென்னக்
கோதிலா மனமகிழ் வுடனே,
யிவணில்வந் தடைந்தே னினிவினைப் பவங்
ளியாவையு மெளிதின்வென் றனனே.

(இ-ள்.) அன்றியும், இப் பூலோகத்தின்கண் ஹற மென்னும் கஃபத்துல்லாவை யுடைய திரு மக்கமா நகரத்தில் பொதுமையான தறும்படி புறுக்கானுல் அலீ மென்னும் வேதமும் இறங்கித்தெய்வீகந் தங்கிய நபியென்னும் பட்டமுந் தரிக்கப் பெற்று அருமையான நல்ல நிலைமையை யுடைய தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை நடாத்திக்குவிந்த குபிரை யொழித்து இருக்கின்றார்களென்று களங்க மற்று மனக் களிப்புடனே இவ்விடத்தில் வந்து சேர்ந்தேன். இனி எளிதில் எனது வினைபாகிய பாவங்க ளனைத்தையும் ஜெயித்தேன். (உ0)

பதத்தினி யிடைந்த பாவியென் மனத்திற்
பருவரற் களங்கறத் துடைத்துக்
கதத்தொடு மிறுக்கி லைத்தபா தகன்றன்
கட்டறக் கருணையிற் படுத்தி

யிதத்தொடு முமது தீன்வழிக் குரிய
　னிவனென நிறுத்திமே லேயினும்
விதித்த சொற் கடவாப் படிநடத் திடுக
　வேண்டுமென் றுரைத்தடி வீழ்ந்தான்.

(இ-ள்.) ஆதலால் உங்களது பாதங்களில் வந்து சேர்ந்த பாவியான எனது இருதயத்தின் துன்பமாகிய குற்றமானது அற்றுப் போகும் வண்ணம் இல்லாமற் செய்து உக்கிரத்தோடும் இறுக்கிவைத்த பாதகனின் கட்டானது அறும்படி காருண்ணியத்தி னுட்படுத்தி இதத்துடன் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்திற்குச் சொந்தமானவன் இவனென்று நிற்கப் பண்ணி மேலைக்கும் கற்பித்த வார்த்தைகளைத் தாண்டாத விதம் என்னை நடத்த வேணடு மென்றுகூறித் திருவடி களில் விழுந்தான். (உக)

இரங்கிநின் றிறைஞ்சி யுரைத்தவா சகத்தை
　யிருசெவி குளிர்தரக் கேட்டு
நெருங்கிட விறுக்கி வைத்தவர் பெயரை
　நினைத்தரு ளொடுமுறு வலித்து
மருங்கினி லொடுங்கி யிருந்தகாம் மாவை
　விழித்தணி மதுரவாய் திறந்து
னுரங்கெட விடுக்கண் விளைத்தவ ரியாவ
　ருரையென முகம்மது முரைத்தார்,

(இ-ள்.) இரக்க முற்று நின்று வணங்கி அவ்வாறு கூறியவர்த்தமானங்களை நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் தங்களின் இரு காதுகளும் குளிர்ச்சியடையும் படி கேள்வி யுற்று அவ்விதம் நெருங்கும் வண்ணம் இறுக்கிக் கட்டி வைத்தவரின் நாமத்தைச் சிந்தித்துக் கிருபை யோடும் சிரித்துப் பக்கத்தில் ஒடுக்கங் கொண்டு உட்கார்ந் திருந்த அந்தக் காம்மா வென்பவனை யழைத்து அழகிய தங்களின் மதுர வாயைத்திறந்து உனது வல்லமை யானது கெட்டுப் போகும் வண்ணம் இவ்விதத் துன்பத்தைச் செய்தவர் யாவர்? அதைக் கூறுவாயாக வென்றுகேட்டார்கள். (உஉ)

கட்டிவைத் தகன்ற நாட்டொடுத் தவன்றன்
 பெயரினைக் கருத்தினி லறியே
னெட்டியெத் தலத்துந் திரிந்தன னிவ்வூ
 ருளனென வறிகிலேன் புவியின்
மட்டறுங் குலத்தி லிக்குலத் தின்னான்
 மகவென்று மறிகிலே னெதிர்ந்து
கிட்டிடி லுருக்கண் டெளிதினி லறிவே
 னெனக்கிளத் தினன்பெருங் கிளையோன்.

(இ-ள்.) அவ்வாறு கூறப்பெரிய குடும்பத்தை யுடையவனான அந்தக் கம்மாவென்பவன் என் கால்விரல்களைக் கட்டி வைத்து நீங்கிய நாள்தொடுத்து அவனது நாமத்தை எனது கருத்தின் கண்ணறிந்திலன். எத் தலங்களிலும் தாவி யலைந்தேன், இந்நகரத்தி லுள்ளவனென்று அறிகிலன். இப்பூமியி னிடத்துள்ள அளவற்றகூட்டத்தில் இக்கூட்டத்தில் இன்னவனுடையபுத்திரனென்றும் அறிகிலன். என்னை எதிர்ந்து கிட்டினால் அவனது சொரூபத்தைப் பார்த்து இலகுவில் அறிவேனென்று கூறினான். (உ௯)

கருமுகிற் கவிகை நந்நபி காம்மா
 வுறைத்தசொற் கருத்தினி லிருத்திக்
குருதியுந் தசையுஞ் சிதறுசெங் கதிர்வேற்
 கொழுந்தடக் கரத்தபித் தாலி
புரியகண் மணியாய் வருமலி தமையென்
 னுழையினிற் கொடுவரு கென்னப்
பரிவினிற் றூதை விடுத்தன ரவரும்
 பண்புற விறைவொடு மெழுந்தார்.

(இ-ள்) கரிய மேகக் குடையை யுடைய நமது நாயகம் நபிகட் பெருமானார் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அக்காமா வென்பவன் அவ்வாறுகூறிய வார்த்தைகளைச் சிந்தையி லிருக்கச் செய்துஇரத்தமும் மாமிசமும் சிதறுநிற்கும் செவந்த கிரணங்களைக் கொண்ட வேலாயுதத்தை யுடைய செழுமையான பெரிய கையினது அபித்தாலி பென்பவரின் சொந்தக் கண்களின் தாரை யாகி இவ்வுலகத்தின்கண் வந்த அலிறலி யல்லாகு அன்கு அவர்களை அன்போடும் என்னிடத்திற் கூட்டிக் கொண்டு வருவீ

ராக வென்று ஒரு தூதுவரை அனுப்பினார்கள். அந்தத் தூதுவரும் தகுதி பொருந்தும் வண்ணம் சீக்கிரமாய் எழும்பினர். (உச)

சிங்கவே றனைய அலிதிருக் கரத்திற்
செங்கதிர் வாட்கிடந் திலங்கத்
தங்கிய மாவத் தொடைபுரண் டசையத்
தானவன் புலிவர னோக்கி
யங்கமு மனமும் வெருவரத் திடுக்கிட்
டலம்வர வெழுந்துவாய் குழறிப்
பங்கமுற் றயர்ந்திட் டடிக்கடி நோக்கிப்
பதங்கர நனிநடு நடுங்கி.

(இ-ள்.) தானவ னாகிய அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் புலி யான ஆண் சிங்கத்தை நிகர்த்த அலி றலி யல்லாகு அன்கு அவர்கள் தெய்வீகந் தங்கிய கையில் செவந்த கிரணங்களை யுடைய வாளாயுத மானது கிடந்து பிரகாசிக்கவும், தோளின்கண் ணுறைந்த குங்குமப் புஷ்பத்தினா லான மாலைகள் புரண்டு அசையவும் வருவதை அந்தக் காம்மா வென்பவன் பார்த்துச் சரீரமும் மனமும் அச்சத்தைக் கொள்ளத் திடுக்க முற்றுச் சஞ்சலம் வரும் வண்ணம் எழும்பி வாய் குழறிப் பங்க மடைந்து சோர்ந்து அடிக்கடிப் பார்த்துக் காலும் கையும் மிகவும் நடுநடுக்கங் கொண்டு. (உரு)

மன்னவர்மன் னவரை முகம்மதை நோக்கி
வாய்வெளி றிடவிழி சுழல
வெந்நிடை யொளித்திட் டொதுங்குற வொடுங்கி
விறற்புலி யலிதமைத் தூண்டி
என்னையுங் கெடுத்தென் னரசையு மழித்திட்
டித்தனைக் கியற்றிய சிமா
னன்னவ னலது வேறிலை யினம்வந்
தடுக்கிலென் விளையுமோ வறியேன்.

(இ-ள்.) இராஜாதி ராஜரான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களைப் பார்த்து வாயானது வெளிறவும், கண்கள் சுழலவும், ஒதுங்கும் வண்ணம் முதுகினி டத்து ஒளித்து ஒடுக்க முற்று விஜயத்தைக் கொண்ட புலியாகிய அலிறலி யல்லாகு அன்கு அவர்களைச் சுட்டிக் காட்டி என்னையுங் கெடுத்து

எனது இராஜாங்கத்தையும் அழித்து இவ்வளவு துன்பப் படுவதற்குச் செய்த சிமான் அதோ? வரப்பட்டவ னல்லாது வேறே யொருவரு மில்லர். இன்னம் அவன் இங்கு வந்து சமீபித்தால் யாது விளையுமோ? அதை யா னறிகிலேன். (உ௬)

மெய்ப்பொருண் மறைக்கு நாயகப் பொருளே
விண்ணவ ருயிரினி குயிரே
யிப்புவி யிடத்தி லடைக்கல மடியே
னெனைப்பிணிக் கடல்வலி யெறிந்த
துப்பின னிதோ வடுத்தனன் சற்றே தூர நீன்
றிடவருள் பணித்தென்
கைப்பட நுந்தங் கரங்கொடுத் துயிரைக்
காப்பது கடனெனக் கரைந்தான்.

(இ-ள்.) உண்மைப்பொருளைக் கொண்டவேதங்களுக்கு நாயகமாகிய பொரு ளானவரே! தேவர்க ளான மலாயிக்கத்துமார்களின் ஜீவனுக்கு ஜீவ னானவரே! அடியே னாகிய யான் இந்தப் பூலோகத்தின்கண் உங்கள் பால் அடைக்கலம். எனது காலினது விரல்களைக் கட்டி என் வல்லமையின்வீரத்தை வீசியசாமார்த்தியத்தை யுடையவன் இதோ? சமீபித்து வந்தான். அவனைக்கொஞ்சம்தூரத்தில் நிற்கும் வண்ணம் கிருபை செய்து எனது கைகள் படும்படி உங்களின் கையைத் தந்து எனது ஜீவனைக் காப்பது எங்கள் கடமை யென்று சொல்லி அழுதான். (உஎ)

வெருவுறேல் காம்மாப் வெனக்கர மசைத்து
விறற்புலி யலிதமை நோக்கி
எரிகதிர் வேலோய் நம்மிடத் தடைந்தோ
னீங்கிவ னிடருறு மிணைத்தாட்
பெருவிரற் றொடுப்பை விடுப்பையென் றினிதின்
பெரியவன் றூதுவ ருரைப்ப
வரியென மகிழ்ந்து நோக்கலுங் காற்கட்
டற்றிடத் துன்பமு மறந்த.

(இ-ள்.) அவ்விதம் அழவே பெரியவனான ஜல்லஷுனகுவத்த ஆலாவின் தூதுவ ராகிய நாயகம் நபி முகம்மதுமுஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் காம்மா வென்பவனே! நீ பயப்படேல்? என்று கூறித்தங்களின் கையையசைத்து விஜயத்தைக்கொ

ண்ட புலியான அலிறலி யல்லாகு அன்கு அவர்களைப் பார்த்துப் பிரகாசியாநிற்கும் கிரணங்களைப் பெற்ற வேலாயுதத்தை யுடைய வரே! இங்கு நம் மிடத்தில் வந்துசேர்ந்தவ னாகிய இவனது துன்பத் தைப்பொருந்திய இரண்டுபாதங்களினது பெருவிரல்களின் கட்டை விடுப்பீராக வென்று இனிமை யோடுங் கூற, அவர்கள் சிங்கத்தைப் போலுங் களிப்படைந்துகண்களினால் பார்த்தமாத்திரத்தில் அந்தக் கட்டானது அற வருத்தமும் அற்றது. (உஅ)

காற்றளை யகலப் பயங்கர மாற்றிக்
காவலர் முகம்மதை யிறைஞ்சிப்
போற்றிநின் றமுத மெனுங்கலி மாவை
யுரைத்துநல் வழியினிற் புகுந்து
தேற்றுநன் மறையின் முதியரைப் புகழ்ந்து
செவ்விய ரலிபதம் வழுத்தி
மாற்றரும் வேடந் தனையும்விட் டொழிந்து
மதிவலா னெனத்தனி நின்றான்.

(இ-ள்.) காலினது கட்டானது அவ்வாறுநீங்க அந்தக் காம்மா வென்பவன் தனது பயங்கரத்தை யொழித்துஅரசராகிய இந்நாயகம் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களைவணங்கித்துதித்து நின்று அமிர்தமென்று கூறுநிற் கும் "லாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர் றசூ லுல்லாஹி" யென் னுங் கலிமாவைஓதி நல்ல சன்மார்க்கத்தில் நுழைந்துதேற்றுகின்ற நன்மை பொருந்தியபுறக்கானுல் அலீமென்னும் வேதத்தினது மு தியோர்களை எத்தி அழகை யுடையவர்களான அலி றலி யல்லாகு அன்கு அவர்களின் திரு வடிகளைப் புகழ்ந்து மாற்றுதற் கரிய வேடத்தையும் விட்டு நீங்கி அறிவில் வல்லவ னென்று சொல்லும் வண்ணம் ஒப்பற நின்றான். (உகூ)

சீதவொண் கதிர்செய் முகம்மதி னடியிற்
சென்னிவைத் தடிக்கடி புகழ்ந்து
கோதற வெழுந்து தீனவ ரெவர்க்குங்
குறைவறச் சலாமெடுத் துரைத்துக்

காதலின் தீன்தீன் விளங்கவென் றேத்திக்
கடிமலர்ச் சோலையு நீந்தி
மாதவம் பெருகு மனத்தினன் காம்மா
மன்னுதன் றிசையினிற் போனான்.

(இ-ள்.) அவ்வாறு நின்ற மகத் தாகிய தவ மானது ஓங்காநிற்கு முள்ளத்தை யுடையவ னான காம்மா வென்பவன் குளிர்ச்சிதங்கிய ஒள்ளிய பிரகாசத்தைச் செய்யுகின்ற நாயகம் எம் மறைக்கும் தாயகம் நபிகட் பெருமானார் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்களின் பாதங்களில் தனது தலையை வைத்துக் காங்க மற அடிக்கடி துதித்து எழும்பித் தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை யுடையவர்க ளாகிய சஹாபாக்கள் யாவர்களுக்குங் குறைவில்லாது சலா மெடுத்துக்கூறி ஆசையோடும் தீனானது எவ் விடத்து விளங்குக என்று சொல்லிப்புகழ்ந்துப் பரிமளத்தைக் கொண்ட புஷ்பங்களையுடையசோலைகளைக் கடந்து தான் தங்கியிருக்கும் திசையின்கண் போய்ச் சேர்ந்தான். (௬௦)

காம்மாப் படலம்

முற்றிற்று.

ஆ படலம்-உம-க்குத்-திருவிருத்தம்-கoஅசுா.

விருந்தூட்டுப்படலம்.

கலிவிருத்தம்.

புவியி லின்பம் பொருந்திப் புகழ்பெறு
நபிமு கம்மது நண்பொடுந் தங்கிளை
யவர்கட் கன்புற் றரிய விருந்தெனக்
கவலு மென்றலிக் கோதினர் காமுற்றே.

(இ-ள்.) இப் பூலோகத்தின்கண் இன்பத்தைப் பொருந்திக் கீர்த்தி பெருகிற்கும் நமது நாயகம் எம் மறைக்குந் தாயகம் நபிகட்

பெருமானுன ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் கிருபையோடும் ஆசைகொண்டு அன்புற்றுத் தங்களின்குடும்பத்தாருக்கு அருமையாகிய விருந்தென்று சொல்லு மென அலிறலி யல்லாகு அன்கு அவர்களுக்குக் கூறினுர்கள். (௧)

தூய தூதுவ ரோதிய சொன்மறு
நேய முற்றெழுந் தங்கவர் நீண்மனை
வாயி ரேறு நடந்துநல் வாக்கொடும்
போயி ருந்து விருந்து புகன்றனர்.

(இ-ள்.) பரிசுத்தத்தைக் கொண்ட தூதுவராகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் அவ்விதம் கூறிய வார்த்தைகளை மறுக்காமல் அலி றலி யல்லாகு அன்கு அவர்களும் நேசமுற்று எழும்பி அவர்களின் நீட்சியைக் கொண்ட வீட்டினது வாயில்கள் தோறும் நடந்துபோயுட்கார்ந்து நல்லவார்த்தைகளோடும் அவ்விருந் தென்னும் சமாசாரத்தைக் கூறினுர்கள்.

மறுவி னாறு முகம்மதுக் கன்புறு
மறிவ ரும்மவ ரையர்க்கு முன்னருஞ்
சிறிய தந்தைய ரும்மவர் சேய்களு
முறவி னுற்றவ ரும்மவ ரொக்கலும்.

(இ-ள்.) கஸ்தூரி வாசனை யானது பரிமளியாநிற்கும் நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு அன்பு பொருந்திய அறியுதற் கரிய தந்தையரான அப்துல்லா வென்பவருக்குத் தமையரும் சிறிய பிதாவும் அவரின் புத்திரர்களும் பந்துக்களிற் பொருந்தினவர்களும் அவர்களின் பந்துக்களும்

வன்றி றற்புலி வாளலி முன்வர
மின்ற வழ்ந்தணி யாரங்கள் வீசிடத்
தொன்று தோன்றிய தூதுவர் மாமனை
முன்றி லெங்கணு மொய்த்திருந் தார்களால்,

(இ-ள்.) கொடிய வல்லமையையுடைய புலி யாகிய வாளாயுதத்தைக் கொண்ட அலி றலி யல்லாகு அன்கு அவர்கள் முன்னுல் வர

வும், மாலைகளினது பிரகாச மானது தவழப் பெற்று அழகை வீச வும், ஆதியில் விளங்கிய தூதுவ ரான நாயகம் நபிமுகம்மது முஸ் தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் மகத் தாகிய மா ளிகையினது முற்றத்தி லெவ்விடத்தும் வந்துநெருங்கியிருந்தார்கள்

சிறியர் பேதையர் தீய்ப்பசி தீண்டிய
வறிய ரல்லது வந்தவர் நாற்பஃ
தறிவர் ஹாஷிம் கிளைக்குயி ராயினே
ரிறைவன் றூ துவர்க் கின்புறு மாந்தரே.

(இ-ள்.) சிறியவர்களும் பெண்களும் கொடிய பசி யானதுதீண் டப் பெற்ற தாரித்திரர்களு மல்லாமல் அங்கு வந்து சேர்ந்தவர்கள், இறைவனுன அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூதுவ ராகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு இனிமை யுறும் அறிவாளர்களும் ஹாஷிம்கிளைக்குஜீவ னனவர்களு மான நாற்பது மாந்தர்கள். (௫)

எடுத்தி ருத்த லெனும்பதி னறெடை
கொடுத்த பாலுங் குடித்தொரு மேழகத்
தடித்த சைச்சுடு கோலினிற் றள்ளுமு
னெடுத்துத் தின்ப ரிவர்சிறி யோர்களே.

(இ-ள்.) இவர்களில் சிறியோர்கள் இருத்த லென்றுகூறும்பதி னறு எடை எடுத்துக் கொடுத்த பாலும் அருந்தி ஒரு ஆட்டினது தடித்த மாமிசத்தைச் சுடுகின்ற கோலில் தள்ளுவதற்குமுன்னர்எடு த்துப் புசிக்கப் பட்டவர்கள். (௬)

வரிசை வள்ளன் முக்ம்மது வந்துநின்
றுரிய கேளி ருடனுழை போரையும்
விரியுங் கரந்தி விரித்த விரிப்பின்மேற்
பரிவி னீணவை பந்திவைத் தாரரோ.

(இ-ள்,) வரிசையைக் கொண்ட வள்ள லான நாயகம் நபிமுகம் மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வந்து நி ன்று அன்புடன் சொந்த மாகிய பந்துக்க ளோடு பக்கத்தி லுள்ளவர் களையும் விரியாநிற்கும் பிரகாசத்தைப்பரப்பியவிரிப்பின் மீது நீண்ட ஆச்சரியத்தைப் பெற்ற பந்தியாக வைத்தார்கள். (௭)

மாற்ற லர்க்கரி யேறெனும் வள்ளலார்
றிற்று வெண்சுதை மாடத்துட் சென்றட
வூற்றுப் பாலையு மூற்றிக்கொண் டிங்ஙனஞ்
சோற்றை யுங்கொடு வாவெனச் சொல்லினர்.

(இ-ள்.) அன்றியும் சத்துராதிக ளென்னும்யானைகளுக்குஆண் சிங்கத்தை நிகர்த்த வள்ள லான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் வெள்ளிய சுண்ணச் சாந்தைத் தீற்றப் பெற்ற தங்களின் மாளிகையி னகம் சென்று காச்சும் படி யூற்றிய பாலையும் வார்த்துக் கொண்டு சோற்றையும் இவ் விடத்திற்குக் கொண்டுவா வென்று கூறினர்கள். (அ)

மருங்கு நின்றவர் மாமனை யுட்புகுந்
தொருங்கி ருந்த வொருபடிச் சோற்றையுங்
கருங்க லென்னுங் கலசத்திற் பாலையுந்
தருங்கை வள்ள லிடங்கொடு சார்ந்தனர்.

(இ-ள்.) அவர்கள் அவ்வாறு கூறப் பக்கத்தில் நின்றவர்கள் மகத் தாகிய மாளிகையி னகம் நுழைந்து ஒன்று ,யிருந்த ஒருபடி அன்னத்தையும், கரிய கல் லென்று சொல்லும் கலசத்தின் கண் ணிருந்த பாலையும், கொடையை யருளாகிற்கும் கைகளை யுடையவள்ள லான நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களி னிடத்தில் கொண்டு வந்தார்கள் (கூ)

அருத்துஞ் சோற்றையும் பாலையு மங்கையி
லொருத்த ரேந்தி யுலாவுகின் றாரிவர்
வருத்த மின்றி வரவழைத் தாலெலா
மிருத்து கின்றன் றென்னெனக் கூறுவார்

(இ-ள்.) அப்போது அங்கு வந்திருந்த ஜனங்கள் ஒருவர் அருத்தாநிற்கும் அன்னத்தையும் பாலையும் அழகிய கைகளில் ஏந்தி யுலாவுகின்றார். இந்த நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் மனுஷியர்களை யெல்லாம் துன்ப மில்லாமல் வரும் படி செய்து இருத்துகிறார். இதுஎன்ன? என்றுசொல்லுவார்கள். (கo)

இற்றை நாள்விருந் தென்னவிவ் வூரினிற்
சொற்ற தில்லைத்தொன் மாமறைக் காரணத்

துற்ற செய்தி யறியவென் றுன்னியோ
பற்றி னுலிவர் பாலழைத் தாரென்பார்.

(இ-ள்.) அன்றியும், இந்த நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் இன்றையத் தினம் வரைக்கும் இந்த மக்கமா நகரத்தில் விருந் தென்று கூறின தில்லை டமுமையான மகத் தாகிய புறுக்கானுல் அலீமென்னும் வேதத்தில்பொருந்திய காரணத்தினது வர்த்தமானத்தை யாவர்களும் உணர வென்று நினைத்தோ? அன்பினுற் றங்க ளிடத்திற்கு அழைத்தார்க ளென்று சொல்லுவார்கள். (கக)

இன்று வந்திவர் முன்றி லிருந்தனம்
வென்றி யாக விருந்து வழங்கிடுஞ்
சொன்றி யும்மிவர் காரணத் தோற்றமு
நன்று கண்ட றிவோமினி நாமென்பார்.

(இ-ள்.) அன்றியும் நாம் இன்றையத் தினத்தில் வந்து இந்த நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களின் முற்றத்திலிருந்தோம் நல்லது! இவர்கள் வெற்றி யுடன் விருந்தாய் வழங்கும் அன்னத்தையும் இவர்களின் காணத்தின் விளக்கத்தையும் இனிக்கண்டு தெரிவோமென்று சொல்லுவார்கள்.

இந்த வண்ண மிவர்க ளியம்பிட
வந்த நாயகன் றூதுவ ரன்பொடு
வந்த சோற்றையும் பாலையு மன்னவர்
சிந்தை கூரச் சிறந்தளித் தாரரோ.

(இ-ள்.) இந்தப் படி யாக இந்த ஜனங்க ளொருவருக் கொருவர் சொல்ல; அந்த நாயக னுன ஹக்கு சுபுகானகு வத்த ஆலாவின் றூதுவ ராகிய நாயகம் நபி முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்கள் அன்புடன்கொண்டு வரப்பெற்ற அவ் வன்னத்தையும் பாலையும் மன்னவர்க ளான இவ் விருந்தாளிகளின் மனமான து கூரும் வண்ணம் சிறப் புற்றுக் கொடுத்தார்கள், (கஙு)

சேரு சீனியுந் தேனுஞ்மொத் தாலென
மூர லும்மவை மூழ்கிய பாலையும்

வீரர் தங்கள் விலாப்புறம் வீங்கிட
வார வுண்டன ரங்கையில் வாரியே.

(இ-ள்) ஆவ்வாறு கொடுக்க வீரர்களாகிய அந்த விருந்தினர்கள் பொருந்திய சீனியும் தேனுஞ் சேர்ந்ததைப் போன்ற அன்னத்தையும் அவ் வன்ன மானவை மூங்கப் பெற்ற பாலேயும் தங்களின் விலா வினது பக்கங்கள் புடைக்கும் வண்ணம் அழகிய கைகளினல் அள்ளி வயி ருனது நிறையும் படி யுண்டார்கள். (கச)

மாத ருஞ்சிறு மைந்தரு மாந்தரும்
பேத மற்றதம் மில்லுறை பேர்களுங்
கோதி லாதுண்டு பாலுங் குடித்தினிப்
போதும் போது மெனப்புகன் ருர்களால்.

(இ-ள்.) அன்றியும் பெண்களும் சிறிய பாலியர்களும் புருஷர்களும் மாறுபா டற்ற தங்களின் மாளிகையின்கண்தங்கிய மனிதர்களும் களங்க மில்லாது அவ் வன்னத்தை அருந்திப் பாலேயும் குடித்து இனி எங்களுக்குப் போதும் போது மென்று கூறினர்கள். ()

உருசிக் கும்படி பாகஞ்செய் யோர்படி
யரிசிச் சோறு மரைப்படிப் பாலுநல்
வரிசை யாக வழங்க வழங்கவே
பெருகிற் றல்லது பின்குறை வில்லையால்.

(இ-ள்.) மதுர மாகப் பாகஞ் செய்யப்பட்ட ஒரு படி அரிசியினது அன்னமும் அரைப் படிப் பாலும் நல்ல சிறப்பாய் வழங்க வழங்கப் பின்னர் அதிக மாயினவே யல்லாமல் குறைந்திலன. (கசு)

அகங் கூர்தர வுண்டவ ரியாவரும்
வாய்கை பூசி மகிழ்ந்தினி துற்றபின்
பாகு வெள்ளிலை பாளிதஞ் சந்தன
மோகை கூர வுவந்தளித் தாரரோ.

(இ-ள்.) சரீர மானது கூர்தரும்படிசாப்பிட்டவர்க ளியாவரும் வாயையும் கையையும்கழுவிக் களித்துஇனிமையுடன் தங்கினபின்னர்ச் சந்தோஷமானது மிகுக்கும் வண்ணம் விருப் புற்றுப் பாக்கு வெற்றிலை பாளிதம், சந்தன மாகிய இவைகளைக் கொடுத்தார்கள். ()

சோதி நாயகன் றாதெனும் வள்ளலுக்
கீதெ லாமரி தோவென வேத்திநின்
ரோதிக் கையெடுத் துற்றச லாமுரைத்
தாத ரத்தொடு மங்கவர் போயினார்.

(இ-ள்.) அவ் விடத்தில் அந்த விருந்தினர்கள் பிரகாசத்தைக் கொண்ட நாயக னான அல்லாகு சுபுகானகு வத்த ஆலாவின் தூத ரென்னும் வள்ள லாகிய நமது நாயகம் எம்ம றைக்குந் தாயகம் நபி நட் பெருமானார் நபி ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுல் அம்பியா முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களுக்கு இஃ தெல்லாம் அருமை யான காரியமா? இல்லை யென்று புகழ்ந்து நின்று ஓதிக் கைகளை யெடுத்துப் பொருந்திய சலாஞ் சொல்லி அன் போடும் தங்க ளிருப் பிடத்திற்குச் சென்றார்கள். (கஅ)

விருந்தூட்டுப்படலம்

முற்றிற்று.

ஆகப்படலம்-உக-க்குத் திருவிருத்தம்-கச0ச.

நுபுவ்வத்துக் காண்டம்

முற்றுப்பெற்றது.

ஆகக்-காண்டம்-உ-க்குப்-படலம்-சரு-க்கு

திருவிருத்தம் உகூசச.

சீறாப்புராணம்

முதற்பாகம்.

மூலமும் பொழிப் புரையும்

முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லாஹி.

விளம்பரம்.

முஸ்லிம்சகோதரர்காள்!

யாம் எமது சிற்றறிவிற்கு எட்டிய மட்டும் இந் நூலுக்கு ஒருவாறு உரை யெழுதினும். அவ்விதமெழுதுங் கால் எமக்குநேர்ந்த சில அசந்தர்ப்பங்களினாலும், அச்சாப்பீசாரின் வேலையினதுவிரைவினாலும்; ஒருகால் எழுதும் பிரதியை மறுகால் பார்ப்பதற்கு சாவகாசங் கிடையாது போனதோடு சோதனைப் பிரதிகள் தக்கவாறு எங்கைக் கெற்றாமையான், ஆங்காங்கு சில தவறுகள் இருக்கினுமிருக்கலாம். நாம் அவைகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி ஓர்பிழை திருத்த அட்டவணை போடுவதற்கு எம்மால் செய்து அச்சிட்டுவரும் இதன் இரண்டாம் பாகத்தின் பிரியக் கூடாத பெரியவேலையினாலும், பல ஜோலிகளின் நிமித்தத் தானும் அவ்வாறு போடாதுவிடுத்தேம். ஆனது பற்றி இந் நூலை வாசிக்கும் கற்றறிந்த மகான்களின் கண்ணோட்டத்திற்கு அவ்விதத் தவறுகள் காண்குவதாயிருந்தால் அவற்றால் எம்மைக் குற்றங்கூறாது அத்தவறுகளைநீக்கி அங்குகூட்டு முறைமை போல்கூட்டிவாசிக்கக்கேட்டுக்கொள்ளுகின்றனம்.

இதன் இரண்டாம் பாகம் விரைவில் வெளி வரும்.

இங்ஙனம்,

☞ கா-ப-செய்குத்தம்பிப் பாவலர்,

LIBRARY, KOVILOOR
16830

மதராஸ் டைமண்ட் பிரஸ், பெரியமெட்.